IV.B.11.(1)
திருப்பனந்தாள்
காசிமடம்
அன்பளிப்பு

கணபதி துணை.

தெய்வப்புலமைத்

திருவள்ளுவநாயனார்

அருளிச்செய்த

தமிழ்வேதமாகிய

திருக்குறண்மூலமும்

பரிமேலழகருரையும்

இவை

இராமநாதபுரசமஸ்தானம் ம-ரா-ரா-ஸ்ரீ

பொன்னுச்சாமித்தேவரவர்கள்

வேண்டுகோளின்படி,

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஆறுமுகநாவலரவர்களால்

பலபிரதிரூபங்களாக்கொண்டு பரிசோதித்து

சிதம்பரசைவப்பிரகாசவித்தியாசாலைத்

தருமபரிபாலகர்

Mudlr. G. சுப்பிரமணியம் J. P.

அவர்களால்

சென்னபட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

பதினான்றும் பதிப்பு.

சர்வதாரிஷு கார்த்திகைமீ.

கணபதிதுணை

சிறப்புப்பாயிரம்.

மகாவித்துவானாகிய

மா-ரா-ஸ்ரீ திரிசிரபுரம்

மீனாட்சிசுந்தரப்பிள்ளை

இயற்றியது.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொன்பூத்தமகரந்தப்புதுமதுவச்செழுங்கமலப்பொகுட்டுவாழ்வோன்
றென்பூத்தநான்முகத்தோனலனலைமுகத்தோனேதெளிதினென்னக்
கொன்பூத்ததமிழ்வழங்குநிலத்தினறிணிதெழுந்துகுதிகொண்டாட
மின்பூத்தசெங்கதிரின்வள்ளுவரென்றொருநாமமேவத்தோன்றி. (க

பொலிதரமுன்னுணர்ந்தமறையகத்தமைந்தவறமுதனற்பொருளுமேன்மே
லொலிதரமற்றான்குமொருமூன்றினடக்கியின்றேயெழுக்கியாக்கு
மெலிதரலில்வரைமுதற்பேருருவொருசிற்றுடியகம்விளங்கன்மான
நலிதரநீர்சிலசொல்லிற்பலபொருளுஞ்செறித்துநவைநண்ணுதாக. (உ)

மொழிசுருங்கல்பொருள்விளங்கன்மொழியவினிதாதனலமொழிபுணர்த்தல்
வழியமையோசையிற்பொழிதலாழ்ந்திருத்தன்முறைநிறுவன்மலைவுதீர்தல்
பொழிவிழுநியதபயத்தல்காட்டாதலிப்பத்தும்பொலியவாய்ந்த
கழிபொருளுங்கருதணியுநோக்குமிடந்தொறுங்கிடந்துகளிப்புச்செய்ய. (ங)

மையேறுபொழின்மதுரைமாநகரத்தருட்புலமைமாட்சியார்முன்
கையேறுதிருமூலாகமச்சோதிமறைமுனைத்தகளிவாய்விண்டு
பையேறுமணிபொருமோர்துதிகவிசொற்றிடப்பலரும்பரவிப்போற்ற
வையேறுதிருக்குறளென்றொருநூல்செய்துலகுவப்பவளித்தானுக. (ச)

அன்னநூற்பெருமையுணர்ந்தான்றபாணினிபுரிந்தவரியநூலுக்
கின்னதீர்பதஞ்சலிபோற்பலருரையும்வியாப்பியமாயிருக்கநாளு
முன்னவாம்வியாபகமேயாகநூற்கருத்துணர்ந்தேமொழிந்தாரென்ன
நன்னர்வான்புகழ்ப்பரிமேலழகருரையியற்றவதைநாடியாரும். (ஞ)

ஏட்டுவரைந்தெடுத்துணர்ந்துவருநாளிலெங்கணுஞ்சாலெழுத்துக்குற்ற
மாட்டுமவகையுணராராய்ப்பரம்பரையொன்றேகருதியொழிந்தாரத்தோ
ராட்டுவலென்றுணர்ந்தனையமூலமும்பேருரையுமுனம்வகுத்தவாறே
நீட்டுதலிலாவெழுத்திலியைவியெனவுலகுபுகழ்செம்பிநாடன். (ட

சிறப்புப்பாயிரம்.

ஓதுபதியாயவிராமீசர்திருவருளானீருடுத்தவைப்பிற்
கோதுபதியாதகலவறந்தழைந்துவிளங்கிடச்செங்கோல்கைக்கொண்ட
சேதுபதிமானேசரதிகாரமடாத்துசெயசிங்கஞ்செம்பூ
மாதுபதியர்வுயிர்ப்பவுலகமுழுவதும்புரக்கும்வள்ளற்கோமான். (எ)

கற்பகத்தின்றளிரினையமென்னிறமுஞ்சங்கிலெடுகமலரேகை
யுற்பவமுமொருசுரபிச்செருத்தன்முலிகர்விரலுமொளிர்பொன்னுழி
யிற்பதியொண்சுடர்மணியுமெய்துதலாற்றருநிதியமிரண்டுதெய்வப்
பொற்பமையாவருண்மணியிவ்வைவந்துஞ்சேர்ந்தாயவெனும்புரவுக்கையான். (அ)

பாருநெடுவிசும்புமறுவெங்குளதென்றராயப்பரந்தமார்பா
னேருமுணர்வுடையார்பாற்பெருங்கருணைமடைதிறந்தாலொத்தகண்ணன்
வாருபிளகையரும்பவினியர்முகமலர்த்துமொழிமதுரவாயான்
மேருவெனப்புடைபரந்துபகைவர்நிலகலங்கவெழுஉவீங்குந்தோளான். (கூ)

சிவஞானத்தேவர்வரப்பிரசாதபாலனருள்செறிபூபாலன்
பவஞானமுழுதொழியக்கோபாலனெஞ்ஞான்றும்பணிகாபாலன்
றவஞானநீற்றெளியேயெளிர்பாலன்பகைகாணத்தகாப்பின்பால
னவஞானமறுத்துணர்ந்தமுப்பாலன்போர்வையெனவமைசிர்ப்பாலன். (கo)

ஒருகாவித்துவசத்தாளெளிர்தளவமாலிகையானுணர்வான்மீக்கூர்ந்
தருகாவித்துவசத்தாளன்றபெருஞ்சிவஞானமடங்கவுய்க்குங்
கருகாவித்துவசத்தான்பகைநோக்கியுறுமனமேகடைகாதுஞ்சா
துருகாவித்துவசத்தான்புணர்யான்செய்காயமெனவுரைக்கும்வாளான். (கக)

கந்துகத்தானம்பரவுமாறுபொழிற்றெழுகளிற்றுருன்றநதார்மேற்பாய்
கந்துகத்தானம்பரவுசூடியடியான்வாயிற்கட்டித்தூங்குங்
கந்துகத்தானம்பரவுமாதாவென்றுயிர்கருதிக்கரிசெலாமி
கந்துகத்தானம்பரவுரவமாதிரீங்கவறங்கைக்கொண்டுள்ளான். (கஉ)

தரைசெய்தவப்பயனுகியமைந்தபெருவளப்புதுவைத்தலைமையோன்பொன்
வரைசெய்நிதிப்பெருவாழ்க்கைமாகனவான்பெரும்புலவர்மறவாதென்று
முரைசெய்பெரும்புகழ்ப்பொன்னுச்சாமிநேர்ந்திரண்மகிழ்கூர்ந்துரைப்பக்கேட்டு
நரைசெய்விடையேறுயர்த்தரம்பிரானடிக்கன்பேயக்குரல்லோன். (கங)

மன்னுபெருந்தமிழ்ப்பாடையிலக்கணமுமிலக்கியமும்வரம்புகண்டோன்
பன்னுசிவபுராணங்கள்பலதெரிந்தோன்சிவாகமநூற்பரவைமூழ்கி
யுன்னுமனுபூதியெனும்விலைவரம்பிலாமணிகையுறக்கொண்டுள்ளா
னின்னுநயகுணத்தினஞ்சைவமெனும்பயிர்வளர்க்குமெழிலிபோல்வான். (கச)

நீடுபுகழ்த்திருக்கேதீச்சரந்திருக்கோணேசலபதிக்கிலவாகின்ற
நாடுபுகழ்த்தலம்பொலியாழ்ப்பாணத்துநல்லூர்வாழ்நகராக்கொண்டோன்
றேடுபுகழுருவமைந்தகந்தவேடவத்துதித்தசெல்வன்யாரும்
பாடுபுகழாறுமுகாவலனவ்வாறச்சிற்பதிப்பித்தானை. (கஞ)

சிறப்புப்பாயிரம்.

மகாவித்துவானுகிய ம-ா-ா-ஸ்ரீ

மீனுட்சிசுந்தரப்பிள்ளைமாணுக்கரும்

சிதம்பரச்செட்டியார் குமாரருமாகிய

தியாகராஜச்செட்டியார்

இயற்றியது.

நேரிசையாசிரியப்பா.

திருவளர் தெய்வச் செழுமறை யவர்த—மூருவளர் செங்கை யுதக மவாவிக்—
கருங்கடன் முகட்டிற் செங்சேழ் பரப்பி—மரகதம் பழுத்த குரகத மோரேழ்—சேர்
தர யாத்த வோர்கால் வையத்—தமர்ந்தினி தெழுஉ வகலிடம் புதைத்த—செறியிருள்
விழுங்குஞ் செஞ்சுடர் வானவ—னலங்கொளி விரிக்கு நலங்கிளர் கரங்க—டீண்டி
டத் திறக்கு மாண்டகு புதவ—மாயிரந் தாங்கி யவிர்நிலா வெறிக்குந்—தரளங
குயிற்றிய தமனியக் கோயி—லரசுவீற் றிருந்திவ் வகில மீன்ற—நான்மறை முழங்கு
நன் ஞவுடைக் கடவுள்—பெருகுபே ரருளாற் றிருவள் ளுவராய்—மகிதலத் துதித்து
மன்னுறு மக்க—ளறமுத ஞன்குந் திறமுற வுனரவு—நன்மை யெங்கணு நனிசிறந்
தோங்கவும்—புன்மை யண்டப் புறம்போ யொழியவுஞ்—சந்தனப் பொதியச் செந்த
மிழ் முனிவ—னுள்ளம் பெருங்களி கொள்ளே கொள்ளவுந்—தவலரும் புகழ்சால் சங்
கத் தமர்ந்த—நுவலரும் புலவர்சொ னுண்பொரு ளுரலெலாந்—திருப்பெறு கல்வி
நிரப்புறு வோர்சொல்—பருப்பொரு ளுலாய் விருப்பற் றெழியவுஞ்—சிற்றள வின
தாய்ப் பெரும்பொரு ளடக்கி—யுற்றவிர் தூலினி துணர்வோர் யாரு—நணுருசொற்
சுவையொடு நகுபொருட் சுவைகவர்ந்—தணுவின்மா மேரு வடக்கத் துணியவு—நற்
றமிழ்ச் செல்வம் பெற்றநன் ஞட்டின்முன்—மற்றைய பன்மொழி யுற்றபுன்
ஞடெலா—மன்பொரு ளுடையார்முன் வறியவர் போல—வென்செய் வாமென் றேக்
கற்று நிற்கவு—மெழுத்து முதலாய விலக்கண மெல்லாம்—பழுத்தினி துறங்கும்
பள்ளி யாகவு—மின்றி யமையா வின்னலம் பலவுந்—துன்றின கிடந்து துதிபெறத்
திகழவுந்—திருவுளத் தன்னித் திருவாய் மலர்ந்து—பொருவறப் புகன்ற புகலருந்
தெய்வத்—திருக்குற ளென்னுஞ் செந்தமிழ் வேதம்—பலருரை செய்ய நிலவிய
தெனினு—மொருவாப் புலமைத் தருமர்முன் னுய—பாடல்சால் சிறப்பிற் பதின்மர்
செய்த—ரூறு முரைகளுட் பீடமைந் தோங்கும்—பரிமே லழகர் பண்ணிய வுரை
யொடு—விரிகடல் சூழ்புவி மேவி விளங்கப்—பரிவுறு மச்சிற் பதித்துத் தருகெ
னக்—கற்பகச் சோலை ககனத் துறுமெனப்—பொற்புறு புலவர் புகலுவ ரஃ்து—நம்
போன் மாரு நல்வள முடைத்தெனி—லம்பர்ச் சென்றினி தறிய லாமென—வெண்
ணிச் சென்றருங் கெழிலுற வளர்ந்து—விண்ணுற நிவந்த வியன்மாம் பொழிற்கட்—
சிவந்தழை மனத்துச் செவ்வியோர்க் கிடமாய்க்—கலின்றிகழ் காரைக் காலவ
தரித்த—வம்மைதிருவுளங்கனிந் தடியார்க் களித்த—கனிக்கெதி ராகக் கண்ணுதலரு
ளிய—வினித்ததே மாங்கனி யிப்பொழிற் கனியே—யென்னக்கேளே தொறுந துன்னிக்
கனிந்த—வெண்ணிலாக் கனிகளே யுண்ண விரும்பி—வாவிப் புருந்துள மந்திக
ளெல்லா—மேவியத் தருக்கண் மீமிசை யிருந்து—தாவிப் புருதத் தருவினி யேறி—
யோலிலக் கனிகவர்ந் தணவலி யின்றிக்—கூனடை வெரிகின் மேன்மயி லெலாமு
ரிர்—திருகண் குழியா வென்பெலாம் வெளிப்பட்—டகடுற வொட்டி யபெசி

வருத்த—வண்ணுந்து நோக்கி ரண்ணி யிருக்கு—முதுபெரு மந்திரண் முன்னர்முன் ணுருத்து—வெறுத்திட வூட்டி விழைந்துபின் ணுண்டு—தாமுயன் றுண்ணுந் தருவலி யில்லா—வுறவினர்க் கூட்டமுண் ணறவரை நிகர்க்கு—நலமலி செம்பி நன்னு டைடை யான்—மேருவொன் றென்று விளம்புதல் பொய்யென்—ரூரு மியம்ப வளவற வுயர்ந்து—செம்பொரு னியன்றபல் செழுமணி மாடத்—தும்ப ருலாவு மொளியிழை மடவா—ரன்புறு மாடவ ரணுகநோக்கி—யின்புற முயங்க வெண்ணுதற் காதல்—குறிப்பிற் புலப்படக் கொழுங்களி யிதனைச்—செவ்வாய்ப் பைஞ்சிறைச் சிறுகிளி யூட்டப்—புகுவே னென்று புதுமதி மழுங்கப்—பளிங்கரிக் தமைத்து விளங்கறை புக்குப் - பித்திகைத் தலத்தி லொத்துத் தோன்று—நீழற் பஞ்சர நேர்சென்று திறத்தல்—பின்படர் காதல ரன்புற நோக்க—வுறுநா ணெருகைத் தோடித் தழுவும்—வளமலி புதுவை மாநகராளி—யவமெலாஞ் சாரா தகலுற வகற்றிச்—சிவமெலாம் பூனுத சிவஞானத் தேவர்—பவமெலா முவந்து பண்ணிய மாப்பெருந்—தவமெலாந் திரண்டொரு தனயனு யுதித்தோன்—பூவி லுந் திசையிலும் புகலுறு மற்றைய—தீவிலு மிருசுடர் திரிதரும் பெரிய—கோவிலுந் தீஞ்சுவை கொழிக்குந் தமிழ்வ லோர்—நாவிலும் பாவிலு நடிக்கும் புகழா—னுண்மையு நூலுணர் நுண்மையும் வறுமைகொல்—வண்மையுங் காட்சிக் கெண்மையும் பகைதெறு—திண்மையுங் கதிரவா மொண்மையு மதியவாக்—தண்மையுங் கண்மையுந் தழைதரு செல்வன்—வண்டிணங் குழுமிக் கொண்டினி தேறிக்—கிண்டிடப் பருமுகை விண்டின னறவ—மண்டிப் பெருக வுண்டு தெவிட்டிக்—தண்டொடை புனையுந் திண்டோள் வலியா—லேர்திகழ்ந் திலங்குஞ் கார்முடி புனைந்து—சீர்பெற வுயர்ந்து நேருறக் கீழ்போய்—நீர் நிறைந் தமைந்த வார்கடல் வளைந்த—பார்நடு நின்ற மேருவை வென்றே—னெற்று திரைப்புனல் சுற்றிய வசுந்தரை—யுற்றநன் னூல்கண் முற்றுற வாய்ந்து—கற்றநா வலர்கள் சொற்றபாக் களையிஃ—திற்றிஃ திற்றென மற்றுணர் புலமையான்—மலர் பொதுள் சோலை சுலவுற வுடுத்தி—யுலகெலாம் புகழ நிலவுதென் கூட—லிலகு பொற் சலச மலர்தட மமர்ந்த—நலமலி சங்கப் பலகையை வென்றே—கரவுறு பிறவியு மரணமு மொழித்து—வரவுறு மேன்மை விரவுமெய்ஞ் ஞானத்—திரமுறு முத்தி தரவல தாய—வரவுறு சடிலப் பரிவ பத்தியால்—வின்னுறு மிமயப் பெண்ணமர் பாகத் -தண்ணலை யருச்சனை பண்ணுற வொருகாட்--டண்ணலுங் கமலமொன் றெண்ணுறக் குறைதலிற்—கண்ணிடக் திட்டகார் வண்ணனை வென்றே—னெவ்வெக் நலங்கட் கெஃதெஃ துரித்தோ--வவ்வக் நலங்களா லதையதை வென்றேன்--சிந்தாமணியோ நந்தாச் சுரபியோ—தெய்வத் தருவோ பெய்யுமா முகிலோ—விருநிதி யோவிவ் வுருவெடுத் ததுதா—னலம்புனை யிதுவெனப் புலர்துணி விலமெனத்—தலம்புகல் பொன்னுச் சாம நடேந்திர—னனியுள மகிழ்ந்து கவின்றன னுக—வினிதினி தென்று முனிவற நயப்புற்—றினிடை நிறைந்த நுவலரு மறனெலாந்—தன்னுறு காட்டா மன்னுறக் கொளுநூன்—முதுபே ருலகி லிதுவே யாதலி—னனைந்தது சால வமையுமென் றுன்னி—நிறைந்தி யாங்கணு நிலவுறப் பதித்தனன்—விடையத்திற் பரக்குந் தடையறு மனத்தன்—தடையறச் சுருக்கி யடியினை வைக்குந்—தன்மை யுயிர்க்குத் தானறி வுறுத்தற்—பாரிட மெங்கும் படர்பா கீரதிப்—பெரும் புனல் சுருக்கிச் சிறுதுளி யாக்கி—யொளியுறு சடைமுடி மிளிர்தர வைக்கு—மூவா முதல்வ னெவா தமருந்—தாவாப் பெருந்தவ மேவா விளங்கிக்—கவின்மலி தன்னைக் கண்டவர் கொடுப்பவுங்—காணு தருடிருக் கோணு சலமுங்—குலவுறு நல முயிர் கலவுற மலவலி—காதும் பெருந்திருக் கேதீச் சரமு—மிருநிதி யாக மருவுறப் பெற்று—மன்னுறு மீழ நன்னு டெனும்—பொருவிலாத் தனதற் கொருசிர மாயது—மாணமர் பொழில்யாழ்ப் பாணமச் சிரத்திற்—கணிபெறக் கவிக்கு மணி

முடி நிகர்க்கும்—பன்னூ லுணர்ந்த நன்னு வலர்க—ணூடொறுங் கூடி நவிலுத லுற்ற—பீடியர்ந் தோங்கு பெருவள னெல்லாங்—துன்னுதன் பெயராற் தொகை நிலைத் தொடர்சொலின்—மன்னுமுன் மொழியின் வயங்குபொரு ளாக்கி—யின்னும் பற்பல நிசைப்ப விடங்கொடுக்குஞ்—செல்லூ ரெயில்சூழ் நல்லூ ரென்ப—திகழுமம் முடிக்கோர் சிகாமணி யென்னப்—புகரிலா ஞாலம் புகலவந் துதித்தோன்—செந் தமி ழென்னுஞ் சுந்தரமங்கை—கந்தரத் தழகு களிமயங் கலநா—ணிலக்கண மீனத்து நலக்க விளக்குந்—துலக்க மிகுந்த ஞாண்டா விளக்குப்—புணர்தரு மின்ப மணவுறு புராண—முணர்வோர் யார்க்கு மொழியுறு நேத்திர—நல்லறி வுறுத்தித் தொல்பவந் தொலைக்கும்—பல்கலை கட்கெலாம் புல்லுமோ நில்லம்—பொய்த்தெரித் தகற்றி மெய் யிது வென்னுஞ்—சைவசித் தாந்தத்தெய்வ வைப்புக்—கண்ணுபுண் ணியங்கட் கண் ணிய வுயிராந்—தண்ணிய மாசிவ புண்ணியப் பிழம்பு—சிவனடி யவரைச் சிவமென மதிக்குந்—தவமது வளர்க்கு மவமறு சீல—னென் னுளங் குடிகொண் டிருக்கு—மூன்னுசீ ராறு முகநா வலனே,

---

மகாவித்துவானுகிய ம-ரா-ரா-ஸ்ரீ

மீனுட்சிசுந்தரப்பிள்ளைமாணக்கரும்

சங்கரலிங்கப்பிள்ளை குமாரருமாகிய

தெய்வநாயகப்பிள்ளை

இயற்றியது.

நேரிசையாசிரியப்பா.

திருவளர் ருமத் துருவளர் பெருமா—னுந்தியந் தாமரை யந்தி லமர்ந்து—புரிமுறுக் குடைந்து முருகுகொப் பளிப்ப—வள்ளித முலிழ்க்கும் வெள்ளிதழ்க் கமலத்--திருமனே யவாவு மொருமனேக் கிழத்தியை—மன்னுற நூளுந் தன்னுறு சாவிற்—செந்திறந் திரிந்து வெண்ணிறம் பயப்ப—மருவுற வைத்த வொருபெருந் தேவ—னருமறைப் பொருளைப் பெருநிலத் துதித்த—மன்பதை கட்கெலா மின்புற வுணர்த்த—வுள்ளத் துள்ளிக் கொள்ளுந் தெய்வ—வுருவங் கரந்து திருவள் ளுவராய்—மாநிலத் துற்று மேனிலத் தவரு—மவாவுற வென்றுந் தவாநல மமைத்துப்—பன்மலை யுள்ளுயர் பொன்மலை யென்னப்—பன்னூ லுள்ளுயர் நன்னூலாகப்—பரிவுற வருளிய விரிவுறு பொருள்சேர்—தெய்வத் திருக்குறண் மெய்மலி நூலைப்—பொற்பமர் தருக் களுட் கற்பக மென்னப்—பலருரை யுள்ளு நிலவுற விளங்கும்—பரிமே லழகர் புரி யுரை யோடு—நயக்குறு மச்சில் வயக்கித் தருகென—வானினங் களினுயர் தேனு வென்ன—முற்றுற வாய்ந்து கற்றவர் குழுமிக்—கற்பம் புகலினு மற்பமுங் குறை யாப்—பெருவள னமைந்து மருவுமப் புவியிற்—பம்புபன் னூட்டியர் செம்பிநன் னூட—னந்தா மணிகளுட் சிந்தா மணியெனப்—பொன்னியல் புரிசை தென்னுற வுடுத்து—நன்னகர் பலவினுட் டென்னுச்சி பெற்று—முதுபுகழ் சுமந்தியர் புதுவையா நகரான்—சலஞ்சலத் துதித்த நலம்புரி முத்தெனத்—தவஞாலம் புகழுஞ் சிவஞானத் தேவர்—பிறக்குமா தவத்திற் பிறக்கவந் துதித்தோன்—பெருநிதி களினுய நிருநிதி

யென்ன—விரவலர்க் கெல்லாம் வரையாது கொடுக்கும்—வள்ளற் குழாங்க ளுள்ளு யர் வள்ளல்—பன்னக் கேட்கவுன்னத் தெவிட்டாச்—செந்தமிழ்ச் சுவைதெரி சுந் தரக் குரிசில்—கற்றூர்க் கெல்லா நற்றூ யில்லந்—தூய்மை மிகுக்கும் வாய்மைப் பௌவந்—தெருட்குரித் தாய வருட்பெருங் குன்ற—முத்தி தருஞ்சிவ பத்திப் பிண்ட—நன்னலம் பலவுந் துன்னுறு முறையுள்—பெரும்புயா சலத்திற் சுரும்பமர்ந் துண்ணுந்—தாமமார் பொன்னுச் சாமி மகிபன்—கழிந்தபேருவகையின் மொழிந்தன னுகக்—களங்கமற வாய்ந்து விளங்குறப் பதித்தன—னம்பரத் திலங்கு செம்பொன் னூட்டைத்-தோழ னெனக்கொளு மீழ நன்னுட்டி—னேணமார்க் தொளிர் யாழ்ப் பாணத் துற்ற—வளமலி செல்வ வளகை நிகர்க்கும்—வில்லூர் மாட நல்லூர் வாண—னெழுத்துமுத லாக வழுத்திலக் கணமெலாங்--கடைபோக வுணர்ந்த தடை யறு மறிஞன்—றராதலம் புகழ்சிவ புராணச் செல்வஞ்—சமையங் களினுயர்ந் தமைவு பெற் றோங்கித்—தெய்வத்தி றம்பொலி சைவ மென்னப்—பலபல கலையெலா நில வுற வுணர்ந்த—புலவரி லுயர்ந்தொளிர்நலமலி பெருமான்—புகலருஞ் சீர்த்தி பொத் துஞ்—சகமகி ழாறு முகநா வலனே.

மகாவித்துவானுகிய ம-ரா-ரா-ஸ்ரீ

மீனுட்சிசுந்தரப்பிள்ளைமாணக்கரும்

வீரசிங்கட்டியார் குமாரருமாகிய சோடாசாவதானம்

சுப்பராயச் செட்டியார்

இயற்றியது.

நேரிசையாசிரியப்பா.

மலர்தலை யுலகிற் குலவுயிர்த் தொகைக—டன்னிய வினைவழி மன்னிய போகந்—தனைவிழைந் தருந்த நினைமலர்க் கோதை—மலைமக ளொருபா னிலைத வமைத்த—சிவபிரா னருளின் றவலரு வலியாற்-பாற்படு மண்டப் பரப்பினை கொடி யினுள்—வ்ற்று வ்ற்றுக விழுத்தக வகுத்த—தேன்முகப் பதும நான்முகப் புத்தேள்--வன்பட ரகன்று மன்பதை யினைத்தும்—விதிவிலக் குணர்ந்து கதிபெறற் குவந்து—சீரிய தெய்வ வாரிய மொழியா—னல்கிய வளமை மல்கிய சிறப்பிற்—பாயிர நான் மறை மாயிரு ஞாலத்—தபிகை கரக்கப் படுபொரு ளாதலி—னுலையா மரபி னிலை பெற வம்மறைப்--பருப்பொரு ளொருவி விழுப்பொரு ளொருங்கு--மமிழ்தினுமினிய தமிழினிற் றருவான்—பவர்சடைப் பனவர் நுவலருஞ் சீர்சா—லிகலறு தவத்திறற் பகவமா முனிவரன்—செய்தவப் பயனுன் மைதவ வந்து—மாண்டநல் லருட்கொடை பூண்டகா ரணத்தாற்—றெய்வப் புலமைத் திருவள் ளுவரெனு—நிகரில்பேர் மேற் கொண் டகலிட மூய்யத்—துன்பக லறம்பொரு ளின்பம்வ் டென்னு—காற்பொருள் பயக்கு மேற்புடைத் தாகத்—தப்பா தருளிய முப்பான் மருவிய—திருக்குற ளென் னுந் தெய்வமா மறையெயி—தருமர் முதலிய சால்பினர் வகுத்த—திருவில்ப் பூரை களூட்சிறந்து நிலவிய—வரிமேம் லியல்புகழ்ப் பரிமே லழக—ருளங்கனிந் தியற்றிய வளங்கனி யுரையினைத்—தேர்ச்சியின் மிக்கோர் சிந்தைகொன் குவப்பக்—கரலிகி தங்களான் விரவிய வழுக்களைந்—தருவிய லச்சிற் றருகெனப் பஃறலைப்—பன்ன

கஞ் சமந்த பன்னக வரைப்பிற்—குணங்குளேப் புரவி வணங்கல ரேறு—வெதுப் பற வுலகம் பொதுக்கடிக் தளிக்கும்—வலமுறு மிராச குலகு டாமணி—கழை சுளி புகர்முகக் கடவுணல் வேழம்—வீழை தரு கற்பக மென்குழை கொடித்து—வான்ரேய் நறுஞ்சுதைத் தேன்ரேய்த் தருந்தப்—புழைக்கர நீட்டப் பழிப்பற தேனிரு—றுறுமிய சந்தனச் சூழல்வாய்க் குலவுஞ்—செறுபுல வுடைய குறுமுளி தன்பா—லர்ந்தைகெட நுவன்று வரம்பெறு பாக்குக்—குண்டுபடு மீர்ஞ்சுனே குடைந்தர மகளி—ரரக்கலர் கரம்வீரித் திரப்பதை நிகர்ப்ப—வடுப்படாக் காந்தட் டுடுப்பலர் கஞலிய—முதியசெந் தமிழ்கமழ் பொழியமால் வரையான்—வீரலிய விண்ணவர் பரவலீ ரடியான்—மூவுல களந்த மேவரு நெடுமால்—வன்றிறற் பகு வாய் வன்றியி னுரக்கொளீஇ—யுருவமண் புகுந்த தருளியுங் காணு—வருளார் பசுங்கொடி யொருபாற் படர்ந்த—முக்கட் கரும்பின் செக்கம லத்தான்—கரையினிற் ரேய்ந்து புரைதப மணக்க—நலந்தரு கவணியக் குலக்கொழுந் திட்ட—பழமறை தன்னகத் தளவளாய் மணக்குந் தெய்வவெண் டிரையெறி வையைமா நதியான்—வரியளி மிதிப்பப் புரிமுறுக் கவிழ்ந்த—மணங்கம ழும்பய மணங்கயர் சுரும்க்கு மக னமர்ந் துதவுந்த கவினர் கடும்ப—முகனமர்ந் தொழுக்குந் துகளறு செல்தே—ஞவட் டெறிந் தின்கழைப் படப்பையிற் புகுந்த—சுரிமுகச் சங்குமல் வரிமடை யுடைப்ப—மட்டியல் பூந்துகள் கொட்டிச் சிறைசெயுங்—கவிழ்துணர்த் தேமாம் பொழில்புடை யுடுத்த—பம்பிய வளம்பொலி செம்பிநன் னாடன்—பூனத முளரி மானதத் தட மெனத்—தேவரு மயிர்ப்பப் பூவளே யங்களே—வெண்ணிறச் சிறக ரண்ணிய மரான—மருந்திட வென்றும் வீருந்திடு மணித்தடந்—துதைதரு செல்வப் புதுவைமா நகரா—னுலம்பொரு மறுவில் வலம்படு புயத்தி—னுறைதரு கொற்றவை யுவகையொடு சூறு நகை—யரும்பிய தொப்ப வீரும்பிய வனேந்த—வளியடை கிடக்குந் தளவமா லிகை யான்—மரவுரி யந்நுணன் மறுத்துமுட் சினப்பிற்—றகைக்குந் திறனலன் சிகைக் கனல் கொழிக்குங்—குலிசவாட் படையுடைக் குரிசிலென் றுணர்குற்—றன்னவன் றனேீத் திங்நகர்ப் போந்த—துச்சைச் சிரவரீ துண்மையே யாமெனுக்—கண்டவர் பலரும்வாய் வீண்டிடச் சிறந்து—வீழிகவர் வனப்பிற் சுழிகொள்வாம் பரியான்—றன்னுட னுடன்றமர் தாக்கிய தெய்வக்—கொன்னுறை வயிரவா கோட்டுமா னினங்க—ளகைப்பொடு வாய்வெரீஇத் திகைத்தோட் டெடுத்துச்—செல்வுழி யின்றித் திசைதொறு மிமையா—நாட்டமொடு வட்கி வாட்டமொடு நிற்ப—வயக்கொ டிறு மாந்து தயங்கிமதங் கவிழ்த்து—நிகரிகக் துலவும் புகர்முகக் களிற்ருன்—கடையுகத் தெழுந்த கருங்கட லென்னப்—படையொடு துவன்றிய வடையல ருடையா—நெஞ்சு பறை கொட்ட வஞ்சிவீழி வீளர்ப்ப—வேற்றிடி போல வீடையரு திரட்டுங்—கூற்று ழெறுழ்வலி யேற்றரி முரசினன்—பலப்பல வரசர் நலப்பமே லுயர்த்த—பைங் கொடி யடங்கலும் பணிசெயூ நிற்பத்—திகழ்ந்துமே லோங்கிச் சிறந்தெழிற் சய மக—ளாவிக் ணியதாங் காவிக் கொடியினேன்—டீடா ருலகங் கோடா நெறியி னிற்—குலவுற நடாத்து நிலவுசெங் கோலினன்—றண்ணிய நலங்கெழு புண்ணிய மேரு—நிறைதரு கருணைக் குறையுணல் லின்பத்—திரையெறி கல்விக் கரைபொரு கடனறுந்—தண்ணளி யரும்பிப் புண்ணிய மலர்ந்து—நன்றிபல பழுத்து நின்றகுண தாரு—நித்திய வருட்சிவ பத்தியின் பைங்கூழ்—புகழ்தரு மிரவலர் நிகழ்தரு குறிப்ப நிந்—துதவிடு சீர்சா லதுலசிந் தாமணி—வீளங்குரு முயிரெனு மிளங்கோ தனங் கள்—கூட்டமிட் டருந்தி யேப்பமிட் டவப்பக்—கண்ணிய வின்சுவை நண்ணிய வருட்பா—லேமமொடு சுரக்குங் காம தேனு—பொய்வகைச் சமயப் புதையிருள் புடைபட—மெய்வகை யொளிவீரி சைவ சிகாமணி—யென்றபற் பலரு மெடுத்தினி தியம்பக்—குன்றலி னிலமகள் குதுகலிப் பெய்தத்—தவஞா னம்பெறு சிவஞான தேவ—ரியற்றிய தவத்தா னயக்கத் தோன்றியோன்—பொதியவிழ் கடுக்கைகொடு

மதிதவழ் சடில—மன்னு சாமிதன் மலர்க்கழல் பழிச்சும்—பொன்னு சாமிமால் புகன்
றன னுக—வடங்கிய தழனு வடங்கலு நிமிர்த்தெனத்—தளிர்த்தளி மொய்ப்பத்
துளிர்த்தலர் தேமாங்—தனிசிறு வளியாற் கமலமென் பொருட்டிற்—ருக்குறீஇ யுடை
ந்து வாக்குறு பைந்தே—னீர்த்தட நிரப்பு மிழநன் னுட்டி—னிலமகண் முகமெனக்
குலவும்யாழ்ப் பாணத்—தறிவளஞ் செறிந்து பொதிதலிற் பலகலை—வல்லோர் புகழு
நல்லூ ராளி—நந்தலி னலங்கெழு கந்தவேட் குரிசில்—பெரிதுவந் துளுற்றிய வரிய
மெய்த் தவத்தாற்—பொறையருள் சாந்த நிறைகொடை வாய்மையென்—றின்னநற்
குணங்களோர் மன்னிய வருக்கொடு வந்தெதன் றியாவரும் வழங்கிட வந்தோன்—
கல்வியங் கடலைக் கடப்பவர் தமக்கோர்--சொல்வியன் புணையெனத் துரிசறநிற்போ--
னிருவகைப் பிரம சரியநன் னெறியின்—மயற்றலை புருத்தா நயிட்டிக நிலையினன்—
கற்பனை கடந்த சிற்பரஞ் சுடர்தாள்—கனவிலு நனவினுங் கழலாக் கருத்தினன்—
பழிதரு முத்திப் பகுப்பெலா மொருவி—யழிவில்பே ரின்ப மளிக்குறு முத்தியை—
யெளிதினிற் றெரித்துப் பளகிலின் புறுத்துஞ்--சைவசித் தாந்த மெய்தரு பனுவலை--
யையந் திரிபற வகத்தினன் குணர்ந்தோன்—கையற விகந்த கருணையங் கடலோன்—
கூறுசீர் புனையு மாறுமுக நாவலன்—பரவிய வுலப்பிற் பதித்தனன்—விரவிய வுலகம்
விளங்குதற் பொருட்டே.

பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
உ	௧௧	வுடையார்	வுடையார்
ஔ	உ௧	ரூமத்	மரூமத்
எ	ரூ	பொழிய	பொதிய
எ	உ௮	வயிரவா	வயிரவாட்
ந	௧எ	மென்ரூந்	மென்ரூர்
ச	௧ரு	இலவர்யின	இலவாயின
ச	ந.ந.	வேண்டநமையும்	வேண்டாமையும்
௧0	ந.ஔ	யென்பனுள்	யென்பதனுள்
௧ந.	ரூ	அறத்தினூங்	அறத்தினூங்
௧ந.	௧0	னூங்கில்லே	னூங்கில்லே
௧ந.	ந.உ	பிறரறிதவ்	பிறரறிதல்
௧ச	௧எ	யுடம்பிணுஞ்	யுடம்பினுஞ்
௧ச	ந.ஔ	யாங்கை	யாக்கை
௧எ	ந.௮	தொல்காப்பியற்	தொல்காப்பியச்
௧௮	ந.0	பட்டாது	பட்டது
உரு	எ	உடைம	உடைமை
ச0	ந.௮	வ ன்	தவன்
அஔ	உரு	தலேமைக்	தலைமை
அஎ	ச0	ரூநன்	ரூன்ற
௧0௮	௧0	நிரம்பாயை	நிரம்பாமை
௧௧ச	௧ச	துணிவென	றுணிவென
௧௧௮	௧ஔ	நாணித்	ணாணிக்
௧உ௮	ந.௮	பொருள்	பொருள்
௧உரு	எ	எரிமுன்னா	எரிமுன்னர்
௧ந.ந.	ந.ஔ	தறுநிதி	தங்நிதி
௧ந.௮	உ0	வெண்ணுமைமை	வெண்ணுமையை
௧ரு௧	உஉ	லென்பனுற்	லென்பதனுற்
௧ரு௧	ந.௮	வண்வனளீர்	வண்புனனீர்
உ௧எ	ந.உ	லாயினும்	லானும்
உரு௮	ந.உ	தொறூஉற்	தொறூஉங்
உ எ௧	உரு	கொடுக்கும்	கொக்கும்
ந.0ஔ	௧ரு	புடையவர்	யுடையர்
ந.ந.௧	ரூ	யவர்க்நண்ட	யவர்க்கண்ட
ந.ச௧	ந.	தந்தார்	தந்தார் அவர்
ந.ச௧	அ	மென்பதாம்	வென்பதாம்
ந.ரு௧	ந.ச	எது	றது
ந.ரு௧	ந.ரு	றன்	என்
ந.எஔ	௧௧	சு	கூ
ந.அந.	௧0	இரந்த	இறந்த
எ	அ	குணங்கலாலே	குணங்களாலே
௧ரு	ச௧	லெக்குப்	லெக்கும்
௧அ	சு	தெட்டிப்	தெட்டுப்

பாலியலதிகாரவகராதி.

பால்..	பக்கம்.
அறத்துப்பால்.	க
காமத்துப்பால்.	ஈ0கூ
பொருட்பால்.	கசஈ
இயல்.	பக்கம்.
அங்கவியல்.	கஅஈ
அரசியல்.	ககஈ
இல்லறவியல்.	கடு
ஒழிபியல்.	உ0உ
களவியல்.	ஈ0கூ
கற்பியல்.	ஈஈக
துறவறவியல்.	சுஅ
அதிகாரம்.	பக்கம்
அடக்கமுடைமை.	ஈள
அமைச்சு.	கஅஈ
அரண்.	உகச
அருளுடைமை.	கூஅ
அலரறிவுறுத்தல்.	ஈஉஅ
அவர்வயின்விதும்பல்.	ஈகஈ
அவாவறுதல்.	க0டு
அவையஞ்சாமை.	உ0அ
அவையறிதல்.	உ0டு
அழுக்காறுமை	சள
அறன்வலியுறுத்தல்.	கஉ
அறிவுடைமை.	கஉடு
அன்புடைமை.	உச
ஆள்வினையுடைமை.	களஅ
இகல்.	உசச
இடனறிதல்.	கசடு
இடிக்கணழியாமை.	கஅக
இரவச்சம்.	ஈ0உ
இரவு.	உகூஉ
இல்வாழ்க்கை.	கடு
இறைமாட்சி.	கதஈ
இனியவைகூறல்.	உசை
இன்னாசெய்யாமை.	அஅ
ஈகை.	சூஉ
உட்பகை.	உடுஉ

அதிகாரம்.	பக்கம்.
உழவு.	உகூஈ
உறுப்புநலனழிதல்.	ஈடுடு
ஊக்கமுடைமை.	களஈ
ஊடலுவகை.	ஈஅக
ஊழ்.	க0அ
ஒப்புரவறிதல்.	டுகூ
ஒழுக்கமுடைமை.	ஈசூ
ஒற்றுடல்.	களo
கடவுள்வாழ்த்து.	ஈ
கண்ணோட்டம்.	ககள
கண்விதுப்பழிதல்.	ஈஈள
கயமை.	ஈ0ச
கல்லாமை.	ககசூ
கல்வி.	ககசு
கள்ளாமை.	எசூ
கள்ளுண்ணாமை.	உசுஈ
கனவுநிலையுரைத்தல்.	ஈசசூ
காதற்சிறப்புரைத்தல்.	ஈஉக
காலமறிதல்.	கசஉ
குடிசெயல்வகை.	உகூக
குடிமை.	உளஉ
குறிப்பறிதல்.	உ0ஈ
குறிப்பறிதல்.	ஈகஉ
குறிப்பறிவுறுத்தல்.	ஈசுள
குற்றங்கடிதல்.	கஉள
கூடாநட்பு.	உஈசு
கூடாவொழுக்கம்	எசு
கேள்வி.	க்உஉ
கொடுங்கோன்மை.	கீசுஉ
கொல்லாமை.	க்க்
சான்றாண்மை.	உஅ0
சிற்றினஞ்சேராமை.	கங்ஈ
சுற்றந்தழால்.	கடுஈ
சூது.	உசுசு
செங்கோன்மை.	கடுகூ
செய்ந்நன்றியறிதல்.	ஈஉ
சொல்வன்மை.	கஅசு

அதிகாரம்.	பக்கம்.
தகையணங்குறுத்தல்.	ஈ0கூ
தவம்.	எஈ
தனிப்படர்மிகுதி.	ஈசஈ
தீநட்பு.	உஈஈ
தீவினையச்சம்.	ஙுள
துறவு.	சூஎ
தூது.	ககூள
தெரிந்துசெயல்வகை.	கஈசூ
தெரிந்துதெளிதல்.	கசள
தெரிந்துவினையாடல்.	சடு0
நடுவுநிலைமை.	ஈச
நட்பாராய்தல்.	உஉஅ
நட்பு.	உஉடு
நலம்புனைந்துரைத்தல்.	ஈகூ
நல்குரவு.	உகூசூ
நன்றியில்செல்வம்.	உஅடு
நாடு.	உகக
நாணுடைமை.	உஅஅ
நாணுத்துறவுரைத்தல்.	ஈஉச
நிலையாமை.	கூச
நிறையழிதல்.	ஈசு0
நினைந்தவர்புலம்பல்.	ஈசசூ
நீத்தார்பெருமை.	கூ
நெஞ்சொடுகிளத்தல்.	ஈடுள
நெஞ்சொடுபுலத்தல்.	ஈளஉ
பகைதெரிதல்.	உசகூ
பகைமாட்சி.	உசள
பசப்புறுபருவரல்.	ஈச0
படர்மெலிந்திரங்கல்.	ஈஈச
படைச்செருக்கு.	உஉஉ
படைமாட்சி.	உகக
பண்புடைமை.	உஅஈ
பயனிலசொல்லாமை.	ஙுச
பழைமை.	உஈக
பிரிவாற்றாமை.	ஈஈக
பிறனில்விழையாமை.	சஉ

அதிகாரம்.	பக்கம்.
புகழ்.	கூச
புணர்ச்சிமகிழ்தல்.	ஈகடு
புணர்ச்சிவிதும்பல்.	ஈகூசூ
புதல்வரைப்பெறுதல்.	உக
புலவி.	ஈளடு
புலவிநுணுக்கம்.	ஈளஅ
புலான்மறுத்தல்.	எக
புல்லறிவாண்மை.	உசக
புறங்கூறாமை.	ஙுஉ
பெண்வழிச்சேறல்.	உஙுள
பெரியாரைத்துணைக்கோடல்.	கஈ0
பெரியாரைப்பிழையாமை.	உஙுச
பெருமை	உளள
பேதைமை.	உஙசூ
பொச்சாவாமை.	கடுசூ
பொருள்செயல்வகை.	உகசூ
பொழுதுகண்டிரங்கல்.	ஈடுஉ
பொறையுடைமை.	சச
மடியின்மை.	களடு
மருந்து.	உசூசூ
மனைமாட்சி.	உ0ஏ
மானம்.	உளடு
மெய்யுணர்தல்.	க0க
வரைவுமலிதல்.	உசூ0
வலியறிதல்.	கஈசூ
வாய்மை.	அஉ
வாழ்க்கைத்துணைநலம்.	கஅ
வான்சிறப்பு.	சூ
விருந்தோம்பல்.	உசூ
வினைசெயல்வகை.	கஈஙுடு
வினைத்திட்பம்.	கஈஈஉ
வினைத்தூய்மை.	கஅசூ
வெகுளாமை.	அடு
வெஃகாமை.	சசூ
வெருவந்தசெய்யாமை.	கஈசச

பாலியலதிகாரவகராதி முற்றிற்று.

கணபதி துணை.

திருவள்ளுவர் குறள்.

பரிமேலழகருரை.

அறத்துப்பால்.

உரைப்பாயிரம்.

இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமிலின்பத் தழிவில்வீடும் நெறியறிந்து எய்துதற்குரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரானெடுக்கப்பட்ட பொருள் நான்கு: அவை அறம், பொருள், இன்பம், வீடென்பன. * அவற்றுள், வீடென்பது சிந்தையுமொழியுஞ் செல்லா நிலைமைத்தாகலின், துறவறமாகிய காரண வகையாற் கூறப்படுவதல்லது இலக்கணவகையாற் கூறப்படாமையின், நூல்களாற் கூறப்படுவன ஈண மூன்றுமேயாம்.

அவற்றுள், அறமாவது மநு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம். அஃது ஒழுக்கம் வழக்கு தண்டமென மூவகைப்படும். †

அவற்றுள், ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளினின்று ‡ அவ்வவற்றிற்கோதிய அறங்களின் வழுவாதொழுகுதல்.

வழக்கமாவது ஒருபொருளைத் தனித்தனியே எனதெனதென்றிருப்பார் அது காரணமாகத் தம்முண்மாறுபட்டு அப்பொருண்மேற் சொல்வது. அது கடன்கோடன் முதற் பதினெட்டுப் பதத்ததாம். §

---

* அறம் பொருள் இன்பம் வீடென்பனவற்றை வடநூலார் முறையே தரும அர்த்த காம மோக்ஷமென்பர்.

† ஒழுக்கம் வழக்கு தண்டமென்பனவற்றை வடநூலார் முறையே ஆசாரம் விவகாரம் பிராயச்சித்தமென்பர்.

‡ நிலை - ஆச்சிரமம்.

§ விவகாரபதம் பதினெட்டாவன கடன்கோடல், உபநிதி, கூடிமேம்படல், கல்கியதை நல்காமை, ஒப்பிப்பணி செய்யாமை, கூலிகொடாமை, உடையனல்லான்விற்றல், விற்றுக்கொடாமை, கொண்டுள்ளமொப்பாமை, கட்டுப்பாடிகடத்தல், நிலவழக்கு, மாதர்பாடவர்தருமம், தாயபாகம், வன்செய்கை, சொற்கொடுமை, தண்டக்கொடுமை, சூது, ஒழிபு எனவிவை.

தண்டமாவது அவ்வொழுக்கநெறியினும் வழக்குநெறியினும் வழீஇயினுரை அந்நெறி நிறுத்துதற்பொருட்டு ஒப்பாடி அதற்குத் தகவொறுத்தல்.

இவற்றுள் வழக்குந் தண்டமும் உலகநெறி நிறுத்துதற் பயத்தவாவதல்லது ஒழுக்கம்போல மக்களுயிர்க்கு உறுதிபயத்தற் சிறப்பிலவாகலானும், அவைதாம் நூலானேயன்றி உணர்வுடிருதியானுந் தேயவியற்கையானும் அறியப்படுதலானும், அவற்றை யொழித்து, ஈண்டுத் தெய்வப்புலமைத் திருவள்ளுவராற் சிறப்புடைய ஒழுக்கமே அறமெனவெடுத்துக் கொள்ளப்பட்டது.

அதுதான் நால்வகை நிலத்தாய் வருணந்தோறும் வேறுபாடிடைமையின், சிறு பான்மையாகிய அச்சிறப்பியல்புகளொழித்து, எல்லார்க்கு மொத்தலிற் பெரும் பான் மையாகிய பொதுவியல்புபற்றி இல்லறந் துறவறமென இருவகை நிலையாற் கூறப் பட்டது.

அவற்றுள், இல்லறமாவது இல்வாழ்க்கை நிலைக்குச் சொல்லுகின்ற நெறிக்க ணின்று அதற்குத் துணையாகிய கற்புடைமனைவியோடுஞ் செய்யப்படுவதாகலின், அதனை முதற்கட் கூறுவான்றொடங்கி, எடுத்துக்கொண்ட இலக்கியநிணிது முடிதற் பொருட்டுக் கடவுள்வாழ்த்துக் கூறுகின்றார்.

பாயிரம்.

முதல் அதிகாரம்.—கடவுள்வாழ்த்து.

அஃதாவது கவிதான் வழிபடுகடவுளாயாதல் எடுத்துக்கொண்ட பொருட்கு ஏற்புடைக்கடவுளாயாதல் வாழ்த்துதல். அவற்றுள் இவ்வாழ்த்து ஏற்புடைக்கடவுளெனவறிக: என்னோ? சத்துவமுதலிய குணங்களான் மூன்றுகிய உறுதிப்பொருட்கு அவற்றான் மூவராகிய முதற்கடவுளோடு இயைபுண்டாகலான் அம்மூன்று பொருளுங் கூறலுற்றார்க்கு அம்மூவரையும் வாழ்த்துதல் முறைமையாகலின், இவ்வாழ்த்து அம்மூவர்க்கும் பொதுப்படக் கூறினரெனவுணர்க.

க. அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு

இதன்பொருள். எழுத்தெல்லாம் அகர முதல - எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலையுடையன:—உலகு ஆதிபகவன் முதற்று - அதுபோல உலகம் ஆதிபகவனுகிய * முதலையுடைத்து. என்றவாறு.

இது தலைமைபற்றிவந்த எடுத்துக்காட்டுவமை. அகரத்திற்குத்தலைமை விகாரத்தானன்றி நாதமாத்திரையாகிய இயல்பாற்பிறத்தலானும், ஆதிபகவற்குத் தலைமை செயற்கையுணர்வானன்றி இயற்கையுணர்வான் முற்றுமுணர்தலானுங்கொள்க. தமிழெழுத்திற்கேயன்றி வடவெழுத்திற்கும் முதலாதலிற்கோக்கி, எழுத்தெல்லாமென்றார். ஆதிபகவன் என்னுமிருபெயரொட்டுப் பண்புத்தொகை வடநூன்முடிபு. உலகென்றது ஈண்டுயிர்கண்மேனின்றது. காணப்பட்ட உலகத்தாற் காணப்படாத கடவுட்கு உண்மை கூறவேண்டுதலின், ஆதிபகவன்முதற்றேயென உலகின்மேல்வைத்துக் கூறினார்; கூறினரேனும், உலகிற்கு முதல் ஆதிபகவனென்பது கருத்தாகக்கொள்க. எகாரம் தேற்றத்தின்கண் வந்தது. இப்பாட்டான் முதற்கடவுளதுண்மை கூறப்பட்டது.

உ. கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின் உ.

இ - ள். கற்றதனால் ஆய பயன் என் - எல்லாநூல்களையுங்கற்றவர்க்கு அக்கல்வியறிவாலாய பயன்யாது?—வாலறிவன் நற்றாள் தொழாரெனின் - மெய்யுணர்வினையுடையானது நல்லதாள்களைத் தொழாராயின். எ - று.

எவனென்னும் வினாப்பெயர் என்னென்றாய், ஈண்டின்மை குறித்து நின்றது. கொல்லென்பது அசைநிலை. பிறவிப்பிணிக்கு மருந்தாகலின் நற்றாளென்றார். ஆகமவறிவிற்குப் பயன் அவன்றாளைத் தொழுது பிறவியறுத்தலென்பது இதனாற் கூறப்பட்டது. (உ)

ஈ. மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். ஈ.

இ - ள். மலர்மிசை ஏகினான் மாண் அடி சேர்ந்தார் - மலரின்கண்ணே சென்றவனது மாட்சிமைப்பட்ட அடிகளைச் சேர்ந்தார்—நிலமிசை நீடு வாழ்வார் - எல்லாவுலகிற்கும் மேலாய வீட்டுலகின்கண் அழிவின்றி வாழ்வார். எ - று.

---

* ஐசுவரியம், வீரியம், புகழ், ஞானம், வைராக்கியம் என்னுமாறுக்கும் பகமென்னும் பெயருண்மையால், பகவனென்பதற்கு இவ்வாறுகுணங்களையு முடையோனென்பது பொருள்.

அன்பாளினேவாரது உள்ளக்கமலத்தின்கண் அவர் நினைந்த வடிவோடுவீரைந்து சேறலின், எல்லுனென இறந்தகாலத்தாற் கூறினார்: என்னே? "வாராக் காலத்து நிகழுங் காலத்து—மோராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி—யிறந்தகா லத்துக் குறிப்பொடு கிளத்தல்—விரைந்த பொருள வென்மனார் புலவர்." * என்பதோத்தாகலின். இதனைப் "பூமேனடந்தான்" என்பதோர் பெயரபற்றிப் பிறிதோர் கடவுட்கேற்று வாருமுளர். சேர்தல் - இடைவிடாது நினைத்தல். (சு)

வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில.

இ - ள். வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு - ஒருபொருளேயும் விழைதலும் வெறுத்தலுமில்லாதவனடியைச் சேர்ந்தார்க்கு—யாண்டும் இடும்பை இல - எக்காலத்தும் பிறவித்துன்பங்கள் உளவாகா. எ - று.

பிறவித்துன்பங்களாவன தன்னைப்பற்றி வருவனவும், பிறவுயிர்களைப்பற்றி வருவனவும் தெய்வத்தைப்பற்றி வருவனவுமென மூவகையான் வருந்துன்பங்கள். அடி சேர்ந்தார்க்கும் அவ்விரண்டு † பின்மையின், அவை காரணமாக வரும் மூவகைத் துன்பங்களும் இலவர்யின. (ச)

இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

இ - ள். இருள் சேர் இருவினையும் சேரா - மயக்கத்தைப்பற்றி வரும் நல்வினை‡ தீவினையென்னும் இருவகை வினையும் உளவாகா—இறைவன் பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு - இறைவனது மெய்மை சேர்ந்த புகழை விரும்பினரிடத்து. எ - று.

இன்ன தன்மைத்தென ஒருவராலுங்கூறப்படாமையின் அவிச்சையை இருளென்றும், நல்வினையும் பிறத்தற்கேதுவாகலான் இருவினையுஞ் சேராவென்றுங் கூறினார். இறைமைக்குணங்களிலராயினரை உடையரெனக் கருதி அறிவிலார் கூறுகின்ற புகழ்கள் பொருள்சேராவாகலின், அவை முற்றவுமுடைய இறைவன்புகழே பொருள்சேர் புகழெனப்பட்டது. புரிதல் - எப்பொழுதுஞ் சொல்லுதல். (கி)

பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார். கூ.

இ - ள் பொறி வாயில் ஐந்து அவித்தான் - மெய், வாய், கண், மூக்குச், செவியென்னும் பொறிகளே வழியாகவுடைய ஐந்தவாவினையும் அறுத்தானது—பொய் தீர் ஒழுக்கநெறி நின்றார் - மெய்யான ஒழுக்கநெறியின்கண் வழுவாது நின்றார்—நீடு வாழ்வார் - பிறப்பின்றி எக்காலத்தும் ஒரு தன்மையராய் வாழ்வார். எ-று.

---

* தொல்காப்பியம், வினையியல், சசு. † வேண்டுதலும் வேண்டாமையும்

‡ ஈண்டு நல்வினையென்றது அழிதன்மாலையவாய துறக்கவின்ப முதலிய காமியங்களைப்பயப்பனவாகிய வேள்விமுதலியனவற்றை. இவை வீட்டுக்கு நேரே காயிலாகிய தத்துவஞானத்தைப் பயவாமைமாத்திரையேயன்றித் தீவினைபோல அது நிகழுமெவாட்டாது தடைசெய்து நிற்றலு முடையனவாம். ஆதலால், இந்நல்வினை தீவினை யிரண்டும் ஒருவனுக்கு ஞானத்தைத் தடுத்துப் பந்தமுமுத்தியும் பொன்விலங்கும் இருப்புவிலங்குபோலத் தம்முளொப்பனவாமென்க. சரியை கிரியை யோகங்கள் ஞானம் வாயிலாக வீடுபயத்தலின், ஈண்டு, நல்வினையென்றது அவற்றையுமென்க.

புலன்கள் ஐந்தாகலான், அவற்றின்கட்செல்கின்ற அவாவும் ஐந்தாயிற்று. ஒழுக்க நெறி ஐந்தவித்தானுற் சொல்லப்பட்டமையின், ஆண்டையாறனுருபு செய்யுட் கிழமைக்கண் வந்தது, கபிலரதுபாட்டு என்பது போல. இவை நான்கு பாட்டானும் இறைவனை நினைத்தலும் வாழ்த்தலும் அவனெறிநிற்றலுஞ் செய்தார் வீடுபெறுவரென்பது கூறப்பட்டது. (சு)

எ. தனக்குவமை யில்லாதான் ருள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது. எ.

இ - ள். தனக்கு உவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால் - ஒருவாற்றானுந் தனக்கு நிகரில்லாதவனது தாளைச் சேர்ந்தார்க்கல்லது,—மனக்கவலை மாற்றல் அரிது - மனத்தின்கணிகழுந் துன்பங்களை நீக்குதல் உண்டாகாது. எ - று.

"உறற்பால - தீண்டா விடுத லரிது." * என்றாற்போல ஈண்டு அருமை இன்மைமேனின்றது. தாள் சேராதார் பிறவிக்கேதுவாகிய காம வெகுளி மயக்கங்களை மாற்றமாட்டாமையின், பிறந்து அவற்றான் வருந்துன்பங்களுள் அழுந்துவரென்பதாம். (எ)

அ. அறவாழி யந்தணன் ருள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது. அ.

இ - ள். அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கு அல்லால் - அறக்கடலாகிய அந்தணனது தாளாகிய புணையைச் சேர்ந்தார்க்கல்லது—பிற ஆழி நீந்தல் அரிது - அதனிற் பிறவாகிய கடல்களை நீந்தல் அரிது. எ - று.

அறம், பொருள், இன்பமென உடனெண்ணப்பட்ட மூன்றனுள் அறத்தை முன்னர்ப் பிரித்தமையான் ஏனைப்பொருளுமின்பமும் பிறவெனப்பட்டன. பலவேறு வகைப்பட்ட அறங்களெல்லாவற்றையுந் தனக்கு வடிவாகவுடையனாகலின், அறவாழியந்தணனென்றார். அறவாழியென்பதனைத் தருமசக்கரமாக்கி அதனையுடைய அந்தணனென்றுரைப்பாருமுளர். அப்புணையைச் சேராதார் கரைகாணாது அவற்றுள்ளே யழுந்துவராகலின், நீந்தலரிதென்றார். இம்மேற்கதேசவருவகம். (அ)

கூ. கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
ருளை வணங்காத தலை.

இ - ள். கோள் இல் பொறியிற்குணம் இல - தத்தமக்கேற்ற புலன்களைக் கொள்கையில்லாத பொறிகள்போலப் பயன்படுதலுடையவல்ல—எண்குணத்தான் தாளை வணங்காத் தலை - எண்வகைப்பட்ட குணங்களையுடையானது தாள்களை வணங்காத தலைகள். எ - று.

எண்குணங்களாவன தன்வயத்தனுதல், தூயவுடம்பினனுதல், இயற்கையுணர்வினனுதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பி லின்பமுடைமை எனவிவை. † இவ்வாறு சைவாக

* காலடியார். பழமொழி,—ஈண்டுநீர் வையத்து ளெல்லாரு மெத்தனையும்—வேண்டார்மற் றீய விழைபய னில்லவை—வேண்டி னும் வேண்டா விடி னு முறும்பால—தீண்டா விடுதலரிது.

† தன்வயத்தனுதல்—சுவதந்திரத்துவம். தூயவுடம்பினனுதல்—விசுத்ததேகம். இயற்கையுணர்வினனுதல்—நிராமயான்மா, முற்றுமுணர்தல்—சருவஞ்ஞத்துவம். இயல்பாகவே பாசங்

மத்துக் கூறப்பட்டது. அணிமாலை * முதலாகவுடையனவெனவும், கடையிலாவ றிவை † முதலாகவுடையனவெனவும் உரைப்பாருமுளர். காணுத கண் முதலியன போல வணங்காத தலைகள் பயனிலவெனத் தலைமேல்வைத்துக் கூறினார்; கூறினுமே னும், இனம்பற்றி வாழ்த்தாத நாக்களும் அவ்வாறே பயனிலவென்பதாஉங்கொள்க. இவை மூன்றுபாட்டானும் அவனை நினைத்தலும் வாழ்த்தலும் வணங்கலுஞ் செய்யா வழிப் படுங் குற்றங் கூறப்பட்டது. (கூ)

கo. பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
நிறைவ னடிசேரா தார். கo.

இ - ள். இறைவன் அடி (சேர்ந்தார்) பிறவிப் பெருங்கடல் நீந்துவர் - இறைவ னடியென்னும் புணையைச் சேர்ந்தார் பிறவியாகிய பெரியகடலை நீந்துவர்;—சேரா தார் நீந்தார் - அதனைச் சேராதார் நீந்தமாட்டாராய் அதனுளழுந்துவர். எ - று.

காரணகாரியத் தொடர்ச்சியாய்க் கரையின்றி வருதலின், பிறவிப்பெருங்கட லென்றார். சேர்ந்தாரென்பது சொல்லெச்சம். உலகியல்பை நினையாது இறைவனடி யையே நினைப்பார்க்குப் பிறவியறுதலும், அவ்வாறன்றி மாறி நினைப்பார்க்கு அஃதறு மையுமாகிய இரண்டும் இதனுல் நியமிக்கப்பட்டன. (கo)

உ ம் அதி.—வான்சிறப்பு.

அஃதாவது அக்கடவுளதாணையான் உலகமும் அதற்குறுதியாகிய அறம் பொருளின்பங்களும் நடத்தற்கேதுவாகிய மழையினது சிறப்புக் கூறுதல், அதிகார முறைமையும் இதனுனே விளங்கும்.

கக. வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றூனமிழ்த மென்றுணரற் பாற்று. க.

இ - ள். வான் நின்று உலகம் வழங்கி வருதலால் - மழை இடையறாது நிற்ப உலகம் நிலைபெறாது வருதலான்,—தான் அமிழ்தமென்று உணரற் பாற்று - அம்மழை தான் உலகத்திற்கு அமிழ்தமென்று உணரும் பான்மையையுடைத்து. எ - று.

நிற்பவென்பது நின்றெனத் திரிந்து நின்றது. உலகமென்றது எண்ணியிர்களை. அவை நிலைபெற்று வருதலாவது பிறப்பு இடையறுமையின் எஞ்ஞான்றும் உடம்போடு காணப்பட்டு வருதல். அமிழ்தமுண்டார் சாவாது நிலைபெறுதலின், உலகத்தை நிலை பெறுத்துகின்ற வானை அமிழ்தமைமை றுணர்கவென்றார். (க)

---

* அணிமா முதலிய எண்சித்திகளாவன அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராத்தி, பிரா காமியம், ஈசிதை, வசிதை எனவ்வை.

† கடையிலாவறிவு முதலிய எண்குணங்களாவன கடையிலாவறிவு, கடையிலாக்கட்சி கடையிலாவீரியம், கடையிலாவின்பம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுவின்மை, அழிபா லியல்பு எனவ்வை. இவ்வாறு ஆருகதத்திலும் கூறப்பட்டது.

கஉ. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை. உ.

இ - ள். துப்பார்க்குத் துப்பு ஆய துப்பு ஆக்கி - உண்பார்க்கு நல்ல அணவகளே உளவாக்கி,—துப்பார்க்குத் துப்பு ஆயதூஉம் மழை - அவற்றையுண்கின்றுர்க்குத் தானும் உணவாய் நிற்பதூஉம் மழை. எ - று.

தானுமுணவாதலாவது தண்ணீராயுண்ணப்படுதல். நிறப்புடைய உயர்திணை மேல் வைத்துக் கூறினமையின், அஃறிணைக்கும் இஃதொக்கும். இவ்வாறு உயிர்களது பசியையும் நீர்வேட்கையையும் நீக்குதலின், அவை வழங்கிவருதலுடைய வாயின வென்பதாம். (உ)

கஙு. விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி.

இ - ள். விண் இன்று பொய்ப்பின் - மழை வேண்டுங்காலத்துப் பெய்யாது பொய்க்குமாயின்,—விரி நீர் வியன் உலகத்துள் - கடலாற் சூழப்பட்ட அகன்றபுலகத்தின்கண்—நின்று உடற்றும் பசி - நிலைபெற்று உயிர்களை வருத்தும் பசி. எ - று.

கடலுடைத்தாயினும் அதனைற் பயனில்லையென்பார், விரி நீர் வியனுலகத்தென்றார். உணவின்மையின், பசியான் உயிர்கள் இறக்குமென்பதாம். (ங)

கச. வரினுழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

இ - ள். உழவர் வரின் உழார்-உழவர் ஏராலுழுதலைச்செய்யார்,—புயல் என்னும் வாரி வளம் குன்றிக்கால் - மழைஎன்னும் வருவாய் தன் பயன் குன்றின் எ - று.

குன்றியக்காலென்பது குறைந்து நின்றது. உணவின்மைக்குக் காரணங் கூறியவாறு. (ச)

கரு. கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉ மெல்லா மழை ரு.

இ - ள். கெடுப்பதூஉம் - பூமியின்கண் வாழ்வாரைப் பெய்யாது நின்று கெடுப்பதூஉம்—கெட்டார்க்குச் சார்வாய் மற்று ஆங்கே எடுப்பதூஉம் - அவ்வாறு கெட்டார்க்குத் துணையாய்ப்பெய்து முன் கெடுத்தாற்போல எடுப்பதூஉம்—எல்லாம் மழை - இவையெல்லாம் வல்லது மழை. எ - று.

மற்று வினைமாற்றின்கண் வந்தது. ஆங்கென்பது மறுதலைத்தொழிலுவமத்தின் கண்வந்த உவமச்சொல். கேடுமாக்கமும் எய்துதற்குரியார் மக்களாதலின், கெட்டார்க்கென்றார். எல்லாமென்றது அம்மக்கண்முயற்சிவேறுபாடுகளாற் கெடுத்தல் எடுத்தல் கடாம் பலவாதல் நோக்கி. வல்லதென்பது அவாய்நிலையான்வந்தது. * மழையினதாற்றல் கூறியவாறு. (ஞ)

---

* அவாய்நிலை ஒருசொல மற்றொருசொலாற் அவா (ஆற்றல் இவ்வாறு அவாய் நிலையால் வருவித்து முடிப்பதனை வடநூலார அத்தியாகாரமென்பர்.

கசு விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றுங்கே
பசும்புற் றலைகாண் பரிது. கூ.

இ - ள். விசும்பின் துளி வீழின் அல்லால் - மேகத்திற்றுளிவீழிற் காண்பதல்லது,—மற்று ஆங்கே பசும்புற் றலை காண்பு அரிது - வீழாதாயின், அப்பொழுதே பசும்புல்லினது தலையையுங் காண்டல் அரிது. எ - று.

விசும்பு ஆகுபெயர். மற்று வினைமாற்றின்கண் வந்தது. இழிவுசிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. ஓரறிவுயிரும் இல்லை யென்பதாம். (கூ)

கள. நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின். எ.

இ - ள். நெடுங்கடலும் தன் நீர்மை குன்றும் - அளவில்லாதகடலும் தன்னியல்பு குறையும்,—எழிலி தான் தடிந்து நல்காதாகி விடின்-மேகந்தான் அதனைக் குறைத்து அதன்கட்பெய்யாது விடுமாயின். எ - று.

உம்மை சிறப்பும்மை. தன்னியல்பு குறைதலாவது நீர்வாழுயிர்கள் பிறவாமையும், மணி முதலாயின படாமையுமாம். ஈண்டுக் குறைத்தலென்றது முகத்தலை: அது "கடல்குறைபடுத்தநீர் கல் குறைபடவெறிந்து" * என்பதனுணும் அறிக. மழைக்கு முதலாய கடற்கும் மழை வேண்டுமென்பதாம். இவை எழுபாட்டானும் உலகநடத்தற்கேதுவாதல் கூறப்பட்டது. (எ)

கஅ. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு. அ.

இ - ள். வானோர்க்கும் ஈண்டுச் சிறப்பொடு பூசனை செல்லாது - தேவர்கட்கும் இவ்வுலகின் மக்களாற் செய்யப்படும் விழவும் பூசையும் நடவாது,—வானம் வறக்குமேல் - மழை பெய்யாதாயின். எ - று.

நைமித்திகத்தோடு கூடிய நித்தியமென்றாராகலின், செல்லாதென்றார். உம்மை சிறப்பும்மை. நித்தியத்திற்றழுவுதீரச் செய்வது நைமித்திக † மாதலின், அதனை முற்கூறினார். (அ)

கஈ. தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின். கூ

இ - ள். வியன் உலகம் தானம் தவம் இரண்டும் தங்கா - அகன்றவுலகின்கண் தானமும் தவமுமாகிய இரண்டறமும் உளவாகா,—வானம் வழங்காதெனின் - மழை பெய்யாதாயின். எ-று.

தானமாவது அறநெறியான் வந்த பொருள்களைத் தக்கார்க்கு உவகையோடுங் கொடுத்தல். தவமாவது மனம் பொறிவழி போகாது நிற்றற்பொருட்டு விரதங்களான் உண்டியுருக்கல் முதலாயின. பெரும்பான்மை பற்றித் தானம் இல்லறத்தின் மேலும், தவம் துறவறத்தின்மேலும் நின்றன. (கூ)

உ0. நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு. க0.

---

* பரிபாடல் உ0. † நைமித்திகம்—நிமித்தத்தாலாவது.

இ - ள். யார் யார்க்கும் நீர் இன்று உலகு அமையாது எனின் - எவ்வகைமேம் பாட்டார்க்கும் நீரையின்றி உலகியல் அமையாதாயின்,—ஒழுக்கு வான் இன்று அமையாது - அந்நீர் இடையறுதொழுகும் ஒழுக்கும் வானையின்றி யமையாது. எ - று.

பொருளின்பங்களே உலகியலென்றார், அவை இம்மைக்கண்ணவாகலின். இடையறுதொழுகுதல் எக்காலத்தும் எவ்விடத்தும் உளதாகல். நீரின்றமையாதுலகெனபது எல்லாராலுந் தெளியப்படுதலின், அதுபோல ஒழுக்கும் வானின்றமையாமை தெளியப்படுமென்பார், நீரின்றமையாதுலகெனினென்றார். இதனை நிரையின்றி யமையாது உலகாயின் எத்திறத்தார்க்கும் மழையையின்றி ஒழுக்கம் நிரம்பாதென உரைப்பாருமுளர். இவை மூன்றுபாட்டானும் அறம்பொருளின்பங்கள் நடத்தற்கு ஏதுவாதல் கூறப்பட்டது. (கஎ)

கூ ம் அதி.—நீத்தார்பெருமை.

அஃதாவது முற்றத்துறந்த முனிவரது பெருமை கூறுதல். அவ்வாறுமுதற் பொருள்களே உலகிற்கு உள்ளவாறுணர்த்துவார் அவராகலின், இது வான்சிறப்பின் பின் வைக்கப்பட்டது.

உக. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
மேண்மும் பனுவற் றுணிவு. க.

இ - ள். ஒழுக்கத்து நீத்தார் பெருமை - தமக்குரிய ஒழுக்கத்தின்கண்மீண நின்று துறந்தாரது பெருமையை—விழுப்பத்துவேண்டும் பனுவறறுணிவு-விழுமிய பொருள்கள் பலவற்றுள்ளும் ஆதுவே வழுவின்றென வரும்பும் நூல்களது துணிவு. எ - று.

தமக்கு உரியவாழுக்கத்தின்கண்மீண நின்று துறந்தலாவது,—தத்தம் வருணத்திற்கும் இலகுமுரிய ஒழுக்கங்களே வழுவாதொழுக அறம வளரும், அறம்வளரப் பாவந்தேயும், பாவந்தேய அறியாமை நங்கும், அறியாமை நங்க நித்தவுணர்த்தகளது வேறுபாட்டுணர்வும் அழிந்தன்மாலையவாய இம்மை மறுமையின்பங்கள் ஹுவர்ப்பும் பிறவித்துன்பங்களும் தீர்ன்றும, அவைதீரான வீட்டின்கணுசையுணடாம், அஃதுணடாகப் பிறவகுக்குக் காரணமாகிய பயனின் முயற்சிகளெல்லாம் நங்கி வீட்டிற்குக் காரணமாகிய யோகமுயற்சியுணடாம், அஃதுண்டாக மெய்யுணர்வு பிறந்து புறப்பற்றருகிய எனதென்பதும அகப்பற்றருகிய யானனன்பதும் விடும், ஆகலான் இவ்விரண்டு பற்றையும் இம்முறையே யுவாத்துவிடுதலெனக்கொள்க. பனுவலெனப் பொதுப்படக் கூறியவதனை, ஒன்றையொயானெருவாத சமயநூல்களெல்லாவற்றிற்கும் இஃது ஒத்த துணிவென்பது பெற்றும். செய்தாரது துணிவு பனுவலென்மேலேற்றப்பட்டது. (க)

உஉ. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெணணிக்கொண டற்று. உ.

இ - ள். துறந்தார் பெருமை துணைக் கூறின் - இருவகைப் பற்றினையும் விட்டாரது பெருமையை இவ்வளவென்று எண்ணிற் கூறியறியலுறின், அளவுபடாமையான்—வையத்து இறந்தாரை எண்ணிக்கொண்டு அற்று - இவ்வுலகத்துப் பிறந்திறந்தாரை எண்ணி இத்துணையரென அறியலுற்றாற்போலும். எ - று.

முடியாதென்பதாம். கொண்டாலென்னும் வினையெச்சம் கொண்டெனத் திரிந்து நின்றது. (உ)

உகூ. இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு. கூ.

இ - ள். இருமை வகை தெரிந்து - பிறப்பு வீடென்னும் இரண்டனது தன்ப வின்பக் கூறுபாடுகளை ஆராய்ந்தறிந்து - ஈண்டு அறம் பூண்டார் பெருமை - அப்பிறப் பறுத்தற்கு இப்பிறப்பின்கண் துறவறத்தைப் பூண்டாரது பெருமையே - உலகு பிறங்கிற்று - உலகின்கணுயர்ந்தது. எ - று

"திதரிமாண் டமிழ்மும்மைத் தென்னம் பொருப்பன்" என்புழிப்போல இருமை யென்றது ஈண்டெண்ணின்கணின்றது. * பிரிநிலையேகாரம் விகாரத்தாற்பிரிக்கது. இருளில் திகிரியுருட்டி உலகமுழுதாண்ட அரசர் முதலாயினர் பெருமை பிரிக்கப்பட் டது. இவையுமுபாட்டானும் நீத்தார்பெருமையே எல்லாப்பெருமையினும் மிக்க தென்பது கூறப்பட்டது. (கூ)

உச. உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து. ச.

இ - ள். உரன் என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான் - திண்மையென் னுந் தோட்டியால் பொறிகளாகிய யானையைந்தினையும் ததத்தம் புலங்கண்மேற் செல் லாமற் காப்பான்—வரன் என்னும் வைப்பிற்கு ஓர் வித்து - எல்லாநிலத்தினும் மிக்க தென்று சொல்லப்படும் விட்டுநிலத்திற்கு ஓர் வித்தாம். எ - று.

இம்மைகேதேசவுருவகம். திண்மை ஈண்டறிவின்மேற்று. அந்நிலத்திற்சென்று முளைத்தலின், வித்தினமுரி. ஈண்டிப்பிறந்திறந்து வரும் மகனலலனெனபதாம். (ச)

உடு. ஐந்தவித்தா ஞற்ற லகல்விசும்பு ளாள்கமா
னிந்திரனே சாலுங் கரி. டு.

இ - ள். ஐந்து அவித்தான் ஆற்றல் - புலன்களிற் செல்கின்ற அவாவைந்தனை யும் அடக்கினானது வலிக்கு—அகல் விசும்புளாள்கமான் இந்திரனே சாலும் கரி - அகன்ற வானத்துள்ளாரிறைவனுகிய இந்திரனே அமையுஞ்சான்று. எ - று.

ஐந்துமென்றும் முற்றும்மையும் ஆற்றற்கென்னும் நான்கனுருபும் செய்யுள்விகா ரத்தாலமுகன.தான ஐந்தவியாது சாப மியம்பினாறு அவித்தவனதாற்றல் உணர்த் தினானுகலின், இந்திரனே சாலுங்கரியெனமுரி. (டு)

உசு. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார். சு.

இ - ள். செயற்கரிய செய்வார் பெரியர் - ஒத்த பிறப்பினராய மக்களுள் செய் தற்கெளியவற்றைச் செய்யாது அரியவற்றைச் செய்வார் பெரியர்:—செயற்கரியசெய் கலாதார் சிறியர் - அவ்வெளியவற்றைச் செய்து அரியவற்றைச செய்யமாட்டாதார் சிறியர். எ - று.

---

* ஈண்டு இருமையென்பதனுள் மைவிகுதி, தன்மையுணர்த்தாது தன்மையுடைப் பொரு ளையே யுணர்த்தலின், பருப்பொருள் விகுதி யென்னுஞ் சுவார்த்தபாவ தத்திதப் பிரத்தியயம்.

செயற்கெளியவாவன மனம் வேண்டியவாறே அதனைப் பொறிவழிகளால் புலன்களிற் செலுத்தலும், வெஃகலும், வெகுடலும் முதலாயின. செயற்கரியவாவன இயமம் நியமம் முதலாய எண்வகை யோகவுறுப்புக்கள். நீரிற்பலகான் மூழ்கல் முதலாய காலிருவழக்கிற்றுபதபக்கமென்பாருமுளர்; * அவை நியமத்துள்ளே அடங்குகின், நீத்தாரது பெருமைக்கேலாமையறிக. (சு)

உள. சுவையொளி யூரோசை நாற்றமென் றைந்தின்
வகைசெதிரவான கடம்ப வுலகு. எ.

இ - ள். சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற ஐந்தின்வகை - சுவையும்ஒளியும் ஊறும் ஓசையும் நாற்றமுமென்று ஆசான்மாரற்றிறைகளோந்தனது கூறுபாட்டையும்—தெரிவான்கட்டேட உலகு-ஆராய்வானதுவின்கண்ணதே உலகம். எ - று.

அவற்றின் கூறுபாடாவன பூதங்கட்கு முதலாகிய அவையாமைந்தும்,அவற்றின் கட்டேடான்றிய அப்பூதங்களோந்தும், அவறறின கூருகிய ஞானேந்திரியங்களோந்தும், கனமேந்திரியங்களோந்துமாக இருபதுமாம். வகைசெதரிவான கட்டேவன உடமையாய புணர்த்தனுல், † தெரிகின்ற புருடனும் அவன்றொழுத்தருவியாகியமான ‡ அகங்காரமனங்களும்அவறறிற்கு முதலாகிய மூலப்பகுதியும் பிறவும். தத்துவப்பகுதைந்தனையுந் தெரிதலாவது, மூலப்பகுதி ஒனறின் றிரிலும்மையிறி பகுதியாயவதல்லது விகுதியாகாமையினும், அதன் கட்டேடான்றிய மாணும் அதன்கட்டேடான்றிய அகங்காரமும் அதன்கட்டேடான்றிய ஐவனமாத்திரைகளுமாகிய வறும் தத்துவகு முதலாயதனை மேகாக்க விகுதியாதலும் தங்கட்டேடானறுவனவறறை மேகாகப பகுதியாதலுமுடையவினவும், அவறறனைகட்டேடானறிய மனமும் ஞானேந்திரியங்களும் கன்மேந்திரியங்களும் பூதங்களுமாகிய பதினறும் தங்கட்டேடானறுவனை வினையான விகுதியாயவதலலது பகுதியாகாவினவும், புருடன் தானிலனறிறிருனையானும் தன்கட்டேடான்றுவனவினையானும் றுணிவில்லவினவும், சாங்கிய நூலு ளோதியவாற்றான் ஆராய்தல். இவவிருபத்தைந்துமல்லது உலகினைப் பிறிதொன்றில்லையென உலகினதுணமையறிதலின், அவனறிவின்கண்ணதாயிற்று. இவை நான்குபாட்டானும்பருமைக்கேது ஐந்தவித்தலும் மெய்காப்பயிற்சியும் தத்துவவுணர்வுமென்பது கூறப்பட்டது. (எ)

உஅ. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும. அ.

இ - ள். நிறைமொழி மாந்தர் பெருமை - நிறைந்த மெய்மொழியினையுடைய துறந்தாரது பெருமையை—நிலத்து மறைமொழி காட்டிவிடும் - நிலவுலகத்தின்கண் அவராணையாகச் சொல்லிய மந்திரங்களே கண்கூடாகக் § காட்டிடும். எ - று.

---

* நீரிற்பலகான்மூழ்கல் முதலியவற்றை "நீர்பலகான மூழ்கி நிலந்தலைஇத் தோலுடையாச்—சோர்சடை தாழச் சுடுசிரமபி - யூடையார்—காலகதத் கெனல்போ கடையும் வருதோம்பல்—வானவத்துய்க்கும் வழி." என்னும் வெண்பாவானுணர்க. வெண்பாமாலை, பாகைபடலம். கசு.

† உடம்பொரு புணர்த்தலென்பது ஓருத்தி. இதற்கு வடமொழியார் பிரதிமையென்பர்.

‡ மான்—மகத்தத்துவம், மஹத்தென்னும் வடமொழி எழுவாயொருமையின் பதமாக்ன நிறகும். அது தமிழின் மானினைந் தற்பவமாயிறறு. சாங்கியஞானிலே மான் என்றது புத்தியை.

§ கண்கூடு—பிரத்தியகூம்.

நிறைமொழியென்பது அருளிக்கூறினும் வெகுண்டுகூறினும்அவ்வப்பயன்களைப் பயந்தேவிடும் மொழி. காட்டுதல் பயனுணர்த்துதல். (அ)

உக. குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது. கூ.

இ - ள். குணம் என்னும் குன்று ஏறி நின்றார் வெகுளி - துறவு மெய்யுணர்வு அவாவின்மை முதலிய நற்குணங்களாகிய குன்றின் முடிவின்கணின்ற முனிவரது வெகுளி,—கணமேயும் காத்தல் அரிது - தானுள்ளவளவு கணமேயாயினும், வெகுளப் பட்டாராற்றறுத்தல் அரிது. எ - று.

சலியாமையும்,பெருமையும் பற்றிக் குணங்களைக் குன்றுகவுருவகஞ்செய்தார். குணம் சாதியொருமை* அநேகியாய் வருகின்றவாறுபற்றி ஒரோவழி வெகுளி தோன்றியபொழுதே அதனை மெய்யுணர்வு அழிக்குமாகலின் கணமேயுமென்றும், நிறைமொழிமாந்தராகலின் காத்தலரிதென்றுங் கூறினர். இவையிரண்டுபோட்டாலும் அவாவாணை கூறப்பட்டது. (கூ)

உ0. அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுகலான். கo

இ - ள். எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகலான் - எல்லாவுயிர்கண்மேலும் செவ்விய தண்ணளியைப் பூண்டொழுகலான்,—அந்தணர் என்போர் அறவோர்- அந்தணரென்று சொல்லப்படுவார் துறவறத்தினின்றவர். எ - று.

பூணுதல் விதமாகக்கோடல். அந்தணரென்பது அழகிய தட்பத்தினையுடையா ரென ஏதுபலபயமாகலின், அஃது அவருருடையாமென்றுச் செலலாதென்பது கருத்து. அவரருணையுடையராயினும் உயிர்களனைமாட்டருளுடைய ரென்பது இதனுறை கூறப்பட்டது. (கo)

சம் அதி.-அறன்வலியுறுத்தல்.

அஃதாவது அம்முனிவராலுணர்த்தப்பட்ட அமைகுன்றனுள் ஏனைப்பொருளுமின்பமும் போலாது, அறன், இம்மை மறுமை யிடனனும் மூன்றினையும் பயத்தலான, அவறறின் வலியுடைதலென்பது கூறுதல். அதிகாரமுறைமையும் இதனுளனை விளங்கும். "பிறப்புடை மரபிற் பொருளு மின்பமும்—மறத்து வழிப்படு உருமேற்றம் போல" † என்றார் பிறரும்.

உக. சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவன்கொ வுயிர்க்கு. க.

---

* சாதியொருமையாவது ஒருசொல் ஒருமைமையீறு தோன்ற நின்றும் தோன்றுதல் நின்றும் பின ஒருமைப்பனமை விகுதியுருக மேல்வந்து முடிதலுஞ்சொற்களுமினறித் தானே பன்மைப் பொருளுணர்த்துவது. இதனை வடநூலார் சாதிஏகவசனமெனபர். "ஈதுமேதான்றியசாதி யொருமையு—மீதேனருத சாதி யொருமையு - மெனவரு நிறப்பிரி மருங்கினு மிலும்." "ஈங்கை—பொதுதாழ்ஞ்சினை" "அஞ்சுவ தஞ்சாமைபேதைமை" என்பனவும் பொறுத்தான் தூஞ்சுவது என ஈறுமேதானறிய சாதியொருமை வரும். "தெனபுலதகார மெதிர்வம்" "குணமென்னுங் குன்றேறி நின்றார்" என்பழிதி தெய்வம் குணம் எனவீறு தோன்றா சாதியொருமை வரும்.

† புறநானூறு. கக.

இ - ள். சிறப்பு ஈனும் - வீடுபேற்றையுந்தரும்;—செல்வமும் ஈனும் - துறக்கம் முதலிய செல்வத்தையுந்தரும்;—உயிர்க்கு அறத்தின் ஊங்கு ஆக்கம் எவன் - ஆதலான் உயிர்கட்கு அறத்தின்மிக்க ஆக்கம் யாது? எ - று.

எல்லாப்பேற்றினுஞ் சிறந்தமையின், வீடு சிறப்பெனப்பட்டது. ஆக்கந்தருவதனை ஆக்கமென்றார். ஆக்கம் மேன்மேலுயர்தல். ஈண்டுயிரென்றது மக்களுயிரை, சிறப்புஞ்செல்வமும் எய்துதற்குரியது அதுவேயாகலின். இதனால் அறத்தின் மிக்க வுறுதி இல்லையென்பது கூறப்பட்டது. (க)

கூஉ. அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு. உ.

இ - ள். அறத்தின் ஊங்கு ஆக்கமும் இல்லை - ஒருவனுக்கு அறஞ்செய்தலின் மேற்பட்ட ஆக்கமுமில்லை;—அதனை மறத்தலின் ஊங்கு கேடு இல்லை - அதனை மயக்கத்தான் மறத்தலின் மேற்பட்ட கேடுமில்லை. எ - று.

அறத்தினூஉங்காக்கமுமில்லையென மேற்சொல்லியதனையே அநுவதித்தார்,* அதனாற் கேடுவருதல் கூறுதற்பயனெனக்கி. இதனால் அது செய்யாவழிக் கேடுவருதல் கூறப்பட்டது. (உ)

கூஙூ. ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல். ஙூ.

இ - ள். ஒல்லும் வகையான் - தத்தமக்கியலுந்திறத்தான்—அறவினை ஓவாதே செல்லும் வாய் எல்லாம் செயல் - அறமாகிய நல்வினையை ஒழியாதே அஃதெய்துமிடத்தானெல்லாஞ்செய்க. எ - று.

இயலுந்திறமாவது தில்லைறம் பொருளாளனிற்கேற்பதும், தாவறம் யாக்கைசிலைக் கேற்பவுஞ் செய்தல். ஓவாமை யிடைவிடாமை. எய்துமிடமாவன மனம் வாக்குக் காயமென்பன. அவற்றாற் செய்யும் அறங்களாவன முறையே நற்சிந்தையும் நற்சொல்லும் நற்செயலுமெனவிவை. இதனால் அறஞ்செய்யுமாறு கூறப்பட்டது. (ங)

கூச. மனத்துக்கண் மாசில னாதல் லனைத்தறன்
ஞுலை நீர பிற. ச.

இ - ள். மனத்துக்கண் மாசு இலன் ஆதல்-அவ்வாற்றான் அறஞ்செய்வான் தன் மனத்தின்கட் குற்றமுடையனல்லனாகை;—அனைத்து அறன்-அவ்வளவே அறமாவது;—பிற ஆகுல நீர - அஃதொழிந்த சொல்லும் வேடமும் அறமெனப்படா, ஆரவார நீர்மைய. எ - று.

குற்றம் தீயனசிந்தித்தல். பிறரறிதல்வேண்டிச் செய்கின்றனவாகலின் ஆகுல நீரவென்றார். மனத்துமாசுடையனாயவழி அதன்வழியவாகிய மொழி மெய்களாற் செய்வன பயனிலவென்பதூஉம் பெறப்பட்டது. (ச)

---

* அநுவதித்தலெனினும் வழிமொழிதலெனினுமொக்கும். அநுவாதமாவது முன்னர்ப் பெறப்பட்டதொன்றனை வேறொன்று விதித்தற்பொருட்டுப் பின்னருமெடுத்தோதுதல். அதனால் அது கூறியது கூறலென்னுங் குற்றமாகாது வழிமொழிதலென்றுமிற்று. வழிமொழிதற்கு முன்னர்ப் பெறப்பட்டதனைப் புரோவாதமென்பர் வடநூலார். ஈண்டுப்புரோவாதம் "அறத்தினூஉங் காக்க மெவனோ" என்பது.

நடு. அழக்கா றவாவெகுளி யின்னுச்சொன் னான்கு
முழக்கா வியன்ற தறம். நே.

இ - ள். அழுக்காறு - பிறராக்கம் பொறாமையும்—அவா - புலன்கண்மேற்செல்கின்ற அவாவும்—வெகுளி - அவையேதுவாகப் பிறர்பால்வரும் வெகுளியும்—இன்னுச்சொல் - அகுபற்றிவருங் கடுஞ்சொல்லுமாகிய—நான்கும் முழுக்கா இயன்றது அறம் - இந்நான்கினையுங் கடிந்து இடையறாது நடந்தது அறமாவது. எ - று.

இதனுன் இவற்றோடு வீரவீயிபன்றது அறமெனப்படாதென்பதூஉங்கொள்க. இவை யிரண்டுபோட்டாலும் அறத்தினதியல்பு கூறப்பட்டது. (இ)

நஉ. அன்றறிவா மென்னு தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றுத் துணை. ஊ.

இ - ள். அன்று அறிவாம் என்னுது அறம்செய்க - யாம் இது பொழுதினேயமாகலின் இறக்குனான்று செய்துமெனக் கருதாது அறத்தினை நாடோறுஞ் செய்க;—அதுபொன்றுங்கால் பொன்றுத் துணை - அவ்வாறு செய்தவறம் இவ்வுடம்பினின்றும் உயிர்போங்காலத்து அதற்கு அழிவில்லாத துணையாம் எ - று.

மற்றென்பது அசைநிலை. பொன்றுத் துணையென்றார்,செய்தவுடம்பழியவும் உயிரோடொன்றி எனையுடம்பினுஞ் சேறலின். இதனுன் இவ்வியல்பிற்றய அறத்தினை நிலையாத யாக்கை நிலையினபொழுதே செய்கவென்பது கூறப்பட்டது. (ஊ)

நக. அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானே போர்த்தா னிடை. எ.

இ - ள். அறத்து ஆறு இது என வேண்டா - அறத்தின் பயன் இதுவென்றுயாம் ஆகமவளவையான் உணர்த்தல்வேண்டா:—சிவிகை பொறுத்தானேடு ஊர்ந்தான் இடை-சிவிகையைக் காவுவானேடு செலுத்துவானிடைக் காட்சியளவை தனுனே உணரப்படும். எ - று.

பயனை ஆறென்றார், பின்னதாகலின். எனவென்னுமெச்சத்தாற் சொல்லாகிய வாகமவளவையும், பொறுத்தானே போர்த்தானிடையென்றதனுற் காட்சியளவையும் பெற்றும். உணரப்படுமென்பது சொல்லெச்சம். இதனுற் பொன்றுத்துணையாதல் தெளிவிக்கப்பட்டது. (எ)

நஅ. வீழ்நாள் படாஅமை நன்றுற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல். அ.

இ - ள். வீழ் நாள் படாமை நன்று ஆற்றின் - செய்யாது கழியும் நாளுளவாகாமல் ஒருவன் அறத்தைச் செய்யுமாயின்,—அஃது ஒருவன் வாழ்நாள் வழி அடைக்கும் கல் - அச்செயல் அவன் யாக்கையோடு கூடுநாள் வரும் வழியை வாராமலடைக்குங்கல்லாம். எ - று.

ஐவகைக் குற்றத்தான்வரும் இருவகைவினையுமுள்ள துணையும் உயிர் யாக்கையோடுங் கூடிநின்று அவ்வினைகளதிருவகைப் பயனையும் நுகருமாகலான், அந்நாண் முழுவதும் வாழ்நாளெனப்பட்டது. குற்றங்களைந்தாவன அவிச்சை, அகங்காரம், அவா, வீழைவு, வெறுப்பென்பன; இவற்றை வடநூலார் பஞ்சக்கிலேசமென்ப. வினை

யிரண்டாவன நல்வினை தீவினையென்பன. பயனிரண்டாவன இன்பந்துன்பமென்பன. இதனுன் அறம் வீடு பயக்குமென்பது கூறப்பட்டது. (அ)

நகூ. அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில. கூ.

இ - ள். அறத்தான் வருவதே இன்பம் - இல்லறத்தோடு பொருந்தி வருவதே இன்பமாவது;—மற்ற எல்லாம் புறத்த - அதனோடு பொருந்தாது வருவன வெல்லாம் இன்பமாயினுந் துன்பத்தினிடத்த,—புகழும் இல - அதுவேயுமன்றிப் புகழுமுடைய வல்ல. எ - று.

ஆனுருபு ஈண்டெனிகழ்ச்சிக்கண் வந்தது, "தூங்கு கையா னேங்கு நடைய"* என்புழிப்போல. இன்பம் காமநுகர்ச்சி, அஃதாமாறு காமத்துப்பாலின் முதற்கட் சொல்லுதும். இன்பத்திற் புறமெனவே துன்பமாயிற்று. பாவத்தான்வரும் பிறனில் வீழைவு முதலாயின அக்கணத்துளின்பமாய்த் தோன்றுமாயினும் பின்றுன்பமாய் வீளுதலின், புறத்தவென்றார். அறத்தோடு வாராதன புகழுமிலவெனவே, வருவது புகழுமுடைத்தென்பது பெற்றும். இதனுன் அறஞ்செய்வாரே இம்மையின்பமும் புகழும் எய்துவரென்பது கூறப்பட்டது. (க)

சஅ. செயற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி. கஅ.

இ - ள். ஒருவற்குச் செயற்பாலது அறனே - ஒருவனுக்குச் செய்தற்பான்மையது நல்வினையே;—உயற்பாலது பழியே—ஒழிதற்பான்மையது தீவினையே எ - று.

ஒருமென்பன விரண்டும் அசைநிலை. தேற்றேகாரம் பின்னுங் கூட்டப்பட்டது. பழிக்கப்படுவதனைப் பழியென்றார். இதனுற் செய்வதுமொழிவதும் நியமிக்கப்பட்டன. (கஅ)

இவைநான்கும் பாயிரம்.

இ ல் ல ற வி ய ல்.

நி ம் அதி.—இல்வாழ்க்கை.

அஃதாவது இல்லாளோடு கூடிவாழ்தலினது சிறப்பு. இன்னிலை அறஞ்செய்தற்குரிய இருவகைநிலையுள் முதலாதலின். இஃதறன்வலியுறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

சக. இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு
நல்லாற்றி னின்ற துணை. க.

இ - ள். இல்வாழ்வான் என்பான் - இல்லறத்தோடு கூடிவாழ்வானென்று சொல்லப்படுவான்—இயல்பு உடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை - அறவியல் பினையுடைய வனைமூவர்க்கும் அவர் செல்லும் நல்லொழுக்கநெறிக்கண் நிலைபெற்ற துணையாம். எ - று.

---

* புறநானூறு. உஉ.

இல்லென்பது ஆகுபெயர். என்பானெனச்செயப்படுபொருள் வினைமுதல்போலக் கூறப்பட்டது* ஏனைமூவராவார் ஆசாரியனிடத்தினின்றேதுதலும் விரதங்காத்தலுமாகிய பிரமசரியவொழுக்கத்தானும்,இல்லிலிருந்து வனத்தின்கட்டீயொடுசென்று மனையாள் வழிபடத் தவஞ்செய்யுமொழுக்கத்தானும், முற்றத்துறந்த யோகவொழுக்கத்தானுமென இவர்; இவருள் முன்னையிருவரையும் பிறர் மதமேற்கொண்டு கூறினர். இவர் இவ்வொழுக்கநெறிகளை முடியச்செல்லுமளவும் அச்செலவிற்குப் பசிநோய் குளிர் முதலியவற்றான் இடையூறு வாராமல் உண்டியும் மருந்தும் உறையுளும் முதலிய வுதவி அவ்வவ நெறிகளின் வழுவாமற்செலுத்துதலான், நல்லாற்றினின்ற துணை யென்றார். (க)

சஉ. துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான் றுணை. உ.

இ - ள். துறந்தார்க்கும் - களைகணுமனவராற்றுறக்கப்பட்டார்க்கும்—துவ்வாதவர்க்கும் - நல்கூர்ந்தார்க்கும்—இறந்தார்க்கும் - ஒருவருமின்றித் தன்பால் வந்திறந்தார்க்கும்—இல்வாழ்வான் என்பான் துணை - இல்வாழ்வானென்று சொல்லப்படுவான் துணை. எ - று.

துறந்தார்க்குப் பாவமொழிய அவர் களைகணும் நின்று வேண்டுவன செய்தலானும், துவ்வாதவர்க்கு உணவு முதலிய கொடுத்தலானும், இறந்தார்க்கு நீர்க்கடன் முதலிய செய்து நல்லுலகின்கட் செலுத்தலானும் துணையென்றார். இவையிரண்டு பாட்டானும் இன்னிலை எல்லாவுபகாரத்திற்கு முரித்தாதல் கூறப்பட்டது. (உ)

சஊ. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க றுனென்றுங்
கைம்புலத்தா றோம்ப றலை. ஊ.

இ - ள். தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்ற - பிதிரர் தேவர் விருந்தினர் சுற்றத்தார் தானென்று சொல்லப்பட்ட—ஐம்புலத்து ஆறு ஓம்பல் தலை- ஐந்திடத்துஞ் செய்யும் அறநெறியை வழுவாமற்செய்தல் இல்வாழ்வானுக்குச் சிறப்புடைய அறமாம். எ - று.

பிதிரராவார் படைப்புக்காலத்து அயனுற்படைக்கப்பட்டதோர் கடவுட்சாதி; அவர்க்கிடம் தென்றிசையாதலின், தென்புலத்தாரென்றார். தெய்வமென்றது சாதியொருமை. விருந்தென்பது புதுமை; அஃது ஈண்டாகுபெயராய்ப் புதியராய் வந்தார்மேனின்றது; அவர் இருவகையர், பண்டறிவுண்மையிற் குறித்து வந்தாரும், அஃதின்மையிற் குறியாது வந்தாருமென. ஒக்கல் சுற்றத்தார். எல்லாவறங்களும் தானுளனாய் நின்று செய்யவேண்டுதலின், தன்னையோம்பலும், அறனுயிற்று. என்றவென்பது விகாரமாயிற்று. ஆங்கு அசை. ஐவகையும் அறஞ்செய்தற்கிடனாகலின் ஐம்புலமென்றார். அரசனுக்கு இறைப்பொருள் ஆறிலொன்றுயிற்று, இவ்வைம்புலத்திற்கும் ஐந்து கூறுவேண்டுதலானென்பதறிக. (ஊ)

சஎ. பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்ச லெஞ்ஞான்று மில். எ.

---

* எனப்படுவானெனற்பாலது செயப்பாட்டுவினைப்பொருளுணர்த்தும் படுலிகுறி தொக்கு என்பானென நின்றதெனக்கொண்டார் பிரயோகவிவேகமுலாரும் தொல்காப்பியச் சூத்திரவிருத்திகாரரும். இவ்வாறு வருவனவற்றை வடநூலார் யக்கு என்பர்.

இ - ள். பழிஅஞ்சிப் பாத்து ஊண் வாழ்க்கை உடைத்தாயின் - பொருள் செய்யுங்கால் பாவத்தையஞ்சி * மீட்டி,அப்பொருளே இயல்புடைய மூவர் முதலாயினுர்க்கும் தென்புலத்தார் முதலிய நால்வர்க்கும் பகுத்துத் தானுண்டலே ஒருவனில்வாழ்க்கை உடைத்தாயின்,—வழி எஞ்ஞான்றும் எஞ்சல் இல் - அவன்வழி உலகத்தெஞ்ஞான்றும் நிற்றலல்லது இறத்தலில்லே. எ - று.

பாவத்தான்வந்த பிறன்பொருளைப் பகுத்துண்ணின், அறம்பொருளுடையார்மேலும் பாவந் தன்மேலுமாய் நின்று வழியெஞ்சுமாகலின், பழியஞ்சியென்ருர். வாழ்வான துடைமை வாழ்க்கைமேலேற்றப்பட்டது. (ச)

சரு. அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது. ரு.

இ - ள். இல்வாழ்க்கை அன்பும் அறனும் உடைத்தாயின்-ஒருவனில்வாழ்க்கை தன்றுணேவிமேற் செய்யத்தகும் அன்பினேயும் பிறர்க்குப் பகுத்துண்டலாகிய அறத்தினேயுமுடைத்தாயின்,—அது பண்பும் பயனும் - அவ்வுடைமை அதற்குப் பண்பும் பயனுமாம். எ - று.

நிரணிறை.இல்லாட்குங் கணவற்கும் நெஞ்சொன்ருகாவழி இல்லறங் கடைபோகாமையின்,அன்புடைமை பண்பாயிற்று,அறனுடைமை பயனுயிற்று. இவை மூன்று பாட்டானும் இன்னிலேயினின்ருன் அறஞ்செய்யுமாறு கூறப்பட்டது. (ரு)

சசு. அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன். சு.

இ - ள். இல்வாழ்க்கை அறத்தாற்றின் ஆற்றின் - ஒருவன் இல்வாழ்க்கையை அறத்தின் வழியே செலுத்துவனுயின்,—புறத்தாற்றில் போய்ப் பெறுவது எவன்-அவன் அதற்குப் புறமாகிய நெறியிற்போய்ப் பெறும் பயன் யாது? எ - று.

அறத்தாறென்பது பழியஞ்சிப் பகுத்துண்டலும், அன்புடைமையுமென மேற் சொல்லிய ஆறு. புறத்தாறு இல்லேவிட்டு வனத்துச் செல்லுதலே. அந்நிலேயின் இது பயனுடைத்தென்பார், போய்ப் பெறுவதெவனென்ருர். (சு)

சஎ. இயல்பினு னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலே. எ.

இ - ள். இல்வாழ்க்கை இயல்பினுன் வாழ்பவன் என்பான் - இல்வாழ்க்கைக் கணின்று அதற்குரிய இயல்போடு கூடி வாழ்பவனென்று சொல்லப்படுவான்—முயல்வாருள் எல்லாம் தலே - புலன்களே விட முயல்வாரெல்லாருள்ளும் மிக்கவன். எ - று.

மூற்றத்துறந்தவர் விட்டமையின், முயல்வாரென்றது மூன்ருநிலேயினின்ருரை. அந்நிலேதான் பலவகைப்படுதலின் எல்லாருள்ளுமெனவும், முயலாதுவைத்துப் பயனெய்துதலின் தலேயெனவுங்கூறினர். (எ)

சஅ. ஆற்றி னெருக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரி னேன்மை யுடைத்து. அ.

* பழியஞ்சியென்பதனேப் பழியையஞ்சி, பழியினஞ்சி எனவிரிக்கலாமென்பது "அச்சக் கிளவிக் கைந்து பிரிண்டு—மெச்சமிலவே பொருள்வயினான." என்னுஞ் சொல்காப்பியஞ் சூத்திரத்தினுல.

இ - ள். ஆற்றின் ஒழுக்கி அறன் இழுக்கா இல்வாழ்க்கை - தவஞ்செய்வாரை யுந் தத்தநெறியின்கணெழுகப்பண்ணித்தானுந்தன்னறத்திற்றவறுதஇல்வாழ்க்கை-- நோற்பாரின் நோன்மை உடைத்து - அத்தவஞ்செய்வார் நிலையினும் பொறையுடைத்து. எ - று.

பசி முதலிய விடையூறு நீக்கலின், ஆற்றினெழுக்கியென்றார். நோற்பாரென்பது ஆகுபெயர். நோற்பார் நிலைக்கு அவர்தம்மையுற்ற நோயல்லது இல்வாழ்வார் நிலை போற் பிறரையுற்ற நோயும் பொறுத்தலின்மையின், நோற்பாரினென்மையுடைத் தென்றார். (அ)

சஉ. அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று. கூ.

இ - ள். அறன் எனப்பட்டது இல்வாழ்க்கையே - இருவகையறத்தினும் நூல்க ளான் அறனென்று சிறப்பித்துச்சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே;—அஃதும் பிறன் பழிப்பது இல்லாயின் நன்று - ஏனைத் துறவறமோவெனின், அதுவும் பிறனாற் பழிக்கப்படுவதில்லையாயின், அவ்வில்வாழ்க்கையோடு ஒருதன்மைத்தாகுமன்று. எ - று.

ஏகாரம் பிரிநிலைக்கண்வந்தது;இதனாற் பிரிக்கப்பட்டது துறவறமாகலின்,அஃது என்னுஞ்சுட்டுப்பெயர் அதன்மேனின்றது. பிறன்பழிப்பதென்றது கூடாவொழுக் கத்தை. துறவறம், மனத்தையும்பொறிகளையும் ஒறுத்தடக்கவல்ல அருமையுடைத்தா யவழியே, அவற்றையொறுக்கவேண்டாது ஐம்புலவின்பங்களாரத்துய்க்கும் எண் மையுடைய இல்வாழ்க்கையோடு அறமென ஒருங்கெண்ணப்படுவதென்றவாறாயிற்று. இவை நான்குபாட்டானும் இன்னிலையே பயனுடைத்தென இதன்சிறப்புக் கூறப் பட்டது. (கூ)

கூ. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும். கஅ.

இ - ள். வாழ்வாங்கு வையத்துள் வாழ்பவன் - இல்லறத்தோகூடி வாழுமியல் பினால் வையத்தின்கண் வாழ்பவன்,—வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும் - வையத்தானேயெனினும் வானின்கணுறையுந் தேவருள் ஒருவனாக வைத்து நன்கு மதிக்கப்படும். எ - று.

பின்றேவனாய் அவ்வறப்பயனுகர்தல் ஒருதலையாகலின்; தெய்வத்துள் வைக்கப் படுமென்றார், இதனான் இன்னிலையது மறுமைப்பயன் கூறப்பட்டாது. இம்மைப்பயன் புகழ்; அதனையிறுதிக்கட் கூறுப. (கஅ)

சூ ம் அதி.—வாழ்க்கைத்துணைநலம்.

அஃதாவது அவ்வில்வாழ்க்கைக்குத் துணையாகிய இல்லாளது நன்மை. அதி காரமுறைமையும் இதனானே விளங்கும்.

ருக. மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. க.

இ - ள். மனைத் தக்க மாண்பு உடையளாகித் தற்கொண்டான் வளத்தக்காள் - மனையறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகளையுடையளாய்த் தன்னைக் கொண்டவ னது வருவாய்க்குத் தக்க வாழ்க்கையையுடையாள்—வாழ்க்கைத்துணை - அதற்குத் துணை எ - று.

நற்குணங்களாவன துறந்தார்ப் பேணலும், விருந்தயர்தலும், வறியார்மாட்டருளுடைமையும் முதலாயின. நற்செய்கைகளாவன வாழ்க்கைக்குவேண்டும் பொருள்கள் அறிந்து கடைப்பிடித்தலும், அட்டிற்றிருழில்வன்மையும், ஒப்புரவுசெய்தலும் முதலாயின. வருவாய்க்குத்தக்க வாழ்க்கையாவது முதலேயறிந்து அதற்கியைய அழித்தல். இதனுன் இவ்விரண்டுநன்மையுஞ் சிறந்தனவென்பது கூறப்பட்டது. (க)

குஉ. மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினு மில். உ.

இ - ள். மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் - மனையறத்திற்குத் தக்க நற்குணநற்செய்கைகள் ஒருவனில்லாளிடத்தில்லையாயின்,—வாழ்க்கை எனைமாட்சித்தாயினும் இல் - அவ்வில்வாழ்க்கை செல்வத்தான் எத்துணை மாட்சிமையுடைத்தாயினும் அஃதுடைத்தன்று. எ - று.

இல்லையென்றார், பயன்படாமையின். (உ)

குஊ. இல்லதெ னில்லவண் மாண்பாஞ லுள்ளதெ
னில்லவண் மாணாக் கடை. ஊ.

இ - ள். இல்லவள் மாண்பு ஆனல் இல்லது என் - ஒருவனுக்கு இல்லாள் நற்குணநற்செய்கையளாயினக்கால் இல்லாததியாது;—இல்லவள் மாணாக்கடை உள்ளது என் - அவள் அன்னளல்லாக்கால் உள்ளதியாது. எ - று.

மாண்பெனக் குணத்தின்பெயர் குணிமேனின்றது. இவையிரண்டுபோட்டானும் இல்வாழ்க்கைக்கு வேண்டுவது இல்லாளது மாட்சியே பிறவல்லவென்பது கூறப்பட்டது. (ஊ)

குஎ. பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுங்
திண்மையுண் டாகப் பெறின். எ.

இ - ள். பெண்ணின் பெருந்தக்கயா உள - ஒருவனெய்தும் பொருள்களுள் இல்லாளின்மேம்பட்ட பொருள்களியாவையுள,—கற்பு என்னும் திண்மை உண்டாகப் பெறின் - அவண்மாட்டுக் கற்பென்னுங் கலங்காநிலைமை யுண்டாகப்பெறின். எ - று.

கற்புடையாள்போல அறமுதலிய மூன்றற்கும் ஏதுவாவன பிறவின்மையின் யாவுளவென்றார். இதனுற் கற்புநலத்தது சிறப்புக் கூறப்பட்டது. (எ)

குஏ. தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை. ஏ.

இ - ள். தெய்வம் தொழாள் கொழுநற்றொழுது எழுவாள் பெய் என-பிறதெய்வந்தொழாது தன்றெய்வமாகிய கொழுநனைத் தொழாள்றின்று துயிலெழுவாள் * பெய் யென்றுசொல்ல,—மழை பெய்யும் - மழை பெய்யுமே. எ - று.

---

* கொழுநற் றொழுதெழுவாளென்பது எழுந்து கொழுநற்றொழுவாளென முடிபின்முகப் பொருள்படுமென்றார் பரிமேலழகரும். அவை கூடுமாறு,—''இனிக் 'கொழுநற் றொழுதெழுவாள்' 'தொழுதெழுவார் விண்ணவர் கோமான்' என்னும் திருவள்ளுவரினும நிருக்கோவையாரினும் பரிமேலழகரும் பேராசிரியரும் தெழுதாள்ன்றெழுவாள் தொழாதின்றெழுவாரை எனத் தலைவினைபாயுரைப்பர்; எழுதல் துயிலொழிதலாதலின், எழுந்து தொழுவாள் எழுந்து தொழுவார் என முன் பின்னுகப் பொருள்படுதலன்றி, நகுபு வதான் ஓடிலதான். என்பன போலத் தொழாதின்று துயிலொழிதல் கூடாதென்க. ''வைகறையாமத்துயிலெழுதல் தான்

தெய்வந்தொழுதற்கு மனந்தெளிவது துயிலெழுங்காலத்தாகலின், தொழுதெழு வாளென்றார். தொழாரின்றென்பது தொழுதெனத்திரிந்துநின்றது. தெய்வந்தானே வல் செய்யுமென்பதாம். இதனுற் கற்புடையவளதாற்றல் கூறப்பட்டது. (இ)

நிகூ. தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண். கூ.

இ - ள். தற்காத்துத் தற்கொண்டாற் பேணி - கற்பினின்றும் வழுவாமற்றன் னைக் காத்துத் தன்னைக்கொண்டவனையும் உண்டி முதலியவற்றுற் பேணி—தகை சான்ற சொற் காத்து - இருவர் மாட்டும் நன்மையமைந்த புகழ் நீங்காமற் காத்து— சோர்வு இலாள் பெண் - மேற்சொல்லிய நற்குண நற்செய்கைகளினுங் கடைப்பிடியு டையாளே பெண்ணுவாள். எ - று.

தன் மாட்டுப் புகழாவது வாழுமூர் கற்பாற் றன்னைப் புகழ்வது. சோர்வு மறவி. இதனுல் தற்புகழ்தற்சிறப்புக் கூறப்பட்டது. (கூ)

நிஎ. சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை. எ.

இ - ள். மகளிர் சிறை காக்கும் காப்பு எவன் செய்யும் - மகளிரைத் தலைவர் சிறையாற்காக்குங்காவல் என்னபயனைச் செய்யுமோ?—நிறை காக்கும் காப்பே தலை - அவர் தமது நிறையாற் காக்குங் காவலே தலையாய காவல். எ - று.

சிறை மதிலும், வாயில்காவலும் முதலாயின. நிறை நெஞ்சைக் கற்புநெறியினி றுத்தல். காவலிரண்டினும் நிறைக்காவலில்வழி ஏனைச்சிறைக்காவலாற் பயனில்லையென்பார், நிறைகாக்குங் காப்பே தலையென்றார். ஏகாரம் பிரிநிலைக்கண்வந்தது. இதனுல் தற்காத்தற்சிறப்புக் கூறப்பட்டது. (எ)

நிஅ. பெற்றுற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழு முலகு. அ.

இ - ள். பெண்டிர் பெற்றுற் பெறின் - பெண்டிர்; தம்மையெய்திய கணவனை வழிபடுதல் பெறுவராயின்,—புத்தேளிர் வாழும் உலகு பெருஞ்சிறப்புப்பெறுவர் - புத்தேளிர் வாழுமுலகின்கண் அவராற் பெருஞ்சிறப்பினைப் பெறுவர். எ - று.

வழிபடுதலென்பது சொல்லெச்சம். இதனுல் தற்கொண்டாற் பேணிய மகளிர் புத்தேளிராற் பேணப்படுவரென்பது கூறப்பட்டது. (அ)

நிகூ. புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
னேறுபோற் பீடு நடை. கூ.

இ - ள். புகழ் புரிந்த இல் இலோர்க்கு - புகழை விரும்பிய இல்லாளையில்லா தார்க்கு—இகழ்வார் முன் ஏறுபோல் பீடு நடை இல்லை — தம்மை யிகழ்ந்துரைக்கும் பகைவர்முன் சிங்கவேறுபோல நடக்கும் பெருமிதநடை இல்லை. எ - று.

செய்யு—நல்லறமு மொண்பொருளுஞ் செதித்து வாய்வதிற்—றன்தையுந் தாயுந் தொழுதெ ழுவ" † என்பது துயிலெழுந்து பின்றந்தையுந்தாயுந் தொழுது பின் காரியத்திற் செல்க வெனப் பொருள் பட்டுவருதலானும், அவருரை அசம்பாவிதமென்க." நான்காவது திங்ருப்படலம், கூம் பாட்டுரை.

† சூசாக்கோவை கூம் பாட்டு.

புரிந்தவென்னும் பெயரெச்சத்தகரம்.லிகாரத்தாற்றொக்கது.பெருமிதமுடையா னுக்குச் சிங்கவேறு நடையானுவமமாகலின். ஏறுபோலென்றார். இதனால் தகை சான்ற சொற்காவாவழிப்படுங் குற்றங் கூறப்பட்டது. (கூ)

கூ0. மங்கல மென்ப மனைமாட்சி மற்றத
னன்கல நன்மக்கட் பேறு. க0.

இ - ள். மங்கலம் என்ப மனைமாட்சி - ஒருவற்கு நன்மையென்றுசொல்லுவர் அறிந்தோர் மனையாளது நற்குண நற்செய்கைகளே;—அதன் நன்கலம் (என்ப) நன் மக்கட்பேறு - அவைதமக்கு நல்லவணிகலமென்று சொல்லுவர் நல்ல புதல்வரைப் பெறுதலே. எ - று.

அறிந்தோரென்பது எஞ்சிநின்றது. மற்று அசைநிலை. இதனால் வாழ்க்கைத் துணைக்கு ஆவதோரணிநலங்கூறி, வருகின்ற அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய் யப்பட்டது. (க0)

எ ம் அதி.—புதல்வரைப்பெறுதல்.

அஃதாவது இருபிறப்பாளர் மூவராணும் * இயல்பாகவிறுக்கப்படுஉங் கடன் மூன்றனுள், முனிவர்கடன் கேள்வியாணும், தேவர்கடன் வேள்வியாணும், தென்புலத் தார்கடன் புதல்வரைப் பெறுதலாணுமல்லது இறுக்கப்படாமையின், அக்கடனிறுத் தற்பொருட்டு நன்மக்களைப்பெறுதல். அதிகாரமுறைமை மேலே பெறப்பட்டது.

கூக பெறுமவற்றுள் யாமறிவ தில்லே யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற. க.

இ - ள். பெறுமவற்றுள் - ஒருவன் பெறும் பேறுகளுள்,—அறிவு அறிந்த மக்கட் பேறு அல்ல பிற - அறியவேண்டுவன அறிதற்குரிய மக்களைப் பெறுதலல்லது பிற பேறுகளை—யாம் அறிவது இல்லை - யாம் மதிப்பதில்லை. எ - று.

அறிவதென்பது அறிதலைச்செய்வதென அத்தொழின்மேனின்றது. காரணமா கியவுரிமை காரியமாகிய அறிதலைப் பயந்தேவிடுமாதலான், அத்துணிவுபற்றி அறிந்த வென இறந்தகாலத்தாற் கூறினார். அறிவறிந்தவென்றதனான், மக்களென்னும்பெயர் பெண்ணெழித்துநின்றது.இதனாற் புதல்வர்ப்பேற்றினது சிறப்புக் கூறப்பட்டது. ()

கூஉ. எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின். உ.

இ - ள். எழுபிறப்பும்தீயவை தீண்டா - வினைவயத்தாற் பிறக்கும் பிறப்பேழின் கண்ணும் ஒருவனைத்துன்பங்கள் சென்றடையா,—பழி பிறங்காப் பண்பு உடை மக்கட்பெறின் - பிறராற் பழிக்கப்படாத நற்குணங்களையுடைய புதல்வரைப் பெறு வானுயின். எ - று.

அவன் தீவினை வளராது தேய்தற்குக் காரணமாகிய நல்வினைகளைச் செய்யும் புதல்வரைப் பெறுவனுயினென்றவாறுயிற்று. பிறப்பேழாவன "ஊர்வதினெனின்ரு

---

* இருபிறப்பாளர் மூவரென்றது உபநயனத்திற்கு முன்னொருபிறப்பும் பின்னொருபிறப்பு மாகிய இருபிறப்புடையாயுள்ள அந்தணர், அரசர், வணிகரென்னும் மூதன் மூன்று குணத் தாரை. இருபிறப்பாளரெனினும், துவிசரெனினுமொக்கும்.

மொன்பது மானுட—நீர்பறவை காற்காலோர் பப்பத்துச் - சீரிய—பத்தமாக் தேவர் பதினுலயன்படைத்த—வந்தமில்சீர்த் தாவரரா லுலந்து.“ தந்தைதாயர் தீவினைதேய் தற்பொருட்டு அவரைநோக்கிப்புதல்வர் செய்யுந்தானதருமங்கட்கு அவர் நற்குணங் காரணமாகலின்,பண்பெனலுங் காரணப்பெயர் காரியத்தின்மேனின்றது. (உ)

கூஉ. தம்பொரு ளென்பதம் மக்க ளவர்பொரு
டந்தம் வினையான் வரும். ஈ.

இ - ள். தம் மக்கள் தம்பொருள் என்ப - தம்புதல்வரைத் தம்பொருளென்று சொல்லுவர் அறிந்தோர்,—அவர் பொருள் தந்தம் வினையான் வரும் - அப்புதல்வர் செய்தபொருள் தம்மைநோக்கி அவர்செய்யும் நல்வினையானே தம்பால் வரும் ஆத லான். எ - று.

தந்தம் வினையென்புழித் தொக்கு நின்ற ஆறும்வேற்றுமை மூருகனது குறிஞ்சி நிலம் என்புழிப்போல உரிமைப்பொருட்கண்வந்தது. பொருள்செய்த மக்களைப் பொருளென உபசரித்தார். இவையிரண்டுபாட்டானும் நன்மக்கட்பெற்றூர் பெறும் மறுமைப் பயன் கூறப்பட்டது. (ஊ)

கூச. அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ். ச.

இ - ள். அமிழ்தினும் ஆற்ற இனிதே - சுவையான் அமிழ்தத்தினும்மிகவினிமை யுடைத்து—தம்மக்கள் சிறுகை அளாவிய கூழ் - தம்மக்களது சிறுகையானளாவப் பட்ட சோறு. எ - று.

சிறுகையானளாவலாவது “இட்டுத் தொட்டுங் கௌவியுந் தழந்து—நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்தல்.” * (ச)

கூரு. மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு. ரு.

இ - ள். உடற்கு இன்பம் மக்கள் மெய் தீண்டல் - ஒருவன்மெய்க்கின்பமாவது மக்களது மெய்யைத் தீண்டுதல்;—செவிக்கு இன்பம் அவர் சொற்கேட்டல் - செவிக் கின்பமாவது அவரதுசொல்லைக் கேட்டல். எ - று.

மற்று வினைமாற்று. மக்களது மழலைச்சொல்லேயன்றி அவர்கற்றறிவுடைய ராய்ச் சொல்லுஞ்சொல்லும் இன்பமாகலின், பொதுப்படச் சொல்லென்ருர். தீண் டல் கேட்டலென்னுங் காரணப்பெயர்கள் ஈண்டுக் காரியங்களின்மேனின்றன. (ரு)

கூசு. குழலினி தியாழினி தென்பதம் மக்கண்
மழலைச்சொற் கேளா தவர். சு.

இ - ள். குழல் இனிது யாழ் இனிது என்ப - குழலிசையினிது யாழிசையினி தென்றுசொல்லுவர்—தம்மக்கள் மழலைச்சொற் கேளாதவர் - தம்புதல்வருடையகுத லைச்சொற்கேளாதவர். எ - று.

---

* புறநானூறு, சதுஅ—“படைப்புப் பலபடைத்துப் பலரோடுண்ணு—முடைப் பெருஞ் செல்வராயினு மினடப்படக்—குழுகுழு நடந்து சிறுகை நீட்டி—யிட்டுந் தொட்டுங் கௌவியுந் தழந்து—நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்து—மயக்குறு மக்களில் லில்லோர்—பயக்குறை யில்லைதாம் வாழு நாளே.”

குழல் யாழ் என்பன ஆகுபெயர். கேட்டவர் அவற்றினும் மழலைச்சொல்இனிதென்பதென்பது குறிப்பெச்சம். இனிமை மிகுதிபற்றி மழலைச்சொல்லைச் சிறப்புவகையானுங் கூறியவாறு. இவை மூன்றுபாட்டானும் இம்மைப்பயன் கூறப்பட்டது. (கூ)

கூஎ. தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல். எ.

இ - ள். தந்தை மகற்கு ஆற்றும் நன்றி - தந்தை புதல்வனுக்குச்செய்யும் நன்மையாவது — அவையத்து முந்திஇருப்பச்செயல்-கற்றோரவையின் கண் அவரினும் முற்கிருக்குமாறு கல்வியுடையனாக்குதல். எ - று.

பொருளுடையனாக்குதல் முதலாயின துன்பம் பயத்தலின் கண்மையாகாவென்பது கருத்து. இதனால் தந்தைகடன் கூறப்பட்டது. (எ)

கூஅ. தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது. அ.

இ -ள். தம்மக்கள் அறிவுடைமை - தம்மக்களதறிவுடைமை—மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் தம்மின் இனிது - பெரியநிலத்து மன்னுகின்ற உயிர்கட்கெல்லாந் தம்மினு மினிதாம். எ - று.

ஈண்டறிவென்றது இயல்பாகிய அறிவாகூடிய கல்வியறிவினை. மன்னுயிரென்றது ஈண்டறிவுடையாரல்லாதாரை. அறிவுடைமை கண்டின்புறுதற்கு உரியார் அவராகலின். இதனால் தந்தையினும் அவையத்தாருவப்பரென்பது கூறப்பட்டது. ()

கூகூ. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய். கூ.

இ - ள். ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும் - தான் பெற்றபொழுதை மகிழ்ச்சியினும் மிகமகிழும்—தன்மகனைச் சான்றோன் எனக் கேட்டதாய்-தன் மகனைக் கல்வி கேள்விகளானிறைந்தானென்று அறிவுடையோர் சொல்லக் கேட்ட தாய். எ - று.

கவரானின்கட்கண்ட பொதுவகையினுஞ் சால்புடையனெனக் கேட்ட சிறப்புவகை பெரிதாகலின் பெரிதுவக்குமெனவும், பெண்ணியல்பாற் றுணுகவறியாமையிற் கேட்ட தாயெனவுங் கூறினர். அறிவுடையாரென்பது வருவிக்கப்பட்டது, சான்றோனென்றற்குரியர் அவராகலின். தாயுவகைக்களவின்மையின், அஃதிதனுற் பிரித்துக் கூறப்பட்டது. (கூ)

எ0. மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல். க0.

இ - ள். தந்தைக்கு மகன் ஆற்றும் உதவி - கல்வியுடையனாக்கிய தந்தைக்கு மகன் செய்யுங் கைம்மாறுவது—இவன் தந்தை என் னோற்றான்கொல் எனும் சொல்-தன்னறிவு மொழுக்கமுங்கண்டார் இவன்றந்தை இவனைப் பெறுதற்கு என்ன தவஞ் செய்தான் கொல்லோ வென்று சொல்லுஞ் சொல்லை நிகழ்த்துதல். எ - று.

சொல்லென்பது நிகழ்த்துதலாகிய தன்காரணம்மேற்றான் நின்றது. நிகழ்த்துதல் அங்ஙனஞ்சொல்லவொழுகல். இதனாற் புதல்வன் கடன் கூறப்பட்டது. (க0)

அ ம் அதி.—அன்புடைமை.

அஃதாவது அவ்வாழ்க்கைத் துணையும் புதல்வரும் முதலிய தொடர்புடையார் கட் காதலுடையனுதல். அதிகார முறைமையும் இதனுனே விளங்கும். இல்லறம் இனிது நடத்தலும் பிறவுயிர்கண்மேல் அருள்பிறத்தலும் அன்பின் பயனுகலின், இது வேண்டப்பட்டது. வாழ்க்கைத்துணைமேல் அன்பில்லழி இல்லறமினிது நடவாமை "அறவோர்க் களித்தலு மந்தண ரோம்பலுந்—துறவோர்க் கெதிர்தலுந் தொல்லோர் சிறப்பின்—வீருந்தெதிர் கோடலு மிழந்த வென்னை" * என்பதனுனும், அதனுலருள் பிறத்தல் "அருளென்னு மன்பீன் குழவி" † என்பதனுனுமறிக.

எக. அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூசல் தரும். க.

இ - ள். அன்பிற்கும் அடைக்கும் தாழ் உண்டோ - அன்பிற்கும் பிறரறியாமலடைத்துவைக்குந் தாழுளதோ?—ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும்-தம்மாலன்புசெய்யப்பட்டாரது துன்பங்கண்டழி அன்புடையார்கண் பொழிகின்ற புல்லிய கண்ணீரே உண்ணின்ற அன்பினை எல்லாருமறியத் தோற்றும் ஆதலான். எ - று.

உம்மை சிறப்பின்கண் வந்தது. ஆர்வலரது புன்மை கண்ணீர்மே லேற்றப்பட்டது. காட்சியளவைக்கெய்தாதாயினும் அனுமானவளவையான் வெளிப்படுமென்பதாம். இதனுல் அன்பினதுண்மை கூறப்பட்டது. (க)

எஉ. அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு. உ.

இ - ள். அன்பிலார் எல்லாம் தமக்கு உரியர் - அன்பிலாதார் பிறர்க்குப் பயன்படாமையின் எல்லாப்பொருளானுந்தமக்கேயுரியர்;—அன்புடையார் என்பும் பிறர்க்கு உரியர் - அன்புடையார் அவற்றுனேயன்றித் தம்முடம்பானும் பிறர்க்குரியர். எ - று.

ஆனுருபுகளும் பிரிநிலையேகாரமும் விகாரத்தாற் றொக்கன. என்பு ஆகுபெயர். என்புமூர்ப்பாராதல் "தன்னகம் புக்க குறு நடைப் புறவின் றபுதியஞ்சிச் சீரை ‡ புக்கோன்" § முதலாயினுர்கட்காண்க. (உ)

எஊ. அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு. ஊ.

இ - ள். ஆர் உயிர்க்கு என்போடு இயைந்த தொடர்பு - பெறுதற்கரிய மக்களுயிர்க்கு உடம்போடெண்டாகிய தொடர்ச்சியினை—அன்போடு இயைந்த வழக்கு என்ப - அன்போடு பொருந்துதற்குவந்த நெறியின்பயனென்று சொல்லுவர் அறிந்தோர். எ - று.

பிறப்பின தருமை பிறந்தவுயிர்மேலேற்றப்பட்டது. இயைந்தவென்பது உபசார வழக்கு. o வழக்கு ஆகுபெயர். உடம்போடியைந்தல்லது அன்புசெய்யலாகாமையின், அது செய்தற்பொருட்டு இத்தொடர்ச்சி யுளதாயிற்றென்பதாம். ஆகவே, இத்தொடர்ச்சிக்குப் பயன் அன்புடைமையென்றுயிற்று. (ஊ)

---

* சிலப்பதிகாரம், கொலைக்களக்காதை. † நிறுக்குறள், எஎஉ.

‡ சீவக - தலாகதம்பம்பட்டி. § பெரிச்சக்கரவர்த்தி. புறநானூறு - சஊ.

o சைபோக சம்பந்த வாசகத்தைச் சமவாய சம்பந்தத்திற்குரைத்தமையால் உப்சார மாயிற்று.

எச. அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு. ச.

இ - ள். அன்பு ஆர்வமுடைமை ஈனும் - ஒருவனுக்குத் தொடர்புடையார்மாட்டுச் செய்தவன்பு அத்தன்மையாற் பிறர்மாட்டும் வீரூப்பமுடைமையைத்தரும்,—அது நண்பு என்னும் நாடாச்சிறப்பு ஈனும்-அவ்வீரூப்பமுடைமை தான் இவற்குப் பகையும் நொதுமலுமில்லையாய் யாவரும் நண்பென்றுசொல்லப்படும் அளவீறந்த சிறப்பினைத் தரும். எ - று.

உடைமை உடையனாந்தன்மை. யாவருநண்பாதல் எல்லாப்பொருளுமெய்துதற்கேதுவாகலின், அதனை நாடாச்சிறப்பென்றார். (ச)

எடு. அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்று ரெய்துஞ் சிறப்பு. டு.

இ - ள். அன்பு உற்று அமர்ந்த வழக்கு என்ப - அன்புடையராய் இல்லறத்தோடு பொருந்திய நெறியின் பயனென்று சொல்லுவர் அறிந்தோர்—வையகத்து இன்பு உற்றார் எய்தும் சிறப்பு - இவ்வுலகத்து இல்வாழ்க்கைக்கணின்று இன்பநுகர்ந்து அதன்மேல் துறக்கத்துச்சென்றெய்தும்பேரின்பத்தினை. எ - று.

வழக்கு ஆகுபெயர். இல்வாழ்க்கைக்கணின்று மனைவியோடும் மக்களோடும் ஒக்கலோடுங்கூடியின்புற்றார் தாஞ்செய்த வேள்வித்தொழிலாற்றேவராய் ஆண்டுமின் புறுவராகலின், இன்புற்றெய்துஞ்சிறப்பென்றார். தவத்தாற்றுன்புற்றெய்துந் துறக்கவின்பத்தினை ஈண்டுமின்புற்றெய்துதல் அன்பானன்றி யில்லையென்பதாம். (டு)

எசு. அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை. கூ.

இ - ள். அன்பு சார்பு அறத்திற்கே என்ப அறியார் - அன்புதுணையாவது அறத்திற்கேயென்று சொல்லுவர்சிலரறியார்;—மறத்திற்கும் அஃதே துணை - எனைமறத்திற்கும் அவ்வன்பே துணையாவது. எ-று.

ஒருவன்செய்தபகைமைபற்றி உள்ளத்து மறநிகழ்ந்துழி அவனை நட்பாகக்கருதி அவன்மேலன்புசெய்ய அது நீங்குமாகலின், மறத்தை நீக்குதற்குத்துணையாமென்பார், மறத்திற்குமஃதே துணையென்றார், "தன்பத்திற்கியாரே துணையாவார்*." என்புழிப்போல†. இவையைந்துபாட்டானும் அன்பினது சிறப்புக்கூறப்பட்டது. (கூ)

எள. என்பி லதனை வெயில்போலக் காயுமே
யன்பி லதனை யறம். எ.

இ - ள். என்பு இலதனை வெயில்போலக் காயும் - என்பில்லாதவுடம்பை வெயில் காய்ந்தாற்போலக் காயும்—அன்பு இலதனை அறம் - அன்பில்லாதவுயிரை அறக்கடவுள். எ - று.

என்பிலதென்றதனுன் உடம்பென்பதூஉம், அன்பிலதென்றதனுன் உயிரென்பதூஉம் பெற்றும். வெறுப்பின்றி எங்குமொருதன்மைத்தாகிய வெயிலின்முன்என்பில்

---

* திருக்குறள், ௭௨௯.

† "ஆதி சத்தத்தால் பூவிற்குச் சென்றான், துன்பத்திற் கியாரேதுணையாவார், பறத்திற்கு மஃதே துணை, பிணிக்குமருந்து என்பவற்றின்கட் பறித்தல் நீக்குதலென நடுவே பெய்த பொருளுரைத்துத் தமர்த்தமென்பதுங்கொள்க" என்றார் பிரயோக விவேகமூலார். காரக படலத்து 'உடனிகழ்ன்ற' என்னும் பதினுருஞ்செய்யுளையிற்காண்க.

லது தன்னியல்பாற்சென்று கெடுமாறுபோல, அத்தன்மைத்தாகிய அறத்தின்முன் அன்பில்லது தன்னியல்பாற்கெடுமென்பதாம். அதனைக்காயுமென வெயிலறங்களின் மேலேற்றினர், அவற்றிற்கும் அவ்வியல்புண்மையின். இவ்வாறு "அல்லவை செய்தாற் கறங்கூற்றம்"* எனப்பிறருங் கூறினர். (எ)

எஅ. அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று. அ.

இ - ள். அகத்து அன்பு இல்லா வுயிர் வாழ்க்கை - மனத்தின்கணன்பில்லாத வுயிர் இல்லறத்தோடு கூடி வாழ்தல் — வன்பாற்கண் வற்றல் மரம் தளிர்த்தற்று-வன்பாலின்கண் வற்றலாகிய மரந் தளிர்த்தாற்போலும். எ - று.

கூடாதென்பதாம். வன்பால் வன்னிலம். வற்றலென்பது பால்விளங்காவஃறிணைப்படர்க்கைப்பெயர். (அ)

எகூ. புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
யகத்துறுப் பன்பி லவர்க்கு. கூ.

இ - ள். யாக்கையகத்து உறுப்பு அன்பு இலவர்க்கு-யாக்கை யகத்தின்கணின்று இல்லறத்திற்குறுப்பாகிய அன்புடையரல்லாதார்க்கு — புறத்து உறுப்பெல்லாம் எவன் செய்யும் - ஏனைப்புறத்தின்கணின்று உறுப்பாவனவெல்லாம் அவ்வறஞ்செய்தற்கண் என்னவுதவியைச் செய்யும்! எ - று.

புறத்துறுப்பாவன இடனும், பொருளும், எவல்செய்வாருமுதலாயின. துணையொடுகூடாதவழி அவற்றுற்பயனின்மையின், எவன்செய்யுமென்றார். உறுப்புப்போறலின், உறுப்பெனப்பட்டன. யாக்கையிற் கண்முதலிய உறுப்புக்களெல்லாம் என்ன பயனைச் செய்யும், மனத்தின்கணுறுப்பாகிய அன்பிலாதார்க்கென்றுரைப்பாருமுளர். அதற்கு இல்லறத்தோடு யாதுமியைபில்லாமையறிக. (கூ)

அ0. அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு. க0.

இ - ள். அன்பின் வழியது உயிர்நிலை - அன்புமுதலாக அதன்வழிநின்ற உடம்பே உயிர்நின்றவுடம்பாவது;—அஃது இலார்க்கு உடம்பு என்பு தோல்போர்த்த - அவ்வன்பிலாதார்க்கு உளவான உடம்புகள் என்பினைத் தோலாற்போர்த்தனவாம், உயிர்நின்றனவாகா. எ - று.

இல்லறம் பயவாமையின், அன்னவாயின. இவைகான்குபாட்டானும் அன்பில் வழிப்படுங் குற்றங்கூறப்பட்டது. (க0)

கூம் அதி.—விருந்தோம்பல்.

அஃதாவது இருவகை விருந்தினரையும் † புறந்தருதல். தென்புலத்தார் முதலியவைம்புலத்துள் முன்னையவிரண்டும் கட்புலனுகாதாரை நினைந்து செய்வனவாகலானும், பின்னையவிரண்டும் பிறர்க்கீதலன்மையானும், இடைநின்ற விருந்தோம்பல்

* கல்லா வொருவற்குத் தன்வாயிற் சொற்கூற்ற—மெல்லிய வாழைக்குத் தானீன்ற காய்கூற்ற—மல்லவை செய்தாற் கறங்கூற்றங் கற்றமே—யில்லிருந்து நீங்கொழுகுவாள்—கான் மணிக்கடிகை.

† இருவகைவிருந்தினர். சூகூ-ம் குறளுரையிற்காண்க.

சிறப்புடைத்தாய் இல்லறங்கட்கு முதலாயிற்று. வேறுகாத அன்புடையிருவர்கூடியல்லது செய்யப்படாமையின், இஃது அன்புடைமையின்பின் வைக்கப்பட்டது.

அக. இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. க.

இ - ள். இல் இருந்து ஓம்பி வாழ்வது எல்லாம் - மனைவியோடும் வனத்திற் செல்லாது இல்லின்கணிருந்து பொருள்களைப்போற்றிவாழுமாறு செய்கையெல்லாம்—விருந்து ஓம்பி வேளாண்மை செய்தற்பொருட்டு - விருந்தினரைப்பேணி அவர்க்குபகாரஞ்செய்தற் பொருட்டு. எ - று.

எனவே வேளாண்மைசெய்யாவழி இல்லின்கணிருத்தலும் பொருள்செய்தலுங் காரணமாக வருந்துன்பச்செய்கைகட்கெல்லாம் பயனில்லையென்பதாம். (க)

அஉ. விருந்து புறத்தது தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று உ.

இ - ள். சாவா மருந்து எனினும் - உண்ணப்படும் பொருள் அமிர்தமேயெனினும்—விருந்து புறத்தது தான் உண்டல் - தன்னைநோக்கிவந்த விருந்து தன்னில் லின்புறத்ததாகத் தானே உண்டல்—வேண்டற்பாற்று அன்று - விரும்புதல் முறைமையுடைத்தன்று. எ - று.

சாவாமருந்து சாவாமைக்குக் காரணமாகிய மருந்து. விருந்தின்றியே வருகாற்றானுண்டலைச் சாவாமருந்தென்பார் உளராயினும் அதனையொழிக்க வென்றுரைப்பினுமமையும். இவையிரண்டுபாட்டானும் விருந்தோம்பலின் சிறப்புக் கூறப்பட்டது. (உ)

அஊ. வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் லின்று. ஊ.

இ - ள். வரு விருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை - தன்னைநோக்கி வந்த விருந்தை நாடோறும் புறந்தருவானதில்வாழ்க்கை—பருவந்து பாழ்படுதல் இன்று - நல்குரவான் வருந்திக்கெடுதலில்லை. எ - று.

நாடோறும் விருந்தோம்புவானுக்கு அதனற் பொருடொலையாது மேன்மேற் கிளைக்குமென்பதாம். (ந)

அஎ. அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில். எ.

இ - ள். செய்யாள் அகன் அமர்ந்து உறையும் - திருமகள் மனமகிழ்ந்து வாழாநிற்கும்—முகன் அமர்ந்து நல்விருந்து ஓம்புவான் இல் - முகமினியனாய்த் தக்கவிருந்தினரைப் பேணுவான தில்லின்கண். எ - று.

மனமகிழ்தற்குக் காரணம் தன்செல்வம் நல்வழிப்படுதல். தகுதி ஞானவொழுக்கங்களாலுயர்தல். பொருள் கிளைத்தற்குக் காரணங் கூறியவாறு. (ச)

அரு. வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம். ரு.

இ - ள். விருந்து ஒம்பி மிச்சில் மிசைவான் புலம் - முன்னேவிருந்தினரை மிசைவித்தப் பின் மிக்கதனைத் தான் மிசைவானது வினைபுலத்திற்கு—வித்தும் இடல் வேண்டுமோ - வித்திடுதலும் வேண்டுமோ, வேண்டா. எ - று.

கொல்லென்பது அசைநிலை. தானே வினையுமென்பது குறிப்பெச்சம். இவை மூன்றுபாட்டானும் விருந்தோம்புவார் இம்மைக்கணெய்தும் பயன் கூறப்பட்டது. (ஈ)

அசு. செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா
னல்விருந்து வானத் தவர்க்கு. கூ.

இ - ள். செல் விருந்து ஒம்பி வருவிருந்து பார்த்து இருப்பான்-தன்கட்சென்ற விருந்தைப் பேணிப் பின் செல்லக்கடவ விருந்தைப் பார்த்துத் தான் அதனோடு உண்ணவிருப்பான்—வானத்தவர்க்கு நல்விருந்து - மறுபிறப்பிற்றேவனும் வானினுள்ளார்க்கு நல்விருந்தாம். எ - று.

வருவிருந்தென்பது இடவழுவமைதி. நல்விருந்து எய்தாவிருந்து. இதனுன் மறுமைக்கணெய்தும்பயன் கூறப்பட்டது. (சு)

அள. இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
றுணைத்துணை வேள்விப் பயன். எ.

இ - ள். வேள்விப் பயன் இனைத்துணைத்து என்பது ஒன்று இல்லை - விருந்தோம்பலாகிய வேள்வியின்பயன் இன்னவளவிற்றென்பதோரளவுடைத்தன்று;—விருந்தின்துணைத் துணை - அதற்கு அவ்விருந்தின்றகுதியளவே அளவு. எ - று.

ஐம்பெருவேள்வியி * னொன்றுகலின் வேள்வியென்றும், பொருளளவு "தான் சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்—வான்சிறிதாப் போர்த்து விடும்" † ஆகலின், இனைத்துணைத்தென்பதொன்றில்லையென்றுங் கூறினர். இதனுன் இருமையும் பயத்தற்குக் காரணங் கூறப்பட்டது. (எ)

அஅ. பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார். அ.

இ - ள். பரிந்து ஒம்பிப் பற்று அற்றேம் என்பர் - நிலையாப்பொருளை வருந்திக் காத்துப் பின் அதனையிழந்து இதுபொழுதியாம் பற்றுக்கோடிலமாயினே மென்றிரங்குவர்—விருந்து ஒம்பி வேள்வி தலைப்படாதார் - அப்பொருளான் விருந்தினரை யோம்பி வேள்விப் பயனெயெய்தும் பொறியிலாதார். எ - று.

" ஈட்டிய வொண்பொருளைக்—காத்தலு மாங்கே கடிந்தன்பம்" ‡ ஆகலின், பரிந்தோம்பியென்றார். வேள்வி ஆகுபெயர். (அ)

---

* ஐம்பெருவேள்வியாவன பிரமயாகம், தேவயாகம், மானுடயாகம், பிதிர்யாகம், பூதயாக மெனவிவை. அவற்றுள், பிரமயாகம் வேதமோதல்; தேவயாகம் ஓமம்வளர்த்தல்; மானுடயாகம் விருந்தோம்பல்; பிதிர்யாகம் நீர்க்கடனுற்றல்; பூதயாகம் பலியீதல்.

† உறக்குந் துணையதோ ராலம்வித் தீண்டி—யிறப்ப நிழற்பயக் தாஅங் - கறப்பயனுங்—தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்—வான்சிறிதாப் போர்த்து விடும்—நாலடியார், அறன்வலியுறுத்தல்.

‡ ஈட்டலுந் துன்பமற் றீட்டிய வொண்பொருளைக்—காத்தலு மாங்கே கடுந்துன்பம் - காத்தல்—குறைபடிற் றுன்பங் கெடிற்றுன்பந் துன்பக்—குறைபதி பற்றைப் பொருள்—நாலடியார், ஈயாமை.

அகூ. உடைமையு ளின்மை விருந்தோம்ப லோம்பா
மடமை மடவார்கணுண்டு. கூ.

இ - ள். உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா மடமை - உடைமைக்காலத் தின்மையாவது விருந்தோம்பலையிகழும் பேதைமை;—மடவார்கண் உண்டு - அஃது அறிந்தார்மாட்டு உளதாகாது, பேதையார்மாட்டேயுளதாம். எ - று.

உடைம பொருளுடையனுந்தன்மை. பொருளாற்கொள்ளும்பயனோயிழப்பித்து உடைமையை இன்மையாக்கலின், மடமையை இன்மையாகவுபசரித்தார். பேதைமையான் விருந்தோம்பலையிகழிற் பொருள் நின்றவழியும் அதனுற்பயனில்லையென்பதாம். இவையிரண்டுபோட்டானும் விருந்தோம்பாவழிப் படுங்குற்றம் கூறப்பட்டது. (கூ)

கூ. மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. கூ.

இ - ள். அனிச்சம் மோப்பக் குழையும் - அனிச்சப்பூ மோந்துழியன்றிக்குழையாதது;—விருந்து முகம் திரிந்து நோக்கக் குழையும் - விருந்தினர் முகம் வேறுபட்டு நோக்கக் குழைவர். எ - று.

அனிச்சம் ஆகுபெயர். சேய்மைக்கட்கண்டுழி இன்முகமும், அதுபற்றி நண்ணிய வழி இன்சொல்லும், அதுபற்றி உடன்பட்டவழி நன்றூற்றலுமென விருந்தோம்புவார்க்கு இன்றியமையாத மூன்றனுள் முதலாய இன்முகம் இல்வழிச் சேயமைக்கண்ணே வாடிநீங்குதலின், நீண்டியவழியல்லது வாடாத அனிச்சப்பூவினும் விருந்தினாமெல்லியென்பதாம். இதனுன் விருந்தோம்புவார்க்கு முதற்கண் இன்முகம் வேண்டுமென்பது கூறப்பட்டது. (கூ)

கம் அதி.—இனியவைகூறல்.

அஃதாவது மனத்தின்கணுவகையை வெளிப்படுப்பனவாகிய வுரியசொற்களைச் சொல்லுதல். இதுவும், விருந்தோம்புவார்க்கு இன்றியமையாதாகலின், விருந்தோம்பலின்பின் வைக்கப்பட்டது.

கூக. இன்சொலா லீர மளீஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாயச் சொல். க.

இ - ள். இன்சொல் - இன்சொலாவன—ஈரம் அளீஇப் படிறு இலவாம் செம்பொருள் கண்டார் வாய்ச் சொல் - அன்போடு கலந்து வஞ்சனையிலவாயிருக்கின்ற அறத்தினே உணர்ந்தார்வாயிற் சொற்கள். எ - று.

ஆல் அசைநிலை. அன்போடு கலத்தல் அன்புடைமையை வெளிப்படுத்தல். படிறின்மை வாய்மை. மெய்யுணர்ந்தார் நெஞ்சிற்கெல்லாஞ் செம்மையுடைத்தாய்த்தோன்றலின், செம்பொருளெனப்பட்டது. இலவாஞ்சொல்லெனவியையும். வாயென வேண்டாதுகூறினுர், தீயசொற்பயிலாவென்ப தறிவித்தற்கு. இதனுன் இன்சொலதிலக்கணங் கூறப்பட்டது. (க)

கூஉ. அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
தின்சொல னுகப் பெறின். உ.

இ - ள். அகன் அமர்ந்து ஈதலின் நன்று - நெஞ்சுவந்து ஒருவற்கு வேண்டிய பொருளைக்கொடுத்தலினும் நன்று—முகன் அமர்ந்து இன்சொலனுகப் பெறின் -

கண்டபொழுதே முகமினியனுய் அதனேடு இனியசொல்லையு முடையனுகப் பெறின். எ - று.

இன்முகத்தோடுகூடிய இன்சொல் ஈதல்போலப் பொருள்வயத்ததன்றித் தன் வயத்ததாயினும், அறநெஞ்சுடையார்க்கல்லது இயல்பாகவின்மையின், அதனினுமரி தென்னுங் கருத்தான், இன்சொலனகப் பெறினென்றுர். (உ)

கூக. முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தானு
மின்சொ லினதே யறம். கூ.

இ - ள். முகத்தான் அமர்த்து இனிது நோக்கி - கண்டபொழுதே முகத்தான் விரும்பி இனிதாக நோக்கி - அகத்தான் ஆம் இன்சொலினதே அறம் - பின் நண்ணிய வழி மனத்துடனுகிய இனியசொற்கோச் சொல்லுதலின் கண்ணதே அறம். எ - று.

நோக்கியென்னும் வினையெச்சம் இன்சொலென அடையடுத்துநின்ற முதனிலைத் தொழிற்பெயர்கொண்டது. ஈதலின்கண்ணதன்றென்றவாறு. இவையிரண்டுபாட்டானும் இனமுகத்தோடு கூடியவினசொல் முன்னரே பிணித்துக்கோடலின் விருந்தோமபுத்தகட் சிறந்ததென்பது கூறப்பட்டது. (ங)

கூச. துனபுறுஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டு
மினபுறுஉ மினசொ லவர்க்கு. ச.

இ - ள். யார்மாட்டும் இன்பு உறுஉம் இன்சொலவர்க்கு - எல்லார்மாட்டும் இன்பத்தை மிகுவிக்கும் இன்சொல்லையுடையார்கு—துன்பு உறுஉம் துவ்வாமை இல்லாகும் - துன்பத்தை மிகுவிக்கும் நல்குரவு இலலையாம். எ - று.

நாமுதலிய பொறிகள் சுவை முதலிய புலன்களே நுகராமையுடைமையின், துவ்வாமையென்றுர். யார்மாட்டின்புறுஉமினசொலவர்க்குப் பகையும் நொதுமலு மின்றி உள்ளது நண்பேயாம், ஆகலின், அவர் எல்லாச்செல்வமுமெய்துவரென்பது கருத்து. (ச)

கூடு. பணிவுடைய னின்சொல னுதல லொருவற்
கணியல்ல மற்றுப் பிற. டு.

இ - ள். ஒருவற்கு அணி பணிவுடையன் இன்சொலனுதல்-ஒருவனுக்கணியாவதுதானுற்றுழப்பவர்கட்டாழ்ச்சியுடையனுய்எல்லார்கண்ணும் இனியசொல்லையுடையனுதல்;—பிற அல்ல - இவையிரண்டுமன்றி மெய்க்கணியும் பிறவணிகள் அணியாகா. எ - று.

இன்சொலனுதற்கினமாகலின், பணிவுடைமையும் உடன்கூறினர். மற்று அசைநிலை. வேற்றுமையுடைமையாற் பிறவெனவும், இவை போலப் பேரழகுசெய்யாமையின் அல்லவெனவுங் கூறினர். இவையிரண்டுபாட்டானும் இனியவை கூறுவார்க்கு இம்மைப்பயன் கூறப்பட்டது. (ஙி)

கூசு. அல்லவை தேய வறம்பெருகு நல்லவை
நாடி யினிய சொலின். சு.

இ - ள். நல்லவை நாடி இனிய சொலின் - பொருளாற் பிறர்க்கு நன்மை பயக்குஞ்சொற்களே மனத்தானுராய்ந்து இனியவாக ஒருவன்சொல்லுமாயின்,—அல்லவை தேய அறம் பெருகும் - அவனுக்குப் பாவங்கடேய அறம் வளரும். எ - று.

தேய்தல் தன்பகையாகிய அறம்வளர்தலிற் றனக்கு நிலையின்றிமெலிதல். "தவத் தின்முன் னில்லாதாம் பாவம்" * என்பதூஉம் இப்பொருட்டு. நல்லவை நாடிச் சொல்லுங்காலுங் கடியவாகச்சொல்லின், அறனுகாதென்பதாம். இதனுன் மறுமைப் பயன் கூறப்பட்டது. (சு)

கூஎ. நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பணிபிற றலைப்பிரியாச் சொல். எ.

இ - ள். நயன் ஈன்று நன்றி பயக்கும் - ஒருவனுக்கு இம்மைக்கு நீதியையுமுண் டாக்கி மறுமைக்கு அறத்தையும் பயக்கும்—பயன் ஈன்று பண்பின் தலைப்பிரியாச் சொல் - பொருளாற் பிறர்க்கு நன்மையைக் கொடுத்து இனிமைப்பண்பினீங்காத சொல். எ - று.

நீதி உலகத்தோடு பொருந்துதல். பண்பென்பது ஈண்டதிகாரத்தான் இனிமை மேனின்றது. தலைப்பிரிதல் ஒருசொன்னீர்மைத்து. (எ)

கூஅ. சிறுமையு ணீங்கிய வின்சொன் மறுமையு
மிம்மையு மின்பந் தரும். அ.

இ - ள். சிறுமையுள் நீங்கிய இன்சொல் - பொருளாற் பிறர்க்கு நோய்செய்யாத இனியசொல்—மறுமையும் இம்மையும் இன்பம் தரும் - ஒருவனுக்கு இருமையினும் இன்பத்தைப் பயக்கும். எ - று.

மறுமையின்பம் பெரிதாகலின், முற்கூறப்பட்டது. இம்மையின்பமாவது உல கம் தன்வயத்ததாகலான் நலனனைவயதி னின்புறுதல். இவையிரண்டொட்டானும் இருமைப்பயனும் ஒருங்கெய்துதல் வலியுறுத்தப்பட்டது. (அ)

கூகூ. இன்சொ லினிதின்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது. கூ.

இ - ள். இன்சொல் இனிது என்றல் காண்பான் - பிறர் கூறும் இன்சொற்றனக் கின்பம் பயத்தலை அனுபவித்தறிகின்றவன்—வன்சொல் வழங்குவது எவன்கொல் - அது நிறைப் பிறாமாடமை வையகலுலக மெல்லுவது என்னபயனை கருதி! எ - று.

இனியதனாறது வினைகுறிப்புப்பயா. கழுமெசாற பிறாகு மனனுதாகலின், அது கூறலாகாதென்பது கருத்து. (கூ)

கoo. இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. கo.

இ - ள். இனிய உளவாக இன்னாத கூறல் - அறம் பயக்கும் இனியசொற்களும் தனக்குளவாயிருக்க அவற்றைக் கூறாது பாவம் பயக்கும்இன்னாதசொற்களை ஒருவன் கூறுதல்—கனி இருப்பக காய கவாநதறறு - இனிய கனிகளும தன்கைக்கணுளவாயி ருக்க அவற்றை நுகராது இன்னாத காய்களை நுகர்ந்ததனேடொக்கும். எ - று.

கூறலென்பதனைச் சொற்களென்பது பெற்றும். பொருளை விசேடித்து நின்ற பண்புகள் உவமைகண்ணுஞ்சென்றன. இனியகனிகளென்றது ஒளவையுணடனெல்

---

* விளக்குப் புகலுணை மாய்ந்தாங் கொருவன்—றவதினமுன னில்லாதாம் பாவம் * விளக்குநெய்—தேய்விடத்துச் சென்றருள் பாய்ந்தாங்கு நல்ல டை—தீர்விடத்து நீற்குமாங் நீது—காலடியார், தூவு.

விக்கனி * போல அமிழ்தாவனவற்றை. இன்ஞதகாய்களென்றது காஞ்சொங்காய் போல நஞ்சாவனவற்றை. கடுஞ்சொற்சொல்லுதல் முடிவிற்றனக்கே யின்ஞதென்ப தாம். இவையிரண்டுபொட்டாலும் இன்ஞதகூறலின் குற்றங் கூறப்பட்டது. (கூ)

கக அதி.—செய்ந்நன்றியறிதல்.

அஃதாவது தனக்குப் பிறர் செய்த நன்மையை மறவாமை. இனியவை கூறி இல்லறம் வழுவாதார்க்கு உய்தியில் குற்றம் செய்நன்றி கோறலேயாகலின், அதனைப் பாதுகாத்துக் கடிதற்பொருட்டு, இஃதினியவைகூறலின்பின் வைக்கப்பட்டது.

கஉக. **செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்**
வானகமு மாற்ற லரிது. க.

இ - ள். செய்யாமல் செய்த உதவிக்கு - தனக்கு முன்னேருதவிசெய்யாதிருக்க ஒருவன் பிறனுக்குச் செய்தவுதவிக்கு—வையகமும் வானகமும் ஆற்றல் அரிது - மண்ணுலகும் விண்ணுலகுங் கைம்மாறுகக் கொடுத்தாலும் ஒத்தலரிது. எ - று.

கைம்மாறுகளெல்லாம் காரணமுடையவாகலின், காரணமில்லாத உதவிக்கு ஆற்றுவாயின. செய்யாமைச் செய்தவுதவியென்று பாடமோதி, மறித்துதவமாட்டாமை யுள்ளவிடத்துச் செய்தவுதவியென்றுரைப்பாருமுளர். (க)

கஉஉ. **காலத்தி னுற்செய்த நன்றி சிறிதெனினு**
ஞாலத்தின் மாணப் பெரிது. உ.

இ - ள். காலத்தினுல் செய்த நன்றி - ஒருவனுக்கு இறுதிவந்த வெல்லுக்கண் ஒருவன் செய்தவுபகாரம்—சிறிது எனினும் ஞாலத்துவ மாணப் பெரிது - தன்னே நோக்கச் சிறிதாயிருந்ததாயினும் அக்காலத்தை நோகக நிலவுலகதனிலும் மிகப் பெரிது. எ - று.

அக்காலநோக்குவதல்லது பொருணோக்கலாகாதென்பதாம். காலத்தினுலென் பது வேற்றுமை மயக்கம். (உ)

கஉங. **பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கி**
னன்மை கடலிற் பெரிது. ங.

இ - ள். பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின் - இவர்க்கு இதுசெய்தால் இன்னது பயக்குமென்று ஆராய்தலிலராய்ச் செய்தவுதவியாகிய ஈரமுடைமையை ஆராயின்,—நன்மை கடலிற பெரிது - அதனன்மை கடலினும் பெரிதாம். எ - று.

இவை மூன்றுபாட்டாலும் முறையே காரணமின்றிச் செய்தாலும், காலத்தினுற் செய்தாலும், பயன்றூக்காராய்ச் செய்தாலும் அளவிலவாதல் கூறப்பட்டது. (ங)

கஉச. **நிணைத்துணை நன்றி செயினும் பணைத்துணையாக்**
கொள்வர் பயன்றெரி வார்.

---

* மால்வரைக—கமழ்தூஞ் சாயற் கல்லிய நெல்லி—யமிழ்தவீ நீள்கனி வௌவைக் கீந்த—வுரவுச்சினஞ் கனலு மொளிதிகழ் நெடுவே—லாவக்கடந் முனையதிகனும்—பெறுபாணற் றூப்படை.

தொன்னிலப்—பெருமலே யிடைச்சுரஞ் சொரமிசைக் கொண்ட—நிறையிலே செல்லித் நீள்கனி குறியா—தாரு னின்னகத் தடக்கிச்—சாதனிங்க வெகுக்கிய தலேயே—புறநானூறு, கக.

இ - ள். தினைத்துணை நன்றி செயினும் - தமக்குத் தினையளவிற்றாய உபகாரத்தை ஒருவன் செய்தானாயினும்,—பனைத்துணையாக்கொள்வர் பயன் தெரிவார் அதனை அவ்வளவிற்றாகக்கருதாது பனையளவிற்றாகக் கருதுவர் அக்கருத்தின்பயன் றெரிவார். எ - று.

தினை பனையென்பன சிறுமைபெருமைகட்குக் காட்டுவன சிலவளவை. அக்கருத்தின் பயனுவது அங்ஙனங் கருதுவார்க்குவரும் பயன். (ச)

கடுதி. உதவி வரைத்தன் றுதவி யுதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து. டுதி.

இ - ள். உதவி உதவிவரைத்து அன்று - கைம்மாறானவுதவி காரணத்தானும் பொருளானுங் காலத்தானுமாகிய மூவகையானும் முன்செய்த உதவியளவிற் றன்று;—உதவிசெயப்பட்டார் சால்பின் வரைத்து - அதனைச் செய்வித்துக்கொண்டவர்தம் அமைதியளவிற்று. எ - று.

சால்பு எவ்வளவுபெரிதாயிற்று உதவியும் அவ்வளவு பெரிதாமென்பார், சால்பின் வரைத்தென்றார். இவையிரண்டுபாட்டானும் மூன்று மல்லாத வுதவிமாத்திரமும் அறிவார்க்குச் செய்தவழிப் பெரிதாமென்பது கூறப்பட்டது. (டி)

கஅசு. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்திட் டுப்பாயார் நட்பு. சு.

இ - ள். துன்பத்துள் துப்பு ஆயார் நட்புத் துறவற்க - துன்பக்காலத்துத் தனக்குப் பற்றுக்கோடாயினுரது நட்பை விடாதொழிக;—மாசு அற்றார் கேண்மை மறவற்க - அறிவொழுக்கங்களிற் குற்றமற்றாரது கேண்மையை மறவாதொழிக. எ - று.

கேண்மை கேளாந்தன்மை. இம்மைக்குறுதிகூறுவார் மறுமைக்குறுதியும் உடன் கூறினார். (சு)

கஅள. எழுமை யெழுபிறப் புள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு. எ.

இ - ள். தங்கண் விழுமம் துடைத்தவர் நட்பு - தங்கணெய்திய துன்பத்தை நீக்கினவருடைய நட்பினை—எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் - எழுமையினையுடைய தம்மெழுவகைப்பிறப்பினும் நினைப்பர் நல்லோர். எ - று.

எழுமையென்றது வினைப்பயன்றொடரும் எழுபிறப்பினை; அது வாயாபதியுட் கண்டது. எழுவகைப்பிறப்பு மேலேயுரைத்தாம். * விரைவுதோன்றத் துடைத்தவ ரென்றார். நினைத்தலாவது துன்பந்துடைத்தலான் அவர்மாட்டெதாகிய அன்பு பிறப்புத்தோறுந் தொடர்ந்து அன்புடையராதல். இவை இரண்டுபாட்டானும் நன்றி செய்தாரது நட்பு விடலாகாதென்பது கூறப்பட்டது. (எ)

கஅஅ. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று. அ.

இ - ள். நன்றி மறப்பது நன்று அன்று - ஒருவன் முன்செய்த நன்மையை மறப்பது ஒருவற்கு அறனன்று;— நன்றல்லது அன்றே மறப்பது நன்று - அவன் செய்த தீமையைச் செய்தபொழுதே மறப்பது அறன். எ - று.

* திருக்குறள் - கூ.

இரண்டும் ஒருவனுற்செய்யப்பட்ட வழி மறப்பதும் மறவாததும் வகுத்துக் கூறியவாறு, (அ)

கஅகூ. கொன்றன்ன வின்னா செயினு மவர்செய்த
வொன்றுநன் றுள்ளக் கெடும். கூ.

இ - ள். கொன்று அன்ன இன்னா செயினும் - தமக்கு முன்னெருநன்மைசெய்தவர்பின்கொன்றலொத்த இன்னாதவற்றைச் செய்தாராயினும்,—அவர்செய்த நன்று ஒன்று உள்ளக்கெடும் - அவையெல்லாம் அவர்செய்த நன்மையொன்றினையும் நினைக்க இல்லையாம். எ - று.

நினைத்தாணை பனைத்தாணையாகக்கொள்ளப்படுதலின், அவ்வொன்றுமே அவற்றையெல்லாங் கெடுக்குமென்பதாம். இதனுன் நன்றல்லது அன்றே மறக்குந்திறங் கூறப்பட்டது. (கூ)

கஅ. எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. கஅ.

இ-ள். எந்நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம் - பெரியவறங்களைச் சிதைத்தார்க்கும் பாவத்தினீங்கும் வாயிலுண்டாம்;—செய்ந்நன்றி கொன்ற மகற்கு உய்வு இல்லை - ஒருவன் செய்த நன்றியைச்சிதைத்த மகனுக்கு அஃதில்லை. எ - று.

பெரியவறங்களைச் சிதைத்தலாவது ஆன்முலையறுத்தலும், மகளிர் கருவினைச் சிதைத்தலும், பார்ப்பார்த்தபுதலும் முதலிய பாதகங்களைச் செய்தல். * இதனுற் செய்ந்நன்றிகோறலின் கொடுமை கூறப்பட்டது. (கஅ)

கடவுள் வாழ்த்து அதி.—நடுவுநிலைமை.

அஃதாவது பகை தொதுமல் நண்பென்னும் மூன்றுபகுதியினும் அறத்தின் வழுவாது ஒப்ப நிற்கு நிலைமை. இது, நன்றிசெய்தார் மாட்டு அந்நன்றியினை நினைத்த வழிச் சிதையுமன்றே அவ்விடத்துஞ் சிதையலாகாதென்றற்கு, செய்ந்நன்றியறிதலின் பின்வைக்கப்பட்டது.

கஆக. தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற்
பாற்பட் டொழுகப் பெறின்.

இ - ள். தகுதி என ஒன்றே நன்று - நடுவுநிலைமையென்று சொல்லப்படும் ஓரறமுமே நன்று,—பகுதியான் பாற்பட்டு ஒழுகப்பெறின் - பகை தொதுமல் நண்பென்னும் பகுதிதோறும் தன்முறைமையை விடாதொழுகப்பெறின். எ - று.

தகுதியுடையதனைத் தகுதியென்றார். "ஊராளுநர் தேவகுலம்" என்பதுபோலப் பகுதியானென்புழி ஆனுருபு தோறுமென்பதன் பொருட்டாய்நின்றது. பெறினென்பது அவ்வொழுக்கத்தருமைதோன்ற நின்றது. இதனுன் நடுவுநிலைமையது சிறப்புக் கூறப்பட்டது. (க)

---

* ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கு—மாணிழை மகளிர் கருவினைத் தேர்க்குங்—குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்—ஒருவாய் மருங்கிற் கழுவாயுமுளவே—நிலம்புடை பெயர்வ தாயினுமொருவன்—செய்தி கொன்றார்க்குய்தியில்லென—றறம்பாடின்றே யாயிழை கணவ—புறநானூறு, உச. கழுவாய் - பிராயச்சித்தம்.

ககஉ. செப்ப முடையவ ரைக்கஞ் சிதைவின்றி
யெச்சத்திற் கேமாப் புடைத்து. உ.

இ - ள். செப்பம் உடையவன் அக்கம் - நடுவுநிலைமையையுடையவனது செல்வம்—சிதைவு இன்றி எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து - பிறர்செல்வம்போல் அழிவின்றி அவன் வழியினுள்ளார்க்கும் வலியாதலையுடைத்து. எ- று.

வீகாரத்தாற்றொக்க எச்சவும்மையான் இறக்குந் துணையும் அவன்றனக்கும் ஏமாப்புடைத்தென்பது பெற்றும். அறத்தோடுவருதலின், அன்னதாயிற்று. தானீ றந்துழி எஞ்சிநிற்பதாகலின், எச்சமென்றார். (உ)

ககஊ. நன்றே தரினு நடுவிகந்தா மாக்கத்தை
யன்றே யொழிய விடல். ஊ.

இ - ள். நன்றே தரினும் - தீங்கன்றி நன்மையே பயந்ததாயினும்,—நடுவுஇகந்து ஆம் ஆக்கத்தை அன்றே ஒழிய விடல் - நடுவு நிற்றலையொழிதலான் உண்டாகின்ற ஆக்கத்தை அப்பொழுதே யொழியவிடுக. எ - று.

நன்மை பயவாமையின், நன்றே தரினுமென்றார். இகத்தலானென்பது இகந்தெனத்திரிந்துநின்றது. இவையிரண்டுபாட்டானும் முறையே நடுவுநிலைமையான் வந்த செல்வம் நன்மை பயத்தலும், ஏனைச்செல்வம் தீமை பயத்தலுங் கூறப்பட்டன. (ஊ)

ககச. தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும். ச.

இ - ள். தக்கார் தகவிலர் என்பது - இவர் நடுவுநிலைமையுடையர் இவர் நடுவுநிலைமையிலரென்னும் விசேடம்—அவரவர் எச்சத்தால் காணப்படும்-அவரவருடைய நன்மக்களது உண்மையானும் இன்மையானும் அறியப்படும். எ - று.

தக்கார்க்கெச்சமுண்டாதலும் தகவிலார்க்கில்லாதலும் ஒருதலையாகலின்,இரு திறத்தாரையும் அறிதற்கு அவைருறியாயின. இதனால் தக்காரையுந் தகவிலாரையும் அறியுமாறு கூறப்பட்டது. (ச)

ககடு. கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி. டு.

இ - ள். கேடும் பெருக்கமும் இல் அல்ல - தீவினையாற்கேடும் நல்வினையாற் பெருக்கமும் யாவர்க்கும் முன்னே அமைந்து கிடந்தன;—நெஞ்சத்துக் கோடாமை சான்றோர்க்கு அணி - அவ்வாற்றையறிந்து அவை காரணமாக மனத்தின்கட்கோடாமையே அறிவானமைந்தார்க்கு அழகாவது. எ - று.

அவை காரணமாகக் கோடுதலாவது அவை இப்பொழுது வருவனவாகக் கருதிக் கேடுவாராமையைக்குறித்தும் பெருக்கம் வருதலைக்குறித்தும் ஒருதலைக்கணிற்றல். அவற்றிற்குக் காரணம் பழவினையே, கோடுதலன்று என உண்மையுணர்ந்து நடுவுநிற்றல் சால்பினை யழகுசெய்தலின், சான்றோர்க்கணியென்றார். (டு)

ககஎ. கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்ச
நடுவொரீஇ யல்ல செயின். எ.

இ - ள். தன் நெஞ்சம் நடுவு ஒரீஇ அல்ல செயின் - ஒருவன் தன்னெஞ்சம் நடுவு சிற்றலேயொழிந்து நடுவல்லவற்றைச் செய்ய நினைக்குமாயின்;—யான் கெடுவல் என்பது அறிக - அந்நினைவை யான் கெடக் கடவே னென்றுணரும் உற்பாதமாக அறிக. எ - று.

நினைத்தலும் செய்தலோடொக்குமாகலின், செயினென்றார். (சு)

கஎள. கெடுவாக வையா துலக நடுவாக
நன்றிக்கட் டங்கியான் றாழ்வு. எ.

இ - ள். நடுவாக நன்றிக்கண் தங்கியான் தாழ்வு - நடுவாகநின்று அறத்தின் கண்ணே தங்கினவனது வறுமையை—கெடுவாகவையாது உலகம் - வறுமையென்று கருதார் உயர்ந்தோர். எ - று.

கெடுவென்பது முதனிலைத்தொழிற்பெயர். செல்வமென்று கொள்ளுவரென்பது குறிப்பெச்சம். இவை மூன்றுபாட்டானும், முறையே கேடும்பெருக்கமும் கோடுதலான் வாராவென்பதூஉம், கோடுதல் கேட்டிற்கேதுவாமென்பதூஉம், கோடாதவன் றாழ்வு கேடன்றென்பதூஉம், கூறப்பட்டன. (எ)

கஎஅ. சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி. அ.

இ - ள். சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் - முன்னேதான் சமனுகநின்று பின் தன் கண் வைத்த பாரத்தை வரையறக்குந் துலாம்போல—அமைந்து ஒருபால் கோடாமை சான்றோர்க்கு அணி - இலக்கணங்களானமைந்து ஒருபக்கத்துக் கோடாமை சான்றோர்க்கு அழகாம். எ - று.

உவமையடையாகிய சமன்செய்தலும் சீர்தூக்கலும் பொருட்கண்ணும், பொருளடையாகிய அமைதலும் ஒருபாற்கோடாமையும் உவமைக்கண்ணும், கூட்டி சான்றோர் சீர்தூக்கலாவது தொடைவிடை * களாற் கேட்டவற்றை ஊழான் † உள்ளவாறுணர்தலாகவும், ஒருபாற்கோடாமையாவது அவ்வுள்ளவாற்றை மறையாது பகை நொதுமல் நட்பென்னும் மூன்றுதிறத்தார்க்கும் ஒப்பக்கூறுதலாகவும். உரைக்க இலக்கணங்களானமைதல் இருவழியும் ஏற்பனகொள்க. (அ)

கஎசு. சொற்கோட்ட மில்லது செப்ப மொருதலையா
வுட்கோட்ட மின்மை பெறின்.

இ - ள். செப்பம் சொற்கோட்டம் இல்லது - நடுவுநிலைமையாவது சொல்லின் கட் கோடுதலில்லாததாம்;—உட்கோட்டம்இன்மை ஒருதலையாப் பெறின் - அஃதென்னதாவது மனத்தின்கட்கோட்டமின்மையைத் திண்ணிதாகப் பெறின். எ - று.

சொல் ஊழான் அறுத்துச் சொல்லுஞ்சொல். காரணம்பற்றி ஒருபாற்கோடாத மனத்தோடு கூடுமாயின், அறங்கிடந்தவாறு சொல்லுதல் நடுவுநிலைமையாமெனவே, அதனோடு கூடாதாயின் அவ்வாறு சொல்லுதல் நடுவுநிலைமையன்றென்பது பெறப்பட்டது. (கூ)

---

* தொடை - விஞ. † ஊழ் -முறைமை. "தொடைவிடை பூழாத் தொடைவிடை தன்னி"—வெண்பாமாலை, வாகைப்படலம், அவையடக்கல், கஎ.

கஉ0. வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின். க0.

இ - ள். பிறவுந் தமபோல் பேணிச் செயின் - பிறர்பொருளையுந் தம்பொருள் போலப் பேணிச் செய்யின்,—வாணிகம் செய்வார்க்கு வாணிகம் - வாணிகஞ்செய் வார்க்கு நன்ருய வாணிகமாம். எ - று.

பிறவுந்தமபோற்செய்தலாவது கொள்வது மிகையுங் கொடுப்பது குறையுமாகா மல் ஒப்பநாடிச் செய்தல். இப்பாட்டு மூன்றனுள், முன்னையவிரண்டும் அவையத் தாரை நோக்கின, ஈறுயது வாணிகரை நோக்கிற்று, அவ்விருதிறத்தார்க்கும் இவ் வறம் வேறுகச் சிறந்தமையின். (க0)

கஈம் அதி.—அடக்கமுடைமை.

அஃதாவது மெய், மொழி, மனங்கள் தீநெறிக்கட்செல்லாது அடங்குத லுடையனுதல். அஃது ஏதிலார்குற்றம்போற் றன்குற்றமுங்காணும் நடுவுநிலைமை யுடையாற்காதலின், இது நடுவுநிலைமையின்பின் வைக்கப்பட்டது.

கஉக. அடக்க மமரருள் உய்க்கும் மடங்காமை
யாரிருள் உய்த்து விடும். க.

இ - ள். அடக்கம் அமரருள் உய்க்கும் - ஒருவனை அடக்கமாகியவறம் பின்பே வருலகத்துய்க்கும்,—அடங்காமை ஆர் இருள உய்த்துவிடும் - அடங்காமையாகிய பாவம் தங்குதற்கரிய இருள்ன்கட்செலுத்தும். எ- று.

இருளென்பது ஓர் நரகவிசேடம். "எல்லாம் - பொருளிற் பிறந்துவிடும்" * என் ருற்போல உய்த்துவிடுமென்பது ஒருசொல்லாய் நின்றது. (க)

கஉஉ. காக்க பொருளா வடகுகதை யாக்க
மதனினுங்க கல்லை யுயிர்க்கு. உ.

இ - ள். உயிர்க்கு அதனின் ஊங்கு ஆக்கம் இல்லை - உயிர்கட்கு அடக்கத்தின் மிக்க செல்வமில்லை,—அடக்கதைப் பொருளாக் காக்க-ஆகலான் அவ்வடக்கத்தை உறுதிப்பொருளாகக்கொண்டு அழியாமற்காக்க. எ - று.

உயிரென்பது சாதியொருமை. அஃது ஈண்டு மக்களுயிர்மேனின்றது, அறிந் தடங்கப்பயன்கொள்வது அதுபவ்வையாகலின். (உ)

கஉங. செறிவறிந்து சீர்மை பயக்கு மறிவறிந்
தாற்றி னடங்கப் பெறின். ங.

இ - ள். அறிவு அறிந்து ஆற்றின் அடங்கப்பெறின் - அடங்குதலே நமக்கு அறி வாவதென்றறிந்து நெறியானே ஒருவன் அடங்கப்பெறின்,—செறிவு அறிந்து சீர்மை பயக்கும் - அவ்வடக்கம் நல்லோரானறியப்பட்டு அவனுக்கு விழுப்பத்தைக் கொடுக் கும். எ - று.

---

* கல்லிற் பிறக்குங் கதிர்மணி காதலி—சொல்லிற் பிறக்கு மூயர்மதி - மெல்ல—வருளிற் பிறக்கு மறநெறி யெல்லாம்—பொருளிற் பிறந்து விடும்—நான்மணிக்கடிகை, எ.

இல்வாழ்வானுக்கு அடங்குநெறியாவது மெய்ம்முதன் மூன்றும் தன்வயத்தவாதல்.

கஉச. நிலையற் றிரியா தடங்கியான் றோற்ற
மலையினு மாணப பெரிது. ச.

இ - ள். நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம் - இல்வாழ்க்கையாகிய தன் னெறியின் வேறுபடாது நின்று அடங்கினவனது உயர்ச்சி—மலையினும் மாணப் பெரிது - மலையினுயர்ச்சியினும் மிகப்பெரிது. எ - று.

திரியாதடங்குதல் பொறிகளாற் புலன்களை நுகராநின்றே அடங்குதல். மலை ஆகுபெயர். (ச)

கஉடு. எல்லார்க்கு நன்றும் பணிதல லவருள்ளுஞ்
செல்வாக்கச் செலவந் தகைத்து. டு.

இ - ள். பணிதல் எல்லார்க்கும் நன்றும் - பெருமிதமின்றியடங்குதல் எல்லார்க் கும் ஒப்ப நன்மையெனினும்,—அவருள்ளுமச்செல்வாக்கச்செல்வந்தகைத்து-அவ்வெல் லாருள்ளுஞ் செல்வமுடையாராகச்ச மேலுமொரு செலவமாஞ்சிறப்பினையுடைத்து.எ-று.

பெருமிதத்தினைச்செய்யுங் கல்வியுங் குடிப்பிறப்புமுடையார் அஃதின்றி அவை தம்மாணையடங்கியவழி அவையடக்கஞ் சிறந்து காட்டாதாகலின், செல்வர்க்கே செல் வந்தகைதலதன்றோ. செல்வத்தகைத்தலதனது மேலிந்துநின்றது. பொதுவென் பாரையுமுடம்பட்டுச் சிறப்பதால கூறியவாறு. இவையைந்து பாட்டானும் பொது வகையான் அடக்கத்தது சிறப்புக் கூறப்பட்டது. (டு)

கஉசு. ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி
மனமூமையு மேமமாப் புடைத்து. சு.

இ - ள். ஆமைபோல் ஒருமையுள் ஐந்து அடக்கல் ஆற்றின் - ஆமைபோல ஒரு வன் ஒருபிறபபின்கண் ஐமபொறிகளையுமடகக வல்லனெயின்,—எழுமையும் ஏமாப்பு உடைத்து-அவ்வன்மை அவனுகுஎழுபிறப்பின்கணனும்அழிதலிலயுடைத்து.எ-று.

ஆமை ஐந்துறுப்பினையும் ஒடாபுகுதாமல் அடக்குமாறுபோல இவனும் ஐம்பொறி களையும பாவமபுகுதாமலடகக்வேணுமெனபார, ஆமைபோலென்றார். ஒருமைக்கட் செய்தவினையனபயன் எழுமையுமெதாடருமெனபது இதனுனறிக. இதனுன் மெய் யடக்கங கூறப்பட்டது. (சு)

கஉள. யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. எ.

இ - ள். யா காவாராயினும் நா காக்க - தம்மாற் காக்கப்படுவனவெல்லாவற்றை யும் காக்கமாட்டாராயினும் நாவென்றுனையுங்காக்க;—காவாக்கால் சொல்லிழுக்குப் பட்டுச் சோகாப்பர் - அதனைக் காவாராயிற் சொறகுற்றத்தின்கட்பட்டுத் தாமே துன்புறுவர். எ - று.

யாவென்பது அஃறிணைப்பன்மைவினுப்பெயர். அஃது ஈண்டு எஞ்சாமையுணர நின்றது. முற்றுமமை வகாரத்தாற்பிறக்கது. சொற்குற்றம் சொல்லின்கட்டோன்றுங் குற்றம். அல்லாப்பர் செம்மாப்பர் என்பனபோலச் சோகாப்பரென்பது ஒருசொல். ()

கஉஅ. ஒன்றனுக் கீச்சொற் பொருட் பயனுண்டாயி
னன்றுகா தாகி விடும். அ.

இ - ள். தீச்சொற்பொருட்பயன் ஒன்றுனும் உண்டாயின் - தீயவாகிய சொற்களின் பொருள்களாற் பிறர்க்கு வருந்துன்பமொன்றுயினும் ஒருவன்பக்க லுண்டாவதாயின்,—நன்று ஆகாதாகிவிடும் - அவனுக்குப் பிறவறங்களானுண்டான நன்மை தீதாய்விடும். எ - று.

தீயசொல்லாவன தீங்குபயக்கும்பொய், குறளை, கடுஞ்சொல்லென்பன. ஒருவன் நல்லவாகச்சொல்லுஞ் சொற்களின்கண்ணே ஒன்றுயினுந் தீச்சொற்படும் பொருளினது பயன் பிறர்க்குண்டாவதாயினென்றுரைப்பாருமுளர். (அ)

கஉஈ. தீயினுற் சுட்டபு ணுள்ளாறு மாறுதே
நாவினுற் சுட்ட வடு. ஈ.

இ - ள். தீயினுல் சுட்ட புண் உள் ஆறும் - ஒருவனேயொருவன் தீயினுற்சுட்ட புண் மெய்க்கட்கிடப்பினும் மனத்தின்கண் அப்பொழுதேயாறும்,—நாவினுல் சுட்ட வடு ஆறுது - அவ்வாறன்றி வெவ்வுரையுடைய நாவினுற் சுட்ட வடு அதன்கண்ணும் எஞ்ஞான்றும் ஆறுது. எ - று.

ஆறிப்போதலால் தீயினுற்சுட்டதனைப் புண்ணென்றும், ஆறுதுகிடத்தலால் நாவினுற்சுட்டதனை வடுவென றுங்கூறினர். தீயும் வெவ்வுரையுஞ் சுடுதற்றொழிலான் ஒக்குமாயினும், ஆறுமையாற்றீயினும் வெவ்வுரை கொடிதென்பது போதரலின், இது குறிபபான வந்த வேற்றுமையலங்காரம். இவைமூன்றுபாட்டானும் மொழியடக்கங் கூறப்பட்டது. (கூ)

கஙஐ. கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி
யறமபார்க்கு மாற்றி னுழைந்து. கஐ.

இ - ள். கதம் காத்துக் கற்று அடங்கல் ஆற்றுவான் செவ்வி - மனத்தின்கண் வெகுளிதோன்றுமாற் காத்துக் கல்வியுடையனுயடங்குதலேவல்லவனதுசெவ்வியை—அறம பாராகும் ஆறறின துழைந்து - அறகடவுள் பாராகிற்கும் அவனேயடையும் நெறியின்கட்செனறு. எ - று.

அடங்குதல் மனம் புறத்துப் பரவாது அறத்தின்கண்ணேநிற்றல். செவ்வி தன் குறைகூறுதற்கேற்ற மன மமாழி முகங்கள் இனியனுங் காலம். இப்பெற்றியானே அறந் தானே சென்றடையுமென்பதாம். இதனுன் மனவடக்கங் கூறப்பட்டது. (கஐ)

கசு ம் அதி.—ஒழுக்கமுடைமை.

அஃதாவது தத்தம் வருணத்திற்கும் நிலைக்குமோதப்பட்ட ஒழுக்கத்தினேயுடையராதல். இது, மெய்ம்முதலிய அடங்கினர்க்கல்லது முடியாதாகலின், **அடக்க முடைமையின்பின் வைக்கப்பட்டது.**

கஙக. ஒழுக்கம் விழுப்பந் தரலா னெழுக்க
மும்யிரினு மோம்பப் படும். க.

இ - ள். ஒழுக்கம் விழுப்பம் தரலான் - ஒழுக்கம் எல்லார்க்குஞ் சிறப்பினைத் தருதலான்,—ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் - அவ்வொழுக்கம் உயிரினும் பாதுகாக்கப்படும். எ - று.

உயர்ந்தார்க்கும் இழிந்தார்க்கும் ஒப்ப விழுப்பந்தருதலின், பொதுப்படக்கூறினார். கூட்டி வருவிக்கப்பட்டது. அதனால் அங்ஙனம் விழுப்பந்தருவதாயது ஒழுக்கமென்பது பெற்றாம். உயிர் எல்லாப்பொருளினுஞ் சிறந்ததாயினும் ஒழுக்கம்போல விழுப்பந்தாராமையின், உயிரினுமோம்பப்படுமென்றார். (க)

உடம்பு பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித்
தேரினு மஃதே துணை. உ.

இ - ள். ஒழுக்கம் ஓம்பிப் பரிந்து காக்க - ஒழுக்கத்தினை ஒன்றினும் அழிவுபடாமற்பேணி வருந்தியுங்காக்க;—தெரிந்து ஓம்பித்தேரினும் துணை அஃதே - அறங்கள் பலவற்றையுமாராய்ந்து இவற்றுள் இருமைக்குந்துணையாவது யாதென்று மனத்தையொருக்கித் தேர்ந்தாலும் துணையாய் முடிவது அவ்வொழுக்கமேயாகலான். எ - று.

பரிந்தென்னும்மை விகாரத்தாற்றொக்கது. இவையிரண்டொட்டானும்ஒழுக்கத்தது சிறப்புக் கூறப்பட்டது. (உ)

ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும். ஊ.

இ - ள். ஒழுக்கமுடைமை குடிமை - எல்லார்க்குந் தத்தம் வருணத்திற்கேற்ற ஒழுக்கமுடைமை குலனுடைமையாம்,—இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும் - அவ்வொழுக்கத்திற்றவறுதல் அவ்வருணத்திற் முழ்ந்த வருணமாய்விடும். எ - று.

பிறந்த வருணத்துள் இழிந்தகுலத்தாராயினும் ஒழுக்கமுடையராக உயர்குலத்தாராவராகலின் குடிமையாமென்றும், உயர்ந்தவருணத்துப் பிறந்தாராயினும் ஒழுக்கத்திற்றவறத் தாழ்ந்த வருணத்தாராவராகலின இழிந்த பிறப்பாய்விடுமென்றுங்கூறினார். உள்ளுழிப்பயிற் குணத்தினும் இவ்வுழிப்பயிற்குறறம் பெரிதென்றவாறு. பயன் இடையீடின்றி யெய்துதலின், அவ்வரைவு பறறி அவ்வேதுவாகிய வினைகளே பயனுகவோதப்பட்டன. (ஊ)

மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும். எ.

இ - ள். ஓத்து மறப்பினும் கொளலாகும் - கற்ற வேதத்தினை மறந்தானுயினும் அவ்வருணங்கெடாமையிற் பின்னும் அஃதோதிகொளலாம்;—பார்ப்பான் பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும் - அந்தணனது உயர்ந்தவருணம் தன்னொழுக்கங்குன்றக் கெடும். எ - று.

மறந்தவழி இழிகுலத்தனுமாகலின், மறக்கலாகாதென்னுங் கருத்தான், மறப்பினுமென்றார். சிறப்புடைவருணத்திற்கு மொழிந்தமையின், இஃது ஏனைய வருணங்கட்கும் கொள்ளப்படும். (எ)

அழுக்கா றுடையான்க ணாக்கம்போன் றில்லை
யொழுக்க மிலான்க ணுயர்வு. ஏ.

இ - ள். அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்று - அழுக்காறுடையான் எய்தும் ஆக்கமில்லாதாற்போல—ஒழுக்கம் இலான்கண் உயர்வுஇல்லை - ஒழுக்கமில்லாவன்மாட்டும் உயர்ச்சியில்லை. எ - று.

உவமையான் ஒழுக்கமில்லாதவன் சுற்றத்திற்கும் உயர்ச்சியில்லையென்பது பெற்றும்; என்னை? "கொடுப்பதழுக்கறுப்பான் சுற்றம்" மும் நல்கூர்தலின், உயர்வு உயர்குலமாதல். (இ)

கஉக. ஒழுக்கத்தி னெல்கா ருரவோ ரிழுக்கத்தி
னேதம் படுபாக் கறிந்து. கூ.

இ - ள். ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் - செய்தற்கருமை நோக்கி ஒழுக்கத்திற் சுருங்கார் மனவலியுடையார்,—இழுக்கத்தின் ஏதம் படுபாக்கு அறிந்து - அவ்விழுக்கத்தால் தமக்கிழிகுலமாகிய குற்றமுண்டாமாற்றை அறிந்து. எ - று.

ஒழுக்கத்திற்சுருக்கம் அதனை யுடையார்மேலேற்றப்பட்டது. கொண்ட விரதம் விடாமைபற்றி, உரவோரென்றார். (கூ)

கஉஎ. ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தி
னெய்துவ ரெய்தாப் பழி. எ.

இ -ள். ஒழுக்கத்தின் மேன்மை எய்துவர் - எல்லாரும் ஒழுக்கத்தானே மேம்பாட்டையெய்துவர்,—இழுக்கத்தின் எய்தாப் பழி எய்துவர் - அதனினின்றிழுக்குதலானே தாம் எய்துதற்குரித்தல்லாத பழியையெய்துவர். எ - று.

பகைபற்றி அடாப்பழி கூறியவழி அதனையும் இழுக்கம்பற்றி உலகம் அடுக்குமென்று கொள்ளுமாகலின், எய்தாப்பழி யெய்துவரென்றார். இவையைந்துபாட்டானும் ஒழுக்கம் உள்வழிப்படுங்குணமும் இல்வழிப்படுங் குற்றமுங் கூறப்பட்டன. (எ)

கஉஅ. நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க
மென்று மிடும்பை தரும். அ.

இ - ள். நல்லொழுக்கம் நன்றிக்கு வித்தாகும் - ஒருவனுக்கு நல்லொழுக்கம் அறத்திற்குக் காரணமாய் இருமையினும் இன்பம் பயக்கும்;— தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும் - தீயவொழுக்கம் பாவத்திற்குக் காரணமாய் இருமையினுந் துன்பம் பயக்கும். எ - று.

நன்றிக்கு வித்தாகுமென்றதனால் தீயொழுக்கம் பாவத்திற்குக் காரணமாதலும் இடும்பைதருமென்றதனால் நல்லொழுக்கம் இன்பந்தருதலும் பெற்றும், ஒன்றுமின்மேற எனையதை முடிக்குமாகலின். இதனைப் பின்னிலவு கூறப்பட்டது. (அ)

கஉக. ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.* கூ.

இ - ள். வழுக்கியும் தீய வாயால் சொலல் - மறந்தும் தீயசொற்களைத் தம் வாயாற் சொல்லுந் தொழில்கள்—ஒழுக்கமுடையவர்க்கு ஒல்லா - ஒழுக்கமுடைய வர்க்கு முடியா. எ - று.

தீயசொற்களாவன பிறர்க்குத் தீங்கு பயக்கும் பொய்ம்மூதலியனவும், வருணதிற்கு உரியவல்லனவுமாம். அவற்றது பன்மையாற் சொல்லுதற்றொழிற் பலவாயின. சொலல் சாதியொருமை. சொலலெனவே அமைந்திருக்க வாயாலென வேண்டாதது

* திருக்குறள், கஉக.

கூறினர், கல்லசொற்கள் பயின்றதெனத் தாம் வேண்டியதன்சிறப்பு முடித்தற்கு. இதனை வடநூலார் தாற்பரியமென்ப. (கூ)

கசo. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார். கo.

இ - ள். உலகத்தோடு ஒட்ட ஒழுகல் கல்லார்-உலகத்தோடு பொருந்த வொழுகு தலைக் கல்லாதார்,—பல கற்றும் அறிவிலாதார் - பலநூல்களையுங் கற்றராயினும், அறிவிலாதார். எ - று.

உலகத்தோடு பொருந்தவொழுகுதலாவது உயர்ந்தோர் பலரும் ஒழுகியவாற்றான் ஒழுகுதல். அதனால் சொல்லியவற்றுள் இக்காலத்திற்கு ஏலாதனவொழிந்து சொல்லாதனவற்றுள் ஏற்பனகொண்டு வருதலான் அவையுமடங்க உலகத்தோடொட்டவென்றும், கல்விக்குப் பயன் அறிவும் அறிவிற்குப் பயன் ஒழுக்கமுமாகலின் அவ்வொழுகு தலைக் கல்லாதார் பலகற்றுமறிவிலாதாரென்றுங் கூறினர். ஒழுகுதலைக் கற்றலாவது அடிப்படுதல். இவையிரண்டுபாட்டானும் சொல்லானுஞ் செயலானும் வருமொழுக் கங்களெல்லாம் ஒருவாற்றாற் றொகுத்துக் கூறப்பட்டன. (கo)

கரு ம் அதி.—பிறனில்விழையாமை.

அஃதாவது காம மயக்கத்தாற் பிறனுடைய இல்லாளை விரும்பாமை. இஃது, ஒழுக்க முடையார் மாட்டே நிகழ்வதாகலின், ஒழுக்கமுடைமையின்பின் வைக்கப் பட்டது.

கசக. பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்
தறம்பொருள் கண்டார்க ணில். க.

இ - ள். பிறன் பொருளாட் பெட்டு ஒழுகும் பேதைமை - பிறனுக்குப் பொருளாந் தன்மையையுடையாளைக் காதலித்தொழுகுகின்ற அறியாமை—ஞாலத்து அறம் பொருள் கண்டார்கண் இல்-ஞாலத்தின்கண் அறநூலையும் பொருணூலையும் ஆராய்ந் தறிந்தார்மாட்டில்லை. எ - று.

பிறன்பொருள் பிறனுடைமை. அறம் பொருளென்பன ஆகுபெயர். செவ்வெண் ணின்றொகை தொக்குநின்றது. இன்பமொன்றையே நோக்கும் இன்பநூலுடையார் இத்தீயொழுக்கத்தையும் பரகீயமென்று!* கூறுவராகலின், அறம் பொருள் கண்டார் கணில்லென்றார்; எனவே, அப்பேதைமையுடையார்மாட்டே அறமும் பொருளும் இல்லையென்பது பெறப்பட்டது. (க)

கசஉ. அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையா ரில். உ.

இ - ள். அறன்கடை நின்றாருள் எல்லாம் - காமங் காரணமாகப் பாவத்தின்கண் நின்றாரெல்லாருள்ளும்—பிறன்கடை நின்றாரின் பேதையார் இல் - பிறனில்லாளைக் காதலித்து அவன் வாயிற்கட்சென்று நின்றார்போலப் பேதையாரில்லை. எ - று.

அறத்தினீக்கப்பட்டமையின், அறன்கடையென்றார். அறன்கடை நின்ற பெண் வழிச் செல்வாரும் வரைவின்மகளிரோடும் இழிகுலமகளிரோடுங் கூடி இன்பநுகர்

* பரகீயம் - பிறர்க்குரியது.

வாரும்போல அறமும் பொருளும் இழத்தலேயன்றிப், பிறன்கடை நின்ரூர் அச்சத் தால் தாங்கருதிய இன்பமும் இழக்கின்ரூராகலின், பேதையாரில்லென்ரூர், எனவே, இன்பமுமில்லையென்பது பெறப்பட்டது. (உ)

கசஉ. விளித்தாரின் வேறல்லர் மன்ற தெளித்தாரிற்
றீமை புரிந்தொழுகு வார். ஈ.

இ - ள். தெளித்தார் இல் தீமை புரிந்து ஒழுகுவார் - தம்மை ஐயுறாதாரில்லாள் கண்ணே பாவஞ்செய்தலேயிரும்பியொழுகுவார்,—விளித்தாரின் வேறு அல்லர்மன்ற- உயிருடையவரேனும், இறந்தாரேயாவர் எ - று.

அறம் பொருளின்பங்களாகிய பயன் உயிரெய்தாமையின்,விளித்தாரின்வேறல்ல ரென்றும்; அவர் தீமை புரிந்தொழுகுவது இல்லுடையவரது தெளிவுபற்றியாகலின் தெளித்தாரில்லென்றுங் கூறினர். (ஈ)

கசச. எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையுந்
தேரான் பிறனில் புகல். ச.

இ - ள். எனைத்துணையராயினும் என்னும்-எத்துணைப்பெருமையுடையராயினும் ஒருவர்க்கு யாதாய் முடியும்—தினைத்துணையும் தேரான் பிறன் இல் புகல் - காமமயக் கத்தால் தினையளவுந் தம்பிழையையோராது பிறனுடைய இல்லின்கட்புகுதல்! எ-று.

இந்திரன்போல எல்லாப்பெருமையுமிழந்து சிறுமையெய்தல் நோக்கி, என்னா மென்ரூர். "என்னீ ரறியாதீர் போல வினைகூறி—னின்னீர வல்ல நெடுந்தகாய்*" என்புழிப்போல உயர்த்தற்கட் பன்மை யொருமை மயங்கிற்று. தேரான்பிறனென்ப தனைத் தம்மை ஐயுறுத பிறனென்றுரைப்பாருமுளர். (ச)

கசடு. எளிதென வில்லிறப்பா னெய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி. டு.

இ - ள். எளிது என இல் இறப்பான்-எய்துதலெளிதென்று கருதிப் பின்விளவு கருதாது பிறனில்லின்கணிறப்பான்—விளியாது எஞ்ஞான்றும் நிற்கும் பழி எய்தும்- மாய்தலின்றி எஞ்ஞான்றும் நிலைநிற்கும் குடிப்பழியினையெய்தும். எ- று.

இல்லின்கணிறத்தல் இல்லாள்கண் நெறிகடந்து சேறல். (டு)

கசசு. பகைபாவ மச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்லிறப்பான் கண். சு.

இ - ள். இல் இறப்பான்கண் - பிறனில்லாள்கண் நெறிகடந்து செல்வானிட த்து—பகை பாவம் அச்சம் பழி என நான்கும் இகவாவாம் - பகையும் பாவமும் அச்சமும் குடிப்பழியுமென்னும் இந்நான்கு குற்றமும் ஒருகாலும் நீங்காவாம். எ - று.

எனவே, இருமையுமிழத்தல் பெற்ரும். இவையாறுபாட்டானும் பிறனில்விழை வான்கட் குற்றங் கூறப்பட்டது. (சு)

கசஎ. அறனியலா னில்வாழ்வா னென்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன். எ.

---

* கலித்தொகை, பாலைக்கலி, ூ-ம் பாட்டு.

இ - ள். அறனியலான் இல்வாழ்வான் என்பான் - அறனுகிய இயல்போடுகூடி இல்வாழ்வானென்று சொல்லப்படுவான்—பிறன் இயலாள் பெண்மை நயவாதவன்-பிறனுக்குரிமைபூண்டு அவனுடைய இயல்பின்கண்ணே நிற்பாளது பெண்டன்மையை விரும்பாதவன். எ - று.

ஆனுருபு ஈண்டு உடனிகழ்ச்சிக்கண்வந்தது.இல்லறஞ்செய்வானெனப்படுவான் அவனே யென்பதாம். (எ)

கசஅ. பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
அறனொன்றே வான்றவொழுக்கு. அ.

இ - ள். பிறன் மனை நோக்காத பேர் ஆண்மை - பிறன்மனையாளை உட்கொள்ளாத பெரிய ஆண்டகைமை—சான்றோர்க்கு அறன் ஒன்றே ஆன்ற ஒழுக்கு - சால்புடையார்க்கு அறனுமாம் நிரம்பியவொழுக்கமுமாம். எ - று.

புறப்பகைகளை அடக்கும் ஆண்மையுடையார்க்கும் உட்பகையாகிய காமம் அடக்குதற்கருமையின், அதனையடக்கிய ஆண்மையைப்பேராண்மையென்றார். ஒன்றே வென்பது எண்ணிடைச்சொல். செய்தற்காரிய அறனும் ஒழுக்கமும் இதனைச் செய்யாமையே பயக்குமென்பதாம். (அ)

கசக. நலக்குரியார் யாரெனி னுமநீர் வைப்பிற்
பிறற்குரியா டோடோயா தார். கூ.

இ - ள். நாம நீர் வைப்பின் - அச்சந் தருங் கடலாற் சூழப்பட்ட உலகத்து—நலக்குரியார் யார் எனின் - எல்லாநன்மைகளும் எய்துதற்குரியார் யாவரெனின்:—பிறற்கு உரியாள் தோள் தோயாதார் - பிறனொருவனுக்கு உரிமையாகியாளுடைய தோளைச்சேராதார். எ - று.

அகலம், ஆழம், பொருளுடைமை முதலியவற்றான் அளவிடப்படாமையின், நாம நீரென்றார். நலத்திற்கென்பது நலக்கெனக் குறைந்து நின்றது. உரிச்சொல் ஈறு திரிந்து நின்றது *. இருமையினும் நன்மையெய்துவரென்பதாம். (கூ)

கஙo. அறன்வரையா னல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று. கo.

இ - ள். அறன் வரையான் அல்லசெயினும் - ஒருவன் அறத்தைத் தனக்குரித்தாகச் செய்யாத பாவங்களைச் செய்யுமாயினும்,—பிறன்வரையாள் பெண்மை நயவாமை நன்று - அவனுக்குப் பிறனெல்லைக்கணிற்பாளது பெண்மையை விரும்பாமையுண்டாயின், அது நன்று. எ - று.

இக்குணமே மேற்பட்டுத் தோன்றுமென்பதாம். இவைதான்குபாட்டானும் பிறரில் விழையாதான்கட் குணங் கூறப்பட்டது. (கo)

கசூம் அதி.—பொறையுடைமை.

அஃதாவது காரணம் பற்றியாதல் மடமையானுதல் ஒருவன் தமக்கு மிகை செய்தவழித் தாமும் அதனை அவன்கட்செய்யாது பொறுத்தலையுடையராதல். நெறியி

* நாம என்றது நாம எனத் திரிந்து நின்றது.

நீக்கிய செய்தாரையும் பொறுக்கவேண்டுமென்றற்கு, இது பிறனில்விழையாமை யின்பின் வைக்கப்பட்டது.

கருக. அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்த றலை. க.

இ - ள். அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல - தன்னையகழ்வாரை வீழாமற் றாங்கு நிலம்போல—தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் தலை - தம்மை அவமதிப் பாரைப் பொறுத்தல் தலையாயவறம். எ - று.

இகழ்தல் மிகையாயின செய்தலும், சொல்லுதலும். (க)

கருஉ. பொறுத்த லிறப்பினை யென்று மதனை
மறத்த லதனினு நன்று. உ.

இ - ள். என்றும் இறப்பினைப் பொறுத்தல் - பொறை நன்றுகலால், தாமொறுத் தற்கு இயன்ற காலத்தும் பிறர் செய்த மிகையைப் பொறுக்க;—அதனை மறத்தல் அதனினும் நன்று - அதனை உட்கொள்ளாது அப்பொழுதே மறத்தல் பெறின், அப் பொறையினும் நன்று. எ - று.

மிகையென்றது மேற்சொல்லிய இரண்டனையும். பொறுக்குங்காலும் உட்கொள் ளப்படுதலின், மறத்தலை அதனினுநன்றென்றார். (உ)

கருங. இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை. ங.

இ - ள். இன்மையுள் இன்மை விருந்து ஒரால்-ஒருவனுக்கு வறுமையுள்வைத்து வறுமையாவது விருந்தினரையேற்றுக்கொள்ளாது நிகருதல்;—வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை - அதுபோல வன்மையுள்வைத்து வன்மையாவது அறிவின்மை யான் மிகைசெய்தாரைப் பொறுத்தல். எ - று.

இஃதெடுத்துக்காட்டுவமை. அறனல்லாத விருந்தொரால் பொருளுடைமையா காதவாறுபோல, மடவார்ப்பொறையும மென்மையாகாதே வன்மையாமென்பது கருத்து. (ங)

கருச. நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை
போறறி யொழுகப் படும். ச.

இ - ள். நிறையுடைமை நீங்காமை வேண்டின் - ஒருவன் சால்புடைமை தன்க ணின்று நீங்காமை வேண்டுவனாயின்,—பொறையுடைமை போற்றி ஒழுகப்படும் - அவனும் பொறையுடைமை தன்கண் அழியாமற் காத்தொழுகப்படும். எ - று.

பொறையுடையாற்கல்லது சால்பில்லையென்பதாயிற்று. இவை நான்குபாட்டா லும் பொறையுடைமையது சிறப்புக் கூறப்பட்டது. (ச)

கருடு. ஒறுத்தாரை யொன்றுக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து. ஞ.

இ - ன். ஒறுத்தாரை ஒன்ரூக வையார் - பிறன் தமக்குத் தீங்குசெய்தவழிப் பொறுது அவனேயொறுத்தாரை அறிவுடையார் ஒருபொருளாக மனத்துக்கொள் ளார்,—பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து வைப்பர் - அதனைப் பொறுத்தா ரைப் பொன்போற் பொதிந்து கொள்வர். எ - று.

ஒறுத்தவர் தாமும் அத்தீங்கு செய்தவனேடொத்தலின், ஒன்ரூகவையாரென் ரூர். பொதிந்துவைத்தல் சால்புடைமைபற்றி இடைவிடாது நினைத்தல். (இ)

கருசு. ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ். கூ.

இ - ள். ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் - தமக்குத் தீங்கு செய்தவனே யொறுத் தார்க்கு உண்டாவது அவ்வொருநாளையின்பமே;—பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ் - அதனைப் பொறுத்தார்க்கு உலகமழியுமளவும் புகழுண்டாம். எ - று.

ஒரு நாளையின்பம் அந்நாளொன்றினும் கருதியது முடித்தேமெனத் தருக்கியிருக் கும் பொய்யின்பம். ஆதாரமாகிய உலகம் பொன்றப் புகழும் பொன்றுமாகலின், ஏற்புடையுலகென்னுஞ் சொல் வருவித்துரைக்கப்பட்டது. (கூ)

கருள. திறனல்ல தற்பிறர் செய்யினு நோதொந்
தறனல்ல செயயாமை நன்று. எ.

இ - ள். திறன் அல்ல தற் பிறர் செய்யினும் - செய்யத்தகாத கொடியவற்றைத் தன்கட்பிறர் செய்தாராயினும்,—நோ நொந்து அறன் அல்ல செய்யாமை நன்று - அவர்க்கு அதனால் வருந்துன்பத்திற்கு நொந்து தான் அறனல்லாத செயல்களைச் செய்யாதிருத்தல் ஒருவனுக்கு நன்று. எ - று.

உம்மை சிறப்பும்மை. துன்பத்திற்கு நோதலாவது "உம்மை—யெரிவாய் நிர யத்து வீழ்வர்கொல் *" என்றுபரிதல். (எ)

கருஅ. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்று விடல். அ.

இ - ள். மிகுதியான் மிக்கவை செய்தாரை - மனச்செருக்காற் றங்கட்டீயவற் றைச் செய்தாரை—தாம் தந்தகுதியான் வென்றுவிடல் - தாம் தம்முடைய பொறை யான் வென்றுவிடுக. எ - று.

தாமும் அவர்கட்டீயவற்றைச்செய்து தோலாது பொறையான் அவரின் மேம் பட்டு வெல்கவென்பதாம். இவை நான்குபாட்டானும் பிறர்செய்தன பொறுத்தல் சொல்லப்பட்டது. (அ)

கருக. துறந்தாரிற் றூய்மை யுடைய ரிறந்தார்வா
யின்னஞ்சொ னோற்கிற் பவர். கூ.

இ - ள். துறந்தாரின் தூய்மை உடைய்ர் - இல்வாழ்க்கைக்கணின்றேயும் துறந் தார்போலத் தூய்மையுடையார்—இறந்தார்வாய் இன்னுஞ்சொல் நோற்கிற்பவர் - நெறியைக் கடந்தார்வாய் இன்னுதசொல்லப் பொறுப்பவர். எ - று.

---

* தமமை யிகழ்ந்ததமை தாமபொறுப்ப தன்றம்மற்—றெமமை யிகழ்ந்த வினைப் பயத்தா - னும்மை—யெரிவாய் நிரயத்து வீழ்வர்கொ லென்னு—மரிவதூஉஞ் சானரூர் கடன்—நாலடி யார், துறவு.

தாய்மை மனமாசின்மை. வாயென வேண்டாது கூறினும், தீயசொற்கள் பயின்றதெனத் தாம்வேண்டியதனிழிபு முடித்தற்கு. (க)

கசுஂ. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லு
மின்னாச்சொ லேற்பாரிற் பின். க0.

இ - ள். உண்ணாது நோற்பார் பெரியர் - விரதங்களான் ஊணைத்தவிர்த்து உற்ற நோயைப் பொறுப்பார் எல்லாரினும் பெரியர்;—பிறர் சொல்லும் இன்னாச்சொல் நோற்பாரிற் பின் - அவர் பெரியராவது தம்மைப் பிறர்சொல்லும் இன்னாதசொல் லைப் பொறுப்பாரிற்பின். எ - று.

பிறர் அறிவிலாதார். கோலாமைக்கேதுவாகிய இருவகைப்பற்றையும் நின்றே நோற்றலின், இன்னாச்சொலேற்பாரிற் பின்னென்றார். இவையிரண்டுபோட்டானும் பிறர் மிகைக்கச்சொல்லியன பொறுத்தல் கூறப்பட்டது. (க0)

களம் அதி.—அழுக்காறுமை.

இதனுள் அழுக்காறென்பது ஒருசொல். அதற்குப் பொருள் * மேலேயுரைத்தாம். அச்சொற் பின்னழுக்காற்றைச் செய்யாமையென்னும் பொருள்பட எதிர்மறையாகாரமும் மகரவைகாரவிருதியும்பெற்று அழுக்காறுமையென நின்றது. இப்பொருமையும் பொறைக்கு மறுதலையாகலின், இதனை விலக்குதற்கு இது பொறையுடைமையின்பின் வைக்கப்பட்டது.

கசுக. ஒழுக்காறுக் கொள்க வொருவன்றன் னெஞ்சத்
தழுக்கா றிலாத வியல்பு. க.

இ - ள். ஒருவன் தன்னெஞ்சத்து அழுக்காறு இலாத இயல்பு - ஒருவன் தன் னெஞ்சத்தின்கண் அழுக்காறென்னுங் குற்றமில்லாத இயல்பினை—ஒழுக்காறுக் கொள்க - தனக்கோதிய ஒழுக்கநெறியாகக் கொள்க. எ - று.

இயல்பு அறிவோடுகூடிய தன்மை. அத்தன்மையும் நன்மைபயத்தலின், ஒழுக்க நெறிபோல உயிரினுமோம்புகவென்பதாம். (க)

கசுஉ. விழுப்பேற்றி னஃதொப்ப திலீயார் மாட்டு
மழுக்காற்றி னன்மை பெறின். உ.

இ - ள். யார்மாட்டும் அழுக்காற்றின் அன்மை பெறின் - யாவர்மாட்டும் அழுக்காற்றினின்று நீங்குதலை ஒருவன் பெறுமாயின்,—வீழுப்பேற்றின் அஃது ஒப்பது இல்லை - மற்றவன்பெறுஞ் சிரிய பேறுகளுள் அப்பேற்றினையொப்பதில்லை. எ - று.

அழுக்காறு பகைவர்மாட்டும் ஒழிதற்பாற்றென்பார், யார்மாட்டுமென்றார். அன்மை வேறுதல். இவையிரண்டுபோட்டானும் அழுக்காறின்மையது குணங் கூறப்பட்டது. (உ)

கசுஊ. அறனெக்கம் வேண்டாதா னென்பான் பிறனெக்கம்
பேணு தழுக்கறுப் பான். ஊ.

---

* திருக்குறள், ஊ.

இ - ன். அறன் ஆக்கம் வேண்டாதான் என்பான் - மறுமைக்கும் இம்மைக்கும் அறமுஞ் செல்வமுமாகிய உறுப்புக்களைத் தனக்கு வேண்டாதானென்று சொல்லப்படுவான்—பிறன் ஆக்கம் பேணுது அழுக்கறுப்பான்-பிறன் செல்வங்கண்டவழி அதற்கு உவவாது அழுக்காற்றைச் செய்வான். எ - று.

அழுக்கறுத்தலெனினும் அழுக்காறெனினுமொக்கும். அழுக்காறு செய்யின் தனக்கே ஏதமாமென்பதாம். (ங)

ககூச. அழுக்காற்றி னல்லவை செய்யா ரிழுக்காற்றி
னேதம் படுபாக் கறிந்து. ச.

இ - ள். அழுக்காற்றின் அல்லவை செய்யார் - அழுக்காறு ஏதுவாக அறனல்ல வற்றைச் செய்யார் அறிவுடையார்—இழுக்காற்றின் ஏதம் படுபாக்கு அறிந்து - அத்தீ நெறியால் தமக்கிருமையினுந் துன்பம் வருதலையறிந்து. எ - று.

அறனல்லவையாவன செல்வம் கல்வி முதலியனவுடையார்கட் டீங்குநினைத்த லும், சொல்லுதலும், செய்தலுமாம். (ச)

ககூரு. அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னார்
வழுக்கியுங் கேடீன் பது. ஞ.

இ - ள். ஒன்னார் வழுக்கியும் கேடீன்பது - அழுக்காறு பகைவரையொழித்துங் கேடு பயப்பதொன்றாகலின்,—அழுக்காறு உடையார்க்கு அது சாலும் - அவ்வழுக்கா றுடையார்க்குப் பகைவர் வேண்டா, கேடுபயத்தற்கு அதுதானேயமையும். எ - று.

அதுவேயென்னும் பிரிநிலையேகாரம் விகாரத்தாற்றொக்கது. (ஞ)

ககூக. கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடிப்பதூஉ
மூண்பதூஉ மின்றிக் கெடும். கூ.

இ - ள். கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் - ஒருவன் பிறர்க்குக் கொடுப்ப தன்கண் அழுக்காற்றைச் செய்வானது சுற்றம்—உடுப்பதும் உண்பதும் இன்றிக் கெடும் - உடுக்கப்படுவதும் உண்ணப்படுவது மின்றிக் கெடும். எ - று.

கொடுப்பதன்கணழுக்கறுத்தலாவது கொடுக்கப்படும் பொருள்களைப் பற்றிப் பொறுமைசெய்தல். சுற்றங்கெடுமெனவே, அவன் கேடு சொல்லாமையே பெறப்பட்டது. பிறர்பேறு பொறுமை தன்பேற்றையேயன்றித் தன்சுற்றத்தின் பேற்றையும் இழப்பிக்குமென்பதாம். (கூ)

ககஎ. அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவ
டவ்வினையைக் காட்டி விடும். எ.

இ - ன். அழுக்காறு உடையானை - பிறராக்கங்கண்டவழிப் பொறுமையுடை யானை—செய்யவள் அவ்வித்துத் தவ்வினையைக் காட்டிவிடும் - திருமகள் தானும் பொறுதி தன்றவ்வைக்குக் காட்டி நீங்கும். எ - று.

தவ்வை மூத்தவள். தவ்வையைக்காட்டியென்பது "அறிவுடையந்தண னவனைக் காட்டென்றாளே*" என்பதுபோல உருபு மயக்கம். மனத்தைக்கோடவித்து அழுக் காறுடையனாயினானென்றுரைப்பாருமுளர். (எ)

---

* கலித்தொகை, மருதம்.—எ.

கசுஅ. அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும். அ.

இ - ள். அழுக்காறு என ஒருபாவி-அழுக்காறென்றுசொல்லப்பட்ட ஒப்பில்லாத பாவி—திருச் செற்றுத் தீயுழி உய்த்துவிடும் - தன்னையுடையானை இம்மைக்கட்செல்வத்தைக்கெடுத்து, மறுமைக்கண் நரகத்திற் செலுத்திவிடும். எ - று.

பண்பிற்குப் பண்பியில்லையேனும், தன்னையாக்கினானை இருமையுங்கெடுத்தற் கொகுமபற்றி, அழுக்காற்றினைப் பாவியென்றார், கொடியானைப் பாவியென்னும் வழக்குண்மையின். இவையாறுபாட்டானும் அழுக்காறுடைமையது குற்றங் கூறப் பட்டது. (அ)

கசுகூ. அவ்வியங் நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வியான்
கேடு நினைக்கப் படும். கூ.

இ - ள். அவ்வீய நெஞ்சத்தான் ஆக்கமும் - கோட்டத்தினைப்பொருந்திய மனத்தையுடையவனதாக்கமும்,—செவ்வியான் கேடும் நினைக்கப்படும் - ஏனைச் செம்மை யுடையவனது கேடும் உளவாயின், அகல ஆராயப்படும். எ - று.

கோட்டம் ஈண்டழுக்காறு. உளவாயினென்பது எஞ்சிநின்றது. ஆக்கக்கேடுகள் கோட்டமுஞ் செம்மையும் ஏதுவாக வருதல் கூடாமையின், அறிவுடையார்கள் இதற் கேதுவாகிய பழவினை யாதென்றுராயப்படுதலின், நினைக்கப்படுமென்றார்: "இம்மைச் செய்தன யானறி நல்வினை—யும்மைப் பயன்கொ லொருதனி யுழந்தித்—திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது" * என நினைக்கப்பட்டவாறறிக. (கூ)

கஎ0. அழுக்கற் றகன்றாரு மில்லையஃ தில்லார்
பெருக்கத்திற் றீர்ந்தாரு மில். க0.

இ - ள். அழுக்கற்று அகன்றாரும் இல்லை - அழுக்காற்றைச் செய்து பெரியராயி னாருமில்லை;—அஃது இல்லார் பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல் - அச்செயலிலாதார் பெருக்கத்தினின்றுமாறுமில்லை. எ -று.

இவையிரண்டுபாட்டானும் கேடுமாக்கமும் வருதற்கேது ஒருங்கு கூறப்பட்டது.

கஅம் அதி.—வெஃகாமை.

அஃதாவது பிறர்க்குரிய பொருளை வௌவக்கருதாமை. பிறருடைமை கண்ட வழிப் பொறுமையேயன்றி அதனைத் தான் வௌவக்கருதுதலுங் குற்றமென்றற்கு இஃது அழுக்காறுமையின்பின் வைக்கப்பட்டது.

கஎக. நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும். க.

இ - ள். நடுவு இன்றி நன்பொருள் வெஃகின் - பிறர்க்குரியன கோடல் நமக்கு அறனன்றென்னும் நடுவுநிலைமையின்றி அவர் நன்பொருளை ஒருவன் வெஃகுமா யின்,—குடி பொன்றிக் குற்றமும் ஆங்கே தரும் - அவ்வெஃகுதல் அவன்குடியையுக் கெடச்செய்து, பல குற்றங்களையும் அப்பொழுதே அவனுக்குக் கொடுக்கும். எ - று.

---

* சிலப்பதிகாரம், அடைக்கலக்காதை, கக - கூ.

குடியை வளரச்செய்து பலநன்மையும் பயக்குமியல்புபற்றி, வெஃகினென்பார், நன்பொருள் வெஃகினென்றார். பொன்ற வென்பது பொன்றி யெனத் திரிந்துநின்றது*; செம்தென்பது சொல்லெச்சம். (க)

கஎஉ. படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர். உ.

இ - ள். படு பயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்-பிறர் பொருளை வௌவினால் தமக்கு வரும் பயனை விரும்பி அது வௌவுதற்குப் பழியின்கண்ணே படுஞ்செயல் களைச் செய்யார்—நடுவு அன்மை நாணுபவர் - நடுவுநிலைமையன்மையை அஞ்சுபவர். எ - று.

நடுவு ஒருவன் பொருட்குப் பிறன் உரியனல்லனென்னும் நடுவு. (உ)

கஎஊ. சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர். ஊ.

இ - ள் சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யார் - பிறர்பால் வௌவியபொருளால் தாமெய்தும் நிலையில்லாத வின்பத்தை விரும்பி அவர்மாட்டு அறனல்லாத செயல்களைச் செய்யார்—மற்றின்பம் வேண்டுபவர் - அறத்தான் வரும் நிலையுடைய வின்பத்தைக் காதலிப்பவர். எ - று.

பாவத்தான் வருதலின் அப்பொழுதே யழியுமென்பார், சிற்றின்பமென்றார். மற்றையின்பமென்பது மற்றின்பமென நின்றது. (ஊ)

கஎச. இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர். ச.

இ - ள். இலம் என்று வெஃகுதல் செய்யார் - யாம் வறிய மென்று கருதி அது தீர்தற்பொருட்டுப் பிறர்பொருளை விரும்புதல் செய்யார்—புலம் வென்ற புன்மையில் காட்சியவர் - ஐம்புலன்களையும் வென்ற குற்றமில்லாத காட்சியினையுடையார். எ-று.

வெல்லுதல் பாவநெறிக்கட்செல்ல விடாமை. புலம் வென்ற புன்மையில் காட்சி யவர்க்கு வறுமையின்மையின், வெஃகுதலு மில்லையாயிற்று. புன்மையில் காட்சி பொருள்களைத் திரிபின்றி யுணர்தல். (ச)

கஎடு. அஃகி யகன்ற வறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின். டு.

இ - ள். அஃகி அகன்ற அறிவு என்னும் - நுண்ணிதாய் எல்லாநூல்களினுஞ் சென்ற தம்மறிவு என்ன பயத்ததாம்,—வெஃகி யார்மாட்டும் வெறிய செயின் - பொருளை விரும்பி யாவர்மாட்டும் அறிவோடு படாத செயல்களை அறிவுடையார் செய்வராயின். எ -று.

---

* குடிபொன்றிக் குறைமு மாங்கே தரும், குடிமடிந்து குற்றம் பெருகும், இருணீங்கி யின்பம் பயக்கும் என்புழிப் பொன்றுவித்து, மடிவித்து, நீங்குவித்து எனப்பாலன பிறவினைப் பொருளுணர்த்தும் வி.வினைகளி தொக்கு, பொன்றி, மடிந்து, நீங்கி என நின்றனவெனக் கொண்டார் தொல்காப்பியச் சூத்திரவிருத்திகாரர். இங்ஙனம் வருவனவற்றை வடநூலார் அந்தர்ப் பாவித ணிச் சென்பர்.

யார்மாட்டும் வெறிய செய்தலாவது தக்கார்மாட்டும் தகாதார்மாட்டும் இழிந்தனவும் கடியனவும் முதலியன செய்தல். அறிவிற்குப் பயன் அவைசெய்யாமையாகலின், அறிவென்னுமென்றார். (கு)

கஎசு. அருள்வெஃகி யாற்றின்க ணின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும். சு.

இ - ள். அருள் வெஃகி ஆற்றின்கண் நின்றான் - அருளாகிய அறத்தை விரும்பி அதற்குவழியாகிய இல்லறத்தின்கணின்றவன்—பொருள் வெஃகிப் பொல்லாத சூழக்கெடும் - பிறர்பொருளையவாவி அதனை வருவிக்குங் குற்றநெறிகளை எண்ணக்கெடும். எ - று.

இல்லறநெறியால் அறிவு முதிர்ந்துழியல்லது துறக்கப்படாமையின், அதனைத் துறவறத்திற்கு ஆறென்றார். கெடுதல் இரண்டறமுஞ் சேரவிழுத்தல். சூழ்ந்த துணையானே கெடுமெனவே, செய்தற்கெடுதல் சொல்லாமையே பெறப்பட்டது. (சு)

கஎஎ. வேண்டற்க வெஃகியா மாக்கம் விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன். எ.

இ - ள். வெஃகி ஆம் ஆக்கம் வேண்டற்க - பிறர்பொருளை யவாவிக்கொண்டு அதனாலாகின்ற ஆக்கத்தை விரும்பாதொழிக;—விளைவயின் பயன் மாண்டற்கு அரிதாம்-பின்னனுபவிக்குங்கால் அவ்வாக்கத்தின் பயன் நன்றாதலில்லை ஆகலான். எ-று.

விளையென்பது முதனிலைத்தொழிற்பெயர். இவையேழுபாட்டானும் வெஃகுதலின் குற்றம் கூறப்பட்டது. (எ)

கஎஅ. அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள். அ.

இ - ள். செல்வத்திற்கு அஃகாமை யாதெனின் - சுருங்கன் மாலைத்தாகிய செல்வத்திற்குச் சுருங்காமைக்காரணம் யாதென்று ஒருவனாயின்,—பிறன் வேண்டும் கைப்பொருள் வெஃகாமை - அது பிறன்வேண்டுங் கைப்பொருளைத் தான் வேண்டாமையாம். எ - று.

அஃகாமை ஆகுபெயர். வெஃகாதான்செல்வம் அஃகாதென்பதாயிற்று. (அ)

கஎசு. அறனறிந்து வெஃகா வறியுடையார்ச் சேருந்
திறனறிந் தாங்கே திரு. சு.

இ - ள். அறன் அறிந்து வெஃகா அறிவுடையார் - இஃதறனென்றறிந்து பிறர் பொருளை விரும்பாத அறிவுடையாரை—திரு திறன் அறிந்து ஆங்கே சேரும் - திருமகள் தானடைதற்காங்கூற்றினையறிந்து அக்கூற்றினே சென்றடையும். எ - று.

அடைதற்காங்கூறு காலமும், இடனும், செவ்வியும் முதலாயின. இவையிரண்டு பாட்டானும் வெஃகாமையின் குணங் கூறப்பட்டது. (சு)

கஅ0. இறலீனு மெண்ணுது வெஃகின் விறலீனும்
வேண்டாமை யென்னுஞ் செருக்கு. க0.

இ - ள். எண்ணுது வெஃகின் இறல் ஈனும் - பின் விளைவதறியாது ஒருவன் பிறன்பொருளை வௌவக்கருதின் அக்கருத்து அவனுக்கிறுதியைப் பயக்கும்,—வேண்டாமை என்னும் செருக்கு வீறல் ஈனும் - அப்பொருளை வேண்டாமையென்னுஞ் செல்வம் வெற்றியைப் பயக்கும். எ - று.

பகையும் பாவமும் பெருக்கலின் இறலீனுமென்றும், அப்பொருளை வேண்டி உழல்வோர் யாவரையுங் கீழ்ப்படுத்தலின் வீறலீனுமென்றுங் கூறினர். செருக்கு ஆகுபெயர். இதனால் அவ்விருமையும் ஒருங்கு கூறப்பட்டன. (க0)

ககூம் அதி.—புறங்கூருமை.

அஃதாவது காணுதவழிப் பிறரையிகழ்ந்துரையாகை. மொழிக்குற்றம் மனக்குற்றமடியாக வருதலான், இஃது அழுக்காருமை வெஃகாமைகளின்பின் வைக்கப்பட்டது.

ககக. அறங்கூரு னல்ல செயினு மொருவன்
புறங்கூரு னென்ற லினிது. க.

இ - ள். ஒருவன் அறம் கூருன் அல்ல செயினும் - ஒருவன் அறனென்று சொல்லுவதுஞ் செய்யாது பாவங்களைச் செய்யுமாயினும்,—புறங்கூருன் என்றல் இனிது - பிறனைப் புறங்கூருனென்று உலகத்தாராற் சொல்லப்படுதல் நன்று. எ - று.

புறங்கூருமை அக்குற்றங்களானிழிக்கப்படாது மேற்பட்டுத் தோன்றுமென்பதாம். இதனால் அவ்வறத்தினது நன்மை கூறப்பட்டது. (க)

ககஉ. அறனழீஇ யல்லவை செய்தலிற் றீதே
புறனழீஇப் பொய்த்து நகை. உ.

இ - ள். அறன் அழீஇ அல்லவை செய்தலின் தீது - அறனென்பதொன்றில்லை யென அழித்துச்சொல்லி அதன்மேற்பாவங்களைச் செய்தலினுந் தீமையுடைத்து—புறன் அழீஇப் பொய்த்து நகை - ஒருவனைக் காணுதவழி இகழ்ந்துரையால் அழித்துச் சொல்லிக் கண்டவழி அவனோடு பொய்த்துநகுதல். எ - று.

உறழ்ச்சி நிரனிறைவகையாற் கொள்க. அழித்தல் ஒளியைக்கோறல். (உ)

ககஊ. புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாத
லறங்கூறு மாக்கந் தரும். ஊ.

இ - ள். புறங்கூறிப் பொய்த்து உயிர் வாழ்தலின் - பிறனைக் காணுதவழி இகழ்ந்துரைத்துக் கண்டவழி அவற்கினியனைப் பொய்த்து ஒருவனுயிர்வாழ்தலின்—சாதல் அறம் கூறும் ஆக்கம் தரும் - அது செய்யாது சாதல் அவனுக்கு அறநூல்கள் சொல்லும் ஆக்கத்தைக் கொடுக்கும். எ - று.

பின் புறங்கூறிப் பொய்த்தலொழிதலின், சாதல் ஆக்கந்தருமென்றார். ஆக்கம் அஃதொழிந்தார் மறுமைக்கணெய்தும் பயன். அறம் ஆகுபெயர். தருமென்பது இடைவழுவமைதி. * (ஊ)

---

* தொல்காப்பியத்துக் இளம்பூரணத்தில், "அவற்றுள், தருசொல் வருசொல்லாயிரு வினையுடன்—தன்மை முன்னிலை யாயிரண்டத்த" என்னுஞ் சூத்திரத்திற்கு மாறுக எண்டுப் படர்க்கை யிடத்திற்கு வந்தமையின், இடவழுவமைதியாயிற்று.

கஅஏ. கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல். ச.

இ - ள். கண் நின்று கண் அறச்சொல்லினும் - ஒருவனெதிரேநின்று கண்ணோட்டமறச் சொன்னாலும்,—முன் இன்று பின்னோக்காச் சொல் சொல்லற்க - அவனெதிரின்றிப் பின்வருங்குற்றத்தை நோக்காத சொல்லைச் சொல்லாதொழிக. எ - று.

பின் ஆகுபெயர். சொல்வான்முழில் சொன்மேலேற்றப்பட்டது. இவை மூன்றுபாட்டானும் புறங்கூற்றினது கொடுமை கூறப்பட்டது. (ச)

கஅடி. அறஞ்சொல்லு நெஞ்சத்தா னன்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும். டி.

இ - ள். அறம் சொல்லும் நெஞ்சத்தான் அன்மை-புறஞ்சொல்லுவானெனருவன் அறனே நன்றென்று சொல்லினும், அது தன்மனத்தானுய்ச் சொல்லுகின்றனல்ல னென்பது †—புறஞ்சொல்லும் புன்மையால் காணப்படும் - அவன் புறஞ்சொல்லுதற்குக் காரணமான மனப்புன்மையானே அறியப்படும். எ - று.

மனந்தீதாகலின், அச்சொற் கொள்ளப்படா தென்பதாம். (ஏ)

கஅசூ. பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளுந்
திறன்றெரிந்து கூறப் படும். சூ.

இ - ள். பிறன் பழி கூறுவான் - பிறனெருவன் பழியை அவன்புறத்துக் கூறுமவன்—தன்பழியுள்ளும் திறன் தெரிந்து கூறப்படும் - தன்பழி பலவற்றுள்ளும் உளையுந் திறமுடையவற்றைத் தெரிந்து அவனுற் கூறப்படும். எ - று.

புறத்தென்பது அதிகாரத்தாற்பெற்றும். இது வருகின்றவற்றிற்குமொக்கும். திறன் ஆகுபெயர். தன்னைப் புறங்கூறியவாறு கேட்டான் அக்கூறியாற்கு அவ்வளவன்றி அவனிறந்துபட்டு உளையுந் திறத்தனவாகிய பழிகளோ நாடி எதிரே கூறுமாகலின், திறன்றெரிந்து கூறப்படுமென்றார். (சு)

கஅஎ. பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாட றேற்ற தவர். எ.

இ - ள் பகச் சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் - தம்மை விட்டு நீங்குமாற்றுற் புறங்கூறித் தங்கேளிரையும் பிரியப்பண்ணுவர்—நகச்சொல்லி நட்பாடல் தேற்றுதவர் - கூடி மகிழுமாறு இனியசொற்களைச் சொல்லி அயலாரோடு நட்பாடலை அறியாதார். எ - று.

சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. கேளிரையும் பிரிப்பரென்றகருத்தான், அயலாரோடுமென்பது வருவித்துரைக்கப்பட்டது. அறிதல் தமக்குறுதியென்றறிதல்.

---

* முன்னின்று பின்னோக்காச்சொல். இது ஒருபொருளின் வீர மதறெருபொருளின் வியோனது. பிரபோகவிவேகம், இங்கிதப்படலம், "மருமறு காரணம்" என்னும் கச - ம் பாட்டிழ் காண்க.

† அறஞ்சொல்லு நெஞ்சத்தான் என்பதனை நெஞ்சோடறஞ் சொல்வானென விருதி பிரித்துக்கூட்டுவர் பிரபோகவிவேகமுலார்.

உ ம் அதி.—பயனிலசொல்லாமை.

"கடியு-மிடந்தேற்ருள் சோர்ந்தனள் கை"* என்புழிப் போலத் தேற்ருமை தன்வினை யாய்நின்றது. புறங்கூறுவார்க்கு யாவரும் பகையாவரென்பது கருத்து. (எ)

கஅஅ. தன்னியார் குற்றமுந் தூற்று மரபினர்
ரென்னைகொ லேதிலார் மாட்டு. அ.

இ - ள். தன்னியார் குற்றமும் தூற்றும் மரபினர் - தம்மொடு செறிந்தாரது குற்றத்தையும் அவர்புறத்துத் தூற்றுமியல்பினையுடையார்—ஏதிலார்மாட்டு என்னை கொல் - அயலார்மாட்டுச் செய்வது யாதுகொல்லோ! எ - று.

தூற்றுதல் பலருமறியப் பரப்புதல். அதனிற்கொடியது பிறிதொன்று காணுமை யின், என்னைகொலென்றூர். செய்வதென்பது சொல்லெச்சம். என்னர்கொலென்று பாடமோதி, எவ்வியல்பினராவரென்றுரைப்பாருமுளர். (அ)

கஅகூ. அறனெனக்கி யாற்றுங்கொல் வையம் புறனெனக்கிப்
புன்சொ லுரைப்பான் பொறை. கூ.

இ - ள். புறன் நோக்கிப் புன்சொல் உரைப்பான் பொறை - பிறர் நீங்கினவளவு பார்த்து அவர் பழித்துரையையுரைப்பானதுடற்பாரத்தை—வையம்அறன்நோக்கி ஆற்றுங்கொல் - நிலம் இக்கொடியது பொறுத்தலே எனக்கறமாவ தெனக் கருதிப் பொறுக்கின்றதுபோலும். எ - று.

எல்லாவற்றையும் பொறுத்தல் இயல்பாயினும், இது பொறுத்தற்கரிதென்னுங் கருத்தால், அறனெனக்கியாற்றுங்கொலென்றூர். இவையைந்து பாட்டானும் புறங்கூறு வார்க் கெய்துங்குற்றங் கூறப்பட்டது. (கூ)

கஅஙo. ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பிற்
றீதுண்டோ மன்னு முயிர்க்கு. கo.

இ - ள். ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற்பின் - ஏதிலாரைப் புறங் கூறுவார் அதற்கு அவர் குற்றங்காணுமாறுபோலப் புறங்கூறலாகிய தங்குற்றத்தை யுங் காண வல்லராயின்,—மன்னும் உயிர்க்குத் தீது உண்டோ - அவர் நிலைபேறு டைய வுயிர்க்கு வருவதொரு துன்பமுண்டோ? எ - று.

நடுவுநின்று ஒப்பக்காண்டலருமைநோக்கிக் காண்கிற்பினென்றும், கண்டவழி யொழிதலிற் பாவமின்றும் ஆகவே வரும் பிறவிகளினுந் துன்பமில்லையென்பது நோக்கி உயிர்க்குத் தீதுண்டோ வென்றுங்கூறினர். இதனுற்புறங்கூற்றொழிதற்கு உபாயங் கூறப்பட்டது. (கo)

உ ம் அதி.—பயனிலசொல்லாமை.

அஃதாவது தமக்கும் பிறர்க்கும் அறம்பொருள் இன்பமாகிய பயன்களுள் ஒன்றும் பயவாத சொற்களைச் சொல்லாமை. பொய், குறளை, கடுஞ்சொல், பயனில் சொல்லென வாக்கின்கணிகழும் பாவநான்கனுள், பொய் துறந்தார்க்கல்லது ஒரு தலையாகக் கடியலாகாமையின், அஃதொழித்து, இல்வாழ்வாரால் கடியப்படும் ஏனை மூன்றனுள், கடுஞ்சொல் இனியவைகூறலானும், குறளை புறங்கூறுமையானும், விலக்கி, நின்ற பயனில்சொல் இதனுன் விலக்குகின்றூராகலின், இது புறங்கூறுமை யின்பின் வைக்கப்பட்டது.

---

* கலித்தொகை, மருதம்—உஎ.

ககக. பல்லார் முனியப் பயனில் சொல்லுவா
னெல்லாரு மெள்ளப் படும். க.

இ - ள். பல்லார் முனியப் பயன் இல சொல்லுவான் - அறிவுடையார் பலருங் கேட்டு வெறுப்பப் பயனிலவாகிய சொற்களைச் சொல்லுவான்—எல்லாரும் எள்ளப் படும் - எல்லாராலுமிகழப்படும். எ - று.

அறிவுடையார் பலரும் வெறுப்பவே ஒழிந்தாரானும் இகழப்படுதலின், எல்லாரு மெள்ளப்படுமென்றார். மூன்றனுருபு விகாரத்தாற் றொக்கது. (க)

ககஉ. பயனில பல்லார்முற் சொல்ல னயனில
நட்டார்கட் செய்தலிற் றீது. உ.

இ - ள். பயன் இல பல்லார்முன் சொல்லல் - பயனிலவாகிய சொற்களை அறிவு டையார் பலர்முன்பே ஒருவன் சொல்லுதல்—நயன் இல நட்டார்கண் செய்தலின் தீது-விருப்பமிலவாகிய செயல்களைத் தன்னட்டார் மாட்டுச் செய்தலினும் தீது.எ-று.

விருப்பமில வெறுப்பன. இச்சொல் அச்செயலினும் மிகவிகழற்பாடு பயக்கு மென்பதாம். (உ)

ககஊ. நயனில னென்ப சொல்லும் பயனில
பாரித் துரைக்கு முரை. ஊ.

இ - ள். பயன் இல பாரித்து உரைக்கும் உரை - பயனிலவாகிய பொருள்களை ஒருவன் விரித்துரைக்குமுரைதானே—நயன் இலன் என்பது சொல்லும் - இவன் நீதியிலனென்பதனை உரைக்கும். எ - று.

உரையால் இவன் நயனிலனென்பதறியலாமென்பார், அதனை உரைமேலேற்றி உரைசொல்லுமென்றார். (ஊ)

ககஎ. நயன்சாரா நன்மையி னீக்கும் பயன்சாராப்
பண்பில்சொற் பல்லா ரகத்து. எ.

இ - ள். பயன் சாராப் பண்பு இல் சொல் பல்லாரகத்து - பயனெடுபடாத பண்பில் சொற்களை ஒருவன் பலரிடைச்சொல்லுமாயின்,—நயன் சாரா நன்மையின் நீக்கும்-அவை அவர்மாட்டு நீதியொடுபடாவாய், அவனை நற்குணங்களினீக்கும். எ-று.

பண்பு இனிமையும் மெய்ம்மையும் முதலாய சொற்குணங்கள். சொல்லுமாயி னென்பதும், அவர்மாட்டென்பதும், எச்சமாக வருவிக்கப்பட்டன. (எ)

ககஏ. சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின். ஏ.

இ - ள். பயன் இல நீர்மையுடையார் சொலின் - பயனிலவாகிய சொற்களை இனியநீர்மையுடையார் சொல்லுவராயின்,—சீர்மை சிறப்பொடு நீங்கும் - அவரது வீழ்ப்பமும் அதனால் வரும் நன்குமதிக்கற்பாடும் உடனே நீங்கும். எ - று.

நீர்மை நீரின்றன்மை. சொலினென்பது சொல்லாமையை விளக்கிற்று. (ஏ)

ககூக. பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல். கூ.

இ - ள். பயன் இல் சொல் பாராட்டுவானை மகன் எனல் - பயனில்லாத சொற் களைப் பலகாலுஞ் சொல்லுவானை மகனென்று சொல்லற்க,—மக்கட்பதடி எனல் - மக்களுட்பதரென்று சொல்லுக. எ - று.

அல்லதூஉ மியங்கோள் முன் எதிர்மறையினும், பின் உடன்பாட்டினும் வந்தது. அறிவென்னும் உள்ளீடின்மையின், மக்கட்பதடியென்றார். இவையாறுபாட்டானும் பயனில்லாத சொற்களைச் சொல்லுதலின் குற்றங் கூறப்பட்டது. (கூ)

ககூஎ நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று. எ.

இ - ள். நயன் இல சான்றோர் சொல்லினும் சொல்லுக - நீதியொடு படாத சொற்களைச் சான்றோர் சொன்னாராயினும், அஃதமையும்:—பயன் இல சொல்லாமை நன்று - அவர் பயனிலவற்றைச் சொல்லாமை பெறின், அது நன்று. எ - று.

சொல்லினுமெனவே, சொல்லாமை பெறப்பட்டது. நயனிலவற்றினும் பயனில தீயவென்பதாம். (எ)

ககூஅ. அரும்பய னுயு மறிவினர் சொல்லார்
பெரும்பய னில்லாத சொல். அ.

இ - ள். அரும்பயன் ஆயும் அறிவினர் - அறிதற்கரிய பயன்களை ஆராயவல்ல அறிவினையுடையார்—பெரும்பயன் இல்லாத சொல் சொல்லார் - மிக்க பயனுடைய வல்லாத சொற்களைச் சொல்லார். எ - று.

அறிதற்கரிய பயன்களாவன வீடுபேறும், மேற்கதிச்செலவும் முதலாயின. பெரும்பயனில்லாதவெனவே, பயன் சிறிதுடையனவும் ஒழிக்கப்பட்டன. (அ)

ககூக. பொருடேர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருடேர்ந்த
மாசறு காட்சி யவர். கூ.

இ - ள். பொருள் தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் - பயனினீங்கிய சொற்களை மறந்துஞ்சொல்லார்—மருள் தீர்ந்த மாசு அறு காட்சியவர் - மயக்கத்தினீங்கிய தூய வறிவினையுடையார். எ - று.

தூயவறிவு மெய்யறிவு. மருடேர்ந்தவென்னும் பெயரெச்சம் காட்சியவரென்னுங் குறிப்புப்பெயர்கொண்டது. இவை மூன்றுபாட்டானும் பயனிலசொல்லாமையின் குணங் கூறப்பட்டது. (கூ)

உ00. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல். க0.

இ - ள். சொல்லின் பயனுடைய சொல்லுக - சொற்களிற் பயனுடைய சொற்களைச் சொல்லுக,—சொல்லின் பயனிலாச் சொல் சொல்லற்க - சொற்களிற் பயனில்லாத சொற்களைச் சொல்லாதொழிக. எ - று.

சொல்லினென்பது இருவழியும் மிகையாயினும், சொற்பொருட்பின்வருநிலை யென்னும் அணிநோக்கி வந்தது, "வைகலும் வைகல் வரக்கண்டும்"* என்பதுபோல. இதனைச் சொல்லப்படுவனவும் படாதனவும் நியமிக்கப்பட்டன. (கo)

உகம் அதி.—தீவினையச்சம்.

அஃதாவது பாவங்களாயின செய்தற்கு அஞ்சுதல். இதனான் மெய்யின்கணி கழும் பாவங்களெல்லாந்தொகுத்து விலக்குகின்றாராகலின், இது பயனில சொல்லா மையின்பின் வைக்கப்பட்டது.

உoக. தீவினையா ரஞ்சார் விழுமியா ரஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செருக்கு. க.

இ - ள். தீவினை யென்னும் செருக்கு - தீவினையென்று சொல்லப்படும் மயக் கத்தை—தீவினையார் அஞ்சார் - முன்செய்த தீவினையுடையார் அஞ்சார்,—விழுமியார் அஞ்சுவர் - அஃதிலராகிய சீரியார் அஞ்சுவர். எ - று.

தீவினையென்னுஞ் செருக்கெனக் காரியம் காரணமாக † உபசரிக்கப்பட்டது. மேற்றொட்டுச் செய்து கைவந்தமையான் அஞ்சாரென்றும், செய்தறியாமையான் அஞ்சுவரென்றுங் கூறினர். (க)

உoஉ. தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும். உ.

இ - ள். தீயவை தீய பயத்தலால் - தனக்கின்பம் பயத்தலைக் கருதிச் செய்யுந் தீவினைகள் பின் அஃதொழித்துத் துன்பமே பயத்தலான்,—தீயவை தீயினும் அஞ்சப் படும் - அத்தன்மையவாகிய தீவினைகள் ஒருவனுற் றீயினுமஞ்சப்படும். எ - று.

பிறிதொருகாலத்தும் பிறிதொருதேயத்தும் பிறிதோருடம்பினுஞ்சென்று சுடு தல் தீக்கின்மையின், தீயினுமஞ்சப்படுவதாயிற்று. (உ)

உoங. அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல். ங.

இ - ள். அறிவினுள் எல்லாம் தலை என்ப - தமக்குறுதி நாடும் அறிவுகளெல் லாவற்றுள்ளும் தலையாய அறிவென்று சொல்லுவர் நல்லோர்—செறுவார்க்கும் தீய செய்யா விடல் - தம்மைச் செறுவார்மாட்டும் தீவினைகளைச் செய்யாது விடு தலை. எ - று.

விடுதற்குக் காரணமாகிய அறிவை விடுதலென்றும், செயத்தக்குழியுஞ் செய்யா தொழியவே தமக்குத் துன்பம் வாராதென உய்த்துணர்தலின் அதனை அறிவினுளெல் லாந்தலையென்றுங் கூறினர். செய்யாதென்பது கடைக்குறைந்து நின்றது. இவை மூன்றுபாட்டானும் தீவினைக்கஞ்சவேண்டுமென்பது கூறப்பட்டது. (ங)

---

* வைகலும வைகல் வரக்கண்டு மஃதுணரா—வைகலும வைகலை வைகுமென்றின்புறு வர்—வைகலும் வைகற்றம் வாழ்காண்மேல் வைகுதல்—வைகலை யைத்துணராதார்—நாலடியார், அறன்வலியுறுத்தல்.

† காரணங் காரியமாதற்கும் காரியங் காரணமாதற்கும் விதி பிரயோகவிவேகப், திங்டிப் படலம், "மருளறுகாரணம்" என்னும் சூசும் பாட்டிற்காண்க.

உ0ச. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழி
னறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு. ச.

இ - ள். பிறன் கேடு மறந்தும் சூழற்க - ஒருவன் பிறனுக்குக் கேடு பயக்கும் வினையை மறந்தும் எண்ணுதொழிக;—சூழின் சூழ்ந்தவன் கேடு அறம் சூழும் - எண்ணுவனாயின், தனக்குக் கேடுபயக்கும் வினையை அறக்கடவுள் எண்ணும். எ - று.

கேடென்பன ஆகுபெயர். சூழ்கின்றபொழுதே தானு முடன்சூழ்தலின், இவன் பிற்படினும் அறக்கடவுள் முற்படுமென்பது பெறப்பட்டது. அறக்கடவுளெண்ணுதலாவது அவன்கெடத் தான் நீங்க நினைத்தல். தீவினை எண்ணலுமாகாதென்பதாம்.()

உ0ஞ. இலனென்று தீயவை செய்யற்க செய்யி
னிலனாகு மற்றும் பெயர்த்து. ஞ.

இ - ள். இலன் என்று தீயவை செய்யற்க - யான் வறியனென்று கருதி அது தீர்தற்பொருட்டுப் பிறர்க்குத் தீவினைகளே ஒருவன் செய்யாதொழிக;—செய்யின் பெயர்த்தும் இலன் ஆகும் - செய்வானுயின், பெயர்த்தும் வறியனும். எ - று.

அத்தீவினையாற் பிறவிதோறும் இலனுமென்பதாம். அன்விகுதி முன் தனித் தன்மையினும், பின் படர்க்கையொருமையினும் வந்தது. தனித்தன்மை "உளனுவென்னுயிரையுண்டு" * என்பதனானுமறிக. மற்று அசைநிலை. இலமென்றுபாடமோதுவாருமுளர். பொருளான் வறியனெனக் கருதித் தீயவை செய்யற்க, செய்யின் அப்பொருளானேயன்றி நற்குண நற்செய்கைகளானும் வறியனுமென்றுரைப்பாருமுளர். (ஞ)

உ0கூ. தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னை யடல்வேண்டா தான். கூ.

இ - ள். நோய்ப்பால தன்னை அடல்வேண்டாதான் - துன்பஞ்செய்யுங் கூற்றவாகிய பாவங்கள் தன்னைப் பின்வந்து வருத்துதலை வேண்டாதவன்—தீப்பால தான் பிறர்கண் செய்யற்க - தீமைக்கூற்றவாகிய வினைகளைத் தான் பிறர்மாட்டுச் செய்யாதொழிக. எ - று.

செய்யின், அப்பாவங்களடுதல் ஒருதலையென்பதாம். (கூ)

உ0எ. எனைப்பகை யுற்றாரு முய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும். எ.

இ - ள். எனைப்பகை உற்றாரும் உய்வர் - எத்துணைப் பெரிய பகையுடையாரும் அதனையொருவாற்றாற்றப்புவர்;—வினைப்பகை வீயாது பின் சென்று அடும் - அவ்வாறன்றித் தீவினையாகிய பகை நீங்காது புக்குழிப் புக்குக் கொல்லும். எ- று.

"வீயா—துடம்பொடு நின்ற வுயிருமில்லை" † என்புழியும் வீயாமை நீங்காமைக் கண் வந்தது. (எ)

உ0அ. தீயவை செய்தார் கெடுத னிழறன்னை
வீயா தடியுறைத் தற்று. அ.

* கலித்தொகை, குறிஞ்சி—உஉ. † புறநானூறு, நகக.

இ - ள். தீயவை செய்தார் கெடுதல் - பிறர்க்குத் தீவினைகளைச்செய்தார் தாங் கெடுதல் எத்தன்மைத்தெனின்,—நிழல் தன்னை வ்யாது அடி உறைந்தற்று - ஒருவனிழல் கெடிதாகப்போயும் அவன்றன்னை விடாது வந்து அடியின்கட்டங்கியதன்மைத்து. எ - று.

இவ்வுவமையைத் தன்காலம் வருந்துணையும் புலனுகாது உயிரைப்பற்றி நின்று அது வந்துழி உருப்பதாய தீவினையைச்செய்தார் பின் அதனுற் கெடுதற்கு உவமையாக்கி உரைப்பாருமுளர். அஃதுரையன்றென்பதற்கு அடியுறைந்தற்றன்னை வ்ய்ந்தற்றென்னுது வ்யாதடியுறைந்தற்றென்ற பாடமே கரியாயிற்று. மேல் வ்யாது பின் சென்றடுமென்றார். ஈண்டு அதனையுவமையான் விலக்கினர். (அ)

உ0கூ. தன்னைத்தான் காதல ஞயி னெனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால். கூ.

இ - ள். தன்னைத் தான் காதலன் ஆயின் - ஒருவன், தன்னைத் தான் காதல் செய்தலுடையனுயின்,—தீவினைப்பால் எனைத்து ஒன்றும் துன்னற்க-தீவினையாகிய பகுதி எத்துணையுஞ் சிறியதொன்றுயினும் பிறர்மாட்டுச் செய்யாதொழிக. எ - று.

நல்வினை தீவினையென வினைப்பகுதி இரண்டாகலின், தீவினைப்பாலென்றார். பிறர்மாட்டுச்செய்த தீவினை தன்மாட்டுத் துன்பம் பயத்தல் விளக்கினுராகலின், தன்னைத்தான் காதலனுயினென்றார். இவையாறுபாட்டானும் பிறர்க்குத் தீவினைசெய்யிற் ருங்கெடுவரென்பது கூறப்பட்டது. (கூ)

உகo. அருங்கேட னென்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்யா னெனின். கo.

இ - ள். மருங்கு ஓடித் தீவினை செய்யான் எனின் - ஒருவன் செந்நெறிக்கட் செல்லாது கொடுநெறிக்கட்சென்று பிறர்மாட்டுத் தீவினைகளைச செய்யானுயின்,—அருங்கேடன் என்பது அறிக - அவனை அரிதாகிய கேட்டையுடைய னென்ப தறிக. எ - று.

அருமை இன்மை. அருங்கேடனென்பதனை "சென்று சேர் கல்லாப் புள்ள புளளி லென்றூழ வியன்குளம்" * என்பதுபோலக் கொள்க †. ஓடியென்னும் வினையெசசம் செய்யானென்னும் எதிர்மறைவினையுட செய்தலோடு முடிந்தது. இதனுல் தீவினை செய்யாதவன் கேடிலனென்பது கூறப்பட்டது. (கo)

அஃதாவது உலகநடையினையறிந்து செய்தல். உலகநடை வேதநடைபோல அறநூல்களுட் கூறப்படுவதன்றித் தாமேயறிந்து செய்யுந்தன்மைத்தாகலின், ஒப்புரவறிதலென்றார். மேல் மனமொழிமெய்களாற் றவிரத்தகுவன கூறினர், இனிச் செய்யத்தகுவனவற்றுள் எஞ்சினின்றன கூறுகின்றுராகலின், இது தீவினையச்சத்தின் பின் வைக்கப்பட்டது.

---

* அகநானூறு, சஉ.

† அருங்கேடன் என்பதனைக் கேடரியனென விருதிபிரித்துக் கூட்டுவர் பிரயோகவிவேகமூலார்.

உகக. கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்ஞற்றுங் கொல்லோ வுலகு. க.

இ - ள். மாரிமாட்டி உலகு என் ஆற்றும் - தமக்கு நீருதவுகின்ற மேகங்களி னிடத்து உயிர்கள் என்ன கைம்மாறு செய்யாகின்றன?—கடப்பாடு கைம்மாறு வேண்டா - ஆகலான், அம்மேகங்கள் போல்வார் செய்யும் ஒப்புரவுகளும் கைம்மாறு நோக்குவனவல்ல. எ - று.

என்ஞற்றுமென்ற வினு யாதுமாற்றுவென்பது தோன்ற நிற்றலின், அது வரு வித்துரைக்கப்படும். தவிருந்தன்மையவல்லவென்பது கடப்பாடென்னும் பெயரானே பெறப்பட்டது. செய்வாரது வேண்டாமையைச் செய்யப்படுவனமேலேற்றினர். (க)

உகஉ. தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு. உ.

இ - ள். தக்கார்க்கு - தகுதியுடையார்க்காயின்,—தாள் ஆற்றித் தந்த பொரு ளெல்லாம் - முயற்சிசெய்தீட்டிய பொருண்முழுதும்—வேளாண்மை செய்தற் பொருட்டு - ஒப்புரவு செய்தற்பயத்தவாம். எ - று.

பிறர்க்குதவாதார் போலத்தாமே உண்டற்பொருட்டும், வைத்திழத்தற்பொருட்டு மன்றென்பதாயிற்று. (உ)

உகங. புத்தே ளுலகத்து மீண்டும் பெறலரிதே
யொப்புரவி னல்ல பிற. ங.

இ - ள். புத்தேளுலகத்தும் ஈண்டும் - தேவருலகத்தும் இவ்வுலகத்தும்—ஒப்புர வின் நல்ல பிற பெறல் அரிது - ஒப்புரவுபோல நல்லன பிறசெயல்களைப் பெறுத லரிது. எ - று.

ஈவாரும் ஏற்பாருமின்றி எல்லாரும் ஒருதன்மையராதலின், புத்தேளுலகத்தரி தாயிற்று; யாவர்க்குமொப்பது இதுபோற் பிறிதொன்றின்மையின், இவ்வுலகத்தரி தாயிற்று. பெறற்கரிதென்று பாடமோதிப் பெறுதற்குக் காரணமரிதென்றுரைப்பாரு மூளர். இவை மூன்றுபாட்டானும் ஒப்புரவினது சிறப்புக் கூறப்பட்டது. (ங)

உகச. ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும். ச.

இ - ள். உயிர்வாழ்வான் ஒத்தது அறிவான் - உயிரோடு கூடிவாழ்வானுவான் உலகநடையினை யறிந்து செய்வான்;—மற்றையான் செத்தாருள் வைக்கப்படும் - அஃதறிந்து செய்யாதவன், உயிருடையனேயாயினும் செத்தாருள் ஒருவனுகக் கரு தப்படும். எ - று.

உயிரினதிவுஞ்செயலுங் காணுமையின், செத்தாருள்வைக்கப்படுமென்றார். இத னுல் உலகநடைவழு வேதநடைவழுப்போலத் தீர்திறனுடைத்தன்றென்பது கூறப் பட்டது. (ச)

உகஞ. ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் றிரு. ஞ.

இ - ள். உலகு அவாம் பேரறிவாளன் திரு - உலகாடையை விரும்பிச் செய்யும் பெரியவறிவினையுடையவனது செல்வம் — ஊருணி நீர் நிறைந்தற்று - ஊரின்வாழ் வார் தண்ணீருண்ணுங்குளம் நீர் நிறைந்தாற்போலும். எ - று.

நிறைதலென்னும் இடத்துநிகழ்பொருளின் ரெழிில் இடத்தின்மே லேற்றப்பட்டது. பாழ்போகாது நெடிதுநின்று எல்லார்க்கும் வேண்டுவன தப்பாததவுமென்பதாம். (இ)

உகசு. பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றுற் செல்வ
நயனுடை யான்கட் படின். சு.

இ - ள். செல்வம் நயனுடையான்கண் படின் - செல்வம் ஒப்புரவுசெய்வான் கண்ணே படுமாயின்,—பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தற்று - அது பயன்படுமரம் ஊர் நடுவே பழுத்தாற்போலும். எ - று.

உலகநீதி பலவற்றுள்ளும் ஒப்புரவு சிறந்தமையின், அதனையே நயனென்றார். எல்லார்க்கும் எளிதிற் பயன்கொடுக்குமென்பதாம். (சு)

உகள. மருந்தாகித் தப்பா மரத்தற்றுற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின். எ.

இ - ள். செல்வம் பெருந்தகையான்கண் படின் - செல்வம் ஒப்புரவுசெய்யும் பெரியதகைமையையுடையான்கண்ணே படுமாயின்— மருந்தாகித் தப்பா மரத்தற்று - அஃது எல்லாவுறுப்பும் பிணிகட்கு மருந்தாய்த் தப்புாத மரத்தை யொக்கும். எ - று.

தப்புதலாவது கோடற்கரிய இடங்களினின்றுதல், மறைந்து நின்றுதல், காலத் தான் வேறுபட்டாதல் பயன்படாமை. தன்குறைநோக்காது எல்லார் வருத்தமுந் தீர்க்குமென்பதாம். இவையுன்றுபாட்டானும் கடப்பாட்டாளனுடைய பொருள் பயன்படுமாறு கூறப்பட்டது. (எ)

உகஅ. இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர். அ.

இ - ள். இடன் இல் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார் - செல்வஞ் சுருங்கிய காலத்தும் ஒப்புரவு செய்தற்குத் தளரார்—கடன் அறி காட்சியவர் - தாஞ்செய்யத் தகுவனவற்றையறிந்த இயற்கையறிவுடையார். எ - று.

பிறவெல்லாம் ஒழியினும், இஃதொழியாரென்பதாம். (அ)

உகசு. நயனுடையா னல்கூர்ந்தா னீதல் செயுரே
செய்யா தமைகலா வாறு. சு.

இ - ள். நயன் உடையான் நல்கூர்ந்தான் ஆதல் - ஒப்புரவுசெய்தலையுடையான் நல்கூர்ந்தானாதலாவது—செயும் நீர செய்யாது அமைகலா ஆறு - தவிராது செய்யு நீர்மையையுடைய அவ்வொப்புரவுகளைச் செய்யப்பெறாது வருந்துகின்ற வியல் பாம். எ - று.

தானுகர்வன நுகரப்பெறுமையன்றென்பதாம். இவையிரண்டுபோட்டானும் வறு மையான் ஒப்புரவொழிதற்பாற்றன்றென்பது கூறப்பட்டது. (க)

உஉ0. ஒப்புரவி னல்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து. க0.

இ - ள். ஒப்புரவினுல் கேடு வரும் எனின் - ஒப்புரவுசெய்தலான் ஒருவனுக்குப் பொருட்கேடு வருமென்பாருளராயின்,—அஃது ஒருவன் விற்றுக் கோட்டக்கது உடைத்து - அக்கேடு தன்னை விற்றலினுங் கொள்ளுந்தகுதியையுடைத்து. எ - று.

தன்னை விற்றுக்கொள்ளப்படுவதொரு பொருளில்லையன்றே இஃதாயின் அது வுஞ்செய்யப்படுமென்றது, புகழ் பயத்தலேக்கி. இதனுல் ஒப்புரவினுற் கெடுவது கேடன்றென்பது கூறப்பட்டது. (க0)

உங் ம் அதி.—ஈகை.

அஃதாவது வறியாரேற்றுரர்க்கு மாற்றுது கொடுத்தல். இதுமறுமைநோக்கி யதாகலின், இம்மைநோக்கிய ஒப்புரவறிதலின்பின் வைக்கப்பட்டது.

உஉக. வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து. க.

இ - ள். வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை - ஒருபொருளுமில்லாதார்க்கு அவர் வேண்டியதொன்றைக் கொடுப்பதே பிறர்க்குக் கொடுத்தலாவது;—மற்றெல்லாம் குறியெதிர்ப்பை நீரது உடைத்து - அஃதொழிந்த எல்லாக்கொடையுங் குறி யெதிர்ப்பை கொடுக்கு நீர்மையையுடைத்து. எ - று.

ஒழிந்த கொடைகளாவன வறியரல்லாதார்க்கு ஒருபயனேக்கிக் கொடுப்பன. குறியெதிர்ப்பையாவது அளவுகுறித்துவாக்கி அவ்வாங்கியவாறே எதிர்கொடுப்பது. நீரதென்புழி அதுவென்பது பருகுப்பொருள்விகுதி. பின்னுந் தன்பால் வருதலின், குறியெதிர்ப்பை நீரதுடைத்தென்றார். இதனுன் ஈகையதிலக்கணங் கூறப்பட்டது.()

உஉஉ. நல்லா றெனினுங் கொளதீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று. உ.

இ - ள். கொளல் நல்லாறு எனினும் தீது - ஏற்றல் மீட்டுமெய்திற்கு நல்லதொறி யென்பார் உளராயினும் அது தீது; மேலுலகம் இல் எனினும் ஈதலே நன்று - ஈந் தார்க்கு அவ்வுல கெய்துதலில்லை யென்பார் உளராயினும் ஈதலே நன்று. எ - று.

எனினு மென்பது இருவழியும் அங்ஙனங்கூறுவாரின்மை விளக்கிநின்றது. பிரி நிலேயேகாரத்தால் பிறவறங்களின் ஈதல் சிறந்ததென்பது பெற்றும். நல்லதுகூறு வார் தீயதுமுடன்கூறினர். (உ)

உஉக. இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள. க.

இ - ள். இலன் என்னும் எவ்வம் உரையாமை - யான் வறியனென்று இரப்பான் சொல்லுமிவ்வரவைத் தான் பிறர்கட்சொல்லாமையும்,—ஈதல் - அதனைத் தன்கட் சொன்னார்க்கு மாற்று தீதலும்,—உள குலனுடையான்கண்ணே - இவையிரண்டுமுள வாவன குடிப்பிறந்தான்கண்ணே. எ - று.

மேற்றீதென்றது ஒழிதற்கும் நன்றென்றது செய்தற்குமுரியவனே உணர்த்திய வாறு. இனி இலனென்னுமெவ்வமுரையாமை யீதலென்பதற்கு அவ்வீவிவரவை ஒரு வன்றனக்குச் சொல்வதற்கு முன்னே அவன் குறிப்பறிந்து கொடுத்தலெனவும், அத னைப் பின்னும் பிறனொருவன்பாற்சென்று அவனுரையாவகையாற் கொடுத்தலென வும், யான் இதுபொழுது பொருளுடையேனல்லேனெனக் கரப்பார்சொல்லும் இனி வரவைச்சொல்லாது கொடுத்தலெனவும் உரைப்பாருமுளர். அவர் ஈதலென்பதனைப் பொருட்பன்மை பற்றி வந்த பன்மையாகவுரைப்பர். (சு)

உஉச. இன்ஞ திரக்கப் படுத லிரந்தவ
ரின்முகங் காணு மளவு. ச.

இ - ள். இரக்கப்படுதல் இன்ஞது - இரத்தலேயன்றி இரக்கப்படுதலும் இனி தன்று,—இரந்தவர் இன்முகம் காணும் அளவு - ஒருபொருளையிரந்தவர்அது பெற்றத ஞல் இனிதாகிய அவர்முகங்காணுமளவும். எ - று.

எச்சவும்மையும் முற்றும்மையும் விகாரத்தாற்றொக்கன. இரக்கப்படுதல் இரப் பார்க்கு ஈவலென்றிருத்தல். அதனை இன்ஞதென்றது "எல்லா—மிரப்பார்க்கொன்றீ யாமை"* கூடுங்கொல்லோ வென்னும் அச்சநோக்கி. எனவே, எல்லாப்பொருளும் ஈதல்வேண்டுமென்பது பெறப்பட்டது. (ச)

உஉரு. ஆற்றுவா ராற்றல் பசியாற்ற லப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின். ரு.

இ - ள் ஆற்றுவார் ஆற்றல் பசி ஆற்றல் - தவத்தான் வலியார்க்கு வலியாவது தம்மையுற்ற பசியைப் பொறுத்தல்:—அப்பசியை மாற்றுவார் ஆற்றலிற்பின் - அவ்வலி தான் அங்ஙனம் பொறுத்தற்கரிய பசியை ஈகையா ஞழிப்பாரது வலிக்குப் பின். எ - று.

தாமும் பசித்துப் பிறரையும் அது தீர்க்கமாட்டாதாராற்றலின் தாமும் பசியாது பிறரையும் அது தீர்ப்பாராற்றல் நன்றென்பதாம். (ரு)

உஉசு. அற்ரு ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்ரூன் பொருள்வைப் புழி. சு.

இ - ள். அற்றூர் அழி பசி தீர்த்தல் - வறியாரது மிக்க பசியை அறஞேக்கித் தீர்க்க,—பொருள் பெற்ரூன் ஒருவன் வைப்புழி அஃது - பொருள்பெற்ரூனொருவன் அதனைத் தனக்குதவ வைக்குமிடம் அவ்வறமாகலான். எ - று.

எல்லாநன்மைகளும் அழிய வருதலின், அழிபசியென்ரூர். அறஞேக்கியென்பது எஞ்சிநின்றது. அற்ரூரழிபசி தீர்த்த பொருள் பின்றனக்கே வந்ததவுமென்பதாம். (சு)

உஉள. பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுங்
தீப்பிணி தீண்ட லரிது. எ.

இ - ள். பாத்து ஊண் மரீஇயவனை - எஞ்ஞான்றும் பகுத்துண்டல்பயின்ற வனை—பசி என்னும் தீப்பிணி தீண்டல் அரிது - பசியென்றுசொல்லப்படுந் தீயநோய் தீண்டுதலில்லை. எ - று.

---

* கல்லாமை யச்சங் கயவர் தொழிலச்சஞ்—சொல்லாமை யுள்ளூமோர் சோர்வச்ச - மெல்லா—மிரப்பார்க்கொன் றீயாமை யச்ச மடக்காரிம்—மாணக் குடிப்பிறந்தார்—நாலடியார், குடிப்பிறப்பு.

உஉ0. ஒப்புரவி னல்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து. க0.

இ - ள். ஒப்புரவினால் கேடு வரும் எனின் - ஒப்புரவுசெய்தலான் ஒருவனுக்குப் பொருட்கேடு வருமென்பாருளராயின்,—அஃது ஒருவன் விற்றுக் கோட்டக்கது உடைத்து - அக்கேடு தன்னை விற்றாயினுங் கொள்ளுந்தகுதியையுடைத்து. எ - று.

தன்னை விற்றுக்கொள்ளப்படுவதொரு பொருளில்லையன்றே இஃதாயின் அது வுஞ்செய்யப்படுமென்றது, புகழ் பயத்தலேக்கி. இதனால் ஒப்புரவினாற் கெடுவது கேடன்றென்பது கூறப்பட்டது. (க0)

உகம் அதி.—ஈகை.

அஃதாவது வறியாரேற்றூர்க்கு மாற்றாது கொடுத்தல். இதுமறுமைநோக்கியதாகலின், இம்மைநோக்கிய ஒப்புரவறிதலின்பின் வைக்கப்பட்டது.

உஉக. வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து. க.

இ - ள். வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை - ஒருபொருளுமில்லாதார்க்கு அவர் வேண்டியதொன்றைக் கொடுப்பதே பிறர்க்குக் கொடுத்தலாவது;—மற்றெல்லாம் குறியெதிர்ப்பை நீரது உடைத்து - அஃதொழிந்த எல்லாக்கொடையுங் குறியெதிர்ப்பை கொடுக்கு நீர்மையையுடைத்து. எ - று.

ஒழிந்த கொடைகளாவன வறியரல்லாதார்க்கு ஒருபயனேக்கிக் கொடுப்பன. குறியெதிர்ப்பையாவது அளவுகுறித்துவாங்கி அவ்வாங்கியவாறே எதிர்கொடுப்பது. நீரதென்புழி அதுவென்பது பகுதிப்பொருள்விகுதி. பின்னுந் தன்பால் வருதலின், குறியெதிர்ப்பை நீரதுடைத்தென்றார். இதனான் ஈகையதிலக்கணங் கூறப்பட்டது.()

உஉஉ. நல்லா றெனினுங் கொளறீது மேலுல
மில்லெனினு மீதலே நன்று. உ.

இ - ள். கொளல் நல்லாறு எனினும் தீது - ஏற்றல் மீட்டுலகிற்கு நல்லகெறி யென்பார் உளராயினும் அது தீது; மேலுலகம் இல் எனினும் ஈதலே நன்று - ஈத்தார்க்கு அவ்வுல கப்பதலில்லை யென்பார் உளராயினும் ஈதலே நன்று. எ - று.

எனினுமென்பது இருவழியும் அங்ஙனங்கூறுவாரின்மை விளக்கிநின்றது. பிரிநிலையேகாரத்தால் பிறவறங்களின் ஈதல் சிறந்ததென்பது பெற்றும். நல்லதுகூறுவார் தீயதுமுடன்கூறினர். (உ)

உஉங. இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள. ங.

இ - ள். இலன் என்னும் எவ்வம் உரையாமை - யான் வறியனென்று இரப்பான் சொல்லுமிவ்வாசைத் தான் பிறர்கட்சொல்லாமையும்,—ஈதல் - அதனைத் தன்கட் சொன்னார்க்கு மாற்றாது ஈதலும்,—உள குலனுடையான்கண்ணே - இவையிரண்டுமுளவாவன குடிப்பிறந்தான்கண்ணே. எ - று.

மேற்றீதென்றது ஒழிதற்கும் நன்றென்றது செய்தற்குமுரியவனே உணர்த்திய வாறு. இனி இலனென்னுமெவ்வமுரையாமை யீதலென்பதற்கு அவ்வீவிவரவை ஒரு வன்றனக்குச் சொல்வதற்கு முன்னே அவன் குறிப்பறிந்து கொடுத்தலெனவும், அத னைப் பின்னும் பிறனொருவன்பாற்சென்று அவனுரையாவகையாற் கொடுத்தலென வும், யான் இதுபொழுது பொருளுடையேனல்லேனெனக் கரப்பார்சொல்லும் இனி வரவைச்சொல்லாது கொடுத்தலெனவும் உரைப்பாருமுளர். அவர் ஈதலென்பதனைப் பொருட்பன்மை பற்றி வந்த பன்மையாகவுரைப்பர். (சு)

உஉச. இன்னு திரக்கப் படுத லிரந்தவ
ரின்முகங் காணு மளவு. ச.

இ - ள். இரக்கப்படுதல் இன்னுது - இரத்தலேயன்றி இரக்கப்படுதலும் இனி தன்று,—இரந்தவர் இன்முகம் காணும் அளவு - ஒருபொருளையிரந்தவர்அது பெற்றத னால் இனிதாகிய அவர்முகங்காணுமளவும். எ - று.

எச்சவும்மையும் முற்றும்மையும் விகாரத்தாற்றொக்கன. இரக்கப்படுதல் இரப் பார்க்கு ஈவலென்றிருத்தல். அதனை இன்னுதென்றது "எல்லா—மிரப்பார்க்கொன்றீ யாமை"* கூடுங்கொல்லோ வென்னும் அச்சநோக்கி. எனவே, எல்லாப்பொருளும் ஈதல்வேண்டுமென்பது பெறப்பட்டது. (ச)

உஉரு. ஆற்றுவா ராற்றல் பசியாற்ற லப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின். ரு.

இ - ள் ஆற்றுவார் ஆற்றல் பசி ஆற்றல் - தவத்தான் வலியார்க்கு வலியாவது தம்மையுற்ற பசியைப் பொறுத்தல்:—அப்பசியை மாற்றுவார் ஆற்றலிற்பின்-அவ்வலி தான் அங்ஙனம் பொறுத்தற்கரிய பசியை ஈகையா னெழிப்பாரது வலிக்குப் பின். எ - று.

தாமும் பசித்துப் பிறரையும் அது தீர்க்கமாட்டாதாராற்றலின் தாமும் பசியாது பிறரையும் அது தீர்ப்பாராற்றல் நன்றென்பதாம். (ரு)

உஉசு. அற்ரு ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்ரூன் பொருள்வைப் புழி. சு.

இ - ள். அற்றூர் அழி பசி தீர்த்தல் - வறியாரது மிக்க பசியை அறனெக்கித் தீர்க்க,—பொருள் பெற்றூன் ஒருவன் வைப்புழி அஃது - பொருள்பெற்றூனொருவன் அதனைத் தனக்குதவ வைக்குமிடம் அவ்வறமாகலான். எ - று.

எல்லாநன்மைகளும் அழிய வருதலின், அழிபசியென்றூர். அறனெக்கியென்பது எஞ்சிநின்றது. அற்றூரழிபசி தீர்த்த பொருள் பின்றனக்கே வந்துதவுமென்பதாம். (சு)

உஉஎ. பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்ட லரிது. எ.

இ - ள். பாத்து ஊண் மரீஇயவனை - எஞ்ஞான்றும் பகுத்துண்டல்பயின்ற வனை—பசி என்னும் தீப்பிணி தீண்டல் அரிது - பசியென்றுசொல்லப்படுந் தீயநோய் தீண்டுதலில்லை. எ - று.

* கல்லாமை யச்சங் கயவர் தொழிலச்சஞ்—சொல்லாமை புள்ளுமேசார் சோர்வச்ச - மெல்லா—மிரப்பார்க்கொன் றீயாமை யச்ச மவர்த்தாரிம்—மாணக் குடிப்பிறந்தார்—நாலடியார், குடிப்பிறப்பு.

இவ்வுடம்பினின்று ஞானவொழுக்கங்களே அழித்து அதனால் வருமுடம்புகட்குந் துன்பஞ்செய்தலின், தீப்பிணியெனப்பட்டது. தனக்கு மருத்துவன்முனைவின், பசிப்பிணி நணுகாதென்பதாம். இவையாறுபாட்டானும் ஈதலின்சிறப்புக் கூறப்பட்டது. (எ)

உஉஅ. ஈத்துவக்கு மின்ப மறியார்கொ ருமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர். அ.

இ - ள். தாம் உடைமை வைத்து இழக்கும் வன்கணவர் - தாமுடையபொருளை ஈயாதுவைத்துப் பின்னிழந்துபோம் அருளிலாதார்—ஈத்து உவக்கும் இன்பம் அறியார்கொல்-வறியார்க்கு வேண்டியவற்றைக் கொடுத்து அவருவத்தலான் அருளுடையாரெய்தும் இன்பத்தினைக் கண்டறியார்கொல்லோ! எ - று.

உவக்குமென்பது காரணத்தின்கண்வந்த பெயரெச்சம்; அஃது இன்பமென்னுங் காரியப்பெயர் கொண்டது. அறிந்தாராயின், தாமும் அவ்வின்பத்தை யெய்துவ தல்லது வைத்திழவாரென்பது கருத்து. (அ)

உஉக. இரத்தலி னின்னது மன்ற நிரப்பிய
தாமே தமிய ருணல். கூ.

இ - ள். நிரப்பிய தாமே தமியர் உணல் - பொருட்குறை நிரப்பவேண்டி வறியார்க்கியாது தாமே தனித்துண்டல்—இரத்தலின் இன்னது மன்ற - ஒருவர்க்குப் பிறர்பாற்சென்று இரத்தலினுமின்னது ஒருதலையாக. எ - று.

பொருட்குறைநிரப்பலாவது ஒரோவெண்களைக்குறித்து அத்தனையீட்டுதுமென ஈட்டத்தையே மேற்கொண்டு இவறிக் கூட்டுதல். தனித்தல் பிறரையொழித்தல். இரத்தற்குள்ளது அப்பொழுதை யிளிவரவே பின் நல்குரவில்லை; தமியருண்டற்கு அவையிரண்டுமுளவாமாகலின்; இரத்தலினின்னுதென்றார். நிரப்பியவென்பதற்குத் தேடிய வுணவுகளையென்றுரைப்பாருமுளர். (கூ)

உஙo. சாதலி னின்னாத இல்லை யினிததூஉ
மீத லியையாக் கடை. கo.

இ -ள். சாதலின் இன்னாதது இல்லை - ஒருவற்குச் சாதல்போல இன்னாததொன்றில்லை;—அதூஉம் ஈதல் இயையாக்கடை இனிது - அத்தன்மைத்தாகிய சாதலும் வறியார்க்கொன்றீதன் முடியாதவழி இனிது. எ - று.

பிறர்க்குப் பயன்படாத உடற்பொறை நீங்குதலான், இனிதென்றார். இவை மூன்றுபாட்டானும் ஈயாமையின் குற்றங் கூறப்பட்டது. (கo)

உசும் அதி.—புகழ்.

அஃதாவது இல்வாழ்க்கைமுதல் ஈகையீறாகச் சொல்லப்பட்ட இல்லறத்தின் வழுவாதார்க்கு இம்மைப்பயனாகி இவ்வுலகின்கணிகழ்ந்து இறவாது நிற்குங் கீர்த்தி. இது, பெரும்பான்மையும் ஈதல்பற்றி வருதலின், அதன்பின் வைக்கப்பட்டது.

உஙக. ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு. க.

இ - ள். ஈதல் - வறியார்க்கீக;—இசைபட வாழ்தல் - அதனாற் புகழுண்டாக வாழ்க;—அதுவல்லது உயிர்க்கு ஊதியம் இல்லை - அப்புகழல்லது மக்களுயிர்க்குப் பயன் பிறிதொன்றில்லையாகலான். எ - று.

இசைபடவாழ்தற்குக் கல்வி ஆண்மை முதலிய பிறகாரணங்களும் உளவேனும், "உணவின் பிண்ட முண்டி முதற்று" * ஆகலின், ஈதல் சிறந்ததென்பதற்கு ஞாபக மாக ஈதலென்றார். உயிர்க்கென்பது, பொதுப்படக்கூறினுரேனும் விலங்குயிர்கட் கேலாமையின், மக்களுயிர்மேனின்றது. (க)

உகூஉ. உரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்பார்க்கொன்
றீவார்மே னிற்கும் புகழ். உ.

இ - ள். உரைப்பார் உரைப்பவை எல்லாம் - உலகத்து ஒன்றுரைப்பாருரைப் பனவெல்லாம்—இரப்பார்க்கு ஒன்று ஈவார் மேல் நிற்கும் புகழ் - வறுமையா னிரப் பார்க்கு அவர்வேண்டியதொன்றை யீவார்கணிற்கும் புகழாம். எ - று.

புகழ்தான் உரையும் பாட்டுமென இருவகைப்படும்†. அவற்றுள் உரைப்பா ருரைப்பவையென எல்லார்க்குமுரிய வழக்கினையே யெடுத்தாராயினும்,இனம்பற்றிப் புலவர்க்கேயுரிய செய்யுளுங் கொளப்படும்; படவே பாடுவார் பாடுவனவெல்லாம் புகழா மென்பதூஉம் பெற்றும். ஈதற்காரணஞ் சிறந்தமை இதனுள்ளுங் காண்க. இதனைப் பிறர்மேலும் நிற்குமென்பார் தாமெல்லாஞ் சொல்லுக, புகழ் ஈவார்மே னிற்குமென் றுரைப்பாருமுளர். அது புகழது சிறப்புநோக்காமையறிக. (உ)

உகூஎ. ஒன்ரு வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்ரு தது நிற்பதொன் றில். கூ.

இ - ள். ஒன்ரு உயர்ந்த புகழல்லால் - தனக்கு இணையின்ரு கவோங்கிய புகழல் லது—உலகத்துப் பொன்ரு தது நிற்பது ஒன்று இல் - உலகத்து இறவாதுநிற்பது பிறி தொன்றில்லை. எ - று.

இணையின்ரு கவோங்குதலாவது கொடுத்தற்கரிய உயிருறுப்புப்பொருள்களைக் கொடுத்தமைபற்றி வருதலால் தன்னெடொப்பதின்றித் தானேயுயர்தல். அத்தன் மைத்தாகிய புகழே செய்யப்படுவதென்பதாம். இனி ஒன்ரு வென்பதற்கு ஒருவார்த் தையாகச் சொல்லினெனவும், ஒருதலையாகப் பொன்ரு தது நிற்பதெனவும் உரைப்பாரு முளர். இவை மூன்றுபாட்டானும் புகழது சிறப்புக் கூறப்பட்டது. (கூ)

உகூச. நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப்
போற்ரு துபுத்தே ளுலகு. ச.

இ - ள். நிலவரை நீள் புகழ் ஆற்றின் - ஒருவன் நிலவெல்லைக்கண்ணே பொன் ரு து நிற்கும் புகழைச் செய்யுமாயின்,—புத்தேள் உலகு புலவரைப் போற்ரு து- புத்தேளுலகம் அவனையல்லது தன்னையெய்தினின்ற ஞானிகளைப் பேணாது. எ - று.

புகழுடம்பான் இவ்வுலகும் புத்தேளுடம்பான் அவ்வுலகும் ஒருங்கே யெய்தா மையின் புலவரைப்போற்ரு தென்ரூர். அவன் இரண்டிலகும் ஒருங்கெய்துதல் "புல வர் பாடும் புகழுடையோர் விசும்பின்—வலவ னேவா வான வூர்தி—யெய்துப வென் பதஞ் செய்வினை முடித்து" ‡ எனப் பிறராலுஞ் சொல்லப்பட்டது. (ச)

---

* புறநானூறு, கஅ. † புறநானூறு, உள. ‡ புற்நானூறு, உள.

உகூடு. நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது. டு.

இ - ள். நத்தம் (ஆகும்) கேடும் - புகழுடம்பிற்கு ஆக்கமாகுங் கேடும்,—உளது ஆகும் சாக்காடும் - புகழுடம்புளதாகுஞ் சாக்காடும்,—வித்தகர்க்கல்லால் அரிது - சதுரப்பாடையார்க்கல்லதில்லை. எ - று.

நந்தென்னுந் தொழிற்பெயர் விகாரத்தான் நத்தென்றாய், பின் அம்மென்னும் பகுதிப்பொருள் விகுதிபெற்று, நத்தமென்றாயிற்று. போலென்பது ஈண்டுரையசை. ஆகுமென்பதனை முன்னுங்கூட்டி, அரிதென்பதனைத் தனித்தனி கூட்டியுரைக்க. ஆக்கமாகுங்கேடாவது புகழுடம்பு செல்வமெய்தப் பூதவுடம்பு நல்கூர்தல். உளதாகுஞ் சாக்காடாவது புகழுடம்பு நிற்கப பூதவுடம்பு இறத்தல். நிலையாதனவற்றுள் நிலையின வெய்துவார் வித்தகராகலின், வித்தகர்க்கல்லாலரிதென்றார். இவையிரண்டு பாட்டானும் புகழுடையாரெய்தும் மேன்மை கூறப்பட்டது. (டு)

உகூசு. தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று. சு.

இ - ள். தோன்றின் புகழொடு தோன்றுக - மக்களாய்ப் பிறக்கின் புகழுக்கேதுவாகிய குணத்தோடு பிறக்க;—அஃது இலார் தோன்றலின் தோன்றாமை நன்று - அக்குணமில்லாதார் மக்களாய்ப் பிறத்தலின் விலங்காய்ப் பிறத்தல் நன்று. எ - று.

புகழ் ஈண்டு ஆகுபெயர். அஃதிலாரென்றமையின மக்களாயென்பதூஉம், மக்களாய பிறவாமையென்ற அருததாபதியான விலங்காயப் பிறததலென்பதூஉம், பெற்றும். இகழ்வாரின்மையின, நன்றென்றார். (சு)

உகூள. புகழ்பட வாழாதார் தங்நோவார் தம்மை
யிகழ்வாரை நோவ தெவன். எ.

இ - ள். புகழ் பட வாழாதார் - தமக்குப் புகழுண்டாக வாழமாட்டாதார்—தம் நோவார் - அதுபற்றிப் பிறரிகழ்ந்தவழி இவ்விகழசசி நம் மாட்டாமையான் வந்ததென்று தம்மை நோவாதே—தம்மை இகழ்வாரை நோவது எவன் - தம்மை யிகழ்வாரை நோவதென்கருதி? எ - று.

புகழ்பட வாழலாயிருக்க அதுமாட்டாத குற்றம்பற்றிப் பிறரிகழ்தல் ஒருதலேயாகலின், இகழ்வாரையென்றார். (எ)

உகூஅ. வசையென்ப வையத்தார்க் கெல்லா மிசையென்னு
மெச்சம் பெறுஅ விடின். அ.

இ - ள். இசை என்னும் எச்சம் பெறுவிடின் - புகழென்னுமெச்சம் பெறலரியிருக்க அது பெறுதொழிவராயின்,—வையத்தார்க்கு எல்லாம் வசை என்ப - வையகத்தோர்க்கெல்லாம் அதுதானே வசையென்று சொல்லுவர் நல்லோர். எ - று.

எச்சமென்றார்; செய்தவரிறந்துபோகத் தான் இறவாது நிற்றலின். இகழப்படுதற்கும் பிறிதொருகுற்றம் வேண்டாவென்பது கருத்து. (அ)

உகூக. வசையிலா வண்பயன் குன்று மிசையிலா
யாக்கை பொறுத்த நிலம். கூ.

இ - ள். இசை இலா யாக்கை பொறுத்த நிலம் - புகழில்லாத வுடம்பைச் சுமந்த நிலம்—வசை இலா வண்பயன் குன்றும் - பழிப்பில்லாத வளப்பத்தையுடைய! வீளை யுள் குன்றும். எ - று.

உயிருண்டாயினும் அதனுற்பயன் கொள்ளாமையின் யாக்கையெனவும், அது நிலத்திற்குப் பொறையாகலிற் பொறுத்தவெனவுங் கூறினர். வீளையுள் குன்றுதற் கேது பாவயாக்கையைப் பொறுக்கின்ற வெறுப்பு. குன்றுமென இடத்துநிகழ்பொரு ளின் மேழில் இடத்தின்மேனின்றது. இவை நான்குபாடடானும் புகழில்லாதாரது தாழ்வு கூறப்பட்டது. (கூ)

உசo. வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய
வாழ்வாரே வாழா தவர். கo.

இ - ள். வசை ஒழிய வாழ்வாரே வாழ்வார் - தம்மாட்டு வசையுண்டாகாமல் வாழ்வாரே உயிர்வாழ்வாராவார்;—இசை ஒழிய வாழ்வாரே வாழாதவர் - புகழுண்டா காமல் வாழ்வாரே இறந்தாராவார். எ - று.

வசையொழிதலாவது இசையென்னுமெச்சம் பெறுதலாயினமையின், இசையொ ழிதலாவது வசைபெறுதலாயிற்று. மேல் இசையிலாயாக்கையென்றதனை விளக்கிய வாறு. இதனால் இவ்விரண்டும் உடன் கூறப்பட்டன. மறுமைப்பயன் "வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படும்*" என மேலே கூறப்பட்டது; படவே, இல்லறத்திற்கு இவ்வுலகிற் புகழும் தேவருலகிற்போகமும் பயனென்பது பெற்றாம்.

இனி மனுமுதலிய அறநூல்களாற் பொதுவாகக் கூறப்பட்ட இல்லறங்களெல் லாம் இவர் தொகுத்துக்கூறிய இவற்றுள்ளே அடங்கும்: அஃதறிந்தடக்கிக்கொள்க; யாமுரைப்பிற்பெருகும். (கo)

இல்லறவியல் முற்றிற்று.

* திருக்குறள் - கo.

துறவறவியல்.

இனி முறையானே துறவறங்கூறிய தொடங்கினர். துறவறமாவது மேற் கூறிய இல்லறத்தின் வழுவாதொழுகி அறிவுடையராய்ப் பிறப்பினையஞ்சி வீடுபேற் றின்பொருட்டுத் துறந்தார்க்கு உரித்தாய அறம். அதுதான் வினைமாசுதீர்ந்து அந்தக் காரணங்கள் தாயவாதற்பொருட்டு அவராற் காக்கப்படும் விரதங்களும், அவற்றுள் அவை தாயவாயவழி உதிப்பதாய ஞானமுமென இருவகைப்படும்.

விரதம்.

அவற்றுள் விரதங்களாவன இன்னவறஞ்செய்வலெனவும் இன்னபாவமொழி வலெனவும் தம்மாற்றலுக்கேற்ப வரைந்துகொள்வன. அவைதாம் வரம்பிலவாகலிற் பெருகுமென்றஞ்சி, அவைதம்முள்ளே பலவற்றையும் அகப்படுத்துதிற்குஞ் சிறப்பு டையன சிலவற்றை ஈண்டுக் கூறுவான்றொடங்கி, முதற்கண் அருளுடைமை கூறு கின்றார்.

உரிம் அதி.—அருளுடைமை.

அஃதாவது தொடர்புபற்றாது இயல்பாக எல்லாவுயிர்கண்மேலுஞ் செல்வ தாகிய கருணை. இல்லறத்திற்கு அன்புடைமைபோல இது துறவறத்திற்குச் சிறந்த மையின் முற்கூறப்பட்டது.

உசக. அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள. க.

இ - ள். செல்வத்துள் செல்வம் அருட்செல்வம் - செல்வங்கள் பலவற்றுள்ளும் ஆராய்ந்தெடுக்கப்பட்ட செல்வமாவது அருளான் வருஞ்செல்வம்,—பொருட்செல்வம் பூரியார் கண்ணும் உள - அஃதொழிந்த பொருளான் வருஞ் செல்வங்கள் இழிந்தார் கண்ணுமுளவாம் ஆகலான். எ - று.

அருளான் வருஞ்செல்வமாவது உயிர்களெயோம்பி அவ்வறத்தான் மேம்படுதல். உயர்ந்தார்கண்ணேயல்லதில்லாத அருட்செல்வமே சிறப்புடைய செல்வம், ஏனை நீசர் கண்ணுமுளவாம் பொருட்செல்வங்கள் சிறப்பிலவென்பதாம். (க)

உசஉ. நல்லாற்றூ ணூடி யருளாள்க பல்லாற்றுந்
தேரினு மஃதே துணை. உ.

இ - ள். நல்லாற்றூன் நாடி அருள் ஆள்க - அளவைகளானும் பொருந்துமாற்றூ னும் நன்றான நெறியிலே நின்று, நமக்குத் துணையாம் அறம் யாதென்றாராய்ந்து, அருளுடையராக;—பல்லாற்றுல் தேரினும் துணை அஃதே-ஒன்றையொன்றுவ்வாத சமயநெறிக ளெல்லாவற்றானும் ஆராய்ந்தாலும் துணையாவது அவ்வருளே, பிறி தில்லை. எ - று.

அளவைகளாவன பொறிகளாற் காணுங்காட்சியும், குறிகளானுய்த்துணரும் னுமானமும், கருத்தாமொழியாகிய ஆகமமுமென் மூன்று. ஒப்புப்பற்றியுணரும்

உவமையும், இங்ஙனமன்றியின் இது கூடாதென்றுணரும் அருத்தாபத்தியும், உண்மைக்கு மாறுய இன்மையுமென இவற்றைக் கூட்டி ஆறென்பாருமுளர். இவையும் ஒருவாற்றுன் அவற்றுள்ளே அடங்குதலின், மூன்றென்றலே கருத்து. பொருந்துமாறுவது இது கூடும் இது கூடாதெனத் தன்கண்ணே தோன்றுவது: இதனை வடநூலார் யுத்தியென்ப. ஆற்றுனென்பது வேற்றுமைமயக்கம். ஒன்றையொன்றுவ்வாமையாவது மதவேறுபாட்டான் அளவைகளும் பொருள்களும் தம்முண்மாறுகோடல்; அன்னவாயினும் அருடினையென்றற்கண் ஒக்குமென்பதாம். உயிரை விட்டு நீங்காது இருமையினுமுதவலின், துணையென்றார். இவையிரண்டுபாட்டானும் அருளினது சிறப்புக் கூறப்பட்டது. (உ)

உசஉ. அருள்சேர்ந்த நெஞ்சினர்க் கில்லை யிருள்சேர்ந்த
இன்னு வுலகம் புகல். உ.

இ - ள். இருள் சேர்ந்த இன்னு உலகம் புகல் - இருள் செறிந்த துன்பவுலகத்துட் சென்றுபுகுதல்—அருள் சேர்ந்த நெஞ்சினர்க்கு இல்லை - அருள்செறிந்த நெஞ்சினையுடையார்க்கில்லை. எ - று.

இருள்செறிந்த துன்பவுலகமென்றது திணிந்தவிருளையுடைத்தாய்த் தன்கட்புக்கார்க்குத் துன்பஞ்செய்வதோர் நரகத்தை; அது கீழுலகத்துள் ஓரிடமாகலின், உலகமெனப்பட்டது. (ஊ)

உசச. மன்னுயி ரோம்பி யருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை. ச.

இ - ள். மன் உயிர் ஓம்பி அருள் ஆள்வாற்கு - நிலைபேறுடைய உயிர்களைப்பேணி அவற்றின்கண் அருளுடையனுவானுக்கு—தன் உயிர் அஞ்சும் வினை இல் என்ப - தன்னுயிர் அஞ்சுதற்கேதுவாகிய தீவினைகள் உளவாகாவென்று சொல்லுவர் அறிந்தோர். எ - று.

உயிர்களெல்லாம் நித்தமாகலின், மன்னுயிரென்றார். அஞ்சுதல் துன்பநோக்கியஞ்சுதல். அன்னவறத்தினேன் கொலைமுதலிய பாவங்கள் செய்யாதனவே மறுமைக்கண் நரகம் புகாமைக்கேது கூறியவாறுயிற்று. (ச)

உசரு. அல்ல லருளாள்வார்க் கில்லை வளிவழங்கு
மல்லன்மா ஞாலங் கரி. ரு.

இ - ள். அருள் ஆள்வார்க்கு அல்லல் இல்லை - அருளுடையார்க்கு இம்மையினும் ஒருதுன்பமுண்டாகாது;—வளி வழங்கும் மல்லல் மா ஞாலம் கரி - அதற்குக் காற்றியங்குகின்ற வளப்பத்தையுடைய பெரிய ஞாலத்து வாழ்வார் சான்று. எ - று.

சான்றுவார் தாங்கண்டு தேறிய பொருளைக் காணுதார்க்குத் தேற்றுதற்குரியவர். அருளாள்வார்க்கு அல்லலுண்டாக ஒருகாலத்தும் ஓரிடத்தும் ஒருவருங்கண்டறிவாரின்மையின், இம்மைமுகத்தான் ஞாலத்தார்யாவருஞ் சான்றென்பார், வளிவழங்கு மல்லன்மாஞாலங் கரியென்றார்: எனவே, இம்மைக்கணென்பது பெற்றும். ஞாலம் ஆகுபெயர். இவைமூன்றுபாட்டானும் அத்துணையுடையார்க்கு இருமையினுந் துன்பமில்லாமை கூறப்பட்டது. (எ)

உசக. பொருணீங்கிப் பொச்சாந்தா ரென்ப ரருணீங்கி
யல்லவை செய்தொழுகு வார். கூ.

துறவறவியல்.

இனி முறையானே துறவறங்கூறிய தொடங்கினார். துறவறமாவது மேற் கூறிய இல்லறத்தின் வழுவாதொழுகி அறிவுடையராய்ப் பிறப்பினையஞ்சி வீடுபேற் றின்பொருட்டுத் துறந்தார்க்கு உரித்தாய அறம். அதுதான் வினைமாசுதீர்ந்து அத்தக் காரணங்கள் தாயவாதற்பொருட்டு அவராற் காக்கப்படும் விரதங்களும், அவற்றுன் அவை தாயவாயவழி உதிப்பதாய ஞானமுமென இருவகைப்படும்.

விரதம்.

அவற்றுள் விரதங்களாவன இன்னவறஞ்செய்வலெனவும் இன்னபாவமொழி வலெனவும் தம்மாற்றலுக்கேற்ப வரைந்துகொள்வன. அவைதாம் வரம்பிலவாகலிற் பெருகுமென்றஞ்சி, அவைதம்முள்ளே பலவற்றையும் அகப்படுத்துநிற்குஞ் சிறப்பு டையன சிலவற்றை ஈண்டுக் கூறுவான்றொடங்கி, முதற்கண் அருளுடைமை கூறு கின்றார்.

உரிம் அதி.—அருளுடைமை.

அஃதாவது தொடர்புபற்றாது இயல்பாக எல்லாவுயிர்கண்மேலுஞ் செல்வ தாகிய கருணை. இல்லறத்திற்கு அன்புடைமைபோல இது துறவறத்திற்குச் சிறந்த மையின் முற்கூறப்பட்டது.

உசக. அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள. க.

இ - ள். செல்வத்துள் செல்வம் அருட்செல்வம் - செல்வங்கள் பலவற்றுள்ளும் ஆராய்ந்தெடுக்கப்பட்ட செல்வமாவது அருளான் வருஞ்செல்வம்,—பொருட்செல்வம் பூரியார் கண்ணும் உள - அஃதொழிந்த பொருளான் வருஞ் செல்வங்கள் இழிந்தார் கண்ணுமுளவாம் ஆகலான். எ - று.

அருளான் வருஞ்செல்வமாவது உயிர்களெயோம்பி அவ்வறத்தான் மேம்படுதல். உயர்ந்தார்கண்ணேயல்லதில்லாத அருட்செல்வமே சிறப்புடைய செல்வம், ஏனை நீசர் கண்ணுமுளவாம் பொருட்செல்வங்கள் சிறப்பிலவென்பதாம். (க)

உசஉ. நல்லாற்றூ ணடி யருளாள்க பல்லாற்றுந்
தேரினு மஃதே துணை. உ.

இ - ள். நல்லாற்றூன் நாடி அருள் ஆள்க - அளவைகளானும் பொருந்துமாற்றூ னும் நன்றூன நெறியிலே நின்று, நமக்குத் துணையாம் அறம் யாதென்றூராய்ந்து, அருளுடையராக;—பல்லாற்றுல் தேரினும் துணை அஃதே-ஒன்றையொன்றெவ்வாத சமயநெறிக ளெல்லாவற்றுனும் ஆராய்ந்தாலும் துணையாவது அவ்வருளே, பிறி தில்லை. எ - று.

அளவைகளாவன பொறிகளாற் காணுங்காட்சியும், குறிகளானுய்த்துணரும் னுமானமும், கருத்தாமொழியாகிய ஆகமமுமென மூன்று. ஒப்புப்பற்றியுணரும்

உவமையும், இங்ஙனமன்றியின் இது கூடாதென்றுணரும் அருத்தாபத்தியும், உண்மைக்கு மாறுய இன்மையுமென இவற்றைக் கூட்டி ஆறென்பாருமுளர். இவையும் ஒருவாற்றுன் அவற்றுள்ளே அடங்குதலின், மூன்றென்றலே கருத்து. பொருந்துமாறுவது இது கூடும் இது கூடாதெனத் தன்கண்ணே தோன்றுவது: இதனே வடநூலார் யுத்தியென்ப. ஆற்றுனென்பது வேற்றுமைமயக்கம். ஒன்றையொன்றுவ்வாமையாவது மதவேறுபாட்டான் அளவைகளும் பொருள்களும் தம்முண்மாறுகோடல்; அன்னவாயினும் அருடினேயென்றற்கண் ஒக்குமென்பதாம். உயிரை விட்டு நீங்காத இருணமயினுமுதவலின், துணையென்றார். இவையிரண்டுபாட்டானும் அருளினது சிறப்புக் கூறப்பட்டது. (உ)

உசசுஉ. அருள்சேர்ந்த நெஞ்சினர்க் கில்லை யிருள்சேர்ந்த
வின்ன வுலகம் புகல். உ.

இ - ள். இருள் சேர்ந்த இன்ன உலகம் புகல் - இருள் செறிந்த துன்பவுலகத்துட் சென்றுபுகுதல்—அருள் சேர்ந்த நெஞ்சினர்க்கு இல்லை - அருள்செறிந்த நெஞ்சினையுடையார்க்கில்லை. எ - று.

இருள்செறிந்த துன்பவுலகமென்றது திணிந்தவிருளையுடைத்தாய்த் தன்கட்புக்கார்க்குத் துன்பஞ்செய்வதோர் நரகத்தை; அது கீழுலகத்துள் ஓரிடமாகலின், உலகமெனப்பட்டது. (ஊ)

உசசுச. மன்னுயி ரோம்பி யருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை. ச.

இ - ள். மன் உயிர் ஓம்பி அருள் ஆள்வாற்கு - நிலேபேறுடைய உயிர்களேப்பேணி அவற்றின்கண் அருளுடையனுவானுக்கு—தன் உயிர் அஞ்சும் வினை இல் என்ப - தன்னுயிர் அஞ்சுதற்கேதுவாகிய தீவினைகள் உளவாகாவென்று சொல்லுவர் அறிந்தோர். எ - று.

உயிர்களெல்லாம் நித்தமாகலின், மன்னுயிரென்றார். அஞ்சுதல் துன்பநோக்கியஞ்சுதல். அன்னவறத்தினேன் கொலேமுதலிய பாவங்கள் செய்யாவெனவே மறுமைக்கண் நரகம் புகாமைக்கேது கூறியவாறுயிற்று. (ச)

உசசுரு. அல்ல லருளாள்வார்க் கில்லை வளிவழங்கு
மல்லன்மா ஞாலங் கரி. ரு.

இ - ள். அருள் ஆள்வார்க்கு அல்லல் இல்லை - அருளுடையார்க்கு இம்மையினும் ஒருதுன்பமுண்டாகாது;—வளி வழங்கும் மல்லல் மா ஞாலம் கரி - அதற்குக் காற்றியங்குகின்ற வளப்பத்தையுடைய பெரிய ஞாலத்து வாழ்வார் சான்று. எ - று.

சான்றுவார் தாங்கண்டு தேறிய பொருளேக் காணுதார்க்குத் தேற்றுதற்குரியவர். அருளாள்வார்க்கு அல்லலுண்டாக ஒருகாலத்தும் ஓரிடத்தும் ஒருவருங்கண்டறிவாரின்மையின், இம்மைமுகத்தான் ஞாலத்தார்யாவருஞ் சான்றென்பார், வளிவழங்கு மல்லன்மாஞாலங் கரியென்றார்: எனவே, இம்மைக்கணென்பது பெற்றும். ஞாலம் ஆகுபெயர். இவைமூன்றுபாட்டானும் அத்தினேயுடையார்க்கு இருமையினுந் துன்பமில்லாமை கூறப்பட்டது. (இ)

உசசுக. பொருணீங்கப் பொச்சாந்தா ரென்ப ரருணீங்கி
யல்லவை செய்தொழுகு வார். சு.

இ - ள். அருள் நீங்கி அல்லவை செய்து ஒழுகுவார் - உயிர்கண்மாட்டுச் செய்யப்படும் அருளைத் தலைநின்று தலைப்படுங் கொடுமைகளைச் செய்தொழுகுவாரை—பொருள் நீங்கிப் பொச்சாந்தார் என்பர் - முன்னும் உறுதிப்பொருளைச் செய்யாது தாந்துன்புறுகின்றமையை மறந்தவரென்று சொல்லுவர் நல்லோர். எ - று.

உறுதிப்பொருள் அறம். துன்புறுதல் பிறவித்துன்ப * மூன்றனையும் அனுபவித்தல். மறந்திலராயின், அவ்வாறொழுகாரென்பது கருத்து. (கூ)

உசஎ. அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
இவ்வுல கில்லா கியாங்கு. எ.

இ - ள். அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை - உயிர்கண்மேல் அருளில்லாதார்க்கு வீட்டுலகத்தின்பமில்லை,—பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லாகியாங்கு-பொருளில்லாதார்க்கு இவ்வுலகத்தின்பம் இல்லையாயினுற்போல. எ - று.

அவ்வுலகம் இவ்வுலகம் என்பன ஆகுபெயர். இவ்வுலகத்தின்பங்கட்குப் பொருள் காரணமானாற்போல, அவ்வுலகத்தின்பங்கட்கு அருள் காரணமென்பதாயிற்று. (எ)

உசஅ பொருளற்றூர் பூப்ப ரொருகா லருளற்று
றற்றூர்மற் றூத லரிது. அ.

இ - ள். பொருள் அற்றூர் ஒருகால் பூப்பர் - ஊழான் வறியராயினோர் அது நீங்கிப் பின் ஒருகாலத்துச் செல்வத்தாற்பொலிவர்,—அருள் அற்றூர் அற்றூர் மற்று ஆதல் அரிது - அவ்வாறன்றி அருளிலாதார் பாவமாறுமையின் அழிந்தாரே, பின்னொருகாலத்தும் ஆதலில்லை. எ - று.

மற்று வினைமாற்றின்கண் வந்தது. மேற்பொருளின்மையோடு ஒருவாற்றானைப் புமை கூறினராகலின், அது மறுத்து, பிறவாற்றான் அதனினுங் கொடிதென்பது கூறியவாறு. (அ)

உசக. தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றூற் றேறி
னருளாதான் செய்யு மறம். கூ.

இ - ள். அருளாதான் செய்யும் அறம் தேரின் - உயிர்கண்மாட்டு அருள்செய்யாதவன் செய்யுமறத்தையாராயின்,—தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்று - ஞானமில்லாதவன் ஒருகால் மெய்ப்பொருளை உணர்ந்தாற்போலும். எ - று.

மெய்ப்பொருள் மெய்ந்நூலிற்சொல்லும்பொருள். நிலைபெற்ற ஞானமில்லாதவன் இடையே மெய்ப்பொருளையுணர்ந்தால் அதனைத் தன்ஞானமின்மையால் தானே யழித்துவிடும், அதுபோல அருளாதான் இடையே அறஞ்செய்தால் அதனைத் தன்னருளாமையால் தானேயழித்துவிடுமென்பதாயிற்று; ஆகவே, பிறவறங்கட்கெல்லாம் அருளுடைமை மூலமென்பது பெற்றும். இவை ஈருபாட்டானும் அத்தினையில்லாதார்க்கு வருங்குற்றங் கூறப்பட்டது. (க)

உரூ0. வலியார்முற் றன்னை நினைக்கதான் றன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து. க0.

இ - ள். வலியார் முன் தன்னை நினைக்க - தன்னின்வலியார் தன்னை நலிய வரும் பொழுது அவர் முன் தானஞ்சிநிற்கு நிலையினை நினைக்க—தான் தன்னின் மெலியார்

* பிறவித்துன்பம் மூன்றும் மேலே நான்காம் குறளுரையிற் கூறப்பட்டது.

மேல் செல்லுமிடத்து - அருளில்லாதவன் தன்னினெளியார்மேல் தான் நலியச்செல்லும்பொழுது. எ - று.

மெலியாரெனச் சிறப்புடைய உயர்திணைமேற் கூறினாயினும், ஏனையஃறிணையுங் கொள்ளப்படும். அதனை நினைக்கவே இவ்வுயிர்க்கும் அவ்வாறே அச்சமாமென்றறிந்து அதன்மேல் அருளுடையனுமென்பது கருத்து. இதனால் அருள் பிறத்தற்குபாயங் கூறப்பட்டது. (கo)

உசும் அதி.—புலான்மறுத்தல்.

அஃதாவது ஊனுண்டலையொழிதல். கொலைப்பாவத்தைப் பின்னுமுளதாக்கலின் அதற்குக் காரணமாதலையும் முன்னும் அதனுன் வருதலின் அதன்காரியமாதலையும் ஒருங்குடைத்தாய ஊனுண்டல் அருளுடையார்க்கு இயைவதன்றாகலின், அதனை விலக்குதற்கு, இஃதருளுடைமையின்பின் வைக்கப்பட்டது.

உருக. தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூணுண்பா
னெங்ஙன மாளு மருள். க.

இ - ள். தன் ஊன் பெருக்கற்கு தான்பிறிது ஊன் உண்பான் - தன்னுடம்பை வீக்குதற்பொருட்டுத் தான் பிறிதோருயிரினுடம்பைத் தின்பவன்—எங்ஙனம் ஆளும் அருள் - எவ்வகையான் நடத்தும் அருளினை! எ - று.

பயனிலாத ஊன் பெருக்கலைப் பயனெனக்கருதி இக்கொடுமை செய்வானே அறிவிலாத கொடியோனென்றவாறுயிற்று. எங்ஙனமாளுமருளென்பது ஆளானென்பது பயப்பதின்ற இகழ்ச்சிக்குறிப்பு. (க)

உருஉ. பொருளாட்சி போற்றுதார்க் கில்லை யருளாட்சி
யாங்கில்லை யூன்றின் பவர்க்கு. உ.

இ - ள். பொருளாட்சி போற்றுதார்க்கு இல்லை - பொருளாற் பயன்கோடல் அதனைப் பாதுகாவாதார்க்கில்லை;—ஆங்கு அருளாட்சி ஊன் தின்பவர்க்கு இல்லை - அதுபோல அருளாற்பயன்கோடல் ஊன்றின்பவர்க்கில்லை. எ - று.

பொருட்பயனிழத்தற்குக் காரணம் காவாமை போல, அருட்பயனிழத்தற்கு ஊன்றினல் காரணமென்பதாயிற்று. ஊன்றின்றாயினும் உயிர்கட்கு ஒரு தீங்கும் நினையாதார்க்கு அருளாடற்கிழுக்கில்லையென்பாரை மறுத்து, அஃதுண்டென்பது இவையிரண்டுபோட்டானுங் கூறப்பட்டது. (உ)

உருங. படைகொண்டார் நெஞ்சம்போ னன்றாக்கா தொன்ற
னுடல்சுவை யுண்டார் மனம். ங.

இ - ள். படை கொண்டார் நெஞ்சம்போல் - கொலைக்கருவியைத் தன்கையிற் கொண்டவர் மனம் அதனாற் செய்யுங் கொலையையே நோக்குவதல்லது அருளை நோக்காதவாறுபோல—ஒன்றன் உடல் சுவை உண்டார் மனம் நன்று ஊக்காது - பிறிதோருயிரினுடலைச் சுவைபடவுண்டவர் மனம் அவ்வூனையே நோக்குவதல்லது அருளை நோக்காது. எ - று.

சுவைபடவுண்டல் காயங்களான் இனிய சுவைத்தாக்கி யுண்டல். இதனால் ஊன்றின்றூர் மனம் தீங்குநினைத்தல் உவமவளவையாற் சாதித்து, மேலது வலியுறுத்தப்பட்டது. (ங)

உருச. அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல். ச.

இ - ள். அருள் யாதெனின் கொல்லாமை - அருள்யாதெனின், கொல்லாமை; அல்லது (யாதெனின்) கோறல் - அருளல்ல தியாதெனிற் கோறல்;—அவ்வூன் றின பொருளல்லது - ஆகலான், அக்கோறலான் வரு த ஊனைத்தின்னை பாவம். எ - று.

உபசாரவழக்காற் கொல்லாமை கோறலாகிய காரியங்களை அருள் அல்லதென காரணங்களாக்கியும், ஊன்றின்னையாகிய காரணத்தைப் பாவமெனக் காரியமாக் யுங்கூறினர். அருளல்லது கொடுமை. சிறபபுப்பற்றி அறமும் பொருளெனப்படு லின், பாவம் பொருளல்லதெனப்பட்டது கோறலென மூன்னின்றமையின், அ னேன்றார். இனி இதனை இவ்வாறன்றி அருளலலதென்பதனை ஒன்றாக்கி, கொ லாமை கோறலென்பதற்குக் கொல்லாமையென்னும் விதத்தையழித்தலென்றுமை பாருமூளர். (

உருரு. உண்ணுமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
வண்ணுத்தல் செய்பா தளறு. ரு.

இ - ள். உயிர் நிலை ஊன் உண்ணுமை உள்ளது ஒருசாருயிர் உடம்பின்கண்டே நிற்றல் ஊனுண்ணுமையென்கின்ற அறத்தின்கண்ணதா;—உண்ண அளறு அண்ணு தல்செய்யாது - ஆகலான், அந்நிலை குலைய ஒருவன் அதனையுண்ணுமாயின், அவ விழுங்கிய நிரயம் பின் உமிழ்தற்கு அங்காவாது. எ - று.

உண்ணப்படும்விலங்குகள் அதனுற்றேய்ந்து சிலவாக ஏனையபலவாய்வருதல் உண்ணுமையுள்ள துயிர்நிலையென்றார். உண்ணினனைபது உண்ணுவனைத் தொடர்ந்து றது. ஊனுண்டவன் அப்பாவததான வருங்காலம் நரகத்துளழுந்துமென்ப கொலைப்பாவம் கொண்டார்மேனின்றலின பின்னும் ஊனைபபாாக்குப் பாவமில்லையெ பாரை மறுத்து, அஃதுண்டென்பது இவ்வரண்யபாடடானுங கூறப்பட்டது.

உருக. தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டா லூன்றருவா ரில். கூ.

இ - ள். தினற்பொருட்டு உலகு கொல்லாது எனின் - பேதைமை காரணவல்லது ஊன்றின்னை காரணமாகவுலகங் கொல்லாதாயின், விலைப்பொருட்டின தருவார் யாரும் இல் - பொருள் காரணமாக ஊன் விறபார் யாவரும் இல்லை. எ

உலகென்பது ஈண்டு உயிர்ப்பன்மைமேனின்றது. பின்னிகழுந்தின்னை (னிகழுங்கொலைக்குக் காரணமாகாமையின் தின்பார்க்குக் காரணதான் வரும் பில்லையென்ற வாதியைநோக்கி, அருத்தாபத்தியளவையாற் காரணமாதல் சாதி லின்,இதனுன் மேலது வலியுறுத்தப்பட்டது.

உருஎ.. உண்ணுமை வேண்டும் புலாலல் பிறிதொன்றன்
புண்ணு ணுணர்வார்ப் பெறின். எ.

இ - ள். புலால் பிறிதொன்றன் புண் - புலாலாவது பிறிதோருடம்பின் புண் ஆதி, உணர்வார்ப் பெறின் உண்ணுமை வேண்டும் - அது அய்தன்மை யறிவார் பெறின், அதனை உண்ணுதொழியல் வேண்டும். எ - று.

அஃதென்னல்வேண்டுமோய்தம்விகாரத்தாற்றொக்கது. அம்மெய்ம்மையுணராமையின், அதனையுண்ணின்றுரென்பதாம். பொருந்துமாற்றானும் * புலாலுண்டல் இழிந்ததென்பது இதனாற் கூறப்பட்டது. (எ)

உருஅ. செயிரிற் றலைப்பிரிந்த காட்சியா ருண்ணூ
ருயிரிற் றலைப்பிரிந்த வூன். அ.

இ - ள். செயிரின் றலைப்பிரிந்த காட்சியார் - மயக்கமாகிய குற்றத்தினீங்கிய அறிவினையுடையார் — உயிரின் றலைப்பிரிந்த ஊன் உண்ணர் - ஒருயிரினீங்கிவந்த ஊனை யுண்ணார். எ - று.

தலைப்பிரிவென்பது ஒருசொல். பிணமென ஊனின்மெய்ம்மை தாமேயுணர்தலின், உண்ணாரென்றார். (அ)

உருக. அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று. கூ.

இ - ள். அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் - தீயின்கண் நெய் முதலிய அவிகளைச் சொரிந்து ஆயிரம்வேள்வி வேட்டலினும்,—ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று - ஒருவிலங்கினுயிரைப்போக்கி அது நின்ற ஊனையுண்ணாமை நன்று. எ - று.

அவ்வேள்விகளான் வரும் பயனினும் இவ்விரதத்தான் வரும்பயனே பெரிதென்பதாம். (கூ)

உ.கூ0. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும். கo.

இ - ள். கொல்லான் புலாலை மறுத்தானை - ஒருயிரையுங்கொல்லாதவனுமாய்ப் புலாலையுமுண்ணாதவனை — எல்லாவுயிரும் கைகூப்பிதொழும் - எல்லாவுயிருங் கைகுவித்துத் தொழும். எ - று.

இவ்விரண்டறமும் ஒருங்குடையார்க்கல்லது ஒன்றையுடையார்க்கு அதனாற் பயனில்லையாகலின், கொல்லாமையுமுடன்கூறினர். இப்பேரருளுடையான் மறுமைக்கட் டேவரின் மிக்கானெனவே அப்பயனது பெருமை கூறியவாறு. இவையூன்றுபாட்டானும் ஊனுண்ணாமையதுயர்ச்சி கூறப்பட்டது. (கo)

உ ள ம் அதி.—தவம்.

அஃதாவது மனம் பொறிவழி போகாது நிற்றற்பொருட்டு விரதங்களான் உண்டியுருக்கலும், கோடைக்கண்வெயினிலைநிற்றலும், மாரியினும் பனியினும் நீர்நிலை நிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு, அவற்றாற் றம்முயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்து, பிறவுயிர்களையோம்புதல். புலான்மறுத்து உயிர்கண்மேல் அருள் முதிர்ந்துழிச் செய்யப்படுவதாகலின், இது புலான்மறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

உ.கூ. உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
யற்றே தவத்திற் குரு. க.

* பொருந்துமாறு—புத்தி.

உறிச. அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல். ச.

இ - ன். அருள் யாதெனின் கொல்லாமை - அருள்யாதெனின், கொல்லாமை; அல்லது (யாதெனின்) கோறல் - அருளல்ல தியாதெனிற் கோறல்;—அவ்வூன் றினை பொருளல்லது - ஆகலான், அக்கோறலான் வரத ஊனைத்தின்னை பாவம். எ - று.

உபசாரவழக்காற் கொல்லாமை கோறலாகிய காரியங்களை அருள் அல்லதை காரணங்களாக்கியும், ஊன்றின்னையாகிய காரணத்தைப் பாவமெனக் காரியமாக்கியும் புங்கூறினர். அருளல்லது கொடுமை. சிறபபுப்பற்றி அறமும் பொருளெனப்படு லின், பாவம் பொருளல்லதெனப்பட்டது கோறலென முன்னின்றமையின், அது னென்னூர். இனி இதனை இவ்வாறன்றி அருளலலதென்பதனை ஒன்முக்கி, கொ லாமை கோறலென்பதற்குக் கொல்லாமையென்னும் விரதத்தையழித்தலென்றை பாருமுளர். (

உறிரி. உண்ணுமை யுள்ளு துயிர்நிலே யூனுண்ணு
வண்ணுத்தல் செய்யா தளறு. ரி.

இ - ள். உயிர் நிலை ஊன் உண்ணுமை உள்ளது ஒருசாருயிர் உடம்பின்கண் நிற்றல் ஊனுண்ணுமையென்கின்ற அறத்தின்கண்ணது;—உண்ண அளறு அண்ண தல்செய்யாது - ஆகலான், அந்நிலை குலைய ஒருவன் அதனையுண்ணுமாயின், அவ விழுங்கிய நிரயம் பின் உமிழ்தற்கு அங்காவாது. எ - று.

உண்ணப்படும்மிலங்குகள் அதனுற்றேய்ந்து சிலவாக வனையபலவாய்வருதல் உண்ணுமையுள்ளதுயிர்நிலையென்றார். உண்ணுவனவது உண்ணுவனத் தின்றது. ஊனுண்டவன் அப்பாவதனான வந்தகாலம் நிரயத்துனுழ்துமென்ப. கொலைப்பாவம் கொன்றார்மீளனிற்றலின பனனூலுண்ணபாவத்துப் பாவமில்லை பாரை மறுத்து, அஃதுண்டென்பது இவ்வரண்டுபாடலானுங கூறப்பட்டது.

உறிக. தினற்பொருட்டற் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டா லூன்றருவா ரில். கூ.

இ - ள். தினற்பொருட்டு உலகு கொல்லாது எனின் - பேதைமை காரணமாவது ஊன்றின்னை காரணமாகவுலகங் கொல்லாதாயின், விலைப்பொருட்டா தருவார் யாரும் இல் - பொருள் காரணமாக ஊன் விறபார் யாவரும் இல்லை. எ

உலகென்பது ஈண்டு உயிர்ப்பன்மைமேனின்றது. பின்னிகழுந்தின்னை னிகழுங்கொலைக்குக் காரணமாகாமையின் தின்பார்க்குக் காரணததான் வரும் மில்லையென்ற வாதியையோக்கி, அருத்தாபத்தியளவையாற் காரணமாதல் சா வின், இதனுன் மேலது வலியுறுத்தப்பட்டது.

உறிஎ. உண்ணுமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ணு ணுணர்வார்ப் பெறின். எ.

இ - ன். புலால் பிறிதொன்றன் புண் - புலாலாவது பிறிதோருடம்பின் புண் அது உணர்வார்ப் பெறின் உண்ணுமை வேண்டும் - அது தாய்தன்மை யறிவா பெறின், அதனை உண்ணுதொழியல் வேண்டும். எ - று.

அஃதென்னல்வேண்டுமாய்தம்விகாரத்தாற்செய்க்கது. அம்மெய்ம்மையுணராமையின், அதனையுண்ணின்றுரென்பதாம். பொருந்துமாற்றுனும் * புலாலுண்டல் இழிந்ததென்பது இதனுற் கூறப்பட்டது. (எ)

உருஅ. செயிரிற் றலைப்பிரிந்த காட்சியா ருண்ணு
ருயிரிற் றலைப்பிரிந்த வூன். அ.

இ - ள். செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் - மயக்கமாகிய குற்றத்தினீங்கிய அறிவினையுடையார் — உயிரின் தலைப்பிரிந்த வூன் உண்ணுர் - ஒருயிரினீங்கிவந்த வூனை யுண்ணுர். எ - று.

தலைப்பிரிவென்பது ஒருசொல். பிணமென வூனின்மெய்ம்மை தாமேயுணர்தலின், உண்ணுரென்றுர். (அ)

உருகூ. அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணுமை நன்று. கூ.

இ - ள். அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் - தீயின்கண் நெய் முதலிய அவிகளைச் சொரிந்து ஆயிரம்வேள்வி வேட்டலினும்,—ஒன்றன் உயிர் செகுத்து உண்ணுமை நன்று - ஒருவிலங்கினுயிரைப்போக்கி அது கின்ற வூனையுண்ணுமை நன்று. எ - று.

அவ்வேள்விகளான் வரும் பயனினும் இவ்விரதத்தான் வரும்பயனே பெரிதென்பதாம். (கூ)

உ.கூ0. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும். கூ0.

இ - ள். கொல்லான் புலாலை மறுத்தானை - ஒருயிரையுங்கொல்லாதவனுமாய்ப் புலாலையுமுண்ணுதவனை—எல்லாவுயிரும் கைகூப்பிதொழும் - எல்லாவுயிருங் கைகுவித்துத் தொழும். எ - று.

இவ்விரண்டறமும் ஒருங்குடையார்க்கல்லது ஒன்றையுடையார்க்கு அதனுற் பயனில்லையாகலின், கொல்லாமையுமுடன்கூறினர். இப்பேரருளுடையான் மறுமைக்கட் டேவரின் மிக்காளுமென அப்பயனது பெருமை கூறியவாறு. இவைமூன்றுபாட்டானும் ஊனுண்ணுமையதுயர்ச்சி கூறப்பட்டது. (கூ0)

உளம் அதி.—தவம்.

அஃதாவது மனம் பொறிவழி போகாது நிற்றற்பொருட்டு விரதங்களான் உண்டிசுருக்கலும், கோடைக்கண்வெயினிலைநிற்றலும், மாரியினும் பனியினும் நீர்நிலை நிற்றலும் முதலிய செயல்களே மேற்கொண்டு, அவற்றுற் றம்முயிர்க்கு வருந் துன்பங்களைப் பொறுத்து, பிறவுயிர்களையோம்புதல். புலான்மறுத்து உயிர்கண்மேல் அருண்முதிர்ந்துழிச் செய்யப்படுவதாகலின், இது புலான்மறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

உகூ. உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
யற்றே தவத்திற் குரு. கூ.

---

* பொருந்துமாறு—புத்தி.

உறிச. அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல். ச.

இ-ன். அருள் யாதெனின் கொல்லாமை - அருள்யாதெனின், கொல்லாமை;—அல்லது (யாதெனின்) கோறல் - அருளல்ல தியாதெனிற் கோறல்;—அவ்வூன் தினல் பொருளல்லது - ஆகலான், அக்கோறலான் வந்த ஊனைத்தின்னை பாவம். எ - று.

உபசாரவழக்காற் கொல்லாமை கோறலாகிய காரியங்களை அருள் அல்லதெனக் காரணங்களாக்கியும், ஊன்றின்னையாகிய காரணத்தைப் பாவமெனக் காரியமாக்கியுங்கூறினர். அருளல்லது கொடுமை. சிறபபுப்பற்றி அறமும் பொருளெனப்படுதலின், பாவம் பொருளல்லதெனப்பட்டது கோறலென முன்னின்றமையின், அவ்வூனென்றார். இனி இதனை இவ்வாறன்றி அருளலலதென்பதனை ஒன்றாக்கி, கொல்லாமை கோறலென்பதற்குக் கொல்லாமையென்னும் விரதத்தையழித்தலென்றுரைப் பாருமுளர். (ச)

உறிஙி. உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
வண்ணாத்தல் செய்யா தளறு. ஙி.

இ-ள். உயிர் நிலை ஊன் உண்ணாமை உள்ளது-ஒருசாருயிர் உடம்பின்கண்ணே நிற்றல் ஊனுண்ணாமையென்கின்ற அறத்தின்கண்ணது;—உண்ண அளறு அண்ணாத்தல்செய்யாது - ஆகலான், அந்நிலை குலைய ஒருவன் அதனையுண்ணுமாயின், அவனை விழுங்கிய நிரயம் பின் உமிழ்தற்கு அங்காவாது. எ - று.

உண்ணப்படும்விலங்குகள் அதனற்றேய்ந்து சிலவாக ஏனையபலவாய்வருதலின், உண்ணாமையுள்ளதுயிர்நிலையென்றார். உண்ணினனெனபது உண்ணவெனத் திரிந்துநின்றது. ஊனுண்டவன் அப்பாவத்தான பகுதிகாலம் நிரயத்துவளர்ந்துமென்பதாம். கொலைப்பாவம் கொன்றார்மீளன்றலின பனஉணாபாக்குப் பாவமில்லையென்பாரை மறுத்து, அஃதுண்டென்பது இவ்வாரண்டுபாடாலுங் கூறப்பட்டது. (ஙி)

உறிங. தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டா லூன்றருவா ரில். சு.

இ-ள். தினற்பொருட்டு உலகு கொல்லாது எனின் - பேதைமை காரணமாக வல்லது, ஊன்றின்னை காரணமாகவுலகங் கொல்லாதாயின், விலைப்பொருட்டூன் தருவார் யாரும் இல் - பொருள் காரணமாக ஊன் விற்பார் யாவரும் இல்லை. எ - று.

உலகென்பது ஈண்டு உயிர்ப்பன்மைமேனின்றது. பின்னிகழுந்தின்னை முன்னிகழுங்கொலைக்குக் காரணமாகாமையின் தின்பார்க்குக் காரணததான் வரும்பாவமில்லையென்ற வாதியையோக்கி, அருத்தாபத்தியளவையாற் காரணமாதல் சாதித்தலின், இதனுன் மேலது வலியுறுத்தப்பட்டது. (சு)

உறிஙஅ. உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ணது ணர்வார்ப் பெறின். எ.

இ-ன். புலால் பிறிதொன்றன் புண் - புலாலாவது பிறிதோருடம்பின் புண்:—அது உணர்வார்ப் பெறின் உண்ணாமை வேண்டும் - அது தன்மை யறிவாரைப் பெறின், அதனை உண்ணுதொழியல் வேண்டும். எ - று.

அஃதென்னல்வேண்டுமாய்தம்விகாரத்தாற்றெரிக்கற. அம்மெய்ம்மைபுணராமை யின், அதனையுண்ணின்றுரென்பதாம். பொருந்துமாற்றுணும் * புணாறுண்டல் இறிந்த தென்பது இதனாற் கூறப்பட்டது. (எ)

உருஅ. செயிரிற் றலைப்பிரிந்த காட்சியா ருண்ணு
ருயிரிற் றலைப்பிரிந்த வூன். அ.

இ - ள். செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் - மயக்கமாகிய குற்றத்தினீங்கிய அறிவினையுடையார்—உயிரின் தலைப்பிரிந்த ஊன் உண்ணார் - ஒருயிரினீங்கிவந்த ஊனை யுண்ணார். எ - று.

தலைப்பிரிவென்பது ஒருசொல். பிணமென ஊனின்மெய்ம்மை தாமேயுணர்த லின், உண்ணாரென்றார். (அ)

உருக. அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று. க.

இ - ள். அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் - தீயின்கண் நெய் முதலிய அவிகளைச் சொரிந்து ஆயிரம்வேள்வி வேட்டலினும்,—ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று - ஒருவிலங்கினுயிரைப்போக்கி அது தின்ற ஊனையுண்ணாமை நன்று. எ - று.

அவ்வேள்விகளான் வரும் பயனினும் இவ்விரதத்தான் வரும்பயனே பெரி தென்பதாம். (க)

உக0. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும். க0.

இ - ள். கொல்லான் புலாலை மறுத்தானை - ஒருயிரையுங்கொல்லாதவனுமாய்ப் புலாலையுமுண்ணாதவனை—எல்லாவுயிரும் கைகூப்பிதொழும் - எல்லாவுயிருங் கை குவித்துத் தொழும். எ - று.

இவ்விரண்டறமும் ஒருங்குடையார்க்கல்லது ஒன்றேயுடையார்க்கு அதனாற் பய னில்லையாகலின், கொல்லாமையுமுடன்கூறினர். இப்பேருளுடையான் மறுமைக்கட் டேவரின் மிக்காளுமென அப்பயனது பெருமை கூறியவாறு. இவைமூன்றுபாட் டானும் ஊனுண்ணாமையதுயர்ச்சி கூறப்பட்டது. (க0)

உளம் அறி.—தவம்.

அஃதாவது மனம் பொறிவழி போகாது நிற்றற்பொருட்டு விரதக்களான் உண்டிசுருக்கலும், கோடைக்கண்வெயினிலைநிற்றலும், மாரியினும் பனியினும் நீர்நிலை நிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு, அவற்றாற் றம்முயிர்க்கு வருந் துன்பங் களைப் பொறுத்து, பிறவுயிர்களையோம்புதல். புலான்மறுத்து உயிர்கண்மேல் அருண் முதிர்ந்துழிச் செய்யப்படுவதாகலின், இது புலான்மறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

உகக. உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
யற்றே தவத்திற் குரு. க.

---

* பொருந்துமாறு—புத்தி.

இ - ள். தவத்திற்கு உரு - தவத்தின் வடிவு—உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை அற்றே - உண்டிசுருக்கன்முதலியவற்றால் தம்முயிர்க்கு வருந் தன்பங்களைப் பொறுத்தலும் தாம் பிறவுயிர்கட்குத் தன்பஞ்செய்யாமையுமாகிய அவ்வளவிற்று. எ - று.

மற்றுள்ளனவெல்லாம் இவற்றுள்ளே அடங்குதலின், அற்றேயெனத் தேற்றே காரங்கொடுத்தார். தவத்திற்குருவற்றென்பது யானையதுகோடு கூரிதென்பதனை யானைக்குக் கோடு கூரிதென்றற்போல ஆருவதன்பொருட்கண் நான்காவது வந்த மயக்கம். இதனால் தவத்ததிலக்கணங் கூறப்பட்டது. (க)

உஉ. தவமுந் தவமுடையார்க் காகு மவமதனை
யஃதிலார் மேற்கொள் வது. உ.

இ - ள். தவமும் தவமுடையார்க்கு ஆகும் - பயனேயன்றித் தவந்தானும் உண் டாவது முற்றவமுடையார்க்கே,—அதனை அஃது இலார் மேற்கொள்வது அவம்-ஆ கலான், அத்தவத்தை அம்முற்றவமில்லாதார் முயல்வது பயனின்முயற்சியாம். எ - று.

பரிசயத்தால் அறிவுமாற்றலுமுடையராய் முடிவுபோக்கலின் தவமுடையார்க் காகுமென்றும், அஃதில்லாதார்க்கு அவையின்மையின் முடிவுபோகாமையின் அவமா மென்றுங் கூறினர். (உ)

உஉஉ. துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொன்
மற்றை யவர்க டவம். ஊ.

இ - ள். மற்றையவர்கள் - இல்லறத்தையே பற்றி நிற்பார்—துறந்தார்க்குத் துப் புரவு வேண்டி தவம் மறந்தார்கொல் - துறந்தார்க்கு உண்டியும் மருந்தும் உறையுளு முதவலே விரும்பித் தாந்தவஞ்செய்தலே மறந்தார்போலும்! எ - று.

துப்புரவு அனுபவிக்கப்படுவன. * "வேண்டிய வேண்டியாங் கெய்த" ற்பயத்த தாகலின் யாவராலுஞ் செய்யப்படுவதாய தவத்தைத் தாஞ்செய்யுந் தானத்தின் மேல் விருப்பமிருதியான் மறந்தார்போலுமெனவே, தானத்திற்றவம் மிக்கதென்பது பெற்றும். (ஊ)

உஉச. ஒன்னுர்த் தெறலு முவந்தாரை யாக்கலு
மெண்ணிற் றவத்தான் வரும்.

இ - ள். ஒன்னுர்த் தெறலும் - தம்மறத்திற்குப் பகையாய் அழிவுசெய்தாரைக் கெடுத்தலும்—உவந்தாரை ஆக்கலும் - அதனே யுவந்தாரை உயர்த்தலுமாகிய இவ்வி ரண்டையும்—எண்ணின் தவத்தான் வரும் - தவஞ்செய்வார் நினைப்பராயின், அவர் தவவலியான் அவை அவர்க்குளவாம். எ - று.

முற்றத்துறந்தார்க்கு ஒன்னுரும் உவந்தாரும் உண்மை கூடாமையின், தவத்திற் கேற்றியுரைக்கப்பட்டது. எண்ணினென்றதனுன், அவர்க்கு அவை யெண்ணுமை இயல்பென்பது பெற்றும். ஒன்னுர்பெரியராயினும், உவந்தார் சிறியராயினும், கேடு மாக்கமும் நினைத்ததனேயானே வந்து நிற்குமெனத் தவஞ்செய்வார்மேலிட்டுத் தவத் தினைதாற்றல் கூறியவாறு. (ச)

---

* திருக்குறள், உகடு.

உகடு. வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப் படும். கூ.

இ - ள். வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் - முயன்றால் மறுமைக்கட்டாம் வேண்டிய பயன்கள் வேண்டியவாறே பெறலாம் ஆதலால்,—செய்தவம் ஈண்டு முயலப்படும் - செய்யப்படுவதாய தவம் இம்மைமக்கண் அறிவுடையோரான் முயலப் படும். எ -று.

ஈண்டென்பதனுன் மறுமைக்கணென்பது பெற்றாம். மேற்கதி, வீடுபேறுகள் தவத்தானன்றி எய்தப்படாவென்பதாம். இவை நான்குபாட்டானும் தவத்தது சிறப்புக் கூறப்பட்டது. (கூ)

உகஉ. தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லா
ரவஞ்செய்வா ராசையுட் பட்டு. கூ.

இ - ள். தங்கருமம் செய்வார் தவம் செய்வார் - தங்கருமஞ் செய்வாராவார் துறந்து தவத்தைச்செய்வார்,—மற்று அல்லார் ஆசையுள் பட்டு அவம் செய்வார் - அவரையொழிந்த பொருளின்பங்களைச் செய்வார் அவற்றின்கணுசையாகிய வலையுட் பட்டுத் தமக்குக் கேடு செய்வார். எ - று.

அநித்தமாய் மூவகைத் துன்பத்தாய் உயிரின்வேறுய உடற்கு வருத்தம் வரு மென்றுழியாது தவத்தினைச் செய்ய, பிறப்புப்பிணிமூப்பிறப்புக்களான் அநாதியாகத்துன்பமெய்திவருகின்ற உயிர் ஞானம் பிறந்து வீடு பெறுமாகலின், தவஞ்செய்வாரைத் தங்கருமஞ்செய்வாரென்றும், கணத்துளழிவதாய சிற்றின்பத்தின்பொருட்டுப் பலபிறவியுந் துன்புறத்தக்க பாவஞ்செய்தலைகோடலின், அல்லாதாரை அவஞ் செய்வாரென்றும், கூறினர். மற்று வினைமாற்றின்கண் வந்தது. (கூ)

உகஎ. சுடச்சுடரும் பொன்போ லொளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு. எ.

இ - ள். சுடச் சுடரும் பொன்போல் - தீயின்கணேடும் பொன்னுக்கு அது சுடச் சுடத் தன்னெடு கலந்த குற்றநீங்கி ஒளிவிடுமாறுபோல—நோற்கிற்பவர்க்குத் துன்பம் சுடச் சுட ஒளிவிடும் - தவஞ்செய்ய வல்லார்க்கு அதனுன் வருந்துன்பம் வருத்த வருத்தத் தம்மொடு கலந்த பாவநீங்கி ஞானமிரும். எ - று.

சுடச்சுடரும் பொன்போலென்றுராயினும், கருத்துநோக்கி இவ்வாறுரைக்கப் பட்டது. ஒளிபோலப் பொருள்களை விளக்கலின், ஒளியென்றார். (எ)

உகஅ. தன்னுயிர் தானறப் பெற்றானே யேனைய
மன்னுயி ரெல்லாந் தொழும். அ.

இ - ள். தன் உயிர் தான் அறப்பெற்றானே - தன்னுயிரைத் தான்றனக்குரித்தாகப் பெற்றவனே—ஏனைய மன்னுயிரெல்லாம் தொழும் - பெருதனவாகிய மன்னுயிர்களெல்லாந்தொழும். எ- று.

தனக்குரித்தாதல் தவமாகிய தன்கருமஞ்செய்தல். அதனினூங்குப் பெறுதற்கரிய தின்மையின், பெற்றானெனறார். அது பெருதனவென்றது ஆசையுட்பட்டு அவஞ்செய்யுமுயிர்களை. சாபமுமருளுமாகிய இரண்டாற்றலுமுடைமையின், தொழுமென்றார். (அ)

உசுசூ. கூற்றங் குதித்தலும் கைகூடு நோற்றலி
னூற்ற றலைப்பட் டவர்க்கு. சூ.

இ - ள். கூற்றம் குதித்தலும் கைகூடும் - கூற்றத்தைக் கடத்தலும் உண்டாவ தாம்—நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்க்கு - தவத்தான் வரும் ஆற்றலைத் தலைப் பட்டார்க்கு. எ - று.

சிறப்பும் ஈம அது கூடாமை விளக்கிற்று; மன்னுயிரெல்லாந் தொழுதலேயன்றி இதுவுங் கைகூடுமென எச்சவும்மையாக வுரைப்பினுமமையும். ஆற்றல் சாபவரங்கள். இவைதான்குபாட்டானும் தவஞ்செய்வாரது உயர்ச்சி கூறப்பட்டது. (சூ)

உளo இலர்பல ராகிய காரண நோற்பார்
சிலர்பலர் நோலா தவர். கo.

இ - ள் இலர் பலராகிய காரணம் - உலகத்துச் செல்வர்கள் சிலராக நல்கூர் வார் பலராதற்குக் காரணம் யாதெனின்,—நோற்பார் சிலர் நோலாதவர் பலர் - அது தவஞ்செய்வார் சிலராக மு தவஞ்செய்யாதார் பலராதல். எ - று.

செல்வநல்குரவென்பன ஈண்டறிவினது உண்மையின்மைகளையுங் குறித்து நின் றன; என்னை? "நுண்ணுணர் வின்மை வறுமை யஃதடைமை—பண்ணப் பிணைத்த பெருஞ் செல்வம் *" என்றாராகலின். நோற்பார் சிலரெனக் காரணங் கூறினமை யான், காரியம் வருவித்துரைக்கப்பட்டது. தவஞ்செய்யாதார்க்கு இம்மையின்பமு மில்லையென இதனால் அவரது தாழ்வு கூறப்பட்டது. (கo)

உஅம் அதி.—கூடாவொழுக்கம்.

அஃதாவது தாம் விட்ட காமவின்பத்தை உணர்ன்மையிற் பின்னும் விரும்பு மாறுதோன்ற அவ்வாறே கொண்டு நின்று தவத்தோடி பொருந்தாததாய தீயவொ ழுக்கம். அது விலக்குதற்கு இது தவத்தின்பின் வைக்கப்பட்டது.

உளக. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க
ளைந்து மகத்தே நகும். க.

இ - ள் வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் - வஞ்சம் பொருந்திய மனத்தை யுடையவனது மறைந்தவொழுக்கத்தை—பூதங்கள் ஐந்தும்அகத்தே நகும்-உடம்பாய் அவனோடு கலந்து நிற்கின்ற பூதங்களைந்துங் கண்டு தம்முள்ளே நகும். எ - று.

காமம் தன்கண்ணே தோன்றி நலியாநிற்கவும் அதனதின்மைகூறிப் புறத்தாரை வஞ்சித்தலின் வஞ்சமனமென்றும், அங்ஙனிவு பொறுக்கமாட்டாதொழுகுங் கனவொ ழுக்கத்தைப் படிற்றொழுக்கமென்றும், உலகத்துக்களவுடையார் பிறரறியாமற் செய் வனவற்றிற்கு ஐம்பெரும்பூதங்கள் சான்றாகலின், அவ்வொழுக்கத்தையும் அவன் மறைக்கின்றவாற்றையுமறிந்து அவனறியாமற் றம்முள்ளே நகுதலின், அகத்தே நகு மென்றுங்கூறினர். செய்தகுற்றம் மறையாதாகலின், அவ்வொழுக்கம் ஆகாதென் பது கருத்து. (க)

---

* நுண்ணுணர் வின்மை வறுமை யஃதடைமை—பண்ணப் பிணைத்த பெருஞ் செல்வ - மென்னுங்காற்—பெண்ணவா யாணிழந்த பேடி யணியாளோ—கண்ணவாத் தக்க கலம்— சாலடியார், அறிவின்மை.

உஎஉ. வானுயர் தோற்ற மெவன்செய்யுந் தன்னெஞ்சந்
தானறி குற்றப் படின். உ.

இ - ள். வான் உயர் தோற்றம் எவன் செய்யும் - ஒருவனுக்கு வான்போலுயர்ந்த தவவேடம் என்ன பயனைச் செய்யும்,—தான் அறி குற்றம் தன் நெஞ்சம் படின் - தான் குற்றமென்றறிந்த அதன்கண்ணே தன்னெஞ்சு தாழுமாயின். எ - று.

வானுயர் தோற்றமென்பது "வான்றோய்குடி*" என்றாற்போல இலக்கணவழக்கு. அறியாது செய்த குற்றமல்லது அறிந்துவைத்துச் செய்த குற்றங் கழுவப் படாமையின், நெஞ்சு குற்றத்ததாயே விடும்; விடவே, நின்ற வேடமாத்திரத்துக்குப் புறத்தாரை வெருட்டுதலேயல்லது வேறுபயனில்லை யென்பதாம். (உ)

உஎஊ. வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று. ஊ.

இ - ள். வலி இல் நிலைமையான் வல்லுருவம் - மனத்தைத் தன்வழிப்படுத்தும் வலியில்லாத இயல்பினையுடையான் வலியுடையார் வேடத்தைக்கொண்டு தான் அதன் வழிப்படுதல்—பெற்றம் புலியின்றோல் போர்த்து மேய்ந்தற்று - புசு காவலர் கடியாமற் புலியின்றோலைப் போர்த்துப் பைங்கூழை மேய்ந்தாற்போலும். எ - று.

† இல்பொருளுவமை. வலியினிலைமையானென்ற அடையானும், மேய்ந்தற்றென்னுந் தொழிலுவமையானும், வல்லுருவத்தோடு மனவழிப்படுதலென்பது பெற்றமும். காவலர் கடியாமை புலி புற்றின்னுதென்பதனாலும், அச்சத்தானுமாம்; ஆகவே, வல்லுருவங்கோடற்குப் பயன் அன்னகாரணங்களான் உலகத்தார் அயிராமையாயிற்று. இவ்வாறு தனக்குரிய இல்லாஇயுந்துறந்து வலியுமின்றிப் பிறர் அயிராத வல்லுருவமுங்கொண்டு நின்றவன் மனவழிப் படுதலாவது தன் மனமோடியவழியே ஓடி மறைந்து பிறர்க்குரிய மகளிரை விழைதலாம். அவ்வாறுதல், பெற்றம் தனக்குரிய புல்லைவிட்டுப் பிறர்க்குரிய பைங்கூழை மேய்ந்தாற்போலுமென்றவுவமையான் அறிக.

உஎச. தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று.

இ - ள். தவம் மறைந்து அல்லவை செய்தல் - அவ்வலியினிலைமையான் தவவேடத்தின்கண்ணே மறைந்துநின்று தவமல்லவற்றைச் செய்தல்—வேட்டுவன் புதல் மறைந்து புள் சிமிழ்த்தற்று - வேட்டுவன் புதலின்கண்ணே மறைந்துநின்று புட்களைப் பிணித்தாற்போலும். எ - று.

தவம் ஆகுயெர். தவமல்லவற்றைச் செய்தலாவது பிறர்க்குரிய மகளிரைத் தன்வயத்ததாக்குதல். இதுவும் இத்தொழிலுவமையானறிக. (ச)

உஎடு. பற்றற்றே மென்பார் படிற்றொழுக்க மெற்றெற்றென்
றேதம் பலவுந் தரும். டு.

இ - ள். பற்று அற்றேம் என்பார் படிற்றொழுக்கம் - தம்மைப் பிறர் நன்கு மதித்ததற்பொருட்டு யாம் பற்றற்றேமென்று சொல்வாரது மறைந்தவொழுக்கம்,—எற்று எற்று என்று ஏதம் பலவும் தரும் - அப்பொழுது இனிதுபோலத் தோன்றுமா

* சாலடியார், குடிப்பிறப்பு—உ. † இல்பொருளுவமை - அபூதவுவமை.

யினும், பின் என்செய்தேம் என்செய்தேமென்று தாமேயிரங்கும்வகை, அவர்க்குப் பல துன்பங்களையுங் கொடுக்கும். எ - று.

சொல்லளவல்லது பற்றருமையின், பற்றற்றேமென்பாரென்றும், சிறிதாய்க் கணத்துள்ளே அழிவதாய இன்பத்தின்பொருட்டுப் பெரிதாய் நெடுங்கால நிற்பதாய பாவத்தைச் செய்வார் அதன் வினைவின்கண் "அந்தோ வினையேயென்றழு*" வராகலில், எற்றெற்றென்றுங் கூறினர். இவையைந்துபாட்டானும் கூடாவொழுக்கத்தினிழுக்கம் கூறப்பட்டது. (இ)

உஎசு. நெஞ்சிற் றறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணர் இல். சு.

இ - ள். நெஞ்சின் துறவார் - நெஞ்சாற் பற்றருதுவைத்து—துறந்தார்போல் வஞ்சித்துவாழ்வாரின் - பற்றற்றார்போன்று தானஞ்செய்வாரை வஞ்சித்து வாழுமவர்போல்—வன்கணர் இல் - வன்கண்மையையுடையார் உலகத்தில்லை. எ - று.

தானஞ்செய்வாரை வஞ்சித்தலாவது யாம் மறுமைக்கட்டேவராதற்பொருட்டு இவ்வருந்தவர்க்கு இன்னதீதுமென்று அறியாதீந்தாரை அதுகொண்டு இழிபிறப்பினராக்குதல். அவர் இழிபிறப்பினராதல் "அடங்கலர்க் கீந்த தானப் பயத்தினு லலறு மூங்கீர்த்—தடங்கட னடுவுட் டீவு பலவுள வவற்றுட் டோன்றி—யுடம்பொடு முகங்க ளொவ்வா ரூழ்கனி மாந்தி வாழ்வர்—மடங்கலஞ் சிற்றத் துப்பின் மானவேன் மன்ன ரேறே†" என்பதனுணர்க. தமக்கு ஆவனசெய்தார்க்கு ஆகாதன வினைத்தலின், வன்கணரில்லென்றார். (சு)

உஎள. புறங்குன்றி கண்டனைய ரேனு மகங்குன்றி
மூக்கிற் கரியா ருடைத்து. எ.

இ - ள். குன்றிபுறம் கண்டி அனையரேனும் - குன்றியின்புறம்போல வேடத்தாற் செம்மையுடையராயினும்,—குன்றி மூக்கின் அகம் கரியார் உடைத்து - அதன் மூக்குப்போல மனமிருண்டிருப்பாரை உடைத்து உலகம். எ - று.

குன்றி ஆகுபெயர். செம்மை கருமையென்பன ‡ பொருளின்கணிறத்தை விட்டுச்செப்பத்தினும் அறியாமையினுஞ் சென்றனவாயினும், பண்பாலொத்தலின் இவை பண்புவமை: "கூழின் மலிமனம் போன்றிரு ளாகின்ற கோகிலமேழி" என்பதுமது.

உஎஅ. மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர். அ.

இ - ள். மாசு மனத்தது ஆக - மாசு தம்மனத்தின்கண்ணதாக—மாண்டார் நீராடி-பிறர்க்குத் தவத்தான் மாட்சிமையுடையராய் நீரின்மூழ்கிக்காட்டி—மறைந்து ஒழுகும் மாந்தர் பலர் - தாம் அதன்கண்ணே மறைந்து செல்லும் மாந்தர் உலகத்துப் பலர். எ - று.

---

* சீவகசிந்தாமணி, முத்தியிலம்பகம், உள.

† சீவகசிந்தாமணி, முத்தியிலம்பகம், உசச. ‡ பொருள் - உபமேயம்.

§ வாழும் படிபொன்றுங் கண்டிலம் வாழியிம் மாம்பொழிற்றேன்—சூழு முகச்சுற்றும் பத்தின் வாறெழுணடை யன்னிவா—யாழின் மொழிமங்கை பங்கன்சிற் றம்பல மாதரியாக்—கூழின் மலிமனம் போன்றிரு ளாகின்ற கோகிலமே—திருச்சிற்றம்பலக்கோவையார், கஉஉ.

மாசு காம வெகுளி மயக்கங்கள். அவை போதற்கன்றி மாண்டாரென்று பிறர் கருதுதற்கு நீராதலான், அத்தொழிலை அவர் மறைத்தற்கிடஞ்சினர். இனி மாண்டார் நீராடியென்பதற்கு மாட்சிமைப்பட்டாரது நீர்மையையுடையாரென உரைப் பாருமுளர். இவை மூன்றுபாட்டானும் அவ்வொழுக்கமுடையாரதருமமும் அவரை யறிந்து நீக்கல்வேண்டுமென்பதும் கூறப்பட்டன. (அ)

உஎகூ. கணைகொடிதி யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல். கூ.

இ - ள். கணை கொடிது யாழ் கோடு செவ்விது - அம்பு வடிவாற்செவ்விதாயினும், செயலாற்கொடிது; யாழ் கோட்டால் வளைந்ததாயினும், செயலாற்செவ்விது;—ஆங்கு அன்ன வினைபடு பாலால் கொளல் - அவ்வகையே தவஞ்செய்வோரையுங் கொடியர் செவ்வியரென்பது, வடிவாற்கொள்ளாது, அவர் செயல்பட்ட கூற்றுனே அறிந்துகொள்க. எ - று.

கணைக்குச்செயல் கொலை. யாழுக்குச்செயல் இசையாலின்பம் பயத்தல். அவ்வகையே செயல் பாவமாயிற்கொடியரெனவும், அறமாயிற்செவ்வியரெனவுங் கொள்க வென்பதாம். இதனுன் அவரையறியுமாறு கூறப்பட்டது. (கூ)

உஅ0. மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்தது தொழித்து விடின். க0.

இ - ள். மழித்தலும் நீட்டலும் வேண்டா - தவஞ்செய்வார்க்குத் தலைமயிரை மழித்தலுஞ் சடையாக்கலுமாகிய வேடமும் வேண்டா,—உலகம் பழித்தது ஒழித்து விடின் - உயர்ந்தோர் தவத்திற்காகாதென்று குற்றங்கூறிய ஒழுக்கத்தைக் கடிந்து விடின். எ - று.

பறித்தலும் மழித்தலுளடங்கும். மழித்தலென்பதே தலைமயிரை உணர்த்தலின், அது கூறுராயினர். இதனுற் கூடாவொழுக்கமில்லாதார்க்கு வேடமும் வேண்டா வென அவரது சிறப்புக் கூறப்பட்டது. (க0)

உகூம் அதி.—கள்ளாமை.

அஃதாவது பிறருடைமையாயிருப்பதியாதொருபொருளையும் அவரைவஞ்சித் துக்கொள்ளக் கருதாமை. கருதுதலும்செய்தலோடொத்தலின், கள்ளாமையென்றார். இல்வாழ்வார்க்காயின் தமரோடு விளையாட்டுவகையால் அவரை வஞ்சித்துக் கோட றகு இயைந்த பொருள்களை அங்ஙனங்கொள்ளினும் அமையும், துறந்தார்க்காயின் அதனைக் கருதியவழியும் பெரியதோரிழுக்காம் ஆகலின், இதுதுறவறமாயிற்று. புறத் துப்போகாது மடங்கி ஒருதலைப்பட்டு உயிரையே நோக்கற்பாலதாய அவர்மனம் அஃதொழிந்து புறத்தே போந்து பஃறலைப்பட்டு உடம்பின்பொருட்டுப் பொருளை நோக்குதலேயன்றி, அது தன்னையும் வஞ்சித்துக்கொள்ளக்கருதுதல் அவர்க்குப் பெரியதோரிழுக்காதல் அறிக. இவ்வாறு வாய்மைமுதற் கொல்லாமையீறிய நான்கதி காரத்திற்குமொக்கும். பொருள்பற்றி நிகழுங் குற்றத்தை விலக்குகின்றதாகலின், இது காமம்பற்றி நிகழ்வதாய கூடாவொழுக்கத்தின்பின் வைக்கப்பட்டது.

உஅக. எள்ளாமை வேண்டுவா னென்பா னெனைத்தொன்றுங்
கள்ளாமை காக்கதன் னெஞ்சு. க.

இ - ள். எள்ளாமை வேண்டுவான்;என்பான் - வீட்டினையிகழ்ந்து வீரும்புவான் இவனென்று தவத்தோரான் ஈன்குமதிக்கப்படுவான்—எனைத்தொன்றும் கள்ளாமை தன் நெஞ்சு காக்க - யாதொருபொருளையும் பிறரை வஞ்சித்துக்கொள்ளக் கருதாவகை தன்னெஞ்சினைக் காக்க. எ - று.

எள்ளாதென்னும் எதிர்மறைவினையெச்சம் எள்ளாமையெனத் திரிந்து நின்றது. வீட்டினையிகழ்தலாவது காட்சியே அளவையாவதென்றும், நிலம், நீர் தீ, வளி யெனப் பூதம் நான்கேயென்றும், அவற்றது புணர்ச்சி விசேடத்தாற்ரோன்றிப் பிரிவான் மாய்வதாய உடம்பின் கண்ணே அறிவு மதுவின் கட்களிப்புப்போல வெளிப் பட்டழியுமென்றும், இறந்தவுயிர் பின் பிறவாதென்றும், இன்பமும் பொருளும் ஒருவனுற் செய்யப்படுவனவென்றுஞ் சொல்லும் உலோகாயதமுதலிய மயக்கநூல்களைத் தெளிந்து, அவற்றிற்கேற்ப ஒழுகுதல். ஞானத்திற்கேதுவாய மெய்ந்நூற்பொருளேயேனும் ஆசிரியனை வழிபட்டன்றி அவனே வஞ்சித்துக் கொள்ளின், அதுவுங் களவாமாகலின், எனைத்தொன்றுமென்றார்.நெஞ்சு களளாமற் காக்கவெனவே, துறந்தார்க்கு விலக்கப்பட்ட கள்ளுதல் கள்ளக்கருதுதலென்பது பெற்றாம். (க)

உஅஉ. உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வே மெனல். உ.

இ - ள். உள்ளத்தால் உள்ளலுந்தீதே - குற்றங்களைத் தன்நெஞ்சாற் கருதுதலும் துறந்தார்க்குப் பாவம்;—பிறன் பொருளைக் கள்ளத்தால் கள்வேம் எனல - ஆதலால், பிறனொருவன் பொருளை அவன் அறியாவகையால் வஞ்சித்துக்கொள்வ மென்று கருதற்க. எ - று.

உள்ளத்தாலென வேண்டாது கூறினார், அவருள்ளம் எனையாருள்ளம் போலாது பிறப்புடைதலென்பது முடித்தற்கு. உள்ளலுமனது இழிவுசிறப்பும்மை. அல்லாதது வியங்கோளெதிர்மறைகணவந்தது. இவையிரண்டாலும் இந்நடைக்குக களவாவது இதுவென்பதூஉம் அது கடியப்படுவதென்பதூஉங் கூறப்பட்டன.()

உஅங. களவினு லாகிய வாக்க மளவிறந
தாவது போலக் கெடும். ங.

இ - ள். களவினுல் ஆகிய ஆக்கம் - களவினுளதாகியபொருள்—ஆவதுபோல அளவுறந்து கெடும் - வளர்வதுபோலத் தோன்றித் தன்னெல்லையைக் கடந்து கெடும். எ - று.

ஆக்கத்திற்கேதுவாகலின், ஆக்கமெனப்பட்டது. எல்லையைக்கடந்து கெடுதலாவது தான போங்காற் பாவத்தையும் பழியையும் நிறுத்திச் செய்தவறத்தையும் உடன் கொண்டுபோதல். அளவுறுதென்று பாடமோதி, அவர் பயன்கொள்ளுமளவுறிந்து அவ்வளவிற்கு உதவாது கெடுமென்றுரைப்பாருமூளர். (கூ)

உஅச. களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமந் தரும். ச.

இ - ள். களவின்கண் கன்றிய காதல் - பிறர்பொருளை வஞ்சித்துக் கோடற்கண்ணே மிக்க வேட்கை—விளைவின்கண் வீயாவிழுமம் தரும் - அப்பொழுதுஇனிதுபோலத் தோன்றித் தான்பயன் கொடுக்கும்பொழுது தொலையாத இடும்பையைக் கொடுக்கும். எ - று.

கன்றுதலான் எஞ்ஞான்றும் அக்களவையே பயில்வித்து அதனைத் பாவமும் பழியும் பயர்தேவிடுதலின், வீயாவிழுமந் தருமென்றார். இவையிரண்டோட்டானும் அது கடியப்படுதற்குக் காரணங் கூறப்பட்டது. (உ)

உஅஞ. அருள்கருதி யன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்க ணில். ஞ.

இ - ள். அருள் கருதி அன்பு உடையராதல் - அருளினது உயர்ச்சியையறிந்து அதன்மேல் அன்புடையராயொழுகுதல்—பொருள் கருதிப் பொச்சாப்புப் பார்ப்பார் கண் இல் - பிறர்பொருளை வஞ்சித்துக்கொள்ளக் கருதி அவரது சோர்வு பார்ப்பார் மாட்டு உண்டாகாது. எ - று.

தமக்குரிய பொருளையும் அதனது குற்றம் நோக்கித் துறந்து போந்தவர் பின் பிறர்க்குரிய பொருளை நள்ளுமதித்து அதனை வஞ்சித்துக்கோடற்கு அவரது சோர்வு பார்க்கும் மருட்சியரானுல், அவர்மாட்டு, உயிர்க்கண்மேலருள்செய்தல் நமக்குறுதி யென்றறிந்து அவ்வருளின் வழுவாதொழுகுந் தெருட்சி கூடாதென்பதாம். (ஞ)

உஅசு. அளவின்க ணின்றொழுக லாற்றூர் களவின்கட்
கன்றிய காத லவர். சு.

இ - ள். அளவின்கண் நின்று ஒழுகல் ஆற்றூர் - உயிர் முதலியவற்றையளத்த லாகிய நெறியின்கணின்று அதற்கேற்பவொழுகமாட்டார்—களவின்கண் கன்றிய காத லவர் - களவின்கண்ணே மிக்க வேட்கையையுடையார். எ - று.

உயிர்முதலியவற்றையளத்தலாவது காட்சிமுதலாகச் சொல்லப்பட்ட அளவைக ளான் உயிர்ப்பொருளையும், அதற்கு அநாதியாய் வருகின்ற நல்வினை தீவினைக் குற்ற வினைவகளையும், அவற்றுன் அது நாற்கதியுட் பிறந்திறந்து வருதலையும், அது செய்யா மல் அவற்றைக் கெடுத்தற்குபாயமாகிய யோகஞானங்களையும், அவற்றுன் அஃதெய் தும் வீட்டினையும், அளந்து உள்ளவாறறிதல். இதனை ஆருகதர் தருமத்தியானமென்ப. அதற்கேற்ப ஒழுகுதலாவது அவ்வளக்கப்பட்டனவற்றுள் தீயனவற்றினீக்கி நல்லன வற்றின்வழி நிற்றல். (சு)

உஅள. களவென்னுங் காரறி வாண்மை யளவென்னு
மாற்றல் புரிந்தார்க ணில். எ.

இ - ள். களவு என்னும் கார் அறிவாண்மை - களவென்று சொல்லப்படுகின்ற இருண்டவறிவினையுடையராதல்—அளவு என்னும் ஆற்றல் புரிந்தார்கண் இல் - உயிர் முதலியவற்றை அளத்தலென்னும் பெருமையை விரும்பினர்கணில்லை. எ - று.

இருள் மயக்கம். காரியத்தைக் காரணமாகவுபசரித்துக் களவென்னுங் காரறி வாண்மையென்றும், காரணத்தைக் காரியமாக்கி அளவென்னுமாற்றலென்றுங் கூறி னர். களவுந்துறவும் இருளுமொளியும்போலத் தம்முண் மாறுகலின், ஒருங்கு நில்லா வென்பது இவை மூன்றுபாட்டானுங் கூறப்பட்டது. (ஏ)

உஅஅ. அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்
களவறிந்தார் நெற்சிற் கரவு. அ.

இ - ள். அளவு அறிந்தார் நெஞ்சத்து அறம்போல நிற்கும் - அவ்வளத்தலேயே பயின்றவர் நெஞ்சத்து அறம் நிலேபெற்றுற்போல் நிலேபெறும்—களவு அறிந்தார் நெஞ்சில் கரவு - களவையே பயின்றவர் நெஞ்சத்து வஞ்சனே. எ - று.

உயிர்முதலியவற்றை அளந்தறிந்தார்க்குத் துறவறஞ்சலியாது நிற்குமென்பது இவ்வுவமையாற் பெற்றும். களவோடு மாறின்றி நிற்பது இதனுற் கூறப்பட்டது. (அ)

உஅசு. அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்ரு தவர். கூ.

இ - ள். அளவு அல்ல செய்தாங்கே வீவர் - அவ் வளவல்லாத தீய நினேவுகளே நினேத்தபொழுதே கெடுவர்—களவு அல்ல மற்றைய தேற்ரு தவர் - களவல்லாத பிறவற்றை அறியாதவர். எ - று.

தீயநினேவுகளாவன பொருளுடையாரை வஞ்சிக்குமாறும், அவ்வஞ்சனேயால் அது கொள்ளுமாறும், கொண்டவதனுல் தாம் புலன்களே நுகருமாறும் முதலாயின. நினேத்தலுஞ்செய்தலாகலிற்செய்தென்றும், அஃது உள்ளவறங்களேப்போக்கிக் கரந்த சொற்செயல்களேப் புகுவித்து அப்பொழுதே கெடுக்குமாகலின் ஆங்கே வீவரென்றுங் கூறினர். மற்றையவாவன துறந்தார்க்கு உணவாக வோதப்பட்ட காய் கனி கிழங்கு சருகு முதலாயினவும், இல்வாழ்வார் செய்யுந் தானங்களுமாம். தேற்ரூமை அவற்றையே நுகர்ந்து அவ்வளவானிறைந்திருத்தலே அறியாமை. இதனுற் கள்வார் கெடுமாறு கூறப்பட்டது. (க)

உகூ0. கள்வார்க்குத் தள்ளு முயிர்நிலே கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு. க0.

இ - ள். கள்வார்க்கு உயிர்நிலே தள்ளும் - களவினேப் பயில்வார்க்குத் தம்மின் வேறல்லாத உடம்புந் தவறும்—கள்ளார்க்குப் புத்தேளுலகு தள்ளாது - அது செய்யாதார்க்கு நெடுஞ்சேணதாகிய புத்தேளுலகுந் தவறுது. எ - று.

உயிர் நிற்றற்கிடனுகலின், உயிர்நிலேயெனப்பட்டது. சிறப்பும்மைகளிரண்டும் விகாரத்தாற்றொக்கன. இம்மையினும் அரசனுலொறுக்கப்படுதலின் உயிர்நிலேயுந் தள்ளுமென்றும், மறுமையினுந் தேவராதல் கூடுதலிற் புத்தேளுலகுந் தள்ளாதென்றுங் கூறினர். "மற்றது—தள்ளினுந் தள்ளாமை நீர்த்து*" என்புழியும் தள்ளுதல் இப்பொருட்டாதலறிக. இதற்குப் பிறவாறுரைப்பாருமுளர். இதனுல் இருவர்பயனும் ஒருங்கு கூறப்பட்டது. (க0)

கூ0 ம் அதி.—வாய்மை.

அஃதாவது மெய்யினது தன்மை. பெரும்பான்மையுங் காமமும் பொருளும் பற்றி நிகழ்வதாய பொய்ம்மையை விலக்கலின், இது கூடாவொழுக்கங் கள்ளாமைகளின்பின் வைக்கப்பட்டது.

உகூக. வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல். க.

---

* திருக்குறள்—யிகூ.

இ - ள். வாய்மை எனப்படுவது யாது எனின் - மெய்ம்மையென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது யாதென்று வினவின்,—நீமை யாதொன்றும் இலாத சொலல் - அது பிறிதோருயிர்க்குத் தீங்கு சிறிதும் பயவாத சொற்களைச் சொல்லுதல். எ - று.

நீமை யாதொன்றுமிலாதவென இயையும். எனப்படுவதென்பது "ஒருவனைப் படுவ துறையூர்" என்றாற்போல நின்றது. இதனுன் நிகழ்ந்தது கூறலென்பது நீக்கப் பட்டது. அதுதானும், தீங்கு பயவாதாயின் மெய்ம்மையாம், பயப்பிற் பொய்ம்மை யாமென்பது கருத்து. (அ)

உகூஉ. பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின். உ.

இ - ள். புரை தீர்ந்த நன்மை பயக்கும் எனின் - பிறர்க்குக் குற்றந் தீர்ந்த நன் மையைப் பயக்குமாயின்,—பொய்ம்மையும் வாய்மையிடத்த - பொய்ம்மைச்சொற்களும் மெய்ம்மைச்சொற்களின் பால்வாம். எ - று.

குற்றந்தீர்ந்தநன்மை அறம்; அதனைப் பயத்தலாவது கேடாதல் சாக்காடாதல் எய்தின்றதோருயிர் அச்சொற்களின் பொய்ம்மையானே அதனினீங்கி இன்புறுதல். நிகழாதது கூறலும், நன்மை பயவாதாயிற் பொய்ம்மையாம், பயப்பின் மெய்ம்மை யாமென்பது கருத்து. இவையிரண்டுபோட்டானும் தீங்கு பயவாத நிகழ்ந்தது கூறலும் நன்மை பயக்கும் நிகழாதது கூறலும் மெய்ம்மையெனவும், நன்மை பயவாத நிகழா தது கூறலும் தீங்கு பயக்கும் நிகழ்ந்தது கூறலும் பொய்ம்மையெனவும், அவற்ற திலக்கணங் கூறப்பட்டது. (உ)

உகூங. தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
றன்னெஞ்சே தன்னைச் சுடும். ங.

இ - ள். தன் நெஞ்சு அறிவது பொய்யற்க - ஒருவன் தன்னெஞ்சறிவதொன்ற னைப் பிறரறிந்திலரென்று பொய்யாதொழிக,—பொய்த்தபின் தன் நெஞ்சே தன்னைச் சுடும் - பொய்த்தானுயின், அதனையறிந்த தன்னெஞ்சே அப்பாவத்திற்குக் கரியாய் நின்று, தன்னை அதன் பயனுய துன்பத்தை யெய்துவிக்கும். எ - று.

நெஞ்சு கரியாதல் "கண்டவ ரில்லென வுலகத்து ளுணராதார்—தங்காது தகை வின்றித் தாஞ்செய்யும் வினைகளு—ணெஞ்சறிந்த கொடியவை மறைப்பவு மறை யாவா—நெஞ்சத்திற் குறுகிய கரியில்லை யாகலின்*" என்பதனுனுமறிக. பொய் மறையாமையின், அது கூறலாகாதென்பது இதனுற் கூறப்பட்டது. (ங)

உகூச. உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா
ருள்ளத்து ளெல்லா முளன். ச.

இ - ள். உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் - ஒருவன் தன்னுள்ளத்திற் கேற்பப் பொய்கூறு தொழுகுவனுயின்,—உலகத்தார் உள்ளத்துளெல்லாம் உளன் - அவன் உயர்ந்தோருள்ளத்தினகணெல்லாம் உளனும். எ - று.

உள்ளத்தாலென்பது வேற்றுமை மயக்கம். பொய் கூறுதொழுகுதலாவது மெய் கூறியொழுகுதல். அவனதறத்தினதருமைநோக்கி உயர்ந்தோர் எப்பொழுதும் அவ னையே நினைப்பரென்பதாம். இதனுன் இம்மைப்பயன் கூறப்பட்டது. (ச)

* கலித்தொகை, நெய்தல்—அ.

உகூடி. மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை. டி.

இ - ள். மனத்தொடு வாய்மை மொழியின் - ஒருவன் தன்மனத்தொடு பொருந்த வாய்மையைச் சொல்வானாயின்,—தவத்தொடு தானம் செய்வாரின் தலை - அவன் தவமும் தானமும் ஒருங்குசெய்வாரினுஞ் சிறப்புடையன். எ - று.

மனத்தோடு பொருந்துதல் மனத்திற்கேறுதல். புறமாகிய மெய்யாற் செய்யுமவற்றினும் அகமாகிய மனமொழிகளாற் செய்யுமது பயனுடைத்தென்பதாம். (டி)

உகூசு. பொய்யாமை யன்ன புகழில்லை யெய்யாமை
யெல்லா வறமுந் தரும். சு.

இ - ள். பொய்யாமை அன்ன புகழ் இல்லை - ஒருவனுக்கு இம்மைக்குப் பொய்யாமையையொத்த புகழ்க்காரண நில்லை:—எய்யாமை எல்லா அறமும் தரும் - மறுமைக்கு மெய்வருந்தாமல் அவனுக்கு எல்லாவறங்களையுந் தானேகொடுக்கும். எ - று.

புகழ் ஈண்டு ஆகுபெயர். இல்லறத்திற்குப் பொருள்கூட்டல் முதலியவற்றானும் துறவறத்திற்கு உண்ணுமை முதலியவற்றானும் வருந்தல்வேண்டுமன்றே, அவ்வருத்தங்கள் புகுதாமல் அவ்விருவகைப்பயனையுந் தானே தருமென்பார், எய்யாமை யெல்லாவறமுந் தருமென்றார். (சு)

உகூஎ பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று. எ.

இ - ள். பொய்யாமை பொய்யாமை ஆற்றின் - ஒருவன் பொய்யாமையையே பொய்யாமையையே செய்ய வல்லனாயின்,—பிற அறம் செய்யாமை செய்யாமை நன்று - அவன் பிறவறங்களைச் செய்யாமையே செய்யாமையே நன்று. எ - று.

அடுக்கிரண்டனுள் முதலது இடைவிடாமை மேற்று, ஏனையது துணிவின் மேற்று. பலவறங்களையும் மேற்கொண்டு செய்தற் கருமையால் சில தவறிற் குற்றப்படுதலின், அவையெல்லாவற்றின் பயனையுந் தானே தரவற்றாய இதனையே மேற்கொண்டு தவறாமற்செய்தல் நன்றென்பார், செய்யாமை செய்யாமை நன்றென்றார். இதனை இவ்வாறன்றிப் பொய்யாமையைப் பொய்யாமற்செய்யிற் பிறவறஞ்செய்கை நன்றெனப் பொழிப்பாக்கிப் பொய்கூறிற் பிறவறஞ்செய்கை நன்றாகாதென்பது அதனாற் போந்த பொருளாக்கி உரைப்பாருமுளர். பிறவறங்களெல்லாந் தரும் பயனைத் தானே தருமாற்றலுடைத்தென மறுமைப்பயனது மிகுதி இவையீரிடத்தானுங் கூறப்பட்டது. (எ)

உகூஅ. புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும். அ.

இ - ள். புறம் தூய்மை நீரான் அமையும் - ஒருவனுக்கு உடம்பு தூய்தார் தன்மை நீரானேயுண்டாம்;—அகம் தூய்மை வாய்மையான் காணப்படும் - அதுபோல மனந்தூய்தாந்தன்மை வாய்மையானுண்டாம். எ - று.

காணப்படுவதுள்ளதாகலின், உண்டாமென்றுரைக்கப்பட்டது. உடம்பு தூய்தாதல் வாலாமைநீக்குதல். மனந்தூய்தாதல் மெய்யுணர்தல். புறந்தூய்மைக்கு

நீரல்லது காரணமில்லாதாற்போல, அகந்தூய்மைக்கு வாய்மையல்லது காரணமில்லை யென்றவாரூயிற்று. இதனானே துறந்தார்க்கு இரண்டு தூய்மையும் வேண்டுமென் பதூஉம் பெற்றும். (அ)

உ நூகூ. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்ரோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. கூ.

இ - ள். எல்லா விளக்கும் விளக்கு அல்ல - புறத்திருள் கடியும் உலகத்தார் விளக்குக்களெல்லாம் விளக்காகா:—சான்ரோர்க்கு விளக்கு பொய்யா விளக்கே - துறவானமைந்தார்க்கு விளக்காவது மனத்திருள் கடியும் பொய்யாமையாகிய விளக்கே. எ - று.

உலகத்தார் விளக்காவன ஞாயிறு, திங்கள், தீயென்பன. இவற்றிற்குப் போகாதவிருள் போகலின், பொய்யாவிளக்கே விளக்கென்றார். அவ்விருளாவது அறியாமை. பொய்யாதவிளக்கென்பது குறைந்துநின்றது. பொய்கூறுமையாகிய விளக்கென்றவாறு. இனி இதற்குக் கல்விமுதலியவற்றுள் வரும் விளக்கமெல்லாம் விளக்கமல்ல, அமைந்தார்க்கு விளக்கமாவது பொய்யாமையான் வரும் விளக்கமே யென்றுரைப்பாருமுளர். (கூ)

நூ00. யாமெய்யாக் கண்டவற்று ளில்லையெனைத் தொன்றும்
வாய்மையி னல்ல பிற. கூ0.

இ - ள். யாம் மெய்யாக் கண்டவற்றுள் - யாம் மெய்ந்நூல்களாகக் கண்ட நூல்களுள்—எனைத்தொன்றும் வாய்மையின் நல்ல பிற இல்லை - யாதொரு தன்மையானும் வாய்மையின் மிக்கனவாகச் சொல்லப்பட்ட பிறவறங்களில்லை. எ - று.

மெய்யுணர்த்துவனவற்றை மெய்யென்றார். அவையாவன தங்கண் மயக்கமின்மையின் பொருள்களையுள்ளவாறுணரவல்லராய்க் காமவெகுளிகளின்மையின் அவற்றையுணர்த்தவரோ உரைக்கவும் வல்லராய இறைவர், அருளான் உலகத்தார் உறுதியெய்துதற்பொருட்டுக் கூறியவாகமங்கள். அவையெல்லாவற்றினும் இஃதொப்ப முடிந்ததென்பதாம். இவை மூன்றுபாட்டானும் இவ்வறத்தினது தலைமைக் கூறப்பட்டது. (கூ0)

நூகம் அதி.—வெகுளாமை.

அஃதாவது சினத்தைச் செய்தற்குக் காரணம் ஒருவன் மாட்டளதாயவிடத்தும் அதனைச் செய்யாமை. இது பொய்ம்மைபற்றி நிகழுவதாய வெகுளியை விலக்கலின், வாய்மையின்பின் வைக்கப்பட்டது.

நூ0க. செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பா னல்லிடத்துக்
காக்கினென் காவாக்கா லென்.

இ - ள். சினம் செல் இடத்துக் காப்பான் காப்பான் - தன் சினம் பலிக்குமிடத்து அதனையெழாமற்றடுப்பானே அருளாற்றடுப்பானுவான்:—அல் இடத்துக் காக்கின் என் காவாக்கால் என் - ஏனைப்பலியாதவிடத்து அதனைத் தடுத்தாலென் தடாதொழிந்தாலென்! எ - று.

செல்லிடம் அல்லிடமென்றது தவத்தாற் றன்னின்மெலியாரையும் வலியாரையும். வலியார்மேற் காவாவழியும் அதனான் அவர்க்கு வருவதோர் தீங்கின்மையிற்

காத்தவழியும் அறனில்லையென்பார், காக்கினென் காவாக்காலென்னென்றார். இதனான் வெகுளாமைக்கிடங் கூறப்பட்டது. (க)

நடுஉ. செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்து
மில்லதனிற் றீய பிற. உ.

இ - ள். சினம் செல்லா இடத்துத் தீது - ஒருவன் வெகுளி தன்னின் வலியார் மேலெழின் தனக்கே தீதாம்;—செல் இடத்தும் அதனின் தீய பிற இல் - மற்றை யெளியார்மேலெழினும் அதனிற்றீயன பிற இல்லை. எ - று.

செல்லாவிடத்துச் சினம் பயப்பது இம்மைக்கண் அவரான் வருமேதமே, ஏனையது இம்மைக்கட்பழியும் மறுமைக்கட்பாவமும் பயத்தலின், அதனிற்றீயன பிறவில்லையென்றார். ஒரிடத்து மாகாதென்பதாம். (உ)

நடுஊ. மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய
பிறத்த லதனான் வரும். ஊ.

இ - ள். யார்மாட்டும் வெகுளியை மறத்தல் - யாவர்மாட்டும் வெகுளியையொழிக;—தீய பிறத்தல் அதனான் வரும் - ஒருவர்க்குத் தீயனவெல்லாமுளவாதல் அதனான் வரும் ஆகலான். எ - று.

வலியார், ஒப்பார், எளியாரென்னும் மூவர் மாட்டும் ஆகாமையின் யார்மாட்டுமென்றும், மனத்தாற்றுறந்தார்க்கு ஆகாதனவாகிய தீச்சிந்தைகளெல்லாவற்றையும் பிறப்பித்தலின் தீயபிறத்தலதனான்வருமென்றுங் கூறினார். (ஊ)

நடுஎ. நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையு முளவோ பிற. எ.

இ - ள். நகையும் உவகையும் கொல்லும் சினத்தின் - துறந்தார்க்கு அருளானுளவாய முகத்தின்கணகையையும் மனத்தின்கணுவகையையுங் கொன்று கொண்டெழுகின்ற சினமேயல்லது—பிறபகையும் உளவோ - அதனிற் பிறவாய பகைகளும் உளவோ இல்லை. எ - று.

துறவாற் புறப்பகையிலராயினும் உட்பகையாய் நின்று அருண்முதலிய நட்பினையும் பிரித்துப் பிறவித்துன்பமுமெய்துவித்தலான், அவர்க்குச் சினத்தின்மிக்க பகையில்லையாயிற்று. இவை மூன்றுபாட்டானும் வெகுளியது தீங்கு கூறப்பட்டது. (எ)

நடுஏ. தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம். ஏ.

இ - ள். தன்னைத் தான் காக்கின் சினம் காக்க - தன்னைத்தான் துன்பமெய்தாமற்காக்க நினைத்தானுயின் தன்மனத்துச் சினம் வாராமற்காக்க;—காவாக்கால் சினம் தன்னையே கொல்லும - காவானுயின், அச்சினந் தன்னையே கெடுக்கும் கடுந்துன்பங்களே யெய்துவிக்கும். எ - று.

"வேண்டிய வேண்டியாங் கெய்தற்" * பயத்ததாய தவத்தைப் பிறர்மேற் சாபம் விடுதற்காக இழந்து அத்தவத்துன்பத்தோடு பழைய பிறவித்துன்பமும் ஒருங்கெய்து

* திருக்குறள், உசுஅ.

தலின், தன்னையே கொல்லுமென்றார். "கொல்லச் சுரப்பதாங் கீழ்*" என்புழிப் போலக் கொலேச்சொல் ஈண்டுத் துன்பமிகுதி யுணர்த்தி நின்றது. (இ)

நூ0சு. சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னு
மேமப் புணையைச் சுடும். சு

இ - ள். சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி - சினமென்னும் நெருப்பு— இனம் என்னும் ஏமப்புணையைச் சுடும் - தனக்கு இடமானவரையேயன்றி அவர்க்கு இனமாகிய ஏமப்புணையையுஞ் சுடும் எ - று.

சேர்ந்தாரைக்கொல்லி யென்பது எதுப்பெயர்; தான் சேர்ந்தவிடத்தைக் கொல்லுந்தொழிலதென்றவாறு. சேர்ந்தாரையென உயர்திணைப்பன்மைமேல்வைத்து ஏனை நான்குபாலும் தங்கருத்தோடு கூடிய, பொருளாற்றலாற்கொண்டார்; ஈண்டு உருவகஞ் செய்கின்றது துறந்தார் சினத்தையேயாகலின். சினமென்னுநெருப்பென்ற விதப்பு, உலகத்துநெருப்புச் சுடுவது தான் சேர்ந்தவிடத்தையே இந்நெருப்புச் சேராதவிடத்தையுஞ் சுடுமென்னும் வேற்றுமை தோன்ற நின்றது. ஈண்டினமென்றது முற்றத் துறந்து தவஞானங்களாற் பெரியராய்க் கேட்டார்க்கு உறுதிமொழிகளே இனியவாகச் சொல்லுவாரை. உருவகநோக்கிச் சுடுமென்னுந் தொழில் கொடுத்தாராயினும், அகற்றுமென்பது பொருளாகக்கொள்க. ஏமப்புணை ஏமத்தையுபதேசிக்கும் புணை. இனமென்னுமேமப்புணையென்ற ஏகதேசவுருவகத்தாற் பிறவிக்கடலுளழுந்தாமல் வீடென்னுங் கரையேற்றுகின்றவென வருவித்துரைக்க. எச்சவும்மை விகாரத்தாற் ரொக்கது. தன்னையும் வீழ்த்து எடுப்பாரையுமகற்றுமென்பதாம். (சு)

நூ0எ சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழைபா தற்று எ.

இ - ள். சினத்தைப் பொருள் என்றுகொண்டவன் கேடு-சினத்தைத்தன்னுற்றுணர்த்துவதோர் குணமென்று தன்கட் கொண்டவன் அவ்வாற்றலிழத்தல்,—நிலத்து அறைந்தான்' கைபிழையாதற்று - நிலத்தின்கண் அறைந்தவன்கை அந்நிலத்தையுறுதல் தப்பாதவாறுபோலத் தப்பாது. எ - று.

வைசேடிகர் பொருள், பண்பு, தொழில், சாதி, விசேடம், இயைபு என்பனவற்றை அறுவகைப்பொருளென்றாற்போல, ஈண்டுக் குணம் பொருளெனப்பட்டது. பிழையாததற்றென்பது குறைந்து நின்றது. இவை மூன்றுபாட்டானும் வெகுண்டார்க்கு வருந்தீங்கு கூறப்பட்டது. (எ)

நூ0அ இணரெரி தோய்வன்ன வின்ஞ செயினும்
புணரின் வெகுளாமை நன்று. அ.

இ - ள். இணர் எரி தோய்வு அன்ன இன்ஞ செயினும் - பலசுடரையுடைத்தாய பேரெரிவந்து தோய்ந்தாலொத்த இன்ஞதவற்றை ஒருவன் செய்தானாயினும்,—வெகுளாமை புணரின் நன்று - அவனை வெகுளாமை ஒருவற்குக் கூடுமாயின், அது நன்று. எ - று.

இன்ஞமையின் மிகுதி தோன்ற இணரெரியென்றும், அதனை மேன்மேலுஞ் செய்தல் தோன்ற இன்ஞவென்றும், அச்செயல் முஞிவரையும் வெகுள்விக்குமென்

* இரவுலர் கன்றுக லீவாரா வாக—வ்டிற்ற சுரப்பதாம் வண்மை - விரிதின்றி—வல்லவன் வழியாதோல் வாய்வைத்தக்—கொல்லச் சுரப்பதாங் கீழ்—நாலடியார், ஈயாமை.

பது தோன்றப் புணரினென்றும் கூறினர். இதனான் வெகுளாமையது நன்மை கூறப்பட்டது. (அ)

கூ0கூ. உள்ளிய தெல்லா முடனெய்து முள்ளத்தா
லுள்ளான் வெகுளி யெனின். கூ.

இ - ள். உள்ளத்தால் வெகுளி உள்ளான் எனின் - தவஞ்செய்யுமவன், தன் மனத்தால் வெகுளியை ஒருகாலும் நினையானுயின்,—உள்ளியது எல்லாம் உடன் எய்தும் - தான்கருதிய பேறெல்லாம் ஒருங்கே பெறும். எ - று.

உள்ளத்தாலென வேண்டாது கூறியவதனான், அருளுடையுள்ளமென்பதுமுடிந்தது. அதனானுள்ளாமையாவது அவ்வருளாகிய பகையையவளர்த்து அதனான் முற்றக் கடிதல். இம்மை மறுமை வீடென்பன வேறுவேறு திறத்தனவாயினும், அவையெல்லாம் இவ்வொன்றனே யெய்துமென்பார், உள்ளியதெல்லா முடனெய்துமென்றார். இதனான் வெகுளாதார்க்குவரும் நன்மை கூறப்பட்டது. (கூ)

கூகo. இறந்தா நிறந்தா ரினையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை. கo.

இ - ள். இறந்தார் இறந்தார் அனையர் - சினத்தின்கண்ணே மிக்கார், உயிருடையாராயினும், செத்தாரோடொப்பர்,—சினத்தைத் துறந்தார் துறந்தார் துணை - சினத்தைத் துறந்தார், சாதற்றன்மையராயினும், அதனையொழிந்தாரளவினர். எ - று.

மிக்க சினத்தையுடையார்க்கு ஞானமெய்துதற்குரிய உயிர்நின்றதாயினும் கலக்கத்தான் அஃதெய்தாமை ஒருதலையாகலின், அவரை இறந்தாரனையரென்றும், சினத்தைவிட்டார்க்குச் சாக்காடெய்துதற்குரிய யாக்கைநின்றதாயினும், ஞானத்தான் வீடு பெறுதல் ஒருதலையாகலின், அவரை வீடுபெற்றாரோடொப்பரென்றும் கூறினர். இதனான் அவ்விருவர்பயனும் ஒருங்கு கூறப்பட்டது. (கo)

கூடா ம் அதி.—இன்னாசெய்யாமை.

அஃதாவது தனக்கு ஒருபயனேக்கியாதல், செற்றம்பற்றியாதல், சோர்வானாதல் ஒருயிர்க்கு இன்னாதவற்றைச் செய்யாமை. இன்னாசெய்தல் வெகுளி யொழியவும் நிகழுமென்பது அறிவித்தற்கு, இது வெகுளாமையின்பின் வைக்கப்பட்டது.

கூகக. சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள். க.

இ - ள். சிறப்பு ஈனும் செல்வம் பெறினும் - யோகமாகிய சிறப்புத் தரும் அணிமா முதலிய செல்வங்களைப் பிறர்க்கின்னாசெய்து பெறலாமாயினும்,—பிறர்க்கு இன்னா செய்யாமை மாசு அற்றார் கோள் - அதனைச் செய்யாமை ஆகமங்கள் கூறிய வாற்றான் மனத்தாயாதது துணிவு. எ - று.

உம்மை பெருமைமேற்று. சிறப்புடையதனைச் சிறப்பென்றும், அதன்பயித்தியான் வாயுவை வென்றெய்தப்படுதலின் எட்டிச்சித்திகளையுஞ் சிறப்பீனுஞ்செல்வமென்றும், காமம் வெகுளி மயக்கமென்னுங் குற்றங்களற்றமையான் மாசற்றாரென்றும் கூறினர். இதனால் தமக்கொரு பயனேக்கிச் செய்தல் விலக்கப்பட்டது. (க)

நகஉ. கறுத்தின்னா செய்தவக் கண்ணு மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள். உ.

இ - ள். கறுத்து இன்னா செய்தவக்கண்ணும் - தம்மேற் செற்றங்கொண்டு ஒருவன் இன்னாதவற்றைச் செய்தவிடத்தும்— மறுத்து இன்னா செய்யாமை மாசு அற்றார் கோள் - மீண்டு தாம் அவனுக்கின்னாதவற்றைச் செய்யாமையும் அவரது துணிவு. எ - று.

இறந்தது தழீஇயவெச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. அவ்வின்னாதவற்றை உட்கொள்ளாது விடுதல் செயற்பால தென்பதாம். (உ)

நகங. செய்யாமற் செற்றார்க்கு மின்னாத செய்தபி
னுய்யா விழுமந் தரும். ங.

இ - ள். செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின் - தான் முன்போலின்னாமை செய்யாதிருக்கத் தன்மேற்செற்றங்கொண்டவர்க்கும் இன்னாதவற்றைத் துறந்தவன் செய்யுமாயின்,—உய்யா விழுமம் தரும் - அச்செயல் அவனுக்குக்கடக்கமுடியாத இடும்பையைக் கொடுக்கும். எ - று.

அவ்விடும்பையாவது தவமிழந்து பழியும் பாவமுமெய்தல். (ங)

நகச. இன்னாசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல். ச.

இ - ள். இன்னா செய்தாரை ஒறுத்தல் - தமக்கின்னாதவற்றைச் செய்தாரைத் துறந்தாரொறுத்தலாவது—அவர் நாண நன்னயம் செய்து விடல் - அவர்தாமே நாணுமாறு அவர்க்கு இனிய வுவகைகளைச்செய்து அவ்விரண்டனையும் மறத்தல். எ-று.

மறவாவழிப் பின்னும் வந்து கிளைக்குமாகலின், மறக்கற்பாலவாயின. அவரை வெல்லுமுபாயங் கூறியவாறு. இவை மூன்றுபாட்டானுஞ் செற்றம் பற்றிச் செய்தல் விலக்கப்பட்டது. (ச)

நகரு. அறிவினு னுகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோயபோற் போற்றார்க் கடை. ரு.

இ - ள். அறிவினுன் ஆகுவது உண்டோ - துறந்தார்க்கு உயிர்முதலியவற்றை உள்ளவாறறிந்த அறிவினுனவதொரு பயனுண்டோ,—பிறிதின் நோய் தந்நோய் போல் போற்றார்க்கடை - பிறிதோரியிர்க்கு வரும் இன்னாதவற்றைத் தம்முயிர்க்கு வந்தனபோலக் குறிக்கொண்டு காவாவிடத்து. எ - று.

குறிக்கொண்டு காத்தலாவது நடத்தல், இருத்தல், கிடத்தல், நிற்றல், உண்டல் முதலிய தந்தொழில்களானும் பிறவாற்றானும் உயிர்களுறுவனவற்றை முன்னே யறிந்து ஊறுமறக்காத்தல். இது பெரும்பான்மையும் அஃறிணைக்கண் நுண்ணியவுடம் புடையவற்றைப்பற்றி வருதலிற் பொதுப்படப் பிறிதினோயென்றும், மறப்பான் அது தன்புறினும் நமக்கின்னாசெய்தலாமென்றறிந்து காத்தல் வேண்டுமாகலின் அது செய்யாவழி அறிவாற் பயனில்லையென்றுங் கூறினர். இதனாற் சோர்வாற்செய்தல் விலக்கப்பட்டது. (ரு)

நகசு. இன்னா வெனைத்தா னுணர்ந்தவை தன்னைமை
வேண்டும் பிறன்கட் செயல். சு.

பது தோன்றப் புணரினென்றுங் கூறினர். இதனுன் வெகுளாமையது நன்மை கூறப்பட்டது. (அ)

நடுகூ. உள்ளிய தெல்லா முடனெய்து முள்ளத்தா
லுள்ளான் வெகுளி யெனின். கூ.

இ - ள். உள்ளத்தால் வெகுளி உள்ளான் எனின் - தவஞ்செய்யுமவன், தன் மனத்தால் வெகுளியை ஒருகாலும் நினையானுயின்,—உள்ளியது எல்லாம் உடன் எய்தும் - தான்கருதிய பேறெல்லாம் ஒருங்கே பெறும். எ - று.

உள்ளத்தாலென வேண்டாது கூறியவதனுன், அருளுடையுள்ளமென்பதுமுடிந்தது. அதனுனுள்ளாமையாவது அவ்வருளாகிய பகையையுள்ளர்த்து அதனுன் மூற்றக் கடிதல். இம்மை மறுமை வீடென்பன வேறுவேறு திறத்தனவாயினும், அவையெல்லாம் இவ்வொன்றனே யெய்துமென்பார், உள்ளியதெல்லா முடனெய்துமென்றார். இதனுன் வெகுளாதார்க்குவரும் நன்மை கூறப்பட்டது. (கூ)

நடுகஅ. இறந்தா ரிறந்தா ரனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை. கஅ.

இ - ள். இறந்தார் இறந்தார் அனையர் - சினத்தின்கண்ணே மிக்கார், உயிருடையராயினும், செத்தாரோடொப்பர்,—சினத்தைத் துறந்தார் துறந்தார் துணை - சினத்தைத் துறந்தார், சாதற்றன்மையராயினும், அதனேயொழிந்தாரளவினர். எ - று.

மிக்க சினத்தையுடையார்க்கு ஞானமெய்துதற்குரிய உயிர்நின்றதாயினும் கலக்கத்தான் அஃதெய்தாமை ஒருதலேயாகலின், அவரை இறந்தாரனேயரென்றும், சினத்தைவிட்டார்க்குச் சாக்காடெய்துதற்குரிய யாக்கைநின்றதாயினும், ஞானத்தான் வீடு பெறுதல் ஒருதலேயாகலின், அவரை வீடுபெற்றாரோடொப்பரென்றுங் கூறினர். இதனுன் அவ்விருவர்பயனும் ஒருங்கு கூறப்பட்டது. (கஅ)

நடம் அதி.—இன்னுசெய்யாமை.

அஃதாவது தனக்கு ஒருபயனேக்கியாதல், செற்றம்பற்றியாதல், சோர்வானுதல் ஒருயிர்க்கு இன்னுவற்றைச் செய்யாமை. இன்னுசெய்தல் வெகுளி யொழியவும் நிகழுமென்பது அறிவித்தற்கு, இது வெகுளாமையின்பின் வைக்கப்பட்டது.

நடுகக. சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னு
செய்யாமை மாசற்றார் கோள்.

இ - ள். சிறப்பு ஈனும் செல்வம் பெறினும் - யோகமாகிய சிறப்புத் தரும் அணிமா முதலிய செல்வங்களேப் பிறர்க்கின்னுசெய்து பெறலாமாயினும்,—பிறர்க்கு இன்னு செய்யாமை மாசு அற்றார் கோள் - அதனேச் செய்யாமை ஆகமங்கள் கூறிய வாற்றான் மனத்தாயாதது துணிவு. எ - று.

உம்மை பெருமைமேற்று. சிறப்புடையதனேச் சிறப்பென்றும், அதன்பயிற்சியான் வாயுவை வென்றெய்தப்படுதலின் எட்டுச்சித்திகளேயுஞ் சிறப்பீனுஞ்செல்வமென்றும், காமம் வெகுளி மயக்கமென்னுங் குற்றங்களற்றமையான் மாசற்றாரென்றுங் கூறினர். இதனுல் தமக்கொரு பயனேக்கிச் செய்தல் விலக்கப்பட்டது. (க)

ஈகஉ. கறுத்தின்னு செய்தவக் ண்ணு மறுத்தின்னு
செய்யாமை மாசற்றார் கோள். உ.

இ - ள். கறுத்து இன்னு செய்தவக்கண்ணும் - தம்மேற் செற்றங்கொண்டு ஒருவன் இன்னுதவற்றைச் செய்தலிடத்தும்— மறுத்து இன்னு செய்யாமை மாசு அற்றார் கோள் - மீண்டு தாம் அவனுக்கின்னுதவற்றைச் செய்யாமையும் அவாது துணிவு. எ - று.

இறந்தது தழீஇயவெச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. அவ்வின்னுதவற்றை உட்கொள்ளாது விடுதல் செயற்பால தென்பதாம். (உ)

ஈகஙு. செய்யாமற் செற்றார்க்கு மின்னுத செய்தபி
னுய்யா விழுமந் தரும். ங.

இ - ள். செய்யாமல் செற்றார்க்கும் இன்னுத செய்தபின் - தான் முன்போரின்னுமை செய்யாதிருக்கத் தன்மேற்செற்றங்கொண்டவர்க்கும் இன்னுதவற்றைத் துறந்தவன் செய்யுமாயின்,—உய்யா விழுமம் தரும் - அச்செயல் அவனுக்குக்கடக்கமுடியாத இடும்பையைக் கொடுக்கும். எ - று.

அவ்விடும்பையாவது தவமிழந்து பழியும் பாவமுமெய்தல். (ஙு)

ஈகசு. இன்னுசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல். சு.

இ - ள். இன்னு செய்தாரை ஒறுத்தல் - தமக்கின்னுதவற்றைச் செய்தாரைத் துறந்தாரொறுத்தலாவது—அவர் நாண நன்னயம் செய்து விடல் - அவர்தாமே நாணுமாறு அவர்க்கு இனிய வுவகைகளைச்செய்து அவ்விரண்டனையும் மறத்தல். எ-று.

மறவாவழிப் பின்னும் வந்து கிளைக்குமாகலின், மறக்கற்பாலவாயின. அவரை வெல்லுமுபாயங் கூறியவாறு. இவை மூன்றுபாட்டானுஞ் செற்றம் பற்றிச் செய்தல் விலக்கப்பட்டது. (சு)

ஈகரு. அறிவினு னுகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோயபோற போற்றுக் கடை. ரு.

இ - ள். அறிவினுன் ஆகுவது உண்டோ - துறந்தார்க்கு உயிர்மூதலியவற்றை உள்ளவாறறிந்த அறிவினுனவதொரு பயனுண்டோ,—பிறிதின் நோய் தந்நோய் போல் போற்றுக்கடை - பிறிதோருயிர்க்கு வரும் இன்னுதவற்றைத் தம்முயிர்க்கு வந்தனபோலக் குறிக்கொண்டு காவாவிடத்து. எ - று.

குறிக்கொண்டு காத்தலாவது நடத்தல், இருத்தல், கிடத்தல், நிற்றல், உண்டல் முதலிய தந்தொழில்களானும் பிறவாற்றானும் உயிர்களுறுவனவற்றை முன்னே யறிந்து உறுமற்காத்தல். இது பெரும்பான்மையும் அஃறிணைக்கண் நுண்ணியவுடம் புடையவற்றைப்பற்றி வருதலிற் பொதுப்படப் பிறிதினோயென்றும், மறப்பான் அது தன்புறினும் நமக்கின்னுசெய்தலாமென்றறிந்து காத்தல் வேண்டுமாகலின் அது செய்யாவழி அறிவாற் பயனில்லையென்றுங் கூறினார். இதனாற் சோர்வாற்செய்தல் விலக்கப்பட்டது. (ஙி)

ஈகசு. இன்னு வெனைத்தா னுணர்ந்தவை தன்னுமை
வேண்டும் பிறன்கட் செயல். சு.

இ - ள். இன்னா எனத் தான் உணர்ந்தவை - இவை மக்கட்கின்னாதனவென அனுமானத்தாற்றானறிந்தவற்றை—பிறன்கண் செயல் தன்னாமை வேண்டும் - பிறன் மாட்டுச் செய்தலை மேவாமை துறந்தவனுக்கு வேண்டும். எ - று.

இன்பத்தின்பங்கள் உயிர்க்குணமாகலின், அவை காட்சியளவையான் அறியப் படாமையறிக. அறமும் பாவமுமளவாவது மனமுளதாயவழியாகலான், உணர்ந் தனவையென்றார். (கூ)

நடஎ. எணைத்தானு மெஞ்ஞான்றும் யார்க்கு மனத்தானு
மாணாசெய் யாமை தலை. எ.

இ - ள். மனத்தான் ஆம் மாண - மனத்தோடு உளவாகின்ற இன்னாத செயல் களை—எஞ்ஞான்றும் யார்க்கும் எனைத்தானும் செய்யாமை தலை - எக்காலத்தும் யாவர்க்குஞ் சிறிதாயினுஞ் செய்யாமை தலையாயவறம். எ - று.

ஈண்டு மனத்தானாகாதவழிப் பாவமில்லையென்பது பெற்றாம். ஆற்றலுண்டாய காலத்தும் ஆகாமையின் எஞ்ஞான்றுமென்றும், எளியார்க்குமாகாமையின் யார்க்கு மென்றும், செயல் சிறிதாயினும்பாவம் பெரிதாகலின் எனைத்தானுமென்றுங்கூறினார்.

நடஅ. தன்னுயிர்க் கின்னாமை தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல். அ.

இ -ள். தன் உயிர்க்கு இன்னாமை தான் அறிவான் - பிறர் செய்யுமின்னாத தன்னுயிர்க்கு இன்னாவாந்தன்மையை அனுபவித்தறிகின்றவன்—மன்னுயிர்க்கு இன்னா செயல் என்கொல் - நிலைபேறுடைய பிறவுயிர்கட்குத் தானவற்றைச் செய்தல் என்ன காரணத்தான்! எ - று.

இவ்வாறே இவை பிறவுயிர்க்குமின்னாவென்பது அனுமானத்தானறிந்துவைத்துச் செய்கின்ற இப்பாவங் கழுவப்படாமையின், இன்னாதன யான் வருந்தப் பின்னே வந்து வருத்துமென்பது ஆகமத்தானுமறிந்து ஒழியற்பாலனென்பது தோன்றத் தானென்றும், அத்தன்மையான் ஒழியாமைக்குக் காரணம் மயக்கமென்பது தோன்ற என்கொலோவென்றுங் கூறினார். இவை மூன்றுபாட்டானும் பொதுவகையான் விலக்கப்பட்டது. (அ)

நடக. பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும். க.

இ - ள். பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின் - துறந்தவர் பிறர்க்கின்னாதன வற்றை ஒருபகலது முற்கூற்றின்கட் செய்வராயின்,—தமக்கு இன்னா பிற்பகல் தாமே வரும் - தமக்கின்னாதன அதன்பிற்கூற்றின்கண் அவர்செய்யாமற்றாமேவரும். எ - று.

முற்பகல் பிற்பகலென்பன பின் முன்னாகத்தொக்க ஆறாம்வேற்றுமைத்தொகை. தவமழிதலின், அங்ஙனங் கடிதினும் எளிதினும் வரும்; அதனால் அவைசெய்யற்க வென்பதாம். இனித் தானே வருமென்பது பாடமாயின், அச்செயலாலே தமக்கின் னாதன்னாய் வருமென உபசாரவழக்காக்கி, ஆக்கம் வருவித்துரைக்க. (க)

நடஉ0. கோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர். க0.

இ - ன். நோய் எல்லாம் நோய் செய்தார் மேலவாம் - இன்ஞதனவெல்லாம் பிறிதோருயிர்க்கு இன்ஞதன செய்தார் மேலவாம்;—நோய் இன்மை வேண்டுபவர் நோய் செய்யார் - அதனால் தம்முயிர்க்கு இன்ஞதன வேண்டாதார் பிறிதோருயிர்க்கு இன்ஞதனசெய்யார். எ - று.

உயிர்நிலத்து வினைவித்திட்டார்க்கு விளைவும் அதுவே * யாகலின், நோயெல்லா நோய்செய்தார்மேலவாமென்றார். இது சொற்பொருட்பின்வருநிலை. இனையிரண்டு பாட்டானும் அது செய்தார்க்கு வருந்தீங்கு கூறப்பட்டது. (கo)

ங்ஙம் அதி.—கொல்லாமை.

அஃதாவது ஐயறிவுடையன முதல் ஓரறிவுடையனவீறாக உயிர்களைச்†சோர்ந்துங்கொல்லுதலைச் செய்யாமை. இது, மேற்கூறிய அறங்களெல்லாவற்றினுஞ் சிறப்புடைத்தாய்க் கூறுதலவற்களையும் அகப்படுத்துநிற்றலின், இறுதிக்கண் வைக்கப்பட்டது.

ங்ஙக. அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும்.

இ - ள். அறவினை யாது எனின் கொல்லாமை-அறங்களெல்லாமாகிய செய்கை யாதென்று வினவின், அஃது ஒருயிரையுங் கொல்லாமையாம்,—கோறல் பிறவினை எல்லாம் தரும்-அவற்றைக் கொல்லுதல் பாவச்செய்கைகளெல்லாவற்றையுந் தானே தரும் ஆதலான். எ - று.

அறம் சாதியொருமை. விலக்கியதொழிதலும் அறஞ்செய்தலாமாகலின், கொல்லாமையை அறவினையென்றார். ஈண்டுப் பிறவினையென்றது அவற்றின்விளைவை. கொலைப்பாவம் விளைக்குந்துன்பம் ஏனைப்பாவங்களெல்லாங் கூடியும் விளைக்கமாட்டாவென்பதாம். கொல்லாமைதானே பிறவறங்களெல்லாவற்றின் பயனையுந் தருமென்று மேற்கோள்கூறி, அதற்கேதுவை எதிர்மறைமுகத்தாற் கூறியவாறுயிற்று. (க)

ங்ஙஉ. பகுத்துண்டு பல்லுயி ரோம்புத னூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை. உ.

இ - ள். பகுத்து உண்டு பல்லுயிர் ஓம்புதல் - உண்பதனைப் பகித்தவுயிர்கட்குப் பகுத்துக்கொடுத்துண்டு ஐவகையுயிர்களையுமோம்புதல்—நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை-அறநூலுடையார் துறந்தார்க்குத் தொகுத்தவறங்களெல்லாவற்றினுந் தலையாயவறம். எ - று.

பல்லுயிருமென்னும் முற்றும்மை விகாரத்தாற்றொக்கது. ஓம்புதல் சோர்ந்துங் கொலை வாராமற் குறிக்கொண்டு காத்தல். அதற்குப் பகுத்துண்டல் இன்றியமையாவுறுப்பாகலின், அச்சிறப்புத்தோன்ற,அதனை இறந்தகாலவினையெச்சத்தாற் கூறினார்.

---

* மீக்கஞ்சிக்தாமணி, முத்தியிலம்பகம், கக்ச.

† புல்லும் மரமும் முதலியன பரிசத்தையறியும் ஓரறிவுயிர்கள். இப்பியுஞ் சங்கும் முதலியன அதனோடு இரசத்தையுமறியும் ஈரறிவுயிர்கள். கறையானும் எறும்பும் முதலியன அவ்விரண்டனோடு கந்தத்தையுமறியும் மூவறிவுயிர்கள். நும்பியும் வண்டும் முதலியன அம்மூன்றனோடு உருவத்தையுமறியும் நாலறிவுயிர்கள். வானவரும் மக்களும் நாகரும் விலங்கும் புள்ளும் முதலியன அந்நான்கனோடு சத்தத்தையுமறியும் ஐயறிவுயிர்கள்.

எல்லா நூல்களிலும் நல்லனவெடுத்து எல்லார்க்கும் பொதுப்படக்கூறுதல் இவர்க் கியல்பாகலின், ஈண்டும் பொதுப்பட நூலோரென்றும், அவரெல்லார்க்கும் ஒப்பமுடிதலான் இது தலையாயவறமென்றுங் கூறினர். (உ)

நாஉஉ. ஒன்றுக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று. நா.

இ - ள். ஒன்றுக நல்லது கொல்லாமை - நூலோர் தொகுத்த அறங்களுள் தன்னொடியைப்பதின்றித் தானேயாக நல்லது கொல்லாமை;—பொய்யாமை அதன் பின்சார நன்று - அஃதொழிந்தால் பொய்யாமை அதன்பின்னேநிற்க நன்று. எ - று.

நூலோர் தொகுத்தவறங்களென்பது அதிகாரத்தான் வந்தது. அதிகாரம் கொல்லாமையாயினும் மேற் பொய்யாமை பொய்யாமை யாற்றினெனவும் யாமெய்யாக் கண்டவற்றுளில்லையெனவுங் கூறினராகலின், இரண்டறத்துள்ளும் யாது சிறந்த தென்று ஐயநிகழுமன்றே, அது நிகழாமைப்பொருட்டு, ஈண்டு அதன் பின்சாரப் பொய்யாமை நன்றென்றார், முற்கூறியதிற் பிற்கூறியது வலியுடைத்தாகலின். அதனைப் பின்சாரநன்றென்றது, நன்மைபயக்கும்வழிப் பொய்யும் மெய்யாயும், தீமை பயக்கும்வழி மெய்யும் பொய்யாயும் இதனைப் பற்ற அது திரிந்துவருதலானென வுணர்க. இவை மூன்றுபாட்டானும் இவ்வறத்தினது சிறப்புக் கூறப்பட்டது. (கூ)

நாஉச. நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழ்வ தெறி.

இ - ள். நல்லாறு எனப்படுவது யாது எனின் - மேற்கதி வீடுபேறுகட்கு நல்ல நெறியென்று சொல்லப்படுவது யாதென்று வினவின்,—யாதொன்றும் கொல்லாமை சூழும் நெறி - அஃது யாதோருயிரையுங் கொல்லாமையாகிய அறத்தினேக்காக்கக் கருதும் நெறி. எ - று.

யாதொன்றுமென்றது, ஓரறிவுயிரையும் அகப்படுத்தற்கு. காத்தல் வழுவாமற் காத்தல். இதனால் இவ்வறத்தினையுடையதே நன்னெறியென்பது கூறப்பட்டது. (ச)

நாஉடு. நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாங் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் றலை. டு.

இ - ள். நிலை அஞ்சி நீத்தாருள் எல்லாம் - பிறப்புநின்ற நிலையை அஞ்சிப் பிற வாமைப்பொருட்டு யானைவாழ்க்கையைத் துறந்தாரெல்லாருள்ளும்—கொலை அஞ்சிக் கொல்லாமை சூழ்வான் தலை - கொலைப்பாவத்தை அஞ்சிக்கொல்லாமையாகிய அறத்தை மறவாதவன் உயர்ந்தவன். எ - று.

பிறப்பு நின்றநிலையாவது இயங்குவ நிற்பவென்னுமிருவகைப் பிறப்பினும் இன்ப மென்பதொன்றின்றி உள்ளனவெல்லாந் துன்பமேயாய நிலைமை. துறவு ஒன்றேயா யினும், சமயவேறுபாட்டாற் பலவாமாகலின், நீத்தாருளெல்லாயென்றார். இதனுள் இவ்வறம் மறவாதவனுயர்ச்சி கூறப்பட்டது. (ஙி)

நாஉசு. கொல்லாமை மேற்கொண டொழுகுவான் வாழ்நாண்மேற்
செல்லா துயிருண்ணுங் கூற்று. சு.

இ - ள். கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாண்மேல் - கொல்லா மையை விரதமாக மேற்கொண்டொழுகுவானது வாழ்நாளின்மேல்—உயிர் உண்ணும் கூற்றுச் செல்லாது - உயிருண்ணுங் கூற்றுச் செல்லாது. எ - று.

மிகப்பெரியவறஞ்செய்தாரும் மிகப்பெரிய பாவஞ்செய்தாரும் முறையானன்றி இம்மை தன்னுள்ளே அவற்றின் பயன் அனுபவிப்பரென்னும் அறநூற்றுணிபுபற்றி, இப்பேரறஞ்செய்தான்ரூனுங் கொல்லப்படான். படாஞகவே, அடியிற்சுட்டிய வாழ்நாள் இடையூறின்றி யெய்துமென்பார், வாழ்நாண்மேற் கூற்றுச்செல்லாதென்ரூர்; செல்லாதாகவே, கால நீட்டிக்கும், நீட்டித்தால் ஞானம் பிறந்து உயிர் வீடு பெறுமென்பது கருத்து. இதனுன் அவர்க்கு வருநன்மை கூறப்பட்டது. (சு)

கூஉஎ. தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை. எ.

இ - ள். தன் உயிர் நீப்பினும் - அது செய்யாவழித் தன்னுயிர் உடம்பினீங்கிப் போமாயினும்,—தான் பிறிது இன்னுயிர் நீக்கும் வினை செய்யற்க - தான் பிறிதோரின்னுயிரை அதனுடம்பினீக்குந் தொழிலைச் செய்யற்க. எ - று.

தன்னை அது கொல்லினுந் தான் அதனைக் கொல்லற்கவென்றது, பாவம் கொலை யுண்டவழித் தேய்தலும் கொன்றவழி வளர்தலும் நோக்கி. இனித் தன்னுயிர்நீப்பினு மென்பதற்குச் சாந்தியாகச் செய்பாதவழிச் தன்னுயிர் போமாயினுமென்றுரைப்பாரு மூளர்; பிற செய்தலுமாகாமையின், அஃதுரையன்மையறிக. (எ)

கூஉஅ. நன்ருகு மாக்கம் பெரிதெனினுஞ் சான்ரோர்க்குக்
கொன்ருகு மாக்கங் கடை. அ.

இ - ள். நன்று ஆகும் ஆக்கம் பெரிது எனினும் - தேவர் பொருட்டு வேள்விக் கட்கொன்ரூல் இன்பமிகுஞ்செல்வம் பெரிதாமென்று இல்வாழ்வார்க்குக் கூறப்பட்ட தாயினும்,—சான்ரோர்க்குக் கொன்று ஆகும் ஆக்கம் கடை - துறவானமைந்தார்க்கு ஒருயிரைக் கொல்லவருஞ் செல்வங்கடை. எ - று.

இன்பமிகுஞ் செல்வமாவது தாமுந்தேவராய்த் துறக்கத்துச் சென்றெய்துஞ் செல்வம். அது சிறிதாகலானும், பின்னும் பிறத்தற்கேதுவாகலானும், வீடாகிய ஈறி லின்பமெய்துவார்க்குக் கடையெனப்பட்டது. துறக்கமெய்துவார்க்கு ஆமாயினும் வீடெய்துவார்க்கு ஆகாதென்றமையின், விதி விலக்குக்கள் தம்முண்மேலியாமை விளக்கியவாருயிற்று. இஃதில்லறமன்மைக்குக் காரணம். இவை யிரண்டுபோட்டானுங் கொலையது குற்றம் கூறப்பட்டது. (அ)

கூஉகூ. கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து.

இ - ள். கொலை வினையர் ஆகிய மாக்கள் - கொலைத்தொழிலையுடையராகிய மாந்தர்,—புன்மை தெரிவார் அகத்துப் புலை வினையர் - அத்தொழிலின் கீழ்மையை அறியாத நெஞ்சத்தராயினும், அறிவார் நெஞ்சத்துப் புலைத்தொழிலினர். எ - று.

கொலைவினையரென்றதனுன், வேள்விக்கட் கொலையன்மையறிக. புலைவினைய ரென்றது தொழிலாற் புலையரென்றவாறு. இம்மைக்கட் கீழ்மையெய்துவரென்பதாம்.

கூகூ. உயிருடம்பி னீங்கியா ரென்ப செயிருடம்பிற்
செல்லாத்தீ வாழ்க்கை யவர். கூ.

இ - ள். செயிர் உடம்பின் செல்லாத் தீவாழ்க்கையவர் - நோக்கலாகா நோயுடம்புடனே வறுமை கூர்ந்த இழிதொழில் வாழ்க்கையினையுடையாரை—உயிர் உடம்

மின் கீக்கியார் என்ப-இவர் மூற்பிறப்பின்கண் உயிர்களை அலை யின்றவுடம்பினின்று நீக்கினரவரென்று சொல்லுவர் வினைவிளைவுகளையறிந்தோர். எ - று.

செல்லாவாழ்க்கை தீவாழ்க்கையெனக்கூட்டுக. செயிருடம்பினராதல் "அக் கேபோ லங்கை யொழிய வீரலழுகித்—தக்கத் தொழுநோ யெழுபவே*" என்பத னானுமறிக. மறுமைக்கண் இவையுமெய்துவரென்பதாம். இவையிரண்டுபாட்டானுங் கொல்வார்க்கு வருந் தீங்கு கூறப்பட்டது. (கo)

அருளுடைமைமுதற் கொல்லாமையீறாகச் சொல்லப்பட்ட இவற்றுள்ளே சொல் லப்படாத விரதங்களுமடங்கும்; அஃதறிந்தடக்கிக்கொள்க. ஈண்டைப்பிற்பெருகும்.

ஞானம்.

இனி அவற்றின் பயனுகிய ஞானங்கூறிய தொடர்கிளர். ஞானமாவது வீடு பயக்குமுணர்வு. அது நிலையாமைமுதல் அவாவறுத்தலிறுதியாக நான்காதிகாரத்து ளடக்கப்பட்டது.

நூசாம் அதி.—நிலையாமை.

அவற்றுள் நிலையாமையாவது தோற்றமுடையன யாவும் நிலையுதலிலவாந் தன்மை. மயங்கியவழிப் பேய்த்தேரிற்புனல்போலத் தோன்றி மெய்யுணர்ந்தவழிக் கயிற்றிலரவுபோலக் கெடுதலிற் பொய்யென்பாரும், நிலை வேறுபட்டுவருதலாற்கணத் தோறும் பிறந்திறக்குமென்பாரும், ஒருவாற்றான் வேறுபடுதலும் ஒருவாற்றான் வேறு படாமையுமுடைமையின் நிலையுதலும் நிலையாமையும் ஒருங்கேயுடையவென்பாரு மெனப் பொருட்பெற்றி கூறுவார் பலதிறத்தாரவர்; எல்லார்க்கும் அவற்றது நிலை யாமை உடம்பாடாகலின், ஈண்டு அதனையே கூறுகின்றார். இஃதுணர்ந்துழியல்லது பொருள்களிற் பற்றுவிடாதாகலின், இது முன் வைக்கப்பட்டது.

நூகக. நில்லா தவற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை. க.

இ - ள். நில்லாதவற்றை நிலையின என்று உணரும் புல்லறிவாண்மை - நிலையுத லிலவாகிய பொருள்களை நிலையுதலுடையவென்று கருதுகின்ற புல்லியவறிவினை யுடையராதல்—கடை - திறத்தார்க்கிழிபு. எ - று.

தோற்றமுடையவற்றைக் கேடிலவென்று கருதும் புல்லறிவால் அவற்றின்மேற் பற்றுச்செய்தல் பிறவித்துன்பத்திற்கேதுவாகலின், அது வீடெய்துவார்க்கிழுக்கென் பது இதனாற் கூறப்பட்டது. இனிப்புல்லறிவாளர் பெரும்பான்மையும் பற்றுச்செய் வதுசிற்சிறின்பத்துக் கேதுவாகிய செல்வத்தின்கண்ணும் அதனையனுபவிக்கும் யாக்கை யின்கண்ணுமாகலின், வருகின்ற பாட்டுக்களான் அவற்றது நிலையாமையை விதந்து கூறுப. (க)

நூஉ. கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று. உ.

---

* அக்கேபோ லங்கை யொழிய வீரழுகித்—தக்கத் தொழுநோ யெழுபவே - யக்கா—லலவங்கை காதலித்துத்தான்முரித்துத் தின்ற—பழவிலே வந்தடைந்தக் கால். நாலடியார், நிலையாமைச்சம்.

இ - ள். பெருஞ்செல்வம் கூத்தாட்டு அவைக் குழாத்தற்று - ஒருவன்மாட்டுப் பெரியசெல்வம் வருதல் கூத்தாடுதல் செய்கின்ற அரங்கின்கட் காண்போர்குழாம் வந்தாற்போலும்,—போக்கும் அது வினிந்தற்று - அதனது போக்கும் அக்கூத்தாட்டு முடிந்தவழி அக்குழாம் போயினாற்போலும். எ - று.

பெருஞ்செல்வமெனவே துறக்கச்செல்வமுமடங்கிற்று. போக்குமென்ற எச்ச வும்மையான், வருதலென்பது பெற்றாம். அக்குழாம் கூத்தாட்டுக் காரணமாக அரங் கின்கட் பஃறிறத்தாற்றானே வந்து, அக்காரணம் போயவழித் தானும் போமாறு போல, செல்வமும் ஒருவனல்வினை காரணமாக அவன்மாட்டுப் பஃறிறத்தாற்றானே வந்து, அக்காரணம் போயவழித் தானும் போமென்றதாயிற்று. (உ)

கூகூ. அற்கா வியல்பிற்றுச் செல்வ மதுபெற்ற
லற்குப வாங்கே செயல். கூ.

இ - ள். அற்கா இயல்பிற்றுச் செல்வம் - நில்லாதவியல்பினையுடைத்துச் செல் வம்;—அது பெற்றால் அற்குப ஆங்கே செயல்-அதனைப் பெற்றால், அதனைச் செய்யப் படும் அறங்களே அப்பெற்றபொழுதே செய்க. எ - று.

அல்காவென்பது திரிந்துநின்றது. ஊழுள்ளவழியல்லது துறந்தாராற் பெறப் படாமையின் அது பெற்றாலென்றும், அஃதில்வழி நில்லாமையின் ஆங்கேயென்றுங் கூறினர். அதனைச்செய்யப்படும் அறங்களாவன பயனேக்காது செய்யப்படுங் கடவுட் பூசையும், தானமும் முதலாயின. அவை ஞானவேதுவாய் வீடுபயத்தலின், அவற்றை அற்குபவென்றும் செய்கவென்றுங்கூறினர். இவையிரண்டுபோட்டானும் செல்வநில்லா யாமை கூறப்பட்டது. (கூ)

கூகூச. நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின். ச.

இ - ள். நாள் என ஒன்றுபோல் காட்டி ஈரும் வாளது உயிர் - நாளென்று அறுக்கப்படுவதொரு காலவரையறைபோலத் தன்னைக்காட்டி ஈர்ந்து செல்கின்ற வாளினது வாயது உயிர்,—உணர்வார்ப் பெறின் - அஃதுணர்வாரைப்பெறின். எ-று.

காலமென்னும் அருவப்பொருள் உலகியனடத்தற்பொருட்டு ஆகித்தன் முதலிய அளவைகளாற் கூறுபட்டதாக வழங்கப்படுவதல்லது தானுகக் கூறுபடாமையின் நாளெனவொன்றுபோலென்றும், அது தன்னே வாளென்றுணர மாட்டாதார் தமக் குப் பொழுதுபோகா நின்றதென்று இன்புறுமாறு நாளாய் மயக்கலிற் காட்டியென் றும், இடைவிடாதீர்தலான் வாளின் வாயதென்றும், அஃதீர்கின்றமையை உணர்வார் அரியராகலின் உணர்வார்ப்பெறினென்றுங்கூறினர். உயிரென்னுஞ் சாதியொருமைப் பெயர் ஈண்டு உடம்பின்மேனின்றது, ஈரப்படுவது அதுவேயாகலின். வாளெனபது ஆகுபெயர். இனி இதனே நாளென்பதொரு பொருள்போலத் தோன்றி உயிரை ஈர்வ தொரு வாளாமென்றுரைப்பாருமுளர்: எனவெண்பது பெயரன்றி இடைச்சொல்லாக லானும், ஒன்றுபோற்காட்டி யென்பதற்கு ஒருபொருட்சிறப் பின்மையானும், அது வென்பது குற்றியலுகரமன்மையானும், அஃதுரையன்மையறிக. (ச)

கூகூரு. காச்செற்று விக்குண்மேல் வாராமு னல்வினை
மேற்சென்று செய்யப்படும்.

இ - ள். நாச் செற்று விக்குள் மேல் வாராமுன் - உரையாடாவண்ணம் நாவை யடக்கி விக்குளெழுவதற்குமுன்னே—நல்வினை மேற்சென்று செய்யப்படும் - வீட்டிற்கேதுவாகிய அறம் விரைந்து செய்யப்படும். எ - று.

மேலேக்கிவருதல் ஒருதலையாகலானும், வந்துழிச் செய்தலேயன்றிச் சொல்லலு மாகாமையானும் வாராமுனென்றும், அது தான் இன்னபொழுது வருமென்பதின் மையின் மேற்சென்றென்றுங் கூறினர். மேற்சேறல் மண்டுதல். நல்வினைசெய்யுமாற் றின் மேல்வைத்து நிலையாமை கூறியவாறு. (இ)

ஙூஙூ. நெருக ளுளளொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு. கூ

இ - ள். ஒருவன் நெருங்கி உளன் இன்று இல்லை என்னும் பெருமை உடைத்து - ஒருவன் நெருங்குளனாயினன் அவனை இன்றில்லையாயினனென்று சொல்லும் நிலை யாமை மிகுதியுடைத்து—இவ்வுலகு - இவ்வுலகம். எ - று.

ஈண்டு உண்மை பிறத்தலையும், இன்மை இறத்தலையுமுணர்த்திநின்றன. அவை பெண்பாற்குமுளவாயினும், சிறப்புப்பற்றி ஆண்பாற்கே கூறினர். இந்நிலையாமையே உலகின் மிக்கதென்பதாம். (கூ)

ஙூஙூ ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல. எ.

இ - ள். ஒருபொழுதும் வாழ்வது அறியார் - ஒருபொழுதளவும் தம்முடம்பு முயிரும் இயைந்திருத்தலைத் தெளியமாட்டார்;—கோடியும் அல்ல பல கருதுப - மாட் டாதவைத்தும், கோடியளவுமன்றி அதனினும் பலவாய நினைவுகளே நினையாநிற்பர் அறிவிலாதார். எ - று.

இழிவுசிறப்பும்மையாற் பொழுதென்பது ஈண்டுக் கணத்தின்மேனின்றது. கார ணமாகிய வினையினளவே வாழ்தற்கும் அளவாகலின், அஃதறியப்படாதாயிற்று. பல வாய நினைவுகளாவன பொறிகளானுகரப்படும் இன்பங்கள் தமக்குரியவாமாறும், அதற்குப் பொருள் துணைக்காரணமாமாறும், அது தம்முயற்சிகளான் வருமாறும், அவற்றைத் தாமுயலுமாறும், அவற்றிற்குவரு மிடையூறுகளும், அவற்றை நீக்குமா றும், நீக்கி அப்பொருள் கடைக்கூட்டுமாறும், அதனைப் பிறர் கொள்ளாமற் காக்கு மாறும், அதனான் ஈட்டாரையாக்குமாறும், கள்ளாரையழிக்குமாறும், தாம் அவ்வின் பங்கள் நுகருமாறும் முதலாயின. அறிவிலாதியல்பின்மேல் வைத்து நிலையாமை கூறியவாறு. இனிக் கருதுப வென்பதனை அஃறிணைப்பன்மைப்பெயராக்கி உரைப் பாருமுளர். (எ)

ஙூஙூ அ. குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
யுடம்போ டுயிரிடை நட்பு. அ.

இ - ள். குடம்பை தனித்து ஒழியப் புள் பறந்தற்று - முன்றனியாத முட்டை தனித்துக் கிடப்ப அதனுளிருந்த புள்ளுப் பருவம் வந்துழிப் பறந்து போனதன் மைத்து—உடம்போடு உயிரிடை நட்பு - உடம்பிற்கும் உயிர்க்குமுளதாயநட்பு. எ-று.

தனித்தொழியலென்றதனால், முன்றனியாமை பெற்றும்: அஃதாவது கருவுந் தானும் ஒன்றுபிறழ்ந்து வேறுந்துணையும் அதற்காதாரமாய் நிற்றல்; அதனால் அஃது

உடம்பிற்குவமையாயிற்று; அதனுள் வேற்றுமையின்றிநின்றே பின் புகாமற்போகலின், புள் உயிர்க்குவமையாயிற்று. முட்டையுட்பிறப்பன பிறவுமுளவேலும், புள்ளேயே கூறினர், பறந்துபோதற்றொழிலான் உயிரோடொப்புமையெய்துவது அதுவேயாகலின். கட்பென்பது ஈண்டுக் குறிப்புமொழியாய் கட்பின்றிப்போதலுணர்த்தி நின்றது. சேதனமாய் அருவாய் நித்தமாய உயிரும், அசேதனமாய் உருவாய் அநித்தமாய உடம்பும் தம்முண்மாறுகலின், வினைவயத்தாற்கூடியதல்லது கட்பிலவென்பதறிக. இனிக் குடம்பையென்பதற்குக் கூடென்றுரைப்பாருமுளர்: அது புள்ளுடன் றோன்றுமையாலும், அதன்கண அதுமீண்டு புகுதலுடைமையாலும், உடம்பிற்கு உவமையாகாமையறிக. (அ)

கூகூ. உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு. கூ.

இ - ள். சாக்காடு உறங்குவது போலும் - ஒருவனுக்குச் சாக்காடு வருதல் உறக்கம் வருதலோடொக்கும்;—பிறப்பு உறங்கி விழிப்பதுபோலும் - அதன்பின் பிறப்பு வருதல் உறங்கி விழித்தல் வருதலோடொக்கும். எ - று.

உறங்குதலும் விழித்தலும உயிர்கட்கு இயல்பாய்க் கடிதின் மாறிமாறி வருகின்றுற்போலச சாக்காடும பிறப்பும் இயல்பாய்க் கடிதின் மாறிமாறி வருமென்பது கருத்து. நிலையாமையே நிலைபெற்றவாறறிவித்தற்குப் பிறப்பும் உடன் கூறப்பட்டது.

கூச0. புக்கி லமைந்தின்று கொல்லோ வுடம்பினுட்
டுச்சி விருந்த வுயிர்க்கு. க0.

இ - ள். உடம்பினுள் தூசில் இருந்த உயிர்க்கு - வாதமுதலியவற்றின் இல்லாய வுடம்புகளுள் ஒதுக்கிருந்தே போந்த உயிர்க்கு—புக்கில் அமைந்தின்றுகொல் - எஞ் ஞான்றுமிருப்பிதாரில் இதுகாறும் அமைந்ததில்லேபோலும்! எ - று.

அந்நோய்கள் இருக்கவமைந்த ஞான்று இருந்தும், வெகுண்டஞான்றபோயும், ஒருடம்பினும் நிலைபெறுது வருதலால், தூசில்லிருந்தவென்றார். பின் புறப்படாது புக்கேகவியலில் அமைந்ததாயின், பிறரிற்களுள் ஒதுக்கிராதென்பதாம்; ஆகவே உயிரோடு கூடிநிற்பதோருடம்புமில்லையென்பது பெறப்பட்டது. இவையேழுபாட்டானும், முறையே யாக்கைகட்கு வரைந்த நாள் கழிகின்றவாறும், கழிந்தால் உளதாய நிலையாமையும், அவை ஒரோவழிப் பிறந்தவளவிலே இறத்தலும், ஒருகணமாயினும் நிற்குமென்பது தெளியப்படாமையும், உயிர்நீங்கியவழுக் கிடகுமாறும், அவற்றிற்கு இறப்பும் பிறப்பும் மாறிமாறி வருமாறும், அவைதாம் உயிர்க்குரிய வன்மையுமென்று, இவ்வாற்றால் யாக்கை நிலையாமை கூறியவாறு கண்டுகொள்க. (க0)

கூநி ம் அதி.—துறவு.

அஃதாவது புறமாகிய செல்வத்தின்கண்ணும் அகமாகிய யாக்கையின்கண்ணும் உளதாம் பற்றினை, அவற்றது நிலையாமை நோக்கி, விடுதல். அதிகாரமுறைமையும் இதனானே விளக்கும்.

கூசக. பாதனின் பாதனி னீங்கியா னேதை
லாதனி னாதனி னிலன். க.

---

* இவ்வாறு பெயரடியாகத் தோன்றிய குறிப்பை வடநூலார் அபிதாசூத்தொனி யென்றும், விருத்தலக்ஷணையென்றும் கூறுவர்.

இ - ள். யாதனின் யாதனின் நீங்கியான் - ஒருவன் யாதொருபொருளின் யாதொருபொருளின் நீங்கினுன்—அதனின் அதனின் நோதல் இலன் - அவன் அப் பொருளால் அப்பொருளால் துன்பமெய்துதலிலன். எ - று.

அடுக்குக்கள் பன்மை குறித்துநின்றன. நீங்குதல் துறத்தல். ஈண்டுத் துன்ப மென்றது இம்மைக்கண் அவற்றைத் தேடுதலானும், காத்தலானும், இழத்தலானும் வருவனவும், மறுமைக்கட் பாவத்தான் வருவனவுமாய இருவகைத்துன்பங்களேயு மாம். எல்லாப்பொருளேயும் ஒருங்கே விடுதல் தலே. அஃதன்றி ஒரோவொன்றாக விடி னும் அவற்றான் வருந்துன்பமிலனுமென்பது கருத்து. (க)

கூசஉ. வேண்டினுண் டாகத் துறக்க துறந்தபி
னீண்டியற் பால பல. உ.

இ - ள். துறந்தபின் ஈண்டு இயற்பால பல - எல்லாப்பொருள்களேயுந் துறந் தால் ஒருவர்க்கு இம்மைக்கண்ணே உளவாம் முறைமையையுடைய இன்பங்கள் பல;—வேண்டின் உண்டாகத் துறக்க - அவ்வின்பங்களே வேண்டின், அவற்றைக் காலம் பெறத்துறக்க. எ - று.

அவ்வின்பங்களாவன அப்பொருள்கள் காரணமாக மனமொழிமெய்கள் அலே யாது நிற்றலானும், அவை நன்றிக்கட் சேறலானும் வருவன. இளமைக்கட்டிறந் தான் அவற்றை நெடுங்காலமெய்துமாகலின், உண்டாகத் துறக்கவென்றார். இன்பங்க ளென்பதும் காலமென்பதும் வருவிக்கப்பட்டன. இம்மைக்கட்டின்புங்கள் இலவாத லேயன்றி இன்பங்களுளவாதலு முண்டென்பதாம். (உ)

கூசஊ. அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு. ஊ.

இ - ள். ஐந்தன் புலத்தை அடல்வேண்டும் - வீடெய்துவார்க்குச் செவி முதலிய ஐம்பொறிகட்குரியவாய ஓசை முதலிய ஐம்புலன்களேயுங் கெடுத்தல்வேண்டும்;— வேண்டிய எல்லாம் ஒருங்கு விடலவேண்டும் - கெடுக்குங்கால் அவற்றை நுகர்தற் பொருட்டுத் தாம் படைத்த பொருண் முழுதையும் ஒருங்கே விடுதல்வேண்டும். எ-று.

புலமென்றது அவற்றை நுகர்தலே. அது மனத்தைத் துன்பத்தானும் பாவத்தானு மன்றி வாராத பொருள்கண்மேலல்லது வீட்டுநெறியாகிய யோகஞானங்களிற் செலு த்தாமையின், அதனேயடல்வேண்டுமென்றும், அஃது அப்பொருள்கண்மேற் செல்லின் அந்நுகர்ச்சி விறகுபெற்ற தழல்போல் முழுகுவதல்லது அடப்படாமையின், வேண் டியவெல்லா மொருங்குவிடல்வேண்டுமென்றும் கூறினர். (ஊ)

கூசஎ. இயல்பாகு நோன்பிற்கொன் றின்மை யுடைமை
மயலாகு மற்றும் பெயர்த்து. எ.

இ - ன். ஒன்று இன்மை நோன்பிற்கு இயல்பாகும் - பற்றப் படுவதொருபொரு ளுமில்லாமை தவஞ்செய்வார்க்கு இயல்பாம்;—உடைமை பெயர்த்து மற்றும் மயலா கும் - அஃதன்றி, ஒன்றுயினுமுடைமை அத்தவத்தைப்போக்குதலான், மீண்டும் மயங் குதற்கேதுவாம். எ - று.

இழிவு சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. நோன்பென்பதனேடும் மயலென் பதனேடும் ஆகுபெயர். பெயர்த்தலானென்பது திரிந்துநின்றது. நோன்பைப் பெயர்த்த

லானென வேற்றுமைப்படுத்துக்கூட்டுக. எல்லாப் பொருள்களையும் விட்டு ஒருபொருளிடாதவழியும், அது சார்பாக விட்டனவெல்லாம் மீண்டுவந்து தவத்திற்கிடையீடாய் மனக்கலக்கஞ்செய்யுமென்பது கருத்து. இவை கான்குபாட்டானும் எனதென்னும் புறப்பற்று விடுதல் கூறப்பட்டது. (ச)

கூசரு. மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பு மிகை. ரு.

இ - ள். பிறப்பு அறுக்கல் உற்றார்க்கு உடம்பும் மிகை - பிறப்பறுத்தலே மேற்கொண்டார்க்கு அதற்குக் கருவியாகிய உடம்பும் மிகையாம்;—மற்றும் தொடர்ப்பாடு எவன் - ஆனபின் அதற்கு மேலே இயைபில்லனவுஞ்சில தொடர்ப்பாடெவனாதல் என்னும்! எ - று.

உடம்பென்ற பொதுமையான், உருவுடம்பும் அருவுடம்புங்* கொள்ளப்படும். அவற்றுள், அருவுடம்பாவது பத்துவகையிந்திரியவுணர்வோடும் ஐவகை வாயுக்களோடும் காமவினைவினைவுகளோடுங் கூடிய மனம்; இதனுண்ணுடம் பெனவும்படும். இதன்கட் பற்று நிலையாமையுணர்ந்ததுணையான் விடாமையின், விடுதற்குபாயம் முன்னர்க் கூறுப. இவ்வுடம்புகளால் தனபம் இடையறுதுவருதலையுணர்ந்து இவற்றுளை கட்டினை யிறைபெபாழுதும்பொறுதி வட்டின்கணீண விலாதலின், உடம்பு மிகையென்றார். இன்பத்துனபங்களான உயிரோடு ஒற்றுமையெய்துதலின், இவ்வுடம்புகளுமு யானெனப்படும். இதனுன் அகப்பற்று விடுதல் கூறப்பட்டது. (இ)

கூசசு. யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும். கூ.

இ - ள். யான் எனது என்னும் செருக்கு அறுப்பான் - தானல்லாதவுடம்பை யானென்றும் தன்னுடையபில்லாத பொருளை எனதென்றுங் கருதி அவற்றின்கட் பற்றுச்செய்தற்கேதுவாகிய மயக்கத்தைக் கெடுப்பான்—வானோர்களுயர்ந்த உலகம் புகும் - வானோர்க்கும் வேண்டற்கரிய வீட்டுலகத்தை யெய்தும். எ - று.

மயக்கம் அறியாமை. அதனைக் கெடுத்தலாவது தேசிகர்பாற பெற்ற உறுதிமொழிகளானும் யோகப்பயிற்சியானும் அவை யானெனதன்மை தெளிந்து, அவற்றின்கட் பற்றை விடுதல். சிறப்புமமை விகாரத்தாற் வருக்கது. இதனுன இவ்விருவகைப்பற்றினையும் விட்டார்க்கே வீடெனென்பது கூறப்பட்டது. (ஈ)

கூசள. பற்றி விடாஅ விடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு. எ.

இ - ள். பற்றினைப் பற்றி விடாதவர்க்கு - இருவகைப்பற்றினையும் இறுகப் பற்றி விடாதாரை—இடும்பைகள் பற்றி விடா - பிறவித்துன்பங்கள் இறுகபபற்றி விடா. எ - று.

இறுகப்பற்றுதல் காதல்கூர்தல். விடாதவர்க்கென்பது வேற்றுமை மயக்கம். இதனுல் இவை விடாதவர்க்கு வீடில்லையென்பது கூறப்பட்டது. (எ)

* உருவுடம்பு தூலசரீரம், அருவுடம்பு சூக்குமசரீரம்.

நூசஅ. தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர். அ.

இ - ள். தீரத் துறந்தார் !தலைப்பட்டார் - முற்றத்துறந்தார் வீட்டினைத் தலைப் பட்டார்;—மற்றையவர் மயங்கி வலைப்பட்டார் - அங்ஙனந் துறவாதார் மயங்கிப் பிறப்பாகிய வலையுட்பட்டார். எ - று.

முற்றத்துறத்தலாவது பொருள்களையும் இருவகையுடம்பினையும் உவர்த்துப் பற்றற விடுதல். அங்ஙனந் துறவாமையாவது அவற்றுள் யாதானுமொன்றின்கட் சிறிதாயினும் பற்றுச்செய்தல். துணிவுபற்றித் தலைப்பட்டாரென்றும், பொய்க்நெறி கண்டே பிறப்புவலையுளகப்படுதலின் மயங்கியென்றுங் கூறினர். (அ)

நூசகூ. பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும்.

இ - ள். பற்று அற்றகண்ணே பிறப்பு அறுக்கும் - ஒருவன் இருவகைப்பற்று மற்றபொழுதே, அப்பற்றறுதி அவன் பிறப்பையறுக்கும்;—மற்று நிலையாமை காணப் படும் - அவையுறுதபொழுது அவற்றுற் பிறந்திறந்து வருகின்ற நிலையாமை காணப் படும். எ - று.

காரணமற்றபொழுதே, காரியமும் அற்றதாமுறைமைபற்றி, பற்றற்றகண்ணே யென்றார்; 'அற்றது பற்றெனி—லுற்றது வீடு†" என்பதூஉம் அதுபற்றி வந்தது. இவையிரண்டுபோட்டானும் அவ்விருமையும் ஒருங்கு கூறப்பட்டன. (கூ)

நூஙo. பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. கo.

இ - ள். பற்று அற்றான் பற்றினைப் பற்றுக - எல்லாப் பொருளையும் பற்றினின்றே பற்றற்ற இறைவன் ஓதிய வீட்டுநெறியை இதுவே நன்னெறியென்று மனத்துக் கொள்க;—அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு - கொண்டு, அதன்கணுபாயத்தை அம்மனத்தாற் செய்க, விடாது வந்த பற்று விடுதற்கு. எ - று.

கடவுள் வாழ்த்திற் கேற்ப ஈண்டும் பொதுவகையாற் பற்றற்றானென்றார். பற் றற்றான்பற்றென்புழி ஆறாவது செயப்படுபொழமைக்கண்வந்தது. ஆண்டுப்பற்றென்றது பற்றப்படுவதனை. அதன்கணுபாயமென்றது தியானசமாதிகளை. விடாதுவந்த பற்

---

* இவ்வருமைத் திருக்குறளைச் சந்தானகுரவரு ளொருவராகிய கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியர் செஞ்சுவடுதழுவி "தேருங்கா—லுண்மை பொழிய வுறவில்லையென்னுமது—தன்னை யறிவைத் தனியறிவை - முன்னாக—தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி—வலைப்பட்டார் மற்றையவ ரென்று - கீழ்த்தமிழின்—நெய்வப் புலமைத் திருவள்ளுவ ருரைத்த—மெய்வைத்த சொல்லே விரும்பாம - லிவர்க்கு—மாவதுவே செய்தங் கவர்வழியைத் தப்பாமற்—பாவமெனும பௌவப் பரப்புழந்திப் - பூவையர்தங்—கண்வலையிற் பட்டுக் கலவிக் கடும்பயின்றங்—குண்மை நினையுணர்ச்சி யோசாமற் - றுண்மையிரு—ணுவிற கொடுமை பலபிதற்றற் காடோறும்—சாவற் பிறப்பிற் றலைப்பட்டிங் - காவங்கிங்—நற்கும்வகை பாராய் நிலையான நெஞ்சமே—பொற்பினுடன் பானே புலைக்கேள்" எனவெடித்தருளிச்செய்தார். இக்நெஞ்சுவிடுதூது சைவசித்தாந்தம் பதினான்கினுளொன்று.

† அற்றது பற்றெனி—லுற்றது வீடுயிர்—செற்றது மன்னுற—லத்திறை பற்றே—நிழு வாய்மொழி, உ - ம் திருப்பதிகம், ஙி.

றென்பது அநாதியாய்வரும் உடம்பிற்பற்றினே. அப்பற்று லிதேற்கு உபாயம் இதனாற் கூறப்பட்டது. (கo)

ஈகூம் அதி.—மெய்யுணர்தல்.

அஃதாவது பிறப்பு லீகேஷாயும் அவற்றின் காரணங்களேயும் லிபரீதவையங்களானன்றி உண்ணமையாணுணர்தல். இதனே வடநூலார் தத்துவஞானமென்ப. இதுவும் பற்றற்றான் பற்றினேப் பற்றியவழி உளதாவதாகலின், அக்காரணமொற்றுமைபற்றித் துறவின்பின் வைக்கப்பட்டது.

ஈடுக. பொருளல் லவற்றைப் பொருளென் றுணரு
மருளாணு மாணப் பிறப்பு. க.

இ - ள். பொருள் அல்லவற்றைப் பொருள் என்று உணரும் மருளான் ஆம் - மெய்ப்பொருளல்லவற்றை மெய்ப்பொருளென்றுணரும் லிபரீதவுணர்வானே உளதாம்—மாணப் பிறப்பு - இன்பமில்லாத பிறப்பு. எ - று.

அவ்லிபரீதவுணர்வாவது மறுபிறப்பும், இருவினேப்பயனும், கடவுளுமில்லேயெனவும், மற்றுமிச் தன்னமயவுச்சொல்லும் மயக்கநூல் வழக்குக்களே மெய்ந்நூல் வழக்கெனத் தணிதல். குற்றியை மகனென்றும் இப்பியை வெள்ளியென்றும் இவ்வாறே ஒன்றனேப் பிறிதொன்றுகத் தணிதலும் அது. மருள், மயக்கம், லிபரீதவுணர்வு, அலிச்சை என்பன ஒருபொருட்கிளவி. நரகர், லிலங்கு, மக்கள், தேவரென்னும் நால்வகைப்பிறப்பினுமுள்ளது துன்பமேயாகலின், மாணப்பிறப்பென்றார். இதனாற் பிறப்புத் துன்பமென்பதாயும், அதற்கு முதற்காரணம் அலிச்சையென்பதாயுங் கூறப்பட்டன. (க)

ஈடுஉ. இருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு. உ.

இ - ள். மருள் நீங்கி மாசு அறு காட்சியவர்க்கு - அலிச்சையினீங்கி மெய்யுணர்வுடையராயினர்க்கு—இருள் நீங்கி இன்பம் பயக்கும் - அம்மெய்யுணர்வு பிறப்பினே நீக்கி வீட்டினேச் கொடுக்கும். எ - று.

இருள் நரகம்; அஃது அகுபெயராய்க் காரணத்தின்மேனின்றது. நீங்கியெனத் தொடைநோக்கி மெலிந்து நின்றது; நீங்கவென்பதன் றிரிபெனினுமமையும். மருணீங்கியென்னும் வினேயெச்சம் காட்சியவரென்னுங் குறிப்புவினேப்பெயர் கொண்டது. மாசறுகாட்சியென்றது கேவலவுணர்வினே. இதனால் வீடாவது நிரதிசயவின்பமென்பதாயும், அதற்கு நிமித்தகாரணம் கேவலப் பொருளென்பதாயும், கூறப்பட்டன.(உ)

ஈடுஊ. ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வான நணிய தடைத்து. ஊ.

இ - ள். ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு - ஐயத்தினின்று நீங்கி மெய்யுணர்ந்தார்க்கு—வையத்தின் வானம் நணியது உடைத்து - எய்திநின்ற நிலவுலகத்தினும் எய்தக்கடவதாய வீட்டுலகம் நணித்தாதலுடைத்து. எ - று.

ஐயமாவது பலதலேயாயவுணர்வு. அஃதாவது மறுபிறப்பும், இருவினேப் பயனும், கடவுளும் உளவோ இலவோவென ஒன்றிற்றுணிவு பிறவாது நிற்றல்; பேய்த்தேரோ

புணலோ கயிறே அரவோவெனத் துணியாது நிற்பதும் அது. ஒருவாற்றாற் பிறர் மதங்களோக்து தம்மதநிறுத்தல் எல்லாச்சமயநூல்கட்கும் இயல்பாகலின், அவை கூறுகின்ற பொருள்களுள் யாது மெய்யென நிகழுமையத்தினே யோகமுதிர்ச்சியுடையார் தம்மனுபவத்தானீக்கி மெய்யுணர்வாராகலின், அவரை ஐயத்தினீங்கித் தெளிந்தா ரென்றும், அவர்க்கு அவ்வனுபவவுணர்வு அடிப்பட்டு வரவரப் பண்டையுலகிய லுணர்வு அர்ந்தவருமாகலின் அதனேப் பயன்மேலிட்டு வையத்தின்வான நணியதுடைத்தென்றும் கூறினர்; கூறவே, ஐயவுணர்வும் பிறப்பிற்குக் காரணமாதல் கூறப்பட்டது. (கூ)

நூறிச. ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. ச.

இ - ள். ஐயுணர்வு எய்தியக்கண்ணும் பயம் இன்றே - செல்லப்படுகின்ற புலன்கள் வேறுபாட்டான் ஐந்தாகியவுணர்வு அவற்றை விட்டுத் தம்வயத்ததாய வழியும், அதனாற் பயனில்லேயேயாம்—மெய்யுணர்வு இல்லாதவர்க்கு - மெய்யினேயுணர்தலில்லாதார்க்கு. எ - று.

ஐந்தாகியவுணர்வு மனம். அஃதெய்துதலாவது மடங்கி ஒருதலேப்பட்டுத் தாரணைக்கணிற்றல். அங்ஙனகின்றவழியும் வீடு பயவாமையின் பயமின்றென்றார். சிறப்புமிைம எய்துதற்காருமை விளக்கினின்றது. இவையிரண்டுபோட்டானும் மெய்யுணர்வுடையார்க்கே வீடெனத்தன மெய்யுணர்வின் சிறப்புக் கூறப்பட்டது. (ச)

நூறுரு. எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. ரு.

இ - ள். எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் - யாதொருபொருள் யாதோரியல்பிற்றாய்த் தோன்றினும்,—அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு - அத்தோன்றியவாற்றைக் கண்டொழியாது அப்பொருளின்கணின்று மெய்யாகிய பொருளேக் காண்பதே மெய்யுணர்வாவது. எ - று.

பொருடோறும் உலகத்தார் கற்பித்துக்கொண்டு வழங்குகின்ற கற்பனேகளேக் கழித்து, நின்றவுண்மையைக் காண்பதென்றவாறாயிற்று. அஃதாவது கோச்சேரமான் யானேக்கட்சேஎய் மாந்தரஞ்சேரலிரும்பொறை என்றவழி அரசனென்பதோர்சாதியும், சேரமானென்பதொருகுடியும், வேழநோக்கினேயுடையானென்பதோர் வடிவும், சேயென்பதோரியற்பெயரும், மாந்தரஞ்சேரலிரும்பொறையென்பதோர் சிறப்புப் பெயரும், ஒருபொருளின்கட் கற்பனேயாகலின், அவ்வாறணராது நிலமுதல் உயிரீறுகிய தத்துவங்களின்றொகுதியெனவுணர்ந்து, அவற்றைநிலமுதலாகத் தத்தங் காரணங்களுளொடுக்கிக் கொண்டுசென்றூற் காரணகாரியங்களிரண்டுமின்றி முடிவாய் நிற்பதனேயுணர்தலாம். எப்பொருளெனற் பொதுமையான் இயங்குதிணேயும் நிலத்திணேயுமாகிய பொருள்களெல்லாம் இவ்வாறே யுணரப்படும். இதனுன் மெய்யுணர்வின லக்கணங் கூறப்பட்டது. (ஞ)

நூறுக. கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலேப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி. க.

இ - ள். ஈண்டுக் கற்று மெய்ப்பொருள் கண்டார் - இம்மக்கட்பிறப்பின்கண்ணே உபதேசமொழிகளே அனுபவமுடையதேசிகர்பாற் கேட்டு அதனுன் மெய்ப்பொருளே

புணர்த்தவர்—மற்று ஈண்டு வாரா நெறி தலைப்படுவர் - மீண்டு இப்பிறப்பின்கண் வாராத நெறியையெய்துவர். எ - று.

*கற்றென்றதனால் பலர்பக்கலினும் பலகாலும் பயிறலும், ஈண்டென்றதனால் வீடு பேற்றிற்குரிய மக்கட்பிறப்பினது பெறுதற்கருமையும் பெற்றும். ஈண்டு வாராநெறி வீட்டுநெறி. வீட்டிற்கு நிமித்தகாரணமாய முதற்பொருளே உணர்தற்கு உபாயம் மூன்று; அவை கேள்வி, விமரிசம், பாவனையென்பன. அவற்றுட்கேள்வி * இதனுற் கூறப்பட்டது.* (கூ)

கூருஎ. *ஓர்த்துள்ள முள்ள தணரி னொருதலையாப்*
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு. எ.

இ - ள். உள்ளம் ஒருதலையா ஓர்த்து உள்ளது உணரின் - அங்ஙனங்கேட்ட உப தேசமொழிப்பொருளே ஒருவனுள்ளம் அளவைகளானும் பொருந்துமாற்றானுங்தெளிய வாராய்ந்து, அதனுன் முதற்பொருளே யுணருமாயின்,—பேர்த்துப் பிறப்பு உள்ள வேண்டா - அவனுக்கு மாறிப் பிறப்புளதாக நினைக்கவேண்டா. எ - று.

ஒருதலையாவோர்த்தென இயையும். அளவைகளும் பொருந்துமாறும் மேலே † புரைத்தாம். இதனுல் விமரிசங் கூறப்பட்டது. (எ)

கூருஅ. *பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்*
செம்பொருள் காண்ப தறிவு. அ.

இ - ள். பிறப்பு என்னும் பேதைமை நீங்க - பிறப்பிற்கு முதற்காரணமாய அவிச்சைகெட—சிறப்பு என்னும் செம்பொருள் காண்பது அறிவு - வீட்டிற்கு நிமித்த காரணமாய செவ்வியபொருளைக் காண்பதே ஒருவர்க்கு மெய்யுணர்வாவது. எ - று.

பிறப்பென்னும் பேதைமையெனவும், சிறப்பென்னுஞ் செம்பொருளெனவும் காரியத்தைக் காரணமாக உபசரித்தார். ஈவகைக் குற்றங்களுள் அவிச்சை ஏனை நான்கிற்குங் காரணமாதலுடைமையின், அச்சிறப்புப்பற்றி அதனையே பிறப்பிற்குக் காரணமாக்கிக்கூறினர், எல்லாப்பொருளினுஞ் சிறந்ததாகலால், வீடு சிறப்பெனப் பட்டது. தோற்றக்கேடுகளின்மையின் நித்தமாய், நோன்மையாற் றன்னையொன்றுங் கலத்தலின்மையிற்றூய்தாய்த், தானெல்லாவற்றையுங் கலந்து நிற்கின்ற முதற்பொ ருள் விகாரமின்றி எஞ்ஞான்றும் ஒருதன்மைத்தாதல்பற்றி, அதனைச் செம்பொரு ளென்றார். மேல் மெய்ப்பொருளெனவும் உள்ளதெனவுங் கூறியதனும் இதுபற்றி யெனவுணர்க. அதனைக் காண்கையாவது உயிர் தன்னவிச்சைகெட்டு அதனுடனொற்று மையுற இடைவிடாது பாவித்தல்; இதனைச் சமாதியெனவுஞ் சுக்கிலத்தியானமென வுங் கூறுப. உயிர் உடம்பினீங்குங்காலத்து அதனுல் யாதொன்று பாவிக்கப்பட்டது அஃது அதுவாய்த் தோன்றுமென்பது எல்லாவாகமங்கட்குந் துணிபாகலின், வீடெய் துவார்க்கு அக்காலத்துப் பிறப்பிற்கேதுவாய பாவனை கெடுதற்பொருட்டுக் கேவலப் பொருளையே பாவித்தல் வேண்டுதலான், அதனை முன்னே பயிறலாய இதனின்மிக்க வுபாயமில்லையென்பதறிக. இதனுற் பாவனை கூறப்பட்டது. (அ)

---

* கேள்வியெனினும், சிவணமெனினுமொக்கும். விமரிசமெனினும், சிந்தித்தலெனி னும், மனனமெனினு மொக்கும். பாவனையெனினும், தெளிதலெனினும், நிதித்தியாசன மெனினு மொக்கும்.

† உசஉம் குறளுரையிற் காண்க.

நூற்கு. சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய். கூ.

இ - ள். சார்பு உணர்ந்து சார்பு கெட ஒழுகின் - ஒருவன் எல்லாப்பொருட்குஞ் சார்பாய அச்செம்பொருளேயுணர்ந்து இருவகைப்பற்றுமற ஒழுகவல்லனாயின்,—சார்தரும் நோய் அழித்து மற்றுச் சார்தரா - அவனே முன் சாரக்கடவனவாய் நின்ற துன்பங்கள் அவ்வுணர்வொழுக்கங்களே யழித்துப் பின்சாரமாட்டா. எ - று.

ஆருபெயராற் சாருமிடத்தையும் சார்வனவற்றையுஞ் சார்பென்றார். ஈண்டு ஒழுக்கமென்றது யோகநெறி யொழுகுதலே. அஃது இயமம், நியமம், இருப்பு, உயிர்நிலை, மனவொருக்கம், தாரணை, தியானம், சமாதியென எண்வகைப்படும். அவற்றின் பரப்பெல்லாம் ஈண்டுரைப்பிற்பெருகும்: யோகநூல்களுட்காண்க. மற்றுச் சார்தரா வெனவியையும். சாரக்கடவனவாய் நின்ற துன்பங்களாவன பிறப்பு அநாதியாய் வருதலின் உயிரான் அளவின்றியீட்டப்பட்ட வினைகளின் பயன்களுள் இறந்த உடம்புகளான் அனுபவித்தனவும் பிறந்தவுடம்பான் முகந்து நின்றனவுமொழியப் பின்னு மனுபவிக்கக் கடவனவாய்க்கிடந்தன. அவை விளக்கின்முன்னிருள்போல் ஞானயோகங்களின் முன்னர்க் கெடுதலான், அழித்துச்சார்தராவென்றார். இதனை ஆருகதர் உவர்ப்பென்ப. பிறப்பித்துக்காரணமாகலான், நல்வினைப்பயனும் நோயெனப்பட்டது. மேன்மூன்றுபாயத்தானும் பரம்பொருளே யுணரப் பிறப்பறுமென்றார். அஃதறும்வழிக் கிடந்த துன்பங்களெல்லாம் என்செய்யுமென்னுங்கடாவையாசங்கித்து அவை ஞானயோகங்களின் முதிர்ச்சியுடையவுயிரைச் சாரமாட்டாமையானும் வேறு சார்பின்மையானுங் கெட்டுவிடுமென்பது இதனாற் கூறப்பட்டது. (கூ)

நூற்கூ. காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற
னாமங் கெடக்கெடு நோய். கூ.

இ - ள். காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன் நாமம் கெட - ஞானயோகங்களின் முதிர்ச்சியுடையார்க்கு விழைவு, வெறுப்பு, அவிசசையென்னு மிக்குறறங்கண் மூன்றனுடைய பெயருங் கூடக்கெடுதலான்,—நோய் கெடும் - அவற்றின் காரியமாய வினைப்பயன்கள் உளவாகா. எ - று.

அநாதியாய அவிச்சையும், அதுபற்றி யானெனமதிக்கும் அகங்காரமும், அதுபற்றி எனக்கிதுவேண்டுமென்னும் அவாவும், அதுபற்றி அப்பொருட்கட்செல்லுமாசையும், அதுபற்றி அதன்மறுதலைக்கட்செல்லுங்கோபமுமென வடநூலார் குற்றமைந்தென்றார். இவர் அவற்றுள் அகங்காரம் அவிச்சைக்கண்ணும் அவாவுதல் ஆசைக்

---

* இவ்வருமைத்திருக்குறளைத் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் திருக்களிற்றுப்படியாரிலே "சார்புணர்ந்து சார்பு கெடவொழுகி னென்றலையாற்—சார்புணர்வதானே நியான மூமாஞ் - சார்பு—கெடவொழுகி னல்ல சமாதியுமாங் கேதப்—படவருவ தில்லையெப் பற்று." எனவெடுத்தருளிச்செய்தார். இவ்வுய்யவந்ததேவநாயனார் பெரும்பற்றப்புலியூரில் எழுந்தருளியிருந்தபொழுது தம்மைபடைத்த ஓங்கிபக்குரர்பொருட்டு இக்குறளைச்செய்து, இதன்பொருமையை உலகத்துள்ளார் உணர்ந்துய்யுமாறு திருவுளங்கொண்டு, திருவம்பலத்திற் சென்று வணங்கி, திருக்களிற்றுப்படியிலே இக்குறளை வகுக்குமளவில் அத்திருக்களிற்றுக்கை நிமிர்த்து இதனைவாங்கிப் பரமகருணையினாலே தடாசாதத் திருவடியிலே கொடுத்தமையால், அத்திருப்பதிகடலீட்டினுள்ள எழுநூறு திருமடத்து முதலிகளும் இல்லிவாழ்நத்தணர் மூவாயிரவரும் மாகேசுர் காற்பத்தெண்ணூற்வரும் திருக்கோயிற்றிருத்தொண்டு செய்யும் திருப்பேர் ஏழாயிரத்தத்தொளாயிரவரும் பிறரும் சங்கியிலே கூடிநின்று விலப்புற்று, இக்குறளுக்குத் திருக்களிற்றுப்படியாரெனத் திருநாமஞ்சாத்தினர்களென்றறிக. இது சைவசித்தாந்த சாஸ்திரம் பதினான்கினொன்று.

கண்ணுமடங்குதலான், மூன்றென்றார். இடையறாத ஞான யோகங்களின் முன்னர் இக்குற்றங்கண் மூன்றுங் காட்டித்தீமுன்னர்ப்பஞ்சுத்துய்போலுமாகலின், அம்மிகுதி தோன்ற இவை மூன்றனுமம்கெடவென்றார். இழிவு சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. கெடவென்பது எச்சத்திரிவு. நோயென்பது சாதியொருமை. காரணமாய அக்குற்றங்களைக் கெடுத்தார் காரியமாகிய இருவினைகளைச் செய்யாமையின், அவர்க்கு வரக்கடவ துன்பங்களுமில்லையென்பது இதனுற் கூறப்பட்டது. முன்கிடந்த துன்பங்களும் மேல் வரக்கடவ துன்பங்களுமில்லாதல் மெய்யுணர்வின் பயனுகலின், இவையிரண்டுபோட்டும் இவ்வதிகாரத்தவாயின. இவ்வாற்றானே மெய்யுணர்ந்தார்க்கு மிற்பன எடுத்தவுடம்பும் அதுகொண்ட வினைப்பயன்களுமே யென்பது பெற்றாம். (கo)

கூ எ ம் அதி.—அவாவறுத்தல்.

அஃதாவது முன்னும்பின்னும் வினைத்தொடாபறுத்தார்க்கு நுவலுகின்ற உடம்பும் அதுகொண்ட வினைப்பயன்களும் நின்றமையின், வேதனைபறுதி ஒரோவழித் துறக்கப்பட்ட புலன்கண்மேற் பழைய பயிற்சிவயத்தான் நினைவு செல்லுமன்றே, அந்நினைவும் அவிச்சையெனப் பிறவிக்குவித்தாமாகலின், அதனை இடைவிடாது மெய்ப்பொருளுணர்வானறுத்தல். அதிகாரமுறைமையும் இதனுளீன விளக்கும்.

கூகூ. அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து. க.

இ - ள். எல்லாவுயிர்க்கும் எஞ்ஞான்றும் தவாப் பிறப்பு ஈனும் வித்து - எல்லாவுயிர்கட்கும் எக்காலத்தும் கெடாதுவருகின்ற பிறப்பினை விளைவிக்கும் வித்து—அவா என்ப - அவாவென்று சொல்லுவர் நூலோர். எ - று.

உடம்பு நீங்கிப்போங்காலத்து அடுத்தவினையும், அதுகாட்டுங்கதிமித்தங்களும், அக்கதிக்கணவாவும் உயிரின்கண் முறையே வந்துதிப்ப, அறிவை மோகம் மறைப்ப, அவ்வுயிரை அவ்வவா அக்கதிக்கட் கொண்டுசெல்லுமாகலான், அதனைப் பிறப்பீனும் வித்தென்றும், கதிவயத்தானுளதாய அவ்வுயிரானேறுபாட்டினும்அவை தன்மைந்திரியமும் உற்சர்ப்பிணி அவசர்ப்பிணி * யென்னுங்காலவேறுபாட்டினும் அது வித்தாதல்வேறுபடாமையின் எல்லாவுயிர்க்கு மெஞ்ஞான்றுமென்றும், இஃது எல்லாச்சமயங்கட்கு மொத்தலான் என்பவென்றும் கூறினார். இதனுற் பிறப்பிற்கு அவா வித்தாதல் கூறப்பட்டது. (க)

கூகூஉ. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும். † உ.

இ - ள். வேண்டுங்கால் பிறவாமை வேண்டும் - பிறப்புத்துன்பமாதலறிந்தவன் ஒன்றை வேண்டிற் பிறவாமையை வேண்டும்,—அது வேண்டாமை வேண்ட வரும் - அப்பிறவாமை தான் ஒருபொருளாயும் அவாவாமையை வேண்ட அவனுக்குதாமே புண்டாம். எ - று.

---

* உற்சர்ப்பிணியாவது உலகம வாழ்ந்தார் போகமூதலியவறுமை வளர்பிறைபோலப் பெருகுங்காலம். அவசர்ப்பிணியாவது அந்து வுலறுமு நேய்பறைபோலச் சுருங்குங்காலம.

† இவ்வருமைத்திருக்குறள் திருக்களிற்றுப்படியாரிலே "வேணடுங்காற் வேண்டும் பிறவாமை யென்றமைதால்—வேண்டுமஃதே யீதென்றும் - வேண்டினது—வேண்டாமை வேண்டவரு மென்றமையால் வேண்டிடுகே—வேண்டாமை வேண்டுமெவன பால்." எனவெடுத்தருளிச்செய்யப்பட்டது.

அநாதியாகத் தான் பிறப்புப் பிணி மூப்பிறப்புக்களாற்றுன்பமுற்று வருகின்ற மையையுணர்ந்தவனுக்கு ஆசை இன்பத்தின்கண்ணேயாகலிற் பிறவாகூமையேவேண்டு மென்றும், ஈண்டைச் சிற்றின்பங்கருதி ஒருபொருளேயவாவின் அது பிறப்பீனும் வித் தாய்ப் பின்னும் முடிவில்லாத துன்பமே விளைத்தலின் அது வேண்டாமை வேண்ட வருமென்றுங் கூறினர். பிறவாமையின் சிறப்புக் கூறிப் பின் அது வரும்வழி கூறத் தொடங்குகின்றமையின், மற்று வினைமாற்றின்கண் வந்தது. (உ)

ஈகூஈ. வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
யாண்டு மஃதொப்ப தில். ஈ.

இ - ள். வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டு இல்லை - ஒருபொருளேயும் அவாவாமையையொக்கும் விழுமிய செல்வம் காணப்படுகின்ற இவ்வுலகின்க ணில்லை;—ஆண்டும் அஃது ஒப்பது இல் - இனி அவ்வளவேயன்று, கேட்கப்படுகின்ற துறக்கத்தின்கண்ணும் அதனை யொப்பதில்லை. எ - று.

மக்கள்செல்வமும் தேவர்செல்வமும் மேன்மேலுயர்க்கக் கீழாதலுடைமையின், தனக்கு மேலில்லாத வேண்டாமையை விழுச்செல்வமென்றும், அதற்கு இரண்டில வினுமொப்பதில்லையென்றுங் கூறினர். ஆகமவளவைபோலாது காட்சியளவை எல்லா ரானுந் தெளியப்படுதலின், மக்கள்செல்வம் வகுத்து முற்கூறப்பட்டது. பிறவா மைக்கு வழியாமெனவும், விழுச்செல்வமாமெனவும், வேண்டாமையின் சிறப்பு இவ் விரண்டு பாட்டானுங் கூறப்பட்டது. (ஊ)

ஈகூஉ. தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும். ச.

இ - ள். தூஉய்மை என்பது அவாவின்மை - ஒருவர்க்கு வீடென்று சொல்லப்படு வது அவாவில்லாமை;—அது வாய்மை வேண்ட வரும் - அவ்வவாவில்லாமைதான் மெய்ம்மையை வேண்டத் தானே யுண்டாம். எ - று.

வீடாவது உயிர் அவிச்சைமுதலிய மாசு நீங்குதலாகலின், அதனைத் தூய்மை யென்றும், காரணத்தைக் காரியமாக உபசரித்துத் தூய்மையென்பதவாவின்மை யென்றும், மெய்ம்மையுடைய பரத்தை ஆருபெயரான் மெய்ம்மையென்றுங் கூறினர். மற்று மேலையதுபோல வினைமாற்றின்கண் வந்தது. வேண்டுதல் இடைவிடாது பாவித்தல். அவாவறுத்தல் வீட்டிறகுப் பரம்பரையானன்றி நேரே யேதுவென்ப தூஉம் அது வரும்வழியும் இதனுற் கூறப்பட்டன. (ச)

ஈகூஎ. அற்றவ ரென்பா ரவாவற்றூர் மற்றையா
ரற்றுக வற்ற திலர். ஏ.

இ - ள். அற்றவர் என்பார் அவா அற்றூர் - பிறவியற்றவரென்று சொல்லப்படு வார் அதற்கு நேரே யேதுவாகியஅவாவற்றவர்கள்,—மற்றையார் அற்றுகஅற்றதிலர்- பிறவேதுக்களற்று அஃதொன்றுமாறுதவர்கள், அவற்றுற் சிலதுன்பங்களற்றதல்லது அவர் போற் பிறவியற்றிலர். எ - று.

இதனுல் அவாவறுத்தாரது சிறப்பு விதிமுகத்தானும் எதிர்மறைமுகத்தானுங் கூறப்பட்டது. (எ)

ஈகூஅ. அஞ்சுவ தோரு மறனே யொருவனை
வஞ்சிப்ப தோரு மவா. அ.

இ - ள். ஒருவனே வஞ்சிப்பது அவா - மெய்யுணர்தலரிய காரணங்களெல்லா மெய்தி அவற்றுள் வீடெய்தற்பாலனய ஒருவனே மறவிவழியாற் புகுந்து பின்னும் பிறப்பின்கண்ணே வீழ்த்துக்கெடுக்க வல்லதவா.—அஞ்சுவதேயறன் - ஆகலான், அவ்வவாவை அஞ்சிக்காப்பதே துறவறமாவது. எ - று.

ஒருமென்பன அசைநிலை. அநாதியாய்ப் போந்த அவா, ஒரோவழி வாய்மை வேண்டலையொழிந்து பராக்காற் காவாளுயின், அஃதிடமாக அவனறியாமற் புகுந்து பழையவியற்கையாய் நின்று பிறப்பினையுண்டாக்குதலான், அதனை வஞ்சிப்பதென்றார். காத்தலாவது வாய்மை வேண்டலை இடைவிடாது பயின்று அது செய்யாமற் பரிகரித்தல். இதனால் அவாவின் குற்றமும் அதனைக் காப்பதே அறமென்பதூஉங் கூறப்பட்டன. (கூ)

கூகூஎ. அவாவினை யாற்ற வறுப்பிற் றவாவினை
தான்வேண்டு மாற்றான் வரும். எ.

இ - ள். அவாவினை ஆற்ற அறுப்பின் - ஒருவன் அவாவினையஞ்சித் துவரக் கெடுக்க வல்லனுயின்,—தவா வினைதான் வேண்டும் ஆற்றான் வரும் - அவனுக்குக் கெடாமைக்கேதுவாகிய வினைதான் விரும்புகெறியானேயுண்டாம். எ - று.

கெடாமை பிறவித்துன்பங்களானழியாமை. அதற்கேதுவாகிய வினையென்றது மேற்சொல்லிய துறவறங்களை. வினை சாதியொருமை. தான் விரும்புகெறி மெய்வருந் தாகெறி. அவாவினை முற்றவறுத்தானுக்கு வேறறஞ்செய்யவேண்டா, செய்தனவெல்லாம் அறமாமென்பது கருத்து. இதனால் அவாவறுத்தற் சிறப்புக் கூறப்பட்டது. (எ)

கூகூஅ. அவாவில்லார்க் கில்லாகுந் துன்பமஃ துண்டேற்
றவாஅது மேன்மேல் வரும். அ.

இ - ள். அவா இல்லார்க்குத் துன்பம் இல்லாகும் - அவாவில்லாதார்க்கு வரக் கடவதொருதுன்பமுமில்லை,—அஃது உண்டேல் தவாது மேன்மேல் வரும் - ஒருவற்குப் பிறகாரணங்களெல்லாமின்றி அஃதொன்றுமுண்டாயின், அதனானே எல்லாத் துன்பங்களும் முடிவின்றி இடைவிடாமல் வரும். எ - று.

உடம்பு மூகந்துநின்ற துன்பம் முன்பே செய்துகொண்டதாகலின், ஈண்டுத் துன்பமென்றது இதுபொழுது அவாவாற் செய்துகொள்வனவற்றை. தவாதுமேன் மேல் வருமென்றதனான், மூவகைத் துன்பங்களுமென்பது பெற்றும். இதனால் அவாவே துன்பத்திற்குக் காரணமென்பது கூறப்பட்டது. (அ)

கூகூக. இன்ப மிடையரு நீண்டு மவாவென்னுக்
துன்பத்துட் டுன்பங் கெடின். க.

இ - ள். அவா என்னும் துன்பத்துட்டுன்பம் கெடின் - அவாவென்று சொல்லப் படுகின்ற மிக்க துன்பம் ஒருவற்குக் கெடுமாயின்,—ஈண்டும் இன்பம் இடையருது - அவன் வீடு பெற்றவழியேயன்றி உடம்போடு நின்றவழியும் இன்பமிடையருது. எ - று.

துன்பத்துட்டுன்பம் எனைத்துன்பங்களெல்லாம் இன்பமாக வருத்துன்பம். வினை வின்கண்ணேயன்றித் தோற்றத்தின்கண்ணுந் துன்பமாகலின், இவ்வாறு கூறப்பட்டது. காரணத்தைக் காரியமாக உபசரித்து அவாவென்னுந் துன்பத்துட்டுன்பமென்றும். அதுகெட்டார்க்கு மனந்தமொருது நிரம்பி நிற்றலான் ஈண்டுமின்பமிடையரு

தென்றுங் கூறினர். இனி ஈண்டுமென்பதற்குப் பெருகுமென்றுரைப்பாருமுளர். இதனால் அவாவறுத்தார் வீட்டின்பம் உடம்பொடு நின்றே எய்துவரென்பது கூறப்பட்டது. (க)

நூஎ0. ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும். க0.

இ - ள். ஆரா இயற்கை அவா நீப்பின்-ஒருகாலும் நிரம்பாத வியல்பினையுடைய அவாவினை ஒருவன் நீக்குமாயின்,—அந்நிலையே பேரா இயற்கை தரும் - அந்நீப்பு அவனுக்கு அப்பொழுதே எஞ்ஞான்றும் ஒருநிலைமையனுபவியல்பைக்கொடுக்கும். எ-று.

நிரம்பாயைமாவது தாமேயன்றித் தம்பயனும் நிலையாமையின் வேண்டாதன வாய பொருள்களே வேண்டி மேன்மேல் வளர்தல். அவ்வளர்ச்சிக்கு அளவின்மையின், நீத்தலே தக்கதென்பது கருத்து. களிப்புக் கவற்சிகளும் பிறப்புப்பிணிமூப்பிறப்புக்களும் முதலாயினவின்றி உயிர் நிரதிசயவின்பத்ததாய் நிற்றலின், வீட்டினைப் பேராவியற்கையென்றும், அஃது அவா நீத்தவழிப் பெறுதல் ஒருதலையாகலின் அந்நிலையே தருமென்றுங் கூறினர்: "நன்றாய ஞானங் கடந்துபோய் நல்லிந் திரிய மெல்லாமீர்த்—தொன்றாய்க் கிடந்த வரும்பெரும்பா ழுலப்பி லதனே யுணர்ந்துணர்ந்து—சென்றாங்கின்பத் துன்பங்கள் செற்றுக்களோந்து பசையற்று—லன்றே யப்போ தேவ்வி மதனே வீவ்டாமே*." என்பதும் இக்கருத்தேபற்றி வந்தது. இந்நிலைமையுடையவனை வடநூலார் சீவன்முத்தனென்ப. இதனால் வீடாவது இதுவென்பதனோடும் அஃது அவாவறுத்தார்க்கு அப்பொழுதேயுளதாமென்பதனோடுங் கூறப்பட்டன. (கo)

துறவறவியல் முற்றிற்று.

இவ்வாற்றான் இம்மை மறுமை வீடென்னுமூன்றனையும் பயத்தற்கிறப்புடைத்தாய அறங்கூறினர்; இனிப் பொருளுமின்பமும் கூறுவார், அவற்றின் முதற்காரணமாகிய ஊழின்வலி கூறுகின்றார்.

நூஅம் அதி.—ஊழ்.

அஃதாவது இருவினைப்பயன் செய்தவனையே சென்றடைதற்கேதுவாகிய நியதி. ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதியென்பன ஒருபொருட்கிளவி. இது பொருளின்பங்களிரண்டாகும் பொதுவாய் ஒன்றனுள் வைக்கப்படாமையானும், மேற்கூறிய அறத்தோடியையுடைமையானும், அதனதிறுதிக்கண் வைக்கப்பட்டது.

நூஎக. ஆகூழாற் றோன்று மசைவின்மை கைப்பொருள்
போகூழாற் றோன்று மடி. க.

இ - ள். கைப்பொருள் ஆகு ஊழால் அசைவின்மை தோன்றும் - ஒருவற்குக் கைப்பொருளாதற்குக்காரணமாகிய ஊழான் முயற்சியுண்டாம்;—போகு ஊழால் மடி தோன்றும் - அஃதழிதற்குக் காரணமாகிய ஊழான் மடியுண்டாம். எ - று.

ஆகூழ் போகூழென்னும் வினைத்தொகைகள் எதிர்காலத்தான் விரிக்கப்பட்டுக் காரணப்பொருளவாய் நின்றன. அசைவு மடி. பொருளீனுக்கவழிவுகட்குத் தூண்டுகாரணமாகிய முயற்சி மடிகளேயுந் தானே தோற்றுவிக்குமென்பது கருத்து. (க)

* திருவாய்மொழி, எஅம் திருப்பதிகம், கூ.

கூஎஉ. பேதைப் படுக்கு மிழவு முறிவகற்று
மாகலூ ழூற்றக் கடை. உ.

இ - ள். இழவு ஊழ் (உற்றக்கடை) அறிவு பேதைப்படுக்கும் - ஒருவனுக்கு எல்லாவறிவுமுளவாயினும் கைப்பொருளிழத்தற்கேதுவாகிய ஊழ்வந்துற்றவிடத்து அஃது அதனைப் பேதையாக்கும்,—ஆகல் ஊழ் உற்றக்கடை அகற்றும் - இனி அவனறிவு சுருங்கியிருப்பினும் கைப்பொருளாதற் கேதுவாகிய ஊழ்வந்துற்றவிடத்து அஃததனை விரிக்கும். எ - று.

கைப்பொருளென்பது அதிகாரத்தான் வந்தது. இழவூழ் ஆகலூழென்பனவிரண்டும் வேற்றுமைத்தொகை. உற்றக்கடை யென்பது மூன்றுங்கூட்டப்பட்டது. இயற்கையாஞ்யவறிவையும் வேறுபடுக்குமென்பதாம். (உ)

கூஎஊ. நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்தன்
னுண்மை யறிவே மிகும். கூ.

இ - ள். நுண்ணிய நூல் பல கற்பினும்-பேதைப்படுக்கு மூழ்முடையானொருவன் நுண்ணியபொருள்களையுணர்த்தும் நூல்பலவற்றையுங் கற்றாஞ்யினும்,—மற்றும் தன் உண்மையறிவே மிகும் - அவனுக்குப் பின்னுந் தன்னூழாஞ்ய பேதைமையுணர்வே மேற்படும். எ - று.

பொருளினுண்மை நூலின்மேலேற்றப்பட்டது. மேற்படுதல் கல்வியறிவைப் பின்னிரங்குதற்காக்கிச் செயலுக்குத் தான்முற்படுதல். "காதன் மிக்குழிக் கற்றவுங் கைகொடா—வாதல் கண்ணகத் தஞ்சனம் போலுமால்*" என்பதுமது. செயற்கையாஞ்ய வறிவையுங் கீழ்ப்படுத்துமென்பதாம். (ஊ)

கூஎச. இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு. ச.

இ - ள். உலகத்து இயற்கை இருவேறு-உலகத்து ஊழிஞ்ஞையியற்கை இரண்டு கூறு;—திருவேறு தெள்ளியராதலும் வேறு - ஆதலாற் செல்வமுடையராதலும் வேறு அறிவுடையராதலும் வேறு. எ - று.

செல்வத்தினைப்படைத்தலுங் காத்தலும் பயன்கோடலும் அறிவுடையார்க்கல்லதியலாவன்றே, அவ்வாறன்றி அறிவுடையார் வறியராகவும் ஏனையார் செல்வராகவுங் காண்டலான், அறிவுடையராதற்காகுமூழ் செல்வமுடையராதற்காகாது. செல்வமுடையராதற்காகுமூழ் அறிவுடையராதற்காகாதென்றதாயிற்று. ஆகவே செல்வஞ் செய்யுங்கால் அறிவாகிய துணைக்காரணமும் வேண்டா வென்பது பெற்றும். (ச)

கூஎடு. நல்லவை யெல்லா மஃ தீயவாந் தீயவு
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு. டு.

இ - ள். செல்வம் செயற்கு - செல்வத்தையாக்குதற்கு—நல்லவை எல்லாம் தீயவாம் - நல்லவையெல்லாந்தீயவாய் அழிக்கும்,—தீயவும் நல்லவாம் - அதுவேயன்றித் தீயவைதாமும் நல்லவாய் ஆக்கும், ஊழ்வயத்தான். எ - று.

---

* சிவகசிந்தாமணி, கனகமாலையாரிலம்பகம், எச.

நல்லவை தீயவை யென்பன காலமும், இடனும், கருவியும், தொழிலும் முதலாயவற்றை. ஊழானென்பது அதிகாரத்தாற்பெற்றும்*. அழிக்குமூழற்றவழிக் கால முதலிய நல்லவாயினும் அழியும், ஆக்குமூழற்றவழி அவை தீயவாயினும் ஆகுமென்பதாயிற்று. ஆகவே காலமுதலிய துணைக்காரணங்களையும் வேறுபடுக்குமென்பது பெற்றும். (இ)

கூஎக. பரியினு மாகாவாம் பால்லல வுய்த்துச்
சொரியினும் போகா தம. கூ.

இ - ள். பால் அல்ல பரியினும் ஆகாவாம் - தமக்கூழல்லாத பொருள்கள் வருந்திக்காப்பினும், தம்மிடத்து நில்லாவாம்;—தம உய்த்துச் சொரியினும் போகா - ஊழாற்றமவாயபொருள்கள் புறத்தே கொண்டுபோய்ச் சொரிந்தாலும், தம்மை வீட்டுப்போகா. எ - று.

பொருள்களினிலையும் போக்கும் ஊழினலனல்லது காப்பிகழ்ச்சிகளானுகா வென்பதாம். இவையாறுபாட்டானும் பொருட்குக்காரணமாய ஊழின்வலி கூறப்பட்டது. (கூ)

கூஎஎ. வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது. எ.

இ - ள். கோடி தொகுத்தார்க்கும் - ஐம்பொறிகளான் நுகரப்படும் பொருள்கள் கோடியை முயன்று தொகுத்தார்க்கும்—வகுத்தான் வகுத்த வகையல்லால் துய்த்தல் அரிது - தெய்வம் வகுத்த வகையானல்லது நுகர்தலுண்டாகாது. எ - று.

ஒருயிர் செய்தவினையின் பயன் பிறிதோருயிரின்கட் செல்லாமல் அவ்வுயிர்க்கே வகுத்தலின், வகுத்தானென்றார். "இசைத்தலுமுரிய வேறிடத் தான†." என்பதனுன் உயர்திணையாயிற்று. படையாதார்க்கேயன்றிப் படைத்தார்க்குமென்றமையால், உம்மை எச்சவும்மை. வெறுமுயற்சி ‡ களாற் பொருள்களைப் படைத்தலல்லது நுகர்தலாகாது அதற்கு ஊழ்வேண்டுமென்பதாயிற்று. (எ)

கூஎஅ. துறப்பார்மற் றுப்புர வில்லா ருறற்பால
வூட்டா கழியு மெனின். அ.

இ - ள். துப்புரவு இல்லார் துறப்பார் - வறுமையானுகர்ச்சி யில்லாதார் துறக்குங் கருத்துடையாரவர்,—உறற்பால வூட்டா கழியுமெனின் - ஊழ்கள் உறுதற்பாலவாய துன்பங்களை உறுவியாதொழியுமாயின். எ - று.

துறப்பாரென்பது ஆரீற்றெதிர்கால முற்றுச்சொல். தம்மால் வீடப்பெறுவன தாமே வீடப்பெற்றுவைத்துங் கருத்துவேறுபாட்டாற்றுன்ப முறுகின்றது ஊழின் வலியானென்பது எஞ்சி நிற்றலின், மன் ஒழியிசைச்சுண் வந்தது. (அ)

---

* இவ்வாறு அதிகாரத்தால் வருவித்து முடிப்பதனை வடநூலார் அதிகரணமென்பர்.

† தொல்காப்பியம், சொல்லதிகாரம், இளவியாக்கம், கூக.

‡ வெறுமுயற்சி - நல்வினை தீவினை யிரண்டினும் படாமுயற்சி. இலக்கணக்கொத்து, வினையியல் பதினேழாஞ் சூத்திரவுரையிற் காண்க.

நீஎஏ. நன்றுங்கா லல்லவாக் காண்பவ ரன்றுங்கா
லல்லற் படுவ தெவன். கூ.

இ - ன். நன்று ஆங்கால் நல்லவாக் காண்பவர் - நல்வினை விளையுங்கால் அதன் விளைவாய இன்பங்களைத் துடைக்குந்திறன் நாடாது இவை நல்லவென்று இயைந் தனுபவிப்பார்—அன்று ஆங்கால் அல்லற்படுவது எவன் - எனைத்தீவினை விளையுங்கால் அதன் விளைவாய துன்பங்களையும் அவ்வாறனுபவியாது துடைக்குந்திறன் நாடி அல்லலுழப்பது என்கருதி! எ - று.

தாமே முன்செய்துகொண்டமையானும், ஊட்டாது கழியாமையானும், இரண்டு மியைந்தனுபவிக்கற்பால; அவற்றுள் ஒன்றற்கு இயைந்தனுபவித்து எனையதற்கு அது செய்யாது வருந்துதல் அறிவன்றென்பதாம். இவை மூன்றுபாட்டானும் இன்பத்தின் பங்கட்குக் காரணமாய ஊழின்வலி கூறப்பட்டது. (கூ)

நீஅ0. ஊழற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும். கூ0.

இ - ள். மற்றொன்று சூழினும் தான் முந்துறும் - தன்னை விலக்குதற் பொருட் டித் தனக்கு மறுதலையாவதோருபாயத்தைச் சூழினும், தான் அவ்வுபாயமேயானும் பிறிதொன்றனும் வழியாக வந்து அச்சூழ்ச்சியின் முற்பட்டு நிற்கும்;—ஊழிற் பெரு வலி யா உள - அதனுல் ஊழ்போல மிக்கவலியுடையன யாவையுள. எ - று.

பெருவலி ஆகுபெயர். சூழ்தல் பலருடனும் பழுதறவெண்ணுதல். செய்தற்கே யன்றிச் சூழ்தற்கும் அவதி கொடாதென்றமையின், உம்மை எச்சவும்மை. எல்லாம் வழியாக வருதலுடைமையின், ஊழே யலியதென்பதாம். இதனுன் அவ்விருவகை யூழின் வலியும் பொதுவாகக் கூறப்பட்டது. (கூ0)

அறத்துப்பால் முற்றிற்று.

பொருட்பால்.

அரசியல்.

இனி இல்லறத்தின் வழிப்படுவனவாய பொருளின்பங்களுள் இருமையும் பயப்பதாய பொருள் கூறுவானெடுத்துக்கொண்டார். அது தன்னுளைக்காரணமாய அரசனீதி கூறவே யடங்கும். அரசனீதியாவது காவலுடைத்திமுறைமை. அதனை அரசியல், அங்கவியல், ஒழிபியலென மூவகைப்படுத்து, மலர்தலையுலகிற்குயிரெனச் சிறந்த அரசனதியல்பு இருபத்தைந்ததிகாரத்தாற் கூறுவான்றொடங்கி, மூதற்கண் இறைமாட்சி கூறுகின்றார்.

கூகூ.ம் அதி.—இறைமாட்சி.

அஃதாவது அவன்றன் நற்குண நற்செய்கைகள். உலகபாலருருவாய் நின்று உலகங்காத்தலின், இறையென்றார்; "திருவுடைமன்னரைக் காணிற் றிருமாலைக் கண்டேனே யென்னும்*" என்று பெரியாரும் பணித்தார்.

கூஅக. படைகுடி கூழமைச்சு நட்பா ணிறு
முடையவ ரரசரு ளேறு. க.

இ-ன். படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும் உடையான் - படையுங் குடியுங் கூழும் அமைச்சும் நட்பும் அரணுமென்று சொல்லப்பட்ட ஆறங்கங்களோடு முடையவன்—அரசருள் ஏறு - அரசருள் ஏறுபோல்வான். எ - று.

ஈண்டுக் குடியென்றது அதனையுடைய நாட்டினை. கூழென்றது அதற்கேதுவாய பொருளை. அமைச்சு, காடு, அரண், பொருள், படை, நட்பென்பதே முறையாயினும், ஈண்டுச் செய்யுணேக்கிப்பிறழவைத்தார். ஆறுமுடையானென்றதனால், அவற்றுள் ஒன்றில்வழியும் அரசனீதி செல்லாதென்பது பெற்றும்; வடநூலார் இவற்றிற்கு அங்க மெனப் பெயர்கொடுத்தனரும் அது கோக்கி. ஏறென்பது உபசாரவழக்கு. இதனால் அரசற்கங்கமாவன இவையென்பதூஉம் இவை முற்றுமுடைமையே அவன் வெற்றிக்கேது வென்பதூஉம் கூறப்பட்டன. (க)

ஈஅஉ. அஞ்சாமை ஈகை யறிவூக்க மிக்கான்கு
மெஞ்சாமை வேந்தற் கியல்பு. உ.

இ-ன். வேந்தற்கு இயல்பு - அரசனுக்கியல்பாவது—அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் இந்நான்கும் எஞ்சாமை - நிண்மையும் கொடையும் அறிவும் ஊக்கமுமென்னும் இக்கான்கு குணமும் இடைவிடாது நிற்றல். எ - று.

* திருவுடை மன்னரைக் காணிற் றிருமாலைக் கண்டேனே யென்னும்—முருவுடைவண்ணன் தாளினுளைத் தானென்று துள்ளுங்—குருவுடைத் தேவிலங் கொல்லாங் கடல்வண்ணன் கோயிலே யென்னும்—வெருவியும் கீழ்நினறுமோவாள் கண்ணன் கழல்சன் மீரும்புமே—திருவாய்மொழி, கசு ம் திருப்பதிகம், அ.

ஊக்கம் வினைசெய்தற்கண் மனவெழுச்சி. இவற்றுள் அறிவு ஆறங்கத்திற்கு முரித்து, ஈகை படைக்குரித்து, ஏனைய வினைக்குரிய. உயிர்க்குணங்களுள் ஒன்று தோன்ற ஏனையவடங்கிவரும், அவற்றுள் இவையடங்கின், அரசற்குச் செவ்வன பலவாமாகலின், இவை எப்பொழுதுந்தோன்றி நிற்றல் இயல்பாகவேண்டுமென்பார், எஞ்சாமை வேந்தற்கியல்பென்றார். (உ)

கூஅகூ. தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்று
நீங்கா நிலனாள் பவற்கு. கூ.

இ - ள். நிலன் ஆள்பவற்கு - நிலத்தினையாளுந் திருவுடையாற்கு—தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும் நீங்கா - அக்காரியங்களில் விரைவுடைமையும் அவையறிதற்கேற்ற கல்வியுடைமையும் ஆண்மையுடைமையுமாகிய இம்மூன்று குணமும் ஒருகாலும் நீங்கா. எ - று.

கல்வியது கூறுபாடு முன்னர்க் கூறப்படும். ஆண்மையாவது ஒன்றினையும் பாராது கடிதிற் செய்வதாகலின், அஃது ஈண்டு உபசாரவழக்காற் துணிவெனப்பட்டது. உம்மை இறந்ததுதழீஇய வெச்சவும்மை. இவற்றுட் கல்வி ஆறங்கத்திற்கு முரித்து, ஏனைய வினைக்குரிய. நீங்காவென்பதற்கு மேலெஞ்சாமைக் குரைத்தாங் குரைக்க. (கூ)

கூஅச. அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு. ச.

இ - ள். அறன் இழுக்காது - தனக்கோதிய அறத்தின் வழுவாதொழுகி—அல்லவை நீக்கி - அறனல்லவை தன்னுட்டின்கண்ணும் நிகழாமற் கடிந்து—மறன் இழுக்கா மானம் உடையது அரசு - வீரத்தின் வழுவாத தாழ்வின்மையினையுடையான் அரசன். எ - று.

அல்வறமாவது ஓதல், வேட்டல், ஈதலென்னும் பொதுத்தொழிலினும், படைக்கலம் பயிறல், பல்லியிரோம்பல், பகைத்திறந்தெறுதலென்னுஞ் சிறப்புத்தொழிலினும், வழுவாது நிற்றல். "மாண்ட—வறநெறி முதற்றே யரசின் கொற்றம்*" என்பதனுல் இவ்வறம் பொருட்குக் காரணமாதலறிக. அல்லவை கொலை, களவு முதலாயின. குற்றமாய மானத்தினீக்குதற்கு, மறனிழுக்காமானமென்றார்; அஃதாவது "வீறின்மையின் விலங்காமென மதவேழமு மெறியா—னேறுண்டவர் நிகராயினும் பிறர்மிச்சிலென் றெறியான்—மாறன்மையின் மறம்வாடுமென் றீன்யாரையு மெறியா—னூறன்மையின் முதியாரையு மெறியானயி லுழவன்" † எனவும் "அழியுநர் புறக்கொடை யயில்வே லோச்சான்" ‡ எனவுஞ் சொல்லப்படுவது. அரசு அரசனது தன்மை; அஃது உபசாரவழக்கால் அவன்றன் மேனின்றது. (சு)

கூஅஇ. இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு. ஞ.

இ - ள். இயற்றலும் - தனக்குப் பொருள்கள் வரும் வழிகளை மேன்மேலுள வாக்கலும்—ஈட்டலும் - அங்ஙனம் வந்தவற்றை ஒருவழித்தொகுத்தலும்—காத்தலும் - தொகுத்தவற்றைப் பிறர்கொள்ளாமற் காத்தலும்—காத்த வகுத்தலும் - காத்த

* புறநானூறு, ஙிஙி. † சீவகசிந்தாமணி, மண்மகளிலம்பகம், கஙஞ.

‡ புறப்பொருள் வெண்பாமாலை, வஞ்சிப்படலம், உ௯.

வற்றை அறம்பொருளின்பங்களின் பொருட்டு வீடுத்தலும்—வல்லது அரசு - வல்ல வனே அரசன். எ - று.

ஈட்டல், காத்தல், வகுத்தலென்றவற்றிற்கேற்ப இயற்றலென்பதற்குச் செயப் படுபொருள் வருவிக்கப்பட்டது. பொருள்களாவன மணி, பொன், நெல் முதலாயின. அவை வரும் வழிகளாவன பகைவரையழித்தலும், திறைகோடலும், தன்னூடு தலை யளித்தலும் முதலாயின. பிறரென்றது பகைவர், கள்வர், சுற்றத்தார், வினைசெய்வார் முதலாயினர். கடவுளர், அந்தணர், வறியோரென்றிவர்க்கும் புகழிற்குக்கொடுத்தலே அறப்பொருட்டாகவும், யானை, குதிரை, படை, நாடு, அரணென்றிவற்றிற்கும் பகை யொடு கூடலிற் பிரிக்கப்படுவார்க்குந் தன்னிற் பிரிதலிற் கூட்டப்படுவார்க்குங் கொடுத்தலைப் பொருட்பொருட்டாகவும் மண்டபம், வாவி, செய்குன்று, இளமரக்கா முதலிய செய்தற்கும் ஐம்புலன்களானுகர்வனவற்றிற்குங் கொடுத்தலே இன்பப்பொ ருட்டாகவுங்கொள்க. இயற்றன முதலிய தவறுமற்செய்தல் அரிதாகலின், வல்லதென் றார். இவை நான்குபாட்டானும் மாட்சியே கூறப்பட்டது. (நி)

கூஅசு. காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேன்
மீக்கூறு மன்ன னிலம். கூ.

இ - ள். காட்சிக்கு எளியன் - முறைவேண்டினுர்க்கும் குறைவேண்டினுர்க்கும் காண்டற்கெளியனுய்—கடுஞ்சொல்லன் அல்லனேல் - யாவர்மாட்டும் கடுஞ்சொல் னல்லனுமாயின்,—மன்னன் நிலம் மீக்கூறும் - அம்மன்னனது நிலத்தை எல்லா நிலங்களினும் உயர்த்துக்கூறும் உலகம். எ - று.

முறைவேண்டினுர் வலியரானலிவெய்தினர். குறைவேண்டினுர் வறுமையுற்றிரந் தார். காண்டற்கெளிமையாவது பேரத்தாணிக்கண் அந்தணர் சான்றோருள்ளிட்டா ரோடு செவ்வியுடையனுயிருத்தல். கடுஞ்சொல் கேள்வியினும் வினையினுங் கடிய வாய சொல். நிலத்தை மீக்கூறுமென்னவே, மன்னனை மீக்கூறுதல் சொல்லவேண்டா வாயிற்று. மீக்கூறுதல் இவன் காக்கின்ற நாடு பகை பிணி பசி முதலியவின்றி யாவர்க் கும் பேரின்பந்தருதலிற் றேவருலகினும் நன்றென்றல். உலகமென்றுமெழுவாய் வரு விக்கப்பட்டது. (கூ)

கூஅள. இன்சொலா லீத்தளிக்க வல்லாற்குத் தன்சொலாற்
றுன்கண் டுணைத்திவ் வுலகு. எ.

இ - ள். இன்சொலால் ஈத்து அளிக்க வல்லார்கு - இனிய சொல்லுடனே ஈத லுச்செய்து அளிக்கவல்ல அரசனுக்கு—இவ்வுலகு தன்சொலால் தான் கண்டனைத்து - இவ்வுலகந் தன்புகழோடு மேலித் தான் கருதியவளவிற்றும். எ - று.

இன்சொல் கேள்வியினும் வினையினும் இனியவாய சொல். ஈதல் வேண்டு வார்க்கு வேண்டுவன கொடுத்தல். அளித்தல் தன்பரிவாரத்தானும் பகைவரானும் நலிவுபடாமற் காத்தல். இவை அரியவாகலின் வல்லாற்கென்றும், அவன் மண்முழுது மாளுமாகலின் இவ்வுலகென்றுங் கூறினர். கருதியவளவிற்றுதல் கருதியபொருளெல் லாஞ்சுரத்தல். (எ)

கூஅஅ. முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும். அ.

இ - ள். முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் - தான் முறை செய்து பிறர் நலியாமற் காத்தலேயுஞ் செய்யுமரசன்,—மக்கட்கு இறை என்று வைக்கப்

பும் - பிறப்பான் மகனேயாயினும், செயலான் மக்கட்குக் கடவுளொன்று வேறு வைக்கப்படும். எ - று.

முறை அறநூலும் நீதிநூலுஞ் சொல்லும் நெறி. பிறன்றது மேற்சொல்லியாரை. வேறுவைத்தல் மக்களிற்பிரித்து உயர்த்துவைத்தல். (அ)

கூ அக. செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கு மூலகு. கூ.

இ - ன். சொல் செவி கைப்பப் பொறுக்கும் பண்பு உடை வேந்தன் - இடிக்குந் துணையாயினர் சொற்களைத் தன்செவி பொறாதாகவும் வீளைவுநோக்கிப் பொறுக்கும் பண்புடைய அரசனது—கவிகைக்கீழ்த் தங்கும் உலகு-குடை நிழற்கண்ணே தங்கும் உலகம். எ - று.

செவிகைப்பவென்றசற் கேற்ப இடிக்குந் துணையாரென்பது வருவிக்கப்பட்டது, நாவின்புலத்தைச் செவிமேலேற்றிக் கைப்பவென்றார். பண்புடைமை விசேடவுணர்வினலுதல். அறநீதிகளிற்றவறுமையின், மண்முழுதுந் தானேயாளுமென்பதாம். (கூ)

கூகூ. கொடையளி செங்கோல் குடியோம்ப னைன்கு
மூடையானும் வேந்தர்க் கொளி. கூ.

இ - ன். கொடை - வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுத்தலும்—அளி - யாவர்க்குந் தலையளி செய்தலும்—செங்கோல் - முறைசெய்தலும்—குடி ஓம்பல் - தளர்ந்த குடிகளைப் பேணலுமாகிய—நான்கும் உடையான் - இந்நான்குசெயலையு மூடையவன்—வேந்தர்க்கு ஒளியாம் - வேந்தர்க்கெல்லாம் வீளக்காம். எ - று.

தலையளி முகமலர்ந்தினியகூறல். செவ்வியகோல்போறலின், செங்கோலெனப் பட்டது குடியோம்பலெனவெடுத்துக் கூறினமையால், தளர்ச்சி பெற்றும்; அஃதாவது ஆறிலொன்றாய பொருளினையும் வறுமை நீங்கியவழிக் கொள்ளல்வேண்டின் அவ்வாறு கோடலும், இழத்தல்வேண்டின் இழத்தலுமாம். சாதிமுழுதும் வீளக்கலின் வீளக்கென்றார். ஒளி ஆகுபெயர். இவையைந்துபாட்டானும் மாட்சியும் பயனும் உடன் கூறப்பட்டன. (கூ)

சுரம் அதி.—கல்வி.

அஃதாவது அவ்வரசன் தான் கற்றற்குரிய நூல்களைக் கற்றல், அவையாவன அறநூலும், நீதிநூலும், யானை, குதிரை, தேர், படைக்கலமென்றிவற்றிலக்கணங்களும் முதலாயின. அரசன் அறிவுடையனாயக்கால் தன்னுயிர்க்கேயன்றி மன்னுயிர்க்கும் பயன்படுதலேனுக்கி, இஃதரசியலுள் வைக்கப்பட்டதாயினும், யாவர்க்கும் உறுதி பயத்தற்பொருட்டாமையிற் பொதுப்படக் கூறுகின்றார். மேல் 'தாங்காலமை கல்வி' எனத் தோற்றுவாய்செய்த மாட்சியை விரித்துக் கூறுகின்றமையின், இஃதிறைமாட்சியின் பின் வைக்கப்பட்டது.

நூகக. கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குந் தக. க.

இ - ன். கற்பவை கசடு அறக் கற்க - ஒருவன் கற்கப்படுநூல்களைப் பழுதறக் கற்க;—கற்றபின் அதற்குத் தக நிற்க - அங்ஙனங்கற்றறிந்த அக்கல்வியொத்தக அவை சொல்லுகின்ற நெறிக்கண்ணே நிற்க. எ - று.

கற்பவையென்றதனுன், அறம்பொருளின்பம் வீடென்னு முறுதிப்பொருளுணர்த்துவனவன்றிப் பிறபொருளுணர்த்துவன கின்னுட்பல்பிணிச் சிற்றறிவினர்க்கு ஆகாவென்பது பெற்றும். கசடறக் கற்றலாவது விபரீதவையங்களை நீக்கி மெய்ப்பொருளை நல்லோர் பலருடனும் பலகாலும் பயிறல். சிற்றலாவது இல்வாழ்வுழிக் "கருமமுமுன்படர்ப் போகமுந் துவ்வாத்—தருமமுந் தக்கார்க்கே செய்" தலினும், துறந்துழித் தவத்தான் மெய்யுணர்ந்து அவாவறுத்தலினும், வழுவாமை. சிறப்புடை மகற்காயிற் கற்றல்வேண்டுமென்பதனுன், அவனுற் கற்கப்படுநூல்களும், அவற்றைக் கற்கு மாறும், கற்றதனுற் பயனும் இதனுற் கூறப்பட்டது. (க)

௩௯௨. எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழ முயிர்க்கு. உ.

இ - ள். எண் என்ப ஏனை எழுத்து என்ப இவ்விரண்டும் - அறியாதார் எண்ணென்று கொல்லுவனவும் மற்றையெழுத்தென்று சொல்லுவனவுமாகிய கலைகளிரண்டினையும்— வாழும் உயிர்க்குக் கண் என்ப - அறிந்தார் சிறப்புடை யுயிர்கட்குக் கண்ணென்று சொல்லுவர். எ - று.

எண்ணென்பது கணிதம். அது கருவியுஞ் செய்கையுமென இருவகைப்படும்; அவை ஏரம்பமுதலிய நூல்களுட்காண்க. எழுத்தெனவே, அதனிலொற்றுமையுடைய சொல்லுமடங்கிற்று. இவ்விருதிறமும், அறமுதற்பொருள்களைக் காண்டற்குக் கருவியாகலின், கண்ணெனப்பட்டன. அவை கருவியாதல் "ஆதிமுதலெழுப்பிய வல்லாதனவெண்ணி—னீதி வழுவா நிலைமையவான் - மாதே—யறமார் பொருளின்பம் வீடென் றிவற்றின்—றிறமாமோ வெண்ணிறைந்தாற் செப்பு." "எழுத்தறியத் தீருமிழிதகைமை தீர்ந்தான்—மொழித்திறத்தின் முட்டறுப்பா ஞரு - மொழித்திறத்தின்— முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து—கட்டறுத்து வீடெபெறும்." இவற்றுனறிக. என்பவென்பவற்றுள், முன்னையவிரண்டும் அஃறிணைப்பன்மைப்பெயர்; பின்னது உயர்திணைப்பன்மை யினை. அறியாதார் அறிந்தாரென்பன வருவிக்கப்பட்டன. சிறப்புடையுயிரென்றது மக்களுயிருள்ளும் உணர்வுமிகுதியுடையதனை. இதனுற்கற்கப்படுநூல்கட்குக் கருவியாவனவும் அவற்றதின்றியமையாமையுங் கூறப்பட்டன. (உ)

௩௯௩. கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். ஊ.

இ - ள். கண் உடையர் என்பவர் கற்றோர் - கண்ணுடையரென்று உயர்த்துச் சொல்லப்படுவோர் கற்றவரே;—கல்லாதவர் முகத்து இரண்டு புண் உடையர்-மற்றைக் கல்லாதவர் முகத்தின்கண் இரண்டு புண்ணுடையர், கண்ணிலர். எ - று.

தேயமிடையிட்டவற்றையுங் காலமிடையிட்டவற்றையுங்காணும் ஞானக்கண்ணுடைமையிற் கற்றுணர்ந்தோர் கண்ணுடையரென்றும், அஃதின்றி நோய் முதலியவற்றுற் குன்றுஞ்செய்யும் ஊனக்கண்ணேயுடைமையிற் கல்லாதவரைப் புண்ணுடையரென்றுங் கூறினுர். மேற்கண்ணன்மையுணராதின்ற ஊனக்கண்ணினின் மெய்ம்மை கூறியவாற்றுன், பொருணூல்களேயுங் கருவிநூல்களேயுங் கற்றாரதுயர்வும் கல்லாதாரதிழிவும் இதனுற்றெருத்துக் கூறப்பட்டன. (ஊ)

௩௯௪. கூவற்பத் தூணிக்கூடி யுள்ளப் பிரிதலி
னீரற்ற நீர்போற் புலவர் தொழில். எ.

* காலடியார், அறிவுடைமை.

இ - ள். உவப்பத் தலைக் கூடி உள்ளப் பிரிதல் அனைத்தே - யாவரையும் அவரு வக்குமாறு தலைப்பெய்து இனி இவரை யாமெங்ஙனங் கூடுதுமென நினையுமாறு நீங் குதலாகிய அத்தன்மைத்து—புலவர் தொழில் - கற்றறிந்தாரது தொழில். எ - று.

தாம் கல்வழியொழுகல் பிறர்க்குறுதிகூறலென்பன இரண்டுந் தொழிலென ஒன் றுயடங்குதலின், அத்தன்மைத்தென்றார். அத்தன்மை அப்பயனைத்தருந்தன்மை. கல் லொழுக்கங் காண்டலானும், தமக்கு மதுரமுமுறுதியுமாய கூற்றுக்கள் நிகழ்வெதிர் வுகளின் இன்பம் பயத்தலானும், கற்றார்மாட்டு எல்லாருமன்புடையராவரென்பதாம். இதனுற் கற்றாரதுயர்வு வகுத்துக்கூறப்பட்டது. (ச)

கூகூரு. உடையார்முன் இல்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர். ரு.

இ - ள். உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார் - "பிறர்தை நிலைமுனி யாது கற்றல் நன்று" * தலான், செல்வர்முன் நல்கூர்ந்தார் நிற்குமாறுபோலத் தாமும் ஆசிரியர்முன் ஏக்கற்றுநின்றுங் கற்றார் தலையாயினர்;—கல்லாதவர் கடைய யரே - அஃதிலக்கு ணாணித் கல்லாதவர் எஞ்ஞான்றுமிழிந்தாரேயாவர். எ - று.

உடையார் இல்லாரென்பன உலகவழக்கு. ஏக்கறுதல் ஆசையாற்றுழ்தல். கடைய ரென்றதனுன் அதன் மறுதலைப்பெயர் வருவிக்கப்பட்டது. பொய்யாய மாணநோக்கி மெய்யாய கல்வியிழந்தார் பின்னெருருஞான்றும் அறிவுடையராகாமையின், கடையரே யென்றார். இதனுற் கற்றாரதுயர்வுங் கல்லாதாரதிழிவுங் கூறப்பட்டது. (இ)

கூகூசு. தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு. கூ.

இ - ள். மணற்கேணி தொட்டனைத்து ஊறும் - மணலின்கட்கேணி தோண்டிய வளவிற்றூருவூறும்;—மாந்தர்க்கு அறிவு கற்றனைத்து ஊறும்-அதுபோல மக்கட்கறிவு கற்றவளவிற்றூருவூறும். எ - று.

ஈண்டுக் கேணியென்றது அதன்கணீரை. அளவிற்றூருவென்றது அதனளவுஞ் செல்லவென்றவாறு. சிறிது கற்றதுணையான் அமையாது மேன்மேற் கற்றல்வேண்டு மென்பதாம். இஃது ஊழ் மாறுகொள்ளாவழியாகலின், மேல் "உண்மையறிவே மிகும்†" என்றதனுலே மலையாமையறிக. (கூ)

கூகூஎ. யாதானு நாடாமா லூராமா லென்னெருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு. எ.

இ - ள். யாதானும் நாடாம் ஊராம் - கற்றவனுக்குத் தன்னுடைத் தன்னூருமே யன்றி யாதானுமொருநாடும் நாடாம், யாதானுமோரூரும் ஊராம்;—ஒருவன் சாந் துணையும் கல்லாதவாறு என் - இங்ஙனமாயின் ஒருவன் தானிறக்குமளவுங் கல்லாது கழிகின்றது என்கருதி! எ - று.

உயிரோடு சேறலிற் சாந்துணையுமென்றார். பிறர்நாடுகளும் ஊர்களுந் தம்போல உற்றுப் பொருட்கொடையும் பூசையும் உவந்து செய்தற்கேதுவாகலிற் கல்விபோலச் சென்றது பிறிதில்லை, அதனையே எப்பொழுதுஞ் செய்கவென்பதாம். (எ)

* புறநானூறு, கூஅக. † திருக்குறள், உகக.

ககஅ. ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து. அ.

இ - ள். ஒருவற்கு - ஒருவனுக்கு—தான் ஒருமைக்கண் கற்ற கல்வி - தானெஞ்ஞ பிறப்பின்கட்கற்ற கல்வி—எழுமையும் எமாப்பு உடைத்து - எழுபிறப்பிலுஞ்சென்று உதவுதலையுடைத்து. எ - று.

ஈனைகள்போல உயிரின்கட்கிடந்து அது புக்குழிப் புகுமாகலின், எழுமையு மேமாப்புடைத்தென்றார். எழுமை மேலே கூறப்பட்டது*. உதவுதல் தன்னெறிக்க ணுய்த்தல். (அ)

ககக. தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார். கக.

இ - ள். தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு - தாமின்புறுதற்கு ஏதுவா கிய கல்லிக்கு உலகமின்புறுதலால் அச்சிறப்பு நோக்கி—கற்றறிந்தார் காமுறுவர் - கற்றறிந்தார் பின்னும் அதனையே விரும்புவர். எ - று.

தாமின்புறுதலாவது நிகழ்வின்கட் சொற்பொருள்களின் சுவையறிகர்வாலும், புகழ் பொருள் பூசை பெறுதலாலும், எதிர்வின்கண் அறம் வீடு பயத்தலாலும், அத னுன் இடையுறுதலின்ப மெய்துதல். உலகின்புறுதலாவது இம்மிக்காரோடு தலைப் பெய்து அறியாதனவெல்லாம் அறியப்பெற்றேமென்றும், "யாண்டுபலவாக நரையில மாயினே†" மென்றுமுவத்தல். செல்வமாயின், ஈட்டல் காத்தல் இழத்தலென்றிவற் றூற் றன்புறுதலும் பலரையும் பகையாக்கலுமுடைத்தென அறிந்து அதனைக் காமுறு மையிற் கற்றறிந்தாரென்றும், கரும்பயிறற்குக் கூலிபோலத் தாமின்புறுதற்கு உல கின்புறுதல் பிறவாற்றானின்மையின் அதனையே காமுறுவரென்றுங் கூறினர். (க)

சஅ0. கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை. கஅ.

இ - ள். ஒருவற்குக் கேடு இல் விழுச்செல்வம் கல்வி - ஒருவனுக்கு அழிவில் லாத சீரிய செல்வமாவது கல்வி;—மற்றையவை மாடு அல்ல - அஃதொழிந்த மணியும் பொன்னு முதலாயின செல்வமல்ல. எ - று.

அழிவின்மையாவது தாயத்தார், கள்வர், வலியர், அரசரென்றிவராற் கொள்ளப் படாமையும், வழிபட்டார்க்குக் கொடுத்தழிக் குறையாமையுமாம். சீர்மை தக்கார் கண்ணே நிற்றல். மணி பொன் முதலியவற்றிற்கு இவ்விரண்டுமின்மையின், அவற்றை மாடல்லவென்றார். இவையைந்தபாட்டானுங் கல்வியது சிறப்புக் கூறப்பட்டது. ()

சகம் அதி.—கல்லாமை.

அஃதாவது கற்றலைச்செய்யாமை; என்றது அதனினுயவிழிபினை. கல்விச் சிறப்பு மேல் விதிமுகத்தாற் கூறியதனையான் முற்றப்பெறுமைநோக்கி, எதிர்மறை முகத்தானுங் கூறின்றதாகலின், இது கல்வியின்பின் வைக்கப்பட்டது.

சஅக. அரம்பின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல். க.

---

* கஉ-ம் குறளையிற் காண்க. † புறநானூறு, ககக.

இ - ள். அரங்கு இன்றி வட்டு ஆடியற்று - அரங்கினையிழையாது வட்டாடினற் போலும்—நிரம்பிய நூல் இன்றிக் கோட்டிகொளல் - தானிரம்புதற்கேதுவாகிய நூல்களைக்கல்லாது ஒருவன் அவையின்கணென்றானே சொல்லுதல். எ - று.

அரங்கு வகுத்ததானம். வட்டாடல் உண்டையுருட்டல். இவை "கட்டளை யன்ன வட்டரங் கிழைத்துக்—கல்லாச் சிறுஅர் செல்லிவட் டாடும்*" என்பதனுனறிக. நிரம்புதல் அறியவேண்டுவனவெல்லாமறிதல். கோட்டியென்பது ஈண்டாகுபெயர். "புல்லாவெழுத்திற் பொருளில் வறுங்கோட்டி†" என்புழிப்போல. சொல்லும் பொருளும் நெறிப்படாவென்பதாம். (க)

சஉ. கல்லாதான் சொற்கா முறுதன் முலையிரண்டு
பில்லாதான் பெண்காமுற் றற்று. உ.

இ - ள். கல்லாதான் சொற் காமுறுதல் - கல்வியில்லாகாதலனுவன் அவையின் கணென்றுசொல்லுதலை அவாவுதல்—முலையிரண்டும் இல்லாதாள் பெண் காமுற் றற்று - இயல்பாகவே முலையிரண்டுமில்லாதாளொருத்தி பெண்மையை அவாவினுற் போலும். எ - று.

‡ "இனைத்தெனவறிந்த வினை" யாகலின், தொகையொடு முற்றும்மைகொடுத் தார். சிறிதுமில்லாதாளென்பதாம். அவாவியவழிக்கடைபோகாது, போகினும் நகை விளைக்கு மென்பதாயிற்று. (உ)

சஊ. கல்லா தவரு நனிகல்லர் கற்றூர்முற்
சொல்லா திருக்கப் பெறின். ஊ.

இ - ள். கல்லாதவரும் நனி நல்லர் - கல்லாதாரும் மிகநல்லராவர்,—கற்றூர்முன் சொல்லாது இருக்கப்பெறின் - தாமே தம்மையறிந்து கற்றூரவையின்கண் ஒன்றனை யுஞ் சொல்லாதிருத்தல் கூடுமாயின். எ - று.

உம்மை இழிவுசிறப்பும்மை. தம்மைத்தாமறியாமையின் அது கூடாதென்பார் பெறினென்றும், கூடின் ஆண்டுத் தம்மைவெளிப்படுத்தாமையானும், பின் கல்வியை விரும்புவராகலானும் நனி நல்லரென்றுங்கூறினர். இவைமூன்றுபாட்டானுங் கல்லா தார் அவைக்கட் சொல்லுதற்குரியரன்மை கூறப்பட்டது. (ஊ)

சஎ. கல்லாதா னொட்பங் கழியநன் ரூயினுங்
கொள்ளா ரறிவுடை யார். எ.

இ - ள். கல்லாதான் ஒட்பங் கழிய நன்ரூயினும் - கல்லாதவனதொண்மை ஒரோ வழி மிக நன்ரூயிருப்பினும்,—அறிவுடையார் கொள்ளார் - அறிவுடையார் அதனை யொண்மையாகக் கொள்ளார். எ - று.

---

* சன்பருக் துயவும் வான்பொரு நெடுஞ்சினைப்—பொரியரை வேம்பின் புள்ளிநீழற்—கட் டளை யன்ன வட்டரங்கிழைத்துக்—கல்லாச் சிறுஅர் செல்லிவட்டாடும்—லில்லே ருழவர் வெம் முனைச் சீறூர்ச்—சன்முதல் வந்த வுண்மாய் மாலை—புள்ளினெ னல்லனே யானே புள்ளிய—வினைமுடித் தன்ன வினியோண்—படுமாண் கடனொடு படர்பொழு தெனவே—கற்றிணை, கூ.

† புல்லா வெழுத்திற் பொருளில்வறுங் கோட்டி—கல்லா வொருவனைப்பகுக்கண் ணேடி—கல்லார் வருந்தியுங் கேட்பரே மற்றவன்—பல்லாரு ணெல் பரித்த—காலடியார் மேன்மக்கள்.

‡ தொல்காப்பியம், சொல்லதிகாரப், னெலியாக்கம், கூ.

ஒண்மை அறிவுடைமை. அது நன்குகாது, ஆயிற்றாயினும் ஏரலெழுத்துப்போல் வதோர் விழுக்காடாகலின், நிலைபெற்ற நூலறிவுடையார் அதனை மதியாரென்பதாம்.

சஎடு. கல்லா வொருவன் றகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும். டு

இ - ள். கல்லா ஒருவன் தகைமை - நூல்களைக் கல்லாதவொருவன் யானறிவுடையேனெனத் தன்னை மதிக்கு மதிப்பு—தலைப்பெய்து சொல்லாடச் சோர்வு படும் - அவற்றைக்கற்றவன் கண்டு உரையாடக் கெடும். எ - று.

கற்றவனென்பது வருவிக்கப்பட்டது. யாதானுமோர்வார்த்தை சொல்லுந் தினையுமே நிற்பது, சொல்லியவழி வழுப்படுதலின், அழிந்துவிடுமென்பதாம். இவை யிரண்டுபாட்டானுங் கலலாதாரது இயற்கையறிவின்குற்றங் கூறப்பட்டது. (இ)

சஎக. உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரனையர் கலலாதவர். கூ.

இ - ள். கல்லாதவர் - கல்லாதவர்—உளர் என்னும் மாத்திரையர் அல்லால் - காணப்படுதலான் இலரல்லர் உளரென்று சிலர் சொல்லுமளவினராதலன்றி—பயவாக் களர் அனையர் - தமக்கும் பிறர்க்கும் பயன்படாமையால் விளையாத களர்நிலத் தோடொப்பர். எ - று.

களர் தானும் பேணற்பாடழிந்து உயிர்கட்கும் உணவு முதலிய உதவாததுபோலத் தாமும் நன்குமதிக்கற்பாடழிந்து பிறர்க்கும் அறிவு முதலிய உதவாரென்பதாம். இதனும் கல்லாதாரது பயன்படாமை கூறப்பட்டது. (ஈ)

சஅ0. நுண்மா ணுழைபுல மில்லா னெழினல
மண்மாண் புனைபாவை யற்று. எ.

இ - ள். நுண் மாண் நுழை புலம் இல்லான் எழில் நலம் - நுண்ணிதாய் மாட்சிமைப்பட்டுப் பலநூல்களினுஞ்சென்ற அறிவு இல்லாதவனுடைய எழுச்சியும் அழகும்—மண் மாண் புனை பாவை யற்று - சுதையான் மாட்சிமைப்படப் புனைந்த பாவையுடைய எழுச்சியும் அழகும்போலும். எ - று.

அறிவிற்கு மாட்சிமையாவது பொருள்களைக் கடிதிற்காண்டலும் மறவாமையும் முதலாயின. பாவை ஆகுபெயர். "உருவின்மிக்கதோ ருடம்பது பெறுதலுமரிது†" ஆகலான் எழினலங்களும் ஒருபயனேயெனினும், நூலறிவில்வழிச் சிறப்பிலவென்பதாம். இதனுன் அவர் வடிவழகாற் பயனின்மை கூறப்பட்டது. (எ)

சஅ0அ. நல்லார்கட் பட்ட வறுமையி னின்னுதே
கல்லார்கட் பட்ட திரு. அ.

இ - ள். நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னுது - கற்றூர் மாட்டுநின்ற வறுமையினுமின்னுது—கல்லார்கண் பட்ட திரு - கல்லாதாமாட்டுநின்ற செல்வம். எ-று.

---

* "நந்து காருகீர் வண்டுசென் னடைவழி யெழுதாய்—வந்து வீழினு மீழும்" எனவும் திருவிளையாடற்புராணத்தினும். சமணரைக் கருவேற்றபடலம், கூ0.

† கருவி மாமழை கிணையெல் பொழிந்தென வழிநா—ளருவி போற்றொடர்ந் தருநன வரும்பிணி பழலுட—கருவிற் காய்த்திய கட்டங்ப் படிமையிற் பிழையா—வுருவின்மிக்கதோ ருடம்பது பெறுதலு மரிதே—வேகசிந்தாமணி, முத்திலம்பகம், எசை.

இழிவுசிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. தத்தநிலையினன்றி மாறிநிற்றலால் தாமிடுக்கட்படுதலும் உலகிற்குத் தன்பஞ்செய்தலும் இரண்டற்குமொக்குமாயினும், நிருக் கல்லாரைக்கெடுக்க, வறுமை நல்லாரைக் கெடாதுநிற்றலான், வறுமையினுங் கிருவின்னுதென்றார். இதனால் அவர் திருவின்குற்றங் கூறப்பட்டது. (அ)

சகூ. மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்ற ரனைத்திலர் பாடு. கூ.

இ - ள். கல்லாதார் மேற்பிறந்தார் ஆயினும் - கல்லாதார் உயர்ந்தசாதிக்கட்பிறந் தாராயினும்—கீழ்ப்பிறந்தும் கற்றார் அனைத்துப்பாடு இலர் - தாழ்ந்தசாதிக்கட் பிற ந்துவைத்துங் கற்றாரது பெருமையளவிற்றாய பெருமையிலர். எ - று.

உடலோடொழியுஞ் சாதியுயர்ச்சியினும் உயிரோடு செல்லுங் கல்வியுயர்ச்சி சிறப்புடைத்தென்பதாம். இதனால் அவர்சாதியுயர்ச்சியாற் பயனின்மை கூறப் பட்டது. (கூ)

சகஉ. விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர். கஉ.

இ - ள். விலங்கொடு மக்கள் அனையர் - விலங்கோடு நோக்க மக்கள் எத்தீண் நன்மையுடையர் அத்தீணத்தீமையுடையர்—இலங்கு நூல் கற்றாரோடு ஏனையர் - விளங்கியநூலைக் கற்றாரோடு நோக்கக் கல்லாதவர். எ - று.

விலங்கு, நூல் சாதிப்பெயர். விளங்குதல் மேம்படுதல். விலங்கின் மக்கட் கேற்றமாய உணர்வுமிகுதி காணப்படுவது கற்றார்கண்ணேயாகலின், கல்லாதாரும் அவரும் ஒத்த பிறப்பினரல்லரென்பதாம். மயக்கநிரனிறை. இதனால் அவர் மக்கட் பிறப்பாற பயனெய்தாமை கூறப்பட்டது. (கஉ)

சஉ ம் அதி.—கேள்வி.

அஃதாவது கேட்கப்படு நூற்பொருள்களைக் கற்றறிந்தார் கூறக்கேட்டல். கற்றவழி அதனிலுயவறிவைவலியுறுத்தலானும், கல்லாதவழியும் அதனையுண்டாக்குத லானும் இது கல்வி கல்லாமைகளினபின வைக்கப்பட்டது.

சகக. செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை. க.

இ - ள். செல்வத்துட்செல்வம் செவிச்செல்வம் - ஒருவற்குச் சிறப்புடைய செல்வமாவது செவியான்வருஞ்செல்வம்,—அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை - அச்செல்வம் பிறசெல்வங்களெல்லாவற்றினுந் தலையாகலான். எ - று

செவியான்வருஞ்செல்வம் கேள்வியான் எல்லாப்பொருளையுமறிதல். பிற செல் வங்கள் பொருளான் வருவன. அவை நிலையாவாகலானும்; தன்பவினைவின வாகலானும், இது தலையாயிற்று. அவற்றையொழித்து இதனையே செய்கவென்பது குறிப்பெச்சம். (க)

சகஉ. செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும். உ.

இ - ள். செவிக்கு உணவு இல்லாத போழ்து - செவிக்குணவாகிய கேள்வியில் லாதபொழுது—வயிற்றுக்கும் சிறிது ஈயப்படும் - வயிற்றுக்குஞ் சிறிதுணவு இடப் படும். எ - று.

சுவைமிகுதியும் பிற்பயத்தலுமுடைய கேள்வியுள்ள பொழுது வேறுக்கப்படு தல்சன் இல்லாதபோழ்தென்றும், பெரிதாயவழித் தேடற்றுன்பமேயன்றி நோயுங்கா மமும் பெருகுதலாற் சிறிதென்றும், அதுதானும் பின்னிருந்து கேட்டற்பொருட்டாக லான் ஈயப்படுமென்றுங் கூறினர். ஈதல் வயிற்றதிழிவுதோன்ற நின்றது. இவை யிரண்டு பாட்டானும் கேள்வியது சிறப்புக் கூறப்பட்டது. (உ)

சகஉ. செவியுணவிற் கேள்வி யுடையா ரவியுணவி
ஞ்ஞாலோ டொப்பர் நிலத்து. ஈ.

இ - ள். செவியுணவிற் கேள்வி உடையார் - செவியுணவாகிய கேள்வியினை யுடையார்;—நிலத்து அவியுணவின் ஆன்றோடு ஒப்பர் - நிலத்தின்கண்ணராயினும், அவியுணவினையுடைய தேவரோ டொப்பர். எ - று.

செவியுணவு செவியானுண்ணுமுணவு. அல்வழிக்கண்வந்த இன்சாரியையது னக ரம் வலிந்துநின்றது. அவியாகியவுணவு தேவர்க்கு வேள்வித்தியிற்கொடுப்பன. அறி வானிறைந்தமையான் ஆன்றரென்றும், தன்பமறியாமையாற் றேவரோடொப்ப ரென்றுங் கூறினர். இதனால் அதனையுடையாரது சிறப்புக் கூறப்பட்டது. (ஊ)

சகச. கற்றில னயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கதவ நூற்றூண் டுணை. ச.

இ - ள். கற்றிலன் ஆயினும் கேட்க - உறுதி நூல்களைத் தான் கற்றிலனாயினும் அவற்றின் பொருள்களைக் கற்றறிந்தார்சொல்லக்கேட்க,—அஃது ஒருவற்கு ஒற்கத் தின் ஊற்றூன்றும் தூண் - அக்கேள்வி ஒருவனுக்குத் தளர்ச்சிவந்துழிப் பற்றுக்கோடாந் தூணாகலான். எ - று.

உம்மை கற்கவேண்டுமென்பது பட நின்றது. தளர்ச்சி வறுமையானுதல் அறி வின்மையானுதல் இடுக்கட்படுழி மனந்தளர்தல். அதனைக் கேளாலியினைய அறிவு நிக்குமாகலின, ஊற்றூர்துணையெனறார். ஊன்றென்னுமாருபெயரின்னகரம திரிந்து நின்றது. (எ)

சகடு. இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
பொழுக்க முடையார்வாய்ச் சொல். டு.

இ - ள். இழுக்கல் உடை உழி ஊற்றுக்கோல் அற்று - வழுக்குதலையுடைய சேற் றுநிலத்து இயகுவார்க்கு ஊன்றுகோல்போலுதவும்—ஒழுக்கம் உடையார் வாய்ச் சொல் - காவற்சாக்கிகைப்பார்க்கு ஒழுகுகமுடையார் வாயிற்சொற்கள். எ - று.

அவாய்நிலையான் வந்த உவமையடையாற் பொருளடை வருவிக்கப்பட்டது. ஊற்றூன்றிய கோல்போலுதவுதல் தளர்ந்துழி அதனை நீக்குதல். கல்வியுடையரேனும் ஒழுக்கமில்லாதார் அறிவிலராகலின், அவர் வாய்ச்சொற் கேட்கப்படாதென்பது தோன்ற ஒழுக்கமுடையார்வாய்ச்சொல்லென்றார். வாயென்பது நீச்சொலறியாமை யாகிய சிறப்புணர நின்றது. அவற்றைக் கேட்கவென்பது குறிப்பெச்சம். (ஏ)

சகக. எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும். அ

இ - ள். எனைத்தானும் நல்லவைகேட்க - ஒருவன்சிறிதாயினும் உறுதிப்பொருள்களைக் கேட்க,—அனைத்தானும் ஆன்ற பெருமை தரும் - அக்கேள்வி அத்தன்மையாயினும் நிறைந்த பெருமையைத் தரும் ஆகலான். எ - று.

எனைத்து அனைத்து என்பன கேட்கும்பொருண்மேலுங் காலத்தின்மேலும் நின்றன. அக்கேள்வி மழைத்துளிபோல வந்திண்டி எல்லாவறிவுகளையுமுளவாக்கலின், சிறிதென்றிகழற்க வென்பதாம். (க)

சகஎ. பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லாரிழைத்துணர்ந்
தீண்டிய கேள்வி யவர். எ.

இ - ள். பிழைத்து உணர்ந்தும் பேதைமை சொல்லார் - பிறழவுணர்ந்தவழியும், தமக்குப் பேதைமை பயக்குஞ் சொற்களைச் சொல்லார்—இழைத்து உணர்ந்து ஈண்டிய கேள்வியவர் - பொருள்களைத் தாமும் நுண்ணிதாகவாராய்ந்தறிந்து அதன்மேலும் ஈண்டிய கேள்வியினையுடையார். எ - று.

பிழைப்பவென்பது திரிந்துநின்றது. பேதைமை ஆகுபெயர். ஈண்டுதல் பலவாற்றான் வந்து நிறைதல். பொருள்களின் மெய்ம்மையைத் தாமமுறிந்து அறிந்தாரோடொப்பிப்பதுஞ் செய்தார் தாமதகுணத்தான் மயங்கினராயினும், அவ்வாறல்லது சொல்லாரென்பதாம். இவைதான்குபாட்டானுங் கேட்டார்க்கு வருநன்மை கூறப்பட்டது. (எ)

சகஅ. கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற்
றோட்கப் படாத செவி. அ.

இ - ள். கேட்பீனும் கேளாத் தகையவே - தம்புலமாய ஓசை மாத்திரத்தைக் கேட்குமாயினுஞ் செவிடாந் தன்மையவேயாம்—கேள்வியால் தோட்கப்படாத செவி - கேள்வியாற்றூளைக்கப்படாத செவிகள். எ - று.

ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது. ஓசைமாத்திரத்தான் உறுதியெய்தாமையிற் கேளாத்தகையவென்றும் மனத்தின்கண் நூற்பொருள் நுழைதற்கு வழியாக்கலிற் கேள்வியைக் கருவியாகவியும் கூறினர். பழைய தூள தூளையன்றென்பதாம். (அ)

சகக. நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராத லரிது. க.

இ - ள். நுணங்கிய கேள்வியர் அல்லார் - நுண்ணிதாகிய கேள்வியுடையரல்லாதார்—வணங்கிய வாயினர் ஆதல் அரிது - பணிந்த மொழியினையுடையராதல் கூடாது. எ - று.

கேட்கப்படுகின்ற பொருளினது நுண்மை கேள்விமேலேற்றப்பட்டது. வாய் ஆகுபெயர். பணிந்தமொழி பணிவைப் புலப்படுத்திய மொழி. கேளாதார் உணர்வின்மையாற் றம்மைவியந்து கூறுவரென்பதாம். அல்லாவென்பதனுமம் பாடம். (க)

சஉ0. செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்க
ளவியினும் வாழினு மென். க0.

இ - ள். செவியிற் சுவை உணரா வாய் உணர்வின் மாக்கள் - செவியானுகரப்படுஞ் சுவைகளையுணராத வாயுணர்வினையுடையமாக்கள்—அவியினும் வாழினும் என் - சாவினும் வாழினும் உலகிற்கு வருவதென்னை. எ - று.

செலியானுகரப்படுஞ்சுவைகளானவ சொற்சுவையும், பொருட்சுவையும்: அவற்றுட் சொற்சுவை குணம், அலங்காரமென இருவகைத்து. பொருட்சுவை காமம், நகை, கருணை, வீரம், உருத்திரம் அச்சம், இழிப்பு, வியப்பு, சாந்தமென ஒன்பது வகைத்து. அவையெல்லாம் ஈண்டுரைப்பிற் பெருகும். வாயுணர்வென்பது இடைப் பதங்கடொக்குநின்ற மூன்றும்வேற்றுமைத்தொகை: அதுவாயானுகரப்படுஞ் சுவை களேயுணரும் உணர்வெனலிசியும். அவை கைப்பு, காழ்ப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, தித்திப்பென ஆறும். செத்தாலிழப்பதும் வாழ்நாள் பெறுவதுமின்மை யின், இரண்டு மொக்குமென்பதாம். வாயுணவினென்ற பாடமோதுவாருமுளர். இவை மூன்றுபாட்டானுங் கேளாதவழிப்படுங் குற்றங் கூறப்பட்டது.

சூடம் அதி.—அறிவுடைமை.

அஃதாவது கல்வி கேள்விகளினை அறிவோடு உண்மையறிவுடையனுதல். அதிகாரமுறைமையும் இதனுனே வீளங்கும்.

சூஉக. அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கு
மூள்ளழிக்க லாகா வரண். க.

இ - ள். அறிவு அற்றம் காக்கும் கருவி - அரசர்க்கு அறிவென்பது இறந்திவாரா மற் காக்குங் கருவியாம்,—செறுவார்க்கு அழிக்கலாகா உள் அரணும் - அதுவேயுமன் றிப் பகைவர்க்கு அழிக்கலாகாத உள்ளரணுமாம். எ - று.

காத்தல் முன்னறிந்து பரிகரித்தல். உள்ளரண் உள்ளாயவரண்; உள்புக்கழிக்க லாகா அரணென்றுமாம். இதனுல் அறிவினது சிறப்புக் கூறப்பட்டது. (க)

சூஉஉ. சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு. உ.

இ - ள். சென்ற இடத்தால் செல விடா - மனத்தை அதுசென்ற பலத்தினின்கட் செல்ல விடாது—தீது ஒரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு - அப்புலத்தின் நன்மை தீமைகளேயாராய்ந்து தீயதனினீக்கி நல்லதன்கட் செலுத்துவது அறிவு. எ - று.

வினைக்கேற்ற செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றமெனப் புலம் ஐந்தாயினும், ஒருகாலத்து ஒன்றின்கணல்லது செல்லாமையின், இடத்தாலென்றார். வீடாதென்பது கடைக்குறைந்து நின்றது. குதிரையை நிலமறிந்து செலுத்தும் வாதவன்போல வேறுக்கி மனத்தைப் புலமறிந்து செலுத்துவது அறி வென்றார். அஃது உயிர்க்குணமாகலின். (உ)

சூஉக. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. க.

இ - ள். எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் - யாதொருபொருளே யாவர் யாவர் சொல்லக்கேட்பினும்,—அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு - அப்பொருளின் மெய்யாய பயனேக்காண வல்லது அறிவு. எ - று.

குணங்கண் மூன்றும் மாறி மாறி வருதல் யாவர்க்குமுண்மையின், உயர்ந்த பொருள் இழிந்தார் வாயினும்,இழிந்த பொருள் உயர்ந்தார் வாயினும்,உறுதிப்பொருள் பகைவர் வாயினும், கெடுபொருள் கட்டார்வாயினும், ஒரோவழிக் கேட்கப்படுதலான்

எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினுமென்றார். அதிகாரப் பன்மை பற்றி வந்தது. வாயென்பது அவர் அப்பொருளின்கட் பயிலாமை புணர்கின்றது. மெய்யாதல் நிலைபெறுதல். சொல்வாராயிற்பு நோக்காது அப்பொருளின் பயனுணர்ந்து கொண்டு தல் ஒழிதல் செய்வதறிவென்பதாம். (உ)

சஉ ச. எண்பொருளவாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு. ச.

இ - ள். தான் எண்பொருளவாகச் செலச் சொல்லி - தான் சொல்லுஞ் சொற் களே அரியபொருளவாயினும் கேட்பார்க்கு எளியபொருளவாமாறு மனங் கொளச் சொல்லி—பிறர்வாய் நுண்பொருள் காண்பது அறிவு - பிறர்வாய்க் கேட்குஞ் சொற் களின் நுண்ணியபொருள் காணவல்லதாயினும் அதனைக் காணவல்லது அறிவு. எ - று.

உலகடையவன்றொழில் அறிவின்மேலேற்றப்பட்டது. சொல்லுவன வழுவின்றி இனிது விளங்கச் சொல்லுகவென்பார் சொன் மேல்வைத்தும், கேட்பன வழுவினும் இனிது விளங்காவாயினும் பயனைக்கொண்டொழிகவென்பார் பொருண்மேல் வைத் தும் கூறினார். (ச)

சஉஞ. உலகந் தழீஇய தொட்ப மலர்தலுங்
கூம்பலு மில்ல தறிவு. ஞ.

இ - ள். உலகம் தழீஇயது ஒட்பம் - உலகத்தை நட்பாக்குவது ஒருவனுக்கு ஒட்பமாம்,—மலர்தலும் கூம்பலும் இல்லது அறிவு - அந்நட்பின்கண் முன்மலர்தலும் பின் கூம்புதலுமின்றி ஒருநிலையனாவது அறிவாம். எ - று.

தழீஇயது இல்லதென்பன அவ்வத்தொழின்மேனின்றன. உலகமென்பது ஈண்டியார்தோறை. அவரோடு கயப்பூப்போல வேறுபடாது கோட்டுப்பூப்போல ஒரு நிலையே நட்பாயினுன் எல்லா வின்பமுமெய்துமாகலின், அதனை அறிவென்றார்*. காரியங்கள் காரணங்களாக உபசரிக்கப்பட்டன. இதனைச்செல்வத்தின் மலர்தலும் நல்குரவிற் கூம்பலுமில்லதென்று உரைப்பாருமுளர். (ஞ)

சஉக. எவ்வது உறைவது உலக முலகத்தோ
டவ்வது உறைவது அறிவு. க.

இ - ள். உலகம் எவ்வது உறைவது - உலகம் யாதொருவாற்றானொழுகுவதா யிற்று,—உலகத்தோடு அவ்வது உறைவது அறிவு - அவ்வுலகத்தோடு மேலித் தானும் அவ்வாற்றானொழுகுவது அரசனுக்கறிவு. எ-று.

உலகத்தையெல்லாம் யானியற்றலான் என்னை நியமிப்பாரில்லையெனக்கருதித் தானினைத்தவாறே ஒழுகிற் பாவமும் பழியுமாமாகலான், அவ்வாறொழுகுதல் அறி வன்றென விலக்கியுவாருயிற்று. இவையையத்துபாட்டானும் அதனலக்கணங் கூறப் பட்டது. (க)

சஉள. அறிவுடையா ராவ தறிவா ரறிகிலா
ரஃதறி கல்லா தவர். எ.

---

* தோட்டுப்பூப் போல மலர்தலிற் கூம்பாதலாவெட்டாதே வேட்டதா கப்பூட்டி. தோட்டாகயப்பூப்போன் முன்மலர்ந்த பிற்கூம்பு வாரை—நடுப்பாரு கட்பூருமில்—நாலடி யார், கட்பாராய்தல்.

இ - ள். அறிவுடையார் ஆவது அறிவார் - அறிவுடையராவார் வரக்கடவதனை முன்னறியவல்லார்;—அறிவிலார் அஃது அறிகல்லாதவர் - அறிவிலராவார் அதனை முன்னறியமாட்டாதார். எ - று.

முன்னறிதல் முன்னேயெண்ணியறிதல். அஃதறிகல்லாமையாவது வக்தாலறிதல். இனி ஆவதறிவாரென்பதற்குத் தமக்கு நன்மையறிவாரென்றுரைப்பாருமுளர்.()

சஉஅ. அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில். அ.

இ - ள். அஞ்சுவது அஞ்சாமை பேதைமை - அஞ்சப்படுவதனை அஞ்சாமை பேதைமையாம்;—அஞ்சுவது அஞ்சல் அறிவார்தொழில் - அவ்வஞ்சப்படுவதனை அஞ்சுதல் அறிவார் தொழிலாம். எ - று.

பாவமும் பழியுங் கேடும் முதலாக அஞ்சப்படுவன பலவாயினும், சாதிபற்றி அஞ்சுவதென்றார். அஞ்சாமை எண்ணுதுசெய்து நிற்றல். அஞ்சுதல் எண்ணித் தவிர்தல். அது காரியமன்றென்று இகழப்படாதென்பார் அறிவார்தொழிலென்றார். அஞ்சாமை இறைமாட்சியாகச் சொல்லப்பட்டமையின், ஈண்டஞ்சவேண்டுமிடங் கூறியவாறு. இவையிரண்டுபாட்டானும் அதனையுடையாரதிலக்கணங் கூறப்பட்டது. (அ)

சஉக எதிரதாக் காக்கு மறிவினர்க் கில்லை
யதிர வருவதோர் நோய். க.

இ - ள். எதிரதாக் காக்கும் அறிவினர்க்கு - வயக்கடவதாகியவதனை முன்னறிந்து காக்கவல்ல அறிவினையுடையார்க்கு—அதிரவருவது ஓர் நோய் இல்லை-அவர் நடுங்க வருவதொரு துன்பமுமில்லை. எ - று.

நோயென வருகின்றமையின், வாளா எதிரதாவென்றார். இதனைத் காக்கலாங் காலம் உணர்த்தப்பட்டது. காத்தல் அதன் காரணத்தை விலக்குதல். அவர்க்குத் துன்பமின்மை இதனைக் கூறப்பட்டது. (க)

சஉ0. அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலா
ரென்னுடைய ரேனு மிலர். க0.

இ - ள். அறிவுடையார் எல்லாம் உடையார் - அறிவுடையார் பிறிதொன்று மில ராயினும் எல்லாமுடையராவர்,—அறிவிலார் என் உடையரேனும் இலர் - அறிவிலாதார் எல்லாமுடையராயினும் ஒன்றுமிலராவர். எ - று.

செல்வங்களெல்லாம் அறிவாற்படைக்கவும் காக்கவும்படுதலின் அஃதுடையாரை எல்லாமுடையரென்றும், அவையெல்லாம் முன்னேயமைத்து விடப்பினும் அழியாமற் காத்தற்குந் தெய்வத்தானழித்துழிப் படைத்தற்குங் கருவியுடையரன்மையின் அஃதில்லாதாரை என்னுடையரேனுமிலரென்றுங் கூறினர். என்னுமென்புழி உம்மை விகாரத்தாற் றொக்கது. இதனான் அவரதுடைமையும் எனையாரதின்மையுங் கூறப்பட்டன. (க0)

சஞ் ம் அதி.—குற்றங்கடிதல்.

அஃதாவது காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதமெனப் பட்ட குற்றங்களாறனையும் அரசன் தன்கணிகழாமற் கடிதல். இவற்றை வடநூலார்

பகைவர்க்கமென்ப. இவை குற்றமென்றறிதலும் கடிதலும் அறிவுடையார்க்கல்லது கூடாமையின், அதன்பின் வைக்கப்பட்டது.

சஙக. செருக்குஞ் சினமுஞ் சிறுமையு மில்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து. க.

இ - ள். செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார் பெருக்கம் - மதமும் வெகுளியுங் காமமுமாகிய குற்றங்களில்லாத வரசரது செல்வம்—பெருமித நீர்த்து - மேம் பாட்டு நீர்மையினையுடைத்து. எ - று.

மதம் செல்வக்களிப்பு. சிறியோர்செயலாகலின், அளவிறந்த காமஞ் சிறுமை யெனப்பட்டது. இவை நீதியல்லன செய்வித்தலான், இவற்றைக் கடிந்தார்செல்வம் நல்வழிப்பாடும் நிலைபேறுமுடைமையின், மதிப்புடைத் தென்பதாம். பிருதிபற்றி இவைமுற்கூறப்பட்டன. (க)

சஙஉ. இவறலு மாண்பிறந்த மானமு மாணு
வுவகையு மேத மிறைக்கு. உ.

இ - ள். இவறலும் - வேண்டும்வழிப் பொருள்கொடாமையும்—மாண்பு இறந்த மானமும் - தன்மையினீங்கிய மானமும்—மாணு வுவகையும் - அளவிறந்தவுவகை யும்—இறைக்கு ஏதம் - அரசனுக்குக் குற்றம். எ - று.

மாட்சியான மானத்தினீக்குதற்கு மாண்பிறந்த மானமென்றார்: அஃதாவது "அந் தணர் சான்றோர் அருந்தவத்தோர் தம்மூன்னோர் தந்தை தாயென்றிவ*" ரை வணங் காமையும், முடிக்கப்படாதாயினும் கருதியது முடித்தே விடுதலும் முதலாயின அள விறந்தவுவகையாவது கழிகண்ணேட்டம். பிறருஞ் சினனேகாமங் கழிகண்ணேட்ட மென்றிவற்றை யறந்தெரி திறிரிக்கு வழியடையாகுந் நிதென்றார்†. இவையிரண்டு பாட்டாலுங் குற்றங்களாவன இவையென்பது கூறப்பட்டது. (உ)

சஙஊ. தினைத்தணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார். ஊ.

இ - ள். பழி நாணுவார் - பழியை யஞ்சுவார்,—தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக் கொள்வர் - தங்கட்டினையளவாங் குற்றம் வந்ததாயினும் அதனை அவ்வளவாகவன்றிப் பனையினளவாகக் கொள்வர். எ - று.

குற்றம் சாதிப்பெயர். தமக்கேலாமையிற் சிறிதென்றுபொருர் பெரிதாகக் கொண்டு வருந்திப் பின்னும் அது வாராமற் காப்பரென்பதாம். (ஊ)

சஙஎ. குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
யற்றந் தருமும் பகை. எ.

இ - ள். அற்றம் தருமும் பகை குற்றமே - தனக்கிறுதி பயக்கும் பகை குற்றமே,—குற்றமே பொருளாகக் காக்க - ஆகலான், அக்குற்றம் தன்கண் வாரா மையே பயனாகக் கொண்டு காக்கவேண்டும். எ - று.

இவைபற்றியல்லது பகைவர் அற்றந்தாராமையின் இவையே பகையாவனவென் னும் வடனூலார் மதம் பற்றிக் குற்றமேயற்றந்தருமும் பகையென்றும், இவற்றதின்

* புறப்பொருள்வெண்பாமாலை, பாடாண்படலம், உங. பதிற்றுப்பத்து, உஉ.

மையே குணங்களதுண்மை யாகக்கொண்டென்பார் பொருளாலெனறும் கூறினர். குற்றமே காக்கவென்பது "அரும்பண்பினுற் சீலமகாக்க" என்பதுபோலகின்றது. ()

சஉடு. வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை யெரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும். ஙி.

இ - ள். வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை - குற்றம் வாக்கடவதாகின்ற முற்காலத்திலே அதனைக் காவாத அரசன் வாழ்க்கை — எரிமுன்னா வைத்தூறுபோலக்கெடும்-அதுவந்தால் எரிமுகத்து நின்ற மடக்குவைபோல அழித்துவிடும். எ - று.

குற்றமென்பது அதிகாரத்தான் வந்தது. முன்னரென்றதனாற்றது பகுதிப் பொருள்விகுதி. வருமென்னும் பெயரெச்சம் முன்னரென்னுங் காலப்பெயர் கொண்டது; அதனைக் காக்கலாங் காலம் பெறப்பட்டது. குற்றந் சிறிதாயினும் அதனாற் பெரிய செல்வம் அழிந்தேவிடுமென்பது உவமையாற் பெற்றும். (இ)

சஉசு. தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பி
னென்குற்ற மாகு மிறைக்கு. ங.

இ - ள். தன்குற்றம் நீக்கிப் பிறர் குற்றம் காண்கிற்பின் - முன்னார்த் தன் குற்றத்தைக் கண்டு கடிந்து பின்னர்ப் பிறர்குற்றங் காணவல்லனாயின்,—இறைக்கு ஆகும் குற்றம் என் - அரசனுக்கு ஆகக்கடவ குற்றம் யாது ! எ - று.

அரசனுக்குத் தன்குற்றங் கடியாவழியே பிறர்குற்றங் கடிதல் குற்றமாவது, கடிந்தவழி முறைசெய்தலாமென்பார், என்குற்ற மாகுமென்றார்: எனவே, தன்குற்றங்கடிந்தவனே முறைசெய்தற் குரியவனென்பதாயிற்று. இவை நான்குபாட்டானும் அவற்றது கடிதற்பாடு பொதுவகையாற் கூறப்பட்டது. இனிச் சிறப்புவகையாற் கூறுப. (ஈ)

சஉள. செயற்பால செய்யா திவறியான் செல்வ
முயற்பால தன்றிக் கெடும். எ.

இ - ள். செயற்பால செய்யாது இவறியான் செல்வம் - பொருளாற் றனக்குச் செய்துகொள்ளப்படுமவற்றைச் செய்துகொள்ளாது அதன்கட் பற்றுள்ளஞ் செய்தானது செல்வம் — உயற்பாலதன்றிக் கெடும் - பின் உளதாம்பான்மைத்தன்றி வழிதே கெடும். எ - று.

செயற்பாலவாவன அறம் பொருளின்பங்கள். பொருளாற் பொருள்செய்தலாவது, பெருக்குதல், அது "பொன்னினுரும் பொருபடை யப்படை—தன்னினுருந் தரணி தரணியிற்—பின்னை யாகும் பெரும்பொரு ளப்பொரு—ளென்னுங் காலைத் தன்னுதன வில்லையே.*" என்பதனானறிக. அறஞ் செய்யாமையாலும் பொருள் பெருக்காமையாலும் உயற்பால தன்றியென்றும், இன்பப்பயன் கொள்ளாமையிற் கெடுமென்றுங் கூறினர். உயற்பாலதின்றியென்று பாடமோதுவாருமுளர். (எ)

சஉஅ. பற்றுள்ள மென்னு மிவறன்மை யெற்றுள்ளு
மெண்ணப் படுவதொன் றன்று. அ.

இ - ள். பற்றுள்ளம் என்னும் இவறன்மை-பொருளே யிடத்தகுமிடத்து விடாதி பற்றுதலேச் செய்யுமுள்ளமாகிய உலோபத்தினது தன்மை— எற்றுள்ளும் எண்ணப்

* சிவகசிந்தாமணி, விமலையாரிலம்பகம், ௩௫.

படுவது ஒன்று அன்று - குற்றத்தன்மைக ளெல்லாவற்றுள்ளும் வைத்தெண்ணப் படுவதொன்றன்று, மிக்கது. எ - று.

இவறலது தன்மையாவது குணங்களெல்லாம் ஒருங்குளவாயினும் அவற்றைக் கீழ்ப்படுத்துத் தான் மேற்பட வல்லவியல்பு. ஒழிந்தன அதுமாட்டாமையின்; எற்றுள்ளு மெண்ணப்படுவதொன்றன்றென்றார். எவற்றுள்ளுமென்பது இடைக்குறைந்து நின்றது. இவையிரண்டொட்டானும் உலோபத்தின்றீமை கூறப்பட்டது. (அ)

சகூ. வியவற்க வெஞ்ஞான்றுந் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை. கூ.

இ - ள். எஞ்ஞான்றும் தன்னை வியவற்க - தான் இறப்பவுயர்ந்த ஞான்றும் மதத்தாற் றன்னை நன்குமதியாதொழிக;—நன்றி பயவா வினை நயவற்க - தனக்கு நன்மை பயவா வினைகளை மானத்தால் விரும்பாதொழிக. எ - று.

தன்னை வியந்துழி இடமுங் காலமும் வலியும் அறியப்படாமையானும், அறனும் பொருளும் இகழப்படுதலானும், எஞ்ஞான்றும் வியவற்கவென்றும், கருதியது முடித்தீத விடுவலென்று அறம்பொருளின்பங்கள் பயவா வினைகளை நயப்பின் அவற்றுற் பாவமும் பழியுங் கேடும் வருமாகலின், அவற்றை நயவற்கவென்றுங்கூறினர். இதனுன் மதமானங்களின் றீமை கூறப்பட்டது. (கூ)

சசo. காதல காத லறியாமை யுய்க்கிற்பி
னேதில வேதிலார் நூல். கo.

இ - ள். காதல காதல் அறியாமை உய்க்கிற்பின் - தான் காதலித்த பொருள்களை அவா அக்காதலறியாமல் அனுபவிக்க வல்லனுயின்,—ஏதிலார் நூல் ஏதில-பகைவர் தன்னை வஞ்சித்ததறிகெண்ணுமெண்ணம் பழுதாம். எ - று.

அறிந்தவழி அவை வாயிலாகப் புகுந்து வஞ்சிப்பராகலின், அறியாமலுய்த்தால் வாயில்லன்மையின் வஞ்சிக்கப்படா னென்பதாம். காமம், வெகுளி, உவகையென்பன முற்றகடியுங் குறைமன்மையின், இதனுறை பெரும்பான்மைத்தாகிய காமமுகரு மாறுகூறி, ஏனைச்சிறுபான்மையவற்றிற்குப் பொதுவகை விலக்கினையே கொண டொழிந்தார். (கo)

சரு ம் அதி.—பெரியாரைத்துணைக்கோடல்.

அஃதாவது மூவிருகுற்றமும் முறைமையிற் கடிதலிற் காவற்சாகாடுகைத்தற் குரியனுய அரசன் தீவிநிலைக்கு நன்னெறிசெலுத்தும் பேரறிவுடையாரைத் தனக்குத் துணையாகக்கோடல். அதிகாரமுறைமையும் இதனுனே விளங்கும். பேரறிவுடையாராவார் அரசர்க்கும் அகுகுகட்கும் மாணுடதமதெய்வக் குற்றங்கள்வாராமற் காத்தற்குரிய அமைச்சர், புரோகிதர்.

சசக. அறனறிந்து மூத்த வறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல. க.

இ - ள். அறன் அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை-அறத்தினது நுண்மையையறிந்து தன்னின் மூத்த அறிவுடையாரது கேண்மையை—தேர்ந்து திறன்அறிந்து கொளல்-அரசன் அதனதருமையை யோர்ந்து, கொள்ளுந் திறமறிந்துகொள்க. எ-று.

அறநுண்மை நூலானேயன்றி உய்த்துணர்வானும் அறியவேண்டுதலின், அறனறிந்தென்றார். மூத்தல் அறிவானும், சீலத்தானும் காலத்தானும் முதிர்தல். அறிவுடையார் நீதியையும் உலகியலேயுமறிதலேயுடையார். நிறனறிதலாவது நன்குமதித்தல், உயரச்செய்தல், அவர்வரைநிற்றலென்பன முதலாக அவர் பிணிப்புண்ணுங் நிறனறிந்து செய்தல். (உ)

சசஉ. உற்றநோய் நீக்கி யுருவமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல். உ.

இ - ள். உற்ற நோய் நீக்கி - தெய்வத்தானுக மக்களானுக்குத் தனக்கு வந்த துன்பங்களே நீக்குமாறறிந்து நீக்கி—உருமை முற்காக்கும் பெற்றியார் - பின் அப்பெற்றியன வாராவண்ணம் முன்னறிந்து காக்கவல்ல தனமையினேயுடையாரை—பேணிக்கொளல் - அரசன் அவர் உவப்பன செய்து துணேயாகக்கொள்க. எ - று.

தெய்வத்தான் வருந் துன்பங்களாவன மழையினதின்மை மிகுதிகளானும், காற்றுத் தீப் பிணியென்றிவற்றானும், வருவன. அவை கடவுளரையுந் தக்கோரையும் நோக்கிச்செய்யுஞ் சாந்திகளானீக்கப்படும். மக்களான்வருந்துன்பங்களாவன பகைவர், கள்வர், சுற்றத்தார், வினேசெய்வாரென்றிவர்களான் வருவன. அவை சாமபேதான தண்டங்களாகிய நால்வகையுபாயத்துள் ஏறறதனுனீக்கப்படும். முற்காத்தலாவது தெய்வத்தான் வருவனவற்றை உற்பாதங்களானறிந்து, அச்சாந்திகளாற்காத்தலும்; மக்களான் வருவனவற்றை அவர்குணம், இங்கிதம், ஆகாரம், செயலென்பனவற்றானறிந்து அவ்வுபாயங்களுளொன்றாற காத்தலுமாம்: ஆகவே, புரோகிதரையும் அமைச்சரையுங் கூறியவாறாயிற்று. இங்கிதம் குறிப்பானிகழும் உறுப்பின்செருழில். ஆகாரம் குறிப்பின்றி நிகழும் வேறுபாடு. உவப்பன நன்குமதித்தன் முதலியன. இவையிரண்டுபொட்டானும் பெரியாரதிலக்கணமும், அவரைத்துணேயாகக கோடல் வேண்டுமென்பதூஉம், கொள்ளுமாறுங் கூறப்பட்டன. (உ)

சசஈ. அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித தமராக் கொளல். ஈ.

இ - ள். பெரியாரைப் பேணித் தமராக் கொளல் - அப்பெரியவர்களே அவர் உவப்பனவறிந்து செய்து தமக்குச் சிறந்தாராகக்கொள்ளுதல்—அரியவற்றுள் எல்லாம் அரிது - அரசர்க்கு அரிய பேறுகளெல்லாவற்றுள்ளும் அரிது. எ - று.

உலகத்தரியனவெல்லாம் பெறுதற்குரிய அரசர்க்கு இப்பேறு சிறந்ததென்றது, இதனுல் அவையெல்லாம் உளவாதலேக்கி. (ஈ)

சசச. தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
வனமையு ளெல்லாந் தலே. ச.

இ - ள். தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல் - அறிவு முதலியவற்றுல் தம்மின் மிக்கார் தமக்குச் சிறந்தாராகத தாம் அவர்வழி னினெருழுகுதல்—வனமையுள் எல்லாம் தலே - அரசர்க்கு எல்லாவலியுடைமையினுந்தலே. எ - று.

பொருள், படை, அரண்களானுய வலியினும் இத்துணேவலிசிறந்ததென்றது. இவர் அவற்றுனீக்கப்படாத தெய்வத்தன்பமுதலியனவும் நீக்குதற்கு உரியராகலின்'

சசடு. சூழ்வார்க்ண் ணுகை வொழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல். டு.

இ - ள். சூழ்வார் கண்ணுக ஒழுகலால் - தன்பாரம் அமைச்சரைக் கண்ணுகக் கொண்டு நடத்தலான்,—மன்னவன் சூழ்வாரைச் சூழ்ந்து கொளல் - அரசன் அத்தன்மையராய அமைச்சரை ஆராய்ந்து தனக்குத் துணையாகக் கொள்க. எ - று.

இரண்டாவது விகாரத்தாற்றொக்கது. தானே சூழ வல்லனாயினும் அளவிறந்த தொழில்களான் ஆருலமெய்துமாசன்பாரம் அதுவே தொழிலாய அமைச்சரானல்லது இனிது நடவாமைபற்றி, அவரைக் கண்ணுகக் கூறினர். ஆராய்தல் அமைச்சியலுட் சொல்லப்படும் இலக்கணத்தின ரென்பதனே யாராய்தல். இவை மூன்றுபாட்டானும் பெரியாரைத் துணைக்கோடலின் சிறப்புக் கூறப்பட்டது. (இ)

சசசு. தக்கா ரினத்தனைத் தானெழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில். சு.

இ - ள். தக்கார் இனத்தனைத் தான் ஒழுக வல்லானை - தக்காராகிய வினத்தை புடையனைத் தானுமறிந்தொழுகவல்லவரசனை—செற்றார் செயக் கிடந்தது இல்-பகைவர் செய்யக் கிடந்ததொரு துன்பமுமில்லை. எ - று.

தக்கார் அறிவொழுக்கங்களாற்றகுதியுடையார். ஒழுகுதல் அறநீதிகளின் நெறி வழுவாமனடத்தல். வஞ்சித்தல், கூடினரைப்பிரித்தல், வேறுபகை வீளைத்தலென்றி வற்றானும், வலியானும், பகைவர் செய்யுந் துன்பங்கள் பலதிறத்தவாயினும், தானு மறிந்து அறிவார்சொல்லுங் கொண்டொழுகுவான்கண் அவற்றுளொன்றும் வாரா தென்பார், செற்றார் செயக்கிடந்ததில்லென்றார். (சு)

சசள. இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர். எ.

இ - ள். இடிக்கும் துணையாரை ஆள்வாரை - தீயன கண்டால் நெருங்கிச் சொல்லுந் துணையாந்தன்மையையுடையாரை இவர் நமக்குச் சிறந்தாரென்றருளுமரசரை—கெடுக்கும் தகுதியையவர் யார் - கெடுக்கும் பெருமையுடைய பகைவர் உலகத்தியாவர்? எ - று.

தீயன பாவங்களும் நீதியல்லனவும். துணையாந்தன்மையாவது தமக்கு அவையின்மையும் அரசன்கணன்புடைமையுமாம். அத்தன்மையுடையார் நெறியினீங்கவிடாமையின், அவரையாளுமரசர் ஒருவரானுங் கெடுக்கப்படாரென்பதாம். நெருங்கிச் சொல்லுமனவினுரையென் றுரைப்பாருமுளர். இவையிரண்டு பாட்டானும் அதன் பயன் கூறப்பட்டது. (எ)

சசஅ. இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும். அ.

இ - ள் இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் - கழறுதற்குரியாரைத் தனக்குத் துணையாகக்கொள்ளாமையிற் காவலற்ற அரசன்—கெடுப்பார் இலானும் கெடும் - பகையாய்க் கெடுப்பார் இல்லையாயினும் தானே கெடும் எ - று.

இல்லாத ஏமரானென்பன பெயரெச்சவடுக்கு. கெடுப்பார் உளராவரென்பது தோன்ற, இலானுமென்றார். தானே கெடுதலாவது பாகனில்லாத யானைபோல நெறியல்லாதொழிச் சென்று கெடுதல். (அ)

சசக. முதலிலார்க் கூதிய மில்லை மதலையாஞ்
சார்பிலார்க் கில்லை நிலை. கூ.

இ - ள். முதல்இலார்க்கு ஊதியம்இல்லை-முதற்பொருளில்லாத வணிகர்க்கு அதனால் வருமூதியமில்லையாம்;—மதலையாம் சார்பு இலார்க்கு நிலை இல்லை - அதுபோலத் தம்மைத் தாங்குவதார் துணையில்லாத அரசர்க்கு அதனான் ஊரும் நிலைபில்லை. எ - று.

முதலைப்பெற்றே இலாபம் பெறவேண்டுமாறுபோலத் தாங்குவாரைப் பெற்றே நிலைபெறவேண்டுமென்பதாம். நிலை அரசர் பாரத்தோடு சலியாது நிற்றல். (க)

சரிஎ. பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல். கஎ.

இ - ள். பல்லார் பகைகொளலின் பத்து அடுத்த தீமைத்து - தான்றனியனாய்வைத்துப் பலரோடும் பகைகொள்ளுதலிற் பதிற்று மடங்கு தீமையடைத்து—நல்லார் தொடர் கைவிடல் - அரசன் பெரியாரோடு நட்பினைக் கொள்ளாதொழிதல். எ - று.

பலர் பகையாயக்கால் "மோதி முள்ளொடு முட்பகை கண்டிடல்—பேதுசெய்து பிளந்திடல்*" என்பவை யல்லது ஒருங்கு வினையாக்குதித்துச் செய்தாலும் ஒருவாற்றானுய்தல்கூடும், நல்லார்தொடர்கைவிட்டால் ஒருவாற்றானுமுய்தல் கூடாமையின், இது செய்தல் அதனினுந் தீதென்பதாம். இவை மூன்றுபாட்டானும் அது செய்யாதவழிப்படுங் குற்றங் கூறப்பட்டது. (கஎ)

சசும் அதி.—சிற்றினஞ்சேராமை.

அஃதாவது சிறியவினத்தைப் பொருந்தாமை. சிறியவினமாவது "நல்லதனலனும் தியதன்றீமையுமில்லென்போரும்†" விடரும் தூர்த்தரும் கடருமுள்ளிட்டகுழு. அறிவைத் திரித்து இருமையுங் கெடுக்குமியல்பிற்றாய அதனைப் பொருந்திற் பெரியாரைத் துணைக்கோடல் பயனின்றென்ப துணர்த்தற்குஇஃததன்பின்வைக்கப்பட்டது.

சரிக. சிற்றின மஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும். க.

இ - ள். பெருமை சிற்றினம் அஞ்சும் - பெரியோரியல்பு சிறியவினத்தையஞ்சாநிற்கும்;—சிறுமை தான் சுற்றமாச் சூழ்ந்து விடும் - ஏனைச்சிறியோரியல்பு அது சேர்ந்தபொழுதே அதனைத்தனக்குச் சுற்றமாகவெண்ணித் தழுவும். எ - று.

தத்தமறிவு திரியுமாறும் அதனுற்றமக்கு வருந்துன்பமும் நோக்கலின் அறிவுடையாரஞ்சுவரென்றும், அறிவொற்றுமையாற் பிறிது நோக்காமையின் அறிவிலாதார் தமக்குச் சுற்றமாகத் தழுவுவரென்றுங் கூறினர். பொருளின்றொழிலுள் பண்பின் மேனின்றன. இதனுற் சிறியவினம்பெரியோர்க் காகாதென்பது கூறப்பட்டது. (க)

சரிஉ. நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு. உ.

---

* நீதியா லறத் தறுத்தி யீட்டுத—லாதி பாய வருமபகை காட்டுதன்—மோதி முன்னொடு முட்பகை கண்டிடல்—பேது செய்து பிளந்திடல் பெட்டதே—வகேசுந்தாமணி, விமலையார் இலம்பகம், உஉ.

† புறநானூறு, உசு.

இ - ள். நிலத்து இயல்பான் நீர் திரிந்து அற்றாகும் - தான் சேர்ந்த நிலத்தின் இயல்பானே நீர் தன்றன்மை திரிந்து அந்நிலத்தின்றன்மைத்தாம்;—மாந்தர்க்கு இனத்தியல்பு அறிவு (திரிந்து) அதாகும் - அதுபோல மாந்தர்க்குத் தாஞ்சேர்ந்த இனத்தின இயல்பானே அறிவுந் தன்றன்மை திரிந்து அவ்வினத்தின்றன்மைத்தாம். எ - று.

எடுத்துக்காட்டுவமை. விசும்பின்கட்டன்றன்மைத்தாய நீர் நிலத்தோடு சேர்ந்த வழி, நிறம், சுவை முதலிய பண்புகள் திரிந்தாற்போலத் தனிநிலைக்கட்டன்றன்மைத் தாயறிவு பிறவினத்தோடு சேர்ந்தவழிக் காட்சி முதலிய தொழில்கள் திரியுமென இதனுல் அதனது காரணங் கூறப்பட்டது. (உ)

சருஉ. மனத்தானு மாந்தர்க் குணர்ச்சி யினத்தானு
மின்னு னெனப்படுஞ் சொல். ஊ.

இ - ள். மாந்தர்க்கு உணர்ச்சி மனத்தான் ஆம் - மாந்தர்க்குப் பொதுவுணர்வு தம் மனங்காரணமாகவுண்டாம்;—இன்னுன் எனப்படும் சொல் இனத்தான் ஆம் - இவன் இத்தன்மையனென்று உலகத்தாராற் சொல்லப்படும் சொல் இனங்காரணமாக வுண்டாம். எ - று.

இயற்கையாய புலனுணர்வுமாத்திரத்திற்கு இனம் வேண்டாமையின் அதனை மனத்தானுமென்றும், செயற்கையாய விசேடவுணர்வுபற்றி நல்லனென்றுகத் தீய னென்றுக நிகழுஞ்சொற்கு இனம் வேண்டுதலின் அதனை இனத்தானுமென்றுங் கூறினர். உவமையளவை கொள்ளாது அத்திரிபும் மனத்தானுமென்பாரை நோக்கி இதனுன் அது மறுத்துக் கூறப்பட்டது. (ஊ)

சருஎ. மனத்துளதுபோலக் காட்டி யொருவற்
கினத்துள தாகு மறிவு. எ.

இ - ள். அறிவு-அவ்விசேடவுணர்வு—ஒருவற்கு மனத்து உளதுபோலக் காட்டி ஒருவற்கு மனத்தின்கண்ணே யுளதாவதுபோலத் தன்னைப் புலப்படுத்தி—இனத்து உளதாகும் - அவன் சேர்ந்தவினத்தின்கண்ணே யுளதாம். எ - று.

மெய்ம்மை நோக்காமுன் மனத்துளதுபோன்று காட்டியும் பின்னெக்கியவழிப் பயின்றவினத்துளதாயுமிருத்தலின், காட்டியென இறந்தகாலத்தாற் கூறினர். விசேட வுணர்வுதானும் மனத்தின்கண்ணே அன்றேயுளதாவதென்பாரை நோக்கி, ஆண்டுப் புலப்படுந் தன்மையேயுள்ளது அதற்குமூலம் இனமென்பது இதனுற் கூறப்பட்டது. (எ)

சருஏ. மனந்தூய்மை செய்வினை தூய்மை யிரண்டு
மினந்தூய்மை தூவா வரும். ஏ.

இ - ள். மனம் தூய்மை செய்வினை தூய்மை இரண்டும் - அவ்விசேடவுணர்வு புலப்படுதற்கிடனுய மனந்தூயனுதற்றன்மையும் செய்யும்வினை தூயனுதற்றன்மையு மாயிவிரண்டும்—இனம் தூய்மை தூவா வரும் - ஒருவற்கு இனந்தூயனுதற்றன்மை பற்றுக்கோடாக உளவாம். எ - று.

மனந்தூயனுதலாவது விசேடவுணர்வு புலப்படுமாறு இயற்கையாய அறியாமை யினீக்குதல். செய்வினைதூயனுதலாவது மொழிமெய்களாற்செய்யும் நல்வினைபுடைய னுதல். தூவென்பது அப்பொருட்டாதல் "தூவறத் துறந்தாரை*" என்பதனுனு

* கலித்தொகை, நெய்தற்கலி, க.

மறிக, ஒருவன் இனத்தையுங்கெவே அதனோடு பயிற்செயத்தான் மனத்தையுஞ் அதன் கண் லிசெடவுணர்வு புலப்பட்டி அதனுத்சொல்லுஞ் செயலுத்தையுமென, இதனுல் இனத்துன்னவுமாறு கூறப்பட்டது. (இ)

சரிக. மனத்தூயார்க் கெச்சகன் ருகு மினத்தூயார்க்
லில்லோன் ருதர லினை. க.

இ - ள். மனம் தூயார்க்கு எச்சம் நன்ருகும் - மனத்தூயராயினுர்க்கு மக்கட் பேறு நன்ருகும்;—இனம் தூயார்க்கு நன்ற ஆகா வினை இல்லை - இனத்தூயராயினுர்க்கு நன்ருகாத வினை யாதுமில்லை. எ - று.

காரியங் காரணத்தின் வேறுபடாமையின் எச்சநன்ருகுமென்றும், 'கல்லினத்தோ டெண்ணிச் செய்யப்படுதலின் எல்லாவினையு நல்லவாமென்றுங் கூறினுர். (க)

சரிஎ. மனநல மன்னுயிர்க் காக்க மினநல
மெல்லாப் புகழுந் தரும். எ.

இ - ள். மன் உயிர்க்கு மனநலம் ஆக்கம் (தரும்) - நிலைபெற்றவுயிர்கட்கு மனத்தது நன்மை செல்வத்தைக் கொடுக்கும்;—இனநலம் எல்லாப் புகழும் தரும் - இனத்தது நன்மை அதனுலே எல்லாப்புகழையுங் கொடுக்கும். எ - று.

மன்னுயிரென்றது ஈண்டு உயர்திணைமேனின்றது. தருமென்னும் இடவழுவமைதிச்சொல் முன்னுங்கூட்டப்பட்டது. உம்மை இறந்ததுதழீஇயவெச்சவும்மை. மனநன்ருதருமே அறமாகலின் அதனை ஆக்கந்தருமென்றும், புகழ் கொடுத்தற்குரிய நல்லோர்தாமே இனமாகலின் இனநலமெல்லாப்புகழுந் தருமென்றுங் கூறினுர். மேல் மனநன்மை இனநன்மைபற்றிவருமென்பதனை உட்கொண்டு அஃதியல்பாகவேயுடையார்க்கு அவ்வினநன்மை வேண்டாவென்பாரை நோக்கி, அதுவேயன்றி அத்தன்மைய பலவற்றையுந் தருமென அவர்க்கும் அதுவேண்டுமென்பது இவ்விரண்டாம்பாட்டினுங் கூறப்பட்டது. (எ)

சரிஅ. மனநல நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்
கினநல மேமாப் புடைத்து. அ.

இ - ள். மனநலம் நன்கு உடையராயினும் - மனநன்மையை முன்னே செல்லினையாற்றுமேயுடையராயினும்,—சான்றோர்க்கு இனநலம் ஏமாப்பு உடைத்து - அமைச்சார்க்கு இனநன்மை அதற்கு வலியாதலையுடைத்து. எ - று.

நன்காலென்னும் மூன்றனுருபு விகாரத்தாற்றொக்கது. அச்செல்லினையுள்வழியும் மனநலத்தை வளர்த்துவருதலின், அதற்கேமாப்புடைத்தாயிற்று. (அ)

சரிக. மனநலத்தி னுகு மறுமைமற் றஃது
மினநலத்தி னேமாப் புடைத்து. க.

இ - ள். மனநலத்தின் மறுமை ஆகும் - ஒருவற்கு மனநன்மையானே மறுமையின்பமுண்டாம்;—மற்றஃதும் இனநலத்தின் ஏமாப்பு உடைத்து - அதற்கு அச்சிறப்புத்தானும் இனநன்மையான் வலிபெறுதலையுடைத்து. எ - று.

மனநலத்தினுகு மறுமையென்றது மறுமை பயப்பது மனநன்மைதானே பிறி தொன்றன்றென்னும் ஏதத்தையுடம்படுத்துக் கூறியவாறு. மற்று வினைமாற்று. உம்மை

இற்ற்ததழீஇயவெச்சவும்மை. ஒரோவழித் தாமதகுணத்தான் மனாலந்திரியினும் நல்லினம் ஒப்பநிறுத்தி மறுமையபயப்பீக்குமென நிலைபெறச்செய்யுமாறு கூறப்பட்டது. இவையைந்துபாட்டானுஞ் சிற்றினஞ்சேராமையது சிறப்பு நல்லினஞ்சேர்தலாகிய எதிர்மறைமுகத்தாற் கூறியவாறறிக. (க)

சசo. நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தி
னல்லற் படுப்பதூஉ மில். கo.

இ - ள். நல்லினத்தின் ஊங்கு துணையும் இல்லை - ஒருவற்கு நல்லினத்தின் மிக்க துணையுமில்லை;—தீயினத்தின் (ஊங்கு) அல்லற்படுப்பதூஉம் இல் - தீயவினத்தின் மிக்க பகையுமில்லை. எ - று.

ஐந்தனுருபுகள் உறழ்பொருளின்கண்வந்தன. ஊங்கென்பது பின்னுங்கூட்டி உம்மை மாற்றியுரைக்கப்பட்டது. நல்லினம் அறியாமையினீக்கித் துயருறுமற் காத்தலின் அதனைத் துணையென்றும், தீயினம் அறிவினீக்கித் துயருறுவித்தலின் அதனைப் பகையென்றுங் கூறினர். அல்லற்படுப்பதென்பது ஏதப்பெயர். இதனால் விதியெதிர் மறைகள் உடன் கூறப்பட்டன. (கo)

சஎ ம் அதி.—தெரிந்துசெயல்வகை.

அஃதாவது அரசன் தான்செய்யும் வினைகளையாராய்ந்து செய்யுந்திறம். அச் செயல் பெரியாரைத்துணைக்கோடல்.பயனுடைத்தாயவழி அவரோடுஞ்செய்யப்படுவதாகலின், இது சிற்றினஞ்சேராமையின் பின் வைக்கப்பட்டது.

சசஉ. அழிவதூஉ மாவதூஉ மாகி வழிபயக்கு
மூதியமுஞ் சூழ்ந்து செயல். க.

இ - ள். அழிவதூஉம் - வினைசெய்யுங்கால் அப்பொழுது அதனாலழிவதனையும்—ஆவதூஉம் - அழிந்தாற்பின்னாவதனையும்—ஆகி வழி பயக்கும் ஊதியமும் - ஆய்ந்தின்று பிற்பொழுது தருமூதியத்தையும்—சூழ்ந்து செயல் - சிர்தூக்கி உறுவதாயிற் செய்க. எ - று.

உறுவதாவது நிகழ்வின்கண் அழிவதனில் ஆவது மிக்கு எதிர்வினும் அது வளர்ந்து வருதல். அழிவதின்மையின், எதிர்வின்கண் வருமாக்கத்தை ஊதிய மென்றார்: எனவே அவ்வூதியம் பெறின் நிகழ்வின்கண் அழிவதும் ஆவதுந் தம்மொளொத்தாலும் ஒழிதற்பாற்றன்றென்பது பெற்றாம். இரண்டுகாலத்தும் பயனுடைமை தெரிந்து செய்கவென்பதாம். (க)

சசஉ. தெரிந்த வினத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும்பொருள் யாதொன்று மில். உ.

இ - ள். தெரிந்த இனத்தொடு தேர்ந்து எண்ணிச் செய்வார்க்கு-தாந் தெரிந்து கொண்ட இனத்துடனே செய்யத்தகும் வினையை ஆராய்ந்து பின் தாமேயுமெண்ணிச் செய்து முடிக்கவல்ல அரசர்க்கு—அரும்பொருள் யாதொன்றும் இல் - எய்துதற்கரிய பொருள் யாதொன்றுமில்லை. எ - று.

ஆராயப்படுவனவெல்லாம் ஆராய்ந்தபோந்த இனமென்றுமாம். செய்வார்க் கென்றதனால், வினையென்னுஞ் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. வினையாவது

மேற்சேறன்முதல் வேறலீரூய தொழில். பொருள்கட்கேதுவாய அதனிற்றவருமை யின், அரியபொருள்களெல்லாம் எளிதினெய்துவரென்பதாம். இவையிரண்டுபோட்டா னுஞ் செய்யத்தகும் வினையும் அது செய்யுமாறும் கூறப்பட்டன. (உ)

சகூஉ. ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
யூக்கா ரறிவுடை யார். கூ.

இ - ள். ஆக்கம் கருதி முதல் இழக்கும் செய்வினை - மேலெய்தக்உடவலுதியத் தினை நோக்கி முன்னெய்தினின்றமுதறன்னையும் இழத்தற்கேதுவாய செய்வினையை— அறிவுடையார் ஊக்கார் - அறிவுடையார் மேற்கொள்ளார். எ - று.

கருதியென்னும் வினையெச்சம் இழக்குமென்னும் பெயரெச்சவினைகொண்டது. எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. ஆக்கமெயன்றி முதலையுமிழக்கும் வினைகளாவன வலியுங் காலமும் இடனுமறியாது பிறர்மண் கொள்வான்சென்று தம்மண்ணுமிழத்தல் போல்வன. முன்செய்துபோக்த வினையாயினுமென்பார், செய்வினையென்றார். (கூ)

சகூச. தெளிவி லதனைத் தொடங்கா ரிளிவென்னு
மேதப்பா டஞ்சு பவர். ச.

இ - ள். தெளிவு இலதனைத் தொடங்கார்—இனத்தேயடு தனித்தும் ஆராய்ந்து துணிதலில்லாத வினையைத் தொடங்கார்—இளிவு என்னும் ஏதப்பாடு அஞ்சுபவர் - தமக்கு இளிவரவென்னுங் குற்றமுண்டாதலை அஞ்சுவார். எ - று.

தொடங்கின் இடையின் மடங்கலாகாமையின், தொடங்காரென்றார். இளிவரவு அவ்வினையாற் பின்னழிவெய்தியவழி அதன் மேலும் அறிவும் மானமுமிலரென்ற உலகத்தாரிகழுமிகழ்ச்சி. அஃதுண்டாதல் ஒருதலையாகலின், தெளிவுள்வழித் தொடங்குக வென்பதாம். (ச)

சகூரு. வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ ராறு. ரு.

இ - ள். வகை அறச் சூழாது எழுதல் - சென்றால் நிகழுந்திறங்களையெல்லாம் முற்றவெண்ணாது சிலவெண்ணிய துணையானே அரசன் பகைவர்மேற்செல்லுதல்— பகைவரைப் பாத்திப்படுப்பது ஓராறு - அவரை வளருநிலத்திலே நிலைபெறச் செய்வ தொரு நெறியாம். எ - று.

அத்திறங்களாவன வலி, காலம் இடனென்றிவற்றால் தனக்கும் பகைவர்க்கு முளவாம் நிலைமைகளும், வினை தொடங்குமாறும், அதற்கு வருயிடையூறுகளும், அவற்றை நீக்குமாறும், வெல்லுமாறும், அதனாற் பெறும் பயனும் முதலாயின. அவற் றுட் சிலவெஞ்சினும் பகைவர்க்கு இடனுமாகலான், முற்றப்பெறவெண்ணவேண்டு மென்பதாம். இவை மூன்றுபாட்டானும் ஒழியத்தகும் வினையும் ஒழியாவழிப்படு மிழுக்குங் கூறப்பட்டன. (இ)

சகூசு. செய்தக்க வல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும். சு.

இ - ள். செய்தக்க அல்ல செயக் கெடும் - அரசன் தன்வினைகளுட் செய்யத்தக் கனவல்லவற்றைச் செய்தலாற்கெடும்,—செய்தக்க செய்யாமையானும் கெடும் - இனி அதனானேயன்றிச் செய்யத்தக்கனவற்றை செய்யாமை தன்னானுங்கெடும். எ - று.

செய்யத்தக்கனவல்லாவன பெரிய முயற்சியினவும், செய்தாற்பயனில்லனவும், அது சிறிதாயினவும், ஐயமாயினவும், பின்நோய்விளைப்பனவுமெனவிவை. செய்யத்தக்கனவாவன அவற்றின் மறுதலையாயின. இச்செய்தல் செய்யாமைகளான் அறிவு ஆண்மை பெருமையென்னும் மூவகையாற்றலுட் பொருள் படையென இருவகைத்தாய பெருமை சுருங்கிப் பகைவர்க்கு எளியனுமாகலான், இரண்டுங் கேட்டிற்கேதுவாயின. இதனுற் செய்வன செய்து ஒழிவனவொழிகவென இருவகையானும் உடன் கூறப்பட்டன. (க)

சகூ. எண்ணித் துணிக கருமம் துணிந்தபி
ன்எண்ணுவ மென்ப திழுக்கு. எ.

இ - ள். கருமம் எண்ணித் துணிக - செய்யத்தக்க கருமமும் முடிக்குமுபாயத்தை யெண்ணித் தொடங்குக,—துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு - தொடங்கி வெத்தப் பின்னெண்ணக் கடவேமென்றெழிதல் குற்றமாதலான். எ - று.

துணிவுபற்றி நிகழ்தலின், துணிவெனப்பட்டது. சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. உபாயமென்பது அவாய்நிலையான் வந்தது. அது கொடுத்தல், இன்சொற் சொல்லல், வேறுபடுத்தல், ஒறுத்தலென நால்வகைப்படும். இவற்றை வடநூலார் தான சாம பேத தண்டமென்ப. அவற்றுண் மூன்னையிரண்டும் ஐவகைய. னேய மூவகையு; அவ்வகைகளெல்லாம் ஈண்டுரைப்பிற்பெருகும்க. இவ்வுபாயமெல்லா மெண்ணுது தொடங்கின் அவ்வினை மாற்றருஞ்ல் விலக்கப்பட்டு முடியாமையானும்; இடையிலெழிதலாகாமையானும், அரசன்றுயருறுதலின், அவ்வெண்ணுமைமையிழுக் கென்றார். செய்வனவற்றையும் உபாயமறிந்தே தொடங்குகவென்பதாம். (எ)

சகூஅ. ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்தீன்று
போற்றினும் பொத்துப் படும். அ.

இ - ள். ஆற்றின் வருந்தா வருத்தம் - முடியுமுபாயத்தாற் கருமத்தை முயலாத முயற்சி—பலர் நின்று போற்றினும் பொத்துப்படும் - துணைவர்பலர் நின்று புரை படாமற் காப்பினும் புரைப்படும். எ - று.

முடியுமுபாயத்தான் முயலலாவது கொடுத்தலைப் பொருணசையாளன்கண்ணும்; இன்சொல்லைச் செப்பமுடையான், மடியாளன், முன்னே பிறரோடி பொருது தொந்தவனென இவர்கண்ணும்; வேறுபடுத்தலைத் துணைப்படையாளன், தன் பகுதியோடி பொருந்தாதானென இவர்கண்ணும்; ஒறுத்தலை இவற்றின் வாராதவழி இவர்கண்ணுந் தேறப்படாத கீழ்மகள்கண்ணுஞ் செய்து, வெல்லுமாற்றான் முயறல். புரைபடுதல் கருதிய நன்மையன்றிக் கருதாத தீமைபயத்தல். உபாயத்தது சிறப்புக் கூறியவாறு.()

சகூக. நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றுக கலடை. க.

இ - ள். நன்று ஆற்றலுள்ளும் தவறு உண்டு - வேற்றுவேந்தர்மாட்டு நன்றாக வுபாயஞ்செய்தற்கண்ணுங் குற்றமுண்டாம்—அவரவர் பண்பு அறிந்து ஆற்றுக்கடை-அவரவர் குணங்களோயாராய்ந்தறிந்து அவற்றிற்கியையச் செய்யாவிடின். எ - று.

() அருமபொருள் கொடுத்தல், தருமபபொருள்பெறுது விடுதல், கொடுக்கும பொருள் கொடுத்தல், பிறன்பொருள்கொண்டு கொடுத்தல், இறைபொழிதல் எனக்கொடுத்தல் ஐந்து; வண்க்கல், புகழ்தல், எதிர்கோடல், கட்புகைதல், உறவுகூறல் என இன்சொற் சொல்லல் ஐந்து; கட்பொழித்தல், கூடினரைப்பிரிதறல், வேறுபடை விலக்கல் என வேறுபடுத்தல் மூன்று; தண்டஞ்செய்தல், பொருள்கோடல், கோறல் என ஒறுத்தல் மூன்று.

சென்ருவினவுபாலனாவது கொடித்தலும் இன்சொற்சொல்லுதலுமாம். அவை யாவர் கண்ணும் இனியவாதற் றெப்புடைமையின். உம்மை றெப்பும்மை. அவற்றை அவரவர் பண்பறிர்தற்றன்மையாவது அவற்றிற்கு உரியரல்லாதார்கண்ணே செய்தல் தவறு. அவ்வினை முடியாமை. (க)

சஎ0 *எள்ளாத வெண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு*
கொள்ளாத கொள்ளா தலகு. க0.

இ - ள். தம்மொடு கொள்ளாத உலகு கொள்ளாது - அரசர் வினைமுடித்தற் பொருட்டித் தங்கிலைமையோடு பொருந்தாத உபாயங்களைச் செய்வராயின் உலகர் தம்மையிகழாகிற்கும்;—எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் - ஆகலான் அஃது இகழாவுபாயங்களே நாடிச் செய்க எ - று.

தம்மென்பது ஆருபெயர். தங்கிலைமையோடு பொருந்தாத உபாயங்களைச் செய்தலாவது தாம் வலியராய்வைத்து மெலியார்க்குரிய கொடித்தன்முதலிய மூன்றினைச் செய்தலும், மெலியராய்வைத்து வலியார்க்குரிய ஒறுத்தலைச்செய்தலுமாம். இவையிரண்டும் அறிவிலார் செய்வனவாகலின், உலகங்கொள்ளாதென்றார். அஃதெள்ளாதன செய்தலாவது அவற்றைத் தத்தம் வன்மை மென்மைகட்கேற்பச் செய்தல். மேல் இடவகையானுரிமை கூறிய உபாயநகட்கு வினைமுதல்வகையான் உரிமை கூறியவாறு. இவை நான்குபாட்டானுஞ் செய்வனவற்றிற்கு உபாயமும் அதனதரிமையுங் கூறப்பட்டன. (க0)

சூ அம் அதி.—வலியறிதல்.

அஃதாவது அவ்வுபாயங்களுள் ஒறுத்தல் குறித்தவரசன் நால்வகை வலியையும் அளந்தறிதல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

சஎக. *வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந்*
துணைவலியுந் தூக்கிச் செயல். க.

இ - ள். வினை வலியும் - தான்செய்யக்கருதிய வினைவலியையும்—தன்வலியும் - அதனைச் செய்து முடிக்குந் தன்வலியையும்—மாற்றான்வலியும் - அதனை விலக்கலுறும் மாற்றான்வலியையும்—துணை வலியும்-இருவர்க்குந் துணையாவார் வலியையும்—ஆராய்ந்து செயல் - சீர்தூக்கித் தன்வலி மிகுமாயின் அவ்வினையைச்செய்க. எ - று.

இந்நால்வகை வலியுள் வினைவலி அரண்முற்றலும் கோடலும் முதலிய தொழிலானும், ஏனை மூவகை யாற்றலானுங் கூறுபடுத்துத் தூக்கப்படும். தன்வலி மிகவின் கட்செய்கவென்ற விதியால், தோற்றல் ஒருதலையாய குறைவின்கண்ணும், வேறல் ஐயமாய ஒப்பின்கண்ணும் ஒழிகவென்பது பெற்றாம். (க)

சஎஉ. *ஒல்வ தறிவ தறிந்தந்தன் கட்டங்கிச்*
செல்வார்க்குச் செல்லாத தில். உ.

இ - ள். ஒல்வது அறிவது அறிந்து - தமக்கியலும் வினையையும் அதற்கறிய வேண்டுவதாய வலியையும் அறிந்து—அதன்கண் தங்கிச் செல்வார்க்கு - எப்பொழுதும் மனமொழிமெய்களே அதன்கண்வைத்துப் பகைமேற்செல்லும் அரசர்க்கு—செலலாதது இல் - முடியாதபொருளில்லை. எ - று.

ஒல்லதெனவே வினைவலி முதலாய மூன்றுமடங்குதலின், ஈண்டறிவதென்றது துணைவலியேயாயிற்று. எல்லாப்பொருளுமெய்துவரென்பதாம். இவையிரண்டுபோட்டானும் வலியின்பகுதியும் அஃதறிந்து மேற்செல்வாரெய்தும் பயனும் கூறப்பட்டன.

சஎஙூ. உடைத்தம் வலியறியா ரூக்கத்தி னூக்கி
யிடைக்கண் முரிந்தார் பலர். கூ.

இ - ள். உடைத் தம் வலி அறியார் - கருத்தாவாதலேயுடைய தம்வலியினளவறியாதே—ஊக்கத்தின் ஊக்கி - மனவெழுச்சியாற் றம்மின்வலியாரோடு வினைசெய்தலைத் தொடங்கி—இடைக்கண் முரிந்தார் பலர் - அவர் அடர்த்தலான் அது செய்து முடிக்கப்பெறுது இடையே கெட்டவரசர் உலகத்துப் பலர். எ - று.

உடையவென்பது அவாய்நின்றமையின், செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. மூவகையாறறலுள்ளுஞ் சிறப்புடைய அறிவுடையார் சிலராதலின், முரிந்தார் பல ரென்றார். அதனால் தமவலியறிந்தே தொடங்குகவென்பது எஞ்சிநின்றது. (கூ)

சஎச. அமைந்தாங் கொழுகா னளவறியான் றன்னி
யியந்தான் விரைந்தது கெடும். ச.

இ - ள். ஆங்கு அமைந்து ஒழுகான் - அயல்வேந்தரோடு பொருந்தியொழுகுவதுஞ் செய்யாது—அளவு அறியான - தன் வலியளவறிவதுஞ்செய்யாது—தன்னியந்தான் - தன்னே வியந்து அவரோடு பகைத்தவரசன்—விரைந்து கெடும் - விரையக்கெடும். எ - று.

காரியத்தைக் காரணமாக உபசரித்து, வியந்தானென்றார். விரையவென்பது நிரிந்து நின்றது. ஈட்பாயொழுகுதல், வலியறிந்து பகைத்தலென்னுமிரண்டனுள் ஒன்றன்றே அயல்வேந்தரோடு செயற்பாலது, இவையன்றித் தான் மெலியனாய் வைத்து அவரோடு பகைகொண்டானுக்கு ஒருபொழுதும் நிலையின்மையின், விரைந்து கெடுமென்றார். இவையிரண்டுபோட்டானுந் தன்வலியறியாவழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது. (ச)

சஎடு. பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின். டு.

இ - ள். பீலி பெய் சாகாடும் அச்சு இறும் - பீலியேற்றிய சகடமும் அச்சுமுறியும்,—அப்பண்டம் சால மிகுத்துப் பெயின் - அப்பீலியை அது பொறுக்குமளவின்மிகுத்தேற்றின். எ - று.

உம்மை சாகாட்டது வலிச்சிறப்பேயன்றிப் பீலியது கொய்மைச்சிறப்புந் தோன்ற நின்றது. இறுமென்னுஞ்சினைவினை முதன்மேனின்றது. எளியரென்று பலரோடு பகைகொள்வான் தான்வலியனேயாயினும் அவர் தொக்கவழி வலியழியுமென்னும் பொருடோன்ற நின்றமையின், இது பிறிதுமொழிதலென்னுமலங்காரம்: இதனை நவலாநவற்சியென்பாரும் ஒட்டென்பாருமுளர். ஒருவன் தொகுவார்பலரோடு பகைகொள்ளற்கவென்றமையின், இதனுன் மாற்றான் வலியும் அவன்றுணைவலியும் அறியாவழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது. (டி)

சஎகூ. துனிக்கொம்ப ரேறினு ரஃதிறக் தூக்கி
நுயிர்க்கிறுதி யாகி விடும். கூ.

இ-ன். கொம்பர் நுனி ஏறினர் அஃது இறந்து ஊக்கின் - ஒருமரக்கோட்டினது நுனிக்கண்ணேயேறினின்றார் தம்மூக்கத்தால்அவ்வளவினைக் கடந்து மேலுமேற ஊக்குவராயின்,—உயிர்க்கு இறுதியாகி விடும் - அவ்வூக்கம் அவருயிர்க்கு இறுதியாய் முடியும். எ - று.

நுனிக்கொம்பரென்பது கடைக்கணென்பதுபோலப் பின்முன்னுதைத்தொக்க ஆறும்வேற்றுமைத்தொகை. பன்மை அறிவின்மைபற்றி இழித்தற்கண் வந்தது. இறுதிக்கேதுவாவதனை இறுதி யென்றார். பகைமேற்செல்வான்றொடங்கித் தன்னைச் செல்லலாமளவுஞ் சென்றநின்றான் பின் அவ்வளவினில்லாத மனவெழுச்சியான் மேலுஞ் செல்லுமாயின், அவ்வெழுச்சி வினைமுடிவிற்கேதுவாகாது அவனுயிர்முடிவிற்கேதுவாமென்னும் பொருடோன்றநின்றமையின், இதவும் மேலையலங்காரம். அளவறிந்துநிற்றல்வேண்டு மென்றமையின், இதனால் வினைவலியறியாவழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது. (க)

சஎஎ. ஆற்றி னளவறிந் தீக வதுபொருள்
போற்றி வழங்கு நெறி. எ.

இ - ள். ஆற்றின் அளவு அறிந்து ஈக - ஈயுநெறியானே தமக்குள்ள பொருளினெல்லையையறிந்து அதற்கேற்பவீக;—அது பொருள்போற்றி வழங்கும் நெறி - அங்ஙனம் ஈதல் பொருளைப் பேணிக்கொண்டொழுகும் நெறியாம். எ - று.

ஈயுநெறி மேல் இறைமாட்சியுள் "வருத்தலும் வல்லதரசு*" என்புழி உரைத்தாம். எல்லைக்கேற்பவீதலாவது ஒன்றனைவெல்லுவை நான்குகூறுக்கி, அவற்றுள் இரண்டனைத் தன்செலவாக்கி, ஒன்றனை மேல் இடர்வந்துழி அது நீக்குதற்பொருட்டு வைப்பாக்கி, நின்றவொன்றனையீதல்: பிறரும் "வருவாயுட்கால்வழங்கி வாழ்தல்†" என்றார். பேணிக்கொண்டொழுகுதல் ஒருவரோடு ஈட்பிலாத அதனைத் தம்மோடு ஈட்புண்டாக்கிக்கொண்டொழுகுதல். முதலிற்செலவு சுருங்கிற் பொருள் ஒருகாலும் நீங்காதென்பதாம். (எ)

சஎஅ. ஆகா தளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா தகலாக் கடை. அ.

இ - ள். ஆகு ஆறு அளவு இட்டிதாயினும் கேடு இல்லை - அரசர்க்குப் பொருள் வருகின்ற நெறியளவு சிறிதாயிற்றாயினும் அதனற்கேடில்லையாம்,—போகு ஆறு அகலாக்கடை - போகின்ற நெறியளவு அதனிற்பெருகாதாயின். எ - று.

இட்டிதெனவும் அகலாதெனவும் வந்த பண்பின்றொழில்கள்பொருண் மேனின்றன. பொருளென்பது அதிகாரத்தான் வருவித்து, அளவென்பது பின்னுங்கூட்டியுரைக்கப்பட்டன. முதலுஞ் செலவுந் தம்முளொப்பினுங் கேடில்லையென்பதாம். (அ)

சஎக. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல
வில்லாகித் தோன்றுக் கெடும். கூ.

---

* கஅதி-ம் குறளை யிதற்காண்க

† வருவாயுட் கால்வழங்கி வாழ்தல் செருவாய்ப்பச்—செய்தலை நாடாச் சிறப்புடைமை - யெய்தப்—பலகோடி கல்லலை கற்றலிம் மூன்று—கலமாட்சி கல்லவர்கோள்—சிரிதேடுகம், உக.

இ - ள். அளவு அறிந்து வாழாதான் வாழ்க்கை - தனக்குள்ள பொருளினெல்லையையறிந்து அதற்கேற்ப வாழமாட்டாதான் வாழ்க்கைகள்—உளபோல இல்லாகித் தோன்றுக்கெடும் - உள்ளன போலத் தோன்றி மெய்ம்மையான் இல்லையாய்ப் பின்பு அத்தோற்றமுமின்றிக் கெட்டுவிடும். எ - று.

அவ்வெல்லைக்கேற்ப வாழ்தலாவது அதனிற் சுருக்கக் கூடாதாயின் ஒப்பவாயிலும் ஈத்துந் துய்த்தும் வாழ்தல். தொடக்கத்திற் கேடு வெளிப்படாமையின், உளபோலத் தோன்றியென்றார். முதலிற்செலவு மிக்கால் வருமேதங் கூறியவாறு. (கூ)

சஅ0. உளவரை தூக்காத வோப்புர வாண்மை
வளவரை வல்லிக் கெடும். அ0.

இ - ள். உள வரை தூக்காத ஒப்புரவு ஆண்மை - தனக்குள்ளவளவு தூக்காமைக்கேதுவாய ஒப்புரவாண்மையால்—வளவரை வல்லிக் கெடும் - ஒருவன் செல்வத்தினெல்லை விரையக்கெடும். எ - று.

ஒப்புரவேயாயினும் மிகலாகா தென்றமையான், இதுவுமது. இவ்வாண்குபாட்டானும் மூவகையாற்றலுட் பெருமையின் பகுதியாய பொருள்வலியறிதல் சிறப்பு நோக்கி வருத்தக் கூறப்பட்டது. (கo)

சாகும் அதி.—காலமறிதல்.

அஃதாவது வலியான் மிகுதியுடையனுப்ப் பகைமேற்சேறலுற்ற அரசன் அச்செலவிற்கேற்ற காலத்தினையறிதல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

சஅக. பகல்வெல்லுங் கூகையைக் காக்கை யிகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது. க

இ - ள். கூகையைக் காக்கை பகல் வெல்லும் - தன்னின் வலிதாய கூகையைக் காக்கை பகற்பொழுதின்கண் வெல்லாநிற்கும்,—இகல் வெல்லும் வேந்தர்க்குப் பொழுது வேண்டும் - அதுபோல, பகைவரதிகலே வெல்லக் கருதுமரசற்கு அதற்கேற்ற காலம் இன்றியமையாது. எ - று.

எடுத்துக்காட்டுவமை காலமல்லாவழி வலியாற் பயனில்லையென்பது விளக்கி நின்றது. இனிக் காலமாவது வெம்மையுங் குளிர்ச்சியுந் தம்முளொத்து நோய் செய்யாது தண்ணீரும் உணவும் முதலிய உடைத்தாய்த் தானே வருந்தாது செல்லுமியல்பினதாம். இதனுற் காலத்தது சிறப்புக் கூறப்பட்டது. (க)

சஅஉ. பருவத்தோ டொட்ட வொழுகை பிருவினைத்
தீராமை யார்க்குங் கயிறு. உ,

இ - ள். பருவத்தோடு ஒட்ட ஒழுகல் - அரசன் காலத்தோடு பொருந்த வினை செய்தொழுகுதல்—திருவினைத் தீராமை ஆர்க்கும் கயிறு - ஒருவர்கண்ணும் நில்லாது நீங்குஞ் செல்வத்தைத் தன்கணீங்காமற் பிணிக்கும் கயிறும். எ - று.

காலத்தோடு பொருந்துதல் காலந்தப்பாமற் செய்தல். தீராமையென்றதனால், தீர்தன்மாலேயதென்பது பெற்றும். வினை வாய்த்து வருதலான், அதனினுருஞ் செல்வம் எஞ்ஞான்றும் நீங்காதென்பதாம். (உ)

சஅஉ. அருவினை வென்ப வுளவோ கருவியாற்
கால மறிந்து செயின். ஈ.

இ - ள். அருவினை என்ப உளவோ - அரசராற் செய்தற்கரிய வினைகளென்று சொல்லப்படுவன உளவோ,—கருவியான் காலம் அறிந்து செயின் - அவற்றை முடித்தற்காங்கருவிகளுடனே செய்தற்காங்காலம் அறிந்து செய்வராயின். எ - று.

கருவிகளாவன மூவகையாற்றலும் நால்வகையுபாயங்களுமாம். அவை உளவாய வழியுங் காலம் வேண்டுமென்பதறிவித்தற்கு, கருவியாலென்றார். எல்லாவினையும் எளிதின் முடியுமென்பதாம். (ஈ)

சஅச. ஞாலங் கருதினுங் கைகூடுங் காலம்
கருதி யிடத்தாற் செயின்.

இ - ள். ஞாலங் கருதினுங் கைகூடும் - ஒருவன் ஞாலமுழுதுந் தானே யாளக் கருதினனெனினும் அஃது அவன்கையகத்ததாம்,—காலம் கருதிஇடத்தான் செயின் - அதற்குச் செய்யும் வினையைக் காலமறிந்து இடத்தோடு பொருந்தச் செய்வனெயின். எ - று.

இடத்தானென்பதற்கு மேற்கருவியாலென்பதற்கு உரைத்தாங்குரைக்க. கைகூடாதனவும் கைகூடுமென்பதாம். இவை மூன்றுபாட்டானும் காலமறிதற்பயன் கூறப்பட்டது. (உ)

சஅஞ. காலங் கருதி யிருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர். ஙி.

இ - ள். கலங்காது ஞாலம் கருதுபவர் - தப்பாது ஞாலமெல்லாங் கொள்ளக் கருதுமரசர்—காலம் கருதி இருப்பர் - தம்வலி மிகுமாயினும் அது கருதாது அதற் கேற்ற காலத்தையே கருதி அது வருந்துணையும் பகைமேற் செல்லார். எ - று.

தப்பாமை கருதியவழியே கொள்ளுதல். வலிமிகுதி காலங்கருதி யென்றதனாற் பெற்றும். அது கருதாது செல்லின் இருவகைப் பெருமையுந் தேய்ந்து வருத்தமுமுறுவராகலின், இருப்பரென்றார். இருத்தலாவது சுட்பாக்கல், பகையாக்கல், மேற்சேறல், இருத்தல், பிரித்தல், கூட்டலென்னும் அறுவகைக்குணங்களுள் மேற்செலவிற்கு மாறுபது. இதனாற் காலம் வாராவழிச் செய்வது கூறப்பட்டது. (ஙி)

சஅசு. ஊக்க முடையா னொடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து. சூ.

இ - ள். ஊக்கம் உடையான் ஒடுக்கம் - வலிமிகுதியுடையவரசன் பகைமேற் செல்லாது காலம் பார்த்திருக்கின்ற இருப்பு—பொரு தகர் தாக்கற்குப் பேரும் தகைத்து - பொருகின்ற தகர் தன் பகை கெடப் பாய்தற்பொருட்டுப் பின்னே கால் வாங்குந் தன்மைத்தாம். எ - று.

உவமைக்கட்டாக்கற் கென்றதனால், பொருளினும் வென்றியெய்தற்பொருட் டென்பது கொள்க. இதனால் அவ்விருப்பின் சிறப்புக் கூறப்பட்டது. (சு)

சஅஎ. பொன்னென வாங்கே புறம்பிவரார் காண்பார்த்
துன்னேற்ப நோன்றி பயர்.

இ - ள். ஒன்னியவர் - அறிவுடையவரசர்—ஆங்கே பொன்னெனப் புறம்வேரார் - பகைவர் மிகைசெய்த பொழுதே அவரறியப்புறத்து வெகுளார்,—காலம் பார்த்து உள் வேர்ப்பர் - தாம் அவரை வெல்லுதற்கேற்ற காலத்தினையறிந்து அது வருந்துணையும் உள்ளே வெகுள்வர். எ - று.

பொள்ளெனவென்பது குறிப்புமொழி. வேரார் வேர்ப்பரெனக் காரணத்தைக் காரியமாகவுபசரித்தார். அறிய வெகுண்டுழித் தம்மைக் காப்பராகலிற் புறம்வேரா ரென்றும், வெகுளியொழிந்துழிப் பின்னும் மிகை செய்யாமலடக்குதல் கூடாமையின் உள்வேர்ப்பரென்றுங் கூறினர். (எ)

சஅஅ. செறுநரைக் காணிற் சுமக்க விறுவரை
காணிற் கிழக்காந் தலை. அ.

இ - ள். செறுநரைக் காணின் சுமக்க - தாம் வெல்லக் கருதிய வரசர் பகைவருக்கு இறுதிக்காலம்வருந்துணையும் அவரைக் கண்டாற்பணிக;—இறுவரை காணின் தலை கிழக்காம்-பணியவே அக்காலம் வந்திறும்வழி அவர் தகைவின்றி யிறுவர். எ-று.

பகைமையொழியும் வகை மிகவுந் தாழ்கவென்பார் சுமக்கவென்றும், அங்ஙனந் தாழவே அவர் தம்மைக் காத்தலிகழ்வராகலிற் றப்பாமற்கெடவரென்பார் அவர்தலை மோமென்றுங் கூறினர்.தலைமேற்கொண்டதொருபொருளைத் தள்ளுங்கால்அது தன் தலைமீதாக விழுமாகலின், அவ்வியல்பு பெறப்பட்டது. இவையிரண்டுபோட்டாலும் இருக்கும்வழிப் பகைமை தோன்றுமலிருக்கவென்பது கூறப்பட்டது. (அ)

சஅக. எய்தற் கரிய இயைந்தக்கா லங்கில்லே
செய்தற் கரிய செயல். க.

இ - ள். எய்தற்கு அரியது இயைந்தக்கால் - பகையை வெல்லக் கருதுமரசர் தம் மாலெய்துதற்கரிய காலம் வந்துகூடியக்கால்,—அங்கில்லே செய்தற்கு அரிய செயல்- அது கழிவதற்கு முன்பே அது கூடாவழித் தம்மாற் செய்தற்கரிய வினைகளைச் செய்க. எ - று.

ஆற்றன்முதலியவற்றாற் செய்துகொள்ளப்படாமையின் எய்தற்கரியதென்றும், அது தானேவந்தியைதல் அரிதாகலின் இயைந்தக்காலென்றும், இயைந்தவழிப் பின்னில்லாதோடுதலின் அங்கில்லேயேயென்றும், அது பெருவழிச் செய்யப்படாமையிற் செய்தற்கரியவென்றுங் கூறினர். இதனாற் காலம் வர்துழி விரைந்து செய்கவென்பது கூறப்பட்டது. (க)

சகூ0. கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து. க0.

இ - ள். கூம்பும் பருவத்துக் கொக்கு ஒக்க - வினைமேற் செல்லாதிருக்குங் காலத்துக் கொக்கிருக்குமாறுபோல இருக்க,—மற்றுச் சீர்த்த இடத்து அதன்குத்து ஒக்க - மற்றைச் செல்லுங் காலம் வாய்த்தவழி அது செய்து முடிக்குமாறுபோலத் தப்பாமற் செய்துமுடிக்க. எ - று.

மீன்கோடற்கிருக்கும்வழி அது வர்தெய்துத்துணையும் முன்னறிந்து தப்பாமற் பொருட்டு உயிரில்லதுபோன்றிருக்குமாகலானும், எய்தியவழிப் பின் றப்புவதற்கு முன்பே விரைந்து குத்துமாகலானும், இருப்பிற்குஞ் செயலிற்குங் கொக்கு உவமை

யாயிற்று. கொக்கொக்கவென்றாயினும் அது கூம்புமாறுபோலக் கூம்புகவென்றும், குத்தொக்க வென்றாயினும் அது குத்துமாறுபோலக் குத்துகவென்று முரைக்கப் படும், இது தொழிலுவமமாகலின். உவமைமுகத்தால் இருப்பிற்குஞ் செயலிற்கும் இலக்கணங் கூறியவாறாயிற்று. (கo)

நிம் அதி.—இடனறிதல்.

அஃதாவது வலியுங் காலமுமறிந்து பகைமேற் செல்வான் தான் வெல்லுதற் கேற்ற நிலத்தினியறிதல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

சகூக. தொடங்கற்க வெவ்வினையு மெள்ளற்க முற்று
மிடங்கண்ட பின்னல் லது. க.

இ - ள். முற்றும் இடம் கண்டபின்னல்லது - பகைவரை முற்றுதற்காவதோ ரிடம் பெற்றபின்னல்லது—எவ்வினையும் தொடங்கற்க - அவர்மாட்டு யாதொரு வினையையுந் தொடங்காதொழிக,—எள்ளற்க - அவரைச சிறியரென்றிகழாதொ ழிக. எ - று.

முற்றுதல் வளைத்தல். அதற்காமிடமாவது வாயில்களானும் தாழைகளானும் அவர் புகலொடு போகுகொழியுமவகை அரணினைச் சூழ்ந்து ஒன்றற்கொன்று தூண யாய்த் தம்முணலிலாத பலபலடையிருப்பிறகும மற்றும் அகழுமுதலிய வாணசெய் யப்பட்ட அரசிருப்பிறகு மேறற நிலகஙடகளையும் நீருமுடையது. அது பெறறால் இரண்டுஞ்செய்கவென்பதாம். (க)

சகூஉ. முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கு மரண்சேர்ந்தா
மாக்கம் பலவுந் தரும. உ.

இ - ள். முரண் சேர்ந்த மொய்ம்பினவர்க்கும் - மாறுபாட்டோடு கூடிய வலி யினையுடையார்க்கும—அரண் சேர்ந்து ஆம் ஆக்கம் பலவும் தரும் - அரணைச்சேர்ந்தா ரின்றவாக்கம் பலபயன்களையுங்கொடுக்கும். எ - று.

மாறுபாடாவது ஞர்லம் பொதுவெனப் பொருவரசர் மனத்தின்கணிகழ்வதாக லானும், வலியுடைமை கூறியவதனானும், இது பகைமேறசென்றவரசர் மேறறாயிறது. உம்மை சிறப்பும்மை. அரண்சேராதாமாக்கமுமுண்மையின், ஈண்டாக்கம் விசேடிக் கப்பட்டது. ஆக்கமென்றது அதற்கேதுவாய முற்றினை. அது கொடுக்கும் பயன்களா வன பகைவராற்றமக்கு நலிவினமையும், தாம் நிலைபெற்று தினறு அவரை நலிதலும் முதலாயின. (உ)

சகூங. ஆற்றாரு மாற்றி யடுப விடனறிந்து
போற்றார்கட் போற்றிச் செயின். ங.

இ - ள். ஆற்றாரும் ஆற்றி அடுப - வலியரல்லாதாரும் வலியராய் வெல்வர்,— இடன் அறிந்து போற்றிப் போற்றார்கண் செயின் - அதற்கேற்றவிடத்தினையறிந்து தம்மைக் காத்துப் பகைவர்மாட்டு வினை செய்வராயின். எ - று.

வினையென்பதனாலும் தம்மையென்பதனாலும் அவாய்நிலையான் வந்தன. காத்தல் பகைவரான் நலிவு வாராமல் அரணினும் படையானும் காத்தல். இவ்வாற்றான்வினை செய்வராயின் மேற்சொல்லிய வலியின்றியும் வெல்வரென்பதாம். (ங)

சகச. எண்ணியா ரெண்ண மிழப்ப ரிடனறிந்து
தன்னியார் தன்னிச் செயின். ச.

இ - ள். இடன் அறிந்து தன்னியார் - தாம் வினைசெய்தற் கேற்றவிடத்தினை யறிந்து சென்ற வரசர்—தன்னிச் செயின் - அரணைப் பொருந்தி நின்று அதனைச் செய்வராயின்,—எண்ணியார் எண்ணம் இழப்பர் - அவரை| வெல்வதாகவெண்ணி யிருந்த பகைவர் அவ்வெண்ணத்தினை யிழப்பர். எ - று.

அரணென்பது அவாய்நிலையான் வந்தது. எண்ணமென்றது எண்ணப்பட்ட தம் வெற்றியை. அதனையிழப்பரென்றார், அவர் வினை செய்யாமற் றம்மைக்காத்தமையின். இதனால் அவர் பகைவர் தோற்பரென்பதாயிற்று. இவை நான்குபாட்டானும் பகை வரரணின் புறத்திருப்பார் அதற்காமிடமறிதல் கூறப்பட்டது. (ச)

சகரு. நெடும்புனலுள் வெல்லு முதலை யடும்புனலி
னீங்கி னதனைப் பிற. ஞ.

இ - ள். முதலை நெடும்புனலுள் (பிற) வெல்லும் - முதலை ஆழமுடைய நீரின்க ணுயிற் பிறவற்றையெல்லாந் தான் வெல்லாநிற்கும்,—புனலின் நீங்கின் அதனைப் பிற அம் - அப்புனலினீங்குமாயின் அதனைப் பிறவெல்லாம் வெல்லாநிற்கும். எ - று.

எனவே, எல்லாருந் தங்கிலத்து வலியரென்பது கூறப்பட்டது. பிறவென்பது முன்னுங் கூட்டப்பட்டது. நிலைபடா நீரின்கட் பிறவெல்லாம் நிறலாற்றுமையின் அவையெல்லாம் முதலைக்கெளியவாம் அவையியங்குதற்குரிய நிலத்தின்கண் அஃ தியங்கலாற்றுமையின் அஃதவற்றிற்கெல்லா மெளிதாமென்றது, மேற்செல்லும் அர சர் பகைவர் நிற்றலாற்றுவிடனறிந்து செல்வராயின் அவர் தமக்கெளியராவரன்றித் தாநிற்கலாற்றுவிடத்துச்செல்வராயின் அவர்க்கெளியராவரென்னும் பொருடோன்ற நின்றமையின், இது பிறிதுமொழிதலென்னுமலங்காரம். அவரை அவர் நிற்றலாற்று விடத்துச் சென்று வெல்க வென்பதாம். (ஞ)

சகஎ. கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடு
நாவாயு மோடா நிலத்து. கூ.

இ - ள். கால் வல் நெடுந்தேர் கடல் ஓடா - நிலத்தின்கணுடைய கால் வலிய நெடிய தேர்கள் கடலின்கணோடமாட்டா,—கடல் ஓடும் நாவாயும் நிலத்து ஓடா - இனி அக்கடலின்கணோடும் நாவாய்கடாமும் நிலத்தின்கணோடமாட்டா. எ - று.

கடலோடாவென்ற மறுதலையடையான் நிலத்தோடு மென்பது வருவிக்கப்பட்டது. கால்வனெடுந்தேரென்பது ஓடுதற்கேற்ற காலும் பெருமையுமுடையவாயினு மென்பதுபட நின்றது. மேற்சொன்னார் பகைவரிடங்களே யறிந்து அவற்றிற்கேற்ற கருவிகளான் வினைசெய்கவென்பது தோன்றநின்றமையின், இதுவும் மேலையலங் காரமாயிற்று. (கூ)

சகஅ. அஞ்சாமை யல்லாற் றுணைவேண்டா வேஞ்சாமை
யெண்ணி யிடத்தாற் செயின். எ.

இ - ள். எஞ்சாமை எண்ணி இடத்தான் செயின் - பகையிடத்து வினைசெய்யுந் நிறங்களேயெல்லாம் ஒழியாதென்ணி அவற்றை அரசர் இடத்தொடு பொருந்தச் செய் வராயின்,—அஞ்சாமை அல்லால் துணை வேண்டா - அச்செயற்குத் தன்றிண்மையல் லது பிறிதொரு துணை வேண்டுவதில்லை. எ - று.

நிண்ணியராய் நின்று செய்து முடித்தலே வேண்டுதலன்றி தானேவேண்டா வென்னும், அவ்வினை தவறுதற்கேதுவின்மையின். இவை மூன்றுபாட்டானும் வினை செய்தற்காமிடனறிதல் கூறப்பட்டது. (எ)

சகூஅ. சிறுபடையான் செல்லிடஞ் சேரி னுறுபடையா
னூக்க மழிந்து விடும். அ.

இ - ள். உறுபடையான் - பெரும்படையுடையவரசன்—சிறு படையான் செல் லிடம் சேரின் - வினைச்சிறுபடையுடையானே யழித்தல் கருதி அவன் புகலிச் சென்று சாருமாயின்,—ஊக்கம் அழிந்துவிடும் - அவனுற் றன்பெருமை யழியும். எ - று.

செல்லிடம் அவனுக்குச் செல்லுமிடம். அழிந்துவிடுமென்பது எழுந்திருக்கு மென்றுந்போல ஒருசொல். ஊக்கத்தினழிவு உடையான்மேலேற்றப்பட்டது. தன் படைப்பெருமை நோக்கி இடனுக்காதுசெல்வனாயின்,அஃது அப்படைக் கொருக்கு சென்று வினைசெயலாகாமையானுக அயிற்சியின்மையானுக அப்பெருமையாற் பய னின்றித் தானழிந்துவிடுமென்பதாம். (அ)

சகூக. சிறைநலனுஞ் சீரு மிலரெனினு மாந்த
ருறைநிலத்தோ டொட்ட லரிது. க.

இ - ள். சிறை நலனும் சீரும் இலர் எனினும் - அரணழித்தற்கருமையும் பெரு பயனாகிய வாற்றலுமுடையரல்லராயினும்,—மாந்தர் உறை நிலத்தோடு ஒட்டல் அரிது - வினைக்குரிய மாந்தரை அவருறைகின்ற நிலத்தின்கட்சென்று தாக்குத லரிது. எ - று.

நிலத்தோடென்பது வேற்றுமை மயக்கம். ஆண்மையுடையாரைச் சிறுமை நோக்கி இருப்பின்கட் சென்று தாக்கின் அவர் அதுவிட்டுப்போதற் றுணிவினராண்மைச் சாதற்றுணிவினராவர்; ஆகவே, அவர்க்குப் பெரும்படையுடையுமென்பதாம். (க)

ஙூ00. காலஞ்ச னாரி னரிபடுங் கண்ணஞ்சா
வேலாண் முகத்த களிறு. கூ0.

இ - ள். கண் அஞ்சா வேலாள் முகத்த களிறு - பாகர்க்கடங்காவுமாய் வேலாட் களைக் கோத்த கோட்டவுமாய களிறுகளே—கால் ஆழ் களரின் நரி அடும் - அவை காலாழுமியல்பிற்றாய சேறுறுநிலத்துப்பட்டிழி நரி கொல்லும். எ - று.

முகம் ஆருயெர். ஆண்மையும் பெருமையுமுடையாரும் தமக்கேலாநிலத்துச் செல்வின் அவற்றாற் பயனின்றி மிகவுமெளியராய் அழிவரென்பது தோன்ற நின்ற மையின், இதுவும் அவ்வலங்காரம். வேலாழ் முகத்தவென்று பாடமோதுவாருமுளர்: வேற்படை குவித்த முகத்தவாயின் அதுவும் நரியுதற்கேதுவாய் முடிதலின், அது பாடமன்மையறிக. இவை மூன்று பாட்டானும் பகைவரைச் சார்தலாகாவிடனும் சார்ந்தழிப் படியிழுக்குங் கூறப்பட்டன. (கூ)

நிகம் அதி.—தெரிந்துதெளிதல்.

அஃதாவது அமைச்சர் முதலாயினுரைப் பிறப்புக் குணம் அறிவென்பனவற் றானுஞ் செயலானுங் காட்சி கருத்து ஆகமமென்னும் அளவைகளானுராய்ந்து தெளி தல். வலிமுதன் மூன்று மறிந்து பகைமேற்செல்வானுக்குத்தானே வினையுற்றுச் செய்

தற்பொருட்டும் அறைபோகாமற்பொருட்டும் இது வேண்டுதலின், அவற்றின்பின் வைக்கப்பட்டது.

(௫௩. அறம்பொரு ளின்ப முயிரச்ச நான்கின்
றிறந்தெரிந்து தேறப் படும். க.

இ - ள். அறம் பொருள் இன்பம் உயிரச்சம் - அரசனுற்றெளியப்படுவானெரு வன், அறமும் பொருளும் இன்பமும் உயிர்ப்பொருட்டான்வரும் அச்சமுமென்னும்— நான்கின நிறம் தெரிந்து தேறப்படும் - உபதை * நான்கின்றிறத்தான் மனவியல் பாராய்ந்தால் பின்பு தெளியப்படும். எ - று.

அவற்றுள், அறவுபதையாவது புரோகிதரையும் அறவோரையும் விட்டு, அவரால் இவ்வரசன் அறவோனண்மையின் இவனைப் போக்கி அறனுமுரிமையு முடையானெரு வனே வைத்தற்கெண்ணினம் இதுதான் யாவர்க்குமியைந்தது நின்கருத்தென்னே யெனச சூளுறவோடி சொல்லுவித்தல். பொருளுபதையாவது சேனைத்தலைவனையும் அவனடியாளரையும் விட்டு, அவரான் இவ்வரசன் இவறன் மாலையனகலின் இவ னைப பீறக்கிக் கொடையுமுரிமையு முடையானெருவனைவத்தறகெண்ணினம்இது தான் யாவர்க்கு மியைந்தது நின்கருத்தென்னேயெனச சூளுறவோடிசொல்லுவித்தல். இன்பவுபதையாவது தொன்றுதொட்டி†உரிமையோடு பயின்றவளொரு தவமுது மகளைவிட்டி, அவளால் உரிமையுள் இன்னுள் நின்னைக்கண்டி வருத்தமுற்றுக் கூட்டி விக்கவேண்டுமென்று என்னை விடுத்தாள் அவளைக் கூடுவையாயின் நினகுப் பேரின்ப மேயன்றிப் பெருமபொருளும் கைகூடுமெனச் சூளுறவோடி சொல்லுவித்தல். அச்ச வுபதையாவது ஒருநிமித்தத்தின்மேலிட்டி ஓரமைசசனுல் ஏனையோரை அவனில்லின் கணழைப்பித்து,இவர் அறைபோவானெணணறகுக் குழீஇயினுளென்று தான் காவல் செய்து, ஒருவனுல் இவ்வரசன் நம்மைக் கொல்வான் சூழகின்றமையின் அதனை நாம் முற்படசசெயது நமகினியவரசனெருவனை வைத்தல் ஈண்டை யாவர்க்கு மியைந் தது நின்கருத்தென்னேயெனச் சூளுறவோடி சொல்லுவித்தல்.இந்நான்கினுந் திரிபில னையவழி எதிர்காலத்துந் திரிபிலனெனக் கருத்தளவையாற் றெளியப்படுமென்பதாம். இவவடநூற்பொருணமை‡யையுட்கொண்டு இவரோதியதறியாது பிறரெலலாம் ஓதினை உயிரெச்சமெனப் பாடந்திரித்துத் தத்தமக்குத் தோன்றியவாறெயுரைத்தார்.

(௫௨. குடிப்பிறந்து குற்றத்தி னீங்கி வடுப்பரியு
நாணுடையான கட்டே தெளிவு. உ.

இ - ள். குடிப் பிறந்து - உயர்ந்த குடியிற் பிறந்து—குற்றத்தின் நீங்கி - குற்றங் களினின்று நீங்கி—வடுப பரியும் நாண உடையான் கட்டே தெளிவு - நமகு வடு வருவகொலென் றஞ்சாநின்றும் நாணுடையவன கண்ணதே அரசனது தெளிவு. எ-று.

குற்றங்களாவன மேலரசனுக்குச் சொல்லியவகையாறும்), மடி மறப்பு, பிழைப் பென்றிவைமுதலாயவுமாம. நாண இழிதொழில்களின் மனஞசெல்லாமை. இவை பெரும்பான்மையும் தக்கோர்வாய்க் கேட்டலாகிய ஆகமவளவையாற்றெரிவன. இர் நான்குமுடையவனேயே தெளிகவென்பதாம. (உ)

(௫௩. அரியகற் றூசற்றூர் கண்ணுங் தெரியுங்கா
லின்மை யரிதே வெளிறு. கூ.

---

*உபதை—சோதனை. † உரிமை - அரசன்மனைவியர்.

‡ இவ்வுபதை நான்கும் சாணக்கியர் அர்த்தசாஸ்திரம் முதற்பகுதி கo-ம் அத்தியாயத்திற் கூறப்பட்டுள்ளன. § சூது-சூதாடப் பயன்படுத்தும் காய்கள்.

இ - ள். அரிய கற்று ஆசு அற்றார் கண்ணும் - கற்றற்கரிய நூல்களைக் கற்றுமேற் சொல்லிய குற்றங்களற்றார்மாட்டும் —தெரியுங்கால் வெளிறு இன்மை அரிது - தண்ணிதாகவாராயுமிடத்து வெண்மையில்லாமை அரிது. எ - று.

வெண்மை அறியாமை; அஃது இவர்மாட்டேதாவது மனத்தது நிலையாமையான் ஒரோவழியாகலின், தெரியுங்காலென்றார். காட்சியளவையாற்றெரிந்தால் அதுவுமில் லாதாரே தெளியப்படுவரென்பது குறிப்பெச்சம். இவ்வளவைகளான் இக்குணமும் குற்றமுந்தெரிந்து குணமுடையாரைத் தெளிகவென்பது இவை மூன்றுபாட்டானும் கூறப்பட்டது. (கூ)

நிஅ. குணநாடிக் குற்றமு நாடி யவற்றுண்
மிகைநாடி மிக்க கொளல். ச.

இ - ள். குணம் நாடி - குணங்குற்றங்களுள் ஒன்றேயுடையார் உலகத்தினியல்பின் ஒருவன் குணங்களேயாராய்ந்து,—குற்றமும் நாடி - ஏனைக்குற்றங்களேயுமாராய்ந்து,—அவற்றுள் மிகை நாடி - பின் அவ்விரு பகுதியுள்ளு மிக்கவற்றையாராய்ந்து,—மிக்க கொளல் - அவனை அம்மிக்கவற்றானேயறிக. எ - று.

மிகையுடையவற்றை மிகையென்றார். அவையாவன தலைமையாலுகை பன்மையாலுக உயர்ந்தன. அவற்றானறிதலாவது குணமிக்கதாயின் வினைக்குரியனென்றும், குற்றமிக்கதாயின் அல்லனென்றுமறிதல். குணமேயுடையார் உலகத்தரியராகலின், இவ்வகை யாவரையுந் தெளிகவென்பது இதனாற் கூறப்பட்டது. (ச)

நிஆ. பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல். ஞ.

இ - ள். பெருமைக்கும் ஏனைச்சிறுமைக்கும் கட்டளைக்கல் - பிறப்புக் குணம் அறிவென்பனவற்றான் மக்களெய்தும் பெருமைக்கும் மற்றைச்சிறுமைக்கும் உரைகல்லாவது—தத்தம் கருமமே - தாந்தாஞ்செய்யுங்கருமமே, பிறிதில்லை. எ - று.

இஃதேகதேசவுருவகம். மக்களது பெருமையுஞ் சிறுமையுந் தப்பாமலறியலுறுவார்க்குப் பிற கருவிகளுமுளவாயினும்,முடிந்தகருவி செயலென்பது தேற்றேகாரத்தாற் பெற்றும். இதனாற் குணங் குற்றங்கள் நாடற்குக் கருவி கூறப்பட்டது. (ஞ)

நிஇ. அற்றாரைத் தேறுத லோம்புக மற்றவர்
பற்றிலர் நாணர் பழி. ங.

இ - ள். அற்றாரைத் தேறுதல் ஓம்புக - சுற்றமில்லாரைத் தெளிதலேயொழிக;—அவர் மற்றப் பற்று இலர் - அவர் உலகத்தோடு தொடர்பிலர்,—பழிநாணர் - ஆகலாற் பழிக்கஞ்சார். எ - று.

பற்றிலரென்பதனால் சுற்றமென்பது வருவிக்கப்பட்டது. உலகத்தார் பழிப்பன வொழிதற்கும் புகழ்வன செய்தற்குமேதுவாகிய உலகதடையியல்பு சுற்றமில்லாதார்க்கு இன்மையின், அவர் தெளியப்படாரென்பதாம். (ஈ)

நிஈ. காதன்மை கந்தா வறிவறியார்த் தேறுதல்
பேதைமை யெல்லாந் தரும். ஏ.

இ - ள். காதன்மை கந்தா அறிவு அறியார்த் தேறுதல் - அன்புடைமை பற்றுக்கோடாகத் தமக்கறியவேண்டுவன அறியாதாரைத் தெளிதல்—பேதைமை எல்லாம் தரும் - அரசனுக்கு எல்லாவறியாமையையும் கொடுக்கும். எ - று.

தன்னெஞ்சே அவரிடைநின்ற அன்புபற்றி அரசன் அறிவினார்மேல் வினையை வைப்பின், அஃது அவரறிவின்மையாற் கெடும்; கேட்டால் அவர்க்குதேயன்றி வினைக்குரியாரை அறியாமை, மேல்வினைவகுரியாமை முதலாக அவனுக்கு அறியாமை பலவுமுளவாமென்பதாம். (எ)

(இ)அ தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும். அ.

இ - ள். பிறனைத் தேரான் தெளிந்தான் - தன்னெடியைபுடையனல்லாதானைப் பிறப்புமுதலியவற்றானும் செயலானும் ஆராயாது தெளிந்த அரசனுக்கு—வழிமுறை தீரா இடும்பை தரும் - அத்தெளிவு தன் வழிமுறையினும் நீங்காத துன்பத்தைக் கொடுக்கும். எ - று.

இயைபு தன் குடியொடு தொடர்ந்தமரபு இதனானே அதுவும் வேண்டுமென்பது பெறப்படும். தெளிதல் அவன்கண்ணே வினையை வைத்தல். அவ்வினை கெடுதலால் தன் குலத்திற் பிறந்தாரும் பகைவர்கைப்பட்டுக் கீழாய் விடுவரென்பதாம். நான்கனுருபு விகாரத்தாற்றொக்கது. (அ)

(இ)கூ. தேறற்க யாரையும் தேராது தேர்ந்தபிற்
றேறுக தேறும் பொருள். கூ.

இ - ள். யாரையும் தேராது தேறற்க - யாவரையும் ஆராயாது தெளியாதொழிக;—தேர்ந்தபின் தேறும் பொருள் தேறுக - ஆராய்ந்தபின் தெளியும்பொருட்களை ஐயுறுதொழிக. எ - று.

தேறற்கவென்ற பொதுமையான் ஒருவினைக்கண்ணும் தெளியலாகாதென்பது பெற்றும். ஈண்டுத் தேறுகவென்றது தாற்பரியத்தால் ஐயுறவினது விலக்கின் மேனின்றது. தேறும்பொருளென்றது அவரவராற்றற்கேற்ற வினைகளை. பொருள் ஆகுபெயர். (கூ)

(இ)கo. தேரான் தெளிவும் தெளிந்தான்க ணையுறவும்
தீரா விடும்பை தரும். கo.

இ - ள். தேரான் தெளிவும் - அரசன் ஒருவனையாராயாது தெளிதலும்—தெளிந்தான்கண் ஐயுறவும் - ஆராய்ந்து தெளிந்தவன்மாட்டு ஐயப்படுதலும் இவ்விரண்டும்—தீரா இடும்பை தரும் - அவனுக்கு நீங்காத துன்பத்தைக்கொடுக்கும். எ - று.

வினைவைத்தபின் ஒருதவறு காணுதலைத்து ஐயுறுமாயின், அதனை அவனறிந்து இனி இது நில்லாதென்னுங்கருத்தான் அவ்வினையை நெகிழ்த்துவிடும், அதுவேயன்றிப்பகைவரால் எளிதிற் பிரிக்கவும்படும், ஆகலாற் றெளிந்தான்கண் ஐயுறவுமாகாதாயிற்று. தெளிவிற்கெல்லை கூறியவாறு. இவையைந்துபாட்டானும், தெளியப்படாதார் இவரென்பதனையும், அவரைத் தெளிந்தாற்படுமிழுக்கும், தெளிவிற்கெல்லையும் கூறப்பட்டன. (கo)

நெடு அதி.—தெரிந்துவினையாடல்.

அஃதாவது அத்தெளியப்பட்டாரை அவர் செய்யுமல்ல வினைகளைபதிந்து அவற்றின்கண்ணேயாளுந்திறம். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

நடுக. நன்மையுந் தீமையு நாடி நலம்புரிந்த
தன்மையா னைப் படும். க.

இ - ன். நன்மையும் தீமையும் நாடி - அரசன் முதற்கண் ஒருவினையைத் தன் கண்வைத்தால், அதன்கணவனவும் ஆகாதனவுமாய செயல்களையாராய்ந்தறிந்து—நலம் புரிந்த தன்மையான் - அவற்றுள் ஆவனவற்றையே விரும்பிய வியல்பினையுடையான்—ஆளப்படும் - பின் அவனுற் சிறந்த வினைகளிலேயாளப்படும். எ - று.

தன்னையுரிமையறிதற்பொருட்டு அகம்புறங்கட்கு நடுவாயதோர் வினையை அரசன்றன்கண்வைத்தவழி அதன்கண் ஆஞ்செயல்களேயேசெய்தவன்பின்னும்அவ்வியல் பினனதல்பற்றி அகமாய வினைக்கண்ணேயாளப்படுவனென்பதாயிற்று.புரிந்தவென்ற இறந்தகாலத்தான், முன்னுரிமையறிதற்பொருட்டு வைத்த வினையாதல் பெற்றும்.(க)

நடுஉ. வாரி பெருக்கி வளம்படுத் தூற்றவை
யாராய்வான் செய்க வினை. உ.

இ - ள். வாரி பெருக்கி - பொருள்வருவாயில்களை விரியச்செய்து—வளம் படுத்து - அப்பொருளாற் செல்வங்களை வளர்த்து—உற்றவை ஆராய்வான் - அவ்வாயில்கட்கும் பொருட்குஞ் செல்வங்கட்கு முற்ற இடையூறுகளை நாடோறுமாராய்ந்து நீக்கவல்லவன்—வினை செய்க - அரசனுக்கு வினைசெய்க. எ - று.

வாயில்களாவன மேல் இறைமாட்சியுள் "இயற்றலும்*" என்புழி யுரைத்தனவும் உழவு, பசுக்காவல், வாணிகமென்னும் வார்த்தையுமாம். செல்வங்களாவன ஆண்டுப் பொருளுயின்பமுமாக உரைக்கப்பட்டன. இடையூறுகளாவன அரசன் வினை செய்வார், சுற்றத்தார், பகைவர், கள்வரென்றிவரான் வரு நலிவுகள். (உ)

நடுஊ. அன்பறிவு தேற்ற மவாவின்மை யிந்நான்கு
நன்குடையான் கட்டே தெளிவு. ஊ.

இ - ள். அன்பு - அரசன்மாட்டன்பும்—அறிவு - அவனுக்காவனவறியுமறிவும்—தேற்றம் - அவைசெய்தற்கட் கலங்காமையும்—அவாவின்மை - அவற்றுற் பொருள் கையுற்றவழி அதன்மேலவாவின்மையுமாகிய—இந்நான்கும் நன்கு உடையான்கட்டே தெளிவு - இந்நான்கு குணங்களையும் நிலைபெறவுடையான் மேலதே வினையை விட்டிருக்குந் தெளிவு. எ - று.

இந்நான்கு நன்குடைமை இவன் செய்கின்ற வினைக்கண் யாதுமாராயவேண்டுவ தில்லையென்று அரசன்றெளிதற்கேதுவாகலின், அவனே அதன் பிறப்பிடனுக்கிக்கூறினார். இவை மூன்றுபாட்டானும் ஆட்சுரியானதிலக்கணங் கூறப்பட்டது. (ஊ)

நடுஎ. எனைவகையாற் றேறியக் கண்ணும் வினைவகையான்
வேறுரு மாந்தர் பலர். எ.

இ - ள். எனைவகையான் தேறியக்கண்ணும் - எல்லாவகையானுமாராய்ந்து தெளிந்து வினை வைத்தபின்னும்—வினைவகையான் வேறுரும் மாந்தர் பலர் - அவ்வினையினியல்பானே வேறுபடுமாந்தர் உலகத்துப் பலர். எ - று.

---

* திருக்குறள், உஅடி. † வார்த்தை - வர்த்தி, தொழில்.

கட்டியங்காரன்போல அரசவின்பத்தினை வெஃகி விகாரப்படுவதல்லது அதனைக் குற்றமென்றெழுந்து தம்மியல்பினிற்பார்அரியர்*கவின், வேறுமோர்தார் பலரென்றார். வினை வைப்பதற்குமுன் எல்லாக்குணங்களுமுடையராய்வைத்தபின் விகாரப்படுவாரை இடையாயதோருவினையை வைத்தறிந்து ஒழிக்கவென்பதாம். இதனுள் ஒருவஃகியாலொழிக்கப்படுவார் இவரென்பது கூறப்பட்டது. (ச)

இருவரு. அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்
சிறந்தானென் றேவற்பாற் றன்று. இ.

இ - ள். அறிந்து ஆற்றிச் செய்கிற்பார்க்கு அல்லால்-செய்யுமுபாயங்களையறிந்து செயலானும் இடையூறுகளானும் வருந்தின்பங்களைப்பொறுத்து முடிவுசெய்யவல்லானையல்லது—வினைதான் சிறந்தான் என்று ஏவற்பாற்றன்று - வினைதான் இவன் நமக்காட்டு அன்புடையனென்று பிறனொருவனையேவுமியல்புடைத்தன்று. எ - று.

செய்கிற்பார்க்கென்பது வேற்றுமைமயக்கம். அறிவாற்றல்களானல்லது அன்பான் முடியாதென இதனுள் வினையினதியல்பு கூறப்பட்டது. (இ

இருகரு. செய்வானே நாடி வினைநாடிக் காலத்தோ
டெய்த வுணர்ந்து செயல். கூ.

இ - ள். செய்வானை நாடி - முதற்கண்ணே செய்வான திலக்கணத்தை ஆராய்ந்து,—வினை நாடி - பின் செய்யப்படும் வினையினதியல்பை யாராய்ந்து;—காலத்தோடு எய்த உணர்ந்து செயல் - பின் அவனையும் அதனையுங் காலத்தோடு படுத்து நீர்போருந்தவிரிந்து அவனை அதன்கண் ஆடலேச்செய்க. எ - று.

செய்வானதிலக்கணமும் வினையினதியல்பும் மேலே கூறப்பட்டன. காலத்தோடெய்தவுணர்தலாவது இக்காலத்து இவ்விலக்கணமுடையான் செய்யின் இவ்வினை பிற்றையினை முடியுமென்று கூட்டியுணர்தல். (

இருகள. இதனை யிதனை யிவன்முடிக்கு மென்றாய்ந்
ததனை யவன்கண் விடல். எ.

இ - ள். இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து - இவ்வினையை இக்கருவியால் இவன் முடிக்கவல்லனெனக் கூறப்படுத்தாராய்ந்து,—அதனை அவன்கண் விடல் - மூன்றுந் தம்முளியைந்தவழி அவ்வினையை அவன்கண்ணே விடுக. எ

கருவி தானைவரும், பொருளும் முதலாயின. வினைமுதலும் கருவியும் விடுதம்முளியைதலாவது ஒரொன்றோடு ஏனையிரண்டற்கும் பொருத்தமுண்டாதல். அவ்வினையுரியனுக்குதல்.

இருகஅ. வினைக்குரிமை நாடிய பின்றை யவனை
யதற்குரிய ஞாச் செயல் அ.

இ - ள். வினைக்கு உரிமை நாடிய பின்றை-ஒருவனை அரசன் தன்வினைக்குரியனெனவாராய்ந்து தெளிந்தால்,—அவனை அதற்கு உரியனைச்செயல் பின்னை அதற்குரியனுமாறுயர்ச்சசெய்க. எ - று.

* கட்டியங்காரன சிவகசிந்தாமணியிற கூறபபடடிம தாசர்தனைத்தும் அர்ச-
மந்திரி.

உயர்ச்செய்தல்லாவது அதனைத் தானே செய்துமுடிக்குமாற்றலுடையனுக்குதல். அது செய்யார்க்கீழ்ங்கெடுமென்பது கருத்து. (அ)

நிகூ. வினைக்கண் வினையுடையான் கேண்மைவே ரூக
நினைப்பானே நீங்குந் திரு.

இ-ள். வினைக்கண் வினை உடையான்கேண்மை-எப்பொழுதுந் தன்வினையின் கண்ணே முயற்சியுடையான் அவ்வுரிமையாற்றனக்குக் கேளாயொழுகுன்ற தன்மையை—வேரூக நினைப்பானைத் திரு நீங்கும் - அது பொருதார்சொற்கேட்டு அரசன் மாறுபடக் கருதுமாயின், திருமகள அவனைவிட்டு நீங்கும். எ - று.

கேளாயொழுகுன்ற தன்மையாவது தான் பிறனுய் நில்லாது கேளிர்செய்யு முரிமையெல்லாஞ் செய்தொழுகுதல். அவனை அவமதிப்பாகக்கொண்டு செறக்கருதுமாயிற் பின்னொருவருமுட்பட்டு முயல்வாரில்லையாம், ஆகவே, தன்செல்வங்கெடுமென்பது கருத்து. இந்நான்குபாட்டானும் ஆட்சுருதியானையாளுந்திறங் கூறப்பட்டது. (க)

நிகூ. நாடோறு நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு. கo.

இ-ள். வினை செய்வான் கோடாமை உலகு கோடாது - வினைசெய்வான் கோடாதொழிய உலகங் கோடாது;—மன்னன் நாடோறும் நாடுக - ஆதலான் அரசன் அவன்செயலை நாடோறு மாராய்க. எ - று.

அஃதொன்றனையுமாராயவே அதன்வழித்தாய உலகமெல்லா மாராய்ந்தாளும் அதனுல் அவனுரிமை அழியாமற நன்னுல்லே யாராய்ந்து போதுகவென்பதாம். இதனுன் ஆண்டவழிசெய்வது கூறப்பட்டது. (கo)

நிகூடம் அதி.—சுற்றநதழால.

அஃதாவது அரசன் தன்னினீங்காமல் அணைத்தல். வினை செய்வாரைக் கூறி ஏனைசுற்றங்கூறுகின்றுராகலின் இது தெரிந்து வினையாடலின் பின் வைக்கப்பட்டது.

நிகூ. பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றதுதார் கண்ணே யுள. க.

இ-ள். பறறு அற்ற கண்ணும் பழைமை பாராட்டுதல் - ஒருவன் செல்வந் தொலாது வறியனுயவழியும், விடாததம்மோடு அவனிடைப் பழைமையை எடுததுக் கொண்டாடு மியல்புகள—சுறறத்தார்கண்ணே உள - சுற்றத்தார்மாட்டே உளவாவன. எ - று.

செற்பும்மை வறியனுயவழிப் பாராட்டப்படாமை விளக்கி நின்றது. பழைமை பற்றருக்காலத்துத் தமகுசு செய்த உபகாரம். பிறரெல்லாம் அவன் பற்றற்ற பொழுதே தாமும அவனுடு பறறுவராகலின, எகாரந் தேறறத்தினுன்கண வருதது, இதனுல சுறறதது சிறப்புக கூறப்பட்டது. (க)

நிகூ. விருப்பறுச் சுற்ற மிபையி னருப்பறு
வாக்கம் பலவுந் தரும். உ.

இ - ள். விருப்பு அறுச் சுற்றம் இயையின் - அன்பறுத சுற்றம் ஒருவற்கெய்தி மாயின்,—அருப்பு அறு ஆக்கம் பலவும் தரும் - அஃது அவற்குக் கினைத்தலறுத செல்வங்கள் பலவற்றையுங் கொடுக்கும். எ - று.

உட்பகையினீக்குதற்கு விருப்பறுச்சுற்றமென்றும்,தானே வளர்க்குமொருதலையாய செல்வத்தினீக்குதற்கு அருப்பறுவாக்கமென்றும், விசேடித்தார். தொடை நோக்கி விகாரமாயிற்று. இயையினென்பது அதனதருமை விளக்கி நின்றது. ஆக்கமென்பது ஆகுபெயர். பலவுமென்றது அங்கங்களாறனையுநோக்கி. பலர்கூடி வளர்த்தலின், அவை மேன்மேற் கினைக்குமென்பது கருத்து. (உ)

குறள் ரு. அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று. ரு.

இ - ள். அளவளாவு இல்லாதான்வாழ்க்கை-அச்சுற்றத்தோடுநெஞ்சுகலத்தலில்லாதவன் வாழ்க்கை—குள வளாக் கோடு இன்றி நீர் நிறைந்தற்று - குளப்பரப்புக் கரையின்றி நீர்நிறைந்தாற்போலும். எ - று.

சுற்றத்தோடென்பது அதிகாரத்தான் வந்தது. நெஞ்சுகலப்புத் தன்னளவும் அதனளவுமுசாவுதலான் வருவதாகலின், அளவளாவென்பது ஆகுபெயர். வாழ்க்கையென்றதனுடம் அதற்கேதுவாய செல்வங்களே. நிறைதலென்னும் இடத்துநிகழ்பொருளின் ரொழில் இடத்தின்மேனின்றது. சுற்றமில்லாதான் செல்வங்கள் தாங்குவாரின்மையிற் புறத்துப் போமென்பதாம். (ரு)

குறள் சு. சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வத்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன். சு.

இ - ள். செல்வம் பெற்றத்தான் பெற்ற பயன் - செல்வம் பெற்றவதனால் ஒருவன் பெற்ற பயனுவது—சுற்றத்தான் தான் சுற்றப்பட ஒழுகல் - தன்சுற்றத்தால் தான் சூழப்படும்வகை அதனைத் தழீஇ யொழுகுதல். எ - று.

பெற்றவென்பதனுள் அகரமும் அதனுனென்பதனுள் அன்சாரியையும் தொடை நோக்கி விகாரத்தாற் ரொக்கன. இவ்வொழுக்குப் பகையின்றி அரசாடற் கேதுவாகலின், இதனைச் செல்வத்திற்குப் பயனென்ரார். இவைமூன்றுபாட்டானும் சுற்றந்தழால் செல்வத்திற்கேதுவும் அரணும் பயனுமாமென்பது கூறப்பட்டது. (சு)

குறள் ரூ. கொடுத்தலு மின்சொலு மாற்றி யடுக்கிய
சுற்றத்தாற் சுற்றப் படும். ரூ.

இ - ள். கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின்-ஒருவன் சுற்றத்திற்குவேண்டுவன கொடுத்தலையும் இன்சொற்சொல்லுதலையும் வல்லனுயின்,—அடுக்கிய சுற்றத்தான் சுற்றப்படும் - தம்மிற்ரொடர்ந்த பலவகைச் சுற்றத்தானே சூழப்படும். எ - று.

இரண்டும் அளவறிந்தாற்றுதலறிதென்பதுதோன்ற, ஆற்றினென்ரார். தம்மிற் ரொடர்தலாவது சுற்றத்தது சுற்றமும் அதனது சுற்றமுமாய் அவற்ரிற் பிணிப்புண்டு வருதல். இவ்வுபாயங்களே வடனூலார் தானமுஞ் சாமமுமென்ப. (ரூ)

குறள் ரூ. பெருங்கொடையான் பேணுன் வெகுளி யவனின்
மருங்குடையார் மாநிலத் தில். ரூ.

இ - ள். பெருங்கொடையான் வெகுளி பேணுன் - ஒருவன்பிக்க கொடைகூய புடையனுமாய் வெகுளியை விரும்பானுமாயின்,—அவனின் மருங்கு உடையார் மாலிலத்து இல் - அவன்போலக் கினேயுடையார் இவ்வுலகத்தில்லே. எ - று.

மிக்ககொடை ஒன்ருனும் வறுமையெய்தாமற் கொடுத்தல். விரும்பாமைஇஃதாசற்கு வேண்டுவதொன்றென்று அளவிறந்து செய்யாமை. (கூ)

திருஉ. காக்கை கரவா கரைந்துண்ணு மாக்கழு
மன்னரீ ரார்க்கே யுள. எ.

இ - ள். காக்கை கரவா கரைந்து உண்ணும்-காக்கைகள் தமக்கிரையாயினகண்டவழி மறையாது இனத்தையழைத்து அதனேடுங்கூடவுண்ணுநிற்கும்;—ஆக்கமும் அன்ன நீரார்க்கே உள-சுற்றத்தானெய்தும் ஆக்கங்களும் அப்பெற்றித்தாய இயல்பினேயுடையார்க்கே உளவாவன. எ - று.

அவ்வாக்கங்களாவன பகையின்மையும், பெருஞ்செல்வமுடைமையும் முதலாயின. எச்சவும்மையான் அறமுமின்பமுமேயன்றிப் பொருளுமெய்துமென்பது பெறுதும். அப்பெற்றித்தாயவியல்பென்றது தாம் நுகர்வனவெல்லாம் அவரும் நுகருமாறு வைத்தல். (எ)

திருஉ. பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கி
னதுநோக்கி வாழ்வார் பலர். அ.

இ - ள். பொது நோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின் - எல்லாரையும் ஒருதன்மையாக நோக்காது அரசன் தத்தந்தகுதிக்கேற்ப நோக்குமாயின்,—அது நோக்கி வாழ்வார் பலர் - அச்சிறப்புநோக்கி அவனேவிடாது வாழுஞ்சுற்றத்தார் பலர். எ - று.

உயர்ந்தார் நீங்குதலேநோக்கிப் பொதுநோக்கை விலக்கி, எல்லாரும் விடாதொழுகுதலேநோக்கி வரிசைநோக்கை விதித்தார். இந்நான்குபாட்டானுஞ் சுற்றந்தழுவுமுபாயங் கூறப்பட்டது. (அ)

திருஉ. தமராகித் தற்றுறந்தார் சுற்ற மமராமைக்
காரண மின்றி வரும். கூ.

இ - ள். தமராகித் தற்றுறந்தார் சுற்றம் - முன்றமராய்வைத்துத் தன்னேடு அமராது யாதானுமொரு காரணத்தாற்றன்னேப் பிரிந்துபோயவர் பின்னும்வந்துசுற்றமாதல்—அமராமைக் காரணம் இன்றி வரும் - அவ்வமராமைக்காரணம் தன்மாட்டில்லேயாகத் தானேயுளதாம். எ - று.

அமராமைக் காரணமின்றியென்றதனுன், முன் அஃதுண்டாய்த் துறத்தல் பெற்றும்:அஃதாவது அரசன்றுனெறிகெடவொழுகல் வெறுப்பனசெய்தலென்றிவைமுதலியவற்ருன் வருவது. ஆக்கம் வருவிக்கப்பட்டது. இயற்கையாகவே அன்புடையராய சுற்றத்தார்க்குச் செயற்கையான் வந்த நீக்கம் அதனேயொழிய ஒழியும், ஒழித்தால் அவர்க்கன்புசெய்துகொள்ளவேண்டா, பழையவியல்பாய் நிற்குமென்பார், வருமென்ருர். (கூ)

திருஉ. உழைப்பிரிந்து காரணத்தின் வந்தாணே வேந்த
னிழைத்திருந் தெண்ணிக் கொளல். கo.

இ-ள். உலகம் பிரிந்து காரணத்தின் பிரிதானை-காரணமின்றிப் தன்னிடத்து நின்றும் பிரிந்துபோய்ப் பின் காரணத்தாலன்றி சுற்றத்தானை—வேற்றன்மையுள்ளது இருந்து எண்ணிக் கொள்ள - அரசன் அக்காரணத்தினைச் செய்துணர்ந்து ஆராய்ந்து தெளிந்துகொள்க. எ - று.

வாளா உழைப்பிரிந்தென்றிம்மின், பிரிந்தற்குக் காரணமின்மையுமுரைத்தார்: வருந் தற்காரணத்தைச் செய்யாதவழிப் பின்னும் பிரிந்துபோய்ப் பகையோடுகூடுமாகலின் இழைத்திருந்தென்றும், அன்பின்றிப் போயிப் பின்னுங்காரணத்தான் வந்தமையின் எண்ணிக்கொளவென்றுங்கூறினார்.பிரிந்துபோய சுற்றத்தாருள் தீங்குசெய்யப்போய் அறனெனொழிய வருவானும் அது செய்யாமற்போய்ப் பின் கண்மை செய்ய வருவானும் தழுவப்படுமாகலின், தருமுமாறு முணரவே இவ்விரண்டுபோட்டானுங் கூறப்பட்டது. (எ)

நிரம்பாதது இடைச்சாவாமை.

அரசனாலே உருவும் திருவும் ஆற்றலும் முதலியவற்றுள் மிகுந்து தன்னோடு ஒத்தும் மிகுந்தும் பகையழித்தன் முதலிய காரியங்களிலும் சோர்விலனாகை. மேற்சொல்லிய சுற்றத்தாராற பயனுள்ளது இச்சோர்வில்வழியாகலின், இது சுற்றத்தழாலின் பின் வைக்கப்பட்டது.

இகக. இறந்த வெகுளியிற் றீதே சிறந்த
வுவகை மிகுச்சியிற் சோர்வு. க.

இ-ள். சிறந்த உவகை மிகுச்சியிற் சோர்வு - மிக்கவுவகைக்களிப்பான் வருமி மறவி—இறந்த வெகுளியிற் றீது-அரசனுக்கு அளவிறந்த வெகுளியினுந் தீது. எ-று.

மிக்கவுவகை பெருஞ்செல்வம், பேரின்பம், பெருமிதமென்றிவற்றுள் வருவது. அவ்வுவகையாலாயபயத்தற்கும் கொடியோரை யொறுத்தற்கும் வேண்டுவது: இறந்த வெகுளி ஒரோவழிப் பகைவரையுங்கொல்லும்,இஃதன்னதன்றித் தன்னையே கோறலின், அதனினுந் தீதாயிற்று. (க)

இகஉ. பொச்சாப்புக் கொல்லும் புகழை யறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு. உ.

இ-ள். புகழைப் பொச்சாப்புக் கொல்லும் - ஒருவன் புகழினை அவன் மறவி கெடுக்கும்,—அறிவினை நிச்சநிரப்புக் கொன்றாங்கு அறிவினை நிசநிரப்புக்கெடுக்கு மாறுபோல. எ - று.

நிச்சநிரப்பு காடோறும் இரவான் வருத்தித் தன்வயிறு நிறைத்தல். அஃது அறிவுடையான்கணுண்டாயின் அவற்கு இனிவரவானும் பாவத்தானும் எள்ளற்பாட்டினை வினைத்து அவனன்குமதிப்பினையழிக்கும்;அதுபோல மறவியும் புகழுடையான்கணுண் டாயின் அவற்குத் தகர்வாலமையானும் காரியகேடாலானும் எள்ளற்பாட்டினை வினைத்து அவனன்குமதிப்பினை அழிக்குமென்பதாயிற்று. இவையிரண்டுபோட்டானும் பொச்சாப்பினது குறறங் கூறப்பட்டது. (உ)

இகக. பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை யதனைத்
தெப்பானோர்க்குண்டு துணிவு. ஈ.

இ - ள். பொச்சாப்பார்க்குப் புகழ்மை இல்லை - பொச்சாதொழுகுவார்க்குப் புகழுடைமையில்லை;—அது உலகத்து எப்பால் நூலோர்க்கும் துணிவு - அஃதின்மை இச்சிறு நூலுடையார்க்கே யன்றி உலகத்து எல்லைப்பட்ட நூலுடையார்க்கும் ஒப்பமுடிந்தது. எ - று.

அரசர்க்கேயன்றி அறமுதலிய ஈன்றினும் முயல்வார் யாவர்க்கும் அவை துணைடமையிற் புகழில்லையென்பதுதோன்ற, எப்பாலோர்க்குந்துணிவென்றார்.

நாகூ. அச்ச முடையார்க் கரணில்லை யாங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு. ச.

இ - ள். அரண் அச்சம் உடையார்க்கு இல்லை - சுரதி முதலிய அரண்களுள்ளே நிற்பினும், மனத்தின்கணச்சமுடையார்க்கு அவரிரும்பயனில்லை;—அதுபோன்று பொச்சாப்பு உடையார்க்கு இல்லை - அதுபோலச் செல்லுமெல்லாமுடையாரிலும், மனத்தின்கண் மறவியையுடையார்க்கு அவற்றாற் பயனில்லை. எ - று.

நன்னூற்றேதுவாகலின், நன்றென்றார். அச்சமுடையார் கின்ற அரணழியுமாறு போல மறவியுடையாருடைய செல்வங்களும் அழியுமென்பதாயிற்று. (ங)

நாகூ. முன்னுறக் காவா விழுக்கியான் றன்னிழை
பின்னூ றிரங்கி விடும். ஞ.

இ - ள். முன்னுறக் காவாது இழுக்கியான் - தன்னைக்காக்கப்பதிர் தன்பங்களை அவை வருதற்குமுன்னே அறிந்து தானாது முறைகிருந்தான்—பின் ஊறு தன்பிழை இரங்கிவிடும் - பிற்வந்தற்றாலத்துக் தாக்தலாதாமையின் அப்பிழைப்பினை நினைந் திரங்கிவிடும். எ - று.

காக்கப்படுந் தன்பங்களானவை சோர்வுபார்த்துப் பகைவர் செய்வன. ஊற்றின்கணெனற்பாலை உருபுதொகுத்தலையும் உடன்றொழுத்தலை, உற்றகாலத்துக்காக்கலாகாமையின், இரங்கிவிடுமென்றார். இவை மூன்று பாட்டானும் பொச்சாப்புடையார்க்கு வரு மேதம் கூறப்பட்டது. (ஞ)

நாகூ. இழுக்காமை யார்மாட்டு மென்றும் வழுக்காமை
வாயி னதுவொப்ப தில். ஙு.

இ - ள். இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை வாயின் - அரசர்க்கு மறவாமைக்குணம் யாவர்மாட்டும் எக்காலத்தும் ஒழிவின்றி வாய்க்குமாயின்;—அது ஒப்பது இல் - அதனை யொக்கும் நன்மை பிறிதில்லை. எ - று.

வினைசெய்வார் சுற்றத்தாரென்னுந் தம்பாலார்கண்ணும் ஒப்பவேண்டுதலின் யார்மாட்டுமென்றும், தாம் பெருகியஞான்றும் சுருங்கியஞான்றும் ஒப்பவேண்டுதலின்என்றுமென்றும்,எல்லாக்காரியங்களினும் ஒப்பவேண்டுதலின் வழுக்காமையென்றும் கூறினார். வாயினென்பது முதனிலைத்தொழிற்பெயரடியாகவந்த வினையெச்சம். வாய்த்தல் சேர்பொருள். (ஙு)

நாகூ. அரிபடுவன் றூதா வில்லைபொச் சாவாக்
கருவியாற் போற்றிக் கெடும். ஏ.

இ - ள். அரிய என்று ஆகாத இல்லை-இவை செய்தற்கரியனவென்று சொல்லப் பட்டு ஒருவற்கு முடியாத காரியங்களில்லை,—பொச்சாவாக் கருவியான் போற்றிச் செயின் - மறவாத மனத்தானே எண்ணிச் செய்யப்பெறின். எ - று.

பொச்சாவாத என்பதனிறுதிநிலை விகாரத்தாற்றொக்கது. அத்தக்கரணமாகவித் கருவியென்றார்*. இடைவிடாத நினைவும் தப்பாத சூழ்ச்சியுமுடையார்க்கு எல்லாம் எளிதின் முடியுமென்பதாம். இவையிரண்டோட்டானும் பொச்சாவாமையது சிறப் புக் கூறப்பட்டது. (எ)

நிகஅ. புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டுஞ் செய்யா
இகழ்ந்தார்க் கெழுமையு மில். அ.

இ - ள் புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் - நீதிநூலுடையார் இவை அர சர்க்குரியனவென்று உயர்த்துக்கூறிய செயல்களைக் கடைப்பிடித்துச் செய்க,—செய் யாது இகழ்ந்தார்க்கு எழுமையும் இல் - அங்ஙனஞ்செய்யாது மறந்தவர்க்கு எழுமை யினும் நன்மையில்லையாகலான். எ - று.

அச்செயல்களாவன † மூவகையாற்றலும், நால்வகையுபாயமும், ஐவகைத்தொ ழிலும், அறுவகைக்குணமும் முதலாய செயல்கள். சாதிதருமமாகிய இவற்றின் வழீஇயோர்க்கு உள்ளது நிரயத்தன்மையாகலின், எழுமையுமில்லென்றார். எழுமை ஆருபெயர். இதனைப் பொச்சாவாது செய்யவேண்டுவன கூறப்பட்டன. (அ)

நிகக இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து. கூ.

இ - ள். தம் மகிழ்ச்சியின் தாம் மைந்து உறும் போழ்து - அரசர் தம்மகிழ்ச்சிக் கட் டாம் வலியுறும்பொழுது,—இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக - முற்காலத்து அதனினுய சோர்வாற் கெட்டவர்களை நினைக்க. எ- று.

காரணங்களோடு அவர்க்குளதாய உரிமையை மகிழ்ச்சிமேலேற்றித் தம்மகிழ்ச்சி யினென்றும், இகழ்ச்சியுங் கேடும் உடன்றோன்றுமாகலின் மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்தென்றுங் கூறினர். கெட்டாரை உள்ளவே, நாமும் அவ்வாறே கெடுதுமென்று அதன்கண் மைந்துறாரென்பது கருத்து. எண்ணுகவென்று பாடமோதுவாருமுளர்.()

நிசo. உள்ளிய தெய்த லெளிதுமன் மற்றுந்தா
னுள்ளிய துள்ளப் பெறின். கo.

---

* பொச்சாவாக்கருவி எனபதற்குப் பொச்சாவாமையாகிய கருவியெனப் பொருள்கோ டலே நெறிப்பு. அது தொல்காப்பியத்து விளியதனுள் "நிலனும்பொருளும்" என்னும் மூப்பத் தேழாஞ்சூத்திரத்துயிலே சேனவரையர் "நின்முகங்காணுமருநினேன் என்புழிக காட் சியை மருதெனமுராகலிற காணுமருதெனபது விசேப்பெயர் கொண்டதாம். பொச்சாவாக் கருவியாற போறலிசெயின என்புழிப்பொச்சாவாக்கருவி என்பதும் அது" எனக்கூறுமாற் றுணர்க. இலக்கணவிளக்க நாலாகரும் இலக்கணவிளக்கச் சூறுவனியசர்க்கும் இதுவே கருத்தென்க.

† மூவகையாற்றல் அறிவு, ஆண்மை, பெருமை என்பன; நால்வகை உபாயம் கொடுத்தல், இனசொறசொல்லல், வேறுபடுத்தல், ஒறுத்தல் எனபன; ஐவகைத்தொழில் மேறசேறல், அரண்முற்றல், கோடல், பொருதல், வேறல் என்பன; அறுவகைகுணம் சுட்பாக்கல், பகை பாக்கல், மேற்சேறல், இருதலை, பிரிதலை, கூட்டலென்பன. இவற்றுள் மூவகையாற்றலை சகசுமம குறளுரையினும், நால்வகை உபாயத்தை சகளம் குறளுரையினும், ஐவகைத்தொழிலை சகஉ, சளகம் குறளுரையினும், அறுவகைக்குணத்தை சஅடிம் குறளுரையினும் காண்க.

இ - ள். தான் உள்ளியது எய்தல் எளிது மன்-அரசனுக்குத் தானெய்த நினைத்த பொருளை அவனைத்த பெற்றியே எய்துதல் எளிதாம்.—மற்றும் உள்ளியது உள்ளப் பெறின் - பின்னும் அதனையே நினைக்கக்கூடுமாயின். எ - று.

அது கூடாதென்பது ஒழிந்து நின்றமையின், மன் ஒழியிசைக்கண்வந்தது. அதனையே நினைத்தலாவது மறவியின்றி அதன்கண்ணே முயறல். இவை யிரண்டுபோட்டானும் பொச்சாவாமைக்கு உபாயங் கூறப்பட்டது. (கo)

நெடு ம் அதி.—செங்கோன்மை.

அஃதாவது அரசனுற் செய்யப்படும் முறையினது தன்மை. அம்முறை ஒரு பாற்கோடாது செவ்வியகோல்போறலிற் செங்கோலெனப்பட்டது. வடநூலாரும் தண்டமென்றார். அது சோர்வில்லாத அரசனுற் செயற்பாலதாகலின், இது பொச்சாவாமையின்பின் வைக்கப்பட்டது.

நிசக. ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டுந்
தேர்ந்துசெய் வஃதே முறை. க.

இ - ள். ஓர்ந்து - தன்கீழ் வாழ்வார் குற்றஞ்செய்தால் அக்குற்றத்தை நாடி.—யார்மாட்டும் கண்ணோடாது - யாவர்மாட்டுங் கண்ணோடாது—இறை புரிந்து - நடுவு நிலைமையைப் பொருந்தி—தேர்ந்து - அக்குற்றத்திற்குச் சொல்லிய தண்டத்தை நூலோரோடு மாராய்ந்து—செய்வஃதே முறை - அவ்வளவிற்றாகச் செய்வதே முறையாம். எ - று.

நடுவுநிற்றல் இறைக்கியல்பாகலின் அதனையிறையென்றும், உயிரினுஞ் சிறந்தார் கண்ணுமென்பார் யார்மாட்டுமென்றுங் கூறினர். இறைமை இறையெனவும், செய்வது செய்வஃதெனவும் நின்றன. இதனுற் செங்கோன்மையதிலக்கணங் கூறப்பட்டது. ()

நிசஉ. வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி. உ.

இ - ள். உலகு எல்லாம் வான் நோக்கி வாழும் - உலகத்துயிரெல்லாம் மழை யுளதாயின் உளவாகாநிற்குமேயெனினும்,—குடி மன்னவன் கோல் நோக்கி வாழும்-குடிகள் அரசன் செங்கோலுளதாயின் உளவாகா நிற்கும். எ - று.

நோக்கிவாழ்தல் இன்றியமையாமை. வானினுயவுணவை வானென்றும், கோலினுய ஏமத்தைக் கோலென்றுங் கூறினர். அவ்வேமமில்வழி உணவுளதாயினுங் குடி கட்கு அதனுற்பயனில்லையென்பதாம். (உ)

நிசஊ. அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல். ஊ.

இ - ள். அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் நின்றது - அந்தணர்க்குரித்தாய வேதத்திற்கும் அதனுற் சொல்லப்பட்ட அறத்திற்குங் காரணமாய் நிலைபெற்றது—மன்னவன் கோல் - அரசனுற் செலுத்தப்படுகின்ற செங்கோல். எ - று.

அரசர் வணிகரென்னுமேனையோர்க்கு முரித்தாயினும், தலைமைபற்றி அந்தணர் நூலென்றார். "மாதவர் நோன்பு மடவார் கற்புங்—காவலன் காவ" லென்றித் தம்

* மணிமேகலை, இருபத்திரண்டாவது சிறைசெய்தகாதை, உ0அ, உ0ஈ.

காவலான் குடியின், ஈண்டறமென்றது அவையொழித்தவற்றை. வேறமும் அறனும் அரசியலினுஞ் செங்கோலில்வழி நடவாவாகலின், அதனை அவற்றிற்கு நிலையென்றும், அப்பெற்றியே தனக்காகியாவது பிறிதில்லையென்பார் கின்றதென்றுங்கூறினர். இவை யிரண்டுபோட்டாலுஞ் செங்கோலது சிறப்புக் கூறப்பட்டது. (கூ)

நிசசு குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்ன
னடிதழீஇ நிற்கு முலகு. ச

இ - ன். குடிதழீஇக் கோல் ஒச்சும் மாநிலமன்னன் அடி - தன்குடிகளையுமணைத் துச் செங்கோலையுஞ் செலுத்தும் பெருநிலமகளர்தன்டியை—தழீஇ நிற்கும் உலகு - பொருந்தி வீடார் உலகத்தார். எ - று.

அணைத்தல் இன்சொற்சொல்லுதலும், தளர்த்தழி வேண்டுவன கொடுத்தலும் முதலாயின. இவ்விரண்டனையும் வழுவாமற்செய்வான் நிலமுழுதுமாளுமாகலின் அவனை மாநிலமன்னனென்றும், அவன்மாட்டியாவரும் நீங்காவன்பினராவராகலின் அடிதழீஇ நிற்குமுலகென்றும், கூறினர். (ச)

நிசஞ. இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு. ஞ.

இ - ன். பெயலும் விளையுளும் தொக்கு - பருவமழையுங் குன்றாதவிளைவும் ஒருங்கு கூடி—இயல்புளிக் கோல் ஒச்சும் மன்னவன் நாட்ட - நூல்கள் சொல்லிய வியல்பாற் செங்கோலைச் செலுத்துமரசனது நாட்டின்கண்ணவாம். எ - று.

உளியென்பது மூன்றுவதன்பொருள்படுவதோரிடைச்சொல். வானும் நிலனுஞ் சேரத் தொழிற்பட்டு வளஞ்சுரக்குமென்பதாம். (ஞ)

நிசசு. வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின். கூ

இ - ள். மன்னவன் வென்றி தருவது வேல் அன்று கோல் - மன்னவனுக்குப் போரின்கண் வென்றியைக் கொடுப்பது அவனெறியும் வேலன்று கோல்,—அதூஉம் கோடாது எனின் - அஃதும் அப்பெற்றித்தாவது தான் கோடாதாயின். எ - று.

கோல்செவ்விதாயவழியே வேல் வாய்ப்பதென்பார் வேலன்றென்றார்; "மாண்ட-வறநெறி முதற்றே யரசின் கொற்றம்*" என்றா பிறரும். கோடானென்பது பாட மாயின் கருவியின்றொழில் வினைமுதன்மேனின்றதாக வுரைக்க. (கூ)

நிசஎ. இறைகாக்கும் வையக மெல்லா மவனை
முறைகாக்கும் முட்டாச் செயின். எ.

இ - ள். வையகம் எல்லாம் இறை காக்கும் - வையகத்தையெல்லாம் அரசன் காக்கும்;—அவனை முறை காக்கும் - அவன்றன்னை அவனது செங்கோலே காக்கும்,—முட்டாச் செயின் - அதனை முட்டாவன்றழியும் முட்டாமற்செலுத்துவனேயின். எ - று.

முட்டாமற் செலுத்தியவாறு மகனை முறைசெய்தான் † கண்ணும் தன்னை குறைத்தான் ‡ கண்ணுங் காண்க. முட்டாதென்பதன் இறந்திலே விகாரத்தாற்

* புறநானூறு, ஙஅ.

† மநுநீதிகண்டசோழன். லெப்பதிகாரம், உ, வழக்குரைகாதை, ஙஉ-ஙஎ.

‡ பொற்கைப்பாண்டியன். லெப்பதிகாரம், உ, வட்டுரைகாதை, ஙஉ-ஙக.

றெக்கது. இவை நான்குபாட்டானும் அதனைச் செலுத்தினனெய்தும் பயன் கூறப் பட்டது. (எ)

நிசஅ. எண்பதத்தா னோரா முறைசெய்யா மன்னவன்
றண்பதத்தாற் றானே கெடும். அ.

இ - ள். எண்பதத்தான் ஓரா முறை செய்யா மன்னவன் - முறைவேண்டினோர்க்கு எளிய செவ்வியையுடையனுய் அவர் சொல்லியவற்றை நூலோர் பலரோமொராய்ந்து நின்றவுண்மைக்கொப்ப முறை செய்யாதவரசன்—தண்பதத்தான் தானே கெடும் - தாழ்ந்த பதத்திலே நினறு தானே கெடும். எ - று.

எண்பதத்தானென்னும் மூற்றுவினையெச்சமும், ஓராவென்னும் வினையெச்சமும், செய்யாவென்னும் பெயரெச்சவெதிர்மறையுட் செய்தல்வினை கொண்டன. தாழ்ந்த பதம் பாவமும் பழியுமெய்தினிற்கும்மேல். "அல்லவைசெய்தாற் கறங்கூற்றம்*" ஆகலின், பகைவரின்றியுங்கெடுமென்றார். இதனுன் முறைசெலுத்தாதானது கேடு கூறப்பட்டது. (அ)

நிசக. குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் றொழில். க.

இ - ள். குடி புறங்காத்து ஓம்பிக் குற்றம் கடிதல் - குடிகளைப் பிறர் கலியாமற் காத்துத் தானும கலியாது பேணி, அவர் மாட்டெ குற்றங்கழின் அதனை யொறுப்பா ஞெழித்தல்—வேந்தன் வடு அன்று தொழில் - வேந்தனுக்குப் பழியன்று, தொழிலாக லான். எ - று.

தன்பஞ்செய்தல், பொருட்கோடல், கோறலென ஒறுப்பு மூன்று; அவற்றுள் ஈண்டைக்கெய்துவன முனனையவென்பது குறறங்கடிதலென்னுறை பெற்றும். தன் கீழ் வாழ்வாரை யொறுத்தல் அறனனமையின் வடுவாமென்பதனை யாசங்கித்து, அஃ தாகாது, அரசனுக்கு அவரை அக்குற்றத்தினின்றுங் காயாக்குதலுஞ் சாந்தருமமெனறார். (க)

நிருo. கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனெடு நேர். கo.

இ - ள். வேந்து கொடியாரைக் கொலையின் ஒறுத்தல் - அரசன் கொடியவரை கொலையாலெறுத்தித தகமோரைக் காததல்—பைங்கூழ் களை கட்டதனெடு நேர - உழவன் களையை களாது பைங்கூழைக காத்தலெடுபடாகும். எ - று.

கொடியவரெனறது நீகுகாளுவுவார், களவினவரா, கருவியிறவகாலவார், கள்வர், ஆறலைப்பார், குறைவகாளவரா, பிறனில வழைவாமினறவரா முதலாயினுரை. இவரை வடநூலார் ஆததாயிகளென்ப. இப்பிறறையாரைக் கண்டவழுடக் மகாலவரா வழிப் புறகளாகு அருசாதனற பைங்கூழ்பானறு கல்வுபலவுவுயிர் உலகு ஓடாப புதெலின, கோறறலும அரசறகுச சாந்தருமமெனபதாயிறறு. இவையிரணடாடலு ஞ் செங்கோல் செலுத்தலும் வெண்குடை வேந்தறகுத் நியாமாமாட்டு மூகனையொறுப் பும் ஒழியற்பால வல்லவென்பது கூறப்பட்டது. (கo)

---

* நான்மணிக்கடிகை, அடி. மேலே உகும் பகுதிநறாணை.

நேரம் அறிதல்—கொடுங்கோன்மை.

அஃதாவது அம்முறையினது கோடுதற்றன்மை. ஈண்டும் உவமையின் பெயர் பொருண்மேலாயிற்று. செங்கோன்மைக்கு மாறுகலின், இஃததன்பின் வைக்கப் பட்டது.

குறுக. கொலைமேற்கொண் டாரிற் கொடிதே யலைமேற்கொண் டல்லவை செய்தொழுகும் வேந்து. க.

இ - ள். கொலை மேற்கொண்டாரிற் கொடிது-பகைமைபற்றிக் கொல்லுதற்குரு ழிலேத் தம்மேற்கொண்டொழுகுவாரினுங்கொடியன்—அலைமேற்கொண்டு அல்லவை செய்து ஒழுகும் வேந்து - பொருள் வெஃகிக் குடிகளையலைத்தற்குரு ழிலேத் தன்மேற் கொண்டு முறையல்லவற்றைச் செய்தொழுகும் வேந்தன். எ - று.

அவர் செய்வது ஒருபொழுதைத் துன்பம், இவன் செய்வது எப்பொழுதுந் துன் பமாமென்பதுபற்றி, அவரினுங் கொடியனென்றார். பான்மயக்குறழ்ச்சி வேந்தென் பது உயர்திணைப்பொருட்கண்வந்த அஃறிணைச்சொல். அலை கொலையினுங் கொடி தென்பதாயிற்று. (க)

குறுக. வேலொடு நின்று னிடுவென் றதுபோலுங் கோலொடு நின்று னிரவு. உ.

இ - ள். வேலொடு நின்றான்-ஆறலைக்குமிடத்துத் தனியே வேல்கொண்டு நின்ற கள்வன்—இடு என்றது போலும்-ஆறுசெல்வானை நின்கைப்பொருடானென்று வேண் டுதலோ டொக்கும்—கோலொடு நின்றான் இரவு - ஒறுத்தற்குரு ழிலோடு நின்றவர சன் குடிகளைப் பொருள் வேண்டுதல். எ - று.

வேலொடு நின்றானென்றதனாற் பிறரொடு நில்லாமையும், இரவென்றதனால் இறைப்பொருளன்மையும், பெற்றாம். தாராக்கால் ஒறுப்பலென்னுங் குறிப்பினாலு லின், இரவாற்கோடலும் கொடுங்கோன்மையாயிற்று. இவையிரண்டுபோட்டானுங் கொடுங்கோன்மையது குற்றங் கூறப்பட்டது. (உ)

குறுக. நாடொறு நாடி முறைசெய்யா மன்னவ னாடொறு நாடு கெடும். ங.

இ - ள். நாடொறும் நாடி முறை செய்யா மன்னவன் - தன்னுட்டு நிகழுந் தீமைகளை நாடோறுமாராய்ந்து அதற்கொக்க முறைமையைச் செய்யாதவரசன்—நாடொறும் நாடு கெடும் - நாடோறும் நாடிழக்கும். எ - று.

அரசனுக்கு நாடு உறுப்பாகலின், அதன்வினை அவன்மேனின்றது.இழத்தல் பய னெய்தாமை. மன்னவனுக நாடொறுங் கெடுமென்றுரைப்பாருமுளர். (ங)

குறுச. கூழுங் குடியு மொருங்கிழக்குங் கோல்கோடிச் சூழாது செய்யு மரசு. ச.

இ - ள். சூழாது கோல் கோடிச் செய்யும் அரசு - மேல் வினைவதென்னுது முறைதப்பச் செய்யுமரசன்—கூழும் குடியும் ஒருங்கு இழக்கும் - அச்செயலான் முன்னீட்டிய பொருளையும் பின்னீட்டுதற்கேதுவாகிய குடிகளையுஞ் சேரவிழக் கும். எ - று.

கோடவென்பது திரிந்து நின்றது. முன்னீட்டியபொருள் இழத்தற்கேது வரு கின்ற பாட்டாற் கூறுப. (ச)

திருதி. அல்லற்பட் டாற்று தழுதகண்ணீ ரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை. தி.

இ - ள். அல்லற்பட்டே ஆற்றாது அழுத கண்ணீர் அன்றே - அரசன் முறைசெய்யாமையாற் குடிகள் துன்பமுற்று அதனைப் பொறுக்கமாட்டாது அழுத கண்ணீரன்றே—செல்வத்தைத் தேய்க்கும் படை - அவன் செல்வத்தைக் குறைக்குங் கருவி. எ - று.

அழுதகண்ணீர் அழுதலான் வந்த கண்ணீர். செல்வமாகிய மரத்தையென்னுமையின், இஃதேதேசவருவகம். அல்லற்படுத்திய பாவத்தது தொழில் அதற்கேது வாகிய கண்ணீர்மேனின்றது. அக்கண்ணீரிற் கொடிது பிறிதின்மையின், செல்வங் கடிதிற்றேயுமென்பது கருத்து. (இ)

திருசு. மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை யஃதின்றேன்
மன்னுவா மன்னர்க் கொளி. சு.

இ - ள். மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை - அரசர்க்குப் புகழ்கடாம் நிலை பெறுதல் செங்கோன்மையானும்;—அஃது இன்றேல் மன்னர்க்கு ஒளி மன்னுவாம் - அச்செங்கோன்மையில்லையாயின், அவர்க்கு அப்புகழ்கடாம் உளவாகா. எ - று.

விகாரத்தாற்றொக்க மூன்றாவது விரித்து ஆக்கம் வருவித்துரைக்கப்பட்டது. மன்னுதற்கேது புகழாதல் "இந்நிலத்து மன்னுதல் வேண்டி னிசைகெழுக" என்பதனானுமறிக. மன்னுமை ஒருகாலு நிலையாமை. பழிக்கப்பட்டால் ஒளி மன்னுவாம், ஆகவே, தாமுமன்னுரென்பதாயிற்று. வென்றி கொடை முதலிய வேதக்களாற புகழ் பகுதிப்படுதலின், பன்மையாற் கூறினர். அவையெல்லாம் செங்கோன்மையில் வழி இலவாமென்பதாம். இவைநான்குபாட்டானும் கொடுங்கோலனுயினுன் எய்துங் குற்றங் கூறப்பட்டது. (ஈ)

திருஎ. தளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்த
னளியின்மை வாழு முயிர்க்கு. எ.

இ - ள். தளியின்மை ஞாலத்திற்கு எற்று - மழையில்லாமை வையத்து வாழ்மு முயிர்கட்கு எவ்வகைத் துன்பம் பயக்கும்,—அற்றே வேந்தன் அளியின்மை வாழும் உயிர்க்கு - அவ்வகைத்துன்பம் பயக்கும் அரசன் றண்ணளியில்லாமை அவனுட்டி வாழுங் குடிகட்கு. எ - று.

நெறுப்புப்பற்றித் தளியென்பது மழைமேனின்றது; உயிரென்பது குடிகண்மேனின்றது. மேல் வாளெக்கிவாழு மென்றதனை எதிர்மறை முகத்தாற கூறியவாறு.(எ)

திருஅ. இன்மையி னின்ன துடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின். அ.

இ - ள். முறை செய்யா மன்னவன் கோற்கீழ்ப் படின் - முறைசெய்யாத அரசனது கொடுங்கோலின்கீழ் வாழின்,—இன்மையின் உடைமை இன்னது - யாவர்க்கும் பொருளினின்மையினும் உடைமை இன்னது. எ - று.

தனக்குரிய பொருளோடி அமையாது மேலும் வெஃகுவோன்று நாட்டுக் கைக்கோள யாப்புண்டல் முதலிய வருவது பொருளுடையார்க்கே யாகலின், அவ்வுடன்மை

* நான்மணிக்கடிகை.

இன்மையினுமின்னுதாயிற்று இவையிரண்டு பாட்டானும் அவனுட்டு வாழ்வார்க்கு வருங்குற்றம் கூறப்பட்டது. (அ)

நிநிக. முறைகோடி மன்னவன் செய்யி னுறைகோடி
பொல்லாது வானம் பெயல் கூ.

இ-ள். மன்னவன் முறை கோடிச் செய்யின் - மன்னவன் தான் செய்யும் பொருளே முறை தப்பச் செய்யுமாயின்,—உறை கோடி வானம் பெயல் ஒல்லாது - அவனுட்டுப் பருவமழை இன்றும்வகை மேகம் பொழிதலைச்செய்யாது. எ - று.

இரண்டிடத்தும் கோடவென்பன திரிந்துநின்றன. உறைகோடுதலாவது பெய் யுங்காலத்துப் பெய்யாமை. அதற்கேது வருகின்ற பாட்டாற் கூறுப. (க)

நிகூ. ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன காவா னெனின். கூ.

இ - ள். காவலன் காவான் எனின் - காத்தற்குரியவரசன் உயிர்களைக் காவா னாயின்—ஆ பயன் குன்றும் - அறனில்லாத அவனுட்டுப் பசுக்களும் பால்குன்றும்,—அறுதொழிலோர் நூல் மறப்பர்-அந்தணரும் நூலகளை மறந்துவிடுவர். எ - று.

ஆபயன் ஆவாறுகொளலும் பயன். அறுதொழிலாவன ஓதல், ஓதுவித்தல், வேட் டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றலெனவிவை. பசுக்கள் பால்குன்றியவழி அவியின்மை யானும், அது செய்கின்றதற்குரியார் மந்திரங்கற்பமென்பன ஒதாமையானும், வேள்வி நடவாதாம்; ஆகலே, வானம் பெயலொல்லாதென்பதாயிற்று. இவை யிரண்டு பாட் டானும் அவனுட்டினதணிகழுங்குற்றம் கூறப்பட்டது. (கo)

நிஎ ம் அதி.—வெருவந்தசெய்யாமை.

அஃதாவது குடிகளஞ்சுவதும் பகுதி * யஞ்சுவதும் தானஞ்சுவதுமாய தொழில்களைச் செய்யாமை. அவை செய்தல் கொடுங்கோன்மைப்பாற்படுதலின், இஃததன்பின் வைக்கப்பட்டது.

நிகக. தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தா
லொத்தாங் கொறுப்பது வேந்து. க.

இ - ள். தக்காங்கு நாடி - ஒருவன் தன்னின்மெலியார்மேற் சென்றவழி அதனை யெவ்வகை யினராயாது—தலைசெல்லாவண்ணத்தால ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து - பினனும அது செயயாமறபபாருடடு அவனை அகுறறத்தினறகொப்ப ஒறுப்பானே அரசனுவான். எ - று.

தக்காங்கு ஒத்தாங்கென்பன ஒருசொல். தகுதியென்பது நடுவுநிலைமையாதல் "தகுதி யெனவொன்று நன்றே†" எனபதனனுமறிக. இதனனே தக்காங்கு நாடா வுமையும், பிறிதோர்காரணம்பறறி மிகவொறுததலும், குடிகளஞ்சும் வினையாதல் பெறறும். (க)

நிகஉ. கடிதோச்சி மெல்ல வெறிக செடிதாக்க
நீங்காமை வேண்டு பவர். உ.

* பகுதி - மந்திரிமுதலியவர்கள். † குறள், கஉஉ.

இ - ள். கடிது ஓச்சி - அங்ஙனமாயினும் ஒறுத்தல் தொடங்குங்கால் அளவிறப் பச்செய்வார்போற் பெருஞ்சினத்தினை,—மெல்ல எறிக - செய்யுங்கால் அளவிறவாமற் செய்க—ஆக்கம் சிறிது நீங்காமை வேண்டுபவர் - ஆக்கம் தங்ஙனெடுங்கால் சிற்றளவே வேண்டுவார். எ - று.

கடிதோச்சல் குற்றஞ்செய்வார் அதனை யஞ்சுதற் பொருட்டும், மெல்லவெறி தல் யாவரும் வெருவாமைப்பொருட்டுமாம். தொடங்கினவளவிற் குறைதல்பற்றி மென்மை கூறப்பட்டது. ஒச்சுதல் எறிதலென்பனவிரண்டும் உவமைபற்றி வந்தன. இவையிரண்டுபோட்டானும் குடிகள் வெருவந்த செய்யாமைய தியல்பு கூறப்பட்டது.

நிகூ. வெருவந்த செய்தொழுகும் வெங்கோல ஞயி
னெருவந்த மொல்லைக் கெடும். கூ.

இ - ள். வெருவந்த செய்து ஒழுகும் வெங்கோலன் ஆயின் - குடிகள் வெருவிய செயல்களைச் செய்து நடக்கும் வெங்கோலனுமாயின்,—ஒருவந்தம் ஒல்லைக் கெடும் - அரசன் ஒருதலையாகக் கடிதிற் கெடும். எ - று.

வெங்கோலனென்பது ஈண்டு வாளா பெயராய் நின்றது. ஒருவந்தம், ஒருதலை, ஏகாந்தமென்பன ஒருபொருட்கிளவி. அச்செயல்களுங் கேடுகளும் முன்னர்க் கூறப்படும். (கூ)

நிகூ. இறைகடிய னென்றுரைக்கு மின்னாச்சொல் வேந்த
னுறைகடுகி யொல்லைக் கெடும். ச.

இ - ள். இறை கடியன் என்று உரைக்கும் இன்னாச்சொல் வேந்தன் - குடிக ளான் நம்மிறைவன் கடியனென்று சொல்லப்படும் இன்னாதசொல்லையுடைய வேந்தன்—உறை கடுகி ஒல்லைக்கெடும் - ஆயுளுக்குறைந்து செல்வமுங் கடிதினிழக் கும். எ - று.

கெஞ்சு கொண்டு சொல்லுதலான், இன்னாமை பயப்பதாய சொல்லை இன்னாச் சொல்லென்றார். உறையென்பது முதனிலைத் தொழிற்பெயர். அஃது ஈண்டாகுபெய ராய் உறைதலைச்செய்யும் நாண்மேனின்றது. அது குறைதலாவது அச்சொல்லில்லா தார்க்கு உள்ளதிற் சுருங்குதல். (ச)

நிகூ. அருஞ்செவ்வி யின்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்ன துடைத்து. ஞ.

இ - ள். அருஞ்செவ்வி இன்னாமுகத்தான் பெருஞ்செல்வம் - தன்னைக் காண வேண்டுவார்க்குக் காலமரியனுய்க் கண்டால் இன்னாத முகத்தினையுடையானது பெரியசெல்வம்—பேய் கண்டன்னது உடைத்து - பேயாற் காணப்பட்டாற்போல்வ தொரு குற்றமுடைத்து. எ - று.

எனவே, இவை யிரண்டும் வெருவந்த செய்தலாயின, இவை செய்வானைச் சார் வார்இன்மையின், அவனது செல்வம் தனக்கும் பிறர்க்கும் பயன்படா தென்பதுபற்றிப் பேய்கண்டன்னதுடைத்தென்றார். காணுதல் தன்வயமாகாதல். (ஞ)

நிகூ. கடுஞ்சொல்லன் கண்ணில ஞயி னெடுஞ்செல்வ
மீடின்றி வாண்மே லெடும். ஃ.

இ - ள். கடுஞ்சொல்லன் கண் இலன் ஆயின் - அரசன் கடியசொல்லையுமுடைய னாய்க் கண்ணோட்டமுமிலனாயின்,—கொடுஞ் செல்வம் நீடு இன்றி ஆங்கே கெடும் - அவனது பெரிய செல்வம் நீடுதலின்றி அப்பொழுதே கெடும். எ - று.

"வேட்டல் கடுஞ்சொன் மிகுதண்டஞ் சூதபொரு—ளீட்டல்கட் காமமோ டேழு" எனப்பட்ட வீதனங்களுட் கடுஞ்சொல்லையும் மிகுதண்டத்தையும் இவர் இவ்வெருவந்தசெய்தலுளடக்கினர். கண் ஆகுபெயர். இவை செய்தபொழுதே கொடுஞ்செறுமைத்தன்மையினு மென்பார், கொடுஞ்செல்வமென்றார். நீடுதல் நீட்டித்தல்.

இகூஎ. கடுமொழியுங் கையிகந்த தண்டமும் வேந்த
னடுமுரண் டேய்க்கு மரம். எ.

இ - ள். கடுமொழியும் கையிகந்த தண்டமும் - கடிய சொல்லும் குற்றத்தின் மிக்க தண்டமும்—வேந்தன் அடுமுரண் தேய்க்கும் அரம் - அரசனது பகை வெல்லு தற்கேற்ற மாறுபாடாகிய இரும்பினைத் தேய்க்கும் அரமாம். எ - று.

கடுமொழியாற்றானேயுங் கையிகந்த தண்டத்தாற்றானேமுங் கெட்டு முரண் சுருங்கி வருதலின் அவற்றை அரமாக்கி, திண்ணிதாயினுந் தேயுமென்றற்கு அடுமுரணை இரும்பாக்கினர். ஏகதேசவுருவகம். அரமென்பதனைத் தனித்தனி கூட்டுக*. இவை யைந்துபாட்டானும், செல்லியின்மை, இன்னுமுகமுடைமை, கண்ணோட்டமின்மை, கடுஞ்சொற்சொல்லல், கையிகந்ததண்டமென்றிவைகள் குடிகளஞ்சும் வினையென்ப தாகும், இவை செய்தான் ஆயுளும் அடுமுரணுஞ் செல்வமு மிழக்குமென்பதாகவு மோதப்பட்டன. (எ)

இகூஅ. இனத்தாற்றி யெண்ணுத வேந்தன் னினத்தாற்றிச்
சிறிற் சிறுகுந் திரு. அ.

இ - ள். இனத்து ஆற்றி எண்ணுத வேந்தன் - காரியத்தைப்பற்றி வந்த வெண் ணத்தை அமைச்சர்மேல்வைத்து அவரோடு தானுமெண்ணிச் செய்யாதவரசன்—னினத்து ஆற்றிச் சிறின் - அப்பிழைப்பாற் றன்காரியந் தப்பியவழித் தன்னைச் சின மாயெ குற்றத்தின்கண்ணே செலுத்தி அவரை வெகுளுமாயின்,—திருச் சிறுகும் - அவன்செல்வம் நாடோறுஞ் சுருங்கும். எ - று.

அரசர்பாரம்பொறுத்துய்த்த லொப்புமையான் அமைச்சரை இனமென்றும், தான் பின் பிழைப்பாதலறிந்து அமையாது அதனை அவர்மேலேற்றி வெகுளின் அவர் வெளிஇ நீங்குவர்; நீங்கவே, அப்பிழைப்புத் தீருமாறும் அப்பாரமினிதுய்க்குமாறும் இலனுமென்பது நோக்கித் திருச்சிறுகுமென்றுங் கூறினர். இதனுற் பகுதியஞ்சும் வினையும் அது செய்தானெய்துங் குற்றமுங் கூறப்பட்டன. (அ)

இகூக. செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும். க.

இ - ள். சிறை செய்யா வேந்தன் - செரு வருதற்குமுன்னே தனக்குப் புகலாவ தோரரண் செய்துகொள்ளாதவரசன்—செருவந்த போழ்தில் வெருவந்து வெய்து கெடும் - அது வந்தகாலத்து ஏமமின்மையான் வெருவிக் கடிதிற்கெடும். எ - று.

* இவ்வாறு ஒருமைப்பெயரை வாக்கியபேதமாகத் தனித்தனி கூட்டி முடிப்பதனைத் தேர்வடமிழுப்பார்போலப் பிரதிபேதகர்த்தாவை யென்பர் வடநூலார்.

பகையைவெருவிச் சேர்த்தார்நிற்குதலிற் தமியனுய்த் தானும்வெருவி அப்பகை வயத்தனுமென்பதாம். இதனுல் தானஞ்சும் வினேயும் அது செய்தானெய்தும் பயனும் கூறப்பட்டன. (க)

நிஎ0. கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோ லதுவல்ல
நில்லே நிலக்குப் பொறை க0.

இ - ன். கடுங்கோல் கல்லார்ப் பிணிக்கும் - கடுங்கோலனுயவரசன் நீதிநூன் முதலிய கல்லாதாரைத் தனக்குப் பகுதியாகக் கூட்டாதிற்கும்;—அதுவல்லது நிலத்குப் பொறை இல்லே - அக்கூட்டமல்லது நிலத்திற்கு மிகையாய பாரம் பிறிதில்லே. எ - று.

கடுங்கோலென்பது ஈண்டு மிக்க தண்டத்தின்மேற்றன்றி அதனைச் செய்வான் மேற்றுயிற்று. அவன் அது செய்தற்கியையாரையல்லது கூட்டாமையிற் கல்லார்ப் பிணிக்குமென்றும், ஏனேயவற்றையெல்லாம் பொறுக்கின்றதியல்பாகலின் நிலத்திற்குப் பொறை அதுவல்லதில்லேயென்றுங் கூறினர். நிலக்கென்பது செய்யுள்விகாரம். இதனுல் வெருவந்த செய்தலின் குற்றங் கூறப்பட்டது. (க0)

நிஅம் அதி.—கண்ணேட்டம்.

அஃதாவது தன்னெடு பயின்றாரைக் கண்டால் அவர் கூறியன மறுக்கமாட்டாமை. இஃது அவர்மேற் கண்சென்றவழி நிகழ்வதாகலின், அப்பெயர்த்தாயிற்று. மேல் வெருவந்தசெய்யாமையுட் கூறியவதனேயே சிறப்புப்பற்றி விரித்துக்கூறுகின்றமையின், இஃததன்பின் வைக்கப்பட்டது.

நிஎக. கண்ணேட்ட மென்னுங் கழிபெருங் காரிகை
யுண்மையா னுண்டிவ் வுலகு. க.

இ - ன். கண்ணேட்டம் என்னும் கழி பெருங்காரிகை உண்மையான்-கண்ணேட்டமென்று சொல்லப்படுகின்ற சிறப்புடையவழகு அரசர்மாட்டு உண்டாகலான்,—இவ்வுலகு உண்டு-இவ்வுலகமுண்டாகாகின்றது. எ - று.

கழிபெருங்காரிகையென்புழி ஒருபொருட்பன்மொழி இவ்வுயிழகது சிறப்புணராகின்றது. இவ்வழகு அதற்குறுப்பாகலின், உண்மையானென நிலேபேறுகூறினர். இன்மை வெருவந்தசெய்தலாகலின் அவர்நாட்டு வாழ்வார் புலியையடைந்த புல்வாயினம்போன்று ஏமஞ்சாராமைபற்றி, இவ்வுலகுண்டென்றார். (க)

நிஎஉ. கண்ணேட்டத் துள்ள துலகிய லஃதிலா
ருண்மை நிலக்குப் பொறை. உ.

இ - ன். உலகியல் கண்ணேட்டத்து உள்ளது - உலகாடை கண்ணேட்டத்தின் கண்ணே நிகழ்வது—அஃது இலார் உண்மை நிலக்குப் பொறை-ஆகலான், அக்கண்ணேட்டமில்லாதார் உளராதல் இந்நிலத்திற்குப் பாரமாதற்கே, பிறிதொன்றற்கன்று. எ - று.

உலகாடையாவது ஒப்புரவுசெய்தல்,புறந்தருதல்,பிழைத்தன பொறுத்தலென்றிவைமுதலாயின. அவைநிகழாமையால் தமக்கும் பிறர்க்கும் பயன்படாரென்பதுபற்றி, நிலக்குப்பொறையென்றார். ஆதற்கென்பது சொல்லெச்சம். இவையிரண்டுபோட்டாலும் கண்ணேட்டத்தது சிறப்புக் கூறப்பட்டது. (உ)

நிலை. பண்ணென்னும் பாடற்கியைபின்றேற் கண்ணென்னும்
கண்ணேட்ட மில்லாத கண். கூ.

இ - ள். பண் என்னும் பாடற்கு இயைபு இன்றேல் - பண் என்னபயத்ததாம் பாடற்றொழிலோடு பொருத்தமின்றாயின்!—கண் என்னும் கண்ணேட்டம் இல்லாத கண் - அதுபோலக் கண் என்னபயத்ததாய் கண்ணேட்டமில்லாதவிடத்து! எ - று.

பண் கண்ணென்பன சாதிப்பெயர். பண்களாவன பாலையாழ்முதலிய நூற்று மூன்று. பாடற்றொழில்களாவன யாழின்கண் வார்தல் முதலியவெட்டும்*, பண்ணல் முதலியவெட்டும்†, மிடற்றின்கண் எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடில மென்னுமைந்தும், பெருவண்ணம், இடைவண்ணம், வனப்புவண்ணமுதலியவண்ணங் களெழுபத்தாறுமாம். இவற்றொடியையாதவழிப் பண்ணற்பயனில்லாதவாறுபோலக் கண்ணேட்டத்தியையாதவழிக் கண்ணற்பயனில்லையென்பதாம் கண் சென்றவழி நிகழ்தல்பற்றி அதனை யிடமாக்கினர். இறுதிக்கட் கண்ணென்பதனைக் "கண்ணகன் ஞாலம்‡" என்புழிபோலக் கொள்க. (கூ)

நிலை உளபோன் முகத்தெவன் செய்யு மளவினற்
கண்ணேட்ட மில்லாத கண். ச.

இ - ள். முகத்து உளபோல் எவன் செய்யும் - கண்டார்க்கு முகத்தின்கண் உள போற்றோன்றலல்லது வேறென்ன பயனைச் செய்யும் - அளவினன் கண்ணேட்டம் இல்லாத கண் - அளவிறவாத கண்ணோட்டமுடையவல்லாத கண்கள் எ - று.

தோன்றலல்லதென்னுஞ்சொற்கள் அவாய்நிலையான்வந்தன. கழிகண்ணேட்டத் தினீக்குதற்கு, அளவினனென்றார். ஒருபயனையுஞ் செய்யாவென்பது குறிப்பெச்சம்.

நிலை. கண்ணிற் கணிகலங் கண்ணேட்ட மஃதின்றேற்
புண்ணென் றுணரப் படும். இ.

இ - ள். கண்ணிற்கு அணி கலம் கண்ணேட்டம்-ஒருவன் கண்ணிற்கு அணியுங் கலமாவது கண்ணேட்டம்,—அஃது இன்றேல் புண் என்று உணரப்படும்-அக்கல மில்லையாயின் அஃதறிவுடையாராற புண்ணென்றறியப்படும். எ - று.

வேறணிகலமின்மையிற் கண்ணிற்கணிகலமென்றும், கண்ணுய்த்தோன்றினும் நோய்களானும் புலன்பற்றலானுந் துயர்வினைத்தலேக்கிப் புண்ணென்றுணரப்படு மென்றுங் கூறினர். இவை மூன்றுபாட்டானும் ஓடாது நின்ற கண்ணின்குற்றங் கூறப்பட்டது. (இ)

நிலை. மண்ணே டியைந்த மரத்தினையர் கண்ணே
டியைந்துகண் ணேடா தவர். கூ.

---

* வார்தல் முதலிய இரண்டுகண்களிலடாவன வார்தல், பிடித்தல், உந்தல், உதைத்தல், உருட்டல், தெருட்டல், எள்ளல், பட்டடை எனவிவை.

† பண்ணல் முதலிய கீழ்த்தொழில்களெட்டாவன பண்ணல், பகிரட்டணை, ஞாப்தல், தூவல், செலவு, மீளாட்டு, கைதூற்று, குறுமபோக்கு ஈனவிவை.

‡ நிகிலபேதம். க.

இ - ள். கண்ணோடு இயைந்து. கண்ணோடாதவர் - ஓதெற்குரிய கண்ணோடு பொருந்திவைத்து அஃதோடாதவர்—மண்ணோடு இயைந்த மரத்து அனையர் - இயல் காதின்றாராயினும் மண்ணோடு பொருந்திநிற்கின்ற மரத்தினையொப்பர். எ - று.

ஓடாதவரென்புழிச் சினவீனை முதன்மேனின்றது. மரமுங் கண்ணோடியைந்து கண்ணோடாமையின், இது தொழிலுவமம். இதனைச் சுரதமண்ணோடு கூடிய மரப் பாவையென்றுரைப்பாருமுளர். அஃதுரையன்மை காணப்படுங்கண்ணனன்றி அதனுண் மறைந்து நிகழ்கின்ற ஒருசாருள்ளீட்டாற் கூறினமையானும், "மரக்கண்ணோ மண்ணுன்வார் கண்ணென்—றிரக்கண்டாய்*" என்பதனானுமறிக. (ஈ)

நாள. கண்ணோட்ட மில்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணோட்ட மின்மையு மில். எ.

இ - ள். கண்ணோட்டம் இல்லவர் கண் இலர் - கண்ணோட்ட மில்லாதவர் கண்ணுடையருமல்லர்;—கண் உடையார் கண்ணோட்டம் இன்மையும் இல் - கண்ணுடையவர் கண்ணோட்டமிலராதலு மில்லை. எ - று.

கண்ணுடையராயிற் காட்சிக்கண்ணே அஃதோடுமென்பதுபற்றிக் கண்ணோட்ட மில்லவர் கண்ணிலரெனக கூறிப் பின் அதனையெதிர்மறைமுகத்தான் விளக்கினர். உம்மை இறந்ததழீஇய வெச்சவும்மை. இவையிரண்டுபொட்டாலுங் கண்ணோடாதாரிழிபு கூறப்பட்டது. (எ)

நாள அ. கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்
குரிமை யுடைத்திவ் வுலகு. அ.

இ - ள். கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு - முறைசெய்தலாகிய தன்தொழிலழியாமற கண்ணோட வல்ல வேந்தர்க்கு—உரிமை உடைத்து இவ்வுலகு - உரித்தாதன்மையுடைத்து இவ்வுலகம். எ - று.

தம்மொடு பயின்றூர் பிறரையிடுக்கண்செய்துழி அவரைக் கண்ணோடியொறு தார்க்கு முறை சிதைதல் மேல் "ஓர்ந்துகண்ணோடாது†" என்ற முதலாயவற்றானும் பெற்றாம். முறை சிதையவரும்வழிக கண்ணோடாமையும வாராவழிக் கண்ணோடலும் ஒருவற்கியல்பாதலருமையிற கண்ணோடவல்லார்கென்றும், அவரியல்புடையார்கு உலகமுழுதும செங்கோலஞ்சேறலின் உரிமையுடைதென்றுங் கூறினர். இதனுற கண்ணோடுமாறு கூறப்பட்டது. (அ)

நாள கூ. ஒறுத்தாற்றும் பண்பிலூர் கண்ணுங்கண் ணோடிப்
பொறுத்தாற்றும பண்பி னது. கூ.

இ - ள். ஒறுத்தாற்றும் பண்பிலூர்கண்ணும் - தம்மையொறுக்குமியல்புடையாரிடத்தும்—கண்ணோடிப் பொறுதாற்றும் பண்பின தலை-கண்ணோட்டமுடையரியாகக் குற்றத்தைப் பொறுக்குமியல்பின அரசர்கருத் தலையாயவியல்பாவது. எ - று.

பண்பிலுனென்றதனால் அவர்பயிற்சி பெற்றும். ஒறுத்தாற்றும், பொறுத்தாற்றுமென்பன ஈண்டொருசொன்னீர. (கூ)

---

* வாகணவு நாலுதே வல்லமை: னெஞ்சே—மைகணணோ மண்ணுன்வா கண்ணலி - நிக்கண்டாய்—வானுலை வெல்கொடியான் வணங்னன்ர காடலைவன—மீருளுவ தீதான றித் தொழுதை—முதலெதாள்ளாயிரம். † குறள். செய.

(அ0. பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் ஈபத்தக்க
நாகரிகம் வேண்டு பவர். 80.

இ - ள். நஞ்சு பெயக் கண்டும் உண்டு அமைவர் - பயின்றூர் தமக்கு நஞ்சிடக் கண்டுவைத்தும் கண் மறக்கமாட்டாமையின் அதனையுண்டு பின்னுமவரோடு மேவுவர்—ஈயத்தக்க நாகரிகம் வேண்டுபவர் - யாவராலும் விரும்பத்தக்க கண்ணோட்டத் தினை வேண்டுமவர். எ - று.

நாகரிகமென்பது கண்ணோட்டமாதல் "முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பி—னஞ்சு முண்பர் ஈனரா கரிகா" என்பதனாலுமறிக. அரசர் அவரையொருது கண்ணோடற்பாலது தம்மாட்டுக் குற்றஞ்செய்தழியென்பது இவ்விரண்டுபோட்டானுங் கூறப்பட்டது. (80)

நிகழ்ம் அதி.—ஒற்றாடல்.

அஃதாவது பகை, கொதுமல், நட்பென்னும் மூன்றுதிறத்தார்மாட்டும் நிகழ்ந்தனவறிதற்கு ஒற்றரையாளுதல். மேற்சொல்லிய இலக்கணத்தனைய அரசனுக்குத் தன்னூடு செலுத்தலுங்காலும் பிறர்நாடு கொள்ளுங்காலும் வேண்டுவன கூறுகின்றூராகலின், அவ்விருமைக்கும் இன்றியமையாதாய இது முன்வைக்கப்பட்டது.

(அக. ஒற்று முரைசான்ற நூலு மிவையிரண்டுந்
தெற்றென்க மன்னவன் கண். க.

இ - ள். ஒற்றும் உரை சான்ற நூலும் இவை இரண்டும் - ஒற்றும் புகழமைந்த நீதிநூலுமாகிய இவையிரண்டனையும்—மன்னவன் கண் தெற்றென்க - அரசன் தன்னிரண்டுகண்ணுமாகத் தெளிக. எ - று.

ஒற்றுத் தன்கண் செல்லமாட்டாத பரப்பெலாஞ்சென்று கண்டு ஆண்டு நிகழ்ந்தனவெலாமுணர்த்தலானும், நூல் அந்நிகழ்ந்தவறிறகுத் தன்னுணாவு செல்லமாட்டாத வினைகளெலாஞ் சொல்லியுணர்த்தலானும், இவ்விரண்டனையுமே தனக்கூனக்கண்ணும் ஞானக்கண்ணுமாகத் துணிந்துகொண்டொழுகு வென்பதாம். ஒற்றினை ஒற்றனூரா, வேந்தனை வேந்தெனூறபோல. தெற்றெனகவென்பது தெற்றெனவென்பது முதனிலையாக வந்த வியங்கோள். அது தெறவெனவென்னுஞ் செயவெனெச்சதனாறிக. இதனால் ஒற்றினது சிறப்புக் கூறப்பட்டது. (க)

(அஉ. எல்லார்க்கு மெல்லா நிகழ்பவை யெஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் ரொழில. உ.

இ - ள். எல்லார்க்கும் நிகழ்பவை எல்லாம் எஞ்ஞான்றும் வல் அறிதல் - எல்லார்கண்ணும் நிகழ்வனவெலலாவற்றையும் நாடோறும் ஒற்றான் விசாரித்தறிதல்—வேந்தன் தொழில் - அரசனுக்குரிய தொழில். எ - று.

எல்லார்க்குமென்றது மூன்றுதிறத்தாரையும். நான்காவது ஏனாவதன்பொருட்கண்வந்தது. நிகழ்வனவெல்லாமென்றது நல்லவுந்தியவுமாய சொற்களேபுஞ் செயல்களேபும். அவை நிகழ்ந்தபொழுதே அவறறிறருததக்க அளியாகத் தெறலாகச் செய்யவேண்டுதலின் வல்லறிதலென்றும், அவ்விருதொழிறரும் அறிதல் காரணமாகலின்

* கற்றுணர்ந்த கேள்வி

அதனையேயுபசாரவழக்காற் றெழிலென்றும் கூறினார். ஒற்றுனென்பது அதிகாரத் தான் வந்தது. இதனால் ஒற்றினுய பயன் கூறப்பட்டது. (உ)

குஅசு. ஒற்றினு னொற்றிப் பொருடெரியா மன்னவன்
கொற்றங் கொளக்கிடந்த தில். கூ.

இ - ள். ஒற்றினுன் ஒற்றிப் பொருள் தெரியா மன்னவன் - ஒற்றினுனே எல் லார்கண்ணும் நிகழ்ந்தவற்றை ஒற்றுவித்து அவற்றுனெய்தும் பயனையாராயாதவர சன்—கொற்றம் கொளக் கிடந்தது இல் - வென்றியடையக்கிடந்தது வேறொருதெறி யில்லை. எ - று.

அந்நிகழ்ந்தனவும் பயனும் அறியாது பகைக்கெளியனுதல் பிறிதிற்றீராமையின், கொற்றங்கொளக்கிடந்ததில்லென்றார். இதற்குக் கொளக்கிடந்ததொரு வென்றி யில்லை யென்றுரைப்பினுமமையும். இதனுல் அத்தொழில் செய்யாதவழி வருங்குறை கூறப்பட்டது. (கூ)

குஅச. வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதா ரென்றங்
கனைவரையு மாராய்வ தொற்று. ச.

இ - ள். தம் வினை செய்வார் சுற்றம் வேண்டாதார் என்ற அனைவரையும் ஆராய் வது - தங்காரியஞ் செய்வார், சுற்றத்தார், பகைவரென்று சொல்லப்பட்டஅனைவரை யும் சொற்செயல்களானுராய்வானே—ஒற்று - ஒற்றனுவான். எ - று.

தம்மென்றது அரசனுளைப்படுத்தி. அவனுக்குக் காரியஞ்செய்வார் செய்வன வும், சுற்றத்தார் தன்னிடத்தும் நாட்டிடத்துஞ் செய்வனவும், பகைவர் தன்னற்ற மாராய்தலும் மேற்றேறப்படுதலும் முன்னிடத்தி தன்னிடத்துச் செய்வனவுமறிந்து, அவற்றிற்கேற்றன செய்யவேண்டுதலின், இம்மூவகையாரையும் ஞசாமலாராய வேண்டுமென்பார், அனைவரையுமாராய்வ தொறென்றார். (ச)

குஅடி. கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தியாண்டு
மூகாவமை வல்லதே யொற்று. டு.

இ - ள். கடா உருவொடு - ஒற்றப்பட்டார் கண்டால் ஐயுறுதலடிவோடி பொருந்தி—கண் அஞ்சாது - அவர் ஐயுற்றறியலுறிற் செயிர்த்து நோக்கிய அவர்கண் ணிற்கஞ்சாது நின்று—யாண்டும் உகாமை வல்லதே ஒற்று - நான்குபாயமுஞ் செய் தாலும் மனத்துக்கொண்டவற்றை உமிழாமை வல்லவனே ஒற்றனுவான். எ - று.

கடாவென்பது கடுக்குமென்னும் பெயரெச்சத்தெதிர்மறை. ஐயுறுதலடிவாவன பார்ப்பார், வணிகர் முதலாயினுர வடிவு. (டு)

குஅசு. துறந்தார் படிவத்த ராகி யிறந்தாராய்ந்
தென்செயினுஞ் சோர்வில தொற்று. கூ.

இ - ள். துறந்தார் படிவத்தர் ஆகி இறந்து ஆராய்ந்து - முற்றத்துறந்தாராயும் விரதவொழுக்கினராயும் உள்புகுதற்காரியவிடங்களெல்லாம் உள்புக்கு ஆராயவேண்டு வன வாராய்ந்தறிந்து—என் செயினும் சோர்வு இலது ஒற்று - ஆண்டையார் ஐயுற்றுப் பிடித்துக் எல்லாத்துன்பமுஞ்செய்து கேட்டாலும் தன்னை வெளிப்படுத்தாதவனே ஒற் றனுவான். எ - று.

விரதவொழுக்கம் தீர்த்தயாத்திரை முதலாயின. செயினுமென்பது அதுவேர் ரென்று செய்வாரின்மை விளக்கி நின்றது. மேல் நால்வகையுபாயத்தினுஞ் சோர் வின்மைசொல்லிவைத்து ஈண்டுத் தண்டத்தைப் பிரித்துக்கூறியது அதனது பொறுத் தற்கருமைச்சிறப்பு நோக்கி. இதனுட் படிவமென்றதனை வேடமாக்கித் திறந்தார் வேடத்தாராகியென்றுரைப்பாருமுளர். (கூ)

திஅள மறைந்தவை கேட்கவற் றுகி யறிந்தவை
பையப்பா டில்லதே யொற்று. எ.

இ - ள். மறைந்தவை கேட்க வற்று ஆகி - ஒற்றப்பட்டார் மறையச்செய்த செயல்களை அவர்க்குள்ளாயினுராற் கேட்க வல்லனுய்—அறிந்தவை ஐயப்பாடு இல் லதே ஒற்று - கேட்டறிந்த செயல்களிற் பின் ஐயப்படாது துணியவல்லவனே ஒறற ஞவான். எ - று.

மறைந்தவை சொல்லுவாரையறிந்து, அவரயிராமற்சென்றுட்டித் தாமே சொல்லும்வகை அதற்கேற்ற சொல்லாக செயலாக முன்னே விளைத்து, அத்தொடர் பாற்கேட்குங்காலும் உரூதார்போன்றுநின்று கேட்கவேண்டுதலிற் கேட்கவற்றுகி யென்றும், கேட்டறிந்தவறறைத் தானேயையுற்றுவந்து சொல்லின் அரசனுல் அவற் றிறகேற்ற வினை செய்யலாகாமையின் ஐயப்பாடில்லதே யென்றுங்கூறினர். இவை நான்குபாட்டானும் ஒற்றின இலக்கணங கூறப்பட்டது. (எ)

திஅஅ. ஒற்றெற்றித் தன்ன பொருளோடு மற்றுமோ
ரொற்றினு லொற்றிக் கொளல். அ.

இ - ள். ஒறறு ஒற்றித் தன்பொருளோடும் - ஒருவற்றன் ஒற்றிவந்தறிவித்தகாரி யத்தன்னேயும்—மற்றும ஒருவற்றினுல் ஒறறிகொளல் - பிறனுெருவற்றனுலும் ஒறறு வித்து ஒப்புமை கண்டுகொள்க. எ - று.

ஒற்றப்பட்டாரோடொத்துநின்று மாறுபடக்கூறலுங் கூடுமாகலின், ஒருவன் மாற்றங் தேறப்படாதென்பதாம். (அ)

திஅக. ஒற்றெற் றுணராமை யாள்க வுடன்மூவர்
சொறறலருகத் தேறப் படும். கூ.

இ - ள். ஒற்று ஒற்று உணராமை ஆள்க - ஒற்றரையாளுமிடத்து ஒருவனேயொரு வனறியாமலானகு;—உடன மூவர் சொல் தொக்க தேறப்படும் - அவ்வனமாண்ட வொறறாமூவரை ஒருபொருணமேல் வேறுவேறுவிட்டால் அம்மூவர்சொல்லும்பயனு லொத்தனவாயின, அது மெய்யென்று தெளியபபடும். எ - று.

ஆயினென்பது வருவிக்கப்பட்டது. ஒருவனேயொருவனறியிற் றம்முளியைந்து ஒப்பகூறுவராகலின உணராமையாளகவெனறும, மூவர்க்கு நெஞ்சொறறுமைப்படு தலும பட்டால நீடுநிற்றலுங்கூடாமையிற் பிறறப்படுமெனறுங்கூறினர். இதனுனே அஃதொத்திலவாயிற பினனுமாராய்கவெனபதாகம் பெற்றும். (க)

திகூ. சிறப்பறிய வொற்றின்கட் செய்யறக செய்யிற்
புறப்பம்தந்தா னுகு மறை. கூ.

இ - ள். ஒற்றின்கண் சிறப்பு அறியச் செய்யறக - மறைந்தவையறிந்து கூறிய ஒற்றின்கட்செய்யுஞ்சிறப்பினே அரசன் பிறராறியச் செய்யாதொழிகு;—செய்யின்மறை

புறப்படுத்தான் ஆகும் - செய்தானுயிர் றன்னைத்தடுக்கப்பிறி மறையைத் தானே புறத்திட்டானும். எ - று.

மறையாவது அவனுரைத்தலையதாகவும், அவன் கூறியதாகவுமாம். சிறப்புப்பெற்ற வீரன் யாவனென்றும் இது பெறுதற்குக் காரணம் யாதென்றும் வினவுவாரும் இறுப்பாரும் அயலாராகலின், புறப்படுத்தானுமென்றார். இவைமூன்றுபாட்டானும் ஒற்றரை யாளுமாறும், அவரானிகழ்ந்தனவறியுமாறும், அறிந்தாற் சிறப்புச் செய்யுமாறும் கூறப்பட்டன. (சo)

சுo ம் அதி.—ஊக்கமுடைமை.

அஃதாவது மனம் மெலிதலின்றி வினைசெய்தற்கட் கிளர்ச்சியுடைத்தாதல். ஒற்றான் நிகழ்ந்தனவறிந்து அவற்றிற்கேற்ற வினைசெய்வானுக்கு இஃதின்றியமையாமையின், ஒற்றுடலின்பின் வைக்கப்பட்டது.

நிகூக. உடைய ரெனப்படுவ தூக்கமஃ தில்லா
ருடைய துடையரோ மற்று. க.

இ - ள். உடையர் எனப்படுவது ஊக்கம் - ஒருவரை உடையரென்று சொல்லச் சிறந்தது ஊக்கம்;—அஃது இல்லார் மற்று உடையது உடையரோ - அவ்வூக்கமில்லாதார் வேறுடையதுதானும் உடையராவரோ, ஆகார். எ - று.

வேறுடையதென்றது முன்னெய்திநின்ற பொருளே. உம்மை விகாரத்தாற்றொக்கது. காக்குமாற்றலிலராகலின், அதுவுமிழப்ப ரென்பதாம். (க)

நிகூஉ. உள்ள முடைமை யுடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும். உ.

இ - ள். உள்ளம் உடைமை உடைமை - ஊக்கமுடைமையே ஒருவனுக்கு நிலைநின்ற உடைமையாவது;—பொருள் உடைமை நில்லாது நீங்கிவிடும் - மற்றைப் பொருளுடைமை நிலைநில்லாது நீங்கிப்போம். எ - று.

உள்ளம் ஆகுபெயர். ஊக்கம் உள்ளத்துப் பண்பாகலின், அதற்கு நிலைநிற்றலும், பொருள் உடம்பினும் வேறும் அழிதன்மாலைத்தாகலின் அதற்கு நிலை நில்லாமையுங் கூறினர். கூறவே, அஃது உடைமையன்றென்பது பெறப்பட்டது. (உ)

நிகூங. ஆக்க மிழந்தேமென் றல்லாவா ரூக்க
மொருவந்தங் கைத்துடை யார். ங.

இ - ள். ஆக்கம் இழந்தேம் என்று அல்லாவார் - இழந்தாராயினும் யாம் கைப்பொருளேயிழந்தேமென் றலமரார்—ஒருவந்தம் ஊக்கம் கைத்து உடையார் - நிலை பெற்ற ஊக்கத்தைக் கைப்பொருளாக வுடையார். எ - று.

ஆக்கம் ஆகுபெயர். ஒருவந்தமாய ஆக்கமென்க. கைத்து கையகத்தாயபொருள்: "கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ் செய்ம்மின்*" என்றார் பிறரும். அல்லாமைக்கேது வருகின்ற பாட்டாற் கூறுப. (ங)

---

* மற்றற்கா நல்வினை யாமியை மென்னுது—கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ் செய்ம்மின்—மூற்றி யிருக்க னிலைபொழியத் தேவியா—னன்கா புரிந்தலுமுண்டு—காலடியார், இளமை நிலையாமை.

குகச. ஆக்க மதர்வினுய்ச் செல்லு மசைவிலா
ஊக்க முடையா னுழை. ச.

இ - ள். அசைவு இலா ஊக்கம் உடையானுழை - அசைவில்லாத ஊக்கத்தை யுடையான்மாட்டு—ஆக்கம் அதர் வினுய்ச் செல்லும் - பொருள் தானே வழிவினை விக்கொண்டு செல்லும். எ - று.

அசைவின்மை இடுக்கண் முதலியவற்றுற்றளராமை. வழிவினவிச் சென்று சார் வார்போலத் தானே சென்று சாருமென்பார், அதர்வினுய்ச்செல்லுமென்றார். எய்தி நின்ற பொருளினும் அதற்குக் காரணமாயவூக்கஞ் சிதந்ததென்பது இவை நான்கு பாட்டானுங் கூறப்பட்டது. (ச)

குகடு. வெள்ளத் தனைய மலர்நீட்ட மாந்தர்தம்
மூள்ளத் தனைய துயர்வு. டு.

இ - ள். வெள்ளத்து அனைய மலர் நீட்டம் - நின்ற நீரினளவினவாம் நீர்ப்பூக் களின்றழினது நீளங்கள்,—மாந்தர்தம் உள்ளத்து அனையது உயர்வு - அதுபோல் மக்கடம்மூக்கத்தளவினதாம் அவருயர்ச்சி. எ - று.

மலர் ஆருபெயர். நீர் மிக்க தினையும் மலர்த்தான் நீளுமென்பது பட, வெள்ளத் தனையவென்றார். இவ்வுவமையாற்றலான் ஊக்கமிக்க தினையும் மக்களுயர்வரென்பது பெறப்பட்டது. உயர்தல் பொருள்படைகளான் மிகுதல். (ஏ)

குகஉ. உள்ளுவ தெல்லா முயர்வுள்ளன் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து. கூ.

இ - ள். உள்ளுவது எல்லாம் உயர்வு உள்ளல் - அரசராயினுர் கருதுவதெல் லாம் தம்முயர்ச்சியையே கருதுக;—அது தள்ளினும் தள்ளாமை நீர்த்து - அவ் வுயர்ச்சி பால்வகையாற் கூடிற்றில்லையாயினும், அக்கருத்துத் தள்ளாமை நீர்மை யுடைத்து. எ - று.

உம்மை தள்ளாமை பெரும்பான்மையாதல் விளக்கிற்று. தள்ளியவழியுந் தாளாண் மையிற் றவறின்றி நல்லோராற் பழிக்கப்படாமையின், தள்ளாவியற்கைத்தென்பதாம். மேல் உள்ளத்தனையதுயர்வு என்றதனையே வற்புறுத்தியவாறு. (கூ)

குகஎ. சிதைவிடத் தொல்கா ருரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டேன்றுங் களிறு. எ.

இ - ள். களிறு புதை அம்பின் பட்டுப் பாடு ஊன்றும் - களிறு புதையாகிய அம்பாற் புண்பட்டவிடத்துத் தளராது தன்பெருமையை நிலைநிறுத்தும்;—உரவோர் சிதைவிடத்து ஒல்கார் - அதுபோல ஊக்கமுடையார் தாங்கருதிய உயர்ச்சிக்குச் சிதைவு வந்த விடத்துத்தளராது தம்பெருமையை நிலைநிறுத்துவர். எ - று.

புதை அம்புக்கட்டு: பன்மை கூறியவாறு. பட்டாலென்பது பட்டெனத் திரிந்து நின்றது. ஒல்காமை களிற்றுடனும், பாடேன்றுதல் உரவோருடனும், சென்றியைந்தன. தள்ளினுந்தவருதுள்ளியது முடிப்பரென்பதாம். இவை மூன்றுபாட்டானும் ஊக்க முடையாரதுயர்ச்சி கூறப்பட்டது. (எ)

இகஅ. உள்ள மிலாதவ ரெய்தா ருலகத்து
வள்ளிய மென்னுஞ் செருக்கு. அ.

இ - ள். உள்ளம் இலாதவர் - ஊக்கமில்லாதவரசர்—உலகத்து வள்ளியம் என்னும் செருக்கு எய்தார் - இவ்வுலகத்தாருள் யாம் வண்மையுடையேமென்று தம்மைத் தா மதித்தலைப் பெரார். எ - று.

ஊக்கமில்லையாகவே, முயற்சி, பொருள், கொடை, செருக்கு இவைமுறையே இலவாமாகலின், செருக்கெய்தாரென்றார். கொடைவென்றியினுள வின்பம் தமக்கல்லது பிறர்க்குப் புலனுகாமையின் தன்மையாற் கூறப்பட்டது. (அ)

இகஉ. பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின். உ.

இ - ள். பரியது கூர்ங்கோட்டது ஆயினும் - எல்லாவிலங்கினுந் தான் பேருடம்பினது அதவேயுமன்றிக் கூரிய கோட்டையுமுடையதாயினும்,—யானை புலி தாக்குறின் வெரூஉம் - யானை தன்னைப் புலியெதிர்ப்படின் அதற்கஞ்சும். எ - று.

பேருடம்பான் வலிமிகுதி கூறப்பட்டது. புலியின்மிக்க மெய்வலியுங் கருவிச் சிறப்புமுடைத்தாயினும் யானை ஊக்கமின்மையான் அஃதுடைய அதற்கஞ்சுமென்ற இது, பகைவரின் மிக்க மெய்வலியுங் கருவிச்சிறப்புமுடையராயினும் அரசர் ஊக்க மிலராயின் அஃதுடையவரசர்க்கஞ்சுவரென்பது தோன்றநின்றமையின், பிறிது மொழிதல். (ஆ)

உ00. உரமொருவற் குள்ள வெறுக்கையஃ தில்லார்
மரமக்க ளாதலே வேறு. உ0.

இ - ள். ஒருவற்கு உரம் உள்ள வெறுக்கை - ஒருவற்குத் திண்ணியவறிவாவது ஊக்கமிகுதி;—அஃது இல்லார் மரம் - அவ்வூக்கமிகுதியில்லாதார் மக்களாகார், மரங்களாவார்;—மக்களாதலே வேறு - சாதிமரங்களோடு இம்மரங்களிடை வேற்றுமை வடிவு மக்கள்வடிவே; பிறிதில்லை. எ - று.

உரமென்பது அறிவாதல் "உரனென்னுந் தோட்டியான்*" என்பதனானுமறிக. மரமென்பது சாதியொருமை. மக்கட்குள்ள நல்லறிவுங் காரியமுயற்சியுமின்மை பற்றி மரமென்றும், மரத்திற்குள்ள பயன்பாடின்மைபற்றி மக்களாதலே வேறென்றுங் கூறினார். பயன் பழமுதலியவும், தேவர்கோட்டம், இல்லம், தேர், நாவாய் கட்டு உறுப்பாதலும் முதலிய. இவைமூன்றுபாட்டானும் ஊக்கமில்லாதாரதிழிவு கூறப்பட்டது. (உ0)

ஊக்கம் அதி.—மடியின்மை.

அஃதாவது கருதியன செய்யுங்காற் சோம்புதலில்லாமை. ஊக்கமுடையார்க்கு ஒரோவழிக் குணவயத்தான் மடி வருதலுண்டு, இஃதூக்கமுடைமையின் பின் வைக்கப்பட்டது.

உ0க. குடியென்னுங் குன்ற விளக்க மடியென்னு
மாசூர மாய்ந்து கெடும். க.

* குறள், உச.

இ - ன். குடி என்னும் குன்று விளக்கம் - தான் பிறந்த குடியாயெ ன்தா விளக்கு—மடி என்னும் மாசு ஊர மாய்ந்து கெடும் - ஒருவன் மடியாயெ இருளடர ன்திப்போம். எ - று.

உலகமடையுள்ளனவெனையும் இடையருது தன்னுட்பிறந்தாரை விளக்குதலிற் குடியைக்குன்றுவிளக்கமென்றும், தாமதகுணத்தான் வருதலின் மடியை மாசென்றும், அஃது வேனியிருள்போலாது அவ்விளக்கைத் தானடார்த்து மாய்க்கும் வலியுடைமையின் மாசுமாய்ந்துகெடுமென்றுங் கூறினர். கெடுதல் பெயர்வழக்குமில்லையாதல்.
(எ)

கூ0உ. மடியை மடியா வொழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர். உ.

இ - ன். குடியைக் குடியாக வேண்டுபவர் - தாம் பிறந்த குடியை மேன்மேலுயரும் சற்குடியாக வேண்டுவோர்—மடியை மடியா வொழுகல் - மடியை மடியாகவே கருதி முயற்சியோடொழுகுக. எ - று.

முயற்சியோடென்பது அவாய்நிலையான் வந்தது. ஒரு பிற் கொடியது பிறிதின் மைபற்றி நெருப்பை நெருப்பாகவே கருதுகவென்றாற்போல மடியிற்றீயது பிறிதின் மைபற்றிப் பின்னும் அப்பெயர்தன்னானே கூறினர். அங்ஙனங்கருதியதனைக் கடிந்து மூண்டெழுகவே தாமுயர்வர், உயரவே, குடியுயருமென்பார், குடியைக் குடியாக வேண்டுபவரென்றார். அங்ஙனமொழுகாக்காற் குடியழியுமென்பது கருத்து. இனி மடியாவென்பதனை வினையெச்சமாக்கிக் கெடுத்தொழுகுக வென்றுரைப்பாருமுளர்.()

கூ0ஊ. மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியுந் தன்னினு முந்து. ஊ

இ - ன். மடி மடிக்கொண்டு ஒழுகும் பேதை பிறந்த குடி—விடத்தருவதாய மடியைத் தன்னுன்னே கொண்டொழுகும் அறிவில்லாதான் பிறந்தகுடி—தன்னினும் முந்து மடியும் - அவன்றன்னினும் முந்துறவழியும். எ - று.

அழிவு தருவதனை அகத்தே கொண்டொழுகுதலிற் பேதையென்றும், அவனைப் புறத்தாப்பவெதாகலிற் குடி தன்னினுமுந்துற வழியுமென்றுங் கூறினர். ஆக்கத்திற் பிற்படினும் அழிவின் முற்படுமென்பதாம்.
(கூ)

கூ0எ. குடிமடிந்து குற்றம் பெருகு மடிமடிந்து
மாண்ட வுளுற்றி லவர்க்கு. எ.

இ - ன். மடி மடிந்து மாண்ட உளுற்ற இலவர்க்கு - மடியின்கண்ணே வீழ்தலாற் றிரிந்திய முயற்சி யிலராயினர்க்கு—குடி மடிந்து குற்றம் பெருகும் - குடியும் மடிந்து குற்றமும் பல்கும். எ - று.

மடிதனைத் திரிந்துகின்ற வினையெச்சம் இலவென்னுங் குறிப்புவினைப்பெயர் கொண்டது. குற்றங்கள் முன்னர்க் கூறுப. இவை நான்குபாட்டானும் மடியின்றீமை கூறப்பட்டது.
(எ)

கூ0ஏ. நெடுநீர் மறவி மடிதுயி னென்னுங்
கெடுநீரார் காமக் கலன். ஏ.

இ - ள். மடி நெடுநீர் மறவி துயில் நான்கும் - மடியும் விரைந்துசெய்வதனை நீட்டித்துச்செய்யுமியல்பும் மறப்பும் துயிலுமாகிய இந்நான்கும்—நெடும் நீரார் காமக் கலன் - இறக்குமியல்பினையுடையார் விரும்பியேறும் மரக்கலம். எ - று.

முன்னிற்கற்பாலதாய மடி செய்யுணேக்கி இடைநின்றது. நெடுமையாகிய காலப்பண்பு அதன்கணிகழ்வதாய செயன்மேனின்றது. காலநீட்டத்தையுடைய செயன்முதல் மூன்றும் தாமதகுணத்திறேன்றி உடனிகழ்வனவாகலின், மடியோடு ஒருங்கெண்ணப்பட்டன. இறக்குமியல்பு நாளுலத்தல். இவை துன்புறுநீரார்க்கு இன்புறுத்துவபோன்று காட்டி அவர் விரும்பிக்கொண்டவழித் துன்பத்திடை வீழ்த்தலின், நாளுலத்தார்கு ஆக்கம் பயப்பதுபோன்றுகாட்டி அவர் விரும்பியேறிய வழிக் கடலிடை வீழ்குகுங் கலத்தினை யொக்குமென்னும் உவமைக்குறிப்புக் காமக் கலனென்னுஞ் சொலலாற பெறப்பட்டது இதற்கு விரும்பிப் பூணுமாபரணமென் றுரைப்பாருமுளர். (இ)

கூ0கூ. படியுடையார் பற்றமைந்தக் கண்ணு மடியுடையார்
மாண்பய னெய்த லரிது. கூ.

இ - ள். படி உடையார் பற்று அமைந்தக்கண்ணும் - நிலமுழுதுமாண்டாரது செல்வந் தானே வந்தெய்தியவிடத்தும்—மடி உடையார் மாண் பயன் எய்தல் அரிது- மடியுடையார் அதனுண் மாண்டபயனை எய்துதலில்லை. எ - று.

உம்மை எய்தாமை விளக்கிநின்றது. மாண்பயன் பேரின்பம். அச்செல்வம் அழியாமதாக்கும முயற்சியினமையின் அழியும், அழியவே, தந்துன்பநீங்காமதன்பதாம். இதனகு நிலமுழுதுமுடையசீவநதர் துணையாதல் கூடியவிடத்துமென் றுகரப் பாருமுளர். (உ)

கூ0எ. இடிபுரிந் தெள்ளுஞ்சொற் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட வுளுற்றி லவர். எ.

இ - ள். மடி புரிந்து மாண்ட உளுற்று இலவர் - மடியை விரும்புதலான் மாண்ட முயற்சி யில்லாதார்—இடி புரிந்து எள்ளும் சொற் கேட்பர் - தந்நட்டார் முன் கழறு தலை மிகசசெய்து அதனுறபயன் காணுமையிற் பின் இகழ்ந்து சொல்லுஞ் சொல்லைக் கேட்பர். எ - று.

இடியென்னும் முதனிலைத்தொழிற்பெயரான், நட்டாரென்பது பெறாரும். அவரி கழ்ச்சி சொல்லலீவ, பிறரிகழ்ச்சி சொல்லாமையே முடிந்தது. அவறறிற்கெல்லாம் மாறுசொல்லு மாறறலின்மையின், கேட்பரென்றார். (ஊ)

கூ0அ. மடிமை குடிமைக்கட் டங்கிற்றன் னென்னுர்க்
கடிமை புகுதற் கும். அ.

இ - ள். மடிமை குடிமைக்கண் தங்கின் - மடியினது தன்மை குடிமையுடை யான்கண்ணே தங்குமாயின்,—தன் ஒன்னுர்க்கு அடிமை புகுத்திவிடும் - அஃதவனைத் தன் பகைவாக்கு அடியனுந்தன்மையை யடைவித்துவிடும். எ - று.

மடியினதுதன்மை காரியக்கேடு. குடிமை குடிசெய்தற்றன்மை அஃது அதனை புடையவரசன்மேறறுதல், தன்னென்னுர்க்கென்றதனுன் அறிக. அடியனுந்தன்மை தாழ்ந்துநின்றேவல்கேட்டல். இவை நான்குபாட்டானும் மடிமைக்குறறங்கள் கூறப் பட்டன. (அ)

கo கூ. குடியாண்மை யுள்வந்த குற்ற மொருவன்
மடியாண்மை மாற்றக் கெடும். கூ.

இ - ள். ஒருவன் மடி ஆண்மை மாற்ற - ஒருவன் தன்மடியாளுந் தன்மையை யொழிக்கவே,—குடி ஆண்மையுள் வந்த குற்றம் கெடும் - அவன் குடியுள்ளும் ஆண் மையுள்ளும் வந்த குற்றங்கள் கெடும். எ - று.

மடியாளுந்தன்மை மடியுடைமைக்கேதுவாய தாமதகுணம். குடியாண்மை யென்பது உம்மைத்தொகை. அவற்றின்கண் வந்தகுற்றமென்றது மடியானன்றி முன்னே பிறகாரணங்களான் நிகழ்ந்தவற்றை. அவையும் மடியாண்மைமை யமாற்றி முயற்சியுடையனாக நீங்குமென்பதாம். (க)

கூகo. மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்
ருஅய தெல்லா மொருங்கு. கo.

இ - ள். அடி அளந்தான் தாயது எல்லாம் - தன்னடியளவானே எல்லாவுலகையு மளந்த இறைவன் கடந்த பரப்புமுழுதையும்—மடி இலா மன்னவன் ஒருங்கு எய் தும் - மடியிலாதவரசன் முறையானன்றி ஒருங்கேயெய்தும். எ - று.

அடியளந்தானென்றது வாளா பெயராய் நின்றது. தாவியதென்பது இடைக் குறைந்து நின்றது. எப்பொழுதும் வினையின்கண்ணே முயறலின், இடையீடின்றி யெய்துமென்பதாம். இவையிரண்டுபாட்டானும் மடியிலாதான் எய்தும்பயன் கூறப் புட்டது. (கo)

சூஉ ம் அதி.—ஆள்வினையுடைமை.

அஃதாவது இடைவிடாத மெய்ம்முயற்சியுடையனாதல். அஃது ஆளும் வினை யெனக் காரியத்தாற் கூறப்பட்டது. மடிகெடுத்தாலும் வினைமுயறசியானன்றியாளப் படாமையின், இது மடியின்மையின்பின் வைக்கப்பட்டது.

கூகக. அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும். க.

இ - ன். அருமை உடைத்து என்று அசாவாமை வேண்டும் - தஞ்சிறுமை நோக்கி நாமிவ்வினைமுடித்தலருமையுடைத்தென்று கருதித் தளராதொழிக,—பெருமை முயற்சி தரும் - அது முடித்தறகேற்ற பெருமையைத் தமக்கு முயற்சியுண்டாக் கும். எ - று.

சிறுமைநோக்கி யென்பது பெருமை தருமென்றதனானும், வினைமுடித்தலென் பது அதிகாரத்தானும், வருவிக்கப்பட்டன. விடாதமுயலத் தாம் பெரியாரவர், ஆகவே, அரியனவும் எளிதின் முடியுமென்பதாம். (க)

கூகஉ. வினைக்கண் வினைகெட லோம்பல் வினைக்குறை
தீர்த்தாரிற் றீர்ந்தன் றுலகு. உ.

இ - ன். வினைக்குறை தீர்த்தாரின் உலகு தீர்ந்தன்று - வினையாகிய குறையைச் செய்யாது விட்டாரை உலகம் விட்டது—வினைக்கண் வினைகெடல் ஓம்பல் - ஆத் லால், செய்யப்படும் வினைக்கட்டவிர்த்திருத்தலே யொழிக. எ - று.

குறை இன்றியமையாப்பொருள். அது "பயக்குறை யில்லதாம் வாழுநாளே*" என்பதனனுமறிக. இதற்கு வினைசெய்யவேண்டுங் குறையை நீங்கினரினீங்கிறென் றுரைப்பாருமுளர். (உ)

கூகஙு. தாளாண்மை யென்னுந் தகைமைக்கட் டங்கிற்றே
வேளாண்மை யென்னுஞ் செருக்கு. !கூ.

இ - ள். தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்று - முயற்சியென்று சொல்லப்படுகின்ற உயர்ந்த குணத்தின்கண்ணே நிலைபெற்றது—வேளாணமை என்னும் செருக்கு - எல்லார்க்கு முபகாரஞ்செய்தலென்னும் மேம்பாடு. எ - று.

பொருள்கைகூடுதலான் உபகரித்தற்குரியார் முயற்சியுடையாரென்பார் அவரக் குணங்கண்மேல் வைத்தும், அது பிறாமாட்டிலலையனபா தங்கிற்றேயெனனும் கூறினர். இவை மூன்றுபாட்டானும முயறசியது சிறப்புக் கூறப்பட்டது. (கூ)

கூகச. தாளாண்மை யிலலாதான் வேளாண்மை பேடிகை
வாளாணமை போலக கெடும. ச.

இ - ள். தாளாண்மை இல்லாதான் வேளாண்மை - முயற்சி இல்லாதவன் உபகாரியாகதன்மை—பேடி கை வாள் ஆண்மை போலக் கெடும - படைகண்டாலஞ்சும் பேடி அதனிடைத் தனகையில் வாளை ஆளுதறறனமைபோல இலலையாம. எ - று.

ஆளென்பது முதனிலைத்தொழிற்பெயர். பேடி வாளைப்பணி கோடற்கருத் துடையளாயினும் அது தன்னச்சததான் முடியாத வாறுபோல முயற்சியில்லாதான் பலர்க்குமுபகரித்தறகருத்துடையனுயினும் அது தன் வறுமையான முடியாதென்பதாம். வாளாண்மையென்பதறகு வாளாறசெய்யுமாண்மையென்றுரைப்பாருமுளர். இதனுன் அஃதிலலாதானது குறறங் கூறப்பட்டது. (ச)

கூகடு. இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண். டு.

இ - ள். இன்பம் விழையான் வினை விழைவான் - தனக்கின்புத்தை விரும்பானுகி வினைமுடித்தலையே விரும்புவான்—தன்கேளிர் துனபம துடைதது ஊன்றும தூண-தனகேளிராகிய பாரதது னனுன்பதது னை நீக்கி அதனை தாகுந தூணும. எ - று.

இஃதேகதேசவுருவகம். ஊன்றுமென்றது அப்பொருட்டாதல் "மதலையாய் மற்றதன் வீழுன்றி யாகுந†" என்பதனுனுமறிக. சுறறததார் நட்டாரது வறுமையுணர்ந்து அவாகமேகமருசெயயுமாறறலையுடையனுமெனவே, தனனைகூறபவேண்டாவாயிறறு. காரியததை விழையாது காரணததை விழைவான் எலலாபபயனு மெயதுமென்றதனுல், காரணததை விழையாது காரியததை விழைவான யாதுமெயதானென பது பெறறும. இதனுல் அஃதுடையானது நனமை கூறபபட்டது. (டி)

கூகசு. முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
யின்மை புகுதது விடும். சு.

---

* புதாநாறறு, கச-ம குறளில மேலெடுத்தகு காட்டியுளம.

† தெலலை நனப்பட்ட வால மரத்தை—மதலையாய் மறறதன வீழுன்றி யாகுக—குதலலை தன்தைகட் டோன்றறனன் பெறற—புதலவன் மறைப்பக கெடும—கோடியார், தாளாணமை.

இ - ள். முயற்சி திருவினை ஆக்கும் - அரசர்மாட்டினதாய முயற்சி அவரது செல்வத்தினை வளர்க்கும்;—முயற்று இன்மை இன்மை புகுத்திவிடும் - அஃதில்லாமை வறுமையை யடைவித்துவிடும். எ - று.

செல்வம் அறுவகையங்கங்கள். வறுமை அவற்றுள் வறியராதல். அதனை யடைவிக்கவே, பகைவரானழிவரென்பது கருத்து. (சு)

சுகள. மடியுளாண் மாமுகடி யென்ப மடியிலான்
ருளுளா டாமரையி னாள். எ.

இ - ள். மா முகடி மடி உளாள்-கரியசேட்டை ஒருவன் மடியின்கண்ணே யுறையும்;—தாமரையினாள் மடி இலான் தாள் உளாள் என்ப - திருமகள் மடியிலாதானது முயற்சிக்கண்ணே யுறையுமென்று சொல்லுவர் அறிந்தோர். எ- று.

பாவத்தின் கருமை அதன்பயனுய முகடிமேலேற்றப்பட்டது. மடியும் முயற்சியுமுடையார்மாட்டு நிலையை அவை தமமேலவைத்துக் கூறினர். இவையிரண்டோட்டானும அவ்விருமைக்குமேலது கூறப்பட்டது. (எ)

சுகஅ. பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்
தாளவின் மையை பழி. அ.

இ - ள். பொறி இன்மை யார்க்கும் பழியன்று - பயனைத்தருவதாய விதியில்லாமை ஒருவறகும் பழியாகாது;—அறிவு அறிந்து ஆள்வினை இன்மை பழி - அறிய வேண்டுமவற்றையறிந்து வினைசெய்யாமையே பழியாவது. எ - று.

அறியவேண்டுவன வலி முதலாயின. தெய்வமியையாவழி ஆள்வினையுடைமையாற் பயனில்லையென்பாரை நோக்கி, உலகம் பழவினைபற்றிப் பழியாது ஈண்டைக் குறைமுடைமைபற்றியே பழிபபதென்றார். அதனால் விடாது முயலகவென்பது குறிப்பெசசம. (அ)

சுகக. தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். கூ.

இ - ள். தெய்வதத்தான் ஆகாது எனினும்-முயன்றவினை பால்வகையாற் கருதிய பயனைத் தாராதாயினும்,—முயற்சி தன்மெய் வருத்தக் கூலி தரும் - முயற்சி தனக்கிடமாய உடம்பு வருந்திய வருத்தத்தின் கூலியளவு தரும், பாழாகாது. எ - று.

தெய்வத்தானையவழித் தன்னளவின் மிக்க பயனைத்தருமென்பது உம்மையாற் பெற்றாம. இருவழியும பாழாகலின்மையின் தெய்வநோக்கியிராது முயல்கவென்பது கருத்து. (கூ)

சுஉ0. ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துளுற்று பவர். க0.

இ - ள். ஊழையும் உப்பக்கம் காண்பர் - பயனை விலக்குவதாய ஆழினையும் புறங்காண்பர்—உலைவு இன்றித் தாழாது உளுற்றுபவர் - அவ்விலக்கிற் கினையாது வினையைத் தாழ்வற முயல்வார். எ - று.

தாழ்வதுதல் சூழ்ச்சியினும், வலிமுதலியவறிதலினும், செயலினும் குற்றமறுதல். ஊழ் ஒருகாலாக இருகாலாகவல்லது விலக்கலாகாமையிற் பலகான் முயல்வார் பய

னெய்துவ ரென்பார், உப்பக்கங்காண்பரென்றார். தெய்வத்தா னீடிக்கண்வரினும் முயற்சி யிடற்பாலதன்றென்பது இவை மூன்றுபாட்டானும் கூறப்பட்டது. (உ)

கூடம் அதி.—இடுக்கணழியாமை.

அஃதாவது வினையின்கண் முயல்வான் தெய்வத்தாலுக, பொருளின்மையா லுக, மெய்வருத்தத்தாலுகத் தனக்கிடுக்கண் வந்துழி, அதற்கு மனங்கலங்காமை. அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

கூஉக. இடுக்கண் வருங்கா னகுக வதனை
யடுத்தூர்வ தஃதொப்ப தில். க.

இ - ள். இடுக்கண் வருங்கால் நகுக - ஒருவன் வினையாற்றனக்கிடுக்கண் வரு மிடத்து அதற்கழியாது உண்மகிழ்க;—அதனை அடுத்து ஊர்வது அஃது ஒப்பது இல் - அவ்விடுக்கணை மேன்மேலடரவல்லது அம்மகிழ்ச்சிபோல்வது பிறிதில்லையாக லான். எ - று.

வினை இனிது முடிந்துழி நிகழற்பாலதாய மகிழ்ச்சியை அதற்கிடையே இடுக் கண் வருவழிச் செய்யவே, அவன் அழிவின்றி மனவெழுச்சியான் அதனைத்தள்ளி அக் குறை முடிக்குமாற்றலுடையனுமாகலின், அதனையடுத்தூர்வதஃதொப்பதில்லென்றார்.

கூஉஉ. வெள்ளத் தனைய விடும்பை யறிவுடையா
னுள்ளத்தி னுள்ளக் கெடும். உ.

இ - ள். வெள்ளத்து அனைய இடும்பை - வெள்ளம்போலக் கரையிலவாய இடும் பைகளெல்லாம்,—அறிவுடையான் உள்ளத்தின் உள்ளக் கெடும் - அறிவுடையவன் தன்னுள்ளத்தான் ஒன்றனை நினைக்க, அத்துணையானே கெடும். எ - று.

இடும்பையாவது உள்ளத்து ஒரு கோட்பாடேயன்றிப் பிறிதில்லையென்பதூஉம் அது மாறுபடக்கொள்ள நீங்குமென்பதூஉம் அறிதல்வேண்டுதலின், அறிவுடையா னென்றும், அவ்வுபாயத்தெண்மை தோன்ற உள்ளத்தினுள்ளகென்றும் கூறினார். இவையிரண்டுபாட்டானும் ஊழினுலை இடுக்கணால் அழியாமைக்கு உபாயங் கூறப் பட்டது. (உ)

கூஉஊ. இடும்பைக் கிடும்பை படுப்ப நிடும்பைக்
கிடும்பை படாஅ தவர். ஊ.

இ - ள். இடும்பைக்கு இடும்பை படாதவர் - வினைசெய்யுங்கால் அதற்கிடையே வந்த துன்பத்திற்கு வருந்தாதவர்—இடும்பைக்கு இடும்பை படுப்பர் - அத்துன்பந் தனக்குத் தாந்துன்பம் விளைப்பர். எ - று.

வருந்துதல் இளைத்து விடுதினைத்தல். மனத்திட்பமுடையராய் விடாது முய லவே வினை முற்றுப்பெற்றுப் பயன்படும், படவே, எல்லாவிடும்பையுமிலவாகலின், இடும்பைக்கிடும்பை படுப்பரென்றார். வருகின்றபாட்டிரண்டினும் இதனைவ் வாறே கொள்க. சொற்பொருட்பின்வருநிலை. (ஊ)

கூஉ. மடித்தவா யெல்லாம் படைன்ஞ் ஞற்ற
விடுக்க ணிடர்ப்பா டெடைத்து. ஏ.

இ - ள். மடித்த வாய் எல்லாம் பகடு அன்ஞன் - விலங்கிய விடங்களெல்லா வற்றினுஞ் சகடமீர்க்கும் பகடுபோல வினையை யெடுத்துக்கொண்டு உய்க்கவல் லானை—உற்ற இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து-வந்துற்ற இடுக்கண் தானே இடர்ப் படுதலையுடைத்து. எ - று.

மடித்தவாயெல்லாமென்பது பொதுப்பட நின்றமையின், சகடத்திற்கு அவற்று நிலமுதலியவாகவும், வினைக்கு இடையூறுகளாகவுங் கொள்க. பகடு மருங்கொற்றியும் மூக்கூன்றியும் தாடவழ்ந்தும் * அரிதினுய்க்குமாறுபோலத் தன்மெய்வருத்த நோக் காது முயன்றுய்ப்பானென்பார், பகடன்ஞனென்றார். (ச)

கூஉடு. அடுக்கி வரினு மழிவிலா னுற்ற
விடுக்க ணிடுக்கட் படும். டு.

இ - ள். அடுக்கி வரினும் - இடைவிடாது மேன்மேல் வந்தனவாயினும்,—அழி விலான் உற்ற இடுக்கண் இடுக்கட்படும் - தன்னுள்ளக்கோட்பாடு விடாதான் உற்ற விடுக்கண்டாம் இடுக்கணிலே பட்டுப்போம். எ - று.

ஒன்றே பலகால் வருதலும் வேறுபட்டன வீராய்வருதலுமடங்க, அடுக்கிவரினு மென்றார். அழிவென்னுங்காரணப்பெயர் காரியத்தின்மேனின்றது. இவை மூன்று பாட்டானும் தெய்வத்தானையதற்கழியாமை கூறப்பட்டது. (டு)

கூஉசு. அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென்
றேம்புத றேற்ற தவர். கூ.

இ - ள். அற்றேம் என்று அல்லற்படுபவோ - வறுமைக்காலத்து யாம் வறிய மாயினேமென்று மனத்தாற் றுயருழப்பரோ—பெற்றேம் என்று ஓம்புதல் தேற்ற தவர் - செல்வக்காலத்து இது பெற்றேமென்று இவறுதலையறியாதார். எ - று.

பெற்றவழி இவறுமை நோக்கி அற்றவழியும் அப்பகுதி விடாதாகலின், அல்லற் பாடில்லையாயிற்று. இதனுற் பொருளின்மையானையதற்கு அழியாமையும் அதற்கு பாயமுங் கூறப்பட்டன. (க)

கூஉஎ. இலக்க முடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்
கையாறுக் கொள்ளாதா மேல். எ.

இ - ள். உடம்பு. இடும்பைக்கு இலக்கம் என்று - நாற்கதியினுமுள்ள வுடம்புகள் இடும்பையென்னும் வாளுக்கிலக்கென்று தெளிர்த்து,—கலக்கத்தைக்கையாறுக்கொள் ளாதாம் மேல் - தம்மேல் வந்த இடும்பையை இடும்பையாகக் கொள்ளார் அறிவுடை யார். எ - று.

ஏகதேசவுருவகம். உடம்பு சாதிப்பெயர். கலக்கமென்னுங் காரியப்பெயர் கார ணத்தின்மேனின்றது. கையாறென்பது ஒருசொல்; இதற்கு ஒழுக்கமெறியென் றுரைப்பாருமுளர். இயல்பாகக் கொள்வரென்பது குறிப்பெச்சம். (எ)

கூஉஅ. இன்பம் விழையா விடும்பை யியல்பென்பான்
றுன்ப முறுத லிலன். அ.

* சிவகசிந்தாமணி, முத்தியிலம்பகம், கஅசு.

இ - ள். இன்பம் விழையான் இடும்பை இயல்பு என்பான் - தன்னுடம்பிற்கு இன்பமாயவற்றை விரும்பாதே வினையாலிடும்பை யெய்துதல் இயல்பென்று தெளிந்திருப்பான்—தன்பம் உறுதல் இலன் - தம்முயற்சியாற் றுன்பமுறான். எ - று.

இன்பத்தை விழையினும், இடும்பையை யியல்பென்னுது காக்கக்கருதினும், தன்பம் வீடுதலின், இவ்விரண்டுஞ் செய்யாதானைத் தன்பமுறுதலிலனென்றார். (அ)

சுஉக இன்பத்து ளின்பம் விழையாதான் துன்பத்துட்
டுன்ப முறுத லிலன். கூ.

இ - ள். இன்பத்துள் இன்பம் விழையாதான் - வினையாற்றனக்கின்பம் வந்தழி அதனை யனுபவியாநின்றே மனத்தான் வீரும்பாதான்—தன்பத்துள் தன்பம் உறுதல் இலன் - தன்பம் வந்தழியும் அதனை யனுபவியாநின்றே மனத்தான் வருந்தான். எ - று.

தன்பம் முயற்சியான் வருமிடக்கண். இரண்டையும் ஒருதன்மையாகக் கோடலின், பயன்களுமிலவாயின. (க)

சுஉ0. இன்னுமை யின்ப மெனக்கொளி னுருத்தன்
னென்னுர் விழையுஞ் சிறப்பு. க0.

இ - ள். இன்னுமை இன்பம் எனக் கொளின் - ஒருவன் வினை செய்யுமிடத்து முயற்சியான் வருந்தன்பந்தன்னையே தனக்கின்பமாகக் கற்பித்துக்கொள்வனுயின்,—தன் ஒன்னுர் விழையும் சிறப்பு ஆகும் - அதனைத் தன்பகைவர் நன்குமதித்தற்கேது வாய உயர்ச்சியுண்டாம். எ - று.

தன்பத்தானும் உயிர்க்கியல்பன்றிக் கணிகமாய் மனத்திடை நிகழ்வதோர் சோட்பாடாகலின், அதனை மாறுபடக்கொள்ளவே, அதற்கழிவின்றி மனமகிழ்ச்சியுடையனும் அதனைத் தொடங்கியவினை முடித்தேவியோற்றலுடையனுமென்பது கருத்து. இவை நான்குபாட்டானும் மெய்வருத்தத்தானுயதற்கு அழியாமையும் அதற்குபாயமுங் கூறப்பட்டன. (க0)

அரசியல் முற்றிற்று.

அங்கவியல்.

இனி முறையானே அரசெனடாத்துதற்கண் ஒன்றற்கொன்று துணையாய அங்கங்களாறனையில்பு மூப்பத்திரண்டதிகாரத்தாற் கூறுவானெடுத்துக்கொண்டு, அவையாறனுள்ளும் "காவற் சாரோடு கைத்தற்ற" கண் அவ்வாசற்கினையாய அமைச்சனியல்பு பத்ததிகாரத்தாற் கூறுவான்றொடங்கி, முதற்கண் அமைச்சுக் கூறுகின்றார்.

சுசம் அதி.—அமைச்சு.

அஃதாவது அமைச்சனது தன்மை: என்றது அவன்றன் குணங்களையுஞ் செயல்களையும்.

---

* புணரறுது, க்குக்.

கூடக. கருவியுங் காலமுஞ் செய்கையுஞ் செய்யு
மருவினையு மாண்ட தமைச்சு.

இ - ள். கருவியும் - வினைசெய்யுங்கால் அதற்கு வேண்டிய கருவிகளும்—காலமும் - அதற்கேற்றகாலமும்—செய்கையும் - அது செய்யுமாறும் செய்யும் அருவினையும் - அடலாற்றிற்செய்யப்படும் அவ்வரிய வினைதானும்—மாண்டது அமைச்சு - வாய்ப்ப வெண்ணி வல்லவனே அமைச்சனுவான். எ - று.

கருவிகள் தானையும் பொருளும். காலம் அது தொடங்குங்காலம். செய்கையெனவே, அது தொடங்குமுபாயமும், இடையூறறீக்கி முடிவுபோக்குமாறும் அடங்கின. சிறிய முயற்சியாற் பெரிய பயன்றருவதென்பார், அருவினையென்றார். இவையைந்தினையும் வடநூலார் மந்திரத்திற்கங்கமென்ப. (க)

கூடஉ. வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு. உ

இ - ள். வன்கண் - வினைசெய்தற்கண் அசைவின்மையும்—குடி காத்தல் - குடிகளைக் காத்தலும்—கற்று அறிதல் - நீதிநூல்களைக் கற்றுச் செய்வன தவிர்வனவறிதலும்—ஆள்வினை - முயற்சியும்—ஐந்துடன் மாண்டது அமைச்சு - மேற்சொல்லிய அவ்வங்கங்களோடுடனே நிருந்தவுடையானே அமைச்சனுவான். எ - று.

எண்ணெடு நீண்டது. அவ்வைந்தெனச் சுட்டி வருவிக்க. இக்காண்கனையும் மேற் கூறியவற்றோடு தொகுத்துக் கூறியது, அவையு மிவற்றோடு கூடியே மாட்சிமைப்பட வேண்டுதலானும், அவற்றிற்கு ஐந்தென்னுந்தொகை பெறுதற்கும். இனி இதனைஞ்ண் டெண்ணிய வற்றிற்கே தொகையாக்கிக் குடிகாத்தலென்பதனைக் குடிப்பிறப்பும் அதனையொழுக்கத்தாற் காத்தலுமெனப் பகுப்பாரும், கற்றறிதலென்பதனைக் கற்றலும் அறிதலுமெனப் பகுப்பாருமுளர். அவர் உடனென்பதனை முற்றும்மைப்பொருட்டாக்கியும், குடியென்பதனை ஆகுபெயராக்கியும் இடர்ப்படுப. (உ)

கூடஊ. பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல தமைச்சு. ஊ.

இ - ள். பிரித்தலும் - வினை வந்துழிப் பகைவர்க்குத் துணையாயினுரை அவரிற் பிரிக்கவேண்டிற் பிரித்தலும்—பேணிக்கொளலும் - தம்பாலாரை அவர்பிரியாமற் கொடை இன்சொற்களாற் பேணிக்கொள்ளுதலும்—பிரிந்தார்ப் பொருத்தலும் - முன்னே தம்மினும் தம்பாலாரினும் பிரிந்தாரை மீண்டும் பொருத்தவேண்டிற் பொருத்தலும்—வல்லது அமைச்சு - வல்லவனே அமைச்சனுவான். எ - று.

இவற்றுள் அப்பொழுதை நிலைக்கேற்ற செயலறிதலும் அதனை அவசரியாமல் ஏற்றவுபாயத்தாற் கடைப்பிடித்தலும் அரியவாதலெனக்கி, வல்லதென்றார். வடநூலார் இவற்றுட் பொருத்தலைச் சந்தியென்றும், பிரித்தலை விக்கிரகமென்றுங் கூறுப. (ஊ)

கூடச. தெரிதலுந் தேர்ந்து செயலு மொருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு. ச.

இ - ள். தெரிதலும் - ஒருகாரியச்செய்கை பலவாற்றுற்றோன்றின் அவற்றை ஆராய்ந்தறிதலும்—தேர்ந்து செயலும் - அதுசெய்யுங்கால் வாய்க்குர்திகளை செய்தலும்—ஒருதலையாச்சொல்லலும் - லைரைப் பிரித்தல் பொருத்தல்செய்தற்

அவர்க்கு இதுவே செயற்பாலதென்று தனிவுபிறக்கும்வகை சொல்லுதலும்—வல்லது அமைச்சு - வல்லவனே அமைச்சனுவான். எ - று.

தெரிதல் செயன்மேலதாயிற்று, வருகின்றது அதுவாகலின். (ச)

கூகூ. அறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ் ஞான்றுந்
தறனறிந்தான மேர்ச்சித் தணை. ஙி.

இ - ள். அறன் அறிந்து ஆன்று அமைந்த சொல்லான் - அரசனுற் செய்யப்படும் அறங்களையறிந்து தனக்கேதமற கல்வியானிறைந்தமைந்த சொல்லையுடையனுய்—எஞ் ஞான்றும் நிறன் அறிந்தான் - எக்காலத்தும் வினை செய்யுந்திறங்களையறிந்தான்—சேர்ச்சித் தணை - அவர்க்குச் சூழ்ச்சித்துணையாம். எ - று.

தனனம்சன சுருங்கியகாலத்தும் பெருகியகாலத்தும் இடைநிகராயகாலத்து மமைவபாய், வருவுலமுமையனரா. விசால்லாமனனபதனை ஒவ்வுருப்பின்பொருட்டாய ஆயுருபாகியபபருமுளா. இவை யைந்துபாடாலும் அமைச்சாதி குணத் தனமை கூறபபட்டது. (இ)

கூஙூ. மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முனனிற பவை. ஙு.

இ - ள். மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு - இயற்கையாகிய நுண்ணறிவைச் செயறகையாகிய நூலறிவோடு உடையராய அமைச்சர்க்கு—அதிநுட்பம் முன் நிற் பவை யா உள - மிகநுட்பத்தையுடைய சூழ்ச்சிகளாய முனனிற்பன யாவை யுள! எ - று.

மதிநுடபமமனபது மனமொழிந்லையல். அது தெய்வத்தாலேவண்டெலின் மூற் கூறியபபட்டது. நூலலனபது மம அதிநுடபமமனபதூடம ஆகுமபயா. அதுமெனபது வடமசால்லுலா மருதுபபபாருளிமதாரிடைசமசால்;—அது நாளந்து நுடபமெனபத மனுவு வதாகக்கது. முனனிறறல மாறறூரா சூழசசியாயின தஞசூழசசியால் அறியாத நிமுல. ஆனி அதிநுடபமனறு பாடமாகி; அதனினுட்பம யாவென்றுரைப்பாரு முளா! அவா சூழசசிகளனமாய முனசுட்டபபடுவதான்றில்லாமையும, சுட்டபபயா ஐதாமுமபமுமவழு அவவாறு நிலரிலமையுமறிநதிலர். பகைவா சூழவனவற் லறதாயபமது அழுதது அவரறிநதழியாதன தாசூழுவனென்பது கருத்து. இதனால அவரது சிறபபுக் கூறபபட்டது. (க)

கூகூ. செயறகை யறிநதக் கடைத்தும் முலகத
நயறகை யறிது செயல. எ.

இ - ள். செயற்கை அறிந்தக்கடைத்தும்-நூனெறியான் வினைசெய்யுந்திறங்களை யறிந்த விடததும,—உலகதது இயற்கை அறிநது செயல் - அப்பொழுது நடகின்ற உலகவியறகையையறிந்து அதற்ஞடு பொருந்தச செய்க. எ - று.

கடைத்துமென்புழித் து பகுதிப்பொருள் விகுதி. நூனெறியேயாயினும் உலக நெறியோடு பொருந்தாதன செய்யற்க, செய்யின அது பழிகருமென இயறகையறி வாற பயன் கூறியவாறு. (எ)

கூகூஅ. அறற்கொன் றறியா னெனினு முறுதி
யுழையிருந்தான கூறல் கடன். அ.

இ - ள். அறிவொன்று அறியான் எனினும் - அறிந்துசொல்லியாதது அறிவையு மறிந்து அரசன் தானுமறியானேயாயினும்,—உறுதி கூறல் உழையிருந்தான் கடன் - அக்குற்ற நோக்கியொழியாது அவனுக்கு உறுதியாயின கூறுதல் அமைச்சனுக்கு முறைமை. எ - று.

அறியென்பது முதனிலைத்தொழிற்பெயர். கோறல் தான்கொள்ளாமை மேலும் இசைத்துகூறுதல். உழையிருந்தானெனப்பெயர்கொடுத்தார், அமாத்தியரென்னும் வடமொழிப்பெயர்க்கும் பொருண்மை அதுவாகலின்.*உறுதி கூருக்கால் அவனதிற தியெய்தற்குற்றத்தை உலகர் தன்மேலேற்றுமென்பார், கூறல்கடனென்றார்.இவையி ரண்டோட்டானும் அவர்செயல் கூறப்பட்டது. (அ)

கூகூ. பழுதெண்ணு மந்திரியிற் பக்கத்துட் டெவ்வோ
செழுபது கோடி யுறும். கூ.

இ - ள். பக்கத்துள் பழுது எண்ணும் மந்திரியின் - பக்கத்திருந்து பிழைப்ப வெண்ணும் அமைச்சனெருவனில்—ஒருபதுகோடி தெவ் உறும்-அரசனுக்குஎதிர் நிற்பார் ஒருபதுகோடி பகைவருறுவர். எ - று.

எழுபது கோடியென்றது மிகப்பலவாய வெண்ணிற்கொன்று காட்டியுரைத்தாறு. வெளிப்படநிற்றலான் அவர் காக்கப்படுவர், இவன் உட்பகையாய் நிற்றலாற் காக்கப் படானெனபதுபற்றி, இவ்வாறுகூறினார். எழுபதுகோடிமடங்கு நல்லரென்றுரைப் பாரும், எழுபதுகூறு தலையென்று பாடமோதுவாருமுளர். (க)

கூசo. முறைப்படச் சூழ்ந்து முடிவிலவே செய்வர்
திறப்பா டிலாஅ தவர். கo.

இ - ள். முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர் - செய்யப்படும் வினை களே மூன் அடைவுபடவெண்ணிவைத்தும், செய்யுங்கால் அவை முடிவிலவாகவே செய்யாநிற்பர்—திறப்பாடு இலாதவர் - முடித்தற்கேற்ற கூறுபாடில்லாதார். எ - று.

அக்கூறுபாடாவன வந்த வந்த விடையூறுகட்கு ஏற்றவேற்ற பரிகாரமறிந்து செய்தலும், தாந்திண்ணியராதலுமாம். பிழையாமலெண்ண வல்லராய்வைத்தும் செய் தமுடிக்கமாட்டாருமுளரென்பதாம். இவையிரண்டோட்டானும் அமைச்சருள் வீடப் படுவாரது குற்றங் கூறப்பட்டது. (கo)

கூடும் அதி.—சொல்வன்மை.

அஃதாவது தான் கருதிய வினை முடியுமாற்றால் அமைச்சிய னடத்தற்கேது வாய சொற்களைச் சொல்ல வல்லனதல். மேல் "ஒருதலையாச் சொல்லலும் வல்ல†" தென்றதனையே சிறப்புப்பற்றி விரித்துரைக்கின்றமையின், இஃது அமைச்சின் பின் வைக்கப்பட்டது.

கூசக. நாலல மென்னு நலனுடைமை யந்நலம்
யாநலத் துள்ளதூஉ மன்று. க.

இ - ள். நாலலம் என்னும் நலன் உடைமை - அமைச்சர்க்கு இன்றியமை[illegible]
குணமாவது சான்றோரான் நாலலமென்று சிறப்பித்துச் சொல்லப்படும் நலத்[illegible]

---

* அமாத்தியரென்பதனுள் அமா என்பதற்குப்பொருள் அண்மை.

† பிரகற்பதி, கக்ச.

யுடையராதல்,—அக்கலம் யாகலத்து உள்ளனவும் அன்று - அக்கலம் பிறர்க்கும் பிற கலமெல்லாவற்றுள்ளும் அடங்குவதன்றி மிக்கதாகலான். எ - று.

நாவாயுளதாய கலமென விரியும். இக்கலம் உலகத்தைத் தம்வயத்ததாக்கும் அமைச்சர்க்கு வேறுகவேண்டுமென்னும் நீதிநூல் வழக்குப்பற்றி நாகலமென்னுகல வென்றும், பிறர்க்கும் இதுபோற்சிறக்கது பிறிதின்மையான் அக்கலம் யாகலத்துளள வுமன்றென்றும் கூறினர். பிரித்தல் பொருத்தல் முதலிய தொழிலில்லாதார்க்கும் இஃதின்றியமையாதாயபின் அத்தொழிலார்க்குக் கூறவேண்டுமோவென்பதுகருத்து.

கூசஉ. ஆக்கமுங் கேடு மதனுள் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு. உ.

இ - ள். ஆக்கமும் கேடும் அதனுள் வருதலால் - தம்மரசற்கும் அங்கங்கட்கும் ஆக்கவழிவுகள் தஞ்சொல்லான் வருமாகலான்,—சொல்லின்கண் சோர்வு காத்து ஓம்பல் - அப்பெற்றத்தாய சொல்லின்கட் சோர்தலை அமைச்சர் தங்கணிகழாமற பாற்றிக்காக்க. எ - று.

ஆக்கத்திற்கேதுவாய நற்சொல்லையும் கேட்டிற்கேதுவாய நிச்சொல்லையும் சொல்லாதலொபுமைபற்றி அதனுளென்றார். செய்புளாகலின், சுட்டுப்பெயர் முன்வந்தது. பிறர் சோர்வுபோலாது உயிர்கட்கெல்லாம ஒருங்குவருதலால், காத்தோமபலென்றார். இவையிரண்டொட்டானும் இஃது இவர்க்கினறியமையாதென்பது கூறப்பட்டது. (உ)

கூசஊ. கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல். ஊ.

இ - ள். கேட்டார்ப் பிணிக்கும் தகை அவாய் - நட்பாயேற்றுக்கொண்டாரைப் பின் வேறுபடாமற் பிணிக்குங் குணங்களை அவாவி—கேளாரும் வேட்ப மொழிவது - மற்றைப் பகையாய் ஏற்றுக்கொளளாதாரும் பின் அப்பகைமையொழிந்து நட்பினரிரும்புமவண்ணஞ் சொல்லப்படுவதே—சொல்லாம் - அமைச்சர்க்குச் சொல்லாவது. எ - று.

அக்குணங்களாவன வழுவின்மை, சுருங்குதல், விளங்குதல், இனிதாதல், விழுப்பயன்றருதலென்றிவை மூதலாயின. அவற்றை யவாவுதலாவது சொல்லுவான் குறித்தனவேயன்றி வேறு முண்ணுணர்வுடையோர் கொள்பவற்றின்மேலும் நோக்குடைத்தாதல். அவாயென்னுஞ் செய்தெனெச்சம் மொழிவதென்னுஞ் செயப்பாட்டுவினை கொண்டது. இனிக் கேட்டார் கேளாரென்பதற்கு நூல் கேட்டார் கேளாதாரெனவும், வினையார் வினவாதாரெனவுமுரைபபாருமுளர். தகையவாயென்பதற்கு எல்லாருந் தகுதியையுடையவாயென்றுரைத்தார்; அவா அப்பன்மை மொழிவதென்னும் ஒருமையேயடி இயையாமை நோக்கிற்றிலர். இதனுற் சொல்லின திலக்கணங் கூறப்பட்டது. (ஊ)

கூசஎ. திறனறிந்து சொல்லுக சொல்லை பறனும்
பொருளு மதனினூஉங் கில். எ.

இ - ள். சொல்லைத் திறன் அறிந்து சொல்லுக - அப்பெற்றித்தாய சொல்லை அமைச்சர் தம்முடையவும் கேட்பாருடையவுமாய திறங்களையறிந்து சொல்லுக,—அதனின் ஊங்கு அறனும் பொருளும் இல் - அங்ஙனஞ் சொல்லுதற்கு மேற்பட்ட அறனும் பொருளுமில்லையாகலான். எ - று.

அத்திறங்களாவன குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், செல்வம், உருவம், பருவமென்பனவற்றுள்வரும் தகுதிவேறுபாடுகள். அவற்றையறிந்து சொல்லுதலாவது அவற்றுள் தமக்கும் அவர்க்குமுளவாய ஏற்றத்தாழ்வுகளையறிந்து அவ்வம்மரபாற் சொல்லுதல். அஃது உலகத்தோடொட்டவொழுகலையும் இனிமையையும் பயத்தலின் அறனுமாயிற்று. தங்காரியமுடித்தலிற் பொருளாயிற்று. அறனும்பொருளுமெனக் காரணத்தைக் காரியமாக்கிக் கூறினர். (ச)

சுசடு. சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து. டு.

இ - ள். சொல்லைப் பிறிது ஓர்சொல் வெல்லும் சொல் இன்மை அறிந்து-தாஞ் சொல்லக்கருதிய சொல்லைப் பிறிதோர்சொல்லாய் வெல்லவல்லதொருசொல் இல்லாமையறிந்து,—அச்சொல்லைச் சொல்லுக - பின் அச்சொல்லைச் சொல்லுக. எ - று.

பிறிதோர்சொல் மாதரூரது மறுதலைசசொல். வெல்லுதல் குணங்களான் மிகுதல். அதுவே வெல்லச்சொல்லுகவெனபதாம். இனிப் பிறிதோர்சொல் வெல்லுஞ சொல்லெனச் செவ்வெண்ணுகங், ஒத்தசொல்லும் மிக்கசொல்லுமுளவாகாமற் சொல்லுகவெனறுரைப்பாருமுளர். இது சொறபொருட்பின்வருநிலை. (டு)

சுசசு. வேட்பதாஞ் சொல்லிப பிறர்சொற் பயன்கோடன்
மாட்சியின் மாசறறூர் க்காள. சு.

இ - ள். வேட்பத் தாம் சொல்லிப் பிறர் சொற்பயன் கோடல்-பிறர்க்குத் தாஞ்சொல்லுங்கால் அவர் பின்னுங கேட்டலை விரும்புமாறு சொல்லி,அவர் தமக்குச் சொல்லுங்கால அச்சொலலின்பயனை ஙகாணடொழிதல்—மாட்சியின் மாசு அறறூர் கோள - அமைச்சியலுட் குறறமறறூரது துணிபு. எ - று.

பிறாசொறகளுட் குறறமுளவாயினும அவை நோக்கியிகழா ரென்பதாம். வல்லாசையிகழுதல வலலுகாகுத தகுதியனமையின், இதுவுமுடன் கூறினர். இவை மூனறுபாடடானும அதனைச சொலலுமாறு கூறப்பட்டது. (சு)

சுசள. சொலலலலலன் சோரவில னஞசா னவனை
யிகலலவலலல யார்க்கு மாறு. எ.

இ - ள். சொலல் வல்லன்-தானெண்ணிய காரியங்களைப் பிறர்க்கேற்பச் சொல்லுதலவல்லனுய—சோர்வு இலன - அவை பகபபலவாயவழி ஒனறினுஞ சோரவில னுய—அஞசான - அவைக்களஞசானுயினுன யாவன—அவனை இகல் வலலல் யாரக்கும அரிது - அவனை மாறுபாடடினகண வெல்லுதல் யாவர்க்குமரிது. எ - று.

ஏறபசசொலலுதல் அவாகது அவை காரியமலலவாயினும் ஆமெனத துணியும் வகை சொலலுதல. சோரவு சொலலலவணயவதனை மறபபாலனுழுதல. இமமூனறு குணமுமுடையானை மாறறூராயப் பிரிதறல பொருதறல செயது வெலவாலலல யெனபதாம். (எ)

சுசஅ. விரைந்து தொழில்கேட்கு ஞால நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின். அ.

இ - ள். தொழில் நிரந்து இனிது சொல்லுதல் வல்லார்ப்பெறின் - சொல்லப் படுங்காரியங்களை நிரல்படக் கோதறது இனிதாகச் சொல்லுதல்வல்லாரைப் பெறின்,—ஞாலம்விரைந்து கேட்கும் - உலகம் அவற்றை விரைந்தேற்றுக்கொள்ளும். எ - று.

தொழில் சாதியொருமை. நிரல்படக் கோத்தல் முன்சொல்வனவும் பின்சொல் வனவுமறிந்து அம்முறையே வைத்தல். இனிதாதல் கேட்டார்க்கின்பம் பயத்தல். சொல்லுதல்வல்லான் நூறாயிரவருளொருவன் என்ற வடமொழிபற்றிப் பெறினென் றார். ஈண்டுக் கேட்டல் ஏற்றக்கோடல். இவையிரண்டுபோட்டானும் அவ்வாற்றாற் சொல்லுதல் வல்லாரது சிறப்புக் கூறப்பட்டது. (அ)

சுசக. பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்ல றேற்ற தவர். க.

இ - ள். மாசு அற்ற சில சொல்லல் தேற்றாதவர் - குற்றமற்றனவாய்ச் சிலவாய வார்த்தைகளே அவ்வாற்றாற் சொல்லுதலை யறியாதார்—பல சொல்லக் காமுறுவர் - பலவாய வார்த்தைகளைத் தொடுத்துச் சொல்ல விரும்புவர். எ - று.

குற்றம் மேற்சொல்லிய குணங்கட்கு * மறுதலையாயின. இடைவிடாது பல சொல்லுதலையுஞ் சொல்வன்மையென்று விரும்புவாருமுளர், அவர் இவ்வாறு சொல்ல மாட்டாதாரே, வல்லார் அதுசெய்யாரென யாப்புறுப்பார், மன்றவென்றார். (க)

சுரூ. இணரூழ்த்து நாறு மலரனையர் கற்ற
துணர விரித்துரையா தார். கo.

இ - ள். கற்றது உணர விரித்து உரையாதார்-கற்றுவைத்த நூலைப் பிறரறியும் வண்ணம் விரித்துரைக்கமாட்டாதவர்—இணர் ஊழ்த்தும் நாறு மலர் அனையர் - கொத்தின்கண்ணே மலர்ந்துவைத்தும் நாறாத பூவையொப்பர். எ - று.

செவ்விபெற மலர்ந்துவைத்தும் நாற்றமில்லாத பூச் சூடப்படாதவாறுபோல நூலைக் கற்றுவைத்துஞ் சொல்லமாட்டாதார் நன்குமதிக்கப்படாரென்றலையின், இது தொழிலுவமமாயிற்று. இவை இரண்டுபோட்டானும் அது மாட்டாதாரதிழிபு கூறப்பட்டது. (ஙo)

சுசு ம் அதி.—வினைத்தூய்மை.

அஃதாவது செய்யப்படும் வினைகள் பொருளேயன்றி அறமும் புகழும் பயத்த நல்லவாதல். சொல்லேயன்றிச் செயலும் நன்றாகவேண்டுமென்கின்றமையின், இது சொல்வன்மையின்பின் வைக்கப்பட்டது.

சுரூக. துணைநல மாக்கந் தருஉம் வினைநலம்
வேண்டிய வெல்லாந் தரும். க.

இ - ள். துணை நலம் ஆக்கம் தருஉம் - ஒருவனுக்குத் துணையது நன்மை செல்வ மொன்றனையுங்கொடுக்கும்;—வினை நலம் வேண்டிய எல்லாம் தரும் - அவ்வளவன்றி வினையது நன்மை அவன் வேண்டியன யாவற்றையுங்கொடுக்கும். எ - று.

வேண்டியவெல்லாமென்றது இம்மைக்கண் அறம் பொருளின்பமுதலாயவற்றை யும் மறுமைக்கட்டான்விரும்பிய பதங்களையும். இதனுற் காணப்படுந் துணைநன்மை யினும் கருதப்படும் வினைநன்மை சிறந்ததென வினைத்தூய்மையது சிறப்புக் கூறப்பட்டது. (க)

---

* சொற்குணக்குறை சுசஉ-ம் திருக்குறளுரையிற் காண்க.

குறள். என்று மொருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை. உ.

இ - ள். புகழொடு நன்றி பயவா வினை - தம்மாசனுக்கு இம்மைக்கட் புகழும் மறுமைக்கண் அறமும் பயவாத வினைகளை—என்றும் ஒருவுதல் வேண்டும் - அவைச் சார்க்கு வக்காலத்துமொழிதல்வேண்டும். எ - று.

பெருகல், கருங்கல், இடைநிற்ற லென்னும் நிலவேறுபாடு காலத்தான் வருத லின், என்றுமென்றார். வேண்டுமென்பது ஈண்டு இன்றியமையாதென்னும் பொருட்டு.

குறள். ஒஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை
யாஅ தெனினு மவர். ஊ.

இ - ள். ஆதும் என்னுமவர் - மேலாகக்கடவேமென்று கருதுவார்—ஒளிமாழ்கும் வினை செய் ஒதல்வேண்டும் - தம்மொளிகெடுதற்குக் காரணமாய வினையைச் செய்தலைத் தவிர்க. எ-று.

ஒதல்வேண்டுமென்பது ஒருசொன்னீர்மைத்து. ஒவுதலென்பது குறைந்துநின் றது. ஒளி தாமுளகாலத்து எல்லாராலும் நன்குமதிக்கப்படுதலின், செய்யென்னும் முத னிலைத்தொழிற்பெயர் மாற்றப்பட்டது. அன்றிச் செய்வினையென வினைத்தொகை யாக்கியவழிப் பொருளின்மையறிக. ஒளி கெடவருவது ஆக்கமன்றென்பதாம். (ஊ)

குறள். இடுக்கட் படினு மிளிவந்த செய்பார்
கடுக்கற்ற காட்சி யவர். ச.

இ - ள் இடுக்கட்படினும் இளிவந்த செய்யார் - தாமிடுக்கணிலேபடவரினும், அது தீர்தற்பொருட்டு முன் செய்தார்க்கு இளி வந்த வினைகளைச்செய்யார்—கடுக்கு அற்ற காட்சியவர் - துளக்கமற்ற தெளிவினையுடையார். எ - று.

சிறிதுபோழ்திற் கழிவதாய இடுக்கணுக்கு எஞ்ஞான்றுங்கழியாதவிழிவு எய்தற் பாலதன்றென்பதூஉம் அஃதெய்தினாலும் வருவது வருமென்பதூஉம் தெளிவாக லால், செய்யாரென்றார். (எ)

குறள். எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேன்
மற்றன்ன செய்யாமை நன்று. ஞ.

இ -ள். எற்று என்று இரங்குவ செய்யற்க - யான் செய்தது எத்தன்மைத் தென்று பின் நுனே யிரங்கும் வினைகளே ஒருகாலுஞ் செய்யாதொழிக;—செய்வா னேல் மற்று அன்ன செய்யாமை நன்று - அன்றி ஒருகான்மயங்கி அவற்றைச் செய்புர்தன்மையனாயினுமாயின், பின்னிருந்து அவ்விரங்கல்களைச் செய்யாதொழிதல் நன்று. எ - று.

இரங்குவனென முன்வர்தனமயிற் பின் அன்னவெனச் சுட்டி மொழிந்தார். அவ் வினைகளது பன்மையான், இரக்கமும் பலவாயின. அச்செயற்குப் பின்னிருந்திரங் குவனாயின், அது நீரும் வாயிலதிந்திலனெனவும், நிட்பமிலனெனவும், பயனில்லன செய்கின்றனெனவும், தன்பழியைத் தானே தூற்றுகின்றனெனவும், எல்லாருமிகழ்த லிற் பின்னிரங்காமை நன்றென்றார். இதுவும், வினைத்தூயார் செயலாகலின், உடன் கூறப்பட்டது. பிற்றொடருக்குச் செய்வானாயின் அவைபோல்வனவுஞ் செய்யாமை நன்றெனப் பிறரெல்லாம் இயைபதவுரைத்தார். (ஞ)

கூறுக. சான்றுள் பலகொண்பா ஞயினுஞ் செய்பற்க
சான்றோர் பழிக்கும் வினை. கூ.

இ - ள். சான்றுள் பல காண்பான் ஆயினும் - தன்னைப் பயந்தாளது பகையை வறுமையாற்கண்டிரங்குந் தன்மையனாயினனெனினும்,—சான்றோர் பழிக்கும் வினை செய்யற்க - அது சுட்டி அறிவுடையார் பழிக்கும் வினைகளை ஒருவன் செய்யா தொழிக. எ - று.

இறந்த மூப்பினராய இருமுதுகுரவருங் கற்புடைமனைவியுங் குழவியும் பகையான் வருத்தமெல்லைக்கண் தீயனபலவுஞ்செய்தாயினும் புறத்தருகவென்னும் அறநூற் பொதுவிதி பொருணூல்வழி யொழுகுதலும் அரசர் தொழிற்குரியராதலும் சான்று மதிக்கற்பாடுமுடைய அமைச்சர்க்கெய்தாமைபற்றி, இவ்வாறு கூறினார். இவையைந்து பாட்டானும் பாவமும் பழியும் பயக்கும் வினை செய்யற்க வென்பது கூறப்பட்டது. ()

கூறுஎ. பழிமலைந் தெய்தய வாக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை. எ.

இ - ள். பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் - சாலாதார் தீவினைகளைச் செய்து அதனாற் பழியைத் தம்மேற்கொண்டு பெற்ற செல்வத்தின்—சான்றோர் கழி நல் குரவே தலை - அதுமேற்கொள்ளாத சான்றோரனுபவிக்கும் மிக்க நல்குரவே உயர்ந்தது. எ - று.

நிலையாத செல்வத்தின் பொருட்டு நிலையின பழியை மேற்கோடல் சால்போ டியையாமையின், சான்றோர்கழி நல்குரவே தலையென்றார். (எ)

கூறுஅ. கடிந்த கடிந்தொராஅர் செய்தார்க் கவைதா
முடிந்தாலும் பீழை தரும். அ.

இ - ள். கடிந்த கடிந்து ஒராஅர் செய்தார்க்கு - நூலோர் கடிந்தவினைகளைத் தாமுங்கடிந்தொழியாது பொருணூல்கிச்செய்த அமைச்சர்க்கு—அவைதாம் முடிந்தாலும் பீழை தரும் - அவை தாயவண்ணமையின் முடியா, ஒருவாற்றான் முடியினும் பின் றுன்பத்தையே கொடுக்கும். எ - று.

முடிதல் கருதியபொருடருதல். பீழைதருதலாகிய பொருளின்றொழில் அதற்குக் காரணமாய வினைகண்மேலேற்றப்பட்டது. (அ)

கூறுஆ. அழக்கொண்ட வெல்லா மழப்போ மிழப்பினும்
பிற்பயக்கு நற்பா லனவ. ஆ.

இ - ள். அழக் கொண்ட எல்லாம் அழப் போம் - ஒருவன் தீவினைகளைச் செய்து பிறரிரங்கக் கொண்ட பொருளெல்லாம் இம்மையிலே அவன்முனிரங்கப்போகாநிற் கும்;—நற்பாலவை இழப்பினும் பிற்பயக்கும் - மற்றைத் தாயவினையான் வந்த பொருள்கள் முன்னிழந்தாயினும் அவனுக்குப் பின்னர் வந்து பயன் கொடுக் கும். எ - று.

பின்னெனவே, மறுமையுமடங்கிற்று. பொருள்களான் அவற்றிற்குக் காரண மாய வினைகளதியல்பு கூறியவாறு. (ஆ)

கூகo. சலத்தாற் பொருஞ்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்தணீர் பெய்திரீஇ யற்று. கo.

இ - ன். சலத்தால் பொருள் செய்து ஏமார்த்தல் - அமைச்சன் தியவினைகளாற் பொருள்படைத்து அதனால் அரசனுக்கேமஞ்செய்தல்—பசுமட்கலத்துள் நீர் பெய்து இரீஇயற்று - பசியமட்கலத்துள்ளே நீரைப்பெய்து அதற்கேமஞ்செய்ததனைஒக்கும். எ - று.

முன் ஆக்கம் பயப்பனபோற்றோன்றிப் பின்னழிவே பயத்தலால், அவை சலமெனப்பட்டன. ஏமமார்த்தலென்பது ஏமார்த்தலென்றுயிற்று. ஏமத்தையடையப்பண்ணுதலென்றவாறு. இருத்துதல் நெடுங்காலமிருப்பச்செய்தல். அரசனும்பொருளும் சேரப்போமென்பதாம். பிறரெல்லாம் ஏமாத்தலென்ற பாடமோதி, அதற்கு மழித்தலென்றும், இரீஇயற்றென்பதற்கு வைத்தாற்போலு மென்றுமுரைத்தார்; அவர் அவை தன்னையும் பிறிதின்வினையுமாய் உவமையிலக்கணத்தோடு மாறுகோடல் நோக்கிற்றிலர். இவைநான்குபாட்டானும் அதற்குக் காரணம் கூறப்பட்டது. (கo)

கூ அ ம் அதி.—வினைத்திட்பம்.

அஃதாவது அத்தன்ய வினை முடிப்பானுக்கு வேண்டுவதாய மனத்திண்மை. அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

கூகக. வினைத்திட்ப மெனப தொருவன் மனத்திட்ப
மற்றைய வெல்லாம் பிற. க.

இ - ன். வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம் - வினைசெய்தற்கட்டிண்மையென்று சொல்லப்படுவது அதனை முடித்தற்குரியானொருவன் மனத்தினதுதிண்மை;—மற்றைய எல்லாம் பிற - அஃதொழிந்தனவெல்லாம் அதற்குத் திண்மையென்று சொல்லப்படா. எ - று.

ஒழிந்தனவாவன படை, அரண், நட்பு முதலியவற்றின்றிண்மைகள். அவையும் அதற்கு வேண்டுவனவாய் இனமாகலின் மற்றையவென்றும், வேண்டினும் அஃதில்வழிப் பயனிலவாகலிற் பிறவென்றுங் கூறினர். இதனால் வினைத்திட்பமாவது இன்னதென்பது கூறப்பட்டது. (க)

கூகஉ. ஊரொரா வுற்றபி னெல்காமை யிவ்விரண்டி
னாறென்ப ராய்ந்தவர் கோள். உ.

இ - ன். ஆய்ந்தவர் கோள் - முன் நீதியாராய்ந்த அமைச்சரது துணிபு—ஊரொரா லுற்றபின் ஒல்காமை இவ்விரண்டின் ஆறு என்பர் - பழுதுபடும் வினைகளைச் செய்யாமையும் செய்யும்வினை தெய்வத்தாற்பழுதுபட்டவழி அதற்குத் தவராமையாகிய இவ்விரண்டன் வழியென்பர் நூலோர். எ - று.

தேவர்க்கும் அசுரர்க்கும் அமைச்சுப்பூண்ட வியாழ வெள்ளிகளது துணிபு தொகுத்துப் பின் நீதிநூலுடையார்*கூறியவாறு கூறுகின்றமையின், ஈண்டு வினைநுணுக்கமும் உடன்கூறினர். உறுதலுடையதனை முன் ஊறென்றமையின், உற்றபினென்றும், இவ்விரண்டின்கண்ணே பட்டதென்பார் இரண்டினுளெறன்றுங்கூறினர். ஊரொராதென்று பாடமோதுவாருமுளர்; அஃது ஒல்காமையென்னுமெண்ணோடு இரண்டென்னுந் தொகையோடும் இயையாமை அவரறிந்திலர்.

---

* ஈண்டு நீதிநூலுடையார் என்றது சாணக்கியரையும் காமந்தகரையும்.

கூகூக. கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை பிடைக்கொட்கி
னேற்ரு விழுமந் தரும். க.

இ - ன். கடைக் கொட்கச் செய்தக்கது ஆண்மை - செயப்படும் வினையை முடி
வின்கட் புலப்படும்வகை முன்னெல்லாம் மறைத்துச் செய்வதே திட்பமாவது;—
இடைக் கொட்கின் எற்ரூலிழுமம் தரும் - அங்ஙனமன்றி இடையே புலப்படுமாயின்
அப்புலப்பாடு செய்வானுக்கு நீங்காத இடும்பையைக் கொடுக்கும். எ - று.

மறைத்துச் செய்வதாவது அங்கமைந்துமெண்ணியவாறு பிறரறியாமலும்; தான
நிற்ததனேடும், தன்னிங்கிதம், வடிவு, செயல், சொற்களான் அவருய்த்துணராமலும்
அடக்கிச் செயதல். அத்திட்பம், ஆண்டன்மையான் வருதலின், ஆண்மையெனப்பட்
டது. எற்ரூலிழுமமாவன பகைவர் முன்னறிந்து அவ்வினையை விலக்குதல், செய்
வானே விலக்குதல் செய்வராகலின், அவற்ரூன் வருவன. விழுமம் சாதிப்பெயர்.
இவையிரண்டுபோட்டானும் அதனது பருதி கூறப்பட்டது. (க)

கூகூச. சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொலிய வண்ணஞ் செயல். ச.

இ - ன். சொல்லுதல் யார்க்கும் எளிய—யாம் இவ்வினையை இவ்வாற்ரூற் செய்து
மென நிரல்படச் சொல்லுதல் யாவர்க்குமெளிய;—சொல்லிய வண்ணம் செயல் அரிய
வாம் - அதனே அவ்வாறரூனே செயதல் யாவர்க்கு மரியவாம். எ - று.

சொல்லுதல், செயலென்பன சாதிப்பெயர். அரியவற்றையெண்ணிச்சொல்லு
தல் திட்பமில்லாதாராகுமெயறலின, எளியவென்ரூர். இதனுல அதனதருமை கூறப்
பட்டது. (ச)

கூகூஞ. வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்க
ணூறெய்தி யுளளப படும். ஞ.

இ - ள். வீறு எய்தி மாண்டார் வினைத்திட்பம் = எண்ணித்தாற் சிறப்பெய்தி
பிறவிலக்கணங்களானும் மாட்சிமைப்பட்ட அமைசசர்து வினைதநிட்பம்,—வேந்தன்
கண் ஊறு எய்தி உளளப்படும - வேந்தன்கண்ணே உறுதலெயதலான், எல்லா
ராலும் நன்குமதிக்கப்படும். எ - று.

வேந்தன்கணூறெய்தல் எடுத்தவினை அதனுன் முற்றுப்பெற்றுச் செல்வமும் புக
ழும் அவனகண்ணவாதல். எயதலாவனபது நிரிந்து நினறது. உள்ளல மதிப்பான்
மறவாமை. இதனுல் அதனசிறப்புக் கூறப்பட்டது. (ஞ)

கூகூசு. எணணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திணணிய ராகப பெறின். சு.

இ - ள். எண்ணிய எண்ணியாங்கு எய்துப - தாமெய்த எண்ணிய பொருள்க
ளெல்லாவறையும் அவ்வவணணியவாமே யெதுவர்:—எணணியார் திணணியராகப்
பெறின - எணணியவர் அவற்ரூறு வாயிலாகிய வினைக்கட் டிண்மையுடையராகப
பெறின். எ - று.

எளிதினெய்துபவென்பார், எண்ணியாங்கெய்துப வென்ரூர். அவர் அவ்வாறல்ல
தெண்ணுமையிற் றிணணியராகவே வினைமுடியும், அது முடிய அவையாவையும்
கைகூடுமென்பது கருத்து. இதனுல் அஃதடையாகெய்தும் பயன் கூறப்பட்டது. (சு)

சுகூஎ. உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்ன துடைத்து. எ.

இ - ள். உருள் பெருந்தேர்க்கு அச்சு ஆணி அன்னர் உடைத்து - உருளாகின்ற பெரிய தேர்க்கு அச்சின்கணாணிபோல வினைக்கட்டிண்ணியாரையுடைத்து உலகம்;—உருவு கண்டு எள்ளாமை வேண்டும் - அதனால் அவரை வடிவின் சிறுமைநோக்கி இகழ்தலை யொழிக. எ - று.

சிறுமை, எள்ளாமைவேண்டுமென்பதனானும், உவமையானும் பெற்றும். அச்சு உருள் கோத்த மரம். ஆணி உருள் கழலாது அதன்கடைக்கட் செருகுமது. அது வடிவாற்சிறிதாயிருந்தே பெரிய பாரத்தைக் கொண்டியக்குந் திட்பமுடைத்து,அதுபோல, வடிவாற்சிறியராயிருந்தே பெரிய வினைகளைக் கொண்டியக்குந் திட்பமுடைய அமைச்சரும்,அவரை அத்திட்பங்கொண்டு அறிந்துகொள்க வென்பதாம். இதனால் அவரை யறியுமாறு கூறப்பட்டது. (எ)

சுகூஅ. கலங்காது கண்ட வினைக்கட் டளங்காது
தூக்கங் கடிந்து செயல். அ.

இ - ள். கலங்காது கண்ட வினைக்கண் - மனந்தெளிந்து செய்வதாகத் துணிந்த வினையின்கண்—தளர்காது தூக்கம் கடிந்து செயல - பின்னைதலின் றிட்டித் தலையொழிந்து செய்க. எ - று.

கலங்கியவழி ஒழிவதும் செய்வதுபோற் றோன்றுமாகலின், தெளிந்து பலகாலாராய்ந்து தாஞ்செய்வதாக ஓர்த்த வினையைக் கலங்காது கண்டவினையென்றார். தளங்காமை திட்பமுடைமை. (அ)

சுகூக. துன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி
யின்பம் பயக்கும் வினை. கூ.

இ - ள். துன்பம் உற வரினும் - முதற்கண் மெய்ம்முயற்சியாற் றமக்குத் துன்பம் மிக வருமாயினும்,—இன்பம் பயக்கும் வினை துணிவு ஆறறிச் செய்க - அது நோக்கித் தளராது முடிவினகண இனபம பயக்கும வினையைத் திட்பமுடையராயச் செய்க. எ - று.

துணிவு கலங்காமை. அஃதுடையார்க்கல்லது கணிகமாய முயற்சித்துன்ப நோக்காது நிலையுதலுடைய * பரிணமவினபததை நோக்கிச் செய்தல கூடாமையின் துணிவாறறிச்செயகவென்றார். இவையிரண்டுபோட்டாலும அவர் வினைசெய்யுமாறு கூறப்பட்டது. (க)

சுகூ0. வினைத்திட்ப மெய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டா வுலகு. கூ0.

இ - ள். வினைத்திட்பம் வேண்டாரை - வினைத்திட்பத்தை இது நமக்குச் சிறந்ததென்று கொளளாத அமைச்சரை,—எனைதிட்பம எய்தியகணணும - ஒழிந்த திட்பங்களெல்லாமுடையராயவிடத்தும்,—வேணடாது உலகு - நன்குமதியார் உயர்ந்தோர். எ - று.

மனத்தின்கட் டிட்பமில்லாதார்க்குப் படை, அரண், நட்பு முதலியவற்றின்திட்பங்களெல்லாம் உளவாயினும், வினை முடியாதாம், ஆகவே, அவையெல்லாங் கெடு

* பரிணமவினபம - முடிவிலனதாஞ்செயல.

மென்பதுபற்றி உலகு வேண்டாதென்றார். இதனால் வினைத்திட்பமில்லாதசாதிழிபு கூறப்பட்டது. (கo)

கூ அம் அதி.—வினைசெயல்வகை.

அஃதாவது அத்திட்பமுடையவமைச்சன் அவ்வினையைச்செய்யுந்திறம். அதி காரமுறைமையும் இதனானே விளங்கும்.

கூஎக. சூழ்ச்சி முடிவு துணிவெய்த லத்துணிவு
தாழ்ச்சியுட் டங்குத றீது. க.

இ - ள். சூழ்ச்சி முடிவு துணிவு எய்தல் - விசாரத்திற்கெல்லையாவது விசாரிக் கின்றான் இனி இது தப்பாதென்னுந் துணிவினைப் பெறுதல்;—அத்துணிவு தாழ்ச்சி யுள் தங்குதல் தீது-அங்ஙனந் துணிவுபெற்ற வினை பின் நீட்டிப்பின்கட்டங்குமாயின், அது குற்றமுடைத்து. எ - று.

சூழ்ச்சிமுடிவு துணிவெய்தலெனவே, துணிவெய்துமளவுஞ் சூழவேண்டுமென் பது பெற்றாம். பின்னர்த் துணிவு ஆகுபெயர். நீட்டிப்பு செய்யுங்காலத்துச் செய் யாமை. அஃதுள்வழிக் காலக்கழிவாகலானும் பகைவர் அறிந்தழித்தலானும் முடியா மையின், அதனைத் தீதென்றார். (க)

கூஎஉ. தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை. உ.

இ - ள். தூங்கிச் செயற்பால தூங்குக - நீட்டித்துச் செய்யும் பருதியவாய வினை களுள் நீட்டிக்க;—தூங்காது செய்யும் வினை தூங்கற்க - நீட்டியாது செய்யும் வினை களுள் நீட்டியாதொழிக. எ - று.

இருவழியும் இறுதிக்கட்டொக்க ஏழாவது விரிக்கப்பட்டது. இருவகை வினை களும் வலியானுங் காலத்தானும் அறியப்படும். மாறிச்செயின், அவை வாயாவென் பது கருத்து. மேற்றூங்காமையெனாரும், ஈண்டதனோப் பருத்துக கூறினார். இவை யிரண்டுபாட்டானும் பொதுவகையால வினைசெயுநெறிமுறை கூறப்பட்டது. (உ)

கூஎஊ. ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே யொல்லாக்காற்
செலலுமவாய நோக்கக்கச் செயல். ஊ.

இ - ள். ஒல்லும் வாய் எல்லாம் வினை நன்று - வினைசெய்யுங்கால் இயலுமிடத் தெல்லாம் போராதசெய்தல் நன்று,—ஒல்லாக்கால் செல்லும் வாய் நோக்கிச் செயல் - அஃதியலாவிடத்து ஏனை மூன்றுபாயத்துள்ளும் அது முடிவதோருபாயநோக்கிச் செய்க. எ - று.

இயலுமிடம் பகையிற் றான்வலியனாய காலம். அக்காலத்துத்தண்டமே நன்றென் றார், அஞ்சுவது அதறபகையாகலின். இயலாவிடம் ஒத்தகாலமும மெலியகாலமும். அவ் விரண்டு காலத்துஞ சாம பேத தானங்களுள் அது முடியுமுபாயத்தாற செய்கவென் றார், அவை ஒன்றுதொன்று வேறுபாயடையவேனும் உடம்படுதலுபயத்தாற் றம்மு ளொக்குமாகலின். இதனுள் வலியான், ஒப்பான், மெலியானெனநிலை மூவகைத் தென்பதூஉம், அவறறுள் வலியது நிறப்பும், கூறப்பட்டன. (ஊ)

* திருக்குறள், உகஉ.

கூளச. வினபகை யென்றிரண்டி. னெச்ச நினையுங்காற்
றீயெச்சம் போலத் தெறும்.

இ - ள். வினை பகை என்ற இரண்டின் எச்சம் - செய்யத்தொடங்கிய வினையும் கூடியதொடங்கிய பகையுமென்று சொல்லப்பட்ட இரண்டனதொழிலும்—நினையுங் கால் நீயசசமம்பாலத் தெறும்-ஆராயுங்காத நீயினதொழிவுபோலப் பின் வளர்ந்து கெகெகும். எ - று.

இனி இக்குறை என்செய்வதென்று இகழ்ந்தொழியற்க, முடியச்செய்கவென்ப தாம். பன வளாதலொப்புமைபறறிப் பகையெசசமும் உடன் கூறினர். இதனுன் வலியானசையயுந்திறங கூறபபட்டது. (ச)

கூளரு. மபாருளகருவி காலம வினையிடனெ டைந்து
மருமுய மவணணிச மசயல். ரு.

இ - ள். பொருள கருவி காலம் வினை இடனெடு ஐந்தும் - வினைசெய்யுமிடத் துப் பபாருளுங கருவியுங காலமும வினையும இடனுமாகிய இவவைந்தனையும்— ஆருள தா வணணிச மசயல - மயக்கமறவெணணிச மசயக. எ - று.

எணணெடு பிறவழியுங் கூட்டப்பட்டது. பொருள் அழியும் பொருளும் ஆகும் பொருளும. கருவி தனருணையும மாறறாதானையும. காலம தனக்காங்காலமும் அவர்க் காங்காலமும. வின தானவல்லவினையும அவா வலலவினையும. இடம் தான வெலலு மிடமும அவா வலலுமிடமும. ஆவறறைத தான வெனறியையதாநிறத்திற் பிழை யாமலெணணிச மசயகவெனபதாம. (இ)

கூளகூ. முடிவு மிடையூறு முற்றியாங் கெய்தும்
படுபயனும பாததுச் செயல். கூ.

இ - ள். முடிவும் - வினைசெய்யுங்கால் அது முடிதற்குள்தாம் முயற்சியும்— இடையூறும் - அதறகு வருமிடையூறும்—முறறறியாகு எய்தும் படுபயனும் - அது நீங்கி முடிந்தாற ருனெய்தும் பெருமபயனும—பார்த்துச் செயல் - சீர்தூக்கிச் செய்க. எ - று.

முடிவு ஆகுபெயர். முயற்சியிடையூறுகளதளவிற் பயனதளவு பெரிதாயிற் செய்க வெனபதாம. (ஈ)

கூளள. செய்வினை செய்வான் செயன்முறை யவ்வினை
யுள்ளறிவா னுள்ளங் கொளல். எ.

இ - ள். செய்வினை செய்வான் செயன்முறை-அவ்வாற்றாற் செய்யப்படும் வினை யைத் தொடங்குனன் செய்யுமுறைமையாவது—அவவினை உள் அறிவான் உள்ளம் கொளல் - அதனதளப்பாட்டினை யறிவான் கருத்தினைத் தானறிதல். எ - று.

அவ்வாறென்பது பொருண் முதலியவெண்ணலையும் முடிவுமுதலிய தாக்கலையும். உள்ளறிவான் முன்செய்து போந்தவன். அவன் கருத்து அவன் செய்து போந்த உபாயம். அதனை யறியவே, தானும் அதனுற்செய்து பயனெய்துமென்பதாம். மூன்றுபாட்டானும் ஒப்பான் செய்புத்திறம் கூறப்பட்டது. (எ)

சூஎஅ: வினையான் வினையாக்கெ ோட னனைவுள்
யானையால் யானையாத் தற்று. அ.

இ - ள். வினையான் வினை ஆக்கிக்கோடல் - செய்கின்றவினையாலே அன்னது பிறிதுமோர்வினையை முடித்துக்கொள்க;—ஈனைகவுள் யானையால் யானை யாத்தற்று- அது மதத்தானனேந்த கபோலத்தினையுடைய யானையாலே அன்னது பிறிதுமோர் யானையைப்பிணித்ததனே டொக்கும். எ - று.

பிணித்தற் கருமை தோன்ற ஈனைகவுளென்பது பின்னுங் கூட்டப்பட்டது. தொடங்கிய வினையானே பிறிதுமோர்வினையை முடித்தற் குபாயமாமாறு எண்ணிச் செய்க, செய்யவே, அம்முறையான் எல்லாவினையும் எளிதின் முடியுமென்பதாம். (அ)

சூஎக நட்டார்க்கு நல்ல செயலின் வீரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல். கூ.

இ - ள். நட்டார்க்கு நல்ல செயலின் வீரைந்ததே - வினைசெய்வானுற் றன்னட் டார்க்கு இனியவற்றைச் செய்தலினும் வீரைந்து செய்யப்படும்—ஒட்டாரை ஒட்டிக் கொளல் - தன் பகைவரோடு ஒட்டாரைத் தனக்கு நட்பாக்கிக் கோடல். எ - று.

அவ்வீனை வாய்த்தற்பயத்தவாய இவ்வீரண்டும் பகைவர்க்குத் தன்மெலிவு பலனு வதன்முன்னே செய்கவென்பார், வீரைந்த தென்றார். வீரைந்து செய்யப்படுவ தென் றவாறு. வினைசெய்யுங் நிறமாகலிற் பகைவரோ டொட்டாராயிற்று. தன்னொட்டார் பிறருட் கூடாமல் மாற்றிவைத்த லெனினு மமையும். (கூ)

சூஅ0. உறைசிறியா ருண்ணடுங்க லஞ்சிக் குறைபெறிற்
கொள்வர் பெரியார்ப் பணிந்து. கo.

இ - ள். உறை சிறியார் - ஆளுறிடன் சிறியராய அமைச்சர்;— உள் நடுங்கல் அஞ்சி - தம்மின்வலியராய் எதிர்ந்தவரிற் தம்பருதி நடுங்கலையஞ்சி,—குறை பெறின் பெரியார்ப் பணிந்து கொள்வர் - அச்சிலைக்கு வேண்டுவதாய சந்து கூடுமாயின், அவ ரைத் தாழ்ந்து அதனையேற்றக் கொள்வர். எ - று.

இடம் நாடும் அரணும். அவற்றது சிறுமை ஆள்வார் மேலேற்றப்பட்டது. மெலி யாரோடு சந்திக்கு வலியார் இயைத லரிதாகலின், பெறினென்றார். அடியிலே மெலி யராயினுர் தம்பருதிபு மஞ்சிநீங்கின் முதலொடுங் கெடுவராகலின், அது வாராமற் சிறிது கொடுத்துஞ் சந்தினை யேற்றுக்கொள்க வென்பதாம். பணிதல் மானமுடை யார்க்குக் கருத்தன்மையின், கொள்வரென வுலகியலாற் கூறினுர். இவைமூன்றுபாட் டானும் மெலியான் செய்யுந்திறங் கூறப்பட்டது. (கo)

சுகூம் அதி.—தூதி.

அஃதாவது சந்தி விக்கிரகங்கட்கு வேற்றுவேந்தரிடைச்செல்வாரதுதன்மை. அவ்விரண்டனையும் மேல் வினைசெயல்வகை யென்றமையின், இஃததன்பின்வைக்கப் பட்டது. தான் வருத்தக்கூறவான், கூறியது கூறுவானெனத் தூது இருவகைப் படும். அவருள் முன்னேன் அமைச்சனே டொப்பானுகலானும், பின்னேன் அவனிற் காற்கூறு குணங் குறைந்தோ னுகலானும், இஃதமைச்சியலாயிற்று.

சூஅக. அன்புடைமை யான்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு. க.

இ - ள். அன்பு உடைமை தன் சுற்றத்தார்மாட்டு அன்புடையனாதலும்—ஆன்ற குடிப்பிறத்தல் - அமைச்சுப் பூணத்தகைமை குடியின்கட்பிறத்தலும்—வேந்து அவாம் பண்பு உடைமை - அரசர்தானே விரும்பும் பண்புடையனாதலும்—தூது உரைப்பான் பண்பு - தூதுவார்த்தை சொல்வானுக்கு இலக்கணம். எ - று.

மூன்னேயிரண்டனுலும், முறையே சுற்றத்தார்க்குத் தின்குவாராமற்றான்பேணி யொழுகலும், தன்முன்னேர் தூதியல் கேட்டறிதலும் பெற்றும். வேந்தவாம்பண்பு உடைமை மூன்னர் மன்னரைச் சேர்ந்தொழுகற்கட் பெறப்படும். அதனல் வேற்றரசரும் அவன் வயத்தராதல் பெறுதும். (க)

கூஅஉ. அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்
இன்றி யமையாத மூன்று. உ.

இ - ள். அன்பு - தம்மரசன் மாட்டன்புடைமையும்—அறிவு - அவனுக்கு ஆவன வறியுமறிவுடைமையும்—ஆராய்ந்த சொல்வன்மை - அவற்றை வேற்றரசரிடைச் சொல்லுங்கால் ஆராய்ந்து சொல்லுதல் வன்மையுமென—தூது உரைப்பார்க்கு இன்றியமையாத மூன்று - தூதுரைக்க வரியார்க்கு இன்றியமையாத குணங்கள் மூன்று. எ - று.

ஆராய்தல் அவற்றிற் குடம்படுஞ் சொற்களைத் தெரிதல். இன்றி யமையாத மூன்றெனவே, அமைச்சர்க்குச் சொல்லிய பீறகுணங்களும் வேண்டுமென்பது பெற்றும். இவை யிரண்பொட்டானும் இருவகையார்க்கும் பொதுவிலக்கணங் கூறப்பட்டது. ()

கூஅங. நூலாரு ணுல்வல்ல ணுகுதல் வேலாருள்
வென்றி வினேயுரைப்பான் பண்பு. ங.

இ - ள். வேலாருள் வென்றி வினே உரைப்பான் பண்பு - வேலேயுடைய வேற்றரசரிடைச் சென்று தன்னரசனுக்கு வென்றிதரும் வினேயைச் சொல்லுவானுக்கு இலக்கணமாவது—நூலாருள் நூல் வல்லன் ஆகுதல் - நீதிநூலேயுணர்ந்த அமைச்சரிடைத் தான் அந்நூலே வல்லனுதல். எ - று.

கோறன்மாலேயரென்பது தோன்ற வேலாரென்றும், தூது வினே * யிரண்டு மடங்கவென்றிவினே யென்றுங் கூறினர். வல்லனுதல் உணர்வுமாத்திர முடையராய அவர் மூன் வருக்குமாற்றலுடையனுதல். (ங)

கூஅச. அறிவுரு வாராய்ந்த கல்வியீம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினேக்கு. ச.

இ - ள். அறிவு - இயற்கையாகிய வறிவும்—உரு - கண்டார் விரும்புந் தோற்றப் பொலிவும்—ஆராய்ந்த கல்வி - பலரோடும் பலகாலு மாராயப்பட்ட கல்வியுமென—இம்மூன்றன் செறிவு உடையான் - நன்குமதித்தற் கேதுவாய இம்மூன்றனது கூட்டத்தை புடையான்—வினேக்குச் செல்க - வேற்றுவேந்தரிடைத் தூது வினேக்குச் செல்க. எ - று.

இம்மூன்றும் ஒருவன்பாற் கூடுதலரிதாகலின், செறிவுடையானென்றார். இவற்றுன் நன்குமதிப்புடையனுகவே, வினே இனிதுமுடியு மென்பது கருத்து. (ச)

கூஅசு. தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதுநூன் றூது. ஞ.

---

* தூதுவினே - சந்திவிகிற்பமை.

இ - ள். தொகச் சொல்லி - வேற்றரசர்க்குப் பல காரியங்களைச் சொல்லும் வழிக் காரணவகையாற் றொகுத்துச்சொல்லியும்—தூவாத நீக்கி நகச் சொல்லி-இன்னாத காரியங்களைச் சொல்லும்வழி வெய்ய சொற்களை நீக்கி இனிய சொற்களான் மனமகிழச் சொல்லியும்—நன்றி பயப்பது தூதாம் - தன்னரசனுக்கு நன்மையைப் பயப்பவனே தூதனுவான். எ - று.

பலகாரியங்கட் குடம்படாதார் பரம்பரையான் அவற்றிற்குக் காரணமாய தொன்றைச்சொல்ல அதனால் அவை வினையுமாறுய்த்துணர வருமையானுஞ் சுருக்கத் தானு மூடம்படுவர், இன்னதவற்றிற் குடம்படாதார் தம்மன மகிழச்சொல்ல அவ் வின்னுமை காணுத உடம்படுவராதலின், அவ்விரு வாற்றானும் உன்காரியந் தவறுமல் முடிக்கவல்லா னென்பதாம். எண்ணும்மைகள் விகாரத்தாற்றொக்கன. (இ)

கூஅசு. கற்றுக்கண் ணஞ்சான் செலச்சொல்லிக் காலத்தாற்
றக்க தறிவதாந் தூது. கூ.

இ - ள். கற்று - நீதிநூல்களைக் கற்று—செலச் சொல்லி - தான் சென்றகருமத் தைப் பகைவேந்தர் மனங்கொளச் சொல்லி—கண் அஞ்சான் - அவர் செயிர்த்து நோக்கின் அங்நோக்கிற் கஞ்சாது—காலத்தால் தக்கது அறிவது தூதாம் - காலத் தோடு பொருந்த அது முடிக்கத்தக்க வுபாயமறிவானே தூதனுவான். எ - று.

அவ்வுபாய மறிதற்பொருட்டு நீதிநூற்கல்வியும், அதனுணர்ப் பிறிதொன்றான் முடியுங்காலம் வரின் அவ்வாறு முடிக்கவேண்டுதலிற் காலத்தாற்றக்கதறிதலும், இலக்கணமாயின. (ஈ)

கூஅள. கடனறிந்து காலங் கருதி யிடனறிந்
தெண்ணி யுரைப்பான் றலை. எ.

இ - ள். கடன் அறிந்து - வேற்றரசரிடத்துத் தான்செய்யுமுறைமை யறிந்து—காலம் கருதி - அவர்செவ்வி பார்த்து—இடன் அறிந்து-சென்ற கருமஞ் சொல்லுதற் கேற்ற இடமறிந்து—எண்ணி - சொல்லுமாற்றை முன்னே விசாரித்து—உரைப்பான் தலை - அவ்வாறு சொல்லுவான் தூதரின் மிக்கான். எ - று.

செய்யுமுறைமையாவது அவர்நிலையும் தன்னரசனிலையும் தன்னிலையும் தூக்கி அவற்றிற்கேற்பக் காணுமுறைமையும் சொல்லுமுறைமையும் முதலாயின. செவ்வி தன்சொல்லை யேற்றுக்கொள்ளும் மனநிகழ்ச்சி. அது காலவயத்ததாகலிற் காலமென் றார். இடம் தனக்குத் துணையாவாரிருடையிடம். எண்ணுதல் தான் அது சொல்லு மாறும் அதற்கு அவர்சொல்லு முக்காரமும் அதற்குப் பின்னான் சொல்லுவனவுமாக இவ்வாற்றான் மேன்மேற் றானே கற்பித்தல். வடநூலார் இவ்விருவகையாருடன் ஒலை கொடுத்தனுப்பிச்சூட்டிற் தூதரைத் தலை, இடை, கடையென்று வகுத்துக்கூறி னாராகலின், அவர்மதமுந்தோன்றத் தலையென்றார். தூதென்பது அதிகாரத்தான் வந்தது.இவையைந்துபாட்டானும் தான் வகுத்துக்கூறுவானதிலக்கணங் கூறப்பட்டது.

கூஅஅ. தூய்மை துணைமை துணிவுடைமை யிம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு. அ.

இ - ள். வழி உரைப்பான் பண்பு - தன்னரசன் வார்த்தையை அவன் சொல்லிய வாறே வேற்றரசர்க்குச் சென்று சொல்லுவானதிலக்கணமாவன—தூய்மை-பொருள் காமங்களால் றூயனுதலும்—துணைமை - தனக்கு அவரமைச்சர் துணையாற்றன்மை யும்—துணிவுடைமை - துணிதலுடைமையும்—இம்மூன்றின் வாய்மை - இம்மூன் றோடு கூடிய மெய்ம்மையுமென விவை. எ - று.

பொருள் காமங்கள் பற்றி வேறுபடக் கூறுமைப்பொருட்டுத் தன்மையும், தன் னரசனுக்கு உயர்ச்சிகூறியவழி எம்மனோர்க் கஃதியல்பெனக்கூறி அவர் வெகுளி நீக் குதற்பொருட்டுத் தாழ்மையும், இது சொல்லின் இவரேதஞ்செய்வரென் றெழுதியா மைப்பொருட்டுத் தாழ்வுடைமையும், யாவரானுந் தேறப்படுதற்பொருட்டு மெய்ம் மையும், வேண்டப்பட்டன. இன் ஒடுவின்பொருட்கண் வந்தது. (அ)

சுஅசு. விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுவாற்றம்
வாய்சோரா வன்க ணவன். கூ.

இ - ள். விடு மாற்றம் வேந்தர்க்கு உரைப்பான் - தன்னரசன் சொல்லிவிட்ட வார்த்தையை வேற்றரசர்க்குச் சென்று சொல்லவுரியான்—வடு மாற்றம் வாய்சோரா வன்கணவன் - தனக்கு வருமேதத்திற்கஞ்சி அவனுக்குத் தாழ்வான வார்த்தையை வாய்சோர்ந்துஞ் சொல்லாத திண்மையை யுடையான். எ- று.

தாழ்வு சாதிதருமமன்மையின், வடுவென்றார். வாய்சோராவெனக் காரியங் காரணத்துளடக்கப்பட்டது. (க)

சுகூ0. இறந்தி பயப்பினு மெஞ்சா திறைவற்
குறுதி பயப்பதாங் தூது. க0.

இ - ள். இறந்தி பயப்பினும் எஞ்சாது - அவ்வார்த்தை தன்னுயிர்க்கிறுதி தருமா யினும் அதற்கஞ்சி யொழியாது—இறைவற்கு உறுதிபயப்பது தூதாம் - தன்னரசன் சொல்லியவாறே அவனுக்கு மிருதியை வேற்றரசரிடைச் சொல்லுவானே தூத னுவான். எ - று.

இறந்திபயப்பினு மென்றதனால், ஏனைய பயத்தல் சொல்லவேண்டாவாயிற்று. இவை மூன்றுபாட்டானுங் கூறியது கூறுவானதிலக்கணங் கூறப்பட்டது. (கo)

எ0 ம் அதி.—மன்னரைச்சேர்ந்தொழுகல்.

அமைதாவது அமைச்சர் அரசரைப் பொருந்தி யொழுகுமாறு. இது, வேந்த வாம் பண்புடைமை * யென மேலே வேண்டப்பட்டமையின், தன்பின் வைக் கப்பட்டது.

சுகூ. அலா தணுகாது நீக்காய்வார் போல்க
விகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார். க.

இ - ள். இகல் வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார் - மாறுபடுதலிலுடைய அரசரைச் சேர்ந்தொழுகும் அமைச்சர்—அகலாது அணுகாது நீக்காய்வார் போல்க - அவரை மிக நீங்குவதும் மிகச் செறிவதுஞ் செய்யாது நீக்காய்வார்போல இடைநிலத்திலே நிற்க. எ - று.

கடிதின் வெகுளுந் தன்மையென்பது தோன்ற, இகல்வேந்தரென்றார். மிகவு யிற் பயன் கொடாது மிகவணுகின் அவமதிபாராித் தெறும் வேந்தர்க்கு, மிகவகலி குளிர் நீங்காது மிகவணுகிற் சுடுவதாய நீயோனைதாய தொழிலுவமம் பெறு பட்டது. (க

* திருக்குறள், சுஅக.

கூகூ. மன்னர் விழைப விழையாமை மன்னரான்
மன்னிய வாகைக் தரும். உ.

இ - ள். மன்னர் விழைப விழையாமை - தம்மாற் சேரப்பட்ட மன்னர் விரும்பு வனவற்றைத் தாம் விரும்பாதொழிதல்—மன்னரான் மன்னிய ஆக்கம் தரும்- அமைச்சர்க்கு அவராலே நிலைபெற்ற செல்வத்தைக் கொடுக்கும். எ - று.

ஈண்டு விழைபவென்றது அவர்க்குச் சிறப்பாக வுரியவதறை. அவை தகரப்படு வன, ஒப்பனை, மேனமைமயனறவை முதலாயின. இவறலூற ஒப்பிதகஞ்சித் தாம் விழையாதொழியவே, அவலச்சம்நாக்கியுவந்து அவர்தாமே எல்லாச் செல்வமும் நல் குவசென்பது கருத்து. எனவே, அவற்றை விரும்பிற் கேடுதரு மென்பதாம். (உ)

கூகூ. போறறி னரியவை போற்றல் கடுத்தபின்
மீறறமுதல யாககு மரிது. கூ.

இ - ள். போறறின் அரியவை போற்றல் - அமைச்சர் தம்மைக் காக்கக் கருதின் அரிய பிழைகள தகுகணவாராமற காக்க,—கடுதத்பன மீறறறுதல் யாககும அரிது- அவறறை வாதனவாகக்கடமே அவவரசா ஐயுறரூல் அவரைப பினமளனிதல் யாவாககு மரிதாகலான. எ - று.

அரிய பிழைகளாவன அவராற் பொறுத்தற்கரிய அறைபோதல், உரிமையொடு மருவல், அருமபொருள வெளவலென றிவை முதலாயின. அவறறைக் காத்தலாவது ஒருவன் சொலலியகால,தகுமோ வென்றையுரூது தகாதென்றே அவர் துணியவொ ழுகல. ஒருவாறரூத மதளவுத்தாலும் கடன்கொணடான் ரூனறப பொருடோன்று மாறுபாலக கணடழுமையலலாம அவை நிலைக்கமயதலன யாககு மாதென்ரூர். இலவ மூனறுபாட்டாலும அமு பொதிவகையாற் கூறபபட்டது. (கூ)

கூகூ. மெய்வகமசாலலுஞ் சிரந்த நகையு மவாதொழுக
லானறு மபாயம் நிகத்து. ச.

இ - ள். ஆன்ற பெரியாரகத்து - அமைந்தவரச ரருகிருந்தால்,—செவிச்சொல் லும் சிரந்த நகையும அவத்து ஒழுகல-அவாகாண ஒருவன மெய்வகடசொல்லுதலே யும ஒருவன முகமநாக்கி நகுதலையுந் தவிராதொழுகுக. எ - று.

சிரதல பிறனைஞ சிரதல. செய்தொழுகின், தவருற்றங் கண்டு செய்தனவாகக் கொள்வனெபது கருத்து. (ச)

கூகூரு. எபபொருளு மோரார் தொடாரார்மற் றப்பொருளே
விட்டகலாற கேட்க மறை. ஞ.

இ - ள். மறை - அரசனுக்குப் பிறரோடு மறை நிகழ்வுழி—எப்பொருளும் ஓரார்- யாதொரு பொருளையுஞ் செவிகொடுத்துக் கேளாது,—யாதோடாரா - அவனை மூடுகி வினவுவதுஞ் செயயாது,—அப்பொருளை விட்டகலாற் கேட்க - அமமறைப்பொருளை அவனருகின அடுகாது சொலலியகாற் கேட்க. எ - று.

ஓரதறகும பொருளாயினு மென்பார், எப்பொருளு மென்ரூர். மற்று வினை மாற்றினகண் வருதது. (ஞ)

கூகூ. குறிப்பறிகது காலங் கருதி வெறப்பில
வினைபப வேடபச் சொலல். கூ.

இ - ள். குறிப்பு அறிந்து - அரசனுக்குக் காரியஞ்சொல்லுங்கால் அப்பொழுது நிகழ்கின்ற அவன் குறிப்பினையறிந்து—காலம் கருதி-சொல்லுதற்கேற்ற காலத்தையும்நோக்கி,—வெறுப்பு இல வேண்டிய வேட்பச் சொலல்-வெறுப்பிலவுமாய் வேண்டுவனவுமாய காரியங்களே அவன் மனம் விரும்பும்வகை சொல்லுக. எ - று.

குறிப்புக் காரியத்தின்கணன்றிக் காமவெகுளி யுள்ளிட்டவற்றி னிகழ்வுழியும் அதற்கேலாக்காலத்துஞ் சொல்லுதல் பயனின்மைகலிற் குறிப்பறிந்து காலங்கருதி யென்றும், அவனுடம்படாதன முடிவுபோகாமையின் வெறுப்பிலவென்றும், பயனில்லவும் பயன்சருகியவுஞ் செய்தல் வேண்டாமையின் வேண்டுபவென்றும், அவற்றை இனியவாய்ச சுருங்கி விளங்கிய பொருளுவாய சொற்களாற சொல்லுகவென்பார் வேட்புச சொலலென்றுங் கூறினர். (கூ)

கூகூஎ. வேட்பன சொல்லி விணையில வெஞ்ஞான்றும்
கேட்பினுஞ் சொல்லா விடல். எ.

இ - ள். வேட்பன சொல்லி-பயன் பெரியனவுமாய் அரசன் விரும்புவனவுமாய காரியங்களே அவன் கேட்டிலனாயினுஞ் சொல்லி,—எஞ்ஞான்றும் வினை இல கேட்பினுஞ சொல்லாவிடல் - எஞ்ஞானறும பயனிலவாயவற்றைத் தானே கேட்டாலுஞ சொலலாதுவிடுக. எ - று.

வினையிலவெனவுங் கேட்பினுமெனவும் வந்த சொற்களான், அவற்றின் மறு தலைசொற்கள் வருவிக்கப்பட்டன. வினையான் வருதலின வினையென்றும், வறுமைக் காலமுமடங்க எஞ்ஞான்று மென்றுங கூறினர். சொல்லுவனவுஞ் சொல்லாதனவும் வருதற்குக் கூறியவாறு. இவைதான்குபாட்டாலும் சிறப்புவகையாற கூறப்பட்டது. ()

கூகூஅ. இளைய ரினமுறைய ரென்றிகழார் நின்ற
வொளியோ டொழுகப் படும். அ.

இ - ள். இளையர் இன முறையர் என்று இகழார் - இவர் எம்மினிளையரென்றும் எமகின்ன முறையினையுடையரென்றும் அரசரையவமதியாது,—நின்ற ஒளியோடு ஒழுகப்படும் - அவர்மாட்டு நின்றவொளியோடு பொருந்த ஒழுகுதல் செயப்படும. எ - று.

ஒளி—உறவுகாநிற்கவுந் தாமுலகங்காக்கின்ற அவர் கடவுட்டன்மை. * அதனோடு பொருந்தவொழுகலாவது அவர் கடவுளருந் தாம் மகளுமாயொழுகுதல். அவ்வொள்ளாறு பீகாகபபட்ட விளமையும் முறையுமபறறி இகழவாயின, தாமும் போகபபடுவரெனபது கருத்து. (அ)

கூகூக. கொளப்பட்டே மென்றெண்ணிக் கொள்ளாத செய்யார்
துளக்கற்ற காட்சி யவர். க.

இ - ள். கொளப்பட்டேம் என்று எண்ணிக்கொள்ளாத செய்யார் - அரசனுல் யாம் நன்குமதிக்கப் பட்டேமென்று கருதி அவன் விரும்பாதவறறைச் செய்யார்—துளக்கு அற்ற காட்சியவர் - நிலைபெற்ற வறிவினையுடையார். எ - று.

---

* உறவுஞ் மாய்வு மனனவ தன்னெனி—கறவுங் தெண்டிலா லையக காகுமா—லிறவுகு கணணிமை யாவிழித நேயிருக—தறவுள் வெள்ள வதனபுறம் காக்கலா—சேகைக் தாமணி, காமகளிலமபகம, உகஅ.

கொள்ளாதனசெய் தழிவெய்துவார் கொளப்பாட்டிற்குப்பின் நம்மை வேறொரு வராகக் கருதுவராகலின், முன்னேயாகவே கருதி யஞ்சியொழுகுவாரைத் தனக் கற்ற காட்சியவரென்றார். (க)

எ00. பழைய மெனக்கருதிப் பண்பல்ல செய்யும்
கெழுதகைமை கேடு தரும். க0.

இ - ள். பழையம் எனக் கருதிப் பண்பு அல்ல செய்யும் கெழுதகைமை - அரச னுக்கு யாம் பழையமெனக் கருதித் தமக்கியல்பல்லாதவற்றைச் செய்யுமுரிமை— கேடு தரும் - அமைச்சர்க்குக் கேட்டினைப் பயக்கும். எ - று.

அவன் பொருது செறும்பொழுதின் அப்பழமைநோக்கிக் கண்ணேடீது உயிரை வௌவுதலான், அவன்வேண்டாதன செய்தற்கேதுவாய கெழுதகைமை கேடுதருமென்றார். இவைமூன்றுபாட்டானும் பொறுப்பொன்று அரசா வெறுப்பன செய்யற்கவென்பது கூறப்பட்டது. (க0)

எக ம் அதி.—குறிப்பறிதல்.

அஃதாவது அரசர் கருதியவதனை அவர் கூறுமலறிதல். இது மன்னரைச் சேர்ந்தொழுகற்கு இன்றியமையாதாகலின, அதன்பின் வைக்கப்பட்டது.

எ0க. கூறுமை நோக்கிக் குறிப்பறிவா னெஞ்ஞான்று
மாறாநீர் வையக கணி. க.

இ- ள். குறிப்புக் கூறுமை நோக்கி அறிவான் - அரசனும் குறித்த கருமத்தை அவன கூறவேண்டாவகை அவன்முகத்தானுங கண்ணானுங்நோக்கி அறியுமமைசசன்,- எஞ்ஞான்றும் மாறு நீர் வையகது அணி - எஞ்ஞானறும் வற்றுத நீராறசூழப்பட்ட வையத்துள்ளார்க்கு ஓராபரணமாம். எ - று.

ஒட்பமுடையனும் எல்லார்க்கும் அழகுசெய்தலான், வையக்கணியென்றார். குறிப்பும் வையமும் ஆகுபெயர். வையதநிறமகன்பது விகாரப்பட்டு நினறது. (க)

எ0உ. ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வதமோ டொப்பக கொளல். உ.

இ - ள். அகத்து ஐயப்படாது உணாவானை - ஒருவன் மனத்தின்கணிகழ்வதனை ஐயப்படாது ஒருதலையாகவுணரவலலானை—தெய்வதமோடு ஒபபக் கொளல-மகபின யாயினும், தெயவதமோடொப்ப நண்குமதிக்க. எ - று.

உடம்பு முதலியவற்றுன் ஒவ்வானுயினும் பிறர் நினைத்ததனைரூர் தெய்வத் தன்மையுடைமையின தெயவதமோ டொப்ப வென்றார். (உ)

எ0ஊ. குறிப்பிற் குறிப்புணர் வாரை யுறுப்பினுள்
யாது கொடுத்துங கொளல். ஊ.

இ - ள். குறிப்பின் குறிப்பு உணர்வாரை - தங்குறிப்பு நிகழுமாறறிந்து அதனைப் பிறர்குறிப்பறியுந்தன்மையாரை,—உறுப்பினுள் யாது கொடுத்தும கொளல் - அரசர் தம்மூறுப்புக்களுள அவர் வேண்டுவதொனறனைக் கொடுத்தாயினும், தமக்குத் தினை யாகக் கொள்க. எ - று.

உண்ணிகழுகெறி யாவர்க்குமொத்தலின், பிறர்குறிப்பறிதற்குத் தங்குறிப்புக் கருவியாயிற்று. உறுப்புக்களாவன பொருளும் நாடும் யானைகுதிரைகளும் முதலிய பூதத்தறுப்புக்கள். இதற்குப்பிறர் முகக்குறிப்பானே அவர் மனக்குறிப்புணர்வானை யென்றுரைப்பாருமுளர். இவை மூன்றுபாட்டானுங் குறிப்பறிவாரது சிறப்புக் கூறப் பட்டது. (க)

எ.ச. குறித்தது கூருமைக் கொள்வாரோ டேனை
யுறுப்பீபோ ரினையரால வேறு. ச.

இ - ள். குறித்தது கூருமைக் கொள்வாரோடு - ஒருவன் மனத்துக் கருதிய வதனை அவன்கூறவ்வண்டாமல் அறியவல்லாரோடு—எனை உறுப்பு ஒரனையர்-மறறை மாட்டாதார் உறுப்பாலொருதன்மையராக வொப்பாராயினும்,—வேறு - அறிவான் வேறு. எ - று.

கொள்ளாதாரென்பதனாலும், ஆயினுமென்பதனாலும் அவாய்நிலையான் வந்தன. சிறந்த வறிவினலமுடைய, விலங்கெனனுங்கருத்தான வேறென்றார். (ச)

எ.டு. குறிப்பிற குறிப்புணரா வாயி னுறுப்பினு
ளளனை பயத்தலீவா கண. டு.

இ - ள். குறிப்பின் குறிப்பு உணராவாயின் - குறித்தது காணவல்ல தங்காட்சி யாற பறாகுறிப்பிகையுணரமாட்டாவாயின,—உறுபபினுள்ள கண என்ன பயத்தலீவா- ஒருவனுறுபபுகளுட சிறந்த கணகள வேறெனன பயனசை செயவன! எ - று.

முதறகட் குறிப்பு ஆருபெயர். குறிப்பறிதறகட் னேயாதற சிறப்புப்பற்றி உயிர தினாவு கண்மேலறறபபட்டது. அகக்கணகளாத புயனிலலியனபதாம. இவை யாணபாட்டானுங குறிப்பறியாதிழிபு கூறபபட்டது. (ஞ)

எ.சு. அடித்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்
கடித்தது காட்டி முகம். சு.

இ - ள். அடித்தது காட்டும் பளிங்குபோல் - தனனையடித்த பொருளது நிறத் தினதாசன னெஞ்சுகாட்டும .பளிங்குபோல—னருஞசு கடித்தது முகம காட்டும - ஒருவனனுசதது மகதசன அவன முகந தாசன னெஞ்சு காட்டும. எ - று.

அடித்தலென்பது ஆருபெயர். கடித்தலென்பது கடியெனனு முரிச்சொலடியாய் வந்த தொழிலபெயர. உவமம ஒருபொருள பிறபொருபொருள்னபணபைகளெஞ்சு தோறறுதலாகிய தொழிலபறறி வந்தது. (ஞ)

எ.எ. முகதனின் முதற்குறைந்த துண்டோ வுவப்பினும்
காய்னுந தானமுந துமம. எ.

இ - ள். உவப்பினும காய்னும தான முநதுமம - உயிர் ஒருவனையுவததலானுங் காய்தலானுமுறின, தானறநது அவநறனகண அதனினமுபடடு நிறகுமாகலான,— முகதனின முதற்குறைநதது உணடோ - முகமெபால அறிவுமகது பறறுணடோ வுலகில. எ - று.

உயிர்க்கே அறிவுள்ளது ஐம்பூதங்களானியன்ற முகத்திற்கில்லையென்பாரை நோக்கி, உயிரது நருத்தறற்ற அஃதுவகுறின மலர்நது காய்வுறிற சுருங்கியும வரலான், உணடென மறுப்பார் போன்று, குறிப்பறிதற்குக் கருவீ கூறியவாறு. (எ)

எ0அ முகநோக்கி நிற்க வமைவு முகநோக்கி
யுற்ற துணர்வார்ப் பெறின். அ

இ - ள். அகம் நோக்கி உற்றது உணர்வார்ப் பெறின் - குறையுறவானும் தன் மனத்தைக் குறிப்பானறிந்து தானுற்றவதனைத் தீர்ப்பாரைப் பெறின் —முகம் நோக்கி நிற்க அமையும் - அவர் தன்முகம் நோக்கும்வகை தானும் அவர்முகநோக்கி அவ்வெல்லைக்கணிற்க வமையும். எ - று.

உணர்வாரெனக் காரியத்தைக் காரணமாக்கிக் கூறினார். அவ்வெல்லையைக் கடந்து சொல்லுமாயின் இருவர்க்குந் தெய்வ மாகலின், அது வேண்டாவென்ப தாம். குறையுறவானியல்பு கூறுவார்போன்று கருவி கூறியவாறு. இவை மூன்று பாட்டானுங் குறிப்பறிதற்கருவி முகமென்பது கூறப்பட்டது. (அ)

எ0கூ. பகைமையுங் கேண்மையுங் கண்ணுணரக்குங் கண்ணின்
வகைமை யுணர்வார்ப் பெறின். கூ.

இ - ள். கண்ணின் வகைமை உணர்வார்ப் பெறின் - வேற்றார்க் நோக்கு வேறு பாட்டின்றன்மையை அறியவல்ல அமைச்சரைப்பெறின்,—பகைமையும் கேண்மை யும் கண் உரைக்கும் - அவர்க்கு மனத்திலிடர்த்த பகைமையையும் ஏனைக்கேண்மை யையும் வேற்று வேந்தர் சொல்லிற்நிலராயினும் அவர்கண்களே சொல்லும் எ - று.

இறந்திக்கட் கண் ஆகுபெயர். நோக்குவேறுபாடாவன வெறுத்தநோக்கமும் உவந்தநோக்கமும். உணர்தல் அவற்றை அவ்வக் குறிகளானறிதல். (கூ)

எகo. நுண்ணிய மென்பா ரளக்குங்கோல் காணுங்காற்
கண்ணல்ல தில்லை பிற. கo.

இ - ள். நுண்ணியம் என்பார் அளக்கும் கோல் - யாம் நுண்ணறிவுடையே மென்றிருக்கும் அமைச்சர் அரசர்க்குத்தெய்வப்புலவர்க்குங் கோலாவன—காணுங்கால் கண்ணல்லது பிற இல்லை - ஆராயுங்கிடத்து அவர்கண்ணல்லது பிறவில்லை. எ - று.

அறிவிலுண்மை அஃதுடையார்மேலேற்றப்பட்டது இங்கிதம், வடிவு, தொழில், சொல்லென்பன முதலாகப் பிறர்கருத்தளக்குமனவைகள் பல, அவையெல்லாம் முன் னறிந்தவழி அவரான் மறைக்கப்படும், நோக்கம் மனத்தொகலத்தலான் ஆண்டு மறைக்கப்படாதென்பதுபற்றி, அதனையே பிரித்துக் கூறினர். இனி அலேசருக்கோ லென்று பாடமோதி, நுண்ணியமென்நிருக்கும் அமைச்சரை அரசரலேக்குங்கோலா வது கண்ணெனவுரைத்து, தன்வெகுளிநோக்கால் அவர் வெகுடற்குறிப்பறிவென் பது கருத்தாக்குவாருமுளர். இவையிரண்டோட்டானும் நுண்கருவி நோக்கென்பது கூறப்பட்டது. (எo)

எஉ ம் அதி.—அவையறிதல்.

அஃதாவது அரசனேடிருந்த அவையினியல்பையறிதல். காரியஞ்சொல் லுங்கால் அவன் குறிப்பறிதலேயன்றி இதுவும் வேண்டுதலின், இஃததன்பின் வைக் கப்பட்டது.

எகக. அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
நெகையறிந்த நாப்மை பவர். க.

இ - ள். சொல்லின் தொகை அறிந்த தன்மையவர் - சொல்லின் குழுவினையறிந்த தன்மையினையுடையார்—அவை அறிந்து ஆராய்ந்து சொல்லுக - தாமொன்று சொல்லுங்கால் அப்பொழுதையவையினையறிந்து ஆராய்ந்து சொல்லுக. எ - று.

சொல்லின்குழுவெனவே, செஞ்சொல், இலக்கணச்சொல், குறிப்புச்சொல்லென்னும் மூவகைச்சொல்லுமடங்கின*. தன்மை அவற்றுள் தமக்காகாதனவொழித்து ஆவன கோடல். அவையென்றது ஈண்டதனளவை. அது பிரதி, ஒப்பு, தாழ்வென மூவகைத்து. அறிதல் தம்மொடு தூக்கியறிதல். ஆராய்தல் இவ்வவைக்கட்சொல்லுங் காரியம் இது, சொல்லுமாறிது, சொன்னால் அதன்முடி விதுவென்று இவையுள்ளிட்டனவாராய்தல். (க)

எகஉ. இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுச் சொல்லி
னடைதெரிந்த நன்மை யவர். உ.

இ - ன். சொல்லின் நடைதெரிந்த நன்மையவர் - சொற்களினடையினை ஆராய்ந்தறிந்த நன்மையினையுடையார்—இடை தெரிந்து நன்கு உணர்ந்து சொல்லுக - அவைக்கண் ஒன்றுசொல்லுங்கால் அதன்செவ்வியையாராய்ந்தறிந்து வழுப்படாமல் பிரவுந்தெளிந்துசொல்லுக. எ - று.

சொற்களினடையாவது அம்மூவகைச் சொல்லும் செம்பொருள், இலக்கணப் பொருள், குறிப்புப்பொருளென்னும் பொருள்களோப் பயக்குமாறு†. செவ்வி கேட்டற்கண் வீருப்புடைமை. வழு சொல்வழுவும் பொருள்வழுவும். இவையிரண்போட்டானும் ஒன்று சொல்லுங்கால் அவையறிந்தே சொல்லவேண்டுமென்பது கூறப்பட்டது.

எகஊ. அவையறியார் சொல்லன்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉ மில். ஊ.

இ - ள். அவை அறியார் சொல்லல் மேற்கொள்பவர் சொல்லின் வகை அறியார் - அவையின தளவையறியாது ஒன்று சொல்லுதலேத் தம்மேற்கொள்வார் அச் சொல்லுதலின் கூறுபாடும் அறியார்,—வல்லதூஉம் இல்-கற்றுவல்ல கலையும் அவர்க்கில்லை. எ - று.

அம்மூவகைச்சொற்களால் வருஞ் சொல்லுதல்வகைமை கேட்பாரதுணர்வு வகைமைபற்றி வருதலாற் சொல்லின்வகையறியா ரென்றும், இஃதறியார் யாதுமறியாரென்று எல்லாராலுமிகழப்படுதலின் வல்லதூஉமில்லென்றுங்கூறினர். இதனால் அவையறியாக்கால் வருங்குற்றங் கூறப்பட்டது. (ஊ)

எகசு. ஒளியார்முன் ஒள்ளிய ராதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணங் கொளல். சு.

இ - ள். ஒளியார்முன் ஒள்ளியர் ஆதல் - அறிவாலொள்ளியாரவைக்கட்டாமுமொள்ளியராக,—வெளியார்முன் வான்சுதை வண்ணம் கொளல் - வீணே வெள்ளை வைக்கட்டாமும் வாலிய சுதையினிறத்தைக் கொள்க. எ - று.

ஒள்ளியாரென்றது மிக்காரையும் ஒத்தாரையும். அது விகாரத்தால் ஒளியாரென நின்றது. ஒள்ளியராதல் தந்நூலறிவுஞ் சொல்வன்மையுந்தோன்ற விரித்தல். அவை

---

* செஞ்சொல், இலக்கணச்சொல், குறிப்புச்சொல்லென்பனவற்றை முறையே வாசகம், லக்ஷகம், வியஞ்சகம் எனவும்; † அவை பொருள் உணர்த்தும் வகையில் முறையே அபிதை, இலக்கணை, வியஞ்சனையிருத்தியெனவும் கூறுவர் வடநூலார்.

யறியாத புல்லரை வெல்லுமென்றது; வலியறிவின்மையை வெளியறிவென்னும் வழக்குப் பற்றி. அவர் மதிக்குமவரை அவரினும் வெல்லுமுடையாரெனின்பார், வான்மதி வண்ணங்கொளலென்றார். அவையளவறிந்தார் செய்யுள்திறம் இதனுற் றொகுத்துக் கூறப்பட்டது. முன்னர் வீரித்துக்கூறுப. (ச)

எகடு. நன்றென்ற வற்றுள்ளு நன்றே முதுவருண்
மூர்த்து ளிளவாச் செறிவு. நி.

இ - ள். நன்று என்றவற்றுள்ளும் நன்றே - ஒருவற்கு இது நன்றென்று சிறப் பித்துச்சொல்லப்பட்ட குணங்களெல்லாவற்றுள்ளும் நன்றே—முதுவருள் மூர்த் தி ளிளவாச் செறிவு - தம்மின் மிக்காரவைக்கண் அவரின் மூற்பட்டு ஒன்றனைச் சொல் லாதவடக்கம். எ - று.

தங்குறைவும் அவர்மிகுதியும் மூர்த்தியெனத்தாற்பரியமிழுக்கும் இளவாக்காலெய்து னன்மையும் அறிந்தேயடங்கினமையின், அவ்வடக்கத்தினை நன்றென்றவற்றுள்ளுநன் றென்றார். முன்னெளத்தலேயே விலக்கினமையின், உடன்னெளத்தலும் பின்னெளத்தலுமா மென்பது பெற்றும். இதனுன் மிக்காரவைக்கட்செய்யுந்திறங் கூறப்பட்டது. (ஈ)

எகசு. ஆற்றி னிலேதளர்க் தற்றே விபன்புல
மேற்றுணர்வார் முன்ன ரிழுக்கு. சு.

இ - ள். ஆற்றின் நிலேதளர்ந்தற்று-வீடெய்தற்பொருட்டு நன்னெறிக்கணின்று ஞெருவன் அக்நெறியினின்றும் நிலே தளர்ந்து வீழ்ந்தாலொக்கும்—வியன் புலம் ஏற்று உணர்வார்முன்னர் இழுக்கு-அகன்ற நூற்பொருள்களேயுட்கொண்டு அவற்றின் மெய்ம்மையுணரவல்லாரவைக்கண் வல்லாஞெருவன் சொல்லிழுக்குப்படுதல். எ-று.

நிலேதளர்ந்து வீழ்தல் "உரனென்னுந் தோட்டியாஞேரைந்தங்கா" த்தொழுகி யான் பின்னிழுக்கிக் கூடாவொழுக்கத்தனுதல். பயனிழுத்தலேயன்றி இகழவும்படு மென்பதாம். இதனுன் அதன்கணிழுக்கியவழிப் படுங்குற்றங் கூறப்பட்டது. (உ)

எகள. கற்றறிந்தார் கல்வி விளங்குங் கசடறச்
சொற்றெரிதல் வல்லா ரகத்து எ.

இ - ள். கசடு அறச் சொற்றெரிதல் வல்லாரகத்து - வழுப்படாமற் சொற்களே யாராய்தல் வல்லாரவைக்கட்சொல்லின்,—கற்று அறிந்தார் கல்வி விளங்கும் - பல நூல்களேயுங்கற்று அவற்றினுய பயனேயறிந்தாரது கல்வி யாவர்க்கும் விளங்கித் தோன்றும். எ - று.

சொல்லினென்பது அவாய்நிலேயான் வந்தது. ஆண்டே சொல்லுகவென்பதாம்.

எகஅ. உணர்வ துடையார்முற் சொல்லல் வளர்வதன்
பாத்தியு ணீர்சொரிந் தற்று அ.

இ - ள். உணர்வது உடையார்முன் சொல்லல் - பிறருணர்த்தலின்றிப் பொருள் களேத் தாமேயுணரவல்ல அறிவினேயுடையாரவைக்கட் சுற்றார் ஒன்றனைச் சொல்லு தல்—வளர்வதன் பாத்தியுள் நீர்சொரிந்தற்று - தானே வளர்வதொரு பயிர் நின்ற பாத்திக்கண் நீரினைச் சொரிந்தாற்போலும். எ - று.

இ - ன். வன்கண்ணரல்லார்க்கு வாளொடு என் - வன்கண்மையுடையரல்லாதார்க்கு வாளோடென்ன வியப்புண்டு—நுண்ணிய அஞ்சுபவர்க்கு நூலொடு என் - அதுபோல நுண்ணியாரதவையை யஞ்சுவார்க்கு நூலோடென்ன வியப்புண்டு. எ-று.

இருந்தாரது நுண்மை அவையமேலேற்றப்பட்டது. நூற்குரியரல்லரென்பதாம்.()

எஉஎ. பகையகத்துப் பேடிகை யொள்வா ளவையகத்
தஞ்சு மவன்கற்ற நூல். எ.

இ - ள். பகையகத்துப் பேடி கை ஒள்வாள் - எறியப்படும் பகைநடுவண் அதனை யஞ்சும் பேடி பிடித்த கூர்வாளை யொக்கும்—அவையகத்து அஞ்சுமவன் கற்ற நூல் - சொல்லப்படும் அவைநடுவண் அதனை யஞ்சுமவன் கற்றநூல். எ - று.

பேடி பெண்ணியல்புமிக்கு ஆணியல்புமுடையவன். களமும்வாய்த்துத் தானும் நன்றுயிருந்தேயாயினும் பிடித்தவள் குறைத்தால் வாள் நிறப்பின்றுயினுந்போல, அவையும் வாய்த்துத் தானும் நன்றுயிருந்தேயாயினுங் கற்றவன் குறைத்தால் நூல் நிறப்பின்றுயிற்று. (எ)

எஉஅ. பல்லவை கற்றும் பயமிலரோ நல்லவையு
ணன்கு செலச்சொல்லா தார். அ.

இ - ள். நல்லவையுள் நன்கு செலச் சொல்லாதார் - நல்லாரிருந்தவவைக்கண் நல்லசொற்பொருள்களைத் தம்மச்சத்தான் அவர்க்கேற்கச் சொல்லமாட்டாதார்—பல்லவை கற்றும் பயம் இலரே - பல நூல்களைக் கற்றாராயினும் உலகிற்குப் பயன்படுதலிலர். எ - று.

அறிவார்மூற்சொல்லாமையிற் கல்வியினுண்மையறிவாரில்லையென்பதாம். இனிப் பயமிலரென்பதற்குக் கல்விப்பயனுடையரல்ல ரென்றுரைப்பாருமுளர். (அ)

எஉசு. கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்து
நல்லா ரவையஞ்சு வார். கூ.

இ - ள். கற்று அறிந்தும் நல்லார் அவை அஞ்சுவார்-நூல்களைக் கற்றுவைத்தும் அவற்றுற் பயனறிந்துவைத்தும் நல்லாரிருந்த அவையினையஞ்சி ஆண்டுச் சொல்லாதாரை—கல்லாதவரின் கடை என்ப - உலகத்தார் கல்லாதவரினும் கடையென்று சொல்லுவர். எ - று.

அக்கல்வியறிவுகளாற்பயன் றருமெய்தாது பிறரையெய்துவிப்பதுஞ்செய்யாது கல்வித்தன்மையே யெய்திநிற்றலின், கல்லாதவரிற் கடையென உலகம்பழிக்குமென்பதாம். (கூ)

எஉ0. உளரெனினு மில்லாரொ டொப்பர் களனஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார். ஙூ.

இ - ள். களன் அஞ்சிக் கற்ற செலச் சொல்லாதார் - அவைக்களத்தையஞ்சித் தாங்கற்றவற்றை அதற்கேற்கச் சொல்லமாட்டாதார்,—உளர் எனினும் இல்லாரொடு ஒப்பர்-உயிர் வாழுகின்றார்போலும், உலகத்தாராலெண்ணப்படாமையின் இறந்தாரோடொப்பர். எ - று.

உண்டுக் களனென்றது ஆண்டிருந்தாரை. இவையைந்துபாட்டானும் அவையஞ்சுவாரிழிபு கூறப்பட்டது. (கo)

அங்கவியலில் அமைச்சியல் முற்றிற்று.

எளிய அறிவு.—நாடு.

இனி அவ்வரசனுலும் அமைச்சனுலுங் கொண்டுய்க்கப்படுவதாய் ஏனையாண் முதலிய அங்கங்கட்கு இன்றியமையாச் சிறப்பிற்றுய நாடு ஒதிகாரத்தாற் கூறு கின்றார்.

எஉக. தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு. க.

இ - ள். தள்ளா விளையுளும் - குன்றுத விளைவுஞ்செய்வோரும்—தக்காரும் - அறவோரும்—தாழ்வு இலாச் செல்வரும் - கேடில்லாத செல்வமுடையோரும்—சேர் வது நாடு - ஒருங்கு வாழ்வதே காடாவது. எ - று.

மற்றையுயர்திணைப்பொருள்களோடுஞ் சேர்தற்றெழிலோடும் இயையாமையின், விளையுளென்பது உழவர்மேனின்றது. குன்றுமை எல்லாவுணவுகளும் நிறையுள வாதல். இதனுன் வாழ்வார்க்கு வறுமையின்மை பெறப்பட்டது. அறவோர் துறந் தோர், அந்தணர் முதலாயினுர். "நற்றவஞ்செய் வார்க்கிடம் தவஞ்செய்வார்க்கு மஃ திடம்*" என்றுர் பிறரும். இதனுல் அழிவின்மை பெறப்பட்டது. கேடில்லாமை வழங்கத்தொலையாமை. செல்வர் கலத்தினுங் காலினும் அரும்பொருடரும் வணிகர். இதனுல் அரசனுக்கும் வாழ்வார்க்கும் பொருள் வாய்த்தல் பெறப்பட்டது. (க)

எஉஉ. பெரும்பொருளாற் பெட்டக்க தாகி பருவ்கேட்டா
லாற்ற விளைவது நாடு. உ.

இ -ள். பெரும்பொருளால் பெட்டக்கது ஆகி - அளவிறந்த பொருளுடைமை யாற் பிறதேயத்தாரானும் விரும்பத்தக்கதாய்—அருங்கேட்டால் ஆற்றவிளைவது நாடு - கேடின்மையோடு கூடி மிக விளைவதே காடாவது. எ - று.

அளவிறப்புப் பொருள்களது பன்மைமேலும் தனித்தனி அவற்றின் மிகுதிமே லும் நின்றது. கேடாவது மிக்கபெயல், பெயலின்மை, எலி, விட்டில், கிளி, அரசன் மையென்றிவற்றுன் வருவது. "மிக்கபெய லோடுபெய லின்மையெலி விட்டில்கிளி - யக்கணர சன்மையோ டாறு.' இவற்றை வடநூலார் ஈதிகளென்ப. இவற்றுண் முன் னையவற்றதின்மை அரசனறத்தானும், பின்னையதின்மை அவன்மறத்தானும், வரும். இவ்வின்மைகளான் மிக விளைவதாயிற்று. (உ)

எஊஎ. பொறைபொருங்கு மேல்வருங்கால் முன்கி யிறைவற்
றிறைபொருங்கு சேர்வது நாடு. ஊ.

இ - ள். பொறை ஒருங்கு மேல்வருங்கால் தாங்கி - பிறநாடுகள் பொறுத்த பார மெல்லாம் ஒருங்கே தன்கண்வருங்கால் அவற்றைத் தாங்கி—இறைவற்கு இறை

* நற்ற வஞ்செய் வார்க்கிடம் தவஞ்செய் வார்க்கு மஃதிடம்—நற்பொ ருள்செய் வார்க் கிடம் பொருள்செய் வார்க்கு மஃதிடம்—வெற்ற விண்பம் விளைப்பான் விண்ணு ஒத்து வீழ்ந் தென—மற்றை நாடு வட்ட மாக வைகு மற்றச் சாடிதோ—கேகேந்தாமணி, நாமகளிலம் பகம், சூத.

ஒருங்கு சேர்வது நாடு - அவன்மேற்றன்னரசனுக்கு இறைப்பொருண் முழுதையும் உடம்பட்டுக்கொடுப்பதே நாடாவது. எ - று.

பாரங்கள் மக்கட்டொகுதியும் ஆன் எருமை முதலிய விலங்குத் தொகுதியும். தாங்குதல் அவை தத்தந்தேயத்துப் பகை வந்திறுத்ததாக, அரசு கோல்கோடியதாக, உணவின்மையானுகத் தன்கண் வந்தால் அவ்வத்தேயங்களைப்போல இனிதிருப்பச் செய்தல். அச்செயலால் இறையைக் குறைபடத்தாது தானே கொடுப்பதென்பார் இறையொருங்கு சேர்வதென்றார். (கூ)

எகூச. உறுபசியு மோவாப் பிணியுஞ் செறுபகையுஞ்
சேரா தியல்வது நாடு. ச.

இ - ள். உறு பசியும் - மிக்க பசியும்—ஓவாப் பிணியும் - நீங்காத நோயும்—செறுபகையும் சேராது - புறத்து நின்றுவந் தழிவுசெய்யும் பகையுமின்றி—இயல்வது நாடு - இனிது நடப்பதே நாடாவது. எ - று.

உறுபசி உழவருடைமையானும் ஆற்றவீளுதலானும் சேராதாயிற்று. ஓவாப்பிணி நீக் காற்று மிக்கருளிர் வெப்பங்களும் துகரப்படுமவற்றது நீமையுமின்மையிற் சேரா தாயிற்று. செறுபகை அரசனுற்றலும நிலைப்படையும் அடவியும் அரணுமுடைமையிற் சேராதாயிற்று. (ச)

எகூடு. பல்குழுவும் பாழ்செய்யு மூட்பகையும் வேந்தலைக்குங்
கொலகுறும்பு மில்லது நாடு. டு.

இ - ள். பல் குழுவும் - சங்கேதவயத்தான் மாறுபட்டுக் கூடும் பலகூட்டமும்—பாழ் செய்யும் உட்பகையும் - உடனுறையாகின்றே பாழாகச் செய்யுமுட்பகையும்—வேந்து அலைகுறும் கொல் குறும்பும் இல்லது நாடு - அளவுவந்தால் வேந்தனையலைக் குங் கொல்லினைக்குறும்பரு மில்லாததே நாடாவது. எ - று.

சங்கேதம் சாதிபற்றியும் கடவுள் பற்றியும் பலர்க்குளதாமொருமை. உட்பகை ஆறலைப்பா, கள்வர், குறளைசூழுவார் முதலியமக்களும், பனறி, புலி, கரடி முதலிய விலங்குகளும். உட்பகை குறும்பென்பன ஆகுபெயர். இம்மூன்றும் அரசனலும் வாழ் வாரானுங் கடியப்பட்டு நடப்பதே நாடென்பதாம். (டு)

எகூசு. கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டிற் றலை. சு.

இ - ள். கேடு அறியா - பகைவராற் கெடுதலறியாததாய்—கெட்டவிடத்தும் வளம் குன்றாநாடு - அரிதிற்கெட்டதாயினும் அப்பொழுதுந் தன்வளங்குன்றாத நாட்டினை—நாட்டின் தலை என்ப - எல்லாநாட்டினுந் தலையென்றுசொல்லுவர் நூலோர். எ - று.

அறியாத குன்றாதவென்னும் பெயரெச்சங்களினிறுதிநிலைகள் விகாரத்தாற்றொக் கன. கேடறியாமை அரசனுற்றலானுங் கடவுட்பூசையறங்களென்றிவற்றது செய லானும் வரும். வளம் ஆகரங்களிற்படுவனவும் வயலினுந் தண்டலையினும் விளைவனவு மாம். குன்றாமை அவை செய்யவேண்டாமல் இயல்பாகவேயுளவாயும் முன்னீட்டப் பட்டுக்குறைவறுதல். இவையாறுபாட்டானும் நாட்டதிலக்கணங் கூறப்பட்டது. (சு)

எகூஎ. இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணு நாட்டிற் குறைப்பு. எ.

இ - ள். இருபுனலும் - மேற்கீர் மேலீரெனப்பட்ட தன்கணீரும்—வாய்த்தமலையும் - வாய்ப்புடைத்தாய மலையும்—வருபுனலும் - அதனினின்றும் வருவதாய நீரும்—வல்லரணும் - அழியாத சகரியும்—நாட்டிற்கு உறுப்பு - நாட்டிற்கவயவமாம். எ - று.

ஈண்டுப் புனலென்றது துரவு கேணிகளும் ஏரிகளும் ஆறுகளுமாகிய ஆதாரங்களை. அவயவமாதற்குரியன அவையேயாகலின். அவற்றுள் வானம் வறப்பினும் வளனுடைமை பெறப்பட்டது இடையதன்றியொருபுடையதாகலும், தன்வளந் தருதலும் மாரிக்கணுண்டீர் கோடைக்கணுமிழ்தலுமுடைமைபற்றி வாய்ந்த மலையென்றார். அரண் ஆகுபெயர். இதனுள் அதனவயவங் கூறப்பட்டது. (எ)

எசூஅ. பிணியின்மை செல்வம் விளைவின்ப மேம
மணியென்ப நாட்டிற்கிவ் வைந்து. அ.

இ - ள். பிணியின்மை செல்வம் விளைவு இன்பம் ஏமம் இவ்வைந்து - நோயின்மையுஞ் செல்வம் விளைதல் இன்பம் காவலென்றிவை புடைமையுமாகிய இவ்வைந்தினையும்—நாட்டிற்கு அணி என்ப - நாட்டிற்கழகென்று சொல்லுவர் நூலோர். எ - று.

பிணியின்மை நிலைவத்தான் வருவது. செல்வம் மேற்சொல்லியன. இன்பம் விழவும் வேள்வியுஞ் சான்றோருமுடைமையானும், நுகர்வனவுடைமையானும், நிலநீர்களது நன்மையானும், வாழ்வார்க்கு உண்ணிகழ்வது. காவலெனவே அரசன்காவலும் வாழ்வோர் காவலும் அரண்காவலு மடங்கின. பிறதேயக்களினுள்ளாரும் விழைந்து பின் அவையுள்ளாமைக்கேதுவாய அதனழகு இதனுட் கூறப்பட்டது. (அ)

எசூஆ. நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு. ஆ.

இ - ள். நாடா வளத்தன நாடு என்ப - தங்கண்வாழ்வார்தேடி வருந்தாமல் அவர்பாற்றானே யடையுஞ் செல்வத்தையுடையவற்றை நூலோர் நாடென்று சொல்லுவர்;—நாட வளம் தரும் நாடு நாடு அல்ல - ஆதலாற் றேடிவருந்தச் செல்வமடைவிக்கும் நாடுகள் நாடாகா. எ - று.

நாடுதல் இருவழியும் வருத்தத்தின்மேனின்றது. "பொருள் செய்வார்க்குமஃதிடம்" என்றார் பிறரும். நூலோர் விதிபற்றி எதிர்மறைமுகத்தாற் குற்றங்கூறிய வாறு. இவ்வாறன்றி என்பவென்பதனைப் பின்னுங்கூட்டி இருபொருள்பட வுரைப்பின், அணுவாதமாம். (ஆ)

எசூ0. ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு. ஈ0.

இ - ள். வேந்து அமைவு இல்லாத நாடு - வேந்தனுமே மேவுதலில்லாத நாடு—ஆங்கு அமைவு எய்தியக் கண்ணும் பயம் இன்றே - மேற்சொல்லிய குணங்களெல்லாவற்றினும் நிறைந்திருந்ததாயினும் அவற்றாற் பயனுடைத்தன்று. எ - று.

வேந்தமைவெனவே, குடிகள் அவன்மாட்டன்புடையராதலும் அவன்றான் இவர்மாட்டருளுடையனாதலும் அடங்கின. அவையில்வழி வாழ்வோரின்மையின், அவற்றாற் பயனின்றாயிற்று. இவையிரண்டோடாயினும் அதன்குற்றங் கூறப்பட்டது. (ஈ0)

---

* மேலே உகஉ-ம் பகுதிநகரட்டில நற்றவஞ்செய்வார்களிடம் எனனுஞ் செய்யுளின் உள்ளது.

எட்டாம் அதிகாரம்—அரண்.

இனி அச்சாட்டிற்குறப்பாயடக்குமாயினும் பகைவராற்றெருவேவ்வாதி அறநனக்கும் அரசன்றனக்கும் எமமாதற்கிறப்புப்பற்றிப் பிரிவிலாவன்மைசை வோறும் பட்ட அரண் இவ்வதிகாரத்தாற் கூறுகின்றார்.

எசக. அற்று பவர்க்கு மரண்பொரு எஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள். க.

இ - ன். ஆற்றுபவர்க்கும் அரண் பொருள் - மூவகையாற்றலுமுடையராய்ப் பிறர் மேற் செல்வார்க்கும் அரண் றெந்தது;—அஞ்சித் தற்போற்றுபவர்க்கும் (அரண்) பொருள் - அவையின்றித் தம்மேல் வருவார்க்கஞ்சித் தன்னையேயடைவார்க்கும் அரண்றெந்தது. எ - று.

பிறர்மேற் செல்லுங்கால் உரிமை பொருண் முதலியவற்றைப் பிறனொருவன் வெளவாமல் வைத்துச் செல்லவேண்டுமாகலானும், அப்பெருமை தொலைத்திறுதி வந்துழிக் கடனவணுடைகலத்தார்போன்று எமக்காணுதிறுவராகலானும், ஆற்று பவர்க்கும் போற்றுபவர்க்கும் அரண் பொருளாயிற்று. ஆற்றலுடையராயினும் அரணில்வழி அழியும் பாலராகலின், அவரை முற்கூறினர். இதனுல் அரணினது சிறப்புக் கூறப்பட்டது. (க)

எசஉ. மணிநீரு மண்ணு மலையு மணிநிழற்
காடு முடைய தரண். உ.

இ - ன். மணி நீரும் மண்ணும் மலையும் அணிநிழற்காடும் உடையது அரண் - மணிபோலு நிறத்தினையுடைய நீரும் வெள்ளிடை நிலமும் மலையுங் குளிர்ந்த நிழலையுடைய காடுமுடையதே அரணுவது. எ - று.

எஞ்ஞான்றும் வற்றுத நீரென்பார் மணிநீரென்றும், நீருநிழலுமில்லா மருநில மென்பார் மண்ணென்றும், செறிந்த காடென்பார் அணிநிழற்காடென்றுங் கூறினர். மதிற்புறத்து மருநிலம்பகைவர் அரண்பற்றுமைப்பொருட்டு. நீரரண், நிலவரண், மலையரண் காட்டரணென இயற்கையுஞ் செயற்கையுமாய இந்நான்கரணுஞ் சூழப்படுவது அரணென்பதாம். (உ)

எசஊ. உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கி.
னமைவது னென்றுரைக்கு நூல். ஊ.

இ - ன். உயர்வு அகலம் திண்மை அருமை இந்நான்கின் அமைவு - உயர்ச்சியும் அகலமுந் திண்மையும் அருமையுமென்று சொல்லப்பட்ட இந்நான்கின் மிகுதியையுடைய மதிலை—அரண் என்று உரைக்கும் நூல் - அரணென்று சொல்லுவர் நூலோர். எ - று.

அமைவு நூலென்பன ஆருபெயர். உயர்வு எணியெய்தாதது. அகலம் புறத்தோர்க்கு அகழலாகா அடியகலமும், அகத்தோர்க்கு நின்று வினைசெய்யலாங் தலையகலமும். திண்மை கல்லிட்டிகைகளாற் செய்தவீற் குத்தப்படாமை. அருமை பொறிகளான் அணுகற்கருமை. பொறிகளாவன "வல்லீர் பொறிபு மயிற்செறி னீலமும்—சாவீர் வாகமுல் கல்லுமிழ் கவணும்—பரிவுறு வெங்கெயும் பாகடு குழிசியும்—காய்பொன் னுலையுஞ் சல்லியு கூடையுஞ்—சுண்டிநுண் டடக்கு மாண்டலை யிரிப்புஞ்—சேவலுஞ் சேலும் புதையும் புலையு—மாமையிற் றலாமுஞ் சுவையெய ரூசியுஞ்—சென்றெறி செலும் பன்றியும் பணையு—மெழுவுஞ் சிப்பு முழுவிறற் கணையமும்—கோலும் குரீஇயும் வேலுஞ் சூலமும்வி—ன்னிலை முதலியன. (ஈ)

---

* லெப்பதிகாரம், அடைக்கலக்காதை, ௦௭-ஓச.

எசச. நிறைகாப்பிற் பேரிடத்த தாகி யுறுபகை
யூக்க மழிப்ப தரண். ச.

இ - ன். நிறைகாப்பிற் பேர் இடத்தது ஆகி-காக்கவேண்டுமிடஞ்சிறிதாய் அகன்ற விடத்தை யுடைத்தாய்—உற பகை ஊக்கம் அழிப்பது அரண் - தன்னைவர்து முற்றிய பகைவரது மனவெழுச்சியைக் கெடுப்பதே அரணுவது. எ - று.

வாயிலும் வழியுமொழிந்த விடங்கள் மலை, காடு, நீர்நிலையென்றிவற்றுள் எற்பன வுடைத்தாதல்பற்றிச் சிறைகாப்பினென்றும், அகத்தோர் கலிவின்றியிருத்தல்பற்றிப் பேரிடத்ததாகியென்றும், தம்வலி நோக்கி இதுபொழுதே யழித்துமென்று வரும் பகைவர் வர்து கண்டால் அவ்வூக்கமொழிதல்பற்றி ஊக்க மழிப்ப தென்றுங் கூறினார். (ச)

எசஞ. கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி யகத்தார்
நிலைக்கெளிதா நீர தரண். ஞ.

இ - ன். கொளற்கு அரிதாய் - புறத்தாராற் கோடற்கரிதாய்—கொண்டகூழ்த் தாகி - உட்கொண்ட பலவகையுணவிற்றாய்—அகத்தார் நிலைக்கு எளிதாம் நீரது அரண்-அகத்தாரது போர்நிலைக் கெளிதாய நீர்மையையுடையதே அரணுவது. எ - று.

கோடற்கருமை இலை கிடங்குகளாலும் பொறிகளாலும் இடங்கொள்ளுதற் கருமை. உணவு தலைமைபற்றிக் கூறினமையின், மற்றுள்ள நுகரப்படுவனவுமடங் கின. நிலைக்கெளிதா நீர்மையாவது அகத்தார் வீட்டவாயுதமுதலிய புறத்தார்மே லெளிதிற்சேறலும், அவர்விட்ட அகத்தாரமேற் செல்லாமையும், பதணப்பரப்பும் முதலாயின. (ஞ)

எசசு. எல்லாப் பொருளு முடைத்தா யிடத்ததவு
நல்லா ளுடைய தரண். கூ.

இ - ன். எல்லாப்பொருளும் உடைத்தாய் - அகத்தோர்க்கு வேண்டும் பொருள்க ளெல்லாவற்றையும் உள்ளே யுடைத்தாய்—இடத்து உதவும் நல்லாள் உடையது அரண் - புறத்தோரால் அழிவெய்து மெல்லக்கண் அஃதெய்தாவகையுதவிக் காக்கும் நல்ல வீரையுமுடையதே அரணுவது. எ - று.

அரசன்மாட்டன்பும் மானமும் மறமும் சோர்வின்மையும் முதலிய நற்குணங்க ளுடைமைபற்றி நல்லாளென்றார். (சு)

எசஎ. மூற்றியு மூற்று தெறிந்து மறைப்படுத்தும்
பற்றற் கரிய தரண். எ.

இ - ன். மூற்றியும் - புகலொடு போக்கொழியும்வகை செருங்கிச சூழ்ந்தும்—மூற்றது எறிந்தும் - அண்ணஞ்சூழாது செறிந்த விடமேங்கி ஒருமுகமாகப் பொருதும்—அறைப்படுத்தும் - அகத்தோரை அவர் தெளிர்தோலாவிட்டுள் மூறுத் தித் நிறப்பித்தும்—பற்றற்கு அரியது அரண் - புறத்தோராற் கொள்ளுதற்கரியதே அரணுவது. எ - று.

இம்மூன்றுபாயத்துள்ளும் முதலாவது எல்லாப்பொருளுமுடைமையாலும், ஏனைய நல்லாளுடைமையாலும், வாயாவாயின. (எ)

எசஅ. முற்றூற்றி முற்றி யவரையும் பற்றூற்றிப்
பற்றியார் வெல்வ தரண். அ.

இ - ள். முற்று ஆற்றி முற்றியவரையும் - தானேப்பெருமையாற் சூழ்தல்வல்ல சாய் வந்து சூழ்ந்த புறத்தோரையும்—பற்றியார் பற்று ஆற்றி வெல்வது அரண் - தன்னேப்பற்றியவகத்தோர்தாம் பற்றியவிடம் விடாதே நின்று பொருது வெல்வதே அரணவது. எ - று.

உம்மை சிறப்பும்மை. பற்றின்கண்ணேயாற்றியெனவிரியும். பற்று ஆகுபெயர். வெல்வதென உடையார்தொழில் அரண்மேனின்றது. பெரும்படையானேச் சிறுபடையான் பொறுத்து நிற்குந் தூணேயன்றி வெல்லுமியல்பினதென்பதாம். இதற்குப் பிறிதுரைப்பாருமுளர். இவையேழுபாட்டானும் அதனதிலக்கணங் கூறப்பட்டது. ()

எசக. மூனேமுகத்து மாற்றலர் சாய வினேமுகத்து
வீறெய்தி மாண்ட தரண். கூ.

இ - ள். மூனேமுகத்து மாற்றலர் சாய வினேமுகத்து வீறு எய்தி - போர்தொடங்கினவளவிலே பகைவர் கெடும்வண்ணம் அகத்தோர் செய்யும் வினேவேறுபாடுகளான் வீறுபெற்று—மாண்டது அரண் - மற்றும் வேண்டுமாட்சியையுடையதே அரணவது. எ - று.

தொடக்கத்திற் கெட்டார் பின்னுங் கூடிப் பொருதல் கூடாமையின், மூனேமுகத்துச்சாயவென்றார். வினேவேறுபாடெளாவன பகைவர் தொடங்கிய போரினேயறிந்து எய்தல், எறிதல், குத்துதல், வெட்டுதலென்றிவை முதலாய வினேகளுள் அதனைச் சாய்ப்பனசெய்தல். மற்றும் வேண்டுமாட்சியென்றது புறத்தோரதியாமம் புகுதல் போதல் செய்தற்குக் கண்ட சுருங்கையழி முதலாயின வுடைமை. (கூ)

எஜ0. எணேமாட்சித் தாகியக் கண்ணும் வினேமாட்சி
யில்லார்க ணில்ல தரண். க0.

இ - ள். அரண் - அரண்,—எணேமாட்சித்து ஆகியக்கண்ணும் - மேற்சொல்லப்பட்ட மாட்சியெல்லாமுடைத்தாய வீடத்தும்,—வினேமாட்சி இல்லார்கண் இல்லது - வினேசெய்தற்கண் மாட்சியில்லாதார்மாட்டு அவையிலதாம். எ - று.

வாளாலிருத்தலும் அளவறியாது செய்தலும் எலாதது செய்தலுமெல்லாம் அடங்க வினேமாட்சியில்லாரென்றும், எற்றவினேயை யளவறிந்துசெய்து காவாக்கால் அம்மாட்சிகளாற் பயனின்றி யழியுமென்பார் அவையுடைத்தன்றென்றுங் கூறினர். இவை யிரண்டுபாட்டானுங் காப்பாரையின்றியமையாதென்பது கூறப்பட்டது. (க0)

எகூ ம் அதி.—பொருள்செயல்வகை.

இனிப் பெரும்பான்மையும் நாட்டானும் அரணானும் ஆக்கவுங் காக்கவும் படுவதாய பொருளேச் செய்தலின்றிறம் இவ்வதிகாரத்தாற் கூறுகின்றார்.

எஜக. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.

இ - ள். பொருள் அல்லவரைப் பொருளாகச் செய்யும் பொருளல்லது - ஒரு பொருளாக மதிக்கப்படாதாரையும் படுவராகச் செய்யவல்ல பொருளொழிய— பொருள் இல்லை - ஒருவனுக்குப் பொருளாவதில்லை. எ - று.

மதிக்கப்படாதார் அறிவிலாதார், இழிகுலத்தார். இழிவு சிறப்பும்மை விகாரத் தாற்றொக்கது. மதிக்கப்படுவராகச் செய்தல் அறிவுடையாரும் உயர்குலத்தாரும் அவர்பாற்சென்று நிற்கப் பண்ணுதல். அதனால் ஈட்டப்படுவது அதுவே பிறிதில்லை யென்பதாம். (க)

எடுத்து. இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
யெல்லாருஞ் செய்வர் சிறப்பு.* உ.

இ - ள். இல்லாரை எல்லாரும் எள்ளுவர் - எல்லாநன்மையு முடையராயினும் பொருளில்லாரை யாவருமிகழ்வர்,—செல்வரை எல்லாரும் சிறப்புச் செய்வர் - எல் லாத்தீமையுமுடையராயினும் அஃதுடையாரை யாவருமுயரச்செய்வர். எ - று.

உயரச்செய்தல் தாந்தாழ்ந்து நிற்றல். இகழ்தற்கண்ணும் தாழ்தற்கண்ணும் பகை வர், நட்டார், தொதுமலரென்னும் மூவகையாருமொத்தலின், யாவருமென்றார். பின் னுங் கூறியது அதனை வலியுறுத்தற்பொருட்டு. (உ)

எடுத்து. பொருளென்னும் பொய்யா விளக்கம் பிருளறுக்கு
மெண்ணிய தேயத்துச் சென்று. ஊ.

இ - ள். பொருள் என்னும் பொய்யா விளக்கம் - பொருளென்று எல்லாரானுஞ் சிறப்பிக்கப்படும் நந்தாவிளக்கு—எண்ணியதேயத்துச் சென்று இருள் அறுக்கும்— தன்னைச் செய்தவர்க்கு அவர் நினைத்த தேயத்துச் சென்று பகையென்னுமிருளைக் கெடுக்கும். எ - று.

எல்லார்க்கும் எஞ்ஞான்றும் இன்றியமையாததாய் வருதல் பற்றிப் பொய்யா விளக்கமென்றும், எனை விளக்கோடு இதனிடை வேற்றுமைதோன்ற எண்ணியதேயத் துச்சென்றென்றுங் கூறினர். எகதேசவுருவகம். இவையுமன்றுபாட்டானும் பொரு ளது சிறப்புக் கூறப்பட்டது. (ஙா)

எடுத்த. அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.

இ - ள். திறன் அறிந்து தீது இன்றி வந்த பொருள் - செய்யுந்திறத்தினையறிந்து அரசன் கொடுக்கொண்மையிலுளத உனதாயபொருள்—அறன் ஈனும் இன்பமும் ஈனும் - அவனுக்கு அறத்தையுங்கொடுக்கும், இன்பத்தையுங்கொடுக்கும். எ - று.

செய்யுந்திறம் தான் பொருள்செய்தற்குரிய நெறி. இலனெனவென்பது இன்றி யெனத் திரிந்துநின்றது. செங்கோலனென்ற புகழப்படுதலாயினும் கடவுட்பூசை தானங்களாற் பயனெய்தலானும் அறனீனுமென்றும், கொடுங்கோலின்று துய்க்கப்படு தலான் இன்பமீனுமென்றுங் கூறினர். அதனால் அத்திறத்தானீட்டுக வென்பதாம்.

எடுத்து. அருளொடு மன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல். ஙா.

---

* இத்திருக்குறள் சோமான்பெருமாளையா நிருகலைஞர் ஞானவுலாவில் எடுத்தாளப் பட்டுள்ளது.

இ - ள். அருளொடும் அன்பொடும் வாசரப் பொருள் குச்சுடி - நான்முடிகன் மாட்டுச் செய்யுருவோடும் அவர் தம்மாட்டுச் செய்யுமன்பொடுங்கூடி வாசாதவொரு வீட்டத்தை—புல்லார் புரளவிடல் - அரசர் பொருந்தாத சழியவிடுக. எ - று.

அவற்றோடு கூடிவருதலாவது ஆறிலொன்றாய் வருதல். அவ்வாறு வாராத பொருவீட்டம் பசமட்கலத்தினீர்போலச் செய்தானேயுங்கொண்டிறத்தலின், அதனைப் புல்லாரென்றொழியாது புரளவிடலென்றுங் கூறினர். (இ)

எடுக. உறுபொருளு மூல்கு பொருளுந்தன் னென்னுந்
தெறுபொருளும் வேந்தன் பொருள். கூ.

இ - ள். உறு பொருளும் - உடையாரின்மையிற் றானேவந்தற்ற பொருளும்—உல்கு பொருளும் - சுங்கமாகிய பொருளும்—தன் ஒன்னார்த் தெறுபொருளும் - தன் பகைவரைத் திறையாகக்கொள்ளும் பொருளும்—வேந்தன் பொருள்-அரசனுக்குரிய பொருள்கள். எ - று.

உறுபொருள் வைத்தாரிறந்தபோக நெடுங்காலம் நிலத்தின்கட் கிடந்து பின் கண்டெடுத்தனவும், தாயத்தார் பெறுதனவுமாம். சுங்கம் கலத்தினுங் காலினும் வரும் பண்டங்கட்கிறையாயது. தெறுபொருள் தெறுதலான் வரும் பொருளென விரியும். ஆறிலொன்றொழியவும் உரியன கூறியவாறு. இவை மூன்றுபாட்டானும் அஃதிட்டு நெறி கூறப்பட்டது. (க)

எடுஎ. அருளென்னு மன்பின் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா னுண்டு. எ.

இ - ள். அன்பு ஈன் அருள் என்னும் குழவி - அன்பினுலினப்பட்ட அருளென் றுங்குழவி—பொருள் என்னும் செல்வச் செவிலியால் உண்டு-பொருளென்று உயர்த் துச்சொல்லப்படுஞ் செல்வத்தையுடைய செவிலியான் வளரும். எ - று.

தொடர்புபற்றுதே வருத்தமுற்றூர்மேற் செல்வதாய அருள் தொடர்புபற்றிச் செல்லுமன்பு முதிர்ந்துழி உளதாவதாகலின் அதனை அன்பின்குழவியென்றும், அது வறியார்மேற்செல்வது அவ்வறுமை கனையவல்லார்க்காதலிற் பொருளை அதற்குச் செவிலியென்றும், அஃது உலகிற்செவிலியர்போலாது தானேயெல்லாப் பொருளு முதவி வளர்த்தலிற் செல்வச்செவிலியென்றுங் கூறினர். (எ)

எடுஅ. குன்றேறி யானைப்போர் கண்டற்றாற் றன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை. அ.

இ - ள். தன் கைத்து உண்டாக ஒன்று செய்வான் வினை - தன் கையதாகிய பொருளுண்டாக ஒருவினையையெடுத்துக்கொண்டான் அதனைச் செய்தல்—குன்று ஏறி யானைப்போர் கண்டற்று - ஒருவன் மலைமே லேறியின்று யானைப்போரைக் கண்டாலொக்கும். எ - று.

ஒன்றென்பது வினையாதல் செய்வானென்றதனாற் பெற்றும். குன்றேறியான் அச்சமும் வருத்தமுமின்றி நிலத்திடை யானையும் யானைப்பொருசோரைத் தானினி நிருந்து காணுமதுபோலக், கைத்துண்டாக வினையை மேற்கொண்டாலும் அச்சமும் வருத்தமுமின்றி வல்லாரையேயித் தானினிருந்து முடிக்குமென்பதாம். (அ)

எதிர. செய்ய பொருளைச் செறுநர் செருக்கறுக்கு
மெஃகதனிற் கூரிய தில் க.

இ - ள். பொருளைச் செய்க - தமக்கொன்றுண்டாகக் கருதுவார் பொருளையுண்டாக்குக;—செறுநர் செருக்கு அறுக்கும் எஃகு - தம்பகைவர் தருக்கினையறுக்கும் படைக்கலம் அதுவாம்;—அதனிற் கூரியது இல் - அதற்கதுபோலக் கூரிய படைக்கலம் பிறிதில்லை. எ - று.

அதுவாம், அதற்கென்பன அவாய்நிலையான் வந்தன பொருளைச் செய்யவே பெரும்படையும் கட்புமுடையராவர், ஆகவே, பகைவர் தருக்கொழித்து தமேயடங்குவரென்பார் செறுநர்செருக்கறுக்குமெஃகென்றும், எனையெஃகுகள் அதுபோல அருவப்பொருளையறுக்கமாட்டாமையின் அதனிற்கூரிய தில்லென்றுங்கூறினர். (க)

எகக. ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க் கெண்பொரு
ளேனை யிரண்டு மொருங்கு. கக.

இ - ள். ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு - நெறியான்வரும் பொருளை இறப்ப மிகப் படைத்தார்க்கு—ஏனை இரண்டும் ஒருங்கு எண்பொருள்-மற்றையறனும் இன்பமும் ஒருங்கேயெளிய பொருள்களாம். எ - று.

காழ்த்தல் மூர்த்தல். பயன்கொடுத்தல்லது போகாமையின் ஒண்பொருளென்றும், ஏனையிரண்டும் அதன் விளாகலிற் றமே யொருகாலத்திலேபுளவாமென்பார் எண்பொருளென்றுங்கூறினர். இவை நான்குபாட்டானும் அதனன் வரும்பயன் கூறப்பட்டது. (கக)

எஎம் அதி.—படைமாட்சி.

இனி அப்பொருளினுளவதாய் வெல்வதாய படை இரண்டதிகாரித்தாற்கூறுவான்றொடங்கி, முதற்கட் படைமாட்சி கூறுகின்றார். அஃதாவது படையினது நன்மை.

எகஉ. உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையு ளெல்லாந் தலை. உ.

இ - ள். உறுப்பு அமைந்து ஊற அஞ்சா வெல்படை - யானை முதலிய நான்குறுப்பானும் நிறைந்து போரின்கணூறுபடுதற்கஞ்சாதின்று பகையை வெல்வதாய படை—வேந்தன் வெறுக்கையுள் எல்லாம் தலை - அரசன் செல்வங்களெல்லாவற்றுள்ளும் தலையாய செல்வம். எ - று.

ஈண்டுப் படையென்றது அக்கான்கன்றொகுதியை. ஊறஞ்சியவழி வேறல்கூடாமையின் ஊறஞ்சாவென்றும், ஒழிந்தவங்கங்கட்கும் அரசன்றனக்குங் காவலாகலின் வெறுக்கையுளெல்லாந் தலையென்றுங் கூறினர். (உ)

எகஊ. உலைவிடத் தூறஞ்சா வன்கண் டொலைவிடத்துத்
தொல்படைக் கல்லா லரிது. ஊ.

இ - ள். தொலைவிடத்து உலைவிடத்து ஊற அஞ்சா வன்கண் - தான் சிதைதல்ய வழியும் அரசற்குப் போரின்கணூலைவுவர்தால் தன்மேனூறுவதற்கஞ்சாதின்று தான்

கும் வன்கண்மை—தொல்படைக்கல்லால் அரிது - அவன் முன்னோரைத் தொடங்கி வரும் படைக்கல்லது உளதாகாது. எ - று.

இழிவு சிறப்புமம்மை விகாரத்தாற்றொக்கது. மூலப்படை, கூலிப்படை, நாட்டுப் படை, காட்டுப்படை, துணைப்படை, பகைப்படையென்னும் அறவகைப்படையுள் ளுஞ் சிறப்புடையது மூலப்படையாகலான், அதனை அரசன் "வெல்பொறியு நாடும் விழுப்பொருளுந் தண்ணடையுங்—கொல்களிறுமாவுங் கொடித்தளிக்கு" என்பது குறிப்பெச்சம். இப்படையை வடநூலார் மௌலமென்ப. (உ)

எகூ. ஒலித்தக்கா லென்னு முவரி யெளிப்பகை
ஈகை முயிர்ப்பக் கெடும். கூ.

இ - ன். எலிப்பகை உவரி ஒலித்தக்கால் என்னும்-எலியாயபகை திரண்டு கடல் போலவொலித்தால் நாகத்திற்கு என்னவேதம் வரும்!—நாகம் உயிர்ப்பக் கெடும் - அக்நாகமுயிர்த்ததனையானே அதுதானே கெடும். எ - று.

உவமைச்சொற் றொக்குநின்றது. இத்தொழிலுவமத்தாற் பிரட்சிபெற்றும். வீர ரல்லாதார் பலர் திரண்டார்த்தால் அதற்கு வீரனஞ்சான் அவன்கிளர்ந்த தனையானே அவர் தான்கெடுவரென்பது தோன்ற நின்றமையின், இது பிறிதுமொழிதலென்னு மலங்காரம். வீரரல்லாதார் பலரினும் வீரனொருவனேயாடல் நன்றென்பதாம். இவை மூன்றுபாட்டானும் முறையே அரசனுக்குப் படை எனையங்கங்களுட் சிறந்ததென்ப தாகும், அதுதன்னுள்ளும் மூலப்படை சிறந்ததென்பதாகும், அதுதன்னுள்ளும் வீரன் சிறந்தானென்பதாகவு கூறப்பட்டன. (கூ)

எகூச. அழிவின் றறைபோகா தாகி வழிவந்த
வன்கண தவே படை. ச.

இ - ன். அழிவு இன்று - போரின்கட்கெடுதலின்றி—அறைபோகாதாகி - பகை யரசர்க ழேறுக்கப்படாததாய்—வழிவந்த வன்கணதவே படை - தொன்றுதொட்டு வந்த தறுகணமையையுடையதே அரசனுக்குப் படையாவது. எ - று.

அழிவின்மையான் மறமானங்களுடைமையும், அறைபோகாமையான் அரசன் மாட்டன்புடைமையும் பெறப்பட்டன. வழிவந்த வன்கண்மை "கன்னின்று னெந்தை கணவன் களப்பட்டான்—முன்னின்று மொய்யவித்தா ரென்னையர் - பின்னின்று— கைபோய்க் கனையுதைப்பக் காவலன் மேலோடி—யெய்போற் கிடந்தானென் னேறு†." என்பதனானறிக. குற்றியலுகரத்தின் முன்னர் உடம்படுமெய் விகாரத் தான் வந்தது. இது வருகின்றபாட்டிள்ளுமொக்கும். (ச)

எகூடி. கூற்றுடன்று மேல்வரினுங் கூடி யெதிர்நிற்கு
மாற்ற லதவே படை. டி.

இ - ன். கூற்று உடன்று மேல்வரினும் - கூற்றுவன்றானே வெகுண்டு மேல் வந்தாலும்—கூடி எதிர்நிற்கும் ஆற்றலதவே படை - நெஞ்சொத்து எதிர்நின்று தாகுமாற்றலையுடையதே படையாவது. எ - று.

---

* வெலல்பறியு நாடுமி விழுப்பொருளுந் தண்ணடையுங்—கொல்களிறு மாவுங் கொடித் தளித்தான - பல்புகழ்—கணமணித் தினேடோ ளயலார் தலைபனிப்பப்—பண்மணிப் பூணுள் ளுடைக்குவெண பாமாலை, தும்பைப்படலம், உ.

† வெண்பாமாலை வாகைப்படலம், உ.

மருந்தில் கூற்றுலின்ல, உம்மை தெப்பும்மை. மிகப்பலர் கெஞ்சொத்தற்குக் காரணம் அரசன்மேலன்பு. ஆற்றல் மன்வலி. (இ)

எசுசு. மறமான மாண்ட வழிச்செலவு தேற்ற
மெனைநான்கே யேமம் படைக்கு. சு.

இ-ன். மறம் மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம் எனாான்கே - தறுகண்மையும் மானமும் முன் வீராயினர் சென்றான்னெறிக்கட்சேறலும் அரசனுற்றேறப் படுதலுமென இாான்கு குணமுமே—படைக்கு ஏமம் - படைக்கு அரணுவது. எ-று.

இவற்றுன் முறையே பகைவரைக் கடிதிற்கொன்றுகிற்றலும், அரசனுக்குத் தாழ்வுவாராமற்காத்தலும், "அழியுார்புறக்கொடையில்வாளோச்சா†"மை முதலியவும், அறைபோகாமையுமாகிய செய்கைகள் பெறப்பட்டன. இச்செய்கையார்க்குப் பகைவர் ாணுகாராகலின், வேறரண் வேண்டாவென்பதாம். (ஈ)

எசுஎ. தார்தாங்கிச் செல்வது தாணை தலைவந்த
போர்தாங்குந் தன்மை யறிந்து. எ.

இ-ன். தலைவந்த போர் தாங்கும் தன்மை அறிந்து - மாற்ருரால் வருக்கப்பட்டுத் தன்மேல்வந்த படையின்போரை விலக்கும் வருப்பறிந்து வருத்தக்கொண்டு—தார் தாங்கிச் செல்வது தாணை - அவர் தானையைத் தன்மேல் வாராமற்றடுத்துத் தான் அதன்மேற் செல்வதே படையாவது. எ-று.

படைவருப்பாவது வியூகம்; அஃது எழுவகையுறுப்பிற்ருய், வகையாலுன்காய், விரியான்முப்பதாம் ‡ உறுப்பேழாவன உரமுதற்கோடியீருயின. வகைகான்காவன தண்டம், மண்டலம், அசங்கதம், போகமெனவிவைஞ். விரி முப்பதாவன தண்டவிரி பதினேமும், மண்டலவிரி இரண்டும், அசங்கதவிரியாறும், போகவிரிகியத்தமென விவை0. இவற்றின்பெயர்களும் இலக்கணமும் ஈண்டுரைப்பிற்பெருகும்; அவையெல்லாம் வடநூல்களுட்கண்டுகொள்க. இவைநான்குபாட்டாலும் படையினிலக்கணங் கூறப்பட்டது. (எ)

எசுஅ. அடற்றகையு மாற்றலு மில்லெனினுந் தாணை
படைத்தகையாற் பாடு பெறும். அ.

---

* மருங்கில் கூற்றுத் தருந்தொழுல சாயா—புறநானூறு, ஈ.

† வெண்பாமாலை, ஒழிபடலம், ௨0.

‡ உறுப்பேழாவன:—உரம், இறக்கையிரண்டு, மத்தியம், பிரகிகிரகம், பிரிஷ்டம், கோடி எனவிவை.

§ தண்டம்:—சேனையைக்குறுகாக நிறுத்துவது. மண்டலம்:—பாம்பு மண்டல மிடுவதுபோலச் சேனையை நிறுத்துவது. அசங்கதம்:—சேனையை வேறுவேருக நிறுத்துவது. போகம்:—சதுரங்கசேனையை ஒன்றுக்குப்பின் ஒன்ருக நிறுத்துவது.

0 தண்டவிரி பதினேழாவன:—பிரதரம், திருடகம், யெவன்றம், குரூரி, பிரதிட்டம், சுப்பிரதிட்டம், யேகம், விஜயம், சஞ்சயம், விசாலம், நிஜபம், சூரி, ஸ்தானு, சர்ணம், சமூகம், சதசேயம், வலம்பி எனவிவை. மண்டலவிரிபிரண்டாவன:—சர்வதோபத்திரம், தாஜயம் எனவிவை. அசங்கதவிரியாறுவன.—அர்த்தசந்நிதம், உத்தானம், திருக்காடம், சர்க்கடகசிருங்காரி, காபோரி, கோதிகா எனவிவை. போகவிரியகியத்தாவன:—கோமூத்திரிகை, மெய்சம், சஞ்சாரி, சதுரம், பத்மம் எனவிவை. இவற்றைச் சாமத்தகையென்று தானுட் கண்டுதொக்க.

இ - ள். தானை - தானை,—அடந்தலையும் குத்தலும் இல் எனினும் - பலமேற் சென்றறிந்தறகண்மையும் அதி தன்மேல்வந்தாற் பொறுக்குமாற்றலும் இல்லையாயினும்,—படைத்தகையால் பாடு பெறும் - தன்னேற்றப்பொலிவானே பெருமை யெய்தும். எ - று.

இல்லெனினுமெனவே, அவற்றதின்றியமையாமை பெறப்பட்டது. படைத்தகை யென்றது ஒருபெயர்மாத்திரமாய் நின்றது. தோற்றப்பொலிவாவது அலங்கரிக்கப் பட்ட தேர், யானை, குதிரைகளுடனும் பதாகை, கொடி, குடை, பல்லியம், சாமரை முதலியவற்றுடனும் அணிந்த தோன்றுமழகு. பாடு கண்டவளவிலே பகைவரஞ்சும் பெருமை. (அ)

எகூ. நிறைமையுஞ் செல்லாத் தனியும் வறுமையு
மில்லாயின் வெல்லும் படை. கூ.

இ - ள். நிறைமையும் செல்லாத் தனியும் வறுமையும் இல்லாயின் - தான் நேய்ந்து நிதாகவும் மனத்தினின்று நீங்காத வெறப்பும் நல்குரவும் தனக்கில்லையாயின்,—படை வெல்லும் - படை பகையை வெல்லும். எ - று.

விட்டுப்போதலும் நின்றது நல்கூர்தலும் அரசன் பொருள் கொடாமையான் வருவன. செல்லாத்தனியாவது மகளிரை வெளவல், இளிவரவாயினசெய்தன் முதலியவற்றான் வருவது. இவையுள்வழி அவன்மாட்டன்றி உற்றுப்பொராமையின், (க)
இல்லாயின் வெல்லுமென்றார்.

எஎ. நிலைமக்கள் சால வுடைத்தெனினுந் தானை
தலைமக்க ளில்வழி யில். கூ.

இ - ள். நிலைமக்கள் சால உடைத்து எனினும்-போரின்கணிலையுடைய வீரை மிகவுடைத்தேயாயினும்,—தலைமக்கள் இல்வழித் தானை இல்-தனக்குத் தலைவராகிய வீரரில்லாதவழித் தானை நில்லாது. எ - று.

படைத்தலைவர் நிலையுடையரன்றிப் போவாராயிற் காண்போரில்லெனப் பொராது தானும் போமென்பார், தலைமக்களில்வழியில்லென்றார். இவை மூன்று பாட்டானும் முறையே படைத்தகையின்மையானும், அரசன்கொடைத் தாழ்வுகளானும், தலைவரின்மையானும், தாழ்வு கூறப்பட்டது. (கூ)

எஅம் அதி.—படைச்செருக்கு.

அஃதாவது அப்படையது மறமிகுதி. அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

எஅ. என்னைமுன் னில்லன்மின் றெவ்விர் பலரென்னை
முன்னின்ற கன்னின் றவர். க.

இ - ள். தெவ்விர் என் ஐ முன் நின்ற கல் நின்றவர் பலர்-பகைவீர், இன்றினான் சென்றலைனெதிர் போரேற்று நின்ற அவன் வேல்வாய் வீழ்ந்து பின் கல்லாய் அன்னே நின்றவீரர் பலர்;—என் ஐ முன் நில்லன்மின் - நீவிர் அதனானின்றி நம் முடற்கணிற்றல்வேண்டி, என்னலைனெதிர் போரேற்று நிற்றலேதுமின், எறு.

என்னெனத் தன்னெடு தொடர்புபடுத்துக் கூறினமையின் அவன்வேல்வாய் வீழ்தல்பெற்றும். கல் நடுகல். "நம்பன் சிலைவாய் நடக்குங்கணை மிச்சி லல்லா—லம்பொன் முடிப்பூ ணரசும்மிலர்†" *எனப் பதமுகன்கூறினுற்போல ஒருவீரன் தன் மறம் அரசன்மெல்வைத்துக் கூறியவாறு. இப்பாட்டு நெடுமொழிவஞ்சி.* (சு)

எஎஉ. கான முயலெய்த வம்பினில் யானை
பிழைத்தவே லேந்த வினிது. உ.

இ - ள். கான முயல் எய்த அம்பினில் - கானத்தின்கணுமெம் முயலைப் பிழையாமலெய்த அம்பையேந்தலினும்—யானை பிழைத்தவேல் ஏந்தல் இனிது - வெள்ளிடை நின்ற யானையையெறிந்து பிழைத்த வேலையேந்துதல் நன்று. எ - று.

கானமுயலென்றதனால் வெள்ளிடைநின்றவென்பதும், பிழைத்தவென்றதனாற் பிழையாமலென்பதும், முயற்குத் தக எய்ததென்றதனால் யானைக்குத்தக எறிதலும், வருவிக்கப்பட்டன. இது மாற்றரசன் படையொடு பொருதானோர் வீரன் அது புறங் கொடுத்ததாக நாணிப் பின்னவன்றன்மேற் செல்லலுற்றுனது கூற்று. (உ)

எஎக. பேராண்மை யென்ப தறுகணென் றுற்றக்கா
லூராண்மை மற்றதனை ஃகு. ஈ.

இ - ள். தறுகண் பேராண்மை என்ப - பகைவர்மேற் கண்ணோடாது செய்யும் மறத்தை நூலோர் மிக்கவாண்டன்மையென்று சொல்லுவர்,—ஒன்று உற்றக்கால் ஊராண்மை அதன் எஃகு (என்ப) - அவர்க்கு ஒருதாழ்வு வந்ததாயிற் கண்ணோடி அது நீர்த்துக்கோடற்பொருட்டு ஊராண்மைசெய்தலை நூலோர் அதற்குக் கூர்மை யென்று சொல்லுவர். எ - று.

என்பவென்பது பின்னுமியைந்தது. ஊராண்மை உபகாரியாந்தன்மை. அஃதாவது இலக்கையர்வேந்தன் போரிடைத் தன்னூனை முழுதும்பட்ட தமியனுயகப்பட்டானது நிலைமை நோக்கி, அயோத்தியரிறை மேற்செல்லாது இன்றுபோய்நாளை நின்னூனோடு வாவென விட்டாற்போல்வது. இவையிரண்டுபாட்டுந்தழிஞ்சி. (ஈ)

எஎச. கைவேல் களிற்றெடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும். ச.

இ - ள். கைவேல் களிற்றெடு போக்கி வருபவன் - தன்கைப் படையாய வேலைத் தன்மேல்வந்த களிற்றோடு போக்கி வருகின்ற களிற்றுக்கு வேறுடித்திரிவான்—மெய் வேல் பறியா நகும் - தன்மார்பின்கணின்ற வேலைக்கண்டு பறித்து மகிழும். எ - று.

---

* நடுகல்லிலக்கணம், தொல், பொருள், புறம், இ-ம சூத்திரத்துட்காண்க.

† பைம்பொற புனைப் பருமக்களி யானை மீட்டஞ்—செம்மபொ னெடுந்தேர்த் தொகைமோக் கடற் றூனை வெள்ளை—மபன சிலைவாய் நடக்குங்கணை மிச்சி லல்லா—லம்பொன் முடிப்பூ ணரசும்மிலை வென்று நக்கான்—சிலைகிர்த்தாமனி, காஞ்சிருவதையாரிலம்பகம்; உகள

‡ நெடுமொழிவஞ்சிவென்பது ஒன்னுதார் படைதெழுமித்—தன்னிண்மை யெடுத்தோர்த் தன்று—வெண்பாமாலை, வஞ்சிப்படலம், கஉ.

§ தழிஞ்சியென்பது அழிவர் புறக்கொடை யில்லா னோக்காக்—கழிதறு கொள்கை காதலித் தலைத்தன்று—வெண்பாமாலை, வஞ்சிப்படலம், க.

களிற்றெடு போக்கல் களிற்றினதுயிரைக் கொடுபோமாறவிடுதல். மலிழ்ச்சி தேடியதெய்தலான். இதனுட் களிற்றையல்லதெறியானென்பதூஉம், னெமிருநியான் வேலிடைபோந்ததறிந்திலனென்பதூஉம், பின்னும் போர்மேல் விருப்பினனென்பதூஉம், பெறப்பட்டன. நூழிலாட்டு*. (ச)

எஎடு. விழித்தகண் வேல்கொண் டெறிய வழித்திமைப்பி
னோட்டன்றே வன்கணவர்க்கு. டு.

இ - ன். விழித்த கண் - பகைவரை வெகுண்டுநோக்கியகண்—வேல்கொண்டு எறிய அழித்து இமைப்பின் - அவர் வேலைக்கொண்டெறிய அஃதாற்றாது அக்கோக் கையழித்து இமைக்குமாயின்,—வன்கணவர்க்கு ஓட்டு அன்றே - அது வீரர்க்குப் புறங்கொடுத்தலாம். எ - று.

அவ்வெகுளிநோக்கமீட்டலும் போரினகண்மீட்சியெனக்கருதி அதுவுஞ்செய்யா ரென்பதாம். (டு)

எஎசு. விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் ஞாநா யெடுத்து. சு.

இ - ன். தன் நாளை யெடுத்து - தனக்குச் சென்ற நாள்களையெடுத்தெண்ணி,—விழுப்புண் படாத நாளெல்லாம் வழுக்கினுள்வைக்கும் - அவற்றுள் விழுப்புண்படாத நாள்களையெல்லாம் பயன்படாது கழிந்தநாளுள்ளே வைக்கும் வீரன். எ - று.

விழுப்புண் முகத்தினும் மார்பினும் பட்ட புண். போர்பெற்றிருக்கவும் அது பெறுத நாள்களோடுங் கூட்டுமென்பதாம். இவைமூன்றுபாட்டானும் ஊறஞ்சாமை கூறப்பட்டது. (சு)

எஎஎ. சுழலு மிசைவேண்டி வேண்டா வுயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து. எ.

இ - ன். சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார் - துறக்கத்துத் தம்மொடு செல்லாது வையத்தைச் சுழற்று நிற்கும் புகழைவேண்டி உயிர்வாழ்தலே வேண்டாத வீரர்—கழல் யாப்புக் காரிகை நீர்த்து - கழல்கட்டுதல் அலங்கார நீர்மையை யுடைத்து. எ - று.

வையத்தைச் சூழுமெனவே, அதன் பெருமை பெற்றும். செயப்படுபொருள் வரு வித்தப்பட்டது. சூழ்தல் அகத்திடல். துறக்கமும் புகழும் எளிதினெய்துவராகலின், ஆபரணமாவது அதுவேயென்பதாம். (எ)

எஎஅ. உறினுயி ரஞ்சா மறவ ரிறைவன்
செறினுஞ்சீர் குன்ற லிலர். அ.

இ - ன். உறின் உயிர் அஞ்சா மறவர் - போர்பெறிற் தம்முயிர்ப்பொருட்டஞ் சாது அதன் மேற்செல்லும் வீரர்—இறைவன் செறினும் சீர் குன்றல் இலர்-தம்மிறை வன் அதுவேண்டாரென்ற முனியினும் அவ்வீரமிகுதி குன்றார். எ - று.

---

* நூழிலாட்டென்பது னெய்கழுமிய படையினிய—வளைகழிதலேல் பறித்தோச் நின்று—னென்பாமாலை, தும்பைப்படலம், கூ.

போர்பெற்றதியாமையின், அது பெற்றால் அரசன்றப்பினும் இல்லாரென்ப தாம். பிறரும் "போரெனிற் புகலும் புணைகழன் மறவர்" என்றும் "புட்பகைக்— கேவா ஞகலிற் சாவேம் யாமென - நீங்கா மறவர் வீங்குதோள் புடைப்ப†" என்றுங் கூறினர். (அ)

எஎக. இழைத்த திகவாமைச் சாவாரை யாரே
பிழைத்த தொறுக்கிற் பவர். கூ.

இ - ள். இழைத்தது இகவாமைச் சாவாரை - தாங்கூறின வஞ்னைச்தப்பாமற் பொருட்டுச் சென்று சாவவல்ல வீரரை—பிழைத்தது ஒறுக்கிற்பவர் யார் - அது தப் பியவாறு சொல்லியெள்ளுதற்குரியார் யாவர்! எ - று.

இழைத்தல் இன்னது செய்யேனுயின் இன்னஞுகவெனத் தான்வருத்தல். சொல்லியென்பது அவாய்நிலேயான் வந்தது. வஞ்னைமுடிப்பான்புக்கு முன்னே சாவினுந் தொலேவன்மையின், அதுமுடித்தாராவரெனச் சாதற்சிறப்புக் கூறியவாறு.

எஅ0. புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பிற் சாக்கா
டிரந்துகோட் டக்க துடைத்து. க0.

இ - ள். புரந்தார் கண் நீர் மல்கச் சாகிற்பின - தமக்குச் செய்தான்றிகினே னினேந்து ஆண்டவரசர் கண்கள் நீர் மல்கும்வகை போரிடைச் சாவப்பெறின்,—சாக் காடு இரந்துகோட்டக்கது உடைத்து - அச்சாக்காடு இரந்தாயினுங்கொள்ளுந்தருதி யையுடைத்து. எ - று.

மல்குதலாகிய இடத்து நிகழ்பொருளின்றெழில் இடத்தின்மேனின்றது. இவ் யழ இல்லிடை நோயால் விளிவார் பழவினைப்பயனேயெய்த்லின், அத்தவினேயாற் றுறக்கமெய்துஞ்சாதலே இரந்துகோட்டக்கதுடைத்தென்றார். இவை ரான்குபாட்டா னும் உயிரோம்பாமை கூறப்பட்டது. (க0)

எங்ம் அதி.—நட்பு.

இனி அப்படைபோல அரசனுக்கு வினையிடத்துதவுதாய நட்பினை ஐந்தங் காரம் விதிமுகத்தானும் பன்னிரண்டதிகாரம் எதிர்மறைமுகத்தானுங் கூறவான் றொடங்கி, விதிமுகவதிகாரமைந்தனுள்ளும் முதற்கண் நட்புக்கூறுகின்றார். அஃதா வது இன்னதென்பதனேம் அதிகாரமுறைமையும் இதனுள் வினங்கும்.

எஅக. செயற்கரிய யாவுள நட்பி னதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு. க.

இ - ள். நட்பின் செயற்கரிய யா உள - நட்புப்போலச் செய்துகோடற்கரிய பொருள்கள் யாவையுள!—அதுபோல் வினைக்கு அரிய காப்பு யா உள - செய்து கொண்டால் அதுபோலப் பகைவர் செய்யும் வினைக்குப் புகற்கரியகாவலாவன யாவையுள! எ - று.

நட்புச்செய்தற்காவாரைப் பெறுதலும் பெற்றுச் செய்யுமுபாயமும் செய்தாற் றிரிபின்றி நிற்றலுமுதலிய அரியவாகலின் நட்பிற செயற்கரியன வில்லேயென்றும், செய்தாற் பகைவரஞ்சி வினைதொடங்காராகலின் அதுபோல வினைவாராமைக்கு

* புறாநூறு, கூ, † புறநானூறு, கஅ.

அரிய காவலில்லையென்றும் கூறினார். நட்புத்தான் இயற்கை செயற்கையென இரு வகைப்படும். அவற்றுள் இயற்கை பிறப்புமுறையாலுயருதலும் தேயமுறையாலுய நலமென இருவகைப்படும். அவற்றுள் முன்னையது சுற்றமாகலின் அது சுற்றத்தாலினைடங்கிற்று; ஏனையது பகையிடையிட்டதேயத்ததாகலின், அது துணைவலியென வலியறிதலுளடங்கிற்று இனி ஈண்டுச் சொல்லப்படுவது முன்செய்தவுதவிபற்றி வருஞ் செயற்கையேயாகலின், அதன்சிறப்பு இதனுற் கூறப்பட்டது. (க)

எஅஉ. நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு. உ.

இ - ள். நீரவர் கேண்மை பிறை நிறை நீர - அறிவுடையார் நட்புக்கள் பிறை நிறையுந்தன்மைபோல நாடோறு நிறையுந்தன்மையவாம்;—பேதையார் நட்பு மதிப் பின் நீர - மற்றைப்பேதைமையுடையார் நட்புக்கள் நிறைந்தமதி பின் குறையுந்தன் மைபோல நாடோறுங் குறையுந்தன்மையவாம். எ - று.

நீரவரென்றார், இனிமைபற்றி. கேண்மை, நட்பென்பன ஒருபொருட்கிளவி. செய்தாரது பண்மையான் நட்பும் பலவாயின. அறிவுடையாரும் அறிவுடையாருஞ் செய்தன முன்சுருங்கிப் பின்பெருகலரும், பேதையாரும் பேதையாருஞ்செய்தன முன்பெருகிப் பின்சுருங்கற்குங் காரணம் தம்முண் முன்னறியாமையும் பின்னறி தலுமாம். (உ)

எஅஊ. நவிறெறு நூனயம் போலும் பயிறெறும்
பண்புடை யாளர் தொடர்பு. ஊ.

இ - ள். பண்பு உடையாளர் தொடர்பு பயிறெறும் - நற்குணமுடையமக் கள் தம்முட்செய்த நட்புப் பயிலுந்தோறும் அவர்க்கின்பஞ் செய்தல்—தூல் நவி றெறும் நயம்போலும் - நூற்பொருள் கற்குந்தோறுங் கற்றூர்க்கின்பஞ்செய்தலே யொக்கும். எ - று.

நயத்தினைச் செய்தலான், நயமெனப்பட்டது. இருமையினும் ஒருகாலைக்கொரு கால் மிகுமென்பதாம். இவையிரண்டுபொட்டாலும் அச்சிறப்பிற்கேது கூறப்பட்டது.

எஅஎ. நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேறசென் றிடித்தற் பொருட்டு. எ.

இ - ள். நட்டல் நகுதற்பொருட்டன்று - ஒருவனேடொருவன் நட்புச்செய்தல் தம்முணகுதற்கியைந்தன சொல்லி நகையாடற் பொருட்டன்று,—மிகுதிக்கண் மேற் சென்று இடித்தற்பொருட்டு - அவர்க்கு வேண்டாதசெய்கையுளதாயவழி மூற்பட்டுச் கழறுதற்பொருட்டு. எ - று.

பழியும் பாவமுந்தருஞ்செய்கை தன்பமே பயத்தலான் வேண்டப்படுவதன்மை யின் அதனை மிகுதியென்றும், அதுசெய்தற்கு முன்னே மீட்டல்வேண்டுதலின் மேற் சென்றென்றும், இன்சொற்கு நீளாமையின் இடித்தற்பொருட்டென்றும் கூறினார். இத்தனுன் நட்பின்பயன் கூறப்பட்டது. (ச)

எஅஐ. புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதா
னட்பாங் கிழமை தரும். ஐ.

இ - ள். புணர்ச்சி பழகுதல் வேண்டா - ஒருவனுடொருவன் கட்பாதற்குப் புணர்ச்சியும் பழகுதலுமாகிய காரணங்கள் வேண்டுவதில்லை,—உணர்ச்சிதான் கட் பாம் கிழமை தரும் - இருவர்க்குமொத்தவுணர்ச்சிதானே நட்பாமுரிமையைக் கொடுக்கும். எ - று.

புணர்ச்சி ஒருதேயத்தாராதல்; "இன்றே போல்கரும் புணர்ச்சிக" என்றதும் அதனை. பழகுதல் பலகாற்கண்டுஞ் சொல்லாடியும் மருவுதல் இவ்விரண்டுமின்றிக் கோப்பெருஞ் சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும்போல உணர்ச்சியொப்பின், அதுவே உடனுயிர்நீங்கு முரிமைத்தாய நட்பினைப் பயக்குமென்பதாம்†. நட்பிற்குப் புணர்ச்சி, பழகுதல், உணர்ச்சியொத்தலென்னுங் காரணமொன்றனுள்ளும் பின்னது சிறப்புடைத்தென்பது இதனுற் கூறப்பட்டது. (இ)

எஅசு. முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு. கூ.

இ - ள். முகம் நக நட்பது நட்பு அன்று - கண்டவழி அகமொழிய முகமாத்தி ரமே மலரும்வகை நட்குமது நட்பாகாது;—நெஞ்சத்தகம் நக நட்பது நட்பு - அன் பால் அகமுமலர நட்குமதே நட்பாவது. எ - று.

நெஞ்சின்கணிகழ்வதனை நெஞ்சென்றார். இறந்ததுதழீஇய வெச்சவும்மை விகா ரத்தாற் றொக்கது. இதனுல் இரண்டும் ஒருங்கே மலரவேண்டுமென்பது பெற்றும். ()

எஅள. அழிவி னவைநீக்கி யாறுய்த் தழிவின்க
ணல்ல லுழப்பதா நட்பு. எ.

இ - ள். அழிவினவை நீக்கு ஆறு உய்த்து-கேட்டினைத்தருந் திசைகளைச் செல் லுங்கால் விலக்கி எனை நனைதிகளோ செல்லாக்காற் செலுத்தி—அழிவின்கண் அல்லல் உழப்பது நட்பாம - தெய்வதத்தாறதேயெனுமுழி அது விலக்கப்படாமையின் அதனின்பதத்தை உடனனுபவிப்பதே ஒருவனுக்கு நட்பாவது. எ - று.

ஆறென வருகின்றமையின், அழிவினைத்தருமவையென்றெழிந்தார். "தெருண்ட வறிவினவர்‡" என்புழிப்போல இனசாரியை நிற்க இரண்டனுருபு தொக்கது. இனி னவையென்று பாடமோதி, அதனாற்போராழிவினுஞ் செல்வவழிவினும் வந்த துன் பங்களென்றும், அழிவின்க ணென்பதனாற் யாகைக யழிவின்கணென்றும் உரைப் பாருமுளர். (எ)

எஅஅ. உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
யிடுக்கண் களைவதா நட்பு. அ.

இ - ள். உடுக்கை இழந்தவன் கைபோல - அவையிடை ஆடைகுலைந்தவனுக்கு அப்பொழுதே கைசென்றுதவி அவ்விளிவரல் களையுமாறுபோல,—ஆங்கே இடுக்கண் களைவது நட்பாம் - நட்டவனுக்கு இடுக்கண் வந்தழி அப்பொழுதே சென்றுதவி அதனைக்களைவதே நட்பாவது. எ - று.

அற்றங்காத்தற்கட் கைதன்மனத்தினு முற்படுதலின், அவ்விரண்டு இடுக்கண்களை வழியுய் அதற்கொத்த தொழிலுவமையினும் வருவிக்க. உடையவன்றெழில் கட்பின் மேலேற்றப்பட்டது. (அ)

---

* புறநானூறு, ஆ. † புறநானூறு, உசை. ‡ நாலடியார், இரவச்சம, ச.

எஅக. நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி
போல்லும்வா யூன்று நிலை. க.

இ - ள். நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் - நட்பினுக்கு அரசிருக்கையாதெனின்,—கொட்பு இன்றி ஒல்லும் வாய் ஊன்றும் நிலை - அஃது எஞ்ஞான்றுக் நிரிபின்றி இயலுமெல்லை யெல்லாம் அறம்பொருள்களிற் தளராமைத் தாங்குந் திண்மை. எ - று.

ஒருஞான்றும் வேறுபடாது மறுமையிம்மைகட்கு உறுதியாய அறம்பொருள் களிற்றளர்த்துழி அத்தளர்ச்சி நீக்கி அவற்றின்கணிறுத்துதற்குமேல் ஒருசெயலுமின் மையின், அதனை நட்பிற்கு முடித்தவெல்லையென்றார். (க)

எகo. இனைய ரிவரெமக் கின்னம்பா மென்று
புனையினும் புல்லென்னு நட்பு. கo.

இ - ள். இவர் எமக்கு இனையர் யாம் இன்னம் என்று புனையினும் - இவர் நமக் கித்தனையன்பினர் யாமிவர்கணித்தன்மையமென்று ஒருவரையொருவர் புனைந்து சொல்லினும்,—நட்புப் புல்லென்னும் - நட்புப் புல்லிதாய்த தோன்றும். எ - று.

இவர்க்கென்பது வருவிக்கப்பட்டது. தாம் அவரென்னும் வேற்றுமையின்றி வைத்துப் புனைந்துரைப்பினும் வேறுறுமையுணடாமாகலின், நட்புப் புல்லென்னு மென்றார். இவையைந்துபாட்டானும் நட்பினிலக்கணமு கூறப்பட்டது. (கo)

அo ம் அதி.—நட்பாராய்தல்.

அஃதாவது மேற்சொல்லிய விலக்கணத்தாரை யாராய்ந்தறிந்தே நட்கவேண் டுதலின், அவரையாராயுநெறிமை. அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

எகக. நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பான பவர்க்கு. க.

இ - ள். நட்பு ஆள்பவர்க்கு நட்டபின் வீடு இல்லை - நட்பினைவிரும்பி அதன் கண்ணே நிறபாகரு ஒருவனையே நட்புசெய்தபின் அவனை வியதலுணடாகாது;— நாடாது நட்டலிற கேடு இல்லை - ஆகலான், ஆராயாது நடபுசெயதலபோலக கேடு தருவது பிறிதில்லை. எ - று.

ஆராய்தல் குணஞ்செய்கைகளது நன்மையையாராய்தல். கேடு ஆருபெயர். நட் டெற் றுமவரென்னும் வேற்றுமையினமையின் வீடில்லையென்றும், அவவேறறுமைய்ன மையான் அவன்கட் பழிபாவங்கள் தமவாமாகலின் இருமையுங்கெடுவரென்பது சோ்தி நாடாது நட்டலிற் கேடில்லையெனறு கூறினர். (க,

எகஉ. ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தானசாந் துயரந் தரும். உ.

இ - ள். ஆய்ந்து ஆய்ந்து கேண்மை கொள்ளாதான் - குணமுஞ் செய்கையும் நல்லனென்பது பலகாலும் பலவாற்றானுமாராய்ந்து ஒருவனையே நட்புக்கொள்ளாத வன்—கடைமுறை தான் சாம் துயரம் தரும் - முடிவிற றன் சாதற்கேதுவாய துன்பத்தினைத் தன்மாற்றார் வினைக்கவேண்டாமற் றானே வினைக்கும். எ - று.

டைமுறைக்கண்ணென இறந்திக்கட்டோக்க மொவது விரிக்க. குணமுஞ் செயலுந் தியாவெடு கொள்ளின் அவற்கு வரும்பகைமை யெல்லார் தண்மேலவாய்ப் பின் அவற்குளிறந்துவிடுமென்பதாம். இவையிரண்டுபாட்டானும் ஆராயாவழிப்பகை மிழுக்குக் கூறப்பட்டது. (கூ)

எகூ. குணனுவ் குடிமையுங் குற்றமுங் குன்று
வினனு மறிந்தியாக்க நட்பு. கூ.

இ - ள். குணனும் குடிமையும் குற்றமும் குன்று இனனும் அறிந்து - ஒருவன் குணத்தினையும் குடிப்பிறப்பினையும் குற்றத்தினையும் குறைவற்ற சுற்றத்தினையு மாராய்ந்தறிந்து,—நட்பு யாக்க - அவனெடு நட்புச்செய்க. எ - து.

குற்றமில்லாதார் உலகத்தின்மையின் உள்ளது பொறுக்கப்படுவதாயின் அவர் நட்பு விடற்பாற்றன்றென்பார் குற்றமுமென்றும், சுற்றப்பிணிப்புடையார் நட்டா ரோடும் பிணிப்புண்டு வருதலிற் குன்றுவினனுமென்றும், விடப்படிற் றங்குறையா மென்பார் அறிந்தியாக்கவென்றுங் கூறினர். (கூ)

எகூ. குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல்வேண்டு நட்பு. ச.

இ - ள். குடிப்பிறந்து தன்கட் பழி நாணுவானை - உயர்ந்தகுடியின்கட்பிறந்து தன்மாட்டு உலகர்சொல்லும் பழிக்கஞ்சுவானை—கொடுத்தும் நட்புக்கொளல் வேண் டும் - சில கொடுத்தாயினும் நட்புக்கோடல் சிறந்தது. எ - து.

குடிப்பிறப்பாற் றான் பிழைசெய்யாமையும், பழிக்கஞ்சலாற் பிழைத்தன பொறுத்தலும் பெற்றும். இவை யிரண்டுமுடையானைப் பெறுதலருமையின், அவ னட்பை விலைகொடுத்துங் கொள்கவென்பதாம். (ச)

எகூரு அழச்சொல்லி யல்ல நிடித்து வழக்கறிய
வல்லார்நட் பாய்ந்து கொளல். ரு.

இ - ள். அல்லது அழச் சொல்லி - தாம் உலகவழக்கல்லது செய்யக் கருதிச் சோகம்பிறக்கும்வகை சொல்லி விலக்கியும்—இடித்து - செய்தக்காற் பின்னுஞ் செய் யாவகை நெருக்கியும்—வழக்கு அறியவல்லார் - அவ்வழக்குச் செய்யாவழிச் செய் விக்கவும் வல்லாரை—ஆய்ந்து நட்புக் கொளல் - ஆராய்ந்து நட்புக்கொள்க. எ - து.

அழச்சொல்லி யிடித்தெனவந்த பரிகாரவினைகளான் அவற்றிற்கேற்றகுற்றவினை கள் வருவிக்கப்பட்டன. வழக்கு உலகத்தார் அடிப்படச் செய்துபோந்த செயல். தம்மொடு நட்டாரும் அறிபும்வகை அறிவித்தலரிதாகலின், அறியவல்லாரென்றார். இரண்டாவது இறந்திக்கட்டோக்கது. (ஞ)

எகூக. கேட்டினு மூண்டோ குறைநி னினைஞரை
நீட்டி யளப்பதோர் கோல். ஃக.

இ - ள். நினைஞரை நீட்டி அளப்பது ஓர்கோல் - ஒருவனுக்குக் கேடென்பது தன்னட்டாராகிய புலங்களே வெஞ்சாமலளப்ப தோர்கோல்;—கேட்டினும் ஒருதனி உண்டு - ஆகலின் அதன்கண்ணும் அவனைப் பெறப்படுவதோர் கல்லறிவுண்டு. எ - து.

நீத்த நட்பெல்லைகள் சுருங்கியிருக்கவும் செல்வக்காலத்துப் புறத்துத் தோன்று மற்போன்றார் பின் கேவெந்துழிச் செயல்வேறுபடுதலின் அக்கேட்டால் அவை வரையற்கப்படுமென்பது பற்றிச் சேட்டினைக் கோலாக்கியும், அதனால் அவரையனாத்தறிதல் ஆவாரையே கோடலின் அவ்வறிவை உறுதியென்றுங் கூறினர். இவ்விரண்டு பெயர். இஃதேகதேசவருவகம். இவை நான்குபாட்டானும் ஆராயுமாறும், ஆராய்ந்தால் நட்கப்படுவார் இவரென்பதனையுங் கூறப்பட்டன. (உ)

எகூஎ. ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை யொழிஇ விடல் எ.

இ - ள். ஒருவற்கு ஊதியமென்பது - ஒருவனுக்குப் பேறென்று சொல்லப்படுவது—பேதையார் கேண்மை ஒழிஇ விடல் - அறிவிலாரோடு நட்புக்கொண்டானுயின் அதனை யொழித்து அவரினீங்குதல். எ - று.

நட்பொழிந்தாலும் நீங்காக்கால் "வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேங்" மாறுபோலத் தீங்கு வருதலின் விடலென்றும், நீங்கியவழித் தீங்கொழிதலேயன்றி இருமையின்பத்திற் குரிமை யெய்தலுமுடைமையின் அதனை யூதியமென்றுகூறினர்.

எகூஅ. உள்ளற்க வுள்ளுஞ் சிறுகுவ கொள்ளற்க
வல்லற்க ணுற்றுப்பார் நட்பு. அ.

இ - ன். உள்ளம் சிறுகுவ உள்ளற்க - தம்மூக்கஞ் சுருங்குதற்குக் காரணமாய வினைகளைச் செய்யினியாதொழிக,—அல்லற்கண் ஆற்ற அறப்பார் நட்புக் கொள்ளற்க - அதுபோலத் தமக்கொருதுன்பம் வந்துழிக் கைவிடுவார் நட்பினைக் கொள்ளாதொழிக. எ - று.

உள்ளஞ்சிறுகுவவாவன தம் பின்வலியாரோடு தொடங்கியனவும் பயனில்லனவுமாம். ஆற்றென்பது முதனிலைத்தொழிற்பெயர். முன்னெல்லாம் வலியராவார் போன்று ஒழிதலின், வலியறுப்பாரென்றார். எடுத்துக்காட்டுவமை. கொள்ளின் அழிந்தே விடுமென்பதாம். (அ)

எகூக. கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை யடுங்காலை
யுள்ளினு முள்ளஞ் சுடும். கூ.

இ - ன். கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை - ஒருவன் கெடுங்காலத்து அவனை விட்டு நீங்குவார் முன் அவனுக்கு செய்தநட்பு;—அடுங்காலை உள்ளினும் உள்ளம் சுடும் - தன்னைக் கூற்றங்காலத்து ஒருவனினைப்பினும், அந்நினைத்த வுள்ளத்தைச் சுடும். எ - று.

நினைத்ததனையானே இயைபில்லாத பிறனுக்குங் கூற்றினுங் கொடிதாமெனக் கைவிடெண்ணிச் செய்த நட்பின் கொடுமை கூறியவாறு. இனி அவன்றனே ஆக்கிய கேடு தன்னையடுங்காலையுள்ளினும் அக்கேட்டினுஞ்சுடுமென்றுரைப்பாருமுளர். இவை மூன்றுபாட்டானும் ஆராய்ந்தால் நட்கப்படாதார் இவரென்பது கூறப்பட்டது. (க)

அஅ. மருவுக மாசற்றார் கேண்மை பிரிவொன் றீண்டி
மொருவுக வொப்பிலார் நட்பு. கூ.

---

† நீத்த நட்பு, கேண்மை, ஒழிதல், விடல்.

இ - ன். மாசு அற்றூர் கேண்மை மருவுக - உலகோடொத்துக் குற்றமற்றூர் கட்பினையே பயில்க;—ஒப்பு இலார் நட்பு ஒன்று ஈத்தும் ஒருவுக - உலகோடொத்தலில்லார் கட்பினை அறியாது கொண்டாராயின், அவர்வேண்டிய தொன்றினைக் கொடுத்தாயினும் விடுக. எ - று.

உலகோடொத்தார் நட்பு இருமையின்பமும் பயத்தலின் மருவுகவென்றும், அதனெடு மாறுபினூர் நட்புத் தன்பமே பயத்தலின் அதனெதிரிவை விலைகொடுத்துங் கொள்கவென்றுங் கூறினர். இதனால் அவ்விருமையுந் தொகுத்துக் கூறப்பட்டன. ()

அகம் அதி.—பழைமை.

அஃதாவது நட்டாரது பழையராந்தன்மைபற்றி அவர் பிழைத்தன பொறுத்தல். காரணப்பெயர். காரியத்திற்காயிற்று. ஆராய்ந்து நட்கப்பட்டாரெனினும் பொறுக்கப்படுங் குற்றமுடையராகலானும் ஊழ்வகையானும் நட்டார்மாட்டுப் பிழையுளதாமென்பது அறிவித்தற்கு, இது நட்பாராய்தலின்பின் வைக்கப்பட்டது.

அ௧. பழைமை யெனப்படுவ தியாதெனின் யாதுங்
கிழமையைக் கிழ்க்திடா நட்பு. க.

இ - ன். பழைமை எனப்படுவது யாதெனின்-பழைமையென்று சொல்லப்படுவது யாதென்று வினவின்,—கிழமையை யாதும் கிழ்க்திடா நட்பு - அது பழைமையோர் உரிமையாற் செய்வனவற்றைச் சிறிதுஞ் சிதையாது அவற்றிற்குடம்படும் நட்பு. எ-று.

கிழமை ஆகுபெயர். கெழுதகைமையென வருவனவுமது. உரிமையாற்செய்வனவாவன கருமமாயின செய்யுங்காற் கேளாதுசெய்தல், கெடும்வகைசெய்தல், தமக்கு வேண்டியன தாமே கோடல், பணிவச்சங்களின்மையென்றிவை முதலாயின. சிதைத்தல் விலக்கல். இதனாற் பழைமையாவது காலஞ்சென்றதன்று இப்பெற்றித்தாய நட்பென்பது கூறப்பட்டது. (க)

அ௦உ நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்
குப்பாதல் சான்றோர் கடன். உ.

இ - ன். நட்பிற்கு உறுப்புக் கெழுதகைமை - நட்பிற் கவயவமாவன நட்டார் உரிமையாற்செய்வன,—அதற்கு உப்பாதல் சான்றோர் கடன் - அதனால் அவ்வுரிமைக்கு இனியராதல் அமைந்தார்க்கு முறைமை. எ - று.

வேறன்மைதோன்ற உறுப்பென்றார். உறுப்பென்பது ஈண்டிலக்கணையடியாக வந்த குறிப்புச்சொல். அவயவமாதலறிந்தே இனியவராவரென்பது தோன்றச் சான்றோர்மேல் வைத்தார். (உ)

அ௦க. பழகிய நட்பெவன் செய்யுங் கெழுதகைமை
செய்தாங் கமையாக் கடை. க.

இ - ன். கெழுதகைமை செய்தாங்கு அமையாக்கடை - தாமுடம்படாதனவேனும் நட்டார் உரிமையாற் செய்தனவற்றிற்குத் தாஞ்செய்தாற்போல உடம்படாராயின்,—பழகிய நட்பு எவன்செய்யும் - அவரோடு பழையதாய் வந்த நட்பு என்ன பயனைச் செய்யும். எ - று.

செய்தாற்போலவுடம்படுதலாவது தாமும் அவரிடத்துரிமையாலுடம்படுதல். இவையிரண்டுபோட்டாலும் பழைமையான்வரு முரிமையது நெறிப்புக் கூறப்பட்டது. ()

அ०ச. விழைதகையான் வேண்டி யிருப்பர் கெழுதகையாற்
கேளாது கட்டார் செயின்.

இ - ள். கட்டார் கெழுதகையால் கேளாது செயின் - தங்கருமத்தை கட்டார் உரிமையாற்கேளாது செய்தாராயின்,—விழைதகையான் வேண்டியிருப்பர் - அச்செயலது விழையப்படுதன்மைபற்றி அதனை விரும்புவர் அறிவுடையார். எ - று.

ஒருவர்க்குத் தங்கருமம் தாமழியாமன் முடிந்திருத்தலினூஉக்கு நன்மையின்மையின், அச்செயல் விழையத்தக்க தாயிற்று. அதனை அவ்வாறறிந்து விரும்புதல் அறிவுடையார்க்கல்லதின்மையின், அவர்மேல்வைத்துக்கூறினார். வேண்டியிருப்பரென்பது எழுந்திருப்பரென்பதுபோல ஒருசொன்னீர்மைத்து. இதனாற் கேளாதுசெய்தழி அதனை விரும்புவரென்பது கூறப்பட்டது. (ச)

அ०ரி. பேதைமை யொன்றே பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க கட்டார் செயின். ரி.

இ - ள். நோதக்க கட்டார் செயின் - தாம் வெறுக்கத் தக்கனவற்றை கட்டார். செய்தாராயின்,—பேதைமை ஒன்றே பெருங்கிழமை என்று உணர்க - அதற்குக் காரணம் ஒன்றிற்பேதைமையென்றுதல் ஒன்றின்மிக்கவரிமையென்றுதல் கொள்க. எ-று.

ஒன்றேவென்பது எண்ணிடைச்சொல். செயினெனவே, தம்மியல்பாற் செய்யாமை பெற்றும். இது வருகின்றவற்றுள்ளுமொக்கும். இழவூழான் வரும் பேதைமை யாவர்க்கு முண்மையிற் றமக்கேதக்கொண்டாரென்றுதல் ஊழ்வகையான் எம்மின் வரற்பாலது ஒற்றுமை மிகுதிபற்றி அவரின்வந்ததென்றுதல் கொள்வதல்லது அன்பின்மையென்று கொள்ளப்படா தென்பதாம். கெடும்வகைசெய்யின் அதற்குக் காரணம் இதனாற் கூறப்பட்டது. (ஞ)

அ०கூ. எல்லிக்க ணின்றார் துறவார் தொலிவிடத்துத்
தொல்லிக்க ணின்றார் தொடர்பு. கூ.

இ - ள். எல்லிக்கண் நின்றார் - கட்புவரம்பிகவாது அதன்கண்ணே நின்றவர்—தொல்லிக்கண் நின்றார் தொடர்பு தொலிவிடத்தும் துறவார் - தம்மொடு பழைமை பிற்றிரியாது நின்றாரது கட்பினை அவரார்றொலிவுவந்தவிடத்தும் விடார். எ - று.

பழைமையிற்றிரியாமை உரிமையொழியாமை. தொலிவு பொருட்கேடும் போர்க்கேடும். (ஃ)

அ०எ. அழிவந்த செய்யினு மன்பரு ரன்பின்
வழிவந்த கேண்மை யவர். எ.

இ - ள். அழிவந்த செய்யினும் அன்பு ரூர் - கட்டார் தமக்கழிவு வந்தவற்றைச் செய்தாராயினும் அவர்மாட்டன்பொழியார்—அன்பின் வழி வந்த கேண்மையவர்- அன்புடனே பழையதாய்வந்த கட்பினையுடையார். எ - று.

அழிவென்பது முதனிலைத்தொழிற்பெயர். அழிவு மேற்சொல்லிய கேடுகள். இவை இரண்டோட்டானும் கேடுசெய்தக்கண்ணும் கட்பு விடற்பாற்றன்றென்பது கூறப்பட்டது. (எ)

அ०அ. கேளிழுக்கங் கோக் கெழுதகைமை வல்லார்க்கு
நாளிழுக்க கட்டார் செயின்.

இ - ள். கேள் இழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு - நட்டார் செய்த பிழையத் தாமாகவேயன்றிப் பிறர் சொன்னலுங்கொள்ளாத உரிமையறிவல் லார்க்கு—நட்டார் இழுக்கம் செயின் நான் - அவர் பிழை செய்வாராயின், அதுபயன் பட்ட நாளாம். எ - று.

பிழையாவன சொல்லாது நற்பொருள்வெளவல், பணியாமை, அஞ்சாமை முத லாயின. கேட்டல் உட்கோடல். கெழுதகைமை வல்லாரென்பது ஒருபெயராய்க் கேளாதவென்னு மெச்சத்திற்கு முடிபாயிற்று. செய்துபோற்றுதியல்லது அவ்வுரிமை வெளிப்படாமையின், செய்யாதன நாளல்லவாயின. இதனாற் பிழைபொறுத்தற் றெறப்புக் கூறப்பட்டது. (அ)

அ஘கூ. நெட்டாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையு முலகு. கூ.

இ - ள். நெடா வழி வந்த கேண்மையார் கேண்மை - உரிமையருது பழையதாய் வந்த நட்பினை யுடையாரது நட்பினை—விடார் உலகு விழையும்-அவர் பிழைநோக்கி விடுதல்செய்யாதாரை உலகம் நட்புக்குறித்து விரும்பும். எ - று.

நெடாதென்பதனிறுதிகிலே விகாரத்தாற்றொக்கது. விடாதாரையெனவே, விடு தற்காரணங் கூறப்பட்டது. நம்மாட்டும் இவரித்தன்மையராவரென்று யாவருந்தாமே வந்து நட்பாவரென்பதாம். நெடாரென்று பாடமோதி, நட்புத்தன்மையிற் நெடா ராகி யென்றுரைப்பாருமுளர். (ஆ)

அ஘ம. விழையார் விழைபப் படுப பழையார்கட்
பண்பிற் றலைப்பிரியா தார். கம.

இ - ள். பழையார்கண் பண்பின் தலைப்பிரியாதார் - பழைய நட்டார் பிழை செய்தாராயினும் அவர்மாட்டுத் தம் பண்பினீங்காதார்—விழையார் விழையப்படுப - பகைவராலும் விரும்பப்படுவர். எ - று.

தம்பண்பாவது செய்யாதமுன்போல அன்புடையாதல். மூன்றனுருபுந் றெப் பும்கூமபும் விகாரத்தாற் றொக்கன. அத்திரிபின்மை நோக்கிப் பகைவரும் நட்டா ராவரென்பதாம். இவையிரண்டுபாட்டானும் பழைமையறிவார் எய்தும் பயன் கூறப்பட்டது. (கம)

அஉ ம் அதி.—நீநட்பு.

இனிப் பொறுக்கப்படாத குற்றமுடைமையின் லிடற்பாலதாய நட்பு நட்பா ராய்தற்கட் சுருக்கச்சொல்லியதுணையா னடக்காமையின் அதனை மிருவகைப்படுத்து இரண்டதிகாரத்தாற் கூறுவான்றொடங்கி, முதற்கட்டி நட்புக் கூறுகின்றார். அஃதா வது நீக்குணத்தாரோடு உளதாய நட்பு. குணத்தின்றீமை ஒற்றுமைபற்றி உடையார் மேற்றாய், அது பின் அவரோடுசெய்த நட்பின்மேற்றாயிற்று. அதிகாரமுறைமை கூறுமையே விளங்கும்.

அ஘க. பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்ற லினிது.

இ - ள். பருகுவார் போலினும் பண்பு இலார் கேண்மை - காதன்மிருகியாற் பருகுவார்போன்றாயினுங் நீக்குணமுடையார் நட்பு—பெருகலின் குன்றல் இனிது-வளர்தலிற் றேய்தனன்று. எ - று.

"பருகு வன்ன வருகா நோக்கமொடு" என்றார் பிறரும். நற்குணமில்லா ரெனவே, நீக்குணமுடையாரென்பது அருத்தாபத்தியான் வந்தது. பெருகினால் வருங்கேடு குன்றினால் வாராமையின், குன்றலினிதென்றார். இதனற்றீநட்பினது ஆகாமை பொதுவகையாற் கூறப்பட்டது. இனிச் சிறப்புவகையாற் கூறுப. (க)

அகஉ. உறினட் டறினெருஉ மொப்பிலார் கேண்மை
பெறினு மிழப்பினு மென். உ.

இ - ள். உறின் நட்டு அறின் ஒருஉம் ஒப்பு இலார் கேண்மை - தமக்குப் பய னுள்வழி நட்புச்செய்து அஃதில்வழி ஒழியும் ஒப்பிலாரது நட்பினை—பெறினும் இழப்பினும் என் - பெற்றால் ஆக்கமியாது! இழந்தாற் கேடியாது! எ - று.

தமக்குற்றனபார்ப்பார் பிறரோடு பொருத்தமிலராகலின், அவரை ஒப்பிலாரென் றார். அவர்மாட்டு தொதுமற்றன்மையே அமையுமென்பதாம். (உ)

அகஊ. உறுவது சீர்தூக்கு நட்பும் பெறுவது
கொள்வாருங் கள்வரு நேர். ஊ.

இ - ள். உறுவது சீர்தூக்கும் நட்பும் - நட்பளவு பாராது அதனால் வரும் பயன அளவு பார்க்கும் நட்டாரும்—பெறுவது கொள்வாரும் - கொடுப்பாரைக் கொள்ளாது லீலையைக்கொள்ளும் பொதுமகளிரும்—கள்வரும் - பிறர்கேடு நோக்காது அவர் சோர்வு நோக்குங் கள்வரும்—நேர் - தம்முளொப்பர். எ - று.

நட்பு ஆகுபெயர். பொருளேயேகுறித்து வஞ்சித்தொழுகலின், கணிகையர் கள்வ ரென்றிவரோடொப்ப ரென்பதாயிற்று. இவையிரண்டொட்டானுந் தமக்குறுவது பார்ப்பார் நட்பின்றீமை கூறப்பட்டது. (ஊ)

அகஎ. அமரகத் தாற்றறுக்கும் கல்லாமா வன்னுர்
தமரிற் றனிமை தலை. எ.

இ - ள். அமரகத்து ஆற்று அறுக்கும் கல்லா மா அன்னர் தமரின்-அமர் வாராத முன்னெல்லாந் தாங்குவதுபோன்று வந்துழிக் களத்திடை வீழ்த்துப்போய் கல்லி யில்லாத புரவிபோல்வாரது தமர்மையில்—தனிமை தலை - தனிமை சிறப்பு டைத்து. எ - று.

கல்லாமை கதியைத்தும் † சாரிபதினெட்டும் பொருமுரணற்றலும் அறியாமை. அன்பம் வாராத முன்னெல்லாந் துணையாவார்போன்று வந்துழி விட்டேங்குவதென் பது உவமையாற் பெற்றும். அவர் தமரானால் வருமிழுதி தனியானால் வாராமை யின், தனிமையைத் தலையென்றார். எனவே, அதுவுந்தாதல் பெறுதும். (எ)

அஅடி. செய்தமைந் தாராச் சிறியவர் புன்கேண்மை
யெய்தலி னெய்தாமை நன்று. இ.

---

* பொருளாறறுப்படை, அடி, எஅ.

† விசோமம் வல்லிதம் வெல்லு மூபகண்டம்—மத்திமஞ் சாரியோ டைது. மல்லரி முதலியவாக வேறு கூறலுமுண்டு.

இ - ள். செய்து ஏமம் சாராச் தெரியவர் புன்கேண்மை - செய்து வைத்தாலும் அரணாகாத கீழ்மக்களது நீநட்பு—எய்தலின் எய்தாமை நன்று - ஒருவர்க்குண்டாதலின் இல்லையாதல் நன்று. எ - று.

சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. அரணாமை தொலைவின்கண் விட்டு நீங்குதல். எய்தலினெய்தாமை நன்றென்பதற்குமேலுரைத்தாங்குரைக்க. சாராதவென்னும் பெயரெச்சங் கேண்மையென்னும் பெயர்கொண்டது; தெரியவரென்பதனைக் கொள்ளின், செய்தென்பது நின்று வற்றும். இவையிரண்டுபோட்டாலுந் தொலைவிற் துணையாகாத நட்பின்றீமை கூறப்பட்டது. (இ)

அகக. பேதை பெருங்கெழீஇ நட்பி னறிவுடையா
ரேதின்மை கோடி யுறும். கூ.

இ - ள். பேதை பெருங்கெழீஇ நட்பின் - அறிவிலானது மிகச்செறிந்தநட்பின்—அறிவுடையார் எதின்மை கோடி உறும் - அறிவுடையானது பகைமை கோடி மடங்கு நன்று. எ - று.

கெழீஇயவென்பதனிறுதிநிலை விகாரத்தாற்றொக்கது. பன்மை உயர்த்தற்கண் வந்தது. அறிவுடையான் பகைமை ஒரு தீங்கும் பயவாமையானும், பேதைநட்பு எல்லாத் தீங்கும் பயத்தலானும், கோடியுறுமென்றார். பெருங்கழிநட்பென்று பாட மோதுவாருமுளர். (க)

அகள. நகைவகைய ராகிய நட்பிற் பகைவரால்
பத்தடுத்த கோடி யுறும். எ.

இ - ள். நகை வகையர் ஆகிய நட்பின் தாமறிதல்வகையராகாது கருதல்வகையராதற்கேதுவாகிய நட்பான் வருவனவற்றின்—பகைவரால் பத்து அடுத்த கோடி உறும் - பகைவரான் வருவன பத்துக்கோடிமடங்கு நல்ல. எ - று.

நட்பு ஆகுபெயர். அந்நட்பாவது வீடமருந் தூர்த்தரும் வேழம்பரும்போன்று பலவகையா னகுவித்துத் தாம் பயன்கொண்டொழிவாரோடு உளதாயது. பகைவரா லென்பது அவாய்நிற்றலின், வருவனவென்பது வருவிக்கப்பட்டது. பத்தடுத்தகோடி பத்தாகத்தொகுத்தகோடி. அந்நட்பான் வருமின்பங்களின் அப்பகைவரான் வருந்துன்பங்கள் இறப்பநல்லவென்பதாம். இதற்குப் பிறரெல்லாஞ் சொல்லிலக்கணத்தோடு மாறுகொளவுரைத்தார். (எ)

அகஅ. ஒல்லுங் கருமம் முடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல். அ.

இ - ள். ஒல்லுங் கருமம் உடற்றுபவர் கேண்மை - தம்மான்முடியுங் கருமத்தை முடியாதாக்கிச் செய்யாதாரோடு கொண்ட நட்பினை—சொல்லாடார் சோரவிடல் - அது கண்டால் அவரறியச் சொல்லாதே சோரவிடுக. எ - று.

முடியாதாக்குதல் முடியாதாகாடித்தல். சோரவிடல் விடுகின்றவாறுதோன்றுமல் ஒருகாலைக் கொருகா லோயவிடுதல். அறியச்சொல்லினும் விடுகின்றவாறுதோன்றினும் அதுபொழுது பரிகரித்துப் பின்னு நட்பாயொழுகக்கருதுவராகலின், சொல்லாடாரென்றுஞ் சோரவிடலென்றுங் கூறினர். இவையிரண்டுபாட்டானும் மூன்றையே பேதையார், கருவிப்பார், இயல்வதுசெய்யாதாரென்றிவர்கண்ட்பின்றீமை கூறப்பட்டது. (அ)

அஉக. கனவிலு மின்னாத மன்னே வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு. கூ.

இ - ள். வினை வேறு சொல் வேறு பட்டார் தொடர்பு - வினையுஞ்சொல்லு மொவ்வாது வேறவேறுயிருப்பார்நட்பு—கனவிலும் இன்னாது - கனவின்கண்ணே யன்றிக் கனவின்கண்ணு மின்னாது. எ - று.

வினை சொற்களதொவ்வாமை முதன்மேலேற்றப்பட்டது. அஃதாவது வினையிற் பகைவராய்ச் சொல்லின் நட்டாராயிருத்தல். நிகழ்வின்கண் உளதாயிருத்தலால், கன வினுமின்னாதென்றார். உம்மை எச்சவும்மை, இழிவுசிறப்பும்மையுமாம். மன்னும் ஓவும் அசைநிலை. (க)

அஉ0. எனைத்தங் குறுகுத லோம்பான் மனைக்கெழீஇ
மன்றிற் பழிப்பார் தொடர்பு. க0.

இ - ள். மனைக் கெழீஇ மன்றிற் பழிப்பார் தொடர்பு - தனியே மனைக்கணிருந் தழி நட்பாடிப் பலரோடு மன்றின்கணிருந்துப் பழிகூறுவார்நட்பு—எனைத்தும் குறுகுதல் ஓம்பல் - சிறிதாயினுந் தம்மை நணுகுதலைப் பரிகரிக்க. எ - று.

மனைக்கட்கெழுமலும் மன்றின்கட்பழித்தலுந் தீதாகலின், அவர் ஒருகாலுந் தம்மை நணுகாவகை குறிக்கொண்டு காக்கவென்பார், அவர் நட்பின்மேல் வைத்துக் கூறினர். இவையிரண்டுபாட்டாலும் வஞ்சர்நட்பின் றீமை கூறப்பட்டது. (க0)

அகம் அதி.—கூடாநட்பு.

இனி னேனக்கூடாநட்புக் கூறகின்றார். அஃதாவது பகைமையான் அகத்தாற் கூடாதிருந்தே தமக்கு வாய்க்குமிடம் பெறுந்துணையும் புறத்தாற் கூடியொழுகுவார் நட்பு.

அஉக. சிரிடங் காணி னெறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு. க.

இ - ள். நேரா நிரந்தவர் நட்பு - கூடாதிருந்தே தமக்குவாய்க்குமிடம் பெறுந் துணையுங்கூடியொழுகுவார் நட்பு—சிரிடம் காணின் எறிதற்குப் பட்டடை - அது பெற்றால், அறவெறிதற்குத் துணையாய பட்டடையாம். எ - று.

எறியுமெல்லே வாராமுனெல்லாந் தாங்குவதுபோன்றிருந்து வந்தழி அறவெறி வீப்பதாய பட்டடைக்கும் அத்தன்மைத்தாய நட்பிற்குந் தொழிலொப்புமையுண்மை யான், அதுபற்றி அந்நட்பினைப் பட்டடையாகவுபசரித்தார். நீர்விடமென்றபாட மோதி முடிவிடமென்றலைப்பாருமுளர். (க)

அஉஉ. இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும். உ.

இ - ள். இனம்போன்று இனமல்லார் கேண்மை - தமக்குற்றார்போன்று உறுதா ரோடு உளதாய நட்பு—மகளிர் மனம்போல வேறுபடும் - இடம்பெற்றுற் பெண்பா லார் மனம்போல வேறுபடும். எ - று.

அவர்மனம் வேறுபடுதல் "பெண்மனம் பேதின் பெருப்பப்பேனென்னு—மெண்ணி லொருவன்*" என்பதனுளுமறிக. நட்பு வேறுபடுதலாவது பழையபடியாதல். இவையிரண்டுபோட்டாளும் கூடாநட்பினது குற்றங் கூறப்பட்டது. (உ)

அஉக. பலகல்ல கற்றக் கடைத்து மனகல்ல
ராகுதன் மாணர்க் கரிது. கூ.

இ - ள். கல்ல பல கற்றக்கடைத்தும் - நல்லன பலநூல்களைக் கற்றவிடத்தும்—மனம் நல்லர் ஆகுதல் மாணர்க்கு அரிது - அதனால் மனம்திருந்தி நட்பாதல் பகை வர்க்கில்லை. எ - று.

நல்லன மனக்குற்றங்கெடுப்பன. மனநல்லரெனச்சினேவினை முதன்மேனின்றது. நல்லராகுதல் செற்றம் வீடுதல். உள்ளே செற்றமுடையாரைக் கல்வியுடைமைபற்றி நட்பென்று கருதற்க வென்பதாம். (உ)

அஉச. முகத்தி னினிய நகாஅ வகத்தின்னு
வஞ்சரை யஞ்சப் படும். ச.

இ - ள். முகத்தின் இனிய நகாஅ அகத்து இன்னு வஞ்சரை - கண்டபொழுது முகத்தால் இனியவாகச் சிரித்து எப்பொழுதும் மனத்தாலின்னாராய வஞ்சரை—அஞ்சப்படும் - அஞ்சல்வேண்டும். எ - று.

நகையது வகைபற்றி இனியவென்றும், அகத்துச்செற்றம் நிகழவும் அதற்கு மறுதலையாய நகையைப் புறத்து வினைத்தலின் வஞ்சரென்றும், அச்செற்றங் குறிப்பதற்கருவியாய முகத்தானுந் தோன்றுமையின் அஞ்சுதல் செய்யப்படுமென்றுங் கூறினர். இவையிரண்டுபோட்டாளுங் குற்றத்திற்கேதுவாய அவர்கொடுமை கூறப்பட்டது. (ச)

அஉரு. மனத்தி னமையா தவரை யெனைத்தொன்றுஞ்
சொல்லினுற் றேறற்பாற் றன்று. ரு.

இ - ள். மனத்தின் அமையாதவரை - மனத்தாற் றம்மொடு மேவாதாரை—எனைத்தொன்றும் சொல்லினுல் தேறற்பாற்று அன்று - யாதொரு கருமத்தினுஞ் சொல்லாற் றெளிதன்முறைமைத்தன்று நீதிநூல். எ - று.

நீதிநூலென்பது அவாய்நிலையான் வந்தது. பகைமைமறைத்தற்பொருட்டுச் சொல்லுகின்ற வஞ்சனைச்சொல்லைச் செவ்விய சொல்லெனக்கருதி அவரைக்கருமங் களித்தெளிதல் நீதிநூன்முறைமையன்றென்பதாம். (ஏ)

அஉசு. நட்டார்போ னல்லவை சொல்லினு மொட்டார்சொ
லொல்லை யுணரப் படும். சு.

இ - ள். நட்டார்போல் நல்லவை சொல்லினும் - நட்டார்போன்று நன்மைபயஞ் சொற்களைச் சொன்னாயினும்,—ஒட்டார் சொல் ஒல்லை உணரப்படும் - பகைவர் சொற்கள் அது பயவாமை அச்சொல்லியபொழுதே யறியப்படும். எ - று.

சொல்லினுமெனவே, சொல்லாமையே பெற்றும். ஒட்டாராதலாற் றீமைபயத்தல் ஒருதலையென்பார், ஒல்லையுணரப்படுமென்றார். (ஐ)

---

* ஒளவையார்.

அஉஎ. சொல்வணக்க மொன்றுட்கட் கொள்ளற்க வில்வணக்கந்
தீங்கு குறித்தமை யான். எ.

இ - ள். வில்வணக்கம் தீங்கு குறித்தமையான் - வில்லினது வணக்கம் எற்ற வர்க்குத் தீமைசெய்தலைக் குறித்தமையால்,—ஒன்னர்கண் சொல்வணக்கம் கொள் ளற்க - பகைவர்மாட்டுப் பிறக்குஞ் சொல்லினது வணக்கத்தையும் தமக்கு நன்மை செய்தலைக்குறித்ததென்று கருதற்க. எ - று.

தம்வணக்கமன்றென்பது தோன்றச் சொல்வணக்கமென்றும், வில்வணக்கம் வேறுயினும் வணங்குதலொப்புமைபற்றி அதன்குறிப்பையேதுவாக்கியுங் கூறினர். வில்லியது குறிப்பு அவனியை வில்வணக்கத்தின்மேனிற்றலான், ஒன்னரது குறிப் பும் அவரியை சொல்வணக்கத்தின்மேலதாயிற்று. இதனுக் தீங்குகுறித்த வணக்க மென்றேகொண்டு அஞ்சிக்காக்க வென்பதாம். இவைமூன்றுபாட்டானும் அவரைச் சொல்லாற்றெளியற்கவென்பது கூறப்பட்டது. (எ)

அஉஅ. தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்னர்
அழுதகண் ணீரு மினைத்து. அ.

இ - ள். ஒன்னர் தொழுத கையுள்ளும் படை ஒடுங்கும் - ஒன்னர் குறிப்பை யுணரவல்லார்க்கு அவர் தொழுத கையகத்தும் படைக்கலம் மறைந்திருக்கும்;— அழுத கண்ணீரும் அனைத்து - அவரழுதகண்ணீரும் அவ்வாறே அதுமறைந்திருத்தற் கிடனும். எ - று.

தாயாட்பென்பதனைத் தங்கையானுங் கண்ணீரானுந் தேற்றிப் பின் கோறற்குவாய்க் கீரிருக்கின்ற படைக்கலம் உய்த்துணர்வுழித் தேற்றுகின்றபொழுதே அவற்றுள்ளே தோன்றுமென்பார், ஒடுங்குமென்றார். பகைவர் தம்மென்மைகாட்டித் தொழினுமழி னும், அவர் குறிப்பையே நோக்கிக் காக்கவென்பதாம் இதனால் அவரைச் செயலாற் றெளியற்கவென்பது கூறப்பட்டது. (அ)

அஉக. மிகச்செய்து தம்மெள்ளு வாரை நகச்செய்து
நட்பினுட் சாப்புல்லற் பாற்று. க.

இ - ள். மிகச் செய்து தம் எள்ளுவாரை - பகைமைதோன்றுமற் புறத்தின்கண் நட்பினை மிகச்செய்து அகத்தின்கட் டம்மையிகழும் பகைவரை—நட்பினுள் நகச் செய்து சாப் புல்லற்பாற்று - தாமும் அந்நட்பின்கண்ணே நின்று புறத்தின்கண் அவர் மிழும் வண்ணஞ்செய்து அகத்தின்கண் அதுசாம்வண்ணம் பொருந்தற்பான்மை புடைத்து அரசரீதி. எ - று.

நின்றென்பதனுஉம் அரசரீதியென்பதனுஉம் அவாய்நிலையான் வந்தன. அகனென்று புறனென்றுதல் ஒருவற்குத் தகாதெனினும் பகைவர்மாட்டாயிற் றருமென்பதரீதி னூற்றுணிபென்பார், அதன்மேல்வைத்துக் கூறினர். சாவவென்பதனிறுதிநிலை விகா சத்தாற்றொக்கது, "கோட்டின்வாய்ச்சாக்குத்திக" என்புழிப்போல. எள்ளுவாரைப் புல்லவெனக் கூட்டுக. (க)

அஉ0. பகைநட்பாங் காலம் வருங்கான் முகநட்
டகநட்பொரீஇ விடல். ஙக.

---

* கலி, முல்லை, இ.

இ - ள். பகை கப்பும் கரவும் வலுக்கும் - தம்மைவர் தமக்கு கட்டாகியொழுகுங்காலம் வந்தால்,—மூகம் கட்டி அகம் கட்பு ஓரீஇ மீடல்-தாமும் அவரோடு மூகத்தால் நட்புச்செய்து அகத்தால் அதனைவிட்டுப் பின்னதுவந்தவிர்க. எ - று.

அக்காலமாவது தம்மானும் பகையென்ற வெளிப்பட நீக்கலாகாதவளவு. இதனானே ஆனவெல்லாம் நீக்குவென்பது பெற்றும். இவையிரண்டுபோட்டாலும் அச்சட்பீடையொழுகுமாறு கூறப்பட்டது. (௧0)

அ ம் அதி.—பேதைமை.

இனி அச்சட்பீனை யெதிர்மறுத்துப் பகைமேகத்தாற் கூறியதொடங்கினார். அப்பகைதான் முத்தக்கடியுங்குற்றமன்மையினுளவாய வெருளியானும் காமத்தானும் வருவதாம். அவற்றுள் வெருளியான் வருவன ஐந்ததிகாரத்தானும் காமத்தான் வருவன ஐந்ததிகாரத்தானுங் கூறுவார், அவ்விரண்டற்கும் அடியாய மயக்கத்தை இரு வகைப்படுத்து, இரண்டதிகாரத்தாற் கூறுவான்றொடங்கி, முதற்கட்பேதைமை கூறுகின்றார். அஃதாவது யாதுமறியாமை.

அகக. பேதைமை யென்பதொன் றியாதெனி னேதங்கொண்
டீதியம் போக விடல். ௧.

இ - ள். பேதைமை என்பது ஒன்று - பேதைமையென்று சொல்லப்படுவது ஒருவனுக்கு எவ்வகுற்றங்களெல்லாவற்றினும் மிக்கதொன்று;—யாது எனின் ஏதம் கொண்டு ஊதியம் போகவிடல் - அதுதான் யாதென்று வினவின், தனக்குக்கேடு பயப்பனவற்றைக் கூடக்கொண்டு ஆக்கம் பயப்பனவற்றைக் கழலவிடுதல். எ - று.

கேடு வறுமை, பழி, பாவங்கள். ஆக்கம் செல்வம், புகழ், அறங்கள். தானே தன்னிருமையுங் கெடுத்துக்கோடலென்பதாம். (௧)

அகஉ. பேதைமையு ணெல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கட் செயல். உ.

இ - ள். பேதைமையுள் எல்லாம் பேதைமை-ஒருவனுக்குப் பேதைமையெல்லாவற்றுள்ளும் மிக்க பேதைமையாவது—கையல்லதன்கண் காதன்மைசெயல் - தனக்காகாத ஒழுக்கத்தின்கட் காதன்மை செய்தல். எ - று.

இருமைக்கும் ஆகாவென்று நூலோர் கடிந்த செயல்களே மிரும்பிச் செய்தலென்பதாம். இவையிரண்டுபோட்டாலும் பேதைமையதிலக்கணங் கூறப்பட்டது. (உ)

அகங. நாணமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணமை பேதை தொழில். ங.

இ - ள். நாணமை - நாணவேண்மேவற்றுக்கு நாணுவையும்—நாடாமை - நாடவேண்மேவற்றை நாடாமையும்—நார் இன்மை - யாவர்மாட்டும் முறித்தசொற்செயலுடைமையும்—யாதொன்றும் பேணுமை - பேணவேண்மேவற்றுள் யாதானுந்தானையும் பேணுவையும்—பேதை தொழில் - பேதையது தொழில். எ - று.

நாணவேண்மேவை பழி பாவங்கள். நாடவேண்மேவை கருமங்களிற்செய்வன தவிர்வன, முதிதன் சொன்னதுதல். பேணவேண்மேவை குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்க முதலாயின. இவை பேதைக்கு எஞ்ஞான்றுமியல்பாய் வருதலின், தொழிலென்றார்.()

அஃதா. ஒரி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில். ச.

இ - ள். ஒரி - மனமொழிமெய்களடங்குதற்கேதுவாய நூல்களே யோதியும்,—உணர்ந்தும் - அவ்வடக்கத்தான் வரும் பயனேபுணர்ந்தும்,—பிறர்க்கு உரைத்தும் - அதனையறியலுறப் பிறர்க்குரைத்தும்,—தான் டங்காப் பேதையின் - தான் அவை யடங்கி பொழுகாத பேதைபோல—பேதையார் இல் - பேதையார் உலகத் தில்லை. எ - று.

உம்மை முன்னும் கூட்டப்பட்டது. இப்பேதைமை தனக்கு மருந்தாய இவர்ரூற் றீராமையானும், வேற்றுமருந்தின்மையானும், பேதையிற்பேதையாரிலலென்னூர். இவையிரண்போட்டானும் பேதையது தொழில் பொதுவகையாற் கூறப்பட்டது. இனிச் சிறப்புவகையாற் கூறுப (ச)

அஃதி. ஒருமைச் செயலாற்றும் பேதை யெழுமையுந்
தான்புக் கழுந்து மளறு. ஞ.

இ - ள். பேதை - பேதையாயினன்—எழுமையும் தான் புக்கு அழுந்தும் அளறு-வரும்பிறவிகளெல்லாந் தான்புக்கழுந்தும் நிரயத்தினை—ஒருமைச் செயல் ஆற்றும் - இவ்வொருபிறப்புள்ளே செய்துகொள்ள வல்லனும். எ - று.

எல்லாப்பிறப்பும் எழாயடங்குதல் அறியப்பட்டமையின், முற்றும்மை கொடுத் தார். அழுந்துதற்கினைய நிரயம்; ஈண்டைப்பிறப்புக்களினும் கொடுவினைவயத்தால் அந்நிரயத்தன்பமேபுழுந்துவருதலின், எழுமையும் தான் புக்கழுந்து மளறென்னூர். முடிவில்காலமெல்லாம் தான் நிரயத்தின்பமுழுத்தற்கேதுவாய் கொடுவினைகளேயே யதிர்ந்து லெகாலத்தின்னே செய்தகோடல் பிறர்க்கரிதாகலின், ஆற்றுமென்னூர். இதனுன் அவன் மறுமைச்செயல் கூறப்பட்டது. (ஞ)

அஃகு. பொய்படு மொன்றே புனைபூணுங் கையறியாப்
பேதை விணைமேற் கொளின். கூ.

இ - ள். கை அறியாப் பேதை வினைமேற்கொளின் - செய்யுமுறைமை யறியாத பேதை ஒருகருமத்தை மேற்கொள்வனுயின்,—பொய்படும் ஒன்றே புனைபூணும் - அதுவும் புரைபடும், தானுந் தனைபூணும். எ - று.

புரைபடுதல் பின் ஆகாவகை உள்ளழிதல். ஒன்றேயென்பது எண்ணிடைச் சொல். அதனையுங்கெடுத்துத் தானுங்கெடுமென்பதாம். இதனுன் அவன் செல்வம் படைக்குமாறு கூறப்பட்டது. (கூ)

அஃக. எதிலா ராரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வ முற்றக் கடை. எ.

இ - ள். பேதை பெருஞ் செல்வம் உற்றக்கடை-பேதையாயினன் பெரிய செல் வத்தைத் தெய்வத்தானெய்தியவழி,—எதிலார் ஆரத் தமர் பசிப்பர் - தன்னேடோரி யையுமில்லாதார் நிறைய, எல்லாவிகையபுமுடைய தமராயினர் பசியாகிப்பர். எ - று.

எம்மை ரன்மையுஞ்செய்து சேடத்தருவியென்பதனேன்றப் பெருஞ்செல்வ மென்றும், அதனைப் படைக்குமாற்றலில்லாமையேன்ற உற்றக்கடையென்றும், எல்

லாம் பெறுதலேன்ற ஆரவெச்சம், உணவும்பெருமை தோன்றப் பரிப்பசென்றல் கூறினர். (எ)

அசுஅ. மைய லொருவன் களித்தற்றற் பேதைதன்
கையான் றுடைமை பெறின். அ.

இ - ள். பேதை தன்கை ஒன்று உடைமை பெறின்-பேதையாயினுன் தன்கைக் கண்ணே ஒன்றனையுடைமையாகப் பெற்றானெயின்,—மையல் ஒருவன் களித்தற்று - அவன் மயங்குதல் முன்னே பித்தினையுடையானெருவன் அம்மயக்கத்தின்மேலே மதவுண்டு மயங்கினற்போலும். எ - று.

பெறினெனவே, தெய்வத்தானன்றித் தன்னற்பெருமை பெற்றும். பேதைமையுஞ் செல்வக்களிப்பும் ஒருங்குடைமையால் அவன் செய்வன மையலும் மதக்களிப்பும் ஒருங்குடையான் செய்வனபோற் றலைதடுமாறுமென்பதாம். இவையிரண்டு பாட்டானும் அவன் செல்வமெய்தியவழிப் பயன்கொள்ளுமாறு கூறப்பட்டது. (அ)

அசுகூ. பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கட்
பீழை தருவதொன் றில். கூ.

இ - ள். பிரிவின்கண் தருவது பீழை ஒன்று இல்-பின் பிரிவுவந்துழி அஃதிருவர்க்குந் தருவதொருதன்பமில்லை;—பேதையார் கேண்மை பெரிது இனிது - ஆகலாற் பேதையாயினுர் தம்மூட்கொண்ட நட்பு மிகவினிது. எ - று.

நாடோறுந் தேய்ந்து வருதலின், தன்பக்காரராதாயிற்று. புகழ்வார்போன்று பழித்தவாறு. இதனுல் அவரது நட்பின்குற்றங் கூறப்பட்டது. (கூ)

அசுஉ. கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றுற் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல். கூ.

இ - ள். சான்றோர் குழாத்துப் பேதை புகல்-சான்றோரவையின்கட் பேதையாயினுன் புகுதல்—கழாக்கால் பள்ளியுள் வைத்தற்று-தாவல்ல மிதித்தகாலே இன்பந்தரும் அமளிக்கண்ணே வைத்தாற்போலும். எ - று.

கழுவாக்காலென்பது இடக்கரடக்கு. அதனுல் அவ்வமளியும் இழிக்கப்படுமாறு போல இவனுல் அவ்வவையும் இழிக்கப்படுமென்பதாம். இதனுல் அவன் அவையிடை இருக்குமாறு கூறப்பட்டது. (கூ)

அறிம் அதி.—புல்லறிவாண்மை.

இனி னேப்புல்லறிவாண்மை கூறுகின்றுர். அது புல்லிய வறிவினையுடைமை தன்மையென விரியும். அஃதாவது தான் செற்றறிவினனுயிருக்தே தன்னேப்போறி வினனுக மதித்து உயர்ந்தோர் கூறும் உறுதிச்சொற்கொள்ளாமை.

அசுக. அறிவின்மை யின்மையு ளின்மை பிறிதின்மை
யின்மையா வையா துலகு. க.

இ - ள். இன்மையுள் இன்மை அறிவின்மை - ஒருவனுக்கு இல்லாமை பலவற்றுள்ளும் மிக்கவில்லாமையாவது அறிவில்லாமை;—பிறிதின்மைஇன்மையா வையாது

உலகு - மற்றப்பொருளில்லாமையோவெனின், அதனை அப்பெற்றித்தாய இல்லாமையாகக் கொள்ளார் உலகத்தார். எ - று.

அறிவென்பது ஈண்டித் தன்மையற்றி நல்லறிவின்மேனின்றது. புல்லறிவாளர் செல்வமெய்தியவழியும் இம்மைமறுமைப்பய னெய்தாமையின் அதனை இன்மையென்றும், நல்லறிவாளர் வறுமையெய்தியவழியும் அஃதிழுக்காமையின் அதனை இன்மையா வையாதென்றுங் கூறினார். இதனைப் புல்லறிவினது குற்றங் கூறப்பட்டது. (உ)

அசஉ. அறிவிலா னெஞ்சுவந் தீதல் பிறிதியாது
பில்லை பெறுவான் றவம். உ.

இ - ள். அறிவிலான் நெஞ்சு உவந்து ஈதல் - புல்லறிவுடையான் ஒருவனுக்கு மன்றுவந்து ஒன்று கொடுத்தல் கூடுமாயின்,—பெறுவான் தவம் பிறிது யாதும் இல்லை - அதற்குக் காரணம் பெறுகின்றவனல்லனேயே, வேறொன்று மில்லை எ - று.

ஒரோவழி நெஞ்சுவந்தீதல்கூடலிற புல்லறிவாளரும் நல்வினைசெய்ப என்பார்க்குப், பெறுவான் வீழ்பொருளெய்தியான் போல்வதல்லது இம்மை சோக்கியாக மறுமை சோக்கியாக ஈகின்ற ரல்லரெனக் கூறியவாறு கூடாதாயின் அதற்குக்காரண மென்னுஞ் சொற்கள் அவாய்நிலையான் வந்தன. இதனால் அஃதுடையார் தம்மாட்டு நல்லன் செய்தலறிவாமை கூறப்பட்டது. (ஊ)

அசஊ. அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்குஞ் செய்த லரிது. ஊ.

இ - ள். அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை - புல்லறிவுடையார் தாமே தம்மை வருத்தும் வருத்தம்—செறுவார்க்கும் செய்தல் அரிது - அதுசெய்தற்குரிய ராய தம்பகைவர்க்குஞ் செய்தலரிது. எ - று.

பகைவர் தாம் அறிந்ததொன்றனைக் காலம் பார்த்திருந்து செய்வதல்லது வறுமை, பழி, பாவமுதலிய பலவற்றையும் எக்காலத்துஞ் செயமாட்டாமையின் அவர்க்குஞ் செய்தலரிதென்றார். இதனால் அவர் தம்மாட்டுந் தீயன செய்தலறிவின்மை கூறப்பட்டது. (எ)

அசச. வெண்மை யெனப்படுவ தியாதெனி னெண்ணுமை
யுடையம்யா மென்னுஞ் செருக்கு. ச.

இ - ள். வெண்மை எனப்படுவது யாது எனின் - புல்லறிவுடைமையென்று சொல்லப்படுவது யாதென்று வினவின்,—யாம் ஒண்மையுடையம் என்னும் செருக்கு - அது தம்மைத்தாமே யாம்நல்லறிவுடையமென்று நன்குமதிக்கும் மயக்கம். எ - று.

வெண்மையாவது அறிவுமுதிராமை. ஒண்மையெனச் சாரியப்பெயர் சாரணத் திற்காயிற்று. உலகத்தாரிகழ்தல் அறிந்துவைத்தும் அவ்வாறு மதித்தலான், மயக்க மென்றார். (அ)

அசடு. கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற
வல்லனுக மையந் தரும். டு.

இ - ள். கல்லாத மேற்கொண்டு ஒழுகல் - புல்லறிவாளர் தாம் கல்லாத நூல் களையுங் கற்றாராகத் தாம் மேலிட்டுக்கொண்டு ஒழுகுதல்,—கசடு அற வல்லனுக்கும்

ஐயம் தருஞ் - சேடறக் கற்றதொரு நூலுண்டாயின், அதன்கண்ணும் பிறர்க்கை யுற்றை யிலக்கும். எ - று.

வல்லதென் எழாவது இறுதிக்கட்டொக்கது. உண்டாயினென்பது அவாய்நிலை யான் வந்தது. ஐயம் அது வல்லரென்பதனை இவ்வாறுகொல்லோவென்பது. (இ)

அசை. அற்ற மறைத்தலோ புல்லறிவு தம்வயிற்
குற்ற மறைபா வழி. கூ.

இ - ள். தம் வயின் குற்றம் மறையாவழி - புல்லறிவாளர் தங்களிடமுள் குற்றம் கூறாமறிந்து கடியாராயின்,—அற்றம் மறைத்தலோ புல்லறிவு - ஆகையால் அற்ற மறைத்தாராகத் தம்மைக் கருதுதலும் புல்லறிவாம். எ - று.

குற்றமறைத்தலாவது அவற்றை இலவாக்குதல். மறைக்கப்படுவன பலவற்றுள் ளும் உயர்ந்தவற்றையெல்லாம் மறையாது தாழ்ந்ததொன்றினையே மறைத்து அவ்வள வாற் றம்மைமபு முடையவொழுக்கினராக மதித்தலும் புல்லறிவென்பதாம். இவை மூன்று பாட்டாலும் அவர் தம்மை வியத்தற்குற்றங் கூறப்பட்டது. (ஈ)

அசை. அருமறை சோரு மறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு. எ.

இ - ள். அருமறை சோரும் அறிவிலான் - பெறுதற்கரிய உபதேசப் பொருளைப் பெற்றாலும் உட்கொள்ளாது போக்கும் புல்லறிவாளன்—தானே தனக்குப் பெரு மிறை செய்யும் - அவ்வுறுதி யதியாமையாற் றானே தனக்கு மிக்க வருத்தத்தைச் செய்துகொள்ளும். எ - று.

சோருமென இடத்து நிகழ்பொருளின் மெழிலில் இடத்தின்மேனின்றது. மிக்க வருத்தம் பொறுத்தற்கரிய துன்பங்கள். இனி அருமறைசோரு மென்பதற்குப் பிற செல்லாம் உள்ளத்தடக்கப்படும் எண்ணத்தை வாய்சோர்த்து பிறர்க்குரைக்குமென் றுரைத்தார்; அது பேணுமை யென்னும் பேதைமையாவதன்றிப் புல்லறிவாண்மை யன்மையறிக. (உ)

அசை. எவவுஞ் செய்கலான் ருன்றேறு னல்வுயிர்
போஒ மளவுமோர் நோய். அ.

இ - ள். எவவும் செய்கலான் - புல்லறிவாளன் தனக்குறுதியாயவற்றை அறி யுடையார் சொல்லாநிற்கவுஞ் செய்யான்,—தான் தேறுன் - அதுவன்றித் தானுகவும் இவை செய்வனவென்றறியான்,—அவ்வுயிர் போமளவும் ஓர் நோய் - அவ்வுயிர் யாக்கையினீங்குமளவும் நிலத்திற்குப் பொறுத்தற்கரியதொரு நோயாம். எ - று.

உயிர் தான் உணர்தற்றன்மைத்தாயிருத்தும் நின்ற யாக்கையத்தான் மருடற் றன்மைத்தாய் வேறுபடுதலின் அவ்வுயிரென்றும், அதனினீங்கியபொழுதே அதற்கு இரண்டனுளொன்று கூடுதலிற் போமளவுமென்றும், குலமுழுதலிய பொறுத்தின்ற நிலத்திற்குப் பாவயாக்கை பெரும்பொறையாய்த் துன்பஞ்செய்தலின் ஒருநோயென் றுங்கூறினர். (அ)

அசை. மாணுறாற் காட்டுவான் ருன்மாணு மாணுதான்
கண்டானுந் தான்கண்ட வாறு. கூ.

இ - ள். காணுதாற் காட்டுவான் தான் காணுன் - தன்னை எல்லாமறிந்தானுக மதித்தலாற் பிறரால் ஒன்றறியுந் தன்மையிலாதானை அறிவிக்கப்புகுவான் அவனுற் பழிக்கப்பட்டுத் தான் அறியானுய் முடியும்;—காணுதான் தான் கண்டவாறு கண்டானும் - இனி அவ்வறியுந்தன்மையில்லாதான் கொண்டது விடாமையாற் முனறிந்தவாற்றுல் அதனை அறிந்தானுய் முடியும் எ - று.

புல்லறிவாளர்க்கு நல்லறிவு கொளுவுதல் ஒருவாற்றுனும் இயைவதன்றென்பதாம். (க)

அறிவு. உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும். கo

இ - ள். உலகத்தார் உண்டு என்பது இல் என்பான் - உயர்ந்தோர் பலரும் உண்டென்பதோர் பொருளைத் தன் புல்லறிவாளரில்லையென்று சொல்லுவான்—வையத்து அலகையா வைக்கப்படும் - மகனென்று கருதப்படான், வையத்துக் காணப்படுவதோர் பேயென்று கருதப்படும். எ - று

கடவுளும் மறுபிறப்பும் இருவினைப்பயனும் முதலாக அவர் உளவென்பன பல வேறுஞ் சாதிபற்றி உண்டென்பதென்றும், தானே வேண்டிய கூறலால் ஒப்பும் வடிவால் ஒவ்வாமையுமுடைமையிற் றன்யாக்கை கரதல மகளுள்யாகையுட்டோன்று தல்லல அலகையென்றுங் கூறினர். இவை நான்குபாட்டானும் உறுதிசொற் கொள்ளாமையது குற்றங் கூறப்பட்டது. (கo)

அகம் அதி.—இகல்.

இனி அவற்றுன் வரும் வெகுளிகாமங்களுள் அரசாகு வெகுளி பெரும்பான்மைத்தாகலின், அதனுன் வருவன கூறுவான் றொடங்கி, முதற்கண் இகல் கூறுகின்றார். அஃதாவது இருவர் தம்முட் பொருது வலிதோலுதலுகேதுவாய மாறுபாடு.

அறிவு. இகலென்ப வெல்லா வுயிர்க்கும் பகலென்னும
பண்பின்மை பாரிக்கு நோய். க.

இ - ள். எல்லா உயிர்க்கும் பகல் என்னும் பண்பு இன்மை பாரிகரும் நோய் - எல்லாவுயிர்கட்கும் பிறவுயிர்களோடு கூடாமையென்னுந் தீக்குணத்தை வளர்க்குங் குற்றம்—இகல் என்ப - இகலென்று சொல்லுவர் நூலோர். எ - று.

மக்களோடும் விலங்குகளோடொப்பிப்பதென்பது தோன்ற எல்லாவுயிர்க்குமென்றும், பகுதிக்குணத்தை இடைநின்று வினைத்தலிற் பகலென்னும் பண்பின்மையென்றுங் கூறினர். நற்குணமின்மை அருத்தாபத்தியாற் றீக்குணமாயிற்று. இதனுல் இகலது குற்றங் கூறப்பட்டது. (க)

அறிவு. பகல்கருதிப் பற்ரு செயினு மிகல்கருதி
பின்னுசெய் பாமை தலை. உ.

இ - ள். பகல் கருதிப் பற்ரு செயினும் - தம்மொடு கூடாமையைக் கருதி ஒருவன் வெறுப்பன செய்தானுயினும்,—இகல் கருதி இன்னு செய்யாமை தலை - அவனே மாறுபடுதலைக் குறித்துத் தாமவனுக்கு இன்னுதவற்றைச செய்யாமை உயர்ந்தது. எ - று.

செய்யத் தகையமைவளராத் தாந்தாழ்த்துவரலானும், ஒழியின் அப்பற்றுதன தாமே யோய்ந்துபோகத் தாம் ஒய்வெரலானும், செய்யாமை நலமென்றார். பற்றுதலென் பது விகாரமாயிற்று. (க)

அறிக. இகலென்னு மெவ்வநோய் நீக்கிற் றவலில்லாத்
தாவில் விளக்கந் தரும். க.

இ - ள். இகல் என்னும் எவ்வ நோய் நீக்கின் - மாறுபாடென்று சொல்லப் படுகின்ற துன்பத்தைச்செய்யு நோயை ஒருவன் தன்மனத்தினின்று நீக்குமாயின்,—தவல் இல்லாத் தாவில்விளக்கம் தரும் - அவனுக்கு அழிக்குதல் எஞ்ஞான்றும் உளதாற் கேதுவாய புகழைக் கொடுக்கும். எ - று.

தவலில்லாமை அருத்தாபத்தியான் அப்பொருட்டாயிற்று. தாவில்விளக்கம் வெளிப்படை. யாவருண்பராவர், ஆகவே எல்லாச்செல்வமுமெய்தக் கொடை முதலிய காரணங்களாற் புகழ்பெறுமென்பதாம். (க)

அறிச. இன்பத்து ளின்பம் பயக்கு மிகலென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின். ச.

இ - ள். இகல் என்னும் துன்பத்துள் துன்பம் கெடின் - மாறுபாடென்று சொல்லப்படுகின்ற துன்பங்களெல்லாவற்றினும் மிக்க துன்பம் ஒருவனுக்கில்லையா யின்,—இன்பத்துள் இன்பம் பயக்கும் - அவ்வின்மை அவனுக்கு இன்பங்களெல்லாவற் றினும் மிக்கவின்பத்தினைக் கொடுக்கும். எ - று

துன்பத்துட்டுன்பம் பலரொடு பொருது வலிதொலைதலான் யாவர்க்குமெளியதா யுறுவது. அதனை யிடையின்றியே பயத்தலின், இகலென்னுமென்றார். இன்பத்துளின் பம் யாவருஞ்பாகலின் எல்லாப்பயனுமெய்தியுறுவது. (ச)

அறிரு. இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்குந் தன்மை யவர். ரு.

இ - ள். இகல் எதிர் சாய்ந்து ஒழுக வல்லாரை - தம்முள்ளத்து மாறுபாடு தோன்றியவழி அதனையேற்றுக்கொள்ளாது சாய்ந்தொழுகவல்லாரை,—மிகல் ஊக் கும் தன்மையவர் யார் - வெல்லக்கருதுந்தன்மையுடையார் யாவர்! எ - று.

இகலெயொழிந்தொழுகல் வேந்தர்க்கு எவ்வாறாயினும் அரிதாகலின் வல்லாரை யென்றும், யாவர்க்கும் நண்பாகலின் அவரை வெல்லக் கருதுவார் யாவருமில்லை யென்றுங் கூறினர். இவை நான்குபாட்டானும் இகலாதார்க்கு வரும் நன்மை கூறப்பட்டது. (ஞ)

அறிக. இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை
தவலுங் கெடலு நணித்து க.

இ - ள். இகலின் மிகல் இனிது என்பவன் வாழ்க்கை - பிறரொடு மாறுபடுதற் கண் மிகுதல் எனக்கு இனிதென்ற அதனைச்செய்வானது உயிர்வாழ்க்கை—தவ லும் கெடலும் நணித்து - பிழைத்தலும் முற்றக்கெடுதலுஞ் சேய்தாகுமுளவாம். எ - று.

மிகுதல் மேன்மேலுயர்தல். இனிதென்பது தான் வேறல்குறித்தல். பிழைத்தல் வறுமையானின்னாதாதல். முற்றக்கெடுதல் இறத்தல். இவற்றுள் நணித்தென்

பதினைத் தலைத்தலைப்பட்டி, உம்மையினை எதிரதும் இரண்டதும் தழுவிய தெச்சவும்மை சம்பந்தமாகிய. பொருட்கேடும் உயிர்க்கேடும் அப்பொழுதேயுளவாமென்பதனால். (உ)

அறிவ. மிகன்மேவன் மெய்ப்பொருள் காணு நிகன்மேவ
லின்னு வறிவி னவர். எ.

இ - ன். இகல் மேவல் இன்னு அறிவினவர் - இகலோடு மேவுதலையுடைய இன்னுதவறிவினையுடையர்—மிகல் மேவல் மெய்ப்பொருள் காணுர் - வெற்றி பொருந்துதலையுடைய நிதானப்பொருளே யறியமாட்டார். எ - று.

இன்னுவறிவு தமக்கும் பிறர்க்குந் தீங்கு பயக்குமறிவு. வெற்றி வழிகின்றார்க்கு உளதாவது. காணப்படும்பயத்ததாகலின், மெய்ந்நூலெனப்பட்டது இகலால் அறிவு கலங்குதலின், காணுரென்றார். இவையிரண்டொட்டாலும் இகலினுக்கு வரும் தீங்கு கூறப்பட்டது. (ஏ)

அறிஅ. இகலிற் கெதிர்சாய்த லாக்க மதனை
மிகலுக்கி னாக்குமாங் கேடு. அ.

இ - ன். இகலிற்கு எதிர் சாய்தல் ஆக்கம் - தன்னுள்ளத்து மாறுபாடு தோன்றியவழி அதனை யெதிர்தலையொழிதல் ஒருவனுக்கு ஆக்கமாம்;—அதனை மிகல் ஊக்கின்கேடு ஊக்குமாம் - அது செய்யாது அதன்கண்மிகுதலை மேற்கொள்வானுயிற் கேடுதன்கண் வருதலை மேற்கொள்ளும். எ - று.

எதிர்தல் எற்றுக்கோடல்.சாய்தலொழுதே வருதலின், சாய்தல் ஆக்மென்றார். இகலிற்கெனவும் அதனையெனவும் வர்தன லேற்றுமைமயக்கம். (அ)

அறிக இகல்காணு னாக்கம் வருங்கா லதனை
மிகல்காணுங் கேடு தரற்கு. கூ.

இ - ன். ஆக்கம் வருங்கால் இகல் காணுன் - ஒருவன் தன்க ணாக்கம் வரும்வழிக் காரணமுண்டாயினும் இகலை நினையான்,—கேடு தரற்கு அதனை மிகல் காணும் - தனக்குக் கேடுசெய்து கோடற்குக் காரணமின்றியும் அதன்கண் மிகுதலை நினைக்கும். எ - று.

இகலான் வருங்கேடு பிறரானன்றென்பது தோன்றத் தரற்கென்றார். நான்காவதும் இரண்டாவதும் ஏழாவதன்கண் வர்தன. ஆக்கக்கேடெட்டு மூன்றடைப்பன இகலின்று இன்மை உண்மைகளென்பதாம். (கூ)

அகூ0. இகலான் மின்னுத வெல்லா நகலான்
னன்னய மென்னுஞ் செருக்கு. க0.

இ - ன். இகலான் இன்னுத எல்லாம் ஆம் - ஒருவனுக்கு மாறுபாடொன்றனே இன்னுதனவெல்லாம் உளவாம்;—நகலான் நன்னயம் என்னும் செருக்கு ஆம் - ஈட்டொன்றனே கல்ல நீதியென்னும் பெருஞ்செல்வம் உளதாம். எ - று.

இன்னுதன வறுமை, பழி, பாவமுதலாயின. நகல் மகிழ்தல். நகலென்பதனுக்கு மிகழ்ச்சியென்பதனேடும் தத்தங்காரணங்கட்காயின. நயமென்னுஞ் செருக்கினைக் காரியத்தைக் காரணமாக உபசரித்தார். இவைமூன்றுபாட்டாலும் அல்லருமையும் கூறப்பட்டது (க0)

அரசம் அறி.—பகைமாட்சி.

அரசனாவது அறிவின்மை முதலிய குற்றங்களுடையனாய்ப் பகையை மாட்சிப் படித்தல். அரசர்க்கு எவ்வாற்றானும் பகையின்மை கூடாமையின் மேற்பொதுவகையான் விலக்கப்பட்ட இகலை ஈண்டுச் சிறப்புவகையான் விதிக்கின்றாராகலின், இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

அகக. வலியார்க்கு மாறேற்ற லோம்புக வோம்பா
மெலியார்மேன் மேக பகை. க.

இ - ள். வலியார்க்கு மாறு ஏற்றல் ஓம்புக-தம்மின்வலியார்க்குப் பகையாயெதிர் தலை ஒழிக;—மெலியார்மேல் பகை ஓம்பா மேக - ஏன மெலியார்க்குப் பகையாதலை ஒழியாது விரும்புக. எ - று.

வலியானென்புழித் தானைவலியு மடங்கலின், மெலியானென்புழித் தானைவலியின்மையு மெடுத்தோதப்படும் அத்தானைதான் படை பொருண்முதலிய வேற்றுமைத்தானையும் கல்லறிவுடைமை நீதிநூல்வழியொழுகன் முதலிய ஒற்றுமைத்தானையுமென விரண்டாம். அவ்விரண்டுமில்லாரை வெல்வார்க்கு வலிதாலியாமையின் அவரோடு பகைத்தல் விதிக்கப்பட்டது. இங்ஙனோக்காகிய இதனுட் பகைமாட்சி பொதுவகையாற் கூறப்பட்டது (க)

அகஉ அன்பில னுன்ற தியையிலன் ருன்றுவ்வா
னென்பரியு மேதிலான் றப்பு. உ.

இ - ள். அன்பு இலன் - ஒருவன் தன்சுற்றத்தின்மேலன்பிலன்,—ஆன்ற தானை இலன் - அதுவேயன்றி வலிய தானையிலன்,—தான் தவ்வான்-அதன்மேற் ருன்வலியிலன்,—எதிலான் றப்பு என் பரியும் - அப்பெற்றியான் மேல்வந்த பகைவன் வலியினை யாங்ஙனந்தோலக்கும்! எ - று.

சுற்றமும் இருவகைத்தானையும் தன்வலியுமிலனாகலின், அவன்மேற் செல்வார்க்கு வலி வனாவதன்றித் தோலியாதென்பதாம். தவ்வான் தவ்வினைச் செய்யான். (உ)

அகஊ. அஞ்சு மறியா னமைவில னீகலான்
றஞ்ச மெளியன் பகைக்கு. ஊ.

இ - ள். அஞ்சும் - ஒருவன் அஞ்சவேண்டாதவற்றிற்கு அஞ்சாதிற்கும்,—அறியான் - அறியவேண்டுமெவற்றை யறியான்,—அமைவு இலன் - பிறரோடு பொருந்தாமிலன்,—ஈகலான் - இவற்றின்மேலும் யாவர்மாட்டும் இவறன்மாலையன்,—பகைக்குத் தஞ்ச மெளியன் - இப்பெற்றியான் பகைவர்க்கு மிகவெளியன். எ - று.

தஞ்சமெளியனென்பன ஒருபொருட்பன்மொழிக. இந்நான்கு குற்றமுமுடையான் பகையின்றியமையாமையாகலின் தஞ்சமெளியனென்றார். (ஊ)

அகஎ. நீங்கான் வெருவி நிறைபில னெஞ்ஞான்றும்
பாங்கணும் யார்க்கு மெளிது. எ.

இ - ள். வெருவி நீங்கான் - ஒருவன் வெருவியினீங்கான்,—நிறை இலன் - அதுவேயன்றித் தான் நிறையுடையனல்லன்,—எஞ்ஞான்றும் யாங்கணும் யார்க்கும் எளிது - அவன்மேற்சேறல் எக்காலத்தும் எவ்விடத்தும் யார்க்கு மெளிது. எ - று.

---

* தஞ்சம் எனவே பெண்மைப் பொருட்டே. தொல்காப்பியம், சொல், கஉஉ, நச்சினார்க்கினியம்.

* நிறை மறைபிரதியாசை. வெருட்டுமாயைகளாலும், மறை வெளிப்படுத்துனரும், மேற்செல்வார்க்குக் காலமும் இடனும் வலியுமறிந்து சேறல்வேண்டுதலியிற்று. இனி இனிதென்ற பாடமோதி அவன்பகைமை இனிதென்றுரைப்பாருமுளர்.

அகரு. வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க் கினிது. இ.

இ - ள். வழி நோக்கான் - ஒருவன் நீதிநூலையோதான்,—வாய்ப்பன செய்யான் - அது விதித்ததொழில்களைச் செய்யான்,—பழி நோக்கான் - தனக்கு வரும் பழியைப் பாரான்,—பண்புமிலன் - தான் பண்புடையனல்லன்,—பற்றார்க்கு இனிது - அவன் பகைவர்க்கு அப்பகைமையினிது. எ - று.

தொல்லோரடிப்பட வழங்கிவந்ததாகலான் வழியென்றும், தப்பாது பயன்படுதலின் வாய்ப்பனவென்றும் இக்குற்றங்களுடையான் ருணையழிதலிற் பற்றார்க்கினியதென்றுங் கூறினர். (இ)

அகரூ. காணுச் சினத்தான் கழிபெருங் காமத்தான்
பேணுமை பேணப் படும். கூ.

இ - ள். காணுச் சினத்தான் - தன்னையும் பிறரையுந் தானறியாமைக்கேதுவாகிய வெகுளியையுடையான் யாவன்,—கழி பெருங்காமத்தான் - மேன்மேல் வளராநின்ற மிக்க காமத்தையுடையான் யாவன்,—பேணுமை பேணப்படும் - அவரது பகைமை விரும்பிக் கொள்ளப்படும். எ - று.

காணுதலெனமென்பது விகாரமாயிற்று. முன்னேனுக்கு யாவரும் பகையாகலானும், ஏனேனுக்குக் காரியந் தோன்றுமையானும், தாமே யழிவதென்பது பற்றி, இவர் பேணுமை பேணப்படுமென்றார். (ஈ)

அகரா. கொடுத்துங் கொளல் வேண்டுமன்ற வடுத்திருந்து
மாணுத செய்வான் பகை. எ.

இ - ள். அடுத்து இருந்து மாணுத செய்வான் பகை - வினையைத் தொடங்கியிருந்து அதற்கேலாதன செய்வான்பகைமையை—கொடுத்தும் கொளல் மன்றவேண்டும் - லெபொருளழியக்கொடுத்தாயினுங் கோடல் ஒருதலையாகவேண்டும். எ - று.

ஏலாதன மெலியனுய்வைத்துத்தணிதலும், வலியனுய்வைத்துத் தணிதலும் முதலாயின. அப்பொழுது அதனுற் லெபொருளழியினும் பின் பலபொருளெய்தற்கு ஐயமின்மையின், கொளல் வேண்டுமென்றவென்றார். இவையாறுபாட்டானும் அது நெறிப்புவகையாற் கூறப்பட்டது. (உ)

அகஅ. குணனிலனுய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க்
கினனிலனு மேமாப் புடைத்து. அ.

இ - ள். குணன் இலனுய்க் குற்றம் பலவாயின் இனன் இலனும் - ஒருவன் குணனென்னுமிலனுய் உடைய குற்றம் பலவாயவழி, அவன் தினையிலனும்;—மாற்றார்க்கு ஏமாப்பு உடைத்து - அவ்விலனுதலே அவன்பகைவர்க்குத் தினையாதலையுடைத்து. ஈ - று.

---

* நிறைமறைபிரதியாசை. எனி, கொற்கை, க.

குன்றும் இடமாட்டியுட்சொல்லியவா. குற்றம் இல்லதிகாரத்துச் சொல்லியன வும் சுற்றமுதலாயினவும். தானை சுற்றம், கட்பு, பொருள், படைமுதலாயின பகைவர்க்கு இயற்றலுளதாம் பயன்றானே புனதாமாதலின், எமப்புலவனென்னு ரர். இலனெனினும் செய்தெனச்சம் உடையனெனவந்த பெயரெச்சக்குறிப்புச் சொல்லாயது. (அ)

அடக. சேறலார்க்குச் சேணிகவா வின்ப மதிலா
வஞ்சும் பகைவர்ப் பெறின். கூ

இ - ள். அறிவு இலா அஞ்சும் பகைவர்ப் பெறின் - நீதியையறிதலில்லாத அஞ்சும் பகைவரைப் பெற்றால்,—சேறலார்க்குச் சேண் இன்பம் இகவா-அவரைச் சேறலார்க்கு உயர்ந்தவின்பங்கள் நீங்கா. எ - று.

உபாயமறிதலும் அறிந்தாற் செய்தமுடிக்கும் திண்மையுமில்லாதாரே பகைவராதல் கூடாதனமயிற் பெறினென்றும், அவரையறிந்து மேரசென்றபொழுதே பகையின் மையுஞ் செல்வமும் ஒருங்கேயெய்தலிற் சேணுடையின்பங்கள் இகவாவென்றும் கூறினர். (க)

அஎ0 கலலான் வெகுளுஞ் சிறபொரு ளெஞ்ஞான்று
மொல்லாவே யொல்லா தொளி. கூ0.

இ - ள். கல்லான் வெகுளும் சிறுபொருள் ஒல்லாவே - நீதிநூலைக் கல்லாதானெடு பகைத்தலான் வரும் எளியபொருளே மேவாதானை—எஞ்ஞான்றும் ஒளி ஒல்லாது - எஞ்ஞான்றும் புகழ்மேவாது. எ - று.

சிறுபொருள் முயற்சி சிறிதாய பொருள். நீதியறியாதானை வேறல் எளிதாயிருக்கவும் அது மாட்டாதானை வெற்றியான் வரும் புகழ் கூடாதென்பதாம்; ஆகவே, இச் சிறிய முயற்சியாற பெரிய பயனெய்துகவென்றவாறுமாயிற்று. இதற்குப் பிறரெல்லாம் அதிகாரத்தோடு மாறுதன்மேலும் ஒரு பொருட்டொடர்புபடாமலுரைத்தார். இவை மூன்றுபாட்டாலும் அதனினைய பயன் கூறப்பட்டது. (கூ0)

அஅம் அதி.—பகைத்திறந்தெரிதல்.

அஃதாவது மாறுத பகையை ஆக்குதற்குரியதும், முன் ஆகின்ற பகைகளுள் நட்பாக்கற்பாலதும், தொகுமலாக்கற்பாலதும், அவற்றின்கட்செய்வதும், வினைக்கேற்பாலதன்கட் செய்வனவும், தனியும் பருவமும், தனியாக்காற்பயிழுக்கும் என்று இத்திறங்களை ஆராய்தல். இரட்டிறமொழிதலென்பதனாற் பகையது திறமும் பகையிடத்தார்க்குந் திறமுமென விரிக்கப்பட்டது. இவையெல்லாம் மாறுப் பகையவாகலின், இது பகைமாட்சியின்பின் வைக்கப்பட்டது.

அஎக. பகையென்னும் பண்பி லதனி யொருவ
னகையேயும்வேண்டற்பாற் றன்று. க.

இ - ள். பகை என்னும் பண்பு இலதனை - பகையென்று சொல்லப்படுந் தீமை பயப்பதனை—ஒருவன் நகையேயும் வேண்டற்பாற்ற அன்று - ஒருவன் விளையாட்டின் கண்ணேயாயினும் விரும்புதலியற்கைத்தன்று நீதிநூல். எ - று.

மாறுதபகையையாக்கிக்கோடல் எவ்வாற்றானும் தீமையேயபத்தலிற் பண்பில தென்றும், அதனை விளையாட்டின்கண் வேண்டினுஞ் செற்றமே விளர்த்து மெய்யாமா

களின் கையேயுமென்றும், வேண்டாமை தொல்லையோரது தனிவென்பார் நீதி நூன்மேல்வைத்துங் கூறினார். அப்பெயர் அவாய்நிலையான் வந்தது. (க)

அளவு வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை உ.

இ - ன். வில் ஏர் உழவர் பகை கொளினும் - ஒருவன் வில்லை ஏராகவுடைய உழவரோடு பகைகொண்டானாயினும்,—சொல் ஏர் உழவர் பகை கொள்ளற்க - சொல்லை ஏராகவுடைய உழவரோடு பகை கொள்ளாதொழிக. எ - று.

சொல் ஆருபெயரான் நீதிநூன்மேனின்றது. வீரம் சூழ்ச்சியென்னும் ஆற்றல்களுள் வீரமேயுடையாரோடு பகைகொண்டாற் கேடெவருங்கூறுதலுண்மையின், வந்ததாயினுந் தனக்கேயாம், ஏனைச் சூழ்ச்சியுடையாரோடாயிற் றன்வழியிலுள்ளார்க்குந் தப்பாது வருதலின், அது கொள்ளினும் இது கொள்ளற்க வென்றார். உம்மையான் அதுவுமாகாமை பெறுதும். இரண்டு மூடையாரோடு கொள்ளலாகாமை சொல்ல வேண்டாவாயிற்று. உருவகவிசேடம். (உ)

அளவு எழுற் றவரினு மேமுழை தமியனுய்ப்
பல்லார் பகைகொள் பவன். ஊ.

இ - ன். தமியனுய்ப் பல்லார் பகைகொள்பவன் - தான் தனியனுய்வைத்துப் பலரோடு பகைகொள்வான் – எழுற்றவரினும் ஏழை - பித்தற்றாரினும் அறிவிலன். எ-று.

தனிமை சுற்றம் நட்புப் படைமுதலியவின்மை. மயக்கத்தால் ஒப்பாராயினும் எழுற்றவர் அதனுற்றீங்கெய்தாமையின், தீங்கெய்துதலுமுடைய இஃதே அவரினும் ஏழையென்றார். தீங்காவது தூணைபுள்வழியும் வேறல் ஐயமாயிருக்க அஃதின்றியும் பலரோடு பகைகொண்டு அவரால் வேறுவேறு பொருதற்கண்ணும் ஒருபகு பொருதற்கண்ணும் அழிந்தே விடுதல். இவையுமன்றுபாட்டாலும் பகைகோடற்குற்றம் பொதுவினுஞ் சிறப்பினுங் கூறப்பட்டது. (ஊ)

அளவு. பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
நகைமைக்கட் டங்கிற் றுலகு. எ.

இ - ன். பகை நட்பாக் கொண்டு ஒழுகும் பண்புடையாளன் தகைமைக்கண் - வேண்டியவழிப் பகையை வேறுபடுத்துத் தனக்கு நட்பாகசெய்துகொண்டொழுகும் இயல்பினையுடைய அரசனது பெருமையுளளே—தங்கிற்று உலகு - அடங்கிற்று இவ்வுலகு. எ - று.

வேண்டியவழியென்பது ஆக்கத்தான் வந்தது. வேறுபடுத்தல் பகைநிலைமையினீக்குதல். ஒழுகல் நீதிவழியொழுகல். பெருமை பொருள், படையென இருவகைத்தாயவாறறல். அதன்வழித்தாதற்கு எஞ்ஞான்றுந் திரிபின்மையின், அத்தகுணவுபற்றித் தங்கிறதென்றார். (எ)

அளவு. தன்றுணை யின்றிற் பகையிரண்டாற் றுணிதருவ
லின்றுணையாக் கொள்கவற்றி னொன்று. ஏ.

இ - ன். தன்றுணை இன்று - தனக்குதவுந் துணையேயெனின் இல்லை,—பகை இரண்டு - கலிவுசெய்யும் பகையேயெனின் இரண்டு,—ஒருவன் தான் அவற்றின்

ஆது இன்றுணையாக் கொள்க - அல்லனமாய் நின்றவழி ஒருவனுயிய தான் அப்பகை ஆட்டனுட் பொருந்தியதொன்றை அப்பொழுதைக்கு இனிய துணையாகச் செய்து கொள்க. எ - று.

பொருந்தியது எனையதனை வேறற்கு ஏற்றது. அப்பொழுது அவ்வெல்லும் பொழுது திரிபின்றுகச் செய்துகொள்கவென்பார், இன்றுணையாவென்றார். ஆல்கள் இரண்டும் இவையிரண்டோட்டானும் நட்பாக்கற்பாலது கூறப்பட்டது. (இ)

அஎக. தேறினுந் தேறு விடினு மழிவின்கட்
டேறுவ பாஅன் விடல். கூ.

இ - ள். தேறினும் தேறுவிடினும் - பகைவனை முன் தெளிந்தானுயினும் தெளிந்தில்லனுயினும்—அழிவின்கண் தேறுன் பகான் விடல் - தனக்குப் புறத்தொருவினை மற்றுழுவந்தழிக்கூடாதென்கிற இவையே விட்டுவைக்க. எ - று.

முன்னெளிந்தானுயினும் அப்பொழுது கூடாதொழிகவென்றது, உள்ளாய்நின்று கேடுத்தலேக்கி. தெளிந்திலனுயினும் அப்பொழுது நீக்காதொழிகவென்றது, அவ்வழிவிற்குத் துணையாதலேக்கி. இதனுன் கொதுமலாக்கற்பாலது கூறப்பட்டது. (ஈ)

அஎஎ. நோவற்க நொந்த தறியார்க்கு மேவற்க
மெண்மை பகைவ ரகத்து. எ.

இ - ள். நொந்தது அறியார்க்கு நோவற்க - நொந்ததனைத் தாமாகவறியாத கட்டார்க்குத் தன்னேவு சொல்லற்க;—மெண்மை பகைவரகத்து மேவற்க - வலியின்மை பார்த்திருக்கும் பகைவர்மாட்டு அவ்வலியின்மையை மேலிட்டுக்கொள்ளற்க. எ - று.

நோவென்னும் முதனிலைத்தொழிற்பெயர் ஈண்டு அது சொல்லுதற்கணுயிற்று. பகைவர்கட் டலிர்வது கூறுவார், நட்டார்கட் டலிர்வதும் உடன்கூறினர். இதனுல் அவ்விருபகுதிக்கண்ணுஞ் செய்வது கூறப்பட்டது. (எ)

அஎஅ. வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கட் பட்ட செருக்கு. அ.

இ - ள். வகை அறிந்து தற்செய்து தற்காப்ப - தான் வினைசெய்யும்வகையை அறிந்து அது முடித்தற்கேற்பத் தன்னைப் பெருக்கி மறவி புகாமற் றன்னைக்காக்கவே,—பகைவர்கண் பட்ட செருக்கு மாயும் - தன்பகைவர்மாட்டெதாய களிப்புக் கெடும். எ - று.

வகை வலியனுய்த் தானெதிரே பொருமாறும், மெலியனுயவளவிற் போர் விலக்குமாறும் முதலாயின. பெருக்கல் பொருள் படைகளாற் பெருகச்செய்தல். களிப்பு இவற்றுன் வேறுமென்றெண்ணி மகிழ்ந்திருத்தல். இவ்விறருதலறிந்து தாமே அடங்குவரென்பதாம். இதனுற் களைதற்பாலதன்கட் செய்வன கூறப்பட்டது. (அ)

அஎக. இனைதாக முண்மரங் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து. கூ.

இ - ள். முன் மரம் இனைதாகக் கொல்க - களையவேண்டுவதாய முண்மரத்தை இனைதாயிலேமைக்கட்களைக;—காழ்த்தவிடத்துக்களையுநர் கைகொல்லும்-அன்றியே முதிர்ந்த நிலேமைக்கட் களையலுறிற் களைவார்கையினை அதுதான்களையும். எ - று.

கனையப்படுவதாய தம்பகையை அதுமெலிதால காலத்தே கனைக அன்றியே வலி தாயகாலத்துக் கனையறிந் தம்மை அதுதான் கனையுமென்பது தோன்ற கிள்ளை யின், இது பிறிதுமொழிதல். இதனாற் கனையும்பருவம் கூறப்பட்டது. (க)

அ அ. உயிர்ப்பு வளரல்லர் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் கிளைக்கலா தார். கா

இ - ன். செயிர்ப்பவர் செம்மல் கிளைக்கலாதார் - தம்மொடு பகைப்பாரது தருக் கினைக் கெடுக்கலாயிருக்க இகழ்ச்சியான் அது செய்யாதவரசர்—உயிர்ப்ப வளரல் லர் மன்ற - பின் உயிர்க்குமாத்திரத்திற்கும் உளரல்லர் ஒருதலையாக. எ - று.

அவர் வலியராய்த் தம்மைக் கனைதல் ஒருதலையாகலின், இறந்தாரேயாவரென் பதாம். அவருயிர்த்த துணையானே தாமிறப்பரெனினுமமையும். இதனாற் கனையா வழிப்படுமிழுக்குக் கூறப்பட்டது. (கo)

அகம் அதி.—உட்பகை.

அஃதாவது புறப்பகைக்கு இடனுக்கிக் கொடுத்து அது வெல்லுந் துணையும் உள்ளாய்நிற்கும் பகை. இதனும், கனையப்படுவதன் பாலதாகலின், பகைத்திறத்தெரி தலின்பின் வைக்கப்பட்டது.

அஅக. நிழனீரு மின்னுத மின்னு தமர்நீரு
மின்னுவா மின்னு செயின். க.

இ - ன். நிழல் நீரும் இன்னுத இன்னு - ஒருவனுக்கு அனுபவிக்கவேண்டுவன வாய நிழலும் நீரும் முன் இனியவேனும் பின் நோய்செய்வன இன்னுவாம்;—தமர் நீரும் இன்னுசெயின் இன்னுவாம் - அதுபோலத் தழுவவேண்டுவனவாய தமரியல்பு களும் முன் இனியவேனும் பின் இன்னுசெய்வன இன்னுவாம். எ - று.

நோய் பெருங்கால், பெருவலியிறு முதலாயின. தமரென்றதனால் உட்பகையாதற் குரியராய ஞாதியரென்பதறிக. இன்னுசெயல் முன்வெளிப்படாமையின்று துணை பெற்றவழிக் கெடுத்தல். (க)

அஅஉ. வாள்போல் பகைவரை யஞ்சற்க வஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு. உ.

இ - ள். வாள்போல் பகைவரை அஞ்சற்க - வாள்போல எறிதுமென்று வெளிப் பட்டுநிற்கும் பகைவர் பகையினை அஞ்சாதொழிக;—கேள்போல் பகைவர் தொடர்பு அஞ்சுக - அங்ஙனம் நில்லாது கேள்போல மறைத்துநிற்கும் பகைவர் சட்பினை அஞ்சுக. எ - று.

பகைவர் ஆருபெயர். முன்னேயறிந்து காக்கப்படுதலான் அஞ்சற்கவென்றும், அங்ஙனம் அறியவும் காக்கவும்படாமையிற் கெடுதல் ஒருதலையென்பதுபற்றி அஞ்சுக வென்றுங்கூறினார். பின்செய்யும் பகையினுங்கொடிதாகலானும், காக்கலாகாததாக லானும், அஞ்சப்படுவது முன்செய்த அவர்தொடர்பாயிற்று. இவையிரண்டு பாட் டானும் உட்பகை ஆகாதென்பது கூறப்பட்டது. (உ)

அஅஉ. உட்பகை யஞ்சித்தற் காக்க வுலகிடத்து
மட்பகையின் மாணத் தெறும். உ.

இ - ள். உட்பகை அஞ்சித் தற்காக்க - உட்பகையாயினரைஞ்சித் தன்னைத் தற்காத்துக்கொண்டொழுகுக;—உலகிடத்து மட்பகையின் மாணத் தெறும் - அப்படி யொழுகாதவழித் தனக்கோர் தளர்ச்சி வந்தவிடத்துக் குயவன் மட்கலத்தை யறுக்குங்கருவிபோல அவர் தப்பாமற்கெடுப்பர். எ - று.

காத்தல் அவரிணையாமலும் அவர்க்குடம்படாமலும் பரிகரித்தல். மண்ணைப் பகுக்குங்கருவி மட்பகையெனப்பட்டது. பகைமைதோன்றுமல் உள்ளாயிருந்தே கேழறுத்தலின், கெடுதல் தப்பாதென்பதாம். (உ)

அஅச. மனமாணு வுட்பகைதோன்றி னினமாணு
வேதம் பலவுந் தரும். ச.

இ - ள். மனம் மாணு உட்பகை தோன்றின் - புறந்திருந்தியதுபோன்று அகந்திருந்தாத உட்பகை அரசனுக்கு உண்டாவதாயின்,—இனம் மாணு ஏதம் பலவும் தரும் - அஃது அவனுக்குச சுற்றம் வயமாகாமைக்கேதுவாகிய குற்றம்பலவற்றையும் கொடுக்கும். எ - று.

அவை சுற்றத்தாரை உள்ளாயின்று வேறுபடுத்தலும், அதனால் அவர் வேறு பட்டவழித் தான்றேறுமையும், பின் அவற்றான் வினைவனவுமாம். (ச)

அஅஇ. உறன்முறையா னுட்பகை தோன்றி னிறன்முறையா
னேதம் பலவுந் தரும். ஞ.

இ - ள். உறல் முறையான் உட்பகை தோன்றின் - புறத்து உறவுமுறைத்தன்மையோடு கூடிய உட்பகை அரசனுக்கு உண்டாவதாயின்,—இறல் முறையான் ஏதம் பலவும் தரும் - அஃது அவனுக்கு இறத்தன் முறையோடு கூடிய குற்றம்பலவற்றையுங் கொடுக்கும். எ - று.

அவை புறப்பகைத் துணையாய் நின்றே அது தோன்றுமற் கோறன்முதலிய வஞ்சனை செய்தலும், அமைச்சர்முதலிய உறுப்புக்களைத் தேய்த்தலும் முதலாயின. (ஞ)

அஅக. ஒன்றுமை யொன்றியார் கட்படி னெஞ்ஞான்றும்
பொன்றுமை யொன்ற லரிது. ட.

இ - ள். ஒன்றுமை ஒன்றியார்கண் படின் - பகைமை தனக்குள்ளாயினுர் மாட்டே பிறக்குமாயின்,—பொன்றுமை ஒன்றல் எஞ்ஞான்றும் அரிது - அரசனுக்கு இறவாமை கூடுதல் எஞ்ஞான்றுமரிது. எ - று.

பொருள் படை முதலிய உறுப்புக்களாற் பெரியனுயகாலத்து மென்பார், எஞ்ஞான்றுமென்றார். இவை நான்குபாட்டானும் அதனைற் றனக்குவரும் நீங்கு உறுப்பட்டது. (ட)

அஅள. செப்பின் புணர்ச்சியோற் கூடினுங் கூடாதே
யுட்பகை யுற்ற குடி. ண.

இ - ள். செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் - செப்பினது புணர்ச்சி போலப் புறத்து யேற்றுமை தெரியாமற் கூடினுராயினும்,—உட்பகை உற்ற குடி கூடாது - உட்பகை உண்டாயகுடியிலுள்ளார் அதனைத் தம்மிற்கூடார். எ - று.

செப்பினதுபுணர்ச்சி செப்பு மூடியோடு புணர்ந்த புணர்ச்சி. உட்பகையான் மனம் வேறுபட்டமையிற் புறப்பகை பெற்றழி வீற்றுவீற்றுவரென்பதாம். குடி கூடாதென்பதனை நாடு வந்ததென்பதுபோலக் கொள்க. உட்பகை தானுற்றகுடியோடு கூடாதென்றும், உட்பகை புண்டாயகுடி அப்பகையோடு கூடாதென்றும் உரைப்பாருமுளர். (எ)

அஅஅ. அரம்பொருத பொன்போலத் தேயு மரம்பொரு
துட்பகை யுற்ற குடி. அ.

இ - ள். உட்பகை உற்றகுடி - முன் வளர்ந்துவந்ததாயினும் உட்பகையுண்டாய குடி—அரம் பொருத பொன் போலப் பொருது உரம் தேயும் - அரத்தாற் பொரப் பட்ட இரும்புபோல அதனற் பொரப்பட்டு வலிதேயும். எ - று.

பொருதென்னுஞ் செயப்பாட்டுவினையெச்சம் தேயுமென்னும் வினைகொண்டது. அஃது உரத்தின்றொழிலாயினுங் குடிமேலேற்றுதலின், வினைமுதல்வினையாயிற்று. காரியஞ்செய்வதுபோன்று பொருந்தி மெல்லமெல்லப் பிரிவித்தலான், வலி தேய்த்து விடுமென்பதாம். இவையிரண்டுபோட்டானும் அவன்குடிக்குவருந் தீங்கு கூறப் பட்டது. (அ)

அஅக. எட்பக வன்ன சிறுமைத்தே யாயினு
முட்பகை யுள்ளதாங் கேடு. கூ.

இ - ள். உட்பகை எட்பகவு அன்ன சிறுமைத்தே ஆயினும்-அரசனது உட்பகை அவன்பெருமையை நோக்க எள்ளின்பிளவையொத்த சிறுமையுடைத்தேயாயினும்,—கேடு உள்ளதாம் - பெருமையெல்லாம் அழியவருங்கேடு அதனகத்ததாம். எ - று.

எத்திணையும் பெரிதாயகேடு தனக்கெல்லைவருந்திணையும் எத்திணையுஞ்சிறிதாய உட்பகையுள்ளேயடங்கியிருந்து, வந்தால் வெளிப்பட்டுநிற்குமென்பதாம். இதனல் அது சிறிதென்று இகழப்படாதென்பது கூறப்பட்டது. (க)

அகo. உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருட்
பாம்போ டுறைந்தற்று. கo.

இ - ள். உடம்பாடு இலாதவர் வாழ்க்கை - மனப்பொருத்தமில்லாதாரோடு கூட ஒருவன் வாழும்வாழ்க்கை—குடங்கருள் பாம்போடு உடன் உறைத்தற்று - ஒரு குடிலுள்ளே பாம்போடுகூட உறைந்தாற்போலும். எ - று.

குடங்கமென்னும் வடசொற்றிரிந்து நின்றது. இடச்சிறுமையானும் பயிற்சி யானும் பாம்புபற்கோட்படல் ஒருதலையாம்; ஆகவே, அவ்வுவமையால் அவனுயிர்க்கு இறுதிவருதல் ஒருதலையென்பது பெற்றும். இவனுற் கண்ணோடாதவரைக் கடிக வென்பது கூறப்பட்டது. (கo)

கூo ம் அதி.—பெரியாரைப்பிழையாமை.

அஃதாவது பெரியாரினுரை அவமதித்து ஒழுகாமை. இரட்டிறமொழித லென்பதனற் பெரியாரென்பது ஆற்றலாற்பெரியாராய வேந்தர்மேலும் தவத்தாற் பெரியாராய முனிவர்மேலும் நின்றது. மேற்சொல்லாது எஞ்சிநின்றதாகலின், இது வெருளியான் வருவனவற்றதிறுதிக்கண் வைத்துப்புட்டது.

அகக. ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலு ளெல்லாந் தலை. க.

இ - ள். ஆற்றுவார் ஆற்றல் இகழாமை - எடுத்துக்கொண்டன யாவும் முடிக்க வல்லாருடைய ஆற்றல்களே அவமதியாமை—போற்றுவார் போற்றலுள் எல்லாம் தலை - தங்கட்டீங்குவாராமற்காப்பார் செய்யுங் காவல்களெல்லாவற்றினும் மிக்கது. எ - று.

ஆற்றலென்பது பெருமை, அறிவு, முயற்சியென்னும் மூன்றன்மேலும் நிற்றலிற் சாதியொருமை. இகழ்ந்தவழிக் களையவல்லாரென்பது தோன்ற ஆற்றுவாரென்றும், அரண், படை, பொருள், நட்பு முதலிய பிறகாவல்கள் அவராணழியுமாகலின் அவ்வி கழாமையைத் தலையாய காவலென்றுங் கூறினர். பொதுவகையால் அவ்விருதிறத் தாரையும் பிழையாமையது சிறப்பு இதனாற் கூறப்பட்டது. (எ)

அகஉ. பெரியாரைப் பேணு தொழுகிற் பெரியாரால்
பேரா விடும்பை தரும். உ.

இ - ள். பெரியாரைப் பேணுது ஒழுகின் - ஆற்றல்களாற் பெரியராயினுரை வேந்தர் நன்குமதியாது அவமதித்து ஒழுகுவாராயின்,—பெரியாரால் பேரா இடும்பை தரும் - அவ்வொழுக்கம் அப்பெரியாரால் அவர்க்கு எஞ்ஞான்றும் நீங்காத துன்பங் களைக் கொடுக்கும். எ - று.

அத்துன்பங்களாவன இருமையினும் இடையறாது வரும் மூவகைத் துன்பங்களு மாம். அவையெல்லாந் தாமே செய்துகொள்கின்றனரென்பது தோன்ற, ஒழுக் கத்தை வினைமுதலாக்கியும் பெரியாரைக் கருவியாக்கியுங்கூறினர். பொதுவகையால் அவரைப் பிழைத்தற்குற்றம் இதனாற் கூறப்பட்டது. இனிச் சிறப்புவகையாற் கூறுப.

அகஊ. கெடல்வேண்டிற் கேளாது செய்க வடல்வேண்டி
னாற்று பவர்க ணிழுக்கு. ஊ.

இ - ள். அடல் வேண்டின் ஆற்றபவர்கண் இழுக்கு - வேற்றுவேந்தரைக் கோறல்வேண்டியவழி அதனை அப்பொழுதே செய்யவல்ல வேந்தர்மாட்டுப் பிழை யினை—கெடல் வேண்டின் கேளாது செய்க - தான் கெடுதல்வேண்டினுனையின் ஒருவன் நீதிநூலைக் கடந்துசெய்க. எ - று.

அப்பெரியாரைக் "காலனுங் காலம் பார்க்கும் பாராது—வேலீண்டு தானை விழு மியோர் தொலைய—வேண்டிடத் தடுக்கும் வெல்போர் வேந்*" தர் என்றார் பிறரும். நீதிநூல் செயலாகாதென்று கூறலின், கேளாதென்றார். (ஊ)

அகஎ. கூற்றத்தைக் கையால் விளித்தற்று லாற்றுவார்க்
காற்றுதா ரின்னு செயல். எ.

இ - ள். ஆற்றுவார்க்கு ஆற்றுதார் இன்னு செயல் - மூவகையாற்றலுமுடை யார்க்கு அவையில்லாதார் தாம் முற்பட்டு இன்னுதவற்றைச் செய்தல்—கூற்றத்தைக் கையால் விளித்தற்று - தானேயும் வரற்பாலனுய கூற்றுவனே அதற்குமுன்னே கைகாட்டி அழைத்தாலொக்கும். எ - று.

---

* புறநானூறு, ஏ௬.

கையால் வினைத்தல் இகழ்ச்சிக்குறிப்பிற்று. தான்மேலும் உயிர்மூச்சிய சேரலாதன் குரியரை அதற்குமுன்னே விசாரித்து தம்மேல் வருவித்துக்கொள்வார் இறப்பினது உண்மையும் அன்மையுங்கூறியவாறு. இவையிரண்டுபோட்டானும் வேந்தரைப்பிழைத்தலின் குற்றம் கூறப்பட்டது. (ச)

அகறி. யாண்டுச்சென் றியாண்டு முளராகார் வெந்துப்பின்
வேந்து செறப்பட் டவர். இ.

இ - ள். வெந்துப்பின் வேந்து செறப்பட்டவர் - பகைவர்க்கு வெய்தாய வலி யினையுடைய வேந்தனுற்செறப்பட்ட அரசர்—யாண்டுச் சென்று யாண்டும் உளராகார் - அவனைத் தப்பி எங்கேபோயுளராவர், ஓரிடத்தும் உளராகார். எ - று.

இடைவந்த சொற்கள் அவாய்நிலையான் வந்தன. வெந்துப்பின் வேந்தராலல் தண்ணிலம் விட்டுப்போயவர்க்கு இடங்கொடுப்பாரில்லை, உளராயின் இவர் இனியாரென்பது நோக்கி அவனுடு ஈட்புக்கோடற்பொருட்டும் தானே வந்தெய்திய அவருடைமை வௌவுதற்பொருட்டுங் கொல்வர், அன்னெனின் உடனே யழிவரென்பது நோக்கி, யாண்டுச்சென்றியாண்டுமுளராகாரென்றார். இதனால் அக்குற்றமுடையார் அருமையுடைய அரண் சேர்ந்தும் உய்யாரென்பது கூறப்பட்டது. (இ)

அஞ்சு. எரியாற் சுடப்படினு மூய்வுண்டா மூய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார். சு.

இ - ள். எரியால் சுடப்படினும் உய்வு உண்டாம் - காட்டிடைச சென்றுளெருவன் ஞண்டைத் தீயாற்சுடப்பட்டானுயினும் ஒருவாற்றுன் உயிருய்தல்கூடும்;—பெரியாரப் பிழைத்து ஒழுகுவார் உய்யார் - தவத்தாற் பெரியாரைப்பிழைத்து ஒழுகுவார் எவ்வாற்றானும் உயிருய்யார். எ - று.

தீ முன் உடம்பினைக் கதுவி அதுவழியாக உயிர்மேற்சேறலின் இடையே உய்யவுங்கூடும், அருந்தவர்வெகுளி அன்னதன்றித் தானிற்பது கணமாய் அதற்குள்ளே யாவர்க்கும் காத்தலரிதாகலின், அது கூடாதாகலான், அதற்கேதுவாய பிழைசெய்யற்க வென்பதாம். (ஈ)

அஎ. வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளு மென்னுந்
தகைமாண்ட தக்கார் செறின். எ.

இ - ள். தகை மாண்ட தக்கார் செறின் - சாப வருள்கட்கேதுவாய பெருமை நாட்டமைப்பட்ட அருந்தவர் அரசனை வெருள்வராயின்,—வகை மாண்ட வாழ்க்கையும் வான் பொருளும் என்னும் - உறப்பழகுபெற்ற அனைசாட்சியும் ஈட்டிவைத்த பெரும்பொருளும் என்பட்டவெல்லாம். எ - று.

உறப்பு அமைச்சு, நாடு, அரண், படையெனவிவை. செறினென்பது அவர் செருமை தோன்ற நின்றது. இவ்வெச்சத்தான் முன் வருவனவற்றிற்கும் இஃ தொக்கும். அரசர் தஞ்செல்வக்களிப்பான் அருந்தவர்மாட்டுப் பிழை செய்வாராயின், அச்செல்வம் அவர் வெகுளித்தீயான் ஒருகணத்துள்ளே வெந்துவிடுமென்பதாம்.(எ)

அஅ. குன்றன்னார் குன்ற மறிப்பிற் குடிபொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து. அ.

---

* திருக்குறள், உக.

இ - ள். குன்று அன்னர் குன்ற மதிப்பின் - குன்றத்தை ஒக்கும் அருக்கவர் கெட நினைப்பாராயின்,—நிலத்து நின்றன்னர் குடிபொடி மாய்வர் - அப்பொழுதே இந்நிலத்து நிலைபெற்றாற்போலுஞ் செல்வர் தங்குடிபொடும் மாய்வர். எ - று.

வெயில் மழை முதலிய பொறுத்தலுஞ் சலியாமையும் உள்ளிட்ட குணங்களுடைமையின், குன்றன்னரென்றார்: "மல்லன் மலையினிய மாதவர்க்" என்றார் பிறரும். நிலைபெற்றாற்போலாவது இறப்பப்பெரியாகலின் இவர்க்கு எஞ்ஞான்றும் அழிவில்லையென்று கண்டாராந் கருதப்படுதல். (அ)

அகக. ஏந்திய கொள்கையார் சிறி னிடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும். க.

இ - ள். ஏந்திய கொள்கையார் சிறின் - காத்தற்கருமையான் உயர்ந்த விரதங்களை உடையார் வெகுள்வாராயின்,—வேந்தனும் இடை வேந்து முரிந்து கெடும் - அவராற்றலான் இந்திரனும் இடையே தன்பதம் இழந்துகெடும். எ - று.

"வேந்தன் மேய தீம்புனலுலகமும்†" என்றார் பிறரும். ஈடுடனென்பான் இந்திரன்பதம்பெற்றச் செல்கின்ற காலத்துப் பெற்ற களிப்புமிகுதியான் அகத்தியன் வெகுள்வதோர் பிழைசெய அதனுற் சாபமெய்தி அப்பதம் இடையே இழந்தானென்பதனைபுட்கொண்டு, இவ்வாறு கூறினர். இவையான்குபாட்டானும் முன்னிவரைப் பிழைத்தலின்குற்றங் கூறப்பட்டது. (ஆ)

கூ0. இறந்தமைந்த சார்புடைய ராயினு முய்யார்
சிறந்தமைந்த சோர் செறின். கஅ.

இ - ள். சிறந்து அமைந்த சோர் செறின் - கழியபிக்க தவத்தினையுடையார் வெகுள்வராயின்,—இறந்து அமைந்த சார்பு உடையராயினும் உய்யார் - அவரான் வெகுளப்பட்டார் கழியப் பெரிய சார்பு உடையராயினும், அதுபற்றி உய்யமாட்டார். எ - று.

சார்பு அரண், படை, பொருள், நட்பெனவிவை. அவையெல்லாம் வெகுண்டவரது ஆற்றலாற்றிரிபுரம்போல அழிந்துவிடுமாகலின், உய்யாரென்றார். சிறுட்டைய சிரெனப்பட்டது. இதனால் அக்குற்றமுடையார் சார்பு பற்றியும் உய்யாரென்பது கூறப்பட்டது. (அ0)

கூகம் அதி.—பெண்வழிச்சேறல்.

இனிக் காமத்தான் வருவன சேரே பகையல்லவாயினும் ஆக்கஞ்சைதத்தல் அழிவதலைத் தருதலென்னும் தொழில்களாற் பகையோடொத்தலிற் பகைப்பாற்படு வனவாமாகலான், அவற்றைப் பகைப்புறநிறுத்திக்கட் கூறவான்றொடங்கி, முதற் கட் பெண்வழிச்சேறல் கூறகின்றார். அஃதாவது தன்வழியொழுகற்பாலனாய இல்லான்வழியே தான் ஒழுகுதல்.

கூ0க. மனையிழைவார் மாண்பய னெய்தார் தினையிழைவார்
வேண்டாப் பொருளு மது. க.

---

* கேகயேந்தாமணி, முத்தியிலம்பகம், ககக.

† தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், ©.

இ - ள். மனை விழைவார் மாண் பயன் எய்தார் - இன்பக்காரணமாகத் தம் மனை யாளை விழைந்து அவடன்மையராய் ஒழுகுவார் தமக்கு இன்றியமையாத அறத்தினை யெய்தார்;—மனை விழைவார் வேண்டாப் பொருளும் அது—இனிப் பொருள் செய்தலேமுயல்வார் அதற்கிடையீடென்று இகழும்பொருளும் அவ்வின்பம். எ - று.

மனையும் விழைதலும் பயனும் ஆகுபெயர். அவ்வின்பம் அவடன்மையாதற்கு ஏதுவாயவின்பம். அஃது அவனாற்பயனுயவறத்திற்கும் அவ்வறத்திற்குக் தனக்கும் ஏதுவாய பொருளிலுஞ் செல்லவிடாமையின், விடற்பாற்றென்பதாம். (க)

கூ0உ. பேணுது பெண்விழைவா னுக்கம் பெரியதோர்
நாணுக நாணுத் தரும். உ.

இ - ள். பேணுது பெண் விழைவான் ஆக்கம் - தன்னுண்மையை விட்டு மனை யாளது பெண்மையை விழைவான் எய்திகின்ற செல்வம்—பெரியது ஓர் நாண் ஆக நாணுத் தரும் - இவ்வுலகத்து ஆண்பாலார்க்கெல்லாம் பெரியதோர் நாணுண் டாகத் தனக்கும் நாணுதலேக் கொடுக்கும். எ - று.

எய்திகின்றதாயிற்று, படைக்கும் ஆற்றலிலனுகலின். அச்செல்வத்தால் ஈதலுக் துய்த்தலும் முதலிய பயன்கொளவாள் அவளாகலின், அவ்வாண்மைச செய்கை அவள்கண்ணதாயிற்றென்று ஆண்பாலார் யாவரும் நாண அதனுற றன்னுண்மை யின்மை அறிந்து பின் தானும் நாணுமென்பது நோகிப் பெரியதோர் நாணுக நாணுத் தருமென்றார். இவையிரண்டுபொட்டானும் மனைவிழைதற் குற்றமு கூறப்பட்டது. (உ)

கூ0ஊ. இல்லாள்கட் டாழ்ந்த வியல்பின்மை யெஞ்ஞான்று
நல்லாரு ணுணுத தரும். ஊ.

இ - ள். இல்லாள்கண் தாழ்ந்த இயல்பு இன்மை - ஒருவன் இல்லாண்மாட் டுத் தாழ்தற்கு ஏதுவாய அச்சம் —நல்லாருள் நாணு எஞ்ஞான்றும் தரும் - அஃதில ராய நல்லாரிடைச் செல்லுங்கால் நாணுதலே அவனுக்கு எக்காலத்துங் கொடுக் கும். எ - று.

அவடான் அஞ்சி ஒழுகுதல் இயல்பாகலின், அவளையஞ்சுதல் இயல்பின்மை யாயிற்று. அங்ஙனமஞ்சியொழுகுதலின், அவளே நியமிப்பாரிலேயாம், ஆகவே, எல் லாக்குற்றமும் வினையுமென்பதுநோக்கி, எஞ்ஞான்றும் நாணுத்தருமென்றார். (ஊ)

கூ0எ. மனையாளே யஞ்சு மறுமையி லாளன்
வினையாண்மை வீறெய்த லின்று. எ.

இ - ள். மனையாளே அஞ்சும் மறுமை இலாளன் - தன்மனையாளையஞ்சி ஒழுகு கின்ற மறுமைப்பயனில்லாதானுக்கு—வினை ஆண்மை வீறு எய்தல் இன்று - வினையை ஆளுந்தன்மை உண்டாயவழியும் நல்லோராற் கொண்டாடப்படாது. எ-று.

உண்டாயவழியுமென்பது அவாய்நிலையான் வந்தது. இல்லறஞ்செய்தற்குரிய தன்மையின்மையின் மறுமையிலானென்றும், வினையையாளுந் தன்மை தன்றன்மை யில்லாத அவனுன் முடிவுபோகாமையின் வீறெய்தலின்றென்றும் கூறினார். (எ)

கூ0ஏ. இல்லானே யஞ்சுவா னஞ்சுமற் றெஞ்ஞான்று
நல்லார்க்கு நல்ல செயல். ஏ.

இ - ன். இல்லானே அஞ்சுவான் - தன்மனையானே யஞ்சுவான்—கல்லார்க்கு கல்ல எஞ்ஞான்றும் அஞ்சும் - தான்றேடிய பொருளேயாயினும் அதனுல் கல்லாதவர்க்கு கல்லனசெய்தலே எஞ்ஞான்றும் அஞ்சாகிற்கும். எ - று.

கல்லார் தேவர், அருக்தவர், சான்ரோர், இருமுதுகுரவர் முதலாயினுரும் கல்லாதினரும். கல்லனசெய்தல் அவர்விரும்புவனகொடுத்தல். அது செய்யவேண்டுமான்களினுமென்பார், எஞ்ஞான்றுமென்ருர். "இல்லானே யஞ்சிவிருந்தின்முகன் னுறநெஞ்சிற்—புல்லாளனுகை" என்ருர் பிறரும். (இ)

கூஅசு. இமையாரின் வாழினும் பாடிலரே பில்லா
ளனமையார்தோ ளஞ்சு பவர். சு.

இ - ன். இல்லாள் அமை ஆர் தோள் அஞ்சபவர் - தம்மில்லாளுடைய வேய் போலுர்தோளினே அஞ்சுவார்,—இமையாரின் வாழினும் பாடு இலர் - வீரத்தாற் றுறக்கமெய்திய அமரர்போல இவ்வுலகத்து வாழ்ந்தாராயினும், ஆண்மையிலர். எ-று.

அமரர்போல வாழ்தலாவது பகைத்த வீரர் தோள்களேயெல்லாம் வேறலான் ன்குமதிக்கப்பட்டு வாழ்தல். அது கூடாமையின், வாழினுமென்ருர். அமையார் தோளெனவே, அஞ்சுதற்காரணத்தது என்மை கூறியவாறு. வீரர்தோள்களே வென்ருராயினும் இல்லாடோள்களே அஞ்சுவார் ஆண்மையிலரென்பதாம். இவைகான்கு பாட்டானும் அவளேயஞ்சுதற்குற்றங் கூறப்பட்டது. (ஈ)

கூஎள. பெண்ணேவல் செய்தொழுகு மாண்மையி ஞணுடைப்
பெண்ணே பெருமை யுடைத்து. எ.

இ - ன். பெண் ஏவல் செய்து ஒழுகும் ஆண்மையின் - ாணின்றித் தன்னில்லாளது ஏவற்றொழிலேச் செய்து நிரின்றவனது ஆண்டன்மையின்—ாண் உடைப் பெண்ணே பெருமை உடைத்து - ாணினேயுடைய அவள் பெண்டன்மையே மேம்பாடடைத்து. எ - று.

ாணுடைப் பெண்ணென வேண்டாது கூறியது அவளேவல் செய்வானது ாணின்மை முடித்தற்காதலின், அம்மறுதலேதொழில் வருவிக்கப்பட்டது. ஏவல் ஆகுபெயர். இறுதிக்கட் பெண்ணென்பதனேம் அது. ஏவல்செய்வித்துக் கோடற்கிறப் புத் தோன்றப் பெண்ணேயெனப் பிரித்தார். (எ)

கூஅ. கட்டார் குறைமுடியார் கன்ருற்ருர் கன்னுதலாள்
பெட்டாங் கொழுகு பவர். அ.

இ - ன். கன்னுதலாள் பெட்டாங்கு ஒழுகுபவர் - தாம்வேண்டியவாறன்றித் தம் மனேயாள் வேண்டியவாறு ஒழுகுவார்—கட்டார்குறை முடியார் - தம்மொடு சட்புச செய்தார் உற்ற குறை முடிக்கமாட்டார்,—கன்று ஆற்ருர் - அதுவேயன்றி மறமைக்குத் தினேயாய அறஞ்செய்யவுமாட்டார். எ - று.

---

* இல்லானே யஞ்சி விருந்தினமுகங் கொளதகெருறெ—புலலாள ஞக மதனேதாறதிலெனப்பு கைத—லில்லா ளழுவம் பினர்பிட்டு வெருண்டு நோகெ—கொல்வானே புள்ளிக குடை மேனமேர் கோருடுத்தான்—சேகைதொமனி, மண்மகளிலமபம், உகள.

† பெண்மை ஆண்மைட்குப் பொருள் கட்புலனுயை அமைத்தன்மை, ஆளுத்தன்மை என்பர் கச்சினர்க்கினியர்.

என்னுதலானென்பதனை "அமையார்தோள்" என்புழிப்போலக் கொள்க. அவ டானே அறிந்து எவனும் பொருள்கொடுத்தலும் கூடாமையின், இருமைக்கும் வேண் டுவன செய்யமாட்டாரென்பதாம். (அ)

கூ0க. அறவினையு மான்ற பொருளும் பிறவினையும்
பெண்ணேவல் செய்வார்க ணில். க.

இ - ன். அறவினையும் - அறச்செயலும்—ஆன்ற பொருளும் - அது முடித்தற்கு ஏதுவாயபொருட்செயலும்—பிறவினையும் - அவ்விரண்டின் வேறாய இன்பச்செயல் களும்—பெண் ஏவல் செய்வார் கண் இல் - தம்மனையாள் ஏவல் செய்வார்மாட்டு உள வாகா. எ - று.

புலன்களோர்தாகலின், பிறவினை யெனப் பன்மையாயிற்று. அவைநோக்கி அறச் செயல் பொருட்செயல்கள் முன்னேயொழிர்தார்க்குத தலைமை அவள்கண்ணதாக லின், பின் அவைதாமும் இலவாயினவென்பது தோன்ற, அவற்றைப் பிரித்துக் கூறி னார். இவைமூன்றுபாட்டானும் அவளேவல்செய்தற்குற்றங் கூறப்பட்டது. (க)

கூஉ0. எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை யில். க0.

இ - ன். எண் சேர்ந்த நெஞ்சத்து இடன் உடையார்க்கு - கருமச்சூழ்ச்சிக்கட் சென்ற நெஞ்சத்தினையும் அதனினுய செல்வத்தினையும் உடையராய வேர்தர்க்கு— பெண் சேர்ந்து ஆம் பேதைமை எஞ்ஞான்றும் இல் - மனையாளைச் சேர்தலான் வினை யும் பேதைமை எக்காலத்தும் உண்டாகாது. எ - று.

"இடனில்பருவத்தும்† " எனவும் "இடனின்றியிரர்தோர்க்கு‡ " எனவும் வர்தமையான், இடனென்பது அப்பொருட்டாதலறிக. இளமைக்காலத்து மென்பார், எஞ்ஞான்றமென்றார். அப்பேதைமையாவது மேற்சொல்லிய விழைதல், அஞ்சல், ஏவல்செய்தலென்னு மூன்றற்கும் காரணமாயது. எதிர்மறைமுகத்தான் அம்மூன்றும் இதனுற்றெருகுத்துக் கூறப்பட்டன. (க0)

கூஉ ம் அதி.—வரைவின்மகளிர்.

அஃதாவது தானலம் விலைகொடுப்பார் யாவர்க்கும் விற்பதல்லது அதற்கு ஆவார் ஆதாரென்னும் வரைவிலாத மகளிரது இயல்பு; ஆதலால் தமக்குரிய மகளி ரான் வருங்குற்றத்தின் பின் வைக்கப்பட்டது.

கூக. அன்பின் விழையார் பொருள்விழையு மாய்தொடியா
ரின்சொ லிழுக்குத் தரும். க.

இ - ன். அன்பின் விழையார் பொருள் விழையும் ஆய் தொடியார் - ஒருவனே அன்புபற்றி விழையாது பொருள்பற்றி விழையும் மகளிர்—இன்சொல் இழுக்குத் தரும் - அது கைபுனர்தவனும் தாம் அன்புபற்றி விழைர்தாராகச் சொல்லும் இனியசொல் அவனுக்குப் பின் இன்னுமையைப் பயக்கும். எ - று.

பொருளென்புழி இன் விகாரத்தாற் றொக்கது. ஆய்ந்தொடியினுடையா ரென்றதனானும், இனியசொல்லென்றதனானும், அவர் கருவி கூறப்பட்டது. அச்

---

* திருக்குறள், கூகூ. † திருக்குறள், உகூ. ‡ கலி, பாலை, க.

அப்பொழுதைக்கு இனிதுபோன்று பின் துன்பம் பயத்தலின், அஃதேபோன்ற வென்பதாம். (எ)

கூகூ. பயன்றூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்
நயன்றூக்கி நள்ளா விடல். உ.

இ - ள். பயன் தூக்கிப் பண்பு உரைக்கும் பண்பு இல் மகளிர் - ஒருவனுக்கு ள்ளபொருளே அளந்தறிந்து அஃதெய்துந்துணையும் தம்பண்புடைமை சொல்லும் பண்பில்லாத மகளிரது—நயன் தூக்கி நள்ளா விடல் - ஒழுகலாற்றினை ஆராய்ந் -றிந்து அவரைப் பொருந்தாது விடுக. எ - று.

பண்பு சொல்லின்கணல்லது தங்கட்கிடவாமைதோன்றப் பண்பின்மகளிரென் ஆம், அவர்க்கு அது சாதிதருமமாதல் நூலானேயன்றி அவர்செயலானுமறிக்தென் பார் நயன்றூக்கியென்றும், அவ்வறிவு அவரை விடுதற்கு உபாயமென்பது தோன்றப் பின் நள்ளாவிடலென்றும் கூறினர். (உ)

கூகஉ. பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்க மிருட்டறையி
லேதில் பிணந்தழீஇ யற்று. ஈ.

இ - ள். பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் - கொடுப்பாரை விரும்பாது பொருளையே விரும்பும் பொதுமகளிரது பொய்ம்மையையுடைய முயக்கம்—இருட் அறையில் ஏதில் பிணம் தழீஇயற்று - பிணமெடுப்பார் இருட்டறைக்கண்ணே முன் னறியாத பிணத்தைத் தழுவினாற்போலும். எ - று.

பொருட்கு முயங்கும் மகளிர் கருத்துஞ்செயலும் ஆராயாது சாதியும் பருவமும் ஒவ்வாதாரை முயங்குங்கால் அவர்குறிப்புக் கூலிக்குப் பிணமெடுப்பார் காணப்படாத் தோரிடத்தின்கண் இயைபில்லாததோர் பிணத்தை எடுக்குங்கால் அவர்குறிப்போ டொக்குமனைவே, அகத்தால் அருவராகின்றும் பொருளைக்கிப் புறத்தாற்றழுவுகிர்; அதனை யொழிகவென்பதாம். இவை மூன்றுபாட்டானும் அவர்சொல்லும் செயலும் பொய்யென்பது கூறப்பட்டது. (ஊ)

கூஉச. பொருட்பொருளார் புன்னலந் தோயா ரருட்பொரு
ளாயு மறிவி னவர். ச.

இ - ள். பொருட்பொருளார் புன்னலம் - இன்பமாகிய பொருளை இகழ்ந்து பொருளாகிய பொருளையே விரும்பும் மகளிரது புல்லியலத்தை—அருட்பொருள் ஆயும் அறிவினவர் தோயார் - அருளோடு கூடிய பொருளை ஆராய்ந்தசெய்யும் அறி வினையுடையார் நீண்டார். எ - று.

அறமுதலிய நான்கும் பொருளெனப்படுதலின், பொருட்பொருள் அருட்பொரு ளென விசேடித்தார். புன்மை இழிந்தார்க்கே உரித்தாதல். தாம் விரும்புகின்ற அறத் திற்கு அவர் மெய்ந்நலம் மறுத்லையாகலின், தோயாரென்பதாம். (எ)

கூகஙி. பொதுநலத்தார் புன்னலந் தோயார் மதிநலத்தின்
மாண்ட வறிவி னவர். ஙி.

இ - ள். மதி நலத்தின் மாண்ட அறிவினவர் - இயற்கையாகிய மதிநன்மை யான் மாட்சிமைப்பட்ட செம்மையறிவினையுடையார்—பொது நலத்தார் புன்ன

ஈம் தோயார் ; பொருள்கொடுப்பார்க்கெல்லாம் பொதுவாய ஆசையினையுடைய மகளிரது புல்லிய நலத்தைத் தீண்டார். எ - று.

மதிநன்மை முற்பிறப்புக்களிற் செய்த நல்வினைகளான் மனந்தெளிவுடைத் தாதல். அதனுனன்றிக் கல்வியறிவு மாட்சிமைப்படாமையின் மதிநலத்தின் மாண்ட வறிவினவென்றும், அவ்வறிவுடையார்க்கு அவராசையது பொதுமையும் மெய்ந் நலத்தது புன்மையும் விளங்கித் தோன்றலின் தோயாரென்றுங் கூறினர். (இ)

கூகூ. தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள். கூ.

இ - ன். தகை செருக்கிப் புன்னலம் பாரிப்பார் தோள் - ஆடல், பாடல், அழகென்பனவற்றாற் களித்துத் தம்புல்லிய நலத்தை விலைகொடுப்பார் யாவர்மாட்டும் பரப்பும் மகளிர் தோளினை—தம் நலம் பாரிப்பார் தோயார் - அறிவொழுக்கங்களாலுய தம்புகழை உலகத்துப் பரப்புதற்குரிய உயர்ந்தோர் தீண்டார். எ - று.

ஆடன்முதலிய மூன்றுமுடைமை அவர்க்கு மேம்பாடாகலின் தகையென்றும், தோயின் அறிவொழுக்கங்கள் அழியுமாகலின் அவற்றாற் புகழ்பரப்புவார் தோயாரென்றுங் கூறினர். தந்நலமென்பதி நலம் ஆகுபெயர். இவைமூன்றுபாட்டானும் அவரை உயர்ந்தோர் தீண்டாரென்பது கூறப்பட்டது. (ஈ)

கூஎ. நிறைநெஞ்சு மில்லவர் தோய்வர் பிறநெஞ்சிற்
பேணிப் புணர்பவர் தோள். எ.

இ - ன். நெஞ்சின் பிறபேணிப் புணர்பவர் தோள் - நெஞ்சினுற் பிறவற்றை ஆசைப்பட்டு அவை காரணமாகக் கொடுப்பாரை மெய்யாற்புணரும் மகளிர் தோளை—நிறை நெஞ்சம் இல்லவர் தோய்வர் - நிறையாற்றிருந்திய நெஞ்சமில்லாதார் தோய்வர். எ - று.

பொருளும் அதனுற் படைக்கப்படுவனவும் விரும்பும் நெஞ்சு அவற்றின்மேல தாகலின், புணர்வது உடம்புமாத்திரமென்பதறிந்து அதுவழி ஒடாதுநிற்கும் நெஞ்சினையுடையார் தோயாமையின், அஃதிலார் தோய்வரென்றார். (எ)

கூஅ. ஆயுமறிவின ரல்லார்க் கணங்கென்ப
மாய மகளிர் முயக்கு. அ.

இ - ன். மாய மகளிர் முயக்கு - உருவுசொற்செயல்களான் வஞ்சித்தலே வல்ல மகளிரது முயக்கத்தை—ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்கு என்ப - அவ்வஞ்சனை ஆராய்ந்தறியுமறிவுடைய ரல்லார்க்கு அணங்குதாக்கென்று சொல்லுவர் நூலோர். எ - று.

அணங்கு காமநோயான் உயிர்கொள்ளும் தெய்வமகன். தாக்குத் தீண்டல். இவ் வுருவகத்தான் அம்முயக்கம் முன் இனிதுபோன்று பின் உயிர்கோடல்பெற்றும். இது நூலோர் துணிவென்பதுதோன்ற அவர்மேல்வைத்துக் கூறினர். அப்பெயர் அவாய் நிலையான் வந்தது. (அ)

கூக. வரையிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப்
பூரியர்க ளாழு மளறு.

இ - ள். வரைவு இலா மான் இழையார் மென்றோள் - உயர்ந்தோர் இழிந்தோர் என்னாது விலைகொடுப்பார் யாவரையும் முயங்கும் மகளிரது மெல்லியதோள்கள்—புரை இலாப் பூரியர்கள் ஆழும் அளறு - அக்குற்றத்தையறியும் அறிவில்லாத கீழ்மக்கள் புக்கழுந்து நிரயம். எ - று.

உயர்தற்கேதுவாகலின், புரையெனப்பட்டது. சாதியானிழிந்தாரினீக்குதற்குப் பூரையிலாப்பூரியர்களென்றும், அவர் ஆழ்தற்கேது உருவமுதலிய மூன்றுமென்பது தோன்ற மாணிழையார்மென்றோளென்றும், அவர்க்கு அளற்றினையிடையின்றிப் பயக்குமென்பது தோன்ற உருவகமாக்கியுங்கூறினர். (க)

கூ௨0. இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
நிருமீக்கப் பட்டார் தொடர்பு. க0.

இ - ள். இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும் - கவர்த்த மனத்தினையுடைய மகளிரும் கள்ளும் சூதுமென இம்மூன்றும்—நிரு மீக்கப்பட்டார் தொடர்பு - நிருமகளாற்றுறக்கப்பட்டார்க்கு நட்பு. எ - று.

இருமனம் ஒருவனேடு புணர்தலும் புணராமையும் ஒரு காலத்தேயுடையமனம். கவறு சூதுபெயர். ஒத்தகுற்றத்தவாகலின், கள்ளும் சூதும் உடன்கூறப்பட்டன. வடநூலாரும் இக்கருத்தான் விதனமென உடன்கூறினர்*. வருகின்ற அதிகார முறைமையும் இதனானறிக. தினைவிராயெண்ணியவழிப் பன்மைபற்றி முடிபுகோடலின், ஈண்டு, அஃறிணையாற்கொண்டது. நிருமீக்கப்பட்டமை இக்குறிகளான் அறியப் படுமென்பதாம். இவையான்குபாட்டானும் சேர்வார் இழிந்தோரென்பது கூறப்பட்டது. (க0)

கூடம் அதி.—கள்ளுண்ணுமை.

இனி ஒழுக்கமும் உணர்வுமழித்தற்கண் அவ்வரைவின்மகளிரோடொப்பதாய கள்ளினையுண்ணுமையது சிறப்பு எதிர்மறைமுகத்தாற் கூறுகின்றார்.

கூ௨௧. உட்கப் படாஅ ரொளியிழப்ப ரெஞ்ஞான்றுங்
கட்காதல் கொண்டொழுகு வார். க.

இ - ள். கட்காதல் கொண்டு ஒழுகுவார் - கள்ளின்மேற்காதல் செய்தொழுகுமரசர்—எஞ்ஞான்றும் உட்கப்படார் - எஞ்ஞான்றும் பகைவரானஞ்சப்படார்;—ஒளி இழப்பர் - அதுவேயன்றி முன்னெய்தி நின்ற ஒளியினையுமிழப்பர். எ - று.

அறிவின்மையால் பொருள் படை முதலியவற்றுற் பெரியராயகாலத்தும் பகைவர் அஞ்சார், தம்முன்னோரெய்தினின்ற ஒளியினையும் இகழ்பாட்டான் இழப்பரென்பதாம். இவையிரண்டானும் அரசு இனிதுசெல்லாதென்பது இதனுட் கூறப்பட்டது. (க)

கூ௨௨. உண்ணற்க கள்ளை யுணினுண்க சான்றோரா
லெண்ணப் படவேண்டா தார். உ.

இ - ள். கள்ளை உண்ணற்க - அறிவுடையராயினர் அஃதிலராதற்கு ஏதுவாய கள்ளினை உண்ணுதொழிக,—உண்ணில் சான்றோரான் எண்ணப்பட வேண்டாதார்

---

* காமக்காலம், அத்தியாயம்; கக, சுலோகம்; கூ௨.

உண்ண அன்றியே உண்ணல் வேண்டோர் உளராயின், நல்லோரால் எண்ணப்படுதலே தொண்டாதார் உண்க. எ - று.

பெறுதற்கரிய அறிவைப் பெற்றுவைத்தும் கள்ளானழித்துக்கொள்வாரை இயல்பாகவே அஃதில்லாத விலங்குகளுடனும் எண்ணுதலின், சான்றோரா னெண்ணப்பட வேண்டாதாருண்கவென்றார். (உ)

கூஉ. ஈன்றுண் முகத்தேயு மின்னாதா லென்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி. கூ.

இ - ள். ஈன்றுள் முகத்தேயும் களி இன்னாது - யாதுசெய்யினும் உவக்குந்தாய் முன்பாயினும் கள்ளுண்டு களித்தல் இன்னாதாம்;—மற்றுச சான்றோர்முகத்து என் - னுபின், குற்றம்யாதும்பொருத சான்றோர்முன்பு களித்தல் அவாக்கியாதாம்! எ-று.

மனமொழிமெய்கள் தம்வயத்தவன்மையான் ஈணுழியும், அழியவே, ஈன்றட்கும் இன்னுதாயிற்று; னுபின், கள் இருமையுங கெடுத்தலறிந்து சேய்மைக்கண்ணே கடியுஞ் சான்றோர்க்கு இன்னுதாதல் சொல்லவேண்டுமோ வென்பதாம் (கூ)

கூஉ. ஈணென்னு நல்லாள் புறங்கொடுக்குங் கள்ளென்னும்
பேணுப் பெருங்குற்றத் தார்க்கு. ச.

இ - ள். கள் என்னும் பேணுப் பெருங்குற்றத்தார்க்கு - கள்ளென்று சொல்லப்படுகின்ற யாவருமிகழும் மிக்க குற்றத்தினையுடையாரை—ஈண் என்னும் நல்லாள் புறங்கொடுக்கும் - ஈணென்று சொல்லப்படுகின்ற உயர்ந்தவள் நோக்குதற்கஞ்சி அவர்க்கெதிர்முகமாகாள். எ - று.

காணுதற்குமஞ்சி உலகத்தார் சேய்மைக்கண்ணே நீங்குவராகலிற் பேணுவென்றும், பின் ஒருவாற்றானும் கழுவப்படாமையிற் பெருங்குற்றமென்றும், இழிந்தோர் பானில்லாமையின் நல்லாளென்றும் கூறினர். பெண்பாலாக்கியது வடமொழி முறைமைபற்றி.* இவைமூன்றுபாட்டாலும் ஒளியிழுததற்காரணங கூறப்பட்டது. ()

கூஉ. கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல். ஞ

இ - ள். பொருள் கொடுத்து மெய் அறியாமை கொளல் - ஒருவன் விலைப் பொருளைக்கொடுத்துக் கள்ளாற்றனக்கு மெய்ம்மறப்பினைக் கொள்ளுதல்—கை அறியாமை உடைத்து - அவன்பழவினைப்பயனுய செய்வதறியாமையைத் தனக்குக் காரணமாகவுடைத்து. எ - று.

தன்னையறியாமை சொல்லவே, ஒழிந்தன யாவுமறியாமை சொல்லல்வேண்டாவாயிற்று. கை அப்பொருட்டாதல் "பதனுடைப்பெருமரம் வீழ்தெனக் கையற்றா†" என்பதனுலுமறிக. அறிவார் விலைகொடுத்து ஒன்றினைக்கொள்ளுங்காற் றீயதுகொள்ளாமையின் மெய்யறியாமைகொளல் முன்னையறியாமையால் வந்ததென்பதாம். (ஹ)

கூஉ. ஞஞ்ஞிஞர் செத்தாரின் வேறல்ல ரென்ஞாக்று
ஞஞ்ஞண்பர் கள்ளுண் பவர். கூ.

* பிரயோகவிவேகம், நிகழ்ப்படலம், கஇ.

† புறநானூறு, உ0க.

இ - ன். தஞ்சினஞ் செத்தாரின் வேறு அல்லர்-உறங்கினர், செத்தாரின் வேறுத [illegible]தேனும், அக்காலத்தறிவின்மையான் வேறெனப்படார்;—கள் உண்பவர் [illegible]ஞ்ஞான்றும் நஞ்சு உண்பார் - அவ்வாறே கள்ளுண்பார், நஞ்சுண்டாரின் வேறுத [illegible]டலேனும், எக்காலத்துமறிவின்மையான் வேறெனப்படார், அவர்தாமேயா [illegible]. எ - று.

உறங்கினார்க்கும் கள்ளுண்பார்க்கும் வேற்றுமை உரிப்புமித்தல். வேறுதலும் [illegible]றன்மையுமுடைமை காட்டற்கு உவமை புணர்க்கப்பட்டது. இதனை சிரனிறை [illegible]தி, நிரிக்கப்படுதலால் உறங்குவாரும் நஞ்சுண்பாருமொப்பர், கைவிடப்படுதலாற் [illegible]ஞ்சாருங் கள்ளுண்பாரு மொப்பரென்றுரைப்பாருமுளர்; அதிகாரப்பொருள் பின் தாயிருக்க யாதுமியைபில்லாத நஞ்சுண்பார்க்கு உவமைபுணர்த்து வண்டுத [illegible]தல் பயனின்றாகலானும், சொற்கிடக்கை சிரனிறைக்கேலாமையானும், அஃதுரை [illegible]மையறிக. இவையிரண்டுபோட்டானும் அவாதறிவிழத்தற்குற்றங் கூறப்பட்டது.()

கூஉ எ. உள்ளொற்றி யுள்ளூர் நகப்படுவ ரெஞ்ஞான்றுங்
கள்ளொற்றிக் கண்சாய் பவர் எ.

இ - ன். கள் ஒற்றிக் கண் சாய்பவர் - கள்ளே மறைத்துண்டு அக்களிப்பாற்றம் [illegible]ர்தளர்வார்—உள்ளூர் உள் ஒற்றி எஞ்ஞான்றும் நகப்படுவர் - உள்ளூர் வாழ் [illegible]வதான் உண்ணிகழ்கின்றதுய்த்துணர்ந்து எஞ்ஞான்றும் நகுதல் செய்யப்படு [illegible]ர். எ - று.

உள்ளூர் ஆகுபெயர். உண்டென்பது அவாய்நிலையான் வந்தது. உய்த்துணர்தல் [illegible]ச்சியாற் களிப்பினைபுணர்ந்து அதனாற் கள்ளுண்டதுணர்தல். (எ)

கூஉஅ. களித்தறியே னென்பது கைவிடுக நெஞ்சத்
தொளித்ததூஉ மாங்கே மிகும். அ.

இ - ன். களித்து அறியேன் என்பது கைவிடுக - மறைத்துண்மைவைத்து யான் [illegible]ஞ்ஞான்றுண்டறியேனென்று உண்ணுதபொழுது தம்மொழுக்கங் கூறுதலேயொழிக;— [illegible]நெஞ்சத்து ஒளித்ததும் ஆங்கே மிகும் - அவ்வுண்டபொழுதே பிறரறியின் இழுக் [illegible]மென்று முன்னெஞ்சத்தொளித்த குற்றமும் முன்னையளவின்மிக்கு வெளிப்படுதல் [illegible]ம். எ - று.

களித்தறியேனெனக் காரியத்தாற் கூறினர். இவையிரண்டுபோட்டானும் அது [illegible]றைக்கப்படாதென்பது கூறப்பட்டது. (அ)

கூஉக. களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்தூறீ இயற்று. க.

இ - ன். களித்தானைக் காரணம் காட்டுதல் - கள்ளுண்டு களித்தானொருவனை [illegible]ஙோதாகாதென்று பிறனொருவன் காரணங்காட்டித் தெளிவித்தல்—நீர்க் கீழ்க் குளித் [illegible]தானைத் தீத்தூறீஇயற்று - நீருண்மூழ்கினானொருவனைப் பிறனொருவன் விளக்கினால் [illegible]ஈர்த்தலே யொக்கும். எ - று.

களித்தானையென்னுமிரண்டாவது "அறிவுடை யத்தண வனவேக்காட் டென்று [illegible]னைத்" என்புழிப்போல நின்றது. நீருள் விளக்குச் செல்லாதாற்போல அவன்

() கலி, மருதம், எ.

மனத்துக் காரணஞ்செல்லாதென்பதாம். இதனுன் அவனைத்தெளிவித்தல் முடியா தென்பது கூறப்பட்டது. (க)

கூடக. கள்ளுண்ணப் போழ்தில் களித்தானைக் காணுங்கா
லுள்ளான்கொ லுண்டதன் சோர்வு. கஅ.

இ - ள். கள் உண்ணும் போழ்தில் களித்தானை - கள்ளுண்பானெருவன் தான் அஃதுண்ணுது தெளிந்திருந்த பொழுதின்கண் உண்டு களித்த பிறனைக் காணு மன்றே,—காணுங்கால் உண்டதன்சோர்வு உள்ளான்கொல்-காணுங்கால் தானுண்ட பொழுது உளதாஞ்சோர்வினை அவன் சோர்வால் அதுவுமிற்றென்று கருதான் போலும்! எ - று.

சோர்வு மனமொழிமெய்கள் தன்வயத்தவல்லவாதல். கருதலளவையான் அத னிழுக்கினை புய்த்துணரின் ஒழியுமென இதனுல் அஃதொழிதற்காரணங் கூறப்பட்டது. (கஅ)

கூடம் அதி.—சூது.

இனி அக்கள்ளுண்டல்போல அறம் பொருள் இன்பங்கட்கு இடையீடாகிய சூதாடலும் பிணியுழத்தலும் கூறுவான்றொடங்கி, முதற்கட் சூதினதியல்பு கூறு கின்றார்.

கூடஉ. வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதனூஉந்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று. உ.

இ - ள். வென்றிடினும் சூதினை வேண்டற்க - தான்வெல்லுமாற்றலுடையனு யினும் சூதாடலை விரும்பாதொழிக;—வென்றதனூஉம் தூண்டிற்பொன் மீன் விழுங்கி யற்று - வென்ற பொருளெய்துவார் உளராலெனின் அவ்வென்றபொருடானும் இரையான் மறைந்த தூண்டிலிரும்பினை இரையெனக்கருதி மீன் விழுங்கினற்போ லும். எ - று.

வேறல் ஒருதலையன்மையின் வென்றிடினுமென்றும், கருமங்கள் பலவுங்கெடு தலின் வேண்டற்கவென்றுங் கூறினர். எய்தியபொருள் சூதாவோர் நீங்காமைக்கு இட்டதோர் தளையென்பதனூஉம், அதனுற்பின் துயருழத்தலும், உவமையாற்பெற்றும்.

கூடஊ. ஒன்றெய்தி நூறிழக்குஞ் சூதர்க்கு முண்டாங்கொ
லன்றெய்தி வாழ்வதோ ராறு. ஊ.

இ - ள். ஒன்று எய்தி நூறு இழக்கும் சூதர்க்கும் - அத்தூண்டிற்பொன் போன்ற ஒன்றினை முன்பெற்று இன்னும் பெறுதலென்னுங் கருத்தால் நூற்றினையிழந்து வறிய ராஞ் சூதர்க்கும்—அன்று எய்தி வாழ்வது ஓராறு உண்டாங்கொல் - பொருளால் அறனுமின்பமுமெய்தி வாழ்வதொரு நெறியுண்டாமோ ஆகாது. எ - று.

அவ்வாற்றுப் பொருளிழக்தே வருதலான் அதனுலெய்தும்பயனும் அவர்க்கில்லை யென்பதாம். (உ)

கூடஎ. உருளாய மோவாது கூறிற் பொருளாயம்
போலுப்பு மூறுமே படும். எ.

இ - ள். உருள் ஆயம் ஓவாது கூறின் - உருளுக்கவற்றின்கட்பட்ட ஆயத்தை விடாது கூறிச் சூதாடுமாயின்,—பொருள் ஆயம் போய்ப் புறமே படும் - ஆசனீட்டியபொருளும் அவன்பொருள்வருவாயும் அவனைவிட்டுப்போய்ப் பகைவர் ணே தங்கும். எ - று.

கவற்றினதுருட்சியை அதனுடைய ஆயத்தின்மேலேற்றியும், சூதாடலை அது கூற காரணத்தின்மேலிட்டுக்கூறினர். பொருளாயமென்பது உம்மைத்தொகை. ஆயம் வடமொழித்திரிசொல். காத்தற்கண்ணும் இயற்றற்கண்ணும் சூத்திலுள்ள ஆன், அவையிரண்டும் பகைவர்பாற் செல்லுமென்பதாம். (க)

கூகூ. சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்
வறுமை தருவதொன் றில். ச.

இ - ள். சிறுமை பல செய்து சீர் அழிக்கும் சூதின் - தன்னை விழைத்தார்க்கு முன்னில்லாத துன்பங்கள் பலவற்றையும் விளைத்து உள்ளபுகழையும் கெடுக்குஞ் சூதுபோல்—வறுமை தருவது ஒன்று இல் - நல்குரவினைக் கொடுக்கவல்லது பிறி தொன்றில்லை. எ - று.

அத்துன்பங்கள் முன்னர்க் கூறுப. நல்வினைகளையும் நல்லினத்தையும் நீக்கித் தீவினைகளுடன் தீயினத்தையுங் கூட்டுதலால், சீரழிக்குமென்றார். வறுமைக்கு எல்லை யாவரென்பதாம். (ச)

கூகூ. கவறுங் கழகமுங் கையுந் தருக்கி
யிவறியா ரில்லாகி யார். ஞ.

இ - ள். இல்லாகியார் - முற்காலத்துத் தாமுளராகியே இலராகியொழிந்தார்—கவறும் கழகமும் கையும் தருக்கி இவறியார் - கவற்றினையும் அஃதாங்கனத்தினை யும் அவ்வாடற்குவேண்டுங் கைத்தொழிலினையும் மேற்கொண்டு கைவிடாத வேர் தர். எ - று.

கைத்தொழில் வெல்லுமாயம்படப் பிடிததெறிதல். அவ்விவருதலாற் பாண்ட வர் தம்மரசுவிட்டு வனத்திடைப்போய் ஆண்டுமறைந்தொழிந்தென அனுபவம் காட்டியவாறு. இவையைந்தபாட்டானும் அதனது வறுமைபயத்தற்குற்றங கூறப் பட்டது. (ஞ)

கூகூ. அகடாரா ரல்ல லுழப்பர்சூ தென்னு
முகடியான் மூடப்பட் டார். கூ.

இ - ள். சூது என்னும் முகடியான் மூடப்பட்டார் - தன்பெயர்சொல்லல் மன் னலமன்மையிற் சூதென்று சொல்லப்படும் முகடியான் விழுங்கப்பட்டார்—அகடு ஆரார் அல்லல் உழப்பர் - இம்மைக்கண் வயிறுரப்பெறார்; மறுமைக்கண் நிரயத் துன்பமுழப்பர். எ - று.

செல்வங்கெடுத்து நல்குரவுகொடுத்தற்றொழில் வேறுபடாமையிற் சூதென்னு முகடியென்றும், வெற்றிதோல்விகளுக்கு ஒருபொழுதும் விடாராகலின் ஈண்டு அகடாரார்என்றும், பொய்புங்களவும் முதலிய பாவங்களீட்டலின் ஈண்டு அல்லலு முழப்பரென்றுங்கூறினர். வயிறாரமை சொல்லவே, ஏனைப்புலன்களுரபபெறுமை சொல்லவேண்டாவாயிற்று. உழப்பரென்பது எதிர்காலவினை. (ஈ)

கூடீ. பழிய செல்வமும் பண்புங் கெடுக்குஞ்
கழகத்துக் காலை புகின். எ.

இ - ள். காலை கழகத்துப் புகின் - அறம் பொரு ளின்பங்கட்கடைத்தகாலம் அரசனுக்குச் சூதாகளத்தின்கட்கழியுமாயின்,—பழைய செல்வமும் பண்பும் கெடுக்கும் - அக்கழிவு தொன்றுதொட்டுவந்த அவன்செல்வத்தினையும் நற்குணங்களையும் போக்கும். எ - று.

பழியெனபது பண்புடனுமையையும். தான் செய்துகொள்ளும் அறமுதலிய வேயன்றி முன்னோரைத்தொடங்கி வருகின்றசெல்வமும் முன்செய்த நல்வினையின் பயனுய பண்பும் இலவாமென்பதாம். (எ)

கூடீஅ. பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ யருள்கெடுத்
தல்ல லுழப்பிக்குஞ் சூது. அ.

இ - ள். சூது - சூது—பொருள் கெடுத்து - தன்னேப்பயின்றவன்பொருளைக்கெடுத்து,—பொய் மேற்கொளீஇ - பொய்யை மேற்கொள்ளப்பண்ணி,—அருள் கெடுத்து - மனத்தெழும் அருளேக்கெடுத்து,—அல்லல் உழப்பிக்கும் - இவ்வாற்ருன் அவனே இருமையினும் துன்பமுறுவிக்கும் எ - று

இத்தொழில்கண்மூன்றற்கும் சூது வினேமுதலாகவும், தோல்வி, வெற்றி, செற்றமென்பன முறையே கருவிகளாகவுங்கொள்க. முன்னதனுன் இம்மையினும், வினேயவற்ருன் மறுமையினுமாம். பொருள்கொடுத்தென்பது பாடமாயின், அவ்வெச்சத்திற்குமுடிவு மேற்கொளீஇயென்புழி மேற்சோடலாகிய வினேமுதல்வினே. (அ)

கூடீக. உடைசெல்வ மூணுளி கல்வியென் றைந்து
மடையாவா மாயங் கொளின். கூ.

இ - ள். ஆயம் கொளின் - அரசன் சூதினேத தனக்கு வினேதத்தொழிலாக விரும்புமாயின்,—ஒளி கல்வி செல்வம் ஊண உடை. எனறு ஐந்தும் அடையாவாம் - அவனே ஒளியும் கல்வியும் செல்வமும் ஊணும் உடையுமென்றிவ்வைந்துஞ் சாரா வாம். எ - று.

ஆயம் ஆகுபெயா. இசைநிறப்புமூறை செய்யுணேக்கிப் பிறழநின்றது. செல்வம் அறுவகைபுறுப்புக்கள். ஊணுடையென்பனவற்ருல் துப்புரவுகளெல்லாங கொள்ளப்படும். காலமும் கருத்தும் பெருமையின், இவையுளவாகாவென்பதாம். இவை நான்கு பாட்டானும் சிறுமைபலசெய்து அவறருளிருமையுங்கெடுத்தல் கூறப்பட்டது. (க)

கூசo. இழத்தொறூஉங் காதலிக்குஞ் சூதேபோற்றுன்ப
மூழத்தொறூஉ மதன காதற துயிர். கo.

இ - ள். இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் - சூதாடலான் இருமைப் பயன்களேயுமிழக்குந்தோறும் அதன்மேற காதல்செய்யுஞ் சூதன்போல—துன்பம் ஊழத்தொறூஉம் காதற்ற உயிர் - உடம்பான் மூவகைத்துன்பங்களேயும் அனுபவிக்குந்தோறும் அதன்மேற் காதலையுடைத்து உயிர். எ - று.

சூது சூதுபெயர். உயிரினதறியாமை கூறுவார்போன்று சூதனதறியாமை கூறுதல் கருத்தாகலின், அதனேயாப்புறுத்தற்பொருட்டே உவமமாக்கிக்கூறினர். இத மெய்ர்மறைமுகத்தாற் சூதினேவெறுத்தொழிவானேயொக்கும் உடம்பினே வெறுத்

நோயாளியென்னவுங்கொள்க இதனுண் அஃதொழிதற்கருமையும் ஒழிக்தாரது பெருமையும் கூறப்பட்டன. (50)

கூறும் அதி.—மருந்து.

பழவினையானும் காரணங்களானும் மகசட்கு வாதமுதலிய பிணிகள்வரும்; அவற்றுட் பழவினையான்வருவன அதன்கழிவின்கணல்லது தோமையின் அகலாவொழித்து, வினைக்காரணங்களான் வருவனவற்றை நிக்கும் மருந்தின்றிறங்கூறுன்றார். காரணங்களாவன உணவுசெயல்களதொவ்வாமையாகலின், பிணிகளுங் காரணத்தான் வருவனவாயின

கூசக. ஏதினும் குறைபிழு நோய்செய்பு நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று. க

இ - ள். மிகினும் குறையினும் - உணவுஞ் செயல்களும் ஒருவன்பருகிக்கொத்த வளவினவன்றி அதனின் மிகவாயினும் குறையுமாயினும்,—நூலோர் வளிமுதலா எண்ணிய மூன்றும் நோய் செய்யும் - நூல்வேதமுடையோரால் வாதமுதலாக வெண்ணப்பட்ட மூன்றுநோயும் அவருக்குத் தின்பஞ்செய்யும். எ - று.

நூலோரெண்ணியவென்னவே, அவர் அவற்றுள்வருத்த வாதப்பகுதி பித்தப்பகுதி ஐப்பகுதியென்னும் பகுதிப்பாடும் பெற்றும் அவற்றிற்குணவொத்தலாவது சுவை வீரியங்களானும் அளவானும் பொருத்துதல். செயல்களொத்தலாவது மனமொழி மெய்களாற்செய்யுந் தொழில்களை அவை வருந்துவதற்கு முன்னேயொழிதல். இவை இரண்டும் இங்ஙனமன்றி மிகுதல் குறைதல்செய்யின், அவை தத்தங்கிலேயினில்லாவாய் வருத்துமென்பதாம். காரணமிரண்டும் அவாய்நிலையான் வந்தன. முற்றும்மை விகாரத்தாற்றொக்கது. இதனுள் யாக்கைகட்கியல்பாகிய நோய் மூலவகைத்தென்பதூஉம், அவை தின்பஞ்செய்தற்காரணம் இருவகைத்தென்பதூஉம் கூறப்பட்டன இன்பஞ் செய்தற்காரணம் முன்னர்க்கூறுப. (க)

கூசஉ. மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி யுணின். உ.

இ - ள். அருந்தியது அற்றது போற்றி உணின் - ஒருவன் முன்னுண்டது அற்ற படியைக் குறிகளாற்றெரியவறிந்து பின்னுண்ணுமாயின்,—யாக்கைக்கு மருந்து என வேண்டாவாம் - அவன் யாக்கைக்கு மருந்தென்று வேறுவேண்டாவாம். எ-று.

குறிகளாவன யாக்கைநெய்ம்மை, தேக்கின்றாய்மை, காரணங்கடொழிற்குரிய வாதல், பசியிருதலெனவிவை முதலாயின. பிணிகள் யாக்கையவாகலின், யாக்கைக் கென்றார். உணினென்பது அதனருமை தோன்றநின்றது. (உ)

கூசஊ. அற்ற ளவறிந் துண்க வஃதிடம்பு
பெற்ற தெடிதுய்க்கு மாறு. ஊ.

இ - ள். அற்றல் அளவு அறிந்து உண்க - முன்னுண்டது அற்றற் பின்னுண் பதனை அதனளவறிந்து அவ்வளவிற்றாக உண்க,—உடம்பு பெற்றான் நெடிது உய்க்கும் ஆறு அஃது - இறப்பவும்பலவாய பிற யாக்கைகளிற்பிழைத்துப் பெற்கரிய இம்மானுடயாக்கையைப் பெற்றான் அதனை நெய்கோலஞ்சொன்னே செலுத்துநெறி அதுவாகலான். எ - று.

இம்மை மறுமை வீடுபேறுகளெய்தற்பால தொன்றுமேயாகலின் உடம்பு பெற்றுளென்றும், அது நெடுநின்றழி அவைபெருகச்செய்து கொள்ளலாமாகலின் நெடிதுய்க்குமாறென்றுங்கூறினர். பெற்றுளென்று பாடமோதுவாருமுளர். (கூ)

கூசச. அற்ற தறிந்து கடைப்பிடித்து மா.....
துய்க்க துவரப் பசித்து.

இ - ள். அற்றது அறிந்து - முன்னுண்டது அற்றபடியையறிந்து,—துவரப் பசித்து - பின் மிகப்பசி*த்து,—மாறல்ல கடைப்பிடித்துத் துய்க்க - உண்ணுங்கால் மாறுகொள்ளாத உணவுகளைக் குறிக்கொண்டுண்க. எ - று.

அற்றதறிதென்னும் பெயர்த்துரை* அதனை யாப்புறுத்தற்பொருட்டு. உண்டது அவற்றாலும் அதன்பயனுகிய இரதமாதுதாகலான் அதுவுமறல்வேண்டுமென்பார், மிகப்பசித்தென்றார். பசித்தல்வினை ஈண்டு உடையான்மேனின்றது. மாறுகொள்ளாமையாவது உண்பான் பகுதியோடு மாறுகொள்ளாமையும், காலவியல்போடு மாறுகொள்ளாமையும், சுவை வீரியங்களாற்றம்முண் மாறுகொள்ளாமையுமாம். அவையாவன முறையே வாதபித்த ஐகளாலுய பகுதிக்கடாதவற்றைச் செய்வனவாதலும், பெரும்பொழுது சிறுபொழுதென்னுங் காலவேறுபாடுகளுள் ஒன்றற்காவன பிறிதொன்றற்காகாமையும், தேனுநெய்யுந் தம்முளளவொத்து நஞ்சாதல் போல்வனவுமாம். அவற்றைக் குறிக்கொள்ளாது மனம்பட்டவாற்றூற்றுய்ப்பின் அதனானே நோயும் மரணமும் வருதலின், கடைப்பிடித்தென்றார். (ச)

கூசரு. மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணி
னூறுபா டில்லை யுயிர்க்கு. ரு.

இ - ள். மாறுபாடு இல்லாத உண்டி மறுத்து உண்ணின் - அம்மூவகை மாறுகோளுமில்லாத உணவைத்தன்னுள்ளம் வேண்டியவளவினுனன்றிப் பிணிவாராவளவினுல் ஒருவனுண்ணுமாயின்,—உயிர்க்கு ஊறுபாடு இல்லை - அவனுயிர்க்குப் பிணிகளாற்றுன்பம் வீளைதலுண்டாகாது. எ - று.

உறுவதனை ஊறென்றார், அஃது இன்பத்திற்செல்லாதாயிற்று, இல்லையென்பது தொடர்பாகலின், துன்பமுறுவது உயிரேயாதலின், அதன்மேல்வைத்துக் கூறினர். மாறுபாடில்லவழியுங் குறைதல் நன்றென்பதாம். இவைகான்குபாட்டானும் உண்ணப்படுவனவும், அவற்றதளவும், காலமும். பயனும் கூறப்பட்டன. (ஞ)

கூசசு. இழிவறிந் துண்பான் கணின்பம்போ னிற்கும்
கழிபே ரிரையான்க ணோய். சு.

இ - ள். இழிவு அறிந்து உண்பான்கண் இன்பம்போல் - அக்குறைதலொன்றென்றறிந்து அவ்வாறேயுண்பவன்மாட்டு இன்பம் நீங்காது நிலைநிற்குமாறு போல்,—கழிபேர் இரையான்கண் நோய் நிற்கும் - மிகப்பெரியவிரையை விழுங்குவான்மாட்டு நோய் நீங்காது நிலைநிற்கும். எ - று.

அவ்வாறேயுண்டல் உண்ணலாமனவிற் சிறிது குறையவுண்டல். இன்பமாவது வாதமுதலியமூன்றும் தத்தநிலையிற்றிரியாமையின் மனமொழிமெய்கள் அவன் வயத்தவாதலும் அதனுன் அறமுதலிய நான்குமெய்தலுமாம். இரையையளவின்றியெடுத்து அதனுன் வருத்தும் விலங்கோடொத்தலின், இரையானென்றார். விதியெனிர்மறை சினை உவமமும் பொருளுமாகியது இரண்டாஞ் பெறுதற்கு. (அ)

* பெயர்த்துரை - அதனாதம்.

கூசஎ. நியன வன்றித்தெரியான் பெரிதுண்ணி
ஞெயன வின்றிப் படும். எ.

இ - ள். தெரியான் நீ அளவு அன்றிப் பெரிது உண்ணின் - தன்பருநியும் அதற் கற்றவுணவும் காலமுமாராயாது வேண்டியதோருணவை வேண்டியதோர் காலத்து நீக்கியுண்ணாதொழிகவன்றி ஒருவன் மிகவுண்ணுமாயின்,—நோய் அளவு இன்றிப் படும் - பலவாட்டு நோய்கள் எல்லையற வளரும். எ - று.

தெரியாமை வினைக்குச் செயப்படுபொருள்கள் அதிகாரத்தான் வந்தன. நோய் - நிலையாமை. இவையிரண்டுபாட்டானும் அவ்வகையுண்ணுவழிப்படு மிழுக்குரைப்பட்டது. (எ)

கூசஅ. நோய்நாடி நோய்மூத லுடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். அ.

இ - ள். நோய் நாடி - மருத்துவனுயினுன் ஆதுரன்மாட்டு நிகழ்கின்ற நோயை அதன் குறிகளான் இன்னதென்ற துணிந்து,—நோய் முதல் நாடி-பின் அது வருதற் காரணத்தை ஆராய்ந்து தெளிந்து,—அது தணிக்கும் வாய் நாடி - பின் அதுநீர்க்கு முபாயத்தினையறிந்து,—வாய்ப்பச் செயல் - அதனைச் செய்யும்வழிப் பிழையாமற் செய்க. எ - று.

காரணம் உணவுசெயலென மூற்கூறியவிரண்டும். அவற்றை ஆயுள்வேதமுடையார் நிதானமென்ப. அவை நாடுதற்பயன் நோயினையும் வாயினையும் ஐயமறத்துணிதல். மருத்துசெய்தல், உநிரங்களைதல், அறுத்தல், சுடுதன்முதலிய செயல்களெல்லாம் அடங்குதற்கு, அதுதணிக்கும்வாயென்றார். "கழுவாயுமுளக" என்றார்பிறரும். பிழையாமை பழைய மருத்துவர் செய்துவருகின்ற முறைமையிற்றப்பாமை. (அ)

கூசக உற்ற னளவும் பிணிபளவுங் காலமுங்
கற்றன் கருதிச் செயல். கூ.

இ - ள். கற்றன் - ஆயுள்வேதத்தினைக் கற்ற மருத்துவன்,—உற்றன் அளவும் பிணி அளவும் காலமும் கருதிச் செயல் - அவ்வுபாயத்தினைச் செய்யுங்கால், ஆதுரனளவினையும் அவன்கணிகழ்கின்ற நோயினளவினையும் தன்செயற்கேற்ற காலத்தினையும் அந்நூனெறியால் நோக்கி, அவற்றோடு பொருந்தச்செய்க எ - று.

ஆதுரனளவு பருநி பருவம் வேதனை வலிகளினளவு. பிணியளவு சாத்தியம், அசாத்தியம், யாப்பியமென்னுஞ் சாதிவேறுபாடும்†, தொடக்க நவ்வீறென்னும் அதன் பருவ வேறுபாடும், வன்மைமென்மைகளுமுதலாயின. காலம் மேற்சொல்லியன. இம்மூன்றும் பிழையாமல் நூனெறியானும் உணர்வுமிருநியானும் ஆராய்ந்து செய்க வென்பார், கற்றன்கருதிச்செயலென்றார். இவையிரண்டுபாட்டானும் அவ்வீழுக்குப் பட்டுழி மருத்துவன்நீர்க்குமாறு கூறப்பட்டது. (க)

கூஎ0. உற்றவன் நீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்
றப்பானும் கூற்றே மருந்து. க0.

---

* புறநானூறு, கச.

† சாத்தியம் நிச்சயத்தக்கது. அசாத்தியம் நிச்சயத்தகாதது. யாப்பியம் பெரும்பான்மை நிச்சயத்தக்கதும் நெறின்மை நிச்சயத்தாதகுமெனச் சொன்னத்தக்கது.

இ - ள். மருத்து - பிணிக்கு மருந்தாவது—உற்றவன் - அதனையுற்றவன்,—ஓப்பான் - அதனைத் தீர்க்குமருத்துவன்,—மருத்து - அவனுக்குக் கருவியாயெமருந்து,—உழைச் செல்வான் என்ற அப்பால் நாற்கூற்று - அதனைப்பிழையாமல் இயற்றுவா னென்று சொல்லப்பட்ட நான்குபகுதியையுடைய நான்கு நிறத்தது. எ - று.

நான்கென்னு மெண்வருகின்றமையின், அதனோக்கி அப்பாலென்றெழுதிக்காட்டினார். நாற்கூற்றதென்பது விகாரமாயிற்று. அவற்றுள் உற்றவன்வகை நான்காவன பொருளுடைமை, மருத்துவன்வழிநிற்றல், நோய்நிலையுணர்த்தல்வன்மை, மருத்துத்தன்பம் பொறுத்தலெனவிவை. தீர்ப்பான்வகைநான்காவன நோய்கண்டஞ்சாமை, ஆசிரியனைவழிபட்டோதிய கல்வியுடைமை, பலகாலுந்தீர்த்தவருதல், மனமொழிமெய்களேயவாதலெனவிவை. மருந்தின்வகைநான்காவன பலபிணிகட்குமேற்றல், சுவை வீரியம் விளாவாற்றல்களான்மேம்படுதல், எளிதினெய்தப்படுதல், பகுதியோடொருந்துதலெனவிவை. இயற்றுவான்வகை நான்காவன ஆதரன்மாட்டன்புடைமை, மனமொழிமெய்களேயவாதல், சொல்லியன அவ்வாறே செய்தல் வன்மை, அறிவுடைமையெனவிவை. இவையெல்லாங்கூடியவழியல்லது பிணி நீராமையின், இத்தொகுதியையும் மருந்தென்றார். ஆயுள்வேதமுடையாரும் இவை கால்களாக நடக்குமென்பதுபற்றிப் பாதமென்றும், இவை மாறுபட்டவழிச் சாத்தியமுமுதிர்ந்து அசாத்தியமாமென்றுங் கூறினர். இதனால் அதனைத் தீர்த்தற்கு வேண்டுவனவெல்லாந் தொகுத்துக் கூறப்பட்டன. (கo)

அங்கவியல் முற்றிற்று.

ஒழிபியல்.

இனி அவ்வரசியலினும் அங்கவியலினும் அடங்காதொழிந்தவற்றதியல்பு பதின்மூன்றதிகாரத்தாற் கூறுவான்றொடங்கி, முதற்கட் குடிமை கூறுகின்றார்.

கூகூ ம் அதி.—குடிமை.

அஃதாவது உயர்ந்த குடியின்கட்பிறந்தாரது தன்மை. உயர்ந்த குடிப்பிறப்பு நால்வகைவருணத்தார்க்கும் இன்றியமையாதாகலின், அச்சிறப்புப்பற்றி இது முன் வைக்கப்பட்டது.

கூடுக. இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை யியல்பாகச்
செப்பமு நாணு மொருங்கு. க

இ - ள். செப்பமும் நாணும் ஒருங்கு - செம்மையும் நாணும் சேர—இற்பிறந்தார் கண் அல்லது இயல்பாக இல்லை - குடிப்பிறந்தார்மாட்டல்லது பிறர்மாட்டியற்கையாக உளவாகா. எ - று.

இல்லுக் குடி குலமென்பன ஒருபொருள; ஈண்டுயர்ந்தவற்றின்மேல. செம்மை சருத்துஞ் சொல்லுஞ் செயலுந்தம்முண் மாறுகாமை. நாண் பழிபாவங்களின் மடங்குதல். இவை இற்பிறந்தார்க்காயின் ஒருவர் கற்பிக்கவேண்டாமற் முமேபுனவாம், பிறர்க்காயிற் கற்பித்தவழியும் தெடுதில்லாவென்பதாம். (க)

கூடுக. ஒழுக்கமும் வாய்மையு நாணுமிம் மூன்று
மிழுக்கார் குடிப்பிறந் தார். உ

இ - ள். குடிப் பிறந்தார் - உயர்ந்தகுடியின்கட் பிறந்தார்—ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இம்மூன்றும் இழுக்கார் - தமக்குரிய ஒழுக்கம் மெய்ம்மை நாணென்னப்பட்ட இம்மூன்றன்கண்ணும் கல்வியானன்றித் தாமாகவே வழுவார். எ - று.

ஒழுக்கமுதலியன மெய்ம்மொழி மனங்களினவாகலின், அம்மூன்றையுமாயின. இழுக்குதல் அறியாது வருகின்றமையின், இழுக்காரென்றார். (உ)

கூறுக. நகையிகை யின்சொ லிகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு கூ.

இ - ள். வாய்மைக் குடிக்கு - எக்காலத்துந் நிரிபில்லாத குடியின்கட்பிறந்தார்க்கு—நகை ஈகை இன்சொல் இகழாமை நான்கும் வகை என்ப-வறியார் சென்ற வழி முகமலர்ச்சியும், உள்ளனகொடுத்தலும், இன்சொற்சொல்லுதலும், இகழாமையுமாகிய இந்நான்கும் உரிய கூறென்று சொல்லுவர் நூலோர். எ - று.

பொய்ம்மை நிரிபுடைமையிற் நிரிபின்மையை வாய்மையென்றும், *இல்லாரையெல்லாருமெள்ளுவராகலின் இகழாமையை அவர் கூருக்கியுங்கூறினர். குடி மூன்று பெயர். நான்கின்வகையென்பதுபாடமாயின், வாய்மைக்குடிப்பிறந்தார்க்குப் பிறரின் வேறுபாடு இந்நான்காலுனதாமென்றுரைக்க. இவைமூன்றுபாட்டாலுங் குடிப் பிறந்தாரதியல்பு கூறப்பட்டது. (ஊ)

கூறுச. அடுக்கிய கோடி பெறினுங் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்த லிலர். ச.

இ - ள். அடுக்கிய கோடி பெறினும் - பலவாகவடுக்கிய கோடியளவிற்றாய பொருளைப் பெற்றாராயினும்,—குடிப்பிறந்தார் குன்றுவ செய்தல் இலர் - உயர்ந்த குடியின்கட்பிறந்தார் தம்மொழுக்கங் குன்றுந் தொழில்களைச் செய்யார். எ - று.

அடுக்கியகோடியென்பது ஈண்டெண்ணப்படும் பொருண்மேனின்றது. குன்றுந்தொழில்கள் குன்றுதற்கேதுவாய தொழில்கள். (எ)

கூறுடு. வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரித லின்று. டு.

இ - ள். பழங்குடி - தொன்றுதொட்டுவருகின்ற குடியின்கட்பிறந்தார்—வழங்குவது உள்வீழ்ந்தக்கண்ணும் - தாங்கொடுக்கும்பொருள் பண்டையிற் சுருங்கிய வீடத்தும்—பண்பின் றலைப்பிரிதல் இன்று - தம்பண்புடைமையின் நீங்கார். எ - று.

தொன்றுதொட்டுவருதல் சேர சோழ பாண்டியரென்றாற்போலப் படைப்புக் காலந்தொடங்கி மேம்பட்டுவருதல். அவர்க்கு நல்குரவாவது வழங்குவது உள்வீழ்வதாகலின், அதனையே கூறினர். (ஏ)

கூறுக. சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற
குலம்பற்றி வாழ்துமென் பார். கூ.

இ - ள். மாசு அற்ற குலம் பற்றி வாழ்தும் என்பார் - வசையற்ற வருகின்ற நன்குடிமாபிலுதொடர்ந்து வாழக்கடவேமென்றகருதி அவ்வாறு வாழ்வார்,—சலம்

* திருக்குறள், எசுஉ.

பற்றிச் சால்பு இல செய்யார் - வறுமையுற்றவழியும், வஞ்சனையைப்பொருந்தி, அமை வில்லாய தொழில்களைச் செய்யார். எ - று.

அமைவின்மை அம்மரபிற் கேலாமை. இவை மூன்றுபாட்டானும் அவர் வறுமை யுற்றவழியும் அல்லியல்பின் வேறுபடாரென்பது கூறப்பட்டது. (ஃ)

கூறிஎ. குடிப்பிறந்தார் கண்விளங்குங் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போ லுயர்ந்து. எ.

இ - ள். குடிப் பிறந்தார்கண் குற்றம் - உயர்ந்தகுடியின்கட்பிறந்தார்மாட்டே தாய்குற்றம்—விசும்பின் மதிக்கண் மறுப்போல் உயர்ந்து விளங்கும் - தான்றிதே யாயினும் விசும்பின்கண் மதியிடத்து மறுப்போல ஒங்கித்தோன்றும். எ - று.

உயர்குடிமுதலிய பொருள்வகைமூன்றற்கும் விசும்பு முதலிய உவமைவகை யொத்துப் பான்மாறுபட்டது. குடியதுயர்ச்சியொனும் மதிபோன்ற அவர் சற்குணங் களோடு மாறுதலானும், உலகெங்கும் பரந்து வெளிப்படுமென்பதாம். (எ)

கூறிஅ. நலத்தின்க ணீரின்மை தோன்றி னவனைக்
குலத்தின்க ணீயப் படும் அ.

இ - ள். நலத்தின்கண் ணார் இன்மை தோன்றின் - குலாலமுடையனுய் வரு கின்றவன்கண்ணே ஈரமின்மையுளதாமாயின்,—அவனைக குலத்தின்கண் ஐயப்படும்— அவனை அக்குலப்பிறப்பின்கண்ணே ஐயப்படும் உலகம். எ - று.

நலமும் குலமும் ஆகுபெயர். நாரின்மையாற்கொடாமையுங கடுஞ்சொல்லுமுத லிய கூறப்பட்டன. தோன்றினென்பது தோன்றுமை விளக்கின்றது. நலனுடைய னுய்வருதலினிடையே இவைதோன்றலின், உள்ளது ஐயமாயிற்று. உலகமென்பது அவாய்நிலையான் வந்தது ஐயப்படலென்பது பாடமாயின், ஐயப்படுகவென விதி யாக்கியுரைக்க இவையிரண்டுபாட்டானும் வேறுபட்டவழிப் படுமிழுக்குக் கூறப் பட்டது. (அ)

கூறுகூ. நிலத்திற் கிடந்தமை கால்காட்டுங் காட்டுங்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல். கூ.

இ - ள். நிலத்திற் கிடந்தமை கால் காட்டும் - நிலத்தினியல்பை அதன்கண் முளைத்த முளை காட்டும்;—குலத்திற் பிறந்தார் வாய்ச் சொல் காட்டும் - அதுபோலக் குலத்தினியல்பை அதன்கட்பிறந்தார்வாயிற் சொற்காட்டும். எ - று.

கிடந்தமை உள்ளபடி முளைத்தமாத்திரத்தானே நன்மையுந் தீமையுந்தெரி தலின், இலைமுதலிய கூறுராயினுர்; ஆகவே, பொருளினுஞ் செயன்முதலியன வேண் டாவாயின. குலத்தியல்பறிதற்கருவி கூறுவார்போன்று, இன்சொல் வேண்டுமென்ற வாருயிற்று. (க)

கூகூ0. நலம்வேண்டி ஞானுடைமை வேண்டும் குலம்வேண்டின்
வேண்டுக பார்க்கும் பணிவு. கூ0.

இ - ள். நலம் வேண்டின் ஞான் உடைமை வேண்டும் - ஒருவன் தனக்கு நல னுடைமையை வேண்டுவனுயின், ஞானுடையனுதலை வேண்டுக—குலம்வேண்

[1] யார்க்கும் பணிவு வேண்டுக - குலனுடைமையை வேண்டுவனுயின், பணியப்பட [2] யாவர்மாட்டும் பணிதலை வேண்டுக. எ - று.

கலம் புகழ் புண்ணியங்கள். வேண்டுமென்பது விதிப்பொருட்டாய் நின்றது, வேண்டப்படு தொகுதியி னும்மை வேண்டும்* என்புழிப்போல. அந்தணர் சான்றோர் ஈருந்தவத்தோர் தம்முன்னோர் தந்தை தாயென்றிவ † செல்லாருமடங்க, யார்க்கு மென்னுர். பணிவு இருக்கை யெழலும் எதிர்செலவும் முதலாயின. இவையிரண்டோட் டானும் குடிமைக்கு வேண்டு ஈ கூறப்பட்டன. (எ0)

கூளம் அதி.—மானம்.

இனிக் குடிப்பிறந்தார்க்கு உரியவாய குணங்கள் கூறவான்றொடங்கி, முதற் கண் மானங்கூறுகின்றுர். அஃதாவது எஞ்ஞான்றுந் தன்னிலையிற்ருழாமையும், தெய் வத்தாற்ருழ்வுவந்துழி உயிர்வாழாமையுமாம். இஃது, அக்குடிப்பிறப்பினே நிறுத்த லுடைமையின், அச்சிறப்புப்பற்றி முன் வைக்கப்பட்டது.

கூஈ இன்றி யமையாச் சிறப்பின வாயினுங்
குன்ற வருப விடல். க.

இ - ள். இன்றி அமையாச் சிறப்பின ஆயினும் - செய்யாதவழித் தாம் அமை யாத சிறப்பினையுடையவேயெனினும்,—குன்ற வருப விடல் - தங்குடிப்பிறப்புத் தாழ வருஞ்செயல்களேயொழிக. எ - று.

அமையாமை இறத்தல். குடிப்பிறப்பென்பது அதிகாரமுறைமையான் வந்தது. இறப்பவருவழி இனிவந்தன செய்தாயினும் உய்கவென்னும் வடநூன் ‡ முறைமையை மறுத்து, உடம்பினது நிலையின்மையையும் மானத்தினது நிலையுடைமையையுந்தேர்ந் தவை செய்யற்கவென்பதாம். (எ)

கூஉ. சிரினுஞ் சிரல்ல செய்யாரே சிரொடு
பேராண்மை வேண்டு பவர். உ.

இ - ள். சிரினும் சீர் அல்ல செய்யார் - புகழ்செய்யுமிடத்தும் தங்குடிமைக் கொவ்வாத இனிவரவுகளைச் செய்யார்—சிரொடு பேராண்மை வேண்டுபவர் - புகழு டனே மானத்தை நிறுத்துதலே விரும்புவார். எ - று.

எவ்விடத்தும் நிலைகுலையாத திண்மையான் உளதாதல்பற்றிப் பேராண்மையெ னப்பட்டது. நிலையுடைய புகழின்பொருட்டாகவுஞ் செய்யாதென்பதாம். (உ)

கூஊ. பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டு முயர்வு. ஙூ.

இ - ள். பெருக்கத்துப் பணிதல் வேண்டும் - குடிப்பிறந்தார்க்கு நிறைந்த செல்வ முளதாயவழி யாவர்மாட்டும் பணிவு வேண்டும்;—சிறிய சுருக்கத்து உயர்வு வேண் டும் - குறைந்த செல்வமுளதாயவழிப் பணியாமை வேண்டும். எ - று.

---

* தொல்காப்பியம், வினையியல், கக.

† வெண்பாமாலே, பாடாண்படலம், கக. ‡ மநுஸ்மிருதி, அத், கஅ, எஅோ, கoச.

பனியானை தாழ்வு வாராமற் பழையவுயர்ச்சிக்கண்ணே நிற்றல். தெற்வக்காலே அஃதுயர்ச்சி செய்யத் தாந்தாழ்தலும், அல்லற்காலே அது தாழ்வுசெய்யத் தாமுயர்தலும், வேண்டுமென்பதாம். இவைமூன்றுபாட்டானும் தாந்தாழ்தற்கேதுவாயின செய்கைமச் சிறப்புக் கூறப்பட்டது. (கூ)

கூகூ. தலேபி னிழிந்த மயி-னேயர் மான்தர்
நிலேபி னிழிந்தக் கடை. ச.

இ - ள். மான்தர் - குடிப்பிறந்த மான்தர்,—நிலேயின் இழிந்தக்கடை - தம்முயர்ந்த நிலேயை விட்டு அதனினின்றுந்தாழ்ந்தவழி,—தலேயின் இழிந்த மயிர் அனேயர் - தலேயைவிட்டு அதனினின்றும் வீழ்ந்த மயிரினேயொப்பர். எ - று.

அந்நிலேயை விடாதுநின்றவழிப் பேணப்படுதலும், விட்டுத்தாழ்ந்தவழி இழிக்கப்படுதலும், உவமையாற்பெற்றாம். (ச)

கூகூறு குன்றி னனேயாருங் குன்றுவர் குன்றுவ
குன்றி யனேய செயின். நு.

இ - ள். குன்றின் அனேயாரும் - குடிப்பிறப்பான் மலேபோலவுயர்ந்தோரும்,—குன்றுவ குன்றி அனேய செயிற் குன்றுவர் - தாழ்தற்கேதுவாகிய செயல்களே ஒருகுன்றியனவாயினுஞ் செய்வராயிற்றாழ்வர். எ - று.

குன்றியனேயவுமென்னும் இழிவுசிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. தாழ்தற்கேதுவாய செயல்களாவன இளிவந்தன. சொற்பின்வருநிலே. (ஞ)

கூகூசு. புகழின்றுற் புதேதணுட் டெய்யாதா லெண்மற்
றிகழ்வார்பின் சென்று நிலே. கூ.

இ - ள். இகழ்வார்பின் சென்று நிலே - மானத்தை விட்டுத் தன்னேயவமதிப்பார் பின்னே ஒருவன்சென்று நிற்கின்றநிலே—புகழ் இன்று - இவ்வுலகத்துப் புகழ் பயவாது;—புத்தேள் நாட்டு உய்யாது - எனப் புத்தேளுலகத்துச் செலுத்தாது,—மற்று என் - இனி அவனுக்கு அது செய்வதியாது! எ - று.

புகழ் பயப்பதனேப் புகழென்றார். பயனுய இவ்விரண்டுமின்றிக் கொன்னே மானங்கெடுகின்றது என்னேயென்பதாம். இவைமூன்றுபாட்டானும் அவை செய்தற் குற்றங் கூறப்பட்டது. (ஈ)

கூகூஎ. ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலி னங்நிலேயே
கெட்டா னெனப்படுத னன்று. எ.

இ - ள். ஒட்டார் பின் சென்ற ஒருவன் வாழ்தலின் - தன்னேயிகழ்வார்பின்னே சென்று பொருள்பெற்று அதனலொருவன் உயிர்வாழ்தலின்,—அந்நிலேயே கெட்டான் எனப்படுதல் நன்று - அது செய்யாது இறந்தானென்று சொல்லப்படுதல் அவனுக்கு நன்று. எ - று.

ஒட்டுதல் பொருத்துதல். அந்நிலேயேயென்றது செல்லாத முன்னிலேக்கண்ணே நின்றென்றவாறு; அப்பொழுதேயென்றுமாம். புகழும் புத்தேளுலகும் பயவாதேனும் பொருள்பெற்று உயிர்வாழ்வானென்பாரை நோக்கிக் கூறியது. (எ)

கூஅ. மருந்தோமற் றூணெம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து. அ.

இ - ள். பெருந்தகைமை பீடு அழிய வந்தவிடத்து - உயர்குடிப்பிறப்புத் தன் ... இம் மானம் அழியவந்துழி,—ஊன் ஓம்பும் வாழ்க்கை மற்று மருந்தோ - இதற் ...ழிந்து பயனில்லாதவுடம்பினைக் காக்கும் வாழ்க்கை பின்னுமிறவாமைக்கு ...ோ! எ - று.

மற்றென்பது மேற்சொல்லிய இறப்பினை மாற்றிநின்றது. ஈற்குணங்கட்கெல் ...ம்இடனுதற்சிறப்புப்பற்றிப் பெருந்தகைமையென்றும், அவையெல்லாவற்றுள்ளும் தற்கு வலியாதற்சிறப்புப்பற்றிப் பீடென்றும், அஃதிழந்தால் நின்றவெற்றுடம்பு ...தலினை அதனை ஊனென்றும், பின்னுமிறத்தல் ஒருதலையென்பார் ...தோவென்றுங் கூறினர் மானத்தின்மெழில் அதற்கிடனுடைய குடிப்பிறப்பின் ...னின்றது. (அ)

கூஆ. மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னர்
உயிர்நீப்பர் மானம் வரின். கூ.

இ - ள். மயிர் நீப்பின் வாழாக கவரிமா அன்னர் - தன்மயிர்த்திரளின் ஒருமயிர் ...ினும் உயிர்வாழாத கவரிமாவையொப்பார்,—மானம் வரின் உயிர் நீப்பர் - உயிர் ...த் தான்மானமெய்துமெல்லாவரின், அதனைத் தாங்காதிறப்பர். எ - று.

இழிவுசிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. உயிரும் மானமும் உடனில்லாமைக் பின்னும் போவதாய உயிரைநீத்து எஞ்ஞான்றும் நிற்பதாய மானத்தையெய் ...தென்பதாம். உவமை அவர்க்கு அஃதியல்பென்பது விளக்கி நின்றது. (க)

கூஎ0 இளிவரின் வாழாத மான முடையார்
ஒளிதொழு தேத்து முலகு. க0.

இ - ள். இளி வரின் வாழாத மானம் உடையார் ஒளி - தமக்கோரிழிவுவந்துழிப் ...றுத்து உயிர்வாழாது அதனைநீத்த மானமுடையாரது புகழ்வடிவினை—தொழுது ...த்தும் உலகு - எஞ்ஞான்றுந்தொழுது துதியாநிற்பர் உலகத்தார். எ - று.

"புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்—வலவ னேவா வான ஊர்தி யெய்தல்*" வாகையின், துறக்கச்செலவு சொல்லவேண்டாவாயிற்று. இவைகான்கு பாட்டானும் மானப்பொருட்டாய இறப்பினது சிறப்புக் கூறப்பட்டது. (க0)

கூ அ ம் அதி.—பெருமை.

அஃதாவது செயற்கரிய செய்தல், தருக்கின்மை, பிறர்குற்றம் கூறாமை என் றிவை முதலிய நற்குணங்களாற் பெரியாரது தன்மை. நிலையினு மேன்மேலுயர்ந்தற் பயத்தவாயவிவை உளவாவது நிலையிற் சுழாமைபுள் வழியாகலின், இது மானத்தின் பின் வைக்கப்பட்டது.

கூஅ. ஒளியொருவற் குள்ள வெறுக்கை யிளியொருவற்
கஃதிறந்து வாழ்த லெனல். க.

---

* புறநானூறு, எ.

இ - ள். ஒருவற்கு ஒளி உள்ள வெறுக்கை - ஒருவனுக்கொளினவது பிறரால் செயற்கரிய செய்வேமென்ற கருதும் ஊக்கமிருத்தி;—ஒருவற்கு இவி அஃது இறந்த வாழ்தும் எனல் - ஒருவனுக்கு மாசாவது அச்செயலையொழிந்து உயிர்வாழக்கடவே மென்று கருதுதல். எ - று.

ஒளி தானுளனாயகாலத்து மிக்குத் தோன்றுதலுடைமை. "ஒளிறிரு ளேங்கு புகழ் செய்யான்*" என்றார் பிறரும். மேலும் †செயற்கரிய செய்வார் பெரியரென்று ராயினும், ஈண்டு அவை அளவிறந்த வொப்புரவு ஈகை முதலியவாம் அவற்றினுள்ள பெருமையை அதன்காரணத்தின்மேலிட்டு உள்ளவெறுக்கையென்றும், அது தன்னையே அதன்காரியமாகிய ஒளியாக்கியுங் கூறினர். இவ்வாறு இதனெதிர்மறைக்கண்ணுமொக்கும். இதனாற் பெருமையின் சிறப்புக் கூறப்பட்டது. (எ)

கூஎஉ பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். உ.

இ - ள். எல்லாவுயிர்க்கும் பிறப்பு ஒக்கும் - எல்லா மக்களுயிர்க்கும் பொதுவாகிய பிறப்பியல்பு ஒக்குமேயெனினும்,—சிறப்பு ஒவ்வா செயதொழில் வேற்றுமையான் - பெருமை சிறுமையெனப்பட்ட சிறப்பியல்புகளொவ்வா, அவைசெய்யுந் தொழில்களது வேறுபாட்டான். எ - று.

வேறுபாடு நல்லனவும், தீயனவும், இரண்மொழியனவும், இரண்டுமல்லவாயினவுமாய அளவிறந்த பாகுபாடுகள். வினைவயத்தாற் பஞ்சபூதபரிணாமமாகிய யாக்கையைப் பொருந்தினின்று அதின்பயனநுபவித்தல் எல்லாவருணத்தார்க்கு மொத்தலிற் பிறப்பொக்குமென்றும், பெருமைசிறுமைகட்குக் கட்டளைகளல்லாகிய தொழிற்பாகுபாடுகள் வருணந்தோறும் யாக்கைதோறும் வேறுபடுதலிற் சிறப்பொவ்வாவென்றுங் கூறினர். (உ)

கூஎஊ மேலிருந்து மேலல்லார் மேலல்லர் கீழிருந்துங்
கீழல்லர் கீழல் லவர். ஊ.

இ - ள். மேல் அல்லார் மேல் இருந்தும் மேல் அல்லர் - செயற்கரிய செய்கலாது சிறியராயினர், உயர்ந்த வமளிமுதலியவற்றின் மிசையிருந்தாராயினும், பெரியராகார்;—கீழ் அல்லவர் கீழ் இருந்தும் கீழ் அல்லர் - அவைசெய்து பெரியராயினர், தாழ்ந்த வறுமிலத்திருந்தாராயினும், சிறியராகார். எ - று.

மேலிருத்தல் கீழிருத்தல்களாற் செல்வால்குரவுகளும், மேல்கீழ்களாற் பெருமை சிறுமைகளும், கருதப்பட்டன. இவையிரண்டுபாட்டானும் முறையே குடிமைமாத்திரத்தானுஞ் செல்வமாத்திரத்தானும் அஃதளதாகாமை கூறப்பட்டது. (ஊ)

கூஎச. ஒருமை மகளிரே போலப் பெருமையுந்
தன்னைத்தான் கொண்டொழுகு மூண்டு. ச.

இ - ள். ஒருமை மகளிரே போல - கவராதமனத்தினையுடைய மகளிர் நிறையின் வழுவாமற் தம்மைத் தாங்காத்துக்கொண்டொழுகுமாறுபோல,—பெருமையும் தன்

* உண்ணு ளெளி நிரு ளேங்கு புகழ் செய்யான்—உள்ளருள் கேளிர் துயர்களைவான். கொன்னே—வழக்கான் பொருள்காத் திருப்பானேல் அது—வீழ்த்தானென் றெண்ணப்படும்—நாலடியார், செல்வவிலாமை, க. †திருக்குறள், உக.

தான் கொண்டு ஒழுகின் உண்டு - பெருமைக்குணனும், ஒருவன் நிறையின்வழு நன்னேத்தான் காத்துக்கொண்டொழுகுவானெயின், அவன்கணுண்டாம்.எ-து.

பொருளின்றெழில் உவமையினும் வந்தது. கற்புண்டாதல் தோன்றின்றமை உம்மை எச்சவும்மை. ஒழுகுதல் மனமொழிமெய்களேயொக்கி ஒப்புரவு முதசெய்துபோதல். இதனல் அஃதனதாமாறு கூறப்பட்டது. (உ)

கூஎடு. பெருமை யுடையவ ராற்றுவா ராற்றி
னருமை யுடைய செயல். இ.

இ - ன். பெருமை உடையவர் - அவ்வாற்றுற் பெருமையுடையராயினர்—அருமை உடைய செயல் ஆற்றின் ஆற்றுவார்-தாம் வறியராயவழியும் பிறராற்செய்தற் கரியவாய தஞ்செயல்களே விடாது அவைசெய்யுதெறியாற் கடைபோகச்செய்தலே செய்தாரவர். எ - று.

வறியராயவழியுமென்பது, முன்செய்து போந்தமை தோன்றப் பெருமையுடையவரென்றதனலும், ஆற்றுவாரென்றதனலும் பெற்றும். இதனல் அதனையுடையார் செய்தி கூறப்பட்டது. (இ)

கூஎக. சிறியா ருணர்ச்சியு ளில்லே பெரியாரைப்
பேணிக்கொள் வேமென்னு நோக்கு. கூ.

இ - ன். பெரியாரைப் பேணிக் கொள்வேம் என்னும் நோக்கு - அப்பெற்றிய ராய பெரியாரை வழிபட்டு அவரியல்பினே யாங் கோடுமென்னுங்கருத்து—சிறியார் உணர்ச்சியுள் இல்லே - மற்றைச் சிறியராயினர் மனத்தின்கண் உளதாகாது. எ - று.

குடிமை, செல்வம், கல்வியென்றிவற்றது உண்மைமாத்திரத்தால் தம்மை வியர்திருப்பார்க்கு அவை நமக்கியல்பென்று அமைந்திருப்பாரை வழிபட்டு அஃதடைய ராதல் கூடாதென்பதாம். (ஈ)

கூஎஎ. இறப்பே புரிந்த தொழிற்ருஞ் சிறப்புந்தான்
சீரல் லவர்கட் படின். எ.

இ - ன். சிறப்புந் தானும் - தனக்கொடுக்கும் பெரியாரிடத்து அமைந்திருத்தலைச் செய்வதாய சிறப்புத்தானும்,—சீர் அல்லவர்கட் படின் - தனக்கொவ்வாத சிறியாரிடத்துப் படுமாயின்,—இறப்பே புரிந்த தொழிற்ரும் - அதனேயொழிந்து தருக்கின் கண்ணே மிக்க செயலேயுடைத்தாம். எ - று.

தருக்கினே மிகச்செய்யுமென்பதாயிற்று. சிறப்பு குடிமை, செல்வம், கல்விகளுள்ளு மிருதி. இவை யிரண்டொட்டானும் அஃதிலார் செய்தி கூறப்பட்டது. (எ)

கூஎஅ. பணியுமா மென்றும் பெருமை சிறுமை
யணியுமாந் தன்னே வியந்து. அ.

இ - ன். பெருமை என்றும் பணியும் - பெருமையுடையார் அச்சிறப்புண்டாயஞான்றுந் தருக்கின்றி அமைந்தொழுகுவர்;—சிறுமை (என்றும்) தன்னே வியந்து அணியும் - மற்றைச் சிறுமையுடையார் அஃதில்லாதஞான்றுந் தம்மை வியந்து புனேயாகிற்பார். எ - று.

பொருளின்தெறுதில்கள் பண்பின்மேலேற்றப்பட்டன. இஃதஅத்தமறைக்கும் பெருமையென்புழியுமொக்கும். என்றமென்பது பின்னும் வந்தியைந்தது. ஏமென் பவரிரண்டும் அசை. புனைதல் பிறரிற் றமக்கோர்பிருதியை யேற்றிக்கோடல். இத னை உயர்ந்தார் நாழ்வார் தாழ்ந்தார் உயர்வார் இஃதொரு விரோதமிருந்தவாறென் னென உலகியலை வியந்து கூறிற்றருக்குவாருமுளர். (அ)

கூகூ. பெருமை பெருமித மின்மை சிறுமை
பெருமித மூர்ந்து விடல். கூ.

இ - ன். பெருமை பெருமிதம் இன்மை - பெருமைக்குணமாவது காரணமுண் டாயினும் அஃதியல்பாதலேக்கித் தருக்கின்றியிருத்தல்;—சிறுமை பெருமிதம் மிகுந்து விடல் - சிறுமைக்குணமாவது அஃதில்வழியும் அதனையேற்றிக்கொண்டு தருக்கின்முடிவின்கண்ணே நின்றுவிடுதல். எ - று.

அனவரத்தருக்குதலென்பதாயிற்று. விடுமென்று பாடமோதுவாருமுளர்; முற் றத்தொடரும் எழுவாய்த்தொடரும் தம்முளியையாமையின், அது பாடமன்மை புணர்க. (கூ)

கூஅ0. அற்ற மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும். க0.

இ - ன். பெருமை அற்றம் மறைக்கும் - பெருமையுடையார் பிறர்மானத்தையே கூறி அவமானத்தை மறையாநிற்பர்;—சிறுமை குற்றமே கூறிவிடும் - மற்றைச்சிறு மையுடையார் பிறர் குணத்தை மறைத்துக் குற்றத்தையே கூறிவிடுவர் எ - று.

மறைத்தலுங் கூறலும் ஏனையிடத்தமியைந்தன. அற்றம் ஆருபெயர் தானென் பது அசை. இவ்வுமன்பாட்டானும் இருவர் செயலும் ஒருங்கு கூறப்பட்டன. (க0)

கூகூ ம் அதி.—சான்ருண்மை.

அஃதாவது பலகுணங்களானுநிறைந்த அவற்றையாடற்றன்மை. பலகுணங் களானுமென்பது சாலுதற்றொழிலாற் பெறப்படுதலின், அவற்றையென்பது வருவிக் கப்பட்டது. பெருமையுடையோர்க்குக் குணங்கள் பலவற்றையுந் தொகுத்துக்கொண்டு நிற்றலின், இஃதன்பின் வைக்கப்பட்டது.

கூஅ0. கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து
சான்ருண்மை மேற்கொள் பவர்க்கு. க.

இ - ன். கடன் அறிந்து சான்ருண்மை மேற்கொள்பவர்க்கு - தமக்குத் தருமது இதுவென்றறிந்து சான்ருண்மையை மேற்கொண்டொழுகுவார்க்கு—நல்லவை எல் லாம் கடன் என்ப - நல்லனவாய குணங்களெல்லாம் இயல்பாயிருக்குமென்று சொல் லுவர் நூலோர். எ - று.

பெருமை முதலியவாயவழியும் உள்ளன செய்துகொண்டனவாயவழியுஞ் சான் ருண்மையென்னுஞ் சொற்பெருகு மாதலையின், நூலோர் இவ்வேதப்பெயர்பற்றி அவரிலக்கணம் இவ்வாறு கூறுவரென்பதாம். (க)

* திருக்குறள், கூஅ0.

கூஅஉ. குணாலஞ் சான்றோர் கலனே பிறகல
மெண்கலத் துள்ளதூஉ மன்று. உ.

இ - ள். சான்றோர் கலம் குணகலமே - சான்றோர்கலமாவது குணங்களாகிய கலமே;—பிற கலம் எக்கலத்தும் உள்ளது அன்று - அஃதொழிந்த வறப்புக்களாகிய கலம் ஒருகலத்திலுமுள்ளதன்று. எ-று.

அகலத்தை முன்னே பிரித்தமையின் எஞ்சிற்புறகலத்தைப் பிறகலமென்றும், அது குடிப்பிறப்புக்கல்வியுமுதலாக தானோரெடுத்த கலங்களுட் புகுதாமையின் எக்கலத்துள்ளதூஉமன்றென்றுங்கூறினர். இவையிரண்டுபாட்டானும் சான்றோர்க்குண்டாகிய குணங்கள் பொதுவகையாற் கூறப்பட்டன. (உ)

கூஅங. அன்புநா ணெப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ
டைந்துசால் பூன்றிய தூண். கூ.

இ - ள். அன்பு - சுற்றத்தார்மேலெயன்றிப் பிறர்மேலுமுளதாய வன்பும்—நாண் - பழிபாவங்களினுணலும்—ஒப்புரவு - யாவர்மாட்டுமொப்புரவு செய்தலும்—கண்ணோட்டம் - பழையார்மேற்கண்ணோடலும்—வாய்மை - எவ்விடத்தும் மெய்ம்மைகூறலுமென—சால்பு ஊன்றிய தூண் ஐந்து - சால்பென்னும் பாரத்தைத் தாங்கிய தூண்களைந்து. எ - று.

எண்ணெடு முன்னவற்றோடுங் கூடிற்று. இக்குணங்களில்வழிச் சால்பு நிலைபெறுமையின், இவற்றைத் தூணென்றார். ஏகதேசவுருவகம் (கூ)

கூஅச. கொல்லா நலத்தது நோன்மை பிறர்நீ மை
சொல்லா நலத்தது சால்பு. ச.

இ - ள். நோன்மை கொல்லா நலத்தது - பிறவுயிர்களும் வேண்மோயினும் தவம் ஒருயிரையுங் கொல்லாத வறத்தின்கண்ணதாம்;—சால்பு பிறர்நீ மை சொல்லா நலத்தது-அதுபோலப் பிறகுணங்களும் வேண்மோயினுஞ் சால்பு பிறர் குற்றத்தைச் சொல்லாத குணத்தின் கண்ணதாம். எ - று.

நலமென்னும் ஒருபெயர்ப்பொருளிரண்டனுள் தலைமை தோன்ற இவ்விரண்டற்குமதிகாரமாக்கிக் கூறினர். தவத்திற்குக் கொல்லாவறஞ் சிறந்தாற்போலச் சால்பிற்குப் பிறர் குற்றஞ்சொல்லாக்குணஞ் சிறந்ததென்பதாம். (ச)

கூஅஞ. ஆற்றுவா ராற்றல் பணித லதுசான்றோர்
மாற்றுரை மாற்றும் படை. ஞ.

இ - ள். ஆற்றுவார் ஆற்றல் பணிதல் - ஒருகருமத்தைச்செய்து முடிப்பாராற்றலாவது அதற்குத் துணையாவாரைத் தாழ்ந்து கூட்டிக்கொள்ளுதல்;—சான்றோர்மாற்றுரை மாற்றும் படை அது-இனிச் சால்புடையார் தம்பகைவரைப் பகைமையொழிக்குங்கருவியும் அது. எ - று.

ஆற்றல் அது வல்லாரான்றன்மை. இறந்ததழீஇயவெச்சவும்மை விகாரத்தாற் றொக்கது. சால்பிற்கேற்ற பணிதற்குணத்தது நெறிப்படுவார். எனவுமுடன் கூறினர். (ஙி)

கூஅக. சால்பிற்குக் கட்டளை யாதெனிற் றேல்வி
தலைப்பல்லார் கண்ணும் கொளல். கூ.

இ - ன். சால்பிற்குக் கட்டளை யாது எனின்-சால்பாகிய பொன்னினளவறி தற்கு உரைகல்லாகிய செயல் யாதெனின்,—தோல்வி தலை அல்லார்கண்ணும் கொளல் - அது தம்மினுயர்ந்தார்மாட்டுகொள்ளுந் தோல்வியை இழிந்தாமாட்டுத் தோடல். எ - று.

தலை ஒப்பு. எச்சவும்மையான் இருதிறத்தார்கண்ணும் வேண்டுதல் பெற்றும். கொள்ளுதல் வெல்லுமாற்றலுடையராயிருந்தே எற்றுக்கொள்ளுதல். இழித்தாரை வெல்லுதல்கருதித் தம்மோடொப்பித்துக்கொள்ளாது தோல்வியான் அவரினுயர்வ ராயின், அதனாற் சால்பளவறியப்படுமென்பதாம். (க)

கூஅள. இன்னுசெய் தார்க்கு மினியவே செய்யாக்கா
லென்ன பயத்ததோ சால்பு. எ.

இ - ன். இன்னு செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் - தமக்கின்னுதவற் றைச் செய்தார்க்குஞ் சால்புடையார் இனியவற்றைச் செய்யாராயின்,—சால்பு என்ன பயத்தது - அச்சால்பு வேறென்ன பயனையுடைத்து. எ - று.

நெறும்மை அவர் இன்னுசெய்தற்கிடனுதல் விளக்கினின்றது. ஓகாரம் அசை. இனு எதிர்மறைப்பொருட்டு. தாமுமின்னுசெய்வராயின், சால்பாலொருபயனுமில்லை யென்பதாம். இவையைதுபாட்டானுஞ் சிறப்புவகையாற் கூறப்பட்டது. (எ)

கூஅஅ. இன்மை யொருவற் கிளிவன்று சால்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின். அ.

இ - ன். சால்பு என்னும் திண்மை உண்டாகப் பெறின்-சால்பென்று சொல்லப் படும் வலியுண்டாகப்பெறின்,—ஒருவற்கு இன்மை இளிவு அன்று - ஒருவனுக்கு நல் குரவு இளிவாகாது. எ - று.

தனராமை நாட்டுதலின், வலியாயிற்று. இன்மையான் வருவதனை இன்மை யாக உபசரித்துக்கூறினார். சால்புடையா ரல்லாதாரழியும் மேம்பாடெனுமுடைய ரென்பதாம். (அ)

கூஅக. ஊழி பெயரினுந் தாம்பெயரார் சான்றாண்மைக்
காழி யெனப்படு வார். கூ.

இ - ன். சான்றாண்மைக்கு ஆழி எனப்படுவார் - சால்புடைமையாகிய கடற்குக் கரையென்று சொல்லப்படுவார்,—ஊழி பெயரினும் தாம் பெயரா - ஏனைக்கடலும் கரையுளில்லாமற் காலந்திரிந்தாலும் தாந்திரியார். எ - று.

சான்றாண்மையது பெருமைதோன்ற அதனைக் கடலாக்கியும், அதனைத் தாங்கி கொண்டிற்றலின் அஃதுடையாரைக் கரையாக்கியுங்கூறினார்; "பெருங்கடற் காழி யினையன் மாதோ" என்றார் பிறரும். ஏகதேசவுருவகம். (க)

கூகம. சான்றவர் சான்றாண்மை குன்றி னிருநிலந்தான்
றாங்காது மன்னோ பொறை. கூ.

---

* புறநானூறு, கூகம.

இ - ன். சான்றவர் சான்றாண்மை குன்றின் - பலகுணங்களானுறைத்தவர் தன்மை குன்றுவராயின்,—இருநிலத்தான் பொறை தாங்காது - மற்றையிருநிலத்தானுந் தன்பொறையைத் தாங்காதாய்முடியும். எ - று.

தானுமென்னுமெச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. அவர்க்கது குன்றுமையும் அதற்கது தாங்கலும் இயல்பாகலான், அவை யெஞ்ஞான்று முளவாகாவென்பது தோன்றின்றமையின், மன் ஒழியிசைக்கண்வந்தது. ஓகாரம் அசை. இதற்கு இருநிலம் பொறை தாங்குவது சான்றவர் துணையாகவருதலான் அதுவும் அது தாங்கலாற்றுதென்றுரைப்பாருமுளர். இவை மூன்றுபாட்டானும் அவற்றுளறைத்தவரது சிறப்புக் கூறப்பட்டது. (கo)

கoo ம் அதி.—பண்புடைமை.

அஃதாவது பெருமை சான்றாண்மைகளிற்றாம்வழுவாது நின்றே எல்லாரியல்புகளுமறிந்தொத்தொழுகுதல்; "பண்பெனப் படுவது பாடறிந்தொழுகல்*" என்றார் பிறரும். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

கூகக. எண்பதத்தா லெய்த லெளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு. க.

இ - ன். யார்மாட்டும்எண்பதத்தால் - யாவர்மாட்டுமெளிய செவ்வியாதலால்—பண்புடைமை என்னும் வழக்கு எய்தல் எளிது என்ப - அரிதாய பண்புடைமையென்னும் நன்னெறியினை யெய்துதல் எளிதென்று சொல்லுவர் நூலோர். எ - று.

குணங்களானிறைத்து செவ்வியெளியருமையக்காற் பண்புடைமை தானே உளதாமாகலின், எண்பதத்தாலெய்தலெளிதென்றும், அஃதுலகத்தையெல்லாம் வரிசரித்தற் பயத்ததாகலின் அதனைத் தொல்லோர்சென்ற நன்னெறியாக்கியும், அதனை யெளிது னெய்துதற்கு இது நூலோராதியவுபாயமென்பார் அவர்மேல் வைத்துங் கூறினர். (க)

கூகஉ. அன்புடைமை யான்ற குடிப்பிறத்த லிவ்விரண்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு. உ.

இ - ன். அன்புடைமை ஆன்ற குடிப் பிறத்தல் இவ்விரண்டும் - பிறர்மேலன்புடையனாதலும் உலகத்தோடமைந்த குடியின்கட் பிறத்தலுமாகிய இவ்விரண்டும்—பண்புடைமை என்னும் வழக்கு - ஒருவனுக்குப் பண்புடைமையென்று உலகத்தார் சொல்லும் நன்னெறி. எ - று.

அமைதல் ஒத்துவருதல். குடிப்பிறத்தலென்றது பிறர்தார் செயலே. தனித்தவழி ஆகாது இரண்டுங்கூடியவழியே ஆவதென்பது தோன்ற, முற்றும்மை கொடுத்தார். காரணங்கள் காரியமாக வுபசரிக்கப்பட்டன. இவையிரண்டுபோட்டானும் பண்புடையாதற்காரணங் கூறப்பட்டது. (உ)

கூகஉ. உறுப்பொத்தன் மக்களொப் பன்றால் வெறுத்தக்க
பண்பொத்த லொப்பதா மொப்பு. ஊ.

---

* கலி, நெய்தல், கக.

இ - ள். உறுப்பு ஒத்தல் மக்கள் ஒப்பு அன்று - செறியத்தகாதவுடம்பாலொத்தல் ஒருவனுக்கு நன்மக்களோடொப்பாகாமையின் அது பொருந்துவதன்று;—ஒப்பதாம் ஒப்பு வெறுத்தக்க பண்பு ஒத்தல் - இனிப் பொருந்துவதாய வொப்பாவது செறியத் தக்க பண்பாலொத்தல். எ - று.

வடநூலார் அங்ஙமென்றமையின், உறுப்பென்னார். ஒருவனுக்கு நன்மக்களோடு பெறப்படுமொப்பாவது உயிரின்வேறாய் நிலையுதலில்லாவுடம்பொத்தலன்று, வேறன்றி நிலையுதலுடைய பண்பொத்தலாகலான், அப்பெற்றித்தாய அவர் பண்பினையுடையரை வென்பதாம். (க)

கூகச. நயனெடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டு முலகு. ச.

இ - ள். நயனெடு நன்றி புரிந்தபயன் உடையார் பண்பு - நீதியையும் அறத்தையும் விரும்புதலாற் பிறர்க்குந்தமக்கும் பயன்படுதலுடையாரது பண்பினை—உலகு பாராட்டும் - உலகத்தார் கொண்டாடாநிற்பர். எ - று

புரிந்தவென்னும் பெயரெச்சம் ஈண்டுக் காரணப்பொருட்டு. நயனெடென்றி புரிதலும் பயனுடைமையும் பண்புகாரணமாக வந்தமையின், அதனைப்பாராட்டுமென்னார். (ச)

கூகடு. நகையுள்ளு மின்னு மிகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு. டு.

இ - ள். இகழ்ச்சி நகையுள்ளும் இன்னுது - தன்னையிகழ்தல் ஒருவற்கு மின்னாயாட்டின்கண்ணும் இன்னுது;—பாடு அறிவார்மாட்டுப் பகையுள்ளும் பண்பு உளாகலாற் பிறர் பாடறிந்தொழுகுவார்மாட்டுப் பகைமையுள்வழியும் அஃதனதாகாது இனியவாய பண்புகளே உளவாவன. எ - று.

பாடறிவாரென்னவே, அவ்வின்னுமையறிதலும் பெற்றும். அதனையறிந்தவர் பின் அது செய்யார் இனியவே செய்வாரென்பதுகருத்து. இதற்குப்பிறசெல்லாம் இரண்டு தொடருந்தம்முளியையாமலுரைப்பாரும், இன்னுதென்னுஞ்சொற்குப் பிறவாதென்றுரைப்பாருமாயினர். (ஙி)

கூகக. பண்புடையார்ப் பட்டுண் டுலக மதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன். கூ.

இ - ள். பண்பு உடையார்ப் பட்டு உலகம் உண்டு - பண்புடையார்கண்ணே படுதலால் உலகியல் எஞ்ஞான்றுமுண்டாய் வாராநின்றது;—இன்றேல் அது மண்புக்கு மாய்வது - ஆண்டுப்படுதலில்லையாயின், அது மண்ணின்கட்புக்கு மாய்ந்துபோவதாம். எ - று.

படுவென்பது திரிந்துநின்றது. உலகு ஆகுபெயர். மற்றைப் பண்பில்லார் சார்புடையின் ஓர்சார்புயின்றி மண்ணின்கட்புக்கு மாயுமது வேண்டாவாயிற்றென்பது படநின்றமையின், மன் ஒழியிசைக்கண்வந்தது. இவையான்குபாட்டானும் அதனையுடையாதலையர்ச்சி கூறப்பட்டது. (ஙி)

கூகள. அரம்போலுங் கூர்மை யறிவு மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்.

இ - ள். மக்கட்பண்பு இல்லாதவர் - நன்மக்கட்பேறிய பண்பில்லாதவர்,—அரம்போலும் கூர்மையரேனும் - அரத்தின் கூர்மைபோலும் கூர்மையுடையரேயாயினும்,—மரம் போல்வர் - ஓரறிவித்தருய மரத்தினையொப்பர். எ - று.

அரம் ஆருபெயர். ஓரறிவு ஊற்றினையறிதல். உவமையிரண்டனுள், முன்னது தான் மடிவின்றித் தன்னையுற்ற பொருள்களை மடிவித்தலாகிய தொழில்பற்றி வந்தது; ஏனையது விசேடவறிவின்மையாகிய பண்புபற்றி வந்தது. அல்லிசேடவறிவிற்குப் பயனிய மக்கட்பண்பின்மையின், அதுதானுமில்லையென்பதாயிற்று. (எ)

கூகஅ. நண்பாற்று ராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்று ராதல் கடை. அ.

இ - ள். நண்பு ஆற்றராகி நயம் இல செய்வார்க்கும் - தம்மொடு நட்பினைச் செய்யாத பகைமையைச் செய்தொழுகுவார்மாட்டும்—பண்பு ஆற்றராதல் கடை - தாம் பண்புடையராயொழுகாமை அறிவுடையார்க்கிழுக்காம். எ - று.

நயம் ஈரம். சிறப்பும்மை அவர் பண்பாற்றுமைக்கிடனுதல் தோன்றின்றது அதனைச் செய்யிற்றுமும் அவர் தன்மையராவரென்பார், கடையென்றார். (அ)

கூகக. நகல்வல்ல ரல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள். கூ.

இ - ள். நகல் வல்லர் அல்லார்க்கு - பண்பின்மையான் ஒருவரோடுங்கலந்து உண்மகிழ்தன்மாட்டாதார்க்கு—மாயிரு ஞாலம் பகலும் இருட்பாற் பட்டன்று - மிகவும் பெரியஞாலம் இருளில்லாத பகற்பொழுதினும் இருளின்கட்கிடந்ததாம். எ - று.

எல்லாரோடுங் கலந்தறியப்பெறுமையிற் பண்பில்லார்க்கு உலகியல் தெரியாதென்பார், உலகமிருளின்கட்பட்டதென்றார். பாழ்பட்டன்றிருளென்ற பாடமோதி, இருணீங்கின்றன் றென்றுரைப்பாருமுளர். (க)

கஅஅஅ. பண் பிலான் பெற்ற பெருஞ்செல்வ நண்பால்
கலந்தீமை யாற்றிரிக் தற்று. கஅ.

இ - ள். பண்பு இலான் பெற்ற பெருஞ்செல்வம்-பண்பில்லாதவன் முன்னோல் வினையானெய்திய பெரிய செல்வம் அக்குற்றத்தால் ஒருவற்கும் பயன்படாது கெடுதல்—நன்பால் கலந்தீமையால் திரிந்தற்று - நல்லவான்பால் ஏற்ற கலத்தின் குற்றத்தால் இன்சுவைத்தாகாது கெட்டாற்போலும். எ - று.

கலத்தீமையென்பது மெலிந்துகின்றது. தொழிலுவமமாகலின் பொருளின்கண் ஒத்ததொழில் வருவிக்கப்பட்டது. படைக்குமாற்றலிலனுதலேறன்றப் பெற்றவென்றும், எல்லாப்பயனுக்கோடற்கேற்ற இடனுடைமைதோன்றப் பெருஞ்செல்வமென்றுங்கூறினர். அச்செல்வமும் பயன்படாதென்ற இதனான் வருகின்ற அதிகாரப் பொருண்மையுத் தோற்றுவாய் செய்யப்பட்டது. இவை நான்குபாட்டானும் அஃதில்லாதிழிவு கூறப்பட்டது. (கஅ)

கஅக ம் அதி.—நன்றியில்செல்வம்.

அஃதாவது ஈட்டியாற்றும் பிறர்க்கும் பயன்படுதலில்லாத செல்வத்தினியல்பு. உடையானதருந்தற் செல்வத்தின்மேலேற்றப்பட்டது. அதிகாரமுறைமை மேற்சுற்றுவாய் செய்யுளதனுத் பேற்றும்.

400 ஈ. வைத்தான்வாய் சான்ற பெரும்பொரு ளஃதுண்ணுன்
செத்தான் செயக்கிடந்த தில். க.

இ - ள். வாய்சான்றபெரும்பொருள் வைத்தான் அஃதுஉண்ணுன் - தன்மனை யகலமெல்லாம் நிறைதற்கேதுவாயபெரும்பொருளை யீட்டிவைத்து உலோபத்தால் அதனைஉண்ணுதவன்—செத்தான் செயக் கிடந்தது இல்-உளனாயினுஞ் செத்தானும், அதன் கண் அவனுற் செயக்கிடந்ததோருரிமையின்மையான். எ - று.

வைத்தானென்பது முற்றெச்சம். உண்ணுதல் அதனுனம்புலன்களினையும் நுகர்தல். வாய்சான்றபெரும்பொருளை வைத்தானெருவன் அதனைஉண்ணுது செத்தவழி அதன்கண் அவனுற்செய்யக் கிடந்ததோருரிமையில்லையாகலான், வையாது பெற்ற பொழுதே நுகர்கவென் றுரைப்பினுமமையும். இதற்குச் செத்தானென்பது எச்சம். இதனுல் ஈட்டியானுக்குப் பயன்படலின்மை கூறப்பட்டது. (க)

400உ. பொருளாஞ மெல்லாமென் றீயா திவறு
மருளாஞ மாணப் பிறப்பு. உ.

இ - ள். பொருளான் எல்லாம் ஆம் என்று - பொருளொன்றுமுண்டாக அதனு லெல்லாமுண்டாமென்றறிந்து அதனையீட்டி—ஈயாது இவறும் மருளான் - பின் பிறர்க்கியாது பற்றுள்ளஞ்செய்பு மயக்கத்தாலே—மாணப் பிறப்பு ஆம் - ஒருவனுக்கு நிறைதலில்லாத பேய்ப்பிறப்புண்டாம். எ - று.

இருமையினு மெய்து மின்பங்கள் பலவுமடங்க எல்லாமென்றும் ஈட்டுதற்கு மூன்னுண்டாயவறிவு பின் மயங்குதலின் மருளென்றும், பொருளுண்டாயிருக்கப் பிறர்பசி கண்டிருந்த நிலையைபற்றி உணவுகளுளவாயிருக்கப் பசிததவருந்தும் பிறப் புளதாமென்றுங் கூறினர். (உ)

400ஊ. ஈட்ட மிவறி யிசைவேண்டா வாடவர்
தோற்ற நிலக்குப் பொறை. ஊ.

இ - ள். ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர் தோற்றம் - யாம் பிறரின்மிக வீட்டுதலென்று பொருளினீட்டன் மாத்திரத்தையேவிரும்பி அதன்பயனை புகழை விரும்பாத மக்களது பிறப்பு—நிலக்குப் பொறை - நிலத்திற்குப் பாரமாமத்து வையே. எ - று.

இசை இருமைக்குமுறுதியாய அறமாகலின் ஈகையான் அதனையே வேண்டல் செய்யாது ஈட்டற்றன்பத்தையும் காத்தற்றன்பத்தையும் வேண்டியவறிவின்மை பற்றி, நிலக்குப்பொறையென்றார். பிறப்பென்றது அதற்குரியவுடம்பினை. (ஊ)

400எ. எச்சமென் றென்னெண்ணுங் கொல்லோ வொருவரா
னச்சப் படாஅ தவன். எ.

இ - ள். ஒருவரால் அச்சப்படாதவன் - ஒருபொருளுமீத்தறியாமையின் ஒருவரா லும் அச்சப்படுதலில்லாதவன்—எச்சமென்று என் எண்ணுங்கொல் - தானிறந்தவழி ஈண்டொழித்து மிற்பதாக யாதனைக்கருதுமோ! எ - று.

ஈண்டொழித்து மிற்கும்புகழ் ஈவான்மேலன்றி நில்லாமையின் அவனுக் கதனே டியுறுமையைபில்லை யென்பார், என்னெண்ணுங்கொல்லோவென்றார். ஓசாரம் அசை. இவை மூன்றுபாட்டானும் பிறர்க்குப் பயன்படலின்மை கூறப்பட்டது. (எ)

கஅ0இ. கொடுப்பதூஉந் துய்ப்பதூ மில்லார்க் கடுக்கிய
கோடியுண் டாயினு மில். ரு.

இ - ள். கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு - பிறர்க்கீவதும் தானதுவ்வதுமாய இரண்டுசெய்கையுமுடையரல்லாதார்க்கு - அடுக்கிய கோடி உண்டாயினும் இல் - பலவாகவடுக்கிய கோடி பொருளுண்டாயினும் ஒன்றுமில்லை. எ - று.

இன்பத்தினும் அறஞ்சிறந்தமையின், கொடுத்தற்றொழில் முற்கூறப்பட்டது. அடுக்கியகோடியென்றது ஈண்டெண்ணப்பமே பொருண்மேனின்றது. ஒன்றுமில்லார்போலப் பயனிரண்டுமிழத்தலின், இல்லென்றார். (இ)

கஅ0ஈ. ஏதம் பெருஞ்செல்வந் தான்றுவ்வான் றக்கார்க்கொன்
றீதலியல்பிலா தான். ஈ.

இ - ள். தான் துவ்வான் தக்கார்க்கு ஒன்று ஈதல் இயல்பிலாதான் - தானுகாணுஞ் அதன்மேலுந் தருதியுடையார்க்கு அவர்வேண்டியதொன்றினை ஈதலியற்கையிலனாயினன்—பெருஞ் செல்வம் ஏதம் - இரண்டுஞ் செய்தற் கிடனுடைத்தாய செல்வத்திற்கு ஒருகோய். எ - று.

தருதி தானங்கோடற்கேற்புடைமை. ஏதம் ஆகுபெயர். நுகரப்படுதலும் ஈயப்படுதலுமாயிய தொழிற்குரியதனை அன்றுக்கினமையின், கோயென்றார். ஈதலியல்பிலாதானது பெருஞ்செல்வம் அவனுக்கு ஈட்டல் காத்தன்முதலியவற்றால் துன்பமே யாமென்றுரைப்பாருமுளர். இவையிரண்டுபோட்டானும் அவ்விருமையும் உடன் கூறப்பட்டன. (ஈ)

கஅ0உ. அற்றார்க்கொன் றூற்றுதான் செல்வ மிகலம்
பெற்றூ டமியண்மூத் தற்று. உ.

இ - ள். அற்றார்க்கு ஒன்று ஆற்றுதான் செல்வம் - ஒருபொருளுமிலராயினார்க்கு அவர் வேண்டியதொன்றினைக் கொடாதானது செல்வம் கொன்னேகழிதல்—மிகலம் பெற்றால் தமியள் மூத்தற்று - பெண்டிரின் மிக்க கலத்தினைப் பெற்றாளொருத்தி கொடுப்பாரின்மையிற் கொழுனரின்றித் தமியளாய் மூத்ததன்மைத்து. எ - று.

கலம் வடிவினன்மையும் குணத்தினன்மையும். இரண்டொருங்கு பெறுதலரி தாகலின் பெற்றாளென்றார். கொடுப்பாருங் கொழுனுமேயன்றித் தானும் பயனிழந்து கழிந்த குமரியோவெனின் கூறினமையின், தானுமேற்பானுமேயன்றிச் செல்வமும் பயனிழந்து கழியுமென்பதாயிற்று. (உ)

கஅ0ஊ. நச்சப் படாதவன் செல்வ மடிமூரு
ணச்சு மரம்பழுத் தற்று. ஊ.

இ - ள். நச்சப்படாதவன் செல்வம் - வறியார்க்கணியனாயிருத்தும் ஒன்றுங்கொடாமையின் அவரானச்சப்படாதவன் செல்வமெய்துதல்—ஊர் அடிவன் நச்சுமரம் பழுத்தற்று - ஊரிடைநிற்பதோர் நச்சுமரம் பழுத்தாற்போலும். எ - று.

அடிமூரென்பது பின்முன்னாகத்தொக்க வாரும்வேற்றுமைத்தொகை. அண்மையு மிடைமையுந் பயனில்லையென்பதாம். (ஊ)

கூஅ

கஅக. அன்பொரீஇத் தற்செற்ற றறோக்கா நீட்டிய
வொண்பொருள் கொள்வார் பிறர். கூ.

இ - ள். அன்பு ஒரீஇ - ஒருவன் கொடாமைப்பொருட்டே சுற்றத்தார் கட்டார் கள் அன்பு செய்தலையொழிந்து—தற்செற்ற - வேண்டுவன நுகராது தன்னைச் செறுத்து—அறம் நோக்காது - வறியார்க்கு ஈதன் முதலியவறத்தை நினைப்பதுஞ்செய் யாது—ஈட்டிய ஒண்பொருள் கொள்வார் பிறர் - ஈட்டிய வொள்ளிய பொருளைக் கொண்டுபோய்ப் பயன்பெறுவார் பிறர். எ - று.

பயனுய அறனும் இன்பமுஞ் செய்துகொள்ளாதானுக்குப் பொருளாலுள்ளது ஈட்டற்றன்பமே யென்பது தோன்ற ஈட்டியவென்றும், அவன்வழியினுள்ளார்க்கும் உதவாதென்பது தோன்றப் பிறரென்றுங் கூறினர். (க)

கஅக. சிறுடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தன்ன துடைத்து. கஅ.

இ - ள். சிர் உடைச் செல்வா சிறுதுனி - புகழுடைத்தாய செல்வத்தினையுடைய வாது சிற்சுகாலஞ் சிறிதாய வறுமை—மாரி வறங்கூர்ந்தன்னது உடைத்து - உல கத்தையெல்லாம் நிலைநிறுத்துமேகம் வறுமை மிக்காற்போல்வதோரியல்பினையுடை த்து. எ - று.

துனி வெறுப்பு; அதனைச்செய்தலாற் றுனியெனப்பட்டது. யாவர்க்கும் பயன் பட்டார் அதனுன் வறியராயவழியும் அவ்வறுமை கடிதினீங்குதலிற பின்புஞ் செல்வ ராய்ப் பயன்படுவரென்பது உவமையாற பெறப்பட்டது; படவே, நன்றியில்லாத செல்வம் எஞ்ஞான்றும் பயன்படாதென்பதாயிற்று. இதனருகே சிருடைச்செல்வர் இர வலரோடு வெறுக்கும் நிலையில்வெறுப்பு மாரிவறங்கூர்ந்தனைய தன்மையையுடைத் தென அதிகாரத்தோடு பொருத்தாமைமேலும் ஓர்பொருட்டொடர்புபடாமலுரைப் பாருமுளர். இவை நான்குபாட்டானும் அசசெல்வத்தது குற்றங் கூறப்பட்டது (கஅ)

கஅக ம் அதி.—நாணுடைமை.

அஃதாவது மேற்சொல்லிய சால்பு பண்புமுதலிய குணங்களாலுயர்ந்தோர் தமக்கொவ்வாத கருமங்களில் நாணுதலுடையராதன்மை. அதிகாரமுறைமையும் இதனுனே விளங்கும்.

கஅக. கருமத்தா னாணுத னாணுத் திருதக
னல்லவர் நாணப் பிற. க.

இ - ள். நாணுக் கருமத்தால் நாணுதல் - தன்மக்களுணவது இழிந்த கருமங்கா ணமாக நாணுதல்;—பிற திருநுதல் நல்லவர் நாண - அஃதன்றி மனமொழிமெய்களை தொக்கத்தான் வருவனவோவெனின், அவை அவரளவல்ல அழகிய நுதலினை புடைய குலமகளிர் நாண்பர். எ - று.

பிறருலமகளிர்நாணென்றதனுன் ஏனைய தன்மக்களுணென்பதும், நாணுதலென் றதனுற் கருமத்தழிவும் பெற்றும். திருநுதனல்லவரென்பது புகழ்ச்சிக்குறிப்பு. எதுப்பன்மைபற்றிப் பிறவென்றார். இனி அற்றமறைத்தன்முதலியன பொதுமகளிர் நாணுடைச்சொல்லென்றரைப்பாருமுளர்; அவர்க்கு நான் தேறியுக்குமென விலக்

சப்பட்டமையானும், அவர்பெயராற் கூறப்பட்டமையானும் அஃதரையன்மையறிக. இதனுள் நாணினிலக்கணம் கூறப்பட்டது. (எ)

கற0உ. ஊணுடை பெச்ச முயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு. உ.

இ - ள். ஊண் உடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறு அல்ல-ஊணும் உடையும் அவையொழிந்தனவும் மக்களுயிர்க்கெல்லாம் பொது;—மாந்தர் சிறப்பு நாணுடைமை - நன்மக்கட்குச் சிறப்பாவது நாணுடைமையே, அவையல்ல. எ - று.

ஒழிந்தன உறக்கமும் அச்சமும் காமமும். சிறப்பு அவ்வுயிர்களின் வேறுபாடு. அச்சமென்று பாடமோதுவாருமுளர். (உ)

கற0ஙஉ. ஊணைக் குறித்த வுயிரெல்லா நாணென்று
நன்மை குறித்தது சால்பு. ஙஉ.

இ - ள். உயிரெல்லாம் ஊணைக்குறித்த - எல்லாவுயிர்களும் உடம்பினைத்தமக்கு நிலைக்களனாகக்கொண்டு அதனைவிடா;—சால்பு நாண் என்னும் நன்மை குறித்தது - அதுபோலச் சால்பு நாணென்னு நன்மைக்குணத்தைத் தனக்கு நிலைக்களனாகக்கொண்டு அதனை விடாது. எ - று.

உடம்பென்பது சாதியொருமை. நன்மை ஆகுபெயர். உயிர் உடம்போடு கூடியல்லது பயனெய்தாதவாறுபோலச சால்பு நாணோடுகூடியல்லது பயனெய்தாதென்பதாம். ஊணைக்குறித்தவென்று பாடமோதுவாருமுளர். (ஙஉ)

கற0ச. அணியன்றே நாணுடைமை சான்றோர்க் கஃதின்றேற்
பிணியன்றே பீடு நடை. ச.

இ - ள். சான்றோர்க்கு நாணுடைமை அணியன்றே - சான்றோர்க்கு நாணுடைமை ஆபரணமாம்;—அஃது இன்றேல் பீடு நடை பிணியன்றே - அவ்வாபரணமில்லையாயின் அவர் பெருமிதத்தையுடைய நடை கண்டார்க்குப் பிணியாம். எ - று.

அழகுசெய்தலின் அணியென்றும், பொறுத்தற் கருமையிற் பிணியென்றும் கூறினர். ஓகாரவிடைசொறகள் எதிர்மறைக்கண் வந்தன. இவைமூன்றுபாட்டானும் அதன் சிறப்புக் கூறப்பட்டது. (ச)

கற0ஙரு. பிறர்பழியுந் தம்பழியு நாணுவார் நாணுக்
குறைபதி யென்னு முலகு. ஙரு.

இ - ள். பிறர் பழியும் தம்பழியும் நாணுவார் - பிறர்க்கு வரும் பழியையுந் தமக்கு வரும்பழியையும் ஒப்பமதித்து நாணுவாரை—உலகு நாணுக்கு உறைபதி என்னும் - உலகத்தார் நாணுக்குறைவிடமென்று சொல்லுவர். எ - று.

ஒப்பமதித்தல் அதுவுத்தமக்கு வந்ததாகவே கருதுதல். அக்கருத்துடையார் பெரியராகலின், அவரை உயர்ந்தோர் யாவரும் புகழ்வரென்பதாம். இதனுள் அதனையுடையாரது சிறப்புக் கூறப்பட்டது. (ஙரு)

கற0ஙக: நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
பேணலர் மேலா பவர். ஙக.

இ - ள். மேலாயவர் - உயர்ந்தவர்,—வேலி நாண் கொள்ளாது - தமக்கேமைகை நாணினைக் கொள்வதன்றி,—வியன் ஞாலம் பேணலர் - அகன்ற ஞாலத்தைக்கொள்ள விரும்பார். எ - று.

பழிபாவங்கள் புருதாமற்காத்தலின், வேலியென்றார். நாணும் ஞாலமும் தம் முன்மாறுபவழி அந்நாணினைக் கொள்வதல்லது அவைபுருது தெரியாத ஞாலத்தினைக்கொள்ள விரும்பாரென்பதாம். மன்னும் ஒவும் அசை. நாணுயிர வேலியைப் பெற்றல்லது ஞாலம்பெற விரும்பாரென்றுரைப்பாருமுளர். (க)

கடுஎ. நாணு லுயிரைத் துறப்ப ருயிர்ப்பொருட்டா
ணுண்டுறவார் நாணுள் பவர். எ.

இ - ள். நாண் ஆள்பவர் - நாணினது தெப்பதிர்த்து அதனை விடாதொழுகுவார்—நாணுல் உயிரைத் துறப்பர் - அந்நாணுமுயிருந்தம்முண் மாறுபவழி நாண்தை யாமற்பொருட்டு உயிரை நீப்பர்;—உயிர்ப்பொருட்டு நாண் துறவார் - உயிர் தை யாமற்பொருட்டு நாணினை நீக்கார். எ - று.

உயிரினும் நாண்றெர்தனென்பதாம். இவையிரண்டுபாட்டானும் அவர்செயல் கூறப்பட்டது. (எ)

கடுஅ. பிறர்நாணத் தக்கது தானுஞ் ஞயி
னறநாணத் தக்க துடைத்து. அ.

இ - ள். பிறர் நாணத்தக்கது தான் நாணுஞயின்-கேட்டாருங்கண்டாரு நாணத் தக்க பழியை ஒருவன் தானுஞ்து செய்யுமாயின்,—அறம் நாணத்தக்கது உடைத்து-அந்நாணுமை அவனை அறம் விட்டு நீங்கத்தக்க குற்றத்தினையுடைத்து. எ - று.

தானெனச் செய்வானைப் பிரிக்கின்றுராகலின், பிறரென்றார். தானேடியைபில் லாதானை அறஞ்சாராதென்பதாம். (அ)

கடுக. குலஞ்சுடுங் கொள்கை பிழைப்பி னலஞ்சுடு
நாணின்மை நின்றக் கடை. க.

இ - ள். கொள்கை பிழைப்பிற் குலம் சுடும் - ஒருவனுக்கொழுக்கம் பிழைக்குமாயின் அப்பிழைப்பு அவன் குடிப்பிறப்பொன்றினையுங் கெடுக்கும்;—நாணின்மை நின்றக்கடை நலம் சுடும் - ஒருவன்மாட்டு நாணின்மை நின்றவழி அந்நிலை அவனலம் யாவற்றையுங் கெடுக்கும். எ - று.

நிற்றல் ஒருபொழுது நீக்காமை. நலம் சாதியொருமையாகலின், பிறப்பு, கல்வி, குணம், செயல், இனமென்றிவற்றுன் வந்தனவெல்லாங்கொள்ளப்படும். ஒழுக்கவழி யினும் நாணழிவு இறப்பத் தீதென்பதாம். (க)

கடுஉ. நாணகத் தில்லா ரியக்க மரப்பாவை
நாணு லுயிர்மருட்டி யற்று. கூ.

இ - ள். அகத்து நாண் இல்லார் இயக்கம் - தம்மனத்தின்கண் நாணில்லாத மக்கள் உயிருடையார்போன்றியல்குகின்ற வியக்கம்—மரப்பாவை நாணுல் உயிர் மருட்டியற்று - மரத்தாற்செய்த பாவை இயந்திரக்கயிற்றினுலை தன்னியக்கத்தால் உயிருடைத்தாக மயக்குறுப்போலும். எ - று.

குவியே கருத்தாவாயிற்று. ஈனில்லாத மக்களியக்கம் ஈனுடைய பாவை யியக்கம்போல்வதல்லது உயிரியக்கமன்றென்பதாம். இவை மூன்று பாட்டானும் ஈனில்லாதிழிவு கூறப்பட்டது. (கஅ)

கஅக. ம் அதி.—குடிசெயல்வகை.

அஃதாவது ஒருவன்முன் பிறந்த குடியை உயரச்செய்தலின்றிறம். இது தாழ் வின்னுணுதலுடையார்க்குளதாவதாகலின்ஈனுடைமையின் பின்வைக்கப்பட்டது.

கஅஉக. கருமஞ் செயவொருவன் கைதூவே னென்னும்
பெருமையிற் பீடுடைய தில். க.

இ - ள். கருமம் செயக் கைதூவேன் என்னும் பெருமையின் - தன்குடி செய்தற் பொருட்டுத் தொடங்கிய கருமமுடியாமையின் எண்ணியகருமஞ் செய்தற்கியான் கையொழியேனென்னும் ஆள்வினைப்பெருமைபோல—ஒருவன் பீடு உடையது இல்- ஒருவனுக்கு மேம்பாடுடைய பெருமை பிறிதில்லை. எ - று.

குடிசெயற்கென்பது அதிகாரத்தான் வந்தது. பலவகைத்தாய கருமச்செயலாற் செல்வமும் புகழுமெய்திக் குடியுயருமாகலின், பீடுடையதில்லென்றார். குடிசெய்தற் கருமமே கடத்தலால், தன்கருமஞ்செய்யவென்றும் பிறர்கருமஞ் செய்யவென்று மூசைப்பாருமுளர்; தன்கருமமும் அதுவேயாகலானும், பிறரேவல் செய்தல் தலைமை யன்மையானும், அவையுரையன்மையறிக. (க)

கஅஉஉ. ஆள்வினையு மான்ற வறிவு மெனவிரண்டி
னீள்வினையா னீளுங் குடி. உ.

இ - ள். ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின் நீள்வினையான் - முயற்சி யும் நிறைந்த வறிவுமென்று சொல்லப்பட்ட இரண்டினையுமுடைய இடையறாத கரு மச்செயலால்—குடி நீளும் - ஒருவன் குடியுயரும். எ - று.

நிறைதல் இயற்கையறிவு செயற்கையறிவோடுகூடி நிரம்புதல். ஆள்வினை மடி புகுதாமற்பொருட்டு. ஆன்றவறிவு உயர்தற்கேற்ற செல்களும் அவை முடிக்குங்கா லும் பிழையாமலென்னுதற்பொருட்டு. இவையிரண்டுபோட்டானும் அச்செயற்குக் காரணங் கூறப்பட்டது. (உ)

கஅஉஊ. குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வ
மடிதற்றுத் தான்முந் துறும். ஊ.

இ - ள். குடி செய்வல் என்னும் ஒருவற்கு - என் குடியினையுயரச்செய்யக் கடவே னென்றுகொண்டு அதற்கேற்ற கருமங்களின் முயலும் ஒருவனுக்கு—தெய்வம் மடி தற்றுத் தான் முந்துறும் - தெய்வம் ஆடையைத் தற்றுக்கொண்டு தான் முந்துற்று நிற்கும். எ - று.

முயற்சியை அதன் காரணத்தாற் கூறினார். தற்றுதல் இறகுவிரித்தல். முன்னடப் பரர்செயல் தியதிமேலேற்றப்பட்டது. (ஊ)

கஅஉஎ. சூழாமற் றூனே முடிவெய்துந் தம்குடியைத்
தாழா தளுக்கு பவர்க்கு. எ.

இ - ள். தம்குடியைத் தாழாது உளற்றுபவர்க்கு - தம்குடிக்காம் வினையை விரைந்து முயல்வார்க்கு—சூழாமல் தானே முடிவெய்தும்-அவ்வினை முடிக்குந் திறம் அவர் சூழவேண்டாமற்றானே முடிவெய்தும். எ - று.

குடி ஆகுபெயர். தெய்வமூர்த்தறுதலாற் பயன்கூறியவாறு. இவையிரண்போட்டானும் அதற்குத் தெய்வத்தினையாதல் கூறப்பட்டது. (சு)

கஅடுரி. குற்ற மிலனுய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்று முலகு. ரி.

இ - ள். குற்றம் இலனுய்க் குடி செய்து வாழ்வானை - குற்றமாயின செய்யாது தன்குடியையுயரச்செய்தொழுகுவானை—சுற்றமாச் சுற்றும் உலகு - அவனுக்குச் சுற்றமாகவேண்டித் தாமே சென்று சூழ்வர் உலகத்தார். எ - று.

குற்றமாயின அறநீதிகட்கு மறுதலையாய செயல்கள். தாமும் பயனெய்தலெஞ்ஞி யாவருஞ்சென்று சார்வரென்பதாம். (ஙு)

கஅஉசு. நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த
வில்லாணமை யாக்கிக் கொளல். சு

இ- ள். ஒருவற்கு நல்லாண்மை என்பது - ஒருவனுக்கு நல்ல வாண்மையென்று உயர்த்துச் சொல்லப்படுவது—தான்பிறந்த இல்லாண்மை ஆக்கிக்கொளல் - தான் பிறந்த குடியினையாளுந் தன்மையைத் தனக்குளதாக்கிக்கோடல். எ - று.

போர்த்தொழிலினீக்குதற்கு நல்லாண்மையென வீசேடித்தார். குடியினையாளுந் தன்மை குடியிலுள்ளாரையுயரசெய்து தன்வழிப்படுத்தல். அதனைச்செய்து கோடல் நல்லாண்மையாமாறு வருகின்ற பாட்டாற் பெறப்படும். (ஙு)

கஅஉஎ. அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்து
மாற்றுவா மேற்றே பொறை. எ.

இ - ள். அமரகத்து வன்கண்ணர்போல - களத்தின்கட்சென்ருர் பலராயினும் போர்தாங்குதல் வன்கண்ணர்மேலதாலுறைபோல,—தமரகத்தும் பொறை ஆற்றுவார் மேற்றே - குடியின்கட்பிறந்தார் பலராயினும் அதன் பாரம் பொறுத்தல் அதுவல்லார் மேலதாம். எ - று.

பொருட்கொக்க வேண்டுஞ்சொற்கள் உவமைக்கண் வருவிக்கப்பட்டன. ஈன்கு மதிக்கப்படுவோர் அவரேயென்பதாம். இவை மூன்றுபாட்டானும் அதுசெய்வாரெய் தும் நெறிப்புக் கூறப்பட்டது. (எ)

கஅஉஅ. குடிசெய்வார்க் கில்லை பருவ மடிசெய்து
மானங் கருதக் கெடும். அ.

இ - ள். மடி செய்து மானம் கருதக் கெடும் - தங்குடியினையுயரச்செய்வார் அச்செயலையே நோக்காது காலத்தை நோக்கி மடியினைச்செய்துகொண்டு மானத்தை யுன்கருதுவராயிற் குடிகெடும்;—குடி செய்வார்க்குப் பருவம் இல்லை - ஆகலான் அவர்க்குக் காலவியதியில்லை. எ - று.

காலத்தைநோக்கி மடிசெய்தல் வெயின்மகழுவனிவென்பன வுடைமைநோக்கிப் பின்னர்ச்செய்துமென்றெழிந்திருத்தல். மானக்கருதுதல் இக்குடியிலுள்ளார் யாவரும் இன்பமுற இக்காலத்துத் துன்பமுறுவேன் யானேவென்று உட்கோடல். மேல் "இகல் வெல்லும் வேந்தர்க்கு வேண்டும்பொழுது" தென்றதுட்கொண்டு இவர்க்கும் வேண்டுமோவென்று கருதினும் அது கருதற்கவென்று மறுத்தவாறு. (அ)

கoஉசு. இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்
குற்ற மறைப்பா னுடம்பு கூ.

இ - ன். குடும்பத்தைக் குற்றம் மறைப்பான் உடம்பு - மூவகைத்துன்பமுமுறற் பாலதாய தன்குடியை அவையுறுமற்காக்க முயல்வானது உடம்பு—இடும்பைக்கே கொள்கலக்கொல் - அம்முயற்சித்துன்பத்திற்கே கொள்கலமாமத்தினையோ, அஃதொழிந்து இன்பத்திற்காதலில்லையோ. எ - று.

"†உறைப்பெய லோலை போல—மறைக்குவன் பெருமநிற்குறித்து வருவேலே" என்புழியும் மறைத்தல் இப்பொருட்டாயிற்று. என்குடிமுழுது மிண்புற்றயரவே தானீருமையுமெய்துதலான் இம்மெய்வருத்தமாத்திரம் எனக்கு நன்றென்று முயலு மறிவுடையான் அஃதொருஞான்றுமொழியாமைநோக்கி, இடும்பைக்கே கொள்கலம் கொல்லோவென்றார். இது குறிப்புமொழி. இவையிரண்டுபாட்டானும் அவர் அது செய்யுமியல்பு கூறப்பட்டது. (க)

கoகo. இடுக்கண்கால் கொன்றிட வீழு மடித்தூன்று
நல்லா ளிலாத குடி. கo.

இ - ன். இடுக்கண் கால் கொன்றிட வீழும் - துன்பமாகிய கலியம் புகுந்து தன்முதலே வெட்டிச் சாய்க்க ஒருபற்றின்றி வீழாநிற்கும்—அடித்தி ஊன்றும் நல்லான் இலாத குடி - அக்காலத்துப் பற்றுவன கொடித்துத் தாங்கவல்ல நல்லவாண் மகன் பிறவாத குடியாகிய மரம். எ - று.

முதல் அதன்வழிக்குரியார். வளர்ப்பாரைப் பெற்றழி வளர்ந்துபயன்படுதலும் அல்லாவழிக் கெடுதலுமுடைமையின், மரமாக்கினார்; "தாவருகிறை வாவுறை தொன்மரங்க ளன்ன—வோங்குகுல மையவத வுட்பிறந்த வீரர்—தாங்கல்கடன்‡" என்றார் பிறரும். இது குறிப்புருவகம். இதனான் அவரில்லாத குடிக்குளதாய் குற்றங் கூறப்பட்டது. (கo)

கoசு ம் அதி.—உழவு.

அஃதாவது நிறுபான்மை வாணிகர்க்கும் பெரும்பான்மை வேளாளர்க்கு முரித்தாய உழுதற்றொழில். செய்விக்குங்கால் வேளாயோர்க்குமுரித்து. இது, மேற் குடியுயர்தற்கேதுவென்ற ஆன்றோரவையாகலின், குடிசெயல்வகையின் பின் வைக்கப்பட்டது.

கoஉக. சுழன்றுமேர்ப் பின்ன துலக மதனை
யுழன்று முழவே தலை. க.

---

* திருக்குறள். சுஅக. † புறநானூறு, உகo.

‡ வேகெந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம். க.

இ - ள். இன்றும் எப்பிள்ளை உலகம் - உழுதலான்வரும் மெய்வருத்தமோக் இப் பிறதொழில்களைச் செய்திருந்தும், முடிவில் எருமடையார் வழியதாயிற்று உலகம்;—அதனால் உழுதும் தலை உழவே - ஆதலான் எல்லாவருத்தமுற்றும், தலையாய் தொழில் உழவே. எ - று.

எர் ஆருபெயர். பிறதொழில்களாற் பொருளெய்தியவழியும் உணவின் பொருட்டு உழுவார்கட்செல்லவேண்டுதலிற் சுழன்று மேர்ப்பின்னதுலகமென்றும், வருத்தமில வேனும் பிறதொழில்கள் கடையென்பது போதர உழுத்தமுழவேதலையென்றும் கூறினர். இதனால் உழவினது சிறப்புக் கூறப்பட்டது. (எ)

கூஉ. உழுவா ருலகத்தார்க் காணியஃ தாற்று
தெழுவாரை யெல்லாம்பொறுத்து. உ.

இ - ள். அஃது ஆற்றாது எழுவாரை எல்லாம் பொறுத்து-அவ்வுழுதலைச் செய்ய மாட்டாது பிறதொழில்கண்மேற்செல்வார் யாவரையும் தாங்குதலால்,—உழுவார் உலகத்தார்க்கு ஆணி-அதுவல்லார் உலகத்தாராகிய தேர்க்கு அச்சாணியாவர். எ-று.

"ஈகாடுகொன்று நாடாக்கிக் குளர்தொட்" டென்றாற்போல உழுவாரென்றது உழுவிப்பார்மேலுஞ்செல்லும். உலகத்தாரென்றது ஈண்டியவரையொழித்தாரை. கலித்தாமனிறுத்தற்கண் ஆணிபோறலின், ஆணியென்றார். பொறுத்தலானென்பதுநிரிந்துநின்றது. எகதேசவுருவகம். அஃதாற்றாது தொழுவாரேயெல்லாம் பொறுத்தென்று பாடமோதி, அதுமாட்டாதார் புறப்பார்செய்யும் பரிபவமெல்லாம் பொறுத்து அவரைத் தொழுவாரேயாவரென்றுரைப்பாருமுளர். (உ)

கூஊ. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர். ஊ.

இ - ள். உழுது உண்டு வாழ்வாரே வாழ்வார் - யாவரு முண்ணும் வகை உழுது ஈட்செய்து அதனைற்றமுமுண்டு வாழ்கின்றாரே தமக்குரியராய் வாழ்கின்றவர்;—மற்றெல்லாம் தொழுது உண்டு பின்செல்பவர் - மற்றையாரெல்லாம் பிறரைத்தொழுது அதனாற்றமுண்டு அவரைப் பின்செல்கின்றவர். எ - று.

மற்றென்பது வழக்குப்பற்றி வந்தது. தாமுமக்கட்பிறப்பினராய்வைத்துப் பிறர்தொழுது அவர் லெகொடுப்பத் தம்முயிரோம்பி அவர்பின்செல்வார் தமக்குரியரல்லரென்பது கருத்து. (ஊ)

கூஎ. பலருடை நீழலுள் தீங்குடைகீழ்க் காண்ப
ரலருடை நீழ லவர். எ.

இ - ள். அலரு உடை நீழலவர் - உழுதற்றொழிலான் செல்வினையுடையாராய பெரியோர்—பலருடைநீழலும் தங்குடைகீழ்க் காண்பர் - பலவேந்தர் குடை நிழலதாய மண்முழுதினையுந் தம்மாசன குடைகீழே காண்பர். எ - று.

அலரு கதிர்; அஃதின்டாருபெயராய்*சென்மேலதாயிற்று. உடையென்பது குறைத்தலின்றது. நீழல்போறலின், நீழலெனப்பட்டது. நீழலவரென்றது இப்பேர்ச்செல்லாம் நதனேக்கி. ஒற்றுமைபற்றித் தங்குடையென்றார். குடைநீழலென்ப தூடம் ஆருபெயர்; "ஊன்றுசான் மருங்கி னின்றதன் பயனோ†" என்றதனுல் தம்மாச

* பட்டினப்பாலை. † புறநானூறு, கடி.

நக்குச்சொற்றம்பெருக்கி மண்முழுதும் அவனதாக்கண்டிருப்பதென்பதாம். "இரப்போர் சுற்றமும் புரப்போர் சொற்றமு முழுவிடை யிலைப்போர்" என்னும் பிறரும்.

கஅகஇ. இரவா ரிரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர். இ.

இ - ன். கைசெய்து ஊண் மாலையவர் இரவார் - தங்கையாதுழுதுண்டலே யியல் பாகவுடையார் பிறரைத் தாமிரவார்;—இரப்பார்க்கு ஒன்று கரவாது ஈவர் - தம்மை யிரப்பார்க்கு அவ்வேண்டியதொன்றினைக் கரவாது கொடுப்பர் எ - று.

செய்தென்பதற்கு உழுதலெனவுரையாக்க. கைசெய்தூண் மாலையவரென்பது ஒருஞான்றும் அழிவிலாதசெல்வமுடையரென்னும் ஏதுவையுட்கொண்டின்றது.()

கஅகஉ. உழவினுர் கைம்மடங்கி னில்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை. உ.

இ - ன். உழவினுர் கை மடங்கின் - உழுதலையுடையார்கை அதனைச்செய்யாது மடங்குமாயின்,—விழைவதூஉம் விட்டேம் என்பார்க்கு நிலை இல்லை - யாவரும்விழை புமுணவும் யார்துறந்தோமென்பார்க்கு அவ்வறத்தின்கணிற்றலுமுளவாகா. எ - று.

உம்மை இறந்திக்கண்ணும் வந்தியைந்தது. உணவின்மையால், தாமுண்டலும் இல்லாருஞ்செய்தலும் யாவர்க்குமில்லையாயின. அவருறப்புமாத்திரமாய் கை வாளா விருப்பின் உலகத்து இம்மை மறுமை வீடென்னும் பயன்கள் நிகழாவென்ப நாம். ஒன்றினை மனத்தால் விழைதலுமொழிர்தேமென்பார்க்கெனவுரைப்பாருமுளர். இவையெய்துபாட்டானும் அதனைச் செய்வாரது நெறிப்புக் கூறப்பட்டது. (உ)

கஅகஎ. தொடிப்புழுதி கஃசா வுணக்கிற் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும். எ.

இ - ன். தொடிப்புழுதி கஃசா உணக்கின் - ஒருநிலத்தினையுழுதவன் ஒருபலப் புழுதி கஃசாம்வண்ணம் அதனைக்காயவிவொளியின்,—பிடித்து எருவும் வேண்டாது சாலப் படும் - அதன்கட்செய்த பயிர் ஒருபிடியின்கணடங்கிய எருவுமிடவேண்டாமற் பினைத்து விளையும். எ - று.

பிடித்து பிடியின்கண்ணது. பிடித்தவென்பதன்விகாரமென்பாருமுளர். வேண்டாமல், சான்று என்பன நிரர்த்தகங்கின்றன. (எ)

கஅகஅ. எரினு னன்ரு லெருவிடுதல் கட்டபி
னீரினு னன்றதன் காப்பு. அ.

இ - ன். எரினும் எரு இடுதல் நன்று - அப்பயிர்க்கு அவ்வுழுதலினும் எருப்பெய் தல் நன்று;—கட்டபின் அதன்காப்பு நீரினும் நன்று - இவ்விரண்டுஞ் செய்த வினை கட்டால் அதனைக் காத்தல் அதற்கு நீர்கால்யாத்தலினுநன்று. எ - று.

ஏர் ஆருபெயர். காத்தல் பட்டிமுதலியவற்றுன் அழிவெய்தாமற்காத்தல். உழு தல், எருப்பெய்தல், வினைகட்டல், நீர்கால்யாத்தல், காத்தலென்றிம்முறையவாய இவ் ஐவகையும் வேண்டுமென்பதாம். (அ)

* நிலைபெறுகாலம், நாடுகொண்டசைதை, சேறு.

கoஉக. செல்லான் இரவ னிருப்பி னிலம்புலக்
நில்லாளி னூடி யிடும். கூ.

இ - ள். இரவன் செல்லான் இருப்பின் - அவ்விலத்திற்குரியவன் அதன்கணூடோறுஞ்சென்று பார்த்து அதற்கன செய்யாது மடிந்திருக்குமாயின்,—நிலம் இல்லாளிற் புலத்து ஊடியிடும் - அஃது அவனில்லாள்போலத் தன்னுள்ளே வெறுத்துப் பின்னவனூடியிடும். எ - று.

செல்லுதல் ஆகுபெயர். பிறரையேவியிராது தானேசேறல்வேண்டுமென்பது போதரச் இரவனென்றார். தன்கட்சென்று வேண்டின செய்யாது வேறிடத்திருந்த வழி மனையாளூடுமாறுபோலவென்றதை அவன் போகமிழத்தலுக்கு. இவை மூன்று பாட்டானும் அதுசெய்யுமாறு கூறப்பட்டது. (கூ)

கoசo. இலமென் றசைஇ யிருப்பாரைக் காணி
னிலமென்னு நல்லா ணகும் கo

இ - ள். இலம் என்று அசைஇ இருப்பாரைக் காணின் - யாம் வறியேமென்று சொல்லி மடிந்திருப்பாரை கண்டால்,—நிலம் என்னும் நல்லாள் நகும் - நிலமகளென்று உயர்த்துச்சொல்லப்படுகின்ற நல்லாள் தன்னுள்ளே நகாநிற்கும். எ - று.

உழுதன்முதலிய செய்வா யாவர்க்குஞ் செல்வங்கொடுத்துவருகின்றவாறு பற்றி நல்லாளென்றும், அதுகண்டிவைததும் அதுசெய்யாது வறுமையுறுகின்ற பேதைமை பற்றி நகுமென்றும் கூறினார். இரப்பாரையென்று பாடமோதுவாருமுளர். இதனுள் அதுசெய்யாதவழிப்படுமிழுக்குக் கூறப்பட்டது. வருகின்றவதிகாரமுறைமைக்குக் காரணமுமிது. (கo)

கo நி ம் அதி.—நல்குரவு.

அஃதாவது அகரப்படுவனவாவுமில்லாமை.

கoசக. இன்மையி னின்னுத தியாதெனி னின்மையி
னின்மையே யின்னு தது. க.

இ - ள். இன்மையின் இன்னுதது யாது எனின் - ஒருவனுக்கு வறுமைபோல வின்னுதது யாதென்ற வினவின்,—இன்மையின் இன்னுதது இன்மையே - வறுமை போல வின்னுதது வறுமையே, பிறிதில்லை. எ - று.

இன்னுதது தன்பஞ்செய்வது. ஒப்பதில்லையெனவே, மிக்கதின்மை சொல்ல வேண்டாவாயிற்று. (க)

கoசஉ. இன்மை யெனவொரு பாவி மறுமையு
மிம்மையு மின்றி வரும். உ.

இ - ள். இன்மையென ஒருபாவி - வறுமையென்ற சொல்லப்படுவதொரு பாவி—மறுமையும் இம்மையும் இன்றி வரும் - ஒருவனுழை வருங்கால் அவனுக்கு மறுமையின்பமும் இம்மையின்பமுமில்லையாக வரும். எ - று.

இன்மையென வொருபாலியென்பதற்கு மேல் "அழுக்காறெனவொருபாவீ" யென்புழிபுரைத்தாங்குரைக்க. மறுமை இம்மையென்பன ஆகுபெயர். ஈயாமையானுந் தவ்வாமையானும் அவையிலவாயின. இன்றிவீடுமென்ற பாடமோதிப் பாவியாலென விரித்துரைப்பாருமுளர். (உ)

கஎசஉ. தொல்வரவுந் தோலுங் கெடுக்குந் தொகையாக
நல்குர வென்னு நசை. உ.

இ - ன். நல்குரவு என்னும் நசை - நல்குரவென்றசொல்லப்படுமாசை—தொல்வரவும் தோலும் தொகையாகக் கெடுக்கும் - தன்னுற்பற்றப்பட்டாருடைய பழைய குடிவரவினையும் அதற்கேற்ற சொல்லினையும் ஒருக்கே கெடுக்கும். எ - று.

நசையில்வழி நல்குரவு மில்லையாகலின் நல்குரவையே நசையாக்கி, அஃதது அக்குடியிற்றொல்லோர்க்கில்லாத இழிதொழில்களையும் இளிவந்த சொற்களையுமுளவாக்கலான் அவ்விரண்டனையுமொருங்கு கெடுக்குமென்றார்: "குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்†" என்றார் பிறரும். தோலாவது "இழுமென் மொழியால் விழுமியது நுவறல்‡" என்றார் தொல்காப்பியனாரும். இதற்கு உடம்பென்றுரைப்பாருமுளர்; அஃததற்குப் பெயராயினும் உடம்பு கெடுக்குமென்றற்கோர் பொருட்டெப்பில்லாமையறிக. (ஊ)

கஎசச. இற்பிறந்தார் கண்ணேயு மின்மை யிளிவந்த
சொற்பிறக்குஞ் சோர்வு தரும். ச.

இ - ன். இற்பிறந்தார் கண்ணேயும் - இளிவந்த சொற்பிறவாத குடிப்பிறந்தார்மாட்டேயும்—இளிவந்த சொற்பிறக்கும் சோர்வு இன்மை தரும் - அது பிறத்தற்கேது வாகிய சோர்வினை நல்குரவு உண்டாக்கும். எ - று.

சிறப்பும்மை அவர்மாட்டு அது பிறவாமை தோன்றநின்றது. இளிவந்தசொல் இளிவருதற் கேதுவாகியசொல். அஃதாவது எமக்கியவேண்டுமென்றல். சோர்வு தாமுறுகின்றதன்பமிகுதிபற்றி ஒரோவழித் தம்பிறப்பினை மறந்து அது சொல்லுவதாக நினைத்தல். (எ)

கஎசடு. நல்குர வென்னு மிடும்பையுட் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும். ஙி.

இ - ன். நல்குரவு என்னும் இடும்பையுள் - நல்குரவென்று சொல்லப்படுந் துன்பமொன்றனுள்ளே—பல துன்பங்கள் சென்றுபடும் - பலதுன்பங்களும் வந்து தோயும். எ - று.

குரை இசைநிறை. செலவு விரைவின்கண்வந்தது. துன்பமுற்றானு முடனே நிகழ்தலின் நல்குரவைத்துன்பமாக்கியும், அத்துன்பமடியாகச் செல்வர்கடைகோக்கிச் சேறற்றுன்பமும், அவரைக்காண்டற்றுன்பமும், கண்டான்மறுத்துழி நிகழுந்துன்பமும், மருவழியும் அவர்கொடுத்தது வாங்கற்றுன்பமும், அதுகொவேண்டு தகர்வனகூட்டற்றுன்பமு முதலாயின ஏடோறும் வேறவேறாக வருதலின் எல்லாத்துன்பங்களுமுளவாமென்றுங்கூறினார். இவையைந்துபாட்டானும் நல்குரவின் கொடுமை கூறப்பட்டது. (ஏ)

* திருக்குறள், கஉஅ. † மணிமேகலை, கச-வது பாத்திரம்பெற்றகாதை.
‡ பொருள், செய்யுளியல், உஉக.

கஉக. நற்பொரு ணன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும். கூ.

இ - ன். நற்பொருள் நன்கு உணர்ந்து சொல்லினும் - மெய்ந்நூற்பொருளைத் தெளிவதறிந்து சொன்னராயினும்,—நல்கூர்ந்தார் சொற் பொருள் சோர்வு படும் - நல்கூர்ந்தார் சொல்லுஞ்சொற் பொருளின்மையைத் தலைப்படும். எ - று.

பொருளின்மையைத் தலைப்படுதலாவது யாமிவர்சொல்லியன விரும்பிக்கேட்கு மாயிற் கண்ணோடி இவருறுகின்ற குறைமுடிக்கவேண்டுமென்றஞ்சி யாவருங்கேளா மையிற் பயனில்சொல்லாய்முடிதல். கல்வியும் பயன்படாதென்பதாம். (க)

கஉஎ. அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும். எ.

இ - ன். அறம் சாரா நல்குரவு - அறத்தோடியைபில்லாத நல்குரவுடையான்—ஈன்ற தாயானும் பிறன்போல நோக்கப்படும் - தன்னையீன்றதாயானும் பிறனைக் கருதுமாறுபோலக் கருதி நோக்கப்படும். எ - று.

அறத்தோடுகூடாமை காரணகாரியங்களுளொன்றுபியையாமை. நல்குரவு ஆகுபெயர். சிறப்பும்மை அவளதியற்கையன்புடைமை விளக்கிநின்றது. கொள்வதின்றுதலேயன்றிக கொடுப்பதுணடாதலுமுடைமையின், அதுநோக்கிச் சுற்றத்தார் யாவருந் துறப்பரென்பதாம். (எ)

கஉசஅ. இன்றும் வருவது கொல்லோ கெருஉலுங்
கொன்றது போலு நிரப்பு. அ.

இ - ன். கெருஉலும் கொன்றதுபோலும் நிரப்பு - கெருஉற்றுக கொன்றது போன்று எனக்கின்றுதவறைசெய்த நல்குரவு—இன்றும் வருவதுகொல் - இன்றும் என்பால் வரக்கடவதோ, வந்தால் இனி யாது செய்வேன்! எ - று.

அவ்வின்னுதனவாவன மேற * சொல்லிய துனபங்கள். கெருஉன்மிக வருந்தித் தன்வயிறுநிறைத்தானெருவன் கூற்று. (அ)

கஉசக. கெருப்பினுட் டுஞ்சலு மாகு நிரப்பினுள்
யாதொன்றுங கண்பா டரிது. கூ.

இ - ன். கெருப்பினுள் துஞ்சலும் ஆகும் - மந்திரமருந்துகளான் ஒருவனுக்கு கெருப்பிடையே கிடந்துறங்கலுமாம்,—நிரப்பினுள் யாதொன்றும் கண்பாடு அரிது - நிரப்புவந்துழி யாதொன்றானு முறக்கமில்லை. எ - று.

கெருப்பினும் நிரப்புக்கொடிதென்றவாறாயிற்று. இதுவுமவன்கூற்று. இவை சான்றுபலவாட்டானும் நல்கூர்ந்தார்க்குளதாய் குற்றங் கூறப்பட்டது. (க)

கஉடுஎ. துப்புர வில்லார் துவரத் துறவாமை
யுப்பிற்குங் காடிக்குங் கூற்று. கஎ.

இ - ன். துப்புரவு இல்லார் துவரத் துறவாமை - நுகரப்படும் பொருள்களில் லாதார் தம்மாற்செயத்பாலது முற்றத்துறத்தலேயாகவும் அதுசெய்யாதொழிதல்—

* கிருகுறள், கஉசஅ.

ப்பிற்கும் காடிக்கும் கூற்று - பிறரில்லிலுளவாய உப்பிற்கும் காடிக்கும் கூற்று.

ானமழியாமையிற் செயற்பாலது அதுவேயாயிற்று. முற்றத்துறத்தல் சுற்றம் ேவிட்டகமையின் ஒருவாற்றுற்றதாராயினுர்கின்ற தம்முடம்பினேபுத்துறத்தல். ெய்யாதுகொண்டிருத்தல் இரண்டனேபு மாளப்பண்ணுதலின், அதனே அவற் ற்குக் கூற்றென்ருர். இனி முற்றத்துறத்தலாவது துப்புரவில்லாமையின் ஒருவாற் ற்றுற்றதாராயினுர் பின்னவற்றை மனத்தாற்றுறவாமையென்றுரைப்பாருமுளர். ஈதுன் அஃதனதாயவழிச் செய்வது கூறப்பட்டது. (எ0)

கஉசும் அதி.—இரவு.

இனி மானந்நீராலிரவு இரவாமையோடொத்தலின், அதனனும் வீடெய்தற் பயத்ததாய உடம்போம்பப்படுமென்னும் அறனுல் வழக்குப்பற்றி மேலெய்திய துவ ரத்துறத்தல் விலக்குதற்பொருட்டு இரவு கூறுகின்ருர். அதிகாரமுறைமையும் இத ஞனே விளங்கும்.

கஉடுக. இரக்க விரத்தக்கார்க் காணிற் கரப்பி
னவர்பழி தம்பழி யன்று. க.

இ - ள். இரத்தக்கார்க் காணின் இரக்க - நல்கூர்ந்தார் இரத்தற்கேற்புடையா ரைக் காணில், அவர்மாட்டிரக்க;—கரப்பின் அவர்பழி தம்பழி அன்று - இரந்தால் அவர் கரந்தாராயின் அவர்க்குப்பழியாவதல்லது தமக்குப் பழியாகாமையான். எ-று.

இரவென்னுமுதனிலைத்தொழிற்பெயரதிறுதிக்கண் கான்னனுருபு விகாரத்தாற் ருெக்கது. இரத்தறகேற்புடையாரவார் உரையாமை முன்னுணருமொண்மையுடைய ராய் மாற்ருரீவார். அவர் உலகத்தரியராகலிற் காணினென்றும், அவர்மாட்டிரக் தார்க்கு இரவான்வருமிழிவின்மையின் இரக்கவென்றும், அவர் ஈதலிற் குறைபாட்டா மையிற கரப்பினென்றும், காட்டிவரயின் அப்பழிதானவெள்ளறுவைக்கண் மாசுபோல அவர்கட் கடிதுசேறலின் அவர்பழியென்றும், எற்பிலார் மாட்டிரவன்மையிற் தம்பழி யன்றென்றுங் கூறினர். (எ)

கஉடுஉ. இன்ப மொருவற் கிரத்த லிரந்தவை
துன்ப முறுஅ வரின். உ.

இ-ள். ஒருவற்கு இரத்தல் இன்பம் - ஒருவற்கு இரத்தருதலும் இன்பத்திற் கேதுவாம்,—இரந்தவை துன்பம் உறு வரின் - இரந்தபொருள்கள் ஈவாரதனர்வு டைமையாற் ருன்றன்புறுமல் வருமாயின். எ - று.

இன்பம் ஆகுபெயர். உறுமலென்பது கடைக்குறைந்துநின்றது. துன்பம் சாதி யொருமைப்பெயர். அவையாவன ஈவார்கட் காலமுமிடனுமறிந்துசேறலும், அவர் குறிப்பறிதலும், அவரைத்தம்வயத்தராக்கலும், அவர் மனஞெழிவன நாடிச்சொல் லலு முதலியவற்ருன் வருவனவும், மறுத்தழி வருவனவுமாம். அவையுறுமல் வருத லாவது அவர் முன்னுணர்ந்தியக்கோடல். இரந்தவர் துன்பமுறுவரினென்று பாட மோதி, இரக்கப்பட்டவர் பொருளின்மை முதலியவற்ருற் துன்புறுது எதிர்வந்தியா யினென்றுரைப்பாருமுளர். இவை யிரண்டுபொட்டானும் கல்ருவானுயிர்க்குமெல் லாக்கண் இனிவில்லாவிரவு விலக்கப்படாதென்பது கூறப்பட்டது. (உ)

கல்லாடம். கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்
றிரப்புமோ ரோர் ருடைத்து. கூ.

இ - ள். கரப்பிலா நெஞ்சிற் கடன் அறிவார் முன் நின்று இரப்பும்-கரத்தலில்லா நெஞ்சினையுடைய மானமறிவார்முன்னர் நின்று அவர்மாட்டொன்றிரத்தலும்—ஒரோர் உடைத்து - நல்கூர்ந்தார்க்கு ஓரழருடைத்து எ - று.

"சிறியசருக்கத்துவேண்டுமுயர்ந்" வென்றதனால், அவர்க்கு அது கடனெனப் பட்டது. அதனையறிதல் சொல்லுதலுறுதுரைக்கலாகாமைக்கேதுவாய அதனியல் பினையறிதல். அவ்வறிவுடையார்க்கு முன்னிற்றன்மாத்திரமேயமைதலின் முன்னின் றென்றும் சொல்லுதலான்வருஞ் சிறுமையெய்தாமையின் ஓரோருடைத்தென்றுங் கூறினர். உம்மை அதனிழிபு விளக்கநின்றது. (கூ)

கல்லாடம். இரத்தலு மீதலே போலுங் கரத்தல்
கனவிலுந் தேற்றுதார் மாட்டு. ச.

இ - ள். கரத்தல் கனவிலும் தேற்றுதார்மாட்டு இரத்தலும் - தமக்குள்ளது கரத்தலைக் கனவின்கண்ணு மறியாதார்மாட்டுச்சென்றுன்னியிரத்தலும்—ஈதலே போலும் - வறியார்க்கீதலேபோலும். எ - று.

உம்மை ஈண்டுமெய்வாதுநின்றது. தான் புகழ்பயவாதாயினும் முன்னுளதாய புகழ் கெட வாராமையின், ஈதலேபோலுமென்றார். ஏகாரம் ஈற்றசை. (ச)

கல்லாடம். கரப்பிலார் வையகத் தண்மையாற் கண்ணின்
றிரப்பவர் மேற்கொள் வது. ஞ.

இ - ள். கண்ணின்று இரப்பவர் மேற்கொள்வது - சொல்லுதன்மாட்டாது முன்னிற்றன்மாத்திரத்தான் இரப்பார் உயிரோம்பற்பொருட்டு அதனை மேற்கொண்டு போதலின்றது—கரப்பிலார் வையகத்து உண்மையான்-அவர்க்கு உள்ளது கரவாது கொடுப்பார் லெர் உலகத்துளராய தன்மையானே, பிறிதொன்றுனன்று. எ - று.

அவரில்லையாயின், மானநீக்கமாட்டாமையின் உயிர்நீப்பரென்பதாம். (ஞ)

கல்லாடம். கரப்பிடும்பை யில்லாரைக் காணி னிரப்பிடும்பை
யெலலா மொருங்கு கெடும். கூ.

இ - ள். கரப்பிடும்பை இல்லாரைக் காணின் - உள்ளதுகரத்தலாகிய கோயில் லாரைக் கண்டால்,—நிரப்பிடும்பை எல்லாம் ஒருங்கு கெடும் - மானம்விடா நிரப் பார்க்கு நிரப்பான் வருத்துன்பங்களெல்லாஞ் சேரக்கெடும். எ - று.

கரத்தல் ஒருவற்கு வேண்டுதொன்றன்மையின் அதனை கோயென்றும்,அஃதில் லாத இரக்கத்தக்காரைக் கண்டபொழுதே அவர் கழிபுவகையராவராகலின் எல்லா மொருங்கு கெடுமென்றுகூறினார். இடும்பை துன்பெயர். முழுதுங் கெடுமென்று பாடமோதி, எஞ்சாமற்கெடுமென் றுரைப்பாருமுளர். (ஞ)

கல்லாடம். இகழ்ந்தென்னா நீவாரைக் காணின் மகிழ்ந்துள்ள
மூன்ரு ருவப்ப துடைத்து. எ.

* நிருக்குறள், கக.

இ - ள். இகழ்ந்து எள்ளாத ஈவாரைக் காணின் - தம்மையவமதித்திழிவு சொல்
---ஓ பொருள்கொடுப்பாரைக்கண்டால்,—உள்ளம் மகிழ்ந்து உள்ளுள் உவப்பது
டைத்து - அவ்விரப்பாரது உள்ளமகிழ்ந்து உள்ளுள்ளேயுவக்குர் தன்மையு
---த்து. எ- று.

இகழ்தென்னாதெனவே, கண்குமகித்தலும் இனியவைகூறலும் பெறுதும். கிரப்பிடும்பை கெதிலளவேயன்றி ஐம்புலன்களாலும் பேரின்பமெய்திஞராகச் செ தலான், உள்ளுளுவப்பதடைத்தென்ரூர். இவையைந்துபாட்டாலும் அவ்விரத்தச் காரணியல்பு கூறப்பட்டது. (எ)

கஙருஅ. இரப்பாரை யில்லாயி னீாங்கண்மா ஞால
மரபபாவை சென்றுவந் தற்று. அ.

இ - ள். இரப்பார் இல்லாயின் - வறுமையுற்றிரப்பாரில்லையாயின்,—ஈர்ங்கண் மா ஞாலம் - குளிர்ந்தவிடத்தையுடைய பெரிய ஞாலத்துள்ளார் செலவு வரவுகள்—மரப்பாவை சென்று வந்தற்று - உயிரில்லாத மரப்பாவை இயந்திரக்கயிற்ருற்சென்று வந்தாற்போலும் எ - று.

ஐகாரம் அசை நிலை ஞாலமென்னும் ஆகுபெயர்ப்பொருட்கு உவமையோடொத்த தொழில் வருவிக்கப்பட்டது. ஞாலத்துள்ளாரென்றது அவரையொழிந்தாரை. அவர்க்தேலச்செய்து புகழும் புண்ணியமுமெய்தாமையின், உயிருடையரல்லரென்பதாம்; "ஈவாருங் கொள்வாரு மில்லாத வானத்து—வாழ்வாரோ வன்க ணவர்" என்ரூர் பிறரும். இத்தொடையின்பநோக்காது இரப்பவரில்லாயினென்று பாடமோது வாருமுளர். (அ)

கஙருக ஈவார்க ணென்னுண்டாந் தோற்ற மிரந்துகோண்
மேவா ரிலாஅக் கடை. கூ.

இ - ள். இரந்துகோள் மேவார் இலாக்கடை - அவர்பாற்சென்று ஒன்றை யிரந்துகோடலே விரும்புவாரில்வழி—ஈவார்கண் தோற்றம் என் உண்டாம் - கொடுப்பார்மாட்டு என்னபுகழுண்டாம்! யாதுமில்லை. எ - று.

தோற்றம் ஆகுபெயர். மேவுவாரென்பது விகாரமாயிற்று. கொடுத்தல்வன்மை வெளிப்படாமையின், அதனுற்புகழெய்தாரென்பதாம். இவையிரண்டுபோட்டாலும் உலகிற்கிரப்பார்வேண்டுமென்பது கூறப்பட்டது. (கூ)

கஙகூஙு. இரப்பான் வெகுளாமை வேண்டி கிரப்பிடும்பை
தானேயுஞ் சாலுங் கரி. கஙு.

இ - ள். இரப்பான் வெகுளாமை வேண்டும் - ஈவானுக்குப் பொருளுதவாவழி இவனெனக்கிவின்றிலனென்ற அவனை யிரப்பான் வெகுளா தொழிதல்வேண்டும்;—கிரப்பிடும் பை தானேயும் கரிசாலும் - அது வேண்டியபொழுது உதவாதென்பதற்கு வேறுசான்று வேண்டா, கிரப்பாயிய தன்னிடும்பை தானேயுஞ் சான்றுதலமையும். எ - று.

பாவர்க்கும் நேடவேண்டுதலும் கிலையின்மையுமுதலிய பிறசான்று முண்டெ
பதுபட கின்றமையின், உம்மை எச்சவும்மை. தனக்கேயன்ற மற்றையிரத்தார்க்கும் அற்றைக்கென்று பொருள் கடைக்கூட்டற்கு அவனுதவுதன்பத்தைத் தனக்கேயாக

வைத்துத் தானுறுதன்பம் தானறிந்த வெருளற்கென்பதாம். இதனுல் ஐவர்க் கின்றியமையாதோரியல்பு கூறப்பட்டது. (கூ)

கஎ ம் அதி.—இரவச்சம்.

அஃதாவது மானந்தீரவருமிரவிற்கஞ்சுதல். அதிகாரமுறைமையும் இதனுனே னிளங்கும்.

கஎ.க கரவா துவந்தீயுங் கண்ணன்னூர் கண்ணு
மிரவாமை கோடி யுறும். க.

இ - ள். கரவாது உவந்து ஈயும் கண் அன்னூர் கண்ணும் இரவாமை - தமக்குள் ளது கரவாது இவர் வரப்பெற்றேமென்று உண்மகிழ்ந்து கொடுக்கும் கண்போலச் சிறந்தார்மாட்டும் இரவாதே ஒருவன் வறுமைகூர்தல்—கோடி உறும் - இரந்து செல்வ மெய்தலிற் கோடிமடங்கு நன்று. எ - று.

நல்குரவு மறைக்கப்படாத கட்டார்மாட்டும் ஆசாதென்பதுபட நின்றமையின், உம்மை உயர்வுசிறப்பின்கண்வந்தது. அவ்விரவான் மானந் தீராதென்னுந் தூணையல் லது அதற்கு மிகுதி கூடாமையின், வல்லதோர் முயற்யொனுயிரோம்பலே நல்ல தென்பது கருத்து. (க)

கஎ.உ. இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக வுலகியற்றி யான். உ.

இ - ள். உலகு இயற்றியான் இரந்தும் உயிர்வாழுதல் வேண்டின் - இவ்வுலகத் தைப் படைத்தவன் இதன்கண் வாழ்வார்க்கு முயன்றுயிர்வாழ்தலேயன்றி இரந்து முயிர்வாழ்தலே வேண்டி வகுத்தானுயின்,—பரந்து கெடுக - அக்கொடியோன்முனும் அவரைப்போன்று எங்குமலமந்து கெடுவானுக. எ - று.

மக்களுயிர்க்கெல்லாம் வாழ்நாளும் அதற்கு வேண்டுவதாயுவண்டியும் அதற் கேதுவாய செய்தொழிலும் பழவினைவயத்தாற் கருவொடுகலந்தவன்றே அவன் கற் பிக்குமன்றே, அவற்றுட் சிலவுயிர்க்கு இரத்தலேயும் ஒருசெய்தொழிலாகக் கற்பித்தா னுயின் அத்தீவினையாற் ருனும் அத்தன்பமுறல்வேண்டுமென்பதாம். இவையிரண்டு பாட்டானும் அவ்விரவின் கொடுமை கூறப்பட்டது. (உ)

கஎ.கூ. இன்மை யிடும்பை யிரத்தநீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட்ட தில். கூ.

இ - ள். இன்மை இடும்பை இரந்து நீர்வாம் என்னும் வன்மையின் - வறுமை யான் வருந்தன்பத்தை முயன்று நீக்கக்கடவேமென்று கருதாது இரந்து நீக்கக்கட வேமென்று கருதும் வன்மைபோல—வன்பாட்டது இல் - வலிமைப்பாடையுத பிறிதில்லை. எ - று.

தெரியாத முயற்சி நீக்க தெரியல்லாத இரவாற்நீர்க்கக்கருதுதலின், வன்மையா கிற்ற. வன்பாடு முருட்டுத்தன்மை; அஃதாவது ஓராதுசெய்துகிற்றல். இதனுன் வறுமை நீர்தற்கு தெரி இரவன்றென்பது கூறப்பட்டது. (க)

கஎ.சு. இடமெல்லாம் கொள்ளாத் தகைத்தே யிடமில்லார்க்
காறு மிரவொல்லாச் சால்பு. ச.

இ - ள். இடம் இல்லாக்காலும் இரவு ஒல்லாச் சால்பு - நகரவேண்டினை நி ல்கூர்த்தவழியும் பிறர்பாற்சென்றிரத்தலேயுடம்படாத அமைதி—இடமெல் கொள்ளாத் தகைத்தே - எல்லாவுலகும் ஒருங்கியைத்தாலுங் கொள்ளாத பெரு த்து. எ - று.

அவ்விரத்தலைச் சால்பு விலக்குமாகலின், இரவொல்லாமை அதன்மேலேற்றப் ட்டது. இதனுன் அச்செறியல்லதனைச் சால்புடையார் செய்யாரென்பது கூறப் பட்டது. (ச)

௬0கூ. தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தாடந்த
தண்ணலி னூங்கினிய தில். கூ.

இ - ன். தான் தந்தது தெண்ணீர் அடுபுற்கையாயினும் - தெறியாய முயற்றி கொவேக்த தந்தது தெளிந்தநீர்போலும் அடுபுற்கையேயாயினும்,—உண்ணலின் ஊக்கு இனியது இல் - அதனையுண்டற்குமேலினியதில்லை. எ - று.

தாடந்தகூம் செறிவின்றித் தெண்ணீர்போன்றதாயினும் இழிவாய இரவான்வந் தனந்தித் தம்முடைமையாகலின், அமிழ்தத்தோடொக்குமென்பதாம். இதனுல் தெறி யினுனைய சிறிதேனும் அதுசெய்யுமின்பம் பெரிதென்பது கூறப்பட்டது. (ஞ)

௬0கூ. ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற்
கிரவி னிளிவந்த தில். கூ.

இ - ன். ஆவிற்கு நீரென்று இரப்பினும் - தண்ணீர்பெருது இறக்குங்கிலைமைத்தா யதோராவினைக் கண்டு அதனுக்கி இதற்குத் தண்ணீர் தரல்வேண்டுமென்றிரந்து சொல்லுங்காலும்,—இரவின் நாவிற்கு இளிவந்தது இல் - அவ்விரவுபோல ஒருவனு லிற்கிளிவந்தது பிறிதில்லை. எ - று.

ஆ காத்தோம்பல் பேரறமாகலின் ஆவிற்கென்றும், பொருள்கொடுத்துக் கொள்ள வேண்டாத எண்மைத்தாகலின் நீரென்றும், இரக்கின்றனுக்கு இளிவு அச்சொல்லனவேயாகலின் நாவிற்கென்றும், அதுதான் எல்லாவிளிவினும் மேற்படு தலின் இளிவந்தநில்லென்றுங்கூறினர். இதனுன் அறனும் முயன்றசெய்வதல்லது இரந்து செய்யற்கென்பது கூறப்பட்டது. (ஃ)

௬0கூ. இரப்ப னிரப்பாரை யெல்லா மிரப்பிற்
கரப்பா ரிரவன்மி னென்று. எ.

இ - ன். இரப்பாரை எல்லாம் இரப்பன் - இரப்பாரையெல்லாம் யானிரவாரின் றேன்,—இரப்பிற் கரப்பார் இரவன்மின் என்று - யாதுசொல்லியெனின், தமக்கிரக்க வேண்டுமாயிற் றமக்குள்ளது கதப்பாரையிரவாதொழிமினென்று சொல்லி. எ - று.

இரண்டாவது விகாரத்தாற்றொக்கது. இவ்விளிவந்த செயலான் ஊட்டியவழி யும் உடம்பு நில்லாதாகலின் இது வேண்டாவென்பது தோன்ற, இரப்பனென்றார். இதனுன் மானக்கிரவருமிரவு விலக்கப்பட்டது. (எ)

௬0கூ. இரவென்னு மேமாப்பி றேணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும். அ.

இ - ன். இரவு என்னும் ஏமாப்பு இல் தோணி - இவ்வறமையென்னும் கடலே இதனுற்கடத்தலென்றகருதி ஒருவனேறிய இரவென்னுஞ் சேமமற்ற தோணி—கரவு

என்னும் பார் தாக்கப்பக்குலியிம் - அதன்மேலேகோற் காத்தலென்னும் வன்மிலத் தோடு தாக்குமாயிற் பிளந்துபோம். எ - து.

முயற்பொற் கடப்பதனே இரவார்கடக்கலுற்றான் அதன்கரை காணுமையின், எமாப்பிரேணியென்றார். எமாப்பின்மை தோணிமேலேற்றப்பட்டது. அதுகடத்தற் றெற்றன்மையானும், நிலமதியாது செலுத்தியவழி; உடைதலானும், அதன்மேற் றந்தென்பதாம். இஃதவையவருவகம். (அ)

கஅகக. இரவுள்ள வுள்ள முருகுங் கரவுள்ள
வுள்ளதூஉ மின்றிக் கெடும். க.

இ - ன். இரவு உள்ள உள்ளம் உருகும் - உடையார்முன் இல்லார்சென்றிரந்து நிற்றலின் கொடுமையை நினைத்தால் எம்முள்ளம் கரைந்துருகாநிற்கும்;—கரவு உள்ள உள்ளதூஉம் இன்றிக்கெடும்-இனி அற்றிலேயைக்கண்டவைத்தவர் இல்லேயென்றலின் கொடுமையை நினைந்தால் அவ்வுருகுமனவுதானுமின்றிப் பொன்றிவிடும். எ - து.

"இரவினை—புள்ளுங்கா துள்ள முருகுமா லென்கொலோ—கொள்ளுங்காற் கொள்வார் குறிப்பு." என்றார் பிறரும். இரவினுங்கரவு கொடிதென்பதாம். இதற்குப் பிறசெல்லாம் இரக்கின்றவருள்ளமுருகுமென்றுரைத்தார். (க)

கஎ0. கரப்பவர்க் கியாங்கொளிக்குங் கொல்லோ விரப்பவர்
சொல்லாடப் போஒ முயிர். க0.

இ - ன். சொல்லாட இரப்பவர் உயிர் போம் - கரப்பார் இல்லேயென்றுசொல்லாடிய தூணையானே இரப்பார்க்கு உயிர்போகாநின்றது;—கரப்பவர்க்கு யாங்கு ஒளிக்குங்கொல் - இனிச் சொல்லாடுகின்ற அவர்தமக்கு உயிர் பின்னு நிற்றலான் அப்பொழுது எப்புரையுட் புக்கொளித்துநிற்கும்! எ - து.

உயிர்போகலாவது இனியாமென்செய்துமென்றேங்கிச் செயலற்றுநிற்றல்; "அச்சினையே—மாயனே மாற்றிவிடின்†" என்றார் பிறரும். கேட்டாரைக்கொல்லவற்றாய சொற் சொன்வாரைச்சோறல் சொல்லவேண்டாவாயினும் அது காண்கின்றிலம் இஃதென்னேவென்பதாம். வறுமையுற்றழி மறையாது இரக்கப்படுவோராய கேளிர்கட்கும் அதனைச்சொல்லாட உயிர்போம், ஆனபின் மறைக்கப்படுவோராய பிறர்க்குச் சொல்லாடியக்காற் போகாதென்கே யொளித்துநிற்கும் இரண்டானும் போமேயன்றேவென இரவுள்ளெனெருவன் கூற்றுநிகழ்த்தியாறாமுரைப்பாருமுளர். இவை மூன்று பாட்டானும் அவ்விரவின்குற்றமும் கரவின்குற்றமும் ஒருங்கு கூறப்பட்டன. (கo)

கo அம் அதி.—சுயமை.

அரசாவது மேல் அரசியலுள்ளும் அல்லியலுள்ளுஞ் சிறப்புவகையாற் கூறப்பட்ட குணங்களுள் ஏற்புடையன குறிப்பினும் பயன்கருமெய்தலைத்தமையின் ஆண்டே குறிப்பாற் கூறியனவும் ஈண்டொழிபியலுள் வெளிப்படக்கூறினவுமாய

* காவாத நின்னன்பிற் கண்ணன்ஞர் கண்ணு—பிரியாது வாழ்வதாம் வாழ்க்கை. பிரியினை—புள்ளுங்கா துள்ள முருகுமா லென்கொலோ—கொள்ளுங்காற் கொள்வார் குறிப்பு—காடியார், இரவச்சம்.

† புதாத்தற் கின்மை கலிய வகத்தற்கு—வள்ளாள சிக்கி நிறீஇ யொருவினை—யுயிர் வெளவுசெய் நிகழ்வினை வக்கிலேமைபாலே மாற்றி விடின்—காடியார், இரவச்சம்.

யாவுமிலராய தோராத நன்மை. அதனால் இஃதெல்லாவற்றிற்கும் பின் வைத்துரைக்கப்பட்டது.

கஎக. மக்களே போல்வர் கயவ ரவரன்ன
வொப்பாரி யாங்கண்ட தில். க.

இ - ன். மக்களே போல்வர் கயவர் - வடிவான் முழுதும் மக்களேயொப்பர் கயவர்;—அவர் அன்ன ஒப்பாரி யாம் கண்டது இல் - அவர் மக்களேயொத்தாற்போன்ற வொப்பு வேறிரண்டு சாதிக்கண் யாங்கண்டதில்லை. எ - து.

முழுதுமொத்தல் தேற்றேகாரத்தாற்பெற்றும். அவரென்றது அவர்மாட்டினதாய வொப்புமையை. மக்கட்சாதிக்கும் கயச்சாதிக்கும் வடிவொத்தலிற் குணங்களது உண்மையின்மைகளானல்லது வேற்றுமையறியப்படாதென்பதாம். இதனும் கயவரது குற்றமிருதி கூறப்பட்டது. (எ)

கஎஉ. நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர். உ.

இ - ன். நன்ற அறிவாரிற் கயவர் திரு உடையர் - தமக்குறுதியாவனவறிவாரின் அலையறியாத மேம்மக்கள் நன்மையுடையவர்,—நெஞ்சத்து அவலம்இலர்-அவர்போல அவைகாரணமாகத் தம்நெஞ்சத்தின்கட் கவலையிலராகலான். எ - து.

நன்றென்பது சாதியொருமை. உறுதிகளாவன இம்மைமறுமைவீடுகட்குரிய வாய புகழறஞானங்கள். இவற்றையறிவார் இவை செய்யாதின்றே மிகச்செய்பேது கின்றிலேமென்றும், செய்கின்றவிவைதமக்கு இடையூறுவருங்கொலென்றும், இவற் றின் மறுதலையாய பழிபாவமறியாமையென்பனவற்றுள் யாதுவினாயுமோவென்றும், இவ்வாறுரற் கவலையெய்துவர்; கயவர் அப்புகழ்முதலியவொழித்துப் பழிமுதலிய செய்யாதின்றும் யாதுகவலையுடையரல்லராகலாற் திருவுடையரெனக் குறிப்பம லிகழ்ந்தவாறு. இதனும் பழிமுதலியவற்றிற்கஞ்சாரென்பது கூறப்பட்டது. (உ)

கஎஊ. தேவ ரனையர் கயவ ரவருந்தா
மேவன செய்தொழுக லான். ஊ.

இ - ன். தேவர் அனையர் கயவர் - தேவருங்கயவரும் ஒருதன்மையர்,—அவரும் தாம் மேவன செய்து ஒழுகலான் - அஃதியாதனெனின், தேவரைப்போனது தம்மை யியற்பாரின்றிக் கயவரும் தாம் விரும்புவனவற்றைச் செய்தொழுக லான். எ - து.

உயர்ச்சியும் இழிவுமாகிய தன்னானவேறுபாடு குறிப்பாற்றென்றின்றமை யின், இது புகழ்வார்போன்று பழித்தவாறுமாம். இதனால் விலக்கற்பாடின்றி வேண் டிய செய்வரென்பது கூறப்பட்டது. (ஊ)

கஎஎ. அகப்பட்டி பாவாரைக் காணி னவரின்
மிகப்பட்டுச் செம்மாக்கும் மேம். எ.

இ - ன். மேம் - மோயினன்,—அகப்பட்டி பாவாரைக் காணின் - தன்னிற் சருகு திய பாட்டியாமுருவாரைக் கண்டானுயின்,—அவரின் மிகப்பட்டுச் செம்மாக் கும் - அவ்வொழுக்கத்தின்கண் அவரிற் முன்னேம்பட்டு அதனுற்றன்மிருதிகாட்டி யிறுமாக்கும். எ - து.

அகப்பட்டி அகமாயெபட்டி. பட்டிபோன்று வேண்டியவாறெபொழிலின், பட்டியென்றார்; "சோதக்கசெய்யுஞ் சிறபட்டி" என்றார் பிறரும். இதனால் அவர் மேம்பமொற கூறப்பட்டது. (ச)

கஎஎ. அச்சமே கீழ்கள ஆசார மெச்ச
மவாவுண்டே ஞண்டாஞ் சிறிது. ஞி.

இ - ள். கீழ்களது ஆசாரம் அச்சமே - கயவராதாயவாசாரங் கண்டதுண்டாயின் அதற்குக் காரணம் அசனன் ஏதம் ருமென்றஞ்சுமச்சமே;—எச்சம் அவா உண்டேல் சிறிது உண்டாம் - அஃதொழிந்தால், தம்மால் அவாவப்படும் பொருள் அதனு ஞண்டாமாயிற் சிறிதுண்டாம். எ - று.

ஆசாரத்தின் காரணத்தை ஆசாரமென்றும், அவாவப்படுவதனை அவாவென்றுங் கூறினார். எசசத்தின்கண்ணென்னுமேழாவது இறந்திக்கட்டொக்கது. பெரும்பான்மை அசசம், சிறுபான்மை பொருட்பேறு இவ்விரண்டானுமன்றி இயல்பாகவுண்டாகாதென்பதாம். வேண்டியசெய்தலே இயல்பு, ஆசாரஞ்செய்தல் இயல்பன்றென்பது இதனாற் கூறப்பட்டது. (இ)

கஎஅ. அறைபறை பன்னர் கயவர்தாங் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான். கூ.

இ - ள். தாம் கேட்ட மறை உய்த்துப் பிறர்க்கு உரைக்கலான் - தாங்கேட்ட மறைனை இடந்தோறுந் தாங்கிக்கொண்டு சென்று பிறர்க்குச் சொல்லுதலான்,—கயவர் அறை பறை அன்னர் - கயவர் அறையப்படும் பறையினையொப்பர். எ - று.

மறை வெளிப்படிற் குற்றம்வினையுமென்று பிறரைமறைத்து ஒருவன்சொல்லிய சொல். பிறர் அம்மறைத்தற்குரியார். உய்த்தென்றார், அவர்கடது பெரும்பாரமாதலுஞ்சி. பறை ஒருவன்கையாற் றன்னையறிவிதததொனறனை இடந்தோறுங்கொண்டு சென்று யாவரையுமறிவிக்குமாகலான, இது தொழிலுவமம. இதனால் அவரது செறிவின்மை கூறப்பட்டது. (ஈ)

கஎஎ. ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்குங்
கூன்கைய ரல்லா தவர்க்கு எ.

இ - ள். கயவர் கொடிறு உடைக்கும் கூன் கையர் அல்லாதவர்க்கு - கயவர் தங் கறப்பினைநெரிப்பதாக வளைந்த கையினையுடையரல்லாதார்க்கு—ஈர்ங்கை விதிரார்- தாமுண்டு பூசை கையைத்தெறித்தல் வேண்டுமென்றிரக்தாலுங் தெரியார். எ-று.

வளைந்தகை முறுக்கியகை. மெலிவார்க்கு யாதுங்கொடார், வலிவார்க்கு எல்லாங் கொடுப்பரென்பதாம். (உ)

கஎஅ. சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோற்
கொல்லப் பயன்படுங் கீழ். அ.

இ - ள். சொல்லப் பயன்படுவர் சான்றோர் - மெலியார் சென்று தங்குறையைச் சொல்லியதனையாதே இரங்கிப் பயன்படுவர் மேலாயினோர்;—கீழ் கரும்புபோல்

---

* கலி, குறிஞ்சி, ஏ.

[illegible] பயன்படுமே - மற்றைச் ழோயினுள் கரும்புபோல வலியார் வாய செருக்கிய [illegible] பயன்படுவர். எ - று.

பயன்படுதல் உள்ளதுகொடுத்தல். ழோயினுநிழிவுதோன்ற, மேலாயினுமையும் [illegible] ன் கூறினர். இவையிரண்டுபோட்டானும் அவர் கொடுக்குமாறு கூறப்பட்டது. (அ)

கஎஅக. உடுப்பதூஉ முண்பதூஉங் காணிற் பிறர்மேல்
வடுக்காண வற்ரூங் கீழ். கூ.

இ - ள். உடுப்பதூஉம் உண்பதூஉம் கீழ் காணின் - பிறர்செல்வத்தாற் பட்டுத் தனதுமுதற்றலையும் பாலோடடிநெண்டலையுங் ழோயினுன் காணுமாயின்,—பிறர் மேல் வடுக் காண வற்ரூரும் - அவற்றைப் பொருது அவர்மாட்டு வடுவில்லையாகவும் உண்டாக்க வல்லனும். எ - று.

உடுப்பது உண்பதென்பன ஈண்டவ்வத்தொழின்மேனின்றன; அவற்ரூற் பூண்டல் ஊர்தன்முதலிய பிறதொழில்களுங்கொள்ளப்படும். அவற்றைக் கண்டதனையானே பொருமையெய்தலிற் காணினென்றும், கேட்டார் இது கூடுமென்றியையப் படைத்தல் அரிதாகலின் வற்ரூருமென்றுங்கூறினர். இதனுற் பிறர்செல்வம்பொருமை கூறப்பட்டது. (க)

கஎஅ0. எற்றிற் குரியர் கயவரொன் றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து. கஎ0.

இ - ள். கயவர் ஒன்று உற்றக்கால் விரைந்து விற்றற்கு உரியர் - கயவர் தம்மை யாதானுமொரு தன்பமுற்றக்கால் அதுவே பற்றுக்கோடாக விரைந்து தம்மைப் பிறர்க்கு விற்றற்குரியர்;—எற்றிற்கு உரியர் - அதுவன்றி வேறெத்தொழிற்குரி யர்? எ - று.

உணவின்மையாகப் பிறிதாக ஒன்று வந்துற்றதனையானென்பது தோன்ற ஒன் றுற்றக்காலென்றும், கொள்வோர் தங்கயமையறிந்து வேண்டாவென்றற்கு முன் னே விற்றலிற்றலின் விரைந்தென்றுங்கூறினர். ஒருதொழிற்கு முரியரல்லரென்பது குறிப்பெச்சம். இதனுற்றும் பிறர்க்கடிமையாய் நிற்பரென்பது கூறப்பட்டது. (எ0)

ஒழிபியல் முற்றிற்று.

பொருட்பால் முற்றிற்று.

காமத்துப்பால்.

களவியல்.

இனி அப்பொருளைத் தனைக்காரணமாகவுடைத்தாய் இம்மையே பயப்பதாய வின்பங்கூறவானெடுத்துக்கொண்டார். ஈண்டின்பமென்றது ஒருகாலத்தொருபொருளான் ஐம்புலனுகர்தற்பெப்புடைத்தாய காமவின்பத்தினை. இச்சிறப்புப்பற்றி வடநூலுட் போசராசனுஞ் சுவையலவென்ற கூறவார் கூறிய யங்கூறுவதின்பச் சுவை யொன்றினையுமேயென இதனையே மிருத்துக்கூறினுன். இது புணர்ச்சி பிரிவெனவிருவகைப்படும். எனை இருத்தல், இரங்கல், ஊடலென்பனவோவெனின், இவர்பொருட்பாகுபாட்டினை அறம்பொருளின்பமென வடநூல்வழக்குப்பற்றியோதலான், அவ்வாறேயவற்றைப் பிரிவின்கணடக்கினுரென்க. இனி அவைதம்மையே தமிழ் நூல்களோடும் பொருந்தப் புணர்ச்சியைக் களவென்றும் பிரிவைக் கற்பென்றும் பெரும்பான்மைபற்றி வகுத்து, அவற்றைச் சுவையிருதிபயப்ப உலகவழக்கோடு ஒப்பு மொவ்வாமையு முடையவாக்கிக் கூறுகின்ருர். அக் கைகோளிரண்டனுள்ளும் களவாவது பிணிமூப்பிறப்புக்களின்றி எஞ்ஞான்று மொருதன்மையராய் உருவுந் திருவும் பருவமுங் குலனுங்குணனு மன்புமுதலியவற்றுற் றம்மொப்புமையுடைய ராய தலைமகனுந் தலைமகளும் பிறர்கொடுப்பவுமுடுப்பவுமன்றிப் பால்வகையாற்றுமே யெனிர்ப்பட்டுப் புணர்ந்துவருவது. அதனையேழதிகாரத்தாற் கூறவான்றொடங்கி, முதற்கட்டகையணங்குறுத்தல் கூறுகின்ருர்.

கஙூம் அதி.—தகையணங்குறுத்தல்.

அஃதாவது பொழில்வினையாட்டிலிருப்பான் தயரிய அதன்கட்டமியளாய் நின்றுழ வேட்டவிருப்பான் இவளார்க்கத் தமியனெய்வத் தன்னுற்ற தலைமகன் அவன் வனப்புத் தன்னை வருத்தமுறுவித்தலைச் சொல்லுதல். இது, தன்னுற்ற பொழுதே கிழ்வதாகலின், முதற்கட் கூறப்பட்டது.

கஙஅக. அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொன் மாலுமென் னெஞ்சு. க.

தலைமகளுருவுமுதலியன முன்னுண்டிவனவன்றிச் சிறந்தமையின் அவளைத் தலைமகன் ஐயுற்றது.

இ - ள். கனங்குழை - இச்சொல்லியருமுலையுடையாள்—அணங்குகொல் - இப் பொழிற்சாலுள்ளாளோர் தெய்வமகளோ,—மயில் கொல் - அன்றி யெற்குமேல் விதேமேசை,—மாதர்கொல் - அன்றியொருமானுடமாதரோ,—என் நெஞ்சு மாலும் - இவ்வியல்பினளென்று தெளியமாட்டாது என்னெஞ்சு மயங்கா நின்றது. எ - று.

நி அசை. ஆய்மயில் படைத்தோள் விசேடமாகவாய்ந்தபடைத்த மயில்; மயிற் சாதியுட்டெரிந்தெடுத்த மயிலென்றமாம். எனல்குழை ஆருபெயர். எனல்குழையென்ற பாடமோதிப் பலவாய்த்திரண்ட குழையென்றுரைப்பாருமுளர். எழுதலா காவருவுர் தன்வருத்தமும்பற்றி அணங்குகொலென்றும், சாயலும் பொழில்வயினிற் றலும்பற்றி ஆய்மயில்கொலென்றும், தன்னெஞ்சஞ்சென்றமையும் அவளெதிர்சோக் கியவாறும்பற்றி மாதர்கொலென்றுங் கூறினுன். (எ)

கoஅஉ. சோக்கினு ணெக்கெதிர் சோக்குத றுக்கணங்கு
தானேக்கொண் டன்ன துடைத்து. உ.

மானுடமாதராதறேளிந்த தலைமகன் அவணைக்கினுளையவருத்தங்கூறியது.

இ - ன். சோக்கினுன் சோ²கெதிர் சோக்குதல்- இப்பெற்றித்தாய வனப்பினை புடையாள் என்னுஞ்சித்தெதிர்சோக்குதல்—தாக்கு அணங்கு தானேக்கொண்டன் னது உடைத்து - தானேதாக்கிவருத்தவதோரணங்கு தாக்குதற்குத் தானையையுங் கொண்டுவந்தாற்போலுந் தன்மையையுடைத்து. எ - று.

மேலும் அணங்குகொலாய்மயில்கொலென்றமையான், இகரச்சுட்டு வருவிக்கப் பட்டது. எதிர்சோக்குதலென்றமையின், அதுகுறிப்புசோக்காயிற்று. வனப்பால் வருத்ததன்மேலுங் குறிப்புசோக்கால் வருத்தல் கூறியவாறு. சோக்கினுளென் பதற்கு என்னுளேக்கப்பட்டாளென்றுரைப்பாருமுளர். (உ)

கoஅக. பண்டறியேன் கூற்றென் பதனே யினியறிந்தேன்
பெண்டகையாற் பேரமர்க் கட்டு. ஊ.

இதுவுமது.

இ - ன். கூற்று என்பதனைப் பண்டு அறியேன் - கூற்றென்று நூலோர்சொல் வதனைப் பண்டு கேட்டறிவதல்லது கண்டறியேன்,—இனி அறிந்தேன் - இப்பொ ழுது கண்டறிந்தேன்,—பெண்டகையால் பேர் அமர்க் கட்டு - அது பெண்டகை யுடனே பெரியவாய் அமர்த்த கண்களையுடைத்து. எ - று.

பெண்டகை நாணம், மடம், அச்சம், பயிர்ப்பென்னும் குணங்கள். அவை அவ் வக்குறிகளானறியப்பட்டன. அமர்த்தல் அமர்செய்தல், பெயரடியாயவினை. பெண் டகையால் இன்பம்பயத்தலுமுண்டேனும் தன்பம்பயத்தன்மிகுபற்றிக் கூற்றுக்கி கூறினுன். (ஊ)

கoஅச. கண்டாருயி ருண்ணுந் தோற்றத்தாற் பெண்டகைப்
பேதைக் கமர்த்தன கண். ச.

இதுவுமது.

இ - ன். பெண்டகைப் பேதைக்குக் கண் - பெண்டகையையுடைய விப்பே யைக்கு உளவாய கண்கள்—கண்டார் உயிர் உண்ணும் தோற்றத்தான் அமர்த்தன - தம்மைக்கண்டாருயிருண்ணுந் தோற்றத்துடனேகூடி அமர்த்திருந்தன. எ - று.

---

¹ ஈ கனல்குழையென்றதனை ஆருபெயர்ச்சென மறுத்து, அல்மொழித்தொகையெனச் கொள்ளல் இலக்கணவிளக்கச்சூறாவளியார். ஆருபெயர்க்கும் அல்மொழித்தொகைக்கும் வேற் றுமை தொல்காப்பியச் சூத்திரவிருத்தியிற் காண்க.

அமர்த்தல் மாறுபடுதல்,—குணங்கட்கும் பேதைமைக்குமேலாது கொடியவா ருற்றனவென்பதாம். (சு)

கo அதி. கூற்றமோ கண்ணே பிணையோ மடவர
னேக்கமிம் மூன்று முடைத்து. இ.

இதுவுமது.

இ - ள். கூற்றமோ - என்னை வருத்துதலுடைமையாற் கூற்றமோ,—கண்ணே - ஞ்மேலோதுதலுடைமையாற் கண்ணே,—பிணையோ - இயல்பாக வெருவுதலுடை மையாற் பிணையோ, அறிகின்றிலேன்;—மடவரல் சோக்கம் இம்மூன்றும் உடைத்த - ுமடவரல் கண்களினேக்கம் இம்மூன்றன் றன்மையையு முடைத்தாயிராகின் ்து. எ - று.

இன்பமுந் துன்பமும் ஒருங்குசெய்யாகின்றதென்பதாம். தொழில்பற்றிவந்த ுவிலேயுவமம். (இ)

கo அசு. கொடும்புருவங் கோடா மறைப்பி னடங்கஞர்
செய்பல மன்னிவள் கண். கூ.

இதுவுமது.

இ - ள். கொடும் புருவம் கோடா மறைப்பின் - பிரியாதாட்பாய கொடும்புருவங் கட்டாஞ் செப்பமுடையவாய் விலக்கினவாயின்,—இவள் கண் நடுங்கு அஞர் செய் யல - அவற்றைக்கடந்து இவள்கண்கள் எனக்கு நடுங்குந்துயரைச் செய்ய மாட்டா. எ - று.

நட்டாரைக்கழறுவார்க்குத் தாஞ்செம்மையுடையராதல் வேண்டலிற் கோடா வென்றும், செய்கின்ற அவற்றிற்கும் உறுகின்றதனக்கும் இடைநின்று விலக்குங்கா லுஞ் சிறிதிடைபெறின் அதுவழியாக வந்து அஞர்செய்யுமாகலின் மறைப்பினென் றுங் கூறினன். நடுங்கஞர் நடுக்கற்கேதுவாயவஞர். தாமியல்பாகக் கோடாதலுடை மையான் அவற்றை மிகுதிக்கண்மேற்சென்றிடிக்கமாட்டாவாயினவென்பதுபட நின் றமையின், மன் ஒழியிசைக்கண்வந்தது. (க)

கo அள. கடாஅக் களிற்றின்மேற் கட்படா மாதர்
படாஅ முலைமேற் றுகில். எ.

அவண்முலைகளினைய வருத்தங்கூறியது.

இ - ள். மாதர் படா முலைமேற்றுகில் - இம்மாதர் படாமுலைகளின்மேலிட்ட துகில்,—கடாக் களிற்றின்மேற் கட்படாம் - அவை கொல்லாமற் காத்தலின், கொல் வதாய மதக்களிற்றின்மேலிட்ட முகபடாத்தினையொக்கும். எ - று.

கண்ணே மறைத்தல்பற்றிக் கட்படாமென்றான். துகிலான்மறைத்தல் நாணுடை மகளிர்க்கியல்பாகலின், அத்துகிலுடே அவற்றின் வெம்மையும் பெருமையுங்கண்டு இத்தன்மையாற்றலுடையன இனியெஞ்ஞான்றுஞ் சாய்விலவெனக் கருதிப் படாமுலை யென்றான். உவமை சிறிதுமறையாவழி உவைகொல்லுமென்பது தோன்ற நின்றது.

கo அஅ. ஒண்ணுதற் கோ வுடைந்தே ஞாட்பினு
ணண்ணரு முட்குமென் பீடு. அ.

நுதலினை வருத்தங்கூறியது.

இ - ள். ஞாட்பினுள் நண்ணரும் உட்கும் என் மீடு - போர்க்களத்துவந்து சோராத பகைவரும் சோர்ந்தார்வாய்க்கேட்டஞ்சுதற்கேதுவாய என்வலி—ஒண்ணுதற்கு உடைந்ததே - இம்மாதரதொள்ளிய நுதலொன்றற்குமே அழிந்துவிட்டது. எ - று.

மாதரென்பது அதிகாரத்தான் வந்தது. ஞாட்பினுளென்றதனாற் பகைவராதல் பெற்றும். மீடென்ற பொதுமையான் மனவலியுங் காயவலியுங்கொள்க. ஒவெண்ணும் வியப்பின்கட்குறிப்பு அவ்வலிகளது பெருமையும் நுதலது சிறுமையுந்தோன்ற நின்றது. கழிந்ததற்கிரங்கலிற் றற்புகழ்தலன்றுயிற்று. (அ)

கக0அசு. பிணையோர் மடநோக்கு நாணு முடையாட்
கணியெவனே வேதில தந்து. சு.

அணிநலத்தாலுய வருத்தங்கூறியது.

இ - ள். பிணையோர் மடநோக்கும் நாணும் உடையாட்கு - புறத்து மான்பிணையொத்த மடநோக்கினையும் அகத்து நாணினையுமுடையளாயவிவட்கு—ஏதில தந்து அணி எவன் - ஒற்றுமையுடைய இவ்வணிகளேயமைந்திருக்க வேற்றுமையுடையவணிகளேப்படைத்தணிதல் என்ன பயனுடைத்து! எ - று.

மடநோக்கு வெருவுதலுடையநோக்கு. இவட்குப் பாரமாதலும் எனக்கணங்காதலுங் கருதாமையின், அணிந்தார் அறிவிலரென்பதாம். (க)

கக0சுo. உண்டார் கணல்ல தடுநருக் காமம்போற்
கண்டார் மகிழ்செய்த லின்று. கo.

தலைமகள் குறிப்பறிதலுற்றுன் சொல்லியது.

இ - ள். அடுநரு - அடப்படு நரு,—உண்டார்கண் அல்லது - தன்னே யுண்டார் மாட்டு மகிழ்ச்சியைச் செய்வதல்லது,—காமம்போல் கண்டார் மகிழ்செய்தல்இன்று-காமம்போலக் கண்டார்மாட்டு மகிழ்ச்சியைச்செய்தலுடைத்தன்று. எ - று.

அடுநரு வெளிப்படை. காமமென்றது ஈண்டு அதுநுகர்தற்கிடனுகியாரை. கண்டார்கணென்னு மேழாவது இறுதிக்கட்டொக்கது. மகிழ்செய்தற்கட் காமம் நறவினுஞ்சிறந்ததே யெனினும் இவள்குறிப்பாராய்ந் தறியாமையின் யானதுபெற்றிலேனெனக் குறிப்பெச்சம் வருவித்துரைக்க, "அரிமயிர்த்திரண்முன்கை*" என்னும் புறப்பாட்டிற் குறிப்புப்போல. (கo)

கக0 ம் அதி.—குறிப்பறிதல்.

அஃதாவது தலைமகன் தலைமகள் குறிப்பினையறிதலும், தோழிகுறிப்பினையறிதலும், அவடான் அவ்விருவர்குறிப்பினையுமறிதலுமாம். தகையணங்குற்ற தலைமகளேக்கூடுங்கால் இதுவேண்டுமாகலின், தகையணங்குறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

கக0கக. இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து. க.

---

* புறநானூறு, கக.

தலைமகன்றலைமகளுளப்பாட்டுக்குறிப்பினை அவணுக்கினனறிந்தது.

இ - ள். இவள் உண்கண் உள்ளது இருநோக்கு - இவளுடைய வுண்கணைத்த தாய நோக்கு இதுபொழுது என்மேலிரண்டு நோக்காயிற்று;—ஒரு நோக்கு நோய் நோக்கு ஒன்று அந்நோய் மருந்து - அவற்றுள் ஒருநோக்கு என்கணுய்செய்யுநோக்கு, ஏனையது அந்நோய்க்கு மருந்தாய நோக்கு. எ - று.

உண்கண் மையுண்டகண். நோய்செய்யுநோக்கு அவண்மனத்தினுய காமக்குறிப்பினை வெளிப்படுக்கின்ற நோக்கு. மருந்தாய நோக்கு தன்கணிகழ்கின்ற அற்பு நோக்கு. நோய்செய்யுநோக்கினைப் பொதுநோக்கென்பாருமுளர்; அது நோய்செயித் கைக்கினையாவதல்லது அகமாகாமையறிக. இவ்வருத்தந் தீரும் வாயிலுமுண்டாயிற் றென்பதாம். (க)

கoகூஉ. கண்களவு கொள்ளுஞ் சிறுநோக்கங் காமத்திற்
செம்பாக மன்று பெரிது. உ.

இதுவுமது.

இ - ள். கண் களவுகொள்ளும் சிறுநோக்கம் - இவள்கண்கள் யான்காணுமல் என்மேனோக்குகின்ற அருகியநோக்கம்—காமத்தில் செம்பாகம் அன்று பெரிது - மெய்யுறுபுணர்ச்சியின் ஒத்த பாதியளவன்று, அதனினுமிகும். எ - று.

தானேக்கியவழி நாணியிறைஞ்சியும் நோக்காவழி உற்றுநோக்கியும் வருதலாற் களவுகொள்ளுமென்றும், அஃதளதாங்காலுஞ் சிறிதாகலிற் சிறுநோக்கமென்றும், அஃது உளப்பாடில்வழி நிகழ்வதாகலின் இனிப்புணர்தல் ஒருதலையென்பான் செம்பாகமன்று பெரிதென்றுங் கூறினன். (உ)

கoகூஉ. நோக்கினு நோக்கி யிறைஞ்சினு ளஃதவள்
யாப்பினு ளட்டிய நீர். ங.

நோக்கினுநாணினுமறிந்தது.

இ - ள். நோக்கினுள் - யானேக்காவளவிற் றுனென்னையன்போடு நோக்கினுள்,—நோக்கி இறைஞ்சினுள் - நோக்கி ஒன்றனையுட்கொண்டு நாணி இறைஞ்சினுள்,—அஃது யாப்பினுள் அவள் அட்டிய நீர் - அக்குறிப்பு இருவேமிடையுந் தோன்றிய அற்புப்பயிர்வளர அதன்கணவள் வார்த்த நீராயிற்று. எ - று.

அஃதென்னுஞ்சுட்டுப்பெயர் அச்செய்கைக்கேதுவாய குறிப்பின்மேனின்றது. யாப்பினுளதனை யாப்பென்றார். ஏகதேசவுருவகம். (ஊ)

கoகூச. யானோக்குங் காலை நிலனோக்கு நோக்காக்காற்
றுனோக்கி மெல்ல நகும். ச.

நாணினுமகிழ்ச்சியினுமறிந்தது.

இ - ள். யான் நோக்குங் காலை நிலன் நோக்கும் - யான்றன்னை நோக்குங்காற் றுனெதிர்நோக்காது இறைஞ்சி நிலத்தை நோக்காகிற்கும்,—நோக்காக்கால் தான் நோக்கி மெல்ல நகும் - அஃதறிந்தியானேக்காக்காற் றுனென்னைநோக்கித் தன்னுள்ளே மகிழாகிற்கும் எ - று.

மெல்ல வெளிப்படாமல், மிழ்ச்யொற் புணர்தற்குறிப் பினிது விளக்கும். மெல்லாகுமென்பதற்கு முதலெழுத்துமென்றுரைப்பாருமுளர். (ச)

கஅகடு. குறிக்கொண்டு நோக்காமை யல்லா லொருகண்
றெக்கணித்தாள் போல நகும். டு.

இதுவுமது.

இ - ள். குறிக்கொண்டு நோக்காமை அல்லால் - சேரே குறிக்கொண்டு நோக்காத்தனையல்லது—ஒருகண் சிறக்கணித்தாள் போல நகும் - ஒருகண்ணைச் சிறுங்கணித்தாள்போல என்னை நோக்கிப் பின்தன்னுள்ளே மகிழாநிற்கும். எ - று.

சிறக்கணித்தாளென்பது செய்யுள் விகாரம். சிறுங்கணித்தல் சுருங்குதல். அதுதானும் வெளிப்பட நிகழாமையிற் போலவென்றான். நோக்கியென்பது சொல்லெச்சம். இனியிவளே யெய்துதல் ஒருதலையென்பது குறிப்பெசசம். (இ)

கஅகக. உறுஅ தவர்போற் சொலினுஞ் செறுஅர்சொ
லொல்லை யுணரப் படும். கூ.

தோழிசேட்படுத்தவழி அவள்குறிப்பறிந்த தலைமகன் தன்னுள்ளே சொல்லியது.

இ - ள். உறுதவர்போல் சொலினும் - புறத்து நொதுமலர்போலக் கடுஞ்சொற் சொன்னாயினும்,—செறுர் சொல் ஒல்லை உணரப்படும் - அகத்துச் செறுதலிலாதார் சொற் பிற்பயத்தல் குறையுற்றாற் கடிதினறியப்படும். எ - று.

கடுஞ்சொலென்பது இவ்வீடத்காவன்மிகுதிபுடைத்து வரற்பாலிரல்லீரென்றன் முதலாயின. செறுனெனவே, அருளுடைமை பெறப்பட்டது. தன்குறை முடிக்கக்கருதியே சேட்படுத்தின்றமை குறிப்பானறிந்து, உலகியன்மேலிட்டுக் கூறியவாறு. இது வருன்றபாட்டிற்கு மொக்கும். (க)

கஅகஎ. செறுஅச் சிறுசொல்லுஞ் செற்றார்போ னேக்கு
முறுஅர்போன் றுற்றார் குறிப்பு. எ.

இதுவுமது.

இ - ள். செறுச் சிறுசொல்லும் - பின்னினிதாய் முன்னின்னுதாயசொல்லும்—செற்றார்போல் நோக்கும் - அகத்துச் செறுநிருந்தே புறத்துச் செற்றார்போன்றவெகுளிநோக்கும்—உறுர்போன்று உற்றார் குறிப்பு - நொதுமலர் போன்று நட்பாயினார்க்கு ஒரு குறிப்புப்பற்றி வருவன. எ - று.

குறிப்பு ஆகுபெயர். இவை உள்ளேயொருபயன்குறித்துச் செய்கின்றன இயல்பல்லவாகலான், இவற்றிற்கஞ்சவேண்டாவென்பதாம். (எ)

கஅகஅ. அசையியற் குண்டாண்டோ ரேளர்யா னேக்கப்
பசையினள் பைய நகும். அ.

தன்னை நோக்கி மகிழ்ந்த தலைமகனைக்கண்டு தலைமகன் கூறியது

இ - ள். யான் நோக்கப் பசையினள் பைய நகும் - என்னையகற்றுகின்ற சொற்சாற்றுகியானிரந்துநோக்கியவழி அஃதறிந்து நெகிழ்ந்து உள்ளே மெல்ல நகாநின்

ருள்,—அசை இயற்கு ஆண்டு ஒரோ உண்டி - அதனுல் தொடங்கிய வியல்பினையுடை யாட்கு அச்சுவையின்கண்ணே தோன்றுகின்றதோர் கண்மைக்குறிப்புண்டு. எ - று.

எ ஆருபெயர். அக்குறிப்பு இனிப்பழுதாகாதென்பதாம். (அ)

கoகூ. எதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே யுள. கூ.

தோழி மதியுடம்படவோடன்னுள்ளேசோல்லியது.

இ - ள். எதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல் - முன்னறியாதார்போல ஒருவரையொருவர் பொதுநோக்கத்தாலுநோக்குதல்—காதலார் கண்ணே உள - இக் காதலியுடையார்கண்ணே யுளவாகாநின்றன. எ - று.

பொதுநோக்கு யாவர்மாட்டும் ஒருதன்மைத்தாய நோக்கு. நோக்குதற்குழில், ஒன்றேயாயினும் இருவர்கண்ணு நிகழ்தலானும், ஒருவர்கட்டானுங் குறிப்பு வேறு பாட்டாற்பலவாமாகலானும், உளவெனப்பன்மையாற் கூறப்பட்டது. இருவரும் "மது மறைந்துண்டோர் மகிழ்ச்சிபோல உள்ளத்துள்ளே மகிழ்*" தலின் அதுபற்றிக் காத லாரென்றும், அது புறத்து வெளிப்படாமையின் எதிலார்போலவென்றுங் கூறினுள்.

கoo. கண்ணெடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்க
ளென்ன பயனு மில. கo.

இதுவுமது.

இ - ள். கண்ணெடு கண்ணினை நோக்கு ஒக்கின் - காமத்திற்குரிய வீருவருள் ஒருவர்கண்களோடு ஒருவர்கண்கள் நோக்காலொக்குமாயின்,—வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல - அவர் வாய்மைதோன்றச் சொல்லுகின்ற வாய்ச்சொற்கள் ஒருபயனுமுடையவல்ல. எ - று.

நோக்காலொத்தல் காதலுக்கினவாதல். வாய்ச்சொற்கள் மனத்தின்கணின்றி வாயளவிற்றோன்றுகின்ற சொற்கள். இருவர்சொல்லுங்கேட்டு உலகியன்மேல்வைத் துக் கூறியவாறு. இருவர்சொல்லுமாவன அவள் புணங்காவன்மேலும் அவன் வேட் டத்தின்மேலுஞ்சொல்லுவன. பயனில்சொற்களாகலின், இவை கொள்ளப் படா வென்பதாம். இவை புணர்தனிமித்தம். (கo)

ககக ம் அதி.—புணர்ச்சிமகிழ்தல்.

ஆஃதாவது அங்ஙனங்குறிப்பறிந்து புணர்ந்த தலைமகன் அப்புணர்ச்சியினை மகிழ்ந்துகூறல். அதிகாரமுறைமையும் இதனுனே வீளங்கும்.

கoக. கண்டுகேட் டுண்டியிர்த் தற்றறியு மைம்புலனு
மொண்டொடி கண்ணே யுள.† க.

இயற்கைப்புணர்ச்சியிறுதிக்கட்சோல்லியது.

இ - ள். கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனும் - கண்ணைக் கண்டும் செவியாற்கேட்டும் நாவாலுண்டும் மூக்கான்மோந்தும் மெய்யாற்றீண்டியும்

---

* "எனல் ஸ்வ லீஷ்ரு மல்லள்" என்றபாட்டு. இறையனாரகப்பொருள், அ-ம் சூத்திரத் தையிற்காண்க.

† இத்திருக்குறள் சோமான் பெருமாணையனூர் திருக்கலாய ஞானவுலாவிலெடுத்தாளப்பட்டது.

அனுபவிக்கப்படுமைம்புலனும்—ஒண்டொடி கண்ணே உள - இவ்வொள்ளிய தொடியையுடையாள்கண்ணே யுளவாயின. எ - று.

உம்மை முற்றும்மை. தேற்றேகாரம் வேறிடத்தின்மை விளக்கின்றது. வேறு வேறு காலங்களில் வேறுவேறு பொருள்களானனுபவிக்கப்படுவன ஒருகாலத்து இவள்கண்ணேயனுபவிக்கப்பட்டனவென்பதாம். வடநூலார் இடக்கர்ப்பொருளவாகச் சொல்லிய புணர்ச்சித்தொழில்களும் ஈண்டடக்கிக் கூறப்பட்டன. (க)

ககஅ. பிணிக்கு மருந்து பிறம னணியிழை
தன்னோய்க்குத் தானே மருந்து. உ.

இடந்தலைப்பாட்டின்கட்சொல்லியது.

இ - ள். பிணிக்கு மருந்து பிற - வாதமுதலிய பிணிகட்கு மருந்தாவன அவற்றிற்கு நிதானமாயினவன்றி மாறுபடியல்பினையுடையனவாம்;—அணியிழை தன் நோய்க்கு மருந்து தானே - அவ்வாறன்றி இவ்வணியிழையினையுடையாள் தன்னிலைய பிணிக்குமருந்துந் தானேயாயினள். எ - று.

இயற்கைப்புணர்ச்சியை நினைந்து முன் வருந்தினளாகலிற் றன்னையென்றும், அவ்வருத்தந் தமியாளையிடத்தெதிர்ப்பட்டுத் தீர்ந்தாளாகலிற் றானேமருந்தென்றும் கூறினள். இப்பிணியும் எளியவாயவற்றாற்றீரப்பெற்றிலமென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. (உ)

ககஆ. தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொ
ருமரைக் கண்ணு னுலகு. ஊ.

நிரதிசயவின்பத்திற்குரியதீ இச்சிற்றின்பத்திற்கின்னேயாதல்
தகாதென்ற பாங்கற்குச் சொல்லியது.

இ - ள். தாம் வீழ்வார் மென்றோட்டுயிலின் இனிதுகொல் - ஐம்புலன்களையுநுகர்வார்க்குத் தாம்விரும்புமகளிர் மெல்லிய தோளின்கட்டுயிலுந் துயில்போலவருந் தாமலெய்தலாமோ—தாமரைக்கண்ணுன் உலகு - அவற்றைத் துறந்த தவயோகிளெய்துஞ் செங்கண்மாலுலகம். எ - று.

ஐம்புலன்களையுநுகர்வாரென்னும்பெயர் அவாய்நிலையான் வந்தது. இப்பெற்றித்தாய துயிலெலிட்டுத் தவயோகங்களான் வருந்தவேண்டுதலின், எம்மனோர்க்காகாதென்னுங் கருத்தால் இனிதுகொலென்றான். இந்திரனுலகென்றுரைப்பாருமுளர் தாமரைக்கண்ணனென்பது அவனுக்குப் பெயரன்மையின், அஃதுரையன்மையறிக.(

ககஇ. நீங்கிற் றெறூஉங் குறுநுங்காற் றண்ணென்னுந்
தீயாண்டுப் பெற்ற ளிவள். ச.

பாங்கற்கூட்டத்திறுதிக்கட்சொல்லியது.

இ - ள். நீங்கின் தெறூஉம் குறுநுங்கால் தண்ணென்னும் தீ - தன்னையகன்றிச் சுடாநிற்கும், அணுகுழிக் குளிராநிற்கும் இப்பெற்றித்தாய தீயை—இவள் யாண்டுப் பெற்றாள் - என்கட்டருதற்கு இவளெவ்வுலகத்துப்பெற்றாள்! எ - று.

கூடாமுன்னுன்புறுதலின் நீங்கிற்றெறாஉமென்றும், கூடியபின்னின்புறுதலிற் குறுகுங்காற்றண்ணென்னுமென்றும், இப்பெற்றியதோர் நீ உலகத்தில்லையாகலின் யாண்டுப்பெற்றாளென்றுங் கூறினான். தன்காமத்தீத்தன்னையே அவடந்தாளாகக் கூறினான், அவளான் அது வெளிப்படுதலின். (ச)

கக0நி. வேட்ட பொழுதி னவையவை போலுமே
தோட்டார் கதுப்பினு டோள். நி.

தோழியிற்கூட்டத்திறுதிக்கட்சொல்லியது.

இ - ள். வேட்டபொழுதின் அவையவை போலுமே - மிகவினியவாயபொருள்களைப் பெறுது அவற்றின்மேல் விருப்பங்கூர்ந்தபொழுதின்கண் அவையவைதாமே வந் தின்பஞ்செய்யுமாறுபோல இன்பஞ் செய்யும்,—தோட்டார் கதுப்பினுள் தோள்- எப்பொழுதும் பெற்றுப்புணரினும், பூவினையணிந்த தழைந்த கூந்தலினையுடையா டோள்கள். எ - று.

தோடு ஆகுபெயர். இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டத்துக் கண் முன்னரே நிகழ்ந்திருக்கப் பின்னரும் புதியவாய் நெஞ்சம் பிணித்தலின், அவ் வாசாமைபற்றி இவ்வாறுகூறினான். தொழிலுவமம். (நி)

கக0கூ. உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்
கமிழ்தினியன்றன தோள். கூ.

இதுவுமது.

இ - ள். உயிர் உறுதோறு தளிர்ப்பத் தீண்டலால் - தன்னைப்பெறுது வாடிய என்னுயிர் பெற்றுறுந்தோறுந் தளிர்க்கும்வகை தீண்டுதலான்,—பேதைக்குத் தோள் அமிழ்தின் இயன்றன - இப்பேதைக்குத் தோள்கள் தீண்டப்படுவதோரமிழ்தினாற் செய்யப்பட்டன. எ - று.

எதுவாகலாற் றீண்டல் அமிழ்திற்குமெய்திற்று. வாடியவுயிரைத் தளிர்ப்பித்தல் பற்றி, அவையமிழ்தினியன்றனவென்றான். தளிர்த்தல் இன்பத்தாற் றழைத்தல்.(சு)

கக0எ. தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்கு
லம்மா வரிவை முயக்கு. எ.

இவளை நீவரைந்துகொண்டு உலகோர் தம்மில்லிருந்து தமதுபாத்துண்ணு மில்லறத்தோடுபடல்வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.

இ - ள். அம்மா அரிவை முயக்கு - அழகிய மாமைநிறத்தையுடைய அரிவை யது முயக்கம்—தம்மில் இருந்து தமது பாத்து உண்டற்கு - இன்பம்பயத்தற்குட் டமக்குரிய வில்லின்கணிருந்து உலகோர் தந்தாளான்வந்தபொருளைத்தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல்கட்குப் பகுத்துத் தங்கூற்றை யுண்டாற்போலும். எ - று.

தொழிலுவமம். இல்லறஞ்செய்தாசெய்துந் துறக்கத்தின்பம் எனக்கிப்புணர்ச் சியே தருமென வரைவுடன்படான் கூறியவாறுயிற்று. (எ)

கக0அ. வீழு மிருவர்க் கினிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு. அ.

ஒத்தவன்புடைய நமக்கு ஒருபொழுதும் விடாத முயக்கமே இனியதென வரைவுகடாயதோழிக்குச் சொல்லியது.

இ - ன். நீசொல்லுகின்றதொக்கும்,—வளி இடை போழப்படா முயக்கு - ஒரு பொழுது செல்லாமையிற் காற்றுலிடையறக்கப்படாதமுயக்கம்—மீழும் இருவர்க்கு இனிதே - ஒருவரையொருவர் விழைவாரிருவர்க்குமினிதே. எ - று.

முற்றும்மை விகாரத்தாற்றொக்கது. ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது. ஈண்டு இருவரில்லை, இன்மையான் இஃதொவ்வாதென்பது கருத்து. களவிற்புணர்ச்சியை மகிழ்ந்து வரைவுடன்படான் கூறியவாறு. (அ)

ககo. ஊட லுணர்தல் புணர்த லிவைகாமங்
கூடியார் பெற்ற பயன். கூ.

காத்தல்வேண்டாமையின் இடையறவில்லாத கூட்டமே இன்பப் பயனுடைத்தென வரைவுகடாவியாட்குச் சொல்லியது.

இ - ள். ஊடல் உணர்தல் புணர்தல் இவை - புணர்ச்சியினிதாதற்பொருட்டு வேண்டுவதாயவூடலும் அதனை யளவறிந்து நீங்குதலும் அதன்பினிகழ்வதாயவப் புணர்ச்சிதானுமென இவையன்றே—காமம் கூடியார் பெற்ற பயன் - வரைந்து கொண்டு காமத்தை யிடைவிடாதெய்தியவர் பெற்ற பயன்கள். எ - று.

ஆடவர்க்குப் பிரிவென்பதொன்றுளதாதன்மேலும் அதுதான் பரத்தையர்மாட்டாதலும் அதனையறிந்து மகளிருடனிற்றலும் அவ்வூடலைத் தவறுசெய்தவர்தாமேதர் தவறின்மைகூறி நீக்கலும் பின்னுமவ்விருவரும் ஒத்தவன்பினராய்க் கூடலுமன்றே முன்வரைந்தெய்தினர் பெற்றபயன், அப்பயன் இருதலைப்புள்ளினேருயிராய உழுவலன்புடைய வெமக்கு வேண்டாவென அவ்வரைந்தெய்தலையிகழ்ந்துகூறியவாறு.()

ககக. அறிதோ றறியாமை கண்டற்றுற் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு. கக.

புணர்ந்துடன்போகின்றுன் றன்னுள்ளே சொல்லியது.

இ - ன். அறிதோறு அறியாமை கண்டற்று - நூல்களாலும் நுண்ணுணர்வாலும் பொருள்களே யறியவறிய முன்னையறியாமை கண்டாற்போலக் காணப்படாநின்றது—சேயிழைமாட்டுச் செறிதோறும் காமம் - வெந்தவிழையினையுடையாளை இடைவிடாது செறியச்செறிய இவண்மாட்டுக் காதல். எ - று.

களவொழுக்கத்திற் பலவிடையீடுகளானெய்தப்பெறுது அவாவுற்றுன் இது பொழுது நிரந்தரமாகவெய்தப் பெற்றமையின், செறிதோறுமென்றுன். அறிவிற் கெல்லையின்மையான் மேன்மேலறியவறிய முன்னையறிவு அறியாமையாய்முடியுமாறு போலச் செறிவிற் கெல்லையின்றி மேன்மேற்செறியச்செறிய முன்னைச்செறிவு செறியாமையாய் முடியாநின்றதெனத் தன்னுரமை கூறியவாறு. இப்புணர்ச்சிமகிழ்தல் தலைமகட்குமுண்டேனும் அவண்மாட்டுக்குறிப்பாணிகழ்வதல்லது கூற்றுனிகழ்மையறிக. (அo)

க்கூ ம் அதி.—தலைப்புனைத் துரைத்தல்.

அஃதாவது தலைமகன்றலைமகளைத்தைப் புனைந்து சொல்லியது. இது, புணர்ச்சிமெய்ப்துழி நிகழ்வதாகலின், புணர்ச்சிமெய்தலின்பின் வைக்கப்பட்டது.

ககக. கன்னீரை வாழி யனிச்சமே கின்னினு
மென்னீரள் பாம்வீழ் பவள். க.

இயற்கைப்புணர்ச்சியிறுதிக்கட்சொல்லியது.

இ - ன். அனிச்சமே வாழி கன்னீ ர-அனிச்சப்பூவே, வாழ்வாயாக, மென்மை யால் நீயெல்லாப்பூவினு நல்லவியற்கையையுடையை,—யாம் வீழ்பவள் கின்னினும் மென்னீரள் - அவ்வனமாயினும் எம்மால் விரும்பப்பட்டவள் கின்னினுமெல்லிய வியற்கையையுடையள். எ - து.

அனிச்சம் ஆருபெயர். வாழியென்பது உடன்பாட்டுக்குறிப்பு. இனி யாமே மெல்லியனென்னுந்தருக்கினையொழிவாயாகவென்பதாம். அதுபொழுதந்நறிஞ்சாலி களின், ஊற்றினினிமையையே பாராட்டினன். இன்னீரளென்ற பாடமோது வாருமுளர். (க)

ககஉ. மலர்காணின் மைமாத்தி நெஞ்சே யிவள்கண்
பலர்காணும் பூவொக்கு மென்ற. உ.

இடந்தலைப்பாட்டின்கட்சொல்லியது.

இ - ன். நெஞ்சே - நெஞ்சே,—இவள் கண் பலர்காணும் பூ ஒக்கும் என்று - யானே காணப்பெற்ற இவள் கண்களைப் பலரானுங் காணப்படும் பூக்கள் ஒக்கு மென்று கருதி—மலர்காணின் மையாத்தி - தாமரை, குவளை, நீலமுதலிய மலர்களைக் கண்டால் மயங்காதின்றாய், கின்னறிவிருந்தவாறென்! எ - து.

மையாத்தல்காண்டி ஒவ்வாதவற்றையொக்குமெனக்கோடல்: இறுமாத்தல், செம் மாத்தலென்பனபோலவொருசொல். இயற்கைப்புணர்ச்சி நீக்கமுதலாகத் தலைமகன் கண்களைக் காணப்பெருமையின் அவற்றோடொருபுடையொக்குமலர்களைக் கண்டெழி யெல்லாம் அவற்றின்கட் காதல்செய்துபோந்தான், இதுபொழுது அக்கண்களினவு முழுதுந் தானேதமியாளையிடத்தெதிர்ப்பட் டனுபவித்தா ஞகலின் அம்மலர்கள் ஒவ் வாமைகண்டு ஒப்புமைகருதிய நெஞ்சையிகழ்ந்து கூறியவாறு. (உ)

ககஊ. முறிமேனி முத்த முறுவல் வெறிநாற்றம்
வேறுண்கண் வேய்த்தோ ளவட்கு. ஊ.

கூட்டமுற்றபாங்கற்குத் தலைமகன்றலைமகளதியல்பு கூறியது.

இ - ன். வேய்த்தோளவட்கு - வேய்போலுந் தோளினையுடையவட்கு—மேனி முறி - நிறம் தளிர்நிறமாயிருக்கும்,—முறுவல் முத்தம் - பல்லு முத்தமாயிருக்கும்,—நாற்றம் வெறி - இயல்பாய நாற்றம் நறுநாற்றமாயிருக்கும்,—உண்கண் வேல் - உண் கண்கள் வேலாயிருக்கும். எ - து.

பெரன்டையாலும் தொகுத்தல் கொடுக்கப்பட்டது. முறி, முறுவலென்பன ஆருபெயர். உருவகவணியாற் கூறினமையின், புணர்த்துரையாயிற்று. கின்னும் கருதப்பட்டனவற்றியேனென்று சேட்படுத்த தோழிக்குத் தலைமகன் சொல்லியதாமாம். (ஈ)

சஉ

கஉச. காணிற் குவளை கவிழ்ந்த நிலனேக்கு
மாணிழை கண்ணெவ்வே மென்று. ச.

பாங்கற்கூட்டத்துச்சென்றுசார்தலுறுவான் சொல்லியது.

இ - ன். குவளை - குவளைப்பூக்கடாமும்,—காணின் - காண்டற்றொழிலையுடைய வாயின்,—மாண் இழை கண் ஒவ்வேம் என்று கவிழ்ந்து நிலன் நோக்கும் - மாண்ட விழையினையுடையாள்கண்களை யாமொவ்வேமென்று கருதி அந்நாணினாலிறைஞ்சி நிலத்தினை நோக்கும். எ - று.

பண்பாளையன்றித் தொழிலானுமொவ்வாதென்பான் காணினென்றும், கண்டால் அவளொவ்வாமையால் நாணுடைத்தாமென்பது தோன்றக் கவிழ்ந்தென்றுங் கூறினான். காட்சியுநாணுமின்மையிற் செம்மாந்து வானேநோக்கினவென்பதாம். (ச)

கஉகரு அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தா ணுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை. ஞ.

பகற்குறிக்கட்பூவணிகண்டு சொல்லியது.

இ - ன். அனிச்சப்பூக் கால் களையாள் பெய்தாள் - இவள் தன் மென்மைகருதாது அனிச்சப்பூவை முழுக்களையாது சூடினாள்,—நுசுப்பிற்கு நல்ல பறை படா - இனியிவளிடைக்கு நல்ல பறைகளொலியா. எ - று.

அம்முழுக்களாம் பொருமையின் இடை முரியும், முரிந்தால் அதற்குச் செத்தார்க்குரிய செய்தற்பறையே படுவதென்பதாம். மக்கட்குரிய சாக்காடும் பறைபடுதலும் இலக்கணைக்குறிப்பால் நுசுப்பின்மேலேற்றப்பட்டன.* (ஞ)

கஉகக. மதியு மடந்தை முகனு மறியா
பதியிற் கலங்கிய மீன். ஙு.

இரவுக்குறிக்கண் மதிகண்டு சொல்லியது

இ - ன். மீன்-வானத்து மீன்கள்,—மதியும் மடந்தைமுகனும் அறியா-வேறுபாடு பெரிதாகவும் தம்மதியினையும் எம்மடந்தைமுகத்தினையும் இதுவதி இதுமுகமென்றறியமாட்டாது,—பதியின் கலங்கிய-தர்சிலையினின்றுங்கலங்கித் திரியாநின்றன. எ - று.

ஓரிடத்து நில்லாது எப்பொழுதுமியங்குதல்பற்றிப் பதியிற்கலங்கியவென்றான். வேறுபாடு வருகின்றபாட்டாற்பெறப்படும். இனி இரண்டினையும் பதியிற்கலங்காத மீன்களறியுமல்லது கலங்கின மீன்கள் அறியாவென்றுரைப்பினுமமையும். (ங)

கஉகஎ. அறுவாய் நிறைந்த வயிர்மணிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து. எ.

இதுவுமது.

இ - ன். அம்மீன்கள் அங்ஙனங்கலங்குதற்குக் காரணம்யாது ?—அறுவாய் நிறைந்த அயிர் மணிகருப்போல - முன்குறைத்தலிடம் வத்துநிரம்பியே விளங்குமணிக்கட்போல—மாதர் முகத்து மறு உண்டோ - இம்மாதர்முகத்து மறுவுண்டோ! எ - று.

* இவ்விலக்கணைபடியாகத தோன்றியருநிப்பை வடநூலார் இலக்கணைமூலத் தொனி யென்பர்.

இடம் கலே. மதிக்கென்பது வேற்றுமையுருபு. தேய்தலும் வளர்தலும் மறுவுடைமையின்மைபற்றி வேறுபாடறியலாயிருக்க அறிந்திலனென விகழ்ந்து கூறியவாறு. (எ)

ககஅ. மாதர் முகம்போ லொளிவிட வல்லேற்
காதலி வாழி மதி. அ.

இது மது.

இ - ள். மதி வாழி - மதியே, வாழ்வாயாக;—மாதர் முகம்போல் ஒளிவிட வல்லேயேல் காதலே - இம்மாதர்முகம்போல யான்மதிமும்வகை ஒளிவீசவல்லையாயின், நீபுமென்காதலியுடையையாதி. எ - று.

மறுவுடைமையின் அதுமாட்டாய், மாட்டாமையின் என்னுற் காதலிக்கவேம்படா யென்பதாம். வாழியென்பது இ ழ்ச்சிக்குறிப்பு. (அ)

ககக. மலரன்ன கண்ணுண் முகமொத்தி யாயிற்
பலர்காணத் தோன்றல் மதி. க.

இதுவுமது.

இ - ள். மதி - மதியே,—மலர் அன்ன கண்ணுள் முகம் ஒத்தியாயின் - இம் மலர்போலுங் கண்ணினையுடையாண்முகத்தை நீயொக்கவேண்டுதியாயின்,—பலர் காணத் தோன்றல் - இதுபோல யான்காணத் தோன்று, பலர்காணத்தோன்று தொழி. எ - று.

தானே முகத்தினலமுழுதுங்கண்டனுபவித்தானுகலின் ஈண்டும் பலர்காணத் தோன்றலேயிழித்துக்கூறினன். தோன்றின் னினக்கவ்வொப்புண்டாகாதென்பதாம்.()

ககக. அனிச்சமு மன்னத்தின் ரூவியு மாத
ரடிக்கு நெருஞ்சிப் பழம். கக.

உடன்போக்குரைத்ததோழிக்கு அதனதருமைகூறி மறுத்தது.

இ - ள். அனிச்சமும் அன்னத்தின் ரூவியும் - உலகத்தாரான் மென்மைகெடக் கப்பட்ட அனிச்சப்பூவும் அன்னப்புன்னின் நெருமாயிலரண்டும்—மாதர் அடிக்கு நெருஞ்சிப்பழம் - மாதரடிக்கு நெருஞ்சிப்பழம்போல வருத்தஞ்செய்யும். எ - று.

முன் வலிதாதலுடைமையிற் பழமென்றன். இத்தன்மைத்தாயவடி "பாத்தி யன்னகுமிக்கூர்கத்த" கூபுடைய வெஞ்சுரத்தை யாங்ஙனம் கடக்குமென்பது குறிப்பாற்பெறப்பட்டது. செம்பொருளேயன்றிக் குறிப்புப்பொருளும் அடிகளை ழியாமையாகலின், இதுவுமிவ்வதிகாரத்ததாயிற்று. (கக)

ககஉ. ம் அதி.—காதற்சிறப்புரைத்தல்.

அஃதாவது தலைமகன் தன்காதன்மிகுதிகூறலும், தலைமகள் தன்காதன்மிகுதி கூறலுமாம். இது, புணர்ச்சியும் கலனும்பற்றி நிகழ்வதாகலின், புணர்ச்சிமகிழ்தல் கலம்புனைந்துரைத்தல்களின்பின் வைக்கப்பட்டது.

---

* அசாறூறு, னிற்றயாசிரை, இ.

கஉக. பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர். க.

இயற்கைப்புணர்ச்சி யிறுதிக்கட்டலைமகன் றன்னயப்புனர்த்தியது.

இ - ள். பணிமொழி வால் எயிறு ஊறிய நீர் - இம்மெல்லியமொழியினையுடை யாளது வாலியவெயிறூறியநீர்—பாலொடு தேன்கலந் தற்று - பாலுடனே தேனைக் கலந்த கலவைபோலும். எ - று.

கலந்ததற்றென்பது ஒப்புமையாயிற்று, கலக்கப்பட்டதென்றவாறு. பாலொடு தேனென்றவதனால் அதன்சுவைபோலுஞ் சுவையினையுடைத்தென்பதாயிற்று. எயிறூறியவென இடத்துக்கிழப்பொருளின்றெழில் இடத்தின்மேனின்றது. வேறுவேறறியப்பட்டசுவையுடைய பாலுந்தேனுங்கலந்தழி அக்கலவை இன்னதென்றறியலாகாத இன்சுவைத்தாமாகலின், அது பொருளாகிய நீர்க்குமெய்தவிக்க. (க)

கஉஉ. உடம்பொ டியிரிடை பென்ன மற்றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு. உ.

பிரிவச்சங்கூறியது.

இ - ள். உடம்பொடு உயிரிடை என்ன அன்ன - உடம்போடியிரிடையுளவாய நட்புக்கள் ஒத்தன்மைய அத்தன்மையே—மடந்தையொடு எம்மிடை நட்பு-இம்மடந்தையோடு எம்மிடையுளவாய நட்புக்கள். எ - று.

என்னவெனப் பன்மையாற்கூறியது, இரண்டு தொன்றதொட்டு வேற்றுமை யின்றிக் கலந்தவருதல், இன்பத்தன்பங்களொக்க வனுபவித்தல், இன்றியமையாமை யென்றிவற்றை நோக்கி. தெய்வப்புணர்ச்சியொகலான் அதுபொழுது உணர்ச்சியில னாயொள் பின்னுடையளாமன்றே, தூயவழி இவன் யாவன்கொலெனவும் என்கணன் புடையன்கொலெனவும் இன்னுமினைத் தலைப்பெய்தல் கூடுங்கொலெனவும் அவண் மனந்தின்றனிகழும்; அங்ஙிகழ்வனவுறைத் தூதிப்பானறிந்து அவைநிகழ்தியவாறு. ஏன்னையென்று பாடமோதுவாருமுளர். (உ)

கஉஊ. கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழுந்
திருதற் கில்லை யிடம். ஊ.

இடந்தலைப்பாட்டின்கட் டலைமகணிக்கத்துச் சொல்லியது.

இ - ள். கருமணியிற் பாவாய் நீபோதாய் - என்கண்ணிற்கருமணியின்கணுறை தும் பாவாய், நீயல்குன்றும் போதருவாயாக;—யாம் வீழும் திருதற்கு இடம் இல்லை - போதாநிருத்தியாயின், எம்மால் விரும்பப்பட்ட திருதலையுடையாட்கு இருக்கவிடமில்லையாம். எ - று.

பான்காலுறைமையாமையின் இவள்புறத்துப் போகற்பாலனன்றி என்கண்ணுளி னுறைந்தானென், இருக்குங்கால் நின்னெனுஞ்சொற்கு இடம்போதாமையின் பின்னி னுறைந்தகாலிவட்கு அவ்விடத்தைக்கொடுத்து நீபோதலாயாகவென்பதாம். (ஊ)

கஉஎ. வாழ்த லுயிர்க்கின்னாயாயினு சாத
லதற்கின்ன னீங்கு மிடத்து. எ.

பகற்குறிக்கட்புணர்த்துநிற்குவான் சொல்லியது.

இ - ள். ஆயிழை உயிர்க்கு வாழ்தல் அன்னள் - தெரிந்தவிழையினையுடையள் எனக்குப் புணருமிடத்து உயிர்க்குடம்போடு கூடிவாழ்தல்போலும்;—பிரிந்துமிடத்து அதற்குச் சாதல் அன்னள் - பிரியுமிடத்து அதற்கு அதனிவிடுப்போதல்போலும். எ - று.

எனக்கென்பதும் புணருமிடத்தென்பதும் அவாய்நிலையான்வந்தன. வாழும் காலத்து வேற்றமையின்றி வழிபிற்றலானும், சாங்காலத்து வருத்தஞ்செய்தலானும், அவற்றை அவள் புணர்வு பிரிவுகட்குவமையாக்கினன். (ச)

கைஉ. உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்
ஒள்ளமர்க் கண்ணுள் குணம். ங.

ஒருவழித்தணந்துவந்த தலைமகன் நீயிர்தணந்தீரோன்று எம்மையுள்ளியு மறிதிரோவென்ற தோழிக்குச் சோல்லியது.

இ - ள். ஒள்ளமர்க் கண்ணுள் குணம் யான் மறப்பின் உள்ளுவன் - ஒள்ளிய வாய் அமரைச்செய்யுங் கண்ணினையுடையாள் குணங்களை யான் மறந்தேனுயின், நினைப்பேன்;—மறப்பு அறியேன் - ஒருபொழுதும் மறத்தலையறியேன், ஆகலான் நினைத்தலையுமறியேன். எ - று.

மன் ஒழியிசைக்கண் வந்தது. குணங்கள் நாணம், மடம், அச்சம், பயிற்பு முதலாயின. இத்தலைவற் தலைமகன்கூற்று; மேற்றலைமகள் கூற்று. (இ)

கைஉக. கண்ணுள்ளிற் போகா ரிமைப்பிற் பருவரார்
நண்ணியரென் காதலவர், ஙக.

ஒருவழித்தணப்பின்கட்டலைமகனைத் தோழி இயற்பழிக்குமென்றஞ்சி அவள்கேட்பத் தன்னுள்ளே சோல்லியது.

இ - ள். தாய்காணமைபற்றிச் செய்மைக்கட்போயினுரென்ற கருதுவார் கருதக,—எங்காதலவர் கண்ணுள்ளிற் போகார் - எம்முடையகாதலர் எங்கண்ணகத்தின்றும் போகார்,—இமைப்பிற் பருவரார் - யாமறியாதிமைத்தேமாயின் அதனல் வருந்துவதஞ்செய்யார்,—நண்ணியர் - ஆகலாற் காணப்படா நண்ணியர். எ - று.

இடையிடாத நினைவின்மூதிர்ச்சியான் எப்பொழுதும் முன்னே தோன்றலிற் கண்ணுள்ளிற்போகாரென்றும், இமைத்தழியும் அது கிற்றலான் இமைப்பிற் பருவரார் என்றும் கூறினன். (ச)

கைஉஎ. கண்ணுள்ளார் காதலவராகக் கண்ணு
மெழுதேம் சாப்பாக் கறிந்து. எ.

இதுவுமது.

இ - ள். காதலவர் கண் உள்ளாராகக் கண்ணும் எழுதேம்-காதலர் எப்பொழுதுமெய்கண்ணினுள்ளாராகலாற் கண்ணினை அஞ்சனத்தாலெழுதுதலுஞ் செய்யேம்,—சாப்பாகு அறிந்து - அத்தனைக்காலமும் அவர் மறைதலையறிந்து. எ - று.

இழிவுசெப்பும்மை மாற்றப்பட்டது. 'சாப்பாக்கென்பது வினைப்பெயர்' வருகின்ற வேபாக்கென்பதுமதுயானிடையீடின்றிக் காண்கின்றவரைப் பிரிந்தாரென்று கருதுமாறென்னையென்பது குறிப்பெச்சம். (எ)

ககஉஅ. நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்ட
லஞ்சுதும் வேபாக் கறிந்து. அ

இதுவுமது

இ - ள். காதலவர் நெஞ்சத்தாராக வெய்து உண்டல் அஞ்சுதும் - காதலர் எற் நெஞ்ஞெள்ளாராகலான் உண்ணுங்கால் வெய்தாக உண்டலையஞ்சாநின்றேம்,—வேபாக்கு அறிந்து - அவர் அதனுன் வெய்துறலையறிந்து. எ - று.

எப்பொழுதும் எற்நெஞ்சின்கணிருக்கின்றவரைப் பிரிந்தாரென்று கருதுமாறென்னையென்பது குறிப்பெச்சம். (அ)

ககஉக. இமைப்பிற் கரப்பாக் கறிவ லணைத்திற்கே
யேதில ரென்னுமிவ் வூர். கூ.

வரைவிடை வைத்துப் பிரிவின்கட் டலைமகளாற்றுதற் பொருட்டுத் தோழி தலைமகனை யியற்பழித்தவழி அவளியற்பட மொழிந்தது.

இ - ள். இமைப்பிற் கரப்பாக்கு அறிவல் - என்கண்ணிமைக்குமாயின் உள்ளிருக்கின்ற காதலர் மறைதலையறிந்து இமையேன்;—அணைத்திற்கே எதிலர் என்னும் இவ்வூர் - அவ்வளவிற்கு அவரைத் தயிலாரோய்செய்தார் அன்பிலரென்று சொல்லாநிற்கும் இவ்வூர். எ - று.

தன்கருத்தறியாமைபற்றிப் புலர்ந்து சொல்லுகின்றாளாகலின், தோழியை வேறுபடுத்து இவ்வூரென்றாள். ஒருபொழுதும் பிரியாதவரைப் பிரிந்தாரென்று பழிக்கற் பாலையல்லையென்பதாம். (க)

ககஉ. உவந்துறைவ ருள்ளத்து ளென்று மிகந்துறைவ
ரேதில ரென்னுமிவ் வூர். க0.

இதுவுமது

இ - ள். என்றும் உள்ளத்துள் உவந்து உறைவர் - காதலர் எஞ்ஞான்றும் என்னுள்ளத்துள்ளேயுவந்துறையாநிற்பர்;—இகந்து உறைவர் எதிலர் என்னும் இவ்வூர் - அதனையறியாது அவரைப் பிரிந்துறையாகின்றார் அன்பிலரென்று சொல்லாநிற்கும் இவ்வூர். எ - று.

உவந்துறைவரென்றதனால் அன்புடைமைகூறினான். பிரியாமையும் அன்புமுடையாரை இலரெனப் பழிக்கற்பாலையல்லையென்பதாம். (க0)

ககரம் அதி.—நாணுத்துறவுரைத்தல்.

அகிதாவது சேட்படுக்கப்பட்டு ஆற்றுளுய தலைமகன் தோழிக்குத் தன்னுண்டு நவுரைத்தலும், அதற்றொடர்ந்திற்பிக்கலுற்ற தலைமகன் அவட்குத் தன்னுண்டெவுரைத்

தலுமாம். இது, காதன்மிக்குழி நிகழ்வதாலின், காதற்சிறப்புரைத்தலின்பின் வைக் கப்பட்டது.

ககஉக. காம முழுந்து வருந்தினார்க் கேம
மடலல்ல நில்லை வலி. க.

சேட்படுக்கப்பட்டு ஆற்றுணை தலைமகன் சொல்லியது.

இ - ள். காமம் உழந்து வருந்தினார்க்கு - அரியராய மகளிரோடு காமத்தையனு பவித்துப் பின்னதுபெருது தன்புற்றவாடவர்க்கு—ஏம மடல் அல்லது வலி இல்லை- பண்டும் ஏமமாய் வருகின்ற மடலல்லது இனியெனக்கு வலியாவதில்லை. எ - து.

ஏமமாதல் அத்தன்பசீக்கும்வகை அவ்வனுபவத்தினைக்கொடுத்தல். வலி ஆகு பெயர். பண்மொடவராயினர் இன்பமெய்திவருகின்றவாறுநிற்க, தின்னையதற்குத் தானெனென்று கருதிக் கொன்னே முயன்ற யான் இதுபொழுது அல்லாமையை யறிந்தேனுகலான் இனி யானுமவ்வாற்றுன் அதனையெய்துவலென்பது கருத்து. (எ)

ககஉஉ. கோனு வுடம்பு முயிரு மடலேறு
நாணினை நீக்கி நிறுத்து. உ.

நாணுடையநமக்கு அதுமுடியாதென மடல்விலக்க வற்றுட்குச் சொல்லியது.

இ - ள். கோனு உடம்பும் உயிரும் மடல் ஏறும் - அவவருத்தத்தினைப்பொருத வுடம்புமுயிரும் அதற்கேமமாய மடன்மாவினையூரக் கருதாநின்றன,—நாணினை நீக்கிநிறுத்து - அதனை விலக்குவதாய நாணினையகற்றி. எ - து.

வருந்தினர்க்கென மேல்வந்தமையிற் செய்யப்படுபொருள் ஈண்டுக்கூறுதலினர். மடல் ஆகுபெயர். நீக்கிநிறுத்தென்பது ஒருசொன்னீர்மைத்து. அறிவுறைபோர்ப் புக் கடைப்பிடி முதலிய முன்னே நீங்கவும் நாணீங்காது நின்றது, அதுவுமித பொழுது நீங்கிற்றென்பான், உடம்புமுயிருமென்றுன். அவைதாம் தம்முணர்க்காமற் பொருட்டே மடலேறுமென்றது அவள் தன்னருமையறிந்து கடிதிற் குறைசோத னைக்கி. (உ)

ககஉஊ. நாணெடு நல்லாண்மை பண்டுடையே னின்றுடையேன்
காமுற்று ரேறு மடல். ஊ.

நாணேயன்றி நல்லாண்மையு முடைமையின் முடியாதென்றுட்குச் சொல்லியது.

இ - ள். நாணெடு நல்லாண்மை பண்டு உடையேன் - நாணும் மிக்கவாண்டகை மையும் யான் பண்டையேன்;—காமுற்றூர் ஏறும் மடல் இன்று உடையேன் - அவை காமத்தானீங்குதலான், அக்காமமிக்காரேறும் மடலினையின்றுடையேன். எ-து.

நாண் இழிவாயினசெய்தற்கண்ணிலக்குவது. ஆண்மை ஒன்றற்குர் தனாதலிற் நல். அவை பண்டேன்ன, இன்றன்ளது இதுவேயாகலிற் கடிதின்முடியுமென்பதாம்.

ககஉச. காமக் கடும்புன லுய்க்குமே நாணெடு
நல்லாண்மை யென்னும் புணை. ச.

நாணுகல்லாண்மையுங் காமவெள்ளத்திற்குப் புணையாகலின் அதனால் அவைநீங்குவனவல்ல வென்றுட்குச் சொல்லியது.

இ - ள். நாணென நல்லாண்மை என்னும் புணை - யான்தன்னைக் கடத்தற்குக் கொண்ட நாணும் நல்லாண்மையுமாகிய புணைகளை—காமக்கடும்புனல் உய்க்குமே - என்னிற்பிரித்துக் காமமாகிய கடிய புனல் கொண்டுபோகின்றது. எ - று.

அது செய்யவுள்ளுறை யணிப்புனலினீக்குதற்குக் கடும்புனலென்றான். இப் புனற்கு அவை புணையாகா, அதனான் அவை நீங்குமென்பதாம். (ச)

கஉஎ. தொட்டிலைக் குறுந்தொடி தந்தான் மடலெடு
மாலை யுழக்குந் துயர். இ.

இவ்வாற்றாமையும் மடலும் நுமக் கேல்வாவுரைத்தன வென்றுட்குச் சொல்லியது

இ - ள். மாலை உழக்கும் துயர் மடலொடு - மாலைப்பொழுதின்கணுறுபவிக்குந் துயரினையும் அதற்கு மருந்தாய மடலினையும் முன்னறியேன்,—தொட்டிலைக் குறுந் தொடி தந்தான் - இதுபொழுது எனக்கு மாலைபோலத் தொடர்ந்த நெறவினையினை புடையாடந்தான். எ - று.

காமம் எனைப்பொழுதுகளினுமுளதேனும் மாலைக்கண்மலர்தலுடைமையின் மாலைபுழக்குந்துயரென்றும், மடலும் அதுபற்றி வந்தாலின் அவையிரண்டும் அவ னாற்றாப்பாட்டதென்றும், அவடான் நீ கூறியதே கூறினமையனென்பது தோன் றத் தொட்டிலைக்குறுந்தொடியென்றுகூறினாள். அப்பெயர் உலகமத்தொலைப்புறத் துப்பிறந்த வன்மொழித்தொகை. இவை அவடந்தனவாகலின் நின்னுரைக்குமென் பது கருத்து. (இ)

கஉஅ. மடலூர்தல் யாமத்து முள்ளுவேன் மன்ற
படலொல்லா பேதைக்கென் கண்.

மடலூரும்பொழுது இற்றைக்குங் கழிந்ததென்றுட்குச் சொல்லியது.

இ - ள். பேதைக்கு என் கண் படல் ஒல்லா - நின்பேதைகாரணமாக என்கண் ஒருகாலும் துயிலைப்பொருந்தா;—யாமத்தும் மன்ற மடலூர்தல் உள்ளுவேன் - அதனால் எல்லாருந் துயிலுமிடையாமத்தும் யானிருந்து மடலூர்தலையே கருதாநிற் பேன். எ - று.

பேதையென்றது பருவம்பற்றியன்று மடமைபற்றி. இனிக்குறைமுடிப்பது வானெனவேண்டாவென்பதாம். (உ)

கஉக. கடலன்ன காமமுழந்து மடலேறும்
பெண்ணிற் பெருந்தக்க தில். எ.

பேதைக் கென்கண் படலொல்லா வென்பதுபற்றி அறிவிலராய மகளிரினும் அக்குடையராய வாடவரன்றே ஆற்றற்பால ரென்றுட்குச் சொல்லியது.

இ - ள். கடல் அன்ன காமம் உழந்தும் மடல் ஏறும் பெண்ணின் - கடல்போலக் கரையற்ற காமநோயினையநுபவித்தும் மடலூர்தலைச்செய்யாது ஆற்றியிருக்கும்

பெண்பிறப்புப்போல—பெருத்தக்கது இல் - மிக்க தருதியினையுடையபிறப்பு உலகத்தில்லை. எ - று.

பிறப்புவிசேடத்தால் அவ்வடக்கம் எனக்கில்லையாகின்றது, பெண்தன்மையென்பதாம். இத்தினைப் தலைமகன்கூற்று, மேற்றலைமகள் கூற்று. (எ)

ககஉஅ. நிறையரியர் மன்னளிய ரென்னுது காம
மறைபிறக்கு மன்று படும். அ.

காப்புச் சிறைமிக்குக் காமம்பெருகியவழிச் சொல்லியது.

இ - ன். நிறை அரியர் (என்னுது) - இவர் நிறையால் காமிதார்த்தக்கரியரென் றஞ் சுதல்செய்யாது,—மன் அளியர் என்னுது - மிகவு மளிக்கத்தக்காரென் றிரங்குதல் செய்யாது,—காமம் மறை இறந்து மன்றுபடும் - மளிர்காமமும் அவர்மறைத்தலைக் கடந்து மன்றின்கண்ணே வெளிப்படுவதாயிருந்தது. எ - று.

என்னுதென்பது முன்னுங்கூட்டி மகளிரென்பது வருவிக்கப்பட்டது. எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. மன்றென்பது தந்தைதன்னையரைநோக்கி. உலகத்துப் பெண்பாலார் காமத்தியல்பு கூறவாள்போன்று, தன்காமம் பெருகியவாறும் இனியறத்தொடு நிற்றல்வேண்டுமென்பதனுங் குறிப்பாற் கூறியவாருயிற்று. (அ)

ககஉக. அறிவிலா ரெல்லாரு மென்றேயென் காம
மறுகின் மறுகு மருண்டு. க.

இதுவுமது.

இ - ன். எல்லாரும் அறிவிலார் என்று - யான்முன்னடங்கிநிற்றலான் எல்லாரு மென்னையறிதலிலர் இனியவ்வாறு நில்லாதியானே வெளிப்பட்டறிவிப்பலென்று கருதி,—என்காமம் மறுகில் மருண்டு மறுகும் - என்காமம் இவ்வூர்மறுகின்கண்ணே மயங்கிச்சுழலாநின்றது. எ - று.

மயங்குதல் அம்பலாதல். மறுகுதல் அலராதல். அம்பலுமலருமாயிற்று, இனியறத்தொடுநிற்றல்வேண்டுமென்பதாம். அறிவிலாரென்ப தூஉம் பாடம். (க)

ககச0. யாங்கண்ணிற் காண ருபு வறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு. க0.

செவிலிக்கறத்தோடு நின்றுவைத்து யானிற்குமாறென்னையென்று நகையாடிய தோழியோடு புலந்து தன்னுள்ளே சொல்லியது.

இ - ன். யாம் கண்ணிற்காண அறிவில்லார் ருபு - யாங்கேட்குமாறுமன்றிக் கண்ணுற்காணுமாறு எம்மையறிவிலார் ராகின்றார்,—யாம் பட்ட தாம் படாவாறு - அவரல்வனஞ் செய்கின்றது யாமுற்றநோய்கள் தாமுறுமையன். எ - று.

கண்ணினென்றது முன்கண்டறியாமையுணர்கின்றது. அறத்தொடுநின்றமையறியாது வரைவு மாட்டிமைப்படுகின்றிலனெனப்புலக்கின்றனாகலின், எதிலாரா கிக் கூறினள். இது, ராகின்ற சேட்படைக்குத்தோழிக்குத் தலைமகன் கூறியதாற்கால், அதிகாரத்திற்கேலாமையறிக. (க0)

கருவிலம். அறிவுறுத்தல்.

அறிவுறாவது களவொழுக்கம்வேண்டிய தலைமகன் பிறர்கூறின்றவலே தானே யாயின்றவார்த்தைதோழிக்கறிவுறுத்தலும், வரைவாக உடன்போக்காக ஒன்றுவேண் டிய தலைமகளும் தோழியும் அவ்வலரையவன்றனக் கறிவுறுத்தலுமாம். இது ராணுத் தற்றலைவி கிழவதாகலான், ராணுத்துறவுரைத்தலின்பின் வைக்கப்பட்டது.

கசஉ. அலரெழ வாருயிர் நிற்கு மதனிற்
பலரறியார் பாக்கியத் தால். உ.

அல்ல குறிப்பட்ட பிற்றைஞான்று வந்த தலைமகனைத்தோழி
யலர்கூறி வரைவுகடாயவழி அவன் சொல்லியது.

இ - ள். அலர் எழ ஆருயிர் நிற்கும் - மடன்தையொடெம்மிடைகாட்பு ஊரின்கண ணாரையெழுதலான் அவனைப்பெறுத வருத்தமென்னாரியவுயிர் பெற்றதுபோன்று நிலை பெறும்;—அதனைப் பாக்கியத்தால் பலர் அறியார் - அந்நிலைபேற்றைத் தெய்வத்தால் யானே யறிவதல்லது கூறின்ற பலருமறியார். எ - று.

அல்லகுறிப்பட்டுத் தலைமகளே யெய்தப்பெறுத வருத்தமெல்லாந்தோன்ற அரிய வுயிரென்றும், அவ்வனமறியாமே எளியளாக்கி யெக்கின்றமையின், அரிதவ்வாருயிர் க்குப் பற்றுக்கோடாகின்றதென்பான் அலரெழவாருயிர் நிற்குமென்றும், பற்றுக் கோடாதலை அவ்வேதுவினாராயிற்றாற்றுதோழிவர், ஒழியவே ஆருயிர் போமாகலான் அவரறியாதொழிகின்றது தெய்வத்தானென்றுங் கூறினன். முற்றும்மை விகாரத் தாற்றொக்கது. (உ)

கசஉ. மலரன்ன கண்ணு ளருமை யறியா
தலரெமக் கீந்தநீ ரூர். உ.

இதுவுமது

இ - ள். மலர் அன்ன கண்ணுள் அருமை அறியாது - மலர்போலுங்கண்ணே புடையாளது எய்தற்கருமையறியாது,—இவ்வூர் அலர் எமக்கு ஈந்தது - இவ்வூர் அலரேயெளியளாக்கி அவனோடலர்கூறலே எமக்குபகாரித்தது. எ - று.

அருமை அல்லகுறிப்பாட்டாலும் இடையீடெளாலும் ஆயது. ஈந்ததென்றான், தனக்குப் பற்றுக்கோடாகலின், அலர்கூறுவாரை அவர்செய்தவுதவிபற்றி இவ்வா றென்றான். (ஊ)

கசஎ. உருவுகண் டூரிரந்த வெள்ளை யதனைப்
பெருவரை நாடன் பெற்றனனிந்து. ஊ.

இதுவுமது.

இ - ள். ஊர் அறிந்த வெள்ளை உருவோ - எங்கட்குக் கூட்டமுண்மை இவ்வு லகினவர்கண்டறிந்தவெள்ளைநிறமுடையதென்றான்றோ,—அதனைப்பெறுதபெற்றன னிந்நாள் - அதனைக்கூடியென்னையும் அங்கூட்டத்தைப் பெறுதிருந்தே பெற்றுப்போது மென்னையுடைத்தானென்ன. எ - று.

பெற்றனனிந்நாளென்பதனால் பெற்றவழியுள்ளதாமின்பம்போலுமின்பமுடைமை. நிற்கென் பதற்கேற்ப மனமென்னும் வினைமுதல்வருவிக்கப்பட்டது. (ஊ)

குறள். கல்வையற்கல்வி துணாமதியின்றிறை
நல்வென்னுந் தன்மை யிழந்து. ச.

இதுவுமது.

இ - ள். காமம் கல்வையால் கல்வித - என்காமம் இவ்வூரெல்லின்ற அவ ரானே யலர்தலையுடைத்தாயிற்று;—அது இன்றேல் தன்மை யிழந்த தவ்வென்னும் - அவ்வலரில்லையாயின், தன்னியல்பிழந்து கருங்கும். எ - று.

அலர்தல் மேன்மேன்மிகுதல். செல்வையுடையதனைச் செல்வியென்றுற்போலக் கல்வையுடையதனைக் கல்வியென்றார். இயல்பு இன்பம் பயத்தல். தவ்வென்னுமென் பது குறிப்புமொழி; "நல்கால் யாத்த மாலை வெண்குடை—தவ்வென் றசைஇத் தாழ்துளி மறைப்ப" என்புழியுமது. (ச)

கசசரு. களித்தொறுங் கள்ளுண்டல் வேட்டற்றற் காமம்
வெளிப்படுந் தோறு மினிது. ஐ.

இதுவுமது.

இ - ள். களித்தொறும் கள் உண்டல் வேட்டற்று - கள்ளுண்பார்க்குக் களிக் குந்தோறுங்கள்ளுண்டல் இனிதாமாறுபோல,—காமம் வெளிப்படுந்தோறும் இனிது- எனக்குக்காமம் அலராற்றோறும் இனிதாகாநின்றது. எ - று.

வேட்கப்பட்டற்றாலென்பது வேட்டற்றாலென நின்றது. வேட்கையிகுதியால் அலரும் இன்பஞ்செய்யாநின்றதென்பதாம். (ஆ)

கசசரு. கண்டது மன்னு மொருநா ளலர்மன்னுக்
திங்களைப் பாம்புகொண் டற்று. சு.

இடையீடுகளானும் அல்லகுறியானுந் தலைமகனையெய்தப்பெறுத தலைமகள் அவன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவளாய் அலரறிவுறீஇ வரைவுகடாயது.

இ - ள். கண்டது ஒருநாள் - யான் காதலரைக் கண்ணுறப்பெற்றது ஒரு ஞான்றே;—அலர் திங்களைப் பாம்புகொண்டற்று - அதனிறுவலர் அவ்வளவிற் றன்றித் திங்களைப்பாம்பு கொண்டவர்போன்று உலகெங்கும் பரக்கது. எ - று.

களங்கத்தைக் காரணமாகவுடைத்தித்திப் பாம்புகொண்டதென்றான். இருவகையும் மன்னும் உம்மையும் அசைநிலை. காட்சியின்றியும் அலர்பரக்கின்ற இவ்வொழுக்கம் இனியாகாதி, வரைந்துகோடல்வேண்டுமென்பதாம். (இ)

கசசு. ஊரவர் கௌவை பெருவரை வண்ணைசென்
னீரரை நீணுமிற் சோய். எ.

வரைவுநீட ஆற்றுளாய தலைமகளைத் தலைமகன் சிறைப்புறத்தானாதலறிந்த தோழி ஊரவரலரும் அண்ணைசென்னுமென்னும் யாற்றல்வேண்டுமென்னச் சொல்லியேற்பியவழி அவள் சொல்லியது.

---

* தெய்ல் வண்ணை, அடி கசசு - கசரு.

இ - ள். இச்சோய் - இக்காமநோயாகிய பயிர்,—ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல் நீராக நீளும் - இவ்வூரின்மகளிரெடுக்கின்ற அலர் எருவாக, அது கேட்டு அன்னை வெருண்டுசொல்லுகின்ற வெஞ்சொல் நீராக, வளராநின்றது. எ-று.

ஊரவரென்பது தொழிலான் ஆணெழித்தநின்றது. ஏததேசவருவகம். கருக்கு தற்கேதுவாவனதாமே விரிதற்கேதுவாகாநின்றன வென்பதாம். வரைவாணுதல் பயன். (எ)

ககசஅ. நெய்யா லெரிநு துடப்ப மென்றற்றுற் கௌவையாற்
காம நுதுப்பே மெனல். அ.

இதுவுமது.

இ - ள். கௌவையால் காமம் நுதுப்பேமெனல் - எதிலாரெடுக்கின்ற அலரால் காய்காமத்தையவித்துமென்று கருதுதல் - நெய்யால் எரி நுதுப்பேமென்றற்று - நெய்யாலெரியையவித்துமென்று கருதுதலோடொக்கும். எ - று

மூன்றனுருபுகள் கருவிக்கண்வந்தன. களர்தற்காரணமாய அலரால் அவித்தல் கூடாதென்பதாம். (அ)

ககசக. அலர்நாண வொல்வதோ வஞ்சலோம் பென்றூர்
பலர்நாண நீத்தக் கடை. கூ.

வரைவிடைவைத்துப் பிரிவின்க ணூற்றுளாய தலைமகள் அவன்வந்து சிறைப்புறத்தானுதலறிந்து அலரஞ்சியாற்றல் வேண்டுமென்ற தோழிக்குச்சொல்லியது.

இ - ன் அஞ்சலோம்பு என்றூர் பலர் நாண நீத்தக்கடை - தம்மையெதிர்ப் பட்டனூன்று கின்னிற்பிரியேன் அஞ்சலோம்பென்றவர்தாமே இன்று கண்டார் பலரும் நாணும்வகை நம்மைத்துறந்தபின்—அலர் நாண வொல்வதோ - நாமேதிலார் கூறுமலருக்கு நாணக்கூடுமோ கூடாது. எ - று.

நாணவென்னும் வினையெச்சம் ஒல்வதென்னுந் தொழிற்பெயருள் ஒல்லுதற் றொழிலோடு முடிந்தது. கண்டார் நாணுநிலைமையமாய யாம் நாணுதல் யாண்டைய தென்பதாம். (கூ)

ககஐ. தாம்வேண்டி னல்குவர் காதலர் யாம்வேண்டுங்
கௌவை யெடுக்கு மிவ்வூர் கo.

தலைமகன் சிறைப்புறத்தானுகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய் அலரறிவுறீஇ அவன் உடன்போக்கு நயப்பச்சொல்லியது

இ - ன். யாம் வேண்டும் கௌவை இவ்வூர் எடுக்கும் - உடன்போகற்கேது வாகலெஞ்ஞி யாம் பண்டேலிரும்புவதாயவலரை இவ்வூர்தானேயெடாநின்றது—காத லர்தாம் வேண்டின் நல்குவர் - இனிக்காதலர்தாமும் யாம்வேண்டியக்கால் அதனை யிழிந்தினோர்வர், அதனால் இவ்வலர் நமக்கு நன்றாய் வந்தது. எ - று.

ஏச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. நல்கட்காதலுடைமையின் மருளென்பது தோன்றக் காதலரென்றாள். இவ்வீருபதுபாட்டும் புணர்தனிமித்தம். (கo)

களவியல் முற்றிற்று.

கற்பியல்.

இனிக் கற்புப் பதினெட்டதிகாரத்தாற் கூறவான்றொடங்கி, முதற்கட் பிரிவாற்றுமை கூறின்றார்.

ககசு ம் அதி.—பிரிவாற்றுமை.

அஃதாவது வரைந்தெய்தியபின் தலைமகன் அறம்பொருள்இன்பங்களின் பொருட்டுச் சேயிடையினும் ஆயிடையினுந் தலைமகளைப் பிரிந்துசெல்லும்; செல்லுங்கால் அப்பிரிவினை அவளாற்றுளார்த்தன்மை. அஃது ஈண்டுப் பிரிவுணர்த்திய தலைமகற்குத் தோழிகூறலும், அவடனக்குத் தலைமகடானே அவன்குறிப்பானுணர்ந்துகூறலும், பிரிவுணர்த்தியவழிக்கூறலும், தலைமகன்பிரிந்தழி ஆற்றுவிக்குந் தோழிக்குந் தலைமகன் மறுத்துக்கூறலுமென நால்வகையாற் கூறப்படும்.

ககடுக. செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின்
வல்லரவு வாழ்வார்க் குரை. க.

பிரிந்து கடிதின்வருவலென்ற தலைமகற்குத் தோழி சொல்லியது

இ - ள். செல்லாமை உண்டேல் எனக்கு உரை - நீயெம்மைப் பிரியாமையுண்டாயின் அதனையெனக்குச்சொல்,—மற்றுநின் வல்லரவு வாழ்வார்க்கு உரை - அஃதொழியப் பிரிந்துபோய் விரைந்து வருதல் சொல்லையாயின் அதனை அப்பொழுது உயிர்வாழ்வார்க்குச் சொல். எ - று.

தலைமகனையொழித்து எனக்கென்னுள், தானவனென்னும் வேற்றுமையின்மையின். அக்காலமெல்லாமாற்றியிருந்து அவலவறு காணவல்லளல்லள்,பிரிந்தபொழுதே பிறந்துபடுமென்பதாம். அழுங்குவித்தல் பயன். இதனைத் தலைமகள் கூற்றுக்கியுரைப் பாருமுளர். (க)

கஎடுஉ. இன்க ணுடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்க ணுடைத்தாற் புணர்வு. உ.

பிரிவு தலைமகன்குறிப்பானறிந்த தலைமகள் தோழிக்குச்சொல்லியது.

இ - ள். அவர் பார்வல் இன்கண் உடைத்து - தழையுங்கண்ணியுங்கொண்டு பின்னின்றனனொன்று அவர்நோக்குமாத்திரமும் புணர்ச்சி குறித்தமையான் நமக்கின்பமுடைத்தாயிருக்கும்,—புணர்வு பிரிவஞ்சும் புன்கண் உடைத்து - இன்று அப்புணர்ச்சிதான் நிகழாதிற்கவும் அது பிரிவொன்றஞ்சுமச்சத்தினையுடைத்தாயிற்று, அவன் பிரிவிலமையின். எ - று.

பார்வலென்றதனாற் புணர்ச்சிபெறுத பின்னிலைக்காலம் பெறப்பட்டது. புன்கணென்னுங்காரணப்பெயர் காரியத்தின்மேலாயிற்று. அவ்வச்சத்தினையுடைத்தாதலாவது "முள்ளுறழ் முகையெயிற் றமிழ்தனைத் தீ நீரைக்—கள்ளினு மகிழ்செய்புமென வுரைத்து மமையாரென்—னெள்ளிழை திருத்தும்" பண்டையிற் றெறப்பால் அவன் பிரிதற்குறிப்புக்காட்டி அச்சஞ்செய்தனுடைமை. அழுங்குவித்தல் பயன். (உ)

கஎடுஉ. அரிதரோ தேற்ற மறிவுடையார் கண்ணும்
பிரிவோர் நிடத்துண்மை யான். ஊ.

---

* கலி, பாலை, க.

இதுவுமது

இ - ன். அறிவு உடையார் கண்ணும் - பிரியேனென்ற தஞ்சொல்லும் நம்பிரி வாற்றுமையும் அறிதலுடையராய காதலர்கண்ணும்,—ஓரிடத்துப் பிரிவுண்மை யான் - ஒரோவழிப் பிரிவு நிகழ்தலான்,—தேற்றம் அரிது - அவர்சொல்லும் தலையளி யும்பற்றி நம்மாட்டன்புடையரெனத் தேறுந்தேற்றம் அரிதாயிருந்தது. எ - று.

அரோ அசைநிலை. உம்மை உயர்வுசிறப்பின்கண் வந்தது. (க)

கஎடுச. அளித்தஞ்ச லென்றவர் நீப்பிற் றெளித்தசொற்
றேறியார்க் குண்டோ தவறு. ச

இதுவுமது

இ - ள். அளித்து அஞ்சல் என்றவர் நீப்பின் - எதிர்ப்பட்டளான்றே தலையளி செய்து கின்னிற்பிரியேன் அஞ்சலென்றவர்தாமே பின் பிரிவராயின்,—தெளித்த சொல் தேறியார்க்குத் தவறு உண்டோ - அவர்க்கன்றி அவர் தெளிவித்த சொல்லே மெய்யெனத் தெளிர்தார்க்குக் குற்றமுண்டோ! எ - று.

தேறியாரென்பது தன்னைப் பிறர்போற்கூடல். சொல்லுஞ் செயலுமொவ்வா மைக்குற்றம் அவர்க்செய்தும்; அஃதெய்தாவகையழுங்குவியென்பது கருத்து. (ச)

கஎடுரு. ஓம்பி னமைந்தார் பிரிவோம்பன் மற்றவர்
நீங்கி னிரிதாற் புணர்வு. ரு.

இதுவுமது

இ - ள். ஓம்பின் அமைந்தார் பிரிவு ஓம்பல் - என்னுயிரைச் செல்லாமற்காத்தி யாயின், அதனையாளுதற்கமைந்தாருடைய செலவினை அழுங்குவிப்பாயாக;—மற்று அவர் நீங்கித் புணர்வு அரிது - அழுங்குவிப்பாரின்றி அவர்செல்வாராயின் அவராலா னப்பட்டவுயிருஞ்செல்லும், சென்றூற் பின்னவரைக்கூடுதல் எனக்கரிதாம். எ - று.

ஆளுதற்கமைதல் இறைவராதற்குத் தெய்வத்தாலேற்புடையாதல். மற்றுவினை மாற்றின்கண் வந்தது. (ஙி)

கஎடுசு. பிரிவுரைக்கும் வன்கண்ண ராயி னரிதவர்
கல்குவ தென்னு நசை. சு.

தலைமகன் பிரிவுணர்த்தியவாறு வந்துசொல்லிய தோழிக்குச் சொல்லியது.

இ - ள். அவர் பிரிவு உரைக்கும் வன்கண்ணராயின் - நங்கவலைக்குமையறித்த தலைவர்தாமே நம்முனின்று தம்பிரிவினையுணர்த்தும் வன்கண்மையுடையாராயின்,— கல்குவர் என்னும் நசை அரிது - அத்தன்மையார் பின்பு நம்மாற்றுமையறிந்துவந்து தலையளிசெய்வரென்றிருக்குமாசை விடப்படும். எ - று.

அருமை பயன்படுதலில்லாமை, கூடியிருந்தே அன்பின்றிப்பிரிவென்னுதலும் உண்டாத்தலும் வல்லராயினுர் பிரிந்துபோய் அன்புடையராய் நம்மை நினைத்துவந்து கல்குதல் யாண்டையதென்பதாம். அழுங்குவித்தல் பயன். (ஞ)

கஎடுள. துறைவன் முறைமை நினைந்தொன் றுண்ணை
யிறையிறவா நின்ற வளை. எ.

இதுவுமது.

இ - ள். தலைவன் தலைத்தமை - தலைவன் என்னைப் பிரியலுற்றமையை—முன்னையிறை இறவாகின்ற வளை தாற்றுகொல் - அவனுணர்த்தாமற்றுமேபுணர்த்து என்முன்கையினிறையினின்றும் கழலாகின்ற வளைகள் எனக்கறியியாவோ, அவனுணர்த்தவுணர்த்துவத்து நீயறிவித்தல்வேண்டுமோ! எ - று.

முன்னே கிழ்ந்தமையிற் றலைத்தமையென்றும், கேட்டதனையான் மெலித்து ஆற்றுமையின் இறவாகின்றவென்றுங் கூறினுள். அழுங்குவித்தவர்த்து கூறற்பாலவல்லையாய் நீயும் இவ்வளைகள்செய்தனவே செய்தாயெனப் புலத்து கூறியவாறு.(எ)

ககஎ. இன்ன தினனில்லூர் வாழ்த லதனினு
மின்ன தினியார்ப் பிரிவு. அ.

இதுவுமது.

இ - ள். இனன் இல் ஊர் வாழ்தல் இன்னது - மகளிர்க்குத்தக்குறிப்பறியுந் தோழியரில்லாத வேறூரின்கண் வாழ்தலின்னது;—இனியார்ப்பிரிவு அதனினும் இன்னது - அதன்மேலுந் தலைதாழலரைப்பிரிதல் அதனினுமின்னது. எ - று.

தலைவன் செலவினையழுங்குவித்து வாராது உடன்பட்டவேற்றமைபற்றிப் புலத்தின்றுளாகலின், இனனில்லூரென்றுள். உலகியல் கூறுவான்போன்று தனக்கு விரண்டு முண்மை கூறியவாறு. (அ)

ககஙூ. தொடிற்சுடி னல்லது காமநோய் போல
விடிற்சுட லாற்றுமோ நீ. கூ.

காமந் தீயேபோன்று தானின்றவிடத்தைச் சுமோகலான்
நீயாற்றல்வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.

இ - ள். நீத்தொடிற் சுடிற் சுடலல்லது - நீத் தன்னைத்தொட்டாற் சுமோயித் சுடுதலல்லது—காமநோய்போல விடிற் சுடல் ஆற்றுமோ - காமமாயெ நோய் போலத் தன்னையன்றுற் றப்பாது சுடுதலை வற்றே, மாட்டாது. எ - று.

சுமோயினென்பது மந்திரமருந்துகளாற்றம்பிக்கப்படாதாயி னென்றவாறு. காமத்திற்சுதவுமில்லையென்பான் வளை சுடலென்றுள். அதல் நகாமை. சுட னென்பது முன்னும் கூட்டப்பட்டது. நீயினுங்கொடியதனை யாஞற்றுமாறென்னை யென்பதாம். (ஆ)

ககஙo. அரிதாற்றி யல்லனெய் கீக்கிப் பிரிவாற்றிப்
பின்னிருந்து வாழ்வார் பலர். கo.

தலைவியர் பலரும் பிரிவாற்றியிருப்பர், அது நீசெய்கின்றிலை யென்ற தோழிக்குச் சொல்லியது.

இ - ள். நீசொல்லுகின்றதொக்கும்,—அரிது ஆற்றி அல்லல்நோய் கீக்கி - பிரிவுணர்த்தியவழி அதற்குடம்பட்டுப் பிரியுங்கால்நிகழும் அல்லலெனுநோய் கீக்கி—பிரிவு ஆற்றிப் பின் இருந்து வாழ்வார் பலர் - பிரிந்தால் அப்பிரிவுதன்னையுமாற்றி பின்னுமிருந்து உயிர்வாழுமகளிர் உலகத்துப் பலர். எ - று.

பண்டையிற்றெப்பத் தலேயளிபெற்றின்புறுகின்ற வெல்லுக்கண்ணே அஃறி முத்து தன்புறுதற்குடம்பதேல் அரியதொன்றுகலின் அரியதனேச்செய்தென்றும், செல்லுற்றேயத்து அவர்க்கியாது கிகழுமென்றும் வருந்தினேயும் யாமாற்றியிருக்கு மாறென்னென்றும் அவரவுதான் எஞ்ஞான்று வற்றேய்துமென்றும் இவ்வாற்று னிகழுங்கலே மனத்துநீங்காதாகலான் அல்லலுய் நீக்கியென்றும், பிரிந்தால் வருந் தினேயும் அகத்து நிகழும் காமவேதனேயும் புறத்து யாழிசை, மதி, தென்றலென் றிவைமுதலாக வந்து இதனே வளர்ப்பனவும் ஆற்றலரியவாகலிற் பிரிவாற்றியென் றும், தங்காதலரை யின்றியமையா மகளிருள் இவையெல்லாம் பொறுத்துப் பின்னு மிருந்து உயிர்வாழ்வார் ஒருவருமில்லேயென்பது குறிப்பாற்றேன்றப் பின்னிருந்து வாழ்வார் பலரென்றுங் கூறினுள். அரிதென்பது வினேக்குறிப்புப்பெயர். பிரிவின்க ணிகழ்வனவற்றைப் பிரிவென்றுள். செய்து, நீக்கி, ஆற்றியென்பன ஒசைவகையான் அவ்வவற்றதருமையுணர நின்றன. நெறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. யாணுமிறந்து படுவலென்பது கருத்து. (கo)

கள அதி.—படர்மெலிந்திரங்கல்.

அது படரான்மெலிந்திரங்கலெனவிரியும், அஃதாவது பிரிவாற்றுளாய தலே மகள் தானுறுகின்ற தின்பத்தினே எப்பொழுதும் நினேத்தலின் அந்நினேவான் மெலிந் திரங்குதல். அதிகாரமுறைமையும் இதனுனே விளங்கும்.

கஉக. மறைப்பேன்மன் யானிஃதோ நோயை யிறைப்பவர்க்
கூற்றுநீர் போல மிகும். க.

காமநோயை வெளிப்படுத்தல் நின்னுணுக்கேலாதென்ற
தோழிக்குச் சொல்லியது.

இ - ள். நோயை யான் மறைப்பேன் - இந்நோயைப் பிறரறிதனுணி யான் மறையாகின்றேன்;—இஃதோ இறைப்பவர்க்கு ஊற்றுநீர்போலமிகும் - நிற்பவும் இஃது அந்நான்வரை நில்லாது நீர் வேண்டுமென்றிறைப்பவர்க்கு ஊற்றுநீர் மிகுமாறு போன் மிகாகின்றது. எ - று.

அம்மறைத்தலாற் பயனென்னென்னுபடி நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. "இஃதோ செல்வர்க்கொத்தனென்யான்" என்புழிப்போல ஈண்டேச்சுட்டுப் பெயரே நிரிந்துநின்றது. இஃதோர் நோயையென்ற பாடமோதுவாருமுளர்; அது பாடமன்மையறிக. இனி அதற்கேத்தது நீ செயல்வேண்டுமென்பதாம். (எ)

கஉஉ. காத்தலு மாற்றேனிக் நோயைநோய் செய்தார்க்
குரைத்தலு நாணுத் தரும். உ.

ஈண்டையாரறியாமன் மறைத்தல் ஆண்டையாரறியத் தூதுவிடுதலென்னு மிரண்டனுள் ஒன்றுசெயல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.

இ - ள். இந்நோயைக் காத்தலும் ஆற்றேன் - இந்நோயை ஈண்டையாரறியா மன் மறைத்தலும் வல்லேனுன்றியேன்;—நோய் செய்தார்க்கு உரைத்தலும் நாணுத் தரும் - யாரேக்கால், நோய்செய்தவர்க்குரைக்கவெளின், அதுவும் எனக்கு நாணினேத்தாராகின்றது, இனியென் செய்தோ! எ - று.

ஒருவனைக் கொருவன் மிகுதலிற் காத்தலுமாற்றேனென்றும், செயிடைச் சென்றவர்க்கு இதுசொல்லித் தூதுவிட்டால் இன்னுமிருக்கேனென்பது பயக்குமென்றும் கருத்தால் காணத் தருமென்றும் கூறினள். (உ)

ககக. காமமு நாணு முயிர்காவாத் தான்குமென்
நோனு வுடம்பி னகத்து. ட.

இதுவுமது.

இ - ள். காமமும் நாணும் - காமநோயும் அதனைச் செய்தவர்க்கு உளைக்கலொல்லாத நாணும்—நோனு என் உடம்பின் அகத்து - தம்மைப் பொருத என்னுடம்பின்கண்ணே—உயிர் காவாத்தலுக்கும் - உயிர் காத்தண்டாக அதனிருதலையினும் தான்கின்றன. எ - று.

பொருமை மெலிவானுயது. தான்குமென்பது, ஒன்றினொன்று மிகாத இரண்டும் ஒத்தலிரவென்பது தோன்ற நின்றது. தூதுவிடவும் ஒழியவும், பண்ணுவனவாய காமநான்கள் தம்முளொத்து உயிரினையிறலியாகின்றன. யான் அவற்றுளொன்றின்கணிற்கமாட்டாமையின் இஃதிற்றேயிதுவென்பதாம். (ட)

ககஙச. காமக் கடன்மன்னு முண்டே யதனீங்கு
மேமப் புணைமன்னு மில். ச.

தலைவியர் காமக்கடற்படார், படினும் அதனை ஏற்றபுணையானீந்திக் கடப்பரென்ற தோழிக்குச் சொல்லியது.

இ - ள். உண்டே காமக்கடலே - யாவர்க்கும் உளவாய்வருகின்ற இவ்விரண்டினுள்ளும் எனக்குண்டாகின்றது காமக்கடலே;—அது நீந்தும் ஏமப் புணை இல் - அதனை நீந்தும் அரணுடைய புணையில்லை. எ - று.

இருவழியும் மன்னும் உம்மும் அசைநிலை. தூதுவிட்டு இதற்குப் புணையாகற்பாலையாயினும் ஆயிற்றிலையென்பது கருத்து. (ச)

ககஙஇ. தப்பி னெவனுவர் மற்கொ றுயர்வரவு
ஙட்பினு னாற்று பவர். ஙி.

தூதுவிடாமைநோக்கித் தோழியோடு புலந்து சொல்லியது.

இ - ள். ஙட்பினுன் துயர்வரவு ஆற்றுபவர் - இன்பஞ்செய்தற்குரிய ஙட்பின்கண்ணே துன்பவரவினைச் செய்யவல்லவர்—தப்பின் எவனுவர்கொல் - தன்பஞ் செய்தற்குரிய பகைமைக்கண் என்செய்வர்கொல்லோ! எ - று.

தப்புப் பகையுமாதல் "தப்பெறிச்சோர்க்கே புன்னாச் செய்மையு—ஙட்பெறிச் சோர்க்கே யச்சையண்மையுண்டு" என்பதனுணர்க. அப்பகைமை நண்பே நாணுமையின் அவர்செய்வதுமறியப் பெற்றிலேமென்பதபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. துயர்வருதலே யில்லையாயிருக்க அதுசெய்கின்றிலையெனப் புலந்தமையின், துயர்வரவு செய்தாரச்சமும் பிறார்க்கியும் கூறினள். (ஞ)

ககக. இன்பம் கடன்மற்றக் காம மஃதில்லாத்
துன்ப மதனிற் பெரிது. க.

காமஃானின்பமுற்றார்க்கு அதனினை துன்பம் வருமென்ற
தோழிக்குச் சொல்லியது.

இ - ள். காமம் இன்பம் கடல் - காமம் புணர்வாலின்பஞ்செய்யுங்கால், அவ்வின்பங்கடல்போலப் பெரிதாம்;—மற்றஃது அங்ஙனம் துன்பம் அதனிற்பெரிது - இனி அதுதானே பிரிவாற்றுன்பஞ்செய்யுங்கால், அத்துன்பம் அக்கடலினும் பெரிதாம். எ - து.

மற்று வினைமாற்றின்கண் வந்தது. அங்ஙனமென வந்தமையின், மறுதலையெச்சம் வருவிக்கப்பட்டது. பெறலின்பத்தோடொத்தவரின் ஆற்றலாம்; இஃததனதன்மையென்பது கருத்து. (க)

ககக. காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே யுளேன். எ.

காமக்கடல் நிறைபுணையாக நீந்தப்படுமென்றுட்குச் சொல்லியது.

இ - ள். காமம் கடும்புனல் நீந்திக் கரை காணேன் - காமமாகிய கடலை நீந்தாதேனல்லேன், நீந்திலும் அதற்குக் கரைகாண்கின்றிலேன்,—யாமத்தும் யானே உளேன்-அக்காமத்தைக்காலத்தான்எல்லாருந்துயிலும் அரையிருளாயிற்று,அவ்வரையிருட்கண்ணும் அதற்கொருதுணையின்றி யானேயாயினேன், ஆயும்இதற்குப்பட்டுப்போகாதுளேனாகின்றேன், ஈதொரு நினைப்பயனிருந்தவாறென்! எ - து.

கடுமை சான்ற மிருதிக்கணின்றது. உம்மை முன்னுங்கூட்டப்பட்டது. யானேயாயினேனென்பது நீ துணையாயிற்றிலையென்னுங் குறிப்பித்து. (எ)

ககஅ. மண்ணுயி ரெல்லாந் துயிற்றி யளித்திரா
வென்னல்ல நில்லே துணை. அ.

இரவின்கோமை சொல்லியிரங்கியது.

இ - ள். இரா அளித்து - இவ்விரா அளித்தாயிருந்தது;—மண் உயிர் எல்லாம் துயிற்றி என்னல்லது துணை இல்லே - உலகத்து நிலைபெறுகின்ற உயிரனைவெல்லாந்தானே துயிலப்பண்ணுதலன் என்னையல்லாது வேறதுணைபுடைத்தாயிற்றில்லை. எ - து.

துயிற்றியெனத் நிரிந்தகின்ற வினையெச்சம் அவாப்நிலையான்வந்த உடைத்தாதலோடுமுடிந்தது. துணையோடொன்றுகின்ற உயிரனைவெல்லாம் விட்டு இரந்தபடி மெல்லவேயுய என்னையே துணையாகச்சேடலின் அறிவின்றென்பது பற்றி அவித்தென்றுள்; இகழ்ச்சிக்குறிப்பு. (அ)

ககக. கொடியார் கொலையிற் குன்கொடிய மின்ன
வடிய கழியு மிரா. க.

இதுவுமது.

இ - ள். இன்னல் செய்ய கழியும் இரா - காதலரைச் சாயின்புற்ற குன்னுஞ் சாயிற் குறியவாய் அவ்பிரிவாற்றுமாகின்ற இன்னல்களினே செய்யநாம்சென்று

ர்ஞல்கள்—கொடியார் கொலைமையின் தாம் கொடிய - அக்கொடியாரது கொடுமைக்கு மேலே தாங்கொலை செய்யாகின்றன. எ - து.

தன்னுற்றமை கருதாது பிரிதலின், கொடியரென்றுள். கொலை கடிதின் யாராது கீட்டித்தல். அவர் பிரிவாலும் கீட்டிப்பாலுமுளதாய துற்றமைக்குக் கண் ஜூடாமையேலும் பண்டையிலொடியவாய்க் கொடியனாகின்றனவென்பதாம்.(க)

கசஎ. உள்ளம்போன் றுவ்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்
நீந்தல மன்னோவென் கண். கூ.

நின்கண்கள் பேடுகழிகின்றனவாகலின் அழற்பாலே யல்லையென்றுட்குச் சொல்லியது.

இ - ள். உள்ளம்போன்று உள்வழிச் செல்கிற்பின் - மனம்போலத் காதலருள்ள தேயத்துத் தடிதிற்செல்லவல்லனவாயின்,—என் கண் வெள்ளநீர் நீந்தல - என்கண் கள் இல்லனம் வெள்ளமாயெ தன்னை நீந்தர. எ - து.

அது மாட்டாமையின் இனி அவற்றிற்கு நீந்துதலேயுள்ளதென்பதபட நின்ற மையின், மன் ஒழியிசைக்கண்வந்தது. மனத்திற்குச் செலவாவது நினைவேயாகலின் உள்ளம்போன்றென்றும், மெய்க்கு மடத்தசெல்லவேண்டுதலிற் கண்கள் அதனெ சென்ற காதலரைக்காண்டல் கூடாதென்னும் கருத்தாற் செல்கிற்பினென்றும் கூறினள். இதனுள் வருகின்றவதிகாரமும் தோற்றவாய் செய்யப்பட்டது. (க0)

கசஅ ம் அதி.—கண்விதுப்பழிதல்.

அஃதாவது கண்கள் தங்காட்சி விதுப்பான் வருந்துதல். காட்சிவிதுப்புத் தலைமைக்காண்டற்கு வீரைதல். இது படரான்மெலிந்தவழி கேள்வதாகலின், படர்மெலிந்திரங்கலின்பின் வைக்கப்பட்டது.

கசக. கண்டாங் கமுழ்வதெவன் கொலோ தண்டாநோய்
தாங்காட்ட யான்கண் டது. க.

நின்கண்கள் கவுழ்ந்து தம்மழகிழவாகின்றன நீயாற்றல்வேண்டுமென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

இ - ள். தண்டா நோய் யாம் கண்டது தாம் காட்ட - இத்தனியாகொலை யாம நிற்ற தாமைக்குக் காதலரைக் காட்டலனன்றே;—கண் தாம் கமுழ்வது எவன் கொல் - அன்று அத்தொழிலவாய கண்கள் இன்று எம்மைக் காட்டச்சொல்லியழு கின்றது என்கருதி! எ - து.

காட்டவென்பதற்கேற்ற செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. இன்றுத் தாமைகாட்டுதலல்லது யான்காட்டுதல் யாண்டைய தென்பதாம். (க)

கசஉ. தெரிந்துணரா நோக்கெ னுண்கண் பரிந்துணராப்
பைத லழுப்ப தெவன். உ.

இதுவுமது.

இ - ள். தெரிந்து உணரா நோக்கெ உண்கண் - மேல்கினவதனை யாராய்ந்தறி யாது அன்று காதலரை நோக்கின்ற உள்கண்கள்—பரிந்து உணராப் பைதல் உழப்

பதவுரை - இன்ற இது நம்மால் வந்தாளித் பொறுத்தல் வேண்டுமெனில் கூற பிரித்துணராத துன்பமுழப்பது என்கருதி! எ - று.

பிரிவைத் பிரிந்துபோயவர் வராமையிற் காண்டற்கரியராய் வருத்துதல். முன்னே வருவதறிந்து அதுவாவாதார்க்கு அது வந்தவழிப் பொறுத்தலன்றோவுள் ளது. அதனுஞ்செய்யாது வருந்துதல் கழிமடச்செய்கையென்பதாம். (உ)

கலைக. கதுமெனத் தாகோக்கித் தாமே கலுழு
மிதாகத் தக்க துடைத்து. க.

இதுவுமது.

இ - ள். தாம் கதுமென கோக்கித் தாமே கலுழும் இது - இக்கண்கள் அன்று காதலரைத் தாமே விரைந்து கோக்கி இன்றுந்தாமே பிருந்தழுகின்றவிது—கத்தக் கது உடைத்து - நம்மாற்பிரிக்கத்தக்க வியல்பினையுடைத்து. எ - று.

கண்ணென்பது அதிகாரத்தான் வந்தது. இதுவென்றது மேற்கூறிய கழிமடச் செய்கையை. அது வருமுன்னர்க்காப்பார்க்கு ஈகைவினைக்குமாலான், ஈகத்தக்கது டைத்தென்றான். (ஊ)

கலைச. பெயலாற்று நீருலர்ந்த வண்க ணுயலாற்று
வுப்பினே பெண்க ணிறுத்து. ச.

இதுவுமது.

இ - ள். உண்கண் - உண்கண்கள்,—உயலாற்று உய்வு இல் நோய் என்கண் நிறுத்து - அன்று யாறுய்யமாட்டாமைக் கேதுவாய ஒழிவில்லாத நோயை என் கண்ணே நிறுத்தி,—பெயலாற்று நீர் உலர்ந்த - தாமுமமுதலுமாட்டாவண்ணம் நீர் வற்றிவிட்டன. எ - று.

நிறுத்தல் பிரிதலும் பின்கூடாமையுமுடையாரைக் காட்டி அதனால் நிலைபெறச் செய்தல். முன் எனக்கின்னுதசெய்தலாற் பின் தமக்கின்னுதன தாமே வந்தன வென்பதாம். (எ)

கலஇ. படலாற்று பைத லுழக்குங் கடலாற்றுக்
காமநோய் செய்தவென் கண். இ.

இதுவுமது.

இ - ள். கடல் ஆற்றுக் காமநோய் செய்த என்கண் - எனக்குக் கடலுங் கிரி தாம்வண்ணம் பெரியதாய காமநோயைச் செய்த என்கண்கள்—படல் ஆற்று பைதல் உழக்கும் - அத்தினையாற் ருமும் துயில்கிலவாய்த் துன்பத்தையு முழவாகின் றன. எ - று.

காமநோய் காட்டியொன் வந்தாகலின், அதனைக் கண்களே செய்ததாகிக் கூறி னள். துன்பம் அழுதலாலையது. (ஏ)

கலக. ஓஒ வினிதே யெமக்கிந்நோய் செய்தகண்
பீடு மிறப்பட் டது. க.

இதுவுமது.

இ - ள். எமக்கு இக்கோய் செய்த கண் தாம் இதற்பட்டது - எமக்கிக்கோம் கோயினைச் செய்த கண்டாமும்இத்துயிலாதழுதற் கண்ணேபட்டது—ஒரு இனிதே-மிகவுமினிதாயிற்று. எ - று.

ஒவென்பது மிருதிப்பொருட்கண்வந்த குறிப்புச்சொல். தம்மால் வருத்தமுற்ற வெமக்கு அது நீர்த்தாற்போன்ற தென்பதாம். (ச)

களவ. உழந்துழந் துண்ணீ ரதுக விழைத்தினைந்து
வேண்டி பவர்க்கண்ட கண். எ.

இதுவுமது.

இ - ள். விழைந்து இழைந்து வேண்டி அவர்க் கண்ட கண் - விழைந்து உண் னெகிழ்ந்து விடாதே அன்று அவரைக் கண்ட கண்கள்—உழந்துழந்து உள்ளீர் அறை - இன்று இத்துயிலாதழுங்கலாய துன்பத்தினேபுழந்துழந்து தம்மகத்துள்ளீர் அற்றேபோக. எ - று.

அடுக்கு இடைவிடாமைக்கண் வந்தது. அறுதலாகிய இடத்துகிழ்பொருளின் மெழில் இடத்தின்மேனின்றது. (எ)

களவ. பேணுது பெட்டா ருளர்மன்னே மற்றவர்க்
காணு தமைவில கண். அ.

காதலர் பிரிந்துபோயினுரல்லர் அவரீண்டுளோர் அவரைக்காணுமளவும்
நீயாற்றல்வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.

இ - ள். பேணுது பெட்டார் உளர் - நெஞ்சால் விழையாதவைத்துச் சொன் மாத்திரத்தால் விழைந்தவர் இவ்விடத்தேயுளர்;—மற்று அவர்க் கண் காணுது அமைவில - அவ்வண்ணமையாற் பயன்யாது, அவரைக் கண்கள் காணுதமைகின்றன வில்லையாயின. எ -.று.

செயலாற் பிரிந்து நின்றமையிற் பேணுதென்றும், முன்னலம்பாராட்டிப் பிரி வச்சமும் வன்புறையுங் கூறினுராகலிற் பெட்டாரென்றுங்கூறினுள். மன் ஒழியி சைக்கண் வந்தது. மற்று வினைமாற்றின்கண் வந்தது. ஒகாரம் அசைநிலை. யாஞுத் தவுங் கண்கள் அவரைக் காண்டற்கு விரும்பாகின்றன வென்பதாம். இனிக்கொண் டினேயென்று பாடமாயின், என்கண்கள் தம்மைக் காணுதமைகின்ற கொண்டினேத் தாங்காணுதமைகின்றனவில்லே இவ்வாறே தம்மையொருவர் விழையாதிருக்கத் தாம வரை விழைந்தார் உலகத்துளரோவென்றுரைக்க. இதற்கு மன் அசைநிலை. (அ)

களவ. வாராக்காற் றுஞ்சா வரிற்றுஞ்சா வாயிடை
யாரஞ ருற்றன கண். கூ.

நீயுமாற்றி நின்கண்களுந் துயில்வனவாதல் வேண்டுமென்ற
தோழிக்குச் சொல்லியது.

இ - ள். வாராக்கால் துஞ்சா - காதலர் வாராதவூன்று அவர் வரவுபார்த்துத் துயிலா,—வரின் துஞ்சா - வந்தவூன்று அவர் பிரிவஞ்சித்துயிலா,—ஆயிடைக் கண்

தூஉந் உற்றன - தூதரான் அவ்விருவழியும் என்கண்கள் பொறுத்தற்கரிய துன்பத் தினையுடைய. எ - து.

குறிப்பெனச் சுட் நின்றது. இனி அவற்றிற்குத் தயில் ஒருஞான்றுமில்லை யென்பதாம். (க)

ககஅ0. மறைபெற லூரார்க் கரிதன்று லெம்போ
லறைபறை கண்ணு ரகத்து. க0.

காதலரை இவ்வூர் இயற்பழியாமல் அவர்கோமையை
மறைக்கவேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.

இ - ள். எம்போல் அறைபறை கண்ணுர் அகத்து மறை பெறல் - எம்மைப் போலும் அறைபறையாகிய கண்ணினையுடையார் தங்கெஞ்சின்கண்டக்கிய மறையை யறிதல்—ஊரார்க்கு அரிதன்று - இவ்வூரின்கணுள்ளார்க்கு எளிது. எ - து.

மறையென்றது ஈண்டு மறைக்கப்படுவதனை. அகத்து நிகழ்வதனைப் புறத்துள் ளார்க் கறிவித்தலாகிய தொழிலான் ஒற்றுமையுண்மையின்; அறைபறையாகிய கண் ணென்றுள். இவ்வனஞ்செய்புள்விகாரமாக்காது அறைபறைக் கண்ணென்று பாட மோதுவாருமுளர். யான் மறைக்கவும் இவை வெளிப்படுத்தாநின்றன வென்பதாம்.()

ககஙம் அதி.—பசப்புறுபருவரல்.

அது பசப்புற்ற பருவரலென விரியும். அஃதாவது பசப்புறுதலாலுய வருத் தம். இதனைப்"பற்றெறிந்தவர்க்*)" வென்பதுபோலக்கொள்க. பசப்பாவது பிரிவாற் ருமையான் வருவதோர் நிறவேறுபாடு. இது, தலைமகனைக் காணப்பெறுதவழி நிகழ் வதாகலின், கண்டுதப்பிதலின்பின் வைக்கப்பட்டது.

ககஅக. நயந்தவர்க்கு நல்காமை சோர்ந்தேன் பசந்தவென்
பண்பியார்க் குரைக்கோ பிற க.

முன் பிரிவுடம்பட்ட தலைமகள் அஃதாற்றாது பசந்தவழித்
தன்னுள்ளே சொல்லியது

இ - ள். நயந்தவர்க்கு நல்காமை சோர்ந்தேன் - என்னை நயந்தவர்க்கு அது பொழுது பிரிவையுடம்பட்ட நான்—பசந்த என் பண்பு யார்க்கு உரைக்கோ - அதனையாற்றாது இதுபொழுது பசந்தவென்னியல்பினை யார்க்குச்சொல்வேன்!எ-து.

பிறவென்பது அசைநிலை. உடம்படாவழி ஒழிதல்குறித்துப்பிரிவுணர்த்தினாக லின் அவரன்புடையரென்னுங் கருத்தான் நயந்தவரென்றும், இதுவேயுடம்பாடாக மேலும் பிரிவு நிகழுமாகலின் இனி அவரைக் கூடலரிதென்னுங்கருத்தான் நல்கா மையென்றும், முன்னருடம்படுதலும் பின்னாற்றாது பசத்தலும் பிறர்செய்தனவல்ல வென்பான் பசந்தவென்பண்பென்றும், யான்செய்துகொண்ட துன்பத்தினை இனி யொருவர்க்குச் சொல்லலும் பழியாமென்னும் கருத்தால் யார்க்குரைக்கோவென்றும் கூறினள். (ச)

ககஆ. அவர்தந்தா ரென்னும் தகையா லிவர்தந்தென்
மேனிமே லூரும் பசப்பு. உ.

---

* கலி.

ஆற்றுளோக் கவன்றதோழிக்கு ஆற்றுவலென்பதுபடச் சொல்லியது.

இ - ன். யாரூற்றிபுனேரூகவும்,—பசப்பு - இப்பசப்புத்தான்,—தத்தாஸ் என்னும் தலையால் - என்னேபுண்டாக்கினுர் அவரென்னும் பெருமிதத்தான்,—என் மேனிமேல்இவர்த்து ஊரும்-என்மேனியை மேல்கொண்டுசெலுத்தாகின்றது.எ-து.

"குருதிகொப் புனிக்கும் வேலான் உத்தன்மா லிவர்த்து செல்லு" என்புழியும் இவர்தல் இப்பொருட்டாதலறிக, இஃது உரிமைபற்றி யூர்கின்றது, இதற்கு நீலவல் வேண்டாமென்பதாம். (உ)

கஅஉ. சாயலு நாணு மவர்கொண்டார் கைம்மாறு
நோயும் பசலையுந் தந்து. ஊ.

அழகுநாணுமழியாமல் நீயாற்றல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.

இ - ன். கைம்மாறு நோயும் பசலையும் தந்து - பிரிகின்றவரூன்றே அவ்விரண் டற்கும் தலைமாறுக இக்காமநோயினையும் பசலையையும் எனக்குத் தந்து,—சாயலும் நாணும் அவர் கொண்டார் - என்மேனியழகினையும் நாணினையும் அவர் கொண்டு போயினர். எ - து.

எதிர்நிரனிறை. அடக்குர்தோறும் மிகுதலான், நோய் நாணித்குத் தலைமாறு யிற்று. இனி அவர் தத்தாலல்லது அவையுளவாகலும் இலையிலவாகலுங் கூடாவென் பதாம். (ஊ)

கஅச. உள்ளுவன் மன்பா னுரைப்ப தவர்திறமாற்
கள்ளம் பிறவோ பசப்பு. ச.

பிரிகின்றவர் தெளிவித்த சொற்களையும் அவர் கற்றிறங்களையு மறிதியாகலின் நீட்டியாது வருவரென்றவழிச் சொல்லியது.

இ - ன். யான் உள்ளுவன்-அவர் சொற்களை யான் மனத்தானினையாகிற்பேன்,—உரைப்பது அவர்திறம் - வாக்காலுரைப்பதும் அவர் கற்றிறங்களையே;—பசப்புக் கள் ளம் - அவ்வனஞ் செய்யாகிற்கவும், பசப்பு வர்து கின்றது, இது வஞ்சனையாயிருக் தது. எ - று.

பிறவும் ஒவும் அசைகிலே. மெய் மற்றை மனவாக்குக்களின் வழித்தாகலின் அதன்கண்ணும் வாற்பாற்றன்றுயிருக்க வர்தமையின், இதன்செயல் கள்ளமாயிருக்க தெனத் தானுற்றுகின்றமை கூறியவாருயிற்று. (எ)

கஅடு. உவக்காணெம் காதலர் செல்வா ரிவக்காணென்
மேனி பசப்பூர் வது. டு.

காதலர் பிரிக்தணித்தாயிருக்கவும் ஆற்றுகின்றிலேயென்ற தோழிக்கு முன்னிகழ்க்தது கூறியது.

இ - ன். எங்காதலர் உவக்காண் செல்வார் - பண்டும் நங்காதலர் உங்கேசெல்வா ரான,—என்மேனி பசப்பூர்வது இவக்காண் - என்மேனி பசப்பூர்வதில்லேயன்றே! அப்பெற்றியது இன்று பிறிதொன்றுமோ! எ - து.

உ கேசரித்தாமணி, விமலையாரிலம்பகம், உ.

கூவற்கால் இவக்காலென்பன ஒட்டிநின்ற விடைச்சொற்கள். நேயவன்யாற் காலவண்மை கருதப்பட்டது. அவர்செலவும் பசப்பினதுவரவும் பகலிரவுகளை செலவும் வரவும்போல்வதறிந்துவைத்து அறியாதாய்போல நீசொல்லுகின்றதென்பதாம்.

கஉஅங. விளக்கற்றம் பார்க்கு மிருளேபோற் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு. ங.

உவமவுருபு.

இ - ன். விளக்கு அற்றம் பார்க்கும் இருளேபோல் - விளக்கினது மெலிவு பார்த்து நெருங்கிவரு மிருளேபோல—கொண்கன் முயக்கு அற்றம் பார்க்கும் பசப்பு - கொண்கன்முயக்கினது மெலிவுபார்த்து நெருங்கிவரும் இப்பசப்பு. எ - று.

பார்க்குமென்பன இலக்கணைச்சொல். முன் பிரியாதிருக்கவுந் தனக்கவனாசம் பார்த்துவரும் பசப்புப் பிரிவுபெற்றால் என்செய்யாதென்பதாம். (ங)

கஉஎ. புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தே னவ்வளவி
லள்ளிக்கொள் வற்றே பசப்பு. எ.

இதுவுமது.

இ - ன். புல்லிக்கிடந்தேன் புடைபெயர்ந்தேன் - முன்னொருஞான்று காதலரைப் புல்லிக்கிடந்த யான் அறியாது புடைபெயர்ந்தேன்;—அவ்வளவில் பசப்பு அள்ளிக்கொள்வற்று-அப்புடைபெயர்ந்தவளவிலே பசப்பு அள்ளிக்கொள்வதுபோல வந்து செறிந்தது. எ - று.

கொள்வதென்பது குறைந்துநின்றது. அள்ளிக்கொள்வது அள்ளிக்கொள்ளப்படும் பொருள். அப்புடைபெயர்ச்சி மாத்திரத்திற்கு அவ்வாரூயத இப்பிரிவின்கண் மாறு சொல்லவேண்டுமோ வென்பதாம். (எ)

கஉஅஅ. பசந்தா னிவனென்ப தல்லா லிவணீத்
துறந்தா ரவரென்பா ரில். அ.

நீயிங்ஙனம் பசக்கற்பாலையல்லையென்ற தோழியோடுபுலந்து சொல்லியது.

இ - ன். இவள் பசந்தான் என்பது அல்லால் - இவள் ஆற்றியிராது பசந்தாளென்று என்னைப் பழிகூறுவதல்லது—இவளை அவர் துறந்தார் என்பார் இல்-இவளையவர் துறந்துபோயினாரென்ற அவரைக் கூறுவாரொருவருமில்லை. எ - று.

என்பாரென வேறுபடுத்திக்கூறினான், தன்னையே நெருங்குதல்பற்றிப் புலக்கின்றமையின். (அ)

கஉஅக. பசக்கமற் பட்டாங்கென் மேனி நயப்பித்தார்
நன்னிலைய ராவ ரெனின். க.

இதுவுமது.

இ - ன். நயப்பித்தார் நன்னிலையராவர் எனின் - இப்பிரிவை யானேயுட்புகுந்து வகை சொல்லியவர் இன்று நின் கருத்தான் நல்ல நிலையினராவராயின்,—என்மேனி பட்டாங்கு பசக்க - என்மேனி பட்டதிற்படப் பசப்பதாக. உ - று.

பின்னிலைமாதல் என்னைக்கண்டே பிரிந்துபோகையாதல். பட்டாங்கு இவனின் ஆக்கம் விரித்தலைக்க. மூன்று இப்பிரிவின் கொலைமுயற்சியதென்னை இதற்குப் பயந்துப் பிரிந்தவர் தவறிலராகவேவேண்டுவது, என்னேனும் பசப்பும் பாதசெய்யி னென்னென்பதுபட நின்றவாயின், மன் ஒழியிசைக்கண்வந்தது (4)

கஉ0. பசப்பெனப் பேர்பெறுதல் என்றே நயப்பித்தார்
நல்காமை தூற்று மெனின். உ0.

தலைமகளாற்றுதற்பொருட்டுத் தோழி தலைமகனையிற்பழித்தவழி அவள் இயற்படமொழிந்தது.

இ - ள். நயப்பித்தார் நல்காமை தூற்றுமெனின்-அன்று தாம் குறையப்பித்துக் கூடினவர்க்கு இன்று நல்காமையை ஊட்டோர் தூற்றுவாயின்,—பசப்பெனப் பேர் பெறுதல் என்றே - பசப்புற்றுளென வேற்றுமையானன்றிப் பசப்புத்தானுயிருளென ஏற்றுமையாற்றுஞ்சொல்ல அப்பெயரைப் பெறுதல் எனக்குன்று. எ - று.

ஊட்டாரென்பது அவாய்நிலையான் வந்தது. இயற்பழித்தல்பொருது புலவின் றூராலின், இரஞ்சிக்குறிப்பாற் கூறினுள். அவரை அருளிலரென்னுது இன்னும் பசந்தாளிவளென்னையே யானுற்ற நெறியாவதென்பதாம். (40)

கஉ0 ம் அதி.—தனிப்படர்மிகுதி.

அது தனியாயிய படர்மிகுதியென விரியும். அஃதாவது படர்மிகுதி தலைவன் கனின்றித் தன்கண்ணதேயாதல் கூறுதல். அறமும் பொருளுநோக்கிப் பிரிதலின் அவன்கண் இல்லையாயிற்று. இது, பசப்புற்று வருந்தியாட்குரியதாகலின், பசப்புறு பருவரலின்பின் வைக்கப்பட்டது.

கஉக. தாம்வீழ்வார் தம்மிழப் பெற்றவர் பெற்றாரே
காமத்துக் காழில் கனி. க.

காதலரும் நின்னினுமாற்றாராய்க் கடிதின்வருவர் நீயவரோடு
பேரின்பநுகர்தியென்ற தோழிக்குச் சொல்லியது.

இ - ள். தாம் வீழ்வார் தம் வீழப் பெற்றவர் - தம்மாற்காதலிக்கப்படுங்கணவர் தம்மைக் காதலிக்கப்பெற்ற மகளிர்—பெற்றாரே காமத்துக் காழ்*இல் கனி - பெற்று ரன்றே காமநுகர்ச்சியென்னும்* பரலில்லாத கனியை. எ - று.

காமம் ஆகுபெயர். அத்த அல்வழிக்கண் வந்தது. முன்னை நல்வினை இல்வழிப் பெறப்படாமையிற் பெற்றாரென்றும், அவராற் றடையின்றி நுகரப்படுதலிற் காழில் கனியென்றும் கூறினுள். 'கற்றாரிற் பிரிந்தலையன்றிப் பின் வாராமையுமுடைமை யின்,' அக்கனி யாம் பெற்றிலமென்பதாயிற்று. (5)

கஉஉ. வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வா ரளிக்கு மளி. உ.

இதுவுமது.

இ - ள். வீழ்வார்க்கு வீழ்வார் அளிக்கும் அளி - அறமும் பொருளுநோக்கிப் பிரிந்தாற் றம்மையின்றியமையா மகளிர்க்கு ஆளையின்றியமையாக்கணவர் அள

* பால்—மிதை.

வதிந்த வந்த செய்புள்ளெல்லாம்—யாழ்வார்க்கு வாளம் பயந்தற்று; தன்னையே சொல்லி உயிர்வாழ்வார்க்கு வாளம் அவளிற்று பெய்தற்பொறும். எ - து

ஈங்கானல் எம்மை விழையாமையின் அத்தலைவியிலையாகலான், மழை வதிந்து அதனுள் யாழ்வார்போல இறந்துபடுதலே எமக்குள்ளதென்பதாம். (உ)

ககக. வீழுநர் வீழப் படுவார்க் கமையுமே
வாழுநம் என்னுஞ் செருக்கு. ட.

இதுவுமது.

இ - ள். வீழுநர் வீழப்படுவார்க்கு அமையுமே - தாம்விழைவுஞ் சிலரான் விழையப்படுமெனினும்; வாழுநம் என்னுஞ்செருக்கு - காதலர் பிரிந்தாராயினும் எம்மையினைந்து கடிதின்வருவர் வந்தால் யாமின்புற்று வாழ்துமென்றிருக்குந்தருக்கு. எ - து.

நாம் அவரான் விழப்படாமையின், எமக்கமைவது இறந்துபாடென்பதாம். (ட)

ககச. வீழப் படுவார் தெழீஇயிலர் தாம்வீழ்வார்
வீழப் படாஅ ரெனின். ச.

காதலரையியற்பழித்தலெஞ்சி அவரருளின்மை மறைத்த நீ
கடவுட் கற்பினையாகலிற் கற்புடைமகளிரால் கன்கு
மதிக்கப்படுதியென்ற தோழிக்குச் சொல்லியது.

இ - ள். வீழப்படுவார் - கற்புடைமகளிரால் கன்குமதிக்கப்படுவாரும்—தாம் வீழ்வார் வீழப்படாரெனிற் தெழீஇயிலர் - தாம் விரும்புஞ்சிலரான் விரும்பப்படாராயிற் நீவினையாட்டியர். எ - து.

நெற்புமை விகாரத்தாற்றொக்கது. தெழீஇயின்மை கல்வினையின்மை; அஃது அருத்தாபத்தியாற் நீவினையுடைமையாயிற்று. நீவினையுடையேற்கு அச்சன்குமதிப்பாற் பயனில்லையென்பதாம். (ச)

ககஎ. காள்காதல் கொண்டார் எமக்கெவன் செய்பவோ
தாள்காதல் கொள்ளாக் கடை. ஏ.

அவர்மேற்காதலுடைமையின் அவர்கருத்தறிக்தாற்றினு
மென்ற தோழிக்குச் சொல்லியது.

இ - ள். எம் காதல் கொண்டார் எமக்கு எவன் செய்ப - எம்மாற்காதல்செய்யப்பட்டவர் எமக்கென்னின்பத்தைச் செய்வர்,—தாம் காதல் கொள்ளாக்கடை - அவரே தாமும் எங்கட் காதல் செய்யாவழி. எ - து.

எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. அக்காதலுடைமையால் யாம் பெற்றது துன்பமே யென்பதாம். (ஏ)

ககஅ. ஒருதலையா வின்னுயி ரைம்மைப் போல
விருதலை யாறு மினிது. க.

இதுவுமது.

இ - ள். காமம்ஒருதலையான் இன்றுற - மனம் ஒடுவதொன்று மிருதலையிலும் வேட்கை ஒருதலைக்கண்ணேயாயின் அஃதின்றுற;—காப்போல இருதலையாலும் இனிது - காமமானது பாரம்போல இருதலைக்கண்ணுமொப்பின், அஃதினிது. எ - து.

மூன்றனுருபுகள் எழன்பொருண்மைக்கண் வந்தன. ஈ ஏழாம்பெயர். என் னாம் வென்றாய வேட்கை அவர்மாட்டேமுண்டாயின், யானிவ்வாறு தன்பமுழுத்தல் உறுமோ வென்பதாம். (ச)

கஉஉ. பருவரலும் பைதலும் காணுன்கொல் காம
ஒருவர்க ணின்றொழுகு வான். எ.

இதுவுமது.

இ - ள். ஒருவர்கண் நின்று ஒழுகுவான் காமன் - காமநுகர்தற்குரிய விருவரிடத்தும் ஒப்பநிற்றலொழித்து ஒருவரிடத்தே நின்று பொருந்தி காமக்கடவுள்—பருவரலும் பைதலும் காணுன்கொல் - அவ்விடத்துப் பசப்பாலுய பருவரலும் படர்மிகுதியும் அறியான்கொலோ? எ - து.

விழைவும் வெறுப்புமின்றி எல்லார்கண்ணு நிகழ்தனவறிதற்குரிய கடவுளும் என்கண் வேறுபட்டான், இனியானுய்யுமாறென்னே யென்பதாம். (எ)

கஉஅ. வீழ்வாரி னின்சொற் பெருஅ தலைத்து
வாழ்வாரின் வன்கணு நில். அ.

தலைமகன்றாதுவராக்காணுது சொல்லியது.

இ - ள். வீழ்வாரின் இன்சொற் பெருது வாழ்வாரின் - தம்மால் விரும்பப்படுதல் காதலர்நிறத்தினின்றும் ஒரின்சொல்லளவும்பெருதே பிரிவாற்றி உயிர்வாழ்கின்ற மனிர்போல—வன்கணுர் உலகத்து இல் - வன்கண்மையுடையார் இவ்வுலகத்தில்லை. எ - து.

காதலர்நிறத்துச்சொல் யாதானும் எனக்கினிதென்னும் கருத்தால், இன்சொ லென்முள். இழிவுசெறப்புமை விகாரத்தாற்றொக்கது. யான் வன்கண்ணேமுலகின் அதுவும் பெருத உயிர்வாழாகின்றே னென்பதாம். (அ)

கஉக. நசைஇயார் நல்கா ரெனினு மவர்மாட்
டிசையு மினிய செவிக்கு. க.

இதுவுமது.

இ - ள். நசைஇயார் நல்கார் எனினும் - என்னுல் எச்சப்பட்ட காதலர் என்மாட் டன்பிலரேயாயினும்,—அவர்மாட்டு இசையும் செவிக்கு இனிய-அவர் நிறத்தியாதா னுமோர்சொல்லும் என்செவிக்கினியவாம். எ - து.

இழிவுசெறப்புமை, அவர் வாரலென்னுஞ் சொல்லாயினும் அமையுமென்பது பட்டின்றது. அதுவும் பெற்றிலனென்பதாம். (க)

கஉ0. உருஅச் குதலோ புரைப்பாய் கடலைச்
செறுஅயர் வாழிய நெஞ்சு. க0.

தலைமகன் மாதவரப்பெறுது தான்மாதவிடக்கருதியாள்
நெஞ்சோடு சொல்லியது.

இ - ன். உரைக்கு உறசோய் உரைப்பாய் நெஞ்ச - நின்னோடொத்தார்க்கு நின் றுறசோல்லுக்காகவுற்ற நெஞ்சே,—கடலைச் செறும் - நீர்தருவதாயினும் அரிதாய அதனைவெறுத்து, நினக்குத்துயரஞ்செய்கின்றகடலைத் தூர்க்கமுயல்வதாகவு மஃ தெளிது. ஈ - று.

உரைக்கலுற்றது அளவிறந்த சோயாகலானும் கேட்பார் உறவிலராகலானும் அது முடிவதொன்றன்று, முடிந்தாலும் பயனில்லையென்பது கருதாது, முயலாதிருரு மென்னுங்குறிப்பான், வாழியவென்றான். (எ0)

கூடகம் அதி.—நினைந்தவர் புலம்பல்.

இஃதாவது முன்கூடிய ஞான்றையின்பத்தினை நினைந்து தலைமகடனிமை யெய்தலும், பாசறைக்கட்டலைமகன்றனிமையெய்தலுமாம். இவ்வாறு இருவர்க்கும் பொதுவாதல்பற்றிப் பன்மைப்பாலாற் கூறப்பட்டது. இது, படர்மிகுதி தன்கண்ணாது நினைந்த தலைமகட்கு முரித்தாகலின், அவ்வியைபுபற்றித் தனிப்படர்மிகுதியின் பின் வைக்கப்பட்டது.

கூ0க. உள்ளினுஞ் சோப் பெருமழிழ் செய்தலாற்
கள்ளினுங் காம மினிது. க.

தூதாய்க்சென்ற பாங்கனுக்குத் தலைமகன் சோல்லியது.

இ - ன். உள்ளினும் சோப் பெருமழிழ் செய்தலால் - முன்கூடியஞான்றையின் பத்தினைப் பிரிந்தழி நினைந்தாலும் அதுபொழுது பெற்றாற்போல சீங்காத மிக்க மழிழ்ச்சியைத் தருதலால்,—கள்ளினும் காமம் இனிது - உண்டழியல்லது மழிழ்ச்சி செய்யாத கள்ளினுங் காமம் இன்பம்பயத்தலுடைத்து. எ - று.

தன்றனிமையுந் தலைமகனே மறவாமையும் கூறியவாறு. (க)

கூ0உ. எனைத்தொன் றினிதேகாண் காமந்தாம் வீழ்வார்
நினைப்ப வருவதொன் றில். உ.

இதுவுமது.

இ - ன். தாம் வீழ்வார் நினைப்ப வருவது ஒன்று இல் - தம்மால் விரும்பப்படு வாரைப் பிரிவின்கணினைந்தால் அந்நினைவார்க்கு அப்பிரிவரன் வருவதோர்துன்ப மில்லையாம்;—காமம் எனைத்து இனிது ஒன்றோரன்-அதனுற்காமம் எத்தினையேனு மினிதொன்றே காண். எ - று.

புணர்ச்சழிழும் பிரிச்சழிழும் ஒப்பவினிதென்பான், எனைத்தினிதென்றான். இப்பும்மை விகாரத்தாற்றொக்கது. தானுற்றியவாறு கூறியவாறு. (க)

கூ0ஈ. நினைப்பவர் போன்று நினையார்தொ டும்மல்,
நினைப்பது போன்று கெடும். ஈ.

தலைமகனை நினைந்து வருந்துகின்ற தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

இ - ள். தும்மல் நினைப்பதுபோன்ற கேடு - எனக்குத்தும்மல் எழுவது போன்று தோன்றிக் கெடுகின்றது;—நினைப்பவர்போன்று நினையார்கொல் - அதனுற் காதலர் என்னை நினைப்பார்போன்று நினையாராகல்வேண்டும். எ - று.

நினைத்தல் அரும்புதல். செய்ஞ்ஞக்கண்ணாய கேளிர் நினைத்தழி அச்சினைப்பட்டார்க்குத் தும்மலுண்டுமென்னுமுலகியல்பற்றித் தலைமகளெடுத்துக்கொண்ட வினை முடிவதுபோன்று முடியாமையுணர்ந்தாள் சொல்லியதாயிற்று. (உ)

கூடுஉ. யாமு முளேங்கொ லவர்நெஞ்சத் தெந்நெஞ்சத்
தோஒ வுளரே பவர்.

இதுவுமது.

இ - ள். எந் நெஞ்சத்து அவர் ஒ உளரே - எம்முடைய நெஞ்சத்து அவர் எப்பொழுது முளரேயாயிராகின்றார்;—அவர் நெஞ்சத்து யாமும் உளேங்கொல் - அவ்வகையே அவருடைய நெஞ்சத்துப் யாமுமுளமாதுமோ, ஆகேமோ! எ - று.

ஓகாரவிடைச்சொல் ஈண்டிடைவிடாமையுணர்த்திநின்றது. உளமாயும் வினை முடியாமையின் வாராராயினாரோ, அது முடிந்தும் இலமாகலின் வாராராயினாரோ வென்பது கருத்து. (ஊ)

கூடுஙி. தந்நெஞ்சத் தெம்மைக் கடிகொண்டார் நாணர்கொ
லெந்நெஞ்சத் தோவா வரல். ஙி.

இதுவுமது.

இ - ள். தந்நெஞ்சத்து எம்மைக் கடிகொண்டார் - தம்முடைய நெஞ்சின் கண்ணே யாஞ்செல்லாமல் எம்மைக் காவல்கொண்ட காதலர்—எந்நெஞ்சத்து ஓவா வரல் நாணர்கொல் - தாமெம்முடைய நெஞ்சின்கண் ஒழியாது வருதலே நாணர் கொல்லோ! எ - று.

ஒருவரைத் தங்கண் வருதற்கு ஒருகாலுமுடம்படாத தாமவர்கட் பலகாலுஞ் சேறல் நாணுடையார்செயலன்மையின், நாணர்கொலென்றாள். (எ)

கூடுஞ. மற்றியா னென்னுளேன் மன்னே வவரொடியா
னுற்றநா ளுள்ள வுளேன். சு.

அவரோடு புணர்ந்தநான்றையின்பத்தை நினைந்து இறந்துபாடெய்தா நின்றாய் அதுமறத்தல்வேண்டுமென்றாட்குச் சொல்லியது.

இ - ள். யான் அவரொடு உற்ற நாள் உள்ள உளேன் - யான் அவரோடு புணர்ச்சிநான்றையின்பத்தை நினைதலான் இத்தன்ப வெள்ளத்தும் உயிர்வாழ்கின்றேன்;—மற்று யான் என்னுளேன் - அதுவின்றாயின், வேறெத்தால் உயிர்வாழ்வேன்! எ - று.

நாள் ஆருயிர். உயிர்வாழ்தற்கு வேறுமுரு, அவைபெற்றிலேனென்பதுபடநின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. அன்ப அன்றாதலருதல், தன்றாத

சேறன்முதலாயின. அவையாவுமின்மையின், இதுவல்லது எனக்குப் பற்றுக்கோடில்லையென்பது கருத்து. (உ)

கூ௦எ. மறப்பி னெவனுவன் மற்கொன் மறப்பறியே
னுள்ளினு முள்ளஞ் சுடும். எ.

இருவருமது.

இ - ள். மறப்பு அறியேன் உள்ளினும் உள்ளம் சுடும் - அவ்வின்பத்தை மறத்தலறியேனும் இன்னுள்ளாகிற்கவும், பிரிவு என்னுள்ளத்தைச் சுடாகின்றது,—மறப்பின் எவனுவன் - அங்ஙனம் பிரிவாற்றுத யான் மறந்தால் இறந்துபடாது உளேனுவது எத்தால்! எ - று.

மறக்கப்படுவது அதிகாரத்தான்வந்தது. மன் ஈண்டும் அதுபடுகின்று ஒழியிசையாயிற்று. கொல் அசைநிலை. (எ)

கூ௦அ. எனைத்து நினைப்பினுங் காயா ரினைத்தன்றே
காதலர் செய்யுஞ் சிறப்பு. அ.

இத்துன்பமறிந்துவந்து காதலர் நினக்கின்பஞ்
செய்வரென்றருட்குச் சொல்லியது.

இ - ள். எனைத்து நினைப்பினும் காயார் - தம்மை யானெத்தனையும் மிகநினைந்தாலும் அதற்கு வெகுளார்;—காதலர் செய்யும் சிறப்பு அனைத்து அன்றே - காதலர் எனக்குச் செய்யுமின்பமாவது அவ்வளவன்றே! எ - று.

வெகுளாமை அதற்குடன்பட்டு நெஞ்சின்கணிற்றல். தனக்கு அவ்வின்பத்திற் றெந்தினின்மையின், அதனைச் சிறப்பென்றாள். காதலர் நம்மாட்டருளென்றும், செய்யுங்ணமென்றும் பாடமோதுவாருமுளர். தோழி கூறியவதனைக் குறிப்பானிகழ்ந்து கூறியவாறு. (அ)

கூ௦கூ. விளியுமெ னின்னுயிர் வேறல்ல மெண்பா
ரளியின்மை யாற்ற நினைந்து. கூ.

தலைமகன்றாதுவரக் காணுது வருந்துகின்றாள் வற்புறுத்துந்
தோழிக்குச் சொல்லியது.

இ - ள். வேறு அல்லம் என்பார் அளியின்மை ஆற்ற நினைந்து - முன்பெல்லாம் நாமிருவரும் வேறல்லமென்று சொல்லுவார தளியின்மையை மிகவுநினைந்து,—என் இன்னுயிர் விளியும் - எனதினியவுயிர் கழியாகின்றது. எ - று.

அளியின்மை பின்வருவாகலுமாய்ப்பிரிதலும், பிரிந்துவாராமையும், ஆண்டின் றழித் தருவிடாமையும் முதலாயின. பிரிவாற்றல்வேண்டுமென வற்புறுத்தாட்கு என்னுயிர் கழிகின்றது பிரிவிற்கன்று அவன்பின்மைக்கென எதிரழித்துகூறிய வாறு. (உ)

கூ௦ஏ. விடாஅது சென்றாரைக் கண்ணினும் காணப்
படாஅதி வாழி மதி. ஏ.

வன்புறையேதிரழிந்தாள் காமமிக்கசுழிபடராற் சொல்லியது.

இ - ள். மதி - மதியே,—விடாது சென்றுசுரைக் கண்ணினுல் காணப் படாநி - என்னெஞ்சின் இடைவிடாதிருந்தே விட்டுப்போயினுரை யானென்கண்ணாலாவது மினும் எதிர்ப்படும்வகை நீபடாதொழிவாயாக. எ - று.

கண்ணாலாவதெதிர்ப்படுதலாவது மதி இருவராலுசோக்கப்படுதலின் இருவர் கண்ணும் அதன்கண்ணே சேர்தல். முதலொடு சினைக்கொற்றுமையுண்மையிற் சென்றுரைக்காணவென்றும், குறையுறுவின்றுளாகலின் வாழியென்றுங்கூறினுள். இனிப் படாதென்பது பாடமாயின், கனவிடைக் கண்ணினுற்காணுமாறு மதிபடுகின்றதில்லையென அதனுற்றியிலெழுது வருத்தின்றுள் கூற்றுக்கு. இப்பொருட்கு வாழியென்பது அசைநிலை. (கo)

கஉஉ ம் அதி.—கனவுநிலையுரைத்தல்.

அஃதாவது தலைமகள் தான்கண்ட கனவினது நிலைமையைத் தோழிக்குச் சொல்லுதல். அக்கனவு கனவின்கணினவுமிருதியாற் கண்டதாகலின் இது நினைந்த வர்புலம்பலின்பின் வைக்கப்பட்டது.

கஉகக காதலர் தூதொடு வந்த கனவினுக்
யாதுசெப் வேன்கொல் விருந்து. க.

தலைமகன்றாதுவரக்கண்டாள் சொல்லியது.

இ - ள். காதலர் தூதொடு வந்த கனவினுக்கு - யான் வருந்துன்றதிற்கு அதுதீரக் காதலர் விடுத்த தூதினைக்கொண்டு என் மாட்டுவந்த கனவினுக்கு—விருந்து யாது செய்வேன் - யான் விருந்தாக யாதனைச்செய்வேன்! எ - று.

விருந்தென்றது விருந்திற்குச்செய்யுமுபசாரத்தினை. அது கனவிற்கொன்று காணுமையின், யாதுசெய்வேனென்றுள். (க)

கஉகஉ. கபலுண்கண் யானிரப்பத் தஞ்சிற் கலந்தார்க்
குயலுண்மை சாற்றுவேன் மன். உ.

தூதுவிடக்கருதியாள் சொல்லியது

இ - ள். கயல் உண்கண் யான் இரப்பத் தஞ்சின் - தஞ்சாது வருந்துன்ற என் கயல்போலு முண்கண்கள் யானிரந்தாற்றஞ்சுமாயின்,—கலந்தார்க்கு உயல் உண்மை சாற்றுவேன் - கனவிடைக் காதலரைக் காண்பேன், கண்டால் அவர்க்கியானுற்றியுளேனுயதன்மையை யானே விரியச்சொல்வேன். எ - று.

கயலுண்கணென்றுள், கழிந்தகாலத்திற்கெனில். உயல் காமநோய்க்குத் தப்புதல். தூதர்க்குச்சொல்லாது யாமடக்குவனவும் சொல்லுவனவற்றுள்ளுஞ் சுருக்குவனவற் றின்பரப்புந் தோன்றச்சொல்லுவேனென்னுங் கருத்தாற் சாற்றுவேனென்றுள். இனி அவையுர்தஞ்சா சாற்றலுங்கூடாதென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. முன்னுங்கண்டாள் கூற்றுகலின், கனவுநிலையுரைத்தலாயிற்று. (உ)

கஉகஉ. கனவினு னல்கா தவரைக் கனவினும்
காண்டலி னுண்டென் னுயிர். ஈ.

ஆற்றாளோனக்கவன்குட்கு ஆற்றுவலென்பதுபட்சொல்லியது.

இ - ன். நனவினுன் நல்காதவரை - கனவின்கண் வந்து தலையளிசெய்யாதாரை—கனவினுற் காண்டலின் என் உயிர் உண்டு - யான் கனவின்கட்கண்டகாட்சியானே என்னுயிருண்டாகாநின்றது. எ - று.

மூன்றனுருபுகள் ஏழன்பொருண்மைக்கண் வந்தன. அக்காட்சியானே யாஞ்சிறிதுளேனென்றேன. நீ கவலல்வேண்டாவென்பதாம். (கூ)

கடகசு. கனவினு னுண்டாகுங் காம நனவினு
னல்காரை நாடித் தரற்கு. சு.

இதுவுமது.

இ - ள். நனவினுன் நல்காரை நாடித் தரற்கு - நனவின்கண்வந்து தலையளி செய்யாதாரை அவர்சென்றழி நாடிக்கொண்டுவந்து கனவு தருதலான்,—கனவினுற் காமம் உண்டாகும் - அக்கனவின்கண்ணே எனக்கின்பமுண்டாகாநின்றது. எ - று.

காமம் ஆகுபெயர். நான்காவது மூன்றன்பொருண்மைக்கண்வந்தது. இயல்பான் நல்காதவரை அவர்சென்ற தேயமறிந்துசென்று கொண்டுவந்துதந்து நல்குவித்த கனவால் யானுற்றவலென்பதாம். (சு)

கடகரு. நனவினுற் கண்டதூஉ மாங்கே கனவுந்தான்
கண்ட பொழுதே யினிது. ரு.

இதுவுமது.

இ - ன். நனவினுற் கண்டதூஉம் (இனிது) ஆங்கே - முன்னன்னவின்கண் அவரைக்கண்டு நுகர்ந்தவின்பந்தானுமினிதாயிற்று அப்பொழுதே,—கனவுந்தான்கண்ட பொழுதே இனிது-இன்று கனவின்கட்கண்டு நுகர்ந்தவின்பமும் அக்கண்டபொழுதே யினிதாயிற்று, அதனுன் எனக்கிரண்டுமொத்தன. எ - று.

இனிதென்பது முன்னுங்கூட்டப்பட்டது. கனவு ஆகுபெயர். முன்னும் யான் பெற்றதிவ்வனவே, இன்னும் அதுகொண்டாற்றுவலென்பதாம். (ரு)

கடகக. நனவென வொன்றில்லை யாயிற் கனவினுற்
காதலர் நீங்கலர் மன். க.

இதுவுமது.

இ - ன். நனவென ஒன்று இல்லையாயின் - நனவென்றுசொல்லப்படுகின்ற ஒரு பாலியில்லையாயின்,—கனவினுற் காதலர் நீங்கலர் - கனவின்கண் வந்துகூடிய காதலர் என்னைப் பிரியார். எ - று.

ஒன்றென்பது அதன்கொடுமைவிளக்கி நின்றது. அஃது இடையேபுகுந்து கனவைப்போக்கி அவரைப் பிரிவித்ததென்பதுபட நிற்றலையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. கனவிற்பெற்றாற்றுகின்றமை கூறியவாறு. (க)

கடகள. நனவினு னல்காக் கொடியார் கனவினு
னென்னெம்மைப் பீழிப் பது எ,

விழித்துழிக் காணாயினுள் கனவிற்கூட்டினுள்ளு ஆற்றாளாய்ச் சோல்லியது.

இ - ள். கனவினுள் கல்காக் கொடியார் - ஒருஞான்றும் கனவின்கண் வந்து தலையளிசெய்யாத கொடியவர்—கனவினுள் எம்மைப் பிழிப்பது என் - நாடோறுங் கனவின்கண்வந்து நம்மை வருத்துவது எவ்வியைபுபற்றி. எ - று.

பிரிதலும் பின்னிலைத்துவராமையுரோக்கிக் கொடியாரென்றும், கனவிற் றேண்மேலராய் விழித்துழிக் காத்தலின் அதனாலுள் தன்பமாகாதென்பாள் பீழிப்பதென்றுங்கூறினுள். கனவினில்லது கனவினுமில்லையென்பர், அதனண்டில மென்பதாம். (எ)

கஉகஅ. துஞ்சுங்காற் றேண்மேல ராகி விழிக்குங்கா
னெஞ்சத்த ராவர் விரைந்து. அ.

தானற்றதற்பொருட்டுத் தலைமகனையியற்பழித்தாட்கு இயற்பட மொழிந்தது.

இ - ள். துஞ்சுங்கால் தோண்மேலராகி - என்னெஞ்சுவிடாதுறைகின்ற காதலர் யான்றுஞ்சும்பொழுது வந்து என்றேண்மேலராய்—விழிக்குங்கால் விரைந்து நெஞ்சத்தாவர் - பின் விழிக்கும்பொழுது விரைந்து பழைய நெஞ்சின்கண்ணாராவர். எ - று.

கலவி விட்டு மறைபுங் கமைபற்றி விரைந்தென்றுள். ஒருகாலும் என்னினீங்கியறியாதாரை நீ நோவற்பாலையல்லையென்பதாம். (அ)

கஉகக. கனவினு னல்காரை நோவர் கனவினுற்
காதலர்க் காணு தவர். க.

இதுவுமது.

இ - ள். கனவினுற் காதலர்க் காணுதவர் - தமக்கொருகாதலரின்மையின் அவரைக் கனவிற்கண்டறியாத மகளிர்—கனவினுன் னல்காரை நோவர் - தாமறிய கனவின்கண் வந்து நல்காத நங்காதலரை அன்பிலரென நோவாகிற்பர். எ - று.

இயற்பழித்ததுபொருது புலக்கின்றுளாகலின், அயன்மைதோன்றக் கூறினுள். தமக்குக்காதலருளராய் அவரைக்கனவிற் கண்டறிவாராயின் நங்காதலர் கனவின்கணுற்றி நல்குதலறிந்து நோவாரென்பதாம். (க)

கஉஉ0. கனவினு னன்றீத்தா ரென்பர் கனவினுற்
காணுர்கொ லிவ்வூ ரவர். க0.

இதுவுமது.

இ - ள். இவ்வூரவர் கனவினுன் னன்றீத்தார் என்பர் - இவ்வூரின்மகளிர் கனவின்கண் நம்மை நீத்தாரென்று நங்காதலரைக்கொலைகூறுகிற்பர்,—கனவினுற் காணுர் கொல் - அவர் கனவின்கண் நீங்காதுவருதல் கண்டறியாரோ! எ - று.

என்னெஞ் தன்னிடை வேற்றுமையின்றியின் யான்கண்டது தானுங்கண்டமையும், அதனாலது அவரைக்கொலை கூறின்றமையின் அயலாரேயாமென்றுங் கருத்தால், இவ்வூரவரென்றுள். (க0)

அஃதாவது மாலைப்பொழுது வந்துழி அதனைக்கண்டு தலைமகளிரங்குதல். கனமுந்தருத வினையில்லே * யென்பதுபற்றிப் பகற்பொழுதாற்றியிருக்தாட்கு உரிய ரல்லின், இது கனவுநிலையுரைத்தலின்பின் வைக்கப்பட்டது.

கூஉக. மாலையோ வல்லே மணந்தா ருயிருண்ணும்
வேலசீ வாழி பொழுது. க.

பொழுதோடு புலந்து சொல்லியது.

இ - ள். பொழுது - பொழுதே,—நீ மாலையோ அல்லே - நீமுன்னுள்களின் வந்த மாலையோவெனின், அல்லே;—மணந்தார் உயிர் உண்ணும் வேலே - இருந்த வாற்றான் அந்நாட் காதலரை மணந்த மகளிருயிரையுண்ணும் இறுதிக்காலமாயிருந் தாய். எ - று.

முன்னுள் கூடியிருந்தாள். அந்நாண்மணந்தாரெனவே, பின் பிரிந்தாராதல் பெறுதும். வாழியென்பதுகுறிப்புச்சொல்; " வாலிழை மகளிருயிர்ப்பொதி யவிழ்க் குங்காலே † " என்றுற்போல ஈண்டுப் பொதுமையாற் கூறப்பட்டது. வேலையென்பது ஆருபெயர். வேலையென்பதற்கு வேலாயிருந்தாயென்பாருமுளர். (க)

கூஉஉ. புன்கண்ணே வாழி மருண்மாலை யெங்கேள்போல்
வன்கண்ணை தோநின் றுணை. உ.

தன்னுட்கையாற்றை அதன்மேலிட்டுச் சொல்லியது.

இ - ள். மருண்மாலை - மயங்கிய மாலாய்,—புன்கண்ணே - நீயுமெம்போலப் புன் கணுடையையாயிருந்தாய்,—நின்றுணை எங்கேள்போல் வன்கண்ணதோ - நின்றுணை யும் எந்துணைபோல வன்கண்மையுடையதோ, கூறுவாயாக. எ - று.

மயங்குதல் பகலுமிரவும் தம்முள்ளே மிரவுதல்; கலங்குதலுந்தோன்றநின்றது. புன்கண் ஒளியிழத்தல்; அதுபற்றித் துணையுமுண்டாக்கிக் கூறினுள். எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. எமக்குத் துன்பஞ்செய்தாய், நீயுமின்பமுற்றிலையென்னுங் குறிப்பால் வாழியென்றாள். (உ)

கூஉஉங. பனியரும்பிப் பைதல்கொண் மாலை தனியரும்பித்
துன்பம் வளர வரும். ங.

ஆற்றல்வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.

இ - ள். பனி அரும்பிப் பைதல்கொள் மாலை - காதலர் கூடியகாலெல்லாம் என் முன் நடுக்கமெய்திப் பசந்துவந்த மாலை—தனி அரும்பித் துன்பம் வளர வரும்-இர் நாள் எனக்கிறந்துபாடு வந்துதோன்றி அதற்குளதாந்துன்பம் ஒருகாலேக்கொருகால் மிக வாராகின்றது. எ - று.

குளிர்ச்சி தோன்ற மயங்கிவருமாலையென்னுஞ் செம்பொருள் இக்குறிப்புணர் கின்றது. தனி உயிர்வாழ்தற்கண்வெறுப்பு, அதனால் யானுற்றுமாறென்னென்பது குறிப்பெச்சம். (ங)

கூஉஉச. காதலரில்வழி மாலை கொலைக்களத்
தேதிலர் போல வரும். ச.

---

* பழமொழி, உ. † கலி, நெய்தல், உ.

இதுவுமது.

இ - ள். மாலை - காதலருள்ளபொழுதெல்லாம் என்னுயிர்தளிப்ப வந்தமாலை,—காதலர் இல்லழி - அவரில்லாத இப்பொழுது—கொலைக்களத்து எதிலர்போலவரும்-அஃதொழித்துநிற்றலேயன்றிக் கொல்லுங்களரியிற்கொலைஞர் வருமாறுபோல அவ் வுயிரைக்கோடற்கு வாராநின்றது. எ - று.

எதிலர் அருள்யாதுமில்லார். முன்னெல்லாம் எனக்கு நட்பாய் இன்பஞ்செய்து வந்தபொழுதும் இன்று என்மேற்பகையாய்த் துன்பஞ்செய்து வாராநின்றது, இனி யானுற்றுமாறென்னே யென்பதாம். (ச)

கூடூஉ. காலைக்குச் செய்தான் றென்கொ லெவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை. டு.

இதுவுமது.

இ - ள். காலையும், மாலையும், அவர் கூடியஞான்றுபோலாது இஞ்ஞான்று வேறுபட்டு வாராநின்றன; அவற்றுள்,—யான் காலைக்குச் செய்தானன்று என் - யான் காலைக்குச் செய்தவுபகாரம் யாது?—மாலைக்குச் செய்த பகை எவன் - மாலைக்குச் செய்த அபகாரம் யாது? எ - று.

கூடியஞான்று பிரிவதென்றஞ்சப்பண்ணிய காலை அஃதொழித்து இஞ்ஞான்று கல்லுல்வெள்ளத்திற்குக் கரையாய் வாராநின்றதென்னுங்கருத்தால் 'றன்றென்கொ லென்றும், கூடியஞான்று இன்பஞ்செய்துவந்த மாலை அஃதொழித்து இஞ்ஞான்று அளவிறன்பஞ்செய்யாநின்றதென்னுங் கருத்தாற் பகையெவன்கொலென்றும் கூறினாள். பகை ஆகுபெயர். தன்னெடுத்த காலைபோலாது மாலை தன்கொடுமையாற் றுன்பஞ் செய்யாநின்றதென்பதாம். (இ)

கூடூஉ. மாலைநோய் செய்தன் மணந்தா ரகலாத
காலை யறிந்த திலேன். சு.

இன்று இன்னையாகின்ற நீ அன்று அவர்பிரிவிற்குடம்பட்ட
தென்னையென்றுட்குச் சொல்லியது.

இ - ள். மாலை நோய் செய்தல் - முன்னெல்லாம் எனக்கு நட்பாய் இன்பஞ் செய்துபோந்த மாலை இன்று பகையாய்த் துன்பஞ்செய்தலை—மணந்தார் அகலாத காலை அறிந்தது இலேன் - காதலர் பிரிதற்குமுன்னே அறியப்பெற்றிலேன்! எ - று.

இவ்வனம் வேறுபடுதலறிந்திலேன், அறிந்தேனுயின் அவர் பிரிவிற்குடம்படே னென்பதாம். (ஈ)

கூடூஉ. காலை பரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய். எ.

மாலைப்பொழுதின்கண் இன்னையாதற்குக் காரண
மென்னையென்றுட்குச் சொல்லியது.

இ - ள். இந்நோய் - இக்காமநோயாகிய பூ—காலை அரும்பி - காலைப்பொழுதின் கணரும்பி,—பகல் எல்லாம் போது ஆகி - பகற்பொழுதெல்லாம் பேரரும்பாய் முதிர்ந்து,—மாலை மலரும் - மாலைப்பொழுதின்கண் மலராநிற்கும். எ - று.

தலைமகற்பொழுதாகலிற் கனவின்கட்கூட்டினீங்கற்றறல்பற்றிக் காலை யரும்பியென்றும், பின் பொழுது செல்செல அதுமறத்து பிரிவுள்ளியாற்றாளாதல் பற்றிப் பகலெல்லாம் போதாதியென்றும், தத்தங்கானையபுள்ளி வந்துசேரும் வியங் குனையும் மக்கானைபுக்கண்டு தான் அக்காலத்தினுள்ளர்த்தலின்பனிவீங்காற்றுமையிருளி பற்றி மாலைமலருமென்றல் கூறினாள். பூப்போல இக்கோய் காலவயத்தாகாகின்ற தென்பது உருவகத்தாற்பெறப்பட்டது. ஏகதேசவுருவகம். (எ)

கடவுள். அழல்போலு மாலைக்குத் தாதாகி பாயன்
குழல்போலுங் கொல்லும் படை. அ.

இதுவுமது.

இ - ள். ஆயன் குழல் - முன்னெல்லாம் இனியதாய்ப்போந்த ஆயன்குழல்—அழல்போலும் மாலைக்குத் தாதாகி - இதுபொழுது அழல்போலச் சுவேதாய மாலைக் குத் தாதமாய்,—கொல்லும் படை அது - வர்தென்னைக்கொல்வுழிக் கொல்லும் படையுமாயிற்று. எ - து.

பின்னின்ற போலுமென்பது உரையசை. முன்னரே வாவுணர்த்தலிற் றாதா யிற்று, கோறற்கருவியாகலிற் படையாயிற்று. தானே சுடவல்லமாலை இத்தனையும் பெற்றால் என்செய்யாதென்பதாம். (அ)

கடவுள். பதிமருண்டு பைத லுழக்கு மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து. கூ.

இதுவுமது.

இ - ள். இதற்கு முன்னெல்லாம் யானேமயங்கி சோபுழற்றேன்,—மதி மருண்டு மாலை படர்தரும் போழ்து - இனிக் கண்டாரும் மதிமருளும்வகை மாலை வரும் பொழுது—பதி மருண்டு பைதல் உழக்கும் - இப்பதியெல்லாம் மயங்கி சோபுழக் கும். எ - து.

மதிமருளவென்பது மதிமருண்டெனத் திரிக்கநின்றது. கூற்றமாகக் கருதிக் கூறினாளாகலின் மாலைபடர்தரும் போழ்தென்றாள். யானிறத்து பகலென்பதாம். மாலை மயங்கிவரும் போழ்து என் பதி நிலைகலங்கி சோபுழக்குமென்றுரைப் பாருமுளர். (கூ)

கடவுள். பொருண்மாலை யாளரை யுள்ளி மருண்மாலை
மாயுமென் மாயா வுயிர். கo.

இதுவுமது.

இ - ள். மாயா என் உயிர் - காதலர்பிரிவைப் பொறுத்து இறந்தபடாதிருந்த என்னுயிர்—பொருண்மாலையாளரை உள்ளி மருண்மாலை மாயும் - இன்று பொருளி யல்பே தமக்கியல்பாகவுடையவரை நினைந்து, இம்மயங்குமாலைக்கண்ணே இறந்த படா நின்றது. எ - து.

குறித்தபருவம் கழியவும் பொருண்முடிவு சோக்கி வாராமையினும் சொல்வேறு படாமையாகிய தம்மியல்பொழிந்தவர் அப்பொருளியல்பே தம்மியல்பாயினர், கால மிதுவாயிற்று, இனி நீ சொல்லுகின்றவாற்றும் புனரில்லையென்பதாம். (கo)

கூசு ம் அதி.—உறுப்புநலனழிதல்.

அஃதாவது தலைமகடன் கண்ணும், தோளும், தநது முதலாய அவயவங்கள் தம்மழகழிதல். இஃது, இரக்கமிக்குழி நிகழ்வதாகலின், பொழுதண்டிரங்கலின்பின் வைக்கப்பட்டது.

கூஙக. சிறுமை நமக்கொழியச் சேட்சென்ற ருள்ளி
நறுமலர் நாணின கண். க.

ஆற்றுமை மிகுதியான் வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

இ - ள். சிறுமை நமக்கு ஒழியச் சேட்சென்றார் உள்ளி - இவ்வாற்றுமை நங்கண் ணேகிற்பத் தாஞ்சேணிடைச்சென்ற காதலரை நீ நினைந்தமுதலால்,—கண் நறுமலர் நாணின - நின் கண்கள் ஒளியிழந்து முன்றமக்கு நாணிய நறுமலர்கட்கு இன்று தாம் நாணிவிட்டன. எ - று.

நமக்கென்பது வேற்றுமைமயக்கம். உள்ளவென்பது உள்ளியெனத் திரிந்தநின் றது. உள்ளுதலென்பது காரணப்பெயர் காரியத்திற்காயவாகுபெயர். இவைகண்டார் அவரைக் கொடுமைகூறுவர், யாற்றல் வேண்டுமென்பது கருத்து. (க)

கூஙஉ. நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்
பசந்து பனிவாருங் கண். உ.

இதுவுமது.

இ - ள். பசந்து பனிவாரும் கண் - பசப்பெய்தன்மேனீர்வார்கின்ற நின்கண் கள்—நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும் - நம்மானயக்கப்பட்டவரது நல்கா மையைப் பிறர்க்குச் சொல்லுவபோலாநின்றன, இனி நீயாற்றல்வேண்டும். எ - று.

சொல்லுவபோறல் அதனையவருணர்த்தற்கனுமானமாதல். நயந்தவர்க்கென்று பாடமோதுவாருமுளர். (உ)

கஙஙக. தணந்தமை சால வறிவிப்ப போலு
மணந்தாள் வீங்கிய தோள். ஙக.

இதுவுமது.

இ - ள். மணந்த நாள் வீங்கியதோள் - காதலர் மணந்தநாண்று இன்பமிகுதி யாற் பூரித்த நின்றோள்கள்—தணந்தமை சால அறிவிப்பபோலும் - இன்று அவர் பிரிந்தமையை வினங்க உணர்த்துவதுபோல மெலியாநின்றன, இது தகாது. எ - று.

அன்றுமவ்வாறு பூரித்து இன்றுமிவ்வாறு மெலிந்தால் இரண்டுங் கண்டவர் கடிதினறிந்து அவரைத் தகவின்மை கூறுவரென்பதாம். (ங)

கூஙச. பணிநீங்கிப் பைந்தொடி சோரும் தணிநீங்கித்
தொல்கவின் வாடியதோள். ச.

இதுவுமது.

இ - ள். தணி நீங்கித் தொல் கவின் வாடிய தோள் - அன்றுந்தந்தணிவர் நீங் குதலான் அவரான்பெற்ற செயற்கையழகேயன்றிப் பழையவியற்கையழகுமிழந்த இத்

தோற்றன்—பணை நீங்கிப் பைந்தொடி சோரும் - இன்றதற்குமேலே தம்பெருமை யிழந்து வளை கழலாநின்றன, இவை யிங்ஙனஞ் செயற்பாலவல்ல. எ - று.

பெருமையிழத்தல் மெலிதல். பைந்தொடி பசிய பொன்னுற்செய்த தொடி, சோருமென்னும் வளைத்தொழில் தோண்மேனின்றது. அன்றும்பிரிந்தானென்ற அவ ரன்பின்மையுணர்த்தி இன்றுங் குறித்தபருவத்து வந்திலனென்ற அவர் பொய்ம்மை யுணர்த்தாநின்றன; இனி அவற்றைக்கூறுகின்றார்மேற் குறையுண்டோவென்பதாம்.()

கஉருடி. தொடியார் கொடுமை யுரைக்குந் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள். டுரு.

இதுவுமது.

இ - ள். தொடியார் கொடுமை உரைக்கும் - கவவுக்கை நெகிழினும் ஆற்று தாட்கு இக்கால நீட்டத்து என்னுமென்று நினையாத கொடியாரது கொடுமையைத் தாமே சொல்லாநின்றன—தொடியொடு தொல்கவின் வாடிய தோள் - வளைகளுங் கழன்று பழைய வியற்கையழகுமிழக்த இத்தோள்கள், இனியதனை யாமறைக்குமா றென்னை! எ - று.

உரைக்குமென்பது அப்பொருண்மைதோன்ற நின்ற குறிப்புச்சொல். ஒடு வேறு வினைக்கண் வந்தது. அவரொடு கலந்த தோள்களே சொல்லுவனவாஞல் அயலார் சொல்லுதல் சொல்லவேண்டுமோ வென்பதாம். (இ)

கஉருசு. தொடியொடு தோணெகிழ நோவ லவரைக்
கொடிய ரெனக்கூற ஞெக்கு. சு.

தானுற்றுதற்பொருட்டியற்பழித்த தோழிக்குத் தலைமகன் சொல்லியது.

இ - ள். தொடியொடு தோள் நெகிழ - யானுற்றவும் என்வயத்தவன்றித் தொடி கள் கழலுமாறு தோள்கண்மெலிய,—அவரைக் கொடியர் எனக் கூறல் சொன்று நோவல் - அவற்றைக் கண்டு நீயவரைக் கொடியரெனக் கூறுதலைப் பொருத யானென்னுள்ளே நோவாநின்றேன். எ - று.

ஒடு மேல்வந்தபொருண்மைத்து. யானுற்றேனுகின்றது அவர்வாராததற்கன்று, நீ கூறுகின்றதற் கென்பதாம். (ஈ)

கஉருஎ. பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்கென்
வாடுதோட் பூசல் உரைத்து. எ.

அவ்வியற்பழிப்புப்பொருது தன்னெஞ்சிற்குச் சொல்லியது.

இ - ள். நெஞ்சே - நெஞ்சே,—கொடியரார்க்கு என் வாடுதோட்பூசல் உரைத்து- இவள் கொடியாரென்கின்றவர்க்கு நீசென்று என்மெலிகின்ற தோளினுல் வினை கின்ற ஆரவாரத்தைச்சொல்லி—பாடு பெறுதியோ - ஒருமேம்பாடெய்தவல்லையோ, வல்லையாயின் அதனையொப்பதில்லை. எ - று.

கொடியார்க்கென்பது கொடியரல்லரென்பது தோன்றநின்ற குறிப்புச்சொல். வாடுதோளென்பதும் அவை தாமே வாடாநின்றனவென்பது தோன்றநின்றது. பூசல் ஆரவாரம். அஃது அவள் தோணெகிழ்தியற்பழித்தன்மேலும் அதனுற்றனத்

காற்றுமை மிகன்மேலும் நின்றது, நின்னுரை கேட்டலும் அவர் வருவர், வந்தால் இவையெல்லாநீங்கும், நீங்க அஃதெனக்குக் காலத்தினுற்செய்த நன்றியாமாகலின், அதன்பயனெல்லாமெய்துதலினென்னுங் கருத்தாற் பாடுபெறுதியோவென்றாள். (எ)

கஉசுஅ. முயங்கிய கைகளை யூக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல். அ.

வினைமுடித்து மீடலுற்ற தலைமகன் முன்னிகழ்ந்தது நினைந்து தன்னுள்ளே சொல்லியது.

இ - ள். முயங்கிய கைகளை ஊக்க - தன்னையிறுக முயங்கிய கைகளை இவட்டு சோமென்று கருதி ஒருஞான்றியானெழித்தேனாக,—பைந்தொடிப் பேதைநுதல் பசந்தது - அத்தினையும் பொருது பைந்தொடிகளையணிந்த பேதையது நுதல் பசந்தது, அப்பெற்றித்தாய நுதல் இப்பிரிவிற்கியாது செய்யுமோ! எ - று.

இனிக்கடிதிற் செல்லவேண்டுமென்பது கருத்து. (அ)

கஉசுக. முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண். சு.

இதுவுமது.

இ - ள். முயக்கிடைத் தண் வளி போழ - அவ்வனங்களை யூக்குதலான் அம் முயக்கிடையே சிறுகாற்று நுழைந்ததாக,—பேதை பெருமழைக்கண் பசப்புற்ற-அத் தினையிடையேம் பொருது, பேதைபுடைய பெரியமழைக்கண்கள் பசப்புற்றன; அத் தன்மையவான கண்கள் மலைகளும், காடும், நாடுமாய இவ்விடையிடைகளெல்லாம் யாங்ஙனம் பொறுத்தன! எ - று.

தண்மை ஈண்டு மென்மைமேனின்றது. போழவென்றது உடம்பிரண்டும் ஒன் றுனதுதோன்ற நின்றது. மழை குளிர்ச்சி. (க)

கஉசஎ. கண்ணின் பசப்போ பருவர லெய்தின்றே
யொண்ணுதல் செய்தது கண்டு. கஎ.

இதுவுமது.

இ - ள். கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்று - தண்வளி போழவந்த கண் ணின்பசப்புத் தன்பமுற்றது,—ஒண்ணுதல்செய்தது கண்டு - தனக்கயலாய ஒண்ணு தல் வினைத்த பசப்பைக்கண்டு. எ - று.

அது கைகளூக்க அவ்வளவிற்பசந்தது, யான் கைகளுமுகிழ் மெய்களுநீங்கிச் சிறுகாற்று ஊடறுக்கும் தினையும் பசந்திலனெனத் தன்வன்மையும் அதன்மென் மையுங்கருதி வென்றிற்றென்பதாம். ஆகவே, அவளுறுப்புக்கள் ஒன்றினொன்று முற் பட்டு நலனழியும், யாங்கடிதிற் சேறுமென்பது கருத்தாயிற்று. (கஎ)

கலித் தொகை.—நெஞ்சொடுகிளத்தல்.

அஃதாவது ஆற்றுமை மீதூரத் தனக்கோர் பற்றுக்கோடு காணுத நிலைமைள் தன்னெஞ்சோடு செய்திறனறியாது சொல்லுதல். இஃது, உறுப்புக்கள் தங்கலனழிந் தவழிகிழ்வதாகலின், உறுப்பு நலனழிதலின்பின் வைக்கப்பட்டது.

குறள்: நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே யெனைத்தொன்று
மெய்வகோய் தீர்க்கு மருந்து. ௬.

தன்னுற்றுமைதீருந்திறனுடியது.

இ - ள். நெஞ்சே - நெஞ்சே—எவ்வகோய் தீர்க்கும் மருந்து ஒன்று - இவ்வெவ் வகோயினைத் தீர்க்குமருந்தாவ தொன்றினை—எனைத்து ஒன்றும் நினைத்துச் சொல் லாய் - யானறியுமாற்றலிலன், எத்தன்மையதியாதொன்றையினும் நீயறிந்தெனக்குச் சொல். எ - று.

எவ்வம் ஒன்றனுந் தீராமை. உயிரினுஞ் சிறந்த காணினை விட்டுச் செய்வதியா தொன்றையினு மென்பான், எனைத்தொன்று மென்றாள். (௫)

குறள்: காத லவரில ராகநீ நோவது
பேதைமை வாழியென் னெஞ்சு. ௭.

தலைமகனைக் காண்டற்கண் வேட்கைமிகுதியாற் சொல்லியது.

இ - ள். என் நெஞ்சு வாழி - என்னெஞ்சே, வாழ்வாயாக;—அவர் காதல் இல ராக நீ நோவது - அவர் நங்கட்காதலிலராகவும் நீயவர்வரவு நோக்கி வருந்துதற் கேது—பேதைமை - நின்பேதைமையே, பிறிதில்லை. எ - று.

தம்மை நினையாமையின் நங்கட்காதலிலரென்ப தறியலாம், அஃதறியாமை மேலும் அவர்பாற்செல்லக் கருதாது அவ்வாவுபார்த்து வருந்தாநின்றாய், இது நீ செய்துகொள்கின்றதென்னுங் கருத்தாற் பேதைமையென்றாள். வாழி இகழ்ச்சிக் குறிப்பு. யாமவர்பாற்சேறலே அறிவாவதென்பதாம். (௬)

குறள்: இருத்தல்ளி யென்பரித னெஞ்சே பரிக்தல்ளல்
பைதனெய் செய்தார் கணில். ௭.

இதுவுமது.

இ - ள். நெஞ்சே இருத்து உள்ளிப் பரிதல் என் - நெஞ்சே, அவர்பாற்செல் வதுஞ்செய்யாது ஈண்டிறந்தபடுவதுஞ்செய்யாதிருந்து அவ்வரவுநினைந்து நீவருந்து கின்றதென்னை !—பைதல் நோய் செய்தார்கண் பரிந்து உள்ளல்இல் - இப்பையுணெய் செய்தார்மாட்டு நமக்கிரங்கிவரக்கருதுதல் உண்டாகாது. எ - று.

தம்மாட்டருளுடையரன்மையிற் றுமாக வாரார், நாஞ்சேறலே இனித் தகுவ தென்பதாம். (௭)

குறள்: கண்ணுங் கொளச்சேறி நெஞ்சே யிவையென்னைத்
தின்னு மவர்க்காண லுற்று. ஸ.

இதுவுமது.

இ - ள். நெஞ்சே கண்ணும் கொளச் சேறி - நெஞ்சே, நீயவர்பாற் சேறலுற்ற பாயின் இக்கண்களேயும் உடன்கொண்டு செல்வாயாக;—இவை அவர்க் காணல்உற்று என்னைத் தின்னும் - அன்றி நீயே சேறியாயின், இவைதாம் காட்சிவிதுப்பினல் அவ ரைக் காண்டல்வேண்டி நீகாட்டென்று என்னைத் தின்பனபோன்று வலியாநிற்கும். எ - று.

கொண்டென்பது கொளவெனத் திரிந்துநின்றது. நின்னுமென்பது இலக்கணைக் குறிப்பு. அத்தலைவி நீக்கவேண்டுமென்பதாம். என்றது தான்சேறல்குறித்து. (ச)

கூசஎ. செற்றா ரெனக்கை விடலுண்டோ நெஞ்சேயா
முற்றா நறுமு தவர். இ.

இ - ள். நெஞ்சே - நெஞ்சே,—யாம் உற்றால் உருதவர் - யாம் தம்மையுறத் தாமுறுத நங்காதலரை—செற்றாரெனக் கைவிடல் உண்டோ - வெறுத்தாரென்று கருதிப் புலர்த்து கைவிட்டிருக்கும்வலி எமக்குண்டோ, இல்லை. எ - று.

உறுதல் அன்புபடுதல். அவ்வலியின் மையின் அவர்பாற்செல்வதே நமக்குத் தருவ தென்பதாம். (இ)

கூசஅ. கலந்தணர்த்தும் காதலர்க் கண்டாற் புலந்தணராய்
பொய்க்காய்வு காய்திபென் னெஞ்சு. உ

தலைமகன் கொடுமைநினைந்து செலவுடன்படாத நெஞ்சினைக் கழறியது

இ - ள். என் நெஞ்சு - என்னெஞ்சே,—கலந்து உணர்த்தும் காதலர்க்கண்டாற் புலந்து உணராய் - யான்தம்மொடு புலந்தால் அப்புலவியைக் கலவிதன்னுளே நீக்க வல்ல காதலரைக் கண்டாற் பொய்யேயாயினும் ஒருகாற் புலந்து பின்னதனை நீக்க மாட்டாய்,—பொய்க் காய்வு காய்தி - அதுவுமாட்டாதே இப்பொழுது அவர் கொடிய சினப் பொய்க்காய்வு காயாநின்றாய்; இனியிதனை யொழித்து அவர்பாற்செல்லத் துணிவாயாக. எ - று.

கலத்தலானென்னும் பொருட்டாய கலக்கவென்பது திரிந்து நின்றது. அதனை யுணர்த்தலாவது கலவியின்பத்தைக் காட்டி அதனுள் மயக்கிப் புலவிக்குறிப்பினை யொழித்தல். பொய்க்காய்வு நிலையில் வெறுப்பு. கண்டான் மாட்டாதே காணுதவழி வெறுக்கின்றதனைப் பயனில்லையென்பதாம். (உ)

கூசஎ. காமம் விடுவொன்றே நாண்விடு நன்னெஞ்சே
யாளே பொறேனிவ் விரண்டு. எ.

நாண்டடுத்தலின் அச்செலவொழிவாள் சொல்லியது.

இ - ள். நன்னெஞ்சே - நல்லநெஞ்சே,—ஒன்று காமம் விடு - ஒன்றின் நாண் விடமாட்டாயாயிற் காமவேட்கையை விடு,—(ஒன்று) நாண் விடு - ஒன்றின் அது விடமாட்டாயாயின் நாணினை விடு,—இவ்விரண்டு யாளே பொறேன் - அன்றியே இரண்டும் விடாமை நின்கருத்தாயின், ஒன்றற்கொன்று மறுதலையாய இவ்விரண் டினையும் உடன்றுங்குமதுகை யானிலன். எ - று.

யாளேவென்னும் பிரிநிலை நீ பொறுப்பினு மென்பதுபட நின்றது. நன்னெஞ்சே யென்றது, இரண்டையும் விடாது பெண்மையை நிலைபெறுத்தலின், நல்லையென்னும் குறிப்பிற்று. அது நன்றேயெனினும் என்னுயிருண்டாதல் சாலாமையின், அதற்கா ன்றிலேனென்பதாம். முற்றும்மை விகாரத்தாற்றொக்கது. (எ)

கூசஅ. பிரிந்தவர் நல்கரென் றேங்கிப் பிரிந்தவர்
பின்செல்வாய் பேதையென் னெஞ்சு. அ.

இதுவுமது.

இ - ள். என் நெஞ்சு - என்னெஞ்சே,—அவர் பரிந்த நல்காரென்று - அவர் இவ்வாற்றுமையை யறியாமையின் சொந்தவந்து தலையளிசெய்யாராயினுமென்று கருதி—பிரிந்தவர்பின் எங்கிச் செல்வாய் பேதை - அஃதறிவித்தற்பொருட்டு நம்மைப் பிரிந்துபோயவர்பின் எங்கிச்செலலுற்ற நீ யாதுமறியாய். எ - று.

ஆற்றுமைகண்டுவைத்தும் நல்காது போயினரைக் காணுதவழிச் சென்றறிவித்த தனையானே நல்கவருவரென்று கருதினமையிற் பேதையென்றாள். (அ)

கஉசசு உள்ளத்தார் காத லவராக வள்ளிநீ
யாருழைச் சேறியென் னெஞ்சு. கூ.

இதுவுமது

இ - ள். என் நெஞ்சு - என்னெஞ்சே,—காதலவர் உள்ளத்தாராக - காதலர் நின்னகத்தாராக,—நீ உள்ளி யாருழைச் சேறி - முன்பெல்லாங் கண்டுவைத்து இப் பொழுது நீ புறத்துத் தேடிச் செல்கின்றது யாரிடத்து! எ - று.

உள்ளமென்புழி அம்முப் பகுதிப்பொருள்விகுதி. நின்னகத்திருக்கின்றவரை அஃதறியாது புறத்துத்தேடிச்சேறல் நகையுடைத்து, அதனையொழியென்பதாம்.(கூ)

கஉஙo. தன்னைத் துறந்தாரை நெஞ்சத் துடையேமா
யின்னு மிழத்தங் கவின். கo.

அவரை மறந்தாற்றல்வேண்டுமென்பதுபடச் சொல்லியது.

இ - ள். தன்னைத் துறந்தாரை நெஞ்சத்து உடையேமா - நம்மைக் கூடாவண்ணந் துறந்துபோயினரை நாம் நம்மகத்துடையேமாக,—இன்னும் கவின் இழத்தும் - முன்னிழந்த புறக்கவினேயன்றி நின்ற அகக்கவினுமிழப்பேம். எ - று.

"குன்றி - னெஞ்சுபக வெறிந்த வஞ்சுடர் நெடுவேல்" என்புழிப்போல நெஞ்சென்பது ஈண்டும் அகப்பொருட்டாய் நின்றது. அவர் நம்மைத்தன்னுமைற்றுறந்தாராகவும், நாமவரை மறத்தன்மாட்டேமாகவும், போன மெய்க்கவினேயன்றி நின்ற நிறையுமிழப்பேமென்பதாம். (கo)

கஉசும் அதி.—நிறையழிதல்.

அஃதாவது தலைமகள் மனத்தடக்கற்பாலனவற்றை வேட்கைமிகுதியான் அடக்கமாட்டாது வாய்விடுதல்: "நிறையெனப்படுவது மறைபிற ரறியாமை†" என்பர் பிறரும். அஃதழிதற்காரணம் நெஞ்சொடுசென்றமையின், இது நெஞ்சொடுசென்ற கலின்பின் வைக்கப்பட்டது.

கஉஙக. காமக் கணிச்சி யுடைக்கு நிறையென்னு
நாணுத்தாழ் வீழ்த்த கதவு. க.

நாணுநிறையுமழியாமை நீயாற்றல்வேண்டுமென்ற
தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

---

* குறுந்தொகை, கடவுள் வாழ்த்து. † கலி, நெய்தல், கூ.

இ - ன். நாணுத் தாழ் வீழ்த்த நிறையென்னும் கதவு - நாணுயை தாழினைக் கோத்த நிறையென்னுங்கதவினை—காமக் கணிச்சி உடைக்கும் - காமவேட்கையாயை கணிச்சி முரியாகின்றது, இனி அவை நிற்றலுமில்லை, யாளுற்றலுமில்லை. எ - று.

கணிச்சி கூர்தலி, நாணுள்ளதுணையும் நிறையழியாதாகலின் அதனைத்தாழாக்கியும், அகத்துக்கிடந்தன பிறர்கொள்ளாமற் காத்தலின் நிறையைக் கதவாக்கியும், வலியவாய்த் தாமாக நீங்காத அவ்விரண்டினையும் ஒருங்கு நீக்கலிற் றன்காமவேட்கையைக் கணிச்சியாக்கியும் கூறினன். (க)

கஉஙஉ. காம மெனவொன்றோ கண்ணின்றென் னெஞ்சத்தை
யாமத்து மாளுந் தொழில். உ.

நெஞ்சின்கட்டோன்றிய காமம் நெஞ்சாலடக்கப்படு மென்றருட்குச் சொல்லியது.

இ - ன். யாமத்தும் என் நெஞ்சத்தைத் தொழில் ஆளும் - எல்லாருந்தொழி லொழியு மிடையாமத்தும் என்னெஞ்சத்தையொறுத்துத் தொழில்கொள்ளாகின் றது,—காமமென ஒன்று கண் இன்று - ஆகலாற் காமமென்றுசொல்லப்பட்ட வொன்று கண்ணேட்டமின்றாயிருந்தது. எ - று.

ஒவென்பது இரக்கக்குறிப்பு. தொழிலின்கண்ணேயாடல் தலைமகன்பாற்செல விடுத்தல். தாயைப்பணிகோடல் உலகியலன்மையிற் காமமெனவொன்றென்றும், அது தன்னைக்கொள்கின்றது அளவறியாது கோடலிற் கண்ணின்றென்றுங்கூறினன். அடக்கப்படாமை கூறியவாறு. (உ)

கஉஙஊ. மறைப்பேன்மற் காமத்தை யானே குறிப்பின்றித்
தும்மல்போற் றோன்றி விடும். ஙூ.

மகளிர்காமம் மறைக்கப்படுமென்றருட்குச் சொல்லியது.

இ - ன். காமத்தை யான் மறைப்பேன் - இக்காமத்தை யானென்னுள்ளே மறைக் க்கருதுவேன்;—குறிப்பு இன்றித் தும்மல்போல் தோன்றி விடும் - அதனாலென், இஃதென்கருத்தின் வாராது தும்மல்போல வெளிப்பட்டேவிடாகின்றது. எ - று.

மன் ஒழியிசைக்கண் வந்தது. ஓகாரம் இரக்கற்கண் வந்தது. தும்மலடங்கா தாற்போல அடங்குகின்றதில்லையென்பதாம். (ஊ)

கஉஙச. நிறையுடையே னென்பேன்மன் யானெனென் காம
மறையிறந்து மன்று படும். ச.

இதுவுமது.

இ - ன். யான் நிறையுடையேன் என்பேன் - இன்றினாற்கெல்லாம் யானென்னை நிறையுடையேனென்று கருதியிருந்தேன்;—என் காமம் மறை இறந்து மன்று படும் - அதனாலென், இன்றென்காமம் மறைத்தலைக்கடந்து மன்றின்கண் வெளிப்படாகின் றது. எ - று.

மன்னும் ஓவும் மேலவற்றின்கண் வந்தன. மன்றபதேல் பலருமறிதல். இனி நன்னைதைத்தன்றென்பதாம். (எ)

கூ.இரு. செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோ
யுற்றார் அறிவதொன் றன்று. இ.

நம்மைமறந்தாரை நாமுமறக்கற்பாலமென்றருட்குச்சொல்லியது

இ - ன். செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை - தம்மையகன்றுசென்றார் பின் செல்லாது தாமும் அகன்றுநிற்குநிறையுடைமை—காமநோய் உற்றார் அறிவது ஒன்று அன்ற-காமநோயினையுறுதார் அறிவதொன்றன்றிஉற்றார் அறிவதொன்றன்று. எ-று.

இன்பத்தொடு கழியுங்காலத்தைத் துன்பத்தொடு கழியுமாறு செய்தலிற் செற்றாரென்றார். பின்சேறல் மனத்தால் இடைவிடாது நினைத்தல். பெருந்தகைமை ஈண்டாருபெயர். காமநோயுறுதார் மானமுடையார். நன்றெனவுணரார்மாட்டுஞ் சென்றே நிற்கும் யானறிவதொன்றன்றென்பதாம். (இ)

கூ.இரு. செற்றவர் பின்சேறல் வேண்டி யளித்தரோ
வெற்றென்னை யுற்ற துயர். கூ.

இதுவுமது.

இ - ன். செற்றவர்பின் சேறல் வேண்டி - என்னையகன்ற சென்றார்பின்னே யான் சேறலேவேண்டுதலான்,—என்னை உற்ற துயர் எற்று அளித்து - என்னை யுற்ற துயர் எத்தன்மையது! சால நன்று. எ - று.

செற்றவரென்றது ஈண்டும் அப்பொருட்டு. வேண்டவென்பது வேண்டியெனத் திரிந்துநின்றது. அளித்தென்பது இகழ்ச்சிக்குறிப்பு. இக்காமநோய் யான் சொல்ல வுங்கேட்கவுமாவதொன்றன்று, சாலக்கொடிதென்பதாம். (ஈ)

கூ.இரு. காணினை வொன்றே வறியலங் காமத்தாற்
பேணியார் பெட்ப செயின். எ.

பரத்தையிற்பிரிந்துவந்த தலைமகனுழே நிறையழிவாற் கூடியதலைமகள்
நீ புலவாமைக்குக் காரணம் யாதென்ற தோழிக்குச் சொல்லியது.

இ - ன். பேணியார் காமத்தாற் பெட்ப செயின் - நம்மால் விரும்பப்பட்டவர் வக்து காமத்தால் நாம் விரும்பியவற்றைச் செய்யுமனவின் —காண் என ஒன்றே அறியலம் - நாணென்றொன்றையும் அறியமாட்டேமாயிருந்தேம். எ - று.

பேணியாரெனச் செயப்படுபொருள் வினைமுதல்போலக் கூறப்பட்டது. விரும்பியன வேட்கைமிகலினுற் கருதியிருந்த கலவிகள். காண் பரத்தையர் தோய்ந்த மார்பைத் தோய்தற்கு நாணுதல். ஒன்றென்பது ஈண்டுச் சிறிதென்னும் பொருட்டு. இழிவு சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. நிறையழிவான் அறியாது கூடிய தன் குற்றநோக்கி, அவனையுமுளப்படுத்தாள். (எ)

கூ.இரு.அ. பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றோநம்
பெண்மை யுடைக்கும் படை. அ.

இதுவுமது.

இ - ன். நம்பெண்மை உடைக்கும் படை - கற்பினையாகியவரணையழிக்குந் தானை—பன்மாயக் கள்வன் பணிமொழியன்றே - பல பொய்களையல்ல கள்வனு டைய தாம்ந்த சொற்களன்றே! ஆனபின் அதனிற்குமாறென்னை! எ - று.

பெண்மை ஈண்டுத் தலைமைபற்றி நிறைமேனின்றது. வந்தாற் புலக்கக்கடவே மென்றும் புலந்தால் அவன்சொற்களானுஞ் செயல்களானும் நீங்கேமென்றும் இவை முதலாகவெண்ணிக்கொண்டிருந்தன யாவுங் காணுது கலவிக்கட்டன்னினுமுற்படும் வகை வந்துதோன்றினனென்பான், பன்மாயக்கள்வனென்றுரை. பணிமொழி கம்மி னுந்தானன்புமிகுதியுடையனுகச் சொல்லுஞ்சொற்கள். அவன் அத்தன்மையனுக, சொற்கள் அவையாக, நங்நிறையழியாதொழிதுமோ வென்பதாம். (அ)

கூஉகூ புலப்ப லெனச்சென்றேன் புல்லினே னெஞ்சங்
கலத்த லுறுவது கண்டு. கூ.

இதுவுமது.

இ - ள். புலப்பல் எனச் சென்றேன் - அவர் வந்தபொழுது புலக்கக்கடவே னென்று கருதி முன்னில்லாத பிறிதோரிடத்துப்போயினேன்; —நெஞ்சம் கலத்த லுறுவது கண்டு புல்லினேன் - போயும், என்னெஞ்சம் நிறையினில்லாத அறை போய் அவரோடு கலத்தலொடுங்குதலையறிந்து, இனி அது வாயாதென்று புல்லி னேன். எ - று.

வாயாமை புலத்தற்கருவியாய நெஞ்சுதானே கலத்தற்கருவியாய்நிற்றலின் அது முடியாமை. (க)

கூஉசு. நிணந்தீயி லிட்டன்ன நெஞ்சினார்க் குண்டோ
புணர்த்தூடி நிற்பே மெனல். கூ0.

இதுவுமது.

இ - ள். நிணம் தீயில் இட்டன்ன நெஞ்சினர்க்கு - நிணத்தைத் தீயின்கண்ணே யிட்டால் அஃதுருகுமாறுபோலத் தங்காதலரைக் கண்டால் நிறையழிந்துருகுநெஞ் சினையுடைய மகளிர்க்கு,—புணர்ந்து ஊடி நிற்பேம் எனல் உண்டோ - அவர் புணர யாமூடிப் பின்பு உணராது அந்நிலையே நிற்கக்கடவேமென்று கருதுதலுண்டாகுமோ, ஆகாது. எ - று.

புணர்தல் ஈண்டு மிகாணுகுதல்; எதிர்ப்படலுமாம். புணர வென்பது புணர் ந்தெனத் திரிந்து நின்றது. யானத்தன்மையேனுகலின் எனக்கஃதில்லையாயிற் றென்பதாம். (கo)

கூஎ அம் அதி.—அவர்வயின்விதும்பல்.

அஃதாவது சேயிடைப்பிரிவின்கட்டலைமகனும் தலைமகளும் வேட்கைமிகவி னுன் ஒருவரையொருவர் காண்டற்கு விரைதல். தலைமகன்பிரிவும் தலைமகளாற்றுமை யும் அதிகாரப்பட்டவருகின்றமையின், இருவரையுஞ்சுட்டிப் பொதுவாகிய பன்மைப் பாலாற் கூறினர். பிறரெல்லாம் இதனைத் தலைமகனேனின்ற தலைமகள் வீதப்புற லென்றுர்: சுட்டுப்பெயர் சொல்லுவான் குறிப்பொடு கூடியபொருளுணர்த்துவதல் லது தானென்றற்குப் பெயராகாமையானும், கலிகூற்றிய அதிகாரத்தைத் தலைமகன் உயர்த்தற்பண்மையாற் கூறப்படாமையானும், அஃதுரையன்மையறிக. இதனுட்டலை மகன் கூற்று நிறையழிவானிகழ்ந்ததாகலின், அவ்வியைபுபற்றி நிறையழிதலின்பின் வைக்கப்பட்டது.

கூஉக. வாளற்றுப் புற்கென்ற கண்ணு மவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல். க.

தலைமகள் காண்டல்விதுப்பிலுல் சொல்லியது.

இ - ள். அவர் சென்ற நாள் ஒற்றி விரல் தேய்ந்த - அவர் நம்மைப்பிரிந்துபோய நாள்கள் சுவரின்கணிழைத்தவற்றைத்தொட்டு எண்ணுதலான் என்விரல்கடேய்ந் தன;—கண்ணும் வாள் அற்றுப் புற்கென்ற - அதுவேயன்றி அவர்வரும் வழிபார்த்த என்கண்களும் ஒளியிழந்து புல்லியவாயின ; இவ்வாறுயும் அவர்வரவுண்டாயிற் றில்லை. எ - று.

நாள் ஆகுபெயர். புல்லியவாதல் நுண்ணிய காணமாட்டாமை. ஒற்றவென்பது ஒற்றியெனத் திரிந்துநின்றது. இனி யான்காணுமாறென்னேயென்பதாம். நாளெண்ண லும் வழிபார்த்தலும் ஒருகாற் செய்தொழியாது இடையின்றிச்செய்தலான், விதுப் பாயிற்று. (க)

கூஉகூ. இலங்கிழா யின்று மறப்பினென் ரேண்மேற்
கலங்கழியுங் காரிகை நீத்து. உ

ஆற்றுமைமிகுதலின் இடையின்றிநினைக்கற்பாலையல்லை சிறிது மறக்கல்வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.

இ - ள். இலங்கு இழாய் - விளங்காநின்றவிழையினையுடையாய்,—இன்று மறப் பின்-காதலரை இன்று யான் மறப்பேனுயின்,—மேல் காரிகை நீத்து என்ரேன் கலங் கழியும்-மேலுங்காரிகையென்னை நீப்ப என்ரேன்கள் வளைகழல்வனவாம். எ - று.

இலங்கிழாயென்பது இதற்கு நீ யாதும் பரியலையென்னுங்குறிப்பிற்று. இன்று யானிறந்துபடுகின்றவின்று. மேலும் மறுபிறப்பினும். எச்சவும்மை விகாரத்தாற்ரொக் கது. நீப்பவென்பது நீத்தெனத் திரிந்துநின்றது. கழியுமென்னும் இடத்துநிகழ் பொருளின்ரொழில் இடத்தின்மேனின்றது. இவ்வெல்லக்கணினேந்தால் மறுமைக் கண் அவரையெய்தியின்புறலாம், அதனுண் மறக்கற்பாலேனல்லேனென்பதாம். (உ)

கூஉசூஙூ. உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்ரூர்
வரனசைஇ யின்னு முளேன். ங.

இதுவுமது.

இ - ள். உரன் நசைஇ உள்ளம் துணையாகச் சென்ரூர்-இன்பநுகர்தலே நச்சாது வேறுலை நச்சி நாந்துணையாதலையிகழ்ந்து தம்மூக்கந்துணையாகப் போயினூர்—வரல் நசைஇ இன்னும் உளேன் - அவ்ற்றையிகழ்ந்து ஈண்டுவருதலே நச்சுதலான், யானிவ் வெல்லையினுமுளேனுயினேன். எ - று.

உரனென்பது ஆகுபெயர். அற்சையானுயிர்வாழாநின்றேன். அஃதில்லையாயின் இறந்துபடுவலென்பதாம். (ங)

கூஉசுஞ. கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்
கோடுகொ டேறுமென் னெஞ்சு. ச.

இதுவுமது.

இ - ள். பிரிந்தார் கூடியகாமம் வரவு உள்ளி - நீங்கியகாமத்தராய் நம்மைப் பிரிந்துபோயவர் மேற்கூடியகாமத்துடனே நங்கண்வருதலே நினைந்து,—என்னெஞ்சு

கோடுகொடு ஏறும் - என்னெஞ்சு வருத்தமொழித்து மேன்மேற் பிணர்த்தொழின்றது. எ - று.

வினையயிற்பிரிவுழிக் காமலின்பநோக்காமையும் அதுமுடிந்துழி அதுவே நோக்குந்திலமதற்கியல்பாகலின், கூடியகாமமொடென்றுள். ஒவ்வொரு விகாரத்தாற் றெருக்கது. கோடுகொண்டேறலாயெ மரத்ததுதொழில் செஞ்சின்மேலேற்றப்பட்டது. கொண்டென்பது குறைத்தலின்றது. அஃதுள்ளித்நிலேனுபின் இறந்தபலெனபதாம். (ச)

கூடூடு. காண்கமற் கொண்கனைக் கண்ணுரக் கண்டபி
னீங்குமென் மென்றோட் பசப்பு. டு.

தலைமகன்வரவுகூறி ஆற்றுயாய்ப் பசக்கற்பாலை
யல்லையென்ற தோழிக்குச் சொல்லியது

இ - ள். கண் ஆரக் கொண்கனைக் காண்க-என் கண்க ளாரும்வகை என்கொண்கனே யான் காண்பேனுக;—கண்டபின் என் மென்றோட்பசப்பு நீங்கும் - அங்ஙனங் கண்டபின் என் மெல்லியதோளின்கட்பசப்புத் தானே நீங்கும். எ - று.

காண்கவென்பது ஈண்டு வேண்டிக்கோடற்பொருட்டு. அதுவேண்டுமென்பது பட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. கேட்டதனையா னீங்கா தென்பதாம். (இ)

கூடூசு. வருகமற் கொண்க னெருநாட் பருகுவன்
பைதனே யெல்லாங் கெட. சு.

இதுவுமது.

இ - ள். கொண்கன் ஒருநாள் வருக - இத்தினைநாளும் வாராக்கொண்கன் ஒருநாள் என்கண் வருவானுக;—பைதல் நோயெல்லாம் கெடப் பருகுவன் - வந்தாற் பையுளைச்செய்கின்ற இந்நோயெல்லாங்கெட அவ்வமிழ்தத்தை வாயில்களேர்தானும் பருகக்கடவேன். எ - று.

வருகவென்பதற்கும் மன்னென்பதற்கும் மேலுரைத்தவாறேகொள்க. அக்குறிப்பு அவ்வொருநாளைக்குள்ளே இனி வரச்கடவ நோய்களுங் கெடுப்பலென்பதாம். (ஈ)

கூடூஎ. புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்
கண்ணன்ன கேளிர் வரின். எ.

இதுவுமது.

இ - ள். கண் அன்ன கேளிர் வரின் - கண்போற்சிறந்த கேளிர் வருவராயின்,—புலப்பேன்கொல் - அவர்வரவு நீட்டித்தமை நோக்கி யான் புலக்கக்கடவேனே,—புல்லுவேன்கொல்-அன்றி என்னற்றுமைநோக்கிப்புல்லக்கடவேனே,—கலப்பேன் கொல் - அவ்விரண்டும் வேண்டுதலான் அவ்விருசெயல்களையும் விரவக்கடவேனே, யாதுசெய்யக்கடவேன்! எ - று.

புலவியும் புல்லலும் ஒருபொழுதின்கண் விரவாமையிற் கலப்பேன்கொலென்றுள். மூன்றனையுஞ்செய்தல் கருத்தாகலின், விதப்பாயிற்று. இனிக் கலப்பேன்கொலென்பதற்கு ஒருபுதுமைசெய்யாது பிரியாதகாட்போலக் கலந்தொழுகுவேனே வென்றுரைப்பாருமுளர். (எ)

கலக்அ. வினைகலந்து வென்றீக வேந்தன் மனைக்கலந்து
மாலை யயர்கம் விருந்து. அ.

வேந்தற்குற்றுழிப்பிரிந்த தலைமகன் வினைமுடிவுகேட்டித்துழித்
தலைமகளை நினைந்து தன்னுள்ளே சொல்லியது.

இ - ன். வேந்தன் வினை கலந்து வென்றீக - வேந்தன் வினைசெய்தலைப்புரிந்து வெல்வானாக.—மனைகலந்து மாலை விருந்து அயர்கம் - யாமும் மனையிலையைச் சென்று கூடி ஆண்டை மாலைப்பொழுதிற்கு விருந்தயர்வேமாக. எ - று.

மனையென்பது ஈண்டாருபெயர், "மங்கல மென்ப மனையாட்டி *" என்புழிப் போல. வினைசெய்தற்கண்வந்த மாலைப்பொழுதிற்கு எதிர்கோடல் அலங்கரித்தன் முதலியவின்மையின், மனைகலந்து மாலைக்கு விருந்தயர்கமென்றான். ஈான்கனுருபு விகாரத்தாற் றொக்கது, இது வினைமுடியாமுன் கூறலான் விதப்பாயிற்று. பிறரெல்லாம் இதனைத் தலைமகள் கூற்றாக்கியுரைத்தார். தலைமகனைக்கூறாது வேந்தன் வெல்க வென்றும், மனைகலந்தென்றும், மாலைப்பொழுதின்கண் விருந்தயர்கமென்றும் வந்த அவ்வுரைதானே அது கூடாமைக்குக் காரியமாயிற்று. (அ)

கலக்ஆ ஒருநா ளெழுநாள்போற் செல்லுஞ்சேட் சென்றார்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு. கூ.

இதுவுமது.

இ - ன். சேண் சென்றார் வருநாள் வைத்து ஏங்குபவர்க்கு - சேணிடைச்சென்ற தங்காதலர் மீண்டுவர்குறித்த நாளையுட்கொண்டு அதுவருந்துனையும் உயிர்தாங்கி வருந்துமகளிர்க்கு—ஒருநாள் எழுநாள்போல் செல்லும் - ஒருநாள் பலநாள்போல நெடிதாகக்காட்டும். எ - று.

ஏழென்பது அதற்குமேலாய மிக்கபன்மைகுறித்து நின்றது, "ஒருவர்கூறை யெழுவருடுத்து" என்றாற்போல. தலைமகன் வருத்தம் பிறர்மேலிட்டுக் கூறியவாறு. இதனுன் இதுவுந் தலைமகள் கூற்றாகாமையறிக. இருநாளென்று பாடமோது வாருமுளர். (க)

கலஎ0. பெறினென்னும் பெற்றக்கா லென்னு முறினென்னு
முள்ள முடைந்துக்கக் கால். க0.

இதுவுமது.

இ - ன். உள்ளம் உடைந்து உக்கக்கால் - காதலி நம்பிரிவினையாற்றாது உள்ள முடைந்திறந்துபட்டவழி,—பெறின் என் - நம்மைப் பெறக்கடவளாகுலென்,—பெற்றக்கால் என் - அதுவன்றியே பெற்றுலென்,—உறின் என் - அதுவன்றியே மெய்புதக் கலந்தாற்றுனென், இவையொன்றுனும் பயனில்லை. எ - று.

இம்மூன்றும் உடம்பொடுபுணர்த்திக் கூறப்பட்டன, அதன்மேலும் முன்னே வழக்குண்மையின். அதற்குமுன்னே யான் செல்லவேண்டுமென்பது கருத்தாகலின், விதப்பாயிற்று. இது தலைமகள் கூற்றாயவழி இரங்கலாவதல்லது விதப்பாகா ரூமையறிக. (க0)

---

* திருக்குறள், க0.

கூடாஅ ம் அதி.—குறிப்பறிவுறுத்தல்.

அஃதாவது தலைமகன், தலைமகள், தோழியென்றிவர் ஒருவர் குறிப்பினை யொருவர்க்கறிவுறுத்தல். இது, பிரிந்துபோய தலைமகன் வந்துகூடியவழி கிழவதாகின், அவ்வயின்விதும்பலின்பின் வைக்கப்பட்டது.

கூடாக. கரப்பினுங் கையிகந் தொல்லாநின் னுண்க
ணுரைக்க லுறுவதொன் றுண்டு. க.

பிரிந்துகூடிய தலைமகன் வேட்கைமிகவினுற் புதுவது பன்னுளும் பாராட்டத் தலைமகள் இதுவொன்றுடைத்தென வஞ்சியவழி அதனை யவள் குறிப்பானறிந்து அவனவட்குச் சொல்லியது.

இ - ள். கரப்பினும் - நீசொல்லாது மறைத்தாயினும்,—ஒல்லா கையிகந்து - அதற்குடம்படாதே கின்னைக் கைகடந்து—நின் உண் கண் உரைக்கலுறுவது ஒன்று உண்டு - நின்னுண்கண்களே எமக்குச் சொல்லலுறுவதொரு காரியமுண்டாயிராநின்றது, இனியதனை நீயே தெளியச்சொல்வாயாக. எ - று.

காத்தல் காணுனடக்குதல். தன்கட்பிரிதற்குறிப்புளதாக்கருதி வேறுபட்டானது வேறுபாடு குறிப்பானறிந்து அவட்குத் தன்பிரியாமைக்குறிப்பறிவுறுத்தலாறு.

கூடாஉ. கண்ணிறைந்த காரிகைக் காம்போர்தோட் பேதைக்குப்
பெண்ணிறைந்த நீர்மை பெரிது. உ

காணுல் அவள் அதுசோல்லாளாயவழி அவன்றேழிக்குச் சொல்லியது.

இ - ள். கண் நிறைந்த காரிகைக் காம்பு ஏர் தோட்பேதைக்கு - என்கண்ணி றைந்தவழகினையும் வேயையொத்த தோளினையுமுடைய கின்பேதைக்கு—பெண் நிறைந்த நீர்மை பெரிது - பெண்பாலாரிடத்து நிறைந்த மடமை அவ்வளவன்றி மிகுந்தது. எ - று.

இலதாயபிரிவினைத் தன்கணேற்றி அதற்கஞ்சுதலான், இவ்வாறு கூறினன்.(உ)

கூடாக. மணியிற் றிகழ்தரு நூல்போன் மடந்தை
யணியிற் றிகழ்வதொன் றுண்டு. ஊ.

இதுவுமது.

இ - ள். மணியில் திகழ்தரும் நூல்போல்-கோக்கப்பட்ட பளிக்குமணியகத்துத் தெடுத்து புறத்துப்புலனூல்போல—மடந்தை அணியில் திகழ்வது ஒன்று உண்டு-இம் மடந்தையதணியகத்துத் தெடுத்து புறத்துப் புலனென்ற தொருகுறிப்புண்டு. எ - று.

அணி புணர்ச்யொனுயவழகு. அதனகத்துக்கெடுத்தலாவது அதனேடு உடனிகழ்தற்பாலதன்றிவைத்து உடனிகழ்தல். அதனையானறிகின்றிலேன், நீயறிந்து கூறல் வேண்டுமென்பது கருத்து. (ஊ)

கூடாச. முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போற் பேதை
நகைமொக்கு ளுள்ளதொன் றுண்டு. ச.

இதுவுமது.

இ - ள். முகை மொக்குள் உள்ளது நாற்றம்போல் - முகையது முகிழ்ப்பினுள தாய்ப் புறத்துப் புலனுகாத நாற்றம்போல—பேதை நகை மொக்குள் உள்ளது ஒன்று

உண்டு - நின்பேதை என்னெடு நகக்கருது நகையது முகிழ்ப்பினுளதாய்ப் புறத்துப் புலனுகாததோர் குறிப்புண்டு. எ - று.

முகிழ்ப்பு முதிர்ச்சியாற்புடைபடுதல். நகை புணர்ச்சியின்பத்தானிகழ்வது. (ச)

கஉஎரு. செறிதொடி செய்திறந்த கள்ள முறுதுயர்
நீர்க்கு மருந்தொன் றுடைத்து. ரு.

இதுவுமது.

இ - ள். செறி தொடி செய்து இறந்த கள்ளம்-நெருங்கிய வளைகளையுடையாள் என்கண்ணில்லாதொன் றனையுட்கொண்டு அது காரணமாக என்னை மறைத்துப் போன குறிப்பு—உறு துயர் நீர்க்கு மருந்து ஒன்று உடைத்து - என் மிக்கதுய ரைத் தீர்க்குமருந் தாவதொன்றனையுடைத்து. எ - று.

உட்கொண்டது பிரிவு. கள்ளம் ஆகுபெயர். மறைத்தற்குறிப்புத் தானுமுடன் போக்குட்கொண்டது. உறுதுயர் நன்றுசெய்யத் தீங்குவிளைதலானும் அதுதான் நீர் நிறம்பெருமையானும் உளதாயது. மருந்து அப்பிரிவின்மை தோழியாற்றெளிவித்தல். நீயது செய்தல்வேண்டுமென்பதாம். (இ)

கஉஎசு. பெரிதாற்றிப் பெட்பக் கலத்த லரிதாற்றி
யன்பின்மை சூழ்வ துடைத்து. சு.

தலைமகன்குறிப்பறிந்த தலைமகள் அதனை அதுதெளிவிக்கச்
சென்ற தோழிக்கறிவுறுத்தது.

இ - ள். பெரிது ஆற்றிப் பெட்பக் கலத்தல் - காதலர் வந்து தம்பிரிவினுலைய துன்பத்தினை மிகவுமாறறி நாமஇழும்வண்ணங் கலக்கின்ற கலவி—அரிது ஆற்றி அன் பின்மை சூழ்வது உடைத்து-இருந்தவாற்றுன் மேலுமத்துன்பத்தினை அரிதாகவாற்றி யிருந்து அவரன்பின்மையை நினையுந்தன்மையுடைத்து. எ - று.

பிரிதற்குறிப்பினுற் செய்கின்றதாகலான், முடிவில் இன்னுதாகா நின்ற தென்பதாம். (சு)

கஉஎள. தண்ணந் துறைவன் றணந்தமை நம்மினு
முன்ன முணர்ந்த வளை. எ.

இதுவுமது.

இ - ள் தண்ணந்துறைவன் தணந்தமை-குளிர்ந்த துறையையுடையவன் நம்மை மெய்யாற்கூடியிருந்தே மனத்தாற்பிரிந்தமையை—நம்மினும் வளை முன்னம்உணர்ந்த-அவன்குறிப்பானறிதற்குரிய நம்மினும் இவ்வளைகள் முனனேயறிதன. எ - று.

கருத்துவிகழ்ந்ததாகலிற் றணந்தமையென்றும், யான்தெளியவுணர்தற்குமுன்னே தோள்கண் மெலிந்தனவென்பாள் அதனை வளைமேலேற்றி அதுதன்னையுணாவுடைத் தாக்கியுங்கூறினுள். (எ)

கஉஎஅ. நெருநற்றுச் சென்றுரை காதலர் யாமு
மெழாளே மேனி பசந்து. அ.

துவ்வமது.

இ - ள். எங்காதலர் சென்ரூர் நெருநற்று - எங்காதலர் பிரிந்துபோயினர் நெருநற்றே;—யாரும் மேனி பசந்து எழுகாலேம் - அப்பிரிவிற்கு யாரும் மேனிபசந்து எழுகாளுண்டையமாயினேம். எ - று.

நெருநற்றுச்செய்த தலேயளியாற் பிரிவு தணியப்பட்டதென்பான் நெருநற்றுச் சென்ரூரென்றும், அதனேயையுற்றச்செல்கின்றது எழுகாளுண்டாகலின் அன்றே மேனிபசந்ததென்பான் மேனி பசந்தெழுகாலேமென்றும் கூறினள். இவ்வாற்றுற் தலேமகனது பிரிதற்குறிப்பினேயுணர்த்தினன்றது. (அ)

கஉஎகூ. தொடிநோக்கி மென்ரோளு நோக்கி யடிநோக்கி
யஃதாண் டவள்செய் தது. கூ.

தலேமகள் குறிப்பறிந்ததோழி அதனைத் தலேமகற்கறிவித்தது.

இ - ள். யானது தெளிவித்தவழித் தெளியாது,—தொடி நோக்கி - அவர் பிரிய யானீண்டிருப்பின் இவை நில்லாவெனத் தன்ரொடியை நோக்கி,—மென்ரோளும் நோக்கி - அதற்கேதுவாக இவை மெலியுமெனத் தன்மென்ரோள்களேயுநோக்கி,—அடி நோக்கி - பின்னிவ்விரண்டும் நிகழாமல் நீர் நடந்து காத்தல்வேண்டுமெனத் தன்னடியையுநோக்கி,—ஆண்டி அவள் செய்தது அஃது-அவ்வனம் அவள் செய்த குறிப்பு உடன்போக்காயிருந்தது. எ - று.

செய்தகுறிப்புச் செய்தற்கேதுவாய குறிப்பு. அஃதென்ரூள் "செறிதொடி செய்திறந்தகள்ளர்" மென்ரூலுகலின். பிரிதற்குறிப்புண்டாயின் அஃதழுங்குதல்பயன்.()

கஉஅ0. பெண்ணினுற் பெண்மை யுடைத்தென்ப கண்ணினுற்
காமநோய் சொல்லி யிரவு. க0.

தலேமகன் பிரியாமைக்குறிப்பினைத் தோழிக்கறிவுறுத்தது.

இ - ள். காமநோய் கண்ணினுற் சொல்லி இரவு - மகளிர் தங்காமநோயினைத் தோழியர்க்கும் வாயாற்சொல்லாது கண்ணிற்சொல்லி அது தீர்க்கவேண்டுமென்ற அவளாயிரவாது உடன்போதல் குறித்துத் தம்மடியினேயிரத்தல்—பெண்ணினுல் பெண்மை உடைத்து என்ப - தமக்கியல்பாகிய பெண்மைமேலும் ஒருபெண்மையுடைத்தென்ற சொல்லுவர் அறிந்தோர். எ - று.

தலேமகனுடன்போதற்றுணிபு தோழியாற் றெளிந்தாளுகலின், தன்பிரிவின்மைக் குறிப்பினேயறிவுறுப்பான், அவள்பெண்மையினேப் பிறர்மேலிட்டு வியந்து கூறியவாறு. (க0)

கஉகூ ம் அதி.—புணர்ச்சிவிதும்பல்.

அஃதாவது தலேமகனுந் தலேமகளும் புணர்ச்சிக்கண்ணே விரைதல். மேற் புணர்ச்சிவிருபற்றித் தலேமகன்பிரிதற்குறிப்பறிவுறுத்ததலேமகன்அவன்மாட்டேகிழாது வேட்கைமிகவினுற் பின்னுர் தன்கண்ணே நிகழ்தலான், இது குறிப்பறிவுறுத்தலின்பின் வைக்கப்பட்டது.

() திருக்குறள். கஉஎ0.

கஉஅக. உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு. க.

பிரிதற்குறிப்பினளுகியாளேடு நீ புலவாமைக்குக் காரணம் யாதென நகையாடிய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

இ - ள். உள்ளக் களித்தலும் - நினைத்தலினையானே களிப்பெய்தலும்—காண மகிழ்தலும் - கண்டதனையானே மகிழ்வெய்தலும்—கள்ளுக்கு இல் காமத்திற்கு உண்டு - கள்ளுண்டார்க்கில்லை, காமமுடையார்க்குண்டு. எ - று.

களித்தல் உணர்வழியாதது. மகிழ்தல் அஃதழிந்தது. இவ்விரண்டும் உண்மெ யல்லதின்மையிற் கள்ளுக்கில்லென்றான். உண்டென்பது இறந்திலளக்கு. அப்பெற் றித்தாய காமமுடைய யான்புலத்தல் யாண்டையதென்பதாம். (க)

கஉஅஉ. நினைத்தனையு மூடாமை வேண்டும் பனைத்தனையுங்
காம நிறைய வரின். உ.

இதுவுமது.

இ - ள். காமம் பனைத்தனையும் நிறைய வரின் - மகளிர்க்குக்காமம் பனையள வினும் மிகவுண்டாமாயின்,—நினைத்தனையும் ஊடாமை வேண்டும் - அவரால், தங் காதலரோடு தினையளவுஞூடுதல்செய்யாமை, வேண்டப்படும். எ - று.

பனைத்தனையுமென்புழி ஐந்தனுருபு விகாரத்தாற்றொக்கது. ஊடின் வருத்த மிருமெனப் பிறர்க்குறுதிகூறுவாள்போன்ற, தன்னிதுப்புக் கூறியவாறு. (உ)

கஉஅஊ. பேணுத பெட்பவே செய்யினுங் கொண்கனைக்
காணு தமையல கண். ஊ.

இதுவுமது.

இ - ள். பேணுத பெட்பவே செய்யினும் - நம்மையவமதித்துத் தான் வேண்டி யனவே செய்யுமாயினும்,—கொண்கனைக் கண்காணுத அமையல - கொண்கனை என் கண்கள் காணுதலமைகின்றனவில்லை. எ - று.

தன்னிதுப்புக் கண்கண்மேலேற்றப்பட்டது. அத்தன்மையேன் அவனெடு புலக் குமாறென்னை யென்பதாம். (ஊ)

கஉஅச. ஊடற்கட் சென்றேன்மற் றோழி யதுமறந்து
கூடற்கட் சென்றதென் னெஞ்சு. ச.

இதுவுமது.

இ - ள். தோழி - தோழீ,—ஊடற்கண் சென்றேன் - காதலனைக் காணுமுன் அவர்செய்ததவற்றைத்தன்னெஞ்சினோடு யானவரோடேதற்கண்ணேசென்றேன்;—என்னெஞ்சு அது மறந்து கூடற்கண் சென்றது - கண்டபின் என்னெஞ்சு அதனை மறந்து கூடுதற்கண்ணே சென்றது. எ - று.

சேறனிகழ்தல் தினைத்தனைத்திருமொத்தலின், அது மறந்தென்றான். அச்செல வாற் பயனென்னென்பதபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது.அன்னல் லியிலே செஞ்ச அறைபோலான், அது முடிந்தநில்லை யென்பதாம். (ச)

கூஅதி. எழுதுங்காற் கோல்காணாக் கண்ணேபோற் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து. இ.

இதுவுமது.

இ - ள். எழுதுங்கால் கோல் காணாத் கண்ணேபோல் - முன்னெல்லாங்கண்டிருந்தும் எழுதுங்காலத்து அஞ்சனக்கோலினியல்புகாணமாட்டாத கண்ணேபோல,—கொண்கன்பழி கண்டவிடத்துக் காணேன்-கொண்கனது தவற காணுதவிடத்தெல்லாங் கண்டிருந்து அவனைக்கண்டவிடத்துக் காணமாட்டேன். எ - று.

கோல் ஆகுபெயர். இயல்பு கருமை. என்னியல்பிதுவாகலின் மேலும் அது முடியாதென்பதாம். (இ)

கூஅசு. காணுங்காற் காணேன் தவருய காணுக்காற்
காணேன் தவறல் லவை. கூ.

இதுவுமது.

இ - ள். காணுங்கால் தவருய காணேன் - கொண்கனே யான் காணும்பொழுது அவன்தவருயவற்றைக் காண்கின்றிலேன,—காணுக்கால் தவறல்லவைகாணேன்-காணுதபொழுது அவையேயல்லது பிறவற்றைக் காண்கின்றிலேன். எ - று.

செயப்படுபொருள் அதிகாரத்தான் வந்தது. முன்புகான் கின்னெடு சொல்லிய தவறுகள் இதுபொழுது காணுமையிற் புலந்திலேனென்பதாம். (உ)

கூஅள. உய்த்த லறிந்து புனல்பாய் பவரேபோற்
பொய்த்த லறிந்தென் புலந்து. எ.

இதுவுமது.

இ - ள். உய்த்தல் அறிந்து புனல் பாய்பவரேபோல் - தம்மையீர்த்தக்கொண்டு போதலறிந்துவைத்து ஒழுகுகின்ற புனலுட்பாய்வார் செயல்போல,—பொய்த்தல் அறிந்து புலந்து என் - புலவிமுடிவுபோகாமை யறிந்துவைத்துக் கொண்டேனெடு புலந்து பெறுவதென்! எ - று.

பாய்பவரென்பது ஆகுபெயர். பொய்த்தல் புணர்தல். புலந்தாலும் பயனில்லை யென்பதாம். பொய்த்தலறிந்தேனென்பது பாடமாயின், உய்த்தலறிய ஓரீருட்பாய் வார்போல முடிவறியப்பண்டொருகாற்புலந்து முடியாமையறிந்தேன் இனி அது செயற்பாற்றன்றெனவுரைக்க. (எ)

கூஅஅ. இனித்தக்க கின்னு செயினுங் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு. அ.

தலைமகள் புணர்ச்சிவிதுப்பழிந்த தோழி தலைமகற்குச் சொல்லியது.

இ - ள். கள்வ - வஞ்சகா,—களித்தார்க்கு இனித்தக்க இன்னுசெயினும் கள்ளற்றே - தன்னேயுண்டேகளித்தார்க்கு இனிவரத்தக்க இன்னுதவற்றைச் செய்யினும் அவரால் மேன்மேல் விரும்பப்படுவதாய கள்ளுப்போலும்—நின்மார்பு - எக்கட்கு நின்மார்பு. எ - று.

அவ்வின்னுதன நாணின்மை, மிறையின்மை, ஒழுக்கமின்மை, உணர்வின்மை யென்றிவைமூதலாயின. எங்கட்கு நாணின்மை முதலியவற்றைச் செய்யுமாயினும் எங்களால் மேன்மேல் விரும்பப்படாகின்றதென்பதாம். கன்வவென்றதும் அது கோக்கி. (அ)

கூஉகூ. மலரினு மெல்லிது காமஞ் சிலாதன்
செவ்வி தலைப்படு வார். கூ.

உணர்ப்புவயின்வாராவூடற்கட்டலைமகள் சொல்லியது.

இ - ள். காமம் மலரினும் மெல்லிது - காமவின்பம் மலரினு மெல்லியதாயிருக் கும்,—அதன்செவ்வி தலைப்படுவார் சிலர் - அங்ஙனம் மெல்லிதாதலையறிந்து அதன் செவ்வியைப் பெறுவார் உலகத்துச் சிலர். எ - று.

தொட்டதனையானே மணச்செவ்வியழிவுதாய மலர் எல்லாவற்றினும் மெல்லி தென்பது விளக்கலின், உம்மை சிறப்பின்கண்வந்தது. குறிப்பும், வேட்கையும், நுகர்ச்சியும், இன்பமும் ஒருகாலத்தின்கண்ணேயொத்து நுகர்தற்குரியாரிருவர் அதற் கேற்ற இடனுங்காலமும் உபகரணங்களும்பெற்றுக் கூடி நுகரவேண்டுதலின் அதன் செவ்விதலைப்படுவார் சிலரென்றும், அவற்றுள் யாதானுமொன்றனுற் றிறு வேறு படினும் வாதலின் மலரினுமெல்லிதென்றுங் கூறினன். குறிப்பொவ்வாமையின் யானதுபெறுகின்றிலேனென்பதாம். தலைமகளூடலீர்வது பயன். (க)

கூஉகூ. கண்ணிற் றுனித்தே கலங்கினுள் புல்லுத
லென்னினுந் தான்விதுப் புற்று. கூ.

இதுவுமது.

இ - ள். கண்ணின் துனித்தே - காதலி முன்னெருஞான்று புல்லல்விதுப்பினுற் சென்ற என்னெடு தன்கண் மாத்திரத்தானூடி,—புல்லுதல் என்னினும் தான்விதுப் புற்றுக் கலங்கினுள் - புல்லுதலே என்னினுந்தான்விதும்பலான் அது தன்னையும் அப் பொழுதே மறந்து கூடிவிட்டாள்; அதனுல் யானித்தன்மையேனுவும் விதுப்பின்றி யூடினிற்கின்றவிவள் அவளல்லள். எ - று.

கண்மாத்திரத்தானூடல் சொன்னிகழ்ச்சியின்றி அது வெந்ததனையேயாதல், அவளாயின் இங்ஙனமூடற்க ணீடானென்பது பயன். (கூ)

கூ.உ ம் அதி.—நெஞ்சொடுபுலத்தல்.

அஃதாவது காரணமுண்டாயவழியும் புலக்கக்கருதாது புணர்ச்சிவிதும்பு கின்ற நெஞ்சுடனே தலைமகள் புலத்தலும், தலைமகன் புலத்தலுமாம். அதிகாரமுறை மையும் இதனுனே விளங்கும்.

கூஉகூ. அவர்நெஞ் சவர்க்காதல் கண்டு மெவனெஞ்சே
நீயெமக் காகா தது. கூ.

தலைமகன்கட்டவறுண்டாயவழியும் புலவிகருதாத
நெஞ்சிற்குத் தலைமகள் சொல்லியது.

இ - ள். நெஞ்சே - நெஞ்சே,—அவர் நெஞ்சு அவர்க்கு ஆதல்கண்டும் - அவருடைய நெஞ்சு நம்மை நினையாது அவர்க்காய்விற்றல் கண்டுவைத்தும்,—நீயெமக்கு ஆராதது எவன் - நீயெமக்காய் நில்லாது அவரை நினைத்தற்காரணம் யாது ! எ - று.

அவர்க்காதல் அவர்கருதியதற்குடம்படுதல் எமக்காகாததென்றது புலவிக் குடம்படாமையை. ஒருகருமத்தைத் தாமாகவறிந்து செய்யமாட்டாதார் செய்வாரைக் கண்டாயினுஞ் செய்வர். நீயதுவுஞ் செய்கின்றிலையென்பதாம். (எ)

கூகூஉ. உறுஅ தவர்க்கண்ட கண்ணு மவரைச்
செறுஅரெனச் சேறியென் னெஞ்சு. உ.

இதுவுமது

இ - ள். என்னெஞ்சு - என்னெஞ்சே,—உறுதவர்க் கண்ட கண்னும் - மேலும் நம்மாட்டன்புடையராகாதவரை உள்ளவாறறிந்தவிடத்தும்,—செறுரென அவரைச் சேறி - நாஞ்சென்றூர் வெகுளாரென்பதுபற்றி நீயவர்மாட்டுச் செல்லாகின்றாய், இப் பெற்றியதுமேலுமோராறியாமையுண்டோ ! எ - று.

அவரையென்பது வேற்றுமைமயக்கம். பழங்கண்ணேட்டம்பற்றி வெகுளாரென்பது கந்தாகச் சென்றூய், நீ கருதியது முடியுமோவென்பதாம். (உ)

கூகூகூ. கெட்டார்க்கு நட்டாரில் லென்பதோ நெஞ்சேநீ
பெட்டாங் கவர்பின் செலல். ஙூ.

இதுவுமது.

இ - ள். நெஞ்சே - நெஞ்சே,—நீ பெட்டாங்கு அவர்பின்செலல் - என்மாட்டு நில்லாது நீ விரும்பியவாறே அவர்மாட்டுச் செல்லுதற்குக் காரணம்—கெட்டார்க்கு நட்டார் இல்லென்பதோ - கெட்டார்க்கு நட்டார் உலகத்தில்லையென்னுணினைவோ, கின்னியல்போ, கூறுவாயாக. எ - று.

என்னைவிட்டு அவர்மாட்டுச்சேறல் நீபண்டே பயின்றதென்பாள் பெட்டாங் கென்றும், தானிதுபொழுது மானமிலளாகலிற் கெட்டார்க்கென்றுங்கூறினள். பின்னென்பது சண்டிடப்பொருட்டு. செலலென்பது ஆகுபெயர். " ஒல்கிடத்தலப்பிலாவுணர்விலார் தொடர் *" பாயிற்று கின்றொடர்பென்பதாம். (கூ)

கூகூசு. இனியன்ன கின்னெஞ் சூழ்வார்யார் நெஞ்சே
அனிசெய்து தவ்வாய்காண் மற்று.

இதுவுமது.

இ - ள். நெஞ்சே - நெஞ்சே,—தனி செய்து மற்றுத் தவ்வாய் - நீயவரைக் கண்டபொழுதே இன்பதுகரக் கருதுவதல்லது அவர்தவறுசோக்கி முன் புலவியை யுண்டாக்கி அதனியலவறிந்து பின்னுகரக்கருதாய்,—இனி அன்ன கின்னெஞ் சூழ்வார் யார் - ஆகலான், இனியப்பெற்றிப்பட்டவற்றை கின்னெஞ்டெண்ணுவார்யார் ! யானதுசெய்வேன். எ - று.

* கலி, பாலை, உசி.

அப்பெற்றிப்பட்டன புலக்குந்திறங்கள். காணென்பது உரையசை. மற்று வினை மாற்றின்கண்வந்தது. முன்னெல்லாம் புலப்பதாகவெண்ணியிருந்த பின் புணர்ச்சி விதும்பலின், இவ்வாறு கூறினள். (ச)

கூகூடு. பெருமை யஞ்சும் பெறிற்பிரி வஞ்சு
மருமை யிடும்பைத்தென் னெஞ்சு. டு.

வாயிலாகச் சென்ற தோழிகேட்பத் தலைமகள் சொல்லியது.

இ - ள். பெருமை அஞ்சும் - காதலரைப் பெருதஞான்று அப்பெருமைக்கஞ்சா நின்றது,—பெறின் பிரிவு அஞ்சும் - பெற்றக்கால் வரக்கடவ பிரிவினையுட்கொண்டு அதற்கஞ்சாநின்றது,—என்னெஞ்சு அரு இடும்பைத்து - ஆகலான், என்னெஞ்சம் எஞ்ஞான்றும் நீங்காதவிடும்பையையுடைத்தாயிற்ற. எ - று.

காதலரைப் பெற்றவைத்துக் கலவியிழத்தல் உறுதியன்றென்னுங் கருத்தான் வாயினேர்ந்தாளாகலிற் பெருமையஞ்சுமென்றும், கலவியாராமையின் இன்னுமிவர் பிரிவாரின் யாதுசெய்துமென்பது நீகழ்தலிற் பெறிற்பிரிவஞ்சு மென்றும் இவ் விரண்டுமல்லது பிரிதின்மையின் எஞ்ஞான்றுமருவிடும்பைத்தென்றும் கூறினள்.()

கூகூசு. தனியே யிருந்து நினைத்தக்கா லென்னைத்
தினிய விருந்ததென் னெஞ்சு. சு.

இதுவுமது.

இ - ள். என்னெஞ்சு இருந்தது-என்னெஞ்சு ஈண்டிருந்தது,—தனியேயிருந்து நினைத்தக்கால் - காதலரைப் பிரிந்திருந்து அவர் கொடுமைகளே யான்றன்னெஞ்சு நினைத்தக்கால்,—என்னைத் தினிய - அவ்வளவதிர்ந்து என்னைத் தின்பதுபோன்று தன்பஞ்செய்தற்கே. எ - று.

எம்மாட்டிருந்தது அன்று அவர்கொடுமைகளேயுட்கொண்டு எனக்காற்றுமை செய்தற்கே, இன்று அவைநோக்கி அவரொடு புலத்தற்கன்றென்பதாம். (க)

கூகூஎ. காணு மறற்றே னவர்மறக் கல்லாவென்
மாணு மடநெஞ்சிற் பட்டு. எ.

இதுவுமது.

இ - ள். அவர் மறக்கல்லா என் மாணு மடநெஞ்சிற் பட்டு - தன்னைமறந்த காதலரைத் தான் மறக்கமாட்டாத என்மாட்சிமையில்லாத மடநெஞ்சுடனே கூடி,—காணும் மறற்றேன்-என்னுயிரினுஞ்சிறந்த காண்டன்னையும் மறந்துவிட்டேன். எ-று.

மாணுமை ஒருசிலையினில்லாமை. மடமை கண்டவழி நினைந்து காணுதவழி மறக்குந் தவற்றைக் காணுவழிநினைந்து கண்டவழிமறத்தல். காண் எஞ்ஞான்றும் கூடி யொழுகினும் அஞ்ஞான்று கண்டார்போன்றெடுத்தல். கண்டபொழுதே புணர்ச்சி விதும்பலின், அதனையுமறற்றேனென்றாள். (எ)

கூகூஅ. என்னி னினிவாமென் றெண்ணி யவர்நிற
முன்னு முயிர்க்காத னெஞ்சு. அ.

இதுவுமது.

இ - ள். உயிர்க் காதல் நெஞ்சு - உயிர்மேற் காதலுடைய என்னெஞ்சு,—என்னின் இனிய ஆம் என்ற எண்ணி - நம்மையெள்ளிச்சென்றுசென்ற காமுமெள்ளுமே மாயிற் பின்னைக்கினியரென்று கருதி,—அவர் நிறம் உள்ளும்-அவர் நிறத்தினையே நினையாநின்றது. எ - று.

எள்ளுதல் வாயின்மறுத்தல். இனிய வழிபடாமையானும், பிரிவாற்றுமையானும், காணும் நிறையுமுதலியவிழத்தலானும் உளதாவது. நிறம் வாயினேர்தலும் வருதலும் கூடலுமுதலாயின. இளிவிற்கஞ்சுதலானும் இறத்தபட மாட்டாமையானும் கூடக் கருதாநின்றதென்பதாம். (அ)

கக. தன்பத்திற் பொரே தணியாவார் தாமுடைய
நெஞ்சந் தணியல் வழி. கூ.

உணர்ப்புவபின்வாராவூடற்கட்டலைமகன் சொல்லியது

இ - ள். தன்பத்திற்கு - ஒருவர்க்குத்தன்பம்வந்தழி, அது நீக்குதற்கு,—தம் வயத நெஞ்சம் தணியல்வழி - தாமுரித்தாகப்பெற்ற தம்முடைய நெஞ்சந்தணியாதாவழி —தணியாவார் யாரே - வேறு தணியாவார் ஒருவருமில்லை. எ - று.

ஈண்டுத் தன்பமாவது ஊடலுணர்ப்புவபின்வாராமை. அதற்கு நெஞ்சந்தணியாதலையாவது, அவனியன்பிலனென்றெழுதியாது கூடற்கண்ணே விதும்பல். ஒரு தணியுமின்மையின், இஃதற்றவிடதலே புன்னதென்பதாம். (ஆ)

கஉ00. தஞ்சந் தமரல்ல ரேதிலார் தாமுடைய
நெஞ்சந் தமர்வழி. க0.

இதுவுமது.

இ - ள். தாம் உடைய நெஞ்சம் தமர் அல்வழி - தாமுரித்தாகவுடையநெஞ்சம் ஒருவர்க்குத் தமரல்லாவழி,—எதிலார் தமர் அல்லர் தஞ்சம் - அயலார் தமரல்லாதல் சொல்லவேண்டுமோ! எ - று.

பிறனொருத்தியைக் காதலியென்று கருதி என்னெஞ்சே என்னை வருத்தாநின்றபின் அப்பிறன் புலக்கின்றதெளிதென்பதாம். (இ0)

கைக்கிளை அதி.—புலவி.

அஃதாவது இருவர் நெஞ்சும் புணர்ச்சி விதும்பாது புலக்கக்கருதியவழி ஒருவரோடொருவர் புலத்தல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

கஉ0க. புல்லா நிராஅப் புலத்தை யவருறு
மல்லனோய் காண்கஞ் சிறிது. க.

வாயிலாகச்சென்ற தோழி தலைமகன் வாயினேர்ந்தபொருட்டு
அவளோடு ஊடியாடிச் சொல்லியது.

இ - ள். அவர் உறும் அல்லல் நோய் சிறிது காண்கம்-அங்ஙனம் புலந்தாற் காதலரெய்துமல்லலெனையீனே யாஞ்சிறிது காணக்கடவேம்,—புல்லாத இராப் புலத்தை-நீயவரை விரைந்துசென்று புல்லாதே இத்தொழிலே மேலிட்டுக்கொண்டிருந்து புலப்பாயாக. எ - று.

அல்லலெனுந் துன்பத்தைச்செய்யுங் காமநோய் சிறிதென்றுள், புலவியை நீளவிடலாகாதென்பதுபற்றி. புலத்தையென்புழி ஐகாரம் "கடம்பூண்டொருகாவீ வர்தை" என்புழிப்போல முன்னிலையினையிருந்தி. புலத்தியென்பதனுகரம் பாடம். புலவிக்குறிப்புக்கண்டு அவன்வழியளாய் நின்று காமுற்ற வருத்தம் அவருஞ்சிறிதுற்றறிதல்வேண்டுமெனக் கையாடி நோவித்தவாறு. (க)

கஈ०உ. உப்பமைந் தற்றுற் புலவி பதுசிறிது
மிக்கற்று னீள விடல். உ.

புலவியோழிந்து வாயினேரும்வகை அவள் சொல்லியது.

இ - ள். புலவி உப்பு அமைந்தற்று - புலவி கலவி இன்பஞ்செயற்கு வேண்டுமளவிற்றுதல் உப்புத் தூய்ப்பனவற்றை இன்சுவையவாக்கற்கு வேண்டுமளவிற்றுதல் போலும்;—சிறிது நீளவிடல் அது மிக்கற்று - இனி அதனையவ்வளவிற்சிறிதுமிகவிடுதல் அவ்வுப்பு அளவின்மிக்காற்போலும். எ - று.

நீளவிடல் அளவறிந்துணராத கலவிமேலெழுந்த குறிப்பழுங்குமளவுஞ்செய்தல்: சிறிதுநீளவிடலாகாதென்றுள், நோவிக்கின்றுளாகலின். உப்பு மிக்கவழித் தூய்ப்பது சுவையின்றுற்போலப் புலவிமிக்கவழிக் கலவி இன்பமின்றுமென்றமையின், இது பண்புவமை. (உ)

கஈ०கூ. அலந்தாரை யல்லனெய் செய்தற்றுற் றம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல். கூ.

பரத்தையரிடத்துநின்றும் வந்த தலைமகனெடு
தலைமகள் புலந்து சொல்லியது.

இ - ள். தம்மைப் புலந்தாரைப் புல்லாவிடல் - தம்மைப்பெறாது புலர்த்த மகளிரைப் புலவிதீர்க்கக் கலவாது ஆடவர்சேறல்—அலந்தாரை அல்லல்நோய் செய்தற்று - பண்டேதன்பமுற்றழிர்தாரை அதன்மேலும் மிக்க துன்பத்தினைச் செய்தாற்போலும். எ - று.

பிறர்பாற்சேறலின் நம்மைப்பெறுது புலர்ந்தடியிருக்கின்ற பரத்தையரைப் போய்ப் புலவிதீர்க்கப் புல்லீராயின், அவராற்றுரென்பதாம். (க)

கஈ०ச. ஊடி யவரை யுணராமை வாடிய
வள்ளி முதலரிக் தற்று. ச.

இதுவுமது.

இ - ள். ஊடியவரை உணராமை - நம்மோடியிய பரத்தையரை ஊடலுணர்த்திக் கூடாதொழிதல்—வாடிய வள்ளி முதல் அரிக்தற்று - பண்டே நீர்பெருதி வாடிய கொடியை அடியிலேயறுத்தாற்போலும். எ - று.

---

* கலி, குறிஞ்சி, உஎ.

நீர் பரத்தையரிடத்திராயவழி எம்புதல்வரைக் கண்டாற்றியிருக்கற்பாலமாய யாம் அம்மோடேதற்குரியமல்லம், அன்னமபின் எம்மைபுணர்த்தல்வேண்டா, உரிய ராயுடிய பரத்தையரையே உணர்த்தல்வேண்டுவது, அதனால் ஆண்டுச்சென்மி னென்பதாம். (ச)

கஉ௦நி. நலத்தகை நல்லவர்க் கேளர் புலத்தகை
பூவன்ன கண்ணு ரகத்து. நி.

தலைமகளைப் புலவிநீக்கிக் கூடிய தலைமகன் றன்னுள்ளே சொல்லியது.

இ - ள். நலத்தகை நல்லவர்க்கு எர் - நற்குணங்களாற் றகுதியுடையராய தலை வர்க்கும் அழகாவது—பூ அன்ன கண்ணர் அகத்துப் புலத்தகை - தம்பூவன்னகண் ணூர் நெஞ்சின்கண் நிகழும் புலவியிகுதியன்றே. எ - று.

சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. தவறில்லார்க்கும் புலவி இனிதென்பான், நலத்தகை நல்லவர்க்குமென்றான். அழகு இன்பப்பயனைத்தலைப்படுதல். தானுகர்ந்த வின்பத்திற்கேதுவாகிய புலவியை வியந்து கூறியவாறு. (இ)

கஉ௦சு. தனியும் புலவியு மில்லாயிற் காமங்
கனியுங் கருக்காயு மற்று. சு.

இதுவுமது.

இ - ள். தனியும் புலவியும் இல்லாயின் - முதிர்ந்த கலாமாகிய தனியும் இளைய கலாமாகிய புலவியும் இல்லையாயின்,—காமம் கனியும் கருக்காயும் அற்று - காமம் செவ்வி முதிர்ந்தபழமும் இளங்காயும்போலும். எ - று.

மிகமுதிர்ந்திறுமெல்லத்தாய கனி நுகர்வார்க்கு மிகவுமினிமைசெய்யாதாகலிற் றனியில்லையாயிற்கனியற்றென்றும்; கட்டிளமைத்தாய காய் நுகருஞ்செவ்வித்தன்மை யிற் புலவியில்லையாயிற் கருக்காயற்றென்றும் கூறினான். இவ்விரண்டும் வேண்டு மென்று வியந்து கூறியவாறு. (ஈ)

கஉ௦எ. ஊடலி னுண்டாங்கோர் தன்பம் புணர்வது
நீடுவ தன்றுகொ லென்ற. எ.

இதுவுமது.

இ - ள். புணர்வது நீடுவது (கொல்) அன்றுகொல் என்ற - இனிப்புணர்ச்சி நீட்டிக்குமோ நீட்டியாதோவென்றதருதலான்,—ஊடலின் ஓர் தன்பம் உண்டு - இன்பத்திற்கின்றியமையாத ஊடலின்கண்ணேயும் ஒருதன்பநிகழும். எ - று.

என்றென்னுமெச்சத்திற்குக் கருதலானென்பது வருவிக்கப்பட்டது. சிறப் பும்மை விகாரத்தாற்றொக்கது. கொல்லென்பதனை நீடுவதென்பதனுடனுங்கூட்டுக. ஆல்லென்பது அசைநிலை. ஊடல் கூடற்கண் விளைவித்தல் கூறியவாறு. (எ)

கஉ௦அ. நோத லெவன்மற்று நொந்தாரென் றஃதறியுங்
காதல ரில்லா வழி. அ.

உணர்ப்புவயின்வாராவூடற்கட்டலைமகன் தலைமகளோடு
புலந்து சொல்லியது.

இ - ன். சொத்தாசென்ற அளித்து அறியும் காதலர் இல்லாவழி, இவர் எம்பொருட்டாக சொத்தாசென்ற அர்மோவின்யறிவு மன்புடையாரைப்பெருவழிட்டுசொதல் மற்று எவன் - ஒருவர் சோகின்றதனுற்பயனென்! எ - று.

அறிதல் ஈண்டேலேயினிதுணர்தல். மற்று வினைமாற்றின்கண் வந்தது. இவள் நங்காதலியல்லள், அன்மையின் இச்சோவறியாள், அறியாமையின் நாம் புலக்கின்றதனுற் பயனில்லேயெனத் தன்னுற்றுமையுணர்த்தியவாறு. (அ)

கஉ. நீரும் நிழலு னினிதே புலவியும்
வீழுநர் கண்ணே யினிது. கூ.

இதுவுமது.

இ - ன். நீரும் நிழலுதே இனிது - உயிர்க்கின்றியமையாத நீரும் நிழலின் கண்ணதே இனிதாவது, ஏனை வெயிலின்கண்ணது ஆகாது;—புலவியும் வீழுநர் கண்ணே இனிது - அதுபோலக் கலவிக்கின்றியமையாத புலவியும் அன்புடையார் கண்ணே இனிதாவது, ஏனையன்பிலார்கண் ஆகாது. எ - று.

நிழற்கணிருந்த நீர் குளிர்ச்சிமிக்குத் தாகந்தணித்தலின் இனிதாயிற்று. வீழுநர் ஆற்றுமைக்கு நோதலும் கூடுதற்கண் வேட்கையுமுடையராவார். இவள் நம்மாட்டு அவ்விரண்டுமின்மையின் இப்புலவிதானு மின்னுதாகாகின்ற தென்பதாம். (க)

கஙஉ. ஊட லுணங்க விடுவாரோ டென்னெஞ்சங்
கூடுவே மென்ப தவா. கo.

இதுவுமது.

இ - ன். ஊடல் உணங்க - தானூடற்கண்ணே யெலியாகிற்கவும்,—விடுவாரோடு கூடுவேம் என்பது என்னெஞ்சம் அவா - விட்டிருக்கவல்லாரோடு கூடக்கடவேமென்று என்னெஞ்சம் முயறற்கே தன்னவாவே, பிறிதில்லே. எ - று.

அன்புமருளுமில்லாதாரை உடையரென்றும் அவரோடியாய் கூடுவமென்றுங் கருதி அதற்கு முயறல் அவாவுற்றார் செயலாகலின், கூடுவேமென்பதவாவென்றார். காரியங் காரணமாக வுபசரிக்கப்பட்டது. இக்கூட்டம் முடியாதென்பதாம். (கo)

கஙஉ ம் அதி—புலவி நுணுக்கம்.

அது புலவியது நுணுக்கமென விரியும். அஃதாவது தலைமகனுந் தலைமகளும் ஒருவளிக்கட் கூடியிருந்துழி அவன்மாட்டுப் புலத்தற்காரணமில்லையாகவுங் காதல் கைம்மிகுதலான் நண்ணியதோர் காரணமுளதாகவுட்கொண்டு அதனை யவன்மேலேற்றி அவள் புலத்தல். காரணத்தினுணுக்கம் காரியத்தின்மேனின்றது. அதிகார முறைமையும் இற்றுனே விளங்கும்.

கஙக. பெண்ணிபலா செல்லாரும் கண்ணிற் பொதுவுண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு. கக

உலாப்போய்வந்த தலைமகன் பள்ளியிடத்தாளுகத் தலைமகள் சொல்லியது.

இ - ன். பரத்த - பரத்தமையுடையையாய்!—பெண்ணியலார் எல்லாரும் கண்ணிற் பொதுவுண்பர் - நின்னைப் பெண்ணியல்பினையுடையார் யாவரும் தங்கண்ணுற் பொது

வாவெனப்பார்; பின்மாய்பு கண்ணேன்; அதனால் அவர்மிச்சைய தின்னாபினோம் பொருண்டீன்.' எ - து.

சற்பு காண்முதலிய சற்குணங்களின்மையிற் பாத்தையர்க்குள்ளது பெண்மியற்கைமாத்திரமேயென்னுங் கருத்தாற் பெண்ணியலாரென்றுன். பொதுவாகவுண்டல் தஞ்சேர்ச்சிசெலவின் முறையானன்றி ஒருகாலத்தொருவருசோக்குதல்: அதுவு மோர்குற்றம். தாசோக்கியின்புற்றவாறே அவருசோக்கியின்புறவெனவுசாவித்து அவர்பாற் பொருமையெய்துதலின், தணுக்கமாயிற்று. (எ)

கூடிஇ. ஊடி யிருந்தேமாத் தம்மினுர் யாந்தம்மை
நீடுவாழ் கென்பாக் கறிக்து. உ.

தலைமகனிக்கத்துச் சென்ற தோழிக்குத் தலைமகள்
பள்ளியிடத்து நிகழ்ந்தது கூறியது.

இ - ன். ஊடி இருந்தேமாத் தம்மினுர் - யாந்தம்மோடியபுரையாடாதிருந்தே மாகச் காதலர் தம்மினுர்,—யாம் தம்மை நீடுவாழ்கென்பாக்கு அறிந்து - அதனிலேதி தம்மை நீடுவாழ்கென்றுரையாடுவேமாகக் கருதி. எ - து.

தம்மியக்கால் வாழ்த்துதல் மரபாகலான், உரையாடல் வேண்டிற்றென்பதாம். இயல்பானிகழ்ந்த தும்மிலைக் குறிப்பானிகழ்ந்ததாகக் கோடலின், தணுக்கமாயிற்று.

கூடிஈ. கோட்டுப்பூச் சூடினுங் காயு மொருத்தினைக்
காட்டிய சூடினீ ரென்று. கூ.

தலைமகள் புலவிக்குறிப்பினைக் கண்டு நீவிர்கூடியோழுகாநிற்கவும் இறுகிகழ்தற்குக் காரணம் யாதென்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது.

இ - ன். கோட்டுப்பூச் சூடினும் - யான்கோடுதலைச் செய்யுமாலையைச் சூடினேனுயினும்,—ஒருத்தியைக் காட்டிய சூடினீர் என்ற காயும் - நம்மாற்காதலிக்கப் பட்டானொருத்திக்கு இப்பூவணிகாட்டல்வேண்டிச் சூடினீரென்ற வெகுளாகிற்கும், இத்தன்மையாட்கு ஒருகாரணம் வேண்டுமோ! எ - து.

கோடென்பது முதனிலைத்தொழிற்பெயர். பூ ஆருபெயர். வாயமாகச்சூடினு மென்பதாம்; "கோட்டம் கண்ணியுங் கொங்கிரை யாடையும்" என்றுர் பிறரும். இனி அம்மருதனிலத்துப்பூவன்றி வேற்றுனிலத்துக் கோட்டுப்பூவைச் சூடினேனுயினும் ஈண்டையான் பிறனொருத்திக்கு அவ்வேற்றுப்பூவணி காட்டல்வேண்டிச் சூடினீரென்று வெகுளுமெனினுமமையும். (கூ)

கூகஉ. யாரினும் காதல மென்றேனு ஊடினுள்
யாரினும் யாரினு மென்ற.

இதுவுமது.

இ - ன். யாரினும் காதலம் என்றேனு - காமநுகர்ச்சிருசியி விருவராயினும் யாவரினும் யாம் மிக்க காதலையுடையேமென்பது கருதி யாரினும் காதலமென்றேனுக,—யாரினும் யாரினும் என்ற ஊடினுள் - பின்றேழி அது கருதாது, என்றற்

* புறநானூறு, உஎடு.

காதலிக்கப்பட்ட மகளிர் பலருள்ளும் நின்கட்காதலுடையே னென்றேனுக்கருதி, அம்மகளிர் யாரினும் என்கட் காதலுடையராயினீரென்று சொல்லிப் புலந்தாள். எ - று.

தலைமகள் கருத்திற்குத் தன்மைப்பன்மை உயர்ச்சிக்கண் வந்தது. யானன்பு மிகுதியாற் சொல்லியதனைக் கருத்து வேறுபடக்கொண்டதல்லது பிறிதுகாரண மில்லையென்பதாம். (ச)

கூகரு. இம்மைப் பிறப்பிற் பிரிபல மென்றேனுக்
கண்ணிறை நீர்கொண்ட னள். ரு.

இதுவுமது

இ - ள். இம்மைப் பிறப்பிற் பிரியலம் என்றேனு - காதன்மிகுதியான் இம்மை யாகிய பிறப்பின்கண் யாம் பிரியேமென்று சொன்னேனுக,—கண்ணிறை நீர்கொண்ட னள் - அதனுன் ஏனைமறுமையாகிய பிறப்பின்கட் பிரிவலென்னுங் குறிப்பினேனுக்கருதி, அவள் தன்கண்ணிறைந்த நீரினைக்கொண்டாள். எ - று.

வெளிப்படுசொல்லைக் குறிப்புச்சொல்லாகக் கொள்கின்றதல்லது என்பாற்றவறில்லையென்பதாம். (இ)

கூகசு. உள்ளினே னென்றேன்மற் றென்மறந்தீ ரென்றெண்ணிப்
புல்லாள் புலத்தக் கனள். சு.

இதுவுமது.

இ - ள். உள்ளினேன் என்றேன் - பிரிந்தகாலத்து நின்னையிடையின்றி நினைந்தேனென்னுங்கருத்தால் யானுள்ளினேனென்றேன்;—மற்று என்மறந்தீர் என்று எண்ணிப் புல்லாள் புலத்தக்கனள் - என, அதனை ஒருகான் மறந்து பின்னினைந்தே னென்றதாகக் கருதி, என்னையிடையே மறந்தீரென்று சொல்லிமுன் புல்லுதற்கமைந்தவள் அஃதொழிந்து புலத்தற்கமைந்தாள். எ - று.

மற்று வினைமாற்றின்கண் வந்தது. அருத்தாபத்திவகையான் மறத்தலையுட்கொண்டு புலந்தாளென்பதாம். (ஈ)

கூகஎ. வழுத்தினு மும்மினே னுக வழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீ ரென்று. எ.

இதுவுமது.

இ - ள். தும்மினேனுக வழுத்தினுள் - கூடியிருக்கின்றவள் யான் றும்மினேனுக்கத் தன்னியற்கைபற்றி வாழ்த்தினுள்,—அழித்து யார் உள்ளித்தும்மினீர் என்று அழுதாள் - அவ்வனம் வாழ்த்தியதானே மறித்து, றும்மை நினைத்து வருத்தமின்ற மகளிருள் யாவர் நினைத்தலாற் றும்மினீரென்று சொல்லிப் புலந்தழுதாள். எ - று.

வாழ்த்தலொடு புலத்தல் இயையாமையின், அழித்தென்றான். அன்புடையார் நினைத்தவழி அச்சினைக்கப்பட்டார்க்குத் தும்மலுண்டாமென்பது மகளிர்வழக்கு. இவ் வழக்கை உள்வழக்காகக் கருதிப் புலத்தானென்பதாம். (ஏ)

கூகஅ. தும்முச் செறுப்ப வழுதா னுமருள்ள
லெம்மை மறைத்திரோ வென்று. அ.

இ - ள். தும்மூச் செறுப்ப - எனக்குத் தும்மலேன்றியவழி யாருள்ளித்தும்மினீ என்று புலத்தலையஞ்சி, அதனை யானடக்கினேன்; அவ்வனமடக்கவும் — நமக் உள்ளல் எம்மை மறைத்திரோ என்று அழுதாள் - நமர் நும்மை நினைத்தலே எம்மை மறைக்கலுற்றீரோவென்று சொல்லிப் புலர்த்தழுதாள். எ - று.

தும்முவென்பது முதனிலைத்தொழிற்பெயர். செறுப்பவென்புழி இதற்குத் தழீஇயவெச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. எம்மையென்பது நும்மோடியாதமிலை பில்லாத வெம்மை யென்பதுபடநின்ற இசையெச்சம். இதனை வடநூலார் காரு வென்ப. தும்மினுங் குற்றம் ஒழியினுங்குற்றமாயக்கால் செயற்பாலதியாதென்பதாம்.

கஉகஙு. தன்னை யுணர்த்தினுங் காயும் பிறர்க்குரீ
ரிர்ரீர ராருயி ரென்று. ஙு.

இதுவுமது.

இ - ள். தன்னை உணர்த்தினுங் காயும் - இவ்வாற்றாலுணர்த்திய தன்னை யான் பணிந்து உணர்த்துங்காலும் வெகுளாதிற்கும்,—பிறர்க்கும் நீர் இந்நீர் ஆருயிர் என்று - பிற மகளிர்க்கும் அவருடியவழி இவ்வாறே பணிந்துணர்த்துநீர்மையையுடையீராகுமி ரென்று சொல்லி. எ - று.

இவள் தெளிவித்தவழியுந் தெளியாளென்பதுபற்றி என்மேலேற்றிய தவற்றை உடம்பட்டுப் பணிந்தேன், பணிய அதுதானும் புலத்தற்கேதுவாய் முடிந்தது, இனி யிவண்மாட்டுச் செய்யத்தகுவதியா தென்பதாம். (க)

கஉஉ. நினைத்திருந்து நோக்கினுங் காயு மனைத்துநீர்
யாருள்ளி நோக்கினீ ரென்று. கூ.

இதுவுமது.

இ - ள். நினைத்து இருந்து நோக்கினும் காயும் - என்சொற்களுஞ் செயல்களும் பற்றித் தான் வெகுடலான், அவற்றையொழிந்திருந்து தன்னவயவங்களதொப்பின் மையை நினைந்து அவற்றையே நோக்கினும், என்னை வெகுளாதிற்கும்,—அனைத்தும் நீர் நோக்கினீர் யார் உள்ளி என்று - என்னவயவமனைத்தும் நோக்கினீர் அவற்ற தொப்புமையான் எம்மகளிரை நினைந்தென்று சொல்லி. எ - று.

யான் எல்லாவவயவங்களாலும் ஒருத்தியோடொற்றல் கூடாமையின் ஒன்று லொருவராகப் பலரையுநினைக்கவேண்டும்; அவரெல்லாரையும் யானறியச் சொல்லுமி னென்னுங் கருத்தால், அனைத்துநோக்கினீர் யாருள்ளியென்றுள். வானாலிருத்தலும் குற்றமாயிற்றென்பதாம். (கூ)

கஉகூ. ம் அதி.—ஊடலுவகை.

அஃதாவது அப்பெற்றித்தாய ஊடலாற் றமக்குக் கூடலின்பஞ் தெர்ந்தழி அச்சிறப்பிற்கேதுவாய அவ்வூடலைத் தலைமகளுவத்தலும் தலைமகனுவத்தலுமாம். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.

கஉஉக. இல்லே தவறவர்க் காயினு மூடுதல்
வல்ல தவரளிக்கு மாறு. க.

தலைமகள் காரணமின்றிப் புலக்கின்றமை கேட்ட தோழி அங்ஙன
ம் புலக்கின்றதென்னையென்றுட்கு அவள் சொல்லியது.

இ - ள். அவர்க்குத் தவற இல்லையாயினும், அவர்மாட்டுத்தவறில்லையாயினும்,—அவர் அளித்தருமாறு ஊடுதல் வல்லது - நமக்கவர் தலையளிசெய்கின்றவாறு அவரோடுதலே விளைக்க வற்றாகின்றது. எ - று.

அவர்க்கென்பது வேற்றுமைமயக்கம். அளவிறந்தவின்பத்தாகலின் யானெய்தற்பாலதாய இத்தலையளி ஒழிந்தாருமெய்துவரெனக்கருதி அது பெருமையுள் ஊடனிகழாகின்றதென்பதாம். (எ)

கூடூஉ. ஊடலிற் றோன்றுஞ் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும். உ.

புலவாக்காலும் அத்தலையளி பெறலாயிருக்க அஃதிழந்து புலவியான் வருந்துவ தென்னையென்றுட்கு அவள் சொல்லியது.

இ - ள். ஊடலின் தோன்றும் சிறுதுனி - ஊடலேதுவாக எங்கட்டோன்றின சிறிய துனிதன்னுள்—நல்லளி வாடினும் பாடுபெறும் - காதலர்செய்யு நல்ல தலையளிவாடுமாயினும் பெருமையெய்தும். எ - று.

தவறின்றி நிகழ்கின்றவூடல் கடிதினீங்கலின் அத்துன்பமுமில்லாதென்பாள் சிறுதுனியென்றும், ஆராமைபற்றி நிகழ்தலின் அதனுள் நல்லளி வாடாதென்பாள் வாடினுமென்றும், பின்னே பேரின்பம்பயக்குமென்பாள் பாடுபெறுமென்றுங்கூறினாள். அது வருத்தமெனப்படாதென்பதாம். (உ)

கூடூஉ. புலத்தலிற் புத்தேணா டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்ன நகத்து. ஊ.

இதுவுமது.

இ - ள். நிலத்தொடு நீர் இயைந்தன்னநகத்துப் புலத்தலின் - நிலத்தொடு நீர் கலந்தாற்போல ஒற்றுமையுடைய காதலர்மாட்டுப் புலத்தல்போல—புத்தேள் நாடு உண்டோ - நமக்கின்பந்தருவதொரு புத்தேளுலகமுண்டோ, இல்லை. எ - று.

நீர் தானின்ற நிலத்தியல்பிற்றுமாறுபோலக் காதலருந் தாங்கூடிய மகளிரியல்பினராகலான் அதுபற்றி அவரோடு புலவி நிகழுமென்பாள். நிலத்தொடு நீரியைந்தன்னநகத்தென்றும், அவர் நமக்கும் அன்னராகலின் அப்புலவி பின்னே பேரின்பம் பயக்கின்றதென்பாள் புலத்தலிற் புத்தேணாடுண்டோவென்றுங் கூறினாள். உலகம் பயன்பற்றி வந்தது. (ஊ)

கூடூஉ. புல்லி விடாஅப் புலவியுட் டோன்றுமென்
னுள்ள முடைக்கும் படை. எ.

அப்புலவி இனியாதானீங்குமென்றுட்குச் சொல்லியது

இ - ள். புல்லி விடாப் புலவியுள் தோன்றும் - காதலரைப் புல்லிக்கொண்டு பின்விடாமைக் கேதுவாகிய அப்புலவிக்கண்ணே புகுதரும்—என் உள்ளம் உடைக்கும் படை - அதன்மேற்சென்ற என்னுள்ளத்தைத் தெறித்தும் படைக்கலம். எ - று.

புலவியுளென்னுமேழாவது வினைநிகழ்ச்சிக்கண் வந்தது. என்னுள்ளமுடைக்கும்படைக்கலமென்றது வணக்கத்தையும் பணிமொழியையும் படைக்கலமென்றுள், அவற்றுள் அப்புலவியுள்ளமழிதலின். புலவிநீங்குந்திறங் கூறியவாறு. (எ)

கூடா நட்பின் தீயினுந் தம்மிழ்வார் மென்றோள்
ஊக்கவி னுங்கொன் றுடைத்து. இ.

தலைமகனோடனீக்கிக் கூடிய தலைமகன் கழியுவகையனுய்த்
தன்னுள்ளே சொல்லியது.

இ - ள். தவறு இலராயினும் தாம் வீழ்வார் மென்றோள் அகறலின் - ஆடவர் தங்கட்டவறிலராயினும் உடையார்போலநடிப்பட்டித் தாம் விரும்புமகளிருடைய மெல்லிய தோள்களைக் கூடப்பெருதவெல்லக்கண் — ஆங்கு ஒன்ற உடைத்து-அவர்க்கு அப்பெற்றியதோரின்பம் பயத்தலுடைத்து. எ - று.

உடையராயக்கால் இரந்தவின்பத்தோடு வருமின்பமுமெய்துவராகலின் அது மிகுன்று. மற்றையிலராயக்காலும் வருமின்பத்தையிகழ்ந்தில்லையென்னுங் கருத்தால், தவறிலராயினு மாங்கொன்றுடைத்தென்றுன். ஊடலினுயவின்பம் அளவித்தலிற் கூறற்கரிதென்பான், அப்பெற்றியதொன்றென்றுன். தவறின்றிடியதாகும் எனக்கின்பமாயிற்றென்பதாம். (இ)

கூடா நட்பி னுணலினு முண்ட தறலினிது காமம்
புணர்தலி னூட லினிது. ஈ.

இதுவுமது.

இ - ள். உணலினும் உண்டது அறல்இனிது-உயிர்க்கு மேலுண்பதனினும் முன்னுண்டதறல் இன்பந்தரும்;—காமம் புணர்தலின் ஊடல் இனிது - அதுபோலக் காமத்திற்கு மேற்புணர்தலினும் முன்னேற்தவறுபற்றி யூதல் இன்பந்தரும். எ - று.

காமத்திற்கென்புழிச் சாரிரையும் நான்கனுருபும் விகாரத்தாற்றொக்கன. பிரித்துண்ணும்வழி மிகவுண்ணலுமாய் இன்சுவைத்துமாம் அதுபோல அன்றுகூடும்வழி ஆராதுமாய்ப் பேரின்பத்துதுமாமென்றன்னுபவம்பற்றிக் கூறியவாறு. (உ)

கூடா வூடலிற் ரேற்றவர் வென்ரு ரதுமன்னும்
கூடலிற் காணப் படும். எ.

இதுவுமது.

இ - ள். ஊடலின் தோற்றவர் வென்ரூர் - காமநுகர்தற்குரிய இருவருள் ஊடலின்கட்டோற்றவர் வென்ரூராவர்;—அது கூடலிற் காணப்படும் - அஃதப்பொழுதறியப்படாதாயினும் பின்னைப்புணர்ச்சியின்கண் அவராலறியப்படும். எ - று.

தோற்றவர் எதிர்தலாற்ரூது சாய்ந்தவர். அவர் புணர்ச்சிக்கட் பேரின்பமெய்தலின் வென்ரூராயினர். மன்னும் உம்மும் அசைநிலை. யானதுபொழுது சாய்தலின் இதுபொழுது பேரின்பம்பெற்றேனென்பதாம். (எ)

கூடி யடிப் பெறுகுவம் கொல்லோ நறுநல்வெயர்ப்பக்
கூடலிற் ரேன்றிய வுப்பு. அ.

இதுவுமது.

இ - ள். நறுநல் வெயர்ப்பக் கூடலில் தோன்றிய உப்பு - இதுபொழுது இவணறுநல் வெயர்க்கும்வகை கல்லியின்றணுளதாய இனிமையை—ஊடிப் பெறுகுவம் கொல்லோ - இன்னுமொருகால் இவணூடியாம் பெறவல்லேமோ! எ - று.

தலைமகள் காரணமின்றிப் புலக்கின்றமை கேட்ட தோழி அங்ஙன
மே புலக்கின்றதென்னையென்றுட்கு அவள் சொல்லியது.

இ - ள். அவர்க்குத் தவற இல்லையாயினும், அவர்மாட்டுத் தவறின்மையாலும், — அவர் அளித்தருமாறு ஊடுதல் வல்லது - தமக்கவர் தலையளிசெய்கின்றவாறு அவரோடு ஊடுதலே வினைக்க வற்றாகின்றது. எ - று.

அவர்க்கென்பது வேற்றுமைமயக்கம். அளவிறந்தவின்பத்தராகவின் யாவரையும் தம்மைத்தாய இத்தலையளி ஒழிந்தாருமெய்துவரெனக்கருதி அது பெருமையுள் ஊடனிகழாகின்றதென்பதாம். (எ)

கூஉஉ. ஊடலிற் றோன்றுஞ் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும். உ.

புலவாக்காலும் அத்தலையளி பேறலாயிருக்க அஃதிழந்து புலவியான்
வருந்துவ தென்னையென்றுட்கு அவள் சொல்லியது.

இ - ள். ஊடலின் தோன்றும் சிறுதுனி - ஊட்டலேதவாக எங்கட்டோன்று கின்ற சிறிய துனிதன்னுல்—நல்லளி வாடினும் பாடுபெறும் - காதலர்செய்யு நல்ல தலையளிவாடுமாயினும் பெருமையெய்தும். எ - று.

தவறின்றி நிகழ்கின்றவூடல் கடிதினீங்கலின் அத்துன்பமுறில்லாதென்பாள் சிறு துனியென்றும், ஆராமைபற்றி நிகழ்தலின் அதனை நல்லளி வாடாதென்பாள் வாடினு மென்றும், பின்னே பேரின்பம்பயக்குமென்பாள் பாடுபெறுமென்றுங்கூறினுள். அது வருத்தமெனப்படாதென்பதாம். (உ)

கூஉஉ. புலத்தலிற் புத்தேணு மென்டோ நிலத்தொடு
நீரியைந் தன்ன ருகத்து. ஊ.

இதுவுமது.

இ - ள். நிலத்தொடு நீர் இயைந்தன்னருகத்துப் புலத்தலின் - நிலத்தொடு நீர் கலந்தாற்போல ஒற்றுமையுடைய காதலர்மாட்டுப் புலத்தல்போல—புத்தேள் நாடு உண்டோ - தமக்கின்பந்தருவதொரு புத்தேளுலகமுண்டோ, இல்லை. எ - று.

நீர் தானின்ற நிலத்தியல்பிற்றுமாறுபோலக் காதலருந் தாங்கூடிய மகளிரியல் பினராகலான் அதுபற்றி அவரோடு புலவி நிகழுமென்பாள். நிலத்தொடு நீரியைந் தன்னருகத்தென்றும், அவர் தமக்கும் அன்னராகலின் அப்புலவி பின்னே பேரின்பம் பயக்கின்றதென்பாள் புலத்தலிற் புத்தேணுண்டோவென்றுங் கூறினுள். உவமம் பயன்பற்றி வந்தது. (ஊ)

கூஉஉ. புல்லி விடாஅப் புலவியுட் டோன்றுமென்
னுள்ள முடைக்கும் படை. எ.

அப்புலவி இனியாதானீங்குமென்றுட்குச் சொல்லியது

இ - ள். புல்லி விடாப் புலவியுள் தோன்றும் - காதலரைப் புல்லிக்கொண்டு பின்விடாமைக் கேதுவாகிய அப்புலவிக்கண்ணே புகுதரும்—என் உள்ளம் உடைக்கும் படை - அதன்மேற்சென்ற என்னுள்ளத்தைத் தெறித்தும் படைக்கலம். எ று.

புலவியுளென்னுமேழாவது வினைநிகழ்ச்சிக்கண் வந்தது. என்னுள்ளமுடைக் கும்படைக்கலமென்றது வணக்கத்தையும் பணிமொழியையும் படைக்கலமென்றுள், அவற்றுள் அப்புலவியுள்ளமழிதலின். புலவிநீங்குதற்கு வரியவாது. (எ)

கூற்று. தவறில ராயினுந் தாம்வீழ்வார் மென்றோள்
அகற்சி யிரங்கொன் றுடைத்து. இ.

தலைமகனோடனீக்கிக் கூடிய தலைமகன் கழியுவகையனுய்த்
தன்னுள்ளே சொல்லியது.

இ - ள். தவறு இலராயினும் தாம் வீழ்வார் மென்றோள் அகறலின் - ஆடவர் தங்கட்டவறிலராயினும் உடையார்போலஞடப்பட்டுத் தாம் விரும்புமகளிருடைய மெல்லிய தோள்களைக் கூடப்பெருதவெல்லைக்கண் — ஆங்கு ஒன்று உடைத்து-அவர்க்கு அப்பெற்றியதோரின்பம் பயத்தலுடைத்து. எ - று.

உடையராயக்கால் இரந்தவின்பத்தோடு வருமின்பமுமெய்துவராகலின் அது மிகுமன்று. மற்றையிலராயக்காலும் வருமின்பத்தையிகழ்ந்ததில்லையென்னுங் கருத்தால், தவறிலராயினு மாங்கொன்றுடைத்தென்றான். ஊடலினுயவின்பம் அளவித்தலிற் கூறற்கரிதென்பான், அப்பெற்றியதொன்றென்றான். தவறின்றியூடலதூஉம் எனக்கின்பமாயிற்றென்பதாம். (இ)

கூற்று. உணலினு முண்ட தறலினிது காமம்
புணர்தலி னூட லினிது. கூ.

இதுவுமது.

இ - ள். உணலினும் உண்டது அறல்இனிது-உயிர்க்கு மேலுண்பதனினும் முன்னுண்டதறல் இன்பந்தரும்;—காமம் புணர்தலின் ஊடல் இனிது - அதுபோலக் காமத்திற்கு மேற்புணர்தலினும் முன்னைத்தவறுபற்றி யூடுதல் இன்பந்தரும். எ - று.

காமத்திற்கென்புழிச் சாரிலையும் நான்கனுருபும் விகாரத்தாற்றொக்கன. பிறத் தின்னும்வழி மிகவுண்ணுமாய் இன்சுவைத்துமாம் அதுபோல அகன்றுகூடும்வழி ஆராதமாய்ப் பேரின்பத்ததுமாமெனத் தன்னனுபவம்பற்றிக் கூறியவாறு. (உ)

கூற்று. ஊடலிற் ரோற்றவர் வென்ற ரதுமன்னும்
கூடலிற் காணப் படும். எ.

இதுவுமது.

இ - ள். ஊடலின் தோற்றவர் வென்றார் - காமநுகர்தற்குரிய இருவருள் ஊடலின்கட்டோற்றவர் வென்றாராவர்;—அது கூடலிற் காணப்படும் - அஃதப்பொழு தறியப்படாதாயினும் பின்னைப்புணர்ச்சியின்கண் அவராலறியப்படும். எ - று.

தோற்றவர் எதிர்தலாற்றுது சாய்ந்தவர். அவர் புணர்ச்சிக்கட் பேரின்பமெய்தலின் வென்றாராயினர். மன்னும் உம்மும் அசைநிலை. வானுபொழுது சாய்தலின் இதுபொழுது பேரின்பம்பெற்றேனென்பதாம். (எ)

கூற்று. ஊடிப் பெறுகுவம் கொல்லோ நுதல்வெயர்ப்பக்
கூடலிற் ரோன்றிய வுப்பு. அ.

இதுவுமது.

இ - ள். நுதல் வெயர்ப்பக் கூடலில் தோன்றிய உப்பு - இதுபொழுது இவணுதல் வெயர்க்கும்வகை கல்லியின்றணுள்தாய இனிமையை—ஊடிப் பெறுகுவம் கொல்லோ - இன்னுமொருகால் இவ்வூடி யாம் பெறவல்லேமோ! எ - று.

கலவியது விசேடம்பற்றி அதல்வெயர்ப்பவென்றான். இனிமைகண்டு கேட்டேன் வெர்த்தற்றதலாலுயலின்பம். இனி அப்பேறு கூடாதெனப் பெற்றதன்றெப்புக் கூறியவாறு. (அ)

கூடூக. ஊடுக மன்னே வொளியிழை யாமிரப்ப
நீடுக மன்னே விரா. கூ.

இதுவுமது.

இ - ள். ஒளியிழை ஊடுகமன் - ஒளியிழையினையுடையாள் இன்னுமெம்மோடே வானாக;—யாம் இரப்ப இரா நீடுகமன் - அங்ஙனம் அவளூடியிற்றற்கும் அதனை யுணர்த்துதற்பொருட்டே யாமிரந்து கிற்றற்கும் காலம்பெறுவகை இவ்விரவு விடியாது நீட்டித்தல்வேண்டுக. எ - று.

ஊடுக நீடுகவென்பன வேண்டிக்கோடற்பொருள. மன்னிரண்டும் ஆக்கத்தின் கண் வந்தன. ஓகாரங்கள் அசைநிலை. கூடலின் ஊடலேயமையுமென்பதாம். (க)

கூடூ0. ஊதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின். கூ0.

இதுவுமது.

இ - ள். காமத்திற்கு இன்பம் ஊதல் - காமநுகர்ச்சிக்கின்பமாவது அதனை நுகர்தற்குரியராவார் ஆராமைபற்றித் தம்முளூதல்;—அதற்கு இன்பம் கூடி முயங்கப் பெறின் - அவ்வூதற்கின்பமாவது, அதனையவரித்து நீங்கித் தம்முட்கூடி முயங்குதல் கூமாயின், அம்முயக்கம். எ - று.

கூதல் ஒத்தவனினாதல். முதிர்ந்ததனியாயவழித் துன்பம் பயத்தலானும், முதிராத புலவியாயவழிக் கலவியின்பம் பயவாமையானும், இரண்டற்குமிடையாகிய வனவரித்து நீங்குதலரிதென்பதுபற்றிக் கூடிமுயங்கப்பெறினென்றான். அவ்விரண்டின்பமும் யான் பெற்றேனென்பதாம். (கo)

ஈண்டுப் பிரிவினை வடநூன்மதம்பற்றிச் செலவு ஆற்றுமை விதுப்புப் புலவி யென நால்வகைத்தாக்கிக் கூறினர். அவற்றுட்செலவு பிரிவாற்றுமையுள்ளும், ஆற்றுமை படர்மெலிந்திரங்கல் முதல் நிறையழிதலீறாயவற்றுள்ளும், விதுப்பு அவர் வயின்விதும்பன்முதற் புணர்ச்சிவிதும்பலீறாயவற்றுள்ளும், புலவி நெஞ்சொடுபுலத்தன்முதல் ஊடலுவகையீறாயவற்றுள்ளுங் கண்டுகொள்க. அஃதேல் வடநூலார் இவற்றுடனே சாபத்தினையுங் கூட்டிப் பிரிவினை ஐவகைத்தென்றாரெனின், அஃது, அறம்பொருளின்பமென்னும் பயன்களுள் ஒன்றுபற்றிய பிரிவன்மையானும், முனிவராணையான் ஒருகாலத் தோற்றுற்றதனதாவதல்லது உலகியல் பாய் வாராமையானும், ஈண்டொழிக்கப்பட்டதென்க.

கற்பியல் முற்றிற்று.

காமத்துப்பால் முற்றிற்று.

திருவள்ளுவர் பரிமேலழகருரை முற்றுப்பெற்றது.

உரைச்சிறப்புப்பாயிரம்.

திருத்தகுசீர்த் தெய்வத் திருவள் ளுவர்தங்
கருத்தமைதி தானே கருதி—விரித்துரைத்தான்
பன்னு தமிழ்தேர் பரிமே லழகனெனு
மன்னு மூயர்காமன் வந்து.

பாலெல்லா நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ—நூலிற்
பரித்த வுரையெல்லாம் பரிமே லழகன்
தெரித்தவுரை யாமோ தெளி.

திருக்குறளின்
சிறப்புப்பாயிரமாகிய
திருவள்ளுவமாலை.

அசரீரி.

க. திருத்தகு தெய்வத் திருவள் ளுவரோ
டுருத்தகு கற்பலகை யொக்க—விருக்க
வுருத்திர சன்ம ரெனவுரைத்து வானி
லொருக்கமோ வென்றதோர் சொல்.

இ - ள். திருத்தகு தெய்வத் திருவள்ளுவரோடு - அருட்செல்வத்தையும் அதற்குத்தக்க தெய்வத்தன்மையையுமுடைய திருவள்ளுவரோடு—உருத்தகு கற்பலகை உருத்திரசன்மர் ஒக்க இருக்க என உரைத்து - அவரிருத்தற்குத் தனது உருவத்திலுலே தக்க நல்ல சங்கப்பலகையிடத்து உருத்திரசன்மர் ஒருவரே ஒப்பவேறியிருக்க வென்று கூறி,—வானில் ஒருக்க ஓர்சொல் ஒவென்றது - ஆகாசத்திலிருந்து அவ்விடத்துள்ள புலவர் கருத்தையெல்லாம் ஒற்றுமைசெய்யும்படி ஒருவாக்கியம் ஒவென்று இரைந்தெழுந்தது.

"அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம்" என்பவாகலின், திருவென்றதற்கு அப்பொருளுரைக்கப்பட்டது. தெய்வத்தன்மை தெய்வத்தினவதாரமாய் விளங்குகை: தெய்வத்தன்மையில்லார்க்கு அருளுளதாயினும் அதனுலே பெரும்பயன் வீலோயாமையின், தகுதி சொல்லப்பட்டது. திருவள்ளுவரென்னும் பெயருள், திருவென்பது உயர்வையும், வள்ளுவரென்பது வண்மையையுடைய ரென்பதையும், விளக்கி நின்றனவாகலின், அது வேதத்தில் இலேமறைகாய்கள்போற் பலவிடங்களிலும் மறைந்து வெளிப்படாதிருந்த மெய்ப்பொருள்களேயெல்லாம் தொகுத்து உலகத்தாருக்குக் கொடுத்தருள்செய்தவரென்னுங் காரணம்பற்றி வந்த பெயராயிற்று. வள்முதனிலே, அர் இறுதிநிலே, உசாரியை. அம்முதனிலேக்குப் பொருள் ஈகை. உருத்திரசன்மர் உருத்திரனுல் அடைந்த சன்மத்தையுடையரென வினியும். அவர் முருகக்கடவுளது திருவவதாரமாய் வணிகர்மரபிற்றோன்றிய மூங்கைப்பிள்ளேயார். அசரீரி அருவமாய் எங்கும்நிறைந்துள்ள முதற்றெய்வம். அரங்கேற்றத்தொடங்கிய காலத்துத் தெய்வப் புலவரோடு ஒப்பவிருந்து கேட்டற்குத் தகுதியுடையோர் யாரென யாவரும் எண்ணமுற்று நின்றவழி இவ்வசரீரிவாக்கியம் பிறந்தது. என்றதனைப் படர்க்கையினையாகக்கூறலின், ஆண்டு நின்று கேட்ட புலவர்களுள் ஒருவர் அதனே இவ்வனம் பாடலாகச் செய்தனரென்றறிக. (க)

நாமகள்.

உ. நாடா முதலுண் மறைகான் முகனுவிற்
பாடா வினைப்பா சதம்பகர்ந்தேன்—கூடாரை
வெள்ளிய வென்றி யிலங்கிலேவேல் மாறபின்
வள்ளுவன் வாயதென் வாக்கு.

இ - ள். கூடாரை எள்ளிய வென்றி இலங்கு இலை வேல் மாற - பகைவரைப் புறங்கொடுக்கச்செய்து இகழ்ந்த வெற்றியை உண்டாக்கி விளங்காநின்ற இலைபோலும் வேற்படையையுடைய பாண்டியராசனே,—நாடா - உலகத்தார் வீதிலிலக்குக் கூட அறிந்து உய்யும்வழியை நாடி,—முதல் நான்முகன் நாவில் நான்முறை பாடா - படைப்புக்காலத்திலே பிரமனது நாவிலிருந்து இருக்குமுதலாகிய நான்குவேதங் கூறும் பாடி,—இடைப் பாரதம் பகர்ந்தேன் - இடைனகாலத்திலே பாரதமாகிய வேதத்தைக் கூறினேன்;—பின் என்வாக்கு வள்ளுவன் வாயது - அதற்குப் பிற்பட்ட இக்காலத்திலே என்வாக்குத் திருக்குறளாகிய வேதத்தைச்சொல்லி வள்ளுவன் வாயின்கண்ணதாயிற்று. எ - று.

தன் கணவனுகலின் நான்முகனுவிலிருந்தென்றும், அவனவதாரமாகவின், வள்ளுவன்வாயதென் வாக்கென்றும், கூறினுள். பாரதம் வியாசரைக்கொண்டு சொல்லப்பட்டது. இதனுல் நான்மறை பூர்வவேதமும், பாரதம் மத்தியவேதமும், திருக்குறள் உத்தரவேதமும், என்றதாயிற்று. வேதம் மூவகைத்தென்பதனுலும், இவற்றது தோற்றமுறையால் இது வாக்கியப்பிரமாணத்திற் சிறப்புடைத்தென்பதனுலும், சொல்லியபடி. (உ)

இறையனுர்.

கூ. என்றும் புலரா நியாணர்நாட் செல்லுகினு
நின்றலர்ந்து தேன்பிலிற்று நீர்மையதாய்க்—குன்றுத
செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத் திருமலர்போன்
மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல்.

இ - ள். மன் புலவன் வள்ளுவன் வாய்ச்சொல் - புலவர்க்கரசனுகிய வள்ளுவன் வாயிற் பிறந்த திருக்குறளானது,—என்றும் யாணர் புலராது நாட்செல்லுகினும் நின்று அலர்ந்து தேன் பிலிற்றும் நீர்மையதாய் - எக்காலத்துந் தன்னழகுகெடாது செங்காலங் கழியினும் நிலைபெற்று மலர்ந்து தேனைச்சொரிகின்ற குணமுடையதாய் விளங்குமாதலால்,—குன்றுத செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத்திருமலர்போன்றும் - குறைவுபடாத செய்ய தளிர்களையுடைய கற்பகத்தினது தெய்வத்தன்மைபொருந்திய உயர்வாகிய மலர்போலும். எ - று.

திருக்குறளுக்கு அழகு சொன்முடிபு பொருண்முடிபின் குணங்களும், அலர்தல் எங்கும் பரவுதலும், தேன் பிலிற்றல் இருமை யின்பங்களும் விளைத்தலுமாம். சொல் ஆகுபெயர்.இறையனர் கடவுளாகவின், இனி இதிற் சிறப்பதென்னனதாவதின்றென்னுர் தணிவுதோன்ற என்றுமென்றும், பின்னும் அதனை வலியுறுத்தற்கு நாட்செல்லுகினுமின்றென்றும், வாழ்த்துப் பொருள்பட இவ்வாறு கூறினர். இஃது அழியாது நின்றுபெருமைப் பயன்படுமாறு சொல்லியபடி. (கூ)

உக்கிரப்பெருவழுதியார்.

ச. நான்மறையின் மெய்ப்பொருளு முப்பொருளா நான்முகத்தோன்
றுன்மறைத்து வள்ளுவனுய்த் தந்துரைத்த—நூன்முறையை
வந்திக்க சென்னிவாய் வாழ்த்துக நன்னெஞ்சு
சிந்திக்க கேட்க செவி.

இ - ள். நான்முகத்தோன் தான் மறைத்து வள்ளுவனுய் நான் மறையின் மெய்ப்பொருளை மூப்பொருளாத் தந்து உரைத்த நன்முறையை-நான்முகன் தான்

தன்னுருமறைத்து நிருவள்ளுவனுயவதரித்து கான்குவேதங்களினுண்மைப்பொருளே அறம் பொருள் இன்பமென்னும் முப்பாற்பொருளாகத் தமிழிற்றர்துகூறிய நிருக்குற ளெழுநிய நிருமுறையை—சென்னி வர்நிக்க - என்றலே வணங்குக,—வாய் வாழ்த்த - வாய் தழிக்க,—நன்னெஞ்சம் நிந்நிக்க - நல்லமனம் நியானிக்க,—செவி கேட்க - காதுகேட்க. எ - று.

முப்பொருள் ஆருபெயர். இவ்வேதப்பொருள் ஆதியிலே வேதஞ்சொல்லியோனுலேயே சொல்லப்பட்டமையால் உலகத்துச் சமயாசாரியர்களாலும் பிறராலும் ஒன்றற்கொன்று மாருகக் கொள்ளப்பட்ட பொருள்களேபோல்வதன்றென்பது தோன்ற, மெய்ப்பொருளென்ருர். கலேபுணர்புலமையித்தலேமையோனுகி விதிமுறைவழாது முதலிலம் புரக்கும் பெருந்தகை யுக்கிரப் பெருவழுதியென்னுந் தன்னிகரில்லா மன்னவர் பெருமான் தான்மேற்கொண்ட சிறப்பைப் பலரும் அறிந்து மேற்கொள்ள, இவ்வாறு வழிபாடுகூறினன், "மன்ன னெப்படி மன்னுயி ரப்படி" ஆகலின். இப்புத்தகத்தை முன்னே பூசித்து மெய் மொழி மனங்களால் வணக்கஞ்செய்து பின் கேட்க வேண்டுமென்று சொல்லியபடி. (சு)

கபிலர்.

(நி) நிணையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தான்—மனையளகு
வள்ளைக் குறங்கும் வளநாட வள்ளுவனூர்
வெள்ளைக் குறட்பா விரி.

இ - ன். மனை அளகு வள்ளைக்கு உறங்கும் வளநாட - மனையில் வளர்க்கப்படுகின்ற பறவைப்பேடுகள் உலக்கைப்பாட்டால் கண்ணுறங்குகின்ற வளம்பொருந்திய நாட்டையுடைய அரசனே,—வள்ளுவனூர் வெள்ளைக்குறட்பா விரி - நிருவள்ளுவனால் அருளிச்செய்யப்பட்ட குறள்வெண்பா மிகப்பெரிய பொருளைத் தன்னுட்கொண்டு காட்டுதல்—நிணையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட பனையளவு காட்டும் படித்து - நிணையரிசியினளவுக்கும் போதாத சிறிய புல்லினது நுனியின்கணுள்ள பனிநீர் உயர்ந்த பனையினளவான அதன்சாயையைத் தன்னுட்கொண்டு காட்டுங் குணம் போலுங் குணத்தையுடைத்து. எ - று.

பனை ஆருபெயர். ஆல் அசை. பறவை கிளி முதலியவை. உலக்கைப்பாட்டு மகளிர் பரிமளப்பொடி இடிக்கின்றபோது பாடும்பாட்டு. விரி விரித்தல். எப்படி மிகச் சிறிய பனித்துளியிலே மிகப் பெரிய பனைமரத்தின்சாயை அடங்கி விளங்குகின்றதோ அப்படியே மிகச்சிறிய இக்குறள்வெண்பாவில் மிகப்பெரிய பொருள் அடங்கி விளங்குகின்றதென்பதாம். இது சுருங்கியிருந்தும் விரிவான பொருளை விளக்குமாறு சொல்லியபடி. இது முதலியன சங்கத்துப்புலவராலே பாடப்பட்டன. (இ)

பரணர்.

கூ. மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியான்
ஞால முழுது நயந்தளந்தான்—வாலறிவின்
வள்ளுவருக் தங்குறள்வெண் பாவடியால் வையத்தா
ருள்ளுவலெல் லாமளந்தா ரோர்ந்து.

இ - ன். மாலும் குறளாய் வளர்ந்து இரண்டு மாண் அடியால் ஞாலம் முழுதும் நயந்து அளந்தான் - நிருமாலும் குறளாய்ப் பிறந்து வளர்ந்து இரண்டு பெரிய அடி

னால் உலகமனைத்தையும் விரும்பி அளந்தான்;—வாலறிவின் வள்ளுவரும் தம்குறள் வெண்பா அடியால் வையத்தார் உள்ளவ எல்லாம் ஓர்ந்து அளந்தார்-மெய்யறிவினை புடைய திருவள்ளுவரும் தம்மினின்றுந்தோன்றி அந்நிலைநின்ற வெண்பாக்குற ளின் இரண்டுசிறிய அடிகளால் அவ்வுலகமனைத்திலுமுள்ளோரால் நினைக்கப்பட்ட வற்றையெல்லாம் ஆராய்ந்து அளந்தார். எ - று.

உம்மையிரண்டும், முறையே தேவரிற் பெரியோனுகியவென்றும், மனிதரிற்சிறிய ராய்க் காணப்பட்டவென்றும், பொருள்பட நின்றன உவமானத்திலே வளர்தலும் பெருமையும் சொல்லுதலால், உவமேயத்திலே அவற்றுக்கு முரணிய நிலைபிற்றலும் சிறுமையும் வருவிக்கப்பட்டன. மாலுக்குத்தானே குறளாதலும் பின்பு அந்நிலை யில்லாது வளர்தலும் பேரடிகளால் அளவுபட்ட உலகத்தையளத்தலும், திருவள்ளுவருக் குத் தம்மினின்றுங்குறஞ் உண்டாக்குதலும், அது தன்னிலைநிற்றலும் அதன் சிற்றடி களால் அளவுபடாத நினைப்பின்விடயங்களை அளத்தலும், சொல்லப்படுதலாலும், வேற்றுமையறிக. நினைக்கப்பட்டனவெல்லாம் இதனகத்து அளவுசெய்யப்பட்டமை சொல்லியபடி. (க)

நக்கீரர்.

எ. தானே முழுதுணர்ந்து தீண்டமிழின் வெண்குறளா
லானு வறமுதலா வங்கான்கு—மேனேருக்
கூழி னுரைத்தாற்கு மொண்ணீர் முகிலுக்கும்
வாழியுல கென்னுற்று மற்று.

இ - ள். தானே முழுது உணர்ந்து - தானே வேதப்பொருளனைத்தையும் அறிந்து,—தண்டமிழின்வெண்குறளால் ஆனுஅறம் முதலா அங்கான்கும் மேனேருக்கு ஊழின் உரைத்தாற்கும் - தண்ணிய தமிழின்கண் குறள்வெண்பாக்களால் விட்டு நீங்குதல் கூடாத அறமுதலாகிய அங்கான்குபொருள்களையும் அவற்றையறியாதவர்க ளுக்கு அவர் எளிதினறிய முறையாற் சொல்லியருளிய திருவள்ளுவருக்கும்—ஒண் ணீர் முகிலுக்கும் - ஒள்ளிய நீரைத் தந்த மேகத்துக்கும்—உலகு மற்று என் ஆற்றும்- இவ்வுலகம் எதிர் நன்றி யாதுசெய்யும்! செயக்கிடந்தது ஒன்றும் இல்லை;—வாழி - அவரும் அதுவும் வாழ்க. எ - று.

ஆனமை நீங்காமை. தானே முழுதுணர்ந்தெனவே, ஆசாரியராயிருந்து பிறரறி வீக்க அறிந்திலரென்றதாயிற்று. முழுதுமென்னுமும்மை தொக்கது. ஒண்மை இனி மைமேனின்றது. முறை தூலின்முப்பொருள்களின் கிடக்கையொழுங்கு. காயனூர் கொடைச்சிறப்புச் சொல்லியபடி. (எ)

மாமூலனுர்.

அ. அறம்பொரு ளின்பம்வீ டென்னுமந் நான்கின்
நிறந்தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்
வள்ளுவ னென்பானேர் பேதை யவன்வாய்ச்சொற்
கொள்ளா ரறிவுடை யார்.

இ - ள். அறம் பொருள் இன்பம் வீடு என்னும் அந்நான்கின் நிறம் தெரிந்து செப்பிய தேவை - அறமுதலாகச் சொல்லப்பட்ட அவ்வேதப்பொருள்களாகிய நான் கனது கூறுபாட்டையும் தெரிந்து உலகத்தார்க்குச் சொல்லிய தேவனை—மறந்தேயும் வள்ளுவன் என்பான் பேதை - மறந்தாயினும் ஒருமனிதனுக உட்கொண்டு கும்பிடுவ

னென்று சொல்லுதற்கு ஒருவனுளனாயின், அவன் அறிவில்லாதவனுவன்;—அவன் வாய்ச் சொல் அறிவு உடையார் கொள்ளார் - அவனது வாயிற்பிறந்த அச்சொல்லை அறிவுடையார் கொள்ளார். எ - று.

அறமுதலியவற்றின் கூறுபாடு அவற்றினது தொகை வகை விரிகள். மறற்றேயு மென்றதனுல், தினைப்புடன் சொல்லுவோன் பேதையிற் பேதையாமென்பதாயிற்று. முன்னும் பின்னுமுள்ள பாட்டுக்களில் இப்பெயர் தெய்வத்தன்மையைக் குறிப்பிக்கும் படி கன்குமதித்து உயர்த்திச் சொல்லப்படுதலால், ஒருமனிதனை வுட்கொண்டென் பது வருவிக்கப்பட்டது; அன்றி ஒலிக்குறிப்பினுலே சாதியிழிவு தோன்ற வள்ளுவ னென்பானெனினுமமையும். இக்குறிப்பொலியை வடநூலார் காருசரமென்பர். தெய் வப்புலவரை அமைதிப்பினிழிவு சொல்லியபடி. (அ)

கல்லாடர்.

கூ. ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனி
னன்றென்ப வாறு சமயத்தார்—கன்றென
வெப்பா லவரு மியைபவே வள்ளுவனுர்
முப்பான் மொழிந்த மொழி.

இ - ள். ஆறுசமயத்தார் ஒன்றே பொருள் எனின் வேறு என்ப - அறுவகைமைத் தோரும் ஒருமதத்தார் தமது நூலிலே உலகமும் உயிரும் கடவுளுமாகிய பொருள் கள் ஒன்றேயென்று நாட்டுவராயின், மற்றொருமதத்தார் தமது நூலிலே அதனை மறுத்து அவை வேறுமென்று நாட்டுவர்;—வேறு எனின் அன்று என்ப - அப்படி வேறென்றுநாட்டின், பின்னொருமதத்தார் அதனை அன்றென்று மறுப்பர்; ஆதலால், சமயநூல்களெல்லாம் இவ்வாறு மறுக்கப்படுகின்றன—வள்ளுவனுர் முப்பால் மொழிந்த மொழி கன்று என எப்பாலவரும் இயைப - திருவள்ளுவராலே முப்பாலா கச் சொல்லப்பட்ட நூலை நன்றென்று கொள்ளுதற்கு எவ்வகைப்பட்ட பருதியோ ரும் உடன்படுவார். எ - று.

மொழி ஆருபெயர். ஆருமதமாவன் வியாசமதம், சைமினிமதம், பதஞ்சலிமதம், கபிலமதம், கணாதமதம், அக்ஷபாதமதம்; அன்றிச் சைவ வைணவ முதலியவற்றைக் கூறினுமாம். எச்சமயத்தாரு மென்னுது எப்பாலவருமென்றதனுல், வேதத்துக்கு உட்பட்ட சமயத்தாரேயன்றிப் புறப்பட்ட சமணம், பௌத்தம் முதலிய மதத்தாரும், பலவகைப்பட்ட சாதியாரும், தேசத்தாரும், காலத்தாரும், பிறரும், தழுவப்படுத லறிக. இதுவே பொதுவேதமென்றபடி. (க)

சீத்தலைச்சாத்தனுர்.

கo. மும்மலையு முக்காடு முக்காதியு முப்பதியு
மும்முரசு முத்தமிழு முக்கொடியு—மும்மாவுக்
தாமுடைய மன்னர் தடமுடிமேற் ருன்றே
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்.

இ - ள். வள்ளுவர் பா முறை தேர் முப்பால் - திருவள்ளுவரது பாக்களின் மூன்றின் முறைதெரிதற்கிடனுகிய திருக்குறளானது,—மும்மலையும் - கொல்லிமலை சேரிமலை பொதியமலை எனப்படுகின்ற மூன்றுமலைகளையும்—முக்காடும் - குடகாடு புனனுடு தென்னுடு எனப்படுகின்ற மூன்றுகாடுகளையும்—முக்காதியும் - பொருகை நதி காவிரிநதி வையைநதி எனப்படுகின்ற மூன்றுநதிகளையும்—முப் பதியும் - கரு

நூல் உறைநூல் முதல் எனப்படுகின்ற மூன்று பகுதிகளையும்—மும்மூலம் - மல்லல் மூரல் வெற்றிமூரல் கொடைமூரல் எனப்படுகின்ற மூன்று முரசுகளையும்—முத்தமிழும் - இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழ் எனப்படுகின்ற மூன்று தமிழ்களையும்—மூக்கொடியும் - விற்கொடி புலிக்கொடி மீனக்கொடி எனப்படுகின்ற மூன்று கொடிகளையும்—மும்மாவும் - கனவட்டம் பாடலம் கோரம் எனப்படுகின்ற மூன்று குதிரைகளையும்—தாம் உடைய மன்னர் தடமுடிமேல் தார் அன்றே - தாம் முறையே புடைய சேரசோழபாண்டியர் எனப்படுகின்ற மூவரசருடைய பெரிய முடிகளின்மேலும் கொள்ளப்பட்டமாலையன்றே. எ - று.

அன்றேவென்றது பலரறிதேற்றம். மூப்பால் ஆருபெயர். மும்மூரசும் மூத்தமிழும் அம்மூவரசர்க்கும் பொதுமையவாயினும், இம்முறையுரிமை அவர் குடிமரபிற்கு இயைந்தனபோலும். அரசர் மூவரும் மேற்கொண்ட சிறப்புச்சொல்லியபடி. (கo)

மருத்துவன்றாமோதரனார்.

கக. சிந்திரீக் கண்டம் தெறிசுக்குத் தேனளாய்
மோந்தபின் யார்க்கும் தலைக்குத்தில்—காந்தி
மலைக்குத்து மால்யானை வள்ளுவர்மூப் பாலாற்
றலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு.

இ - ள். காந்தி மலைக்குத்தும் மால் யானை - தன்பகையென வெகுண்டு மலையைக் குத்துகின்ற பெரிய களிறுபோலுள்ள அரசனே,—சிந்தி நீர்க்கண்டம் தெறி சுக்குத் தேன் அளாய் மோந்தபின் யார்க்கும் தலைக்குத்து இல் - சிந்தி நீர்ச் சருக்கரையையும் தைக்கப்பட்ட சுக்கையும் தேனெடு கலந்து மோந்தபின் அதனால் தலைக்குத்துடையோர் யாவர்க்கும் தலைக்குத்து இல்லையாகும்—வள்ளுவர் மூப்பாலால் சாத்தற்குந் தலைக்குத்துத் தீர்வு - திருவள்ளுவர் அருளிச்செய்த மூப்பாவினாலே சித்தலைச்சாத்தனார்க்குத் தலைக்குத்து இல்லையாயிற்று. எ - று.

யானைபோல்பவனை யானையெனலால் ஆருபெயர். மூன்றோட்சப்பட்ட நூல்களெல்லாம் பலசொற்குற்றங்களும், பொருட்குற்றங்களும், கண்டு பொருது நிலையில் அறைந்துகொண்டுவந்தமையால், புண்பட்டுக் குத்தல் உண்டாயிருந்தது; இதன்கண் ஒருகுற்றமுங்காணப்பெறுமையால் அது நீங்கிற்றென்க. எப்படி அம்மூன்று சரக்கும் அதற்கு மருந்தாமோ அப்படியே இதற்கு இம்மூன்றுபாலும் மருந்தாயினவென்பதாம். நீர்வென்னுந்தொழிற்பெயர் முற்றுப்பொருளில் வந்தது. இதன் குற்றமற்றுவினயுகை சொல்லியபடி. (கக)

நாகன்றேவனார்.

கஉ. தானார் மலர்ப்பொய்கை தாங்குடைவார் தண்ணீரை
வேளா தொழிதல் வியப்பன்று—வாளாதா
மப்பா லொருபாலை யாப்பவோ வள்ளுவனார்
மூப்பான் மொழிமூழ்கு வார்.

இ - ள். தான் ஆர் மலர்ப்பொய்கை குடைவார் தண்ணீரை வேளாதொழிதல் வியப்பு அன்று - தானத்தோடு பொருந்திய தாமரைமலர்களையுடைய ஒருகுளத்தினின்றும் மூழ்குவோர் வேறுதண்ணீரை விரும்பாதொழிதல் வியப்பைச்செய்வதன்று,—வள்ளுவனார் மூப்பால் மொழி மூழ்குவார் தாம் வாளா அப்பால் ஒருபாலை ஆய்பவோ - திருவள்ளுவரது மூப்பால்களையுடைய நூலின்கண்ணே மூழ்குவார் தாம்

வீணை அப்பால் ஒரு நூலே விரும்புவரோ! விரும்பார்; ஆகலின், இதுவே வியப்பைச் செய்வதாம். எ - று.

தாளார்மலரெனலால், தாமரைமலரெனப்பட்டது. வியப்பைச் செய்வதை வியப்பென்றார். மூழ்குதல் இக்கே கருத்துமுழுதும் அழுந்திநிற்றன்மேனின்றது. மொழி ஆருபெயர். ஓகாரம் எதிர்மறை. விரும்புதலாயை காரணத்தை ஆய்பவோ வெனக்காரியமாக உபசரித்தார். அது வியப்பன்றென்றமையால், இது வியப்பென்றதாயிற்று. உயர்வானபொருள் பெற்றோர்க்கு அதினிழிவானபொருளேயும் பெற விரும்புதல் இயல்பாயிருக்க, குவிர்ச்சி இன்சுவை நறுமணம் முதலிய குணங்களாலே சிறந்த ஒரு தாமரைக்குளத்து நீரைப் பெற்றோர்க்கு அதனுற்றானே அமைதி பெற்று வேறுதண்ணீரைப் பெற விரும்பாமை வியப்பைச் செய்வதாயிற்று; ஆயினும் இதுகாறும் ஒரு நூலைக் கற்றோர்க்கு வேறுநூலைக்கற்க விரும்புதலன்றி விரும்பாமையில்லாதிருக்க, இப்போது உளதாகலின், இதுவே பெருவியப்பைச்செய்வதென்றதாயிற்று. இதனால், இந்நூலகத்து எந்நூற்பொருளும் அடங்கியிருக்கின்றமை குறிப்பிக்கப்பட்டது. பலநூல்களேயும் கற்க விரும்புவோர்க்கு இதுவொன்றே அமைதல் சொல்லியபடி. (கஉ)

அரிசில்கிழார்.

கஊ. பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு
தெரிந்து நிறன்தொறுஞ் சேரச்—சுருங்கிய
சொல்லால் விரித்துப் பொருள்விளங்கச் சொல்லுதல்
வல்லாரார் வள்ளுவரல் லால்.

இ - ள். பரந்த பொருளெல்லாம் பார் அறிய வேறு தெரிந்து - வேதத்திலே ஒன்றோடொன்று மயங்கிநின்ற நால்வகைப் பொருள்களேயும் இப்பூமியிலுள்ளோர் அறிதற்பொருட்டு வேறுவேறு பிரித்து—நிறன்தொறுஞ் சேரச் சுருங்கிய சொல்லால் பொருள்விளங்க விரித்துச் சொல்லுதல் வல்லார் - அது அது தனது தனது வகையோடு சேரும்படி சுருங்கிய சொல்லால் பொருள் விளங்க விரியும்படி வைத்துச் சொல்லுதல் வல்லார்—வள்ளுவரல்லால் ஆர்-வள்ளுவரல்லது ஒருவருமில்லை. எ-று.

ஆர் ஆருபெயர். நிறம் அறமுதலியவற்றின் கூறுபாடு. சுருங்கச்சொல்லல் விளங்கவைத்தன்முதலிய அழகுகள் எப்படி இவரால் அமைக்கப்பட்டனவோ அப்படிப் பிறரால் அமைக்கப்படுதல் கூடாமை காட்டியதாயிற்று. நூலுக்கும் நாயனுர்க்கும் தகுதி சொல்லியபடி. (கஎ)

பொன்முடியார்.

கஏ. கானின்ற தொங்கலாய் காசிபனுர் தந்ததுமுன்
கூகின் றளந்த குறளென்ப—நான்முறையான்
வானின்று மண்ணின் றளந்தே வள்ளுவனுர்
தானின் றளந்த குறள்.

இ - ள். கான் நின்ற தொங்கலாய் - மணந்தங்கப்பெற்ற மாலையையுடைய பாண்டியராசனே,—முன் காசிபனுர் தந்தது கூகின்ற அளந்த குறள் என்ப - முன் காசிபராலே தரப்பட்டதுவோ மண்ணின்கண்ணே நின்று உலகத்தை அளந்த குறளென்று சொல்லுவர்;—தாம் நின்ற வள்ளுவனுர் அளந்த குறள் நான்முறையான் வான் நின்று மண் நின்று அளந்தது - தாம் இக்கே எழுந்தருளித் திருவள்ளுவராலே தரப்

பட்டகுறள் நூலின் முறையோடு கூடி விண்ணின்கண்ணே நின்றும் மண்ணின் கண்ணே நின்றும் உலகத்தை அளந்தது. எ - று.

கு கூ எனுமிண்டத. ஆறுருபு ஒவ்வுருபின் பொருளில் வந்தது. அக்குறன் வஞ் செத்துப் பெற்றளத்தலால் நான்முறையோடு கூடாததாயிற்று. இக்குறளுக்கு ஒலிவடி வும் வரிவடிவுமென இரண்டுவடிவுண்மையால், ஒலிவடிவுக்கிடம் வாளுகலின் வானின்றென்றும், வரிவடிவுக்கிடம் மண்ணுகலின் மண்ணின்றென்றும், கூறினர். இக்குறளுக்கு நான்முறையோடு கூடலும் வானிற்றலும் விருத்திச் சொல்லி வேற் றுமை செய்யப்பட்டது. மூன் மாலுமென்பாட்டிலே நாயனுர்க்கும் மாலுக்கும், இப் பாட்டிலே நிருக்குறளுக்கும் மாலவதாரக் குறளுக்கும், ஒப்புமை குறித்துச்சொல்ல லால் வேறுபாடாம். உலகத்துப் பொருளெல்லாம் இஃது அனத்தற் சிறப்புச் சொல்லியபடி. (கச)

கோதமனுர்.

கரி. ஆற்ற லழியுமென் றந்தணர்க ணான்மறையைப்
போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதா—ரேட்டெழுதி
வல்லாரும் வல்லாரும் வள்ளுவனுர் மூப்பாலைச்
சொல்லிடினு மாற்றல்சோர் வின்று.

இ - ன். அந்தணர்கள் நான்மறையை உரைத்துப் போற்றி ஆற்றல் அழியும் என்று எட்டின்புறத்து எழுதார் - அந்தணர்கள் நான்குவேதங்களேயும் வாய்ப்பாட மாகக் காப்பாற்றி, எட்டின்கண் எழுதிவைத்தால் வலியில்லாரும் ஓதவராகலின் அவற்றின் வலிமை குறையுமென்று எட்டின்கண் எழுதார்;—வள்ளுவனுர் மூப்பாலை எட்டே எழுதி வல்லாரும் வல்லாரும் சொல்லிடினும் ஆற்றல் சோர்வின்று - திருவள் ளுவரது திருக்குறளை எட்டின்கணெழுதிவைத்து வலியுடையவரும் வலியில்லாரும் ஓதினலும், வலிமை குறைதலில்லை. எ - று.

அவ்வேதத்துக்கு உதாத்தம் அநுதாத்தம் சுவரிதமென்னுஞ் சுரங்களின் வழுவா மல் ஓதல்வேண்டுமென்னும் விதியுளதாகலின், அதற்குத் தகுதியுடைய அந்தணரே அதிகாரிகளாயினர்; இதற்கு அஃதில்லாமையால் யாவரும் அதிகாரிகளாவரென்ற நிக. சொல்லிடினுமென்றதனல் பொருளுணர்ச்சிக்கு இதற்கும் வலிமைவேண்டு மென்பது பெறப்பட்டது. ஆற்றல் சொற்செறிவின்றிப்பம். இங்ஙனங்கூறவே, அவ் வேதம் சொல்லின்கண்ணே தலைமையுடைத்தென்பதனுலும், இவ்வேதம் பொருளின் கண்ணே தலைமையுடைத்தென்பதனுலும், பெறப்பட்டன. ஒதப்படுதலின் அவ்வேதத் தினும் இது சிறப்புடைமை சொல்லியபடி. (கஇ)

நத்தத்தனுர்.

கக. ஆயிரத்து மூன்றாற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னேடு பகர்ந்ததற்பின்—போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்.

இ - ன். பாயிரத்தினேடு ஆயிரத்தமுன்நூற்றமுப்பது அருங்குறளும் பகர்ந்த தற்பின் போய் ஒருத்தர் வாய்க்கேட்க நூல் உளவோ - பாயிரான்கதிகாரங்க ளோடு சேர்த்தநொகையாகிய அரிய ஆயிரத்தமுன்நூற்றமுப்பதுகுறன்வெண்பாக்க ளேயும் ஓதியுணர்ந்தபின்பு, போய் ஒருவரது வாயாலே கேட்டறிதற்கு நூலுளவோ! இல்லை:—மன்னு தமிழ்ப்புலவராய்க் கேட்க வீற்றிருக்கலாம் - நிலைபெற்ற தமிழிலே புலமை நிரம்பியோராகிப் பிறர் தம்மிடத்து வந்துகேட்க வீற்றிருக்கலாம். எ - று.

வீற்றிருத்தல் ஒரு சபையிலிலே உயர்வாகிய ஆசனத்தில் எதிரிருத்தல். இவற்றுட் பலவகைப்பட்ட நூல்களின் கருத்துக்களெல்லாம் விளங்கிற்றலின், கேட்க நூலளவோ வென்றார். புலவராயினவே, புலமை நிரம்புதற்கு இவை ஆயிரத்து முன்னூற்றுமுப்பது குறள்களும் போதுமென்பது பெறப்பட்டது. ஒதியோர்க்கு வரும் இம்மைப்பயன் சொல்லியபடி. (கக)

மூகைய லூர்ச் சிறுகருந்தும்பியார்.

கஎ. உள்ளுத லுள்ளி யுரைத்த லுரைத்ததனைத்
தெள்ளுத லன்றே செயற்பால—வள்ளுவனார்
முப்பாலின் மிக்க மொழியுண் டெனப்பகர்வா
ரெப்பா வலரினு மில்.

இ - ள். வள்ளுவனார் முப்பாலின் மிக்க மொழி உண்டு எனப்பகர்வார் எப்பாவலரினும் இல் - திருவள்ளுவரது திருக்குறளின்மேற்பட்ட நூலொன்று உளதென்று சொல்லவல்லவர் எவ்வகைப்பட்ட புலவருள்ளும் இல்லை;—செயற்பால உள்ளுதல் உள்ளி உரைத்தல் உரைத்ததனைத் தெள்ளுதல் அன்றே - ஆதலால், நாம் இந்நூலைக் குறித்துச் செயக்கடவன நாம் இதன்பொருளைச் சிந்தித்துக்கொள்ளுதலும், சிந்தித்துப் பிறர்க்கு அதனைச் சொல்லுதலும், பிறராலே சொல்லப்பட்ட அதனைத் தெளிதலும் அன்றே! எ- று.

மொழி ஆகுபெயர். ஒப்பது வடமொழி வேதமிருத்தலின் மிக்கமொழியென்றும், தமிழின்மாத்திரமன்றி வடமொழி முதலியவற்றினுள்ள புலவரைபுர் தழுவுதற்கு எப்பாவலரினுமென்றும், அறிவொப்புக்காண்டற்கு உரைத்ததனைத் தெள்ளுதலென்றும், கூறினர். உள்ளுதலெனவே கேட்டலும், தெளிதலெனவே அவ்வாறெழுதலும், அடங்கின. இது பயிற்சி செய்தொழுகுமாறு சொல்லியபடி. (கஎ)

ஆசிரியர் நல்லந்துவனார்.

கஅ. சாற்றிய பல்கலையுந் தப்பா வருமறையும்
போற்றி யுரைத்த பொருளெல்லாந்—தோற்றவே
முப்பான் மொழிந்த முதற்பா வலரொப்பா
ரெப்பா வலரினு மில்.

இ - ள். சாற்றிய பல்கலையும் தப்பா அருமறையும் போற்றி உரைத்த பொருளெல்லாம் தோற்ற - அறிவுடையோராற் சொல்லப்பட்ட பலநூல்களாலும் தப்பாத அரிய வேதத்தினாலும் காப்பாற்றிவைத்திருந்த உலகத்தார்க்குச்சொல்லப்பட்ட விடயங்களெல்லாம் தன்னிடத்தே காட்டும்படி—முப்பால் மொழிந்த முதற்பாவலர் ஒப்பார் எப்பாவலரினும் இல் - திருக்குறளைச்சொல்லிய திருவள்ளுவரையொப்பவர் எவ்வகைப்பட்ட பாவலருள்ளும் இல்லை. எ - று.

தம்மாலே சொல்லப்பட்டவற்றில் வழுவுறுமையால் தப்பாவென்றும், பொருளுணர்தற்கேயன்றி ஒதுதற்கும் எளிதன்றாகலின் அருவென்றும், விசேடணஞ் செய்யப்பட்டது. எப்பாவலரினுமில் இதற்கு முன்னுரைக்கப்பட்டபடியேகொள்க. முதற்பாவலர் முதன்மையையுடைய பாவலர்; நால்வகைப்பாக்களில் வெண்பாக்களும் அவற்றுள்ளும் குறன்வெண்பாவும் தலைமைபெற்று நிற்றலின், அக்குறன்வெண்பாவால் நூல்செய்த வல்லமையுடையரென்றுமாம். புலமையிலே ராயனுருக்கு ஒப்பின்மை சொல்லியபடி. (கஅ)

கேரந்தையார்:

கக. தப்பா முதற்பாலாற் றூமாண்ட பாடலினுள்
மூப்பாலி னுற்பான் மொழிந்தவ—ரெப்பாலும்
வைவைத்த கூர்வேல் வழுதி மனமகிழத்
தெய்வத் திருவள் ளுவர்.

இ - ள். எப்பாலும் வை வைத்த கூர் வேல் வழுதி மனம்மகிழ - எவ்விடத்திலும் கூர்மைவைத்த சிறப்புப்பொருந்திய வேலையுடைய பாண்டியராசன் மனமகிழ—தப்பா முதற்பாவால் தாம் மாண்ட பாடலினுள் மூப்பாலின் நாற்பால் மொழிந்தவர் - சொல்லப்பட்டபொருள் வழுவாமல் முதன்மையுடைய பாவாகிய குறள்வெண்பாக்களாலே தாம் மாட்சிபெற்ற பாடற்செழுமிலினுலே மூன்றுபால்களிலே அறமுதலிய நான்கு பகுதிப்பொருளையும் திருவாய்மலர்ந்தவர்—தெய்வத் திருவள்ளுவர் - தெய்வத்தன்மையையுடைய திருவள்ளுவராயனார். எ - று.

கூர் சிறப்பு. நான்கனுண் மூன்றடங்குவதன்றி மூன்றனுள் நான்கடங்காமையின், வியந்து கூறப்பட்டதாயிற்று. நூல்செய்த சிறப்பும், அதனுல் அரசனே மகிழ்வித்தமையும், சொல்லியபடி. (கக)

சிறுமேதாவியார்.

உ0. வீடொன்று பாயிர நான்கு விளங்கற
நாடிய முப்பத்து மூன்றெனு மூழ்—கூடுபொரு
ளெள்ளி லெழுப திருபதிற் றைந்தின்பம்
வள்ளுவர் சொன்ன வகை.

இ - ள். வள்ளுவர் சொன்ன வகை - திருவள்ளுவராலே சொல்லப்பட்ட திருக்குறளின் அதிகாரவகை,—பாயிரம் நான்கு - பாயிரம் நான்கதிகாரத்தையுடைத்து,—அறம் முப்பத்துமூன்று - அறம் முப்பத்துமூன்றதிகாரத்தையுடைத்து,—ஊழ் ஒன்று-ஊழ் ஓரதிகாரத்தையுடைத்து,—பொருள் எழுபது - பொருள் எழுபததிகாரத்தையுடைத்து,—இன்பம் இருபதிற்றைந்து - காமம் இருபத்தைந்ததிகாரத்தையுடைத்து. எ - று.

அறத்துப்பாலுளடங்காது அதனை விட்டு நூற்கெல்லாம் பொதுவாய் நிற்றலின் வீடொன்று பாயிரமென்றும், இம்மை மறுமை வீடு மூன்றும் பயத்தற்சிறப்பிற்றுய மூன்றனுண் முதனிற்றலின் வினங்கறமென்றும், யாவர்க்கும் பொதுப்பட நாடித் தொகுக்கப்பட்ட அறத்தின் கூறுபாடு இவையேயாகலின் நாடிய முப்பத்துமூன்றென்றும், முன்னின்ற அறமும் பின்னின்ற இன்பமும் கைகூடுதற்குத் தனேயாய் நிற்றலின், கூடுபொருளென்றும், அப்பொருளின் பாகுபாடெல்லாம் இவற்றினடங்குதலின் எள்ளிலெழுபதென்றும், கூறினர். எள்ளல் இகழ்தல். சில பழையநூல்களிலே சிலவற்றைச் சாதியாரும் சமயத்தாரும் மிகுத்தும் குறைத்தும் வேறுபடுத்தலால் அப்படிப்பட்ட வேறுபாடு இதற்கும் வரினும் வருமென்ற ஆசங்கித்து, இதனதிகாரங்களுக்கு இவ்வனர் தொகைசெய்தார். பின் இவ்வாறு தொகைசெய்யப்பட்டு வருவனவற்றிற்கும் இதுவே கருத்தாகக்கொள்க. மூப்பால்களுக்கும் அதிகாரத்தொகை சொல்லியபடி. (உ0)

நல்கூர்வேள்வியார்.

உக. உப்பக்க நோக்கி யுடைகேசி தோண்மணந்தா
னுத்தர மாமதுரைக் கச்சென்ப—விப்பக்க

மாதானு பங்கி மறுவில் புலச்செக்காப்
போதார் புனற்கூடற் கச்சு.

இ - ன். உப்பக்கம் சோக்கி உபதேசி தோன் மணத்தான் உத்தரமா மதுரைக்கு அச்சு என்ப - அப்பக்கத்தைக்குறித்துச் சென்றேனுகிய உமாதேவியினது தோனே மணந்த கடவுளே வடமதுரைக்கு ஆதாரமென்றுசொல்லுவர் ;—இப்பக்கம் மாதானு பங்கி மறுவில் புலச் செக்காப்போதார் புனற்கூடற்கு அச்சு - இப்பக்கம் மாதானுபங்கி யெனப்படுகின்ற குற்றமற்ற புலமையாகிய தேனேச்சொரிகின்ற செவ்விய காவாகிய மலரையுடையவர் சீர்வளத்தையுடைய தென்மதுரைக்கு ஆதாரமாவர். எ - று.

உப்பக்கம் இடைக்காடர் அரசன் தன்பாடலே அவமதித்தமைபற்றிப் பிணங்கிச் சென்றபக்கம். உப்பக்க நோக்கியென்றது விணையாலணையும்பெயர். கேகி திருமால் ; இது அக்கடவுள் சகசிராமத்திற்கண்டது. கேகிக்குப் பின்னே பிறந்தவள் உபதேசி யென்றுரைத்து, உபேந்திரனென்பதுபோல. மாதா அனுபங்கி மாதாவை நிகராகக் கொண்டு நடக்கின்ற ஒழுங்கினனெனப்படுதலின், அவள் பிள்ளைமேலேபோல் இவர் உலகத்தார்மேல் அருள்செய்தல் சொல்லப்பட்டதாயிற்று. காப்போதென்றதற் கேற்பப் புலமையிலே தேன் ஆரோபிக்கப்பட்டது, அச்சுப்போற்றங்குதலால், அச்சென்றார். நாயனாலே திங்கட்குடையுடைச்சீர்சால்வழுதியுஞ் சங்கப்புலவரும் தழைத்தினிதோங்கிய மதுரைக்கு உண்டான சிறப்புச்சொல்லியபடி. (உ)

தொடித்தலைவிழுத்தண்டினார்.

உஉ. அறநான் கறிபொரு ளேழொன்று காமத்
திறமூன் றெனப்பகுதி செய்து—பெறலரிய
நாலு மொழிந்தபெரு நாவலரே னன்குணர்வார்
போலு மொழிந்த பொருள்.

இ - ன். அறத்திறம் நான்கு - பாயிரம், இல்லறம், துறவறம், ஊழென அறப் பாலினுட் பிரிவுகள் நான்கும்,—அறி பொருட்டிறம் ஏழ் - அரசு, அமைச்சு, அரண், கூழ், படை, நட்பு, ஒழிபென அறியப்பட்ட பொருட்பாலினுட் பிரிவுகள் ஏழும்—காமத்திறம் மூன்று எனப் பகுதிசெய்து - ஆண்பாற்கூற்று, பெண்பாற்கூற்று, அவ்விருபாற்கூற்றெனக் காமத்துப்பாலினுட் பிரிவுகண் மூன்றுமாகப் பகுதிசெய்து—பெறலரிய நாலும் மொழிந்த பெருநாவலரே - பெறுதற்கரிய அறம் பொருள் இன்பம் வீடு எனப்படுகிற நான்குபொருளையும் சொல்லிய பெருநாவலரே—ஒழிந்த பொருள் நன்கு உணர்வார் போலும் - அவற்று ளடங்காது ஒழிந்த பொருள் உளதாயின், அதனை நன்றாக அறியவல்லவர்போலும். எ-று.

திறமென்றது அறமுதலியவற்றோடுங் கூட்டப்பட்டது. நாவலரே யென்றமையால், பிறரால் அறியப்படுவ தன்றென்றதாயிற்று. மும்பாலியற்றொகையும், இவற்றினடங்காதது ஒன்றில்லையென்பதும், சொல்லியபடி. (உஉ)

வெள்ளிவீதியார்.

உங. செய்யா மொழிக்குந் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே—செய்யா

---

* உபதேசி நப்பின்னையென்றும், அவள் தோள் மணந்தான் கண்ணபிரான் என்றும், உத்தரமதுரை அவன் அவதரித்த வடமதுரை யென்றும், மாதானுபங்கி செருக்கொழிதலுடையான்என்றும் பொருள்கொண்டு இச்செய்புட்குப் பிறிதோருரை கூறுவாருமுளர். செந்தமிழ்ப் பத்திரிகை தொகுதி பொன்று பருதி பிண்டிக்காண்க.

வதற்குரிய ரத்தணரே யாராயி னேனே
யிதற்குரிய ரல்லாதா ரில்.

இ - ன். செய்யா மொழிக்கும் திருவள்ளுவர் மொழிந்த பொய்யா மொழிக்கும் பொருள் ஒன்றே - ஒருவராலே செய்யப்படாத மொழியாகிய வேதத்துக்கும் திருவள்ளுவரால் அருளிச்செய்யப்பட்ட தன்வழியி னெழுதுவோர்க்குப் பயன்விளைவிலே பொய்படாத மொழியாகிய திருக்குறளுக்கும் பொருளொன்றே:—ஆராயிற் செய்யா அதற்கு உரியர் அத்தணரே - ஆராயுங்கால், செய்யப்படாத அவ்வேதமோதுதற் குரியவர் அந்தணரே,—னெனிபிதற்கு உரியர் அல்லாதார்இல் - பொய்படாத இத்திருக்குறளோதுதற்கு உரியவரல்லாதார் உலகத்திலில்லை. எ - று.

பூர்வவேதத்தை நித்தியமென்பார் மதம்பற்றிச் செய்யாமொழி யென்றார். அது வடமொழியும் இது தென்மொழியுமாய் நின்ற சில வேறுபாடுடையனபோற் றோன்றினும் நுண்ணுணர்வாளர்க்குவார்க்குக் கருத்து வேறுபடாமையின், பொருளொன்றேயெனத் தேற்றேகாரம் கொடுத்துக் கூறினர். செய்யாமொழி பொய்யாமொழி அன்மொழித்தொகைகள். இதற்குரியரல்லாதாரில்லென்றதனாலும் பொதுவேதமாதலறிக. அதற்கும் இதற்கும் பொருள்வேறுவென்றும், இதனோடதற் கதிகாரிகளாவார் யாவரோவென்றும், கிழ்கின்ற யமொழித்தபடி. (உக)

மாங்குடி மருதனார்.

உசை. ஒதற் கெளிதா யுணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் விகவிளங்கித்—தீதற்றோ
ருள்ளுதொ றுள்ளுதொ றுள்ள முருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

இ - ன். வள்ளுவர் வாய் மொழி மாண்பு - திருவள்ளுவரது வாயினின்றுந் தோன்றிய திருக்குறளினது மாட்சியைச் சொல்லின்,—ஒதற்கு எளிதாய்உணர்தற்கு அரிதாகி வேதப்பொருளாய் மிக விளங்கி - அது ஒதப்படுதற்கு எளிய சொற்களை புடையதாகியும் அறியப்படுதற்கு அரிய பொருள்களையுடையதாகியும் வேதமெனப் படுகின்ற பொருளாகியும் அவ்வேதத்தின் மிக விளங்கி,—தீது அற்றோர் உள்ளுதொறு உள்ளுதொறு உள்ளம் உருக்கும் - குற்றமற்றோர்கள் நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் அவர்களுடைய மனத்தைக் கரைக்கும். எ - று.

ஒதற்கெளிதாயெனவே நவின்றோர்க்கினிமை நன்மொழிபுணர்த்தல்களும் உணர்தற்கரிதாகியெனவே ஆழமுடைமையும், வேதப்பொருளாயெனவே விழுமியது பயத்தலும், பிறவுமாகிய அழகுகளினமைதி சொல்லப்பட்டதாயிற்று. தீதற்றோர் பொருளாராய்ச்சிக்கேற்ற நுண்ணறிவுடையோர். உள்ளுதொறுள்ளுதொறுள்ளமுருக்குமெனவே, முன் காணப்பட்டதினும் பின் காணப்படும்பொருள் சிறந்தும் விரிந்துந்தோன்றுதலுடைமை பெறப்பட்டது. இதனது அற்புதமான குணமுடைமைச் சிறப்புச் சொல்லியபடி. (உசை)

எறிச்சலூர் மலாடனார்.

உஙி. பாயிர நான்கில் லறமிருபான் பன்மூன்றே
தூய துறவறமொன் றாழாக—வாய
வறத்துப்பா லல்வகையா வாய்ந்துரைத்தார் நூலின்
றிறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து.

இ - ள். வள்ளுவனார் ஆய்ந்த நூலின் நிறத்துப்பால் தேர்ந்த - திருவள்ளுவ நாயனார் அவ்வேதத்தின் கருத்துக்களே யாராய்ந்து, தம்மாலே செய்யப்பட்ட நூலினது நிறத்திற்குத் தக்க ன்மையுடைமையால் இவையே உரியவையென்று தெரிந்து,—பாயிரம் நான்கு - பாயிரம் நான்கதிகாரமும்,—இல்லறம் இருபான் - இல்லறவியல் இருபத்திகாரமும்,—துறவறம் பன்மூன்று - துறவறவியல் பதின்மூன்றதிகாரமும்,—ஊழ் ஒன்றுக - ஊழ் ஓரதிகாரமுமுடையனவாக,—ஆய அறத்துப்பால் நால்வகையா உரைத்தார் - இவ்வாறாய அறத்துப்பாலைப் பாயிரமுதலிய நால்வகையுடைத்தாகக் கூறினார். எ - று.

மூப்பாற்பொருள்களினும் முத்திக்குக் காரணமாதற் சிறப்புடைமையின், ஆய துறவறமென்றார். துப்பு ன்மை; அது எல்லாவருணச்சிரமங்களுக்கும் பொதுவாயிருக்கை. அறப்பாலியலதிகாரத்தொகை சொல்லியபடி. (உஇ)

போக்கியார்.

உக. அரசிய லமைச்சிய லீரைந்
தருவல் லரணிரண்டொன் றெண்கூ —ழிருவிய
றிண்படை நட்புப் பதினேழ் குடி பதின்மூன்
றெண்பொரு ளேழா மிவை.

இ - ள். அரசியல் ஐயைந்து - அரசியல் இருபத்தைந்ததிகாரமுடைத்து,—அமைச்சியல் ஈரைந்து - அமைச்சியல் பத்ததிகாரமுடைத்து,—அரண் இரண்டு - அரணியல் இரண்டதிகாரமுடைத்து,—கூழ் ஒன்று - பொருளியல் ஓரதிகாரமுடைத்து,—படை இருவியல் - படையியல் இரண்டதிகாரமுடைத்து,—நட்புப் பதினேழ் - நட்பியல் பதினேழதிகாரமுடைத்து,—குடி பதின்மூன்று - ஒழிபியல் பதின்மூன்றதிகாரமுடைத்து,—எண்பொருள் இவை ஏழாம் - எண்ணப்பட்ட பொருட்பாலுக்கு இவ்வியல்களேழாம். எ - று.

அரணுக்கு உருத்திட்பம் சிறத்தலின் உருவல்லரணென்றும், பொருளுகளார்க்கே ஒளி அமைவதாகலின் ஒண்பொருளென்றும், படைக்குக் கடும்போரிற் பின்கொடாத திண்மை உரித்தாகலின், திண்படையென்றும், கூறினார். பிற்காலத்தார் அமைச்சுமுதலியவைத்தனையும் அங்கவியலென ஓரியலாக்கியும் வழங்குப. பொருட்பாலியலதிகாரத்தொகை சொல்லியபடி. (உக)

மோசி கீரனார்.

உஎ. ஆண்பாலே ழாதிரண்டு பெண்பா லடுத்தன்பு
பூண்பா லிருபாலோ ராறுக —மாண்பாய
காமத்தின் பக்கமொரு மூன்றுக கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவனார் ன்கு.

இ - ள். ஆண்பால் ஏழ் - ஆண்பாற்கூற்று ஏழதிகாரமும்,—பெண்பால் ஆதிரண்டு - பெண்பாற்கூற்றுப் பன்னிரண்டதிகாரமும்,—அடுத்து அன்பு பூண்பால் இருபால் ஓராறுக - ஒருவரையொருவர் அடுத்து அன்பைப் பூணுதற்பகுதியுடைய அவ்விருபாற்கூற்று ஆறதிகாரமுமாக,—மாண்பு ஆய காமத்தின்பக்கம் ஒருமூன்றுக காமத்தின் வள்ளுவனார் ன்கு கட்டுரைத்தார் - மாட்சியான காமத்துப் பாலினியல் ன் மூன்றுகப் பெயர்பெற்ற திருவள்ளுவர் ன்கு கூறினார். எ - று.

இவையே பொருளிலக்கணத்திக்கமையக் களவியல் கற்பியலென இரண்டாக்கப் பட்டன. காமத்துப்பாலியலதிகாரத்தொகை சொல்லியபடி. (உஎ)

காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்.

உஅ. ஐயாறு நூறு மதிகார மூன்றுமா
மெய்யாய வேதப் பொருள்விளங்கப்—பொய்யாது
தன்தா ளுலகிற்குத் தான்வள ருவனுகி
யன்தா மரைமே லயன்.

இ - ள். அதிகாரம் நூறும் ஐயாறும் மூன்றுமா - அதிகாரம் நூற்றுமுப்பத்து மூன்றாக,—மெய்யாய வேதப்பொருள் பொய்யாது விளங்க - வடமொழியிலிருந்த மெய்யாகிய வேதப்பொருள் பொய்யுரை விளங்கும்பொருட்டு,—அன்தாமரைமேல் அயன்தான் வள்ளுவனுகித் தன்தான் - அழகிய தாமரைமலர்மேல் வீற்றிருக்கும் நான் முகக்கடவுள் தான்றிருவள்ளுவனுகி உலகத்தார்க்குத் தமிழிற்செய்து தன்தான்.எ-று.

உலகு இக்கே மக்களே உணர்த்தி நின்றது. மெய்யாய வேதப்பொருள் பொய் யாது விளங்கவெனவே, இதற்கு முன் மெய்யாயபொருள் பொய்யாய் மறைந்தும், பொய்யாய பொருள் மெய்யாய் விளங்கியும், இடந்தலை சொல்லப்பட்டதாயிற்று. அதிகாரத்தொகையோடு நூற்பொருளியல்பு சொல்லியபடி. (உஅ)

மதுரைத் தமிழ்நாகனார்.

உக. எல்லாப் பொருளு மிதன்பா லுளவிதன்பா
லில்லாத வெப்பொருளு மில்லியாற்—சொல்லாற்
பரந்தபா வாலெண் பயன்வள ருவனர்
சுரந்தபா வையத் தினை.

இ - ள். எல்லாப் பொருளும் இதன்பால் உள - பலவகை நூல்களாலுஞ் சொல் லப்பட்ட எல்லாப்பொருளும் இந்நூலகத்தடங்கி யிருக்கின்றன;—இதன்பால் இல் லாத எப்பொருளும் இல்லை - இதனிடத்தில்லாத யாதொருபொருளும் எந்நூலகத் தும் இல்லை;—சொல்லாற் பரந்த பாவால் பயன் என - ஆதலால், சொல்லளவினுலே விரிந்த நூல்களாற் பயன் யாது!—வள்ளுவனுர் சுரந்தபா வையத் தினை - திருவள் ளுவராலே தரப்பட்ட இந்நூலொன்றே மண்ணுலகத்தாருக்குத் தினையாத லமையும். எ - று.

எல்லாப்பொருள்களுமாவன, முதல் வழிசார்பென மூவகைப்பட்ட அறநூல் பொருணூல் இன்பநூல் வீட்டுநூல் என்பவற்றிற். செம்பொருள் ஆக்கப்பொருள் குறிப்புப்பொருளென இம்மூவகையாற் தொன்னக்கிடந்த காட்சிப்பொருள்களும் கருத்துப்பொருள்களுமாம். தொழிலும் பண்பும் ஒரோவழிப்பொருளெனற்கேற்பு டைமையின், அவையும் இவற்றுள் அடங்குமாறறிக. பின்னும் அதனை வலியுறுத்தற்கு இதன்பாலில்லாத வெப்பொருளு மில்லையென்றார். சொல்லாற் பரந்தவெனவே, அவை பெருளாற்பரப்பின்மை பெறப்பட்டது. பரத்தல் பதினுயிரம் தாரையாமுத லிய நிரந்தவளவையால் விரிதல், சொல்லாற்பரந்தநூல்களை ஆய்வோர் மலையகழ்த்து எலிபிடித்தல்போல் மிகவருந்திச் றெபயன் கொள்ளுதலால், என்பயனென்றார். ஆல் ஆசை. பா, வையம் ஆருபெயர்கள். என்னுட்பல்பிணிச் றெற்றறிவுடையோர்க்கு வீதி யில்க்குக்கண்மூற்றும் உள்ளங்கைகெல்லித்தனிபோலக் கண்டு தெளியுமாறு உணர்த் தித் தமோற்றர்த்தலின், வையத்தினையென்றார். முற்றெருங்குணர விழைவார்க்கு இஃது இன்றியமையாச் றெறிப்பித்தென்றபடி. (உக)

பாரதம்பாடிய பெருந்தேவனார்.

கூ0. எப்பொருளும் யாரு மியல்பி னறிவுறச்
செப்பிய வள்ளுவர்தாஞ் செப்பவரு—முப்பாற்குப்
பாரதஞ்சீ ராம கதைமலுப் பண்டைமறை
சோர்வனமற் றில்லை நிகர்.

இ - ன். பாரதம் சோமகதை மலுப் பண்டை மறை சோர்வன - பாரதம் பழைய சோமகதையையும், மலுமிருதி பழையவேதத்தையும், ஒப்பனவாகும்,—எப்பொருளும் யாரும் இயல்பின் அறிவுறச் செப்பிய வள்ளுவர் செப்ப வரும் முப்பாற்கு நிகர் இல்லை - எவ்வகைப்பட்ட பொருள்களையும் எவ்வகையோரும் அவற்றின்நன்மையோடு அறிய அவர்க்குச சொல்லும்படிக்குத் திருவள்ளுவர் சொல்லால் வர்த்திருக்குறளுக்கு உவமானமாகத்தக்கது ஒன்றில்லை. எ - று.

மற்று அசை. அறிதற்கரிய வேதார்த்தப்பொருளு மென்பதற்கு எப்பொருளுமென்றும், உயர்குலத்தாரே யனறி ஏனையோருமென்றற்கு யாருமென்றும், ஐயத்திரிபின்றி யறியவென்றதற்கு இயல்பினறிவுறவென்றும், இதுவே சுருதிருமிருதிண்மொமெனறற்குச செப்பியவென்றும், கூறினர் பண்டையென்பது சோமகதைக்கும கூட்டுக. கதாரூபமாயிருந்து பாரத ராமாயணமெனவும், விதிரூபமாயிருந்து சுருதி மிருதியெனவும, கூட்டிச சொல்லபபடுதலால, உவமான உவமேயங்களாதலறிக. எப்பொருளும யாருமியல்பினறிவுறச செப்புதல் வேதத்திற்கின்மையால், முன் முப்பாலின் மிகையொழிவென்ற அதனாற்பெறப்பட்ட வேதத்தினெப்புமையை மறுத்தபடி. (கூ0)

உருத்திரசன்மகண்ணார்.

கூக. மணற்கினைக்க நீரூறு மைந்தர்கள் வாய்வைத்
துணச்சுரக்கு தாய்முலை யொண்பால்—பிணக்கிலா
வாய்மொழி வள்ளுவர் முப்பான் மதிப்புலவோர்க்
காய்தொறு மூறு மறிவு.

இ - ன். மணற் கினைக்க நீர் ஊறும் - மணலைத் தோண்டித்தோறும் நீர் பெருகும்,—மைந்தர்கள் வாய் வைத்து உணத் தாய் முலை ஒண்பால் சுரக்கும் - புதல்வர்கள் வாய்வைத்து உண்ணுந்தோறும் தாயினதுமுலைக்கண் நல்லபால்பெருகும்;—பிணக்கு இலா வாய்மொழி வள்ளுவர் முப்பால் ஆய்தொறும் மதிப்புலவோர்க்கு அறிவு ஊறும்-அவைபோல, பிணங்குதற்கு ஏதுவில்லாத வாய்மைச்சொல்லையுடைய திருவள்ளுவனது திருக்குறளை ஆராயுந்தோறும், அறிவுடைய புலவர்க்கு அறிவு வளரும். எ - று.

கற்பிதமாகிய சாதிசமயங்களின் மானம்பற்றி உள்ளதை இல்லதாகவும் இல்லதை உள்ளதாகவும், சிறிதைப் பெரிதாகவும் பெரிதைச் சிறிதாகவும், நீயகத நல்லதாகவும் நல்லதைத் தீயதாகவும், புனைந்து பிறர் பிணங்கும்படி சொல்லப்பட்டதல்லாமையால், பிணக்கிலா வாய்மொழியென்றார். மதிப்புலவோர்க்கறிவூறு மெனவே, அவர் அவ்வறிவைக்கொண்டு பிறர்க்கெல்லாம் விதிவிலக்குக்கூக்கற்பித்தல்வேண்டுமென்றதாயிற்று. இதனைச் செலகாற்பயிறலினமையாது பலகாலும் பயிற்சி செயல் வேண்டுமென்றபடி. (கூக)

பெருஞ்சித்திரனார்.

கூஉ. ஏதமில் வள்ளுவ ரின்குறள்வெண் பாவினு
ளோதிய வொண்பொரு ளெல்லா—மூரைத்தகத்தும்

முதலிற் றார்மாற தாமே தமைப்பயந்த
வேதமே மேதக் கன.

இ - ள். தாது அலிற் தார் மாற - பொடியொடு விரிந்த பூமாலையையுடைய பாண்டியராசனே,—ஏதம் இல் வள்ளுவர் இன்குறள் வெண்பாவினல் ஒதிய ஒண் பொருளெல்லாம் உரைத்ததனல் - குற்றமில்லாத திருவள்ளுவர் இனிய குறள்வெண் பாக்களாலே தான்கு வேதங்களாலுஞ் சொல்லப்பட்ட ஒள்ளியபொருள்களேயெல் லாங் கூறினமையால்,—மேதக்கன தாமே தமைப் பயந்த வேதமே - மேம்பாட்டுக் குத்தக்கவை அக்குறள்வெண்பாக்களோ, முதனூலாய் நின்று அவற்றைப் பயந்த வேதங்களோ! நீசொல்வாயாக. எ-று.

தாம் தம்மை எனப்பட்டவை அவை அவற்றை என்னும்பொருளைத் தந்துநின் றன. ஈகாரம் இரண்டும் விரு. பிறநூலாசிரியர்க்கெல்லாம் அவரெதிரிகளாலே மறுக்கப்பட்டுவருங் குற்றம்போல்வது இவர்க்கு இல்லையென்றற்கு ஏதமில்வள்ளுவ னென்றும், தாங்குரியவாய் நின்று கற்போர்க்கு வருத்தம் விளையாமைபற்றி இன்குற னென்றும், உணர்வுடையோராலே விரும்பப்பட்ட நற்குணமுடைமைபற்றி ஒண் பொருளென்றும், கூறினர். நூலாசிரியர்க்கும், நூலுக்கும், நூலுதலிய பொருளுக் கும், தகுதி தோன்றச் சொல்லப்பட்ட விசேடணகுணங்களாலே, இவ்வேதம் அவ் வேதத்தினுஞ் சிறப்புடைமை குறிப்பித்தபடி. (கூ)

நரிவெரூஉத்தலையார்.

கூ. இன்பம் பொருளறம் வீடென்னு மிந்நான்கு
முன்பறியச் சொன்ன முதுமொழிநூன்—மன்பதைகட்
குள்ள வரிதென் றவைவள் ளுவருலகங்
கொள்ள மொழிந்தார் குறள்.

இ - ள். இன்பம் பொருள் அறம் வீடு என்னும் இந்நான்கும் மன்பதைகட்கு முன்பு அறியச்சொன்ன முதுமொழிநூல் உள்ள அரிது என்று - இன்பமுதலிய இந் நாற்பொருளியல்புகளேயும் மக்கட்பரப்புக்கு அக்காலத்தில் அறியும்வண்ணஞ் சொல் லப்பட்ட பழமொழிவேதமானது ஒதியுணரப்படுதற் கரிதென்று,—வள்ளுவர் அவை உலகம் கொள்ளக் குறள் மொழிந்தார் - திருவள்ளுவர் அவற்றை உலகத்தார் எளிதி லுணரும்படி திருக்குறளைக் கூறினர். எ - று.

முன்பறியவெனவே, உற்சர்ப்பிணியாகலின், அக்காலத்தோர்க்கு உணர்தற் கேற்ற ஆயுண்ட்சியும் உணர்வுவலியும் இருந்தனவென்பதூஉம், அவசர்ப்பிணியாக லின் இக்காலத்தோர்க்கு அவையிலவென்பதூஉம், பெறப்பட்டன. இவ்விரண்டும் அவாவறுத்தன் முதற்பாட்டையிற்காண்க. தேயவழக்கிற்படாததும் வருந்திக் கற் போர்க்குமாத்திரம் புலப்படுவதுமாய் எல்லாமொழிகட்கும் முற்பட்டுக் கடவுண் மொழியாய் நிற்றலின், முதுமொழியென்றார். அறமுதலிய நான்கும் பிரிவுபட்டுத் தோன்றுமையை உடைத்தாகலின், உள்ளவரிதாயிற்று. பழையவேதம் உளதாகவும் வேறிதுசொல்லுதற்குக் காரணம் உணர்த்தியபடி. (கூ)

மதுரைத்தமிழாசிரியர் செங்குன்றூர்கிழார்.

கூ. புலவர் திருவள் ளுவரன்றிப் பூமேற்
சிலவர் புலவரெனச் செப்ப—னிலவு
பிறங்கொளிமா லீக்கும் பெயர்மாலை மற்றுங்
கறங்கிருண்மா லீக்குப் பெயர்.

இ - ள். பூமேல் புலவர் திருவள்ளுவரன்றிச் சிலவர் புலவரெனச் செப்பல் - பூவுலகின்கண்ணே புலவரெனத் திருவள்ளுவரை யன்றி வேறுசிலரையும் புலவ ரென்று சொல்லுதல்—மாலை நிலவு பிறங்கு ஒளி மாலைக்கும் பெயர் மற்றும் கறுங்கு இருள் மாலைக்கும் பெயர் (செப்பல்) - மாலையென்பது நிலவால் விளங்குகின்ற அந் நிக்கும் பெயராக மற்றும் சூழ்கின்றவிருளையுடைய அந்திக்கும் பெயராகச் சொல்லு தல்போலும். எ - று.

செப்பலென்றது பின்னும் கூட்டப்பட்டது. புலமையாவது பல வேறுவகைப் பட்ட நூலுணர்ச்சிகளையெல்லாம் ஒருங்கேகொண்ட பேரறிவுடைமையாம். உயர் வொப்பற்ற இவரது புலமையைக்குறித்து நோக்குங்கால் ஏனையோர் புலமை புலமை யன்றாய் முடிதலின், இவ்வாறு கூறினர். புலவரென்பது நாயனார்க்கே காரணப்பெய ராமென்றபடி. (கூச)

மதுரையறுவைவாணிகன் இளவேட்டனார்.

கூடு. இன்பமுந் துன்பமு மென்னு மிவையிரண்டு
மன்பதைக் கெல்லா மனமகிழ—வன்பொழியா
துள்ளி யுரை வுரைத்தாரே யோதசீர்
வள்ளுவர் வாயுறை வாழ்த்து.

இ - ள். இன்பமும் துன்பமும் என்னும் இவை இரண்டும் உள்ளி உணர - பின் வரக்கடவனவாய சுகமும் துக்கமுமென்னப்பட்ட இவற்றினுடைய இருவகைக் கார ணங்களையும் ஆராய்ந்தறியவும்,—அன்பு ஒழியாது மனம் மகிழ - தம்மேலன்பு நீங்கா மல் உள்ளங்களிகூரவும்,—மன்பதைக்கெல்லாம் ஓதசீர்வள்ளுவர் வாயுறை வாழ்த்து உரைத்தார் - மக்கட்பரப்புக்கெல்லாம் புகழப்படுஞ் சீரையுடைய திருவள்ளுவர் வாயுறைவாழ்த்தாகத் திருக்குறளைக் கூறினர். எ - று.

இன்பத்தின்காரணம் விதிக்குறளாலும், துன்பத்தின்காரணம் விலக்குக்குறளா லும், சொல்லப்பட்டன. முன்பறிதற்குப் பயன் அவற்றைச் செய்தலும் தவிர்தலு மாம். வேண்டுவனவெல்லாந் தொகுத்துணர்தலின், மனமகிழ்தல் சொல்லப்பட்டது. அவ்வேதம் போலாது பலர்க்கும் உபயோகியாகக் கூறலின், மன்பதைக்கெல்லா மென்றார். வாயுறைவாழ்த்தினியல்பு "வாயுறை வாழ்த்தே வயங்கு நாடின்—வேம்புங் கடிவும் போல வெஞ்சொற்—றூங்குத லின்றி வழி நனி பயக்குமென்—றோம்படைக் கிளவியின் வாயுறைத் தற்றே*" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தாலறிக. எதிர்கால விளைவுணர்ச்சி பயத்தல் சொல்லியபடி. (கூடு)

கவிசாகரப் பெருந்தேவனார்.

கூசு. பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்புனத
மாவிற் கருமுனியா யானைக்—கமரரும்ப
றேவிற் றிருமா லெனச்சிறந்த தென்பவே
பாவிற்கு வள்ளுவர்வெண் பா.

இ - ள். பூவிற்குத் தாமரை - மலர்களுக்குள்ளே தாமரைமலரும்—பொன்னுக் குச் சாம்புனதம் - பொன்களுக்குள்ளே சாம்புனதப்பொன்னும்—ஆவிற்கு அருமுனி ஆ - பசுக்களுக்குள்ளே காமதேனுவும்—யானைக்கு அமரர் உம்பல் - யானைகளுக் குள்ளே ஐராவதமும்—தேவில் திருமால் என - தேவர்களுக்குள்ளே திருமாலும் போல,—பாவிற்கு வள்ளுவர் வெண்பாச் சிறந்தது என்ப - நூல்களுக்குள்ளே திரு வள்ளுவரது குறள்வெண்பாச் சிறந்தது என்று அறிவுடையோர் சொல்லுவர். எ-று.

* பொருள், செய்யுளியல், கசஉ.

ஏ அசை. பா ஆருபெயர். பொன் ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்புனதம் என கால்வகைப்படும். காமதேனு வசிட்டமுனியிடத்துள்ளதாகலின், அருமுனியா வென்ருர். உவமானமுகத்தால் இஃது பலநூல்களிலும் சிறந்து நிற்கின்ற மாட்சிமை சொல்லியபடி. (கூ)

மதுரைப் பெருமருதனர்.

கூள. அறமூப்பத் தெட்டிப் பொருளெழுப தின்பத்
திறமிருபத் தைந்தாற் றெளிய—முறைமையால்
வேத விழுப்பொருளை வெண்குறளால் வள்ளுவனு
ரோதவழுக் கற்ற துலகு.

இ - ன். அறத்திறம் முப்பத்தெட்டால் - அறத்தின் கூறுபாடு முப்பத்தெட்டதி காரங்களாலும்,—பொருட்டிறம் எழுபதால் - பொருட்கூறுபாடு எழுபததிகாரங்க ளாலும்,—இன்பத்திறம் இருபத்தைந்தால் - காமத்தின் கூறுபாடு இருபத்தைந்ததி காரங்களாலும்,—தெளிய - தெளியும் பொருட்டு,—முறைமையால் வேதவிழுப் பொருளை வெண்குறளால் வள்ளுவனுர் ஓத - காரணகாரிய வொழுங்கால் வேதத்தி னுயர்வாகிய பொருளைக் குறள்வெண்பாக்களாலே திருவள்ளுவனுர் ஓதலால் —உலகு வழுக்கு அற்றது - உலகமானது வழுவுதலினின்றும் நீங்கிற்று. எ - று.

திறமும் ஆகும் முன்னுங்கூட்டப்பட்டன. உயர்வாகிய பொருள் கருமகாண்டம் பிரமகாண்டமிரண்டினுள்ளும் சிறந்தபொருள். வழுக்குதல் விதிலையிலக்கென்றும் விலக்கை விதியென்றுங்கோடல். உலகு மக்களையுணர்த்திநின்றது. தணிகைபுத்தி அற்றதென இறந்தகாலத்தாற் கூறினுர். முன்னதில் வேறுபட்ட முப்பால்களினதி காரத்தொகைகளோடு உலகிற்கு விளையும் நன்மை சொல்லியபடி. (கூள)

கோவூர் கிழார்.

கூஅ. அறமுத னான்கு மகலிடத்தோ ரெல்லாந்
திறமுறத் தேர்ந்து தெளிய—குறள்வெண்பாப்
பன்னிய வள்ளுவனுர் பான்முறையே ரொல்வாதை
முன்னை முதுவோர் மொழி.

இ - ள். அறமுதல் நான்கும் அகலிடத்தோர் எல்லாம் திறம் உறத் தேர்ந்து தெளியக் குறள்வெண்பாப் பன்னிய வள்ளுவனுர் பான்முறை - அறமுதலியநான்கு பொருள்களையும் மண்ணுலகத்துள்ளோரெல்லாம் வகைப்பட ஆராய்ந்து தெளியும் பொருட்டுக் குறள் வெண்பாக்களாலே சொல்லப்பட்ட திருவள்ளுவ நாயனாரது முப் பால்களையுடைய புத்தகத்தின் கண்ணே—முன்னை முதுவோர் மொழி சேர் ஒவ் வாது - முற்காலத்துள்ள பெரியோரது நூல்களுக்கு சேர்தல் பொருந்தாது. எ - று.

மொழி ஆருபெயர். பெரியோராவார் வடமொழியிலும், தென்மொழியிலும், பிற மொழிகளிலும் நூல்செய்த முனிவரும், புலவரும், பிறரும். அந்நூல்களாவன மனு முதலியோராலே செய்யப்பட்ட அறநூன்முதலியன. இதன் புத்தகத்தில் முன்நூல் களிலொன்றும் சேர்க்கப்படுதற்குத் தகுவதன்றென்ற சொல்லியபடி. (கூஅ)

உறையூர் முதுகூற்றனர்.

கூக. தேனிற் சிறந்த திருவள் ளுவர்குறள்
பானிற் சிறந்திடுமப் பால்பகரார்—நானிற்

குயலில்லே சொற்சுவை போர்வில்லே மற்றுஞ்
செயலில்லே யென்னுந் திரு.

இ - ள். தேவிற் சிறந்த திருவள்ளுவர் குறள்வெண்பாவிற் சொற்றிடு மூப்பால் பகரார் - தெய்வத்தன்மையாற் சிறந்த திருவள்ளுவரது குறள்வெண்பாக்களோடு கூடிச் சிறந்து தோன்றுகின்ற மூப்பால்களேயும் ஒதாரது—காவிற்கு உயல் இல்லே - வாக்கிற்கு இன்சொற்சொல்லி வாழ்தல் உண்டாகாது,—சொற்சுவை ஒர்வு இல்லே - மனத்திற்குச் சொற்களின்சுவையை அறிதல்உண்டாகாது,—மற்றும் செயல் இல்லே- இவையன்றியும் காயத்துக்கு நல்ல செயலுண்டாகாது—என்னும் திரு-என்றவினைத் தத் திருமகள் அவரிடத்துச் சேராள். எ - று.

சுவையோர்தற்கும் செயலுக்கும் உரிய மனமும், காயமும், வருவிக்கப்பட்டன. திருமகள் சேராமையாகிய காரியத்தைக் காரணமாக உபசரித்தார். ஒதார்க்குள வாகாமை கூறலே, ஒதுவோர்க்கு இவையுளவாகலின், வாக்கிற்குக் கடுஞ்சொல், பொய், கோள், புறங்கூறல்களும், மனத்திற்குப் பிறனில்விழைதல், பிறன்பொருள் விழைதல், பிறன்பொருட்குக்கேடெண்ணல், பிறவுயிர்க் கிறுதியெண்ணல்களும், காயத்திற்குப்பிறன்மனைபுணர்தல், உயிர்க்கொலைசெய்தல், பழியுணர்தல், பிறர் பொருள்வெளவல்களும் ஆகிய குற்றங்களெல்லாம் நீங்குமென்பது பெறப்பட்டது. அறவின்பங்கட்குக் காரணமாதற்சிறப்புடைய பொருட்பேறு இஃதோதலின் உளதா மென்றபடி. (கக)

இழிகட்பெருங்கண்ணனார்.

சo. இம்மை மறுமை யிரண்டு மெழுமைக்குஞ்
செம்மை நெறியிற் றெளிவுபெற —மும்மையின்
வீடவற்றி னென்னின் விதிவழங்க வள்ளுவனர்
பாடின நின்குறள்வெண் பா.

இ - ள். இம்மை மறுமை இரண்டும் எழுமைக்கும் செம்மை நெறியின் தெளிவு பெற - இருபாலுக்கானவை வீரண்டையும் வினைப்பயன்றொடர்தற்குரிய ஏழுபிறப் பிற்குமாகச் செவ்வையான வழியால் யாவரும் தெளிதல் பெறவும்,—மும்மையின் அவற்றின் வீடு கான்கின் விதி வழங்க - அறம்பொருள் இன்பமென்னும் மூப்பால்களுள் அம்மூப்பாற்பொருள்களோடு வீடுமாகிய நாற்பொருள்களது விதிகளும் வழங்கவும்,—வள்ளுவனர் இன் குறள்வெண்பாப் பாடினர் - திருவள்ளுவராயனர் இனிய குறள்வெண்பாவைப் பாடினர். எ - று.

செவ்வையானவழி விதியும் பத்தியும் ஞானமும் நோயாளிக்கு மருந்தும் அனுபானமும் பத்தியமும்போல் ஒன்றற்கொன்று முரணது கூடி நிற்கும் வழி. வீட்டுவிதி துறவறத்திற்காண்க. இம்மை மறுமை வீடு மூன்றும் பயக்குமாறு சொல்லியபடி. (சo)

செயிர்க்காவிரியார்மகனார் சாத்தனார்.

சக. ஆவனவு மாகா தனவு மறிவுடையார்
யாவரும் வல்லா ரெடுத்தியம்பத்—தேவர்
திருவள் ளுவர்தாமுஞ் செப்பியவே செய்வார்
பொருளி லொழுக்கம்பூண் டார்.

இ - ள். ஆவனவும் ஆகாதனவும் அறிவுடையார் யாவரும் எடுத்தியம்ப வல்லார் - மக்களுக்கு ஆவனவற்றையும் ஆகாதவற்றையும் அறிவுடையார் யாவரும் இனி

இதிலிருந்து எடுத்துச்சொல்லுதற்கு வல்லவராவார்;—தேவர் திருவள்ளுவர் செப்பியவே பொருளில் ஒழுக்கம் பூண்டார் செய்வார் - ஆதலால், தேவராகிய திருவள்ளுவராலே சொல்லப்பட்டவற்றையே ஒப்பில்லாத ஒழுக்கத்தை மேற்கொண்டவர் செய்வார். எ - று.

இங்ஙனங்கூறவே, அவ்வேதத்திலிருந்து உள்ளவாறெடுத்துச்சொல்லுதல்அறிவுடையார்க்கு முடியாமையால், ஒழுக்கம்பூண்டார்க்கு அதன்கண்ணே சொல்லப்பட்ட படி வழுவாமற்செய்தல் கூடாமை காட்டப்பட்டது. தாம், உம் அசைகள். ஆவன இன்பத்தைத் தருவன. ஆகாதன துன்பத்தைத் தருவன. ஒப்பில்லாத வொழுக்கம் கொல்லாமை முதலியன. போதகாசிரியருக்கும், கேட்டொழுகுவோர்க்கும், வரும் நன்மை சொல்லியபடி. (சக)

செயலூர்க் கொடுஞ்செங்கண்ணனார்.

சஉ. வேதப் பொருளே விரகால் விரித்தலகோ
ரோதத் தமிழா லுரைசெய்தா—ராதலா
லுள்ளா ருள்ளும் பொருளெல்லா முண்டென்ப
வள்ளுவர் வாய்மொழி மாட்டு.

இ - ள். வேதப்பொருளே உலகோர் ஒத விரகால் விரித்துத்தமிழால் உரைசெய்தார் - வேதத்தின்பொருளே உலகத்தார் ஓதியுணரும்பொருட்டு உபாயத்தால் விரித்துத் தமிழ் மொழியிலுலே சொல்லியருளினார்;—ஆதலால் உள்ளார் உள்ளும் பொருளெல்லாம் வள்ளுவர் வாய்மொழிமாட்டு உண்டு என்ப - ஆதலால், நினைப்பவர் நினைக்கும் பொருள்களெல்லாம் திருவள்ளுவர் திருவாயிற் பிறந்த திருக்குறளின் கண்ணே உண்டென்று அறிவுடையோர் சொல்லுவர். எ - று.

உபாயத்தால்விரித்தல் சொற்சுருக்கத்தால் ஓதற்கெளிதென மனவெழுச்சியுண்டாக்கிக் கற்போரது அறிவளவிற்கேற்பப் பொருளளவு விரியவைத்தல். நினைக்கப்படும் பொருள்களெல்லாம் இதன்கண்ணே இக்காரணத்தால் தோன்றுகின்றன வென்று கூறியபடி. (சஉ)

வண்ணக்கஞ் சாத்தனார்.

சங. ஆரியமுஞ் செந்தமிழு மாராய்ந் திதனினிது
சீரிய தென்றொன்றைச் செப்பரிதா—லாரியம்
வேத முடைத்துத் தமிழ்திரு வள்ளுவனு
ரோது குறட்பா வுடைத்து.

இ - ள். ஆரியமும் செந்தமிழும் ஆராய்ந்து இதனின் இது சீரியது என்றொன்றைச் செப்பரிது - வடமொழியையுந் தென்மொழியையும் ஆராய்ந்து இதைக்காட்டிலும் இது சிறப்புடைத்தென்று ஒன்றைத் தெரிந்துசொல்லுதல் கூடாது,—ஆரியம் வேதம் உடைத்து தமிழ் திருவள்ளுவனார் ஓது குறட்பா உடைத்து - வடமொழி வேதமுடைத்து, தமிழ்மொழி திருவள்ளுவனாயனார் சொல்லிய குறட்பாவுடைத்து, ஆதலால். எ - று.

ஆல் அசை. வடமொழியும் தென்மொழியும் பிறமொழிகள்போலாது பாணினியாரும் அகத்தியனாருமுதலாகிய முனிவர்களாலே செயப்பட்ட இலக்கண நூல்களாலே சீர்திருந்தி நிற்றன்முதலியகுணங்களுடைமையாலும், அது பிராகிருதமுதலியவற்றுக்குப்போல் இது ஆந்திரமுதலியவற்றுக்கு முதலாய் நிற்றலாலும், ஒன்றற்

கொன்று குறைபாடைத்தன்றேனும், வேதமுடைமை பற்றி வடமொழிக்குச் சொல்லப்பட்ட உயர்வு தென்மொழிக்கண்ணே திருக்குறள் உண்டாதலின் இனியில்லையென்றற்கு, இதனினிது சிரியதென்றொன்றைச் செப்பரிதென்றார். இத்திருக்குறளாலே வடமொழியோடு தென்மொழிக்கு ஒப்புமைமையைவு சொல்லியபடி. (சக)

களத்தூர்கிழார்.

சச. ஒருவ ரிருகுறளே முப்பாலி னேதுக்
தரும முதனான்குஞ் சாலு—மருமறைக
ளோந்துஞ் சமயநூ லாறுநம் வள்ளுவனூர்
புந்தி மொழிந்த பொருள்.

இ - ள். அருமறைகள் ஐந்தும் சமயநூல் ஆறும் நம் வள்ளுவனூர் புந்தி மொழிந்த பொருள் - இருக்குமுதற்பாரதமீறாகிய அரிய வேதங்களோந்தும் அவ்வேதத்தின் வழிப்பட்ட சமயநூல்களாறும் நம்முடைய திருவள்ளுவரால் உலகத்தார்க்குப் புத்தியாகச் சொல்லப்பட்ட நூலிலடங்கும்,—ஒருவர் இருகுறளே முப்பாலின் ஏதும் தரும முதல் நான்கும் சாலும் - ஆதலால், ஒருவர் ஒருவிகற்பமும் இருவிகற்பமுமாகிய இருவகைக்குறள்களாலுமே முப்பால்களில் அத்தியயனஞ்செய்த அறியப்படுகின்ற அறமுதலிய நாற்பொருள்களும் அவருக்குப் போதும். எ - று.

ஒருவனுக்கே ஐந்தும் ஓதியுணரமுடிவுபோகாது வேறுவேறான அதிகாரிகளுடைமைபற்றி, அருமறைகளோந்துமென்றார். சமயநூலாறும் ஒன்றேபொருளென்னும் பாட்டையிற் காண்க. நமக்கெல்லாம் அறிவொழுக்கங்கொளுத்தி நல்வழிப் படுத்த வந்த பரமாசாரியர் இவரேயென்னு முரிமைதோன்றற்கு நம் வள்ளுவனூரென்றார். மறைகளோந்துஞ் சமயநூலாறும் நம் வள்ளுவனூர் புந்திமொழிந்த பொருளெனலால், அவை பலவற்றினும் வேறுவேறு வகைப்பட்டுச் சென்றுகின்ற கருத்துக்களெல்லாம் இவ்வொரு நூற்கண்ணே அடங்கிநிற்கின்றமை சொல்லப்பட்டதாயிற்று. பொருள் ஆகுபெயர். ஒருவரெனப் பொதுப்படக் கூறலால், இதனை ஒதுதற்குப் பெண்பாலாருக்கும் அதிகாரமுண்டென்பது கொள்ளப்பட்டது. இவ்வொரு நூலோதியுணர்ந்தோர் அருமறைகளோந்துஞ் சமயநூலாறும் ஓதியுணர்ந்தோராவரென்றபடி. (சச)

நச்சுமகனார்.

சரு எழுத்தசை சீரடி சொற்பொருள் யாப்பு
வழுக்கில் வனப்பணி வண்ண—மிழுக்கின்றி
யென்றெவர் செய்தன வெல்லா மியம்பின
வின்றிவ ரின்குறள்வெண் பா.

இ - ள். எழுத்து அசை சீர் அடி சொல் பொருள் யாப்பு வழுக்கு இல் வனப்பு அணி வண்ணம் இழுக்கு இன்றி என்று எவர் செய்தன-எழுத்துமுதல் வண்ணமீறாகச் சொல்லப்பட்ட இவற்றுள் வழுவுதலில்லாமல் எக்காலத்தில் எவரால் எவை செய்யப்பட்டன,—எல்லாம் இன்று இவர் இன் குறள்வெண்பா இயம்பின - அவையெல்லாம் இக்காலத்து இத்திருவள்ளுவராலே செய்யப்பட்ட இவ்வினிய குறள் வெண்பாக்களிற் சொல்லப்பட்டன. எ - று.

வனப்பு அம்மை, அழகு, தொன்மை, தோல், விருத்தி, இயைபு, புலன், இழைபு. அணி சொல்லணி, பொருளணி, ஒலியணி. வண்ணம் குறிலகவற்றாய்சை வண்ணமுதலியன. ஒவ்வொருகாலத்தில் ஒவ்வொருபாவலர் ஒவ்வொருகுணத்தினுலேறிற்று

வினங்க நூல்செய்தனர். இவரோவெனின் எல்லாக்குணங்களாலும் நிறைந்து நெ ந்து வினங்கச் செய்தமையின், இவ்வாற கூறினர். இதன் பாக்களின் நெப்புச் சொல்லியபடி. (சஇ)

அக்காரக்கனி நச்சுமனார்.

சசு. கலிநிரம்பிக் காண்டற் கினிதாகிக் கண்ணி
னிலிநிரம்பு நீர்மைத் தெனினுங்—தொலிவிலா
வானூர் மதியந் தனக்குண்டோ வள்ளுவர்மூப்
பானூ னயத்தின் பயன்.

இ - ள். கலி நிரம்பிக் காண்டற்கு இனிதாகிக் கண்ணினிலி நிரம்பு நீர்மைத்து எனினும் - மதியமும் மூப்பானூலும் பதினுறுகலைகளாலும், அறுபத்துநாலுகலைகளா லும், நிறைந்து, நோக்குதற்கு ஆராய்ச்சிசெய்தற்கு இனிதாகி, முகக்கண்ணினிலையில், அகக்கண்ணினிலையில், நிரம்புகின்ற தண்மையுடைத்தாயினும், குணமுடைத்தாயி னும்,—வள்ளுவர் மூப்பானூல் நயத்து இன்பயன் தொலவு இலா வான் ஊர் மதியந் தனக்கு உண்டோ - திருவள்ளுவரது மூப்பானூலினது நயத்தால் வீலவுதாகிய இனிய பயனுனது ஒழிவின்றி ஆகாசத்தின்கண்ணே நிரிகின்ற மதியினிடத்து உண்டோ! எ - று.

மதியந்தனக்கென்றது வேற்றுமைமயக்கம். ஓகாரம் எதிர்மறை. ஆதாரமாகக் கொள்ளுதற்கு ஏற்புடைத்தல்லாத வானை ஆதாரமாகக் கோடலின், இழிவு தோன்றத் தொலிவிலாவானூர்மதிய மென்னூர். நயம் மறுப்படாமை, மழுங்காமை, குறைவு றுமை முதலியன. பயன் இம்மை மறுமை வீட்டின்பங்கள். ஒப்புமைசொல்லுதற்கு நூல்களில் ஒன்றும் இன்மையால், எனைப்பொருள் பலவற்றினுஞ் சிறந்தமதியையாயி னும் சொல்லுதுமெனைப் புனின் அதுவும் இதனுற்றகுவதன்றென்றபடி. (சக)

நப்பாலத்தனார்.

சஎ. அறந்தகளி யான்ற பொருடிரி யின்பு
சிறந்தநெய் செஞ்சொற்றீத் தண்டு—குறும்பாவா
வள்ளுவனுரேற்றினர்வையத்து வாழ்வார்க
ளுள்ளிருணீக்கும் விளக்கு.

இ - ள். அறம் தகளி - தருமம் அகலும்,—பொருள் திரி - பொருள் திரியும்,—இன்பு நெய் - காமம் நெய்யும்,—செஞ்சொல் தீ - செவ்வியசொல் நெருப்பும்,—குறும்பாத் தண்டா - குறட்பாத் தண்டும் ஆக,—வள்ளுவனுர் வையத்து வாழ்வார் கள் உள்ளிருள் நீக்கும் விளக்கு ஏற்றினர் - திருவள்ளுவராயனுர் பூமியின்கண் வாழ் வோரது அகத்திருளை ஒழிப்பதாகிய விளக்கு ஏற்றினர். எ - று.

ஆன்றல் மேம்படுதல். அகத்திருள் அஞ்ஞானம். நீச்சுடர் தகளி முதலியவற் றோடு கூடிப் புறத்திருளை எப்படியோ அப்படி நாயனுரது திருவாயிற் பிறந்த செஞ் சொல் அறமுதலியவற்றோடுகூடி அகத்திருளைக் கெடுத்தலின், இவ்வனம் உருவகஞ் செயலாயிற்று. மனிடயகத்தேற்றப்படுகிற விளக்கு அம்மனிடயகத்துள்ளார்க்கு மாத்தி ரமே உபயோகியாய் நிற்றலாலும், அகத்திருளைக் கெடுக்கவல்ல தன்மையாலும், இம்மை உலகத்து வாழ்வோர் பலர்க்கும் உபயோகியாய் நிற்றலாலும், அகத்திருள் கெடுத்தலாலும், அதனின் இது பலகோடி மடங்கு மிக்குச் சிறந்து நிற்கின்றமை உணர்த்தியபடி. (சஎ)

குலபதி நாயனார்.

சஅ. உள்ளக் கமல மலர்த்தி யுளத்துள்ள
தள்ளற் கரிய விருள் தள்ளுதலால்—வள்ளுவனார்
வெள்ளைக் குறட்டாவும் வெங்கதிரு மொக்குமெனக்
கொள்ளத் தகுங்குணத்தைக் கொண்டு.

இ - ள். உள்ளக்கமலம் மலர்த்தி உளத்து உள்ள தள்ளற்கு அரிய இருள் தள்ளுதலால் - நெஞ்சமாகிய தாமரைமலரை மலர்த்தி மக்களது அகத்திலுள்ள பிறிதொன்றை ஞலே நீக்கப்படாத அஞ்ஞானவிருளை நீக்குதலால்,—வள்ளுவனார் வெள்ளைக் குறட்பாவும் வெங்கதிரும் குணத்தைக்கொண்டு ஒக்கும் எனக் கொள்ளத்தகும் - திருவள்ளுவது குறள்வெண்பாவும், புறத்துத் தாமரைமலரை மலர்த்திப் புறத்திருளை நீக்குகின்ற ஞாயனும், அச்செய்கையைக்கொண்டு ஒக்குமென்று கொள்ளத்தகும். எ - று.

செயலும் தொழிற் பண்பெனப்படுதலின், குணமெனப்பட்டது; அது மலர்த்தலும் தள்ளுதலுமாம். குணத்தைக்கொண்டெனவே, செயப்படுபொருளைக்கொண்டு ஒக்குமெனக் கொள்ளத்தகா தென்றதாயிற்று. உலகுக்கெல்லாம் பேரொளியாகிய ஞாயனும் இதற்கு ஒருபுடையொப்பா மென்றபடி. (சஅ)

தேனீக்குடிக் கீரனார்.

சக. பொய்ப்பால பொய்யேயாய்ப் போயினபொய் யல்லாத
மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே—மூப்பாலிற்
றெய்வத் திருவள் ளுவர்செப் பியகுறளால்
வையத்து வாழ்வார் மனத்து.

இ - ள். தெய்வத்திருவள்ளுவர் மூப்பாலிற் செப்பிய குறளால் - தெய்வத்தன்மையையுடைய திருவள்ளுவாயனார் மூன்றுபால்களையுடையதாகக் கூறியகுறளைக் கேட்டறிதலால்—வையத்து வாழ்வார் மனத்துப் பொய்ப்பால பொய்யேயாய்ப் போயின - உலகின்கண் வாழ்வாருடைய மனத்துப் பொய்யின்பகுதியிற்பட்டனவையெல்லாம் பொய்யேயாய்ப் போயின—பொய்யல்லாத மெய்ப்பால மெய்யாய் விளங்கின - பொய்ம்மையல்லாத மெய்யின்பகுதியிற் பட்டனவையெல்லாம் மெய்யேயாய் விளங்கின. எ - று.

குறளாற் பொய்ப்பால பொய்யேயாய்ப் போயின மெய்ப்பால மெய்யேயாய் விளங்கின எனவே, இதற்கு முன்னெல்லாம் உண்மை தணியப்படாமையின், பொய்ப்பால மெய்ப்பாலபோன்மேற் கொள்ளப்பட்டும், மெய்ப்பால பொய்ப்பால போற் கைவிடப்பட்டும், மயங்கிக்கிடந்தன வென்றதாயிற்று. இதன் மெய்யுணர்வு பயத்தற்சிறப்புச் சொல்லியபடி. (சக)

கொடிஞாழல் மாணிபூதனார்.

ஙo. அறனறிந்தே மான்ற பொருளறிந்தே மின்பின்
றிறனறிந்தே மிவ் வுலகத் தெளிந்தே—மறனெறிந்த
வாளார் நெடுமாற வள்ளுவனார் தம்வாயாற்
கோளா தனவெல்லாங் கேட்டு.

இ - ள். மறன் எறிந்த வாள் ஆர் நெடுமாற - பகைவரையெறிந்த வாட்படை நன்கு மிகுந்த பாண்டியராசனே,—வள்ளுவனார்தம் வாயாற் கோளாதனவெல்

லர்ம் கேட்டு அறன்றிறன் அறிர்தேம் - திருவள்ளுவராயனாரது வாக்கால் இதற்கு முன் கேட்கப்பட்டில்லாதவை யெல்லாம் இப்போது கேட்டு, அறத்தின்றிறத்தை யறிர்தேம்,—பொருட்டிறன் அறிர்தேம் - பொருளின்றிறத்தை அறிர்தேம்,—இன்பின் திறன் அறிர்தேம் - இன்பத்தின்றிறத்தை அறிர்தேம்,—வீட்டித்திறன் தெளிர்தேம் - வீட்டின்றிறத்தை அறிர்தேம். எ - று.

திறன் அறமுதலியவற்றோடுங் கூட்டப்பட்டது. மறன் ஆகுபெயர். கேளாதன பிறநூலாசிரியர்க்கெல்லாம் அறிர்து சொல்லுதற்கெட்டாதிருர்த அறமுதலியவற்றி னுட்பங்கள். இம்மை மறுமை வீடுகளைக் குறித்துணர்தற்குரிய உறுதிப்பொருணன்கு முணர்தலின், இனி யாதொன்றும் குறைவில்லையென்றபடி. (இ0)

கவுணியனூர்.

இக. சிற்றைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வர்த விருவினைக்கு மாமருர்து—முற்றிய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனூர்
பன்னிய வின்குறள் வெண்பா.

இ - ள். முற்றிய நன்னெறி நாம் அறிய நாப்புலமை வள்ளுவனூர் பன்னிய இன் குறள்வெண்பா - முற்பட்டதாகிய நல்லவழியை நாமறியும்பொருட்டு நாவால் விளங்கு கின்ற புலமையையுடைய திருவள்ளுவராயனாரால் சொல்லப்பட்ட இனிய குறள் வெண்பாக்கள்—சிற்றைக்கு இனிய - கினேத்தால் மனத்திற்கு இன்பஞ்செய்வன,—செவிக்கு இனிய - கேட்டாற் காதுக்கு இன்பஞ்செய்வன,—வாய்க்கு இனிய - ஓதினால் வாய்க்கு இன்பஞ்செய்வன,—வர்த இருவினைக்கு மா மருர்து - தொடர்ர்து வருகின்ற இருவினைகளாகிய நோய்களுக்குப் பெரிய மருர்துகளாவன. எ - று.

குறட்பாவை மருர்தென்றமைக்கு எற்ற வினையை நோயென்னுமையால், ஏக தேசரூபகம். நல்வினையும் பிறவிக்கு ஏதுவாகலால் இருவினையென்றார். முற்பட்ட நல்வழி நன்மக்களுக்கு அகாலியாயமைர்துள்ளது; அது சமயத்தாரது பலவகைப் பட்ட கற்பனையினூலே மறைபட்டு நின்றமையின், நாமறியவென்றார். இர்நூலின் பாக்களைச் சிர்திர்தன் முதலியன செய்யுங்காலும் சொற்பொருணயங்களாலே இன் பம் விளைர்ததுத் தெய்வத்தன்மையால் வினைர்ததையும் ஒழிர்குமென்றபடி. (இக)

மதுரைப்பாலாசிரியனூர்.

இஉ. வெள்ளி வியாழம் விளங்கிரவி வெண்டிங்கள்
பொள்ளென நீக்கும் புறவிருளைத்—தெள்ளிய
வள்ளுவ ரின்குறள் வெண்பா வகிலத்தோர்
உள்ளிருள் நீக்கு மொளி.

இ - ள். வெள்ளி வியாழம் விளங்கு இரவி வெண்டிங்கள் புறவிருளைப் பொள் ளென நீக்கும் - சுக்கிரன் சுரகுரு சூரியன் சந்திரன் என்பன புறத்திருளை விரை வினே நீக்கும் ஒளிகளாம்;—தெள்ளிய வள்ளுவர் இன்குறள்வெண்பா அகிலத்தோர் உள்ளிருள் நீக்கும் ஒளி - முற்றுணர்ர்த திருவள்ளுவராயனாரது இனிய குறள் வெண்பா உலகத்தோரது உள்ளிருளை நீக்கும் ஒளியாம். எ - று.

இவ்வுவமைகூறலே, புறத்திருளுக்கு அவைபலவுள, அகத்திருளுக்கு இஃதொ ன்றே உளதென்றதாயிற்று. அவற்றுள் ஒன்றாலும் நீக்கப்படாத அகத்திருளை நீக்க வல்லதாகலின், இதற்கு எல்லாற்றாலும் ஒப்பதொன்றின்றென்றபடி. (இஉ)

ஆலங்குடிவங்கனார்.

நிகூ. வள்ளுவர் பாட்டின் வளமுரைக்கின் வாய்மடுக்குந்
தெள்ளமுதின் நீஞ்சுவையு மொவ்வாதாற்—றெள்ளமுத
மூண்டறிவார் தேவ ருலகடைய வுண்ணுமால்
வண்டமிழின் மூப்பான் மகிழ்ந்து.

இ - ள். வள்ளுவர் பாட்டின் வளம் உரைக்கின் வாய்மடுக்கும் தெள்ளமுதின் நீஞ்சுவையும் ஒவ்வாது - திருவள்ளுவரது பாட்டினது நீஞ்சுவையையே சொல்லுமிடத்து, உண்ணப்படுகின்ற தெள்ளிய அமுதினது நித்திப்பாகிய சுவையும் ஒப்பாகாது;—தெள்ளமுதம் உண்டு அறிவார் தேவர் - அத்தெள்ளிய அமுதையுண்டு அதன் சுவையை அறிபவர் தேவர்கள்;—வண்டமிழின் மூப்பால் உலகடைய மகிழ்ந்து உண்ணும் - வளம் பொருந்திய தமிழின்கண்ணதாகிய மூப்பாலாகிய அதின் மும்மடி சிறந்த பாலை எவ்வுலகத்தாரும் மகிழ்ந்து உண்டு நீஞ்சுவையறிவார். எ - று.

வளம் ஆகுபெயர். ஆல் அசை. அவ்வமிர்தம் வாயுட்பெய்தவழி நாவிதப்பட்ட சிறிதுபொழுதளவே நீஞ்சுவை பயப்பது. இப்பாட்டு கொஞ்சின்கணிலேபெற்று ஒழிவின்றித் நீஞ்சுவை பயத்தலின் ஒவ்வாதென்றார். மூப்பால் சிலிஷ்டரூபகம். இனி எவ்வுலகத்தாருக்குங் கருமபூமியாகிய இவ்வுலகத்துட்டோன்றி மெய்ப்பொருளுணர்ந்தன்றி வீட்டின்பம் பெறுதல் கூடாமையின், உலகடைய வுண்ணுமென்றார். அன்றி, அவ்வுலகத்துத் தேவாகளும் தமதுமேற்பட்டவறிவினுலே இதனது உயர்வொப்பற்ற குணத்தை அறிந்து முக்கியப்பிரமாணமாகக் கொண்டு மகிழ்கூர்வரென்பதுபற்றி, அங்ஙனங் கூறினுரெனினுமமையும். இஃது இவ்வுலகத்தார்க்கேயன்றி அவ்வுலகத்தார்க்கும் பயன்படுமாறு சொல்லியபடி. (இகூ)

நீருந்நணிகைக் காவணப்பெருமாளையர் செய்த

திருவள்ளுவமாலையுரை மூற்றிற்று.

இடைக்காடர்பாடல்.

கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்.

இ - ள். குறள் - நாயனுரது நூலின் ஆயிரத்து மூந்நூற்றுமுப்பது குறள்வெண்பாக்களும்,—கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த - கடுகை அதனுடலே துளைசெய்து ஏழு கடனீரையும் அத்துளையுட்பெய்து தன்னளவிற் குறுகும் வண்ணம் தறித்துவைத்தால், அதுபோல்வனவாகும். எ - று.


மிக்க சிற்றளவிற்கு எடுத்துச்சொல்லப்படுவதொரு நுண் பொருளாகலின், கடுகு சொல்லப்பட்டது. இரண்டளறுபு தறித்தவென்பினை கொண்டது. துளைத்தல் உள்ளீடு போக்குதல். புகவிடென்பது புகட்டென விகாரப்பட்டு முதனிலையாய் நிற்றலின், புகட்டியென்றுரயது. துளையினிடைவெளிக்கும் அதன்புறமூடிக்கும் கொள்ளப்பட்ட பங்கு சிறிதாக ஒழிந்த பங்கு பெரிதாகலின், குறுகவென்றார். தறித்தாலன்ன வெனற்பாலது தறித்தவென இடைக்குறைந்துநின்றது. இல்லாதபொருளே உவமானமாகக் கூறலின், இல்பொருளுவமை. குறட்பாக்களுள் ஒவ்வொன்றும் அதுபோலின், தறித்தவெனப் பன்மையாற் கூறலாயிற்று. குறள் பால்களாவன: நிணைப்பெயராக

லீன், இங்கே பன்மைக்காயது. இங்ஙனங்கூறவே, குறட்பாவின் சொற்சுருக்கமும் அதனுள் அடக்கப்பட்ட பொருள் விரிவும் நோக்கும்வழி, அக்கடுகும் எழ்கடனீரும் போலுமென்றதாயிற்று. பொருள்விரிவினளவுபடாதமை சொல்லியபடி.

இப்பாட்டிலே "அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்—குறுகத் தறித்த குறள்." என முதற்சொல்லை மாற்றி ஔவையாராற் புகழ்ச்சிசெய்யப்பட்டது.

ஆசிரியர் திருநாமங்கள்	கூ	நூலின்றிருநாமங்கள்
திருவள்ளுவர்.		திருக்குறள்.
நாயனர்.		முப்பானூல்.
தேவர்.		உத்தரவேதம்.
முதற்பாவலர்.		தெய்வநூல்.
தெய்வப்புலவர்.		திருவள்ளுவர்.
நான்முகனர்.		பொய்யாமொழி.
மாதானுபங்கி.		வாயுறைவாழ்த்து.
சென்றாப்போதார்.		தமிழ்மறை.
பெருநாவலர்.		பொதுமறை.

திருவள்ளுவநாயனர் திருவடி வாழ்க.



திருக்குறளகராதி.

குறள்.	பக்கம்.
அ	
அகடாரார்நல்	உகள
அகப்பட்டி	உ0இ
அகரமுதல	ந
அகலாதணு	உ00
அகழ்வாளர	சடு
அகனமர்ந்து	உள
அகனமர்ந்தீ	உக
அஃகாமை	இ
அஃகியகன்	இ0
அங்கண்	உ0அ
அசையீ	நகச
அச்சமுடை	கஇள
அச்சமேஇ	ந0கூ
அஞ்சாமைய	கசசு
அஞ்சாமைபீ	ககந
அஞ்சுமறியா	உசள
அஞ்சுவதுஞ்	கஉள
அஞ்சுவதோ	க0சு
அடக்கமை	நஎ
அடல்வேண்டு	கூஅ
அடற்றகை	உஉக
அடுக்கியகோ	உஎந
அடுக்கிவரினு	கஅஉ
அடுத்ததகா	உ0ச
அணங்குகொ	ந0க
அணியன்றே	உஅக
அத்தனென்	கஉ
அத்தனைர்நூற்	கஇக
அமரகத்தாற்	உநச
அமரகத்துவ	உகஉ
அமிழ்தினு	உஉ
அமைத்தாங்	சச0
அரம்போன்றி	ககக
அரம்பொரு	உஇச
அரம்போலு	உஅச
அரிதரோதேற்	நந்க
அரிதாற்றி	நந்ந
அரியகற்றசெற்	கசஅ
அரியவற்று	கந்க
அரியவென்று	கஇள

குறள்.	பக்கம்.
அருக்கேட	இக
அருஞ்செல்	ககஇ
அருட்செல்	கூஅ
அருமறை	உசந
அருமையு	கஎஅ
அரும்பய	இக
அருவினையெ	கசந
அருளல்லதி	எஉ
அருளில்லார்	எ0
அருளென்	உகஅ
அருளொடு	உகள
அருள்கருதி	அக
அருள்சேர்	ககூ
அருள்வெஃகி	இக
அலந்தாரை	நஎக
அலறெழுவாரு	நஉஅ
அலர்நாண	நந0
அல்லலரு	கூ
அல்லவை	ந0
அல்லற்பட்டு	ந0
அவந்நீர்தா	நச0
அவர்செல்	உஎட
அவாவில்ல	க0எ
அவாவின்ன	க0எ
அவாவென்ப	க0இ
அவிசொரிந்	எந
அவையறிந்	உ0இ
அவையறியா	உ0ச
அவ்வித்தழு	சஅ
அவ்வியநெ	சக
அழக்கொண்	ககத
அழச்சொன்	உஉக
அழல்போ	நஇச
அழிவதூஉ	ககக
அழிவந்த	உகஉ
அழிவினவை	உஉள
அழிவின	உ0உ
அழுக்கற்ற	சக
அழுக்காறவா	கச
அழுக்காறுடையார்	சஅ
அழுக்காறுடையான்	ச0

குறள்.	பக்கம்.
அழுக்கொனை	சக
அழுக்காற்றி	சஅ
அளவல்லசெய்	அஉ
அளவளாவில்	கஇச
அளவறிந்தார்	அக
அளவறிந்து	கசக
அளவின்கணி	அக
அளித்தஞ்சை	நஉஉ
அறங்கூறன	இஉ
அறஞ்சாரா	உகஅ
அறஞ்சொல்	இந
அறத்தாறி	கச
அறத்தாற்றி	கஎ
அறத்தான்வ	கஇ
அறத்நிற்கே	உ
அறச்நிறாங்	கந
அறம்பொரு	கசஅ
அறவாழிய	இ
அறவினையா	கக
அறவினைபு	உக0
அறனழீஇ	இஉ
அறனறிந்தா	கஅஇ
அறனறிந்தமூ	கந0
அறனறிந்தவெ	இக
அறனுக்கம்	சள
அறனியலா	சந
அறனிழுக்கா	கசச
அறனீனு	உகள
அறனெனப்	கஅ
அறனேக்கி	இச
அறன்கடை	சஉ
அறன்வரை	சச
அறிகிலா	நஉள
அறிகொன்	கஅஇ
அறிதோறறி	நகஅ
அறிந்தாற்றி	கஇஉ
அறிவற்றங்	கஉஇ
அறிவிலார்தா	உசஉ
அறிவிலாரெ	உசஉ
அறிவினை	அக
அறிவினெ	இள

குறள்.	பக்கம்.
அறிவின்மை	உசக
அறிவுடையாரா	கஉக
அறிவுடையாரெ	கஉஎ
அறிவுருவா	ககஅ
அறவாழி	ஙஉ0
அறைபறை	ஙஎக
அற்காவியல்	கஙி
அற்றதறிற	உஎ0
அற்றமறைக்கு	உஅ0
அற்றாரைற்ற	உசஙஉ
அற்றவரென்	கஎக
அற்றாழிபதி	சஙஉ
அற்றாரைத்தே	சசக
அற்றார்க்கொ	உஅஎ
அர்ரலனவறி	உசக
அற்றேமென்	கஅஉ
அனிச்சப்பூ	ஙஉ0
அனிச்சமு	ஙஉக
அன்பகத்தில்	உசு
அன்பறிவாரா	ககஅ
அன்பறிவ	கஙிக
அன்பிலனு	உசஎ
அன்பிலரெல்	உசி
அன்பிர்குமு	உசி
அன்பின்வழி	உசு
அன்பின்விழை	உசு0
அன்பினுமா	உஙி
அன்புடை—லி	உஅங
அன்புட—ல்வே	ககஎ
அன்புசணை	உஅச
அன்புமறனு	கஎ
அன்புற்றமர்ந்த	உஙி
அன்பொரீஇ	உஅஅ
அன்போடியை	உசி
அன்றறிவாமெ	கசி
ஆ	
ஆகாதனவீட்	கசக
ஆகூழாற்	கஅ0
ஆக்கங்கருதி	கஙஎ
ஆக்கமதர்வி	கஎச
ஆக்கமிழக்	கஎக
ஆக்கமூங்	கஅஎ
ஆங்கமை	உசக
ஆபயன்கு	ககச
ஆபுமறிவி	உசஉ
ஆய்தாய்ர்	உஉஅ
ஆராவியற்கை	கஅஅ
ஆவிற்குரெ	ஙஎக
ஆவினீபு	உகக
ஆற்றருமா	கசஙி
ஆற்றினவறி	உ0க

குறள்.	பக்கம்.
ஆற்றினவறிர்தி	கசக
ஆற்றின்வருர்	கஙஅ
ஆற்றினிலேத	உ0எ
ஆற்றினெழு	கஎ
ஆற்றுபவர்ச்	உகச
ஆற்றுவா—லிக	உஙிஙி
ஆற்றுவா—ல்பசி	சஙக
ஆர்றுவா—ல்பணி	உஅக
இ	
இகலாரு	உசசு
இலிற்கெ	உசசு
இலின்மி	உசஙி
இலெறிர்	உசஙி
இலென்ப	உசச
இலென்னு	உசஙி
இல்ரோணை	உசசு
இழச்சியிற்	கஙிஅ
இழற்தெ	ஙOO
இடமெல்லா	ஙOஉ
இடனில்பரு	சுக
இடிக்குர்து	கஙஉ
இடிபுரிர்தென்	கஎஎ
இடிப்பாரை	கஙஉ
இடுக்கட்ப	ககO
இடுக்கண்கா	உகஙக
இடுக்கண்வ	கஅக
இடும்பைக்கி	கஅச
இடும்பைக்கே	உகஙக
இடைதெரிர்	உOசு
இணரூழ்த்தி	கஅக
இணரொரிதே	அஎ
இனியிதனு	கஙிஉ
இனைப்பிற்சர	ஙஉச
இனையாரின்	உஙிக
இம்மைப்பிறப்	ஙஅO
இயல்பாகு	கூஅ
இயல்பிலு	கஎ
இயல்புளி	ககO
இயற்றலு	கசச
இரக்கவிர	உகக
இரத்தலினி	சுச
இரத்தலுமீ	ஙOO
இரத்துமுயி	ஙOஉ
இரப்பனிரப்	ஙOக
இரப்பாரை	ஙOக
இரப்பான்வெ	ஙOக
இரவாரிரப்	உகஙி
இரவுள்ளவுள்	ஙOச
இரவென்னு	ஙOக
இருணீங்கி	கOக
இருநோக்கி	ஙகஉ

குறள்.	பக்கம்.
இருர்துள்ளி	ஙஙிஅ
இருர்தோம்பி	உஎ
இருபுனலும்	உசஉ
இருமனப்பெ	உகஙு
இருமைவகை	கO
இருவேறுல	கOக
இருள்சேரிரு	ச
இலக்கமூடம்	கஅஉ
இலங்கிழா	ஙுகச
இலமென்றசை	உகசு
இலமென்றவெ	ஙO
இலர்பலராகிய	எக
இலனென்றதீய	ஙிஅ
இலனென்னு	கஉ
இல்வாழ்வா	உஙி
இல்லதெனி	ககூ
இல்லாரை	உகஎ
இல்லாஞையுஞ்	உஙிஅ
இல்லாள்கட்	உஙிஅ
இல்லதவற	ஙுஅக
இலறலுமாண்	கஉஅ
இழத்தொறூஉ	உகஅ
இழிவறிர்தண்	உஎO
இழுக்கலுடை	கஉங
இழுக்காமை	கஙிச
இழைத்தநிக	உஉஙி
இளித்தக்க	ஙுஎக
இளிவரின்	உஎஎ
இளதாகமு	உஙிக
இளையரின்	உOஉ
இறந்தமைர்	உஙிஎ
இறந்தவெ	கஙிசு
இறர்தாரிற	அஅ
இறப்பேபுரி	உஎக
இறலீனுமெ	ஙிஎ
இறனிபய	உOO
இறைகடி	ககஙி
இறைகாக்	ககO
இற்பிற—கண்ண	உஎஉ
இற்பிற—கண்ணே	உகஎ
இனத்தாற்	ககக
இனம்போன்	உகக
இனியவுள	ஙுக
இனியன்ன	ஙுஎங
இனைத்துணைத்	உஅ
இனையரிவ	உஉஅ
இன்கணுடை	ஙுங்க
இன்சொலாலீ	ககஙி
இன்சொலாலீர	உக
இன்சொலி	ஙுச
இன்பங்க	ஙுங்க

குறள்.	பக்கம்.
இன்பத்தா—பய	உசடு
இன்பத்தா—லி	உஅங
இன்பமிடை	உ0ள
இன்பமொ	உகக
இன்பம்வீழை—னி	உஅஉ
இன்பம்வீழை—ன்	உஎக
இன்மையிடு	ங0உ
இன்மையினி—த	உகக
இன்மையினி—து	உகங
இன்மையு	சடு
இன்மையெ	உகக
இன்மையொ	உ அஉ
இன்றியமை	உஎடு
இன்றும்ப	உகஅ
இன்னுசெ—ரை	அக
இன்னுசெ—ர்	உ அஉ
இன்னுநிரக்	கஉ
இன்னுநின	கஉங
இன்னுமை	உஅங
இன்னுவெ	அக
ஈ	
ஈட்டமிவ	உஅக
ஈதலிசைப	கச
ஈத்துவக்கு	சச
ஈர்வகையி	உ0க
ஈவார்கணெ	உ0க
ஈன்றபொ	உங
ஈன்றண்மு	உசச
ஈன்றள்பசி	உகக
உ	
உடம்பாடி	உடுச
உடம்பொ	உஉஉ
உடுக்கையி	உஉள
உடுப்பதூஉ	ங0எ
உடைசெல்	உசஅ
உடைத்தம்	உச0
உடைமையு	உக
உடையெ	உஎங
உடையார்	உக அ
உட்கப்படா	உசஉ
உட்பகைய	உடுஉ
உணர்வது	உ0எ
உணவினு	ங அங
உண்டார்க	ங உ
உண்ணற்க	உசங
உண்ணாது	சஎ
உண்ணுமைபு	எஉ
உண்ணுமைவே	எஉ
உதவியரைத்த	கஉ
உப்புமைச்	ங உக
உயர்வகலர்	உசச

குறள்.	பக்கம்.
உயிருடம்பி	கஉ
உயிர்ப்பவு	உடுஉ
உய்த்தல	உஎக
உரமொரு	எஎடு
உரனசைஇ	ங உச
உரனென்	உ0
உருவுகண்	உகச
உருளாய	உகக
உரைப்பா	கடு
உலகத்தாரு	உசச
உலகத்தோ	சஉ
உலகர்தழீஇ	எஉக
உலவிடத்	உகக
உவக்காணெங்	ங உச
உவர்தலை	உஉச
உவப்பத்	கஎஎ
உழந்தழ்	ங ங
உழலுநர்	உகடு
உழுதுண்டு	உகச
உழுவாரு	உகச
உழைப்பிரி	கடுடி
உளபோன்	கஅ அ
உனரெனினு	உ0
உளரென்று	எஉ
உனவரைஅ	சஉ
உள்ளக்களித்	ங உ0
உள்ளத்தார்	ங உ0
உள்ளத்தாலு	அ0
உள்ளத்தாற்	அங
உள்ளமிலா	எஎடு
உள்ளமுடை	எஎங
உள்ளம்போ	ங ங எ
உள்ளற்க	உங0
உள்ளியதெல்	அஅ
உள்ளியதெய்	கடுஅ
உள்ளினு	ங சக
உள்ளினே	ங அ0
உள்ளுவதெல்	எஎச
உள்ளுவன்—னு	உசக
உள்ளுவன்—ம	ங உங
உள்ளூற்றி	உகடு
உறைகுவ ——	கஎ
உறைமுறை	உடுங
உரூஅதவர்க்	ங உங
உரூஅதவர்போ	ங உச
உரூஅதோ	கஉஅ
உரூஅர்க்கு	ங உடு
உறினட்ட	உங
உறினுயிர	உஉச
உறுதோறு	ங எ
உறுபசியு	உஎஉ

குறள்.	பக்கம்.
உறுபொரு	உசஅ
உறுப்பமைச்	உஎக
உறுப்பொத்	உஅக
உறுவதுசீர்	உங
உறைதெறி	கஉன
உற்றநோய்!	கங
உற்றநோய்நா	ஙக
உற்றவன்	உஎச
உற்றனவு	உஎச
ஊ	
ஊக்கமுடை	சசங
ஊடலிற்றோற்	ங அஉ
ஊடலிற்றோன்	ங அஉ
ஊடலினி	உஎஎ
ஊடலுணங்	ங எஅ
ஊடலுணர்தல்	ங கஅ
ஊடற்கட்	ங எ0
ஊடிப்பெ	ங அங
ஊடியவ	ங எக
ஊடியிருக்	ஙஎக
ஊதியமென்	ங அச
ஊதுதல்	ங அச
ஊனுணுடை	உஅங
ஊனியமென்	உஉ0
ஊனவர்கொலை	ங உக
ஊருணிநீர்	கு0
ஊழிபெய	உ அஉ
ஊழிற்பெரு	கக எ
ஊழையு	எ அ0
ஊறெரா	சகஉ
ஊனுக்கு	உ அக
எ	
எச்சமென்	உ அக
எட்பக	உடுச
எண்சேர்ந்	உ ச0
எண்ணித்	எங அ
எண்ணியவெ	ககங
எண்ணியா	கசசு
எண்ணென்ப	கக எ
எண்பதத்தாலே	உ அங
எண்பதத்தானே	கசக
எண்பொருள	எஉசு
எதிரதாக்கா	கஉஎ
எந்நன்றி	ங அச
எப்பொருளு	உ0க
எப்பொருளெ	கப உ
எப்பொருள்யார்	கஉடு
எய்தற்கரி	கசச
எரிதாற்சு	உடுக
எல்லாப்பொ	உகடு
எல்லார்க்கு	ங அ

குறள்.	பக்கம்.
எல்லார்க்குமெ	கஎ0
எல்லாவீனச்	அடி
எல்லேக்கணி	உகஉ
எவ்வதுறை	கஉக
எழுதுக்கா	கூஎக
எழுபிறப்பு	உக
எழுமையெ	கூக
எனிதென	சஉ
என்னாத	கஉக
என்னாமை	எக
என்னினிவி	கூசச
எற்றிற்கு	கூ0எ
எற்றென	கஉ0
எனைத்தானும்	எஉக
எனைத்தானுமெ	கூ0
எனைத்திட்	ககச
எனைத்தும்	உகக
எனைத்துமெ	சஉ
எனைத்தீ	கூசஅ
எனைத்தொ	கூசக
எனைப்பலை	டுஅ
எனைமாட்சி	உகக
எனைவகை	கடுக
என்பிலதனெ	உடி
என்றுமொ	ககஎ0
என்னைமுன்	உஉஉ
ஏ	
ஏதம்பெருஞ்	உஅஎ
ஏதிலாரார	உச0
ஏதிலார்கு	டுச
ஏதிலார்போ	கூஎடி
ஏந்தியகொ	உடிஎ
ஏமுற்றவ	உடி0
ஏரினுன்	உகடி
ஏரினுழாஅ	எ
ஏவலுஞ்செ	உசஉ
ஐ	
ஐந்தவித்தா	க0
ஐயதனிவ்	க0உ
ஐயப்படாஅ	உ0உ
ஐயுணர்வெ	க0உ
ஒ	
ஒட்டார்	உகக
ஒண்ணுதற்	கூகக
ஒண்பொரு	உகக
ஒத்ததறிவா	க0
ஒப்புரவி	கூ
ஒருகாலெ	கூசச
ஒருகாலெ	உகக
ஒருபொழு	கூ
ஒருமைக	ககக

குறள்.	பக்கம்.
ஒருமைச்	உச0
ஒருமைமக	உஅ
ஒருமைபுனா	கூஅ
ஒலித்தக்கா	உ0
ஒல்லுங்கரு	உகடி
ஒல்லும்வகை	கஉ
ஒல்லும்வாயெ	ககடி
ஒல்வதறிவ	கஉக
ஒழுக்கத்தினெ	சக
ஒழுக்கத்தினெ	சக
ஒழுக்கத்து	கூ
ஒழுக்கமுடைமை	க0
ஒழுக்கமுடைய	சக
ஒழுக்கமும்	உஎஉ
ஒழுக்கம்வி	கூசு
ஒழுக்காரு	சஎ
ஒளியார்மு	உ0சு
ஒளியொருவ	உஎக
ஓ	
ஓதாதாை	சடுஇ
ஓதாதார்க்	சசு
ஓதாதாற்	சசுக
ஓதற்றலெ	எகக
ஓதாமை	கஎ0
ஓத்தொற்றி	கஎஉ
ஓத்தொற்று	கஎஉ
ஓன்குகல்	கூஉ
ஓன்றுமை	உடிசு
ஓன்றுவலத	சுடி
ஓன்றுஞ	கூஅ
ஓன்றறதி	உசுக
ஓன்னார்த்	எச
ஔ	
ஔதெல்லே	கூ0
ஔதிபுணர்ந்	உச0
ஔம்பினமை	கூ0உ
ஔர்ந்துள	க0கூ
ஔர்ந்தகண்	கடுக
ஔவினிதே	கூஉஅ
க	
கடலன்ன	கூஉசு
கடலோடா	சசுக
கடனறிச்	ககக
கடனென்ப	உஅ0
கடாஅக்களி	கூசக
கடாஅவுரு	சஎச
கடிதோசி	சகச
கடிந்தடிச்	சகக
கடுஞ்சொல்	சகடி
கடொழிபுய்	சகக
கடைக்கொட்	ககூக
கணகொடிதி	எக

குறள்.	பக்கம்.
கண்களவு	கூகக
கண்டதமன்	கூஉக
கண்டாங்கலு	கூகள
கண்டாருயிரு	கூ0
கண்டுகேட்	கூகடி
கண்ணிறைந்	கூகள
கண்ணிற்கணி	கசஅ
கண்ணிற்றுனி	கூஎஉ
கண்ணின்பச	கூடுள
கண்ணின்றுக	டுகூ
கண்ணுங்கொ	கூடுஅ
கண்ணுடைய	சக
கண்ணுள்ளார்	சக
கண்ணுள்ளிற்	உஎஉ
கண்ணெதெ	கூசு
கண்ணேட்—த்	சள
கண்ணேட்—மி	உ0சு
கண்ணேட்—மெ	உளள
கதங்காத்துக்	சடுஇ
கதமெனதா	சசு
கயலுண்கண்	சசுக
கரத்தலுமார்	ககக
கரப்பவர்க்	கள0
கரப்பிம்மை	கள஢
கரப்பிலாதெ	கள஢
கரப்பிலார்	கூ஢
கரப்பினுக்	உடுகூ
கரவாதவர்	சுடி
கருமஞ்சிதை	கூ அ
கருமஞ்செய	உசுக
கருமணியிற	எச
கருமத்தாஞ	
கருவியுகா	ககக
கலங்காதகெ	உச0
கலந்துணர்	கூ0உ
கலலாதமே	க0கூ
கல்லாதவரிற்	கடுக
கல்லாதவருக	கூ஢அ
கல்லாதாஞ	
கல்லாதான	கூ஢உ
கல்லார்பி	சசுக
கலலாவொரு	ககக
கல்லான்வெ	உஅ0
கல்லுகழக	கூக
கல்வையார்	கூசக
கழாஅக்கால்	கூசச
களவினாலி	ககக
களவினாட்	ககடி
களவென்னு	ககக
களித்தறிப்ப	ககூக
களிதானே	எக

குறள்.	பக்கம்.
கள்ளுண்ணா	கூஉக
கள்ளுண்ணாமை	கூ0
கள்ளுண்ணான்	கூ0
கள்ளுண்ணாமெ	கூ0
கள்ளுண்ணார்	கூ0
கள்ளுண்ணாவெ	கூ0
கள்ளுண்ணாவெ	கூ0
கள்ளுண்ணாவெ

குறள்.	பக்கம்.
களித்தொற	ரூ.க
கள்வார்க்கு	அ.உ
கள்ளுண்ணுப்	உ.ரு.க
கறத்தின்னு	அ.க
கற்கைடற	க.க.ரு
கற்றதனலா	ரு
கற்றறித்தார்	உ.ரு.எ
கற்றாருட்கற்	உ.ரு.க
கற்றார்முற்	உ.ரு.க
கற்றிலனயினு	க.உ.ரு
கற்றீண்டி	க.ரு.உ
கற்றுக்கண்	க.க.க
கனவினுணண்	ரு.ஙி.ரு
கனவினுமி	உ.ரு.சு
கா	
காக்கப்பொரு	ரு.எ
காக்கைகர	க.ஙி.ஞி
காட்சிக்கெ	க.க.ஞி
காணச்சின	உ.ச.அ
காணுதாற்	உ.ச.ரு.ரு
காணிற்குவ	ரு.உ.ரு
காணுங்காற்	ரு.எ.க
காணுமற்	ரு.சு.ஙி
காதலகாத	க.ரு.ரு
காதலரில்	ரு.ஙி.உ
காதலர்தா	ரு.ச.க
காதலவரி	ரு.ஙி.அ
காதன்மை	க.ச.க
காமக்கடன்	ரு.ரு.ஞி
காமக்கடு—வு	ரு.உ.ஞி
காமக்கடு—னீ	ரு.ரு.சு
காமக்கண்ணிச்	ரு.சு.ரு
காமமுகாணு	ரு.ரு.ஙி
காமமுழுங்	ரு.உ.ஞி
காமவெமன	ரு.சு.க
காமம்வீடு	ரு.ஞி.சு
காமம்வெகுளி	க.ரு.ச
காலங்கருதி	ச.ச.ரு
காலத்தினாற்	ரு.உ
காலாழ்களரி	ச.ச.எ
காலைக்குச்	ரு.ஞி.ரு
காலையரும்பி	ரு.ஞி.ரு
காணீமுயலை	உ.உ.ரு
கு	
குடம்பை	கூ.சு
குடிசெய்வ	உ.க.க
குடிசெய்வார்	உ.க.உ
குடிதழீஇ	க.ரு.ரு
குடிபுறங்காத்	க.சு.க
குடிப்பிறத்தார்	உ.எ.ச
குடிப்பிறத்—ரு	க.ச.அ
குடிப்பிறத்—த	உ.உ.க
குடிமடிந்து	க.எ.க
குடியாண்மை	க.எ.அ
குடியென்னுஞ்	க.எ.ஞி
குணாலஞ்	உ.அ.க
குணாடி	க.ச.க
குணமென்னுங்	க.உ
குணனிலனுய்	உ.ச.அ
குணனுங்குடி	உ.உ.க
குலஞ்சுடுங்	உ.க.ரு
குழலினிதி	உ.உ
குறிக்கொண்	ரு.க.ச
குறித்தது	உ.ரு.ச
குறிப்பறிந்து	உ.ரு.க
குறிப்பிற்—ரா	உ.ரு.ச
குறிப்பிற்—ர்	உ.ரு.ரு
குற்றமிலனுய்	உ.க.உ
குற்றமேகாக்	க.உ.அ
குன்றனனூர்	உ.ஙி.சு
குன்றினனே	உ.எ.சு
குன்றேறி	உ.க.அ
கூ	
கூடியகாமம்	ரு.சு.ச
கூத்தாட்ட	க.ரு.ச
கூம்குடியு	க.சு.உ
கூருமைமோ	உ.ரு.ரு
கூறறகுதி	எ.சு
கூற்றத்தை	உ.ஙி.ஞி
கூற்றமோ	ரு.க.க
கூறறுடன்று	உ.உ.ரு
கெ	
கெடல்வே	உ.ஙி.ஞி
கெடாவழி	உ.ரு.ரு
கெடுகா	உ.ரு.ரு
கெடுபதூஉ	எ
கெடுவல்யா	ரு.ஙி
கெடுவாக	ரு.சு
கெடாடாக்	ரு.எ.ரு
கே	
கேடறியா	உ.க.உ
கேடில்லி	க.க.க
கேமெபெ	ரு.ஙி
கேட்டார்ப்	க.அ.எ
கேட்டிறு	உ.க.க
கேட்பிறுங்	க.உ.ச
கேளிழுக்கஞ்	உ.ரு.உ
கை	
கைம்மாறுவே	சு.ரு
கையறியா	உ.க.ச
கைவேல்க	உ.க.ரு
கோ	
கொக்கொக்	ச.ச.ச
கொடியார்—யி	ரு.ரு.சு
கொடியார்—பு	க.ஙி.சு
கொடுத்தலு	க.ஞி.ச
கொடுத்து	உ.ச.அ
கொடுப்பத	ச.அ
கொடுப்பதூஉ	உ.அ.எ
கொடும்புரு	ரு.க.க
கொடைய	க.க.சு
கொலைமே	க.க.உ
கொலையிற்	க.சு.க
கொலைவினை	சு.ரு
கொல்லாக	உ.அ.க
கொல்லாமை	சு.உ
கொல்லான்	எ.ரு
கொளப்பட்	உ.ரு.உ
கொளற்கரி	உ.க.ஞி
கொன்றன்	ரு.ச
கோ	
கோட்டுப்	ரு.எ.சு
கோளில்	ஞி
ச	
சமன்செய்	ரு.சு
சலத்தாற்	க.க.உ
சலம்பற்றி	உ.எ.ரு
சா	
சாதலினின்	சு.ச
சாயலு ரா	ரு.ச.க
சார்புணர்ந்	க.ரு.ச
சால்பிற்குக்	உ.அ.உ
சான்றவர்	உ.அ.உ
சி	
சிதைவிடத்	க.எ.ச
சிறப்பறி	க.எ.உ
சிறப்பீ—மு	க.உ
சிறபபீ—ம்	அ.அ
சிறப்பொடு	அ
சிறியாருணர்	உ.எ.சு
சிறுகாபபி	உ.க.ஞி
சிறபபடை	ச.ச.எ
சிறமைச	ரு.ஞி.ஞி
சிறமைபல	உ.சு.எ
சிறமையுஞ்	உ.உ.உ
சிறமையுணீ	ரு.க
சிறைகாக்கு	உ.ரு
சிறைநல	ச.ச.எ
சிறியரை	க.ரு.க
சிற்றின்பஞ்	ஞி.ரு
சினதைப்	அ.எ
சினமென்னு	அ.எ

குறள்.	பக்கம்.
சீ	
சீரிடங்கா	உருசு
சீரினுஞ்சி	உவஙி
சீருடைச்செ	உஅஅ
சீர்மைசிற	ஙஙி
சு	
சுடச்சுட	எஙி
சுவையொளி	கக
சுழலுமிசை	உஉச
சுழன்றுமேர்	உகருக
சுற்றத்தாற்	கஙிச
சூ	
சூழாமற்ரு	உகக
சூழ்ச்சிமுடி	ககஙி
சூழ்வார்கண்	கருக
செ	
செப்பமுடை	ருஙி
செப்பின்பு	உஙருட
செயற்கரியசெ	கo
செயற்கரியயா	உஉஙி
செயற்கையக	கஅஙி
செயற்பாலசெ	கஉக
செயற்பாலதோ	கஙி
செயிரிற்றலை	எங
செய்கபொ	உகக
செயதக்க	ககஎ
செய்தீதமஞ்	உருச
செய்யாமற்செய்	ருஉ
செய்யாமற்செற்	அக
செய்வானே	கஙிஉ
செய்வினை	ககக
செருக்குஞ்	கஉஅ
செருவர்த	கசுசு
செல்லாமை	ருருக
செல்லாவி	அசு
செல்லான்	உகச
செல்லிடத்	அஙி
செல்வத்துட்	கஉஉ
செல்லிருந்	உஅ
செவிகைப்ப	ககசு
செவிக்குண	கஉஉ
செவிச்சொல்	உoக
செவியிற்சுவை	கஉச
செவியுணவி	கஉருட
செறுஅச்சிற	ருகச
செறிதொடி	ருசுஅ
செறிவறிந்	ருஎ
செறுநரை	கசச
செறுவார்க்	உசசு
செறுவாபி	ருகஉ
செறுருென	ருஙிக

குறள்.	பக்கம்.
செற்ரூர்பி	ருசுஉ
சென்றவீட	கஉஙி
சே	
சொலல்வல்	கஅஅ
சொல்லுக—லி	ஙிசு
சொல்லுக—லே	கஅஅ
சொல்லுதல்	ககருட
சொல்லப்ப	ருoசு
சொல்வண	உருட்அ
சொற்கோட்	ருட்சு
ஞா	
ஞாலங்கருதி	கசருட
த	
தகுதியென	ருட்ச
தக்காங்கு	ககசச
தக்காரின	கருட்உ
தக்கார்தக	ருட்ஙி
தஞ்சம்ம	ருட்எஙி
தணந்தமை	ருட்ஙஙி
தண்ணந்தறை	ருட்சுஅ
தந்தைமகற்	உருட
தந்நலம்	உசுஉ
தந்நெஞ்சத்	ருட்சஎ
தமராகித்	கஙிஙி
தம்பொரு	உஉ
தம்மிலிருந்	ருடகஎ
தம்மிற்பெரி	கருடக
தம்மிற்றம்	உருட
தலைப்பட்டார்	கoo
தலையினிழிந்	உஎசு
தவஞ்செய	எஙி
தவமறைந்	எஎ
தவமுந்தவ	எச
தவறிலரா	கூஅங
தள்ளாவிளே	உகக
தற்காத்துத்	உo
தனக்குவமை	ஙி
தனியேயிருந்	ருடசச
தன்குற்றமீக்	கஉக
தன்மூலையின்	உஙிo
தன்னுயிர்க்கின்	கo
தன்னுயிர்தா	எஙி
தன்னுயிர்நீ	கூருட
தன்னான்பெரு	எக
தன்னெஞ்சறி	அருட
தன்னைதான்—க்	அசு
தன்னைத்தான்—த	ஙிக
தன்னையுணர்	ருட்அக
தா	
தாமின்பு	ககக
தாமீழ்—த	ருசகூ

குறள்.	பக்கம்.
தாமீழ்—மெ	
தாமேண்	
தார்தாங்கி	
தாளாண்மையி	
தாளாண்மையெ	
தாளாற்றி	
தானந்தவ	
தி	
திறனல்ல	
திறனறிந்	
தினற்பொரு	
தினத்தினேக	
தினத்தினேயா	
தினத்தினேயு	
தீ	
தீப்பாலதான்	
தீயவைசெய்	
தீயவைதீய	
தீயவன்றி	
தீயினுட்சுட்ட	
தீவினையார	
து	
துஞ்சினூர்	
துஞ்சுகாத்	
துணைநலமா	
துப்பார்க்கு	
துப்பினெவ	
துப்புரவில்	
தும்முச்செறு	
தெளிவின்மை	
தேறந்தா—த்	
தேறந்தா—ந்	
தேறந்தார்படி	
தேறந்தார்பெரு	
தேறந்தாரிற்	
தேறப்பார்	
தொறைவன்	
தொனியும்புல	
தொன்பத்திற்	
தொன்பமுறவ	
தொன்புறாஉ	
தொன்னுத்து	
தொன்னியார்	
தூ	
தூங்காமை	
தூங்குக	
தூய்மைநீ	
தூவுய்மையெ	
தெ	
தெண்ணீரு	
தெய்வத்தா	

குறள்.	பக்கம்.
தெய்வச்	௪௫
தெரிதலும்	௪அச
தெரிந்தவி	௪உக
தெரிந்தன	௪உஎ
தெருளாதா	௭0
தெளிவிலத	௪உள
தென்புலத்	௪ச
தே	
தோன்பிற	௪இ0
தோன்றெ	௪இ0
தேவரினை	௪0இ
தேறற்க	௪இ0
தேறினுக்	௨இச
தை	
தொகச்சொ	௪௯அ
தொடங்கற்	௪சஇ
தொடலைக்	௫உசு
தொடிநோக்	௫௯௯
தொடிப்புழு	உ௯இ
தொடியொடு	௫இசு
தொடித்சுடி	௫௫௫
தொட்டனைத்	௪௯அ
தொல்வர	உ௯எ
தொழுதகை	உ௫அ
தோ	
தோன்றிற்	௯ச
ந	
நல்வல்ல	உஅஇ
நகுதற்பொரு	உஉசு
நகைவீகை	உஎங
நகையுமுவ	அசு
நகையுளு	உஅச
நகைவகை	உங்இ
நசையியார்	ங்சஇ
நச்சப்படா	உஅஎ
நடுவின்றி	சச௯
நட்டார்குறை	உஇக
நட்டார்கு	௯௯எ
நட்டார்போ	உங்எ
நட்பிற்குவீ	உஉஅ
நட்பிற்குறு	உஉக
நண்பாறரு	உஅஇ
நத்தம்போற்	௯௯
நயத்தவர்க்	ங்சo
நயந்தவர்கல்	ங்இஇ
நயனிலசொல்	இக
நயனிலனெ	இஇ
நயனீன்று	ங்௫
நயனுடை	௫௫
நயனுடை	உஅச
நயன்சாரா	இஇ

குறள்.	பக்கம்.
நலக்குரியார்	சச
நலத்தகை	ங்எச
நலத்தின்க	உஎச
நலம்வேண்	உஎச
நல்குரவெ	உ௯எ
நல்லவை	௪0௫
நல்லாண்	உ௫உ
நல்லார்கட்	௪உ௫
நல்லாரெனை	௫உ
நல்லாறெனி	௫உ
நல்லாற்ரு	௫அ
நல்லினத்தி	௪ங்க
நல்லெரு	உ௨க
நற்பொரு	உ௫அ
நனிஈற்	௫இ0
நனிஞனங்	ங்இ௫
நனிஞல்காக்	ங்இ0
நனிஞனல்காத	ங்சக
நனிஞனல்காரை	ங்இ௫
நனவென	ங்இ0
நன்மைபுரி	௪இ௫
நன்றறிவா	௨0இ
நன்ருருமாக்	௯ங்
நன்ருங்கா	௪௯
நன்ருற்ற	௪ங்அ
நன்றிக்கு	சச
நன்றிமறப்	ங்ங்
நன்றென்	உ0எ
நன்றேதரி	ங்இ
நன்னீரைவா	ங்௯௯
நா	
நாங்காதல்	ங்சச
நாச்செற்று	ங்இ
நாடாதுந	உ௨அ
நாடென்ப	உ௪ங
நாடொறுநாடி	௪௯உ
நாடோறுநாடு	௪இங
நாணத்தி	உ௫0
நாணமை	உங்க
நாணுடு	உ௫0
நாணுமற	ங்எச
நாணென	ங்௫உ
நாணென்	உ௯ச
நாணெறி	ங்உஇ
நாண்வேலி	உஅக
நாநல	௪அக
நாளென	௯இ
நீ	
நிணந்தீயி	ங்௯ங்
நிலத்நியல்	௪ங்ங
நிலத்நிற	உஎச

குறள்.	பக்கம்.
நிலவரைக்	சஇ
நிலமக்கள்	உ௨உ
நிலையஞ்சி	௫உ
நிலையிற்றி	ங்அ
நில்லாதவ	௫ச
நிழனீருமின்	உஇஉ
நிறைநீர	உ௨க
நிறைநெஞ்	உ௫உ
நிறைமொழி	௪௪
நிறையரி	ங்உஎ
நிறைபுடைமை	சஇ
நிறைபுடையே	ங்௫ச
நினைத்திருக்	ங்அக
நினைத்தொ	ங்இஅ
நினைப்பவர்	ங்சக
நீ	
நீக்கான்வெகு	உசஎ
நீக்கிற்றெ	ங்௫ச
நீரின்றமை	அ
நீருமிழல	ங்எஅ
நு	
நுணங்கிய	௫உச
நுண்ணியதூ	௪0க
நுண்ணியமெ	உ0இ
நுண்மாணு	௪உ௫
நுனிக்கொம்	௫ச0
நூ	
நூலாருணல்	௪௯அ
நெ	
நெஞ்சத்தார்	ங்உச
நெஞ்சிற்றற	எஅ
நெடுங்கட	அ
நெடுநீர்மற	ச௫ச
நெடும்புன	ச௫ச
நெய்யாலெ	ங்ங்ப
நெருப்பிலு	உ௯அ
நெருநலுள	௯ச
நெருநற்றுச்	ங்சுஅ
நே	
நோக்கினு—இ	ங்௫ங
நோக்கினு—எ	ங்௫0
நோதலெவன்	ங்எ௫
நோயெல்லா	ச0
நோய்நாடி	உ௫௫
நோவற்க	உஇ௫
நோனுடம்பு	உ௫இ
ப	
பகச்சொல்	இங
பகல்தூறி	உச௪
பகல்வெல்	ச௫உ
பகுத்துண்	௯௫

குறள்.	பக்கம்.
புகைகட்பார்	உ0ெ
பகைகட்பால்	உ.அ
பகைபால	சக
புகைமையு	உ0ெ
பகையகத்துச்	உ0க
பகையகத்துப்	உ.0
பகைவென்	உசக
பசக்கமற்	ந.சஉ
பசந்தாளி	ந.சஉ
புசப்பென	ந.சங
படைமாற்று	ந.ங.அ
படிபுடை	எஎ
பயிபயன்	ெ0
பரடுமடி	எஙக
பலடைகொண்	எக
பணியுமாமெ	உஎங
பணிவுடைய	ந.0
பணிகூவிப்	ந.ெெ
பண்டறியே	ங.0
பண்ணென்	ஙஅ
பண்பிலான்	உ.ெ
பண்புடை	உ.ச
பதிமருண்டு	ந.ெச
பயனிலபல்	ெெ
பயனில்சொற்	ெங
பயன்மரமூன்	ங
பயன்றக்கார்	ஙஉ
பயன்றக்கி	உஙக
பரிந்தவர்கல்	ந.ெங
பரிந்தோயிற்	ச0
பரிந்தோயிப்	உ.அ
பரியதுகூர்	எஎ
பரியினுமா	ஙக0
பருகுவார்	உ.ங.
பருவத்தோ	சசஉ
பருவரலும்	ந.செ
பலதுடைநீ	உஙச
பலசொல்ல	சஅங
பலகல்லகத்	உ.எ
பல்குழுவு	உஙஉ
பல்லவைய	உ.0
பல்லாரகபகை	ஙந.ங
பல்லார்முனி	ெெ
பழமியல்செல்	உசஅ
பழமியாட்	உங.ச
பழிமலைக்	ஙங
பழியருகி	ஙக
பழுவதன்	எஅங
பழைமையெ	உ.ங
பழையமெ	உ0ங
பற்றற்றகண்ணே	ச00
பற்றற்றே	எஎ
பற்றிவிடா	ஙக
பற்றுகபற்	ச00
பற்றுள்ள	ஙஉங
புனியரும்பி	ந.ெெ
பன்மாயக்கள்	ந.ஙஉ
பா	
பாடெறு	ந.ெங
பாத்தூண்	ஙந
பாலொடு	ந.உ.உ
பி	
பிணிக்குமருந	ந.ஙச
பிணியின்மை	உ.ங
பிணையேர்	ந.ஙஉ
பிரிக்கும்	ச.அச
பிரிவுகாச்	ந.ந.உ
பிழைத்தூணர்	ஙஉச
பிறப்பென்னு	ச0ந
பிறப்பொக்	உ.எ.அ
பிறர்க்கின்	ங0
பிறர்நாணத்	உங0
பிறர்பழிபு	உ.அங
பிறவிபெ	சு
பிறன்பழி	ெந
பிறன்பொரு	சஉ
பிறன்மனை	சச
பீ	
பீலிபெய்	ங.ச0
பு	
புகழின்ரூ	உ.எங
புகழ்நாதலை	ங.ெ.அ
புகழ்படை	சுங
புகழுபரிர்	உ0
புக்கிலமை	ங.ச
புணர்சபெழ	உ.உங
புதற்றளுல	ங0
புரக்தாகண்	உ.உ.ெ
புலதலிற	ந.அஉ
புலப்பலன	ந.ஙந.
புலபேன்	ந.ங.ெ
புல்லலவுபட்	உ0அ
புலவாநிர	ந.எ.ெ
புல்லிவிடாச்	ந.சஉ
புல்லிவிடா	ந.அஉ
புதகருன்றி	ஙஅ
புதகூறிப்	ெஉ
புதற்றறப்	உச
புதன்னய	அச
புனகண்ணே	ந.ெெ

குறள்.	பக்கம்
பெ	
பெண்ணிய	ந.அ
பெண்ணிற்	ங
பெண்ணினுற்	ந.ங
பெண்ணேவல்	உெ
பெயற்கண்டு	எஙெ
பெயலாற்று	ந.ந.அ
பெரிதாற்றி	ந.ங.அ
பெரிதினிது	உ.ச
பெரியாரை	உ.ெெ
பெருக்கத்து	உ.எ
பெருகெதா	ஙெ
பெருமைக்கு	ஙச
பெருமைபெ	உ.அ
பெருமைமு	உ.ச
பெருமைபொரு	உ.ங
பெறுவமையுள்	ந.ெச
பெறினென	ந.ஙச
பெறுமவற	உ.
பெறுறுற	உ.
பே	
பேணுதுபெட்டா	ந.ந.ச
பேணுதுபெட்ப	ந.ஙெ
பேணுதுபெண்	உெ.அ
பேதைபெருமை	உ.ந.ெ
பேதைப்ப	ச0ங
பேதைமைமு	உ.ந.ச
பேதைமையெ	உ.ந.ங
பேதைமையொ	உ.ந.உ
பேராண்மை	உ.ஙெ
பொ	
பொச்சாபாரா	ஙெச
பொச்சாபுக	ஙெங
பொதுவலாத	உ.ங.ச
பொதுவோக்	ஙெெ
பொய்யபெமா	உ.ச
பொய்யைமையு	அ.ங
பொய்யாமையொ	அ.ச
பொய்யாமைய	அ.ச
பொருளாக	ெச
பொருட்பெண்டிர்	உ.ங
பொருட்பொரு	உ.ச
பொருணீங	ங.ச
பொருணன்மா	ஙெச
பொருள்கரு	ஙஙச
பொருள்செ	உ.அ
பொருளல்லவரை	உ.ங.ச
பொருளல்லவற்	அ.ங
பொருளறரூ	எ
பொருளாட்சி	எ.ச
பொருளாஞ	உ.அ

குறள்.	பக்கம்.
பொருளென்	உகஎ
பொன்னெ	கசஉ
பொறியின்	கஅ0
பொறிவாயி	ச
பொறுத்தலிற	சஇ
பொறையொ	உகக
போ	
போற்றினரி	உ0க
ம	
மகன்றந்தை	உக
மக்கண்மெய்	உஉ
மக்களேபோல்	ஆ0இ
மங்கலமென்ப	உக
மடலூர்தல்	நகசு
மடிமடிக்	கஎசு
மடிஇலாவி	கஎஅ
மடியிலா	கஎஅ
மடியுளா	கஅ0
மடியைமடியா	கஎக
மடித்தவா	கஅக
மணிநீருமண்	உக்ச
மணியிற்றிக	நசுஎ
மண்ணேடியை	ககஅ
மதிநுட்ப	கஅடி
மதிபுலமடந்தை	நஉ0
மயிர்நீப்பின்	உஎஎ
மருந்தாகித்	கக
மருந்தென	உசுக
மருந்தோமற்	உஎஎ
மருவுகமாசற்	உந0
மலரன்ன—ண்மு	நஉக
மலரன்ன—ளரு	நஉஅ
மலரினுமெல்	நஎஉ
மலர்காணின்	உகக
மலர்மிசை	ந
மழித்தலுநீ	எக
மறத்தலெவ	அசு
மறந்தும்பி	ஙஅ
மறபபிறு	ச0
மறபபினவ	நசஅ
மறமானமா	உஉக
மறவற்கமா	நந
மறைந்தவை	கஎஉ
மறைபெற	நச0
மறைப்பேன்மற்	நசுக
மறைப்பேன்மன்	நநச
மறியானெ	நசஎ
மற்றுந்தொடர்	ககக
மனத்ததமா	எஅ
மனத்தானு	கநச
மனதினமை	உகஎ

குறள்.	பக்கம்.
மனத்துக்கண்	கக
மனத்துளது	ககச
மனத்தொடு	அச
மனநலத்தி	கநஇ
மனாலகன்கு	கநஇ
மனநலமன்	கநஇ
மனர்தூயார்	கநஇ
மனர்தூய்	ககச
மனமாணவு	உஇந
மனைத்தக்க	கஅ
மனைமாட்சி	கக
மனையாளே	உஇஅ
மனைவிழைவா	உஇவ
மன்னர்க்கு	ககந
மன்னர்விழை	உ0ந
மன்னுயிரெல்	நஉஅ
மன்னுயிரோ	கக
மா	
மாதர்முகம்	நஉக
மாலைநோய்	நஇந
மாலையோவல்	நஇஉ
மாறுபாடில்	உஎ0
மி	
மிகச்செய்	உந்அ
மிகன்மேவன்	உசக
மிகினுங்குறை	உசுக
மிகுதியான்	சக
மு	
முகத்தான	ந0
முகத்தினினி	உந்எ
முகத்தின்மு	உ0ச
முகநகாட்ப	உஉஎ
முகநோக்கி	உ0இ
முகமொக்	நசுள
முடிவுமிடை	ககசு
முதலிலார்க்	ககநக
முயல்கிடை	நஇள
முயங்கிய	நஇள
முயறலிரு	கஎக
முரண்சேர்க	கசஇ
முறிமனி	ங்ககக
முறைசெய்காடி	கஎச
முறைசெய்	கஎஇ
முறைப்பட	கஅசு
முற்றற்றி	உகசு
முற்றியுமுற்	உகஇ
முனைமுகத்	உகசு
முன்னுறக்கா	கஇள
மே	
மேலிருந்து	உஎஅ
மேழபிறதா	கஉஉ

குறள்.	பக்கம்.
மை	
மையலொரு	உசக
மோ	
மோப்பக்கு	உக
ய	
யாகாவாரா	நஅ
யாங்கண்ணி	நஉள
யாண்டுச்செ	உஇசு
யாதனின்யா	கள
யாதானுஞ	கஎஅ
யாமுமுளே	உசள
யாமெய்யா	அடி
யாரினுங்கா	நஎக
யாரெனைதெ	ககக
யாரேக்கு	நகங
வ	
வகுத்தான்	கக0
வகைமாண்	உஇசு
வகையறச்	கநள
வகையறிந்தத	உஇக
வகையறிந்தவ	உ0அ
வசையிலாவ	சுசு
வசையென்ப	சுசு
வசையொழிய	சுள
வஞ்சமனத்தா	எக
வருமற்கொ	நகஇ
வருமுன்னர்	கஉக
வருவிருந்து	உள
வரைவிலாமா	உசஉ
வலியார்கு	உசள
வலியார்முற	எ0
வலியினில	எள
வழங்குவ	உஎங
வழிமொழிந	உசஅ
வழுத்தினுடி	ந்அ0
வறியாரக	கஉ
வனகண்கு	கஅச
வா	
வாணிகஞ்செய்	நஉ
வாய்மையெ	அஉ
வாராக்காற்	நங்க
வாரிபெருக்	கஇக
வாழ்தலுயிர்	ந்உஉ
வாழ்வார்க்	நசநக
வாளற்றுப்	நசுச
வானொடென்	உ0க
வான்போல்	உஇஉ
வானின்றுல	ச
வானுயர்தோ	எஎ
வாய்மூர்தி	கஇக

குறள்.	பக்கம்.
வி	
விசும்பிற்று	அ
விடாஅது	நசஅ
விமோற்ற	உ00
விண்ணின்று	எ
வித்துமிடல்	உஎ
வியவற்க	நந0
விருந்துபுற	உஎ
விருப்பறுச்	நடுந
விரைந்து	நஅஅ
விலக்கொடு	நஉஉ
வில்லேருழ	உடு0
வீழித்தண்	உஉச
வீழுப்புண்ப	உஉச
வீழுப்பேற்	சஎ
வீழைதலை	உந்உ
வீழையார்	உந்ந
வினக்கற்ற	நசஉ
வினைத்தாரின்	சந

குறள்.	பக்கம்.
வினைபுமெனி	நசஅ
வினைவலர்து	நசக
வினைக்கண்வினைசெ	நஎஅ
வினைக்கண்வினையு	நடுந
வினைகுரி	நடுஉ
வினைசெய்	நஎக
வினைத்திட்	நகஉ
வினைபகை	நகக
வினையான்	நகஎ
வினைவலியு	நந்க
வீ	
வீழப்படுவா	நசச
வீழ்நர்வீழ	நசச
வீழுமிருவர்	நந்எ
வீழ்நாள்ப	சச
வீழுவாரினி	நசடு
வீறெய்தி	நகந
வெ	
வெண்மை	உசடு

குறள்.
வெருவந்த
வெள்ளத்தினையு
வெள்ளத்தினையி
வே
வேட்ட
வேட்பத்தா
வேட்பன
வேண்டற்—ஃ
வேண்டற்—ன்
வேண்டா
வேண்டிய
வேண்டுஞ
வேண்டுவ
வேண்டுதல்
வேண்டு
வேலொடு
வை
வைத்தான்
வையத்தள்

